॥ श्रीः ॥

॥ ज्योतिश्चूडालमौलिर्जयतु ॥

ஜ்யோதிஷ ஸர்வ விஷயாம்ருதம்.

ஸ்ரீரங்கம்

ஜ்யோதிஷ மகத்ர ஆயுர்வேத வைத்யசாலையின் அதிபர்,

பண்டிதராஜ – தைவஜ்ஞபூஷண

ஸ்ரீலஸ்ரீ தர்சகோபாஸக

ஸ்ரீ. மெ. ஸுந்தராஜாசார்யார்ல்

எழுதப்பெற்றது.

ஸ்ரீவிலாஸ புஸ்தக சாலை,

கீழச் சித்திரை வீதி,

ஸ்ரீரங்கம்,

திருச்சி — 6.

ஸ்டர் செய்தது.] 1956 [விலை ரூ. 16.

PRINTED AT THE
SRI VILASAM PRESS,
SRIRANGAM.

Copy Right & Rights of Translation in any other Languages, strictly reserved by the Publishers.



श्रीमत्कौण्डिन्यवंशाम्बुधिविधुमनघं वेदमौलिद्वयार्थ-
व्याख्याने विश्रुताख्यं कविकुलतिलकं वैदिकं सात्विकाग्र्यम्।
डम्भासूयाविमुक्तं सुकृततितिनुतं साधुवृत्तं सुशीलं
सत्येशार्यं विपश्चिद्वरममितगुणं सन्ततं संस्मरामः॥

॥ श्रीः ॥

श्रीमन्नारायणप्रभावप्रचनैकफलशेमुषीकान्तं

सौदर्शनीवल्लभानां

श्रीसत्येशाचार्यपादानां

दिव्यसन्निधौ

तत्कटाक्षलब्धसत्ताकेन

सुन्दरराजदासेन

सप्रणयभक्तिप्रणामं समर्पितम्॥



க்ரந்த கர்த்தா.

॥ श्रीः ॥

॥ ज्योतिश्चूडालमौलिर्जयतु ॥

முன்னுரை.

அரிதரிது மானிடராதலரிது என்று சொல்லுகிறபடி இப்பூவுல கின்கண் கிடைத்தற்கரிய ஆறறிவு படைத்த மனிதப்பிறவி கிடைத்த பின் துன்பம், பிணி முதலியன அணுகாமல் சுகமாக வாழ வேண்டு மென எல்லோரும் நினைப்பது இயற்கையே. இவ் விஷயத்தில் ஒருவருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. இவ்விதம் கிடைத்தற்கரிய மானிடப் பிறவி கிடைத்தாலும் அவரவர்கள் முன் செய்த நல்வினை தீவினைப் பயன்களால் உண்டாகும் பலன்களை அறிந்து கொண்டாலல்லவா நியவைகளைப் போக்கி சுகமாக வாழ வழி கோல முடியும். இவைகளை அறிந்து கொள்ள உபயோகமாக இருப்பது ஜ்யோதிச் சாஸ்த்ரமாகும்.

இந்த ஜ்யோதிச் சாஸ்த்ரம், வேதாங்கங்களாக விளங்கும் ஆறு சாஸ்த்ரங்களில் ஒன்றாகும். வேதத்துக்கு தர்ஷ்டி ஸ்தானத்தில் விளங்குவதுமாகும்.

ஆறங்கங்களுள் ஒன்றான சோதிட சாஸ்த்ரம் மற்ற சாஸ்த்ரங் களைப் போலல்லாது ப்ரத்யக்ஷ கார்யங்களுக்கு உபயோகப்படும் ப்ரத்யக்ஷ சாஸ்த்ரம். இதையே,

विफलान्यन्यशास्त्राणि विवादस्तेषु केवलम् ।
प्रत्यक्षं ज्योतिषं शास्त्रं चन्द्रार्कौ यत्र साक्षिणौ ॥

என்று கூறுவர் ஆன்றோர். இவ் வர்த்தத்தையே இன்னும் பல பெரியோர்கள் பல பல ப்ரமாணங்களால் உறுதிப்படுத்தியுள்ளனர்.

தினப் பயலும் வாடும் சிலர் "சோதிடம் பொய்" என்று ஒரு சமயம் நான்கைந்து பேர்களைப் போல் சொல்லி வந்தாலும் மறுகணமே சோதிடன் ஒருவனைக் கண்டால் அவர்களும் இவனிடம் தன் வரும் காலத்தை அறிய ஆவலுள்ளவர்களாயிருக்கிறார்கள் என்பது அனைவரும் அறிந்த அனுபவ உண்மையாகும். ஏன்? "அஹங்காரம் முதலியவைகளைத் துறந்து வனத்தில் தவம் செய்யும் யோகிகள்கூட சோதிட மறிந்தவனைக் கண்டால் பலத்தை விசாரிக்கிறார்கள்" என்று வராஹமிஹிரர் கூறுகிறார். ஆகவே, அனைவருக்கும் இந்த சாஸ்த் ரத்தில் பூரண நம்பிக்கை இருக்கிறது என்பதை இன்று புதிதாகத் தெரிவிக்க வேண்டிய அவசியமில்லை.

உலகத்தில் பார்க்கும் வஸ்துக்களைக் கண் படைத்தவன் தான் பார்த்து ரஸிக்கிறான். கண்ணில்லாதார் எப்படி ரஸிக்க இயலும்? இச்சாஸ்திரமும் வேதத்துக்கு கண்ணாக அமைந்தபடியால் இக்கண் கொண்டு பார்ப்பவரே முக்கால ரஸமறிந்தவராவர்.

உலகத்தில் உதிக்கும் ஸ்தாவர ஜங்கமங்கள் உட்பட ஸகல ஜீவராசிகளும் அவரவர்களுடைய வருங்காலம், நிகழ்காலம் முதலியவற்றை அறிவதற்கு, முன் பிறப்புகளில் நடந்தவற்றைத் தெரிந்துகொண்டு அதன் பிரகாரம் பயனை அடைவதற்கு உரிய வழியைத் தேடுவதற்கும், இச்சோதிட சாஸ்த்ரத்தைத் தவிர வேறு புகல் கிடையாது என்பதிலும் அபிப்பிராய பேதம் எள்ளளவும் எவருக்கும் இருக்க முடியாது. இச்சாஸ்த்ரத்தால் பார்க்க இயலாதவர் கண்ணிழந்தும் பிறவிக் குருடருக்கொப்பாவர்.

சென்ற காலம், நிகழ்காலம், வருங்காலம் என்கிற முக்காலங்களில் சென்ற காலத்தைவிட நிகழ்காலத்திலும், இதைவிட மிகவும் முக்கியமாக வருங்காலத்திலும் நடக்க விருப்பவைகளையே பிரதானமாக அறிந்து கொள்ள அனைவரும் விரும்புகிறார்கள். எதிர்காலத்தில் நடக்கவிருப்பதை முன்னதாகவே அறிந்து கொண்டால் அநேக கார்யங்களில் திட்டம் வகுக்க முடியுமாதலால் எல்லோரையும் இவ்விஷயம் ஆகர்ஷிப்பது இயல்பேயாகும்.

இவ்வளவு மஹிமை பொருந்திய சாஸ்த்ரத்தை ஒன்றும் அறியாதவர்களும் கையாள ஆரம்பித்து விட்டார்கள். சாஸ்த்ர மறியாதவன் சோதிடம் சொன்னால் ப்ரம்மஹத்தியை செய்த பாபத்துக்கு உள்ளாகிறான் என்று சாஸ்த்ரம் கூறுகின்றது.

முதன் முதலில் ஸூர்யன், பிதாமஹன், வ்யாஸர், வஸிஷ்டர், அத்ரி, பராசரர், காச்யபர், நாரதர், கார்க்யர், மரீசி, மனு, அங்கிரஸ், ரோமசர், பௌலுகுத்ஸர், ச்யவனர், யவனர், ப்ருகு, சௌனகர்—ஆகிய பதினேட்டு ரிஷிகளும் இந்த சாஸ்த்ரத்துக்கு ப்ரவர்த்தகர்களானார்கள். இவர்கள் செய்தருளிய க்ரந்தங்களை அனுஸரித்து பலபெரியோர்கள் பிற்காலத்தில் மேலும் பல க்ரந்தங்களை அருளிச் செய்தனர். இவை யாவும் ஸம்ஸ்கிருதத்தில் இருப்பதாலும், தமிழிலிருப்பவைகளும் ஸுலபமாக அர்த்தமாக முடியாமலிருக்கிறபடியாலும் மேற் குறித்த பாதக மேற்படாதிருக்க எல்லோரும் அறிந்துகொள்ளும்படி ஸுலபமாக்க வேண்டிய அவசியமேற்பட்டது.

முன் பிறவியில் செய்யப் பட்ட நல்வினை தீவினைப் பயன்களை அவசியம் அனுபவித்தேயாக வேண்டும். கல்பகோடி சதமானாலும் இவைகள் அனுபவியாமலோ, வேறு பரிஹாரம் செய்யப்படாமலோ நசிக்காது. அவ்விதம் அனுபவிக்கும் பலன் ஸுகமாக இருப்பின்

ஒவ்வொருவனும் மென்மேலும் எதிர்பார்க்கிறான். துக்கமாயின் அதை வராமல் தடுக்க முயல்கிறான், அதற்கான ஸாதனத்தை அறியவும் விரும்புகிறான். அப்படி அறிந்து கொண்டு, வரும் துக்கத்தையும் தடுத்துக்கொண்டால் அவன் அடையும் உத்ஸாஹத்துக்குத் தான் எல்லை உண்டோ? இவ்விதம், வரும் கால பலனை அறிந்து கொள்ள முடிவது இந்த சோதிடத்தினாலேயே. "முன் ஜன்மங்களில் கருமங்களால் தேடப்பட்ட நன்மை முதலியவைகளின் பலனை ப்ரகாசப்படுத்துகிறது" என்பதை

कर्मार्जितं पूर्वभवे सदादि यत्तस्य पक्तिं समभिव्यनक्ति

என்ற ச்லோகத்தால் வராஹமிஹிரர் தெரியப்படுத்துகிறார்.

பாஸ்கர ஸித்தாந்தத்திலும், எவன் சோதிடத்தை அறிகிறானோ; அவன் அறம், பொருள், வீடுகளையும் கீர்த்தியையும் அடைவான் **(यो ज्योतिषं वेत्ति नरस्स सम्यग्धर्मार्थमोक्षान् लभते यशश्च)** என்று கூறுகிறார்.

இவ்விதம் பெருமை வாய்ந்த இந்த சாஸ்த்ரத்தை சரியாக உணர்ந்துகொள்ளாமல் பலரும் பலன் சொல்லும் சோதிடர்களாக வெளிவந்தமையால் இந்த சாஸ்த்ரத்துக்கு ஒரு இழுக்கையும் ஏற்படுத்திவிட்டனர். இக் குறை உண்மையில் சோதிட சாஸ்த்ரத்துக்குச் சிறிதும் ஒட்டாதது. "எய்தவனிருக்க அம்பை நோவதில் யாது பயன்?" கையாளத் தெரியாதவர் கையாள்வதாலுண்டான தவறல்லவா? இதனாலேயே சாஸ்த்ரகாரர்,

अनेकहोरातत्त्वज्ञः पञ्चसिद्धान्तकोविदः ।
ऊहापोहपटुः सिद्धमन्त्रो जानाति जातकम् ॥

என்று உண்மையாக அறியக்கூடியவனின் லக்ஷணத்தை வெளியிட்டார். தேசம், காலம், அதிகாரி, பலம் முதலியவைகளை அனுஸரித்துப் பலன் சொல்லுவதில் ஒரு விதஹானியும் ஏற்படாது. அல்லில்லாமல் ஏதோ ஒன்றைப் பார்த்து விட்டு மற்றவைகளைக் கவனிக்காமல் பலன் சொன்னால் தனக்கும் சாஸ்த்ரத்துக்கும் இழுக்கைத் தேடிக்கொண்டு விடுகிறான்.

ஆகவே, இக்கிரந்தத்தில் ஆங்காங்கு விடவேண்டியவைகளும் பலன் சொல்ல வேண்டிய கிரமமும் குறிக்கப்பட்டிருக்கிறது. எல்லோருக்கும் பயன்படும் வகையில் பல க்ரந்தங்களை ஆராய்ந்து ஸாரமான விஷயங்களை மட்டில் எளிய நடையில் தெரிவிக்கப் பட்டிருக்கிறது. இன்னும் பூர்வ க்ரந்தத்தில் (இடைச் செருகலாக) இருக்கும் ஏற்படமுடியாத சில யோகங்களை எழுதாமலும் விடுத்திருக்கிறோம். உதாரணமாக இரண்டொரு இடங்கள் காட்டு

வோம்:— (1) லக்னத்தில் குரு, 8-ல் சுக்ரன், 11-ல் சூரியன், 4-ல் புதனுமிருக்க மாஹேந்த்ர யோகம். (2) லக்னத்தில் புத சுக்ரர்கள், 10-ல் சூரியன், 11-ல் செவ்வாய், 5-ல் குருவிருக்க மங்களம் ஸந்தானங்கள் விருத்தி அடையும். (3) 2-ல் சுக்ரன், 12-ல் குரு, 8-ல் சூரியன், 6-ல் சனியும் வலிக்க ஸ்ரீமதீ யோகம். இம்மாதிரி யோகங்கள் இயற்கைக்கு விரோதமாகும். ஏற்படவும் முடியாது. இவ்வித யோகங்களை மொழிபெயர்த்தவர்களும் அப்படியே மொழி பெயர்த்திருப்பதாகவும் தெரிகிறது. இம்மாதிரி உள்ளவைகளை புத்திக் கெட்டிய மட்டில் தவிர்த்திருக்கிறோம்.

புதிதாக சோதிட சாஸ்த்ரத்தின் மேன்மையையோ பூர்வ க்ரந்தங்களின் மஹிமையையோ சொல்ல வேண்டிய அவசியமின்மையால் இத்துடன் நிற்கிறோம்.

இப்புத்தகம், ஒரு நாள் விடியற்காலத்தில் ஏற்பட்ட தைவ நியோகத்தின் உணர்ச்சியினால் உந்தப் பட்டு எழுத நேர்ந்தது. பல கார்யங்களுக்கிடையே இது எழுதப்பட்டதாதலாலும், இப் புத்தகம் எழுதுங் காலத்தில் வடதேச யாத்ரை முதலியன நேர்ந்தபடியாலும், மனிதனுக்குரிய இயற்கையான ப்ரமாதிகளாலும் ஏதேனும் தோஷங்கள் நேர்ந்திருப்பின் அவைகளை ஆராய்ந்து ஆதாரத்துடன் தெரிவிப்பின் அன்புடன் ஏற்றுக் கொண்டு திருத்தவும் முயல்வோம். கற்றோர்கள் தாமுகப்பர்; கல்விதன்னிலாசையுள்ளோர் பெற்றே மெனவுகந்துபின்பு கற்பர்; மற்றோர்கள் மாச்சரியத்தால் இகழில் வந்ததென்? இகழ்கை ஆச்சரியமோதானவர்க்கு!

இப்புத்தக மெழுதுவதற்கு உபகரணங்களான பல புத்தகங்களை உபகரித்தவர் எமக்கு ஆப்ததமரான ஸ்ரீமான் T. R. ஸ்ரீநிவாஸய்யங்காராவர். இதில் இணைக்கப்பட்டிருக்கும் ஷட்வர்க்க ப்ரதிபிகை என்னும் சக்ரத்தை அமைத்துக் கொடுத்தவர் ப்ரியஸுஹ்ருத்வரரும் ஸஹாத்யரும், வித்வத்வரேண்யருமான ஸ்ரீமான் உ. வே. அ. வி. க்ருஷ்ணசாமி அய்யங்கார் ஸ்வாமி. கடல் போன்ற இப்புத்தகத்தில் உள்ள விஷயத்தை உடனே பார்த்து எடுக்க ஸௌகர்யமாக உள்ளது

---

1. जीवोदयेऽष्टमे शुक्रे लाभे सूर्ये बुधे जले।
   योगं माहेन्द्रमित्याहुः ... ... ॥
2. कुजे लाभे रवौ व्योम्नि बुधशुक्रौ विलग्नगौ।
   पञ्चमे तु गुरुस्तिष्ठेत् मङ्गल्यापत्यवृद्धिकृत् ॥
3. वित्ते शुक्रे व्यये जीवे रन्ध्रेऽर्के षष्ठगे यमे।
   श्रीमतीयोगमित्याहुः ... ... ॥

விஷய அகராதியாகும். இவ்வகராதி இல்லையேல் எளிதில் ஒரு விஷயத்தையும் எடுக்க இயலாது. நேத்ரம் போன்ற இவ்வகராதியைத் தயாரிக்குங் காரியத்தில் பெரும் பொறுப்பைத் தாமே ஏற்றுக் கொண்டு உபகரித்தவர் நமது ப்ரிய ஸுஹ்ருண்மணியான ஆயுர்வேத சிரோமணி ஸ்ரீமான் S. V. ராதாகிருஷ்ண சாஸ்த்ரிகளாவர். இவர்கள் விஷயத்தில் தலையல்லால் கைம்மாறிலேன்.

இப்புத்தகத்தில் புதிதாக அஷ்டகவர்க யந்த்ரம் ஒன்று இணைக்கப்பட்டிருக்கிறது. இது மிகுந்த புத்தி ச்ரமத்தாலான காரியம். இதுபோல் அதிக புத்தி ச்ரமத்தாலான இதுவரையில் வெளிவராத சில விஷயங்கள் முதன் முதலாக இப்புத்தகத்தில் சேர்க்கப் பட்டிருக்கின்றன. இவற்றையெல்லாம் அன்பர்கள் ஆராய்ந்து சரியான வழியில் பயன் பெறுவர்களாயின் நமது ச்ரமம் ஸபலமாகும்.

இப்புத்தகம் மாதிரி பாக்கியுள்ள கணித விஷயங்கள் எல்லாவற்றையும் சுலபமான வழியில் ஜந்த்ரிகளுடன் (Tables) தயார் செய்து அன்பர்களுக்கு அளிக்க விருப்பம் கொண்டிருக்கிறோம். அன்பர்களின் ஆதரவை அநுஸரித்து வெளியாகும்.

இவ்வரிய பெரிய காரியத்தை ச்ரமத்தின் மேலாகவும் இடையூறின்றி பூர்த்தி செய்து வைத்த எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

हेतिराजः प्रसीदतु।

இங்ஙனம்

ஸ்ரீஸுதர்சநோபாஸக

ஸ்ரீ. வெ. ஸுந்தராஜாசார்ய.

APPRECIATION.

Astrology has been universally treated as a Science by the greatest men of all nations and times; and it does not deserve the contemptuous treatment of some of the modern gentlemen of high position without understanding its principles and giving a fair and judicious trial which it rightly deserves.

A knowledge of the future in politics, trade, travels, speculations and all other events of life, which man undertakes or has to endure cannot and ought not to be despised. The claims of Astrology rest on the useful purposes for which its principles can be utilised on these matters to the best advantage. The Western Scientists stop with giving predictions, whereas the Hindu Astrology suggests the remedial measures to overcome the evil effects of the planets. A study of man both internally and externally is the most interesting branch of knowledge imaginable and its neglect only leads him to various methods not profitable in the long run. The limits of Astrology and Astronomical studies are apparently immeasurable.

There is an auspicious time for every event undertaken in day-to-day life such as sowing, reaping, healing and other functions on which health, happiness and success depend. To one who has carefully examined the six systems, the whole universe will seem an Institution of Astrology. Planets foretell the conditions of atmosphere, the nature of the seasons, the conditions of plant and animal life, the disposition of the mind and the course of man's destiny. The mental and physical qualities of man are moulded by the nature and influence of the stars and the planets to which everything else in the world is subjected.

Every educated Hindu knows that knowledge is power and ignorance is weakness. Knowledge is knowing what is true and ignorance is not only not knowing what is true but also believing in what is not true. Astronomy relates to the apparent positions of the stars and movements of the planets which enables one to determine the exact place of the heavenly bodies at a given time and show their conjunctions, oppositions and especially the eclipses of the sun and the moon. Astrology predicts from the positions of the heavenly bodies events connected, with the lives of particular individuals or with the lives of the nations, such as health, wealth, sorrow, prosperity, famine, fire, war and so on. In brief, Astronomy deals with the phenomena of heavenly bodies while Astrology tells about the events of human beings.

Mr. ALAN LEO, the editor of "Modern Astrology" did his best to push on the causes of Astrology in British Isles. His introduction to "Hindu System of Astrology" and his articles on Karma etc., enhances the value of his Magazine. He was a gentleman of large understanding and had the knack of reproducing difficult Indian subjects in an inviting form in his interesting journal. Dr. A. J. PEARCE, editor of the "Star Lore" and "Future events" is one of the best authorities on Western Astrology. In India, the late revered Sri. B. SURYANARAYANA RAO was the foremost Astrologer, who took the greatest pains to bring about the value and usefulness of the science in all its branches and maintained against great odds its prestige and glory. Now, this has rightly been taken up by his grandson and my esteemed friend Dr. B. V. RAMAN of Bangalore.

Great responsibility rests on the Astrologers for correct predictions considering the difficulties experienced by them in having to refer to many books. The present work "JYOTISHA SARVA VISHAYAMRUTAM" has been prepared, all in one, by my friend Sri. S. M. SUNDARARAJACHARYA,

the worthy son of late revered Pandit Sri. MEYYU IYENGAR SWAMI of Srirangam, who was adept in Astrology, Astronomy Mantra Sastra and Ayurveda etc. I had also the good fortune of being a disciple, of that great Swami. As a legacy, his learned son, a silent worker in Astrology all these years has now risen up to the occasion and brought out this valuable and useful book, in which almost all the subjects connected with Astrology have been dealt with. The Ashta-Varga and Shadvarga diagrams with examples deserve special mention.

It is my sincere desire that persons interested in Astrology make the best use of this rare work and get immensely benefitted.

6, Venkatarayar Street,
P. R. Square,
Park Town, Madras-3
Dated, 1—10—1956.

"Jyotirbhushana, Rasikamani"
PANDIT, ANBIL
S. SOWMYANARAYANAN.

ஓம்.

மதிப்புரை.

"वेदचक्षुः किलेदं स्मृतं ज्यौतिषं मुख्यता चाङ्गमध्येऽस्य तेनोच्यते।
संयुतोपीतरैः कर्णनासादिभिः चक्षुषाङ्गेन हीनो न किंचिन्नरः॥"

ஆத்மஞானம் ஒன்றே "ஞானம்" என்ற பதத்தினுல் குறிக்கப்படுகிறது. அது ஒன்றே இருளைப்போக்கி வெளிச்சத்தைக் கொடுக்கும். அந்த ஞானத்தை அடைவதற்கு உதவியளிக்கும் சாஸ்திரங்களே சாஸ்திரங்கள். அவைகளுள் முக்யத்வம் பெற்றது ஆறு வேதாங்கங்கள் என்று சொல்லப்படுவன. அவைகளின் நடுவே இன்றியமையாததாய் எப்பொழுதும் ஜ்யோதிஸை (அறிவை) பரப்பிக்கொண்டு இருப்பது தான் "ஜ்யௌதிஷம்" எனப்படும் மகத்தான சாஸ்திரம்.

இந்த சாஸ்திரத்தின் பெருமையையும், இன்றியமையாத் தன்மையையும் ஆத்மஞானிகளே நன்கு அறிவர். வைதிககர்மங்கள் காலத்தை ப்ரதானமாகக் கொண்டன. காலத்தின் கதியை நன்கு போதிப்பது ஜ்யௌதிஷம்.

"वेदचक्षुः किलेदं स्मृतं, ज्यौतिषं चक्षुषी,

என்ற வசனப்படி. வேதமென்ற புருஷனுடைய இருகண்கள்தான் "ஜ்யௌதிஷசாஸ்திரம்."

மேலும் இந்த சாஸ்திரத்தை உலகத்திற்கு அளித்தவர்கள் ஆத்மஞானிகளான மஹரிஷிகள். சூர்யன், பிரம்மா, வ்யாசர், வஸிஷ்டர், அத்ரி, பராசரர், காச்யபர், நாரதர், கார்க்கி, மரீசி, மநு, அங்கிரஸ், ரோமசர், பௌருகுத்ஸர், ச்யவனர், ப்ருகு, யவனர், சௌனகர் ஆகிய பதினெண் மகரிஷிகளும் இந்த சாஸ்திரத்தை பல்வேறு க்ரந்தங்களாக இயற்றி உலகிற் பரவச் செய்துள்ளனர். இவர்களைத் தவிர ஸாயனர், பாஸ்கராசார்யர், வராஹமிஹிரர் முதலியவர்களும் இந்த சாஸ்திரத்தை மேன்மைப்படுத்தியுள்ளனர்.

ஆனல், நாளதுவரை இந்த சாஸ்திரத்தின் பல்வேறு உட்பிரிவுகளை ஒன்றுகச் சேர்த்து நன்கு தொகுத்து, ஒரே நூலில் யாரும் அளித்ததாகத் தெரியவில்லை. அந்த கபகாரியத்தை ஸ்ரீ கந்தராஜாசாரியர் அவர்கள் பூரண பக்தியுடன் "ஜ்யௌதிஷ ஸர்வ விஷயாம்ருதம்" என்ற நூல் மூலம் இறைவனும் வியக்கும்படி செய்து முடித்துள்ளனர்.

இந்த நூலானது 800 பக்கங்களுக்குள், ஏறக்குறைய 250 வேவ் வேறு விஷயங்களை நன்கு எடுத்துரைக்கின்றது. ஜ்யௌதிஷம் பயில் வோருக்கும் பயின்றவர்க்கும் அருகில் எப்போதும் இருக்கவேண்டி யது இந்த நூல். அவர்களுக்கு ஜ்யௌதிஷசாஸ்திரத்தில் என்ன ஒரு விஷயத்தைப்பற்றித் தெரியவேண்டுமானாலும் அதை இந்த நூலிலிருந்து தெரிந்து கொள்ளலாம். இந்த இன்றியமையாத நூலை உலகத்திற் கவித்ததின் மூலம், ஜ்யௌதிஷத்தை ஆதரிப்போரிடம் இருந்த நீண்ட நாள் குறைகளை ஸ்ரீ சுந்தரராஜாசாரியார் அவர்கள் தீர்த்துவிட்டனர் என்றே சொல்லவேண்டும். அவருடைய ரித்தையையும், முயற்சி யையும், பூரணபக்தியையும் எல்லோரும் பாராட்டுவதுடன் அவர் நீடுழிகாலம் சகல சம்பன்னராக இருந்து பேரின்பத்தை அடைவார் என்று இறைவனை வேண்டுவோமாக.

ஓம் தத் ஸத்

இங்ஙனம்
தங்கள் ஊழியன்
வெங்கந்தா.

ஆனந்த குடீரம்,
ஸ்ரீரங்கம்.

ஸ்ரீ:

பொருளடக்கம்.

	பக்கம்.
மங்களாசரணம் — பொது விஷயங்கள் ...	1
ஸம்க்ஞைகள்	2—8
கிரகண சூலம்	8
அம்ருதாதி யோகங்கள்	9
அசுப யோகங்கள்	10
யோகங்களில் விதி நிஷேதங்கள் ...	11
சுப காரியங்களுக்குரிய வாரங்கள் ...	,,
,, ,, திதிகள் ...	12
சாந்த்ரமான மாதங்கள்	,,
ராசிகளின் விவரங்கள்	12—15
க்ரஹங்களின் விவரங்கள்	15—21
வார சூலை	21
யோகினி நிலை	22
சூலை நாழிகை—பரிஹாரம்	23
நக்ஷத்ரப் பொருத்தம்	23
ஜன்மானுஜன்மத்ரிஜன்மங்கள்	,,
,, ஜன்மங்களில் செய்யத் தகாதவை	24
3, 5, 7-வது நக்ஷத்ர தோஷ பரிஹாரம் ...	,,
பஞ்சக தோஷம்	,,
பஞ்சகங்களில் சுப காரியத்துக்குரியவை ...	24
கால அளவு	25
ராசிகளின் நாழிகை முதலியன	,,
சூரிய உதயத்தில் லக்னத்தில் சென்ற நாழிகையறிய	,,
,, ,, பாக்கி ,, ...	26
குறிப்பிட்ட லக்னம், குறிப்பிட்ட காலத்தில் இருப்பதை அறிய ...	27
லக்னத்யாஜ்யம்	28
லக்னங்களுடன் சேரத்தகாத வேளைகள் ...	,,
லக்னங்களுடன் சேரத்தக்க வேளைகள் ...	,,
க்ரஹங்களின் அதி உச்சம் முதலியன ...	29—33
ஸக்ரஹ தோஷம்	33
சந்த்ராஷ்டமம்	,,
உஷ்ண சிகை தோஷம்	,,
திதி விஷம்	34
வார விஷம்	,,

திரயஜ்ய பலன்	...	34
காரிய ஸித்தி வாரங்கள்	...	..
குருட்டுத் திதிகள்	...	,,
குருட்டு ராசிகள்	...	35
திதிகளின் அதிபதிகள்	...	..
நக்ஷத்ரங்களின் அதிபதிகள்	...	35
கரண உருவங்கள்	...	36
பக்ஷச் சித்ரை	...	,,
நாம நக்ஷத்ரம் முதலியன	...	..
ராகுகாலம் முதலியன	...	37
முகூர்த்தம்	...	..
சுபமுகூர்த்தங்களில் விலக்கத் தக்க தோஷங்கள்	...	..
நந்தா பத்ரா திதிகள்	...	38
குளிகனிலே செய்யத் தக்கவை	...	,,
விபத் ப்ரத்யர தோஷங்களில்லாதவை	...	..
சந்த்ர பலம்	...	39
ஸ்திரீகளின் முக்ய காரியங்கள்	...	,,
மௌட்யாதி தோஷங்களில்லாதவை	...	,,
ஜன்ம ராசியில் செய்யத் தக்கவை	...	,,
தாரா பலனுள்ள நக்ஷத்ரங்கள்	...	,,
கரி நாள்	...	40
தனி நாள்	...	,,
இங்கிலீஷ் மாதக் கரிநாள்	...	41
த்யாஜ்ய ஸ்வரூபம்	...	..
தசைகளின் பேதங்கள்	...	,,
நக்ஷத்ர சூலம்	...	,,
நக்ஷத்ர த்யாஜ்யம்	...	,,
நக்ஷத்ரங்களின் இருப்பிடம்	...	42
நக்ஷத்ரங்களின் திருஷ்டி	...	..
ஸ்தான பேதங்கள்—ஸங்கேதங்கள்	...	,,
அஷ்டமத்திலிருக்கும் க்ரஹத்துக்கு விலக்கு	...	43
இரவில் செய்யத் தகாதவை	...	,,
ஜ்யேஷ்ட மாஸ தோஷம்	...	..
தோஷாபவாதம்	...	,,
களக்ரஹ தோஷம்	...	,,
சந்த்ரன் நிற்கும் நக்ஷத்ர பலன்	...	44
யாத்ரைக்கு ஆனந்தாதி யோகங்கள்	...	,,
பிற்பகலில் தோஷமில்லாதவை	...	45
விலக்கத் தக்கவை	...	,,
உபநயனத்துக்கு உயர்ந்தவை	...	,,

ஸ்தான சுத்திகள்	...	45
ஸ்திரீகளின் ருது கால பலன்கள்	...	..
நிஷேகம் முதலிய சுபகாரியங்களுக்குரிய முகூர்த்த காலங்கள், விசேஷ யோகங்கள் முதலியன	...	48—95
சுபாசுப சகுனங்கள்	...	95
ஸாத்விகம் முதலிய 3 வேளைகளின் சக்ரம்	...	97
ரோகாரம்பம்	...	98
மருந்து சாப்பிட	...	101
ரோக முக்த ஸ்நானம்	...	101
கடன் தீர்க்க	...	102
வாஸ்து புருஷன் லக்ஷணம்	...	102
வாஸ்து புருஷன் நித்ரை விடும் காலம்	...	103
கிரஹாரம்பத்துக்கு சுப முகூர்த்தங்கள்	...	..
நூதன கிரஹ ப்ரவேசம் செய்ய	...	,,
வதூ கிரஹ ப்ரவேசம்	...	104
தேவதா ப்ரதிஷ்டை	...	..
கிணறு வெட்ட	...	110
நக்ஷத்ரங்களில் செய்யத் தக்க காரியங்கள்	...	111
ஸப்த சலாகா சக்ரம்	...	118
கௌரீ பஞ்சாங்கம்	...	119
கணித விஷயங்கள்	...	120
அக்னி நக்ஷத்ரம் முதலியன	...	126
நாள் நிர்ணயம் செய்ய	...	..
அவச்சாயை. பாதச் சாயைகள்	...	127
பகல் நாழிகை அறிய	...	,,
ஷட்வர்க்கங்கள்	...	,,
ஷட்வர்க்கங்களின் விவரங்கள்	...	128
ஷட்வர்க்கங்களின் லக்ஷணம் பார்க்க	...	130
நக்ஷத்ர தசை சிஷ்டம் அறிய	...	131
குளிகன் முதலிய உபக்ரஹங்கள் போடும் விதம்	...	132
குளிகன் 12 பாவ பலன்	...	133
குளிகன் மற்ற க்ரஹங்களுடன் சேரும் பலன்	...	134
கால புருஷனின் அவயவங்கள்	...	136
இராசிகளின் ஸ்தானங்கள்	...	137
12 பாவங்களின் பெயர்	...	,,
க்ரஹங்களால் பார்க்கக் கூடியவை	...	138
சூரியாதி க்ரஹங்களின் ஸ்வரூபம்	...	139
சூரியாதி க்ரஹங்களின் இருப்பிடம்	...	140
சூரியாதிகளால் காணக் கூடியவை	...	141

சூரியாதிகளின் அடையாளங்கள் முதலியன ... 142
ராகு கேதுக்களின் கிறம் முதலியன ... ,,
க்ரஹங்களின் நல்ல-கெட்ட கீலகள் ... 143
க்ரஹங்களின் மரங்கள் ... .
க்ரஹங்களின் ஷட்பலம் ... ... ,,
க்ரஹங்களின் பலங்கள் 144
சந்தர க்ரியா பலம் 145
சந்த்ராவஸ்தை 146
சந்த்ர வேளை 147
ஷஷ்ட்யம்சம் ... .
க்ரஹங்களின் அவஸ்தைகள் 148
த்வாதச பாவ விபரம் ... .
க்ரஹ காரகங்கள் 151
லக்ன பலன் 154
க்ரஹ ஸ்திதி பலன் 160
க்ரஹ யோக பலன் 167
சந்த்ரனுக்கு ஏற்படும் த்ருஷ்டி பலன் ... 169
பலன் பார்ப்பதில் பொது முறை ... 172
யோக பலன் 173
பொதுவான ஆயுர் விஷயம் 174
புக்தி பலன் பொது 175
யோக புக்தி விசேஷம் ... ... ,,
நக்ஷத்ரங்களில் பிறப்பதின் பலன் ... 176
ஸத்யாசார்ய மதப்படி மேஷாதி லக்னங்களில்
பிறந்தவர்களின் ஸ்வரூபம் முதலியன ... 178
பாவ பலன் பார்க்கும்போது கவனிக்கவேண்டியவை 183
பாவங்கள் — பாவ காரகர்கள் ... 185
12 பாவ ஸமுதாய பலன்கள் ... 187
பாவ ப்ராப்தி காலம் 192
ஜனன காலத்தில் மேஷாதி ராசிகளில் சூரியாதி
க்ரஹங்களிருக்கும் பலன் 193
பகலிரவில் பித்ரு-மாத்ரு காரகர்கள் ... 200
பசு, பக்ஷி, மரம் முதலியன பிறப்பது ... ..
விவாஹம் நடக்குமா ? நடக்காதா ? ... 204
ஸ்திரீ புருஷ கால அட்டவணை 205
ஸ்திரீ புருஷர்களின் ரோகம் ... .
கர்ப்போத்பத்தி 206
கர்ப்பிணீ விஷயம் ... .
ஜன்ம கால லக்ஷணம் 211
நிரேக்ஷண அங்க விபாகம் 215

அரிஷ்டம் 216
அரிஷ்ட பங்கம் 217
ருசகாதி யோகங்கள் 221
ஸ்த்ரீ ஜாதகம் 233
ராஜ யோகங்கள் 239
நீச பங்க ராஜயோகம் 244
ஸந்யாஸ யோகம் 245
க்ரஹங்களுக்குரிய ஸந்யாஸம் ... ... ,,
த்வாதச பாவ பலன்கள் 246
முதல் பாவ பலன் 247
இரண்டாவது பாவ பலன் 265
மூன்றுவது பர்வ பலன் 290
நான்காவது பாவ பலன் 304
ஐந்தாவது பாவ பலன் 322
ஆறுவது பாவ பலன் 358
ஏழாவது பாவ பலன் 390
எட்டாவது பாவ பலன் 440
ஒன்பதாவது பாவ பலன் 478
பத்தாவது பாவ பலன் 514
பதினொன்றுவது பாவ பலன் 555
பனிரண்டாவது பாவ பலன் 563
பொது விஷயங்கள் 572
ஹோரா சக்ரம் 578
ஆயுர்தாயம் 579
தசாந்தர் தசா 580
அஷ்டக வர்கம் 586
த்ரிகோண சோதனை முதலியன ... 590
சூரியாஷ்டக வர்க பலன் 593
சந்த்ராஷ்டக வர்க பலன் 594
செவ்வாய் அஷ்டக வர்க பலன் 597
புதன் அஷ்டக வர்க பலன் 597
குரு அஷ்டக வர்க பலன் 598
சுக்ரன் அஷ்டக வர்க பலன் 601
சனி அஷ்டக வர்க பலன் 663
ஸர்வாஷ்டக வர்கம் 605
கால சக்ர தசை 609
நக்ஷத்ர மஹா தசை 611
தசாபுக்திகளின் விவரம் 612
நக்ஷத்ர தசைகள் 613
பாவாதிபர்கள் பொதுப் பலன் ... ... ,,

பாவாதிபர்கள் தசைகளின் பலன் ... 617
சூரிய தசை புக்தி பலன்கள் 628
சந்த்ர தசை புக்தி பலன்கள் 634
செவ்வாய் தசை புக்தி பலன்கள் ... 6 8
ராகு தசை புக்தி பலன்கள் 644
குரு தசை புக்தி பலன்கள் 651
சனி தசை புக்தி பலன்கள் 659
புத தசை புக்தி பலன்கள் 666
கேது தசை புக்தி பலன்கள் 672
சுக்ர தசை புக்தி பலன்கள் 678
கோசர பலன் 686
பரிஹார இராமாயண ஸர்க விவரம் ... 687
அங்க க்ரஹங்கள் ... ... ,,
லத்தா பலம் 692
திரேக்காண ஸ்வரூபம் ... ... ,,
ஸம்வத்ஸர தசை 699
மாத மஹா தசை 700
மாத பலன் 701
ஜன்ம நக்ஷத்ர பலன் ... ... ,,
தின்ய க்ரஹ பலன் ... ... ,,
ப்ரச்னங்கள் — ஆரூடம் ... ... ,,
லக்னநி நிச்சயம் 704
பஞ்சபக்ஷி — 705
க்ரஹங்களின் ஜன்ம பூமி முதலியன ... 707
தும்மலின் பலன் 707
பல்லி விழுதலின் பலன் 707
பல்லி சொல்லுக்குப் பலன் 708
தின்ன் காணும் பலன் 708
சுவரிடிவதன் பலன் 709
புற்று காண்பதன் பலன் 709
எறும்பு காண்பது 709
பசு கன்று போடுதலின் பலன் 709
வாழை முதலியவைகளில் புஷ்பம் காணுதல் ... 709
நீ முதலியவற்றுல் வஸ்த்ர நாச பலன் ... 709
காலற்ற உடலற்ற தலையற்ற நாட்கள் ... 710
காக்கை கத்தும் பலன் 711
ஆந்தை கூவுதல் சகுனம் 711
சுப ஸ்வப்னங்கள் 711
துஸ் ஸ்வப்ந பலன் 713
அஷ்டக வர்க யந்த்ர உபயோக விவரம் ... 715

ஹோரா பலன் 719
கேது தசை சூரிய புக்தி 719
கேது விஷயம் 720
ஒஜன் விழும் பலன் 720
சதுர்யுக விவரம் 720
குறித்த தேதிக்கு திதி நக்ஷத்ர யோகமறிய ... 721
ரேகாம்சம் முதலியன 722
பிரதான பட்டணங்களின் ரேகாம்சம் முதலியன ... 723
ஸ்டாண்டர்டு மணிகள் 725
இரவு நாழிகை பார்க்கும் விதம் ... 725
லக்னபாவ மத்ய ஸ்புடம் 725
தசம ஸப்தம சதுர்த்த பாவ மத்ய ஸ்புடம் ... 725
இதர பாவ ஸ்புடம் 726
பாவ ஸந்தி ஸ்புடம் 727
பொருத்த சந்த்ரிகை 728
விஷய அகராதி 765

குறிப்பு:— 408-ம் பக்கத்தில் 11-வது வரி முதல் 27-வது வரி வரை 17 வரிகளும், 426-ம் பக்கத்தில் 15-வது வரி முதல் பக்க முடிவு வரை 18 வரிகளும் அதிகமாக மறுபடியும் அச்சாகியிருக்கிறபடியால் அவைகளை விலக்கி வாசிக்கவும்.



आरोग्यं पद्मबन्धुर्वितरतु सततं संपदं शीतरोचिः
भूलाभं भूमिपुत्रः सकलगुणयुतां वाग्विभूतिं च सौम्यः ।
सौभाग्यं देवमन्त्री वितरतु सततं भार्गवश्शौर्यमार्किः
धैर्यं राहुश्च कीर्तिं सकलशुभयुतां केतुरिष्टार्थसिद्धिम् ॥

॥ श्रीः ॥

आदित्यादि नवग्रहदेवताभ्यो नमः ।

॥ नवग्रहस्तोत्रम् ॥

जपाकुसुमसङ्काशं काश्यपेयं महाद्युतिम् ।
तमोघ्नं सर्वपापघ्नं प्रणतोऽस्मि दिवाकरम् ॥ १ ॥

दधिशङ्खतुषाराभं क्षीरार्णवसमुद्भवम् ।
नमामि शशिनं सोमं शम्भोर्मकुटभूषणम् ॥ २ ॥

धरणीगर्भसंभूतं विद्युत्कान्तिसमप्रभम् ।
कुमारं शक्तिहस्तं तं मङ्गलं प्रणमाम्यहम् ॥ ३ ॥

प्रियङ्गुकलिकाश्यामं रूपेणाप्रतिमं बुधम् ।
सौम्यं सौम्यगुणोपेतं तं बुधं प्रणमाम्यहम् ॥ ४ ॥

देवानां च ऋषीणां च गुरुं काञ्चनसन्निभम् ।
बुद्धिभूतं त्रिलोकेशं तं नमामि बृहस्पतिम् ॥ ५ ॥

हिमकुन्दमृणालाभं दैत्यानां परमं गुरुम् ।
सर्वशास्त्रप्रवक्तारं भार्गवं प्रणमाम्यहम् ॥ ६ ॥

नीलाञ्जनसमाभासं रविपुत्रं यमाग्रजम् ।
छायामार्तण्डसंभूतं तं नमामि शनैश्चरम् ॥ ७ ॥

अर्धकायं महावीर्यं चन्द्रादित्यविमर्दनम् ।
सिंहिकागर्भसंभूतं तं राहुं प्रणमाम्यहम् ॥ ८ ॥

पलाशपुष्पसंकाशं तारकाग्रहमस्तकम् ।
रौद्रं रौद्रात्मकं घोरं तं केतुं प्रणमाम्यहम् ॥ ९ ॥

इति व्यासमुखोद्गीतं यः पठेत्सुसमाहितः ।
दिवा वा यदि वा रात्रौ विघ्नशान्तिर्भविष्यति ॥ १० ॥

नरनारीनृपाणां च भवेद्दुःस्वप्ननाशनम् ।
ऐश्वर्यमतुलं तेषाम् आरोग्यं पुष्टिवर्धनम् ॥ ११ ॥

ग्रहनक्षत्रजाः पीडाः तस्करानिसमुद्भवाः ।
तास्सर्वाः प्रशमं यान्ति व्यासो ब्रूते न संशयः ॥ १२ ॥

ஊதி வ்யாஸஸ்வரூபீ தம் யஃ வதேத் ஸ்ரீஸ்ரஹிதஃ ।
ஶிவா வா யதி வா ராஜேந்த்ர விஷ்ணுர்ஜில-விஷ்ணுகி ॥ஏ॥
நரநாரீ நரயாணாம் ச ஸவேஷ்டஸ்வப்ந நாஶநஃ ।
ஸௌஶ்யஸ்ஸுதஸ்ரீம் தேஷாம் ஸுரோகா வாஷிவஸ்தி ॥

ஶ்ரஹ நக்ஷத்ரஜாஃ பீடாஃ
தஸ்காஸ்தஸ்வஸ்ஸ்வாஃ ।
தாஸ்ஸவாஃ ப்ரஸ்ஸம் யாந்தி
வ்யாஸஸ்ய வசநம் யதா ॥ ஏஉ ॥

நவக்ரஹ ஸ்தோத்ரம்.

ஜபாகுஸுமஸங்காசம் காச்யபேயம் மஹாத்யுதிம்,
தமோக்நம் ஸர்வபாபக்நம் ப்ரணதோஸ்மி திவாகரம்.

ததிசங்கதுஷாராபம் க்ஷீரார்ணவஸமுத்பவம்,
நமாமி சசிநம் ஸோமம் சம்போர் மகுடபூஷணம்.

தரணீகர்ப்பஸம்பூதம் வித்யுத்காந்திஸமப்ரபம்,
குமாரம் சக்திஹஸ்தம் தம் மங்களம் ப்ரணமாம்யஹம்.

ப்ரியங்கு கலிகாச்யாமம்
ரூபேணப்ரதிமம் புதம்,
ஸௌம்யம் ஸௌம்ய குணோபேதம்
தம் புதம் ப்ரணமாம்யஹம்.

தேவாநாம் ச ருஷீணம் ச குரும் காஞ்சனஸந்நிபம்,
புத்திபூதம் த்ரிலோகேசம் தம் நமாமி ப்ருஹஸ்பதிம்.

ஹிமகுந்த மிருணாளாபம் தைத்யாநாம் பரமம் குரும்,
ஸர்வ சாஸ்த்ரப்ரவக்தாரம் பார்கவம் ப்ரணமாம்யஹம்.

நீலாஞ்ஜனஸமாபாஸம் ரவிபுத்ரம் யமாக்ரஜம்,
ச்சாயா மார்த்தாண்ட ஸம்பூதம் தம் நமாமி சனைச்சரம்.

ஸூர்யாதி நவக்ரஹதேவதாப்யோ நமஃ ।

॥ நவக்ரஹஸ்தோத்ரம் ॥

ஜவாகுஸுமஸங்காஸம் காஸ்யபேயம் மஹாத்யுதிம் ।
தமோரிம் ஸர்வபாபக்நம் ப்ரணதோஸ்மி திவாகரம் ॥

ததிஶங்கதுஷாராபம் க்ஷீரார்ணவஸமுத்பவம் ।
நமாமி ஶஶிநம் ஸோமம் ஶம்போர்முகுடபூஷணம் ॥ உ ॥

தரணீகர்ப்பஸம்பூதம் வித்யுத்காந்திஸமப்ரபம் ।
குமாரம் ஶக்திஹஸ்தம் தம் மங்களம் ப்ரணமாம்யஹம் ॥ ஊ ॥

ப்ரியங்கு கலிகாஶ்யாமம்
ரூபேணாப்ரதிமம் புதம் ।
ஸௌம்யம் ஸௌம்யகுணோபேதம்
தம் புதம் ப்ரணமாம்யஹம் ॥ ஸ ॥

தேவாநாம் ச ருஷீணாம் ச குரும் காஞ்சநஸந்நிபம் ।
புத்திபூதம் த்ரிலோகேஶம் தம் நமாமி ப்ருஹஸ்பதிம் ॥
ஹிமகுந்தம்ருணாளாபம் தைத்யாநாம் பரமம் குரும் ।
ஸர்வஶாஸ்த்ரப்ரவக்தாரம் பார்கவம் ப்ரணமாம்யஹம் ॥ ஹ ॥

நீலாஞ்ஜநஸமாபாஸம் ரவிபுத்ரம் யமாக்ரஜம் ।
ஶாயா மார்தாண்ட ஸம்பூதம் தம் நமாமி ஶநைஶ்சரம் ॥ ஏ ॥

ஶுல்காயம் ஶஶவீயம்
வம்ஶாதிகுவிஶேஷகம் ।
ஶிம்ஹிகாமஹ்வஸம்பூதம்
தம் ராஹும் ப்ரணமாம்யஹம் ॥ அ ॥

வலாஸ்யம் ஶூலஹஸ்தம்
தாரகாக்ரஹமஸ்தகே ।
ரௌத்ரம் ரௌத்ராத்மகம் க்ரூரம்
தம் கேதும் ப்ரணமாம்யஹம் ॥ கூ ॥

அர்த்தகாயம் மஹாவீர்யம் சந்த்ராதித்யவிமர்தனம்,
ஸிம்ஹிகா கர்ப்பஸம்பூதம் தம் ராஹும் ப்ரணமாம்யஹம்.

பலாசபுஷ்ப ஸங்காசம்
தாரகாக்ரஹமஸ்தகம்,
ரௌத்ரம் ரௌத்ராத்மகம் கோரம்
தம் கேதும் ப்ரணமாம்யஹம்.

இதி வ்யாஸமுகோத்கீதம் யः படேத் ஸுஸமாஹிதः.
திவா வா யதி வா ராத்ரௌ விக்நசாந்திர் பவிஷ்யதி.
நரநாரீந்ருபாணும் ச பவேத் துஸ்ஸ்வப்நநாசனம்,
ஐச்வர்யமதுலம் தேஷாம் ஆரோக்யம் புஷ்டி வர்த்தனம்.
க்ரஹநக்ஷத்ரஜாः பீடாः தஸ்கராக்நி ஸமுத்பவாः,
தாஸ் ஸர்வாः ப்ரசமம் யாந்தி வ்யாஸோ ப்ரூதே ந ஸம்சயः.

புத்தகத்தில் உடனே திருத்தப்படவேண்டியவை.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
4	23-ல்	க்ரூர என்பதை	ஸௌம்ய என்றும்,
10	3-ல்	சுப ,,	அசுப ,,
21	9-ல்	16 ,,	17 ,,
36	3-ல்	பர்வம் ,,	பவம் ,,
98	12-ல்	சித்தியில்	சித்திரையில் ,,
249	22-ல்	தாயி ,,	தாய் ,,
273	24-ல்	சூர்யர்களுடன்	சூரியனுடன் ,,
335	6-ல்	வளு ,,	வளர ,,
742	2-ல்	பூசம் ,,	பூரம் ,,

திருத்திக் கொள்வது.



ஸ்ரீः
ஸ்ரீமதே ஸுதர்சநாய நமः

ஜ்யோதிஷ ஸர்வ விஷயாம்ருதம்.

नक्षत्राणां ग्रहाणां च ताराणाञ्चेशमन्वहम् ।
नत्वा गुरूंश्च सत्यार्यान् ध्यात्वा लिखति रम्यराट् ॥
ज्योतिःशास्त्रोक्तविषयान् तत्रतत्रातिविस्तृतान् ।
जिज्ञासूनां सुबोधार्थं सारं संगृह्य चाधुना ॥

சோதிடனை தெய்வத்தைப் போல் பார்க்கவேண்டும். ஒரு விதத்திலும் அவனை அவமானம் செய்யக்கூடாது. அவமதித்தால் நமது மேன்மைகள் முழுவதும் கெட்டுவிடும்.

ஜோதிடம், வ்யவஹாரம், ப்ராயச்சித்தம், வைத்யம்-இவைகளை ப்ரமாணமறியாமல் (தான்தோன்றியாக) சொல்பவன் ப்ரம்மஹாதகனுவான்.

திதி, வாரம், நக்ஷத்ரம், யோகம், கரணம்— என்கிற ஐந்து அங்கங்களை எவன் தினந்தோறும் தெரிந்துகொள்வானோ; அவனுக்குப் பாவம் இடையாது.

திதியை அறிவதால் லக்ஷ்மியைக்கொடுக்கும். வாரத்தை அறிவதால் ஆயுள் வளரும். நக்ஷத்ரத்தை அறிவதால் பாபத்தைப் போக்கும். யோகத்தை அறிவதால் வ்யாதி அழியும். கரணத்தை அறிவதால் கார்யஸித்தி ஏற்படும்.

காலம்பேதங்கள்.

யுகம், வருஷம், அயனம், ருது, மாதம், பக்ஷம், திதி, வாரம், நக்ஷத்ரம், யோகம், கரணம், தினம், நாழிகை, விநாடி, தத்பரை விதத்பரை.

யுகங்கள் 4.

1. கிருதயுகம், 2. திரேதாயுகம், 3. துவாபரயுகம், 4. கலியுகம்.

யுகங்களின் வருஷங்கள்.

கிருதயுக வருஷம்	17, 28, 000	துவாபரயுக வருஷம்	8, 64, 000
திரேதாயுக வருஷம்	12, 96, 000	கலியுக வருஷம்	4, 32, 000

தெலுகு வருஷங்கள் 60.

1.	பிரபவ	21.	ஸர்வஜித்து	41.	பிலவங்க
2.	விபவ	22.	ஸர்வதாரி	42.	கீலக
3.	சுக்ல	23.	விரோதி	43.	ஸௌம்ய
4.	ப்ரமோதூத	24.	விக்ருதி	44.	ஸாதாரண
5.	ப்ரஜோத்பத்தி	25.	கர	45.	விரோதிக்ருது
6.	ஆங்கிரஸ	26.	கந்தன	46.	பரீதாபி
7.	ஸ்ரீமுக	27.	விஜய	47.	ப்ரமாதீச
8.	பவ	28.	ஜய	48.	ஆனந்த
9.	யுவ	29.	மன்மத	49.	ராக்ஷஸ
10.	தாது	30.	துர்முகி	50.	நள
11.	ஈச்வர	31.	ஹேவிளம்பி	51.	பிங்கள
12.	வெகுதான்ய	32.	விளம்பி	52.	காளயுக்தி
13.	ப்ரமாதி	33.	விகாரி	53.	சித்தார்த்தி
14.	விக்ரம	34.	சார்வரி	54.	ரௌத்ரி
15.	விஷு	35.	பிலவ	55.	துன்மதி
16.	சித்ரபானு	36.	சுபகிருது	56.	துந்துபி
17.	சுபானு	37.	சோபகிருது	57.	ருதிரோத்காரி
18.	தாருண	38.	க்ரோதி	58.	ரக்தாக்ஷி
19.	பார்த்திவ	39.	விச்வாவசு	59.	க்ரோதன
20.	வ்யய	40.	பராபவ	60.	அக்ஷய

அயனங்கள் 2.

1. உத்தராயனம். 2. தக்ஷிணயனம்.

அயனங்களுக்குரிய மாதங்கள்.

1. தைமாதம் முதல் ஆனிமாதம் வரை ஆறுமாதங்கள் உத்தராயனம்.

2. ஆடிமாதம் முதல் மார்கழிமாதம் வரை ஆறுமாதங்கள் தக்ஷிணயனம்.

ருதுக்கள் 6.

1. வஸந்த ருது 2. க்ரீஷ்ம ருது 3. வருஷ ருது 4. சரத்ருது 5. ஹேமந்த ருது 6. சிசிர ருது.

ருதுக்களுக்குரிய மாதங்கள்.

1. சித்திரையும் வைகாசியும் வஸந்த ருது
2. ஆனியும் ஆடியும் க்ரீஷ்ம ருது
3. ஆவணியும் புரட்டாசியும் வருஷ ருது
4. ஐப்பசியும் கார்த்திகையும் சரத் ருது
5. மார்கழியும் தையும் ஹேமந்த ருது
6. மாசியும் பங்குனியும் சிசிர ருது

மாதங்கள் 12.

1. சித்திரை 2. வைகாசி 3. ஆனி 4. ஆடி 5. ஆவணி 6. புரட்டாசி 7. ஐப்பசி 8. கார்த்திகை 9. மார்கழி 10. தை 11. மாசி 12. பங்குனி.

மாதங்களுக்குரிய ஸங்கல்ப மாதங்கள்.

சித்திரை—மேஷம்		ஐப்பசி	—துலாம்
வைகாசி —விருஷபம்		கார்த்திகை—விருச்சிகம்	
ஆனி —மிதுனம்		மார்கழி	—தனுஸ்
ஆடி —கடகம்		தை	—மகரம்
ஆவணி —சிம்மம்		மாசி	—கும்பம்
புரட்டாசி—கன்னி		பங்குனி	—மீனம்

பக்ஷங்கள் 2.

சுக்ல பக்ஷம் — வளர்பிறை காலம் — பூர்வ பக்ஷம்
கிருஷ்ண பக்ஷம் — தேய்பிறை காலம் — அபர பக்ஷம்.

திதிகள் 15.

1. பிரதமை 2. துவிதீயை 3. த்ருதீயை 4. சதுர்த்தி 5. பஞ்சமி 6. ஷஷ்டி 7. ஸப்தமி 8. அஷ்டமி 9. நவமி 10. தசமி 11. ஏகாதசி 12. துவாதசி 13. த்ரயோதசி 14. சதுர்த்தசி 15. அமாவாசை அல்லது பௌர்ணமி.

வாரங்களின் நாட்கள் 7.

1. ஞாயர் 2. திங்கள் 3. செவ்வாய் 4. புதன் 5. வியாழன் 6. வெள்ளி 7. சனி,

ஷ வாரங்களுக்குரிய சங்கல்ப வாரங்கள்,

ஞாயர் — பானு வாஸரம்
திங்கள் — இந்து வாஸரம்
செவ்வாய் — பௌம வாஸரம்
புதன் — ஸௌம்ய வாஸரம்
வியாழன் — குரு வாஸரம்
வெள்ளி — ப்ருகு வாஸரம்
சனி — மந்த வாஸரம் அல்லது ஸ்திரவாஸரம்

ஷ ஏழு வாரங்களின் இரண்டு பிரிவுகள்,

1. திங்கள், புதன், வியாழன், வெள்ளி இந்த நான்கும் சுப வாரங்கள் அல்லது ஸௌம்ய வாரங்கள்.

2. ஞாயர், செவ்வாய், சனி இந்த மூன்றும் அசுப வாரங்கள் அல்லது க்ரூர வாரங்கள்.

நக்ஷத்ரங்கள் 27.

1. அசுவதி 2. பரணி 3. கார்த்திகை 4 ரோகிணி 5. மிருகசிர்ஷம் 6. திருவாதிரை 7. புனர்பூசம் 8. பூசம் 9. ஆயில்யம் 10. மகம் 11. பூரம் 12. உத்தரம் 13. ஹஸ்தம் 14. சித்திரை 15. சுவாதி 16. விசாகம் 17. அனுஷம் 18. கேட்டை 19. மூலம் 20. பூராடம் 21. உத்தராடம் 22. திருவோணம் 23. அவிட்டம் 24. சதயம் 25. பூரட்டாதி 26. உத்தரட்டாதி 27. ரேவதி.

ஷ நக்ஷத்ரங்களுக்குரிய ஸங்கல்ப நக்ஷத்ரங்கள்.

அசுவதி	– அச்வீநீ	சித்திரை	– சித்ரா
பரணி	– அபபரணீ	ஸ்வாதி	– ஸ்வாதீ
கார்த்திகை	– க்ருத்திகா	விசாகம்	– விசாகா
ரோஹிணி	– ரோஹிணீ	அநுஷம்	– அநூராதா
மிருகசிர்ஷம்	– ம்ருகசிரஸ்	கேட்டை	– ஜ்யேஷ்டா
திருவாதிரை	– ஆர்த்ரா	மூலம்	– மூலா
புனர்பூசம்	– புனர்வஸூ	பூராடம்	– பூர்வாஷாடா
பூசம்	– புஷ்யம்	உத்தராடம்	– உத்தராஷாடா
ஆயில்யம்	– ஆச்லேஷா	திருவோணம்	ச்ரவணம்
மகம்	– மகா	அவிட்டம்	– தநிஷ்டா
பூரம்	– பூர்வ பல்குனீ	சதயம்	– சதபிஷக்
உத்தரம்	– உத்தர பல்குனீ	பூரட்டாதி	– பூர்வபாத்ரா
அஸ்தம்	– ஹஸ்தா	உத்தரட்டாதி	உத்தரபாத்ரா
		ரேவதி	– ரேவதி

ஷ நக்ஷத்ரங்களின் பத்து பிரிவுகள்.

1. ஊர்த்வமுகம், 2. அதோமுகம், 3. திர்யங்முகம், 4. ஸ்திரம், 5. சரம், 6. உக்ரம், 7. மிச்ரம், 8. க்ஷிப்ரம், 9. ம்ருது, 10. தாருணம்.

ஊர்த்வமுக நக்ஷத்ரங்கள் 9.

1 ரோகிணி, 2 திருவாதிரை, 3 பூசம், 4 உத்தரம் 5 உத்தராடம், 6 திருவோணம், 7 அவிட்டம், 8 சதயம், 9 உத்தரட்டாதி இவைகளில் உப்பரிகை, கொடி மரம், மதில், வாசற்படி, வீதி, யானை, குதிரை, கொட்டாரம், பந்தல், தோட்டம், பட்டாபிஷேகம் ஆரம்பித்தல் உத்தமம்.

அதோமுக நக்ஷத்ரங்கள் 9

1 பரணி, 2 கார்த்திகை, 3 ஆயில்யம், 4 மகம், 5 பூரம் 6. விசாகம், 7 மூலம், 8 பூராடம், 9 பூரட்டாதி இவைகளில் குளம், கிணறு, புதையல், களஞ்சியம், வேலி, சொக்கட்டான், குஹாப்ரவேசம், கணிதம் ஆரம்பித்தல் உத்தமம்.

திர்யங்முக நக்ஷத்ரங்கள் 9.

1 அசுவதி, 2 மிருகசிர்ஷம், 3 புனர்பூசம், 4 அஸ்தம், 5 சித்திரை, 6 ஸ்வாதி, 7 அனுஷம், 8 கேட்டை, 9 ரேவதி இவைகளில் நாற்கால் ஜீவன் விலைக்கு வாங்குதல், மேய்த்தல், ஏற்றம், உழவு, கால்வாய், வாசக்கால், தூண் முதலியவை நாட்டுதல் ஆரம்பிக்க உத்தமம்.

ஸ்திர நக்ஷத்ரங்கள் 4.

1 ரோகிணி, 2 உத்தரம், 3 உத்தராடம் 4 உத்தரட்டாதி இவைகளில் விதை விதைக்குதல், நகரப்ரவேசம், ராஜ்யாபிஷேகம், தோட்டம் ஆரம்பிக்க உத்தமம்.

சர நக்ஷத்ரங்கள் 5.

1 புனர்பூசம், 2 ஸ்வாதி. 3 திருவோணம், 4 அவிட்டம், 5 சதயம் இவைகளில் வாஹநம், ஊஞ்சல், ரதம் ஏறுதல், தோட்டம் முதலியவைகளுக்குப் போகுதல், ஆரம்பித்தல் உத்தமம்.

உக்ர நக்ஷத்ரங்கள் 5.

1 பரணி, 2 மகம், 3 பூரம், 4 பூராடம், 5 பூரட்டாதி, இவைகளில் உக்ரகாரியம், விஷப்ரயோகம் உச்சாடம், சஸ்த்ர ப்ரயோகம் செய்தல் உத்தமம்.

மிச்ர நக்ஷத்ரங்கள் 2

1 கார்த்திகை, 2 விசாகம் இவைகளில் அபிஷேகம், விதை விதைத்தல், ஊர்வலம், க்ருஹப்ரவேசம், மரம், கொடி வைக்குதல் சாந்திகர்மம் செய்தல் உத்தமம்.

க்ஷிப்ர நக்ஷத்ரங்கள் 3.

1 அசுவதி 2 பூசம், 3 அஸ்தம் இவைகளில் வியவஹாரம், நகை பூட்டிக்கொள்ளுதல், விளையாட்டு, மருந்து கொடுத்தல், ஞான வித்யை, பிழை திருத்தல், பிரயாணம் செய்தல் உத்தமம்.

ம்ருது நக்ஷத்ரங்கள் 4.

1 சித்திரை, 2 மிருகசிர்ஷம், 3 அனுஷம், 4 ரேவதி இவைகளில் சினேகம், ஸ்த்ரீ சங்கமம், நகை பூட்டிக்கொள்ளுதல், வஸ்த்ரம் தரித்தல், சங்கீதம் முதலிய பல சுபகாரியங்கள் செய்ய உத்தமம்.

தாருண நக்ஷத்ரங்கள் 4.

1 திருவாதிரை, 2 ஆயில்யம், 3 கேட்டை, 4 மூலம் இவைகளில் பிசாசு ஓட்டுதல், புதையல் எடுத்தல் செய்தல் உத்தமம்

ஆண் நக்ஷத்ரங்கள் 11.

1 பரணி, 2 ரோகிணி, 3 புனர்பூசம், 4 பூசம், 5 மகம், 6 அஸ்தம், 7 சித்திரை, 8 விசாகம், 9 திருவோணம், 10 பூரட்டாதி, 11 உத்தரட்டாதி.

பெண் நக்ஷத்ரங்கள் 13.

1 அசுவதி, 2 கார்த்திகை, 3 திருவாதிரை, 4 ஆயில்யம், 5 பூரம், 6 உத்தரம், 7 ஸ்வாதி, 8 அனுஷம், 9 கேட்டை, 10 பூராடம். 11 உத்தராடம், 12 அவிட்டம், 13 ரேவதி.

நபும்ஸக நக்ஷத்ரங்கள் 3.

1 மிருகசிர்ஷம், 2 மூலம், 3 சதயம் இவைகள்.

ஸவ்ய நக்ஷத்ரங்கள் 1

1 அசுவதி, 2 பரணி, 3 கார்த்திகை, 4 புனர்பூசம், 5 பூசம், 6 ஆயில்யம், 7 அஸ்தம், 8 சித்திரை 9 ஸ்வாதி, 10 மூலம், 11 பூராடம், 12 உத்தராடம், 13 பூரட்டாதி, 14 உத்தரட்டாதி, 15 ரேவதி.

அபஸவ்ய நக்ஷத்ரங்கள் 12

1 ரோகிணி, 2 மிருகசிர்ஷம், 3 திருவாதிரை, 4 மகம், 5 பூரம், 6 உத்தரம், 7 விசாகம், 8 அனுஷம், 9 கேட்டை, 10 திருவோணம், 11 அவிட்டம். 12 சதயம்.

குருட்டு நக்ஷத்ரங்கள்.

சூரியனிருக்கிற நக்ஷத்ர முதல் 1. 2, 3, 4. 25, 26, 27வது நக்ஷத்ரங்கள். இவைகளில் சுபகாரியங்கள் செய்யலாகாது.

ஒரு கண் உள்ள நக்ஷத்ரங்கள்

சூரியனிருக்கிற நக்ஷத்ர முதல் 5, 6, 7, 8, 21, 22, 23. 24-வது நக்ஷத்ரங்கள். இவைகளில் சுபகாரியங்கள் செய்யலாம்.

இரண்டு கண்கள் உள்ள நக்ஷத்ரங்கள்

சூரியனிருக்கிற நக்ஷத்ர முதல் 9, 10, 11, 12 13, 14, 15 ,16 17, 18, 19, 20-வது நக்ஷத்ரங்கள். இவைகளில் சுபகாரியங்கள் செய்யலாம்.

உயிரில்லாத நக்ஷத்ரங்கள்.

சூர்யனிருக்கிற நக்ஷத்ர முதல் 1, 2, 10, 19, 27-வது நக்ஷத்ரங்கள். இவைகளில் சுப காரியங்கள் செய்யலாகாது.

பூர்ண ஜீவ நக்ஷத்ரங்கள்.

சூர்யனிருக்கிற நக்ஷத்ர முதல் 3, 4, 5, 6, 7, 8, 9, 20, 21, 22, 23, 24, 25, 26-வது நக்ஷத்ரங்கள். இவைகளில் சுப காரியங்கள் செய்யலாம்.

அர்த்த ஜீவ நக்ஷத்ரங்கள்.

சூர்யனிருக்கிற நக்ஷத்ர முதல் 11, 12, 13, 14, 15, 16, 17, 18-வது நக்ஷத்ரங்கள். இவைகளில் சுப காரியங்கள் செய்யலாம்.

யோகங்கள் 27.

1 விஷ்கம்பம், 2 ப்ரீதி, 3 ஆயுஷ்மான், 4 ஸௌபாக்யம் 5 சோபநம், 6 அதிகண்டம், 7 ஸுகர்மம், 8 த்ருதி, 9 சூலம் 10 கண்டம், 11 வ்ருத்தி, 12 த்ருவம், 13 வ்யாகாதம், 14 ஹர்ஷணம், 15 வஜ்ரம், 16 ஸித்தி, 17 வ்யதிபாதம், 18 வரீயான், 19 பரிகம், 20 சிவம், 21 சித்தம், 22 ஸாத்யம், 23 சுபம், 24 சுப்ரம், 25 ப்ரஹ்மம், 26 மாகேந்த்ரம் 27 வைத்ருதி. இவற்றில் விஷ்கம்பம், அதிகண்டம், சூலம், கண்டம், வியாகாதம், வஜ்ரம், வ்யதிபாதம், பரிகம், வைத்ருதி- இந்த 9 யோகங்களும் சுபகாரியங்களுக்கு உதவாதவைகள்.

கரணங்கள் 11.

1 பவம், 2 பாலவம், 3 கௌலவம், 4 தைதுலை, 5 கரஜை, 6 வணிஜை, 7 பத்ரை, 8 சகுனி 9 சதுஷ்பாதம், 10 நாகவம், 11 கிம்ஸ்துக்நம்.

ராகண சூலம்.

பூர்ண ராகணத்திற்கு முன் பின் 7 நிமிஷங்களும், பார்ச்வ ராகணத்திற்கு முன்பின் 3-நிமிஷங்களும். இவைகளில் சுபகாரியங்கள் செய்யலாகாது.

பஞ்சாங்கங்களாவன.

(1) வாரம், (2) திதி, (3) நக்ஷத்ரம், (4) யோகம், (5) கரணம்

வார நக்ஷத்ர யோகங்கள் அமிருதாதிகள்.

	ஞா.	திங்.	செ.	புத.	வியா.	வெ.	சனி.
அசுவதி	வர்ஜ	சுப	சித்த	நாச	அமி	அமி	சுப
பரணி	சுப	சுப	சுப	நாச	சுப	சுப	சுப
கார்த்திகை	சுப	சுப	சுப	சித்த	தக்த	சுப	அமி
ரோஹிணி	சுப	அமி	சுப	சுப	தக்த	நாச	அமி
மிருகசீர்ஷம்	சுப	அமி	அமி	சித்த	தக்த	சுப	சுப
திருவாதிரை	சுப	சுப	நாச	அமி	தக்த	சுப	சுப
புனர்பூசம்	சுப	அமி	அமி	அமி	அமி	சுப	மர
பூசம்	அமி	சுப	அமி	அமி	அமி	நாச	சுப
ஆயில்யம்	சுப	சுப	அமி	அமி	சுப	நாச	மர
மகம்	வர்ஜ	சுப	அமி	மிரு	அமி	நாச	சுப
பூரம்	சுப	சுப	அமி	சித்த	சுப	அமி	சுப
உத்தரம்	சித்த	நாச	சித்த	சித்த	தக்த	சித்த	மர
ஹஸ்தம்	சித்த	சுப	அமி	அமி	சுப	சித்த	மர
சித்திரை	சுப	நாச	அமி	அமி	சுப	சித்த	மர
ஸ்வாதி	சுப	அமி	அமி	அமி	அமி	சித்த	அமி
விசாகம்	வர்ஜ	நாச	நாச	அமி	சுப	நாச	சுப
அனுஷம்	வர்ஜ	சுப	சுப	சித்த	சுப	சித்த	சுப
கேட்டை	வர்ஜ	சுப	சுப	சுப	சுப	நாச	சுப
மூலம்	சித்த	சுப	சுப	நாச	சுப	அமி	சுப
பூராடம்	சுப	நாச	சுப	சித்த	சுப	சித்த	மர
உத்தராடம்	சித்த	நாச	நாச	சித்த	சுப	சித்த	மர
திருவோணம்	சித்த	அமி	சுப	அமி	சுப	சித்த	சுப
அவிட்டம்	சுப	சுப	நாச	நாச	சுப	சித்த	சுப
சதயம்	சுப	சுப	நாச	சுப	தக்த	சித்த	அமி
பூரட்டாதி	சுப	சுப	நாச	சித்த	சுப	சித்த	சுப
உத்தரட்	சித்த	நாச	சித்த	சுப	சுப	சித்த	சுப
ரேவதி	சித்த	சுப	சித்த	நாச	சுப	அமி	நாச

ஸங்கேதாக்ஷரங்கள்.

சுப—சுபயோகம், சித்த—சித்தயோகம், அமி—அமிருதயோகம், மர—மரணயோகம், தக்த—தக்தயோகம், வர்ஜ—வர்ஜயோகம், நாச—நாசயோகம்.

நான்குவித அசுப யோகங்களில்

(a) **வார தீதிகள் கூடியதியோகம்.**

ஞாயர்—சதுர்த்தி, துவாதசி, அமாவாஸ்யை.
திங்கள்—ஷஷ்டி, ஏகாதசி,
செவ்வாய்—துவிதியை, ஸப்தமி
புதன்—துவிதியை, ஸப்தமி
வியாழன்—ஷஷ்டி, அஷ்டமி
வெள்ளி—அஷ்டமி, நவமி
சனி—நவமி.

(b) **வார நக்ஷத்ரங்கள் கூடிய அசுபயோகம்.**

ஞாயர்—அசுவதி, மகம், விசாகம், அனுஷம், கேட்டை.
திங்கள்—கார்த்திகை, உத்தரம் சித்திரை, விசாகம், பூராடம், உத்தராடம், உத்தரட்டாதி.
செவ்வாய்—மிருகசீர்ஷம், திருவாதிரை, விசாகம்; உத்தராடம். அவிட்டம், சதயம், பூரட்டாதி.
புதன்—அசுவதி பர, திருவா, மூலம், அவிட்டம், ரேவதி.
வியாழன்—கார், ரோகி, மிருக, திருவா, உத்தரம், சதயம்.
வெள்ளி—ரோகி, பூசம், ஆயில், மக, ஸ்வா, விசா, கேட்டை.
சனி—புனர்பூசம், ஆயில்யம், உத்தரம், ஹஸ்தம், சித்திரை, பூராடம், உத்தராடம், திருவோணம், ரேவதி.

(c) **வாரம் திதி, நக்ஷத்ரங்கள் கூடிய அசுபயோகம்.**

1. ஞாயிறு—திருதியை, அஷ்ட, நவமி, திரயோ. சதுர்தசி இத்திதிகளில் பரணி, மிரு, ஆயி, அவிட்டம் இந்த நக்ஷத்ரங்கள் கூடுவதும்,

ஞாயிறு பஞ்சமி திதியில், கார்த்திகை அஸ்தம் இந்த நக்ஷத்ரங்கள் கூடுவதும்,

2. திங்கள்—ஸப்தமி திதியில், பரணி, மகம், அனுஷம், பூரட்டாதி இந்த நக்ஷத்ரங்கள் கூடுவதும்,

3. செவ்வாய்—பிர, ஸப்த, அஷ், தச, பௌர்ண இந்த திதிகளில் புனர், கேட், பூராட, திருவோணம் இந்த நக்ஷத்ரங்கள் கூடுவதும்,

ஷ—பௌர்ணமி திதியில் ரோகிணி கூடுவதும், ஸப்தமி திதியில் அசுவதி கூடுவதும்,

4. புதன்—பிரதமை, திருதி, அஷ்ட, நவமி இந்த திதிகளில் பூசம், ஆயி, மகம், பூரட்டாதி கூடுவதும். அஷ்டமி திதியில் அனுஷம் கூடுவதும்,

5. வியாழன்—சுக்ல, துவா, திரயோ. இந்த திதிகளில் சித், விசா, அனு, திருவோணம் கூடுவதும், நவமியில் பூசம் கூடுவதும்,

6. வெள்ளி—துவி, திரு, ஷஷ், தச, ஏகாதசி இந்த திதிகளில் புன, ஹஸ் அனு, திருவோ, அவிட்டம் கூடுவதும், தசமியில் ரேவதி கூடுவதும்.

7. சனி—திரு. ஸப். ஏகாதசி இந்த திதிகளில் பரணி, பூசம், பூராடம் கூடுவதும், ஏகாதசியில் ரோகிணி கூடுவதும்.

(d) **திதி நக்ஷத்ரங்கள் கூடிய அசுபயோகம்.**

துவிதியையில்—அனுஷமும்
திருதியையில்—உத்தரம், உத்தராடம், உத்தரட்டாதி, அனுஷமும்.
சதுர்த்தியில்—உத்தரமும்
பஞ்சமியில்—மகம், ஹஸ்தமும்
ஷஷ்டியில்—கார்த்திகையும்
அஷ்டமியில்—ரோகிணியும்
திரயோதசியில்—சித்திரை, ஸ்வாதியும் கூடுவதும்.

மேலே கண்ட யோகங்களில் விதி நிஷேதம்.

வர்ஜ்யயோகம், நாசயோகம், மரணயோகம், நான்குவித அசுபயோகங்கள் உள்ள தினத்தில் சுபகாரியங்கள் செய்யலாகாது. ஆனால் ஷ யோகங்களில் 9 நாழிகைக்குமேல் சுபகாரியங்கள் செய்யலாமென்று சிலர் அபிப்ராயம்.

சுபகாரியங்களுக்கு உரிய வாரங்கள்.

திங்கள், புதன், வியாழன், வெள்ளி இந்த வாரங்கள் எல்லோருக்கும், பிராமணர்களுக்கு ஞாயிறும், க்ஷத்ரியர்களுக்கு சனி வாரமும் சுபங்கள்.

சுபகாரியங்களுக்கு சந்திரபலமுள்ள திதிகள்.

சுக்லபக்ஷம் ஷஷ்டி முதல் கிருஷ்ண பக்ஷம் பஞ்சமி வரையிலுள்ள திதிகள் உத்தம காலங்கள். கிருஷ்ணபக்ஷ ஷஷ்டி, ஸப்தமி, அஷ்டமி, மத்திம காலங்கள்.

சாந்த்ரமான மாதங்களாவன-

மாதம் முதல் பௌர்ணமி		மாதம் வரை அமாவாசியை	சாந்த்ரமான மாதம்
சுக்ல ப்ரதமை சித்திரை	,,	வைகாசி	,, வைசாகம்
வைகாசி	,,	ஆனி	,, ஜ்யேஷ்டம்
ஆனி	,,	ஆடி	,, ஆஷாடம்
ஆவணி	,,	புரட்டாசி	,, ஸ்ராவணம்
புரட்டாசி	,,	ஐப்பசி	,, ஆச்வயுஜம்
ஐப்பசி	,,	கார்த்திகை	,, கார்த்திகம்
கார்த்திகை	,,	மார்கழி	,, மார்கசீர்ஷம்
மார்கழி	,,	தை	,, புஷ்யம்
தை	,,	மாசி	,, மாகம்
மாசி	,,	பங்குனி	,, பால்குனம்

பன்னிரண்டு ராசிகளும் அதிபதிகள்.

மேஷத்துக்கு அதிபதி செவ்வாய், விருஷபத்துக்கு அதிபதி சுக்கிரன், மிதுனத்துக்கு அதிபதி புதன், கடகத்துக்கு அதிபதி சந்திரன், ஸிம்மத்துக்கு அதிபதி சூரியன், கன்னிக்கு அதிபதி புதன், துலாத்துக்கு அதிபதி சுக்கிரன், விருச்சிகத்துக்கு அதிபதி செவ்வாய், தனுசுக்கு அதிபதி குரு, மகரத்துக்கு அதிபதி சனி, கும்பத்துக்கு அதிபதி சனி, மீனத்துக்கு அதிபதி குரு.

பன்னிரண்டு ராசிகளின் உருவங்கள்.

மேஷம் - ஆடு, விருஷபம்-எருது, மிதுனம் - ஸ்திரீபுருஷர்கள், கடகம் - நண்டு, ஸிம்மம் - சிங்கம், கன்னி-பெண், துலாம் - தராசு, விருச்சிகம்-தேள், தனுசு-வில், மகரம்-முதலை, கும்பம்-குடம், மீனம்-மீன்.

பன்னிரண்டு ராசிகளின் நிறங்கள்.

மேஷம்-சிவப்பு, விருஷபம்-வெளுப்பு, மிதுனம் - இளிப்பச்சை, கடகம்-பாதிரி அல்லது கொஞ்சம் கருப்பும் சிவப்பும் கலந்தது, ஸிம்மம்-அழுக்கடைந்த வெளுப்பு, கன்னி-நானாவிதம், துலாம்-கருப்பு, விருச்சிகம்-தங்கநிறம், தனுசு-பிங்களவர்ணம் அல்லது மஞ்சள், மகரம்-வெளுப்பும் சிவப்பும் கலந்தநிறம், கும்பம்-நீரிநிறம், மீனம்-வெளுப்பு.

ராசிகளின் திக்குக்கள்

மேஷம்-கிழக்கு, விருஷபம்-தெற்கு, மிதுனம்-மேற்கு, கடகம்-வடக்கு, ஸிம்மம்-கிழக்கு, கன்னி-தெற்கு, துலாம்-மேற்கு, விருச்சிகம்-வடக்கு, தனுசு- கிழக்கு, மகரம்-தெற்கு, கும்பம்- மேற்கு, மீனம்-வடக்கு.

சர ஸ்திர உபய ராசிகள்.

மேஷம், கடகம், துலாம், மகரம் இந்நான்கும் சரராசிகள். விருஷபம், ஸிம்மம், விருச்சிகம், கும்பம் இந்நான்கும் ஸ்திரராசிகள். மிதுனம், கன்னி, தனுசு, மீனம் இந்நான்கும் உபயராசிகள்.

ஆண், பெண் ராசிகள்.

மேஷம், மிதுனம், ஸிம்மம், துலாம், தனுசு, கும்பம் இந்த ஆறும் ஆண்ராசிகள். விருஷபம், கடகம், கன்னி, விருச்சிகம், மகரம், மீனம் இந்த ஆறும் பெண்ராசிகள்.

நான்கு வர்ண ராசிகள்.

கடகம், விருச்சிகம், மீனம்-பிராம்மண வர்ணம். மேஷம், ஸிம்மம், தனுசு-க்ஷத்ரியவர்ணம். மிதுனம், துலாம், கும்பம் வைசிய வர்ணம், விருஷபம், கன்னி, மகரம்- சூத்ரவர்ணம்.

இரவில் பலமுள்ள ராசிகள்.

மேஷம், விருஷபம், மிதுனம், விருச்சிகம், கும்பம், மீனம், இந்த ஆறு ராசிகளும் இரவில் பலமுள்ள ராசிகள்.

பகலில் பலமுள்ள ராசிகள்.

ஸிம்மம், கன்னி, துலாம், விருச்சிகம், கும்பம் மீனம். இந்த ஆறுராசிகளும் பகலில் பலமுள்ள ராசிகள்.

சீர்ஷோதய ராசிகள்.

மிதுனம், லிம்மம், கன்னி, துலாம், விருச்சிகம், கும்பம் இந்த ஆறும் சீர்ஷோதய ராசிகள்.

ப்ருஷ்டோதய ராசிகள்.

மேஷம், விருஷபம், கடகம், தனுசு, மகரம் இந்த ஐந்தும் ப்ருஷ்டோதய ராசிகள்.

உபயதோதய ராசி.

மீனம் உபயதோதய ராசி எனப்படும்.

க்ரூர ராசிகள்.

மேஷம், மிதுனம், லிம்மம், துலாம், தனுசு, கும்பம் இந்த ஆறும் க்ரூர ராசிகள்.

ஸௌம்ய ராசிகள்.

விருஷபம், கடகம், கன்னி, விருச்சிகம், மகரம், மீனம் இந்த ஆறும் ஸௌம்ய ராசிகள்.

நக்ஷத்திரங்களில் நிற்கும் பனிரெண்டு ராசிகள்.

அசுவதி, பரணி கார்த்திகை முற்கால், மேஷ ராசி.

கார்த்திகைப்பின் முக்கால், ரோகிணி, மிருகசீர்ஷம் முன்னரை விருஷப ராசி.

மிருகசீர்ஷம் பின்னரை, திருவாதிரை, புனர்பூசம் முன் முக்கால் மிதுன ராசி.

புனர்பூசம் பிற்கால், பூசம், ஆயில்யம் கடக ராசி.

மகம், பூரம், உத்திரம் முற்கால் லிம்ம ராசி.

உத்தரம் பின்முக்கால், அஸ்தம், சித்திரை முன்னரை கன்யா ராசி.

சித்திரை பின்னரை, ஸ்வாதி, விசாகம் முன்முக்கால் துலா ராசி.

விசாகம் பின்கால், அனுஷம், கேட்டை விருச்சிக ராசி.

மூலம், பூராடம், உத்தராடம் முற்கால் தனுசு ராசி.

உத்தராடம் பின்முக்கால், திருவோணம், அவிட்டம் முன்னரை மகர ராசி.

அவிட்டம் முன்னரை சதயம், பூரட்டாதி முன் முக்கால் கும்ப ராசி.

பூரட்டாதி பின்கால், உத்தரட்டாதி, ரேவதி மீனராசி.

நவக்ரஹங்கள்.

சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்ரன், சனி, ராகு, கேது.

க்ரூர க்ரஹங்கள் (பாப) க்ரஹங்கள்

சூரியன், தேய்பிறைச்சந்திரன், செவ்வாய், சனி, ராகு, கேது என்கிற ஆறு க்ரஹங்கள்.

ஸௌம்ய க்ரஹங்கள் (சுப) க்ரஹங்கள்.

வளர்பிறைச்சந்திரன், புதன், குரு, சுக்ரன் என்கிற நான்கு க்ரஹங்கள்.

ஸாத்விக, ராஜஸ, தாமஸ க்ரஹங்கள்.

சந்திரன், குரு ஸாத்விக்கள். சூரியன், செவ்வாய், சுக்ரன் ராஜஸர்கள். புதன், சனி, ராகு, கேது தாமஸர்கள்.

வாத, பித்த, ச்லேஷ்ம க்ரஹங்கள்.

புதன், குரு, சனி இந்த மூவர் வாதக்ரஹங்கள். சூரியன், செவ்வாய், ராகு, கேது இந்த நால்வர் பித்த க்ரஹங்கள். சந்திரன், சுக்ரன் இவ்விருவர் ச்லேஷ்மக்ரஹங்கள்.

ஆண், பெண், அலி க்ரஹங்கள்.

சூரியன், செவ்வாய், குரு இந்த மூவர் ஆண் க்ரஹங்கள். சந்திரன், சுக்ரன், ராகு இந்த மூவர் பெண் க்ரஹங்கள். புதன், சனி, கேது இந்த மூவர் அலி க்ரஹங்கள்.

நவக்ரஹங்களின் மித்ரர்கள் (நைஸர்கிகர்கள்).

சூரியனுக்கு—சந்திரன், செவ்வாய், குரு மித்ரர்கள்.
சந்திரனுக்கு—சூரியன், புதன் மித்ரர்கள்.
செவ்வாய்க்கு—சூரியன், சந்திரன், குரு மித்ரர்கள்.
புதனுக்கு—சூரியன், சுக்ரன் மித்ரர்கள்.

குருவுக்கு—சூரியன், சந்திரன், செவ்வாய் மித்ரர்கள்.
சுக்கிரனுக்கு—புதன், சனி, மித்ரர்கள்.
சனிக்கு—புதன், சுக்கிரன் மித்ரர்கள்.
ராகுவுக்கு—சுக்கிரன், குரு, சனி மித்ரர்கள்.
கேதுவுக்கு—செவ்வாய், சுக்கிரன், சனி, மித்ரர்கள்.

நவக்கிரகங்களின் ஸமர்கள்.

சூரியனுக்கு—புதன் ஸமன்.
சந்திரனுக்கு—குரு, சுக்கிரன், சனி ஸமர்கள்.
செவ்வாய்க்கு—சுக்கிரன், சனி ஸமர்கள்,
புதனுக்கு—செவ்வாய், குரு, சனி ஸமர்கள்.
குருவுக்கு—சனி ஸமன்.
சுக்கிரனுக்கு—செவ்வாய், குரு ஸமர்கள்.
சனிக்கு—குரு ஸமன்.
ராகுவுக்கு—புதன், கேது ஸமர்கள்.
கேதுவுக்கு—புதன், குரு, ராகு ஸமர்கள்.

கிரகங்களின் பகைவர் அல்லது சத்துருக்கள்.

சூரியனுக்கு—சுக்கிரன், சனி, ராகு, கேது சத்ருக்கள்.
சந்திரனுக்கு—சத்ருக்கள் கிடையாது.
செவ்வாய்க்கு—புதன் சத்ரு.
புதனுக்கு—சந்திரன் சத்ரு.
குருவுக்கு—புதன், சுக்கிரன் சத்ருக்கள்.
சுக்கிரனுக்கு—சூரியன், சந்திரன், சத்ருக்கள்.
சனிக்கு—சூரியன், சந்திரன், செவ்வாய் சத்ருக்கள்.
ராகுவுக்கு—சூரியன், சந்திரன் சத்ருக்கள்.
கேதுவுக்கு—சூரியன், சந்திரன், சத்ருக்கள்.

கிரகங்களின் ஜாதி.

சூரியன்—க்ஷத்ரியஜாதி.
சந்திரன்—வைசியஜாதி.
செவ்வாய்—க்ஷத்ரியஜாதி.
புதன்—வைசியஜாதி.
குரு—ப்ராம்மணஜாதி.
சுக்கிரன்—ப்ராம்மணஜாதி.
சனி—சூத்ரஜாதி.
ராகு—ஸங்கரஜாதி.
கேது—ஸங்கரஜாதி.

கிரகங்களின் நிறம்.

சூரியனுக்கு—பவழநிறம்.
சந்திரனுக்கு—வெள்ளை.
செவ்வாய்க்கு—மிகச்சிகப்பு
புதனுக்கு—பச்சை
குருவுக்கு—மஞ்சள்
சுக்கிரனுக்கு—வெண்மை.
சனிக்கு—கருப்பு.
ராகுவுக்கு—சாம்பல் நிறம்.
கேதுவுக்கு—பலவித நிறம்.

கிரகங்களின் பாஷை.

சூர்யனுக்கு—ஸம்ஸ்கிருதம்,
சந்திரனுக்கு—தமிழ்,
செவ்வாய்க்கு—தெலுங்கு,
புதனுக்கு—கணிதம்,
குருவுக்கு—ஸம்ஸ்க்ருதம்,
சுக்கிரனுக்கு—ஸம்ஸ்க்ருதம்,
சனிக்கு—அன்யபாஷை,
ராகுவுக்கு—அன்யபாஷை,
கேதுவுக்கு—அன்யபாஷை.

கிரகங்களின் தான்யம்.

சூரியனுக்கு—கோதுமை.
சந்திரனுக்கு—நெல், அரிசி.
செவ்வாய்க்கு—துவரை.
புதனுக்கு—பச்சைப்பயறு.
குருவுக்கு—கொத்துக்கடலை.
சுக்கிரனுக்கு—மொச்சை,
சனிக்கு—எள்ளு.
ராகுவுக்கு—உளுந்து.
கேதுவுக்கு—கொள்ளு.

கிரகங்களின் ரத்நங்கள்.

சூரியனுக்கு—மாணிக்கம்.
சந்த்ரனுக்கு—முத்து.
செவ்வாய்க்கு—பவழம்
புதனுக்கு—பச்சை.
குருவுக்கு—புஷ்யராகம்.
சுக்கிரனுக்கு—வைரம்.
சனிக்கு—நீலம்.
ராகுவுக்கு—கோமேதகம்.
கேதுவுக்கு—வைடூர்யம்.

கிரகங்களின் உலோகங்கள்.

சூரியனுக்கு—சூரியகாந்தம், தாம்ரம்.
சந்திரனுக்கு—சயம், சந்திரகாந்தம்.
செவ்வாய்க்கு—செம்பு.
புதனுக்கு—பித்தளை.
குருவுக்கு—பொன்.
சுக்கிரனுக்கு—வெள்ளி.
சனிக்கு—இரும்பு.
ராகுவுக்கு—கருங்கல்
கேதுவுக்கு—துருக்கல்.

கிரகங்களின் திசைகள்.

சூரியனுக்கு—கிழக்கு. குருவுக்கு—வடகிழக்கு.
சந்திரனுக்கு—வடமேற்கு சுக்கிரனுக்கு—தென்கிழக்கு.
செவ்வாய்க்கு—தெற்கு சனிக்கு—மேற்கு
புதனுக்கு—வடக்கு. ராகுவுக்கு—கிருருதி,
கேதுவுக்கு—வடமேற்கு.

கிரகங்களின் தேவதைகள்.

சூரியனுக்கு—அக்கி சந்திரனுக்கு—அப்பு (ஜலம்), வருணன். குருவுக்கு—இந்திரன் சுக்கிரனுக்கு—இந்திராணி, துர்க்கை, லக்ஷ்மி
செவ்வாய்க்கு—சுப்பிரமணியன். சனிக்கு—ப்ரஹ்மா. ராகுவுக்கு—காளி, பாம்பு.
புதனுக்கு—மஹாவிஷ்ணு. கேதுவுக்கு—இந்திரகுப்தன்.

கிரகங்களின் ஆஷி வீடுகள்.

சூரியனுக்கு—சிம்மம். குருவுக்கு—தனுசு, மீனம்
சந்திரனுக்கு—கடகம் சுக்கிரனுக்கு—விருஷபம், துலாம்.
செவ்வாய்க்கு—மேஷம் விருச்சிகம். சனிக்கு—மகரம், கும்பம்
ராகுவுக்கு—* கன்னி, மிதுனம்.
புதனுக்கு—மிதுனம், கன்னி கேதுவுக்கு—° மீனம், தனுசு.

* கன்னி வடமொழி. மிதனம் தென்மொழி
° மீனம் வடமொழி. தனுக தென்மொழி

நவக்கிரகங்களின் உச்சவீடுகள்.

சூரியனுக்கு—மேஷம். குருவுக்கு—கடகம்.
சந்திரனுக்கு—விருஷபம் சுக்கிரனுக்கு—மீனம்.
செவ்வாய்க்கு—மகரம். சனிக்கு—துலாம்.
புதனுக்கு—கன்னி ராகுவுக்கு—விருச்சிகம்.
கேதுவுக்கு-விருச்சிகம்.
ராகு—விருஷபம், கேது—கன்னி—எனச்சிலர்

கிரகங்களின் நீசவீடுகள்.

சூரியனுக்கு—துலாம். புதனுக்கு—மீனம்.
சந்திரனுக்கு—விருச்சிகம். குருவுக்கு—மகரம்.
செவ்வாய்க்கு—கடகம். சுக்கிரனுக்கு—கன்னி.

சனிக்கு—மேஷம். ராகுவுக்கு—விருஷபம்
கேதுவுக்கு-விருஷபம்.

கிரகங்களின் மூலத்ரிகோண வீடுகள்.

சூரியனுக்கு—ஸிம்மம். குருவுக்கு—தனுசு
சந்திரனுக்கு—விருஷபம். சுக்கிரனுக்கு—துலாம்.
செவ்வாய்க்கு—மேஷம். சனிக்கு—மகரம்.
புதனுக்கு—கன்னி. ராகுவுக்கு—கும்பம்.
கேதுவுக்கு—சிம்மம்
ராகு—விருச்சிகம், கேது—மீனம் எனச் சிலர்.

கிரகங்களின் நட்பு வீடுகள்

சூரியனுக்கு—தனுசு, கும்பம், மீனம்
சந்திரனுக்கு—கன்னி, தனுசு, மீனம்.
செவ்வாய்க்கு—ரிஷபம், மிதுனம், கன்னி, துலாம்.
புதனுக்கு—துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மேஷம் விருஷபம், கடகம்
குருவுக்கு—ரிஷபம், மிதுனம், சிம்மம், கன்னி, துலாம், கும்பம்
சுக்கிரனுக்கு—மேஷம், மிதுனம், விருச்சிகம், தனுசு மகரம் கும்பம்
சனிக்கு—ரிஷபம், மிதுனம், கன்னி, தனுசு, மீனம்.
ராகுவுக்கு—துலாம், மகரம்.
கேதுவுக்கு—துலாம், மகரம்.

கிரகங்களின் பகைவீடுகள்.

சூரியனுக்கு—மகரம், ரிஷபம், மிதுனம், கடகம். கன்னி, விருச்சிகம்.
சந்திரனுக்கு—மேஷம், சிங்கம், துலாம், மகரம், கும்பம்.
செவ்வாய்க்கு—சிங்கம், தனுசு, கும்பம், மீனம்.
புதனுக்கு—சிங்கம்.
குருவுக்கு—மேஷம், விருச்சிகம்.
சுக்கிரனுக்கு—கடகம், சிம்மம்.
சனிக்கு—கடகம், சிம்மம், விருச்சிகம்.
ராகுவுக்கு—மேஷம், கடகம், சிம்மம், கும்பம்.
கேதுவுக்கு—மேஷம், கடகம், சிம்மம், கும்பம்.

கிரகங்களின் பார்வை.

கிரகங்கள் எல்லாம் தான்கள் இருக்குமிடமிருந்து (7) வது விட்டைப்பார்க்கும். செவ்வாய் விசேஷித்து 4–8 ம் விட்டையும் குரு விசேஷித்து 5–9 ம் விட்டையும் சனி விசேஷித்து 3–10ம் விட்டையும் ராகு கேதுக்கள் விசேஷித்து 4–11 ம் விட்டையும் பார்ப்பார்கள்.

சூரியன் விசேஷித்து 3-10ம் விட்டையும். சுக்ரன் 6-8ம் விட்டையும் பார்ப்பதாகச் சிலர். குளிகன் 7-12-பார்வை. குளிகன் நவக்கிரஹத்தில் சேர்ந்ததல்ல.

கிரகங்களிருக்கும் நக்ஷத்ர பாதங்களால் அவர்களின் நவாம்ச ராசிகள் அறிய.

நக்ஷத்திரங்களின் பெயர்கள்.									பாதம்	நவாம்ச ராசி.
அசு	ரோகி	புனர்	மகம்	அஸ்	விசா	மூல	திரு	பூரட்	1	மேஷம்
,,	,,	,,	,,	,,	,,	,,	,,	,,	2	விருஷபம்
,,	,,	,,	,,	,,	,,	,,	,,	,,	3	மிதுனம்
,,	,,	,,	,,	,,	,,	,,	,,	,,	4	கடகம்
பர	மிருக	பூச	பூரம்	சித்தி	அனு	பூரா	அவி	உத்தி	1	சிம்மம்
,,	,,	,,	,,	,,	,,	,,	,,	,,	2	கன்னி
,,	,,	,,	,,	,,	,,	,,	,,	,,	3	துலாம்
,,	,,	,,	,,	,,	,,	,,	,,	,,	4	விருச்சி
கார்	திரு	ஆயி	உத்தி	ஸ்வா	கேட்	உத்	சதய	ரேவ	1	தனுசு
,,	,,	,,	,,	,,	,,	,,	,,	,,	2	மகரம்
,,	,,	,,	,,	,,	,,	,,	,,	,,	3	கும்பம்
,,	,,	,,	,,	,,	,,	,,	,,	,,	4	மீனம்

இன்ன நக்ஷத்ரத்தில் பிறந்தவனுக்கு இன்ன திசை எல்பதும் அந்த தசையின் வருஷங்களும்

நக்ஷத்ரங்கள்.			தசாநாதன்.	வருஷம்.
அசுவதி	மகம்	மூலம்	கேது	7
பரணி	பூரம்	பூராடம்	சுக்கிரன்	20

நக்ஷத்ரங்கள்.			தசாநாதன்.	வருஷம்
கார்த்திகை	உத்தரம்	உத்தராடம்	சூரியன்	6
ரோஹிணி	அஸ்தம்	திருவோணம்	சந்திரன்	10
மிருகசிர்ஷம்	சித்திரை	அவிட்டம்	செவ்வாய்	7
திருவாதிரை	ஸ்வாதி	சதயம்	ராகு	18
புனர்பூசம்	விசாகம்	பூரட்டாதி	குரு	~~16~~ 16
பூசம்	அநுஷம்	உத்தரட்டாதி	சனி	19
ஆயில்யம்	கேட்டை	ரேவதி	புதன்	~~17~~ 17

கிரகங்களின் ஆரோஹணம்.

சூரியன்	—	விருச்சிகம்	முதல்	மீனராசி	வரை
சந்திரன்	—	தனுசு	,,	மேஷம்	,,
செவ்வாய்	—	மிம்மம்	,,	தனுஸ்	,,
புதன்	—	மேஷம்	,,	மிம்மம்	,,
குரு	—	கும்பம்	,,	மிதுனம்	,,
சுக்ரன்	—	துலாம்	,,	கும்பம்	,,
சனி	—	ரிஷபம்	,,	கன்னி	,,
ராகு	—	தனுஸ்	,,	மேஷம்	,,
கேது	—	மேஷம்	,,	மிம்மம்	,,

கிரகங்களின் அவரோஹணம்.

சூரியன்	—	ரிஷபம்	முதல்	கன்னி	வரை
சந்திரன்	—	மிதுனம்	,,	துலாம்	,,
செவ்வாய்	—	கும்பம்	,,	மிதுனம்	,,
புதன்	—	துலாம்	,,	கும்பம்	,,
குரு	—	சிம்மம்	,,	தனுஸ்	,,
சுக்ரன்	—	மேஷம்	,,	மிம்மம்	,,
சனி	—	விருச்சிகம்	,,	மீனம்	,,
ராகு	—	மிதுனம்	,,	துலாம்	,,
கேது	—	துலாம்	,,	கும்பம்	,,

வார சூலை.

திங்கள், சனி, இழக்கு. செவ்வாய், புதன் வடக்கு. வியாழன், தெற்கு. வெள்ளி, ஞாயிறு மேற்கு.

யோகினி தசை

திதிகள்.	திதிகள்.	இவ்வளவு வரை. நாழிகை	விஷ.	திக்குக்கள்
சுக்ல — பிரதமை	சுக்ல — ஏகாதசி	கிரு — ஷஷ்டி	3	45	கிழக்கு
,, — துவிதியை	,, — துவாதசி	,, — ஸப்தமி	7	30	வடக்கு
,, — திருதியை	,, — திரியோதசி	,, — அஷ்டமி	11	15	தென் கிழக்கு
,, — சதுர்த்தி	,, — சதுர்த்தசி	,, — நவமி	15	0	தென் மேற்கு
,, — பஞ்சமி	,, — பௌர்ணமி	,, — தசமி	18	45	தெற்கு
,, — ஷஷ்டி	கிரு — பிரதமை	,, — ஏகாதசி	22	30	மேற்கு
,, — ஸப்தமி	,, — துவிதியை	,, — துவாதசி	26	15	வட மேற்கு
,, — அஷ்டமி	,, — திருதியை	,, — திரியோதசி	30	0	வட கிழக்கு
,, — நவமி	,, — சதுர்த்தி	,, — சதுர்த்தசி	60	0	ஆகாசம்
,, — தசமி	,, — பஞ்சமி	,, — அமாவாசை	60	0	பூமி

பரிஹாரம்: — பிரயாணம் செய்யவேண்டியிருந்தால் திதிகளில் ஷ நாழிகை விஷகாலத்துக்கு மேல் செய்யலாம்.

ஷ சூலை நாழிகை.

திங்கள், சனி கிழக்கில் 8 நாழிகை வரை.
வியாழன் தெற்கில் 22 நாழிகை வரை.
வெள்ளி, ஞாயிறு மேற்கில் 15 நாழிகை வரை.
செவ்வாய் புதன் வடக்கில் 12 நாழிகை வரை.
ஷ இழமைகளில் மேற்கண்ட நாழிகைக்குமேல் சூலமில்லை.

ஷ சூலைக்குப் பரிஹாரம்.

சூலை நாழிகைக்குள் சூலத்திசையில் புறப்படவேண்டியது அவசியமாயின் கிழக்கில் தயிர் சாதம் உண்டும், தெற்கில் எண்ணை சேர்ந்த சாதம் (புளியோதரை) உண்டும், மேற்கில் வெல்லம் சேர்ந்த சாதம் உண்டும் வடக்கில் பால் சாதம் உண்டும் பிரயாணம் செய்தல் உத்தமம்.

நக்ஷத்ரப் பொருத்தம்.

ஜன்ம நக்ஷத்ரம் முதல் முகூர்த்த நக்ஷத்ரம் வரை எண்ணிய தொகையை 9-ல் வகுத்த மிச்சம் 1 ஜன்மம், 2 ஸம்பத்து, 3 விபத்து, 4 க்ஷேமம், 5 ப்ரத்யரம், 6 ஸாதகம், 7 வதம், 8 மைத்ரம். 9 பரம மைத்ரம் என்று அறியவும். இதில் முதல் 9-க்குள்ளிருக்கிற 3, 5, 7-வது நக்ஷத்ரங்கள் அசுபங்கள். இரண்டாவது 9-க்குள் 3-ல் முதல் பாதமும், 5-ல் நாலாவது பாதமும், 7-ல் மூன்றுவது பாதமும் தவிர மற்றவைகள் சுபம். மூன்றுவது 9 ல் வதவை காகெமென்கிற 88-வது பாதமுள்ள நக்ஷத்ரமும். ஒரே ராசியாயிராத 27-வது நக்ஷத்ரமும் தவிர மற்றவைகள் சுபம். அசுவதி ரேவதிக்கும், க்ஷௌரம், உபநயனம், விவாஹம், சொத்தம், பிரயாணம், வீடு கட்டுதல் இவைகள் தவிர மற்றவைகளுக்கும் 27-வது நக்ஷத்ர தோஷமில்லை. உபநயனத்துக்கு 3-வது தாரையும், விவாஹத்துக்கும் பிரயாணத்துக்கும் 5-வது தாரையும், பாதகமாகதென்று சிலர் கொள்கை.

ஜந்மாது ஜன்ம த்ரி ஜன்ம நக்ஷத்ரங்கள்.

ஜன்மநக்ஷத்ரங்கள்.	அநுஜன்மநக்ஷத்ரங்கள்.	த்ரிஜன்மநக்ஷத்ரங்கள்.
அசுவதி	மகம்	மூலம்
பரணி	பூரம்	பூராடம்
கார்த்திகை	உத்தரம்	உத்தராடம்

ஜன்மநக்ஷத்ரங்கள்	அநுஜன்மநக்ஷத்ரங்கள்	த்ரிஜன்மநக்ஷத்ரங்கள்
ரோஹிணி	அஸ்தம்	திருவோணம்
மிருகசிர்ஷம்	சித்திரை	அவிட்டம்
திருவாதிரை	ஸ்வாதி	சதயம்
புனர்பூசம்	விசாகம்	பூரட்டாதி
பூசம்	அனுஷம்	உத்தரட்டாதி
ஆயில்யம்	கேட்டை	ரேவதி

ஷை நக்ஷத்ரங்களில் செய்யத் தகாதவைகள்.

ரண வைத்தியம், உபநயனம், சௌளம், பிரயாணம், பும்ஸவனம், சீமந்தம், மருந்து சாப்பிடல், பித்ரு கார்யம் க்ஷௌரம், ருது சாந்தி, யுத்தாரம்பம், குதிரை யேறுதல், எண்ணை தேய்த்தல், சிராத்தம், பூஷணம், அன்னப்ராசனம், மாம்ஸ போஜனம், வாஸ்து ப்ரதிஷ்டை, தேவாலயம் இவைகளும் (புருஷனுக்கு ஜன்மதாரையாகில்) விவாஹமும் செய்யக் கூடாது.

3, 5, 7-வது நக்ஷத்ர தோஷ பரிஹாரம்.

3-வது தாரைக்கு பூமி தானமும், 5-வது தாரைக்கு பல தானமும், 7-வது தாரைக்கு நில தானமும் செய்ய வேண்டும்.

பஞ்சக தோஷம்.

திதி, வாரம், நக்ஷத்ரம், லக்நம் இவைகளின் ஸங்க்யைகளை ஒன்றுய்க் கூட்டி 9-ல் வருத்த மீதம், 1-ம்ருத்யு, 2-அக்நி, 4-ராஜ, 6-சோர, 8-ரோக பஞ்சகங்கள். 3, 5, 7, 9 நிஷ்பஞ்சகங்கள்.

ஷை பஞ்சகங்களில் சுப கார்யத்துக்கு உரியன.

ம்ருத்யு பஞ்சகம், அக்நி பஞ்சகம், ராஜ பஞ்சகம், சோர பஞ்சகம், ரோக பஞ்சகம் உள்ள லக்நங்களில் சுப கார்யம் செய்யலாகாது. நிஷ்பஞ்சக லக்நத்தில் சுப கார்யம் செய்யலாம். ராத்திரியில் அக்நி, ராஜ பஞ்சகங்களிலும், பகலில் ரோக, சோர பஞ்சகங்களிலும் சுப கார்யம் கடத்தலாமென்று சிலர் கருத்து. சிலர் ராஜ பஞ்சகத்துக்கு எலுமிச்சம்பழ தானமும், ம்ருத்யு பஞ்சகத்துக்கு ரத்ந தானமும், அக்நி பஞ்சகத்துக்கு சந்தன தானமும், சோர பஞ்சகத்துக்கு நிப தானமும், ரோக பஞ்சகத்துக்கு தான்ய தானமும் பரிஹாரம் என்று சொல்லுகிறார்கள்.

கால அளவு.

60 விதத்பரை – 1 தத்பரை	30 தினம் – 1 மாதம்
60 தத்பரை – 1 விநாடி	12 மாதம் – 1 வருஷம்
60 விநாடி – 1 நாழிகை	360 தினம் – 1 ஸாவந வர்ஷம்
60 நாழிகை – 1 தினம்	365¼ தினம் – 1 ஸௌர வருஷம்

60 நாழிகை கொண்ட ஒரு தினத்தில் உதித்து அஸ்தமிக்கும் ராசிகள் 12.

1. மேஷம், 2. விருஷபம், 3. மிதுனம், 4. கடகம், 5. சிம்மம், 6. கன்னி, 7. துலாம், 8. விருச்சிகம், 9. தனுசு, 10. மகரம், 11. கும்பம், 12. மீனம் ஆக ராசிகள் 12. இவைகளை லக்நமென்று சொல்லப்படுகின்றன.

ஒவ்வொரு லக்நத்துக்குமுள்ள நாழிகை விநாடிகள்.

மேஷம்	4-15	சிம்மம்	5-15	தனுசு	5-30
விருஷபம்	4-45	கன்னி	5-0	மகரம்	5-15
மிதுனம்	5-15	துலாம்	5-0	கும்பம்	4-45
கடகம்	5-30	விருச்சிகம்	5-15	மீனம்	4-15

ஆக ராசி பன்னிரண்டுக்கு நாழிகை அறுபது.

பிரதி மாதம் மாத லக்நம் இன்னதென்பது.

சித்திரை	–	மேஷம்	ஐப்பசி	–	துலாம்
வைகாசி	–	விருஷபம்	கார்த்திகை	–	விருச்சிகம்
ஆனி	–	மிதுனம்	மார்கழி	–	தனுசு
ஆடி	–	கடகம்	தை	–	மகரம்
ஆவணி	–	சிம்மம்	மாசி	–	கும்பம்
புரட்டாசி	–	கன்னி	பங்குனி	–	மீனம்

பிரதி-மீ ஒவ்வொரு நேநியிலும் சூரிய உதயத்துக்கு முன் மாத லக்நத்தில் சென்ற நாழிகை விநாடியை ஸ்தூலமாய் கண்டுபிடிக்க.

மாத லக்நத்தின் நாழிகை விநாடியை விநாடியாக்கிச்சென்ற தேதியால் பெருக்கி மாத மொத்தத் தேதியால் வகுக்க வந்த பலம் சூரிய உதயத்துக்கு முன் மாத லக்நத்தில் சென்ற விநாடிகளாகும்.

உதாஹரணம். 1. புரட்டாசி-மீ 25-உ சூரிய உதயத்துக்கு முன் மாத லக்நத்தில் சென்ற நாழிகையைக் கண்டு பிடிக்கும் வழி. புரட்டாசிமாதத்திற்கு மாத லக்நம் கன்னி. அந்த லக்நத்துக்கு நாழிகை 5. மை நாழிகையை விநாடியாக்க 5×60 = விநாடி 300. இதைச் சென்ற தேதி 24-ஆல் பெருக்க 300×24 = 7200 விநாடிகள். இந்த 7200-ஐ அந்த மாத மொத்த தேதி 30-ஆல் வகுக்க வந்த பலம் 240 விநாடிகள். இதை நாழிகை விநாடியாக்க நாழிகை-4 விநாடி-0. 4 நாழிகை கன்யா லக்நத்தில் சூரிய உதயத்துக்கு முன் செல் என்று அறியவும்.

உதாஹரணம். 2. ஆவணி-மீ 13-உ சூரிய உதயத்துக்கு முன் மாத லக்நத்தில் சென்ற நாழிகை விநாடிகளைக் கண்டுபிடிக்கும் வழி. ஆவணி மாதத்திற்கு மாத லக்நம் சிம்மம். அந்த லக்நத்துக்கு நாழிகை-5 விநாடி 15 மை நாழிகையை 60-ஆல் பெருக்கி விநாடி 15-ஐக் கூட்டிய தொகை-315. சிம்ம லக்நத்தின் மொத்த விநாடிகள். இவைகளைச் சென்ற தேதி 12-ஆல் பெருக்க 3780 விநாடிகள். இதை அந்த மாதம் மொத்த தேதி 31-ஆல் வகுக்க வந்த பலம் 121-ம் மீதம் 29-ம். இந்த 29, 31-க்கு பாதிக்கு மேலிருப்பதால் அர்த்தாதிகமாக 1 சேர்க்க 122 விநாடிகள். இதை நாழிகை விநாடியாக்க நாழிகை-2 விநாடி-2 ஆகிறது. ஆகையால் அன்று சிம்ம லக்நத்தில் சூரிய உதயத்துக்கு முன் சென்ற நாழிகை 2 விநாடி-2 என்று அறியவும்.

பிரதி மாதம் ஒவ்வொரு தேதியிலும் சூரிய உதயத்துக்குப் பின் மாத லக்நத்தில் செல்ல வேண்டிய நாழிகை விநாடியை ஸ்தூலமாய் கண்டு பிடிக்க.

முன் விஷயத்தில் காட்டியபடி கண்டு பிடித்த செல் நாழிகை விநாடிகளை முன்பு காட்டியிருக்கிற அந்த லக்நத்தின் மொத்த நாழிகை விநாடியிலிருந்து கழித்து பாக்கியிருப்பதை செல்ல வேண்டிய நாழிகை விநாடிகளென்றறியவும்.

உதாஹரணம். 1, முன் விஷயத்தில் காட்டிய 1-வது உதாஹரணத்தில் கண்டபடி புரட்டாசி-மீ 25-உக்கு சூரிய உதயத்துக்கு முன் கன்யா லக்நத்தில் சென்ற நாழிகை 4 என்று கண்டு பிடித்ததை மை கன்யா லக்நத்தின் மொத்த நாழிகை

5-ல் கழிக்க, பாக்கியுள்ள நாழிகை 1 தான் அன்று சூரிய உதயத்துச்குப் பின் கன்யா லக்நத்தில் செல்ல வேண்டிய நாழிகை என்று அறியவும்.

உதாஹரணம். 2. முன் விஷயத்தில் காட்டிய 2-வது உதாஹரணத்தில் கண்டபடி ஆவணி-மீ 13-உக்குச் சூரிய உதயத்துக்கு முன் சிம்ம லக்நத்தில் சென்ற நாழிகை-2 விநாடி-2 என்று கண்டு பிடித்ததை சிம்ம லக்நத்தின் மொத்த நாழிகை-5 விநாடி-15-ல் கழிக்க பாக்கியுள்ள நாழிகை-3 விநாடி-13 தான் அன்று சூரிய உதயத்துக்குப் பின் சிம்ம லக்நத்தில் செல்ல வேண்டிய நாழிகை விநாடிகள் என்று அறியவும்.

குறிப்பிட்ட தினத்தில் குறிப்பிட்ட லக்நம் எத்தனை நாழிகை விநாடிக்கு மேல் வந்து எத்தனை நாழிகை விநாடி வரை இருக்குமென்பதைக் கண்டு பிடிக்க.

முன் விஷயத்தில் காட்டிய வழிப்படி அன்று சூரிய உதயத்துக்குப் பின் மாத லக்நத்தில் செல்ல வேண்டிய நாழிகை விநாடிகளைக் கண்டு பிடித்து அந்த நாழிகை விநாடிகள் வரையே மாத லக்நம் சூரிய உதயம் தொடங்கி இருக்குமென்றும் அந்த நாழிகை விநாடிகளுக்கு மேல் அந்த லக்நத்தின் அடுத்த லக்நம் வந்து அதற்குள்ள நாழிகை விநாடிகள் வரை இருக்குமென்றும் இவ்விதம் அன்று 12 லக்நங்களின் தொடக்க நாழிகை விநாடிகளையும் முடிவு நாழிகை விநாடிகளையும் அறிந்து கொள்ளலாம்.

உதாஹரணம். 1. முன் உதாஹரணத்தில் காட்டியபடி புரட்டாசி-மீ 25-உக்கு கன்னி முதல் சிம்மம் வரையிலுள்ள பன்னிரண்டு லக்நங்களின் தொடக்க நாழிகை விநாடிகளையும் முடிவு நாழிகைவிநாடிகளையும் அறிய வேண்டியதற்கு முன் வழிப்படி அன்று கன்னியில் சூரிய உதயத்துக்குப் பின் 1 நாழிகை இருப்பதாய் அறிந்து விட்ட படியால் கன்னியா லக்நம் சூரிய உதயம் தொடங்கி 1 நாழிகை இருப்பதாயும் மேல் துலாம் மொத்த நாழிகை 5-ஐக் கூட்டி 1 நாழிகைக்கு மேல் 6 நாழிகை வரை என்றும் மேல் விருச்சிகம் மொத்த நாழிகை-5 விநாடி-15-ஐ 6 நாழிகையோடு கூட்டி நாழிகை-11 விநாடி-15 ஆகிறபடியால் விருச்சிகம் 6 நாழிகைக்கு மேல் நாழிகை-11 விநாடி-15 வரையில் என்றும், அதில் தனுசு மொத்த நாழிகை-5 விநாடி-30-ஐக் கூட்ட நாழிகை-16-45 வரு

வதால் அன்று நாழிகை-11 விநாடி-15 க்கு மேல் நாழிகை 16–45 வரை தனுர் லக்நமென்றும் இவ்விதம் ஒன்றின் மேல் ஒன்றாய் அந்த அந்த லக்நத்தின் மொத்த நாழிகை விநாடிகளைக் கூட்டி 12 லக்நங்களின் தொடக்கம் முடிவு நாழிகை விநாடிகளை அறியலாம்.

லக்னத்யாஜ்யம்.

மேஷம், ரிஷபம், கன்னி, தனுஸுகளில் முதலிலும், மிதுனம் விம்மம், துலாம் கும்பங்களில் நடுவிலும், கடகம், விருச்சிகம் மகரம் மீனங்களில் கடைசியிலும், பாம்பு, கழுகு, பன்றிகளால் புசிக்கப்படும் காலம் லக்நத்தில் ஒன்பதில் ஒரு பங்கான சுமார் அரை நாழிகை வர்ஜிக்கத்தக்கது.

பன்னிரண்டு லக்நங்களுக்கும் என்னென்ன வேளையின் சேர்க்கை கூடாது என்பது.

மேஷத்தில் ராஜஸ வேளையும், விருஷபத்தில் ராஜஸ வேளையும், மிதுனத்தில் தாமஸ வேளையும், கடகத்தில் ஸாத்விக வேளையும், விம்மத்தில் தாமஸ வேளையும், கன்னியில் ஸாத்விக வேளையும், துலாத்தில் ராஜஸ வேளையும், விருச்சிகத்தில் ராஜஸ வேளையும், தனுசில் ஸாத்விக வேளையும், மகரத்தில் தாமஸ வேளையும், கும்பத்தில் தாமஸ வேளையும், மீனத்தில் ஸாத்விக வேளையும் சேருங்காலத்தில் பிரயாணம் முதலிய சுப காரியங்கள் செய்யலாகாது.

பன்னிரண்டு லக்நங்களுக்கும் என்ன வேளை சேர்க்கை உத்தமமென்பது.

மேஷத்தில் தாமஸம், ஸாத்விகம் என்கிற வேளைகளும், விருஷபத்தில் தாமஸம், ஸாத்விகம் என்கிற வேளைகளும், மிதுனத்தில் ஸாத்விகம், ராஜஸம் என்கிற வேளைகளும், கடகத்தில் ராஜஸம் தாமஸம் என்கிற வேளைகளும், விம்மத்தில் ஸாத்விகம், ராஜஸம், என்கிற வேளைகளும்; கன்னியில் ராஜஸம், தாமஸம் என்கிற வேளைகளும், துலாத்தில் தாமஸம், ஸாத்விகம் என்கிற வேளைகளும், விருச்சிகத்தில் தாமஸம், ஸாத்விகம் என்கிற வேளைகளும், தனுசில் ராஜஸம், தாமஸம் என்கிற வேளைகளும், மகரத்தில் ஸாத்விகம், ராஜஸம் என்கிற வேளைகளும், கும்பத்தில் ஸாத்விகம், ராஜஸம் என்கிற வேளைகளும், மீனத்தில் ராஜஸம் தாமஸம் என்கிற வேளைகளும் சேருங்காலத்தில் பிரயாணம் முதலிய சுப காரியங்கள் செய்ய உத்தமம்.

க்ரஹங்களின் அதிஉச்சம்.

சூரியன்-	மேஷத்தில்	ப்ரவேசித்து	15 நாள் வரை
சந்த்ரன்	ரிஷபத்தில்	,,	ஒரு நாள் ,,
செவ்வாய்	மகரத்தில்	,,	12 நாள் வரை
புதன்	கன்னியில்	,,	16 நாள் வரை
குரு	கடகத்தில்	,,	5 மீ 20 நாள்
சுக்ரன்	மீனத்தில்	,,	18 நாள் வரை
சனி	துலாத்தில்	,,	1-ஹ-6மீ 15 நாள்
ராகு	ரிஷபத்தில்	,,	10-மீ 10 நாள்
கேது	கன்னியில்	,,	10 மீ 10 நாள்

க்ரஹங்களின் அதிநீசம்.

சூரியன்	துலாத்தில்	ப்ரவேசித்தது	முதல்	13 நாள் முடிய
சந்திரன்	விருச்சிகத்தில்	,,	,,	45 நாழிகை
செவ்வாய்	கடகத்தில்	,,	,,	1 மீ
புதன்	மீனத்தில்	,,	,,	17 நாள்
குரு	மகரத்தில்	,,	,,	7 மீ நாள் 16
சுக்ரன்	கன்னியில்	,,	,,	19 நாள்
சனி	மேஷத்தில்	,,	,,	1 ஹ 8-மீ 5 நாள்
ராகு	விருச்சிகத்தில்	,,	,,	11 மீ 25 நாள்
கேது	மீனத்தில்	,,	,,	11 மீ 25 நாள்

க்ரஹங்கள் ஒவ்வொரு ராசியிலும் இருக்கும் காலம்.

சூரியன்	ஒரு ராசியில்	1-மாதம்
சந்த்ரன்	,,	2½ நாள்
செவ்வாய்	,,	1½ மாதம்
புதன்	,,	1-மாதம்
குரு	,,	1-வருஷம்
சுக்ரன்	,,	1-மாதம்
சனி	,,	2½ வருஷம்
ராகு	,,	1½ வருஷம்
கேது	,,	1½ வருஷம்

குறிப்பு— கிரகங்களின் வக்ரத்தாலும், அதிசாரங்களாலும் இக்கால அளவுக்கு சற்றேறக் குறைய சிற்சில ஸமயங்களில் பேத மேற்படும். கிரகங்களின் நிலையை பஞ்சாங்கத்திலுள்ள கிர

சாரங்களைப் பார்த்துக்கொள்வது. சூரியன் முதல் சனி வரை ஏழுக்ரஹங்களும் வலதுபக்கமாகவும், இராகு கேதுக்கள் இடது பக்கமாகவும் சுற்றி வரும்.

க்ரஹங்களின் ராசிகளில் ப்ரவேசிப்பதற்கு முன் பார்வை

சூரியன்	5 நாள்	சுக்ரன்	7 நாள்
சந்த்ரன்	3 நாழிகை	சனி	6 மாதம்
செவ்வாய்	8 நாள்	ராகு	3 மாதம்
புதன்	7 நாள்	கேது	3 மாதம்
குரு	2 மாதம்		

குறிப்பு:— சந்த்ரன் சனி கீழ்ப்பார்வை. சூரியன் புதன் குரு ஸமபார்வை. ராகு, கேது, சுக்ரன், செவ்வாய், மேற்பார்வை.

க்ரஹவக்ரம்—அஸ்தமனம்.

செவ்வாய், வியாழன், சனி, இவர்களுக்கு 5-ல் சூரியன் வந்தால் வக்ரம். 7-ல் சூரியன் வரில் அதிகவக்ரம். 9 ல் வந்தால் வக்ரநிவர்த்தி. சூரியன்பாகை 17-க்குள் செவ்வாயும், 13-க்குள் புதனும், 11-க்குள் குருவும், 8-க்குள் சுக்ரனும், 15 க்குள் சனியும் வரில் அஸ்தமனம். சூரியனுக்கு முன்பின் 12-பாகைக்குள் சந்த்ரன் வரில் அஸ்தமனம்.

க்ரஹங்களின் வடிவம்

சூரியன்	— சதுரம்	குரு	— நெடும் வட்டம்
சந்த்ரன்	— வட்டம்	சுக்ரன்	— ஸ்த்ரீகோணம்
செவ்வாய்	— டமருகம்	சனி	— வில் வடிவம்
புதன்	— அறுகோணம்	ராகு	— மாலை
		கேது	— முறம்

க்ரஹங்களின் ஸ்தானம்

சூரியன்	— காடு	குரு	— நகரம்
சந்த்ரன்	— ஜலம்	சுக்ரன்	— ஜலக்கரை
செவ்வாய்	— பூமி	சனி	— பழைய ஊர்
புதன்	— உயர்ந்த இடம்	ராகு	— சேரி
		கேது—சேரி	

க்ரஹங்கள் வேதாதிபத்யம்

ரிக்வேதாதிபதி யஜுர்	குரு	ஸாமவேதாதிபதி அதர்வ	செவ்வாய்
,,	சுக்ரன்	,,	புதன்

இந்த க்ரஹத்துக்கு இந்த ராசி நட்பு பகை வீடுகளென்பதைக் கண்டுபிடிக்க.

க்ரக நட்பு பகை இராசிகளைப் பற்றி அநேக நூல்களில் அநேகவிதமாகக் கூறப்பட்டிருக்கிறது. எனினும் பல ஆதாரத்தின்படி பொதுவிதி விசேஷவிதிகள் கீழே காட்டப்படுகின்றன. ஒரு கிரகத்துக்கு இன்னின்ன ராசிகள் நட்பு வீடுகள் என்பதை யறிய, அந்த க்ரஹத்தினுடைய மூலத்ரிகோணராசிக்கு 3, 5, 7, 8, 12, மிடங்கள் நட்பு வீடுகளாகும். இது பொதுவிதி. மேற்குறிப்பிட்ட வீடுகளில் ஆட்சி, உச்சம், நீசம்—என்று வந்தால் அவைகளை நீக்கி மற்றவைகள் நட்பு வீடுகள்—என்பது விசேஷவிதி.

அதிமித்ர—அதிசத்ருஸ்தானங்கள்,

க்ரஹங்கள்	அதிமித்ரஸ்தானம்	ஸமம்	அதிசத்ருஸ்தானம்
சூரியன்	மீனம்	மிது — கன்னி	ரிஷபம்
சந்த்ரன்	மேஷம்	மேஷ — தனுசு	மிதுனம்
செவ்வாய்	கும்பம்	ரிஷ — கும்	கன்னி
புதன்	துலாம்	விரு — மக	கடகம்
குரு	சிம்மம்	கும்ப	விருச்சிகம்
சுக்ரன்	விருச்சிகம்	மேஷ — தனு	சிம்மம்
சனி	மிதுனம்	தனு — மீன	விருச்சிகம்
ராகு	மகரம்	மீனம்	சிம்மம்
கேது	சிம்மம்	மிதுனம்	மகரம்.

கிரஹங்களின் அங்கங்கள்.

சூரியன்	— தலை	குரு	— வயிறு
சந்த்ரன்	— முகம்	சுக்ரன்	— அரை-ஆண்குறி
செவ்வாய்	— மார்பு	சனி	— துடை
புதன்	— இடை-முதுகு	ராகு	— கைகள்
		கேது—கால்கள்	

க்ரஹங்களின் அதிஷ்டான தேவதைகள்.

சூரியன்	— சிவன்	புதன்	— விஷ்ணு
சந்த்ரன்	— பார்வதி	குரு	— தக்ஷிணாமூர்த்தி
செவ்வாய்	— சுப்ரமண்யன்	சுக்ரன்	— துர்கை
		சனி	— சாஸ்தா

க்ரஹங்களின் ஸமித்

சூரியன்	— எருக்கு	குரு	— அரசு
சந்த்ரன்	— முருக்கு	சுக்ரன்	— அத்தி
செவ்வாய்	— கருங்காலி	சனி	— வன்னி
புதன்	— நாயுருவி.	ராகு	— அருகு

கேது—தர்ப்பை.

க்ரஹங்களின் அதிகாரம்,

சூரியன்	— அரசன்	குரு	— மந்திரி
சந்த்ரன்	— ,,	சுக்ரன்	— ,,
செவ்வாய்	— ஸேனாதிபதி	சனி	— தாஸன்
புதன்	— யுவராஜா	ராகு	— ,,

கேது—தாஸன்

க்ரஹதாது

சூரியன்	— எலும்பு	குரு	— மூளை
சந்த்ரன்	— ரத்தம்	சுக்ரன்	— இந்த்ரியம்
செவ்வாய்	— மஜ்ஜை	சனி	— நரம்பு
புதன்	— தோல்		

க்ரஹ குண்

சூரியன், செவ்வாய் — உஷ்ணம்
சந்த்ரன். சுக்ரன், குரு — குளிர்ச்சி
புதன், சனி, ராகு, கேது — மத்யமம்

க்ரஹஸ்வபாவம்.

சூரியன், செவ்வாய், சனி, ராகு, கேது—க்ரூரம்,
சந்த்ரன், புதன், குரு, சுக்ரன்—ஸௌம்யம்.

க்ரஹ ருசி

சூரியன், செவ்வாய்	— கைப்பு	குரு	— இனிப்பு
சந்த்ரன்	— உப்பு	சுக்ரன்	— புளிப்பு
புதன்	— மிஸ்ரஸம்	சனி	— துவர்ப்பு

ராகு, கேது—புளிப்பு

க்ரஹ வாஹனம்

சூரியன்	— ரதம்	குரு	— யானை
சந்த்ரன்	— முத்துவிமானம்	சுக்ரன்	— கருடன்
செவ்வாய்	— ஹம்ஸம்	சனி	— காகம்
புதன்	— குதிரை	ராகு	— ஆடு

கேது - ஸிம்மம்

க்ரஹ புஷ்பம்

சூரியன்	— செந்தாமரை	குரு	— மூல்லை
சந்த்ரன்	— வெள்ளல்லி	சுக்ரன்	— தாமரை
செவ்வாய்	— சண்பகம்	சனி	— குவளை
புதன்	— காந்தள்	ராகு	— கருமந்தாரை

கேது—செவ்வல்லி

க்ரஹகாரகம்

சூரியன்	— பிதா	குரு	— புத்ரன்
சந்த்ரன்	— மாதா	சுக்ரன்	— களத்ரம்
செவ்வாய்	— ப்ராதா	சனி	— ஆயுஸ்
புதன்	— மாதுலன், வித்யை	ராகு	— பிதாமஹன்

கேது—மாதாமஹன்

ஸக்ரஹ தோஷம்.

சந்த்ரன் ஒரே ராசியில் ஒரே நக்ஷத்ரத்தில் சூரியன் முதலான க்ரஹங்களுடன் சேரும் காலத்தில் இத்தோஷம் ஸம்பவிக்கும்.

சந்த்ராஷ்டமம்.

ஜன்ம காலத்தில் சந்திரன் இருக்கும் ராசிக்கு 8-வது ராசியில் சந்த்ரன் ஸஞ்சரிக்கின்ற காலம் சந்த்ராஷ்டமமாகும்.

உஷ்ணகை தோஷம்,

அசுவதி ரோஹி, புனர், மகம், ஹஸ்	நாழிகை	7-30	முதல்	18 வரை
பர, ம்ருக, பூச, பூர, சித்திரை	,,	55	,,	60 ,,
கார், திருவா, ஆயி, உத்தர, ஸ்வாதி	,,	21	,,	30 ,,
விசா, மூல, திருவோ, பூரட்	,,	0	,,	8 ,,
அனு, பூராட, அவிட், உத்தரட்	,,	52	,,	60 ,,
கேட், உத்தரா, சத, ரேவதி	,,	10	,,	30 ,,

திதிவிஷம்

சுக்லபக்ஷம் பிரதமை முதலாக

பிரதமை	24-க்கு மேல்	நவமி	21-க்கு மேல்
த்விதியை	12 ,, ,,	தசமி	7 ,,
த்ருதியை	55 ,,	ஏகாதசி	9 ,,
சதுர்த்தி	55 ,,	த்வாதசி	10 ,,
பஞ்சமி	54 ,,	த்ரயோதசி	30 ,,
ஷஷ்டி	5 ,,	சதுர்தசி	10 ,,
ஸப்தமி	33 ,,	பூர்ணிமை	32 ,,
அஷ்டமி	10 ,,	அமாவாசை	

4 காழிகைகள் விஷமாகும்.

வாரவிஷம்.

ஞாயிறு	32-க்கு மேல்	வியாழன்	31-க்கு மேல்
திங்கள்	24 ,, ,,	வெள்ளி	21 ,, ,,
செவ்வாய்	51 ,, ,,	சனி	14 ,, ,,
புதன்	41 ,, ,,		

கன்கு காழிகை.

வேறு சிலர் புதன் சனி ஆரம்பத்தில் 4 காழிகை
திங்கள் வெள்ளி மத்தியில் ,,
செவ்வாய், வியாழன் ஞாயிறு கடைசியில் ,,

நியாஜ்ய பலன்

முதல் காழிகையில் கர்ம நாசம். 3-வது காழிகையில் ஸர்வநாசம்
2-வது ,, ,, கர்த்ரு ,, 4-வது ,, ,, குலக்ஷயம

கார்யசித்தி

செவ்வாயில் மழுக்கிலும், திங்கள் சனிகளில் தெற்கிலும் புதன் வியாழனில் மேற்கிலும், ஞாயிறு வெள்ளியில்-வடக்கிலும் போவது கார்யஸித்தியளிக்கும்.

குருட்டுதிதிகள்.

த்விதியை, த்ருதியை, பஞ்சமி, ஸப்தமி, த்ரயோதசி, சதுர்தசி, இவைகள் இரட்டைக்கண்களுள்ளவை. பிரதமை, 2 பர்வங்கள் அஷ்டமி, ஏகாதசி, தசமி, த்வாதசி, இவைகள் ஒற்றைக்கண் களுள்ளவை. சதுர்த்தி, ஷஷ்டி, நவமி இவை குருடு.

குருடு முதலிய ராசிகள்.

மேஷம்	விருஷபம்	சிம்மம் —	பகல் குருடு
மிதுனம்	கடகம்	கன்னி	இரவுக்குருடு
கன்னி,	கடகம்	மத்யாஹ்னத்தில்	குருடு
துலாம்	வ்ருச்சிகம்	பூர்வாஹ்னத்தில்	செவிடு.
கன்னி,	தனுஸ், மகரம்	அபராஹ்னத்தில்	,,
கும்பம்,	மீனம்	கரீலமாலை ஸந்தியில்	கொண்டி

குருடு—கார்ய நாசம், செவிடு—பொருள் நாசம், கொண்டி ஆயுள் நாசம். இவைகளில் சுபம் கூடாது.

திதிகளில் அதிபர்கள்.

பிரதமை	— அக்நி	நவமி	— வஸுக்கள்
த்விதியை	— பிரமன்	தசமி	— நாகஜங்கள்
த்ருதியை	— பார்வதி	ஏகாதசி	— யமன்
சதுர்த்தி	— கணபதி	த்வாதசி	— விஷ்ணு
பஞ்சமி	— சேஷன்	த்ரயோதசி	— மன்மதன்
ஷஷ்டி	— சுப்ரமண்யன்	சதுர்தசி	— கலிபுருஷன்
ஸப்தமி	— ஸூர்யன்	பௌர்ணமி	— சந்த்ரன்
அஷ்டமி	— சிவன்	அமாவாசை	— பித்ருக்கள்

நக்ஷத்ரங்களில் அதிபர்கள்.

அசுவதி	— அச்வினீ	ஸ்வாதி	— வாயு
பரணி	— யமன்	விசாகம்	— இந்த்ராக்நீ
கார்த்திகை	— அக்நி	அனுஷம்	— மித்ரன்
ரோஹிணீ	— ப்ரஹ்மா	கேட்டை	— இந்த்ரன்
மிருகசீர்ஷம்	— சந்த்ரன்	மூலம்	— ராக்ஷஸன்
திருவாதிரை	— சிவன்	பூராடம்	— தோயம்
புனர்பூசம்	— அதிதி	உத்தராடம்	— விசுவேதேவர்
பூசம்	— குரு	அபிஜித்	— பிரமன்
ஆயில்யம்	— ஸர்ப்பங்கள்	திருவோ	— விஷ்ணு
மகம்	— பித்ருக்கள்	அவிட்டம்	— வஸுக்கள்
பூரம்	— பகன்	சதயம்	— வருணன்
உத்தரம்	— அர்யமா	பூரட்டாதி	— அஜசரணன்
ஹஸ்தம்	— ரவி	உத்திரட்	— அஹிர்புத்ன்ய
சித்திரை	— இந்த்ரன்	ரேவதி	— பூஷா

கரண உருவங்கள்

பவம்	—	சிங்கம்	வணிஜை	—	எருது
பாலவம்	—	புலி	பத்ரை	—	கோழி
கௌலவம்	—	பன்றி	சகுனி	—	காக்கை
தைதுலை	—	கழுதை	சதுஷ்பாதம்	—	நாய்
கரஜை	—	யானை	நாகவம்	—	பாம்பு

கிம்ஸ்துக்னம்— புழு

பக்ஷச்சித்ரை.

சதுர்த்தி, ஷஷ்டி, அஷ்டமி. த்வாதசி, சதுர்த்தி இவை இரண்டு பக்ஷங்களிலும் பக்ஷச்சித்ரை எனப்படும்.

நாம நக்ஷத்ராதிகள்.

நக்ஷத்திரம்	நாம அக்ஷரம்	கணம்	விருக்ஷம்	யோனி	பக்ஷி
அசுவதி	சு சே-சோ-ல	தேவ	காஞ்சி*	குதிரை	ராஜாளி
பரணி	லி-லு-லே லோ	மானுஷ	நெல்லி*	யானை	காகம்
கார்த்திகை	அ-இ-உ-ஏ	ராக்ஷஸ	அத்தி	ஆடு*	மயில்
ரோஹிணி	ஒ-வ-வி-வு	மானுஷ	நாவல்	சர்ப்பம்	ஆந்தை
மிருகசிரிஷம்	வே-வோ-க-கி	தேவக	கருங்காலி	சர்ப்பம்*	கோழி
திருவாதிரை	கு-க-ங-ச	மானுஷ	செங்கர*	நாய்*	அன்றில்
புனர்பூசம்	கே கோ-ஹ.ஹி	தேவ	மூங்கில்*	பூனை*	அன்னம்
பூசம்	ஹ-ஹெஹோஹாட	தேவ	அரசு	ஆடு	நீர்காகம்
ஆயில்யம்	டி-டு-டெ-டோ	ராக்ஷஸ	புன்னை	பூனை	கிச்சிலி
மகம்	ம-மி-மு-மே	ராக்ஷஸ	ஆல்	எலி	ஆண்கழு
பூரம்	மோ-ட-டி-டு	மானுஷ	பலாசு	எலி*	கழுகு*
உத்தரம்	டெ-டோ-ப-பி	மானுஷ	அலரி	பசு*	சில்வண்
ஹஸ்தம்	பூ-ஷ-ண-ட	தேவ	ஆத்தி	எருமை*	பருந்து
சித்திரை	பே போ-ர-ரி	ராக்ஷஸ	வில்வம்*	புலி*	மரங்கொ
சுவாதி	ரு-ரே-ரோ த	தேவ	மருதம்*	எருமை	தேனீ
விசாகம்	தி-து-தே-தோ	ராக்ஷஸ	விளா*	புலி	செங்குரு
அனுஷம்	ந நி-நு-நே	தேவ	மகிழ்*	மான்	வானம்பா
கேட்டை	நோ-ய-யி-யு	ராக்ஷஸ	பராய்	கலிமான்	சக்ரவாக
மூலம்	யே-யோ-பா-பி	ராக்ஷஸ	மரா	நாய் *	செம்போ
பூராடம்	பூ-த-ப-ட	மானுஷ	வஞ்சி	குரங்கு	கவுதாரி
உத்தராடம்	பே-போ-ஜ-ஜி	மானுஷ	பலா	�ரி	வலியன்
அபிஜித்	ஜு-ஜே ஜோ-க	...	...	...	...
திருவோணம்	ஜ-கு-கே-கோ	தேவ	எருக்கு	குரங்கு*	நாரை
அவிட்டம்	க-கி-கு-கே	ராக்ஷஸ	வன்னி	சிங்கம்	வண்டு
சதயம்	கோ-ஸ-ஸி-ஸு	ராக்ஷஸ	கடம்பு*	குதிரை	அண்டங்
பூரட்டாதி	ஸே-ஸோ-த-தி	மானுஷ	தேமா	சிங்கம்	உள்ளான்
உத்ரட்டாதி	து-ஞ-ச-த	மானுஷ	வேம்பு	பசு	கோட்டா
ரேவதி	தே-தோ-ச-தி	தேவ	இலுப்பை	யானை*	வல்லூறு

ராகு காலாதிகள்

கிழமைகள்	ராகு காலம்	குளிகை காலம்		யம கண்டம்	
	பகல் முதல் வரை	பகல் முதல் வரை	இரவு முதல் வரை	பகல் முதல் வரை	இரவு முதல் வரை
	மணி	மணி	மணி	மணி	மணி
ஞாயிறு	4½-6	3 -4½	9-10½	12 -1½	6 -7½
திங்கள்	7½-9	1½-3	7½-9	10½-12	3 -4½
செவ்வாய்	3 -4½	12 -1½	6 -7½	9 -10½	1½-3
புதன்	12 -1½	10½-12	3 -4½	7½-9	2 -1½
வியாழன்	1½-3	9 -10½	1½-3	6 -7½	10½-12
வெள்ளி	10½-12	7½-9	12 -1½	3 -4½	9 -10½
சனி	9 -10½	6 -7½	10½-12	1½-3	7½-9

முகூர்த்தம்.

ஒவ்வொரு தினமும் குணங்களும் தோஷங்களும் கலந்ததாகவே இருக்கிறது. குணம் மாத்திரமுள்ள நாள் தேவதைகளுக்குக் கூட கிடைப்பதரிது. தோஷங்களோ எண்ணிறந்தவை. நக்ஷத்ரங்களோ இருபத்தேழு. அவைகள் யாவும் தோஷங்களால் தூஷிக்கப்பட்டவை. எவ்வளவு காலம் பார்த்தாலும் தோஷமேயில்லாத முகூர்த்தம் கிடைப்பதரிதாகையால் குறைந்த தோஷமும் மிகுந்தகுணமுமுள்ள நாளை எடுத்துக்கொள்ள வேண்டும்.

சுபமுஹூர்த்த காரியங்களில் விலக்கவேண்டிய மஹாதோஷங்கள்.

குளிகன் உதயகாலம், நக்ஷத்ர விஷநாடி, சந்திராஷ்டமம், பாபஸ்கரஹம், உஷ்ணசிகை, சூன்யமாஸ நினங்கள், சகார்த்தயோகம், வியதீபாதம், வைத்ருதி, வருஷாந்த்யம், ஜன்ம தாராதி துஷ்டதாரா பலன்கள், கிருஷ்ண பக்ஷத்தில் சதுர்தசி, அமாவாஸ்யை, பிரதமையுடன்சேர்ந்த அமாவாஸ்யை விஷ்டி உதயகாலம், சுபகாரியங்களுக்கு விலக்கான நக்ஷத்திரங்கள்-கிரு, பரணி, திருவா, பூர, பூரா, பூரட், கேட், ஆயி, மக, மூல, விசா, கிருஷ்ண பக்ஷம், சதுர்த்தி, ஷஷ்டி, அஷ்டமி. நவமி, த்வாதசி, சதுர்த்தி இதிகளும் செவ்வாய், சனி, (கிருஷ்ண பக்ஷத்தில்) திங்கட்கிழமைக

ளும் செவ்வாய், சனி இவர்களுடைய ராசி, லக்கினம், உதயமும், கால ஹோரைகளும், அந்தந்த தேசத்தில் அனுஷ்டானத்தில் இருக்கிற முக்கிய தோஷங்கள், வைகாசிகதோஷம், குரு-சுக்ர மூடங்கள் மலமாஸமும் (அதிகமாதம்) இவை மஹாதோஷங்கள். உச்சாதிபலம் பெறற சுக்ர, குரு, புதன் இவைகளின் உதயாதி விசேஷ மஹா குணங்கள் இருந்தாலும் மஹாதோஷங்களுக்கு பரிஹாரம் இல்லை.

உதயத்தில் திதிதோஷம் கிடையாது. அபிஜித்காலத்தில் நக்ஷத்ரதோஷம் இல்லை. அஸ்தமன காலத்தில் லக்னதோஷமும், ராத்ரியிலே வாரதோஷமும் இல்லை.

திதிவாரக்ரஹ ஸகலதோஷங்களையும், அபிஜின் முகூர்த்தம் போக்கும். அபிஜித்தாவது: 15-வது நாழிகை.

கோதூளிலக்னத்துக்கு திதிவார நக்ஷத்ர யோககரணாதிக்ரஹ தோஷங்கள் பார்க்கவேண்டாம். சூரிய உதயாஸ்தமயகாலங்கள் கோதூளிலக்னமாகும்.

நந்தாதிதிதிகள்

பிரதமை, ஷஷ்டி, ஏகாதசி — நந்தை
த்விதியை, ஸப்தமி, த்வாதசி — பத்ரை

குளிகவேலை செய்யத்தக்கவை.

தான்யஸங்க்ரஹம், அப்யங்கம், அறுவடை, வாங்குதல், விற்பது, கண்நிறத்தல், பூஷணதாரணம், கடன நிர்த்தல், யாகாரம்பம், க்ரஹப்ரவேசம், க்ராமப்ரவேசம், ராஜ்யப்ரவேசம், அபிஷேகம், கந்தம்தரித்தல், ஔஷதஸேவனம், யானே குதிரை யேற்றம், மந்த்ரோபதேசம், அபிசாரஹோமம், மஹாதானம், வேதாரம்பம், முதலியவை செய்யலாம்.

விபத்ப்ரத்யர தோஷமில்லாதவைகள்.

உத்தரம், உத்தராடம், உத்தரட்டாதி, ஹஸ்தம், ஸ்வாதி மிருகசீர்ஷம், அனுஷம் இவ்வேழு நக்ஷத்ரங்களுக்கும் விபத்ப்ரத்யரதோஷமில்லை.

சந்த்ரபலம்.

ஜன்மராசி (நாமராசி) முதல் 1, 3, 6, 7, 10, 11 ராசிகளிலிருந்தால் சுபம். 2 4 5 8 9, 12. அசுபம். சுக்லபக்ஷத்தில் 2, 5, 9 ராசிகளிலும், கிருஷ்ணபக்ஷத்தில் 4, 8, 12 ம் சுபம்.

ஸ்த்ரீலிங்க முக்யகார்யங்கள்.

க்ரஹப்ரவேசம், ஸீமந்தம், யாகம், பும்ஸவனம், கர்ப்பாதானம் விவாஹம்—இவையாவும் ஸ்த்ரீகளுக்கு முக்யமானவைகள்.

பொதுவாதி தோஷங்களில்லாதவை.

இந்த மாதத்தில் இன்ன கார்யம் செய்யத்தக்கது என்று மாஸப்ரதானமாக விதித்திருக்கும் கார்யங்களைச் செய்வதில் குரு சுக்ரமௌட்யம், அதிமாஸம் முதலான தோஷங்கள் கிடையாது,

ஜன்மராசியில் செய்யத்தக்கவை.

ஜன்மராசியில் யாத்ரை, விவாஹம், க்ரஹப்ரவேசம், க்ராமப்ரவேசம், ஸீமந்தம், ஸமாவர்த்தனம், ஔஷதம், உபாகர்மம், விருதங்கள்—இவைகளைச் செய்யலாம்.

தாராபலனுள்ள நக்ஷத்ரங்கள்.

மேலே ஜன்ம நக்ஷத்ரங்களுக்கு (தலைப்பில் பெரிய எழுத்திலுள்ள நக்ஷத்ரங்களுக்கு) தாராபலப்பொருத்தமுடைய நக்ஷத்ரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

அசுவதி, மகம், மூலம்:— பரணி, ரோஹிணி, திருவாதிரை, பூசம், ஆயில்யம், பூரம், ஹஸ்தம், சுவாதி, அனுஷம், கேட்டை, பூராடம், திருவோணம், சதயம் உத்தரட்டாதி, ரேவதி.

பரணி, பூரம் பூராடம் — அசுவதி, கிருத்திகை, மிருகசிரிஷம், புனர்பூசம், ஆயில்யம், மகம், உத்தரம், சித்திரை, விசாகம், கேட்டை, மூலம், உத்தராடம், அவிட்டம், பூரட்டாதி, ரேவதி.

கார்த்திகை, உத்தரம், உத்தராடம்:—அசுவதி, பரணி, ரோஹிணி, திருவாதிரை, பூசம், மகம், பூரம், ஹஸ்தம், சுவாதி, அனுஷம், மூலம், பூராடம், திருவோணம், சதயம், உத்தரட்டாதி.

ரோகிணி, ஹஸ்தம், திருவோணம்:— பரணி, கிருத்திகை, மிருகசிரிஷம், புனர்பூசம், ஆயில்யம், பூரம், உத்தரம், சித்திரை, விசாகம், கேட்டை, பூராடம், உத்தராடம், அவிட்டம், பூரட்டாதி, ரேவதி.

மிருகசீரிஷம், சித்திரை, அவிட்டம்:—அசுவதி, கார்த்திகை, ரோகிணி, திருவாதிரை, பூசம், மகம், உத்தரம், ஹஸ்தம், சுவாதி, அனுஷம், மூலம், உத்தராடம், திருவோணம், சதயம், உத்தரட்டாதி.

திருவாதிரை, சுவாதி, சதயம்:—பரணி, ரோகிணி, மிருகசிரிஷம், புனர்பூசம், ஆயில்யம் பூரம், ஹஸ்தம், சித்திரை விசாகம், கேட்டை, பூராடம், திருவோணம்,, அவிட்டம், பூரட்டாதி, ரேவதி.

புனர்பூசம், விசாகம், பூரட்டாதி:—அசுவதி, கிருத்திகை, மிருகசிரிஷம், திருவாதிரை, பூசம், மகம், உத்தரம், சித்திரை, சுவாதி, அனுஷம், மூலம், உத்தராடம், அவிட்டம், சதயம், உத்தரட்டாதி

பூசம், அனுஷம், உத்தரட்டாதி:— பரணி, ரோகிணி, திருவாதிரை, புனர்பூசம், ஆயில்யம், பூரம், ஹஸ்தம், சுவாதி, விசாகம் கேட்டை, பூராடம், திருவோணம், சதயம் பூரட்டாதி, ரேவதி.

ஆயில்யம், கேட்டை, ரேவதி:— அசுவதி, கிருத்திகை, மிருகசிரிஷம், புனர்பூசம், பூசம், மகம், உத்தரம், சித்திரை விசாகம், அனுஷம், மூலம், உத்தராடம், அவிட்டம், பூரட்டாதி, உத்தரட்டாதி.

கரிநாள்.

சித்திரை	— 6-15	ஐப்பசி	— 6-20
வைகாசி	— 7-16-17	கார்த்திகை	— 1-10-17
ஆனி	— 1-6	மார்கழி	— 6-9-11
ஆடி	— 2-10-20	தை	— 1-2-3-11-17
ஆவணி	— 2-9-28	மாசி	— 15-16-17
புரட்டாசி	— 16-29	பங்குனி	— 6-15-19

பகலும், முன்னிரவும் கூடாது:

தலைநாள்.

சித்திரை	— 11-28	ஐப்பசி	14-27
வைகாசி	— 14-27	கார்த்திகை	17-22
ஆனி	— 16-30	மார்கழி	15-25
ஆடி	— 12-25	தை	9 -21
ஆவணி	— 15-25	மாசி	26-28
புரட்டாசி	— 16-31	பங்குனி	27-28

இங்கிலீஷ் மாத கரிநாள்.

(பிரான்ஸு தேசத்தில் நெப்போலிய வீரன் கண்டது)

ஜனவரி	1-2-4-6-11-12-20	ஜூலை	4-6-17-21
பிப்ரவரி	1-6-8-9-17-18	ஆகஸ்ட்	6-13-20-21
மார்ச்	11-12-14-16	செப்டம்பர்	3-6-10-18
ஏப்ரில்	7-8-10-17-18	அக்டோபர்	10-15-16
மே	1-3-5-6-7-8	நவம்பர்	6-8-16-20
ஜூன்	1-5-17	டிஸம்பர்	8-16-19-22

த்யாஜ்யஸ்வரூபம்.

கழுதைமுகமும், பாம்புக் கண்ணும், ஸிம்ஹத்தின் கழுத்தும், ஏழுபுஜங்களும், குழந்தைகளைப்போல் கையும், இளைத்த வயிறும், மூன்று கால்களையும் உடையது. இது பஞ்சாங்கத்தில் குறிப்பிட்டகாழிகைக்கு மேல் 4 நாழிகையுடையது. இதை நக்ஷத்ரருது காலமென்பர். சுபகார்யங்கள் கூடாது.

தசைகள்.

1. நக்ஷத்ரதசை, 2. உத்பந்நதசை, 3. ம்ருத்யுதசை, 4. ப்ராணதசை, 5. ஆதானதசை, 6. வாமதசை, 7. உடுதசை, 8. கிர்யாணதசை, 9. மஹாப்ராணதசை, 10. குளிக கிர்யாணதசை, 11. காலசக்ரதசை.

நக்ஷத்ரசூலம்.

அவிட்டம், கேட்டை-கிழக்கு. பூசம் ரோஹிணி-மேற்கு
அசுவதி, திருவோணம்-தெற்கு உத்தரம் ஹஸ்தம்-வடக்கு.

நக்ஷத்ரத்யாஜ்யம்.

அனுஷம், திருவோணம், அவிட்டம்—10, சுவாதி, விசாகம், கேட்டை, மிருகசிரிஷம்—14, பூரட்டாதி 16, உத்தரம், சதயம்—18, பூசம், பூரம், மூலம், உத்தராடம் 20, திருவாதிரை 21, ஹஸ்தம், 22, பரணி பூராடம் உத்தரட்டாதி—24, கார்த்திகை, புனர்பூசம், மகம், ரேவதி-30, ஆயில்யம் 32, ரோஹிணி 40, அசுவதி 50, சித்திரை 56. அன்றன்றைய நக்ஷத்ரங்கள் ஆரம்பித்து மேலே குறித்த நாழிகைக்குமேல் 3½ நாழிகை த்யாஜ்யமென்பர். திருவாதிரை 11, சித்திரை-20, மூலம்-56 என்றும் சிலர்.

நக்ஷத்ர்களின் இருப்பிடம்.

அசுவதி	ஊர்	சித்திரை	வயல்
பரணி	மரம்	ஸ்வாதி	பருத்தி
கார்த்திகை	வனம்	விசாகம்	முற்றம்
ரோஹிணி	காடிச்சால்	அனுஷம்	பாழ்வனம்
மிருகசிர்ஷம்	கட்டில்மேற்பாகம்	கேட்டை	கடை
திருவாதிரை	தேரடி	மூலம்	குதிரைலாயம்
புனர்பூசம்	நெற்குதிர்	பூராடம்	கூரை
பூசம்	மீன	உத்தராடம்	வண்ணன்துறை
ஆயில்யம்	கும்பை	திருவோணம்	கோயில்
மகம்	நெற்கதிர்	அவிட்டம்	ஆலை
பூரம்	காலி விடு	சதயம்	சேக்கு
உத்தரம்	ஜலம்	பூரட்டாதி	தெரு
ஹஸ்தம்	நீர்க்கரை	உத்திரட்டாதி	அக்னி

ரேவதி — பூஞ்சோலை.

நக்ஷத்ருவ்டி.

சூரியன் நின்ற நக்ஷத்ரத்துக்கு		26, 16, 8, 7, 21, 11
சந்திரன்	,,	4, 8, 18, 15, 10.
செவ்வாய்	,,	3-15, 7, 8
புதன், குரு, சுக்ரன் சனி	,	3-5.—நக்ஷத்ரங்கள் பார்வை.

சனி — 16, 15-ம், குரு 19, 10-ம் அதிகப்பார்வை.

ஸ்தானங்கள்.

1—4—7—10	கேந்த்ரம்
1—5—9	த்ரிகோணம்
2—5—8—11	பணபரம்
3—6—9—12	ஆபோக்கிமம்
3—6—10—11	உபசயம்.
3—6—11	லாபம்
3—8	ஆயுள்
2—7—11	மாரகம்
12	விரயம்.
1—4—7—10	இந்த ஜன்மம்
2—5—8—11	முன ஜன்மம்
3—6—9—12	வரும் ஜன்மம்.

அஷ்டமத்நிலிருக்கும் கிரகத்துக்கு விலக்கு.

அஷ்டமராசியிலிருக்கும் கிரகத்தினால் ஏற்படும் தோஷத்தை அஷ்டமாதிபதி கேந்திரங்களிலிருந்து சுபக்ரஹங்களால் பார்க்கப் படின் விலக்குவான்.

இரவில் செய்யத்தகாதவை.

பிஜாவாபனம், க்ஷௌரம், வாஸ்துகர்ம, க்ருஷி-இவைகள் இரவில் செய்யலாகாது.

ஜ்யேஷ்ட மாஸதோஷம்.

ஜ்யேஷ்ட புத்ரனுக்கும், ஜ்யேஷ்ட புத்ரிக்கும், ஜன்மமாஸம் ஜன்மவாரம், ஜன்ம நக்ஷத்ரம், ஆவிமாதம் இவைகளில் சுபகர்மங்கள் செய்யலாகாது.

ஷி தோஷங்கள் ஆத்யகர்ப்பஜாதர்களுக்குமட்டில். மற்றவர்களுக்குச் செய்யலாம்

தோஷாபவாதம்.

ஜ்யேஷ்டமாஸாதிபதி புதன் முதலிய சுபக்ரஹங்களாலே பார்க்கப் பட்டாலும். சுபரோடு கூடினாலும், ஜ்யேஷ்டனுக்கும் ஜ்யேஷ்டமாஸத்தில் சுபங்கள் செய்யலாம்.

ஜன்ம மாஸாதிபதி, மித்ரக்ஷேத்ராம்சங்களிலே யிருப்பினும் சுபர்கள் அவனைப்பார்த்தாலும் ஜன்மமாஸநக்ஷத்ரவாரங்களிலும் ஜ்யேஷ்டனுக்கும் சுபகார்யங்களைச் செய்யலாம்.

மிதுனத்திலே சூரியனை குரு சுக்ரர்கள் பார்த்தால் ஜ்யேஷ்ட மாஸ தோஷம் போம்.

எந்த க்ரஹமும் அஸ்தமித்திருந்தாலும். நீசசத்ருராசிகளிலிருந்தாலும், பராஜிதனாக விருந்தாலும், தன் பலனைக் கொடுக்காது.

களக்ரஹ தோஷம்.

த்ரயோதசி, சதுர்தசி, பர்வங்கள், பிரதமை, ஸப்தமி, அஷ்டமி, நவமி, சதுர்த்தி இவையெட்டும் களக்ரஹங்களாகும். இதில் உபயனம் செய்யக்கூடாது.

சந்த்ரன் நிற்கும் நிக்கின் பலன்.

சந்திரன் எதிரிலிருந்தால் தனலாபத்தையும், வலதுபுறமிருந்தால் திரவிய லாபத்தையும், இடதுபுறமிருந்தால் திரவிய நஷ்டத்தையும், பின்புறமிருந்தால் எப்பொழுதும் துக்கத்தையும் கொடுப்பானென்பதில் ஸந்தேஹமேயில்லை.

யாத்ரைக்கு ஆகாதயோகங்கள்.

ஞா	திங்	செ	புத	வியா	வெள்	சனி	யோகம்	பல
அசு	மிரு	ஆயி	ஹஸ்	அபி	உத்ரா	சத	ஆகந்த	உத்
பர	திரு	மக	சித்	அனு	அபி	பூரட்	காலதண்ட	அத
திரு	புன	பூர	ஸ்வா	கேட்	திருவே	உத்ர	தூம்ர	அத
ரோ	பூச	உத்	விசா	மூல	அவி	ரேவ	தாத்ரு	உத்
மிரு	ஆயி	ஹஸ்	அனு	பூரா	சத	அசு	ஸௌமய	உத்
திரு	மக	சித்	கேட்	உத்ர	பூரட்	பர	த்வாங்க்ஷ	அத
புன	பூர	ஸ்வா	மூல	திரு	உத்ரட்	திரு	த்வஜ	உத்
பூச	உத்	விசா	பூரா	அவி	ரேவ	ரோ	ஸ்ரீவத்ஸ	உத்
ஆயி	ஹஸ்	அனு	உத்	சத	அசு	மிரு	வஜ்ர	அத
மக	சித்	கேட்	அபி	பூரட்	பர	திரு	முத்கர	அத
பூர	ஸ்வா	மூல	திரு	உத்	திரு	புன	சத்ர	உத்
உத்	விசா	பூரா	அவி	ரேவ	ரோ	பூச	மித்ர	உத்
ஹஸ்	அனு	உத்	சத	அசு	மிரு	ஆயி	மானஸ	உத்
சித்	கேட்	அபி	பூர	பர	திரு	மக	பத்ம	உத்
ஸ்வா	மூல	திரு	உத்ர	திரு	புன	பூர	லம்பக	அத
விசா	பூரா	அவி	ரேவ	ரோ	பூசம்	உத்	உத்பாத	அத
அனு	உத்ர	சத	அசு	மிரு	ஆயி	ஹஸ்	மரண	அத
கேட்	அபி	பூரட்	பர	திரு	மக	சித்	கால	உத்
மூல	திரு	உத்ர	திரு	புன	பூர	ஸ்வா	சித்த	உத்
பூரா	அவி	ரேவ	ரோ	பூச	உத்	விசா	சுப	உத்
உத்ர	சத	அசு	மிரு	ஆயி	ஹஸ்	அனு	அமிருத	உத்
அபி	பூரட்	பர	திரு	மக	சித்	கேட்	மூல	அத
திரு	உத்தி	திரு	புன	பூர	ஸ்வா	மூல	கதா	அத
அவி	ரேவ	ரோ	பூச	உத்ர	விசா	பூரா	மாதங்க	உத்
சத	அசு	மிரு	ஆயி	ஹஸ்	அனு	உத்	ராக்ஷஸ	அத
பூரட்	பர	திரு	மக	சித்	கேட்	அபி	சர	அத
உத்ர	திரு	புன	பூர	ஸ்வா	மூல	திரு	ஸ்திர	உத்
ரேவ	ரோ	பூச	உத்	விசா	பூரா	அவி	வர்த்தமான	உத்
திரு	சித்	ரோ	பர	அனு	திரு	ரேவ	விஷ	
6	2	15	3	3	6	8		

விஷயோகத்தினரில் எண்கள் திதிகளைக் குறிக்கின்றன.

பிற்பகலில் தோஷமில்லாதவை.

க்ஷீணசந்த்ரன், வ்யதீபாதம், ஜன்ம நக்ஷத்ரம், அஷ்டமி, விஷ்டி, ஆங்காரக வாரம் இவைகளுக்கு மத்யான்னத்துக்கு மேல் தோஷமில்லை.

விலக்கத் தக்கவை.

வர்ஷாந்தத்தில் 15 நாட்களும், மாஸாந்தத்தில் 3 நாட்களும், ருதுவின் கடைசியில் ஒரு நாளும், நக்ஷத்ரதிதிகளின் கடைசியில் நாழிகை இரண்டும், வியாகாதம் முதலியவைகளுக்கு நாழிகை 6-ம் விலக்கத்தக்கவை.

மாதப் பிறப்பில் முன்பின் 30 நாழிகைகளும், ஐப்பசி விஷுவுக்கு முன்பின் 60 நாழிகைகளும், ஆடி அயனத்துக்கும், சித்திரை விஷுவுக்கும் மகரஸங்க்ராந்திக்கும் முன்பின் 3 தினங்கள் கூடாது.

உபநயனத்துக்கு உயர்ந்தவை.

சித்திரை வைகாசிகளில் சுக்லபக்ஷ த்ருதியையும், மாசி பங்குனிகளில் ஸப்தமியும், இம்மாதங்களில் க்ருஷ்ண பஞ்சமியும் உபநயனத்தில் ச்ரேஷ்டங்கள்.

ஸ்தான கதி.

விவாஹத்துக்கு லக்னமும், க்ருஹப்ரவேசம், ஆபரணம், அணிய 2-ம், இருவிகளுக்கு 3-ம், வித்யாரம்பத்தில் 4-ம், யாத்ரையில் 5-ம், புதிதுதரிக்க 6-ம், விவாஹத்தில் 7-ம், உபநயனத்தில் 8-ம், சௌளத்தில், 9-ம், அன்னப்ராசனத்தில் 10-ம், முடிருட, ச்ராத்தம் 11-ம், நாமகரணம், க்ரஹப்ரவேசம் முதலியதில் 12-ம், சுத்தமாயிருக்கவேண்டும்.

ஸ்த்ரீகளின் ருதுகால பலன்.

ருது வாரப் பலன்:—ஞாயிறு-வியாதி, புத்ர நாசம்; திங்கள்-பதிவிரதை; செவ்வாய்-விதவை, புதன்-ஸௌபாக்கியவதி; வியாழன்-தனவதி; வெள்ளி-பதிபக்தியுடையவள்; சனி-தாரித்ரியம்.

ருது நக்ஷத்ரப் பலன்:—அசுவதி-தனவதி, சௌபாக்கியவதி, தேவப் பிராம்மண பதிபக்தியுடையவள். பரணி-பதிவிரோதினி, கபடி. கார்த்திகை-அநேக புத்ரவதி, ரோஹிணி-நன்மையுடைய

வள். மிருகசிர்-பாக்கியவதி, பதிவிரதை. திருவா-புருஷன், புத்திரன்மீது வெறுப்புடையவள், துக்கவதி. புனர்பூசம்-மலடி, கானப்பிரியை, பூசம்-சுகந்த பூஷணப்பிரியவதி, காமி. ஆயில்யம்-வயிற்றழிவு கபடி. மகம்-பர்த்தாவிற்கு ப்ரியமானவள், பூரம்-பாக்கியவதி, உத்தரம்-குலத்வய கீர்த்திமதி ஸத்தர்மபிரியை, ஹஸ்தம்-குணவதி-ராஜசமானமானவள். விசாகம்-விவாதப்பிரியை, சத்ருக்களுள்ளவள், அனுஷம்-போகவதி, புத்திரவதி. கேட்-ஆடம்பரப்பிரியை, ஸர்வஜனப்பிரியை, தர்மயுக்தை. மூலம்-தூஷித புத்தியுள்ளவள், பூராடம்-தனவதி, கலஹப்பிரியை. உத்தராடம்-தர்மகுணமுடையவள். திருவோ-பகுபுத்திரை-தனபாக்கியவதி. அவிட்டம்-பொருளுடையவள், சம்போகவதி, சதயம்-பொருளழிவு, சங்கீதவதி பூரட்-தரித்ரமுள்ளவள், போகவதி. உத்தரட்டாதி-யோகமுள்ளவள், பித்ருவிரோதினி, ரேவதி- தனவதி, புத்திரஸௌபாக்கியமுள்ளவள்.

ருது நிதி:-பிரதமை-பர்த்தா நாசம். துவிதியை-சுகவதி, திருதியை-சம்பத்துடையவள். சதுர்த்தி-ஆசாரமுடையவள். பஞ்சமி-புத்திரவதி, பாக்கியவதி, ஷஷ்டி-புத்திர நாசினி. ஸப்தமி-சம்போகவதி. அஷ்டமி-புத்திர துக்கமுள்ளவள். நவமி-துக்கவதி. தசமி-ஸ்வதர்மப்ரியை. ஏகாதசி-பதிப்பிரியை. த்வாதசி-தூஷிப்பவள், த்ரயோதசி-புத்ரவதி. சதுர்தசி-மலடி. பௌர்ணமி-குணவதி, பதிவிரோதினி. அமாவாசை-பதி சுகமற்றவள்.

ருது கரணம்:— பத்ரா-கரணம் தவிர்த்த மற்றவை சுபம்.

ருது லக்நபலன்:-மேஷம்-வியபிசாரி. ரிஷபம்-சம்போகவதி. மிதுனம்-தனசுகமுள்ளவள். கடகம்-துராசாரமுள்ளவள். சிம்மம்-புத்திரவதி கன்னி-தனபாக்யவதி. துலாம்-கைத்தொழிலில் பிரியமுள்ளவள் விருச்சிகம்-பதிப்பிரியை. தனுசு-பூர்வார்த்தத்தில்-பாவி, உத்தரார்த்தத்தில் பதிவிரதை. மகரம்-மரியாதை குறைந்தவள். கும்பம்-தனவதி. மீனம்-கல்ல குணமுடையவள், தர்மவதி.

ருதுபாவம். லக்நாத்நிற்கு ஏழில்:— சூரியன், ராஹு இருந்தால் விதவை,சந்திரன்-புத்ரநாசம். செவ்வாய்-துஷ்டை. புதன் மலடி. குரு வியாதியுடையவள். சுக்கிரன்-சனியிருந்தால் கர்ப்பநாசம். கபடி, கேது-உறவினருக்கு விரோதி, லக்நத்தில் சூரியனிருந்தால் மரணம். சந்திரன்-ஸ்திரீ பிரஜை அதிகம். செவ்வாய்-கர்ப்பநாசம். புதன்-ஸௌபாக்கியவதி, குரு-ஆயுள் விருத்தி, புத்ரலாபம், சுக்கிரன்-தனபாக்கியவதி. சனி விரோதம்-கலஹக்காரி ராஹு- துக்கவதி, கேது-கலஹப்பிரியை.

ருது காலம்:— காலை-ஸௌபாக்கியம். முற்பகல்-புண்ணியக்ஷேத்ரஸேவை. மத்தியானம்-புத்ர தனங்கள். சாயங்காலம், அனேகபதிகள். காலை, மாலை சந்திகள்-வேசிகளின் குணங்கள். முன்னிரவு நீர்க்காயுள். அர்த்த ராத்திரி-வைதவ்யம். விடியற்காலம்-சௌபாக்கியமின்மை, ஸந்தியாகாலத்தில் ருதுவானவள்-எப்பொழுதும் துர்பாக்கியமுள்ளவள்.

ருது வஸ்த்ர பலன்:-வெள்ளை, பச்சை, மஞ்சள்-ஸௌமங்கல்யம்; சிவப்பு-வியாதி; கருப்பு-மிருத்யு; பாடலி-வைதவ்யம்; சிவப்பு, கருப்பு கலந்ததில்-காருண்யம்; வெள்ளை, மஞ்சள் கலந்ததில்-சுகம்; பலவர்ணங்களில் மலடி.

ருது ஸ்நான பலன்:-வெளியூரில் ருதுவானால் வியபசாரி, சொந்த க்ருஹத்தில் சுகவதி; அன்னிய க்ருஹத்தில் பாபி; மாட்டுக்கொட்டத்தில் பதிவிரதை; வீட்டிற்கு வெளியில்-புத்ரவதி; காட்டில்-தனவதி; ஓல சமீபத்தில்-நீர்க்காயுள், ருது காலத்தில் தன் கையில் விளக்குமாறு, விறகு, புல், முறம், கெருப்பு - இவைகளை வைத்திருந்தால் அபிர்த்தி, தாரித்ரியம் அடைவாள். மெத்தை, கட்டில் சாப்பிடும் சமயத்தில், வாஹனங்களில் பிரயாண சமயத்தில் சுபம், பாக்கியவதி.

ருது தோஷ பரிகாரம்:-முன்னே கூறியவாறு துஷ்ட நக்ஷத்திரங்களிலே பிரதமருதுவானதற்குரிய உக்ரசாந்தியைச் செய்து கொள்ளாவிடினும், பரணி ஆயிலியம் பூரம், பூராடம், பூரட்டாதிகளில் ருதுவானால் 6 மாதகாலமும், இவற்றிற்று ஞாயிறு, செவ்வாய், சனிவாரங்கள் சேர்ந்த ஒரு வருஷ காலமும், கார்த்திகை, திருவாதிரை, புனர்பூசம், மகம், கேட்டைகளில் ருதுவானால் 3 மாத வரை யொருவர்க்கொருவர் முகம்பாராத வண்ணம் தூர விலகியிருந்து பிறகு ருதுசாந்தி செய்து கொள்ள வேண்டும். விவாகத்துக்கு முன் ருதுவான பெண்களுக்கு மேலே கூறிய காலவரையறை கடந்து விவாகஞ் செய்தல் வேண்டும்.

நிஷேகம் முதலிய சுப காரியங்களைச் செய்வதற்கு நல்ல முகூர்த்த காலங்கள்.

நிஷேகம்:— திங்கள், புதன், வியாழன், வெள்ளி என்கிற கிழமைகள், ப்ரதமை, துவிதீயை, திருதீயை, பஞ்சமி, ஸப்தமி, நவமி, தசமி, திரயோதசி என்கிற திதிகள்; அசுவதி, ரோகிணீ, மிருகசிர்ஷம், புனர்பூசம், உத்தரம், ஹஸ்தம், சித்திரை, ஸ்வாதி அனுஷம், மூலம், உத்தராடம், திருவோணம், அவிட்டம், சதயம், உத்தரட்டாதி, ரேவதி என்கிற நக்ஷத்திரங்கள்; ரிஷபம், மிதுனம், கடகம், சிம்மம், கன்னி, துலாம், தனுசு, மீனம் என்கிற லக்நங்களும் சுபங்கள். லக்நம் அஷ்டமம் சுத்தமாயிருக்க வேண்டும். முக்கியமாய் பெண்ணுக்குப் பொருந்தியிருக்க வேண்டும்.

நிஷேகத்துக்குரிய லக்னம் ஸமராசியாயிருந்து அதில் சந்த்ரனிருந்தால் ஸ்த்ரீப்ரஜையுண்டாகும். லக்னத்திலிருந்து ஒற்றையான ராசிகளில் சனி இருந்தால் புத்ரனுண்டாவான். குருவும் சூரியனும் லக்னத்தில் நின்றும் ஒற்றையாய் வருகின்ற ராசியிலிருந்தால் புத்ரனுண்டாகும். நிஷேககாலத்தில் சூர்யசந்த்ரர்கள் ஒருவர்க்கொருவர் பார்த்துக்கொண்டிருந்தாலும், புதனும் சனியும் ஒருவர்க்கொருவர் பார்த்தாலும் நபும்ஸகமாகப் பிறக்கும். நிஷேகலக்னத்தில் சனியிருந்து, அச்சனியை க்ஷீணசந்த்ரனோடு கூடின செவ்வாய் பார்க்க ஸ்த்ரீகர்ப்பத்துடனிறப்பள்.

லக்னமும் சந்த்ரனும் பாபக்ரஹங்களுக்கு மத்தியிலிருக்க, அவர்களே சுபக்ரஹங்கள் பார்க்காவிடில் அந்த ஸ்த்ரீ கர்ப்பத்துடனாவது பிரஸவித்த பிறகாவது இறக்கலாம். குழந்தையும் இறக்கும். நிஷேகலக்னம் சனியின் ராசி அல்லது அம்சமாகவிருக்க, 7-ல் சனியிருந்தால் 3 வருஷத்தில் குழந்தையுண்டாகும்.

லக்னம் கடகம் அல்லது சந்த்ராம்சகமாயிருந்து 7-ல் சந்த்ரனிருந்தால் 12 வருஷத்தில் குழந்தையுண்டாகும்.

சூரியன், சந்த்ரன், செவ்வாய், சுக்ரன் அவரவர்கள் பாகத்திலிருந்து லக்னம், 5, 9-இவைகளில் குரு இருந்தால் புத்ரனுண்டாவான்.

தனுர்லக்னம் அல்லது அதன் கடைசி அம்சத்தில் எல்லா கிரகங்களுமிருப்பதை சனி அல்லது புதன் பார்க்க அநேக குழந்தைகள் பிறக்கும்.

இரட்டையான ராசிகளில் சந்த்ர சுக்ரர்களும், ஒற்றையான ராசிகளில் புதன், குரு செவ்வாய்—இவர்களுமிருந்தால் இரட்டைக் குழந்தைகள் உண்டாகும்.

இரட்டையான ராசியில் புதன் குரு செவ்வாய் இவர்களிருந்து இரட்டைப்பட்ட ராசியான லக்னம் இரட்டையான ராசியிலிருக்கும் சந்த்ரனையும் புருஷக்ரஹங்களான சூரியன் செவ்வாய், குரு இவர்களில் ஒருவர் பார்க்க இரட்டைக்குழந்தைகள் ஜனிக்கும்.

ஒற்றை அல்லது இரட்டை ராசியிலிருக்கும் சந்த்ரனையும் புதனையும் செவ்வாய் பார்க்க நபும்ஸகமுண்டாகும். இரட்டித்த ராசியிலிருக்கும் சூரியனை நபும்ஸக க்ரஹங்களாகிய சனி புதர்கள் பார்த்தாலும் நபும்ஸக முண்டாகும். மகரத்தின் கடைசியான லக்னத்தை சனி, சந்த்ரன், சூரியன் இவர்கள் பார்க்க சித்திரக்குள்ளன் உண்டாவான்.

சந்த்ரனோடு கூடிய கடக லக்னத்தை சனியும் செவ்வாயும் பார்க்க கூனன் உண்டாகிறான். சந்த்ரனோடு கூடிய மீனத்தையும் சனி, செவ்வாய் சூரியன் பார்க்க முடவன் ஜனிக்கிறான். மீனம் கடகம், மகரம், மேஷம் இவைகளின் நவாம்சகத்தில் சந்திரன் செவ்வாயுடனும் சனியுடனும் கூடியிருந்தாலும் பார்க்கப்பட்டாலும் குஷ்டரோகியாகப் பிறக்கிறான்.

சூரிய சந்திரர்களோடு கூடிய ஸிம்ம லக்னத்தை செவ்வாயும் சனியும் பார்க்க குருடனாவான். சுப க்ரஹங்களாகிய பூர்ணசந்திரன், குரு, சுக்ரன், புதன் இவர்களும், அசுபர்களாகிய சூர்யன், செவ்வாய், சனி, ராகு, கேது இவர்களும் பார்த்தால் குந்தக் கண்ணனாகிறான்.

5, 9-களிலுள்ள செவ்வாயை பாபக்ரஹங்கள் பார்க்கவும், 1, 4, 7, 10-ல் பலமுள்ள குருவில்லாமலுமிருந்தால் குறைவான சரீரத்தை அடைகிறான். விருச்சிகம், மகரம், விருஷபம் இவைகள்

லக்னமாயிருந்து பாபிகள் 5, 9-களிலிருக்கவோ, பார்க்கவோ குஷ்டரோகியாவான்.

2,12-ல் பாபியும், லக்னத்திலோ, ஏழிலோ சந்திரனும், அல்லது லக்னத்தில் சந்திரனும், 7-ல் சூரியனுமிருக்க குஷ்டம், குன்மம், அல்லது இழுப்பு வியாதியுள்ளவனாக ஜனிக்கிறான்.

சூரியனிருக்கும் ராசிக்கு ஏழாவது ராசியில் சனி செவ்வாய்களிருந்தால் புருஷனுக்கு ரோகமுண்டாகும். லக்னத்தில் சூரியனும், 7-ல் சனி, செவ்வாய்களுமிருந்தாலும், லக்னத்தில் சந்த்ரன், சனி, செவ்வாய்களிருந்தாலும் புருஷனுக்கு ரோகமுண்டாகும். லக்னத்தில் சூரியனும், 7-ல் சனி, செவ்வாய்களுமிருந்தாலும், லக்னத்தில் சந்த்ரன், சனி செவ்வாய்-இவர்களிருந்தாலும், சனி, செவ்வாய் வீடுகளிலிருக்கும் சந்த்ரனை சனி செவ்வாய்கள் பார்த்தாலும். சுபக்ரஹங்களின் பார்வை இல்லாவிட்டாலும் கர்ப்பம் நாசத்தையடையும்.

கிஷேக காலத்தில் ஸ்த்ரீ புருஷர்களின் மனம் ஸஞ்சலமாயிருக்குமானால் குள்ளன், ஊமை, குருடு, துக்கி-இப்படியாகப் பிறக்கிறார்கள்.

சிலர், லக்னசுத்தியையும் சிலர் எட்டாமிடத்து சுத்தியையும் விரும்புகிறார்கள். ஆகவே, 1,8- இரண்டும் சுத்தமாக இருப்பது நலம்.

லீமந்தம்:— திங்கள், புதன், வியாழன், வெள்ளி, என்கிற கிழமைகள்; பிரதமை, துவிதியை, திருதியை சதுர்த்தி, பஞ்சமி, சுக்லபக்ஷ ஸப்தமி, தசமி, திரயோதசி, சதுர்தசி, பௌர்ணமி என்கிற திதிகள்; அசுவதி, ரோகிணி, மிருகசிரிஷம், புனர்பூசம், பூசம், உத்தரம், ஹஸ்தம், அனுஷம், மூலம், உத்தராடம், திருவோணம், உத்தரட்டாதி, ரேவதி, என்கிற நக்ஷத்திரங்கள்; மேஷம், ரிஷபம், மிதுனம், கடகம், கன்னி, துலாம், தனுசு, மகரம் கும்பம், மீனம் என்கிற லக்னங்கள சுபங்கள். 8-ம் இடம் சுத்தமாக இருக்க வேண்டும். பெண்ணுக்கு முக்யமாகப் பொருந்தியிருக்க வேண்டும். கர்ப்பிணிகளுக்கு 6-வது மாதம் அல்லது 8-வது மாதங்களில் செய்யவேண்டியது.

சூநிகா கிரகப்பிரவேசம்:— திங்கள், புதன், வியாழன், வெள்ளி, சனி, என்கிற கிழமைகள், துவிதியை, திருதியை, பஞ்சமி, ஷஷ்டி, ஸப்தமி தசமி, ஏகாதசி, துவாதசி, திரயோதசி, என்கிற திதிகள்; அசுவதி, ரோகிணி, மிருகசிரிஷம், புனர்பூசம், உத்தரம், ஹஸ்தம், சித்திரை, ஸ்வாதி, அனுஷம், உத்தராடம்; திருவோணம், உத்தரட்டாதி, ரேவதி என்கிற நக்ஷத்திரங்கள், மேஷம், ரிஷபம், மிதுனம், கடகம், ஸிம்மம், கன்னி, துலாம், தனுசு, மகரம், மீனம் என்கிற லக்னங்கள் சுபங்கள். அஷ்டமம் சுத்தமாயிருக்கவேண்டும். பெண்ணுக்குப பொருந்தியிருக்கவேண்டும்.

ஜாதகர்மம்:— குழந்தை பிறந்த உடனே தகப்பன் வடக்கு திக்கில் சென்று ஸ்நானம் பண்ணி, எள்ளு, நெல், பொன், புட்வை, பசு முதலிய தான தர்மங்கள் செய்து, தன் பந்துக்களுடன் புத்திரதரிசனம் செய்து சுபதினத்தில் ஜாதகம் எழுதிவைக்கவேணும்.

பஞ்சாயுதாபரணம்:— குழந்தை பிறந்த ஐந்தாம் நாளில் அல்லது ஏழாவது நாளில் குழந்தையை ஸ்நானம் செய்வித்து தங்கத்தினால் சங்கு, சக்கரம், கதை, கத்தி, வில்லு என்கிற பஞ்சாயுத ரூபங்களைப் பண்ணி பொன்னரைஞாணில் கோர்த்து நாபியளவாக குழந்தைக்குப் பூட்டவேணும். இப்படிச் செய்தால் பூதப்பிரேத பிசாசங்கள் முதலியவைகளால் உண்டாகும் பிடை கிருத்தியாகும்.

நாமகரணம்:— பிராம்மணர் குழந்தை பிறந்த 12-வது நாளிலும், க்ஷத்திரியர் 16-வது நாளிலும், வைசியர் 21-வது நாளிலும், சூத்திரர் 31-வது நாளிலும் குழந்தைக்குப் பெயரிடவேண்டும். நாமகரணம் என்பது பெயரிடல். மேற்கண்ட நாள்களில் பெயரிட முடியாவிட்டால் திங்கள், புதன், வியாழன், வெள்ளி என்கிற கிழமைகள், துவிதியை, திருதியை, பஞ்சமி, ஸப்தமி, தசமி, ஏகாதசி, திரயோதசி என்கிற திதிகள்; அசுவதி, ரோகிணி, மிருகசிரிஷம், புனர்பூசம், பூசம், மகம், உத்தரம், ஹஸ்தம், ஸ்வாதி, அனுஷம், உத்தராடம் திருவோணம் அவிட்டம், சதயம், உத்தரட்டாதி, ரேவதி என்கிற நக்ஷத்திரங்கள், ரிஷபம், ஸிம்மம், விருச்சிகம், கும்பம் என்கிற லக்னங்கள் சுபங்கள். அஷ்டமம் சுத்தமாயிருக்க வேண்டும். குழந்தைக்குப் பொருந்தியிருக்கவேணும்.

தொட்டிலேற்றல்:— குழந்தைபிறந்த 10, 12, 16, 24, 32-வது நாட்களில் சுப பலமுள்ள லக்னங்களில் குழந்தையைத் தொட்டிலேற்றவேண்டியது. குழந்தைக்குப் பொருத்தியிருக்கவேண்டும்.

பாலூட்டல்:— குழந்தை ஜனித்த 31, 32-வது நாட்களில் சுப பலமுள்ள லக்னங்களில் பூமிதேவியைப் பூஜித்து குழந்தைக்கு சங்கினால் பால் ஊட்டவேண்டும்.

சூரிய தரிசனம்:— குழந்தை பிறந்த 3 ம் மாதத்தில் அனுகூலமான சுபதினங்களில் குழந்தைக்கு சூரியனைக் காட்டவேண்டும்.

சந்திரதரிசனம்:— குழந்தை ஜனித்த 4-ம் மாதத்தில் நல்ல முகூர்த்தத்தில் சந்திரனையும், பசுவையும் குழந்தைக்குக் காட்டவேண்டும்.

அன்னப்ராசனம்:— குழந்தை பிறந்த 6, 8, 10-வது மாதங்களில் அல்லது ஆண்டு நிறைவில் திங்கள், புதன், வெள்ளி என்கிற கிழமைகள், துவிதியை, திருதியை, பஞ்சமி, ஸப்தமி, தசமி, ஏகாதசி, திரயோதசி என்கிற திதிகள், அசுவதி, ரோகிணி, மிருகசிரிஷம், புனர்பூசம், பூசம், உத்தரம், ஹஸ்தம், சித்திரை, ஸ்வாதி, அனுஷம், உத்தராடம், திருவோணம், அவிட்டம், சதயம், உத்தரட்டாதி, ரேவதி என்கிற நக்ஷத்திரங்கள்; ரிஷபம், மிதுனம், கடகம், ஸிம்மம், கன்னி, துலாம், தனுசு, மகரம், கும்பம் என்கிற லக்னங்கள் சுபங்கள். 10-ம் இடம் சுத்தமாயிருக்கவேண்டும். லக்னத்திற்கு 9-ம் இடத்தில் புதனும் 8-ம் உடத்தில் செவ்வாயும், 7-ம் இடத்தில் சுக்கிரனும் இருக்கலாகாது. குழந்தைக்குப் பொருந்தியிருக்கவேண்டும்.

காதுகுத்தல்:— குழந்தை பிறந்த 12, 16-வது நாளில் அல்லது 6, 7, 8 ம் மாதங்களில் அல்லது ஆண்டு நிறைவில், திங்கள், புதன், வியாழன், வெள்ளி என்கிற வாரங்கள்; துவிதியை, திருதியை, பஞ்சமி, ஷஷ்டி, ஸப்தமி, தசமி, ஏகாதசி, துவாதசி, திரயோதசி என்கிற திதிகள்; மிருகசிரிஷம், திருவாதிரை, புனர்பூசம், பூசம், உத்தரம், ஹஸ்தம், சித்திரை, உத்தராடம், திருவோணம், அவிட்டம், உத்தரட்டாதி, ரேவதி என்கிற நக்ஷத்திரங்கள்; மேஷம், ரிஷபம், மிதுனம், கடகம், கன்னி, துலாம், தனுசு, மகரம், மீனம் என்கிற லக்னங்கள் காதுகுத்த உத்தமங்கள். அஷ்டமம் சுத்தமாயிருக்கவேண்டும். குழந்தைக்குப் பொருத்தமிருக்கவேண்டும். ராத்திரிகாலமும் இரண்டு திதி கூடிய தினமும், இரண்டு நக்ஷத்திரம் கூடிய தினமும் ஆகாது.

அப்தபூர்த்தி:— சௌரமானப்பிரகாரம் ஜன்ம மாதத்தில் ஜன்ம நக்ஷத்திரத்தில் குழந்தைக்கு மங்களஸ்நானம் செய்வித்து, ஆயுஷ்யஹோமம் முதலிய சாந்தி கர்மங்களைச் செய்து அனுகூலமான லக்னத்தில் குழந்தைக்கு அரைஞாண், நூதன வஸ்திரமும் தரிக்கச் செய்யவேண்டியது. அன்று அனுகூல லக்னத்தில் காதுகுத்தலையும் செய்கிறார்கள்.

சௌளம்:— குழந்தை பிறந்த 3-வது அல்லது 5 வது வயதில் உத்தராயணத்தில், குரு, சுக்கிரன் அஸ்தமனமில்லாதகாலத்தில் சுக்லபக்ஷம், துவிதியை, திருதியை, பஞ்சமி, ஸப்தமி, தசமி, திரயோதசி இந்த திதிகளில், திங்கள், புதன், வியாழன், வெள்ளி என்கிற வாரங்களில்; அசுவதி, மிருகசிரிஷம், புனர்பூசம், பூசம், ஹஸ்தம், சித்திரை, திருவோணம், அவிட்டம், ரேவதி என்கிற நக்ஷத்திரங்களில்; ரிஷபம், மிதுனம், கடகம், கன்னி, துலாம், மகரம், மீனம் என்கிற லக்னங்களில் சௌளகர்மம் செய்ய உத்தமம். 8 ம் இடம் சுத்தமாயிருக்கவேண்டும். ரோகிணி, உத்தரம், ஸ்வாதி, சதயம், உத்தரட்டாதி, உத்தராடம், என்கிறநக்ஷத்திரங்கள் மத்யமம். ஆடி, புரட்டாசி, மார்கழி, மாசி மாதங்கள் கூடாது. செவ்வாய், சூரியன் சுக்கிரன் இவர்கள் 7-ம் இடத்தில் இருக்கக்கூடாது. இருந்தால் அக்கிரகங்களுக்குப் பிரீதி செய்ய வேண்டும். பிராமணர்களுக்கு சூரியனிருக்கிற லக்னமும், க்ஷத்திரியர்களுக்கு செவ்வாய் இருக்கிற லக்னமும், வைசிய, சூத்திரர்களுக்கு புதனிருக்கிற லக்னமும் உத்தமம்.

அக்ஷராரம்பம்:— குழந்தை பிறந்த 5ம் வயதில் உத்தராயணத்தில் திங்கள், புதன், வியாழன், வெள்ளி என்கிற வாரங்களில், துவிதியை, திருதியை, பஞ்சமி, சப்தமி, தசமி, ஏகாதசி, துவாதசி, திரயோதசி என்கிற திதிகளில்; அசுவதி, திருவாதிரை, புனர்பூசம், ஹஸ்தம், சித்திரை, ஸ்வாதி; அனுஷம், திருவோணம், ரே

வதி என்கிற நக்ஷத்திரங்களில்; மேஷம், மிதுனம், கடகம், கன்னி, துலாம், தனுசு, மகரம், மீனம் என்கிற லக்னங்களில் அக்ஷராரம்பம் செய்ய உத்தமம். அஷ்டமம் சுத்தமாயிருக்கவேண்டும். குழந்தைக்குப் பொருத்தமாயிருக்கவேண்டும்.

உபநயநம்:— சித்திரை, வைகாசி, ஆனி, மாசி, பங்குனி மாதங்களில்; புதன், வியாழன், வெள்ளி என்கிற வாரங்களில்; துவிதியை, திருதியை, பஞ்சமி, ஸப்தமி, தசமி, ஏகாதசி, துவாதசி, திரயோதசி என்கிற திதிகளில்; அசுவதி, ரோகிணி, மிருகசிரிஷம், புனர்பூசம், பூசம், உத்தரம், ஹஸ்தம், சித்திரை, ஸ்வாதி, அனுஷம், உத்தராடம், திருவோணம், அவிட்டம், சதயம், உத்தரட்டாதி, ரேவதி என்ற நக்ஷத்திரங்களில்; ரிஷபம், மிதுனம், கடகம், விம்மம், கன்னி, துலாம், தனுசு, மீனம் என்கிற லக்னங்களில் உபநயநம் செய்ய உத்தமம். அஷ்டமம் சுத்தமாயிருக்க வேண்டும். குஜாஸ்தமனத்தில் ஸாமவேதிகளும்; குரு அஸ்தமனத்தில் ருக் வேதிகளும், சுக்ராஸ்தமனத்தில் யஜுர்வேதிகளும் அனத்யயனதினத்தில் எல்லோரும் உபநயநம் செய்யக்கூடாது. லக்நத்தில் சூரியனும் செவ்வாயும் இருக்கக்கூடாது. இருந்தால் அவரவர்களுக்கு ப்ரீதிசெய்யவேண்டியது.

உபநயனலக்னம் மேஷமானால் வாக்ஸாமர்த்தியமில்லாதவன், ரிஷபம்-பணம், வித்யைகளுடன் கூடுவான். மிதுனம்-வேதாத்யயனம் செய்வான். கடகம்-வேதாங்கங்களையுமறிபவன். விம்மம்-சிற்பி, கன்னி-பண்டிதன், துலாம்-வியாபாரி, விருச்சிகம்-துஷ்டர்களுக்கு அதிபதி, தனுஸு-எல்லாமறிபவன். மகரம்-இழிதொழில் செய்பவன், கும்பம்-ராஜஸேவகன், மீனம்-சாஸ்த்ரம் அறிபவன்.

உபநயனலக்னத்தில்-சூரியன், சந்த்ரன், செவ்வாய், சனி, ராகு, கேது-கெடுதி; புதன், குரு, சுக்ரன்-நலம். இரண்டில்-சூரியன், செவ்வாய், சனி, ராகு, கேது-தீது; புதன் மத்யமம்; சந்த்ரன், குரு உத்தமம். மூன்றுமிடத்தில்-எந்த க்ரஹமிருந்தாலும் நலக்கியம். நான்கில்-சூர்யன், செவ்வாய், சுக்ரன், சனி, ராகு, கேது-தீது. சந்த்ரன், புதன், குரு-நன்மை. ஐந்தில் சூரியன், செவ்வாய், சனி, ராகு-அசுபம். சந்த்ரன், புதன், குரு, சுக்ரன்—நன்மை. ஆறுமிடத்தில் பாபிகளிருந்தால் நன்மை. சுபர்களிருக்க தீது ஏழில்-சூரியன், சுக்கிரன், சனி, ராகு-தீது. சந்த்ரன், செவ்வாய் புதன், குரு-நன்மை. எட்டாமிடத்தில்-ஒருவரும் கூடாது. சுபர்களிருந்தால் ஆசார்யனுக்கும், அசுபர்களானால் சிஷ்யனுக்கும் கெடுதி. ஒன்பதில் சூரியன், செவ்வாய், சனி, ராகு-நிமை. சந்த்ரன் புதன், குரு, சுக்ரன்-நலம். பத்தாவது ஸ்தானத்தில் சூரியனிருக்கவைத்யனுவான், சந்த்ரனிருக்கவேதம் தெரிந்தவனுவான். செவ்வாயிருக்க டம்பமுள்ளவன். புதனிருக்க வேதம் அறிபவனுவான். குருவிருக்க-சாஸ்த்ரமறிவான். சுக்ரனிருந்தால் ஸங்கீதம் தெரிந்தவனுவான். சனி இருக்க பாபம் செய்கிறவன். ராகுவிருந்தால் பாபியாவான். பதினொன்றில் எந்த க்ரஹமிருந்தாலும் நலமே. பன்னிரண்டில் புதன், குரு, சுக்ரர்களைத்தவிர மற்றவர்கள் நிமை பயப்பர்கள்.

ஜன்ம நக்ஷத்ரத்துக்கு 10-வது நக்ஷத்ரம் **கர்மம்**. 16 **ஸங்காதம்**, 18 **மாஸதாய்யம்**, 23 **வதாசரம்**, 25 **மானஸமென்றும்** சொல்லப்படுகின்றன. இவை சுபகாரியங்களுக்கு ஆகாதவை.

சூரியன் கேந்த்ரத்திலிருக்க **ஸ்பூர்ஜிதம்**. செவ்வாய் கேந்த்ரத்திலிருக்க **ஸ்புடிதம்**, சனி கேந்த்ரத்திலிருக்க **குத்தம்**, ராகு கேந்த்ரத்திலிருக்க **ரந்த்ரம்**, கேது கேந்த்ரத்திலிருக்க **உக்ரம்**—ஆக இவ்வைந்து தோஷங்களும் உபநயனத்துக்கு ஆகா.

சந்த்ரனுக்கு 6, 7, 8-ல் சுபக்ரஹமிருந்தாலும், கேந்த்ரத்ரிகோணங்களில் குருவும், சூரியன் அல்லது சுக்ரன் 12-லும், புதன் இரண்டிலும், அல்லது பத்திலும், சூரியன் 11-லும் சுக்ரன் லக்னத்திலும், சந்த்ரன் சுபாம்சகத்திலும், மீனம் லக்னமாயிருந்து அதில் குருவோ, சுக்ரனோ இருக்க, 11-ல் சூரியனும், 10, அல்லது 12-ல் புதனிருந்தாலும் லக்னம் மிதுனமாய் மேஷத்தில் செவ்வாய், விருஷபத்தில் சுக்ரன், கடகத்தில் சந்த்ரனுமிருந்தாலும் உபநயனத்து நல்லயோக காலங்கள்.

வித்யாரம்பம்:— திங்கள், புதன், வியாழன், வெள்ளி இந்த வாரங்களில், துவிதியை, திருதியை, பஞ்சமி, ஷஷ்டி, ஸப்தமி, தசமி, ஏகாதசி, துவாதசி, திரயோதசி என்கிற திதிகளில்; மிருகசிரிஷம், திருவாதிரை, புனர்பூசம், பூசம், ஹஸ்தம், சித்திரை, ஸ்வாதி, அனுஷம், திருவோணம், அவிட்டம், சதயம், என்கிற நக்ஷத்திரங்களில்; ரிஷபம், விம்மம், விருச்சிகம், கும்பம் தவிர மற்ற

லக்னங்களில் வித்யாரம்பம் செய்ய உத்தமம். 4ம் இடம் 8-ம் இடம் சுத்தமாயிருக்கவேண்டும்.

அவிட்டம், ரேவதி, மிருகசிரிஷம், ரோஹிணி, பூசம், அனுஷம், புனர்பூசம், ஹஸ்தம் இவை வியாகரணத்துக்கும், புனர்பூசம், திருவோணம், சுவாதி, பூசம், ஹஸ்தம், அசுவதி, சதயம், உத்தரம், உத்தராடம், உத்தரட்டாதி-இவைகள் தர்க்கத்துக்கும், சுவாதி, ஹஸ்தம், புனர்பூசம், ரேவதி, பூசம், அசுவதி., மூலம், சதயம்-இவை ஜ்யோதிஷத்துக்கும், அவிட்டம், பூசம், திருவோணம் எல்லாவற்றுக்கும், அவிட்டம், ஆயுர்வேதம், தனுர்வேதத்துக்கும் உத்தமம்.

ஸரஸ்வத யோகம்:— இந்த யோகம் வித்யாரம்பத்தில் விசேஷமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. அவைகளின் விவரங்கள் கீழேகாட்டப்படுகின்றன. 1. ஹஸ்தமும் புதவாரமும் கூடிய தினத்தில் சூரியன், சந்த்ரன், புதன்—இவர்கள் புதாம்சகமான மிதுனம் அல்லது கன்னியிலிருக்க, லக்னம் புதனுடைய க்ஷேத்ரமாயிருப்பது. 2. கன்யாராசியில் சூரியனிருக்க புதன்கிழமையன்று உதய காலத்தில் புதன் அத்யுச்சத்திலிருப்பது. 3 சூரியசந்த்ர புதர்கள் உச்சத்திலிருக்க அவர்கள் க்ஷேத்ரமான லக்னத்தில் சுபர்களிருப்பது. 4. ஹஸ்தநக்ஷத்ரத்துடன் கூடிய ஞாயிறு, திங்கள், புதன் கிழமைகளில் வாராதிபன் லக்னத்தில் புதனுடைய அம்சத்திலிருப்பது. 5. விருஷபத்தில் புதனும், மீனத்தில் சுக்ரனும், அல்லது புதசுக்ரர்கள் இருவரும் வர்கோத்தமத்திலிருந்து சூரியன லக்னத்தில் தன் அத்யுச்ச பாகத்திலிருப்பது. 6. திரயோதசி, புதன்கிழமை, உத்தரம் இவைகள் ஒன்றுசேர்ந்தினத்தில் தனுஸ், மீனம் இவைகளின் அம்சகத்தில் சூரியன், புதன், சுக்ரன் கேந்த்ரத்திலிருந்து லக்னத்தில் சனி அல்லது லக்னம் மிதுனமாயிருப்பது. 7. புதன்கிழமையன்று புதன் லக்னத்தில் உச்சனையிருந்து (அல்லது லக்னாதிபன் உச்சனையிருந்து) கன்னியின் 3-வது திரேக்காணத்தில் சூரியனிருப்பது. 8. சனி, செவ்வாய் தவிர மற்றக் கிழமைகளில் புதன் அத்யுச்சத்திலோ லக்னத்திலோ இருப்பது. 9 சனி, செவ்வாய்தவிர மற்றக் கிழமைகளில் குரு அத்யுச்சம், ஸ்வக்ஷேத்ரம் அல்லது லக்னத்திலோ இருப்பது.

வித்யா யோகம்:— வியாழக்கிழமையன்று குருஹோரையில் குரு கடகத்தின் 5-வது பாகத்திலிருந்தாலும், வெள்ளியன்று பகலில் மீன லக்னத்தில் 27-வது பாகத்தில் சுக்ரனிருந்தாலும், கீழ்சொல்லப்படாத கிரகங்களும் தங்கள் வாரத்திலும் ஹோரையிலும், லக்னத்திலிருந்தாலும், வாரக்ஷேத்ரயோகம் சுபமாகவிருக்கும்போது வாராதிபன், நக்ஷத்ராதிபன், லக்னாதிபன், சூரியன் இவர்களின் ஹோரையாகவிருந்தாலும் உத்தமமான வித்யா யோகமாகும்.

மந்த்ராரம்பம்:— சாந்த்ரமானப்படி வைசாகம், சிராவணம் ஆச்வயுஜம், கார்த்திகம், மார்கசிரம், மாகம், பால்குனம் இந்த மாதங்களில்; பிரதமை, துவிதியை, திருதியை, சதுர்த்தி, பஞ்சமி, ஷஷ்டி, ஸப்தமி, நவமி, தசமி, ஏகாதசி, துவாதசி, த்ரியோதசி என்கிற திதிகளில்; ரோகிணி மிருகசிரிஷம், திருவாதிரை, புனர்பூசம் பூசம் மகம், உத்தரம், ஹஸ்தம், சித்திரை, ஸ்வாதி, அனுஷம் கேட்டை, மூலம் உத்தராடம், திருவோணம், அவிட்டம், உத்தரட்டாதி, ரேவதி என்கிற நக்ஷத்திரங்களில்; மேஷம், மிதுனம், கடகம், கன்னி, துலாம், தனுசு, மகரம், மீனம் இந்த லக்னங்களில் மந்த்ராரம்பம் செய்ய உத்தமம். 8ம் இடம் சுத்தமாய் இருக்கவேண்டும். ஜன்மம், அனுஜன்மம், திருஜன்மம் என்கிற தாரைகள், சங்ரமம் சுபம்.

மந்த்ரங்களை உபதேசம் செய்துகொள்ளுவதற்கு முன்பு பல வித பொருத்தங்களைப் பார்த்து உகந்த மந்த்ரங்களை உபதேசம் செய்துகொள்ளும்படி சாஸ்த்ரம் விதிக்கிறது. அப்பொருத்தங்களில் மிக மிக முக்யமானதும் எல்லோராலும் பார்க்கப்பட்டு வருவதுமான "அகதஹ" சக்ரமென்னும் ஸித்தாதிகோஷ்டம் கீழே தரப்படுகிறது. மந்த்ரத்துக்காகவே இந்த கோஷ்டமாலையால் ஸம்ஸ்கிருத எழுத்திலேயே குறிக்கப்பட்டிருக்கிறது.

தன்பெயரின் முதல் எழுத்து எந்தக் கட்டத்திலிருக்கிறதோ அது முதலாக மந்த்ரத்தின் முதலக்ஷரம் இருக்கும் கோஷ்டம் வரை ஸித்தம் முதலாக ப்ரதக்ஷிணமாக கோஷ்டங்களை எண்ண வேண்டும்.

ஸித்நாதீ கோஷ்டம்.

अ क थ ह	उ ङ प	आ ख द ळ	ऊ च फ
ओ ड व	ऌ झ म	औ ढ श	ॡ ञ य
ई घ न	ॠ ज भ	इ ग ध क्ष	ऋ छ ब
अः त स	ऐ ठ ल	अं ण ष	ए ट र

மேலுள்ள 16 கட்டங்களில் ஒவ்வொரு நான்கு கட்டங்களுக்கும், வரிசையாக ஸித்தம், ஸாத்யம், ஸுஸித்தம், அரி எனப் பெயர். அந்த ஒவ்வொரு கட்டத்திலும் நான்குக்கும் க்ரமமாக மேற்கண்ட பெயர்களே வழங்கப்படுகின்றன. உதாஹரணமாக, முதல் நான்கு கட்டங்களிலுள்ள முதல் கட்டம் ஸித்த ஸித்த மென்றும், அடுத்தது ஸித்தஸாத்ய மென்றும், அடுத்தது, ஸித்த ஸுஸித்த மென்றும், மற்றது ஸித்தாரி என்றும் இப்படியே வரிசையாக ஸாத்ய ஸித்தம், ஸாத்ய ஸாத்யம், ஸாத்ய ஸுஸித்தம், ஸாத்யாரியென்றும், அதற்கு அடுத்த நான்கு கோஷ்டங்களுக்கு ஸுஸித்த ஸித்தம், ஸுஸித்தஸாத்யம், ஸுஸித்த ஸுஸித்தம், ஸுஸித்தாரி என்றும். அடுத்த கோஷ்டங்கள் அரிஸித்தமென்றும், அரிஸாத்யமென்றும், அரிஸுஸித்தமென்றும், அர்யரி என்றும் வழங்கப்படுகின்றன.

பலன்:— உபதேசம் செய்துகொள்ளும் மந்த்ரத்தின் முதல் அக்ஷரம் ஸித்த ஸித்தத்திலிருப்பின் குறிப்பிட்ட ஸங்கையை ஜபிக்க வேண்டும். இம்மாதிரியே, ஸித்தஸாத்யம் இரண்டு மடங்கு, ஸித்த ஸுஸித்தம் பாதி எண்ணிக்கை. ஸித்தாரி—வம்சநாசம். ஸாத்யஸித்தம்—இரண்டு மடங்கு, ஸாத்யஸாத்யம்—வ்யர்த்தம்.

ஸாத்ய ஸுஸித்தம்—உள்ள ஸங்கையை, ஸாத்யாரி-பந்துநாசம், ஸுஸித்தஸித்தம்-பாதி எண்ணிக்கை, ஸுஸித்தஸாத்யம்-விதிப்படி, ஸுஸித்த ஸுஸித்தம்-உடனே ஸித்தி, ஸுஸித்தாரி—அடிமை நாசம். அரிஸித்தம்-புத்ர நாசம், அரிஸித்தம்-கன்யாநாசம். அரிஸுஸித்தம்—குலநாசம். அர்யரி—தானே நாசமடைவான்.

நரஸிம்ஹமூர்த்தி, சூரியன், வராஹ மந்த்ரங்களுக்கும், ப்ராஸாதம் நவாவரண தேவீ மந்த்ரங்களுக்கும், ஸம்யுக்தாக்ஷரங்களுள்ள மந்த்ரங்களுக்கும் ஸித்தம் முதலிய கோஷ்டவிசாரம் வேண்டாம்.

போகிறபோக்கில் கேட்கும் மந்த்ரங்களும், மறைந்தோ, வஞ்சனையினாலோ கேட்கப்பட்ட மந்த்ரங்களும், புத்தகத்தில் பார்க்கப்பட்ட மந்த்ரங்களும் பலனளிக்க மாட்டாததுடன் மேலும் அனர்த்தத்தையுண்டாக்கும்.

வைதிகமந்த்ரம், நரஸிம்ஹமந்த்ரம், பஞ்சாக்ஷரம், அஷ்டாக்ஷரம் முதலிய குலமந்த்ரங்கள், ஸ்த்ரீகளால் உபதேசிக்கப்பட்ட மந்த்ரம், ஸ்வப்னத்தில் உபதேசிக்கப்படும் மந்த்ரம்—இவைகளுக்கும் இந்த ஸித்தாதி கோஷ்டம் பார்க்கவேண்டியதில்லையென்றும் சொல்லப்படுகிறது.

விவாஹம்:— திங்கள், புதன், வியாழன், வெள்ளி இந்தவாரங்களில்; பிரதமை, துவிதியை, திருதியை, பஞ்சமி, ஷஷ்டி, ஸப்தமி, அஷ்டமி நவமி, ஏகாதசி, துவாதசி, த்ரயோதசி என்கிற திதிகளில்; அசுவதி, ரோஹிணி, மிருகசிரிஷம், புனர்பூசம், பூசம், மகம், உத்தரம், ஹஸ்தம் சித்திரை, ஸ்வாதி, அனுஷம், மூலம், உத்தராடம், திருவோணம், அவிட்டம், சதயம், உத்தரட்டாதி, ரேவதி என்கிற நக்ஷத்ரங்களில்; 12 லக்நங்களிலும் விவாஹம் செய்ய உத்தமம். 7-ம் இடம் சுத்தமாயிருத்தல் வேண்டும். பெண்ணுக்கும் பொருந்தியிருக்கவேண்டும். மிருகசிரிஷம், மகம், ஸ்வாதி, அனுஷம் இந்த நான்கு நக்ஷத்ரத்தின் முகூர்த்தங்களுக்கு வர, லக்ந, நக்ஷத்ர தோஷங்கள் இடையாதென்பது சிலர் கருத்து. குரு, சுக்ரன் இவைகள் அஸ்தமனங்களில் கூடாது.

விவாஹத்திற்கு உரியவைகள்.

செவ்வாய் தோஷம்.

ஆண், பெண் ஜாதகங்களில் ஜன்மலக்நத்துக்கு 2, 4, 7, 8, 12—ஆமிடங்களில் செவ்வாய் வஸித்தால் செவ்வாய் தோஷம் உண்டென்றும், மே செவ்வாய் இருக்கும் இடம், மேஷம், விருஷபம், மிதுனம், கன்னி, துலாம், விருச்சிகம் மகரம் இந்த ராசிகளாகில் மே செவ்வாய் தோஷத்துக்குப் பரிகாரமென்றும், மே செவ்வாய் எந்த இடத்திலிருந்தாலும், சனியுடன் கூடினாலும் சனியால் பார்க்கப்பட்டாலும், ராகு கேதுவுடன் கூடினாலும் மே தோஷத்திற்கு பரிஹாரமென்றும் சிலர் அபிப்பிராயம்.

ஆண், பெண் ஜாதகங்களில் ஜன்மலக்நத்துக்காவது, சந்திர லக்நத்துக்காவது, சுக்கிரனிருக்கும் இடத்துக்காவது 1, 2, 4, 7, 8, 12—ஆமிடங்களில் செவ்வாய் வஸித்தால் செவ்வாய் தோஷம் உண்டென்றும் மே செவ்வாய் இருக்கும் இடம், மேஷம், கடகம், விருச்சிகம், மகரம் இந்த இராசிகளாகில் மே செவ்வாய் தோஷத்திற்குப் பரிஹாரம் என்றும், எந்த இடத்திலிருந்தாலும் செவ்வாய் குருவுடன் சேர்ந்தாலும், குருவினால் பார்க்கப்பட்டாலும் செவ்வாய் தோஷத்திற்குப் பரிஹாரமென்றும் சிலர் அபிப்பிராயம்.

ஆண், பெண் ஜாதகங்களில் ஜன்மலக்நத்துக்கு 2, 4, 7, 8, 12ல் செவ்வாய் வஸித்தால், செவ்வாய் தோஷம் என்றும், செவ்வாய் இருக்கும் இடம் மேஷம், சிம்மம், விருச்சிகம், தனுசு, மகரம், மீனம் இந்த இராசிகளாகில் மே செவ்வாய் தோஷத்திற்குப் பரிஹாரம் என்றும், மே செவ்வாய் எந்த இடத்திலிருந்தாலும் சனி, ராகு, கேதுக்களுடன் கூடினாலும், சனியால் பார்க்கப்பட்டாலும் மே தோஷத்திற்குப் பரிஹாரம் என்றும், மே செவ்வாய் தோஷம் செவ்வாய் தேசமாகிய இத்தென் இந்தியாவுக்கு இல்லை என்றும் சிலர் அபிப்பிராயம்.

ஆண், பெண் ஜாதகங்களில் ஜன்மலக்னத்துக்கு 2, 4, 7, 8, 12ல் செவ்வாய் இருப்பது செவ்வாய் தோஷமென்றும், இதற்குப் பரிஹாரமில்லை என்பதும் சிலர் கருத்து.

ஆண், பெண் ஜாதகங்களில் ஜன்ம லக்னத்துக்கும் சந்திரனுக்கும், சுக்கிரனுக்கும் 2, 4, 7, 8, 12 இவைகளில் செவ்வாய் இருந்தால் செவ்வாய் தோஷமென்றும். ஜன்மலக்னத்துக்கும், சந்திரனுக்கும், சுக்கிரனுக்கும் 6, 8, 12 இவைகளில் செவ்வாயிருந்தால் அந்தச் செவ்வாயின் தசாபுக்திகாலங்களில் தோஷமென்றும், லக்நத்துக்கும், சந்திரனுக்கும், சுக்கிரனுக்கும், 1, 2, 3, 7, 8, 12 இவைகளில் செவ்வாயிருந்தால் தோஷமென்றும், 4, 7 ஆமிடம் மேஷம், கடகம், விருச்சிகம், மகரமாக இருந்தால் தோஷமில்லை என்றும். 1, 2, 4, 8, 12 இவைகள் மேஷம், கடகம், துலாம், மகராசியாகில் தோஷமில்லை என்றும், லக்ன சந்திரர்களுக்கு 2, 4, 7, 8, 12 களிலிருக்கிற செவ்வாய் புதனுடனாவது குருவுடனாவது சேர்ந்திருந்தாலும், அல்லது புதனாலாவது, குருவினாலாவது பார்க்கப்பட்டாலும் செவ்வாய் தோஷம் கிடையாதென்றும் சிலர் அபிப்ராயம்.

இப்படி பலவிதமாக விருப்பதில் ஆண், பெண் ஜாதகங்களில் ஜன்மலக்னத்துக்கும், சந்திரனுக்கும், சுக்கிரனுக்கும், 1, 2, 3, 4, 6, 7, 8, 12, ஆமிடங்களில் செவ்வாயிருப்பது ஸுதோஷமென்றும், தோஷமிருந்து மேலெகண்டபடி பரிஹாரங்களிருந்தால் பரிஹ்ருத தோஷமென்றும். ஜன்மலக்நத்துக்கும். சந்திரனுக்கும், சுக்கிரனுக்கும் 5, 9, 10, 11 ஆமிடங்களில் செவ்வாயிருந்தால் சுத்தம் என்றும் கண்டுபிடித்து லக்னத் ஸுதோஷ ஜாதகங்களையுடைய ஆண், பெண்களையும், சந்திராத் ஸுதோஷ ஜாதகங்களையுடைய ஆண், பெண்களையும், சுக்ராத் ஸுதோஷஜாதகங்களையுடைய ஆண், பெண்களையும், லக்நாத் பரிஹ்ருத தோஷ ஜாதகங்களையுடைய ஆண், பெண்களையும், சந்திராத் பரிஹ்ருததோஷ ஜாதகங்களையுடைய ஆண் பெண்களையும், சுக்ராத் பரிஹ்ருத தோஷ ஜாதகங்களையுடைய ஆண் பெண்களையும், சுத்த ஜாதகங்களையுடைய ஆண், பெண்களையும் சேர்க்கலாமென்று நிர்மானிக்கவும். சிலர் இந்தச் செவ்வாய் தோஷத்தை ஆண்களுக்கு களத்ரதோஷமென்றும், பெண்களுக்கு பர்த்ரு தோஷமென்றும் சொல்லி, களத்ரதோஷமுள்ள ஆண்களுக்கு பர்த்ரு தோஷமுள்ள பெண்ணை விவாஹம் செய்யலா மென்றும் சொல்லுகிறார்கள். இதுவும் யுக்திக்குப் பொருந்தியதே.

பொருத்தங்கள்.

தினம், கணம், மாஹேந்த்ரம், ஸ்த்ரீதீர்க்கம், யோனி, ராசி, ராச்யதிபதி, வச்யம், ரஜ்ஜு, வேதை என்று பொருத்தங்கள் பத்து வகையாகும். சாந்த்ரமானரீதியை அனுஸரிப்பவர்கள் நாடி என்கிற பொருத்தத்தையும் கவனிக்கிறார்கள்.

பொருத்தங்களின் பலன்:— தினம்—லக்ஷ்மி, கணம்—ப்ரீதி, மாஹேந்த்ரம்—ஐச்வர்யம், ஸ்த்ரீதீர்க்கம்-ஸௌக்யம், யோனி—அநேக புத்ரர்கள், ராசி—குலவ்ருத்தி, ராச்யதிபதி—தான்யவ்ருத்தி, வச்யம்—வம்சவ்ருத்தி, ரஜ்ஜு—மாங்கல்யம், வேதை—புத்ர ஸம்பத்து என்றும், சிலர் தினம்—ஆயுள், மாஹேந்த்ரம்—புத்ர பௌத்ரலாபம் ஸ்த்ரீதீர்க்கம்— மங்களாவாப்தி, யோனி—ஸ்திர ஸம்பத்து, கணம்—ஒருவர்க்கொருவர் ரமணீயதை, மனோஹரதை—என்றும் பலம் சொல்லிருக்கள்-

தினம்:— ஸ்த்ரீ நக்ஷத்ர முதல் சிலரும், புருஷ நக்ஷத்ர முதல் சிலரும் எண்ணுகிறார்கள். எப்படி ஆசாரமோ அப்படியே பார்த்துக்கொள்ளவும்.

புருஷ நக்ஷத்ரம் முதல் பெண் நக்ஷத்ரம் வரை அல்லது பெண் நக்ஷத்ர முதல் புருஷ நக்ஷத்ரம் வரை எண்ணிய தொகை 2, 4, 6, 8, 9, 11, 12-ல் 2, 3, 4 பாதங்கள், 13, 14-ல் 1, 2, 3 பாதங்கள், 17, 18, 20 21, (88-வது) பாதமாயிராத 22, 23, 24, 25, 26 ஒரே ராசியாகவிருப்பதும் அல்லது அசுவதி ரேவதியாயிருக்கும் 27— இவைகள் பொருத்தமுள்ளவைகள். 1, 3, 5, 7, 10, 12 ல் 1-வது பாதம், 14-ல் 4-வது பாதம், 16-ல் 3-வது பாதம் 19, வதவைநாசிகமெனச் சொல்லப்படும் 88-வது பாதமுள்ள 22 அல்லது 23 பின்ன ராசிகளிலிருக்கும் 27— இவைகள் பொருத்தமில்லாதவை.

பரணி, திருவாதிரை, புனர்பூசம், பூசம், பூரம், மூலம், பூராடம் உத்தராடம்—இவைகள் பெண் நக்ஷத்ரமானால் 7-வது தாரை தோஷமில்லை.

ரோஹிணி—பூரட்டாதி, புனர்பூசம்—அசுவதி, பூசம்—பரணி, மகம்—ரோஹிணி, உத்தரம்—திருவாதிரை, ஹஸ்தம்—புனர்பூசம், சித்திரை—பூசம், அனுஷம்—பூரம், உத்தராடம்—ஸ்வாதி, பூரட்டாதி—மூலம், உத்தரட்டாதி—பூராடம், ரேவதி—உத்தராடம் இந்த நக்ஷத்ரங்களுக்கு வதவைநாசிகதோஷம் இல்லை.

கார்த்திகை—ஆயில்யம், ஆயில்யம்—ஸ்வாதி, சித்திரை—பூராடம், அனுஷம்—அவிட்டம், அவிட்டம்—பரணி, சதயம்—கார்த்திகை இவ்விரட்டைகள் சேர்க்கத் தகாதவை.

உத்தரம்—திருவாதிரை, உத்தரம்—அனுஷம், சித்திரை—பூசம் இந்த இரட்டைகளைச் சேர்ப்பது நலம். புனர்பூசம்—ஹஸ்தம் வம்ச விருத்தியையும், கேட்டை—சதயம் வம்சநாசத்தையும் அளிக்கும். உத்தரம்—மிருகசிரிஷம், ஹஸ்தம்—மூலம் இவை நிமையாகும்.

ஸ்த்ரீ புருஷ நக்ஷத்ரங்கள் ரோகிணி—மகம், பூரட்டாதி—ரோஹிணியானால் புத்ரபாக்யம். அசுவதி—புனர்பூசம், சுவாதி—உத்தராடமானால் பெண்கள் பிறக்கும். ரேவதி—திருவாதிரை, கேட்டை—உத்தரம் வைரத்தை உண்டாக்கும். விசாகம்—மகமானால் துஷ்புத்ரர்கள் உண்டாவார்கள். ஹஸ்தம்—திருவோணம் ஒருவர்க்கொருவர் வைரம். அசுவதி—திருவோணம் இருவரையும் பிரித்துவைக்கும். உத்தரட்டாதி—ம்ருகசிர்ஷம் ஸௌபாக்யக் குறைவு. உத்தராடம்—ரேவதி போகப்ராப்தி, பூரட்டாதி-பூராடம் ஒருவர்க்கொருவர் ப்ரீதி. பரணி-பூசம் ஸௌபாக்யம்.

ஸ்த்ரீ புருஷ நக்ஷத்ரங்கள் ஒன்றுக விருப்பதில் ரோஹிணி, திருவாதிரை, மகம், விசாகம், பூசம், திருவோணம், ரேவதி, உத்தரட்டாதி-இவ்வெட்டும் உத்தமம். அசுவதி, கார்த்திகை, மிருகசிர்ஷம், பூரம், உத்தரம். புனர்பூசம், பூராடம், உத்தராடம், அனுஷம், கேட்டை, ஹஸ்தம்-இவைகள் மத்யமம். பூரட்டாதி, ஆயில்யம், சித்திரை, அவிட்டம், சதயம், ஸ்வாதி, மூலம், பரணி-இவைகள் கூடாது.

ஸ்த்ரீ புருஷர்களின் நக்ஷத்ரம் ஒன்றுய் இரண்டுராசிகளிலிருந்தால் முன்பாகம் புருஷனுடையதாகவும், பின்பாகம் ஸ்த்ரீயினுடையதாகவுமிருக்க வேண்டும். மாறியிருந்தால் கெடுதல்.

ஸ்த்ரீ புருஷ நக்ஷத்ரங்கள் இரண்டும் ஒரு ராசியிலிருந்தால் முதல் நக்ஷத்ரம் புருஷனுடையதாயிருப்பது நலம். இரண்டு

நக்ஷத்ரங்களும் ஒரே ராசியானால் பரணி—கார்த்திகை, அவிட்டம்—சதயம் பூசம்—ஆயில்யம் கூடாதவை.

ஒரு ராசியில் சதயம், ஹஸ்தம், சுவாதி அசுவதி, கார்த்திகை, பூராடம், மிருகசிரிஷம், மகம்—இவைகள் ஸ்த்ரீ நக்ஷத்ரமாகவும், இதன் பிறகுள்ளவை புருஷ நக்ஷத்ரமாகவும் வந்தால் சுபம். ஒருபாதமுள்ள நக்ஷத்ரம் ஸ்த்ரீயினுடையதாகவும், மூன்று பாதங்களுள்ளவை புருஷனுடையதாகவுமிருக்க வேண்டும். பாதங்கள் சமங்களானால் முன்பாகம் புருஷனுடையதாயிருப்பது நலம்.

கணம்:— அசுவதி, மிருகசிரிஷம், புனர்பூசம், பூசம். ஹஸ்தம். ஸ்வாதி, அனுஷம். திருவோணம் ரேவதி தேவகணம். பரணி, ரோஹிணி, திருவாதிரை, பூரம். உத்தரம், பூராடம், உத்தராடம், பூரட்டாதி, உத்தரட்டாதி—மனுஷ்யகணம் கார்த்திகை, ஆயில்யம், மகம் சித்திரை விசாகம், கேட்டை, மூலம் அவிட்டம் சதயம்—ராக்ஷஸகணம். ஆண் பெண் நக்ஷத்ரங்கள் ஒரேகணமாகில் உத்தமம். தேவமனுஷ்யகணமானால் மத்யமம். தேவராக்ஷஸ கணமாயினும், மனுஷ்யராக்ஷஸகணமாயினும் அதமம். ஸ்த்ரீ ராக்ஷஸகணம கூடாது. புருஷ ராக்ஷஸம் செய்யலாம். ஸ்த்ரீ ராக்ஷஸகணமாயினும் 13 நக்ஷத்ரத்துக்கு மேற்பட்டால் தோஷமில்லையென சிலர் கருத்து.

மாஹேந்த்ரம்:— ஸ்த்ரீ நக்ஷத்ர முதல் புருஷ நக்ஷத்ரம் வரை எண்ணியதில் 4 7, 10, 13, 16, 19 22, 25—ஆனால் பொருத்தமுண்டு

ஸ்த்ரீ தீர்க்கம்:— ஸ்த்ரீ நக்ஷத்ரத்துக்கு புருஷ நக்ஷத்ரம் 13 நக்ஷத்ரத்துக்கு மேற்பட்டால் ஸ்த்ரீ தீர்க்கமுண்டு. 7 நக்ஷத்ரங்களுக்கு மேற்பட்டாலும் பொருத்தமுண்டு எனச் சிலர். 2, 5, 7 நக்ஷத்ரங்களாயிருந்தாலும் உண்டு என மிகச் சிலர்

யோநி:— அசுவதி—சதயம் குதிரை, பரணி—ரேவதியானை, கார்த்திகை—பூசம் ஆடு, ரோஹிணி—மிருகசிரிஷம் பாம்பு, திருவாதிரை—மூலம் நாய், புனர்பூசம்—ஆயில்யம் பூனை, மகம்—பூரம், எலி, உத்தரம்—உத்தரட்டாதி பசு, ஹஸ்தம்—ஸ்வாதி எருமை, சித்திரை—விசாகம் புலி, அனுஷம்—கேட்டை மான், பூராடம்—திருவோணம் குரங்கு, உத்தராடம்—கீரி, அவிட்டம்—பூரட்டாதி ஸிம்மம், ஆண் பெண் நக்ஷத்ரயோனி ஒன்றுக்கொன்று பகையில்லாம

லிருந்தால் பொருத்தமுண்டு. குதிரையும் எருமையும், யானையும் ஸிம்மமும், ஆடும் குரங்கும், பாம்பும் எலியும், பசுவும் புலியும், எலியும் பூனையும், கீரியும் பாம்பும், மானும் நாயும் பகையோனிகள்.

இப்பொருத்தம் தம்பதிகளுக்குப் பார்ப்பதுடன் யஜமானன் வேலைக்காரனிருவருக்கும் கூட பார்ப்பதுண்டு.

ராசி:— பெண்ராசிக்கு ஆண்ராசி ஆறுக்கு மேற்பட்டால் ராசிப்பொருத்தமுண்டு.

ராசியதிபதி:— பெண்ராசிக்குடையவனுக்கு ஆண்ராசிக்கதிபதி மித்ரனானால் பொருத்தமுண்டு. ஸமனானால் மத்யமம். சத்ருவானால் பொருத்தமில்லை.

வசியம்:— மேஷத்துக்கு ஸிம்மமும் வ்ருச்சிகமும், விருஷபத்துக்கு கடகமும், மிதுனத்துக்கு கன்னியும், கடகத்துக்கு தனுஸ்ஸும் விருச்சிகமும், ஸிம்மத்துக்கு துலாமும் மீனமும், கன்னிக்கு மிதுனமும் மீனமும், துலாத்துக்கு மகரமும் கன்னியும், விருச்சிகத்துக்கு கடகமும் கன்னியும், தனுஸ்ஸுக்கு மீனமும், மகரத்துக்கு மேஷமும் கும்பமும், கும்பத்துக்கு மேஷமும், மீனத்துக்கு மகரமும் மேஷமும் வசியமாம். பெண்ராசிக்கு ஆண்ராசி வசியமாகில் வசியப்பொருத்தமுண்டு.

ரஜ்ஜு:—அசுவதி மகம் மூலம் ஆரோஹபாத ரஜ்ஜு. ஆயில்யம் கேட்டை ரேவதி அவரோஹபாதரஜ்ஜு. பரணி பூரம் பூராடம் ஆரோஹகடிரஜ்ஜு. பூசம் அனுஷம் உத்தரட்டாதி அவரோஹகடிரஜ்ஜு. கார்த்திகை உத்தரம் உத்தராடம் ஆரோஹஉதரஜ்ஜு. புனர்பூசம் விசாகம் பூரட்டாதி அவரோஹஉதரஜ்ஜு. ரோஹிணி ஹஸ்தம் திருவோணம் ஆரோஹகண்டரஜ்ஜு. திருவாதிரை ஸ்வாதி சதயம் அவரோஹகண்டரஜ்ஜு. மிருகசிரிஷம் சித்திரை அவிட்டம் சிரோரஜ்ஜு. பெண் ஆண் நக்ஷத்ரங்கள் இரண்டும் ஆரோஹத்தில் அல்லது அவரோஹத்தில் ஒரே ரஜ்ஜுவாகில் ரஜ்ஜுப் பொருத்தமில்லை. ஒன்று ஆரோஹத்திலும், ஒன்று அவரோஹத்திலும் இருந்தாலும் வெவ்வேறு ரஜ்ஜுவானாலும் ரஜ்ஜுப் பொருத்தமுண்டு.

வேதை:— ஸ்த்ரீ புருஷ நக்ஷத்ரங்கள் அசுவதி—கேட்டை, பரணி—அனுஷம், கார்த்திகை—விசாகம், ரோஹிணி—ஸ்வாதி, மிருகசிரிஷம்—சித்திரை—அவிட்டம், திருவாதிரை—திருவோணம், புனர்பூசம்—உத்தராடம், பூசம்—பூராடம்; ஆயில்யம்-மூலம், மகம்—ரேவதி, பூரம்—உத்தரட்டாதி. உத்தரம்—பூரட்டாதி, ஹஸ்தம்—சதயம் இவைகள் ஒன்றுக்கொன்று வேதைகள். பெண் நக்ஷத்ரத்துக்கு ஆண் நக்ஷத்ரம் வேதையில்லாமலிருந்தால் வேதைப் பொருத்தமுண்டு.

இப்பொருத்தங்களில் தினம், கணம், யோநி, ராசி, ரஜ்ஜு—இவ்வைந்தும் முக்கியம், இவைகளில் பிராமணர்களுக்கு தினமும், க்ஷத்ரியர்களுக்கு கணமும், வைச்யர்களுக்கு ராசியும், சூத்ரர்களுக்கு யோநியும், எல்லோருக்கும் ரஜ்ஜுவும் முக்கியங்களாகும். ரஜ்ஜுப் பொருத்தமில்லாவிடில் ஒருவருமே செய்வதில்லை.

நாடி:— அசுவதி, திருவாதிரை, புனர்பூசம். உத்தரம், ஹஸ்தம், கேட்டை, சதயம், மூலம், பூரட்டாதி—தக்ஷிணபார்ச்வநாடி. பரணி, மிருகசிரிஷம், பூசம், பூரம், சித்திரை, அனுஷம், பூராடம், அவிட்டம், உத்தரட்டாதி—மத்யமநாடி. கார்த்திகை, ரோஹிணி, ஆயில்யம், மகம், ஸ்வாதி, விசாகம், உத்தராடம், திருவோணம், ரேவதி—வாமபார்ச்வநாடி. மத்யம நாடியில் ஆண் பெண்நக்ஷத்ரங்களிருந்தால் நாடிப் பொருத்தமில்லை.

பொருத்தங்களில் ஐந்துக்கு மேலிருந்தால் சுபம். ஐந்தும், ஐந்துக்குக் குறைந்தாலும், வழக்கமான சகுனம் பார்க்க வேண்டும்.

மூலம் 1-வது பாதப் பெண்ணை தகப்பனிருக்கிற பிள்ளையும், ஆயில்யம் 1-வது பாதப் பெண்ணை தாயார் இருக்கிற பிள்ளையும், கேட்டை 1-வது பாதப் பெண்ணை மூத்த தமையனிருக்கிற பிள்ளையும், விசாகம் 4-வது பாதப் பெண்ணை கடைசி தம்பியிருக்கிற பிள்ளையும் விவாஹம் செய்யக் கூடாது.

மிருகசிரிஷம், மகம், ஸ்வாதி, அனுஷம்—இவை ஆண் அல்லது பெண் நக்ஷத்ரமாயினும், ஆஹரியம், அபிகம்யம், காந்தர்வம், கர்பநிச்சிதம், ஸ்வயம்வரம், குரு தெய்வநியமனம்—ஆகிய கன்னிகாதானத்திலும் பொருத்தம் பார்க்கவேண்டியதில்லை.

பத்துவிதப் பொருத்தங்களையும் பார்ப்பதற்கு கணக்கிடாமல் உடனே ஒரேஸமயத்தில் பார்ப்பதற்கு இதில் இணைக்கப்பட்டிருக்கும் பொருத்த சக்ரிகையில் மிக எளிதாகக் காணலாம்.

ஜாதிப் பொருத்தம்:— ஆயில்யம், மகம், பூரம், உத்தரம், திருவாதிரை, பரணி, சித்திரை, சுவாதி, விசாகம், பூரடம் உத்தராடம் திருவோணம், அவிட்டம், கேட்டை-இவை ஸ்த்ரீஜாதிகள். மிருகசிரிஷம், சதயம், மூலம்—நபும்ஸகம். மற்றவை புருஷஜாதி. புருஷ நக்ஷத்ரம் புருஷஜாதியிலும். பெண்நக்ஷத்ரம் ஸ்த்ரீஜாதியிலும் இருந்தால் உத்தமம். இரண்டும் புருஷநக்ஷத்ரமாகவோ ஸ்த்ரீ நக்ஷத்ரமாகவோ இருந்தால் மத்யமம். மற்றவை அதமம்.

கோத்ரப் பொருத்தம்:— அசுவதி முதல் அபிஜித்துடன் சேர்ந்த 28 நக்ஷத்ரங்களில் ஒவ்வொரு நான்கு நக்ஷத்ரங்களும் முறையே மரீசி, வஸிஷ்டர், அங்கிரஸ், அத்ரி, புலஸ்த்யர், புலஹர், க்ரது—இவர்களின் கோத்ரமாகும். இவைகளில் ஒரே கோத்ரத்தில் ஆண் பெண் நக்ஷத்ரம் கூடாது. வெவ்வேறு கோத்ரம் உத்தமமாகும்.

ஆயுள் பொருத்தம்:— பெண் நக்ஷத்ரம் முதல் ஆண் நக்ஷத்ரம் வரை எண்ணிய தொகையையும், ஆண் நக்ஷத்ர முதல் பெண் நக்ஷத்ரம் வரை எண்ணிய தொகையையும் தனித்தனியாக ஏழால் பெருக்கி 27-ஆல் வகுத்த மீதம் பெண்ணினுடைய நாளினின்றும் எண்ணப்பட்ட தொகை குறைந்தால் ஆயுள்ப் பொருத்தமுண்டு.

நக்ஷத்ரப் பொருத்தம்:— பெண் நக்ஷத்ரம் முதல் எண்ணிய தொகையை ஆறில் கழித்து மீதம் 2, 4, 6, 8 உத்தமம். 1, 5, 9 மத்யமம் 3, 7 அதமம்.

பஞ்சபூதப் பொருத்தம்:— அசுவதி முதல் 5 நக்ஷத்ரங்கள் ப்ருதிவி. திருவாதிரை முதல் 6 நக்ஷத்ரங்கள் அப்பு. உத்தரமுதல் 6 நக்ஷத்ரங்கள் தேயு. கேட்டை முதல் 5 நக்ஷத்ரங்கள் வாயு. அவிட்டம் முதல் 5 நக்ஷத்ரங்கள் ஆகாசம். பெண்ணும் ஆணும் ஒரே பூதமானால் உத்தமம். அப்பும் தேயுமானால் அதமம். மற்றவை மத்யமம்.

பக்ஷிப் பொருத்தம்:— மயில் கோழிகளுக்கு வல்லூறும், ஆந்தையும்; காக்கைக்கு ஆந்தையும்; வல்லூறுக்கு ஆந்தையும், மயிலும் கோழியும் பகையாம். மற்றவை உறவு. பெண்ணுக்கும் ஆணுக்கும் பகையில்லாதிருந்தாலும், ஒரே பக்ஷியானலும் பொருத்தமாம்.

வர்ணப் பொருத்தம்:— பெண்ணும் ஆணும் சிவப்பானல் உத்தமம். இருவரும் மாநிறமானல் மத்யமம். ஒருவர் கறுப்பும் ஒருவர் சிகப்பும் மத்யமம். இருவரும் கறுப்பானல் அதமம்.

விருக்ஷப் பொருத்தம்:— ஆண் நக்ஷத்ரம் வயிரமரமும், பெண் நக்ஷத்ரம் பால்மரமுமாகில் மக்களுண்டு, பெண் வயிரமும் ஆண் பால்மரமுமானல் மக்களில்லை. இருவரும் வயிரமரமாகில் நிஷ்பலம். இருவரும் பால்மரமாகில் உத்தமம்.

விவாஹப்ரச்னம்:— ப்ரச்ன காலத்தில் உதிக்கும் லக்னத்துக்கு 3, 5, 7, 10, 11-ல் சந்த்ரன் இருப்பதை குரு பார்த்தால் அந்த ஸ்த்ரீ புருஷர்களுக்கு விவாஹம் நடக்கும்.

விவாஹத்துக்குப் பெண்கிடைக்குமா என்று ப்ரச்னம் செய்யும் சமயத்தில் விருஷபம், கடகம், துலாம் லக்னமாய் அதில் சுக்ரனும் சந்த்ரனும் இருந்தாலும் அல்லது பார்த்தாலும் பெண் கிடைக்கும்.

க்ருஷ்ணபக்ஷத்தில் ப்ரச்னம் செய்யும் லக்னத்துக்கு இரட்டையான ராசியில் சந்த்ரன் இருந்தாலும், அல்லது சந்த்ரன் 8-ல் இருப்பதை பாபிகள் பார்த்தாலும் விவாஹம் நடக்காது.

ஒரு விவாஹத்தை மனதில் நினைத்து ப்ரச்னம் செய்யும் லக்னத்துக்கு 5, 6, 8-ல் சந்த்ரனிருந்து அவ்விவாஹம் நடந்தால் 8-வருஷத்துக்குள் ஆபத்து நேரும்.

ப்ரச்னலக்னத்தில் செவ்வாயும், 7-ல் சுக்ரனுமிருந்து அவ்விவாஹம் நடந்தால் அப்பெண் கெட்டநடத்தையுடனிருப்பாள்; அல்லது குழந்தைகள் நசிக்கும்; அல்லது புருஷனுக்குக் கெடுதி. ப்ரச்ன லக்னத்தில் சந்த்ரனும், 7-ல் செவ்வாயுமிருந்தால் 8 வருஷங்களுக்குள் புருஷனுக்குக் கெடுதி. ப்ரச்னலக்னத்துக்கு 8-ல் பாபி நீசனுமிருப்பதை சத்ருக்கள் பார்த்தால் அப்பெண்ணுக்குப் பிறக்கும் குழந்தைகள் நசிக்கும். அல்லது கெட்ட நடத்தையுடனிருப்பாள்.

சுக்ரன் உதித்து 10 தினத்துக்குள் விவாஹம் நடந்தால் அப்பெண்ணுக்கு ஆகாது. சுக்ரன் அஸ்தமனத்துக்குமுன் 10 தினங்களில் நடந்தால் புருஷனுக்கு ஆகாது. குரு உதித்து 8 தினத்துக்குள் விவாஹம் நடந்தால் புருஷனுக்கும், அக்குரு அஸ்தமனத்துக்குமுன் 15 தினங்களில் நடந்தால் ஸ்த்ரீக்கும் ஆகாது.

விவாஹ லக்னத்தில்:— சூரியன், சந்த்ரன், செவ்வாய் இருந்தால் கெடுதி. புதன்—கீர்த்தி, குரு சுக்ரர்கள்—ஆயுர்விருத்தி, சனி—தாரித்ரியம், ராகு, கேது—புத்ரநாசம். **இரண்டாமிடத்தில்** பாபிகள்—துக்கம். சந்த்ரன்—ஸந்தானவ்ருத்தி. புதன் குரு—ஐச்வர்யம், சுக்ரன்— ஸௌபாக்யம். **மூன்றுமிடத்தில்** எந்தக்ரஹமிருந்தாலும் சுபம். **நான்காமிடத்தில்** சூர்யன் சந்த்ரன செவ்வாய் சனி ராகு கேதுக்களிருந்தால் நிமை. புதன் குரு சுக்ரர்களிருந்தால் நலம். **ஐந்தாமிடத்தில்:** சுபக்ரஹங்களிருக்க புத்ரப்ராப்தி. சூரியன் செவ்வாயிருக்க புத்ரநாசம், சனி ராகுவிருக்க ரோகப்ராப்தி, **ஆறுமிடத்தில்:** சந்த்ரன ராகுவிருக்க அதமம். புதனிருக்க அந்யோந்யம் ப்ரீதி. மற்ற க்ரஹங்களிருந்தால் புத்ரஸம்பத்து. **ஏழில்** ஒரு கிரஹமுமிருக்கக் கூடாது. **எட்டில்** சூரியன் சனி செவ்வாய் இருந்தால் சுபம். மற்றவர்களிருக்க அசுபம். **ஒன்பதில்:** செவ்வாய் சனி ராகுவிருந்தால் அசுபம். மற்றவர்களிருக்க சுபம். **பத்தாமிடத்தில்:** சூரியன், செவ்வாய், சனி ராகு அசுபம். மற்றவர்கள் சுபம். **பதினொன்றில்:** எந்தகிரகங்களிருந்தாலும் நன்மை. **பன்னிரண்டில்:** புதன் குரு சுக்ரன்—இவர்களிருக்க சுபம். மற்றவர்கள் அசுபம்.

ஆயுள், சுபம் முதலியவைகளைக் கொடுக்கக்கூடிய சில யோகங்கள் எழுதப்படுகின்றன.

(1.) விவாஹ லக்னத்தில் குரு, 6-ல் சூரியன் 8-ல் சுக்ரன் 10-ல் சந்த்ரன் இருப்பது. (2.) லக்னத்தில் குரு, 8-ல் சுக்ரன், 7 அல்லது 4-ல் சந்த்ரன், 6-ல் சூரியன், 3-ல் சனி செவ்வாய். (3) 3,

6, 10, 11-ல் பாபிகள் இருந்து, கேந்த்ரத்ரிகோணங்களில் சுப க்ரஹங்களும், 11-லோ உச்சத்திலோ சந்த்ரன். (4.) லக்னத்தில் குரு. 6-ல் பாபிகள். கேந்த்ரத்தில் புதசுக்ரர்கள். (5.) லக்னத் தில் புதன் குரு, 3 6, 10, 11 ல் பாபிகள், 2 ல் சந்த்ரன். (6.) லக்னத்தில் சுக்ரன், 10-ல் குரு. 11-ல் சூரியன். 5 ல் புதனிருப் பது விஷ்ணுப்ரியை யோகம். (7) லக்னத்தில் சுக்ரன், 4-ல் குரு, 2-ல் புதன். 11 ல் சனி ஸமுத்ரயோகம். (8) 3-ல் செவ்வாய் 6-ல் சனி. 9-ல் குரு 12 ல் சுக்ரன் மஹாவிஷ்ணுயோகம் (9) லக்னத்தில் சுக்ரனும் குருவும் பலவான்களாயிருப்பது ஸ்தாவரயோ கம். (10) புதன் சுக்ரன் பலவான்களாயிருப்பது ஜயயோகம். (11) லக்னத்தில் புதன் குரு சுக்ரர்கள் மூவரும் பலவான்களா யிருப்பது விஜயயோகம் (12) லக்னத்தில் குரு சுக்ரர்கள், சந்த் ரன் தன்விட்டில் தன் அம்சத்திலிருப்பது.

ஸ்த்ரீ புருஷர்களின் ஜன்மநக்ஷத்ரத்துக்கு 2, 4, 6, 8, 9-வது தினங்களில் விவாஹம் நடப்பது உத்தமம்.

விவாஹ சக்ரம்:— கிழக்கு மேற்காக நான்கு கோடுகளும் வடக்கு தெற்காக நான்கு கோடுகளும் கீற ஒன்பது அரைகள் ஏற்படும். மத்திய அரையில் மிருத நக்ஷத்திரங்களை வைத்து அவைகளுக்குமேல் கிழக்கு முதல் ஈசான்யம் வரையிலுமுள்ள 8 அரைகளிலும் பிரதக்ஷிணமாக மும்மூன்று நக்ஷத்திரங்களாக எண்ணிவர விவாஹ தின நக்ஷத் திரம் எத்திக்கிலிருக்கிறதோ அதற்கு பலன்:— **மத்தியம்** உப்ய குலநாசம். **கிழக்கு**-ஐசுவரியம், **அக்னி**—ஸ்த்ரீ குலநாசம்; **தெற்கு**—தரித்ரம், வைதவ்யம்; **நிருதி**—ஸர்வ ஸௌபாக்கியம். **மேற்கு**—வைதவ்யம், பங்கம்; **வாயு**—குல நாசம்; **வடக்கு** ஸர்வ ஸௌபாக்கியம், பஹுதனம், **ஈசான்யம்**—பார் வதிக்குச் சமம். (மிருத நக்ஷத்திரங்கள்—சூரியன் நின்றது, கிற்கி றது, கிற்கப்போகிற நக்ஷத்திரங்களுக்குப் பெயர்).

ஈசான் யம்	கிழக்கு	அக்னி
வடக்கு	மத்தி யம	தெற்கு
வாயு	மேற்கு	நிர்ருதி

பக்ஷம், ருது, அயனம் இவைகளின் சுக்லபக்ஷம், திக்தை, க்ருஷ்ணபக்ஷம். வ்யதீபாதம், ஷடசிதிமுகம், வர்ஷாந்தம், ப்ருஷ்

டோதயம், குருசேகாலம், உல்காபாதம், பூகம்பம், நிர்காதம், திக் தாஹம்—இந்த நக்ஷத்ரங்களிலும், ஜன்மநக்ஷத்ரத்திலும், 3, 5, 7, 10, 19 வது நக்ஷத்ரங்களிலும், பாபக்ரஹம் விட்ட நக்ஷத்ரங்களி லும், பாபக்ரஹம் ஸமீபத்தில் வரக்கூடிய நக்ஷத்ரங்களிலும், பாப க்ரஹமிருக்கும் நக்ஷத்ரங்களிலும் விவாஹம் செய்வது அதமம். சந்த்ரசூர்யக்ரஹணங்களிலும், தூமகேதுவின் நக்ஷத்ரத்திலும் கூடாது. ஜன்மமாதம், ஜன்மநக்ஷத்ரம் ஜன்மராசி—இவைகளில் முதலில் ஜனித்த புத்ரனுக்கும் புத்ரிக்கும்தான் விவாஹம் செய் வது கூடாது.

புதன் லக்னத்திலிருக்க நூறு தோஷங்களையும், சுக்ரனிருக்க ஆயிரம் தோஷங்களையும், குருவிருந்தால் மூன்று லக்ஷம் தோஷங் களையும் நீக்கும்.

நிருமங்கல்யத்துக்குப் பொன்னுருக்க:—திங்கள், புதன், வியா ழன், வெள்ளி—இந்த வாரங்களில்; துவிதியை, திருதியை, பஞ் சமி, ஷஷ்டி, ஸப்தமி, தசமி, ஏகாதசி, துவாதசி, த்ரயோதசி— இந்த திதிகளில்; அசுவதி, ரோகிணி, மிருகசிரிஷம், புனர்பூசம், பூசம், மகம், உத்தரம் ஹஸ்தம், ஸ்வாதி, அனுஷம், உத்தராடம், திருவோணம், அவிட்டம் சதயம், உத்தரட்டாதி, ரேவதி—இந்த நக்ஷத்ரங்களில்; ரிஷபம், மிதுனம், கடகம், கன்னி, துலாம், தனு ஸு, மீனம்—என்கிற லக்னங்களில் சுபம். அஷ்டமசுத்தி வேண் டும். ஸ்த்ரீ புருஷர்களுக்குப் பொருந்தியிருக்கவேண்டும்.

முகூர்த்தக்கால் நாட்ட:— விவாஹ தினத்துக்கு முன் 1, 3, 5, 7, 9 நாட்களில் ஸ்த்ரீ புருஷர்களுக்குப் பொருந்தின நக்ஷத்ரங் களில் சுபவாரங்களில் பஞ்சாங்க யோகம் நன்றாயிருக்க அக்னி பஞ்சகம் முதலியவை யில்லாமல் அஷ்டம சுத்தியுடன் மணக்கால் நாட்டுவது. அங்குரார்ப்பணம் செய்வது உத்தமம்.

வியாபாரம் செய்தல்:— திங்கள், புதன், வியாழன் என்கிற வாரங்களில்; துவிதியை, திருதியை, பஞ்சமி, ஷஷ்டி, ஸப்தமி, தசமி, ஏகாதசி, துவாதசி, த்ரயோதசி என்கிற திதிகளில்; அசு வதி, ரோகிணி, மிருகசிரிஷம், திருவாதிரை, புனர்பூசம், பூசம், உத் தரம், ஹஸ்தம், ஸ்வாதி, கேட்டை, உத்தராடம், திருவோணம், சதயம், உத்தரட்டாதி, ரேவதி என்கிற நக்ஷத்ரங்களில்; ரிஷபம்,

மிதுனம், ஸிம்மம், துலாம், விருச்சிதம், மீனம் என்கிற லக்நங்களில், புதுக்கணக்குப் பதியவும், ஸகல வியாபாரங்களும் செய்யவும் உத்தமம். 8-ம் இடம் சுத்தமாயிருக்கவேண்டும்.

க்ஷௌரம்:— இங்கள், புதன் என்கிற கிழமைகளில் எல்லோரும், ஞாயிற்றுக் கிழமையில் பிராமணர்களும், துவிதியை, திருதியை, பஞ்சமி, ஸப்தமி, தசமி, திரயோதசி என்கிற திதிகளில்; அசுவதி, மிருகசிரிஷம், புனர்பூசம், பூசம், ஹஸ்தம், சித்திரை, ஸ்வாதி, கேட்டை, திருவோணம், அவிட்டம் சதயம், ரேவதி என்கிற நக்ஷத்திரங்களில்; ரிஷபம், மிதுனம், கடகம், துலாம், மகரம் என்கிற லக்நங்களிலும் க்ஷௌரம் செய்து கொள்ளல் உத்தமம். பிறந்த நாள், விரத நாள, பகல் 12 மணிக்கு மேல், ராத்திரி, ச்ராத்த தினம், பிரயாண தினங்கள் கூடாது. போஜனம் செய்த பின் க்ஷௌரம் செய்து கொள்ளல் கூடாது.

எண்ணெய் இட்டுக்கொள்ளல்:— ஞாயிற்றுக் கிழமை—அழகு போகும் திங்கள்—பொருள் சேரும், செவ்வாய்—ஆபத்து நேரிடும். புதன்—நல்ல புத்தியுண்டாகும். வியாழன்—அறிவு நாசமாகும், வெள்ளி—பொருள் நஷ்டம், சனி—ஸம்பத்து உண்டாகும். ஸ்த்ரீகளுக்கு செவ்வாய் வெள்ளியும், புருஷர்களுக்கு புதன், சனியும் எண்ணெய் தேய்த்துக் கொள்ளல் உத்தமம்.

புது வஸ்திரம் தரிக்கல்:— ஞாயிறு, திங்கள், புதன், வியாழன், வெள்ளி என்கிற வாரங்களும், துவிதியை, திருதியை, பஞ்சமி, ஷஷ்டி ஸப்தமி, அஷ்டமி, தசமி, ஏகாதசி, துவாதசி, திரயோதசி, பௌர்ணமி என்கிற திதிகளும்; அசுவதி, ரோகிணி, புனர்பூசம், பூசம், உத்தரம் ஹஸ்தம், சித்திரை, ஸ்வாதி, விசாகம், அனுஷம், உத்தராடம் அவிட்டம், உத்தரட்டாதி, ரேவதி என்கிற நக்ஷத்திரங்களும்; ரிஷபம் மிதுனம், கடகம், கன்னி, துலாம், மகரம், கும்பம் என்கிற லக்நங்களும் புது வஸ்திரம் தரிக்க உத்தமம்.

உழவிற்கு:— சூர்யனிருக்கிற நக்ஷத்திரம் முதல் இஷ்டதின நக்ஷத்திரம் வரை எண்ணிய துகை 3, 4, 5, 9, 10 11, 12, 13, 17, 18 19 20 21, 25, 26-வது நக்ஷத்திரம் வரையில் உழவுக்கு சுபம். திங்கள், புதன், வியாழன், வெள்ளி என்கிற வாரங்களும்; சுக்லபக்ஷம் துவிதியை, திருதியை பஞ்சமி, ஸப்தமி, தசமி, ஏகாதசி, திரயோதசி என்கிற திதிகளும்; அசுவதி, ரோகிணி, மிருகசிரிஷம், புனர்பூசம், பூசம், மகம் உத்தரம், ஹஸ்தம், சித்திரை, ஸ்வாதி, விசாகம், அனுஷம், மூலம், உத்தராடம், திருவோணம், அவிட்டம், சதயம், உத்தரட்டாதி, ரேவதி, என்கிற நக்ஷத்திரங்களும்; ரிஷபம், மிதுனம், கடகம் துலாம், தனுசு, மகரம், மீனம் என்கிற லக்நங்களும் உழுவதற்கு உத்தமம். ஆகாச யோகினி, பாதாள யோகினி கூடாது.

க்ருஷிக்கு அவச்யமான மழைக் குறிகள் சிலவற்றைக் கீழே குறிப்பிடுகிறோம்.

ஆடித்நிக்குறி:— ஆடி மாதம் சுக்லபக்ஷ நவமி திதியும் ஸ்வாதி நக்ஷத்ரமும் கூடிய நாளில் மந்தாரம், மழை, காற்று, குமுறல் மின்னல் ஏதாவதுண்டானால் முன் மழையுண்டு. தசமியும் விசாகமும் கூடிய நாளில் ஏற்பட்டால் இடையில் மழையுண்டு. ஏகாதசியும் அனுஷமும் கூடிய நாளில் ஏற்பட்டால் பின் மழையுண்டு. க்ருஷ்ணபக்ஷ தசமி அல்லது ஏகாதசியுடன் ரோகிணி நக்ஷத்திரம் கூடியநாளில் ஏற்படின் நல்ல மழையுண்டு.

ஆடிமாத சுக்லபக்ஷ பஞ்சமி ஞாயிற்றுக் கிழமையில் வரின், சிறிது மழை, திங்கட் கிழமையில் வெள்ளம், செவ்வாயில் யுத்தம், புதனில் பெருங் காற்று, வியாழனில் நல்ல விளைவு, வெள்ளியில் பெருமழை, சனியில் குறைவான விளைச்சல்.

ஆவணி முழக்கம்:— ஆவணிமாதம் 6-ந் தேதி மேகம் கர்ஜிக்க மழையுண்டு. **சோதி மின்னல்:** ஐப்பசிமாதம் ஸ்வாதி நக்ஷத்ரத்தில் சூரியன் வரும் ஸமயம் கிழக்கே மின்னினால் மழையுண்டு.

மூன்றும் பிறை— பங்குனி சித்திரைகளில் தென்பக்கம் உயர்ந்தும், வைகாசி முதல் மார்கழி வரை வடபக்கம் உயர்ந்தும், தை, மாசிகளில் ஸமமாகவிருக்க ஸாபிக்ஷம். இல்லாவிடில் கலஹமும் பஞ்சமுமேற்படும். **வானில்:**— இந்த்ரதனுஸ் ஆனி, ஆடி, ஆவணி—இம்மாதங்களில் கிழக்கே உண்டானால் பஞ்சம்.

உத்தராடக்காற்று:— ஆடிமாதம் உத்தராட நக்ஷத்ரத்தின் உதயத்தில் மேற்காற்றடித்தால் பின்மழை, அக்னிமூலை, தெற்கு

காற்றடித்தால் கலகம், பஞ்சம். தென்மேற்குக் காற்றடிக்க கல்ல மழை. வடமேற்குக் காற்றடிக்க விட்டில் புழு உண்டாகும். வடகிழக்குக் காற்றடிக்க முன்மழை. அச்சமயம் பௌர்ணமியும் கூடி உதயத்தில் மந்தாரமாகவு மிருந்தால் கல்ல மழை.

தேதி மழை:— ஆனி 10, ஆடி 8, ஆவணி 6, புரட்டாசி 4, ஐப்பசி 2 கார்த்திகை 1—ஆகிய தேதிகளில் உதயத்தில் தூறினால் அவ்வருஷம் கல்ல மழை.

மழைக்குறி:— வைகாசி மாதம் க்ருஷ்ணபக்ஷ சதுர்தசியில் மழை பெய்தால் அவ்வருஷம் நல்ல மழை. சுக்ரனிருக்கும் இராசிக்கு 4, 8 ஸ்தானத்தில் சனிநின்றால் மழை. மத்தியில் பாபக்ரஹமிருந்தால் மழையில்லை. அதிக உஷ்ணம், இடி, காற்று, குளிர், மழைக்கால் மின்னல், மேகம், பரிவேஷம் வானவில்—இவைகள் மழைக்குறிகள்.

பரிவேஷக்குறி:— பரிவேஷம் என்பது சந்த்ரசூர்யர்களைச் சுற்றித் தோன்றும் வட்டம். ஆடிமாதம் பௌர்ணமியில் முதல் பத்து நாழிகையில் சந்த்ரனுக்கு பரிவேஷ மேற்படின் ஐப்பசிமாதத்தில் மழையுண்டு. அடுத்தபத்து நாழிகையில் ஏற்பட்டால் கார்த்திகையில் மழையுண்டு. மூன்றாவது பத்து நாழிகையில் ஏற்பட மார்கழியில் மழையுண்டு. இரவில் பரிவேஷமேற்பட்டால் இம்மூன்று மாதங்களிலும் மழை உண்டு. சந்த்ரன், குரு, சுக்ரன்—இவர்களுடன் பரிவேஷமேற்பட நல்ல மழை. செவ்வாய், சனிகளுடன் ஏற்பட்டால் மழையில்லை. கிரஹணகாலத்தில் ஏற்படின் இராஜாக்களுக்கு ஆகாது.

மகயோட்டம்: மாசி பௌர்ணமியில் சந்த்ரனும் மகநக்ஷத்ரமும் உச்சமாகும் போது சந்த்ரனுக்கு வடக்கில் ஒரு நக்ஷத்ரம் தள்ள கால்பங்கு தானிய நாசம். இரண்டு நக்ஷத்ரம் தள்ள அரைப்பங்கு நாசம். மூன்று நக்ஷத்ரம் தள்ள முக்கால்பங்கு நாசம். நான்கு தள்ள முழுவதும் கெடுதி. மேலே கண்டபடி தெற்கில் தள்ளினால் ஸௌக்யம்.

மேகோத்பத்தி:— மேகாதிபதி சூரியனுக்கு கிழக்கு, சந்த்ரனுக்கு தென்மேற்கு, செவ்வாய் தெற்கு, புதன் வடக்கு, குரு வடகிழக்கு, சுக்ரன் தென்கிழக்கு, சனி மேற்கு. இத்திசைகளில் மேகோத்பத்தியாகும்.

கர்ப்போட்டம்:— மார்கழி-மீ பூராட நக்ஷத்ரம் முதல் பாதத்தில் சூரியன் பிரவேசித்தது முதல் நக்ஷத்ரத்திலிருக்கும் வரையுள்ள தினங்களில் சூரியசந்த்ரர்களை மேகம் மறைப்பது. ஆகாசம் நிர்மலமாயும், அதிக மழைபெய்தும் இருக்கும் காலங்களைத் தெரிந்து மறு வருஷம் அக்காலங்களில் மழை இடையாதெனத் தெரிந்துகொள்ளலாம். ஆனிமாதத்துக்கு 1½ நாள். ஆடி முதல் கார்த்திகை வரை மாதம் ஒன்றுக்கு 2½ நாள். மார்கழிக்கு நாள் 1 ஆக 13½ நாட்கள்.

வருஷபல சக்கரம்

ஊர்த்துவம்.	அத்தரம்.	பூமி.	விதலம்.	சுதலம்.	தராதலம்.	ரஸாதலம்.
சனி. ஆதி வாயுகாடி.	சூரியன் வாயுகாடி.	குஜன் தகனகாடி.	புதஸௌம்யநாடி.	சுக்ரன் கிர்ஜலகா.	குரு ஜலகாடி.	சந்த்ரன் அமிர்தகா.
திருத்தி.	ரோஹி.	மிருக.	திருவா.	புனர்.	பூசம்.	ஆயில்.
விசாக.	சுவாதி.	சித்தி.	அஸ்த.	உத்தரம்.	பூரம்.	மகம்.
அனுஷ.	கேட்.	மூலம்.	பூராட.	உத்தரா.	அபிஜித்து திருவோ.	
பரணி.	அசுவ.	ரேவ.	உத்ரட்.	பூரட்டா	சதய.	அவிட்ட.
அதிக காற்று.	மழை காற்று.	ஜலக் குறைவு.	சுவல்ப மழை.	கண்ட மழை.	கல்ல மழை.	அதிக மழை.

மேற்கண்ட சக்கரத்தில் எழுதியிருக்கும் நக்ஷத்ரத்தில் சந்த்ரன் வரும்போது அங்காரகன் குரு சேர்ந்தாலும், எகாடியாலும் மழை முதலியவை உண்டாகும். சுக்ரனிருக்கும் ராசிக்கு 4,8-ம் ராசியில் சனி நிற்கில் மழை. மத்தியில் பாப க்ரஹங்கள் நிற்கில் மழையில்லை.

கலப்பைச் சக்ரம் (ஏர் பொருத்தம்):— ஆறு மூலையுள்ள கோடு கிறி ஆறு மூலைகளிலும் சூலமெழுத பதினெட்டு முனையாகிறது. சதுரத்தின் கிழக்கு மேற்கு நடுப்பக்கங்களிலும் ஐந்து வரை கிறிஞல் இருபத்தெட்டு முனையாகிறது. சக்ரத்தின் இடது பக்கத்தின் நடு முனைச் சூலத்தின் நடுவில் சூரியன் நின்ற நக்ஷத்ரத்தை வைத்து வலமாக அபிஜித்துடன் எண்ண சூரியன் நின்ற நக்ஷத்ரமும், அதற்கு முன்னும் பின்னுமுள்ளவை நீமை தரும். பின்னெட்டு நக்ஷத்ரமும் நன்மை தரும். அதன்பிறகு ஒன்பது நக்ஷத்ரங்களும் மத்யமம். மற்ற ஏழு நக்ஷத்ரங்களும் நன்மை.

இந்த்ரதனுஸ் (வானவில்):— முன் இரவில் இந்த்ரதனுஸ் தெரிந்தால் ஜனநாசம், பின்னிரவில் தான்யக்ஷயம். கடுஇரவில் ராஜபயம். இரவில் கிழக்கு மேற்கு—இரண்டிலும் தெரிந்தாலும் ஒரிடத்தில் தெரிந்தாலும் பூபதி நாசம். மழையில்லாத வேளையில் பகலில் கிழக்கே வில்லிட்டால் மழையுண்டு. மழைபிருக்கும் போது வில்லிட மழைவிடும். மேற்கில் எப்போது வில்லிட்டாலும் மழையை உண்டுபண்ணும். இரவில் கிழக்கே தெரிந்தால் பூநாசம், தெற்கே ஸேநாபதிக்கு ஆகாது. மேற்கே ராஜாவுக்கும், வடக்கே மந்த்ரிக்கும் தீது.

ஆவணிமாதப் பிறப்பில் தூரினுல் மழையில்லை. ஆடிமாதப் பிறப்பில் தூரினுல் மழையுண்டு. புரட்டாசிமாதப் பிறப்பில் தூரினுல் நல்ல மழை,

மிருகசிரிஷ மழை:— மிருகசிரிஷத்தில் சூரியன் வந்தகாளில் தூரினுல் அந்நக்ஷத்ரத்தில் இருக்குமளவும் மழை. அன்று முதல் ஐந்துகாளும் தூரினுல் ஆயில்யம் வரை மழை இருக்கும். மகத்தில் சூரியன் பிரவேசித்த காளில் ஆகாசம் அதிர்ந்தால் அது ஸிம்மமுழக்கம். அன்று முதல் ஐந்துகாட்களும் இடித்தால் சித்திரை வரை மழையிருக்கும். ஸ்வாதியில் பிரவேசித்த காளில் மின்ன அது சோதி மின்னலெனப்படும். அன்று முதல் ஐந்துகாட்களும் மின்னினுல் மூலம்வரை மழையிருக்கும்.

தெற்கில் புழுதியடைத்தாலும் மேற்கற்றடித்தாலும், வடக்கே மின்னினாலும் மேற்கில் வில்தோன்றினாலும் வானமதிர்ந்தாலும் தரையில் தவளை கத்தினாலும் மழை உண்டு.

புதசுக்ரஸமீபமானுல் அதிக மழை. கடுவில் சூர்யனிருக்க பானுமத்யமாகும். அர்சமயம் மழை இல்லை. கடவும் வற்றும். புதசுக்ரஸமீபம் அசுவதி முதலாக 3 3, 3, 7, 9, 2-ல் பலம். முதல் மூன்றில் அதிவிருஷ்டி. இரண்டாவது மூன்றில் அதிவிருஷ்டி. மூன்றாவது மூன்றில் ஸுவ்ருஷ்டி. மேல் ஏழுக்குள்ளானுல் அதிக வர்ஷம். மேல் ஒன்பதுக்குள்ளிருந்தால் மஹாக்ஷாமம், மழையில்லை. மேல் இரண்டில் ஸுபிக்ஷம். கிழக்கே மகபஞ்சகத்திலும், மேற்கே ஸ்வாதித்ரயத்திலும் பஹுவர்ஷம். ஆடிமாதம் பூர்வபக்ஷத்தில் ஸ்வாதியும் கவியும் கூடின காளில் மழை காற்றில்லா

விட்டால் அவ்வருஷத்தில் மழையில்லை. மேஷம் முதல் ஒற்றைப் பட்ட மாதப் பிறப்பில் தூரினுல் அம்மாதத்தில் மழையில்லை; விருஷபம் முதலான இரட்டித்த மாதப்பிறப்பில் தூரினுல் அம்மாதத்தில் மழையுண்டு.

வர்ஷப்ரச்னம்:— சந்த்ரன் ஸ்வக்ஷேத்ரத்திலோ ஜலராசியிலோ, தன் க்ஷேத்ரத்துக்கு கேந்த்ரங்களிலோ இருந்து சுபக்ரஹங்களினுல் பார்க்கப்பட்டால் பகுவ்ருஷ்டி. அசுபவிக்ஷிதனுல் வர்ஷாகாலத்திலும் அல்பவ்ருஷ்டி. சுக்ரன் வடக்கே யடைந்தால் உதயத்தில் மழை. தெற்கேயடைந்தால் அஸ்தமன காலத்திலும் மழையில்லை, ஆர்த்ராப்ரவேசம் பகலிலானுல் ஸஸ்யநாசம். ஸந்த்யையில் ஸஸ்யவ்ருத்தி, இரவில் ஸுபிக்ஷம். ஆர்த்ராப்ரவேச காலத்தில் மழை பெய்தாலும் தூரினுலும் ஆர்த்ரா பின்னமெனப் பெயர். அப்படியானுல் மழையும் அர்க்கமும் குறையும்.


பூமிப்பிரவேசம்:— நாளேர் அடிப்பதற்குமுன் பூமியில் ப்ரவேசம் செய்யவேண்டும். பரணி, திருவாதிரை, பூசம், மகம், உத்தரம், சித்திரை, ஸ்வாதி, அனுஷம், உத்தராடம், உத்தரட்டாதி—இந்நக்ஷத்ரங்களில் உத்தமம். நவமியைத் தவிர மற்ற ஒற்றைப்பட்ட திதிகள் உத்தமம். த்விதியை தசமி தவிர மற்ற இரட்டைப்பட்ட திதிகள் கூடாது. சிலர் பத்ரைகள் கூடாதென்கின்றனர். சந்த்ரன், செவ்வாய், புதன், வியாழன்—இவர்களின் வாரமும் பூமிப் பிரவேசத்துக்கு நலம். சனி வாரமும் நலமெனச் சிலர். விருஷபம், கன்னி, விருச்சிகம் இவ்விராசிகள் நலம்.

நாளேரடிக்க சுக்லபக்ஷம் நலம். கிருஷ்ணபக்ஷம் ஆகாது. கிழக்கு முகமாகவோ வடக்கு முகமாகவோ ஆரம்பிக்கவேண்டும். ஆரம்பிக்கும் காளில் ஒன்றே, இரண்டோ, ஐந்தோ சால்கள் தான் உழவேண்டும்.

கொம்பு குளம்புகள் முறிந்தவைகளும், வால் அறுபட்டவைகளும், கோரோசன நிறமுள்ளவைகளுமான மாடுகளை உபயோகப்படுத்தக் கூடாது. கருப்பு, செவ்வு நிறமுள்ள மாடுகளை உபயோகிக்கவேண்டும்.

உழவு சாலில் ஸர்ப்பத்தைக் கண்டால் அங்கிலம் பிறரைச் சேருமென்று சொல்லுவர்கள். ஆமையைக் கண்டால் ஆயிரம் பங்கு ஆதாயத்தைச் செய்யும்.

கலப்பை, மேழி, ஏர்க்கால், நோக்கால் இவைகள் சேர்ந்ததாக சக்ரம் எழுதி அதில் சூரியனிருக்கும் நக்ஷத்ரம் முதல் எழுத வேண்டும். ஏர்க்கால், கலப்பை, மாடுகள் நிற்கக் கூடிய இடம் இவைகளின் இரண்டு பக்கங்களிலும் மும்மூன்று நக்ஷத்ரங்களும், நோக்காலில் இரண்டு நக்ஷத்ரங்களும், ஏர்க்காலின் நடுவில் ஐந்து நக்ஷத்ரங்களும் எழுதவேண்டும். நாளேரடிக்கும் நக்ஷத்ரம் ஏர்க்காலிலிருந்தால் மாடுகளுக்கும், மாடுகள் நிற்கக் கூடிய இடத்திலிருந்தால் யஜமானனுக்கும் ஆகா. கலப்பை மேழிகளிலும் நோக்காலிலுமிருந்தால் லக்ஷ்மியுண்டாகும். அதாவது, சூரியனிருக்கும் நக்ஷத்ரத்துக்கு 7, 8, 9, 10. 11, 12, 19, 20, 26, 27-வது நக்ஷத்ரங்கள் நலம். 13 முதல் 18 வரையுள்ள நக்ஷத்ரங்கள் யஜமானனுக்கும், மற்றவை பசுக்களுக்கும் கெடுதல்.



மாடு, ஆடு முதலியவை வாங்க :— திங்கள், புதன், வியாழன், சனி வாரங்களும், த்விதியை, திருதியை, பஞ்சமி, ஷஷ்டி, ஸப்தமி, தசமி, ஏகாதசி, துவாதசி, திரயோதசி திதிகளும், அசுவதி, புனர்பூசம், ஹஸ்தம், சுவாதி, விசாகம், கேட்டை, அவிட்டம், சதயம், ரேவதி நக்ஷத்ரங்களும் மேஷம், மிதுனம், ஸிம்மம், கன்னி, விருச்சிகம், தனுஸு, மகரம், மீனம்—லக்னங்களும் உத்தமம். அசுவதி, உத்தரட்டாதியில் குதிரையும், பூராடம், உத்தராடம், சதயங்களில் யானையும், திருவாதிரையில் உழவு மாடும், ஹஸ்தம், சுவாதி, பூராடம், உத்தராடம், உத்தரட்டாதி—இவைகளில் பசுவும், கார்த்திகை, பூசத்தில் ஆடுகளும் வாங்க நலம்.

விதை விதைக்க:— திங்கள், புதன், வியாழன், வெள்ளி என்கிற வாரங்கள்; துவிதியை, திருதியை, பஞ்சமி, ஷஷ்டி, ஸப்தமி, அஷ்டமி, தசமி, ஏகாதசி, துவாதசி, திரயோதசி, பௌர்ணமி என்ற திதிகள்; ரோஹிணி, பூசம், மகம், உத்தரம், ஹஸ்தம், ஸ்வாதி, விசாகம், அனுஷம், மூலம், உத்தராடம், திருவோணம், சதயம், உத்தரட்டாதி, ரேவதி என்கிற நக்ஷத்ரங்கள், ரிஷபம், மிதுனம், கடகம், சிம்மம், துலாம், மகரம், கும்பம், மீனம் என்கிற லக்னங்கள் விதை விதைக்க உத்தமம். லக்னத்திற்கு 7-ம் இடத்தில் சுக்கிரன் இருக்கக்கூடாது. 8 ம் இடம் சுத்தமாயிருக்க வேண்டும். ஆகாச யோகினி பாதாள யோகினி கூடாது.

ராகுபணி சக்கரம்:— (விதை விதைக்க நாட்பொருத்தம் பார்க்குஞ் சக்கரம்:) சர்ப்பம்போல் ஒரு உருவம் வரைந்து தலையில் மூன்று, கழுத்தில் மூன்று, முதுகில் பன்னிரண்டு, வாலில் ஆறு, வயிற்றில் மூன்று—ஆக இருபத்தேழுகளையும் உருவத்தின் குறுக்கே கிறி தலையின் குறுக்கு வரையில் முதற் கோட்டின் சுக்கிரன் எந்த நக்ஷத்திரத்திலிருக்கின்றானோ, அந்த நக்ஷத்திரத்தை வைத்து நேரே எண்ணிவர, தலையிலுள்ள மூன்றும் பயிர் நீயும்; கழுத்து மூன்றும் நீர்ச்சாவி; முதுகு பன்னிரண்டும் பயிர்விருத்தி; வால் ஆறும் அற்பவிளைவு; வயிறு மூன்றும் பயிர்நாசம் என்பதாம்.

ராகுகின்ற காலை வயிற்றின் கடைசிக் கோட்டில் வைத்து இடது பக்கமாக எண்ணும்போது, நாலு ஐந்து ஆறு இந்த நட்சத்திரங்களில் கறுப்புத் தானியம் விதைக்க நல்லதென்றும், ஏழு முதல் பன்னிரண்டு வரையுள்ள ஆறு நட்சத்திரங்களிலும் நெற் பயிர்செய்ய உத்தமமென்றும், மற்றவைகள ஆகாதென்றுஞ் சொல்வாருமுளர்.

காலத்துக்குரிய விதை விதைத்தால் பலன் விசேஷமாக விருக்கும். அகாலத்தில் விதைக்க வீணாகும்.

பரணி, கார்த்திகை, மகம், பூரம், விசாகம், மூலம், பூராடம், பூரட்டாதி—இவைகளில் இழங்குகள் பாவவும், ம்ருகசிரிஷம், புனர்பூசம், ஹஸ்தம், சித்திரை, ஸ்வாதி, அனுஷம், கேட்

டை, ரேவதி—இவைகளில் பழக்கொடிகளும், பூச்செடி முதலிய வைகளும் வைக்க நலம்.

சிறுவழுதுணை, கண்டங்கத்திரி இவைகளுக்கு பரணியும், புரக்குகளுக்கு அசுவதியும், விருக்ஷங்களுக்கு ரோஹிணியும், கரும்பு களுக்கு புனர்பூசமும், பயறுகளுக்கு சித்திரையும் ஸஸ்யங்களுக்கு ஸ்வாதியும், எள்முதலியவைகளுக்கு அனுஷமும், திருதலை முதலிய கிழங்குகளுக்கு மூலமும், கறுத்த தான்யங்களுக்கு சதயமும், நெல்களுக்கு திருவோணமும் சுபம்.

மீனத்தின் ஐந்தாவது அம்சகமான லக்னத்தில் சுக்ரனிருக்க பூசணி விதைக்க காய் ஒவ்வொன்றும் பெரிதாகவும் ஏராளமாக வும் காய்க்கும்.

ஞாயிற்றுக்கிழமையில்:— சூரியன் லக்னத்திலிருக்கும்போது ஸஸ்ய விதைகளை விதைக்கவேண்டும். **திங்களில்** சந்திரன் லக்னத் திலிருக்க தண்ணீரில் உண்டாகக் கூடிய பூச்செடிகளை நட வேண்டும். **செவ்வாயில்** செவ்வாய் லக்னத்திலிருக்கும்போது வரகு விதைக்கவேண்டும். **புதனில்** புதன் லக்னத்திலிருக்க பசு களையும் பாக்கு முதலியவைகளையும், **வியாழனில்** குரு லக்னத் திலிருக்கும்போது கனிகளைக் கொடுக்கக் கூடிய நெடுங்காலம் நீடித்துநிற்கும் மரங்களையும், **வெள்ளியில்** லக்னத்தில் சுக்ரனிருக்கும் போது புஷ்ப மரங்களையும், **சனியில்** நடுப்பகலில் கறுத்த தான்யங் களையும் பயிர்செய்ய உத்தமம்.

பாபிகள் 3, 6, 11-ல் நலம். சந்திரன் 2, 3, 4, 5, 7, 10, 11 ல் சுபம். 8-ல் ஒருவரும் கூடாது. 7-ல் சுக்ரன் கூடாது. சுக்ரனிருக் கும் ராசிக்கு 2, 3, 6, 12 களில் விதைத்த கறுத்த பயிர்கள் விஷ மாகும். நெல் முதலியன விருத்தியைக் கொடுக்கும்.

ஞாயிறு:— ரோகிணி, ஸ்வாதி, சந்த்ரோதய லக்னத்தில், கோதுமை, துவரை, நெல், பயறு, கடலை விவசாயத்திற்கு உத்த மம். சித்திரையில் நெல் பயிர்செய்ய நலம். பூரட்டாதி ரேவதி, 4-பாதம் குரு உதய லக்னம்-கர்பி, தேயிலை, பயிர்களுக்கு உத்தமம். **திங்கள்:**— ஆயில்யம் ரேவதி 4-ம் பாதம் வாழைமரம் அசுவதி, ஆயில்யம், புனர்பூசம் சந்திரோதய லக்னத்

தில் கரும்பு, அவரையும்; மூலம் சந்திரோதய லக்னத்தில் வெற்றிலையும்; ரோகிணி, சந்திரோதய லக்னத்தில், பூசணிக்காய் முதலான பல பயிர்களும்; ரோகிணி, அசுவதி மருந்து மூலிகைச் செடிகளும் பயிரிட உத்தமம். **புதன்:**—அசுவதி, மகம் 4-ம் பாதம் சந்திரோதய லக்னம், புதன் உச்ச உதயாதிராசி—அம்சங்களில் பாக்கு மரமும்; அசுவதி, ரோகிணி ஸ்வாதி, சந்திரோதய சுக்கி ரோதய ரிஷபலக்னத்தில், தென்னை மரமும் பயிரிட உத்தமம். சுக்ரன் உச்ச உதயாதி லக்னங்களில் எல்லா விருக்ஷங்களுக்கும் உத்தமம். **வியாழன்:**—மூலம், குரு, உதய லக்னத்தில் கிழங்கு வகைகளுக்கும், பூரட்டாதி, ரேவதி- காப்பி, டீ, புகையிலைக்கும்; ரேவதி, உத்தரட்டாதி, பூசம் இவைகள் காய்களுக்கும் உத்தமம். **வெள்ளி:**— ரோகிணி, ரேவதி, பூரட்டாதி, சுக்ரோதய லக்னத்தில் எல்லா புஷ்பகிருஷிகளுக்கும் உத்தமம். **சனி:**— சதயம், ஆயில் யம், சந்திரோதய குரு உதய லக்னத்தில் எள், பருத்தி, ஜீரகம், கடுகு முதலான கருப்பு, சிகப்பு தானிய வகைகளுக்கும் புகையிலை, கரும்பு, வாழை, பாக்கு முதலிய மரங்களுக்கும் உத்தமம்.

கதிர் அறுக்க:— திங்கள், புதன், வியாழன், வெள்ளி என் கிற வாரங்கள்; துவிதியை, திருதியை பஞ்சமி, ஷஷ்டி, ஸப்தமி, தசமி, திரயோதசி, பௌர்ணமி என்கிற திதிகள்; பரணி, ரோ கிணி, மிருகசிரிஷம், திருவாதிரை, பூசம், மகம், உத்தரம், ஹஸ்தம், விசாகம், அனுஷம், உத்தராடம், திருவோணம், உத்தரட்டாதி, ரேவதி என்கிற நக்ஷத்திரங்கள்; ரிஷபம், மிதுனம், கடகம், கன்னி, துலாம், தனுசு, மீனம் என்கிற லக்னங்களும் கதிர் அறுக்க உத்த மம். சனி பலவானாக இருக்கவேண்டும். 4-ம் இடத்தில் குரு இருப்பது விசேஷம். ஜன்ம நக்ஷத்திரம் கூடாது. அனுஜன்ம திருஜன்மங்கள் பாதகமாகாது.

பரணியில் மீனத்திலும், திருவோணத்தில் விருச்சிகத்திலும், விசாகத்தில் கடகத்திலும் ஆரம்பித்தால் விருத்தியும், சத்ரு நாசமுமுண்டாகும். மேஷ கடகங்களில் இலையும், பூவும் கொய்வது நலம். மீனத்தில் பழம் பறிக்க ஆரம்பிக்கலாம். இரவில் ஒன் றும் ஆரம்பம் கூடாது. ஜன்ம நக்ஷத்ரத்திலும், 10, 19-வது நக்ஷத்ரங்களிலும் ஆரம்பிக்கக் கூடாது.

எல்லா பயிர் செய்கைகளுக்கும் திதிகளில் திரிதியை பஞ்சமி சப்தமி ஏகாதசி திரயோதசி உத்தமம். துவிதியை ஷஷ்டி மத்யமம். பிரதமை சதுர்த்தி அஷ்டமி நவமி துவாதசி பூர்ணை அமாவாசியை அதமம். கரணங்களில் பவம் கௌலவம் வனிஜை உத்தமம். பாலவம் தைதுலை கரஜை மத்யமம். சகுனி சதுஷ்பாதம் நாகவம் கிம்ஸ்துக்கினம் அதமம். இராசிகளில் மகரம் கடகம் சிம்மம் மகரம் மீனம் உத்தமம். மிதுனம் துலாம் கும்பம் மத்யமம். மேஷம் கன்னி விருச்சிகம் தனுசு அதமம். சுபவாரங்களிலே அஷ்டம சுத்தமான லக்னத்திலந்தந்த பயிர்களுக்குச் சொன்ன நாட்களில் பயிர் செய்வது உத்தமம்.

ஆதித்யவாரோதயத்தில் நெல் விதைக்கவும், சந்த்ரன் வாரோதயத்தில் நீர்பூச்செடிகளுண்டாக்கவும், செவ்வாய் வாரோதயத்தில் நந்தவனம் வைக்கவும், சனிவாரோதயத்தில் கருந்தானியங்கள் விதைக்கவும் உத்தமம்.

அசுவதியில் கமுகும் தென்னம்பிள்ளையும், பரணியில் கத்திரி முதலானவைகளும், கார்த்திகையில் பல விருக்ஷங்களும், ரோகிணியிற் கொடிவகைகளும், மிருகசிரிடத்தில் உயர்ந்த மரங்களும், திருவாதிரையில் நெல்லும், புனர்பூசத்தில் கரும்பும், தென்னம்பிள்ளையும்; பூசம், ஆயில்யம், மூலத்தில் வெற்றிலைக் கொடியும், மகத்தில் கமுகும் வாழையும், பூரத்தில் குருவேர், வெட்டிவேர், கிழங்கு வகைகளும், உத்தரத்தில் மாமரமும், ஹஸ்தத்தில் கோதுமையும் சித்திரையில் பயறும், சிறுதானியங்களும், விசாகத்தில் பூமரமும், அனுஷத்தில் பலாவும் நந்தவனமும், கேட்டையில் எள்ளும், பூரட்டாதியில் நீர்ப்பூ வகைகளும் உத்தராடத்தில் சோலையும், பூராடத்திற் கொடிகளும், திருவோணத்தில் கனிகொண்ட மரங்களும், சதயத்திற்குரிய வித்துகளும், அவிட்டம் சுவாதி உத்தரட்டாதி ரேவதியில் பலவகைப் பயிர்களும் உண்டாக்க நல்லமென்றும் சிலர் அபிப்ராயம்.

தான்யத்தை க்ரஹத்தில் கொண்டுவந்து சேர்க்க:— திங்கள் புதன், வெள்ளி, சனி என்கிற வாரங்களும், துவிதியை, திருதியை, பஞ்சமி, ஸப்தமி, தசமி, ஏகாதசி, திரயோதசி, பௌர்ணமி என்கிற திதிகளும்; அசுவதி, பரணி, ரோகிணி, மிருகசிரிஷம், திருவாதிரை புனர்பூசம், பூசம், மகம், உத்தரம், ஹஸ்தம், சுவாதி, அனுஷம், மூலம், பூராடம், உத்தராடம், திருவோணம், உத்தரட்டாதி, ரேவதி என்கிற நக்ஷத்திரங்களும், ரிஷபம், ஸிம்மம், விருச்சிகம், கும்பம் என்கிற லக்நங்களும் தான்யத்தை கிரஹம் கொண்டு வந்து சேர்க்க சிலாக்யம்.

லக்னத்திலும், 4, 5, 7, 9, 10-களிலும் சுபக்ரஹ மிருந்தால் சுபம். பாபிகள் 3, 6, 11-ல் இருக்க விருத்தியை அளிப்பர்கள். பாபக்ரஹம் இருக்கும், இருக்கப்போகும், இருந்த ராசியும் கூடாது. சுபக்ரஹத்தோடு கூடியிருக்கும் ராசி நலம்.

மேல் முகங்களாகிய நக்ஷத்ரங்களில் ஸ்திர அம்சங்களில் குரு, சனி இருக்கும்போதோ, அவ்வம்சங்களை அவர்கள் பார்க்கும் போதோ, தான்ய ஸங்க்ரஹம் செய்யவும்.

காற்புறத்திலும், நிலத்தின் தேவதைகளுக்கு தயிரை பலியாக இட்டு, தான் பேசாமல் தொடங்க வேண்டும். தான்யத்தை முதலில் கன்னிகை யெடுத்து கர்ப்பிணி கையில் கொடுக்க அதை கர்ப்பிணி வாங்கிவைக்க வேண்டும்.

ஸ்திர ராசியான லக்னத்தில் சனியும், ஏழில் வியாழனும் இருக்க தான்ய ஸங்க்ரஹம் செய்ய தான்யம் அதிகமாகும். மாசி மகத்திலும், பங்குனி உத்தரத்திலும், வ்ருஷபலக்னத்திலும் ஸங்க்ரஹம் செய்வது உத்தமம். இது **தான்யபர்வத** மென்னும் யோகமாகும். லக்னத்தில் சனியும், ஏழில் குருவும் ஐந்தில் சந்த்ரனும், இரண்டில் சூரியனுமிருக்க **தான்யமேரு** என்ற யோகமாகும். தைப்பூசமும் ஆவணித் திருவோணமும் **தான்யபர்வத** மென்ற யோகமாகும். பகல் மத்யத்தின் பிறகு, குளிகனுவது சனியாவது லக்னத்திலிருக்கும்போது தான்ய ஸங்க்ரஹமும் செய்வது உத்தமமாகும். ஸ்திர ராசியான லக்னத்தை சனிபார்க்கும் போது அல்லது 7-ல் குருவிருக்க உத்தமம். லக்னத்தில் குருவும், 12-ல் சந்த்ரனும், 6-ல் சூரியனுமிருக்க உத்தம யோகமாகும். 4-ல் சந்த்ரனும், 11-ல் சூரியனும், லக்னத்தில் குருவும், ஏழில் சனியுமிருக்க **தான்யார்ணவம்** என்னும் யோகமாகும். இதில் ஸங்க்ரஹம் செய்தால் சமுத்ரம்போல் பெருகும்.

சுபக்ஷேத்ரமும் சுபதிதியும் கூடின சனிக்கிழமையில் லக்னத்தில் குருவிருக்கும்போது செலவு செய்ய உத்தமம்.

கோச ஸங்க்ரஹம்:— ரிக்தைகள், பௌர்ணமி அமாவாஸ்யை, அஷ்டமி தவிர மற்ற திதிகள்; திருவாதிரை திருவோணம், பூசம், மிருகசிரிஷம், அனுஷம், சதயம், அவிட்டம், உத்தரம், உத்தராடம், உத்தரட்டாதி, ஹஸ்தம் இவைகள் சுபம். சகுனி முதலிய ஸ்திரகரணங்களும் விஷ்டிகரணமும் கூடாது. எல்லா நித்ய யோகங்களும், சுபக்ரஹங்களுடைய வாரம், அம்சம், க்ஷேத்ரம், வர்கம், உதயம் இவைகளும் சுபம். ஸ்திர ராசிகள் உத்தமம். 3, 6, 11-ல் பாபிகளும், கேந்த்ரத்ரிகோணங்களில் சுபர்களும் இருக்க ஸகல ஸம்பத்துக்களுமுண்டாகும். 8-ல் ஒரு க்ரஹமும் கூடாது. வர்கோத்தமத்தில் குருவும், கேந்த்ரத்தில் புதசுக்ரர்களும் இருக்கும்போது ஸ்வர்ண ஸங்க்ரஹம் செய்ய ஒன்று நூறாகும். தன் உச்ச அம்சமான லக்னத்தில் சந்த்ரனும் 7-ல் குருவும் இருக்க ஸங்க்ரஹம் செய்ய ஒன்று நூறாகும். ஸ்வர்ணம், தான்யம், ரத்னம் இவைகளை ஸங்க்ரஹிக்கும்போதுள்ள லக்னத்திலும், ஸம்பாதிக்கும் லக்னத்திலும் சனியிருக்க உத்தமம். குரு விருக்க விருத்தியாகும்.

லக்னத்தில் குருவும், 2-ல் சுக்ரனும், 11-ல் புதனும், 10-ல் சந்த்ரனுமிருக்க ஸங்க்ரஹம் செய்வது அழிவற்றதாயிருக்கும். வியாழக்கிழமையன்று 11-ல் சூரியனும், 6-ல் சனியும், லக்னத்தில் குருவுமிருக்க ப்ருத்யவர்க்கங்களையும், த்ரவ்யத்தையும் ஸங்க்ரஹிக்க ஒன்று பதினாயிரமாகும்.

லக்னத்தில் சுக்ரனும், 10-ல் குருவும், சந்த்ரனுமிருக்க ஸ்வர்ணம், இரும்பு, வெண்கலம் இவைகளை ஸங்க்ரஹிக்க ஒன்று நூறுகோடியாகும்.

தங்கம், வெள்ளி, செம்பு, பித்தளை, இரும்பு, முத்து, பவழம், வைடூர்யம், வைரம்—முதலியவைகளை கோச ஸங்க்ரஹத்துக்குரிய நக்ஷத்ரங்களில் ஸங்க்ரஹிப்பது செழிப்பை யளிக்கும்.

லக்னத்தில் குருவும், 12-ல் சந்த்ரனுமிருக்கும்போது கர்பூரம், அகில், சந்தனம், களபம் முதலிய வாஸனத்ரவ்யங்களையும் மாலைகளையும் ஸங்க்ரஹிப்பது அழிவில்லாததாயிருக்கும்.

உச்சத்திலோ, உச்சமாகிய லக்னத்திலோ புதனிருப்பதை சுபக்ரஹங்கள் பார்க்க புஸ்தகத்தையும் தஸ்தாவேஜ் முதலியவைகளையும் ஸங்க்ரஹம் செய்தால் ஒன்று பதினாயிரமாகும்.

சனிக்கிழமையில் ரோஹிணியில் சந்த்ரனும் லக்னத்தில் சுக்ரனுமிருக்க கும்பராசியை குரு பார்க்கும் போது வெள்ளியை ஸங்க்ரஹிப்பது ஒன்று நூறாகும். தன் உச்ச அம்சகமான லக்னத்தில் சுக்ரனும், 7-ல் குருவும், 5-ல் சூரியனும் இருக்கும்போது வெள்ளியை ஸங்க்ரஹிப்பது ஒன்று நூறாகும்.

நிலம் தனக்கும் பிறருக்கும் விவர்தத்திலிருக்குமானால் பரணி, திருவாதிரை, விசாகம், ஹஸ்தம் இவைகளின் 4-வது அம்சகத்தில் கடக ராசியில் அந்தர்நிலத்தில் நின்றும் சிறிது மண்ணை எடுத்து வந்தால் அந்த நிலம் தன் வசமாகும். எந்த ராசியிலும் லக்னத்தில் ஒரே அம்சகத்தில் சூரியனும் கேதுவுமிருக்கும் போது பூமியை ஸங்க்ரஹித்தால் அப்பூமி தன்னுடையதாகும்.

கிருஷ்ணபக்ஷத்தில் சதுர்த்தி, நவமி, சதுர்தசிகளில் செவ்வாய்க்கிழமையில் ஆயில்யத்தில் தனுர் லக்னத்தில் அரையில் வஸ்த்ரமன்னியில் ஸர்ப்பம்போல் நடந்து பூமியை ஸங்க்ரஹிக்க வேண்டும். அசுவதி, ரோகிணி, மிருகசிரிஷம், புனர்பூசம், பூசம், உத்தரம், உத்தராடம் உத்தரட்டாதி, ஹஸ்தம், ஸ்வாதி, அனுஷம், அவிட்டம், திருவோணம், சதயம்—இவைகள் பூமியை ஸங்க்ரஹிக்க உத்தமம். ரிக்தையும் விஷ்டியும் கூடா.

திங்கள், செவ்வாய், புதன், சனி—இவைகளில் வாராதிபன் லக்னத்திலிருக்கும்போது பூமி, பசு, எருமை முதலியவைகளை ஸங்க்ரஹம் செய்யவேண்டும். வியாழக்கிழமையில் பூசநக்ஷத்ரத்தில் மேஷ லக்னத்தில் ஆடுகளை ஸங்க்ரஹிக்க ஒன்று பலவாகும்.

கார்த்திகை, திருவாதிரை, ஆயில்யம், மகம், அனுஷம், சுவாதி—இவைகளில் வாங்கலாமே தவிர கொடுப்பது கூடாது. வாதாரணம், உக்ரம், தீக்ஷ்ணம்—இம்மூன்று விதநக்ஷத்ரங்களிலும், விசேஷமாக ஸ்வாதியிலும் கொடுத்ததும், வட்டிக்காகக் கொடுத்ததும் அடைக்கலமாகக் கொடுத்ததும் திரும்புவதில்லை.

கார்த்திகை, மூலம், ஹஸ்தம், அனுஷம், மகம், சதயம் இவை களிலும் ஜன்ம நக்ஷத்ரத்திலும் ஸ்வர்ணத்தைக் கொடுப்பவன் தரித்ரனுவான். வாங்குபவன் பூர்ணனுவான்.

அசுவதி, ரோகிணி, மிருகசிரிஷம், திருவாதிரை, புனர்பூசம், பூசம், மகம், பூரம், உத்தரம், ஹஸ்தம், விசாகம் கேட்டை, மூலம், உத்தராடம், சதயம், உத்தரட்டாதி-இவைகள் விலக்கு வாங்கவும் கொடுக்கவும் நலம். விருஷபம், மிதுனம், சிம்மம், துலாம். விருச்சிகம்—இவைகளும்; சதுர்த்தி, ஷஷ்டி, அஷ்டமி, நவமி, த்வாதசி, சதுர்தசி இவைகள் தவிர மற்றவைகளும் நலமாகும். அசுவதி, புனர்பூசம், பூசம் ஹஸ்தம், சுவாதி, விசாகம், கேட்டை அவிட்டம், ரேவதி—இவைகளில் பசுக்களை விலக்குக் கொடுத்தாலும் வாங்கினலும் பசுக்கள் செழிக்கும்.

தான்யம் செலவிட:— ஞாயிறு, செவ்வாய், வெள்ளி தவிர மற்ற வாரங்களும்; பிரதமை சதுர்த்தி, ஷஷ்டி, அஷ்டமி, நவமி, சதுர்தசி, அமாவாசை நீங்கலாக மற்ற திதிகளும்; அசுவதி, மிருக சிரிஷம் புனர்பூசம் பூசம் பூரம் உத்தரம் பூராடம், உத்தராடம் திருவோணம், அவிட்டம் பூரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி என் கிற நக்ஷத்திரங்களும்; ரிஷபம், மிம்மம், விருச்சிகம், கும்பம் என் கிற லக்னங்களும் தான்யம் செலவிட உத்தமம். வெள்ளிக் கிழமை ஆகாது. சனிக்கிழமை சுபம்.

புதிது சாப்பிட:— திங்கள், புதன், வியாழன், வெள்ளி என் கிற கிழமைகளும்; பிரதமை, துவிதியை, திருதியை, பஞ்சமி, ஸப் தமி, தசமி, திரயோதசி என்கிற திதிகளும்; அசுவதி, ரோகிணி, மிருகசிரிஷம், புனர்பூசம், பூசம், மகம், உத்தரம், ஹஸ்தம், சித்தி ரை, ஸ்வாதி, விசாகம், அனுஷம், மூலம், உத்தராடம், திருவோணம், அவிட்டம், சதயம், உத்தரட்டாதி, ரேவதி என்கிற நக்ஷத்திரங் களும்; ரிஷபம், மிதுனம், கடகம், ஸிம்மம், கன்னி, துலாம், தனுசு, மகரம், கும்பம் என்கிற லக்னங்களும் புதிது சாப்பிட உத்தமம். 9-ம் இடம் சுத்தமாயிருக்க வேண்டும்.

புஷ்பங்களை உபயோகிக்க மேஷமும், கனிகளை உபயோகிக்க மீனமும், இலைகளை உபயோகிக்க விருச்சிகமும் விசேஷம். லக்னத் துக்கு பத்தாமிடமும் சுத்தமாக விருக்கவேண்டுமெனச் சிலர்.

10-ல் இருக்கும் பலமுள்ள குரு புஜிக்கக் கூடிய சாமான் மட்டில் நூதனமானுல் சுபத்தை அளிப்பான். லக்னம் 8, 12—இவை களில் சந்த்ரனிருக்க புது உணவு செய்யக் கூடாது. பாபிகள் 3, 6, 11-ல் இருந்தால் சுபம்.

நகை தரிக்க:— திங்கள், புதன், வியாழன், வெள்ளி என்கிற கிழமைகளும்; பிரதமை, பஞ்சமி, ஷஷ்டி, தசமி, ஏகாதசி, பௌர் ணமி, அமாவாசை என்கிற திதிகளும்; அசுவதி, ரோகிணி, மிருக சிரிஷம், புனர்பூசம், பூசம், மகம், உத்தரம், ஹஸ்தம், சித்திரை, ஸ்வாதி, அனுஷம், உத்தராடம், திருவோணம், சதயம், உத்தரட் டாதி, ரேவதி என்கிற நக்ஷத்திரங்களும்; ரிஷபம், மிதுனம், கன்னி, தனுசு, மீனம் என்கிற லக்னங்களும் நகை தரிக்க உத்தமம். 8-ம் இடம் சுத்தமாயிருக்க வேண்டும்.

1, 4, 7, 10, ஆகிய கேந்த்ரத்திலும், 5, 9, ஆகிய திரிகோணத் திலும், சுபக்ரஹங்களும்; 3, 6, 11-ல் பாபக்ரஹங்களுமிருந்தால் சுபம். 8-ல் ஒருவரும் கூடாது. தன் உச்ச அம்சத்தில் குருவும், 4-ல் புதசுக்ரர்களுமிருக்கும்போது ஸ்வர்ணபரணத்தை அணிந் து கொள்ள ஒன்று நூறுகோடியாகும்.

ரோகிணியோடு கூடிய சனிக்கிழமையில் அம்ருதகடிகையில் (35-க்கு மேல் 39-வரை) ஸ்வர்ணபரணம் செய்து திரும்ப அதே சம யத்தில் அணிபவன் ஸர்வாபரணங்களாலங்கரிக்கப் பட்டவனுக வும், ஐச்வர்யத்தோடு கூடினவனுகவும், சுகியாகவும், அழியாத சொத்துக்கதிபதியுமாவான்.

உச்ச ராசி, மித்ரராசி, ஸ்வக்ஷேத்ரம், கேந்த்ரம், த்ரிகோணம் இவைகளில் சுக்ரனிருக்க வஸ்த்ரம், வாஹனம், ஆபரணம் இவை களை உபயோகித்தால் வ்ருத்தியாகும். லக்னத்தில் தன் உச்ச பாகத்தில் சந்த்ரனும், 7-ல் குருவுமிருந்தால் தனமும், பூஷண மும் பெருகும். சூரியன் மேஷத்தில் 10-வது பாகத்திலிருக்கும் போது தங்கத்தால் மோதிரம் செய்து ஆள்காட்டி விரலிலும், கட்டை விரலிலும் அணிந்து கொள்வது நலம்.

விருஷபத்தில் 3-வது பாகத்தில் சந்த்ரனிருக்கும்போது விருஷப லக்னத்திலும், கடகத்தில் ஐந்தாவது பாகத்தில் குரு

விருக்க கடக லக்னத்திலும் சிலவில் அலங்காரம் செய்துகொண்டால் அதற்கழிவில்லை.

குருவும் சுக்ரனும் மூலத்திரிகோண[1]த்திலிருக்கும் போது மாணிக்ய வைடூர்ய ரத்னங்களால் செய்யப்பட்ட ஆபரணங்களை அணிந்து கொள்ளவும்.

ப்ராணவாயு இடது மூக்கு வழியாக ஸஞ்சரிக்கும் ஸமயம் ஸர்வ மங்களகாரியங்களையும், புதிய பூஷண வஸ்த்ரங்களின் தாரணத்தையும் செய்ய வேண்டும். ரதம், வாத்யம், குடை, சாமரம், பாத்ரங்கள், ஆஸனம் இவைகளையும் வஸ்த்ரதாரணத்துக் குரிய நாளில் செய்ய நலம்.

பிரயாணத்திற்கு:— துவிதியை, திருதியை, பஞ்சமி, ஸப்தமி தசமி, ஏகாதசி, திரயோதசி என்கிற திதிகள்; அசுவதி, ரோஹிணி, மிருகசிரிவும், புனர்பூசம், பூசம், உத்தரம், ஹஸ்தம், சித்திரை, அனுஷம், மூலம், உத்தராடம் திருவோணம், அவிட்டம், சதயம், உத்தரட்டாதி, ரேவதி என்கிற நக்ஷத்திரங்கள்; விருஷபம், கடகம், சிம்மம், துலாம், தனுசு என்கிற லக்னங்கள்; பிரயாணம் செய்துவர உத்தமம். லக்னத்திற்கு ஐந்தாமிடம் சுத்தமாயிருக்கவேண்டும். பிரயாணம்செய்யும் திக்கில் சூலம் யோகினி கூடாது. இடது பக்கம் யோகினி கூடாதென்பதும் மீனம் சுபமென்பதும் சிலர் கருத்து.

கடகம், விருச்சிகம், மீனம்—இவைகளில் சூரியனிருக்கும் காலம் யாத்ரைக்கு உகந்ததல்ல. கடகம், மிம்மம் இவைகளின் மத்தியில் இருப்பிடத்தை விட்டு அகலக்கூடாது. யாத்ரை செய்தால் ரோகியாவதுடன் 7 வருஷம் சஞ்சலனுவான்.

செவ்வாய், புதன், சுக்ரன் வக்ரகதிகளாயிருக்கும்போதும் சூன்யத்தில் இருக்கும்போதும், யாத்திரை கூடாது.

[1] சூரியன் முதலிய ஏழு க்ரஹங்களுக்கும் முறையே மிம்மம், விருஷபம், மேஷம், கன்னி, தனுஸு, துலாம், கும்பம் இவ்வேழும் மூலத்ரிகோணங்களாகும்.

கார்த்திகையில் 13, பரணியில் 7, மகத்தில் 11, முப்பூரங்களில் 16, சுவாதி, ஆயில்யம், விசாகம், திருவாதிரை, கேட்டை, ஜன்ம நக்ஷத்ரம் இவைகளில் 14 நாழிகைகள் யாத்ரைக்கு ஆகாது.

வ்யதீபாதத்தில் பிரயாணம் செய்தால் தேஹநாசம். மாத்ப பிறப்பில் அலைச்சல். க்ரஹணகாலத்தில் பங்கம். எதிர்க்காற்றில் கஷ்டம். பரிவேஷத்தில் பிதாஹம். துர்தினத்தில் தைன்யம். விஷ்டிகரணத்தில் (மழையில்) திரும்புவது கடினம்.

ஜன்ம ராசியில் புறப்பட்டால் காரிய ஸித்தி. இரண்டில் பந்து சேர்க்கை. மூன்றில் வாஹனம். நான்கில் தடை. ஐந்தில் பல கஷ்டம். ஆறில் சத்ருநாசம். ஏழில் சரீரவாஹன பீடை. எட்டில் பந்துநாசம், மரணம். ஒன்பதில் வியாதியும் செலவும், பத்தில் துக்கமும், பதினொன்றில் தனதான்ய லாபமும் சரீர ஸௌக்யமும், பன்னிரண்டில் பொருள் நஷ்டமும் அபகீர்த்தியும் உண்டாகும்.

ஜன்ம லக்னத்தில் யாத்ரை செய்தால் ரோகம். ஐந்தில் புத்ர நாசம். ஏழில் முதலில் வருத்தம், பிறகு ஸௌக்யம். ஒன்பதில் வழியில் திரும்புவான். பத்தில் திரவ்யலாபம். மற்றவை ராசிகளில் போல் பார்த்துக் கொள்வது.

ஊர்த்வ முகராசியில் யாத்ரை செய்ய இஷ்டஸித்தி. திர்யங் முகத்தில் அபங்களம். அதோமுகத்தில் கஷ்டம். ப்ருஷ்டோதயங்களில் பயம். உபயோதயத்தில் சிர்கேடு. சிர்ஷோதயத்தில் ஸர்வகார்ய ஸித்தி.

மேஷத்தில் கிழக்கிலும், கடகத்தில் தெற்கிலும், மேற்கில் துலாத்திலும், வடக்கில் மகரத்திலும் பிரயாணம் செய்வது நலம்.

லக்னாதிபன் ராசி அவன் மித்ர ராசி உச்சராசி நலம்.

கிழக்கில் யானையிலும், தெற்கில் ரதத்திலும், மேற்கில் குதிரையிலும், வடக்கில் பல்லக்கு முதலியவைகளிலும் போவது நலம்.


புதன் குரு சுக்ரன் இவர்களுடன் சந்த்ரன் சேர்ந்திருக்கும் போது யாத்ரை செய்தால் ஸ்வஜன விரோதம். சந்த்ரன் ராகு

வுடன் சேரும்போது லக்ஷ்மீ நாசம் சூரியனுடன் சேரும்போது வியாதி. செவ்வாய் சனிகளுடன் சேர்ந்தபோது வருத்தம். சூரிய யனேடும் கேதுவுடனும் உல்கையுடனும் சேர ஸர்வநாசம்.

யாத்ராலக்னத்தில் குரு, சுக்ரன் இருப்பது நலம். யோகினி பின்புறமும், வலது புறமும் ஜயம். முன்புறமும் இடது புறமும் நீது.

யாத்ரை செய்யும் யாமாதிபதி எதத்திக்கில் இருக்கிறானே அத் திக்கில் யாத்ரை செய்ய சத்ருஜயம்.

சூரியன், செவ்வாய், குரு, புதன், சுக்ரன், சனி, சந்த்ரன், ராகு என்று இவ்வரிசையில் 8 கிரஹங்களும், மீனம் தொடங்கி அப்பிர தக்ஷிணமாக பகலில் 8 யாமங்களாகவும், இரவில் 8 யாமங்களாக வும் ஸஞ்சரிக்கிறார்கள். இவ்விடத்தில் யாமத்தை 3½ நாழிகை யாகக் கொள்ளவும். அந்தந்த வாரத்தின் அதிபன் முதல் யாமத் தில் மீனத்திலும், 2-வது யாமத்தில் கும்பத்திலும், 3-ம் யாமத்தில் மகரத்தைத் தாண்டி தனுஸிலும், 4-வதில் விருச்சிகத்திலும், 5-வது யாமத்தில் துலாத்தைத்தாண்டி கன்னியிலும், 6-ல் சிங்கத் திலும், 7-ல் கடகத்தைத் தாண்டி மிதுனத்திலும், 8-ல் விருஷபத் திலும் ஸஞ்சரிக்கிறான். ஒவ்வொரு திமையிலும் அந்தந்த வாரா திபன் மீனம் முதல் ஆரம்பித்து மற்றவர்கள் க்ரமமாக மேற் கூறிய வாறு ஸஞ்சரிக்கிறார்கள். மீனத்தை ஈசான்ய திக்காகக் கொண்டு திக்குகளை ஊஹித்துக் கொள்வது.



ஜன்ம நக்ஷத்ரம் முதல் மூன்று நக்ஷத்ரங்கள் முகம், பிறகு 4 நக்ஷத்ரங்கள் கண்கள். பிறகு 4 கழுத்து, மேல் 6 கைகள், மேல் 2 விலாப்பக்கம். மேல் 8 கால்கள்.

முகம் முதலிய அவயவங்களுக்குள்ள நக்ஷத்ரங்களுக்குள் செவ் வாய் இருக்கும் நக்ஷத்ரத்தில் புறப்பட்டால் அவ்வவயவத்துக்குக் கெடுதல் உண்டாகும்.

பூரம் பூராடம் பூரட்டாதி பரணி கேட்டை திருவாதிரை ஆயில் யம்—இவைகளில் பிரயாணம் செய்தால் ப்ராணபயம்.

திங்கள் சனியில் 8 நாழிகை, வியாழனில் 22 நாழிகை ஞாயிறு வெள்ளியில் 15 நாழிகை. செவ்வாய் புதனில் 12 நாழிகை தள்ள வேண்டும்

பூசத்தில் கிழக்கே செல்வதும், தெற்கே ஹஸ்தத்தில் செல் வதும் மேற்கே திருவோணமும், வடக்கே அவிட்டமும், அகவதி யும் உத்தமம். மிருகசீர்ஷம் கிழக்கிலும், சித்திரை தெற்கிலும், அனுஷம் மேற்கிலும், திருவோணம் வடக்கிலும் செல்ல மத்யமம். கர்த்தையில் கிழக்கிலும், பத்ரையில் தெற்கிலும், ஜயையில் மேற்கி லும், பூர்ணையில் வடக்கிலும், அமாவாஸ்யையிலும் ரிக்தையிலும் ஒரு திக்கிலும் யாத்ரை கூடாது.

யாத்ராலக்னத்தில் சூரியனிருக்க கிழக்கிலும்; 11, 12-ல் சுக்கி ரனிருக்க அக்னிமூலையிலும்; 8, 12-ல் சனியிருக்க தெற்கிலும்; 8, 9-ல் ராகுவிருக்க நிருருதியிலும்; 7-ல் செவ்வாயிருக்க மேற்கிலும், 6, 5-ல் சந்த்ரனிருக்க வாயுதிக்கிலும்; 4-ல் புதனிருக்க வடக்கிலும், 2-ல் குருவிருக்க ஈசான்யத்திலும் பிரயாணம் செய்வது கூடாது.

யாத்ரை செய்யும் திதி, வாரம், நக்ஷத்ரம் இவைகளைக் கூட்டி க்ரமமாக 2, 3, 4 களால் பெருக்கி அப்பெருக்கிய தொகைகளை க்ரம மாய் 6—8—6 களால் வகுக்கும்போது மீதமானால் யாத்ரை செய் யலாம்.

சூர்யனிருக்கும் நக்ஷத்ரம் முதல் அபிஜித்துடன் சந்த்ரன் கிற் கும் நக்ஷத்ரம் வரை எண்ணிய தொகையை ஏழால் வகுத்து மீதம் வரக்கூடியதில் 1, 4, 5 வந்து, அது யாத்ரை செய்யும் நக்ஷத்ரமா னால் மிகவும் லாபமுண்டாகும்.

திதி, வாரம், நக்ஷத்ரம், லக்னம்-இவைகளுடைய தொகையைக் கூட்டி 15 சேர்த்து 9-ஆல் வகுக்க மீதம் ஐந்து வந்தால் வியாதியும், 12 சேர்த்து 9 ஆல் வகுக்க மீதம் 5 வந்தால் அக்னிபாதையும், 10 சேர்த்து 9-ஆல் வகுக்க மீதம் 5 வந்தால் ராஜோபத்ரவமும், 8-சேர்த்து 9-ஆல் வகுக்க மீதம் 5 வந்தால் சோரபயமும், 4 சேர்த்து 9-ஆல் வகுக்க மீதம் 5 வந்தால் மரணமும் உண்டாகும். ஆகையால் ஐந்து தொகையையும் தனித்தனியாய்ச் சேர்த்து 9-ஆல் வகுக்க மீதம் 5 வரக்கூடாத தினத்தில் யாத்திரை நலம்.

யாத்ரையில் யோகங்கள்:—யாத்திரைக்குக் குணமுள்ள திதி, வாரம், நக்ஷத்ரம், வர்கம், அம்சம் முதலியவைகள் கிடைப்பதரிதாகையால் காரியத்தை ஸாதிக்கக் கூடிய சில யோகங்கள் குறிப்பிடப்படுகின்றன.

யாத்ரை துவங்குமுன் ப்ராம்மணர், தேவதை, ஜ்யோதிஷம் தெரிந்தவன், பந்துக்கள், குரு—இவர்களை யதாசக்தி உபசரித்து, சுபமான திதி வாரம் முதலியவைகளில் புறப்படவேண்டும். சூர்யமண்டல மத்தியில் சங்கசக்ரகதாபாணியான நாராயணனை வணங்கி, யாத்ரை தொடங்கினால் காரியஸித்தி ஏற்படும். ஸ்நானம் செய்து தூயவஸ்த்ரம் தரித்து சந்தனம் முதலான வாஸனத்ரவ்யங்களையும் ஸ்வீகரித்து நன்றாக அலங்கரித்துக் கொண்டு மனைவி முதலியவர்களிடம் அனுமதியுடன் பிரயாணம் செய்வது கார்ய ஸித்திக்கு உகந்தது. துக்கம், லோபம், கோபம், தன்நிந்தை—இவைகளுடன் பிரயாணம் கூடாது.

புறப்படும்போது மூக்கில் காற்று எப்பக்கத்திலிருந்து வருகிறதோ; அப்பக்கத்துக் காலை முதலில் வைத்து யாத்ரை ஆரம்பிக்க இஷ்டஸித்தியாகும். ப்ராணவாயு இடது மூக்கு வழியாய் வரும்போது கிழக்கு, வடக்கு திக்குக்களில் யாத்ரை கூடாது. வலது மூக்கில் வரும்போது தெற்கு மேற்குகளில் பிரயாணம் கூடாது. இடது மூக்கு வழியாய் ப்ராணவாயு ஸஞ்சரிக்கும்போது வெளியில் புறப்படுவதற்கும் வலது மூக்கின் வழியாய் ஸஞ்சரிக்கும் போது க்ருஹத்தில் ப்ரவேசிப்பதற்கும் சுபம்.

தூரதேச ப்ரயாணத்தில் சந்த்ரன் சுபனுயிருக்க இஷ்டகார்யஸித்தி. இரவும் பகலும் ஒரே அளவான நாழிகையுள்ள விஷுவ

புண்யதினத்தின் காலையில் யாத்ரை கூடாது. 3, 6, 9, 12-ல் சந்த்ரனும், கேந்த்ரத்தில் குருவுமிருக்க ப்ரயாணம் சுபம்.

அனுஷத்தில் புறப்பட்டு கேட்டை முழுதும் அடுத்த ஊரில் தங்கி, திரும்பவும் மூலத்தில் பிரயாணம் செய்வது உத்தமம். ஹஸ்தத்தில் தன் ஊரிலிருந்து புறப்பட்டு சித்திரை சுவாதிகளில் அடுத்த ஊரில் தாமதித்து விசாகத்தில் பிரயாணம் செய்தால் கார்யஸித்தி.

சந்த்ரன் லக்னத்திலும், குருவோ, சுக்ரனோ கேந்த்ரத்திலுமிருக்கும் ஸமயம் பிரயாணம் செய்வது ஐச்வர்யம், ஆரோக்யம், ஜயம் உண்டாகும். லக்னத்தில் குருவும், 6-ல் சந்த்ராம்சகமும் சந்த்ரன் 8-ல் இல்லாமலிருக்கும் போது யாத்ரை செய்ய சத்ருநாசம் இஷ்டஸித்தி. சந்த்ரன் 7-லும், புதன் சுக்ரன் 4-லும், இருக்கும் போது கவலையில்லாது யாத்ரை செய்யலாம். லக்னத்தில் சுக்ரனும் 2-ல் புதனும், 3-ல் சூரியனுமிருக்க யாத்ரை செய்வது கார்யஸித்தி அளிக்கும். 4-ல் இருக்கும் புதனும், 2, 7, த்ரிகோணங்களில் இருக்கும் குருவும் எல்லா தோஷங்களையும் போக்குவர்கள். ப்ரயாணலக்னத்தில் குரு ஒருவரிருக்க பாபிகள் 8-ல் இருக்கும் க்ரஹ தோஷத்தைக் கூட நீக்கி நல்ல பலனை யளிப்பர். புதன், குரு, சுக்ரன் இவர்களில் யாராவது ஒருவன் பல வானால கேந்த்ரத்ரிகோணங்களில் இருக்க இந்த யோகம் சுகத்தை அளிக்க வல்லது. லக்னம், 11, 2 இவற்றில் சுப க்ரஹங்களும், 10-ல் சூரியனும் இருக்கும்போது செய்யும் ப்ரயாணம் ஜயம் ஆரோக்யம், கார்யஸித்தியை அளிக்கும். லக்னத்தில் குருவும், 3, 6, 11-ல் பாபிகளும், 7-ல் சுக்ரனில்லாமலுமிருந்தால் அப்பிரயாணம் நினைத்த காரியங்களை ஸித்திக்கும்படி செய்யும். கேந்த்ரத்தில் ஒருவரு மில்லாமலிருக்க யாத்ரை கூடாது. அதில் சுபர்களும் அசுபர்களும் சேர்ந்திருக்க மத்யமம்.

கடகம், கன்னி, கும்பம் இவைகளில் சூரியனிருக்கும்போதும், புதன் வெள்ளிகளிலும், ப்ரதமையிலும், உத்தரம், உத்தராடம், உத்தரட்டாதிகளிலும், இடதுபுறமும் எதிர்ப்புறமும் சுக்ரனிருக்கும்போதும் ஸ்த்ரீகளின் பிரயாணம் கூடாது. மற்ற ஸமயங்களில்

புருஷர்களுக்குரிய காலத்தில் ப்ரயாணம் நலம். ஒரே க்ராமத்திலும், பட்டணத்திலும், விவாஹத்திலும், யாகத்திலும், துர்ப்பிக்ஷத்திலும் ராஜ்யக் குழப்பத்திலும் சுக்ரன் எதிரிலிருக்கும் தோஷம் கிடையாது. 24 குரோசத்திலும் ஒரு யோஜனை தூரத்திலும் யாத்திரை செய்ய சுக்ரன் எதிரிலும் இடதுபுறமுமிருக்கும் தோஷம் கிடையாது. சுக்ரன் எதிரிலிருந்தால் வெண்மையான குதிரை, வெண்மையான வஸ்த்ரம், நல்முத்து, வெள்ளி இவைகளை தானம் செய்து கவலை யன்னியில் யாத்ரை செய்யலாம்.

தைத்யமந்த்ரீ, திவாதர்ஷி, உசநா, பார்கவ:, ச்வேத:, மண்டலீ, காவ்ய:, ஸீதிமான், நைகம:—என்னும் சுக்ர நாமங்களை ஜபம் செய்து யாத்ரை செய்தால் சுக்ரதோஷம் உண்டாகாது.

பாலர்களையும் ரோகிகளையும், ரக்ஷிக்கப் போவதற்கும், ஸ்த்ரீ புருஷனின் வீட்டுக்குப் போவதற்கும், சுக்ரன் எதிரில் இருக்கும் முதலிய தோஷங்கள் கிடையா. ஸ்த்ரீகள், புருஷன் வீடு போகத்தக்க ஸகாயம் கிடைக்கும் ஸமயம் சுக்ரதோஷ மிருந்தாலும் அதை கவனிக்க வேண்டாம். ஆனால் வதூக்ரஹ ப்ரவேசத்துக்குப் பார்க்கவேண்டும்.

காச்யப, வஸிஷ்ட, பாரத்வாஜ, ஆத்ரேய, ஆங்கிரஸ, பார்கவ, வாத்ஸ்யாயன கோத்ரத்தில் ஜனித்தவர்களுக்கு சுக்ரன் எதிரிலுள்ள தோஷம் கிடையாதெனச் சொல்லுவர். மற்ற கோத்ரத்தில் பிறந்தவர்கள் பாரத்வாஜ காச்யப கோத்ரத்தில் ஜனித்த ப்ராம்மணரை பூர்ணகும்பத்துடன் முன்னதாக அனுப்பிப் பிறகு யாத்ரை செய்தாலும் தோஷம் கிடையாது.

சுக்ரன் தன் வீட்டிலோ உச்சராசியிலோ, மித்ரராசியிலோ இருக்க ஒரு தோஷமும் செய்யமாட்டான். தன் மனைவி கர்பவதியாயிருக்க 6, 8-வது மாதத்தில் ப்ரயாணம் செய்வது கூடாது. ஆஷாடமாதம் கூடாது.

கார்ய நிர்பந்தத்தால் குறிப்பிட்ட சுப காலத்தில் யாத்ரை செய்ய முடியவில்லையானால், எத்திக்கில் ப்ரயாணம் செய்ய வேண்டுமோ, அத்திக்கில் 100 வில்லடி தூரமோ, அதில் பாதியோ, அவ்வளவுக்கிடமில்லை யானால் 10 வில்லடி தூரம் ப்ரஸ்தானம் செய்து

அவ்விடத்தில் தனக்கு இஷ்டமான ஸாமான வைத்திருந்து ஏழுதினம் வரை யாத்ரை செய்யலாம். கார்யம் ஸித்தியாகும், ஏழுதினத்துக்குள் மழை, கடுங்காற்று முதலிய கெடுதல் ஸம்பவித்தால் மறுபடியும் வேறு நல்ல தினத்தில் ப்ரஸ்தானம் செய்ய வேண்டும். முதல் 3 நாள் பால் சேர்க்கக்கூடாது. எண்ணெய் தேய்த்துக்கொள்ளவும் கூடாது. ஐந்து தினம் வபனம் கூடாது. ஏழுதினம் ஸ்த்ரீ ஸங்கம்கூடாது. இரவில் ஸ்த்ரீ ஸங்கம் செய்து காலையில் ப்ரயாணம் செய்வது கூடாது.

சுப சகுனங்கள்

கன்னிகை, தயிர், புஷ்பம், பழங்கள், யானை, குதிரை, இரட்டைப்ராம்மணர்கள், ஒற்றை சூத்ரன், நீசன், எரிகிற அக்னி, பூர்ணகும்பம், விருஷபம், தாமரைப்பூ, சந்தனம், தான்யம், பொரி, அன்னம், ப்ரேதம், தாசி, முத்துமாலை, சாமரம், குடை, அக்ஷதை, எள்ளு, சலவை வேஷ்டி, குழந்தையுடன் யௌவன ஸ்த்ரீ, சுமங்கலி, கன்றுடன் பசு, சங்கு முதலிய வாத்ய சப்தங்கள், மாம்சம், நெய் பால் இவைகள் எதிரில் வரில் சுப சகுனம்.

கருடன், வலியன், காடை இடமானலும், காக்கை, மயில், செம்போத்து, கிளி, நாரை வலமானலும் சுபம்.

அசுப சகுனங்கள்.

மோர், எண்ணை, அவிழ்ந்த தலையன், சடையன், மூக்கரையன், குயவன், சிவந்த புஷ்பம், ஈரவேஷ்டி, உப்பு, பாம்பு, முயல், ஒற்றைப்பிராம்மணன், இரட்டை சூத்ரன், காலியான குடம் இவைகள் எதிரில் வரில் அசுப சகுனம்.

கருடன், வலியன், காடை வலமாதல், காக்கை, மயில், செம்போத்து, கிளி, நாரை இடமாதல் அசுப சகுனம்.

சுப சகுனமானல் எவ்வித காரியங்களும் சுபமாய் ஸித்திக்குமென்றறியவும்.

யாத்ரைக்கு தும்மல் நலமல்ல. பகலின் தும்மல் ரத்தக்காயம் ஏற்படும். எருமையின் தும்மல் மிகக் கெடுதி.

பிரயாண காலத்தில் அபசப்தத்தைக் கேட்டால் சற்று தாமதித்து 5, 6 ப்ராணயாமம் செய்து புறப்படலாம். இரண்டாவது தடவையும் அபசப்தம் கேட்டால் 16 தடவை ப்ராணயாமம் செய்து புறப்பட வேணும். மூன்றாவது தடவையும் கேட்டால் யாத்ரை கூடாது.

கிவந்த நிறமுள்ள நாய் இடது புறமாகப் போனால் தாமதத்தில் கார்யஸித்தி. வெண்மை நிற நாய் இடமாகப் போக சீக்ரத்தில் கார்ய ஸித்தி. கருப்பு நாய் இடமாகச் சென்றால் உடன் ஸித்தி. நீல நிறமான நாய் இடது பக்கமாகச் சென்றால் நிஜத்தது தடங்கலன்றியில் ஸித்திக்கும். யாத்ரை ஸமயத்தில் புல், கம்பு, கட்டை விறகு-இவைகளில் நாய் சீர் விட்டால் மானஹானி, பெரும்பயம்.

யாத்ரை செய்த மாதத்துக்கு 9-வது மாதத்திலும் 9-வது நாளிலும் திரும்பி வீட்டுக்குள் பிரவேசிக்கக் கூடாது.

திரும்பி வரும்போது க்ரஹத்தில் ப்ரவேசிக்கையில், லக்னம் மேஷமானால் மறுபடியும் யாத்ரை, வ்ருஷபம்-லம்பத்து. மிதுனம்-ஐச்வர்யம். கடகம்-கஷ்டம். ஸிம்மம் சுகி. கன்னி-ஸ்த்ரீசுகம். துலாம்-வியாதி. விருச்சிகம்-விபத்து. விருச்சிகத்தில் சுபர்களிருக்க-லாபம். தனுஸ்-தான்யலாபம். மகரம்-ஸர்வநாசம். கும்பம்-ஸ்ரீப்ராப்தி. மீனம்-ஸுகம்.

வெள்ளி, திங்கள், சதுர்தசி, பௌர்ணமி, அமாவாஸ்யை இத்திதிவாரங்களோடு கூடிய ரோஹிணி, உத்தரம், சித்திரை, உத்தராடம், திருவோணம், உத்தரட்டாதி. இந்த நக்ஷத்ரங்களில் யாத்ரையும், பசுத்தொழுவம் கட்டவும் கூடாது. ஜலயாத்ரைக்கும் மிழ் சொல்லியபடியே கவனிக்கவும்.

லக்னத்தில் சுக்ரன், 11-ல் சூரியன், 1-ல் சந்த்ரனிருக்க யாத்ரை செய்யும் அரசன் சத்ருக்களை ஜயிப்பான். மீனத்தில் சுக்ரனிருக்க மீனத்திலும், விருஷபத்தில் சந்த்ரனிருக்க கடகத்திலும், யாத்ரை செய்தால் சத்ருஜயம் ஏற்படும். தன் உச்சமாகிய லக்னத்தில் குருவும், 11-ல் சந்த்ரனுமிருக்க பிரயாணம் செய்ய சத்ரு ஜயமேற்படும். சுபக்ரஹம் கேந்த்ரத்ரிகோணங்களிலும், சூரியன்

வேளை அறியும் விதம்

ஜ.கிழமைகள்	1	2	3	4	5	6	7	8	9	10	11	12	13	14	15	16
ஞாயிறு	தா	ஸ	ரா	தா	ஸ	ரா	தா	ஸ	ரா	தா	ஸ	ரா	தா	ஸ	ரா	தி
திங்கள்	ஸ	ரா	தா	ஸ	ரா	தா	ஸ	ரா	தா	ஸ	ரா	தா	ஸ	ரா	தா	ஸ
செவ்வாய்	ரா	தா	ஸ	ரா	தா	ஸ	ரா	தா	ஸ	ரா	தா	ஸ	ரா	தா	ஸ	ரா
புதன்	தா	ஸ	ரா	தா	ஸ	ரா	தா	ஸ	ரா	தா	ஸ	ரா	தா	ஸ	ரா	தா
வியாழன்	ஸ	ரா	தா	ஸ	ரா	தா	ஸ	ரா	தா	ஸ	ரா	தா	ஸ	ரா	தா	ஸ
வெள்ளி	ரா	தா	ஸ	ரா	தா	ஸ	ரா	தா	ஸ	ரா	தா	ஸ	ரா	தா	ஸ	ரா
சனி	தா	ஸ	ரா	தா	ஸ	ரா	தா	ஸ	ரா	தா	ஸ	ரா	தா	ஸ	ரா	...

ராசியே முதல் வெள்ளி வரை வேளை 1-க்கு 3½ நாழிகைகள் வீதம் 16 வேளை. சனியில் வேளை 1-க்கு 4 நாழிகைகள் வீதம் 15 வேளையாகப் பார்க்கவும்.

ஸ = ஸாத்விக வேளை. ரா = ராஜஸ வேளை. தா = தாமஸ வேளை.

விவரம் 28-ம் பக்கம் பார்க்கவும்.

அல்லது சந்த்ரன் 11 ல் இருக்கும் போது யாத்ரை புரிவதும் சத்ருவைத் தொலைக்கும். சுக்ரன் ஒருவன் லக்னத்தில் வர்கோத்தமத்தில் இருக்க பிரயாணம் செய்வது சத்ருவைப் போக்கும். சுபக்ரஹம் கேந்த்ர த்ரிகோணங்களில் வர்கோத்தமத்தில் இருக்க பிரயாணம் செய்வது சத்ருக்களை நாசம் செய்யும்.

ரோகாரம்பம்.

ஜ்வரம் அச்வதியில் ஆரம்பித்தால் 9 நாட்களிலும், பரணியில் 5 நாட்களிலும், கார்த்திகையில் 7 நாட்களிலும், ரோஹிணியில் 21 தினங்களிலும், மிருகசீர்ஷத்தில் 5 அல்லது 9 தினங்களிலும், பூரத்தில் 21 இரவிலும், உத்தரத்தில் 9 இரவுகளிலும், ஹஸ்தத்தில் 7 இரவுகளிலும், சித்தினியில் 8 ராத்ரிகளில் அல்லது மறு சித்திரையிலும், சுவாதியில் 10 ராத்ரிகளிலும் அல்லது 3 பக்ஷங்களிலும், விசாகத்தில் 25 தினங்களிலும், அனுஷத்தில் 10 தினங்களிலும், கேட்டையில் 12 பகல்களிலும் மூலத்தில் 10 இரவுகளிலும், பூராடத்தில் 8 இரவுகளிலும், உத்தராடத்தில் 1 மாதத்திலும், திருவோணத்தில் 8 இரவுகளிலும், அவிட்டத்தில் 10 இரவுகளிலும் உத்தரட்டாதியில் 1 பக்ஷத்திலும், ரேவதியில் 8 பகல்களிலும் சமனமாகும். திருவாதிரையில் தொடங்கினால் 5 தினங்களிலும், அல்லது 3 பக்ஷங்களிலும் புனர்பூசத்தில் 7 இரவுகளிலும், பூசத்தில் 8 தினங்களிலும், ஆயில்யத்தில் 8 தினங்கள் அல்லது நீடித்த காலத்திலும் மகத்தில் 7 இரவுகள் அல்லது மறு மகத்திலும், சதயம் பூரட்டாதிகளில் 6 அல்லது 12 பகல்களிலும் பிராணபயம் ஏற்படலாம்.

ஞாயிறு, செவ்வாய், சனி, சதுர்த்தி, நவமி சதுர்தசி இத்திதி வாரங்களோடு கூடிய திருவாதிரை ஆயில்யம், மகம், சுவாதி, கேட்டை பரணி, பூரம், பூராடம் பூரட்டாதி இந் நக்ஷத்ரங்களிலும் சதுர்த்தி, நவமி, சதுர்தசி, ஷஷ்டி, அஷ்டமி, துவாதசி, அமாவாஸ்யை இவைகளிலும், சகுனி முதலிய ஸ்திர கரணங்களிலும், விஷ்டி கரணத்திலும் வியாதி தொடங்கினால் நீங்குவது மிக சிரமம்.

ஜன்ம நக்ஷத்ரத்திலும், அதற்கு 19, 7, 5, 3, 10-வது தினங்களில் வியாதி உண்டானால் வருத்தமும் சிரமமுமேற்படும்.

வியாதியால் க்ஷீணித்தவர்களுக்கு சந்த்ராஷ்டமத்திலும், தக்த யோகத்திலும், 22-வது நக்ஷத்ரத்தில் 88-வது பாதத்திலும், அசுபவாரத்திலும், அசுபகோசரத்திலும் விஷ நாடியிலும், ஸந்திகளிலும் மரண தசையுடன் கூடிய அசுப யோகத்திலும் மரணம் ஸம்பவிக்கலாம்.

நீடித்த வியாதிகளுக்கு உக்ரயோகத்தில் வைத்யம் செய்வது நலம்.

உக்ரயோகம்:–ரோகிணியுடன் கூடிய த்ருதியை அஷ்டமி. உத்தரத்துடன் சதுர்த்தி. திருவோணம் பஞ்சமி, மிருகசிரிஷம் ஷஷ்டி, ரேவதி ஸப்தமி, கார்த்திகை நவமி, பூசம்–தசமி, திருதியை த்வாதசியுடன் அனுஷம். கார்த்திகை மகம் கூடிய பஞ்சமி, தசமி, ரோகிணி, உத்தரம் த்ரயோதசி–இவைகள் உக்ர யோகங்களாகும்.

க்ஷிப்ரம், உக்ரம், சரம்—இந்த நக்ஷத்ரங்களுடன் கூடிய அமாவாஸ்யையில் பிரதானஸ்தலத்தில் உண்டான வியாதிக்கு வைத்யம் செய்யலாம். திருவோணம், ஆயில்யம், அசுவதி ; திருதியை, அஷ்டமி திரயோதசி இந் நக்ஷத்ரதிதிகளுடன் கூடிய வியாழனில் **ஜ்வரத்துக்கு** வைத்யம் செய்யலாம். பிரதமை, ஷஷ்டி, ஏகாதசி, சுவாதி, மூலம், பூசம் இந்த நக்ஷத்ரங்களுடன் கூடிய வியாழனன்று சராசியான லக்னத்தில் **பித்தஜ்வரத்துக்கும்** ; பரணி, கார்த்திகை, திருவாதிரைகளுடன் கூடிய செவ்வாயன்று சரலக்னத்தில் **வாத ச்லேஷ்ம** ரோகங்களுக்கும், சதுர்த்தி நவமி, சதுர்தசி, சரம். உக்ரம் இத்திதி நக்ஷத்ரங்களுடன் கூடிய புதனில் 18 வித **ப்ரமேஹங்களுக்** கும், பாபிகளின் வாரம், நக்ஷத்ரம், திதி அம்சம், இவைகளில் பாபராசியான லக்னத்தில், பாபிகள் 8-ல் இருக்க **குஷ்டரோகங்** களுக்கும், ஆயில்யம் திருவாதிரை, அனுஷம், மிருகசிரிஷம், விசாகம், கார்த்திகை பரணி கூடிய செவ்வாயில் **மூலரோகம்** முதலிய வைகளுக்கும் வக்ரக்ரஹத்தால் பார்க்கப்பட்ட ஸாதாரணமென்ற நக்ஷத்ரம், விஷ்டி கரணத்துடன் சோர திதியுடன் கூடியிருக்கும் போது **சூலத்துக்கும்** வைத்யம் செய்வது நன்மை பயக்கும்.

குஷ்டம், க்ஷயம், குல்மம், அபஸ்மாரம் இவ் வியாதிகளுக்கு உபயராசியில் வைத்யம் செய்வது நலம். சரராசியில் சூர்யசந்த்ரர் களிருக்க மிகவும் நலம். ஸ்திரராசி கூடாது.

1. வியாதி ஏற்படுகிற காலத்தில் உள்ள நக்ஷத்திரங்களால் உண்டாகக் கூடிய வியாதி குணமாவதற்கு வேண்டிய நாட்கள்.

நக்ஷத்திரம்	வியாதி பரிஹாரத்திற்கு வேண்டிய நாட்கள்	நக்ஷத்திரபாத விதியானத்தினுல்வியாதி பரிஹாரத்துக்குரியநாட்கள்				தானம் செய்யவேண்டிய வஸ்துக்கள்	நக்ஷத்திரம்	வியாதி பரிஹாரத்துக்குரிய நாட்கள்	நக்ஷத்திரபாத பேதத்தினுல் வியாதி பரிஹாரத்துக்குரியநாட்கள்				தானம் செய்யவேண்டிய வஸ்துக்கள்
		பா 1	பா 2	பா 3	பா 4				பா 1	பா 2	பா 3	பா 4	
அச	1	1	10	7	7	முத்து	சுவா	60	11	21	2	23	கெம்
பர	*	5	7	15	5	அரிசி	விசா	20	15	14	1	5	வெல்லம்
கிரு	9	15	0	15	5	நெய்	அனு	10	10	11	12	15	கோதுமை
ரோ	3	17	18	25	2	தேன்	கேட்	15	1	5	11	18	ரத்னம்
மிரு	5	15	17	21	8	நீலவஸ்திரம்	மூல	*	15	15	18	8	உப்பு
திரு	*	*	2	7	2	பால்	பூரா	15	0	9	0	30	அரிசி
புந	7	7	12	20	8	வெள்ளி வஸ்திரம்	உத்	20	7	11	10	0	ரத்னம்
							அபி	0	7	8	5	15	வெள்ளி
பூச	7	7	11	10	0	ரத்னம்	திரு	60	11	18	17	9	பயறு
ஆயி	9	7	0	6	0	வெள்ளி	அவி	1	10	11	15	7	எள்ளு
மக	*	21	15	17	7	பசு	சத	1	16	2	20	9	பால்
பூரம்	60	15	5	9	9	கோதுமை	பூரட்	*	0	7	8	7	அரிசி
							உத்	15	7	11	10	0	நீலவஸ்திரம்
உத்	15	7	14	8	8	எண்ணை	ரேவ	10	9	17	0	0	தங்கம்
ஹஸ்	15	17	...	20	20	வெள்ளை வஸ்திரம்	* மேலே இந்த அடையாளம் உள்ள இடங்கள் அபாயக்குறியை காட்டுகிறது.						
சித்	15	11	21	2	2	நூல்							

2. வியாதி ஏற்படுகிற காலத்தில் வார நக்ஷத்திரத்தினுல் உண்டாகிற மரண யோகம்.

கிழமை	ஞாயிறு	திங்கள்	செவ்வா	புதன்	வியாழன்	வெள்	சனி
நக்ஷத்திரம்	பரணி	திருவாதி	மக	அச	மிரு	ஆயி	ஹஸ்
	அனு	உத்தரட்	சதய	விசா	கேட்	திருவோ	பூர

3. மரண காலத்திலுள்ள துஷ்ட நக்ஷத்திரங்களுக்காக அவ்விட்டை விட்டுவிட வேண்டிய கால நியமம்.

ரோஹிணிக்கு 5, மிரு-2, புன-3, மக-5, உத்-3, சித்-2, விசா-3, உத்ரா-3, அவிட்-6, சத-6, பூரட்-6, ரேவ-6 மாதங்கள்.

சுபமான திதி, யோகம், அம்சகம் கூடிய சுப வாரத்தில் சுபர்களின் பார்வையுட்ன் கூடிய ராசி லக்னம் எனச் சொல்லப்படுகிறது.

சூரியன் செவ்வாய், சனி லக்னத்திலோ கேந்த்ரத்திலோ இருக்கும்போது எல்லா வியாதிகளுக்கும் வைத்யம் செய்வது நலம். சூரியன், சந்த்ரன், புதன், குரு, சுக்ரன்—இவர்களின் வாரம், வர்கம் உதயம் சுபம். ஷஷ்டி ஸப்தமி, அஷ்டமி, சதுர்தசி, சதுர்த்தி, நவமி இவை சுபம். த்விதீயை, த்வாதசி கூடாது. பிரதமை, ஷஷ்டி, ஏகாதசி நலமெனச் சிலர். விஷ்டி தவிர மற்ற ஸ்திர கரணங்களும் எல்லா சுபயோகங்களும் நலம். சராசி உத்தமம். உபயராசி மத்யமம்.

சதுர்த்தி, நவமி, சதுர்தசி யஜமானனுக்கு அனுகூலமான திருவாதிரை, கேட்டை, ஆயில்யம், மூலம் இத்திதி நக்ஷத்ரங்களுடன கூடிய செவ்வாய் சனி தினங்களில் செவ்வாய் பலவானுயும், 8ல் ஒருவருமில்லாமலிருக்க மேஷம், கடகம், கன்னி, துலாம் இவைகளில் வியாதியுள்ளவனுக்கு அனுகூலமாகிய லக்னத்தில் உப்பு, புகை, சஸ்த்ரம் இவைகளின் பிரயோகம் செயலாம்.

மருந்துசாப்பிட:— ஞாயிறு, திங்கள், செவ்வாய், வியாழன், வெள்ளி என்கிற வாரங்களும்; சதுர்த்தி, நவமி, சதுர்தசி என்கிற திதிகளும்; அசுவதி, ரோஹிணி, மிருகசிரஷம், புனர்பூசம், பூசம், உத்தரம்; ஹஸ்தம், சித்திரை, ஸ்வாதி, அனுஷம், உத்தராடம் திருவோணம், அவிட்டம், சதயம், உத்தரட்டாதி, ரேவதி என்கிற நக்ஷத்ரங்களும், மேஷம், கடகம், கன்னி, துலாம், மகரம் என்கிற லக்னங்களும் மருந்து சாப்பிட உத்தமம். 6, 7, 8-ம் இடங்கள் உத்தமாய் இருக்கவேண்டும்.

ரோகமுக்தஸ்நானம்:—செவ்வாய், புதன், வியாழன் என்கிற வாரங்களும், சதுர்த்தி, அஷ்டமி, நவமி, சதுர்தசி, அமாவாஸ்யை என்கிற திதிகளும்; ரோஹிணி, புனர்பூசம், ஆயில்யம், மகம் உத்தரம், ஸ்வாதி, உத்தராடம், ரேவதி தவிர மற்ற நக்ஷத்திரங்

களும் ரோக முக்தஸ்நானம் செய்ய உத்தமம். ஜ்வரம், அனுஜ்வரம், திருஜ்வரம் கூடாது. பொருந்தி யிருக்கவேண்டும்.

தசமியில் எண்ணெய் தேய்த்துக் கொள்ளாமல் ஸ்நானம் செய்ய ஆயுள், புத்தி, கீர்த்தி, பலம் இவைகள் வ்ருத்திக்கும்.

கூடாத திதிவார நக்ஷத்ரங்களிலும் எண்ணெயில் நெய்யையோ ஜலத்தையோ சேர்த்து ஸ்நானம் செய்யலாம். சுவாதி, வியாழனோடு கூடிய திருதியை, பஞ்சமியன்று, எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்பவன் ரோகமில்லாதவனாயிர், பலம் தனம் இவைகளுடன் கூடினவனாயுமிருப்பான். பஞ்சமி, தசமி, த்ரயோதசி, த்ருதியை இவைகளில் எண்ணெய் தேய்த்தால் எல்லா நன்மைகளுமுண்டாம்.

திதிக்கு ஒருகுணம். நக்ஷத்ரத்துக்கு 4 குணம். கரணத்துக்கு 6 குணம். வாரத்துக்கு 8 குணம்.

கடன் நீர்க்க:— அனுஷத்தில், அசுவதியின் முதல் பாதத்தில், அனுஷத்தின் முதல் அம்சகமான லக்னத்தில் சந்த்ர விருக்க அல்பமான கடனீத்நீர்த்தால் அளவற்ற கடவிருந்தாலும் நீரும். சதுர்த்தி, நவமி, சதுர்தசிகளுடன் கூடிய ஞாயிறு, செவ்வாய், சனிகளில்; லக்னத்தில் குளிகனிருக்க அற்பம் கடனைத் தீர்த்தாலும் கடன் முழுவதும் நீரும். சதுர்த்தி, நவமி, சதுர்தசியுடன் கூடிய ஞாயிறு செவ்வாய் சனிகளில் விஷ்டி கரணத்தில், குளிகன் சேர்ந்திருக்கும் போது அற்பம் கடனைத் தீர்த்தாலும் கடன் முழுவதும் நீரும். சத்ரு நாசம் உண்டாகும்.

வாஸ்து புருஷ எழுவது.

புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் கிழக்கே சிரஸ்கவும், மார்கழி, தை, மாசி மாதங்களில் தெற்கே சிரஸாகவும் பங்குனி, சித்திரை, வைகாசி மாதங்களில் மேற்கே சிரஸ்காகவும் ஆனி, ஆடி, ஆவணி மாதங்களில் வடக்கே சிரஸ்காகவும் வாஸ்து புருஷன் இடது கையை தலையின் மேழ வைத்து சயனித்துக்கொண்டிருப்பர். அவர் த்ருஷ்டி பக்கமாவது கால் புறமாவது விடுகள் கட்டிக் கொள்ளக் கூடாது.

வாஸ்து புருஷன் நித்திரை விடும் காலம்.

சித்திரை மாதம் 10ஆ 5 நாழிகைக்கும், வைகாசி மாதம் 21ஆ 16 நாழிகைக்கும் ஆடி மாதம் 11ஆ 2 நாழிகைக்கும் ஆவணி மாதம் 6-ஆ 21 நாழிகைக்கும் ஐப்பசி மாதம் 11-ஆ 2 நாழிகைக்கும் கார்த்திகை மாதம் 8-ஆ 10 நாழிகைக்கும் தை மாதம் 12ஆ 8 நாழிகைக்கும் மாசி மாதம் 22-ஆ 8 நாழிகைக்கும் வாஸ்து புருஷன் நித்திரை விடுவார். அந்த நாழிகையில் மீன கோல உத்தமம். ஆனி, புரட்டாசி, மார்கழி, பங்குனி மாதங்களில் வாஸ்து புருஷன் நித்திரை விடுவதில்லை. அம்மாதங்களில் மீன கோலுவது கூடாது.

கிரஹாரம்பத்திற்கு சுப முகூர்த்தங்கள்.

பிரதமை, துவிதியை, பஞ்சமி, ஷஷ்டி, ஸப்தமி, தசமி ஏகாதசி, த்ரயோதசி, பௌர்ணமி என்கிற திதிகளும்; ரோகணி, மிருகசிருஷம், புனர்பூசம், பூசம், உத்தரம், ஹஸ்தம், சித்திரை, ஸ்வாதி, அனுஷம், மூலம், உத்தராடம், திருவோணம், அவிட்டம், சதயம், உத்தரட்டாதி, ரேவதி என்கிற நக்ஷத்ரங்களும்; விருஷபம், மிதுனம், விருச்சிகம், கும்பம், சுபர் கூடிய மிதுனம், கன்னி, தனுசு, மீனம் என்கிற லக்நங்களும் கிரஹாரம்பம் செய்ய உத்தமம். 8-ம் இடம் 12-ம் இடம் சுத்தமாய் இருக்க வேண்டும்.

நாதன கிரகப் பிரவேசம் செய்ய.

திங்கள், புதன், வியாழன், வெள்ளி என்கிற வாரங்களும்; பிரதமை, துவிதியை, திருதியை, பஞ்சமி, ஸப்தமி, தசமி, ஏகாதசி, த்ரயோதசி என்கிற திதிகளும்; ரோகிணி, மிருகசிஷம், புனர்பூசம், பூசம், உத்தரம், ஹஸ்தம், அனுஷம், உத்தராடம், திருவோணம், சதயம், உத்தரட்டாதி, ரேவதி என்கிற நக்ஷத்ரங்களும்; விருஷபம், மிதுனம், விம்மம், கன்னி, விருச்சிகம், தனுசு கும்பம், மீனம் என்கிற லக்நங்களும் கிரகப் பிரவேசம் செய்ய உத்தமம். 12-ம் இடம் சுத்தமாயிருக்கவேண்டும். பெண்ணுக்குப் பொருந்தியிருக்கவேண்டும். குரு சுக்கிரர்களின் அஸ்தமனமும், எதிர் சுக்கிரனும் கூடாது. ஆனால் விருஷபம், மிதுனம், கன்னி, துலாம், மகரம், கும்பம், மீனம் இத்த ராசிகளில் சுக்கிரன் இருந்தால் எதிர் சுக்கிர தோஷம் இல்லை. ஒரே ஊருக்குள் எதிர் சுக்கிரன் பார்க்க

வேண்டாம். ஆனி, புரட்டாசி, மார்கழி, பங்குனி மாதங்கள் கூடாது.

வதூப்ரவேசப் பிரவேசம்.

விவாஹ தின முதல் 6, 8, 10, 12, 14, 16 தினங்களில் ஒன்றும் பார்க்காமலும், மற்ற காலங்களில் நாள் பார்த்தும் செய்ய வேண்டும். கிரஹப் பிரவேசத்திற்கு எடுத்த திதி வார நக்ஷத்திர லக்நங்களே வதூப்ரவேசம் செய்ய உத்தமம். விவாஹம் ஆன 2-வது 4-வது வருஷங்கள் கூடாது.

தேவதா ப்ரதிஷ்டை.

தை, பங்குனி, சித்திரை, வைகாசி, ஆனி இந்த மாதங்களில் குரு சுக்ரர்கள் அஸ்தமனமாகாத காலத்தில், திங்கள் புதன், வியாழன், வெள்ளி என்கிற வாரங்கள், ரோகிணி, புனர்பூசம், பூசம், மிருகசிருஷம் ரேவதி, ஹஸ்தம், உத்தரம், உத்தராடம், உத்தரட்டாதி, ஸ்வாதி, திருவோணம், அசுவதி, மூலம், அவிட்டம், அனுஷம் என்கிற நக்ஷத்திரங்கள்; பிரதமை, துவிதியை, திருதியை, பஞ்சமி, ஷஷ்டி, ஸப்தமி, தசமி, ஏகாதசி, த்ரயோதசி என்கிற திதிகள்; விருஷபம், மிதுனம், ஸிம்மம், கன்னி, விருச்சிகம், தனுசு, கும்பம், மீனம் என்கிற லக்நங்கள் தேவதா ப்ரதிஷ்டை செய்ய உத்தமம். 8-ம் இடம் சுத்தமாயிருக்க வேண்டும். யஜமானனுக்குப் பொருந்தியிருக்க வேண்டும். சுக்ல பக்ஷ ஷஷ்டி முதல் கிருஷ்ண பக்ஷ பஞ்சமிக்குள் சுபம்.

ஸ்த்ரீ தேவதைகளே ப்ரதிஷ்டை செய்ய உபயராசிகள் நலம். உச்சராசியில் சந்த்ரன் இருந்தால் யஜமானனுக்கு சுகத்தையும், நீசத்திலிருந்தால் தாரித்ரியத்தையும், மித்ராசியிலிருக்க மித்ர ஸௌக்ய தனங்களையும், சத்ருஸ்தானத்திலிருக்க சத்ருக்களையும் விருத்தி செய்வான்.

லக்னத்தில் சூரியன், சந்திரன், செவ்வாய், சனி, ராகு இவர்களிருந்தால் க்ராமத்துக்கும் தேசத்துக்கும் கெடுதியை அளிப்பார்கள். 2-ல் பாபிகளிருக்க, தனநாசம். 2-ல் சுபர்களும் சந்த்ரனுமிருந்தால் தனத்தை அளிப்பார்கள். 3-ல் யாரிருந்தாலும் ஸஹோதரஷத்தை விருத்திசெய்வார்கள். 4-ல் பாபிகளிருக்க ஸௌக்யம். சந்த்ரன் தவிர மற்ற சுபர்களிருந்தால் சுகம். 5-ல் பாபிகளிருந்தால் புத்ரநாசம். சுபக்ரஹங்களிருந்தால் புத்ரன், தர்மம், சுகம் உண்டாகும். சந்த்ரனிருந்தால் ஸௌக்யம். 6-ல் பாபிகளிருக்க சத்ருநாசம். குருவிருந்தால் சத்ருவ்ருத்தி. சந்த்ரனும் சுக்ரனுமிருந்தால் ஸ்தானப்ரம்சம். 7-ல் சூரியன் கிற்க யஜமான நாசம். சனியிருந்தால் அஸௌக்யம். புதனிருந்தால் புத்ர நாசம். செவ்வாயிருக்க அக்நிபயம். சுக்ரனிருக்க பிரசாபாதை. சந்த்ரனும் குருவுமிருக்க தனதான்ய வ்ருத்தி. 8-ல் ஒருவரும் கூடாது. யாரிருந்தாலும் குலநாசம். 9-ல் சுபர்களிருக்க தர்ம வ்ருத்தி. பாபிகளும் சந்த்ரனுமிருப்பதால் ஸௌக்யம். 10-ல் பாபிகளிருக்க ஸ்தான ப்ரம்சம். சுபக்ரஹங்களும் சந்த்ரனுமானால் புத்ர மித்ரஸௌக்யம். 11-ல் யாரிருந்தாலும் புத்ரன், ஆயுள், ஸம்பத்து சுகம்-இவைகளுண்டாகும். 12-ல் எந்த க்ரஹமிருந்தாலும் யஜமானனுக்கு தாரித்ரியம். புதனும் குருவுமிருந்தால் தனவிருத்தி.

சயனித்திருக்கும் வாஸ்துபுருஷன் தலையில் வீடுகட்ட பிதாவுக்கும், பாதத்தில் கட்டினால் மனைவி மக்களுக்குக் கெடுதியும், கையிலும் முதுகிலும் தண்ணீர்க் கெடுதியும், வயிற்றில் ஸகல செழிப்புகளும் உண்டாகும்.

ரோஹிணி, மிருகசிர்ஷம், புனர்பூசம், பூசம்-இவைகளில் கிழக்கில் வீடுகட்டவும், உத்தரம், ஹஸ்தம், ஸ்வாதி-இவைகள் தெற்கில் கட்டவும், மூலம், உத்தராடம், திருவோணம்-இவைகள் மேற்கில் கட்டவும், சித்திரை, சதயம் அவிட்டம், உத்தரட்டாதி-இவை வடக்கு திக்கில் கட்டவும், ரேவதி எல்லா திக்குகளிலும் வீடுகட்டவும் தொடங்கலாம்.

அசுவதி, சித்திரை, ரேவதி-இவை நகர நிர்மாணம் செய்யவும், உத்தரட்டாதி ஸைன்யங்களின் இருப்பிடம் கட்டவும், ரோஹிணி பூசம், மகம், உத்தரம், அனுஷம், உத்தராடம், திருவோணம்-இவை தான்ய அறை கட்டவும், கார்த்திகை, திருவாதிரை, மகம், பூரம், உத்தரம், விசாகம், கேட்டை, மூலம், உத்தராடம், இவை அன்னசாலை கட்டவும், ஹஸ்தம், சாப்பாட்டு விடுதி கட்

டவும். மூலம் படுக்கையறை நிர்மாணிக்கவும், கார்த்திகை நிபம் வைக்குமிடம் கட்டவும், ரேவதி-அடுப்பு கட்டவும் நலம்.

க்ரஹாரம்பம் :—சித்திரை, வைகாசி, ஆடி, ஆவணி, ஐப்பசி, கார்த்திகை-இந்த 8 மாதங்களிலும், க்ரமமாக கிழக்கு முதலிய எட்டு திக்குகளில் வீடுகட்ட மிக உத்தமம். ஆனி, புரட்டாசி, மார்கழி, பங்குனி. மாதங்களில் நெல் குத்தும் இடமும், சமைய லறை, தொழுவம் முதலியனவும் கட்டலாம்.

ஆனி, புரட்டாசி, மார்கழி, பங்குனிகளில், விருச்சிகம் முதல் 6 ராசிகளில் பிறந்தவர்கள் கிழக்கு திக்கில் வீடு கட்டவேண்டும். ரிஷபம் முதல் 6 ராசிகளில் பிறந்தவர்கள், தெற்கிலும். சிம்மம் முதல் 6 ராசிகளில் பிறந்தவர்கள் மேற்கு திக்கிலும் கும்பம் முதல் 6 ராசிகளில் ஜனித்தவர்கள் வடக்கு திக்கிலும் வீடு கட்டலாம்.

திங்கள் முதலிய சுப வாரங்களில் தன் மனைவிக்கு அனு கூலமான நக்ஷத்ரத்தில் சுபக்ரஹங்களுடன் கூடின லக்னத்தில் 8 ஆமிடத்தில் பாபிகளில்லாமலிருக்கும்பொழுது அடுப்பு கட்ட நலம். பூரம், சுவாதி, இவை சயனக்ரஹம் கட்டவும் உத்தமம்,

திருவாதிரை, பூரம், சுவாதி, அனுஷம், மூலம், பூராடம், உத் தரட்டாதி, ரேவதி-இவைகளில் தண்ணீர் வைக்கக் கூடிய பாத் ரங்கள் அமைக்க நலம்.

வீட்டின் கிழக்கு பாகத்தில் உடற்பயிற்சி செய்யுமிடமும், அக்னி மூலையில் தான்யம் வைக்குமிடமும், தெற்கில் சாப்பிடு மிடமும், நிர்ருருதி மூலையில் பிரஸவ அறையும், மேற்கில் படுக் கையறையும், வாயு மூலையில் பூஜா க்ருஹமும், வடக்கில் த்ரவ் யம் வைக்குமிடமும், ஈசான்ய மூலையில் சமையலறையும் கட்டு வது நலம்.

லக்னத்திலும் 2, 9, 12-களில் இருக்கும் சுபர்களும் 3, 6, 11ல் இருக்கும் பாபிகளும் சுபத்தை அளிப்பார்கள். 8ல் யார் இருந் தாலும் அசுபம். 12ல் ஒருவரும் இருக்கக்கூடாதென சிலர் கூறு வர். உத்தரம், நிலை, இதர அங்கங்கள் இவைகளை அமைப்பது வீடுகட்ட ஆரம்பிக்கத் தக்க காலத்திலேயே செய்யவேண்டும்.

மிருகசிரிஷம், உத்தரம், சித்திரை, அனுஷம், உத்தராடம். உத்தரட்டாதி, ரேவதி இவைகளில் ஸ்திர ராசியில் உரிய இடத் தில் நிலை வைக்கவேண்டும். உபயராசி கூரை மேயவும், கதவு அமைக்கவும் நலம்.

ஸ்திர நக்ஷத்ரத்தில் சுபமான திதி வார லக்னங்களில் வாச லில் மரங்கள் வைக்க ஐசுவரியம் விருத்தியாகும்.

அசுவதி, பூசம், ஹஸ்தம், ரோகிணி, உத்தரம், உத்தராடம், உத்தரட்டாதி இந் நக்ஷத்ரங்களிலும், புதன், வெள்ளிகளில், சுபதிதியில் உபயலக்னத்தில் கதவுகள் சேர்க்க நலம். லக்ன மும், சந்திர லக்னமும், ஸ்திர ராசியின் அம்சகமாய் இருந்து லக் னத்தில் சுபக்ரஹங்கள் இருப்பதை சுபர்கள் பார்க்கும்போது தூண் நாட்ட நலம்.

வீடு கட்டுதற்குரிய சாமான்களை கிழக்கு வடக்கில் வைப் பது நலம். புது சாமான்கள் உபயோகிப்பது உத்தமம். தூண் கள் முதலியவை ஒற்றைக்கணக்கில் இருப்பது நலம்.

அக்னி, நிருருதி மூலைகளில் ஆட்டுத்தொழுவமும், வாயு மூலையில் எருமை, பசுக்களின் தொழுவமும் கட்டுவது நலம், சராசியான லக்னத்திலும், சந்திரலக்னத்திலும், தயிர் மத்தை உபயோகிக்க ஆரம்பித்தால் பசுக்களும் தயிரும் செழிக்கும். திங்கள்கிழமை சந்திரன் லக்னத்திலிருக்கும்போது தயிர் கடைய, கம்பை அமைக்கவேண்டும். சந்திரன், லக்னத்தில் நல்ல நக்ஷத் திராம்சத்துடன் சேர்ந்து இருக்கும்போது தயிர் கடையத் தொடங்குவது நலம். இந்த யோகத்தில் பால் கறக்க ஆரம்பித் தால் பால் செழிக்கும்.

ஞாயிறு அன்று சூரியன் விடான லக்னத்தில் சனி செவ் வாய் அம்சகத்தில் சந்திரன் ரேவதியில் இருக்க கடைய ஆரம்பித் தல் உத்தமம்.

கேட்டை, கார்த்திகைகளில், புதன்கிழமையில் புதனம்சத் தில் சந்திரனிருக்க, பசு முதலியவைகளின் நெய்யை சாப்பிட ஆரம்பித்தால் விருத்தியாகும். விசாகத்துடன் சேர்ந்த திங்கள் அன்றும் நெய்யை சாப்பிட ஆரம்பிக்கலாம்.

வீடு கட்ட ஆரம்பிப்பதில் சுபத்தை அளிக்கவல்ல சில யோகங்கள் எழுதப்படுகின்றன. 10ல் சந்திரன், 4ல் குரு, 11ல் செவ்வாய், சனி, இருப்பதும், லக்னத்தில் குரு, 7ல் புதன் 3ல் சனி 6ல் சூரியன், 4ல் சுக்கிரன் இருப்பதும், லக்னத்தில் சுக்கிரன் 10ல் புதன், கேந்திரத்தில் குரு, 11ல் சூரியன் இருப்பதுமான காலங்களில் கட்ட ஆரம்பித்த வீடு 100 வருஷம் செழிப்புடன் இருக்கும்.

லக்னத்தில் சுக்ரன், 5ல் குரு, 3ல் சூரியன், 6ல் செவ்வாயிருக்க ஆரம்பித்த வீடு 200 வருஷங்களிருக்கும். லக்னத்தில் சந்திரன் 7-ல் குரு, 10-ல் புதன இருக்கும்போது ஆரம்பித்த வீடு, கிராமம், பட்டணம் 600 வருஷங்கள் செழிப்புடனிருக்கும். 10-ல் சுக்ரன், 8-ல் புதன், குரு இருக்க ஸ்திரலக்னத்தில் ஆரம்பம் செய்த வீடும், நகரமும், க்ராமமும் 600 வருஷங்கள் மிகச்செழிப்புடனிருக்கும். லக்னத்தில் சூரியன், 7 ல் குரு, 10-ல் சந்த்ரனிருக்க கட்டத்தொடங்கின வீடு தேவாலயம் முதலியவை 1000 வருஷம் செழிப்புள்ளவையாயிருக்கும். லக்னத்தில் சுக்ரன், 7-ல் குரு, 10-ல் சந்திரன் இருக்கும்போதும், லக்னத்தில் புதன், 7-ல் குரு, 10 ல் சந்த்ரனிருக்கும்போதும் ஆரம்பித்தவை 1000 வருஷங்கள் செழிப்புள்ளவையாயிருக்கும்.

திங்கள், வெள்ளி, அமாவாஸ்யை, பௌர்ணமி, கிரஹணம், மாதப்பிறப்பு, சுக்ரசந்த்ரர்கள் சேரும் சமயம் இவைகளில் வீட்டை சாணந்தால் மெழுக வேண்டும்.

சுவரைப் பெருக்கி வெள்ளை முதலியவை அடிப்பதை சுபவாரங்களில் செய்யவேண்டும். பாபவாரங்களிலும், சதுர்த்தியிலும் சுண்ணாம்பு அடிக்கக்கூடாது. பிரதினமும் காலையில் பெருக்கி சாணித் தண்ணீரால் துடைப்பது நலம். 6 மாதம் அல்லது ஒரு வருஷத்துக்கொரு தடவை மண் பாத்ரங்களை சுத்தம் செய்யவேணும்.

கார்த்திகை, மகம், பூரம், உத்தரம், ஹஸ்தம், மூலம், ரேவதி, இவைகளோடு செவ்வாய் சேர்ந்திருக்கும்போது வீட்டுவேலை செய்யக்கூடாது. மீறிச்செய்தால் நிற்படலாம். புத்ரமரணமும் ஸம்பவிக்கலாம். செவ்வாயன்று காலையில் உஷ்ணராசியான லக்

னத்தில் செவ்வாயிருக்க, வீட்டில் புல் முதலியவைகளால் கூரை வேய்ந்தால் அக்னி பயம் ஏற்படலாம்.

லக்னத்தில் சுக்ரன் கேந்த்ரத்தில் குரு, இருக்கும்போது வீட்டில் புல் முதலியவைகளால் கூரை வேய்ந்தால் காற்று அக்னி பயம் கிடையாது. சுபவாரத்தில், ஜலராசியில் சந்த்ரனும், லக்னத்தில் சுபக்ரஹமுமிருக்க கூரை வேய்ந்த வீட்டில் தீ வைத்தாலும் பற்றாது.

வியாழனன்று ரோகிணி மிருகசீர்ஷம், ஆயில்யம், உத்தரம் பூராடம், உத்தராடம், திருவோணம், உத்தரட்டாதி இவைகளில் ஒன்றோடு குரு சேர **ராஜயோகம்** எனச் சொல்லப்படுகிறது. இந்த யோகம் யஜமானனுக்கு ராஜ்யத்தையும் புத்ரனையுமளிக்கக் கூடியது.

வெள்ளியன்று *ஜலராசியையும், ஸ்வக்ஷேத்ரமாயு மிருக்கும் லக்னத்தில் சுக்ரனிருக்கும்போதும், திங்கட்கிழமை ஜலராசியாகிய லக்னத்தில் சந்த்ரனிருக்கும்போதும் கூரை வேய்ந்த வீட்டுக்குத் தீப்பயமே கிடையாது.

அரசு, அத்தி, இரளி, ஆல், எழிலிப்பால், வில்வம், புரசு வெட்பாலை, நறுவிலி, பெருமரம், கடம்பு, பாதிரி, வாகை, மலையகத்தி, புளி, இலவு, இம்சுகம், கடுக்காய், விளா, மாவிலங்கை, மகிழம், நெல்லி முதலிய மரங்களை வீட்டு வேலைக்கு உபயோகப்படுத்தக்கூடாது. மேலும் கிழக்கொடுப்பவை வழியிலுள்ளவை பொந்துள்ளவை கோயிலிலுள்ளவை, காற்று தண்ணீர் இடி இவைகளால் சாய்ந்தவை, உலர்ந்தவை, தேன்கூடுள்ளவை, தீப்பட்டவை, கடுகாட்டிலுண்டானவை, சப்தத்தோடு சாய்ந்தவை, காளி கோவிலிலுள்ளவை, மந்தைகளிலுள்ளவை, ஒன்றுக்கொன்று தாங்கலாயிருப்பவை, இவ்வகை மரங்களை வீட்டு வேலைக்கு உபயோகப்படுத்தக்கூடாது. ஒரு வீட்டுக்கு உபயோகப்படுத்தியவை சல்யங்களெனச் சொல்லப்படும். அவைகளையும் உபயோகிக்கக்கூடாது.

---

*விருஷபம், கடகம், துலாம், மீனம், மகரம், கும்பம், மீனம் இவை ஜலராசிகள்.

கதலுகள், மேற்கூரை, தேங்பூஜை மிச்சை, அன்ன தானம்-இவைகளில்லாமலிருக்கும் வீட்டில் பிசாசங்கள் வலிக்கின்றன. அவ்வீடு ஆபத்தையளிக்கும்.

கடகம், விருச்சிகம் மீனம்-இவைகளில் பிறந்தவர்களுக்கு கிழக்கில் வாசலுள்ள வீடும், விருஷபம், கன்னி, மகரம்-இவைகளில் பிறந்தவர்களுக்கு தெற்கில் வாசலுள்ள வீடும், மிதுனம், துலாம், கும்பம்-இவைகளில் ஜனித்தவர்களுக்கு மேற்கில் பார்வையுள்ள வீடும், தனுஸு, சிங்கம், மேஷம் இவைகளில் ஜனித்தவர்களுக்கு வடக்குப் பார்வையான வீடும் ஸௌக்யங்களை அளிக்கும்.

வீட்டை 9 பாகங்களாகப் பிரித்து வலது புறத்தில் 5 பாகங்களும் இடது புறத்தில் மூன்று பாகங்களும் விட்டு மீதம் ஒரு பாகத்தில் வாசல் விடவேண்டும்.

கிணறு வெட்ட:—கிணறு முதலிய நீர்நிலைகள் வெட்டுவதற்கு பூமிக்குக் கீழுள்ளவற்றை ஆரூட முறையாகக் காண்பது: கிணறு முதலியவை தோண்ட உத்தேசித்த ஸ்தலத்தை சுத்தஞ்செய்து இஷ்டதேவதையைத் தொழுது அவ்விடத்தில் ஒருவனை கிழக்கு முகமாக வைத்து, அவன் அங்கத்தில் மற்றொருவனைக்கொண்டு தொடும்படி செய்வதில், (1) தலையைத்தொட்டால் நான்கு முழத்துக்குக் கீழ் வடமேல் மூலையில் அதிக நீரூற்றும். தவனியும் அதன் கீழ் மூன்று முழத்தில் மிக நீரூற்றுமுண்டாம். (2) நெற்றியைத்தொட்டால் கற்பாறையும் பதினேரு முழத்தில் குறைந்த ஊற்றுமுண்டாம். (3) கன்னத்தைத் தொட்டால் ஆறு முழத்தில் நல்ல தண்ணீர் ஊறும். (4) வாயைத்தொட்டால்-ஏழு முழத்தில் நீரூற்றும் கல்லுமுண்டாம். முகத்தைத் தொட்டால் ஆறு முழத்தில் நீரூற்றுண்டாகும். (6) கழுத்தைத் தொட்டால் பதினேரு முழத்தில் நீரூற்றுண்டாகும். (7) தோளைத் தொட்டால் ஏழுமுழத்தில் பெருமடையான நீரூற்றுமுண்டாம். (8) மார்பைத் தொட்டால் கற்பாறையும், அதன் கீழ் மூன்று முழத்தில் தென்கிழ் மூலையில் நல்ல ஊற்றுமுண்டாம். (9) கையைத் தொட்டால் வெகு சமீபத்தில் ஊற்றுண்டு. (10) விரலைத் தொட்டால் ஒன்பது முழத்தில் பெருமடையுண்டாம். (11) நகத்தைத் தொட்டால் பழைய கிணறு, பத்து முழத்திற்குக் கீழ் சிறு ஊற்றுண்டு. (12) இடுப்பைத் தொட்டால் ஊற்றில்லை. (13) தொடையைத் தொட்டால் ஆறு முழத்தில் ஊற்றுண்டு. (14) முழங்காலைத் தொட்டால் ஐந்து முழத்தில் பெருமடையுண்டு.

ஒவ்வொரு நக்ஷத்திரங்களிலும் செய்யத்தக்க காரியங்கள்.

1. **அசுவனி:**— குதகமனை புகுதல், வித்தியாரம்பம், உபநயனம், முடிசூட்டல், தானியம் வாங்க, வாகனமேற, ஆபரணம்பூண, கோடியுடுக்க, சமுத்திரயாத்திரை, மங்கல்யம்செய்தல், பும்ஸவனம், விவாஹம், நிஷேகம், விதைவிதைக்க, தானியம்செலவிட, வியாதிஸ்தர் மருந்துண்ண, மாடு வாங்க, நாமகரணம், அன்னப்ராசனம், பிரயாணம், ராஜ்யாபிஷேகம், ராஜதர்சனம், வியாபாரம், வியாதிவிருத்திஸ்நானம், க்ஷவரம், சில்பகார்யம், வைத்தியம், சாஸ்த்ராரம்பம் ரஸாயனத்தயாரிப்பு, யானை, குதிரைபழக்க, ருஷி, வாஹனம் சேகரித்தல், அதர்வண வேதப்ரயோகமான காரியங்கள் செய்ய உத்தமம்.

2. **பரணி:**— கதிரறுக்க, மாடுவாங்க, ஆயுதப்ரயோகம், மூலிகைஉபயோகிக்க, அடுப்புவைக்க, தானியம் களஞ்சியத்தில் வைத்தல், வியாதிஸ்தர் குளித்தல், குதிரை வாங்குதல், துஷ்டசத்ருநிக்ரஹம், உக்ரமான நிருஷ்டி சூன்யாதிகளுக்கு பரிஹாரம் செய்ய உத்தமம்.

3. **கார்த்திகை:**— ஆயுதப்பிரயோகம், கடன்கொடுக்க, சுரங்கம் வெட்ட, ஹோமயஜ்ஞாதிகளுக்கு அக்னி உண்டாக்க, அஸ்த்ரசஸ்த்ராதி ஆரம்பம், கந்தக லோஹாதியினால் ஔஷதம் தயாரிக்க, துர்காதேவி பிரதிஷ்டாபிஷேகாதிகள், வனஸ்பதி-ஔஷதி (காட்டுமருந்துகள்) ஸங்க்ரஹம் செய்ய உத்தமம்.

4. **ரோஹிணி:**— நிஷேகம், வீமந்தம், நாமகரணம், வித்தியாரம்பம், உபநயனம், முடிசூட்ட, விவாகம், க்ருஷியாரம்பம், விதைவிதைக்க, கதிரறுக்க, தானியம் வாங்க, வாஹனமேற, ஆயுதம் பயில, ஆபரணம் பூண, கோடியுடுக்க, வாஸ்து பலியிட, கிரஹப்பிரவேசம், குளம் கிணறு வெட்ட, ஆயுதம் பிரயோகம் செய்ய, மங்கல்யஞ் செய்ய, பும்ஸவனம், தொட்டிலில் குழந்தையை விடுதல், தானியம் களஞ்சியத்தில் வைக்க, மாடுவாங்க, கிரக

ஆரம்பம், வியாதிஸ்தர் மருந்துண்ணல், வியாதிஸ்தர் குளிக்க, அன்னப்ராசனம், பூமி-தத்த புத்ராதி ஸ்வீகாரம், ராஜ்யாபிஷேகம், ராஜதரிசனம், தேவதா பிரதிஷ்டை, நூதன உத்தியோக வியாபார காரியங்கள், குதிரை வாங்க, நூதன வதூ-குழந்தை பிரவேசம், யோகாப்யாஸம், வேதாத்யயனம், ஜ்யோதிஷ சகுன வ்யாகரணாதி சாஸ்த்ராப்யாஸம், கஜ-அச்வ ஆரோஹணம், ஸ்த்ரீகளுக்கு நாட்டிய சாஸ்திர பேரி மிருதங்காதி, தாளாப்யாசம், சமையல், மல்யுத்தம், மாந்த்ரீகம் செய்ய உத்தமம்.

5. மிருகசீர்ஷம்:— ஸீமந்தம், சூதகமனிபுகுதல், நாமகரணம், காதுகுத்தல், உபநயனம், முடிதரித்தல், விவாஹம், தானியம் வாங்க, வாஹன மேற, ஆயுதப் பயிற்சி, ஆபரணம் பூண, வாஸ்து பலியிட கிரஹப்பிரவேசம், குளம் இணறுவெட்ட, சமுத்திரயாத்திரை, நிஷேகம், பும்ஸவனம், விதை விதைத்தல், கதிரறுத்தல், தானியம் களஞ்சியத்தில் வைக்க, தானியஞ் செலவிட, மாடு வாங்க, வியாதிஸ்தர் மருந்துண்ணல், வியாதிஸ்தர் குளிக்க, அன்னப்ராசனம், கர்ணவேதம், பசு ஸங்க்ரஹம், பட்டாபிஷேகம், ராஜதரிசனம், தத்த புத்ர மந்திராதிஸ்வீகாரம், சங்கீதம், ஸாமுத்ரிகலக்ஷண சாஸ்திரம், நாட்டியம், வாத்யம், சாஸ்திராப்யாஸம், சமையல், மல்யுத்தம், மாந்த்ரிகப்ரயோகம், ரஸாயன தயாரிப்பு, அச்வகஜாரோஹணம், வாஹனம் வாங்க, சில்ப காரியம், வித்யாப்யாஸம் செய்ய உத்தமம்.

6. திருவாதிரை:— காதுகுத்த வித்யாரம்பம், ஆயுதப் பிரயோகம் செய்ய, தொட்டிலில் குழந்தையை விடுதல், தானியம் களஞ்சியத்தில் வைத்தல், வியாதிஸ்தர் குளித்தல், த்வஜாதாரணைகள், மதில் சுவர் பந்தனம் திருட்டு செய்தல் கலகம் மருந்து உண்ணல், கதிர் அறுத்தல், தானிய ஸங்க்ரஹம், சிவன் முதலிய தேவதைகளுடய பிரதிஷ்டாபிஷேகங்கள், ஸாமுத்ரிகா நீதிசாஸ்த்ராப்யாஸம், சமையல், நாட்டியம், வைத்தியம், சாஸ்திராப்யாசம், கணிதாரம்பம், மாந்த்ரீகம், னெமூலிகை, யானை குதிரை ஏற உத்தமம்.

7. புனர்பூசம்:—ஸீமந்தம், சூதக மனிபுகுதல், காது குத்தி, வித்யாரம்பம், உபநயனம், முடி சூட்ட, திருஷியாரம்பம், தானியம்

வாங்க, வாஹனமேற, ஆயுதம் பயில, கோடியுடுக்க, வாஸ்து பலியிட, கிரஹப்பிரவேசம் செய்ய, மங்கல்யஞ் செய்ய, விவாஹம் நிஷேகம், பும்ஸவனம், எருவிட, மாடுவாங்க, கிரக ஆரம்பம், வியாதிஸ்தர் மருந்துண்ண, யாத்திரை, தேவப்பிரதிஷ்டை, நாமகரணம், அன்னப்பிராசனம், உழவு செய்ய, பிரயாணம், குதிரை வாஸ்துரக்ஷை, பிரசவ திருஹாரம்பம், சாமுத்திரிக, நிதி, வாத்தியம், அதர்வண வேதம், சித்திர கலாசாஸ்திரம், ஸ்திரீ நாட்டியம் முதலிய காரியங்களுக்கு சுபம்.

8. பூசம்:—பும்ஸவனம், ஸீமந்தம், காதுகுத்த, வித்யாரம்பம், உபநயனம், முடிசூட்ட, திருஷியாரம்பம், விதை விதைக்க, தானியம் வாங்க, ஆபரணம் பூண, கோடியுடுக்க, வாஸ்துயிட, கிரகப்பிரவேசம், ஆயுதப் பிரயோகம், மங்கல்யஞ் செய்ய, விவாஹம், நிஷேகம், குழந்தையை தொட்டிலில்விட, எருவிட, கதிரறுக்க, தானியம் செலவிட, மாடுவாங்க, கிரஹ ஆரம்பம், வியாதிஸ்தர் மருந்துண்ண, குளிக்க, யாத்திரை, நாமகரணம், அன்னப் பிராசனம், தேவபிரதிஷ்டை, இணறு வெட்டுதல், பட்டாபிஷேகம், ராஜதரிசனம், வியாபாரம், விரததீக்ஷாரம்பம், மந்திரம், புத்ர வாஹன ஸ்வீகாரம், சாமுத்திரிகா, நீதி நாட்டிய சாஸ்திரம், பேரிவாத்தியம், மிருதங்கம், சாஸ்த்ராப்யாஸம், சமையல், மாந்திரிக மூலிகைக்ரஹிக்க, வாத்யம், குதிரை யானை ஏற, கணித சாஸ்திரம், சங்கீதம், அதர்வண வேத பிரயோகம் செய்ய உத்தமம்.

9. ஆயில்யம்:— ஆயுதப் பிரயோகம், கவுக்கிரக சாந்தி செய்ய, துஷ்ட ஸம்ஹாரம், தாதுலோஹாதியினல் மருந்து தயாரிப்பு, விஷசிகித்ஸை, யோகாப்யாசம், பக்ஷி, சகுன சாஸ்திரம், வேதாத்யயனம், காட்டு மருந்து ஸங்க்ரஹத்துக்கும், வாழை கரும்பு, திருஷி செய்வதற்கும் உத்தமம்.

10. மகம்:— விவாஹம், விதை விதைக்க, கதிரறுக்க, தானியம் வாங்க, வாகன மேற, ஆயுதம் பயில, வாஸ்துபலியிட, குளம் இணறு வெட்ட, ஆயுத பிரயோகம் செய்ய, மங்கல்யஞ் செய்ய, தானியம் களஞ்சியத்தில் வைக்க, தானியஞ் செலவிட, மாடு வாங்க, துஷ்ட சம்ஹாரம், தாதுலோஹாதியினல் மருந்து தயா

சிப்பது, விஷசிகித்ஸை, யோகாப்யாஸம், பக்ஷி, சகுன சாஸ்த்ரம் வேதாத்யயனம், காட்டு மருந்து ஸங்க்ரஹத்திற்கும், வாழை கரும்பு, கிருஷி செய்வதற்கும் உத்தமம்.

11. பூரம்:— ஆயுதப் பிரயோகம் செய்ய, சித்திரம் எழுத, மாடுவாங்க, வியாதிஸ்தர் குளிக்க, விஷத்தால் ஔஷதம் தயாரிப்பது, மூலிகைகள், சாஸ்திரம், அக்னி, க்ரூரமான மந்திர மூலிகைகள், மாமிச வியாபரம், மருந்து உண்ணல் சுபம்

12. உத்தரம்:— நிஷேகம், ஸீமந்தம், சூதக மீனபுக, நாமகரணம், காதுகுத்த, வித்தியாரம்பம், உபநயனம், முடி சூட்ட, விவாகம், கிருஷியாரம்பம், விதைவிதைக்க, தானியம் மாடுவாங்க வாகன மேற, ஆயுதம் பயில, கோடியுடுக்க, வாஸ்துபலியிட, கிரஹப் பிரவேசம், குளம் கிணறு வெட்ட, மங்கல்யம் செய்ய, பும்ஸவனம் தொட்டிலில் குழந்தையைவிட, எருவிட, கதிரறுக்க, தானியஞ் செலவிட, களஞ்சியத்தில் வைக்க, கிரஹாரம்பம், வியாதிஸ்தர் மருந்துண்ண, அன்னப்ராசனம், சௌளம், தேவதா பிரதிஷ்டா பிஷேகம், வியாபாரம், சிலாஸ்தாபனம், வாஸ்துரக்ஷை, யந்திர மந்திராதி காரியங்களுக்கும், சாஸ்திராப்யாசம், சமையல், பேரி, மிருதங்கம், வாத்தியம், தாளம், ஸ்திரீ நாட்டியம், அதர்வண வேதம் முதலிய வித்தியாப்பியாசங்களுக்கும் அச்வ-கஜாரோஹணத்திற்கும் உத்தமம்.

13. ஹஸ்தம்:— சூதக மீனபுகுதல், நாமகரணம், காது குத்தல், வித்தியாரம்பம், உபநயனம், முடி சூட்ட, கிருஷியாரம்பம், விதை விதைக்க, கதிரறுக்க, தானியம் மாடுவாங்க, வாகனமேற ஆயுதம் பயில, ஆபரணம் பூண, கோடியுடுக்க, கிரகப்பிரவேசம் குளம் கிணறு வெட்ட, சமுத்திர யாத்திரை மங்கல்யஞ் செய்தல், விவாஹம் நிஷேகம் பும்ஸவனம் ஸீமந்தம் தானியஞ்செலவிட, களஞ்சியத்தில் வைத்தல், வியாதிஸ்தர் மருந்துண்ண, குளிக்க, அன்னப்ராசனம், கர்ண வேதம், கிருகாரம்பம், ராஜதரிசனம், வியாபாரம், யானை குதிரை சிஷ்சை ஆரோஹணத்திற்கும், காயனம், பக்ஷி சகுனம், கணித சாஸ்திரம், ரத்னபரீக்ஷை முதலான சாஸ்திராரம்பம் ரத்னஸங்க்ரஹம், மிருகபக்ஷி சிக்ஷணத்திற்கும் உத்தமம்.

14 சித்திரை:— சூதக மீனபுகுதல், காதுகுத்தல், வித்தியாரம்பம், உபநயனம், முடி சூட்டல், தானியம் மாடுவாங்க, வாகன மேற, ஆயுதம் பயில, ஆபரணம் பூண, கோடியுடுக்க, கிரஹப்ர வேசம், குளம் கிணறு வெட்ட, ஆயுதப்பிரயோகம், நிஷேகம், பும்ஸவனம், எருவிட, தானியஞ் செலவிட, வியாதிஸ்தர் மருந்துண்ண, குளிக்க, நாமகரணம், அன்னப்ராசனம், சௌளம், கர்ணவேதம், துர்க்கா, கணபதி பிரதிஷ்டாபிஷேகம், ராஜதரிசனம் வியாபாரம், உத்தியோகம், வாஸ்து சித்திர கலாவித்யைக்கும் பயிறு கிருஷிக்கும் உத்தமம்.

15. சுவாதி.— நிஷேகம், சூதக மீனபுகுதல், வித்தியாரம்பம் உபநயனம், முடி சூட்டல், விதைவிதைக்க, தானியம் மாடுவாங்க, வாகன மேற, ஆயுதம் பயில, கோடியுடுக்க, வாஸ்துயிட, கிரகப் பிரவேசம், சமுத்திர யாத்திரை, ஆயுதப் பிரயோகம், மங்கல்யஞ் செய்ய, விவாஹம், பும்ஸவனம், தானியஞ் செலவிட, கிரக ஆரம்பம், மருந்துண்ண, நாமகரணம், அன்னப்ராசனம், சௌளம், உழவு செய்தல், தேவபிரதிஷ்டை, வியாதிஸ்தர் ஸ்நானம் செய்தல், சிகித்ஸை, நூதன வஸ்திரதாரணம், ஸ்திரீ கடனம், பேரி மிருதங்க வாத்தியாதி அப்பியாஸம், லோஹம் அக்னி முதலிய வித்யைகளுக்கு, சமையல் வைத்தியம் தாது திரவியங்களால் ரஸாயனங்கள் செய்யவும், குதிரை யானை ஏறுதல், கிணறு வெட்டுதலுக்கும் உத்தமம்.

16வி சாகம்:— விதை விதைக்க, கதிரறுக்க, தானியம் வாங்க, கோடியுடுக்க, தானியம் செலவிட, மாடுவாங்க, வியாதிஸ்தர் குளிக்க, அன்னப்ராசனம் ஆபரண அலங்காரம் வியாபாரம் தசஸங்க்ரஹம், நாட்டியம், கீதம் சிலாசாஸனம் அக்னிஸ்தம்பம் க்ஷேத்ராதி மராமத்துகள், யானை குதிரை பந்தயத்திற்கும் சுபம்.

17. அனுஷம்:— நிஷேகம், சூதகமீன புகுதல், நாமகரணம், வித்தியாரம்பம், உபநயனம், விவாஹம், விதை தானியம் வாங்க, வாஹனமேற, ஆயுதம் பயில, ஆபரணம்பூண, கோடியுடுக்க, வாஸ்து பலியிட, சமுத்திரயாத்திரை, மாங்கல்யஞ்செய்ய, பும்ஸவனம், எருவிட, கதிரறுக்க, தானியஞ் செலவிட, களஞ்சியத்தில் வைக்க, மாடுவாங்க, கிரக ஆரம்பம், வியாதிஸ்தர் குளிக்க, மடம் தேவாலயம் நகரசபை பிரவேசத்திற்கு,

சங்கஸ்தாபனத்திற்கு, அஷ்டபந்தனம், கும்பாபிஷேகம், அன்ன ப்ராசனம், காது மூக்குக் குத்தல், நிணறு வெட்டுதல், பட்டாபிஷே கம், ராஜ தரிசனம், வியாபாரம், வைத்திய சிகிச்சை, மிருகபக்ஷி க்ஷணம், லோஹம், அக்னிசம்பந்தமான ரஸாயனம், பூமி மூலாத் ரத்னஸங்க்ரஹம், சித்ரகலை, ஜோதிஷம், கணிதம், தர்க்கம், வியாகரணம், தானம், கடனம், சகுன சாஸ்த்ராதி ஆரம்பத்திற் திற்கும், சாந்தி சமாதானத்திற்கும் உத்தமம்.

18. கேட்டை:—மாடுவாங்க, குளம் நிணறு வெட்ட, ஆயு தப் பிரயோகம், வியாதிஸ்தர் குளிக்க, அஸ்த்ர-சஸ்த்ர வாஹ னம், வாயுப்ரயோகம், க்ரூர மாந்திரீக மூலிகை, பூமிவெட்டுதல், லோஹசங்க்ரஹம், காட்டுமருந்து ஸங்க்ரஹம், சில்ப காரியம் வனவாசம் உத்தமம்.

19. மூலம்:—நிஷேகம், நாமகரணம், விவாஹம், நிருஷியாரம் பம், விதைவிதைக்க, தான்யம் வாங்க, நிரகப் பிரவேசம், பும்ஸவ னம், தானியஞ் செலவிட மாடுவாங்க, வியாதிஸ்தர் குளிக்க, யாத் நிரை, வியாபாரம், சஸ்த்ர சிகித்ஸை, சில்பகாரியம், கலக சாந்தி, அன்னப்ராசனம், உழவு உழுதல், வெற்றிலை பயிரிடுதல் உத்தமம்.

20 பூராடம்:—ஆயுதப் பிரயோகம், கணிதாரம்பம், கடன் நீர்க்க, மாடு வாங்க, வியாதிஸ்தர் குளிக்க, நிணறு குளம் வெட் டுதல், அணைகட்டுதல், முத்துபவளம் சங்கு ஸங்நிகத்திற்கு உத் தமம்.

21 உத்நாடம்:—நிஷேகம், ஸீமந்தம், கூதகமனை புகுதல், நாமகரணம், காதுகுத்தல், உபகயனம், முடிசூட்டல், விவாஹம், நிருஷியாரம்பம், விதை விதைக்க, வாகனமேற, ஆயுதம் பயில, கோடியுடுக்க, வாஸ்துயிட, நிரகப்பிரவேசம் செய்ய, குளம் நிணறு வெட்ட, பும்ஸவனம், குழந்தையைத் தொட்டிலில் விட, எருவிட, கூரைறுக்க, தானியஞ் செலவிட, கனஞ்சியத்தில் வைக்க, நிரக ஆரம்பம், சௌளம், அன்னப்ராசனம், வித்யாரம்பம், வதூ பிரவே சம், யானை குதிரை ஸிம்மாசனமேற, நியாயஸ்தானம் உத்யான வனம், நேஷ கங்கணரக்ஷாபந்தனம், முத்துசங்கு சங்நிரஹம், ஜல ப்ரயாணம், சாஸ்த்ரம், சமையல், மல்யுத்தம், மாந்திரீகம், பரத நாட்டியம், மிருதங்காதிதாளம், தர்க்கம், வியாகரணம், இந்நி ஜாலமாயாவித்தை, நிருட்டு அப்பியாசத்திற்கு உத்தமம்.

22. நிருவோணம்:—நிஷேகம், பும்ஸவனம், ஸீமந்தம், கூதக மனைபுகுதல், நாமகரணம், காதுகுத்த, வித்தியாரம்பம், முடிசூட்ட, விவாகம், விதை விதைக்க, கதிரறுக்க, தானியம் வாங்க, வாகன மேற, ஆயுதம் பயில, வாஸ்துயிட, குளம் நிணறு வெட்ட, சமுத் நிர யாத்நிரை, ஆயுதப் பிரயோகம், மங்கல்யஞ் செய்தல், அன் னப்பிராசனம், சௌளம், உபகயனம், வதூபிரவேசம், யானை, குதிரை ஸிம்மாசனம் ஏற, நியாயஸ்தானம், உத்யானவனம், விச் ராந்தி, நிரகாரம்பம், நேஷ கங்கண ரக்ஷாபந்தனம், முத்து சங்கு சங்நிரஹம், சாஸ்நிரம், சமையல், மல்யுத்தம், மாந்திரீகம், பரத நாட்டியம், மிருதங்காதி தாளம், தர்க்கம், வியாகரணம், இந்நி ஜால வித்தைகளுக்கும், நிருட்டு அப்யாசத்திற்கும் உத்தமம்.

23. அவிட்டம்:—நாமகரணம், வித்தியாரம்பம், வாகனமேற, முடிசூட்ட, தானியம் வாங்க, கோடியுடுக்க, சமுத்நிர யாத்நிரை, விவாகம், மாங்கல்யஞ் செய்ய, நிஷேகம், பும்ஸவனம், காதுகுத்த விதைவிதைக்க, தானியஞ்செலவிட, வியாதிஸ்தர் மருந் துணை, குளிக்க, சௌளம், உபகயனம், அன்னப்ராசனம், ஸீமந் தம், வாஸ்து சாந்தி, நூதன நிரஹப் பிரவேசம், பழைய வீடு பிரவேசம், ராஜ தரிசனம, வைத்ய வித்தை, வில்வித்தை, கணிதாரம்பம், யானை குதிரை வாஹன-ஆபரண ஸங்க்ரகம் உத்தமம்.

24. சதயம்:—நாமகரணம், வித்தியாரம்பம், விதைவிதைக்க, தானியம், மாடு வாங்க, வாஸ்துயி—, நிரஹப்பிரவேசம், மங்கலி யஞ் செய்தல், விவாகம், பும்ஸவனம், தொட்டிலில் குழந்தையை விட, நிரக ஆரம்பம் வியாதிஸ்தர் மருந்துண்ண, குளிக்க யாத் நிரை, சிலா ஸ்தாபனம், உபகயனம், குதிரை ஏற, ஜலசம்பந்த மான காரியங்கள், ஜ்யோதிஷம், யோகாப்பியாசம், சகுன சாஸ்தி ரங்களுக்கு உத்தமம்.

25. பூரட்டாதி:—ஏற்றம் ஸ்தாபிக்க, மந்திரம் ஜபிக்க, மாடு வாங்க, வியாதிஸ்தர் குளிக்க, வாஹனங்கள் செய்ய, சேவகஜன, தனசம்பாத்தியம், வஞ்சனை, மத்ஸராதி துஷ்காரியங்கள், மருந் துண்ணல் இவைகளுக்கு உத்தமம்.

26. உத்தராட்டாதி:—கிஷேகம், லீமந்தம், சூதகமணிபுருதல், நாமகரணம், காதுகுத்த, வித்தியாரம்பம், விதை விதைக்க, தானியம் வாங்க வாஹன மேற, ஆயுதம் பயில, கோடியுடுக்க, வாஸ்துயிட, கிரகப்பிரவேசம், குளம்கிணறுவெட்ட, பும்ஸவனம், குழந்தையை தொட்டிலில் விட, எருவிட, கதிரறுக்க, தானியம் களஞ்சியத்தில் வைக்க, செலவிட, கிரக ஆரம்பம், வியாதிஸ்தர் மருந்துண்ண, குளிக்க, தர்ம சாஸ்திரங்கள், மோக்ஷ காரியங்கள், யாத்திரை, அன்னப்ராசனம், மூக்குகுத்த, உபநயனம், விவாஹம், ருஷி ஆரம்பம், தேவப் பிரதிஷ்டை, கும்பாபிஷேகம், பட்டாபிஷேகம், ராஜதரிசனம், வியாபாரம், மல்யுத்தம், சமையல், அக்னி ரோகசம்பந்தமான காரியங்கள், பாத நாட்டியம பேரி, மிருதங்காதி வித்யாரம்பத்திற்கு உத்தமம்

27 ரேவதி:—கிஷேகம், லீமந்தம், நாமகரணம், காதுகுத்த, வித்தியாரம்பம், உபநயனம், மூடிசூட்ட, விவாஹம் ருஷியாரம்பம், விதை விதைக்க, தானியம் வாங்க, வாகனமேற, ஆயுதம் பயில, ஆபரணம்பூண, கோடியுடுக்க, வாஸ்துயிட, கிரகப்பிரவேசம், குளம் கிணறு வெட்ட, சமுத்திரயாத்திரை, அசுவசாந்தி, மங்கல்யஞ்செய்ய, பும்ஸவனம், கதிரறுக்க, தானியஞ் செலவிட, மாடுவாங்க, கிரக ஆரம்பம் வியாதிஸ்தர்மருந்துண்ண, அன்னப்ராசனம், மூக்குகுத்த, சௌளம், ராஜதரிசனம் வியாதிஸ்தர் ஸ்நானம் செய்ய, வியாபாரம், வாஸ்துரக்ஷை, ஹோமசாந்தி விரத உபவாசம் முதலான காரிய ஆரம்பம், சாமுத்திரிகா-நீதி, கடன், கணிதசாஸ்திர ஆரம்பம், லோஹ அக்னி சம்பந்த வித்யைகளுக்கும் குதிரை, யானை ஏறுதல் இவைகளுக்கும் உத்தமம்.

ஸப்தசலாகா சக்ரம்.



குரியாதிகிரஹங்கள் எந்த நக்ஷத்திரத்திலிருக்கிறார்களோ அந்த நக்ஷத்திர மூலக்கோட்டுக்கு எதிரிலிருக்கிற நக்ஷத்திர தினத்தில் அவர்களுக்கு வேதையும், கிரகங்களிலிருக்கிற நக்ஷத்திர தினத்தில் ரோகந்தமும், குரியனுக்கு தானிருக்கிற நக்ஷத்திர மூதல் 12-வது நக்ஷத்திர தினமும், அப்படியே

குஜனுக்கு 3-வது நக்ஷத்திர தினமும், சனிக்கு 8-வது நக்ஷத்திர தினமும், ராகு கேதுகளுக்கு மேற் 9-வது நக்ஷத்திர தினமும் லத்தையுமாம்

கெளரி பஞ்சாங்கம்.

ஓரையிற முதலான வாரங்களுக்கு காலம் 8, காலம் 1-க்கு காழிகை 3¾ ஆகபாதித்து இதனடியில் கண்ட சுபாசுபங்களைப் பார்க்கவும்.

பகல்.							இரவு.						
ஞாயி	திங்	செ	புதன்	வியா	வெள்	சனி	ஞாயி	திங்	செ	புதன்	வியா	வெள்	சனி
உத்	அபி	ரோ	விஷ	உத்	ரோ	விஷ	சுப	ரோ	சுர	விஷ	ரோ	அபி	விஷ
வாப	விஷ	உத்	அபி	விஷ	சுர	அபி	அபி	வாப	உத்	அபி	ரோ	சுர	உத்
விஷ	உத்	சுர	சுப	சுர	அபி	சுர	சுர	உத்	கல	சுப	கல	கல	கல
அபி	வாப	வாப	உத்	வாப	கல	வாப	ரோ	கல	வாப	உத்	வாப	வாப	வாப
சுப	அபி	அபி	ரோ	அபி	வாப	தன	கல	ரோ	ரோ	சுர	சுர	உத்	அபி
தன	சுர	உத்	சுப	விஷ	தன	அபி	வாப	சுர	வாப	வாப	தன	சுர	கல
அபி	ரோ	கல	தன	கல	அபி	வாப	உத்	வாப	கல	தன	வாப	தன	வாப
விஷ	வாப	சுர	அபி	சுர	வாப		ரோ	தன	தன	அபி	உத்	அபி	உத்

நதிர்நக்ஷத்ரம் நோக்கரேணுதர,
நடுஹோரா யோகினீசக்ரம் கலக்கும் நதமோகண:.
வ்யதிபாதே சஸ்திராத்தேன பத்ராயாமகேபே தினே,
சிவலிதமாலோக்ய ஸர்வத்ர விஜயீபவேத்.

விபரீதபாதம், சுக்ரோதி, பரிவர்தி, அசுபதினங்களில், நதி, நக்ஷத்ரம் யோகம், கரணம், நேஹோரை, யோகினீ, லக்னம், பகல், இரவு மூதலியவைகளைக் கலனிக்க வேண்டியதில்லை. கெளரி பஞ்சாங்கத்தை மாத்திரம் கலனிக்க சுபமுண்டாகும்.

கணித விஷயங்கள்.

அப்தங்கள்.

கல்யப்தம், சாலிவாஹநசகாப்தம். பாண்டவாப்தம், விக்ர மாதித்யாப்தம், போஜராஜாப்தம், கொல்லாப்தம், கிருஸ்து, அப்தம், பஸலி, ஹிஜரி முதலியன.

கல்யப்தம்.

இது கலியுகம் பிறந்தகாலம். சாலிவாஹன சகாப்தத்துடன் 3179 கூட்ட கல்யப்தமாகும். பிரபவாதியில் சென்ற பரிவருத் தியை 60-ஆல் பெருக்கி அத்துடன் கடந்த வருஷங்களையும் 349ம் கூட்ட சாலிவாஹன சகாப்தம். இத்துடன் 3179 கூட்ட கல் யப்தம் வரும்.

சாலிவாஹன சகாப்தம்.

இது சாலிவாஹனன் அரசாண்ட காலமுதல் கணக்கிடப்பட்டு வருகிறது. இவன் அரசாஷிகாலம் கலி 3179-ல் ஆரம்பமாயிற்று. சாலிவாஹனன் விக்ரமார்க்கனுடன் போர் செய்து நர்மதா நதிக்கு வடக்கில் விரட்டி அரசாஷியை நிலை நாட்டிய வருஷ மாத லால், நர்மதைக்கு வடக்கிலுள்ளோர் விக்ரமார்க்காப்தத்தையும், தெற்கிலுள்ளோர் சாலிவாஹன சகாப்தத்தையும் அனுஷ்டித்து வருகின்றனர். அரசாஷியின் 349-வது வருஷத்தில் கணிதஜ்ஞர் களைக் கொண்டு முன் சென்ற 349 என்பதையே துருவமாக்கினன். இந்த சமயம் அக்ஷய வருஷம் முடிந்த படியால் பிரபவமுதலாகவே இதுவும் பரிவிருத்தியாக கணிக்கப்பெற்று வருகிறது.

பாண்டவாப்தம்.

சகாப்தத்துடன் 3180 கூட்டுவது அல்லது கல்யப்தத் துடன் 1 கூட்ட பாண்டவாப்தமாகும்.

விக்ரமாதித்யாப்தம்.

விக்ரமாதித்யன் டில்லி அரசனை ஜயித்த காலம்முதல் ஆரம்ப மாகும். சாலிவாஹன சகாப்தத்துடன் 134 கூட்டுவது அல்லது கல்யப்தத்தில் 3045ஐக் கழிப்பது சிலர் சகாப்தத்துடன் 128 கூட்டு வது அல்லது கல்யப்தத்தில் 3051ஐக் கழிப்பது என்கின்றனர்.

இரண்டுக்கும் 6 வருஷங்கள் வித்யாஸம் வரும். இரண்டும் நடை முறையிலிருக்கின்றன.

போஜராஜாப்தம்.

சகாப்தத்துடன் 38 கூட்ட அல்லது கல்யப்தத்தில் 3141 கழிக்க போஜராஜாப்தம் வரும். இதிலும் சிலர் கல்யப்தத்தில் 3251 கழிப்பவர்களும், 3071 கழிப்பவர்களும உண்டு.

கொல்லம் ஆண்டு.

இதுவே கொல்லமாண்டு பரசுராமாப்த மென்றும் சொல் லுவர்கள். இதன் வட்டம் ஆயிரம் வருஷங்களாகும். கொல்லம் என்ற பட்டணம் தோன்றின காலத்தை ஆரம்பமாகக் கொண்ட தது. இதன் வருடாரம்பம் தென்மலையாளத்தில் ஆவணிமுதலா கவும், வடமலையாளத்தில் புரட்டாசி முதலாகவும் ஆரம்ப மாகிறது. சாலிவாஹன சகாப்தத்தில் 747 கழிப்பது அல்லது கல்யப்தத்தில் 3926 கழித்தால் இவ்வாண்டு வருகிறது.

கிரிஸ்து அப்தம்.

இதுவே ஐரோப்பா கண்டத்தில் இயேசு கிரிஸ்து காலமுதல் கணக்கிடப் பெறுகிறது. கலியுகம் 3101-ம் வருஷத்தில் ஜனவரி மீ 1 உ வியாழக்கிழமை ஆரம்பமாகிறது. இவ் வருஷம் ஐரோப் பிய கியாலண்டர்படி 365 நாட்களென்று கணக்கிடப்பட்டு வந்தது. ஆனால் இத்துடன் ஒருதினத்தின் ஏதோ ஒருபாகம் சேர்க்கப்பட வேண்டுமென எண்ணினார்கள். கிரிஸ்துவுக்கு முன் 44-வது வருஷ த்தில் அலெக்ஸாண்ட்ரியாவிலிருந்த ஸோஸிஜினஸ் (Soosiginus) என்பவர் வருஷத்துக்கு ¼ நாள் வீதம் சேர்த்து 4 வருஷத்துக்கு ஒருமுறை ஒருநாள் அதிகப்படுத்தி கணக்கிட்டார். இது சூரிய மானத்தின் 128 வருஷத்தில் 1 நாள அதிகமாயிற்று. 400 வரு ஷத்துக்கு 3 நாட்களுமசிறிது நாழிகையும் அதிகமாயிற்று. இதை யறிந்து கிரிஸ்து பிறந்த 1582-ம் வருஷத்தில் ரோம் நகரத்தில் 13-வது மதாதிபரான கிரிகோரி போப் என்பவர் இவ்வித்தியாஸ த்தை சரிப்படுத்த எண்ணி நான்கு நூற்றாண்டுகளில் ஒவ்வொரு நூற்றாண்டின் கடைசியிலும் வருகிற லீப் இயரை லீப் இயராகக்

கணக்கிடாமல் ஸாதாரணவருஷங்களாக எண்ணி அந்தந்த வருடம் பிப்ரவரி மாதம் 28 தினங்களென்றும், நான்காவது நூற்றாண்டின் கடைசியில் வருகிற வருஷத்தை மாத்திரம் லீப் வருஷமாக வைத்து அதற்கு 29 தினங்களென்றும் விதித்தனர். இக் கணக்கில் சுடான மூன்று நாள் போக மீதமிருக்கும் சில்லரை 4000 வருஷங்களுக்கொரு தடவை ஒரு நாள் பேதமாகும். மேற் கண்ட ஏற்பாடு செய்யும் வரை கிரமமாக 10 நாட்கள் குறைந்திருந்தன. இவ்வித்தியாஸத்தையும் சிர்ப்படுத்த கிரிஸ்து பிறந்த 1582 ம் வருஷம் அக்டோபர்-மீ 4உக்குப் பிறகு 15-உ என்று வைத்துக் கொண்டனர். இப்புதிய ஏற்பாட்டை 1752-ம் வருஷத்தில் இங்கிலாந்தில் அநுட்டானத்துக்குக் கொண்டுவந்த போது 11 நாள் குறைந்திருந்ததால் 1752 வது ஸெப்டம்பர்மீ 2-உக்குப் பிறகு 14-உ யெனக் கணக்குவைத்துக் கொண்டனர். ரஷ்யாவில் பழைய வழக்கமே யிருப்பதால் ரஷ்யாவுக்கும் இங்கிலாந்துக்கும் 12 நாட்கள் வித்யாஸப் பட்டு வருகிறது.

சாலிவாஹன சகாப்தத்துடன் 78 கூட்ட கி. பி. வருடமாகும்.

பஸலி.

இது முகமது அரசனுடைய ஆட்சி நாளில் ரெவின்யூ காரியங்களுக்காக இந்தியாவின் வடபாகத்தில் அநுஷ்டிக்கப் பெற்று, அவ்வரசன் மகன் ஹாஜிகானுல் இரண்டு வருஷங்களுக்குப் பின் இத் தென்னிந்தியாவில் அமுலுக்குக் கொண்டுவரப் பட்டது. ஆகவே இதிலும் 2 வருஷம் வித்தியாஸமுண்டு. இவ்வருஷ ஆரம்பம், கர்நாடக தேசத்தில் ஜூலீல மீ 14உ முதலாக (ஆடி-மீ 1உ) நடந்துவந்தது. இருவகைத் தேதிகள் கலந்து குழப்பத்திற்குக் காரணமாயிருந்ததால் ஜூலீல-மீ 1உயே முதலாக ஆங்கில அரசாங்கத்தார் நிர்மானித்து அதன்படி பஸலி நடந்துவருகிறது. பஸலி கலி 3691-ல் ஆரம்பம். சாலிவாஹன சகாப்தத்தில் 513 வருஷங்கள் கழிக்க பஸலி வருஷமாகும்.

ஹிஜரி.

மஹமது நபி மெக்காவிலிருந்து மதினைவுக்குச் சென்ற காலமாகிய இதை மஹம்மதியர் தங்களுக்கு உரிய வருஷமாகக் கணக்கிடுகின்றனர். இது கி. பி. 622-ம் வருஷம் ஜூலீல மாதம் 16உ வெள்ளிக்கிழமை ஆரம்பமாகும். வருஷப்ரமாணம், 354 நாள் 48 நாழிகை, 8 விநாடி, 36 தற்பரையாகும் (சாந்த்ரமான ரீதியாக கடக்கிறது.) இவ்விதம், 354 நாட்களும், 30 வருஷங்கள் கொண்ட ஒரு வட்டத்தில், 2, 5, 7, 10, 13, 16, 21, 24, 26, 29-இத்தொகை மீதம் வரும் வருஷங்களில் 355 நாட்களுமாகக் கணக்கிடப் பட்டு வருகிறது. இவ்வருஷம் 210 வருஷத்துக் கொருமுறை தேதி கிழமைகள் எல்லாம் ஒன்றுக வரும். சாலிவாஹன சகாப்தத்தில் 506-வருஷங்கள் கழிக்க இஜரி வருஷமாகும்.

வருஷம்.

வருஷம், மாதம், நக்ஷத்திரம் முதலியவைகளின் பெயர்களும் மற்றும் பலவிஷயங்களும் புத்தக ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

வருஷம் என்பது மூன்று விதம். 1 ஸௌரமானம், 2 சாந்த்ரமானம் 3 நக்ஷத்ரமானம். 12 ஸௌர மாதங்கள் கொண்டது ஒரு ஸௌரமான வருஷமாகும். இது பரஹிதப்படி 365 தினம், 15 நாழிகை 31 விகாடி 15 தற்பரை. சாந்த்ரமான வருஷமென்பது ஸௌரமான வருஷத்தை விடச் சிறியது. ஸாதாரணமாக 12 மாதங்களும், சில ஸமயங்களில் 13 மாதங்களுமுடையது. நக்ஷத்ரமான வருஷம்- ஸௌரமான வருஷத்தைப் பார்க்கிலும் கொஞ்சம் பெரியதாகும். இதன் ப்ரமாணம் 366 தினம் 15 நாழிகை, 31 விநாடி, 15 தற்பரை, அதாவது ஒருநாள கூடுதல். எவ்வித தினம் பழக்கத்திலிருந்தாலும், கிழமை ஸௌரமானத்தையே அனுஸரிக்கும்.

மாதம்.

சூரியன் ஒரு ராசியில் பிரவேசித்தது முதல் அடுத்த ராசியில் பிரவேசிக்கும் வரையிலுள்ள காலம் ஸௌரமான மாதமாகும். இது சூரியனின் கதியை அனுஸரித்திருப்பதால் மாதம் 29 தினத்துக்குக் குறையாமலும், 32 தினங்களுக்கு அதிகப்படாமலும் இருக்கும். சாந்த்ரமான மாதமென்பது சூரியனும் சந்திரனும் ஒன்றுசேர்ந்து பிரிந்தது முதல் மறுபடியும் ஒன்றுசேரும் வரையிலுள்ள காலமாகும். இது எப்போதும் 30 சாந்த்ரமான தினங்கள்தான். இது சற்றேறக்குறைய 29 ஸௌரமான தினங்களாகும்.

தினம்.

இது சூரிய உதயமுதல் மறுநாள் சூரியன் உதயம் வரையுள்ளது. இத்தினத்தை ஆங்கிலேயர்கள் இரவு நடுநிசியிலிருந்து மறுநாள் நடுநிசி வரையும், மஹம்மதியர்கள் சூரிய அஸ்தமனமுதல் மறுநாள் அஸ்தமனம் வரையும் தினமாகக் கொள்ளுகிறார்கள்.

நக்ஷத்ரம்.

சூரிய மார்க்கத்தை 27 பங்கு செய்து அவற்றின் ஒவ்வொன்றுக்கும் 27 நக்ஷத்ரங்களென்று பெயரிட்டிருப்பதில் சந்திரன் ஒரு நக்ஷத்ரத்திலிருந்து அடுத்த நக்ஷத்ரத்துக்குப் போகும் காலம் ஒவ்வொருதினத்திலும் நக்ஷத்ரத்தின் நாழிகையாகும்.

திதி.

சூரியனிடமிருந்து சந்திரன் 12 பாகை தூரம் பிரியவேண்டிய காலமாகும்.

அஹர்.

ஒவ்வொரு நாளிலும் பகல் இரவு நாழிகை ஒரே மாதிரியாக இருப்பதில்லை. இதற்குக் காரணம் பூமி சூரியனுக்கு நேரில் இல்லாமல் சிறிது தள்ளி இருப்பதால் சூரிய கிரணங்கள் எப்போதும் ஒரே அளவாய் விழாமல் சித்திரை மாத முதல் புரட்டாசி மாதம் வரை வடபாதியில் அதிகமாயும், ஐப்பசி மாத முதல் பங்குனி மாதம் வரை தென்பாதியில் அதிகமாயும் விழுகின்றது. பூமி மத்யத்துக்கு வடபாகத்திலிருக்கிற நமக்கு சித்திரைமுதல் புரட்டாசி வரை பகற்காலம் நீண்டும், ஐப்பசி முதல் பங்குனி வரை இராக்காலம் நீண்டும் கடக்கிறது.

அஹர்கணிக்க:— பங்குனி 12உ முதல் ஆனி 12உ வரை 43, 38, 16- வினாடிகளை முறையே முதல் மாதம் 12உ அஹஸின் நாளிலிருந்து கூட்டியும், ஆனி-மீ 1உ முதல் புரட்டாசி-மீ 12உ வரை 16, 38, 48 வினாடிகளை முறையே முன்போல் கழித்தும், புரட்டாசி-மீ 12 முதல் மார்கழிமீ 12உ வரை 48, 38, 16 விநாடிகளை முறையே முன்போல் கழித்தும், மார்கழி 12உ முதல் பங்குனி வரை 16, 38, 48 விநாடிகளை முறையே முன்போல் கூட்டியும் கண்டு கொள்வது.

யோகம்.

சூரியசந்திரர்களின் ஸ்தானபேதம் எவ்விதம் திதியாகிறதோ அவ்விதமே கூட்ட யோகமாகும்.

கரணம்.

திதியின் பாதிபாகம் கரணமாகும்.

வருஷாதயம் அறிய.

ஒவ்வொரு வருஷமும் முன் வருஷம் எந்தக் கிழமையில் பிறந்ததோ அதற்கடுத்த கிழமையிலும்: எந்த திதியிற்பிறந்ததோ அதற்கு 12-வது திதியிலும், எந்த நக்ஷத்ரத்தில் பிறந்ததோ அதற்கு 11-வது நக்ஷத்ரத்திலும், 16 நாழிகைக்கு மேலும் வருஷம் பிறக்கும்.

வருஷம் பிறந்த	4-வது வாரம்		5-வது நக்ஷத்ரத்தில்	வைகாசிமீ
...	7	...	9	... ஆனி மீ
...	4	...	13	... ஆடி மீ
...	7	...	17	... ஆவணிமீ
...	3	...	21	... புரட்டாசிமீ
...	6	...	24	... ஐப்பசி மீ
...	1	...	27	... கார்த்திகைமீ
...	2	...	2	... மார்கழி மீ
...	4	...	4	... தை மீ
...	5	...	6	... மாசி மீ
...	7	...	9	... பங்குனி மீ

பிறக்கும்.

ருது

இது இரண்டு மாதம் கொண்டது, சூரியன் கிழக்கிசையின் தென்பாகத்தில் சில காலமும், வடபாகத்தில் சில காலமும் பூமத்ய ரேகைக்கு நேராகச் சில காலமும், இருப்பதால் பூமியின்மேல் ஒரே அளவில் சூரியகிரணம் விழாமல் மாறி விழுகிறது. இப் பேதத்தையனுஸரித்து குளிர் உஷ்ணகிலைகள் வேறுபடுகின்றன. இவ்

வியல்பை உத்தேசித்தே ஒருவருடத்தை ஆறு பருவங்களாகப் பிரித்திருக்கின்றனர்.

அயனம்.

பூமத்ய ரேகைக்கு வடக்கில் சூரியனிருக்கும் கால அளவுக்குப் பிறகு தெற்கில் திரும்பும் காலம் தக்ஷிணாயனம் என்றும், தெற்கிலிருந்து வடக்கே செல்லும் காலம் உத்தராயண மென்றும் சொல்லப்படுகிறது.

கந்தாயம்.

வருஷ ஆரம்பத்தில் வரும் கிழமை திதி, நக்ஷத்ரம், யோகம், கரணம்-இவைகளைக் கூட்டி இத்துடன் அசுவதி முதலான நக்ஷத்ரங்களின் எண்ணிக்கையைக் கூட்டி மூன்றால் பெருக்கி 8-ஆல் வகுக்க மீதம் முதற்கந்தாயம். 7 ஆல் பெருக்கி 3-ஆல் வகுக்க வருவது நடுக்கந்தாயம். 3-ஆல் பெருக்கி 5-ஆல் வகுக்க வருவது கடைசி கந்தாயமாகும்.

இதர கணித ஸம்பந்தமான விஷயங்களை பஞ்சாங்க கணித ஸாரம் என்னும் நமது நூலில் மிகவும் விவரமாக ஜந்திரிகளுடன் காணலாம்.

அக்னி நக்ஷத்ரம்

பரணி 3-ம் பாதம் முதல் ரோஹிணி முதற் பாதம் முடியும் வரை சூரியன் நிற்கும் காலம்.

அக்னி யோகம்

ஞாயிறில் த்வாதசி, திங்களில் ஷஷ்டி, செவ்வாயில் ஸப்தமி, புதனில் அஷ்டமி, வியாழனில் நவமி, வெள்ளியில் தசமி, சனியில் ஏகாதசி வருபவை.

அனல நக்ஷத்ரம்

செவ்வாய் நின்ற நக்ஷத்ரத்துக்கு 7, 14, 16, 25-நக்ஷத்ரங்களாக வருபவை. இது தோஷமுள்ளவை.

நாள் நிர்ணயம் செய்ய

நாட்களை நிச்சயம் செய்யும் முறையில் நவீன ஸித்தாந்தங்களுக்கும் புராண ஸித்தாந்தங்களுக்கும் அபிப்பிராய பேதங்களுண்டாகின்றன. சூரியன் பூமியைச் சுற்றினாலும் சரி; அல்லது பூமிக்கும் ஆகாசத்திற்கும் உள்ள ஆகர்ஷண சக்தி ஆகிய தருவயந்திர சுற்றுதலின் வேகத்தால் பூமியே சுற்றினாலும் சரி; எப்படியாயினும் பூமியில் எவ்விடங்களுக்கு நேராக சூரியன் சஞ்சரிக்கிறானே; அப்பாகங்களில் பகல் என்றும் மறைந்த பாகங்களில் இரவென்றும் சொல்லப் படுகிறது. இதுவே ஒரு நாள், அதாவது 60 நாழிகை. இதுவே ஹோரை, முகூர்த்தம், மணி முதலிய வைகளாகப் பிரிக்கப்படுகிறது.

அவச்சாயை பாதச்சாயைகள்.

மாதம்	10ஃ வரை	20ஃ வரை	30ஃ வரை
சித்திரை, ஆவணி	1½	1	1½
வைகாசி புரட்டாசி	1½	2	2½
ஆனி	2½	3	2½
ஆடி பங்குனி	2½	2	1½
ஐப்பசி	2½	3	3½
கார்த்திகை	3½	4	4½
மார்கழி	4½	4½	4½
தை	4½	4	3½
மாசி.	3½	3	2½

பகல் நாழிகை அறிய

பகல் நாழிகையை பாதியாக்கி 7ல் பெருக்க வருவது த்ருவமாகும். கிழல் தோன்றும் சமதளத்தில் நேராக நின்று அளந்த அடியில் மேலே கண்டபடி அந்தந்த மாதங்களின் பாகங்களுக்கு ஏற்ற அவச்சாயை, பாதச்சாயை அடியைக் கழித்து மீதியில் 7 கூட்டி வந்த தொகையால் துருவத்தைப் பிரிக்க வரும் ஸங்கையை நாழிகை. மீதத்தை 60-ல் பெருக்கி முன்போல் பிரிக்க விநாடியாகும். நடுப்பகலுக்கு முன்னேயாகில் சூரியோதயம் முதல் சென்ற நாழிகை விநாடியாம். பின்பாகில் செல்லவேண்டிய நாழிகை விநாடியாம்.

ஷட்வர்க்கங்கள்.

சாசி, ஓரை, த்ரேக்காணம், நவாம்சம், துவாதசாம்சம், த்ரிம்சாம்சம் என்பவைகள்.

இவைகள் பார்க்கும் வகை:—

ஜன்மலக்நமே ராசிலக்நம் என்றறியவும். ஓரை—ஜன்மலக்ன நாழிகையை இரண்டு கூறிட்டு மேஷம், மிதுனம், சிங்கம், துலாம், தனுசு, கும்பம் இவை ஜன்மலக்நமாகில் முதலாவது பாகத்தில் ஜாக நாழிகை வரில் சூரியஓரை (சிம்ம ஓரை) என்றும், இரண்டாவது பாகத்தில் ஜாக நாழிகையாகில் சந்திரஓரை (கடக ஓரை) என்றும், விருஷபம், கடகம், கன்னி, விருச்சிகம் மகரம், மீனம் இவைகள் ஜன்மலக்நமாகில் முதலாவது பாகத்தில் ஜாக நாழிகை வரில் சந்திர ஓரை (கடக ஓரை) என்றும், இரண்டாவது பாகத்தில் ஜாக நாழிகை வரில் சூரிய ஓரை (சிம்ம ஓரை) என்றும் அறிக.

த்ரேக்காணம்—ஜாகாலத்தில் ஜன்மலக்நத்தில் சென்ற விஞ்டிகளை மூன்றில் பெருக்கி, ஜன்மலக்நத்தின் பரம விஞ்டிகளால் வருக்கவரும் ஈவுக்கு அடுத்த த்ரேக்காணம் என்று காணுவதில் ஈவுத்துகை வராமலிருந்தாலும், மூன்றுவந்தாலும் முதலாவது த்ரேக்காணம் (லக்நராசி த்ரேக்காணம்). 1 துகை வந்தால் இரண்டாவது த்ரேக்காணம் (லக்நத்துக்கு ஐந்தாமிட ராசி த்ரேக்காணம்), 2 துகை வந்தால் மூன்றுவது த்ரேக்காணம் (லக்நத்துக்கு ஒன்பதாமிடராசி த்ரேக்காணம்) என்றும் அறிக.

நவாம்சம்—ஜன்மலக்நத்தில் சென்ற விஞ்டிகளை ஒன்பதில் பெருக்கி ஜன்மலக்நத்தின் பரமவிஞ்டிகளால் வருக்க வரும் ஈவுத்துகை வராமலிருந்தாலும், 9 வந்தாலும் முதலாவது அம்சம் என்றும், 1 வந்தால் 2 வது அம்சம், 2 வந்தால் 3 வது அம்சம், 3 வந்தால் 4-வது அம்சம், என்றும் இவ்விதமே மேலும் பார்த்துக் கொள்ளவும்.

இப்படிப்பார்ப்பதில் ஜன்மலக்நம் மேஷம், ஸிம்மம், தனுசு, ஆகவிருந்தால் மேஷம் முதல் தனுசு வரை ஒன்பது அம்சங்களையும், ஜன்மலக்நம் விருஷபம், கன்னி, மகரமாகவிருந்தால் மகரம் முதல் கன்னி வரை ஒன்பது அம்சங்களையும், ஜன்மலக்நம் மிதுனம், துலாம் கும்பம் இவைகளாகில் துலாம் முதல் மிதுனம் வரை ஒன்பது அம்சங்களையும், ஜன்மலக்நம், கடகம், விருச்சிகம், மீனம் ஆகில் கடகம் முதல் மீனம் வரை ஒன்பது அம்சங்களையும் அறிந்திடுக.

துவாதசாம்சம்:—ஜன்மலக்நத்தில் சென்ற விஞ்டிகளை பனிரெண்டினால் பெருக்கி ஜன்மலக்ந பரம விஞ்டிகளால் வருக்க வருகிற ஈவு இல்லாமல் போனாலும் 12 வந்தாலும் முதலாவது அம்சம் என்றும், 1 வந்தால் 2-வது அம்சம் என்றும், 2 வந்தால் 3-வது அம்சம் என்றும் இவ்விதமே மேலும் பார்த்துக்கொள்ளவும்.

இப்படிப் பார்ப்பதில் ஜன்மலக்நம் மேஷமானால் மேஷம் முதல் மீனம் வரை 12 அம்சங்களையும், விருஷபமானால் விருஷபம் முதல் மேஷம் வரை 12 அம்சங்களையும் மிதுனமானால் மிதுனம் முதல் விருஷபம் வரை 12 அம்சங்களையும் மற்ற லக்நங்களுக்கும் இதே மாதிரி காண்க.

த்ரிம்சாம்சம் பார்க்க.

(a) வழி.

மேஷம், மிதுனம், சிம்மம், துலாம், தனுஸு, கும்பலக்நங்களுக்கு

4 வரை	5 முதல் 9 வரை	10 மு 17	18 மு 24	25 மு 29
செவ்வாய்	சனி	குரு	புதன்	சுக்ரன்

(b) வழி.

விருஷபம் கடகம், கன்னி, விருச்சிகம், மகரம், மீனலக்நங்களுக்கு

4 வரை	5 முதல் 11 வரை	12—19	20—24	25—29
சுக்ரன்	புதன்	குரு	சனி	செவ்வாய்

த்ரிம்சாம்சம்:—ஜன்மலக்நத்தில் சென்ற விஞ்டிகளை முப்பதினால் பெருக்கி லக்ந பரம விஞ்டிகளால் வருக்க வருகிற ஈவு இல்லாமல் போனாலும், 30 வந்தாலும். 1 முதல், 4 வரை ஈவு தொகை வந்தாலும் ஜன்மலக்நம், மேஷம், மிதுனம் ஸிம்மம், துலாம், தனுசு கும்பம் இவைகளாகில், (a) வழிப்படி செவ்வாய் த்ரிம்சாம்சம் என்றும், ஈவுத்துகை 5 முதல் 9 வரை வந்தால் சனித்ரிம்சாம்சம் என்றும், ஈவுத்துகை 10 முதல் 17 வரை வந்தால் குருத்ரிம்சாம்சம் என்றும் ஈவுத்துகை 18 முதல் 24 வரை வந்தால் புதத்ரிம்சாம்சம் என்றும், ஈவுத்துகை 25 முதல் 29 வரை வந்தால் சுக்ர த்ரிம்சாம்சம் என்றும்,

ஜன்மலக்நம் விருஷபம், கடகம், கன்னி, விருச்சிகம், மகரம், மீனம் இவைகளாகில் ஈவுத்தொகை வராமல் போனாலும், ஈவு 30

வந்தாலும் சுவு 1 முதல் 4 வரை வந்தாலும் (b) வழிப்படி சுக்ரத்ரிம் சாம்சம் என்றும், சுவுத்துகை 5 முதல் 11 வரை வந்தால் புதத்ரிம் சாம்சம் என்றும், சுவுத்துகை 12 முதல் 19 வரை வந்தால் குரு த்ரிம்சாம்சம் என்றும் சுவுத்துகை 20 முதல் 24 வரை வந்தால் சனித்ரிம்சாம்சம் என்றும், சுவுத்துகை 25 முதல் 29 வரை வந்தால் செவ்வாய் த்ரிம்சாம்சமென்றும் அறியவும்.

ஷட்வர்க்க லக்நம் பார்க்கும் வழி.

கவக்ரகங்களின் வர்க்கஸ்தானங்களை அவரவர்களின் ஸ்புடங் களைக்கொண்டு அறியவேண்டுமாகையால் நக்ஷத்ர பாத சாரங் களைக் கொண்டு அறியக்கூடிய ராசி கவாம்ச வர்க்கங்களை அறிய மட்டில் இப்புத்தகத்தில் முன்னமேயே வழி கூறியிருக்கிறது.

உதாஹரணம்:—மேஷம் ஜன்ம லக்நமென்றும், அதில் ஜனனகாலத்தில்சென்ற நாழிகை 1-15 வினாடி என்றும்வைத்துக் கொண்டு அதற்கு ஷட்வர்க்க லக்நங்களைக் கண்டுபிடிக்கும் வழி.

ஜன்மலக்நத்தில் சென்ற வினாடிகளையும், லக்நத்தின் பரமவினாடி களையும் அறிய வழி.

மேஷலக்நத்தில் சென்ற நாழிகை வினாடிகளை வினாடியாக்க $1 \times 60 = 60$, $60 + 15 = 75$ வினாடி. இதுவே மேஷலக்நத்தில் சென்ற வினாடிகள்; மேஷலக்நத்தின் பரமநாழிகை 4-15 வினாடிகளை வினாடியாக்க $4 \times 60 = 240$, $240 + 15 = 255$ பரமவினாடிகள்.

ராசி அறிய:—ஜன்மலக்னம் மேஷமாதலால் ராசி லக்நம் மேஷமென்றறியவும்.

ஓரை அறிய:—ஜன்மலக்னமான மேஷம் நாழிகை $4\frac{1}{4}$ஐ இரண்டு கூறிட பாகம் 1-க்கு $2\frac{1}{8}$ நாழிகையாகிறது. ஜனன நாழி கையாகிய $1\frac{1}{4}$ என்பது, முதல் பாகத்தில் இருப்பதால் மேஷலக் னத்துக்கு முதலாவது ஓரை சூரிய ஓரை என்றறிக.

த்ரேக்காணம் அறிய:—மேஷத்தில் சென்ற வினாடிகள் $75 \times 3 = 225$, $225 \div 255 = 0$ சுவுத்துகை வராமலிருப்பதால் முதலாவது த்ரேக்காணம். ஆகையால் த்ரேக்காணம் லக்நம் மேஷம் என்றறியவும்.

நவாம்சம் அறிய:—மேஷத்தில் சென்ற வினாடிகள் $75 \times 9 = 675$, $675 \div 255 =$ சுவு 2-ம் மீதம் 165-ம் வருகிறது. சுவு இரண்டுவந்திருப்பதால் 3-வது நவாம்சம் என்றறிந்து மேஷத் துக்கு மேஷம் முதல் எண்ணிப்பார்க்க மிதுனம் வருகிறபடியால் நவாம்ச லக்நம் மிதுனமென்றறியவும்.

துவாதசாம்சம் அறிய:—மேஷத்தில் சென்ற வினாடிகள் $75 \times 12 = 900$, $900 \div 255 =$ சுவு 3ம் மீதம் 135-ம் வருகிறது. சுவு 3 வந்திருப்பதால் 4-வது அம்சம் என்றறிந்து மேஷம் முதல் எண்ணிப்பார்க்க கடகம் வருவதால் துவாதசாம்ச லக்நம் கடகம் என்றறியவும்.

த்ரிம்சாம்சம் அறிய:—மேஷத்தில் சென்ற வினாடிகள் $75 \times 30 = 2250$; $2250 \div 255 =$ சுவு 8-ம் மீதம் 210-ம் வருகிறது. ஜன்மலக்நம் மேஷமானதால் (a) வழிப்படி பார்க்கில் சுவுத் தொகையானது 8. இது 5 முதல் 9 வரைக்குள் இருப்பதால் சனி த்ரிம்சாம்சம் என்றறியவும். சனிக்கு மகரம், கும்பம். என்கிற 2 வீடுகள் இருப்பதில் ஜன்மலக்நமாகிய மேஷம் ஒற்றை ராசியாகை யால் ஒற்றை ராசியான கும்பத்தையே த்ரிம்சாம்சலக்நம் என் றறிந்துகொள்ளவும்.

ஜனன காலத்தில் நக்ஷத்ர தசையில் கர்ப்பச் செல் நீக்கி பாக்கி யிருக்கும் காலம் அறிகிற வழி.

ஜன்ம நக்ஷத்ரத்தில் சென்ற நாழிகை வினாடிகளை வினாடி களாக்கி அந்தந்த நக்ஷத்ரங்களுக்குரிய கிரகதசா வருஷங்களால் பெருக்கி ஜன்ம நக்ஷத்ரத்தின் பரம வினாடிகளால் வகுக்க வரும் சுவு வருஷம். மீதத்தை 12-ல் பெருக்கி பரம வினாடிகளால் வகு க்க, வரும் சுவு மாதம். மீதத்தை 30-ல் பெருக்கி பரம வினாடி களால் வகுக்க, வரும் சுவு தினங்கள். மீதம் பாதிக்கு மேலானல் தினத்தில் ஒரு தினம் சேர்த்துக்கொள்ளவும். இந்த வருஷம் மாதம், தினம் அந்த தசையில் கர்ப்பத்தில் சென்றது. மேலே வரு ஷம் மாதம் தினங்களை அந்த தசை மொத்த வருஷத்தில் கழிக்க, வரும் வருஷம், மாதம் தினங்களே அந்த தசையில் செல்லவேண் டிய பாக்கி வருஷாதிகளாகும்.

உதாஹரணம்:—ஜன்ம நக்ஷத்திரம் அசுவதி. பரம நாழிகை 61 விநாடி 8. மே நக்ஷத்திரத்தில் சென்ற நாழிகை 6 விநாடி 9. இதற்கு தசா சிஷ்டம் அறிய.

அசுவதியில் சென்ற நாழிகை 6 விநாடி 9-ஐ விநாடியாக்க, விநாடிகள் 369 சென்ற விநாடிகள்.

அசுவதியின் பரம நாழிகை $61 \times 60 = 3660$, $3660 + 8 = 3668$ பரம விநாடிகள்.

அசுவதியில் சென்ற விநாடிகள் 369ஐ அந்த நக்ஷத்திரத்திற் குரிய கேது நிரக தசா வருஷங்கள் 7-ஆல் பெருக்க, $369 \times 7 = 2583$. இதை நக்ஷத்திர பரம விநாடி 3668 ஆல் வகுக்க, ஈவு இல்லையாகையால் வருஷம் இல்லை. 2583-ஐ 12-ஆல் பெருக்க, 30996 வருகிறது. இதை பரம விநாடி 3668 ஆல் வகுக்க ஈவு 8 வருகிறபடியால் 8 மாதம் என்றும், மீதம் 1652-ஐ 30-ஆல் பெருக்க, 49560 வருகிறது. இதை பரம விநாடி 3668 ஆல் வகுக்க, ஈவு 13-ம் மீதம் 1876-ம் வருகிறது. மீதம், 3668-க்கு பாதிக்கு மேல் இருப்பதால் தினத்தில் ஒன்று சேர்க்க, 14 தினங்களாகிறது. ஆக, கேது தசை வருஷம் 7-க்கு கர்ப்பத்தில் சென்ற வருஷம் 0 மாதம் 8 தினம் 14 ஆகிறது. இதை கேது தசை வருஷம் 7ல் கழிக்க, செல்ல வேண்டியது வருஷம் 6 மாதம் 3 தினங்கள் 16 என்றறியவும்.

குளிகன் முதலிய உபக்ரஹங்கள் போரும் விதம்.

குளிகன்:— 26, 22, 18, 14, 10, 6, 2-இந்த நாழிகைகள் ஞாயிறுமுதல் சனிவரையில் குளிகனுக்குரிய காலங்களாகும். (இதை அஹஸுக்குத் தக்கபடி விதப்படுத்திக் கொள்ளவேண்டும்.) 10, 6, 2, 26, 22, 18, 14-இந்த நாழிகைக்குள் குளிகனுக்கு முன் போல் இராக்காலங்களிலுள்ள நாழிகைகளாம்.

யமகண்டன்:— 18, 14, 10, 6, 2, 26, 22-இந்த நாழிகைகள் யமகண்டனுக்குரியவை.

அர்த்தப்ரஹரன்:— 14, 10, 6, 2, 26, 22, 18-இவைகள் அர்த்தப்ரஹரனுக்குரிய நாழிகைகளாகும்.

காலன்:— ஞாயிறுமுதல் சனிவரை 2, 26, 22, 18, 14, 10, 6-இவைகள் காலனுக்குரிய நாழிகைகள். இவைகட்கும் அஹஸ் பிரமாணப்படி விருத்தி, குறைவுகளைக் கவனித்துக்கொள்ள வேண்டும்.

சூர்யனின் ஸ்புடத்தில் 4 ராசி 13 பாகைகள் கூட்டினால் தாமஸ்புடமாகும். இத்தாம் ஸ்புடத்தை 12 ராசிகளினின்றும் கழிக்க வருவது வியதீபாத ஸ்புடமாகும். இதனில் 6 ராசிகளைக் கழிக்க பரிவேஷ ஸ்புடமாகும். இதனை 12 இராசிகளில் கழிக்க இந்த்ரதநுஸ்ஸ்புடம் வரும். இதனோடு 17 பாகைகளைச் சேர்த்தால் உபகேதுஸ்புடமாகும். இத்துடன் ஒரு ராசியை மீண்டும் சேர்த்தால் ஸூர்யஸ்புடம் வந்துவிடும்.

குளிகன் த்வாதசபாவ பலன்.

குளிகன் (மாந்தி) லக்னத்திலிருக்க:—திருடன், கொடியன், வேதசாஸ்த்ரார்த்தமறியாதவன், அதிக ஸ்தூல மில்லாதவன், கண்ணில் விகாரமுள்ளவன், அதிகபுத்தியில்லாதவன், அதிகம் புத்ரனில்லாதவன், அதிகமான ஆஹாரம் சாப்பிடுபவன், ஸுகமில்லாதவன், கர்வத்துடன் அலைபவன், அதிககாலம் ஜீவியாதவன், சூரனுக இல்லாதவன், படிப்பில்லாத புத்தியையுடையவன், மிகவும் கோபமுள்ளவனுக ஆவான்.

குளிகன் இரண்டிலிருக்க:—அழகிய வார்த்தையில்லாதவன், சண்டையிடுபவன், தனதான்யங்களற்றவன், அந்யதேசத்தில் வஸிப்பவன், உண்மையில்லாதவன், நுண்ணிய அர்த்தங்களை விவாதிப்பதில் ஸாமர்த்தியமில்லாதவனுகவும் ஆவான்.

குளிகன் மூன்றிலிருக்க:—பிரிவு, மதம், கர்வம் முதலியவைகளோடு கூடினவன், மிகுந்தகோபம், பணம்ஸம்பாதிப்பதில் பரபரப்புடையவன், துக்கம் பயமில்லாதவன், ஸஹோதரனில்லாதவனுகவுமாவான்.

குளிகன் நான்கிலிருக்க:—பந்துக்கள், வாஹனம், பொருள்—இவைகளில்லாதவனுவான்.

குளிகன் ஜந்நிலிருக்க நிலையற்ற புத்தியுடையவனுகவும், கெட்டபுத்தியுள்ளவனுகவும், குறைவான ஆயுளுள்ளவனுகவுமா வான்.

ஆறிலிருக்க அநேக எதிரிகளை நாசம்செய்பவனுகவும், பூத வித்யையில் தேர்ச்சியுள்ளவனுகவும், மிகவும் சிறந்த புத்திரனை யுடையவனுகவுமாவான்.

ஏழாமிடத்திலிருக்க கலஹம் புரிபவனுகவும், பல ஸ்திரீ களுக்கு நாயகனுகவும், எல்லோராலும் வெறுக்கப்பட்டவனுக வும், செய்நன்றிமறப்பவனுகவும், சிறிது அறிவுள்ளவனுகவும், கோபமுள்ளவனுகவுமாவான்.

எட்டிலிருக்க கண்ணில் குறைவுள்ளவனுகவும், முகத்திலும் குறைவுள்ளவனுகவும், குள்ளனுகவுமிருப்பான்.

ஒன்பதிலிருந்தால் பிதாமுதலிய பெரியோர்களில்லாதவ னுவான்.

பத்தாவது ஸ்தானத்திலிருக்க சுபத்தை யளிக்கும் காரியத் தைச் செய்யாதவனுகவும் சகையில்லாதவனுகவு மாவான்.

பதினென்றிலிருக்க: ஸுகியாகவும், புத்ரன், புத்தி, கீர்த்தி, காந்தி இவைகளுள்ளவனுவான்.

பன்னிரண்டிலிருக்க போக்கியங்களில் ப்ரியமில்லாதவனுகவும்' ஏழ்மையையுடையவனுகவும், மிகச்செலவாளியாகவு மிருப்பான்.

குளிகனுடைய திரிகோணராசியிலோ நவாம்சராசியிலோ ஜன்மமிருக்கும்.

குளிகன் மற்ற கிரஹங்களுடன் சேரும் பலன்.

சூரியனுடன் சேர பிதருநாசம். சந்த்ரனுடன்சேர தாய்க் குத் துயரத்தையளிப்பான். செவ்வாயுடன்கூட உடன்பிறந் தோன் நாசம். புதனுடன் கூடினுல் பைத்தியம் பிடித்தவனு வான். குருவுடன்கூடினுல் நாஸ்திகனுவான். சுக்ரனுடன் கூட ஸ்த்ரீயுடன் சேர்க்கையுள்ளவனுவான். சனியுடன் சேர பெ ரியவியாதியுள்ளவனுகவும் அல்பாயுஸாகவுமிருப்பான். ராகு

வுடன்கூட விஷரோகமுள்ளவனுவான். கேதுவுடன்கூட அக்னி பீடையடைவான். நியாஜ்யத்தோடு சேர அரசனுலும் பிச்சை யெடுத்துண்பவனுவான்.

எவ்விடத்திலும் குளிகனுடைய சேர்க்கை தீங்கிழைப்பவை. யமகண்டகனுடைய சேர்க்கை எங்கும் நன்மை பயப்பவை.

கெட்ட பயனை அளிப்பதில் எவ்வளவு அதிகம் குளிகன் வல்லவனை, அவ்வளவு வலிவுள்ளவன் யமகண்டகன் நற்பயனை யளிப்பதில் என்று சொல்லப்படுகிறது. இதர உபக்ரஹங் கள் தீய பலனளிப்பதில் குளிகனில் பாதி பலமுள்ளவை களாகும்.

குளிகன் சனிபோன்றும், யமகண்டகன் குரு போன்றும், அர்த்தப்ரஹரன் புதன் போன்றும், காலன் ராஹு போன்றும் பலனளிப்பர்கள்.

காலன், ராஹு, குளிகன்—இவர்கள் நீசமையளிப்பவர்கள். யமகண்டகன் நன்மையைச் செய்பவன், அர்த்தப்ரஹரன் நல்ல வர்களோடு கூடினில் நன்மையையும், கெட்டவர்களோடு சேர நீசமையையுமளிப்பான்.

லக்னுதிபாவங்கள் அந்தந்த அதிபர்களோடு கூடி தூமாதி களுடன சேர்ந்திருப்பின் அந்தந்த பாவங்கள் நிஷ்பலம்.

தூமன் லக்னுதிபாவத்தில் இருந்தால் எப்போதும் உஷ் ணமும் அக்னிபயமும், மனக்கவலையுமடைவான். **வியதீபாதன்** இருந்தால் ம்ருகங்களிடமிருந்து பயமும், நாற்கால் பிராணிகளால் மரணமும், **பரிவேஷம்** இருக்க ஜலத்திலிருந்து பயமும், நீர்ரோக மும், சிறைச்சாலைவாசம் அல்லது வேறு பந்தனம் உண்டாகும். **இந்த்ரசாபம்** இருக்க கல்லடி, ஆயுதங்களால் காயம், கீழே விழுதல் முதலியன உண்டாகும். **கேது** விருக்க மேலே விழுதல் அடிபடுதல், கார்யநாசம், இடிபயம் முதலியவை உண்டா கும். இவ்வுபக்ரஹங்கள் இருக்கும் பாவாதிபன் தசையில் இப்பலன்கள் கடைபெறும்.

கேது லக்னாதிகளிலிருக்கும் பலன் :—லக்னத்திலிருக்க அல்பாயுள். 2-ல் விகாரமுகமுள்ளவன். 3-ல் பராக்ரமமுள்ளவன். 4-ல் துக்கமுள்ளவன். 5-ல் புத்ரநாசம். 6-ல் சத்ருவால் குழப்பம். 7-ல் காமஸுகமில்லாமை. 8-ல் துஷ்க்ருத்யத்தால் மரணம். 9-ல் தர்மம் முதலியவைகளில் விபரீத புத்தி. 10-ல் அலைந்துதிரிபவன். 11-ல் லாபமடைபவன். 12-ல் தோஷமுள்ளவன்.

தூமாதி ஐந்துக்ரஹங்களும், வெளியில் தெரியாமலே ஸஞ்சரிக்கின்றன. எப்போதாவது தெரிந்தால் அக்காலத்தில் லோகத்துக்கு அசுபமுண்டாகும்.

தூமமென்பது வால் நக்ஷத்ரமென்றும், வியதீபாதம் கொள்ளிக்கட்டை விழுதலென்றும், பரிவேஷமென்பது சூர்யசந்த்ரர்களைச் சுற்றி சில சமயங்களில் காணப்படும் வட்டவடிவமென்றும், இந்த்ர தநுஸ் என்பது ப்ரஸித்தமான வானவில்லென்றும் சொல்வர். கேதுவென்பது உபகேதுவாகும். இது உலகத்துக்குத் தீங்கிழைக்கக் கூடியது.

குளிகன் நிற்கும் ராசிநாதன் கேந்த்ரம் அல்லது த்ரிகோணத்தில் இருக்க அதிக ஐச்வர்யம், நிறைந்த தான்யம், ஸம்பத்து, ஸ்தானங்களையடைவான்.

குளிகன் சனி, ராகுவுடனும், யமகண்டன் குருவுடனும், அர்த்தப்ரஹரன் புதனுடனும், காலன் சூர்யனுடனும், தூமன் சனி செவ்வாயுடனும், வியதீபாதன் குருபுதனுடனும், பரிவேஷன் சூர்யசந்த்ரர்களுடனும், இந்த்ரதநுஸ் சுக்ரனுடனும் உபகேது ராகுகேதுக்களுடனும் கூடினால் தோஷத்தைச் செய்யமாட்டார்களெனச் சிலர் அபிப்பிராயம்.

காலபுருஷனில் அவயவங்கள்.

மேஷம்	—	தலை	துலாம்	—	வஸ்தி
விருஷபம்	—	முகம்	விருச்சிகம்	—	ஆண்குறி
மிதுனம்	—	மார்பு	தனுஸ்	—	துடை
கடகம்	—	ஹ்ருதயம்	மகரம்	—	முழங்தாள்
ஸிம்மம்	—	வயிறு	கும்பம்	—	கணுக்கால்
கன்னி	—	இடை	மீனம்	—	பாதம்.

இராசிகளின் ஸ்தானங்கள்.

மேஷம்	—காடு	துலாம்	—வியாபாரிவீடு
விருஷபம்	—வயல்	விருச்சிகம்	—பொந்து
மிதுனம்	—படுக்கையறை	தனுஸ்	—பிரபுஇடம்
கடகம்	—நீருள்ளபள்ளம்	மகரம்	—நீருள்ளகாடு
ஸிம்மம்	—மலை	கும்பம்	—குசவனிடம்
கன்னி	—பயிருள்ள பூமி	மீனம்	—ஜலம்

வேறு சிலர்

விருஷபம்	—பயிருள்ளவயல்	விருச்சிகம்	—ஆறு
மிதுனம்	—பூந்தோட்டம்	தநுஸ்	—குளம்
கடகம்	—வாய்க்கால்	மகரம்	—ஓடை
கன்னி	—காட்டின் ஸமீபம்	கும்பம்	—ஜலம்
துலாம்	—நதிக்கரை	மீனம்	—ஸமுத்திரம்

12 பாவங்களின் பெயர்

1-வது ஸ்தானம் லக்னம், ஹோரை, கல்யம், தேஹம், உதயம், ரூபம், சரஸ். நடக்கும் ஜன்மம்.

2-வது தனம் வித்யை, ஸம்பத்து, அந்நபானம், வலது கண், முகம், பத்ரிகை, வாக்கு, குடும்பம்.

3-வது துச்சித்தம், மார்பு, வலக்காது, ஸஹஜ, தைரியம், சௌர்யம், விக்ரமம், ஸஹோதரம்.

4-வது க்ரஹம், க்ஷேத்ரம், மாமன், மருமான், பந்துஸகிதன், வாஹனம், தாய், ராஜ்யம், பசு, ஏருமை, ஸுகந்தம், வஸ்த்ரம், பூஷணம், பாதாளம், ஹிபுகம், சுகம், ஜலம். ஸேது, நதி.

5-வது அரசாங்கம், மந்த்ரி, ஆத்மா, புத்தி, வரக்கூடிய ஜன்மம், ஜ்ஞானம், ப்ராணன், புத்ரன், வயிறு, வேதம், ஸ்மருதி.

6-வது கடன், ஆயுதம், திருடர், காயம், ரோகம், சத்ரு, ஜ்ஞாதி, யுத்தம், கெட்டகார்யம், பாபபயம், அவமானம்.

7-வது மருமகன், மனைதரியம், காமம், த்யூனம், வழி, லோகம், பதி, பார்யை, மார்க்கம்.

8-வது மாங்கல்யம், ரந்த்ரம், மலினம், மனோவியாதி, அவமானம், ஆயுஸு, க்லேசம், அபவாதம், மரணம், அசுத்தி, இடையூறு, வேலியாள்.

9-வது சூர்யன், தெய்வம், பித்ருக்கள், சுபம், முன்ஜன்மம், பூஜை, தபஸ், புண்யம், பேரன், ஜபம், பெரியோர், வம்சம்.

10-வது வியாபாரம், ஆஸ்பதம், மானம், கர்மம், ஜயம், ஸத்கீர்த்தி, யாகம், ஜீவனம், ஆகாயம், ஆசாரம், குணம், நடை உத்தரவு, மேஷ்டரணம்.

11-வது லாபம், ஆதாயம், வரவு, ஸித்தி, விபவம், ப்ராப்தி, பலம், ச்ரேஷ்டமாயிருப்பது, அண்ணன், தமக்கை, இடது காது, ரஸத்தோடு கூடியிருப்பது, ஸந்தோஷம், கேட்பது.

12-வது துக்கம், பாதம், இடதுகண், கோட்சொல்லுதல், அந்த்யம், தரித்ரம், பாவம், சயனம், செலவு, சிப்பம், பந்தம்.

லீநஸ்தானம்:— 3, 6, 8, 12,–மிடங்கள்.

துஸ்ஸ்தானம்:— 6, 8, 12–மிடங்கள்.

க்ரஹங்களால் பார்க்கக் கூடியவை.

ரவியினால் தாம்ரம், பொன், பித்தா, சுபபலன், ஆத்ம ஸௌக்யம், பிரதாபம், தைரியம், சௌக்யம், ஜயம், ராஜ ஸேவை, பிரகாசம், சைவமானவை, காடுமலைகளில் ஸஞ்சாரம், தேஹமகார்யப்ரவ்ருத்தி, தேவஸ்தானம், உத்ஸாகம், உரப்பு.

சந்திரனால் மாத்ருஸௌக்யம், மனத்தெளிவு, ஸமுத்ரஸ்நானம், வெண்சாமரம், குடை, விசிறி, பழங்கள், புஷ்பம், பயிர், க்ருஷி, கீர்த்தி, முத்து, வெண்கலம், வெள்ளி, நித்திப்பு, பால், வஸ்த்ரம், ஜலம், பசு, ஸ்திரீகளின் சித்தி, சுகபோஜனம், தேஹ ஸௌக்யம், ரூபம்.

செவ்வாயால் பலம், பூமியில் உண்டாதல், ஸஹோதர குணம், கொடியதன்மை, யுத்தம், ஸாஹஸம், விரோதம், சமையல்,

அக்னி, தங்கம், தாயாதி, ஆயுதம், திருடர், சத்ரு, உத்ஸாஹம், பிறர்மனை சேரல், பொய்பேசல், :வீர்யம், மன உறுதி, பாவம், படைத்தலைமை, காயம்.

புதனால் படிப்பு, சுபவார்த்தை, வித்யைகளில் சாமர்த்யம் படித்தவர்களின் துதி, மாமன், பேசுவதில் வல்லமை, தேவதாபாஸனை முதலியவை, யுக்தி, புத்தி, யாகம், விஷ்ணு ஸம்பந்தமான கார்யம், உண்மை வார்த்தை, சுத்தம், விளையாடுமிடம், சில்பம், பந்து, இளவரசு, மித்ரர்கள், ஸஹோதரபுத்ரன்.

குருவினால் ஜ்ஞானம், நற்குணம், புத்ரன், மந்த்ரி, ஆசாரம், பெரியோர்களின் ப்ரபாவம், வேதம், புராணம், புத்தி, மிக உயர்ந்ததன்மை, நன்மார்க்கம், வேதம் முதலியவைகளில் பக்தி, யாகம், தவம், சாத்தை, பொக்கிஷம் படிப்பாளியின் தன்மை, இந்த்ரிய ஜயமுள்ளதன்மை, நாயகன், சுகம், பரிசு, தயை.

சுக்ரனால் ஐச்வர்யம், வாஹனம், வஸ்த்ரம், ஆபரணம், புதையல், த்ரவ்யம், ஸங்கீதம், மனைவி, ஸௌக்யம், வாஸனாத்ரவ்யங்கள், புஷ்பம், காமபோகம், படுக்கை, தனவானாயிருக்கை, கவித்வநிறமை, அதிகஸ்த்ரீஸங்கம், ஸ்த்ரீலோல, கொழுப்பு, மந்த்ரியாயிருப்பது, ரஸமானவார்த்தை, விவாஹகார்யம், உத்ஸவம்.

சனியினால் ஆயுள், மரணம், பயம், தோஷத்தன்மை, துக்கம், அவமானம், வியாதி, ஏழ்மை, கூலி, அபவாதம், கலக்கம், நீட்டு, தாமஸம், ஆபத்து, கீழ்த்திருக்கை, நீசர்களுடன் சேர்க்கை, எருமை, சோம்பல் கடன், இரும்பு ஸம்பந்தமானது அடிமைத்தொழில், பயிர்க்ருயாஸாதனம், காராக்ருஹம், பந்தனம்.

சூர்யன் முதலியவர்களின் ஸ்வரூபம்.

சூர்யன்:—பித்தம் ஏறும்புகளில் வருத்துடையவர், குறைந்த மயிர், சிகப்பு கறுப்பு கலந்த உருவம், சிவந்தபார்வை, சிவந்த வஸ்த்ரமுள்ளவன் சதுரவடிவுள்ளவன், சூரன், அதிககோபமுள்ளவன், பெரியதோள்களையுடையவன்.

சந்த்ரன்:—பெருத்ததேஹம், யுவாவும் வ்ருத்தனுமானவன், இளைத்த சரீரமுடையவன், வெளுப்பு, அழகானகண்கள், கறுப்பாகவும், நுட்பமாகவுமுள்ள கேசமுள்ளவன், ரக்தபலமுடைமை,

ம்ருதுவான வார்த்தை, வெள்ளைவஸ்த்ரம், மஞ்சள் வெண்மை கலந்தநிறம். வாதம் கபம் நிறைந்தவன், ம்ருதுவான ஸ்வபாவம்.

செவ்வாய்:—இடையில் இளைத்தவன், சுருண்டும் அழகியதுமான கேசம், கொடியபார்வை, பித்தம், உக்ரபுத்தி, சிவந்த வஸ்த்ரம், சிவந்ததேஹம், அதிகோபம். அதிகக்கொடையெளவனப்பருவம், அதிகமஜ்ஜையுள்ளவன்.

புதன்:—அருகம்புல்போல சரீரம், மூன்று தோஷங்களும (வாதபித்தகபங்கள்) கலந்தவன். நரம்புள்ளவன். இனியவார்த்தை, சிவந்துநீண்ட கண்கள், பச்சைநிறவஸ்த்ரம், தோலில் வலுவுள்ளவன், ஹாஸ்யத்தில் ருசியுள்ளவன், ஸமமான அங்கங்களையுடையவன்.

குரு:—தங்கநிறமானகாந்தி, செம்மட்டைமயிர், பூனைக்கண், பெருத்துயர்ந்த மார்பையுடையவர், பெருத்தஉருவமுள்ளவன். கபப்ரக்ருதி, உயர்ந்தபுத்தி, தேவதைகளால் துதிக்கப்படுபவர், ஸிம்ஹாஸநமுள்ளவர், தனப்ரதானர்.

சுக்ரன்:—அழகியவஸ்த்ரம், சுருண்டிருண்ட தலைமயிர், ஸ்தூலதேஹம், சுபவாயுப்ரக்ருதி, அருகம்புல்போன்ற நிறம். அழகானசரீரம், அகன்றகண்கள், ஸம்பாதிக்கப்பட்ட சுக்லவ்ருத்தியையுடையவன்.

சனி:—ஒருகால் குறைவுள்ளவன், ஆழமான கண்கள், வெளுப்பு மஞ்சள்கலந்தவர்ணம், இளைத்ததும் நீண்டதுமான சரீரம், நரம்பு அதிகமுள்ளவன் சோம்பேறி, கறுப்பான அவயங்களையுடையவன், வாயு ஸ்வபாவன், மிகக்கொடுமை, சிறுநரம்பு படர்ந்தவன், தயையில்லாதவன், பிடிவாதக்காரன், பெருத்தபல் நகமுள்ளவன், கடினமான அங்கம் ரோமம் இவைகளுள்ளவன், சுத்தமில்லாதவன், தாமதமானஸ்வபாவம், பயங்கரன், கோபி, இழித்தன்மை, கறுத்தவஸ்த்ரமுள்ளவன்.

சூரியன் முதலியோர் இருப்பிடம்.

சூரியன்:—சிவாலயம், வெளியும் ப்ரகாசமுள்ள நிர்ஜலபூமி, இழக்கு.

சந்த்ரன்: துர்க்காஸ்தானம், ஸ்த்ரீகளிருக்குமிடம், ஜலம் கோடி, மது இவைகளுள்ள இடம், வாயு மூலை.

செவ்வாய்: திருடன், ம்லேச்சர்கள், நெருப்பு–இவைகளுள்ளவிடம், யுத்தபூமி, தெற்கு.

புதன்: வித்வான், விஷ்ணு, ஸபையுள்ளவிடம், விளையாட்டிடம், கணக்குப்பார்க்குமிடம், வடக்கு.

குரு: நிதி, அரசு, பிராமணர், தேவதைகளிருக்குமிடம், ஈசானியம்.

சுக்ரன்: வேசிகள் தெரு, அந்தப்புரம், நடனஸ்தலம், படுக்கையறை அக்னிமூலை.

சனி: தாழ்ந்தஜாதிகள் வஸிக்குமிடம், அசுத்தஸ்தலம், ஐயனர் வஸிக்கும் ஸ்தானம், மேற்கு.

ராகு-கேது: வல்மீகம், ஸர்ப்பங்கள் வஸிக்குமிடம், இருண்டகுஹை, தென்மேற்கு.

சூரியன் முதலியோரால் காணக்கூடியவை.

சூரியனால் சைவம், வைத்யம், அரசன், யாகம்செய்தல், ப்ராதான்யம், புலி, மான், சக்ரவாகம்–இவைகள் பார்க்கத்தக்கன.

சந்த்ரனால் சாஸ்தா, ஸ்த்ரீ, வண்ணான், குடியானவன், ஜலத்தில் செல்வது, முயல், மான், கொக்கு சகோரம்–இவைகள் ஆராயத்தக்கன.

செவ்வாயால் சமையல், ஆயுதம்தரித்தல் ஆடு, கோழி, குள்ளநரி, குரங்கு, கழுகு, திருடன் இவைகள் கவனிக்கத்தக்கன.

புதனால் இடையன், சில்பி, கணகர், விஷ்ணுபக்தர், கருடன், கிட்டுக்குருவி, கிளி, பூனை இவைகள் பார்க்கத்தக்கவை.

குருவினால் சோதிடம், மந்த்ரி, குரு, பிராம்மணன், உயர்ந்தஸந்யாஸி, புரு, குதிரை, ஹம்ஸம்–இவைகளறியப்படவேண்டும்.

சுக்ரனால் வாய்ப்பாட்டு, தனமுள்ளவன், விடன், வியாபாரி, காட்டியமாடுபவன், வஸ்த்ரம் நெய்பவன், தாலி, மயில், எருமை, கிளி, பசு–இவைகள் பார்க்க உரியன.

சனியினால் எண்ணெய்விற்பவன், கூலிவாங்குபவன், நீசன், வேடன், இரும்புவேலை செய்பவன், யானை, காகம், குயில் இவைகள் அறிந்துகொள்ளத்தக்கன.

ராகுகேதுக்களால் பௌத்தன், பாம்பாட்டி, கழுதை, ஆடு, நாய், ஒட்டகம், பாம்பு, இருள்சூழ்ந்தவிடம், கொக, மூட்டைப் பூச்சி, புழு, கோட்டான்–இவைகள் பார்க்கத்தக்கவை.

சூரியாதிகளில் அடையாளங்கள்

சூரியன், செவ்வாய், புதன், குரு–இவர்களுக்கு வலப்பக்கத்திலும், மற்றவர்களுக்கு இடப்பக்கத்திலும் அடையாளங்கள் (மரு) உண்டு. சூரியனுக்கு இடுப்பிலும், சந்திரனுக்கு தலை முதுகுகளிலும், செவ்வாய்க்கு கழுத்திலும், புதனுக்குத் தோளிலும், குருவுக்கு முகத்திலும், சுக்ரனுக்கு கணுக்கால்களிலும், சனிக்கு பாதத்திலும் வடுக்களுண்டாகும்.

சூரியாதிகளில் வயது.

சூரியன்	50	புதன்	20	சனி	100
சந்திரன்	70	குரு	30	ராகு	100
செவ்வாய்	16	சுக்ரன்	70	கேது	100

ராகுகேதுக்களில் நிறம் முதலியன.

ராகு: கறுப்புவர்ணம், நீண்டதேஹம், கெட்டவர்ணம், சொரிசெங்கு, பாஷண்டமதம், அலைத்யவாதி, கபடி, குஷ்டரோகமுள்ளவன், பாகிந்தை, புத்தியில்லாமை. சயப்பாத்திரம், ஜீர்ணவஸ்த்ரம்.

கேது: செந்த க்ரூரத்ருஷ்டி, விஷவார்த்தை, உயர்ந்ததேஹம், ஆயுதமுடையவன், பதிதனுவது, அழுக்கடைத்திறம், புகைருடித்தல், புண்ணால் வடுவிட்ட அங்கம், இளைப்பு, கொடியதன்மை, மண்பாத்திரம் பலவித வஸ்த்ரம்.

ராகுகேதுகளுக்கு புதன், சுக்ரன், சனி மித்ரர்கள். செவ்வாய் ஸமம். மற்றவர்கள் சத்ருக்களாவர்.

க்ரஹங்களின் நல்ல–கெட்ட நிலைகள்.

க்ரஹங்கள் அஸ்தமித்தோ, நீசத்தையடைந்தோ, சத்ரு வீட்டை யடைந்தாலும், 6-8-12-ல் இருந்தாலும், கெட்டஸ்தானத்தை அடைந்தவர்களாகக் கருதவேண்டும். மூடநீசங்களில்லாமல் மேற் சொன்ன 6-8-12 நீங்கலான மற்ற ராசிகள் நல்ல ஸ்தானங்களாகும்.

சந்த்ரன் 12, 11, 1, 6, 5, 7 இவ்விடங்களிலிருக்க ஜலத்தைப் பற்றி ப்ரச்னம் கேட்டவர்களுக்கு ஜலவ்ருத்தி எனச் சொல்வர்.

க்ரஹங்களின் மரங்கள்.

சூரியன்–கடுவில் வைரம்பாய்ந்த உயர்ந்த மரம். சந்த்ரசுக்ரர்கள்–கொடிகள். ராகு கேது–புதர். செவ்வாய் சனி–முள்ளுள்ள மரங்கள். குரு–பழுத்தமரம். புதன்–காய்க்காதமரம். சுக்ரன் சந்த்ரன் பாலுள்ளதும் புஷ்பிக்கும் மரங்கள். சந்த்ரன்–ஔஷதி. சனி பலமில்லாதமரம். ராகு பனைமரம்.

க்ரஹங்களின் ஷட்பலம்

க்ரஹங்களுக்கு காலபலம், சேஷ்டாபலம், உச்சபலம், திக்பலம், அயனபலம் ஸ்தானபலம்-என ஆறுவித பலங்கள் சொல்லப்படுகின்றன.

காலபலம்

இரவில் சந்த்ரன், செவ்வாய், சனி பலிஷ்டர்கள். புதன் எப்போதும் பலமுள்ளவன். மற்றவர்கள் பகலில் பல முள்ளவர்கள். சுக்ல பக்ஷத்தில் சுபக்ரஹங்களும், க்ருஷ்ணபக்ஷத்தில் பாபக்ரஹங்களும் பலசாலிகளாவர். தின வருஷம், மாதம் தினம், ஹோரை-இவைகளில் கால், அரை, முக்கால், பூர்ணம் என்ற முறையில் பலமுள்ளவர்.

சேஷ்டாபலம்.

சூரியன், சந்த்ரன் உத்தராயணத்தில் பலிஷ்டர்கள். மற்றவர்கள் வக்ரசாரத்திலும், யுத்தத்தில் வடக்கிலிருக்கும்போதும்,

சந்த்ரஸமாகமத்திலும் சேஷ்டாபலம் பெற்றவர்களாவர். சுக்ரன்மட்டில் யுத்தத்தில் தெற்கில் பலம் பெற்றவராவர்.

திக்பலம்.

புதன், குரு இழக்கிலும், (லக்னத்திலும்) சூரியன், செவ்வாய் தெற்கிலும், (10-மிடம்) சனி மேற்கிலும், (ஏழாமிடம்) சந்த்ரன் சுக்ரன் வடக்கிலும் (4-மிடம்) வலிவுள்ளவர்கள்.

ஸ்தானபலம்.

மூலத்ரிகோணம், உச்சம், மித்ரக்ருஹம், வர்கோத்தமம், அதிகபிந்துக்களுள்ளது, நீசத்திலிருந்து உச்சத்துக்குப்போவது, வைசேஷிகபாகமடைவது, கேந்த்ரம் ஸ்வவர்கம். இவற்றை யடைவது ஸ்தானபலம் பெற்றவை. நீசம், பாபஸஹவாஸம், த்ருஷ்டி, யுத்தத்தில் அபஜயம், கெட்டவர்க்கம், ஸந்தி, குறைவானபிந்துக்களுள்ளது, அஸ்தங்கதம் முதலியவை ஸ்தானபலமற்றவை.

நைஸர்க்கிகபலம்

கேது, ராகு, சனி, செவ்வாய், புதன்-குரு, சுக்ரன், சந்த்ரன், சூரியன்-இவர்கள் முறையே மென்மேலும் பலிஷ்டர்கள்.

க்ரஹங்களின் பலங்கள்

சூரியன்: உத்தராயணம், க்ருஷ்ணபக்ஷம், ஞாயிற்றுக்கிழமை, மத்யான்னம், உச்சவிடு, லக்னத்தைத் தவிர ஸ்வவர்கம், மித்ரர்களின் நவாம்சம், 10-மிடம், விம்மராசி இவைகளில் பலம் பெற்றவன்.

சந்திரன்: தக்ஷிணயனம், பூர்ணமாயிருக்கும் காலம், திங்கட்கிழமை, இரவு, விருஷபராசி, 4-மிடம், மித்ராதி சுபவர்கம், சுபத்ருஷ்டி, ராச்யாந்தம் முதலியவைகளில் பலமுள்ளவர்.

செவ்வாய்:—தக்ஷிணயனம், வக்ரகதி, க்ருஷ்ணபக்ஷம், தனது வாரம், இரவு, மேஷம் வ்ருச்சிகம் மகரராசிகள், தன்வர்க்கம், 10, 11-ராசிகள், சந்த்ரஸமாகமம், ராசி ஆரம்பம் இவைகளில் பலமுள்ளவன்.

புதன்: உத்தராயணம், சுக்லபக்ஷம், தன்வாரம், பகலிரவு, கன்னி, வக்ரம், சந்த்ரஸமாகமம், சுபக்ரஹத்துக்கு ஐந்தாமிடம்,

ராசிமத்யம், ஸ்வவர்கம், மித்ரவர்கம், லக்னம் இவைகளில் பல முள்ளவனுவான்.

குரு: உத்தராயணம், சுக்லபக்ஷம் தன்வாரம் நடுப்பகல், உச்சம், ஸ்வவர்கம், மித்ரவர்கம், கேந்த்ரம், தனுஸ், மீனம் வக்ரம் சந்த்ரயோகம், 5, 9, 11, சுபக்ரஹங்களிடமிருந்து விலகும் காலம் இவைகளில் பலமுள்ளவன்.

சுக்ரன்: தக்ஷிணயனம், சுக்லபக்ஷம், தன்வாரம், பகல், விருஷபம், துலாம், மீனம், கேந்த்ரம், சுபக்ரஹங்களுக்கு 5-மிடம், வக்ரம், சந்த்ரயோகம், சூரியனுக்கு முன்பாகப்போவது, ராசிமத்யம், சுபவர்க்கம் இவைகளில் பலிஷ்டனுவான்.

சனி: தக்ஷிணயனம், க்ருஷ்ணபக்ஷம், தன்வாரம், சந்த்ரயோகம் இரவு 7, 8, 11-மிடங்கள், வக்ரம், துலாம், மகரம், கும்பம், சுபவர்க்கம். அஸ்தங்கதமாகாமை இவைகளில் பலசாலியாவான்.

ராகு: கடகம், கன்னி, மீனம், விருஷபம், கும்பம், மேஷம், மகரம் இவைகளில் பலவான்.

கேது: விருஷபம், கன்னி, தனுஸ், மீனம், இரவு உத்பாதஸமயம்- இவைகளில் பலசாலி.

கேந்த்ரத்திலுள்ளவைகள் பூர்ணமாகவும், 2, 5, 8, 11-(பணபரம்)-ல் இருப்பவை பாதியாகவும், 3, 6, 9, 12-ல் இருப்பவை கால்பாகமாகவும், உச்சத்தில் பூர்ணமாகவும், மூலத்ரிகோணங்களில் முக்கால் பாகமாகவும் ஸ்வக்ஷேத்ரத்தில் பாதிபாகமாகவும், மித்ரக்ருஹத்தில் கால்பாகமாகவும், பலத்தைத் தருவர்கள். உச்ச நீசங்களுக்கு நடுவானுல் த்ரைராசிகம் செய்துகொள்வது.

சந்த்ரக்ரியா பலம்.

ஜன்ம நக்ஷத்ரத்தில் கடந்த நாழிகைகளோ விநாடிகளாகி 60, 300, 100 இவைகளால் வகுக்க வரும் லவுகள் முறையே க்ரியை, அவஸ்தை, வேளை என்று சொல்லப்படும். இவைகளில் க்ரியை 60, அவஸ்தை 12, வேளை 30.

க்ரியா பலம் 60.

1, ஸ்தானப்ரஷ்டம், 2 தவம் செய்தல், 3. பிறர் மனையாளிடம் உறவு, 4 சூதாட்டம், 5 யானையேற்றம். 6. லிம்ஹாஸனரோஹணம். 7 அரசன் 8. சத்ரு நாசனம், 9. சிக்ஷித்தல், 10 குணவான் 11 ப்ராணனற்றவன், 12 தலை அறுபட்டவன் 13 காயப்பட்ட கால் கைகளையுடையவன். 14 கட்டுப்பட்டவன் 15. நாசமடைந்தவன், 16. அரசன், 17 வேதாத்யயனம் செய்பவன், 18, தூங்குபவன், 19 நன்னடத்தையுள்ளவன். 20, தர்மத்தைச் செய்பவன் 21 நற் குலத்தில் பிறந்தவன் 22 கிதியுடையவன் 23. க்யாதியடைந்தவம் சமுள்ளவன். 24 விவரித்துச் சொல்பவன் 25 எதிரிகளை வெல்பவன், 26 நோயாளி. 27 சத்ருவால் வெல்லப்பட்டவன் 28 ஸ்வதேசத்திலிருந்து சென்றவன். 29 அடிமை 30, பொருள்நஷ்டமடைந்தவன். 31. ஆஸ்தானத்திலுள்ளவன், 32 நல்ல ஆலோசனை சொல்பவன், 33 பிறர் சொத்துக்கு அதிபதி. 34. பார்யையுடன் கூடியவன். 35. யானையிடம் பயப்பட்டவன். 36 யுத்தத்தில் பயப்படுபவன் 37 மிகபயமடைந்தவன், 38 மறைந்தவன். 39, அன்னதாதா 40 அக்னியையடைந்தவன். 41. பசிப்பிணியுள்ளவன். 42 அலைபவன், 43 புசிப்பவன் 44 புலாலுண்பவன் 45 ஆயுதங்களால் காயம்பட்டவன். 46 கல்யாணத்துடன் கூடியவன். 47 பந்தாடுபவன் 48 சூதாடுபவன் 49 அரசன் 50 தூக்கப்பட்டவன் 51 படுக்கையிலிருப்பவன் 52 எதிரியால் வணங்கப்படுபவன் 53, ஸ்நேஹிதனுடன் கூடியவன் 54 யோகி. 55 பார்யையுடன் சேர்ந்தவன். 56 நன்றாக சாப்பிடுபவன். 57 பால் குடிப்பவன். 58 புண்யம் செய்பவன். 59 ஸ்வஸ்தன். 60 ஸுகமாக இருப்பவன்.

சந்த்ராவஸ்தை— 12.

1. தன்ஸ்தானத்திலிருந்து வேறிடம் செல்பவன். 2. அரசனுக்கு ஹிதன், 3, அடிமையினால் ப்ராணஹானியுள்ளவன். 4. அரசனுக்கக்கூடியவன் 5 தனது வம்சத்திற்கேற்ப குணமுள்ளவன், 6. ரோகமுள்ளவன். 7. ஆஸ்தானத்திலிருக்கும் தன்மையுள்ளவன் 8 பயம். 9. பசியால் வாடுபவன் 10 யுவதியை மணப்பவன். 11. அழகிய படுக்கையிலிருப்பவன். 12. விருப்பம்போல் புசிப்பவன்.

சந்த்ர வேளை— 36.

1. தலைவியாதி, 2 சந்தோஷத்தன்மை. 3, யாகம்செய்வது 4, சுகமாயிருப்பது. 5 கண்வியாதி 6 கவித்திருப்பது 7. ஸ்த்ரீகளுடன் விளையாடல். 8 கடுமையான ஜ்வரம். 9. தங்க அணிகலன். 10 கண்ணீர் விடுதல். 11 விஷமருந்தல் 12 காம ஆசை. 13. உதரவியாதி 14 ஜலம், பரிஹாஸம், சித்ரமெழுதுவது இவைகளில் விளையாடல் 15 கோபம். 16 ஆடுதல் 17. கெய்யுடன் புசித்தல் 18 தூங்குதல் 19 தானம் வழங்கல் 20 பல்வியாதி 21 கலஹம் 22 பிரயாணம், 23 பைத்தியம்பிடிப்பது 24 தண்ணீரில் நீந்துதல். 25. விரோதம். 26. தன் இஷ்டப்படி இருத்தல். 27 ஸ்நானம் செய்தல் 28 பசிப்பயம். 29 சாஸ்த்ரலாபம். 30 அடக்கமில்லாமை. 31 கூட்டம் சேர்த்தல் 32 சண்டையிடல் 33 புண்யகார்யம் செய்தல் 34 பாபகடத்தை 35. உக்ரமான கார்யம் செய்தல் 36 ஸந்தோஷம்.

இந்த க்ரியை முதலியவை ஜாதகம், முஹூர்த்தம், ப்ரச்னம்— இவைகளில் விசேஷமாக பயனளிக்கக்கூடியவை. இவைகளை செவ்வையாகப் பரிசீலனைசெய்து பலன சொல்லுதல் நலம்.

ஷஷ்டியம்சம்.

ஒற்றைப்பட்டராசியில் 1, 2, 8, 9, 10, 11, 12, 15, 16, 30, 31, 32, 33, 34, 35, 39, 40, 42, 43, 44, 48, 51, 52 59—இவைகள் க்ரூராம்சங்கள். மற்றவை நல்ல அம்சங்கள். நல்ல அம்சங்கள் சமராசியில் க்ரூராம்சங்களாகும்.

ஓஜராசியின் நாதர்கள் அந்தந்த ராசிமுதல் ஸப்தமாம்சம் தசாம்சங்களுக்கும் ஸமராசியில் அந்தந்த இராசிக்கு ஏழாமிராசி முதல் ஸப்தமாம்சத்துக்கும். 9—வது ராசிமுதல் தசாம்சத்துக்கும் அதிபர்களாம்.

மித்ர, ஸ்வக்ஷேத்ர, உச்சராசிகளில் 13 வர்க்கங்களையும் கூட்டியதில் க்ரமமாக 2, 3, 5, 4, 9, 7, 8, 6 வர்க்கங்களுக்கு ஒவ்வொன்றுக்கும் முறையே பெயர்கள் வருமாறு: உத்தமாம்சம், பாரிஜாதாம்சம், லிம்ஹாஸனாம்சம், கோபுராம்சம், ஐராவதாம்சம், தேவலோகாம்சம், நரலோகாம்சம், பாராவதாம்சம்.

ஷோடசாம்சத்துக்கு ஒற்றை இராசியில் பிரம்மா, விஷ்ணு, சிவன், சூரியன் அதிபர்களாவர். மராசியில் இதற்கு மாறுக சூரியன், சிவன், விஷ்ணு, பிரம்மா என்ப பார்ப்பது த்ரிகோணம் முதலிய ப்ரஸித்தங்களான வர்க்கங்களும இந்த ஸப்த வர்க்கங்களும் சேர்ந்து 13 வர்க்கமெனச் சொல்வர்.

அவஸ்தைகள்.

க்ரஹங்கள் உச்சத்திலிருந்தால் ப்ரதிப்த மென்றும், த்ரிகோணத்திலிருக்க சுகிதமென்றும், ஸ்வக்ஷேத்ரத்திலிருக்க ஸ்வஸ்த னென்றும், ஸ்நேஹித்தள் வீட்டிலிருக்க முதிதனென்றும், சுப வர்க்கத்திலிருக்க சாந்தனென்றும், தெளிவான கிரணமுள்ள தானல் சக்தனென்றும், யுத்தத்தில் தோல்வியடைந்ததானல் கிபீடிதனென்றும், பாபவர்க்கத்தையடைந்தால் கலனென்றும், சத்ருக்ரஹத்திலிருக்க துக்கிதனென்றும், நீசவீட்டிலிருக்க பீத னென்றும், அஸ்தங்கதனனல் விகலனென்றும் அவஸ்தைகள் சொல்லப்படுகின்றன. 1 முதல் 6 வரையில் சுபபலனையும், 7 முதல் 11 வரை அசுபபலனையும் பெயருக்கேற்றவாறு அளிக்கக் கூடும். ப்ரதிப்தாவஸ்தை பூர்ணபலனையும், மற்றவை த்ரைராசிகம் செய்யப்பெற்று க்ரமமாகப் பலனளிக்கக்கூடியவை.

இலக்கினமுதல் துவாதச பாவ விவரம்.

1. இலக்கினமாகிய முதலாவது இராசி–ஜீவன், தேகம், காந்தி, வடிவம், போக்கியம், கேந்திரம், உதயம், நிறம் இரத்தம், ரௌத்ரம், நினைப்பு, மனவாட்டம், பிரத்யம்சம், லக்ஷணம், கீர்த்தி, மூர்த்திகரம், சுபகரம், சந்தோஷம், ஐம்புலன் பொறி, நாளது ஜன்மம், ஆயுள் முதலியவைகளைத் தெரியச்சொல்லக்கூடியதாகும்.

2. தனம், குடும்பம், நேத்ரம், கல்வி, பெருத்தசெல்வம், பூரணபாக்யம், வாக்கு, சாஸ்திரவிசாரணை, கமனம், மனசு, உத்தேசம், மேன்பாடடைதல், பொன்னுபரணம், இரத்தினபரணம், பூச்செல்வம், யோகவிஷயம் முதலியவைகளைச் சொல்லுவது இலக்கினத்துக்கு இரண்டாமிடத்தாலாகும்.

3. சகோதரம் (சகோதரன், சகோதரி,) இராஜகாரியம், வெற்றி, வைபவம், ஆளடிமை, சங்கீதம், பராக்ரமம், சாந்தம், அணி

காலம், காதுநோய், கர்ணபூஷணம், போஜனபாத்திரம் வீரம், உத்தியோகம், தைரியம், கடன், ஆயுள், தேவதாபக்தி முதலியவை மூன்றுமிடத்தால் காணவேண்டும்.

4. மாதா, வாகனம், ஹிரகம், பூமி, கல்வி, சுபகரம், வியாபாரம், வெல்லத்தகுந்த மேன்மை, சுகம், விருந்து, பந்துக்கள், சுற்றம், நிக்ஷேபம் (புனதபொருள்) பரஸ்த்ரீகமனம், வாசனைத் திரவியம் பால் உள்ள பசு மாடும் கன்றும், தேவாலயம், க்ராமம், தானியம், ஸரி, குளம், கிணறு, தோப்பு, காடு, நவரத்தினம், நிதிகம் முதலியவைகளை நான்காமிடத்தால் காணலாம்.

5. புத்ரன்–புத்ரி, தாய்வழி, அம்மான்வர்க்கம், தகப்பன்வர்க்கம், முன் ஜன்மத்தில் செய்த கல்வினை, மகாவித்வான்களால் பிரபந்தம் பெறல், கர்ப்பாதானம், மந்த்ரோபதேசம், சத்காலகேபம், விதரணம், இராஜஸ்தானம், பிரபு, யோகாப்யாசம் மறு ஜனமம், புத்தி முதலானதைச் சொல்ல ஐந்தாமிடத்தைக் கவனிக்கவேண்டும்.

6. வியாதி, சத்துரு, தாயாதிவிரோதம், துக்கம், ஆயுதகாயம், பங்காளிவழக்கு, பயம், துன்பம், சண்டை, தேகநோய், பொல்லாத ஆபத்து, கடன், நிருடராலும் ஜலத்தாலும் ஸ்த்ரீகளாலும் சர்ப்பத்தாலும் அபாயம், தேகபாதை, மரணபாதை, அதிகாரஞ்செலுத்தல், காவல்படல், முதலியவைகளை ஆறுமிடத்தைக் கொண்டு சொல்லவும்.

7. களத்ரம், கலியாணம் பெண் பிள்ளைகளுக்குண்டாகுஞ்சுகம், சுகபோகம் அலங்காரம், பந்துக்கள்வரவு, வியவகார விசாரணை, இராஜபிரபுசன்மானம், யாத்திரை, வியாபாரம், ஒர் தொழிலுமின்றி யாவரும் வசியம், பின்தாரம், பின்தாரபுத்திரர்கள், புத்திரவிரோதம் முதலியவைகளை இலக்கினத்துக்கு ஏழாமிடத்தைக் கொண்டு சொல்லவும்.

8. ஆயுதபிடை யுத்தகளமரணம், மலையேறிவிழுதல், வியாதிபிடிதம், விக்கினம், இலேசம் மிகுதியான பலதுக்கம், விரணம், தனவிரயம், கஷ்டம், பகைநேரல், அபஜயம், விஷபயம, மரணம், முயற்சிக்கெடுதல், பதனம், வழக்கு விவகாரம்

ஆயுசு முதலியதை [illegible]னத்துக்கு எட்டாமிடத்தைக் கொண்டு சொல்லவேணும்.

9. பிதா (தகப்பன்) பாக்கியம், யாகாதிகிருத்தியம், தான தர்மம், சாவடி, தடாகமுண்டாக்கல், தேவாலயபிரதிஷ்டை, பெயர் விளங்கத் தண்ணீர்ப்பந்தல் வைத்தல், தர்மத்துக்கு இணறு வெட்டுவித்தல், பாடசாலே ஏற்படுத்தல் முதலிய புண்ணியகருமம், குருவினிடத்தில் உபதேசம்பெறல், ஜீவகாருண்யம், பக்தி, போகம், கீர்த்தி அஷ்டமாசித்தி, ஞானம் வனம் மலே இவைகளில் சஞ்சரிக்க விரும்புதல், பிதாவின பொருள், நிலத்த செல்வமனுபவித்தல் முதலியதை இலக்கினத்துக்கு ஒன்பதா மிடத்தைக் கொண்டு சொல்லவும்.

10. ஜீவனம், பற்பலதருமம், சத்கருமம், வியாபாரம், கிராம பூமிக்ஷேத்திரலாபம், இராஜாதிக்கம், தன்பேரால் நாடு நகரமுண்டாக்கல், ஹவ்ய கவ்யம், தயை, ஞானம், தெய்வபூஜை, தகப்பன் செய்பாவமொழித்தல், தெய்வபக்தி, பராக்ரமம், பேரும் பிரதாபமும், இரவிஷ்சையோகம், வஸ்திராபரணம், போஜனருசி, மேனவீடு, தேச சஞ்சாரப்பிரியம், முதலியதை இலக்கினத்துக்கு பத்தாமிடத்தைக் கொண்டு சொல்லவும்.

11. லாபம், ஔத்தசகோதரம், ஔத்தசகோதரயோகங்கள், கல்வி, பொன் வரும்படி, பயிர் பச்சை வரும்படி, நிக்ஷேபம், புதை பொருள், சுயார்ஜிதவரும்படி, ஆடையாபரணம், பூமியால் விருத்தி, பலதாரசம்போகம், அச்வம, கஜம், தண்டிகை வாகனங்கள், மனுவியாகுலம் போக்கல், ஞானம், சேவகஞ்செய்பவர், பல விதத்திலும் ஐச்வர்யமுண்டாகுதல் முதலியவைகளே பதினோராமிடத்தைக் கொண்டு சொல்லவும்.

12. விரயம், தனவிரயத்தினாடு உண்டாகும் போகம், மோக்ஷம், நித்திரை சௌக்கியம் பிரதிதோத்தியோகம், மேல் நாடு பூமி பிரதக்ஷண சஞ்சாரம், விவாதமுண்டாதல், தானதர்மம், பரோபகாரம், யாகாதிகிருத்தியம், கொடை, மந்திராதி பலவகை, தொழிற்றுறைச்செய்கை, கப்பல்வியாபாரம் முதலியவைகளே பன்னிரண்டாமிடத்தைக் கொண்டு சொல்லவும்.

மற்றசொல்லிட [illegible]க்குரிய அதிபதிகள் இலக்கினத்துக்கு கேந்திரம் திரிகோணம், உச்சம் மூலத்திரிகோணம், ஸ்வக்ஷேத்திரம், மித்ர, லாப தன ஸ்தானங்களிலிருந்தால் மிக பலன்கள் விருத்தியாக நடக்கும். மிக ஸ்தானங்களில் சுபக்ரகங்களிருக்க, பார்க்க உத்தமம்.

புத்திரகளத்திரஸ்தானம் முதலானதுக்கோப்ப சுபக்ரகங்களுடைய தசாபுக்திகளில் புத்திரதாராதி சுபபலன்களேப் பெறும்படி கொடுப்பார்கள். புத்திரதாராதி ஸ்தானங்களுக் கொத்த சுபர்கள் அந்த ஸ்தானாதிபதிகளும் காரகர்களாவர்கள்.

க்ரஹகாரகங்கள்.

சூரியன்

தகப்பன், ஆத்மா, சிரசு, தந்தம், வலதுநேத்திரம், சிலும்பினமயிர், பைத்தியசரீரம், வைத்தியம், ஒற்றைத்தலேநோய் முதலிய சிரோரோகம், சுரம், வியாதி ஸ்த்ரீ அல்லது சித்தசுவாதீனமில்லாத ஸ்த்ரீபாகம், சௌரியம், பிரதாபம், தைரியம், இராஜசேவை, உத்தியோகம், சைவானுஷ்டானம் தபஸ், சதாசிவன், பஞ்சலோகம், வச்சிரரத்தினம், இரசவாதம், கோதுமை, பால், மிளகு, யாத்திரை, பகற்பொழுது, ஒளி இவைகட்கெல்லாம் சூரியனே காரகனுவன்.

சந்திரன்

தாய், பராசக்தி, கணபதி, சுகபோஜனம், வஸ்திரம், குதிரை, சித்திரை, சிறிதுநாள் பருத்துமினைத்துமிருக்கும் சரீரம், சித்தசுவாதீனமின்மை, க்ஷயரோகம் சிலேஷ்ம சீதள நோய்கள், இடக்கண், புருவம், குடை, உத்தியோகம், கீர்த்தி, முத்து, முக்தாபரணம், வெண்கலம், வெண்ணெய், அரிசி, பனிப்பயிறு, உப்பு மச்சம், உழுளன், உம்பளவர், வண்ணர், சத்திரம், கந்தபுஷ்பம், சாமரம், பலம், ஸ்நாநாதிகள் இவைகட்கெல்லாம் சந்திரனே காரகன்.

செவ்வாய்

சகோதரம், பூமி, சுப்ரமணியர், விக்னேசுவரர், பத்திரகாளி, கோபவான், குலாலன், அக்னிமுகமாகச் செய்யும் தொழிலினர்,

யுத்தம், இரத்தம், காயம், சாகசம், செம்பு, சிறந்தரத்னம் முதலானவை, பவளம், துவரை, அக்னிபயம், விரணம், துவேஷம், கடன், சோரம், சுயம்பாகம், வீரியம், உத்சாகம், சும்பனம், பிளவை திடீர்மரணம் இவைகட்கெல்லாம் செவ்வாயே காரகன்.

புதன்

மாத்ருவர்க்கம் (அம்மான்முதலானவர்கள்) கல்வி, ஞானம், விஷ்ணுபகவான், வைசியன், கணக்கன், தானதிபதி, தூதன், தேர்ப்பாகன், வாக்கு சாதுரியம் கதை காவியம், உபாசனை யுக்தி, சத்தியவசனம், வைஷ்ணவகர்மம், வியாபாரங்கள், லிகிதத் தொழில், சிற்பத்தொழில், அலி, தேர், தாதன், நாட்டியம் முதலானவை, அண்டரோகம், வாதநோய், விஷய சோரன், தாசிலோலன், சகலமும்றிந்தவன், புத்திரக்குறைவு, பச்சை ரத்தினம் முதலானவை, சேங்கன்றுவர்க்கம், இலைமுதலானவை, பாசிப்பயிறு, தாராவெந்தயம் இவைகட்கெல்லாம் புதனே காரகன்.

வியாழன்

புத்திர், பிரம்மா, ஞானம், யோகாப்பியாசம், ஆசாரியத்துவம், அஷ்டமாசித்திகள், உபதேசம், புத்தி யுக்தி விவகார ஆலோசனை முதலானவை ராஜ்யாதிபத்யம் ராஜசன்மானம், பட்டப்பேர், சுருதி, ஸ்மிருதி, சத்விஷயம், சாந்தம் ஸ்வர்ணம், வைடூரியம், புஷ்பராகம், கோமேதகம், புஷ்பம் நித்திப்பு, நேத்திரங்கள் விப்பிரவர்க்கம், ஆண்டிவர்க்கம், ரிஷபவர்க்கம் தேன், கடலை ஜீரகம் இவைகட்கெல்லாம் வியாழனே காரகன்.

சுக்கிரன்

களத்திரம், ரெகம், பட்டப்பேர், பகற்காலமாதர் அநேகஸ்த்ரீ ஸங்கம், தாசி தாசர் முதலானவர், சங்கீதவாத்தியம், பரதநாட்டியம் முதலானவைகளில் பிரியம், கற்பூஷ்பம் புனுகு, கஸ்தூரி முதலாகிய நானவிதபரிமள வாசனைகள், கட்டில் மெத்தை முதலானவை, வெண்சாமரம், ராஜஸ்த்ரீ, ரூபவதி, போகபோக்கியம், அழகு, இளமை கருவிழி சம்பத்து, வாகனம், மாலை, கொடி விகடவினோதபரிகாசப் பிரசங்கப்பிரியம், ஆசை, ஸ்த்ரீ தேவதையுபாசனை, ஜனரஞ்சகம், மித்திரம், பசு, பால், தயிர் அன்னம், மோச்சை, புளி, சயம், தேவப்பெண்கள், லக்ஷ்மீகடாக்ஷம் இவைகளுக்கெல்லாம் சுக்கிரனே காரகன்.

சனி.

நிர்க்காயுள், இராக்காலபிதா, சாஸ்தா, (ஐயனார்) உபாயம், ஜீவனம், எருமை விருத்தி, இரும்பு, ஆளடிமை, சேவக விருத்தி, வயற்களம், கிருஷித்தொழில், நீலரத்னம் முதலானவை, மரவேலை, களவு, ஆத்மஹிம்சை, சிறைப்படல், ராஜதண்டனை வீண்வார்த்தை, வெட்கமில்லாதவை, துன்பம், வாயடித்தல், கடன், அசுபகர்மம், மயக்கபோஜனம், நீசஸ்த்ரீ, விதவைஸ்த்ரீ நிவாந்தரபிரவேசஸ்த்ரீ அல்லது ஊனமான ஸ்த்ரீபோகம், அலி, அவயவக்குறைவு, சித்தப்பிரமம், மேகநீர் உபத்ரவம், பித்தரோகம், கடுகு, உளுந்து, எள்ளு, எண்ணெய் இவைகளுக்கெல்லாம் சனியே காரகன்.

இராகு

ஞானம், பிதாமஹன், (பிதாவின் வம்சம்) பிரதாபம், செப்பிடுவித்தை, களவு, நானவிதவேடத்தொழில், சேவகத்தொழில் பரதேசவாசம், ஜாதிக்கு விரோதமாய் செய்யாத தொழில்கள் செய்தல், விகடவினோதவித்தைகள், வியாதி, ஸ்த்ரீபோகம், விஷபயம், ஜலகண்டம், அங்கவீனம், அதிகப்பேச்சு, வாயு வலிப்பு பித்தம், குன்மம், வெட்டுக்காயம், பிளவை முதலிய ரோகங்கள், விலங்கு, சிறைப்படல் இவைகட்கெல்லாம் ராகுவே காரகன்.

கேது

ஞானம், மாதாமஹன், (தாய் வழி பாட்டன் வம்சம்) கபடத்தொழில், சும்பனம், கீழ்குலத்தொழில், விபசாரம், பாபத்தொழில், பரதேசஜீவனம், விரணம், விஷபாண்டு, குஷ்டம், உதரவலி முதலாகிய ரோகங்கள், அக்கினிகண்டம், அகங்காரம், அசுகம், சிறைப்படல். இவைகளுக்கெல்லாம் கேதுவே காரகன். பிதாமஹிக்கு கேதுவும் காரகனென்று கூறும் நூல்கள் சில.

நவக்கிரக காரகமென்றால் இன்னின்ன கிரகங்கள் இன்னின்ன பலன்களைக் கொடுக்க அதிகாரிகளாயிருக்கிறார்களென்

பதாம். ஷ்டகாரகர்கள் சுபர் சம்பந்தம் அல்லது சுபர் பார்வை பெற்று சுபஸ்தானங்களிலிருந்தால் ஷ்ட பலன்கள் விருத்தியாகும். பாபி அல்லது சத்ருசம்பந்தம் அல்லது பார்வை பெற்று பாபஸ்தானங்களிலிருந்தால் ஷ்ட பலன்கள் குறைவாகும். சுபஸ்தானமாவது உச்சம் ஸ்வக்ஷேத்ரம், நிர்கோணம், மித்ராக்ருகள், தனலாபஸ்தானங்களுமாம். பாபஸ்தானங்களென்பது பகை நீசஸ்தானங்களும் 3-6-8-12 ஸ்தானங்களுமாம்.

இலக்ன பலன் முதலியன.

மேஷம் :— வட்டமான கண்கள், பலமற்ற கணுக்கால்கள், கடுமையான ஸ்வபாவம், இராஜபகுமானம், பகுஜனப்பிரியன், தைரியவான், ஜலத்தில் பயம், சிக்ரபோஜனம் அதிகாமம் சஞ்சலசித்தம், பொய் பேசல், அடிமையுள்ளவன், மூர்க்கன், சாமர்த்தியவான், பொலிந்ததேகவான், அடக்கமுடையவன், தனவான், புத்திமான், அனுசாரன், ஸஞ்சாரி, பொறுமை, அறிவு, அழகு, மனோபயம் இவைகளையுடையவன், உபயகளத்ரம், ஆயுதம், நெருப்பு, மரம், கல்சுவர் விழுதல் இந்த வகைகளிலெதினாலாவது விரணமுள்ளசரீரம், சகோதரவிரோஷ்டன், அற்பபுத்ரருடையவன். 4-5-7-10-20-22-25-28-இந்த வயதுகளில் அக்னி, சுரம், ஜலம், சிரங்கு, வைசூரி, விஷம், பிளவைகோய் இவைகளாற்பிடை, இலக்னத்தில் சுபக்ரகமிருக்க அல்லது பார்க்க-100-வயதுவரையிலிருப்பான். இந்த இலக்னத்துக்கு சூரியன் வியாழன் இவர்கள் சுபர்கள். சனி சம்பந்தப்பட்ட வியாழன் எப்போதும் அவனுக்கேற்ற பாபபலனைக் கொடுப்பான். வியாழன், சூரியன் யோககாரகர்கள். இவர்கள் ஒரே ராசியிலிருந்தால் பிரபலயோகம். புதன், சுக்ரன், சனி இவர்கள். பாபிகள். சனி, புதன் மாரகர்கள். சுக்ரன் த்விதீயாதிபதியாயிருந்தாலும் கொல்லான். சனி முதலானவர்கள் கொல்வார்கள். மாரகஸ்தானமாகிய 2-3-7-8-12-ல் இருந்தால் மாரகத்துக் கொப்பாகிய கண்டத்தைக் கொடுப்பார்கள்.

விருஷபம் :— ஸ்தூலதேகவான், களத்ரதோஷம், சத்தியவான், சுயகாரியபரன், பிறர் சொத்தை ரக்ஷிக்க வல்லவன், கபடபுருஷவசியன், வஸ்த்ராபரணமுள்ளவன், குணதோஷமறிபவன், அடிமையுள்ளவன், பிற்காலத்தில் புத்ரருடையவன், 5-13-16-19-20-27-இந்த வயதுகளில் சுரம், கண்டத்தில் வியாதி, க்ஷயம், சிரங்கு இவைகளால்பிடை. இந்த லக்னத்தை சுபக்ரகங்கள் பார்த்தால் வயது 77-வரையிலிருப்பான். சூரியனும் சனியும் கல்லவர்கள். சனியொருவனே மேலான இராஜயோகம் கொடுப்பவன். சந்ரனும் வியாழனும் சுக்ரனும் பாபிகள். சந்ரன், வியாழன், செவ்வாய் மாரகர்கள். புதன்கொல்லான். வியாழன் முதலானவர் கொல்வர். மாரகஸ்தானமாகிய 2-3-7-8-12-ல் இருந்தால் மாரகத்திற்கு சமானமாகிய கண்டத்தைக் கொடுப்பார்கள். சந்ரன், வியாழன், சுக்ரன், செவ்வாய் இவர்களுடன் சம்பந்தப்பட்ட ரிகங்களை ஆராய்ந்து அவர்கள் நிலைகளறிந்துஞ் சொல்லவும்.

மிதுனம் :-சுயகாரியபரன், உதரரோகி, இனியவார்த்தையுடையவன், வார்த்தை சோர்வில்லாதவன், கபடி, மைதுன ப்ரியன், களத்ரத்தின் சொல்லைக்கேட்பவன், ரோககளத்ரமுடையவன், வெட்கமுடையவன், கணக்கன், மூத்ரக்ருச்ரமுடையவன், புகழுடையவன், விஷயாதிகன், வழக்கறிபவன், 2-3-4-5-8-9-18-25-28 இந்த வயதுகளில் நெருப்பு, ஆயுதம், சுரம் கண்ணோய் இவைகளாற்பிடை. இந்த இலக்னத்தை சுபக்ரகம் பார்க்கில் 105-வயது வரையில் வாழ்ந்திருப்பான். இந்த இலக்னத்துக்கு சூரியன். செவ்வாய், வியாழன் கொடிய பாபிகள். வியாழன் சனியுடன் சேருவர்களில் மேஷராசியிற் பிறந்தோர்க் கொத்தபடி அகபத்தையளிப்பான். சுக்ரன் ஒருவனே சுபன். சந்ரன் த்விதீயாதிபத்ய தோஷத்தையுடையவனாயிருந்தாலும் மாரகங்கொடான். சூரியன், செவ்வாய், வியாழன் இவர்கள் மாரகஸ்தானங்களிலிருந்தால் மாரகசமானமாகிய கண்டத்தைக் கொடுப்பார்கள். குருவும் சனியும் தரும கருமாதிபதிகளாகையால் யோககாரகர்கள் பலமறிந்து சொல்லவும்.

கடகம் :— தனவான், களத்ரசுகவினன், கபடமுள்ள அவமானகளத்ரமுமுடையவன், யுத்த ஆசையுள்ளவன், குருவிசுவாஸி, அற்பபுத்ரருடையவன், வேசையர்மேலெண்ணமுடையவன், அதிகாமி, சதா துக்கி, பிதாவுக்கடங்காமை. 5-8-14-16-20-25-40- இந்த வயதுகளில் சுரம் பேதிகளால் பிடை. நன்மையான ரிகம் பார்க்கில் 90-வயது வரையிலிருப்பான். வியாழனும்

செவ்வாயும் சுபர்கள், செவ்வாய் ஒருவனே யோககாரகன். செவ்வாயும் வியாழனுங்கூடியிருந்தால் பிரபலயோகம். சூரியன் கொல்லான். சுக்கிரன் புதன் பாபிகள். புதன், சுக்கிரன், சனி மாரகர்கள். இவர்கள் மாரகஸ்தானமாகிய 2-3-7-8-12-ல் இருந்தால் மாரகத்துக்குச் சமானமாகிய கண்டத்தைக் கொடுப்பார்கள்.

கிம்மம்:— கம்பிரவசனமுள்ளவன், நல்ல ஆஹாரமுடையவன், திருடனானவன், பசியுடையவன், பாபகர்மி, மாத்ருபித்ருத்வேஷி, கோபி, தைரியவான், தனவான், புத்திமான், கலிவல்லவன், ஜனவசியன், கபடி, நேத்ரரோகமுகரோகி, வேலைசெய்யவிருப்பமுடையவன், 5-10-27-30—இந்த வயதுகளில் ஜ்வரத்தால் பீடை. இந்த லக்னத்தை சுபக்ரகம் பார்த்தால்-80-வயது வரையிலிருப்பான். சூரியன், செவ்வாய் சுபர்கள். புதன் சுக்கிரன் பாபிகள். செவ்வாய் சுக்கிரன் யோககாரர்கள். செவ்வாயும் சுக்கிரனும் கூடியிருந்தால் நீயபலனைக் கொடுப்பார்கள். செவ்வாய் யோககாரகனானபோதிலும் சதுர்த்த கேந்த்ராதிபதி சம்பந்தத்தினால் நீயபலனைக் கொடுப்பானென்றதாயிற்று. இவர்கள் இருவரும் கூடியிருந்தால் நல்லபலனைக்கொடுப்பார்களென்று கூறும் நூல்களும் சில உள. சனி-சுக்கிரன் மாரகர்கள். புதன் கொல்லான். மாரகஸ்தானமாகிய 2-3-7-8-12-ல் இருந்தால் மாரகசமானமாகிய கண்டத்தைக் கொடுப்பார்கள்.

கன்னி:— தருமவான், பின்னிரக்கமுள்ளவன், ஆசாரமுடையவன், நல்ல நடத்தையுடையவன், சுயகாரியபரன், மனோவஞ்சகன், பிறரால் தொழில் தனம் பேறுடையோன், ஜனப்பிரியன், ஹிதமஹிதம் இரண்டுஞ் செய்பவன், பின் வயதில் அதிக தனம் சம்பாதித்தலுமுடையவன். 5-8-9-10-18-19 — இந்த வயதுகளில் தெருப்பு, பேதி, ஜ்வரம், வைசூரி இவைகளால் பீடை. சுபக்ரகபார்வையுண்டாகில் 77 வயதுக்குக் குறையாமலிருப்பான். இந்த லக்னத்துக்கு சுக்கிரனும் சனியும் சுபர்கள், சந்திரன், செவ்வாய், வியாழன் இவர்கள் பாபிகள். புதனும் சுக்கிரனும் யோககாரர்கள். இவர்கள் இருவருங் கூடியிருந்தால் பிரபலயோகம். சந்திரன், செவ்வாய், வியாழன் மாரகர்கள். சுக்கிரன் த்விதீயாதிபதியாயிருந்தாலுங் கொல்லான். மாரகஸ்தானமாகிய 2-3-7-8-12-ல் இருந்தால் மாரகசமானமாகிய கண்டத்தைக் கொடுப்பார்கள்.

துலாம்:— இராஜபூஜிதன், நல்லகுணம், நல்லபுத்தி, பொறுமை, வல்லமை, அறிவு, புகழ் இவைகளையுடையவன், சம்பத்துடையவன், மன்மதசுகி, பரிமளப் பிரியன், தனவான், இரக்கமுடையவன், அபிமானி, ஜனப்பிரியன், சுகவான், மனோபிதி. 7-9-10-12-19-28-இந்த வயதுகளில் அக்கினி, பேதி, சத்துரு, வைசூரி, ஜலம் இவைகளால் பீடை, இந்த லக்னத்தை சுபக்ரகம் பார்த்தால் 85-வயது வரையில் வாழ்ந்திருப்பான். இந்த லக்னத்துக்கு சனி, புதன், சுக்கிரன் சுபர்கள்; சூரியன், செவ்வாய், வியாழன் பாபிகள். சந்திரனும் புதனும் யோககாரகர்கள். இவைகள் இருவருங் கூடியிருந்தால் பிரபல யோகம். சூரியன், வியாழன் மாரகர்கள். செவ்வாய் த்விதீய சப்தமாதிபதியாயிருந்தாலுங் கொல்லான். மாரகஸ்தானமாகிய 2-3-7-8-12-ல் இருந்தால் மாரகத்துக்கொப்பான கண்டத்தைக் கொடுப்பார்கள்.

விருச்சிகம்:—புத்திமான், தனவான், பருமீனி, வஞ்சகன் அபிமானி, இனிமையாக பேசுபவன், பந்துஜனத்வேஷி, எடுத்தகாரியத்தை முடிப்பவன், வரையற்ற விஷயப்பிரியன், மனைவியிடத்தில் அதிகப் பிரியமுடையவன். 3-5-10-18-40-இந்த வயதுகளில் கண்ட தோஷம், ஜ்வரம், அக்கினி, ஜன்னி இவைகளாற் பீடை, இந்த இலக்னத்தை உத்தமக்ரகம் நோக்கில் 90 வயது வரையிலிருப்பான். சூரியன், சந்திரன், வியாழன் சுபர்கள்; செவ்வாய், புதன், சுக்கிரன் பாபிகள். சூரியனும் சந்திரனும் யோககாரகர்கள்; இவர்கள் இருவருங் கூடியிருந்தால் பிரபல யோகம். புதன், செவ்வாய், சுக்கிரன் மாரகர்கள். வியாழன், சனி கொல்லார்கள். புதன் முதலானவர்கள் கொல்வார்கள். மாரகஸ்தானமாகிய 2-3-7-8-12-ல் இருந்தால் மாரகத்துக்குச் சமானமான கண்டத்தைக் கொடுப்பார்கள்.

தனுசு:—சத்தியவான், நற்குணமுடையவன், அபிமானி, நல்லவசனமுள்ளவன், சுகவான், தனவான், போகவான், மித்ரன், வித்யையுடையவன், ஸஞ்சாரி, உத்தியோகபரன். 3-4-5-12-15-18-32-40-47-இந்த வயதுகளில் கண்ணோயாலும் உஷ்ணரோகத்தாலும் பீடை; லக்னத்தை சுபக்ரகம் பார்த்தால் 77-வயது வரையிலிருப்பான். சூரியனும் செவ்வாயும் சுபர்கள்; சுக்கிரன்

ஒருவனே பாபி. சூரியனும் புதனும் யோககாரகர்கள். சூரியனும் புதனும் கூடியிருந்தால் பிரபல யோகம். சுக்கிரன், புதன், மாரகர்கள். சந்திரன், சனி கொல்லார்கள். சுக்கிரன் முதலானவர்கள் கொல்வார்கள். மாரகஸ்தானமாகிய 2-4-7-8-12-ல் இருந்தால் மாரகத்துக்குச் சமானமாகிய கண்டத்தைக் கொடுப்பார்கள்.

மகரம் :— துராசையுடையவன், திடபுத்திமான், சுயகார்யபரன், உபாயமுள்ளவன், கோபி, வாய்ச்சாலகன், அபிமானி, பரிமளப்பிரியன், மீனவிடத்தில் பிரியமுள்ளவன், 3-4-5-7-8-10-12 32-37 இந்த வயதுகளில் ஜலம், சுரம், விஷம் இவைகளால் பீடை; இந்த இலக்கினத்தை சுபக்கிரகம் பார்த்தால் 67 வயது வரையிலிருப்பான். செவ்வாய், புதன், சுக்கிரன் சுபர்கள். சந்திரன், வியாழன் பாபிகள். சுக்கிரன் ஒருவனே யோககாரகன். சுக்கிரனும் புதனும் கூடியிருந்தால் இராஜயோகம். சூரியன், சனி கொல்லார்கள். சந்திரன், வியாழன் மாரகர்கள். மாரகஸ்தானமாகிய 2-3-7-8-12-ல் இருந்தால் மாரகத்துக்குச் சமானமாகிய கண்டத்தைக் கொடுப்பார்கள்.

கும்பம் :— நிநேகிதர்களிடத்தில் பிரியமுள்ளவன், ஸ்த்ரீகளுக்குப்பிரியமுள்ளவன், அகண்டவயிறுடையவன், சுகவான், திடசித்தமுள்ளவன், தரித்திரன், தன்னையே புகழ்ந்து பேசுபவன், குள்ளன், சிவந்தகண்களையுடையவன், ஒருவர் செய்யும் உபகாரத்தை உடனே மறந்து விடுகிறவன், அற்பகல்வியுடையவன், பைத்திய சரீரமுடையவன். 9-10-11-20-30-32 இந்த வயதுகளில் சுரம், மிகுந்த ஜன்னி, வாதகரம், பித்தசுரம் இவைகளாற் பீடை. இந்த இலக்கினத்தை சுபர்கள் பார்த்தால் 80 வயது வரையிலிருப்பான். சுக்கிரன், புதன், சனி சுபர்கள். சந்திரன், செவ்வாய், வியாழன் பாபிகள். சுக்ரன் ஒருவனே யோககாரகன். சுக்கிரன், செவ்வாய் கூடியிருந்தால் பிரபலயோகத்தைக் கொடுப்பார்கள். வியாழன் த்விதியாதிபதியாயிருந்தாலும் கொல்லான். சந்திரன், செவ்வாய், மாரகர்கள். மாரகஸ்தானமாகிய 2-3-7-8-12-ல் இருந்தால் மாரகத்துக்குச் சமானமாகிய கண்டத்தைக் கொடுப்பார்கள்.

மீனம் :— ஞானி, பிராமணர் பெரியோரிடத்தில் பக்திவிச்வாஸமுடையவன், சத்யவான், சௌந்தரியரூபமும் சௌரியமும்

திரவ்யமும் உடையவன், பரிமளப்பிரியன், அதிகசெலவாளி, இரக்கமுள்ளவன், முன்ஜாக்கிரதையுள்ளவன், குளிர்ச்சியான கண்களும் கர்ணரோகமுமுடையவன். 3-4-7-12-20-28 இந்த வயதுகளில் இருமல், சுரம், உஷ்ணரோகம் இவைகளால் பீடை. இந்த இலக்கினத்தை சுபக்கிரகம் பார்த்தால் 100 வயது வரையிலிருப்பான். சந்திரன் செவ்வாய் சுபர்கள்; சூரியன், புதன், சுக்கிரன், சனி இவர்கள் பாபிகள். செவ்வாயும் குருவும் யோககாரகர்கள். செவ்வாயும் வியாழனும் கூடியிருந்தால் பிரபல யோகத்தைக் கொடுப்பார்கள். சூரியன், புதன், சுக்கிரன், சனி இவர்கள் மாரகர்கள். செவ்வாய் கொல்லான். சூரியன் முதலானவர்கள் கொல்லார்கள். மாரகஸ்தானமாகிய 2-3-7-8-12-ல் இருந்தால் மாரகத்துக்குச் சமானமாகிய கண்டத்தைக் கொடுப்பார்கள்.

ராசிகளின் ஸ்வபாவம், ஸஞ்சரித்தல், இடம், ரூபம், நிறம் இவைகளையறிந்து அவைகளுக்குப் பொருத்தமான பலன்களை புத்தியுக்திக்குத் தக்கபடி சொல்ல வேண்டும். ஜன்மலக்னம் போலவே சந்திரலக்னத்திலும் ஊகித்துச் சொல்லவேண்டும்.

க்ரஹம் உச்சஸ்தானத்திலிருந்தால் பூமிக்கு அதிபனாகவும் அரசனால் துதிக்கப்படுபவனாகவும், ஐச்வர்யாதிகளுக்கு இருப்பிடமாகவும் குணவானாகவும், நீதி, யசஸ், பராக்ரமம், கொடை, தைர்யம், ஸாமர்த்யம்-முதலியவைகள் நிறைந்தவனாவான்.

ஸ்வக்ஷேத்ரமாக விருந்தால், அந்த க்ரஹதசாபுக்திகாலங்களில் ப்ரபுக்கள் அபிமானத்தால் த்ரவ்யலாபத்தையும், யாஜமான்யத்தையும், தன் விட்டிலேயே வஸிப்பதையும், நூதன க்ரஹத்தையும், ஸாரமுள்ள பூமியையும், பஹுமானத்தையும், நஷ்டத்ரவியலாபத்தையும் அடைவான்.

மித்ரக்ஷேத்ரத்தில் வஸித்தால் ஸ்நேகிதர்களால் காரியலாபம், நூதனஸ்நேகம், சதுரத்வம், மீனவி, தனம், தான்யம், பாக்யம், அநேகஜநாநுகூலம் இவைகளை அடைவான்.

சத்ருக்ஷேத்ரத்தில்வசித்தால் இழிவு, பரான்னஜீவனம், தாரித்ரியம், சத்ருபீடை, தோழனும் எதிர்ப்பதால் இவைகளை அடைவான்.

நீசமாக இருந்தால் தன் தொழிலிலிருந்து நழுவுதல், ஏழ்மை, துராசாரம், கடன், நீசஜன சேவை, கஷ்டமான தேசத்தில் வசித்தல், அடிமையானதல், வழிகடை நிங்கு விளக்கும் காரியங்கள் அடைவான்.

அஸ்தங்கதனுனல் சிக்ரமரணம், மனவி, புத்திரன், பொருள்-இவைகளின் நாசம், விண் கலகம். அவமானம் முதலியவைகள் விளையும்.

சமஸ்தானத்திலிருந்தால் சுகதுக்கங்களைக் குறையாது அளிப்பான்.

வக்கிரமானல் சத்ருகிரகம், நீசகிரகம் இவற்றிலிருந்து வக்கிர மடைந்தால் உச்சத்தில் போல் பலனை அளிப்பான். வர்கோத்தமம் பெறின் ஸ்வஸ்தானத்தில்போல் பலனை அளிப்பான்.

க்ரஹஸ்திதிபலன்

சூரியன்

லக்னத்திலிருக்க :— குறுகியகேசமும், கார்யத்தில்தாமதமும், கோபமும், நீண்டசரீரமும், மானமும், வக்ரபார்வையும். மெல்லிதான சரீரமும், சூரத்தன்மை, பொறுமை, தயையில்லாமை இவைகளையுமுடையவனுவான். கடகத்திலிருந்தால் கண்ணில்பூ விழுந்தவன், மேஷத்தில் மதமுடையவன், சிங்கத்திலிருக்க மாலிக்கண்ணனுவான். துலாத்திலிருந்தால் பிள்ளையில்லாதவனுகவும், ஏழ்மையுடையவனுகவும் ஆவான். இரண்டிலிருந்தால் வித்தை, விநயம், தனம் இவையில்லாதவனுகவும், தடைபட்ட வார்த்தையையுடையவனுகவும்இருப்பான். மூன்றிலிருக்க பலம் சௌர்யம், ஐச்வர்யம் இவைகளையுடையவனுகவும், கொடையாளியாகவும், தன் பந்துக்களுக்கு விரோதியாகவுமிருப்பான். நான்கிலிருக்க சுகம் பந்து, பூமி, ஸுஹ்ருத்துக்கள், விடு இவைகளில்லாதவனுகவும், அரசாங்கத்தில் வேலை பார்ப்பவனுகவும், முன்னோர்களின சொத்தை அழிப்பவனுக்கும் ஆவான். ஐந்திலிருந்தால் தனம், சுகம், ஆயுஸ், புத்ரன் இவைகள் இல்லாதவனுகவும், கற்புத்தியுள்ளவனுகவும், வனங்களில் ஸஞ்சரிப்பவனுகவுமிருப்பான். ஆறிலிருக்க பிரசித்தியுள்ளவனுக

வும், பூமிக்கதிபதியாகவும், கற்குணம், ஐச்வர்யம், ஜயம் இவைகளை அடைபவனுகவுமாவான். ஏழிலிருக்க அரசனுக்கு சத்ருவாகவும், கெட்டுப்போன சரீரத்தையுடையவனுகவும், அதிபவனுகவும், மனவியற்றவனுகவும், அவமதிக்கப்பட்டவனுகவுமாவான். எட்டிலிருந்தால் தனம், ஆயுள், தேஜஸ்களை இழந்தவனுகவும், பார்வைக் குறைவுள்ளவனுகவுமாவான். ஒன்பதிலிருக்க தகப்பனில்லாதவனுகவும், புத்ரன், பந்துக்களுள்ளவனுகவும், தேவப்ராஹ்மண பக்தனுகவுமாவான். பத்திலிருந்தால் புத்ரன், வாஹனம், கீர்த்தி, ஆதிபத்யம், ஐச்வர்யம், பலம் இவைகளையுடைய அரசனுவான். பதினொன்றிலிருக்க ஆயுள், தனம் அதிகமுள்ளவனுவான், துக்கமில்லாதவன், தீர்க்காயுவான். பன்னிரண்டிலிருக்க பித்ருவிரோதி, பழுதடைந்த கண்களுள்ளவன், ஸம்பத் ஸந்தானமில்லாதவனுவான்.

சந்திரன்

வளர்பிறை சந்திரன் லக்னத்திலிருக்க த்ருடசரீர். நிர்க்காயுஸுள்ளவன், பயமற்றவன், பலவான். ஸ்ரீமான். தேய்பிறைசந்திரனுனல் எதிரிடையான பலன். இரண்டிலிருக்க தனவான், சாஸ்திரஜ்ஞன், விநயமுள்ளவன், ஸுகீ, அங்கத்தில் சற்று குறைந்தவன். மூன்றிலிருக்க ஸஹோதரன், மதம், பலம், சௌர்யமுள்ளவனுவான். கருமியாகவுமிருப்பான். நான்கிலிருக்க ஸுகீ, போகத்தையநுபவிப்பவன். உதாரன், தொழமை, வாஹனம், கீர்த்தியுள்ளவனுவான். ஐந்திலிருந்தால் கற்புத்ரனுடையவன், புத்திமான், ஆலோசகன், ம்ருதுவான கடையுள்ளவனுவான். ஆறிலிருக்க அற்பாயுஸுள்ளவன், புத்தியற்றவன், வயிற்றுரோகமுள்ளவன், அவமானமடைந்தவனுவான். ஏழிலிருந்தால் கீனத்தனத்தைச்செய்து முடிப்பவன், சாந்தன், அழகன், சிறந்த ஸ்திரீகளால் விரும்பப்படுபவனுவான். எட்டிலிருக்க ரோகி, அல்பாயுஸுள்ளவன் ஒன்பதிலிருந்தால் தர்மத்தில் பற்றுள்ளவனுவான், புத்ரவான், ஸுகீ, ஜயமுள்ளவன், கார்யமித்தியுள்ளவன். பத்திலிருக்க நற்காரியத்தைச்செய்து நல்லோர்களுக்கு ப்ரியத்தைச் செய்பவன், பதினொன்றிலிருக்க மனஸ்வியாகவும், நிர்க்காயுஸுள்ளவனுகவும், தனவானுகவும், புத்ர ப்ருத்யர்களோடு கூடின

வனுகவுமாவான். பன்னிரண்டிலிருக்க த்வேஷி, துக்கி, அவமதிக் கப்பெற்றவன், சிறந்த சோம்பேறியாவான்.

செவ்வாய்

லக்னத்திலிருக்க காயம்பட்ட சரீரத்தை உடையவன், கோடி யவன். அல்பாயுளுடையவன், அதிகப்பிடிவாதமுள்ளவன். 2-ல் விகாரமுகமுடையவனுகவும், படிப்பு செல்வமற்றவனுகவும், துஷ் டர்களியண்டினவனுகவுமாவான். 3-ல் நற்குணம், தனமுள்ளவ னுகவும், சூரனுகவும், பிறரால் ஜயிக்க முடியாதவனுகவும், சுகி யாகவும், ஸஹோதரனில்லாதவனுகவு மாவான். 4-ல் தோழன், தாய், பூமி, சுகம், விடு, வாஹனம் முதலியவை யற்றவனுவான். 5-ல் ஸுகம் புத்ரன் இல்லாதவனுகவும், கோட் சொல்லுபவ னுகவும் அற்பபுத்தியாகவுமாவான். (இது மேஷ லக்னஜாத கத்துக்குப் பொருந்தாது.) 6-ல் காமியாகவும் தனவானுக வும், பிரசித்தனுகவும் ஜயம் பெறுபவனுகவுமாவான். 7-ல் உசிதமல்லாத கார்யத்தைச் செய்பவனுகவும், ரோகியாகவும், வழிப்போக்கனுகவும், பாபியைமிந்தவனுகவுமாவான். 8-ல் நல்ல சரீரமில்லாதவன், ஏழை, அற்பாயுளுடையவன். நிந்திக்கப் பட்டவன் 9-ல் அரசனுக்குத் தோழன், எங்கும் சத்ருக்களை யுடையவன். பித்ருபாக்யமில்லாதவன். ஹிம்சை புரிபவன். 10-ல் ப்ரபுவாகவும், கோடியவனுகவும், தாதாவாகவும், தலைவ னுகவும், கொண்டாடத்தக்கவனுகவுமாவான். 11-ல் தனவான், சுகி, துக்கமற்றவன், சூரன், நன்னடத்தையுள்ளவன் 12-ல் விகாரமுற்ற கண்களையுடையவன், கோடியன், தாரமிழந்தவன், பிசுநீ, அதமன்.

புதன்.

லக்னத்தில் தீர்க்கஜீவி, ம்ருதுவாகவும் ஸாமர்த்யத்துடனும் பேசக்கூடியவன், சாஸ்த்ரத்தை அறிந்தவன். 2-ல் ஸ்வ புத்தி யால் ஸம்பாதிப்பவன். கவி, தோஷமில்லாத வார்த்தை பேசுப வன். நன்றுக சாப்பிடுபவன். 3-ல் சூரன், மத்யமாயுஸுள்ள வன், நல்ல ஸஹோதரமுள்ளவன், ச்ரமமுள்ளவன், கோழை யில்லாதவன். 4-ல் படிப்பாளி, சாமர்த்தியமாகப் பேசுபவன், சுகம், தோழன், பூமி, தான்யம் முதலியவைகளையுடையவன். 5-ல் படிப்பு, ஸௌக்யம், வீர்யம் உள்ளவன், புத்ரர்களையுடையவன்,

மந்த்ரவாதி. 6-ல் கோபி, சத்ருக்களை ஜயிப்பவன், தாமஸித்துச் செய்பவன், கொடுமையானவார்த்தை பேசுபவன், 7-ல் அழ கான ரூபமுள்ளவன், பல விஷயமறிந்தவன், மஹிமையுள்ளவன், செல்வமுள்ள மனைவியையடைபவன். 8-ல் தீர்க்காயுள், நிர்க்கா யுளுள்ளவன், வம்சபாலகன், தலைவன், தண்டிக்கக் கூடிய அதி காரமுள்ளவன். 9-ல் படிப்பு, தனம், நன்னடத்தை, தர்மம் இவைகளுள்ளவன், சமர்த்தன், நிறமையாகப் பேசுபவன். 10-ல் லாபகரமான காரியத்தைச் செய்பவன், வித்யை, பலம், புத்தி சுகம், ஸத்யம்— இவைகளோடு கூடியவன். 11-ல் தீர்க்காயுளுள் ளவன், ஸத்யத்தில் நிற்பவன், அதிக தனம், சுகம், வேலையாட் களுள்ளவன். 12-ல் துக்கமுள்ளவன், படிப்பில்லாதவன், அவ மானமடைபவன், தயை, சுறுசுறுப்பு இல்லாதவன்.

குரு.

லக்னத்தில் காந்திமான், புண்யசாலி, தீர்க்காயுள், தைர்யம், புத்ரர்கள் உள்ளவனுவான். 2-ல் புத்ரனுள்ளவன், நன்றுய்பேச பவன், ருசியான போஜனமருந்துபவன், அழகான முகமுள்ளவன், தனிகன், சமர்த்தன். 3-ல் உண்மையறிபவன், க்ருபணன், ப்ரஸித்த சகோதரனையுடையவன், பாபி, துர்புத்தியுடையவ னுவான். 4-ல் தாய், தோழன், வஸ்த்ரம், புத்ரன் ஸ்த்ரீகள் முதலிய ஸௌக்யத்தை அடைவான். 5-ல் புத்ரர்களால் க்லேச முள்ளவன், மந்த்ரியாகவும், புத்திமானுகவுமிருப்பான். 6-ல் சுறு சுறுப்பில்லாதவனுகவும் எதிரிகளை வெல்பவனுகவும், அவமான மடைந்தவனுகவும், மந்த்ரம், அபிசாரம், (சூன்யம் வைப்பது முத லியன) இவைகளில் தேர்ச்சி உள்ளவனுகவும் ஆவான். 7-ல் நல்ல களத்ரம், புத்ரனுடையவனுகவும், அழகுள்ளவனுகவும், தகப் பனை விட அதிகமான உதாரனுகவும் ஆவான். 8-ல் ஏழ்மை யுடன் அடிமைத்தனத்தினால் ஜீவிப்பவனுகவும், பாபியாகவும் நீண்ட ஆயுளுள்ளவனுகவும் ஆவான். 9-ல் பிரஸித்தனுகவும், நல்ல மந்திரியாகவும், ஐச்வர்யம், புத்ரன் இவர்களுள்ளவனுகவும், தர்மகார்யத்தில் உத்ஸாகமுள்ளவனுகவும் இருப்பான். 10-ல் நன்னடத்தை, நற்கீர்த்தி, அதிக தனம் இவைகளை யுடையவ னுகவும், அரசனுக்கு வேண்டியவனுகவும் ஆவான். 11-ல் தனி கனுகவும், பயமில்லாதவனுகவும், அதிகம் பிள்ளையில்லாதவனு

கவும், நீண்ட ஆயுளுடையவனுகவும் ஆவான். 12-ல் நிற்கத் தக்கவனுகவும், கெட்ட வார்த்தையை உடையவனுகவும், புத்ரன் இல்லாதவனுகவும், பாபியாகவும், சோம்பேறியாகவும், அடிமை யாகவும் ஆவான்.

சுக்ரன்

லக்னத்தில் நல்ல சரீரம், கண்களுக்கு உகந்தரூபமுள்ளவனு கவும், சுகியாகவும், நிர்காயுஷ்யுடையவனுகவும் ஆவான். 2-ல் கவியாகவும், மிருஷ்டானமுள்ளவனுகவும் ஆவான். 3-ல் மனைவி, சுகம், ஸம்பத்து இவைகளில்லாதவனுகவும், லோபியாகவும், பிரியமில்லாதவனுகவும் ஆவான். 4-ல் நல்ல வாஹனம், க்ரு ஹம், ஆபரணம், வஸ்த்ரம், கந்தம் இவைகள் உள்ளவனுவான். 5-ல் குன்றுத ஐச்வர்யமுள்ளவன், நல்ல புத்திமான், சந்தான முள்ளவன். 6-ல் விரோதியற்றவன், தனம் இல்லாதவன், ஸ்திரீ களால் கெடுக்கப்பட்டவனுகவும், துக்கியாகவும் ஆவான். 7-ல் நற்களத்ரமுள்ளவன், நன்னடத்தையில்லாதவன், ஸ்திரீலோலன், களத்ரமிழந்தவனுகவும், தனிகனுகவுமிருப்பான். 8-ல் நிர்க்காயுள் உள்ளவனுகவும், பூமிக்கதிபதியாகவும், தனிகனுகவும் ஆவான். 9-ல் களத்ரம், சுஹ்ருத்து, தனயன் இவைகள் உள்ளவனுகவும், அரசனிடம் பெற்ற த்ரவ்யத்துடன் வாழ்பவனுகவும் ஆவான். 10-ல் நல்லகீர்த்தி, தேஜஸ்கள். சுகஜீவனம் இவைகள் உள்ள வனுகவும். பிரபுவாகவும் ஆவான். 11-ல் தனிகன், பரஸ்திரீ ஸுக்தன். பலவிதமான ஸௌக்யமுள்ளவன். 12-ல் ஸ்திரீபோகம் ஸௌக்யம் ஐச்வர்யம், காந்தி இவைகள் உள்ளவனுவான்.

சனி

சனி தன் உச்சஸ்தானமோ, ஸ்வக்ஷேத்ரமோ லக்னமாகி, அதிலேயே இருந்தால் அரசனுக்கு சமானமாகவும், தேசமோ, நகரமோ எதற்காவது தலைவனுகவும் இருப்பான். மற்றவை லக்னமாகில் சிறுவயதில் துக்கத்தினுல் பிடிக்கப்பட்டவனுகவும், ஏழையாகவும், சோம்பேறியாகவும் இருப்பான். 2-ல் விகார முகத்துடனும், பொருளில்லாதவனும், தவருன வழியில் நடப் பவனுமாவான், முதிய வயதில் அன்னிய தேசத்தில் வசிப்பவ னுகவும், வாஹனம், சுகம், தனம் இவைகள் உடையவனுக ஆக

லாம். 3-ல் விசாலபுத்தி, கொடை, தாரசுகம் இவைகள் உள்ள வனுகவும், கலக்கமான மனதுடையவனுகவும் ஆவான். 4-ல் துக்கியாகவும், மாதா, க்ருஹம், வாஹனம் முதலியவையில்லாத வனுகவும், சிறுவயதில் ரோகியாகவும் இருப்பான். 5-ல் பிரமம் உள்ளவனுகவும், நற்புத்தி, புத்ரன், சந்தோஷம் இவைகள் இல் லாதவனுகவும், நிங்கிழைப்பவனுகவும், துர்புத்தியாகவும் இருப் பான். 6-ல் அதிகம் புஜிப்பவனுகவும், தனமுள்ளவனுகவும், தேஜஸ்வியுள்ளவனுகவும், தைரியவானுகவும், மானியாகவு மிருப் பான். 7-ல் கெட்டகளத்ரத்தினிடம் பற்றுடையவனுகவும், தன மில்லாதவனுகவும், வழிநடப்பவனுகவும் துக்கியாகவும் ஆவான். 8-ல் கீர்த்தியில்லாதவனுகவும், மூலரோகமுள்ளவனுகவும், தன மில்லாதவனுகவும், உக்ரபுத்தி, பசி இவைகளையுடையவனுகவும், மித்ரர்களால் அவமதிக்கப்பட்டவனுகவும் ஆவான். 9-ல் பாக் யம், தனம், சந்தானம், பிதா, தர்மம் இவைகள் அற்றவ னுகவும். துஷ்டனுகவும் ஆவான். 10-ல் மந்திரியாகவோ, அரச னுகவோ இருப்பதுடன் தனிகனுகவும், வேளாண்மைசெய்பவ னுகவும், சூரனுகவும், ப்ரஸித்தனுகவும் இருப்பான். 11-ல் நிர்க் காயுள் உள்ளவன், சூரன், ரோகமில்லாதவன், தனிகன். 12-ல் லஜ்ஜை, பொருள், புத்ரன் இவைகளில்லாதவனுகவும், குறைந்த அங்கமுள்ளவனுகவும் மூர்க்கனுகவும், தேஜஸ்வி அடைபவனுகவும் ஆவான்.

ராகு

லக்னத்தில் நீண்ட ஆயுளில்லாதவனுகவும், தனம் பலமுள்ள வனுகவும், சிரசில் வியாதி உள்ளவனுகவும் இருப்பான். 2-ல் மறைமுகமாக பேசுபவன், முகரோகமுள்ளவன், தயையுள்ளவன், அரசனிடமிருந்து கிடைத்த நிரவ்யமுள்ளவன். 3-ல் மானி, சகோ தர விரோதி, திடபுத்தியுள்ளவன், நிர்க்காயுளுடையவன், தனி கன் ஆவான். 4-ல் மூர்க்கன், துக்கத்தைக் கொடுப்பவன், தேஜஸ்கள் உள்ளவன், அல்பாயுளுள்ளவன், சிலசமயம் சுகமுள் ளவன். 5-ல் மூக்கால் பேசுபவனுகவும், பிள்ளையற்றவனுகவும், கடினசித்தனுகவும், வயிற்றில் ரோகமுள்ளவனுகவும் ஆவான். 6-ல் சத்ரு, துஷ்டக்ரஹங்களால் பிடிக்கப்பட்டவனுகவும், குத ரோகமுள்ளவனுகவும், ஐச்வர்யம், நீண்ட ஆயுள் இவைகள் உள்

ளவனுகவும் இருப்பான். 7-ல் ஸ்திரீகளால் பொருளிழந்தவனுகவும், பார்யா நாசமுள்ளவனுகவும், வீர்யமில்லாதவனுகவும், ஸ்வதந்திரனுகவும், ஸ்வல்ப புத்தியுடையவனுகவுமிருப்பான். 8-ல் அற்பாயுசு, பாபி, அங்கஹீனன், வாதரோகமுள்ளவன், அல்பசந்ததியுள்ளவன். 9-ல் எதிரிடையான வார்த்தை பேசுபவன், சமூகம், பட்டணம், கிராமம் இவற்றிற்குத்தலைவனுகவும், புண்யமில்லாதவனுகவுமிருப்பான். 10-ல் பிரஸித்தன், அல்பசந்ததியுள்ளவன், மற்றவர் காரியத்தில் பற்றுள்ளவன், நற்காரியமில்லாதவன், பயமில்லாதவன். 11-ல் ஐச்வர்யவான், அநேகசந்ததி இல்லாதவன், தீர்க்காயுளுள்ளவன், கர்ணரோகமுள்ளவன். 12-ல் ரகஸ்யமாக பாபம்செய்வதில் ஆசையுள்ளவன், மிகச் செலவாளி, ஜலரோகத்தால் பீடிக்கப்பட்டவன்.

கேது

லக்னத்தில் நன்றிமறந்தவன், சுகமில்லாதவன், கோள்ச் சொல்பவன், விகார நிறமுள்ளவன், இருக்கும் ஸ்தானத்தை விட்டு நழுவினவன், ஊன தேஹமுள்ளவன், துஷ்டலஹவாஸமுள்ளவன். 2-ல் தனம், வித்யை இல்லாதவன், நல்லவார்த்தை யில்லாதவன், ஊனக்கண்ணன், எப்பொழுதும் பரான்னத்தையே புஜிப்பவன். 3-ல் ஆயுசு, பலம், தனம், கீர்த்தி, மதம், அன்னம், ஸௌக்யம் இவைகளுள்ளவன், சஹோதரநாசமுள்ளவன். 4-ல் பசு, பூமி, வாஹனம், தாய், சுகம், ஜன்மபூமி இவற்றை இழந்து பரக்ருஹவாஸம் செய்பவனுவான். 5-ல் புத்ரநாசம், வயிற்றில்ரோகம், பிசாசபாதை இவைகளுள்ளவன், துர்சுபாவமுள்ளவன். 6-ல் கொடையாளி, குணவான், உறுதியுள்ளவன், ப்ரஸித்தன், ப்ரபு, சத்ருக்களை விருத்திசெய்பவன், இஷ்டமான பொருள்களையடைபவன். 7-ல் அவமானமடைபவன், துர்மதத்தையுள்ள ஸ்திரியிடம் பற்றுள்ளவன், நரம்புசம்பந்தரோகமுள்ளவன், பார்யாவியோகமடைபவன், மதம், வீர்யம் இவற்றை இழப்பவன். 8-ல் அல்பாயுளுள்ளவன், மித்ர பந்துக்களைப்பிரிபவன், விவாதப்படுபவன், ஆயுதத்தினால் உண்டான புண்ணை உடையவன், எதிலும் விரோதப்படுபவன். 9-ல் தீச்செயலுள்ளவன், சுபமற்றவன், பித்ருபாக்யமில்லாதவன், தரித்ரன், சாதுக்களைத் தூஷிப்பவன், 10-ல் நற்காரியத்தில் இடையூறுள்ளவன்,

அசுத்தன், நிந்திக்கத் தக்க காரியம் செய்பவன், காந்தி, பராக்ரமமுள்ளவன், மிகப்பிரஸித்தன். 11-ல் பொருள்சேர்ப்பவன், மிகநற்குணமுள்ளவன், சுகபோகமுள்ளவன், பொருள், சுகசாதனங்கள் உடையவன், எல்லாக்காரியங்களிலும் பலனையடைபவன். 12-ல் ரகசியத்தில் பாபம் செய்பவன், இழிவான காரியத்தில் செலவு செய்பவன், பொருள் நாசமடைபவன், விபரீதப்ரவ்ருத்தியுள்ளவன், நேத்ரரோகமுள்ளவன், பாபி.

ஜன்மலக்ன ஜன்மாம்ச ஸ்புடத்திற்கு சமமான அம்சத்தில் உள்ள க்ரஹம் முழுப்பலனைத்தரும். ராகு, சனிபோன்றும், கேது செவ்வாய்போன்றும் பலனளிப்பதாக சாஸ்திரம் கூறுகிறது. பாவபலத்தைபார்க்கும்போது பார்க்க விரும்பும் பாவங்களுக்கு சமமான அம்சங்களிலிருக்கும் க்ரஹங்கள் முழுப்பலனை யளிக்கின்றன. குறைவு நிறைவுகளை கவனித்துத் தக்கபடி பலாபலவ்ருத்திகளைக் கூறவேண்டும்.

க்ரஹயோகங்களின் பலன்

சூரியன்

சந்த்ரனுடன் கூடினால் யந்த்ரங்கள் செய்பவனுகவும் கல் வேலை செய்பவனுகவுமான். செவ்வாயுடன் கூடினால் கெட்ட காரியங்களில் பற்றுள்ளவனுவான், பாபியாவான். புதனுடன் கூடினால் மிகுந்த சாமர்த்தியமுள்ளவனுவான். சிறந்தபுத்தி, கீர்த்தி, ஸௌபாக்யமுடையவனுவான். குருவுடன் கூடினால் கடினமான மனதுடையவன், பிறர்கார்யத்தில் கவனமுள்ளவன், சுக்ரனுடன் கூடினால் யுத்தளவாடங்களால் திரவ்யத்தைத் தேடுபவனுவான். சனியுடன் சேர தாதுவகைகளால் செய்யப்பட்டவைகளை விற்று ஜீவிக்கக்கூடியவனுவான்.

சந்திரன்

சந்த்ரன் செவ்வாயோடு கூட ஸமூகத்தில் வஸிப்பவனுகவும் ஸ்திரீகள், குடங்கள், போலிசாமான்கள் மத்யங்கள்— இவை முதலிய வ்யாபாரங்கள் செய்வதில் ஸமர்த்தியமுள்ளவனுகவும், தாய்க்கு நன்மைபுரியாதவனுகவுமிருவான். புதனோடு சேர பிரஸித்தமான வாஸஸ்தலத்தையுடையவனுகவும், மங்களம், போகம், யோகம், பாக்யம் முதலியவைகளை அடைபவனுவான். குருவோடு

சேர்ந்தால் ஸமர்த்தன், குலத்திலுயர்ந்தவன், திடசித்தமுள்ளவன், தனுபதி, சுக்ரனுடன் கூடினால் நெசவுத் தொழிலில் பிரஸித்தனுவதுடன் ஜவுளி வியாபாரத்தில் ஸமர்த்தனுவான். சனியுடன் சேரில் இருமுறை மணந்த ஸ்திரீக்குப் பிறப்பவனுவான்.

செவ்வாய்

செவ்வாய் புதனுடன் கூடினால் எண்ணை, வேர், புஷ்பம், பழம், இழங்கு முதலிய வியாபாரம் செய்பவனுகவும், மல்யுத்தம் செய்பவனுகவுமாவான். குருவுடன் கூடினால் நகரத்துக்கு நாயகனுகவோ தனவானன ப்ராஹ்மணனுகவோ ஆவான். சுக்ரனுடன் சேர்ந்தால் பசுக்களை ரக்ஷிப்பவனுகவும், மல்லனுகவும், ஸாமர்த்ய சாலியாகவும், பரஸ்த்ரீலோலனுகவும், சூதாட்டம் முதலியவைகளில் ஆசையுடையவனுகவுமாவான். சனியுடன் கூட எப்போதும் துக்கமுள்ளவனுகவும், பொய்பேசுபவனுகவும், தீயகுணங்களால் நிந்திக்கப்பட்டவனுகவுமாவான்.

புதன்.

புதன் குருவோடு சேர சித்திரவேலைசெய்வதில் ஸமர்த்தனுகவும், ஸங்கீதம், கர்த்தனம் முதலியவைகளில் ப்ரியமுள்ளவனுகவும், மல்லனுகவுமாவான். சுக்ரனுடன் கூட அழகாய்ப் பேசுபவனுகவும், வாக்ஸாமர்த்ய முள்ளவனுகவும், தலைவனுகவும், ஸங்கீதாதிகளில் ப்ரியமுள்ளவனுகவுமாவான். சனியுடன் கூட மாயாவியாகவும், சோம்பேறியாகவும், பொய் முதலியவை பேசுபவனுகவுமாவான்.

குரு.

குரு சுக்ரனுடன் சேர்ந்தால் கல்வியுள்ளவனுகவும், தனம், தான்யம், நற்கலத்ரம், நற்குணம் இவைகளை உடையவனுகவுமாவான். சனியுடன் கூடினால் சூதாடுவதில் சமர்த்தனுகவும், குடம் முதலியவைகளைச் செய்பவனுகவும், தூதனுகவும் கடிவரம் செய்பவனுகவும், சமையல் செய்பவனுகவும் ஆவான்.

சனி சுக்ரன் இவர்கள் சேர்க்கையில் குறைந்த திருஷ்டியை உடையவனுகவும், ஸ்திரீகள் சம்பந்தமாக அதிகமான பொருளை

உடையவனுகவும், எழுத்து, புஸ்தகம், சித்திரம் இவைகளால் பிழைப்பவனுகவோ அல்லது அறிந்தவனுகவோ ஆவான்.

இவ்விதமே அதிகிரகங்களின் சேர்க்கையில் அந்தந்த கிரகங்களுக்குரிய பலத்தை அடைவான். அதை ஊஹித்துக் கொள்வது.

சந்திரனுக்கு ஏற்படும் திருஷ்டி பலன்கள்

மேஷத்தில் இருக்கும் சந்திரன் செவ்வாயினுல் பார்க்கப்பட்டால் பூமிக்கதிபதி ஆவான். புதனுல் பார்க்கப்பட படித்தவனுவான். குருவால் பார்க்கப்பட பிரபு ஆவான். சுக்கிரனுல் பார்க்கப்பட ராஜாவுக்கு சமானமாவான். சனியால் பார்க்கப்பட சோரனுவான். சூரியனுல் பார்க்கப்பட ஏழை ஆவான்.

விருஷபத்திலிருக்கும் சந்திரனை, செவ்வாய் பார்க்க தரித்திரன். புதன் பார்க்க திருடன். குரு பார்க்க எல்லோராலும் கொண்டாடத் தக்கவன். சுக்கிரனுல் பார்க்க பிரபு ஆவான். சனியினுல் பார்க்கப்பட மிகுந்த பணக்காரனுவான். சூரியனுல் பார்க்கப்பட அடிமை யாவான.

மிதுனத்தில் இருக்கும் சந்திரனை செவ்வாய் பார்க்க இரும்பு மூலம் தொழில் செய்பவன். புதன் பார்க்க அரசன். குரு பார்க்க படிப்பாளி. சுக்கிரன் பார்க்க அரசன் (யோகவான்) ஆவான். சனி பார்க்க நெசவாளி, சூரியன் பார்க்க ஸ்ரீமான்.

சந்திரன் கடகத்தில் இருக்க செவ்வாய் பார்த்தால் போர் வீரன். புதன் பார்க்க மேதாவி, குரு பார்க்க பண்டிதன், சுக்கிரன் பார்க்க தலைவன், சனி பார்க்க இரும்புத்தொழில் செய்பவன். சூரியன் பார்க்க திருஷ்டிரோகம் உள்ளவன்.

ஸிம்மத்தில் இருக்கும் சந்திரனை செவ்வாய் பார்க்க அரசன். புதன் பார்க்க சோதிடன், குரு பார்க்க தனிகன், சுக்கிரன் பார்க்க அரசன், சனி பார்க்க க்ஷவரகன். சூரியன்பார்க்க அரசர்தலைவன்.

கன்னியில் சந்திரனைச் செவ்வாய் பார்க்க சாமர்த்தியசாலி. புதன் பார்க்க அரசன். குரு பார்க்க சேனைத்தலைவன். சுக்கிரன் பார்க்க தேர்ச்சி பெற்றவன். சனி பார்க்க பூமிக்கு அதிபதி. சூரியன் பார்க்க அரசன்.

துலாந்நில் இருக்கும் சந்திரனே செவ்வாய் பார்க்க பிறர் அறியாமல் நீங்கு செய்பவன். புதன் பார்க்க அரசன். குரு பார்க்க தங்கவேலை செய்பவன். சுக்கிரன் பார்க்க வியாபாரி. சனி பார்க்க கோள் சொல்லுபவன். சூரியன் பார்க்க துஷ்டன்.

விருச்சிகந்நிலுள்ள சந்திரனே செவ்வாய் பார்க்க அரசன். புதன் பார்க்க இரண்டு தகப்பனுள்ளவன். குரு பார்க்க பூமிக்கு அதிபதி. சுக்கிரன் பார்க்க எதிரிகளிடம் பிழைப்பவன். சனி பார்க்க அழகற்ற அங்கமுள்ளவன். சூரியன் பார்க்க ஏழ்மையுள்ளவன்.

தனுசிலுள்ள சந்திரனே செவ்வாய் பார்க்க தூர்த்தன். புதன் பார்க்க பந்துக்களை அடைபவன். குரு பார்க்க தலைவன். சுக்கிரன் பார்க்க சமூகத்தை அண்டிப் பிழைப்பவன். சனி பார்க்க நல்லவன் போல் நடித்துத் தீங்கு செய்பவன். சூரியன் பார்க்க கர்வி.

மகரந்நிலுள்ள சந்திரனே செவ்வாய் பார்க்க பூமிக்கு அதிபதி. புதன் பார்க்க ஜனங்களின் தலைவன். குரு பார்க்க பூமியை ஆள்பவன். சுக்கிரன் பார்க்க வித்வான் சனி பார்க்க தனிகன். சூரியன் பார்க்க தரித்திரன்.

கும்பந்நில் இருக்கும் சந்திரனே செவ்வாய் பார்க்க ஸ்திரீலோலன். புதன் பார்க்க பூமியை ஆள்பவன். குரு பார்க்க அரசன். சுக்கிரன் பார்க்க தாலியின் கணவன். சனி பார்க்க அரசர்க்கரசன். சூரியன் பார்க்க மனிதர்களால் கொண்டாடத் தக்கவன்.

மீனந்நில் இருக்கும் சந்திரனே செவ்வாய் பார்க்க பாபம் செய்பவன். புதன் பார்க்க அறிவாளி. குரு பார்க்க அரசன். சுக்கிரன் பார்க்க படிப்பாளி. சனி பார்க்க தோஷத்தையே பார்ப்பவன். சூரியன் பார்க்க பாபத்தைச் செய்பவன்.

ஒவ்வொரு நவாம்சத்தையும் அடைந்த சந்திரனே மற்ற கிரஹங்கள் பார்ப்பதின் பலன்

மேஷம், விருச்சிகங்களாகிய செவ்வாய் அம்சத்தில் உள்ள சந்திரனே சூரியன் பார்க்க நகர ரக்ஷகன். செவ்வாய் பார்க்க பிராணி ஹிம்ஸையில் ருசியுள்ளவன். புதன் பார்க்க சண்டை

யில் தேர்ச்சி உள்ளவன். குரு பார்க்க அரசன். சுக்கிரன் பார்க்க தனவான். சனி பார்க்க கலகம் செய்பவன்.

விருஷபம் துலாம் என்கிற சுக்கிரன் அம்சத்தை அடைந்த சந்திரனே சூரியன் பார்க்க மூர்க்கன். செவ்வாய் பார்க்க பரஸ்திரீலோலன், புதன் பார்க்க கவி. குரு பார்க்க காவியகர்த்தா. சுக்கிரன் பார்க்க சுகி. சனி பார்க்க பாதாரலோலன்.

மிதுனம் கன்னி ஆகிய புதாம்சத்தில் உள்ள சந்திரனே சூரியன் பார்க்க நாடகமேடை கோதா முதலியவைகளில் சஞ்சரிப்பவன். செவ்வாய் பார்க்க திருடன். புதன் பார்க்க கவிச்ரேஷ்டன். குரு பார்க்க மந்திரி. சுக்கிரன் பார்க்க சங்கீத ஞானமுள்ளவன். சனி பார்க்க கைத்தொழில் தேர்ச்சி உள்ளவன்.

சந்திரன் தன் அம்சமான கடகத்திலிருக்க சூரியன் பார்க்க அல்பசரீரி, செவ்வாய் பார்க்க திரவ்யத்தில் அதிக ஆசை. புதன் பார்க்க தபஸ்வீ. குரு பார்க்க உயர்ந்தவன். சுக்ரன் பார்க்க ஸ்த்ரீகளுக்கு அடிமை. சனி பார்க்க உத்ஸாகமுடையவன்.

சூர்யாம்சமான ஸிம்ஹத்திலிருக்கும் சந்திரனே சூர்யன் பார்க்க கோபிஷ்டன். செவ்வாய் பார்க்க அரசர்களுக்கு ஆப்தன். புதன் பார்க்க புதையல் எடுப்பவன். குரு பார்க்க பெரியதன்மையுடையவன். சுக்ரன் பார்க்க பிள்ளையில்லாதவன். சனி பார்க்க மிகவும் ஹிம்ஸையளிக்கத்தக்க கார்யங்களைச் செய்பவன்.

தநுஸு, மீனமாகிய குருவின் அம்சத்தை அடைந்த சந்திரனே சூரியன் பார்க்க ப்ரஸித்த பலவான். செவ்வாய் பார்க்க யுத்தமுறையை பயில்விப்பவன். புதன் பார்க்க வேடிக்கையான பேச்சு நடவடிக்கைகளையுடையவன். குரு பார்க்க மந்திரி. சுக்ரன் பார்க்க போகத்தில் ஆசையற்றவன். சனி பார்க்க தர்மத்தில் ஆசையுள்ளவன்.

மகர கும்பங்களாகிய சனியின் அம்சத்தை அடைந்த சந்திரனே சூரியன் பார்க்க அல்பஸந்ததியுள்ளவன். செவ்வாய் பார்க்க ஸௌகர்யமிகுந்தும் கஷ்டப்படுபவன். புதன் பார்க்க மானி. குரு பார்க்க தன் கார்யத்தில் கருத்துள்ளவன். சுக்ரன் பார்க்க கெட்ட ஸ்த்ரீயிடம் பற்றுடையவன். சனி பார்க்க கோபி.

ஸூரியன் மேஷாதி நவாம்சங்களை அடைந்து மற்ற க்ரஹங்களால் பார்க்கப் படும் காலத்தில் சந்த்ரனுக்குச் சொன்ன பலத்தையே அங்கும் ஏற்றுக்கொள்ளவேண்டும். ஆனால் சந்த்ரன் மேஷாதி நவாம்சங்களிலிருக்குங்கால் சூர்யன் பார்த்தால் ஏற்படும் பலனை சூர்யனை சந்த்ரன் பார்க்கும்போதும் சொல்லவேண்டும்.

சந்த்ரன் ஸூர்யன் முதலிய நவாம்சங்களிலிருந்து (மற்ற க்ரஹங்கள் பார்க்காவிடில்) அந்த நவாம்சாதிபதியின் த்ருஷ்டி மூலம் எந்த பலன் கூறப்பட்டதோ அதையே இங்கும் சொல்ல வேண்டும். ராசிகளில் சொல்லப்பட்ட பலனையே த்வாதசாம்சங்களிலும் சொல்லவேண்டும்.

சந்த்ரன் வர்கோத்தமம், ஸ்வாம்சம், சத்ரு அம்சம்-இவைகளை அடைந்தபோது மற்ற க்ரஹங்களின் பார்வை மூலம் எவ்வகையான பலன் சொல்லப்பட்டதோ; அப்பலனில்- முழுப்பங்கும், அரைப்பங்கும், கொஞ்சமாகவும் முறையே ஏற்படுகிறது.

சந்த்ரன் எந்த நவாம்சத்திலிருக்கின்றானே அந்த நவாம்சாதிபதி பலமுற்றிருந்தால் சந்த்ரன் மேஷாதி ராசியிலிருக்க சூரியாதிக்ரஹங்களால் பார்க்கப்படும்போது கூறப்பட்ட பலன் விஞ்சிவிடும். நவாம்சாதிபதி பலமில்லாதவனுனல் ராசி நவாம்சம் பார்வையாலுண்டாகும் பலனும் கிடைபெறும்.

பலன் பார்ப்பதில் பொதுமுறை.

சூர்யன் முதலிய எல்லா க்ரஹங்களும் ஐந்து ஒன்பதுக்கு அதிபர்களானால் சுப பலத்தையும், 3, 6, 11-க்குடையவர்களானால் அசுப பலத்தையுமளிப்பார்கள். சுக்லபக்ஷ சந்த்ரன் பாபியுடன் சேராத புதன், குரு, சுக்ரன் 1, 4, 7, 10க்குடையவர்களாகில் சுப பலத்தை யளிக்கமாட்டார்கள். க்ருஷ்ணபக்ஷ சந்த்ரன், செவ்வாய், பாபியுடன் சேர்ந்த புதன், சனி 1, 4, 7, 10க்குடையவர்களானால் அசுப பலத்தை யளிக்க மாட்டார்கள்.

5-க்குடைய க்ரஹங்களைக்காட்டிலும் 9-க்குடைய க்ரஹங்கள் அதிக சுப பலனையளிப்பார்கள். 3, 6, 11-க்குடையவர்களில் 3க்குடையவனைக்காட்டிலும் 6-க்குடையவன் அதிகமாகவும் அதைவிட அதிகமாக 11-க்குடையவனும் அசுப பலனையளிப்பார்கள். 1, 4, 7, 10-க்குடைய சுபக்ரஹங்கள் ஒன்றுக்கொன்று

அதிகமாக அசுப பலனையும், க்ரூர க்ரஹங்கள் மென்மேலும் அதிகமாக சுப பலனையும் அளிப்பார்கள்.

1, 12, 2-க்கு அதிபர்கள் மேலே கண்ட விதம் சுபாசுப பலன்களை அளிப்பவர்களில் எவர்களுடன் சேர்ந்தாலும், யாரால் பார்க்கப்பட்டாலும் அவரவர்கள் கொடுக்கும் பலனையனுஸரித்தும் தங்களுக்குள்ள மற்ற ஸ்தானாதிபத்யத்தை யனுஸரித்தும் சுபாசுப பலன்களையுமளிப்பார்கள்.

8-9-க்குடையவன் பாக்யஸ்தானத்துக்கு வ்யய ஸ்தானாதிபனுகையால் அசுப பலத்தையளிப்பான். அவனே லக்னாதிபனுனல் சுப பலத்தையே யளிப்பான்.

1, 4, 7, 10-ஆதிபத்யமற்ற சுப க்ரஹங்களைக் காட்டிலும் குரு சுக்ரர்களுக்கு அதிக தோஷமுண்டு. குரு சுக்ரர்கள் 2, 7-ல் இருந்தால் மாரகத்தையும் செய்வார்கள். இந்த கேந்த்ராதிபத்யதோஷம் பாபியுடன் சேராத புதனுக்கு சிறிது குறைவானது. சுக்லபக்ஷ சந்த்ரனுக்கு இந்ததோஷம் புதனைவிட குறைவானது. 8-க்கு அதிபதியாயிருக்கும் தோஷம் சூரிய சந்த்ரர்களுக்குக் கிடையாது. செவ்வாய் 10 க்குடையவனுனல் ஏற்படும் சுபகரத்வம் த்ரிகோணாதிபத்யத்தால் அதிபனுனல் தான் ஸித்திக்கும்.

இராகு கேதுக்கள் எந்தெந்த பாவத்தையும் பாவாதிபதி ஸம்பந்தத்தையும் அடைந்திருக்கிறார்களோ; அந்தந்த பாவம், பாவாதிபதி பலன்களை யளிப்பார்கள். கேந்த்ராதிபன் த்ரிகோணாதிபன் இவர்கள் மற்றவர்களுடன் ஸம்பந்தம் பெறாமல் கூடியிருந்தாலும், ஒருவர்க்கொருவர் பார்த்தாலும் விசேஷ சுபத்தை யளிப்பார்கள்.

யோகபலன்.

கேந்த்ராதிபன், த்ரிகோணாதிபன்—இருவர்களும் தனித்தனியே தோஷமுள்ளவர்களானாலும் ஸம்பந்தத்தாலேயே பிரபலர்களாய் யோகத்தை அளிப்பார்கள். 9-க்கு அதிபதி 10-லும், 10-க்கு அதிபதி 9-லும் மாறியிருந்தாலும், 9-10க்குடையவர்கள் ஒன்று சேர்ந்து, 9 அல்லது 10-ல் வஸித்தாலும் இருவரும் யோகத்தை அளிப்பார்கள். 5 9க்குடையவர்களில் யார் 10-க்குடை

யவனுடன் சேர்ந்திருக்கிறானு அவன் யோகத்தைச் செய்வான். யோககாரகர்களின் தசாபுக்திகளில் அநேகமாய் யோகம் உண்டாகும். இருயோககாரகர்களின் தசாமத்தியில் சுப பலத்தை அளிக்கவல்ல க்ரஹங்களும் யோகத்தை அளிப்பவைகளே. க்ரஹங்கள் தங்கள் பாகிகளானலும், யோக காரக க்ரஹங்களின் ஸம்பந்தத்தால் அவரவர்களுடைய புக்திக்கநுகுணமாக யோகபலத்தையே அளிப்பார்கள். ராகு, கேதுக்கள் கேந்த்ரத்திலோ த்ரிகோணத்திலோ, கேந்த்ராதிபனுடனோ, த்ரிகோணாதிபனுடனோ, ஸம்பந்தம் பெற்று வலித்தால், அவர்களும் யோகத்தைச் செய்பவர்களாவர். கேந்த்ராதிபத்யம் பெற்றவர்களே த்ரிகோணாதிபத்யம் பெறுவார்களானலும் யோகத்தையே செய்வர்கள். இப்படியிருக்க கேந்த்ராதிபதி வேறு த்ரிகோணாதிபனுடன் சேர்ந்தால் அவன் யோகத்தை அளிப்பதில் எவ்வித ஸந்தேஹமுமில்லை. 9-10க்கு அதிபர்கள் 8-11க்கு அதிபர்களானால் அவ்விருவர்கள் ஒன்று சேர்ந்தாலும் யோகத்தை மனிதன் அடைவதில்லை.

பொதுவான ஆயுர் விஷயம்.

லக்னத்துக்கு 8 மிடமும், 8-க்கு 8-மிடமான 3-ம் இரண்டுக்கும் வ்யயஸ்தானமான 7-ம் 2 ம் மாரகஸ்தானங்களாகும். வ்யயஸ்தானங்களில் 7 ஐக்காட்டிலும் 2 மிடம் பலமாகும். 2 மிடத்ததிபதியைக்காட்டிலும், 2-ல் இருப்பவர்களும், 2-க்குடையவனுடன் கூடினவர்களும் அதிகபாபிகள். 2, 7-ல் இருப்பவர்களுடையவும், 2, 7-க்கு அதிபர்களுடன் கூடியவர்களுடையவும், தசைபுக்தி அந்தர காலங்களில் மரணம் ஸம்பவிக்கலாம். அவர்கள் தசை முதலியவை நேராமல் போனால். 2, 7-க்குடையவர்களின் தசாபுக்தி காலங்களிலும் மரணம் ஸம்பவிக்கக் கூடும். இந்த 2, 7-க்குடையவர்கள், 2, 7-ல் இருப்பவர்கள், 2, 7-க்குடையவர்களுடன் சேர்ந்த பாபிகள்–இவர்களின் தசாபுக்தி முதலிய காலங்களில் நேராமற்போனால், 2, 7-க்குடையவர்களுடன் சேர்க்கை அல்லது பார்வைபெற்ற சுபர்களுடையவும், 3, 8-க்குடையவர்களுடையவும் தசாபுக்தி முதலிய காலங்களிலும் சிலவேளை மரணம் ஸம்பவிக்கலாம். மேற்கண்டபடி மாரகலக்ஷணமுள்ளவர்களுடைய தசாதிகளில் நேராமல் போனால் சில ஸமயம் மாரக ஸம்பந்தமில்லாத கேவல பாபிகளுடைய தசை முதலிய

வைகளிலும் உண்டாகலாம் என ஊஹிக்கவேண்டும். பாபலக்ஷணமுள்ள சனி மாரகர்களுடன் கூடினால் அல்லது பார்க்கப்பட்டால் மற்ற மாரகர்களிருக்க தானே முன்வந்து மாரகத்தை அளிக்கிறான.

புக்திபலன். (பொது)

எல்லாக் கிரஹங்களும் தங்கள் தசையில் தங்கள் புக்தியில் தங்கள பாவாநுகுணமாக சுபாசுப பலனை யளிக்க மாட்டாகள். தங்கள சேர்க்கை அல்லது பார்வைபெற்ற க்ரஹங்களுடையவும், சுப பாவாதிபத்யம, அசுப பாவாதிபத்யம பெற்ற கிரஹங்களுடையவும புக்தி காலங்களில் தங்கள தசைக்குரிய பலனை அளிப்பாரகள. தசாநாதன அளிக்கும பலத்துக்கு விரோதமாக பலத்தை யளிப்பவர்களும, தசாநாதன சேர்க்கை அல்லது பார்வை பெறுதலைகளுமான க்ரஹங்களின புக்திகாலங்களில் அந்தந்த க்ரஹங்கள அளிக்கும பலனகள அவ்வவைகளின சுபாசுப பாவாநுகுணங்களாகவே யிருக்கக்கூடும். 5, 9-க்குடையவர்கள இதர ஆதிபத்யம முதலியவைகளால் பாபிகளாகாமலும், 1, 4, 7, 10-க்குடையவர்களின சேர்க்கை, பார்வைபெறுதலர்களாகவுமிருந்தால் தங்கள தசையில் 1, 4, 7, 10-க்குடையவர்களின புக்திகளில் சுபத்தை யளிப்பார்கள. இப்படியே, 1, 4, 7, 10-க்குடையவர்கள வேறு ஆதிபத்தியம முதலியவைகளால் பாபிகளாதாமலும, 5, 9-க்குடையவர்களின சேர்க்கை பார்வை பெறுதலர்களாகவுமானால் தங்கள தசையில் 5, 9-க்குடையவர்களின புக்திகளில சுபதனை அளிபபார்கள.

யோகபுக்தி விசேஷம்.

ராஜயோகத்தை அளிப்பவர்களின தசையில் ப்ரதான மாரக க்ரஹத்தின புக்தியில் ராஜயோகம ஆரம்பமாகும். ஆரம்பமான யோதபலத்தை அத்தசையில் பாபிகளின் புக்திகள் க்ரமமாக வருத்திசெயயும், யோககாரக தசையில் பாபிகளும் தங்கள் புதிகாலங்களில் பாப பலத்தை அளிக்கமாட்டார்கள். யோககாரக க்ரஹங்களின் ஸம்பந்தம் பெற்ற சுபக்ரஹங்களின புக்திகள் யோகத்தை ப்ரபலமாக்குகின்றன. ஸம்பந்தம் பெறுத சுபக்ரஹங்களின் புக்திகள ஸமமாக நடக்கின்றன. ஸம்பந்தம்பெறுத யோக

காரகர்களின் புக்திகள் விசேஷமாக யோகத்தைச் செய்கின்றன. யோக காரக க்ரஹங்கள் தங்களோடு சேராத, பார்வை பெறுத சுபக்ரஹ தசையில் தங்கள் தங்கள் புக்திகளில் சில ஸமயம் யோகபலத்தை அளிப்பார்கள். சுப ராசியில் இருப்பவர்களும், மற்றக்ரஹங்களுடன் சேராதவர்களுமான இராகு கேதுக்கள் யோகத்தைச் செய்கிற க்ரஹங்களின் புக்தியை அனுஸரித்து யோகபலத்தை அளிப்பார்கள். தசாநாதர்கள் பாபிகளானல் அவர்களின் ஸம்பந்தம் பெறுத சுபக்ரஹங்களின் புக்திகள் கெட்ட பலத்தை அளிக்கின்றன. ஸம்பந்தம் பெற்ற சுபக்ரஹ புக்திகள் சுபாசுப பலன்களை யளிக்கின்றன. ஸம்பந்தம் பெறுத யோக காரகர்களின் புக்திகள் மிக பாப பலத்தை அளிக்கின்றன. மாரக லக்ஷணமுள்ள கிரஹம் தன் தசையில் தன் ஸம்பந்தம் பெற்ற சுபக்ரஹ புக்தியில் கொல்லாது. ஸம்பந்தமில்லாத பாப புக்திகளில் புக்திநாதன் மாரகனவான்.

சூர்யதசையில் புக்திநாதனை சுக்ரன், சூரியன் கொடுக்கக் கூடிய சுபாசுப பலத்தையும், புக்திநாதனை சூரியன், சுக்ரன் கொடுக்கக்கூடியவைகளையும், சுக்ரதசையில் புக்திநாதனை சுக்ரன், சூரியன் கொடுக்கக்கூடியவைகளையும், சூரியன் கொடுக்கக் கூடியவைகளை சுக்ரனும், சனிதசையில் புக்திநாதனை சுக்ரன் சனி கொடுக்கக் கூடியவைகளையும், சுக்ரன் கொடுக்கக் கூடிய வைகளை சனியும், சுக்ரதசையில் புக்திநாதனை சனி, சுக்ரன் கொடுக்கக் கூடியவைகளையும், புக்திநாதனை சுக்ரன் கொடுப்ப வைகளை சனியும் அளிப்பார்கள்.

நக்ஷத்ரங்களில் பிறப்பதன் பலன்.

அசுவனி: அலங்கார ப்ரியன், அழகுள்ளவன், எல்லோருக்கும் பிரியன், புத்திசாலி.

பரணி: ஆரம்பித்த கார்யத்தை முடிப்பவன், உண்மைபேசுபவன், ரோகமற்றவன், ஸமர்த்தன், ஸுகி.

கார்த்திகை: அதிகமாக சாப்பிடுபவன், பிறர் தாரத்தில் பற்றுள்ளவன், காந்திமான், தீர்த்திமான்.

ரோஹிணி: உண்மை பேசுபவன், பிறர் பொருளில் ஆசையில்லாதவன், சுத்தன், இனிமையாகப் பேசுபவன், ஸ்திரபுத்தியுடையவன், நல்ல சரீரி.

மிருகசீர்ஷம்: சஞ்சலன், ஸமர்த்தன், பயந்தவன், பேசுவதில் திறமையுள்ளவன், உத்ஸாஹி, தனவான், போகி.

திருவாதிரை: பிறர் கார்யத்தில் விருப்பன், கர்வி, செய்நன்றி மறப்பவன், ஹிம்ஸகன், தீச்செயல் புரிபவன்.

புநர்வஸு: வெளியிந்திரியங்களை அடக்கினவன், ஸுகி, ஒழுக்கம் விஷயமுள்ளவன், கெட்டபுத்தியுள்ளவன். தாஹமுள்ளவன், அற்பஸந்துஷ்டன்.

பூசம்: சாந்தன், பிரியன், சாஸ்த்ரமறிந்தவன், பணக்காரன், தர்மிஷ்டன்.

ஆயில்யம்: பிறர்கார்யத்தில் கண்செலுத்தாதவன், எல்லாவற்றையும் சாப்பிடுபவன், பாபகார்யம்புரிபவன், செய்நன்றி மறப்பவன். வஞ்சகன்.

மகம்: அதிகமானஸேவகர்கள் பணம் இவைகளையுடையவன், போகி, தேவபித்ருபக்தன், அதிகமான உத்ஸாகமுள்ளவன்.

பூரம்: ப்ரியமாகப்பேசுபவன், கோடையாளி, காந்தியுள்ளவன், அலங்கரிப்பவன், ராஜஸேவகன்.

உத்தரம்: ப்ரியன், வித்தையினல் ஜீவனத்தை பொருளையுடையவன், போகி, ஸுகி.

ஹஸ்தம்: உத்ஸாஹி, சமயபுத்தியுள்ளவன், குடியன், நயமில்லாதவன், நிருட்டன்.

சித்திரை: பலவித வஸ்த்ரம் முதலியவைகளை அணிபவன், அழகிய கண்கள் முதலியவை உள்ளவன்,

ஸ்வாதி: விஷயமுள்ளவன், வியாபாரி, தயாவான், ப்ரியமாகப்பேசுபவன், தர்மத்தை அனுஷ்டிப்பவன்.

விசாகம்: பொருமையுள்ளவன், லோபி, காந்திமான், பேசுவதில் ஸமர்த்தன், சண்டையிடுபவன்.

அனுஷம்: பணக்காரன், அந்யதேசவாஸி, பயிருள்ளவன், உத்தவன், அலைபவன்.

கேட்டை : ஸ்வல்ப ஸ்நேஹிதருள்ளவன், ஸந்தோஷத்தை யுடையவன், தர்மவான், அதிகோபமுள்ளவன்.

மூலம் : கர்வி, தனவான், சூரன், ஈவிம்ஸையில்லாதவன், நிலையானபுத்தியுள்ளவன், போகி.

பூராடம் : பிரியமான சந்தோஷத்தை அளிக்கும் பார்யை யுடையவன், கர்வி, நீலத்தஸ்நேஹமுள்ளவன்.

உத்தராடம் : வணக்கமுள்ளவன், தர்மிஷ்டன், அதிகமித்ர களையுடையவன், நன்றியறிபவன், பிரியன்.

திருவோணம் : ஸ்ரீமான், படிபபாளி, பெருந்தன்மையுள்ள பார்யையுடையவன், பணக்காரன், கீர்த்திமான்.

அவிட்டம் : தனிகன், பராக்ரமசாலி, கொடையாளி, ஸங்கீ தத்தில் விருப்புள்ளவன், த்ரவ்யலோபி.

சதயம் : தெளிவான வார்த்தை சொல்பவன், சூதாட்டம் முதலியவைகளில் பற்றுடையவன், எதிரிகளை முறியடிப்பவன், உடனேசெயல்புரிபவன், கட்டுப்படாதவன்.

பூரட்டாதி : கவலை பயமுள்ளவன், ஸ்த்ரீவிஷயமாக தனத்தை அழிப்பவன், நன்றாய்ப்போகபவன், சமர்த்தன, ஈகையில்லாதவன்.

உத்தரட்டாதி : போகபவன், ஸுகி, சந்ததியுள்ளவன், ஜய முள்ளவன், தார்மிகன்.

ரேவதி : பூர்ணாங்கன், பிரியன், சூரன், கர்த்தன், தனவான்.

இப்பலன்களை அந்தந்த ஜாதகங்களுக்குரியபாவம், பாவாதி பதி, பாவகாரகர்கள், பாவத்தைப்பார்க்கும் க்ரஹங்கள் முதலி யவைகளையும், தேசம் முதலியவைகளையும் கலந்து நிர்மானித்துச் சொல்லவேண்டும். இருப்பதையே சொல்வது உசிதமாகாது.

ஸத்யாசார்ய மதப்படி மேஷம் முதலிய லக்னங்களில் பிறந்தவர்களின் ஸ்வரூபம் முதலியன.

மேஷலக்னம்— அழகற்ற நகமுள்ளவன், கோபி, சண்டை உண் டையுடையவனாவன், தடைபட்ட வார்த்தை யுடையவன், பித்தவாதம்

கள் அதிகமுள்ளவன். லோபி, மிகுந்த கஷ்டத்தை அனுபவிப் பவன். இளவயதில் தாய் தகப்பன்மார்களால் விடுபடுபவன். அல்ப ஸந்ததியுள்ளவன். பந்துக்களுக்கு நன்மை புரிபவன். தர்மமாக நடப்பவன். பலமில்லாத கார்யத்தை வேறு தேசத் தில் செய்பவன். தன்னில் குறைந்தவள், அங்கஹீனை, கோள் சொல்பவள் அல்லது மற்றவனுக்கு நிச்சயிக்கப்பட்ட பெண்ணை பார்யையாக அடைவான். மித்ரர்கள் ஸஹோதரனைப்போன்ற வராவர். ஆயுதம், விஷம், பித்தவிகாரம் இவைகளால் அல்லது பந்துக்கள் மூலம், நெருப்பு, மழை முதலியவைகளால் அல்லது மலையிலிருந்து விழுதல் இவைகளால் மரணமுண்டாகும்.

விருஷபம்— பெருத்த உதடு கன்னம் மூக்குகளையுடையவன், விசால நெற்றியுள்ளவன். கபம் வாதம் அதிகமான சரீரி தாதா, அதிகம் செலவு செய்வதில் விருப்பம். பெண் ஸந்ததி யுடையவன். அல்ப புத்ர ஸந்ததியுள்ளவன். தகப்பன் தாய் களுக்குக் கெடுதல் செய்பவன். உத்ஸாஹமுடையவன். கெட்ட நடத்தையுள்ளவன். தனவான், எப்போதும் பார்யையை விரும்புபவன், சஸ்த்ரங்களைத் தடுப்பவன். தன் பந்துக்களுக்கு தனுகளை அளிப்பவன். ஆயுதம், பாசம், மிருகங்கள் இவை களால் வேறு தேசத்தில் மரணமேற்படும். சரீரப்பரயாஸை, ஜலம், சூலம், ஸஞ்சாரம், வேலைக்காரர்கள், பலமுள்ள நாற்கால் மிருகங்கள் இவைகளால் மரணமுண்டாகலாம்.

மிதுனம்— அங்கஹீனன் அல்லது அதிக அங்கமுடையவன், மீப்பிர கோபி, கொண்டாடத்தக்க கார்யம் செய்பவன். நன்மை யவர்களை டையவன், இருதாய்களையுடையவன், அற்பன், சிறிய மகளுரீரை யவன், தாய் தகப்பன் முதலியவர்களால் கொண்டா டத்தக்கவன். குறைந்த ஸஹோதரமுள்ளவன், அல்ப கார்யம் செய்பவன், ஜயசீலன், நற்குணமுள்ளவன். பல கார்யங்களைச் செய்ய ஆசைப்படுபவன், தர்மிஷ்டன், கெட்ட நடத்தையால் த்தை அழிப்பவன், பல களத்ரமுள்ளவன். மஹாரோகங் களை பாக்குபவன். பாம்பு, விஷம், மிருகம், ஜலம் இவைகளால் மர நேரிடக் கூடும்.

கடகம்— சஞ்சல புத்தியுள்ளவன், மறைவான இடத்தில் வியாதியுள்ளவன், பயந்தவன், மார்பில் மருவுள்ளவன், கபவாத ப்ரக்ருதி, பிடிவாதமுள்ளவன், கெட்டவர்களுடன் சேர்க்கை யுடையவன், பிறர் த்ரவியத்தையும் செலவழிப்பவன், கர்வி, தன் சுற்றத்தாரால் அவமதிக்கப்படுபவன், அழியக்கூடிய ஸ்தானங்களையுடையவன், பிற தேசத்தில் க்ரூர காரியங்களைச் செய்பவன், தனிகன், தலைவன், பொருத்தமில்லாத களத்ரமுடையவன், தோல்வியடைபவன், ஸமூகத்தில் பூஜிக்கத்தக்கவன், சுறுக்கு போடுவதாலோ கபத்தால் அல்லது எலும்பு கொறுங்கல், மனவருத்தம், வெட்டுக்காயம், உதரரோகம் முதலியவைகளாலோ மரணம் ஏற்படலாம்.

ஸிம்மம்— கடின சித்தன், மர்மஸ்தானத்தில் ஆசையுடையவன், பித்தாதிகன், கஷ்டமடைபவன், பல கார்யங்களை ஆரம்பிப்பவன், குடும்பி, உலோபி, கல்லவன், தேர்ந்திமான், உடன்பிறந்தோனால் துக்கப்படுபவன், சுற்றத்தாருக்குத் தீங்கிழைப்பவன், வீர்ய முள்ளவன், வருத்தமில்லாதவன், வேலைசெய்பவன், பல வழி களிலும் அதர்மம் செய்பவன், துஷ்ட களத்ரமுள்ளவன், குலாசார மாக பல வித்தைகளை யறிந்தவன், இடுப்பு, முழங்கால், பற்களில் ரோகமுள்ளவன், ஆயுதம், வெட்டை செய்கை, விஷம், கட்டை வியாதி, கீழ்ப்பிராணி, பசி இவைகளிலொன்றால் மரணம் நேரிடலாம்.

கன்னி— ப்ரியவாதி, அல்பகாந்திமான், நீண்ட கைகால் களையுடையவன் புண்ய பாபங்களுள்ளவன், பூசிக்கு வரிவாரை முள்ளவன், வ்ரணமுள்ளவன், தனவான், உலோப, பார்வதுக் களிடம் ஸ்நேகமுடையவன், அதிக பெண் ஸந்ததிகளை முடையவன், உடன் பிறந்தாரிடம் கலஹம் செய்பவன், தர்மத்தில் பிரியமுள்ள வன், குறைந்த வருமானமுள்ளவன், யுக்தியுடன் கார்யத்தைச் செய்யக்கூடியவள், நாற்கால் ஜீவன், ஆயுதம், பித்தரோகம், சுற்றத்தார்களின் விரஹம், மலையிலிருந்து விழுதல், சூலை முதலியவைகளால் மரணம் ஸம்பவிக்கலாம்.

துலாம்— ஸமாகமில்லாதவன், விஷமமுள்ளவன், உன்மத்த ப்ரக்ருதி, சஞ்சல சித்தன், குட்டையான கழுத்துள்ளவன்,

நன்றி மறவாதவன், கிறைய ஸம்பாதித்துச் செலவழிப்பவன், தீர்த்திமான், பூஜ்யன், பூஜிப்பவன், அதிகமாக நடப்பதில் ஆசை யுள்ளவன் தர்மவான், பல கஷ்டங்களுடையவன், கியாதி வாய்ந் தவன், பந்துக்கள், சாதுவான பிராணிகள், புத்ரகளத்ர வியோ கம், போஜனமில்லாமை, வழிநடத்தல் முதலியவைகளால் மரண மேற்படலாம்.

விருச்சிகம்— அகன்றதாயும் நேராயுமுள்ள முகம், வலிறுள்ள வன், க்ரூர குணத்தையுள்ளவன், பித்த சரீரி, சிவப்பான கண் களையுடையவன். தாமதமாகச் செய்பவன், வேகமாய் நடப்பவன், நகராதிபதி அதிக குடும்ப பந்துக்களையுடையவன், ஹிம்ஸை புரிபவன். செலவாளி. அநேக ஸந்ததியுள்ளவன், சுகமில்லாத வன், சத்ருக்களுள்ளவன். விருஷபத்தை ரகஷிப்பவன், தர்ம சூன்யன், பார்யையிடம் பற்றற்றவன். தன் குலத்திலேயே சத்ருக் களுள்ளவன். அதிக ரோகங்களையுடையவன், வெட்டுக்காயம், சத்ரு வசம் கமிற்றல் கட்டப்படல். அடிபடுதல், ரோகங்கள், பாபகார்யங்கள். நெருப்பு இவைகளால் மரணம் நேரலாம்.

தனுஸ்— பெருத்த உதடு, பல், மூக்குகளையுடையவன். கபவாத ப்ரக்ருதி. தடித்த மர்மஸ்தானம் துடை கைகளை யுடையவன். அழகற்ற ஸகமுள்ளவன், கார்யங்களில் முயற்சி யுள்ளவன், சூரன், அற்பர்களையும் நீசர்களையும் ஸேவிப்பவன், திருட்டு, அக்னி, அரசன் இவர்கள் மூலம் தனநாசமடைப்வன். ஔஷதம். சாஸ்திரம் இவைகளை நன்கறிந்தவனாகவும், பலரால் கொண்டாடத்தக்கவனாகவும், உடன் பிறந்தோர் மிஹ்மையில் ஆசையுடையவனாகவுமாவான். அந்ய தேசத்தில் தொழில் செய்து ஸம்பாதிப்பவன். தர்மத்தில் அதிகப் பற்றில்லாதவன், களத்ர விரோதி, முகரோகி. நாற்கால் பிராணிகள், ஸர்ப்பம், அரசன் மூலம் அல்லது பந்தனம், இவைகள் மூலம் மரணம் ஸம்பவிக்கலாம்.

மகரம்— சிறிய மூக்கு, நீண்ட முகம் கைகால்களையுடையவன், வாத ப்ரக்ருதி, மருகம் போன்ற முகமுள்ளவன், பயந்தவன், நிலையற்ற சித்தமுள்ளவன், நைச்சாலியையடைந்தவன்,

தாழ்மையான குடும்பத்தையுடையவன், அதிகம் பொருளில்லாதவன், லோபி, ஸ்த்ரீ ஸந்ததிகளையுடையவன், பந்துக்களில்லாதவன், பல ஸஹோதரர்களையுடையவன், விர்யத்தால் பிரபுவிடமிருந்தும் காட்டிலிருந்தும் பொருள் ஸம்பாதிப்பவன், போஜனத்தை நீக்கி விரதங்களைச் செய்பவன், தன் கௌரவத்துக்குக் கீழ்ப்பட்ட பத்தினியை யடைந்து அதிகப் பிரியத்துடனிருப்பான். அதிகம் விரோதிப்பவன, சிறிது கேசத்தையுடையவன், முழங்கால்களில் பலமில்லாதவன், ரோகி, சிறு குழந்தை வாயு, ஆயுதம், அரசன், விஷம், கீழே விழல், பித்தாதிக்கம், அஜீர்ணம், வழிதவறல் முதலியவைகளில் ஒன்றால் மரணம் ஏற்படலாம்.

கும்பம்— கர்வி, க்ரூரன், குலத்தில் உயர்ந்தவன், பித்த-வாயு ப்ரக்ருதி, நிலபுஷ்பம் போன்ற மூக்குள்ளவன், கிடைத்த திரவ்யத்தை நாசம் செய்பவன். அதிகம் வேலைக்காரர்களுள்ளவன், அதிகச் செலவினால் கார்யம் செய்பவன், பெரியோர்கள், உற்றார், உறவினர்களிடம் விரோதி, பாபத்தில் பற்றுள்ளவன். அழகிய சரீரமுடையவன், பலவழிகளில் லாபமுள்ளவன். கபடமாக ப்ரவ்ருத்தியில் நின்று தேவ பூஜை செய்பவன், எப்போதும் கலஹம் செய்யும் பார்யையை யடைவான். கபரோகத்தால் ஹ்ருதய வியாதியுள்ளவன், வயிற்றுவலி, வாந்தி, ஸ்த்ரீகளால் மருந்திடுதல் ஏதாவதொன்றால் மரணம் ஸம்பவிக்கக்கூடும்.

மீனம்— பெருத்த உதடு, மீன் போன்ற கண், பெருத்த மூக்கு - இவைகளையுடையவன். கபவாத ப்ரக்ருதி. பெரும் ஸ்வபாவமுள்ளவன், கர்மரோதி, ஒரேவித புத்தி சேஷ்டையில்லாதவன், தர்மத்தில் பற்றுள்ளவன், பெற்றோர்களுக்கு உயர்ந்ததைச் செய்பவன், நல்ல ரூபமுள்ளவன், ஸந்தடத்தையுள்ள பார்யை, மிகவும் கெட்ட ஸ்பாவமுள்ள சத்ரு, ரக்த ஸம்பந்தமான ரோகமுள்ளவன். பாம்பு, சிங்கம் இவைகளிலிருந்து பயமுள்ளவன். பூஜிக்கப்படுபவர்கள், ஹ்ருதயத்திலுள்ள வியாதி, வித்யை, மருந்துகளின் ப்ரயோகம், உபவாஸம், வழியிலுள்ள கெடுதி இவைகளில் ஒன்றால் மரணம் ஏற்படலாம்.

பாவபலன் பார்க்கும்போது கவனிக்கவேண்டியவை.

பாவாதிபன் சுபக்ரஹமானாலும், அந்த ஸ்தானத்தை சுபன் பார்த்தாலும், சுப க்ஷேத்ரமானாலும், சுபனிருந்தாலும், பாபிகள் பார்க்காமலும், வலிக்காமலிருந்தாலும் அவ்விட்டுக்குரிய பாக்யம் முதலானவை நன்றாக இருக்கும். அந்த ஸ்தானம் பாபி ஸ்தானமாயிருந்து அதில் அந்த ஸ்தானாதிபதி நீசம், மூடமடையாமல் மித்ரன் வீட்டில் இருந்தால் நற்பலன். இப்படியே ஒவ்வொரு பாவத்தையும் ஊஹித்துக் கொள்வது. அந்தந்த பாவத்துக்கு 2, 4, 5, 7, 9, 10 இவைகளில் சுபரிருந்தாலும், அவைகளை சுபர் பார்த்தாலும், பாபிகள் பார்க்காமலும். இல்லாமலும், அந்த பாவாதிபன் பாபிகளின் பார்வை, சேர்க்கை இவையில்லாமலிருந்தாலும் நன்மையே யுண்டாகும். அந்த ஸ்தானத்துக்கு 2, 4 முதலிய மேலே குறித்த விடங்களில் பாபிகளிருந்தாலும், பார்த்தாலும், சுபர்களின் பார்வை ஸம்பந்தம் இவைகளில்லாமலிருந்தாலும் அந்த பாவத்துக்குக் கெடுதியாகும். சுபர் பாபிகள் சேர்ந்திருந்தால் நல்லதும் தீயதும் கலந்து நடக்கும்.

எந்த பாவாதிபதியானாலும், எட்டிலிருந்து மூடம், நீசம், சத்ரு ராசியை அடைந்து சுப ஸம்பந்தம் பார்வையில்லாவிடில் பாவ நாசம். இவ்விதமே சுபக்ரஹம் 8-ல் மூடம் நீசம், சத்ரு ராசியை அடைந்து சுப ஸம்பந்தமில்லாமலும், பார்க்காமலும் இருந்தால் விசேஷ பலமில்லை. பாபிகள் இவ்வாறிருப்பின் பலனே போம். பாவாதிபதிகள் லக்னாதிபதி முதலியோர் அந்தந்த பாவத்துக்கு 6, 8, 12, களில் பாபிகளோடிருந்தால் அந்தந்த பாவங்கள் நாசம். சுபக்ரஹங்கள் இருந்தால் விசேஷ பலனைத் தராமட்டா. எந்த பாவாதிபதி 6, 8, 12 லிருந்தாலும், எந்த பாவத்தில் துஸ்ஸ்தானாதிபதியிருந்தாலும், அந்த பாவம் அழியும். சுபர் பார்வையுண்டானால் சுகம். பாவாதிபதியும் பாவமும் பலமில்லாதிருந்தாலும் காரகக்ரஹத்துக்கு இருபுறங்களிலும் பாபக்ரஹங்களிருந்தாலும், பாப சத்ருக்ரஹங்களால் பார்வை, ஸம்பந்தம் பெற்றாலும், சுபர்களின் பார்வை, ஸம்பந்தமில்லாமற்போனாலும், 4, 8, 12, திரிகோணங்களில் பாபிகளிருந்தாலும் கண்டு கவனித்து பலன் சொல்லவேண்டும்.

குறிப்பிட்ட பாவத்துக்கு 8-மிடத்ததிபன் 22-வது த்ரேக்காணாதிபன் அந்தந்த பாவாதிபன் பலமில்லாதவர்களாய் 8, 6, 7-லிருக்க அவர்கள் தசையில் அந்தந்த பாவங்கள் நாசமாகும். பாவாதிபனுக்கு மித்ர க்ரஹங்கள் பல முள்ளவர்களாயும், 3, 6, 11-ல் பாப க்ரஹங்களும் கேந்த்ர த்ரிகோணங்களில் சுபர்களும் இருந்தால் பாவ பலன் விசேஷமாய் நடக்கும்.

லக்னம், சந்த்ரலக்னங்களுக்கு மூன்றுமிடத்ததிபதியும், அஷ்டமத்திலுள்ள க்ரஹமும், அதைப் பார்க்கும் க்ரஹமும், சனி, க்ரூரத்ரேக்காணாதிபதி குளிகஸ்தானாதிபதி இவர்களின் ராசி அம்சாதிபதிகளும், ராகுவும் பலமில்லாதவர்களாய் அந்தந்த பாவத்துக்கு துஸ்ஸ்தானங்களிலிருந்து பாபிகளுடன் கூடினாலும், பார்த்தாலும், அந்தந்த க்ரஹங்களின் தசையில் பாவம் நாசமாகும்.

லக்னாதிபன் எந்த பாவத்தில் இருந்தாலும் அந்த பாவத்துக்கு நல்ல பலமுண்டு. லக்னாதிபன் எந்த பாவாதிபதியோடு கூடினாலும் பார்த்தாலும் பாவ பலஹீன அளிப்பன். லக்னாதிபன் அந்தந்த பாவங்களின் துஸ் ஸ்தானங்களிலிருந்து பாவாதிபதிகள் துர்ப்பலராலால் அந்தந்த பாவத்துக்குத் தோஷம் ஏற்படும். லக்னாதிபதி துஸ் ஸ்தானத்திலிருந்து பாவாதிபதிகள் பலசாலிகளாலால் சிறிது தோஷம்.

லக்னாதிபதி பாபியாலாலும் தான் வஹிக்கும் பாவத்தை அளிப்பன். பாபியாயிருந்து துஸ்ஸ்தானாதிபதியாலாலும் லக்னாதிபதியளிக்கக் கூடிய பலத்தையே அளிப்பான்.

உதாஹரணம்:— மேஷ வ்ருச்சிகங்களுக்கு அதிபதி செவ்வாய். அவன் 8.6க்குடையவனாகவும் ஆகிறான். ஆனாலும், 5-வது ஸ்தானம் ஸிம்மம் அல்லது மீனம் இவைகளிலிருந்தால் புத்ரஹீனயளிப்பான். இந்த ஸ்தானங்களிலிருந்து சுபக்ரஹ வீக்ஷித ராலால் சக்ரத்தில் புத்ரப்ராப்தியுண்டு.

இரு ஆதிபத்யம் ஒரு க்ரஹத்துக்கு ஏற்பட்டால் மூல த்ரிகோணாதிபத்யமே விசேஷமானது. 2-வது ராசியின் பலனே நடக்கும். க்ரஹம் ஒற்றையான இராசியில் ஒற்றை ராசியின் பலம்

முதலிலும், இரட்டை ராசியிலிருந்தால் அந்த ராசியின் பலனே முதலில் நடக்கு மென்று சிலர் சொல்லுகிறார்கள்.

அந்தந்த பாவேசனுக்கு அதிசத்ரு க்ரகங்களின் புக்தியிலோ பிந்து சூன்யமான ராசத்தின் புக்தியிலோ லக்னாதிபனுடைய பன்னிரு பாவங்களுக்கும் நாசம் என்று (ப்ரச்னத்துக்கும்) சொல்ல வேண்டும்.

உச்ச மித்ர க்ஷேத்ரங்களிலிருக்கும் க்ரஹங்கள் 6 பலத்தோடு கூடினாலும். ஸ்புடஸந்தியில் இருக்க நிஷ்பலனே. இதை அவசியம் கவனிக்கவேண்டும்.

பாவேசர்கள் பாவஸ்புடங்களுக்குச் சரியாயிருந்தால் பூர்ண பல மென்றும், ஸந்திஸ்புடத்திலிருக்க நிஷ்பலனென்றும், இரு ஸ்புடங்களுக்கும் மத்தியிலிருக்க மத்யமபல னென்றும் கூறலாம்.

பாவங்கள்

ரவியின்:— ஆத்மா, பிதா, ப்ரபாவம், ரோக மின்மை, சக்தி, மங்களம்.

சந்த்ரன்: மனது, புத்தி, ராஜாநுக்ரஹம், தாய், சம்பத்து.

செவ்வாய்: பலம், வியாதி, ஸஹோதரம், பூமி, சத்ரு, ஜ்ஞாதி.

புதன்: படிப்பு, பந்து, விவேகம், மாமன், ஸ்நேஹிதன், வாக்கு கற்காரியம்.

குரு: அறிவு, தனம், புஷ்டி, புத்ரன்.

சுக்ரன்: பார்யை, வாஹனம், ஆபரணம், மன்மதவியாபாரம், ஸௌக்யம்.

சனி: ஆயுள், ஜீவனம், நாசம், ஆபத்து, அடிமை.

ராகு: பிதாமஹன்.

கேது: மாதாமஹன்— இவைகளுக்குக் காரகர்களாம்.

பாவகாரகர்கள்:— ரவியன், குரு, செவ்வாய், சந்த்ரன்-புதன், குரு, சனி-செவ்வாய், சுக்ரன், சனி, ரவியன், சனி-குரு, குரு-ரவியன்-புதன்-சனி, குரு-சனி— இவர்கள் மூறையே லக்னம் முதல் காரகர்களாம்.

மித்ர சத்ரு ஸமஸ்வ க்ஷேத்ரங்கள், உச்சம், பலம், லக்னாதிபதி, சந்த்ரலக்னாதிபதி, பாவம்-இவைகளை அறிந்து சொல்லவேண்டும். சுபக்ரஹங்கள் வ்ருத்தியையும், பாபக்ரஹங்கள் விரோதத்தை

யும் செய்வார்கள். 6, 8, 12-ல் உள்ள பாபிகள் நற்பலனையும், சுபக்ரஹங்கள் கெட்ட பலனையுமளிப்பார்கள்.

பாவக்ரஹங்கள் 6, 8, 12-ல் இருந்தால் பாவ வ்ருத்தியைச் செய்வார்கள். சுபக்ரஹங்கள் நாசத்தைச் செய்வார்கள்.

எந்த பாவத்துக்குப் பலன் பார்க்கவேண்டுமோ; அதையே லக்னமாகக் கொண்டு அது முதல் 12 பாவங்களின் பலனையும் கவனிக்கவேண்டும்.

இவ்விதம் அந்தந்த பாவகாரகர்களான சூரியன் முதலான க்ரஹங்கள் வலிக்கும் ராசி முதல் பிதா மாதா உடன் பிறந்தோன், மாமன், புத்ரன், வேலைக்காரன்— முதலானவர்களைக் கவனிக்க வேணும்.

சூரியன் நிற்கும்— ராசியினால் தகப்பன் ஸ்வரூபம், இரண்டினால் விருத்தி, மூன்றால் பிதாவின் உடன்பிறந்தோன், நான்காமிடத்தால் சுகம், தாய், ஐந்தால் புத்திப்ரகாசம், ஆறால் பிடை, ரோகம், எதிரி, ஏழால் காமம், மதம், எட்டினால் துக்கம், மரணம், ஆயுள், ஒன்பதால் புண்யம், சுபம், பிதாமஹன், பத்தாமிடத்தால் வியாபாரம், பதினொன்றால் லாபம், பன்னிரண்டால் நாசம்— இவைகளைப் பார்க்க வேண்டும். இவைபோலவே மற்ற சந்த்ரன் முதலியவர்களைக் கொண்டும் பார்க்கவேண்டும்.

அந்தந்த பாவங்களாலும் காரகர்களாலும் அவரவர் தாய், தகப்பன், உடன் பிறப்பு, புத்ரன்—முதலானவர்களையும் சொல்ல வேண்டும். பாவம், காரகன், பாவநாதன்—இவர்கள் பலவான்களாயிருப்பின் அந்தந்த பாவம் நன்றாக நடக்கும்.

9-ல் சூரியன், 4-ல் சந்த்ரன், 3-ல் செவ்வாய், 5-ல் குரு, 7-ல் சுக்ரன் 8-ல் சனி இருப்பது- அந்தந்த பாவங்கள் சரியாகவிராது.

லக்னாதிபன் எங்கிருந்தாலும், எந்த ஸ்தானத்தின் அதிபதியோடு கூடியிருப்பானோ; அந்த ஸ்தான பலனையே கொடுப்பான். பாவமும் பாவாதிபதியும் பலமாயிருந்தால் பாவத்தின் நன்மையையும், பலவீனமானால் தீயதையும் தரக்கூடும் எனச் சொல்லுக.

லக்னாதிபதி, பலமுள்ள எந்த பாவாதிபதியுடன் கூடியிருந்தோ; அந்த பாவத்துக்கு பலனுண்டு. பலமில்லாத பாவாதிபதிகளுடன் சேர்ந்தால் அந்த பாவ பலன் இல்லை.

துஸ்ஸ்தானாதிபதி தன் வீட்டிலிருந்தால் தானிருக்கும் தன் வீட்டிற்குரிய பலனையே அளிப்பான். 6-வது வீடு மகரமாய் அதில் சனியிருப்பின் புத்ரனுண்டு.

க்ரஹங்கள் ஒருவர்க்கொருவர் இடமாற்றம், சேர்க்கை, பார்வை, கேந்த்ரம் த்ரிகோணம்- இவை க்ரஹங்களின் ஸம்பந்தம் எனப்படும்.

12 பாவ ஸமுதாய பலன்

முதல் பாவம்

லக்ன நவாம்சாதிபனுக்குச் சொல்லிய தேகமோ, பலவானை ஜாதகத்துக்குச் சொல்லிய தேகமோ உடையவனாயிருப்பான். சந்த்ரனிருக்கும் நவாம்சாதிபதி எந்த ஜாதியோ அந்த ஜாதியும், அந்த ராசி எந்த ரூபமோ அந்த ரூபத்தையும் அடைவான்.

லக்னாதிபதி கேந்த்ரத்ரிகோணங்களிலும் உச்ச ஸ்வக்ஷேத்ரங்களிலும், அஸ்தமனமடையாதவனாய் 8-ஆமிடையவன் கேந்த்ரத்தைத் தவிர மற்ற இடங்களிலிருந்து லக்னம் சுபர்களோடு சேர்ந்திருக்குமானால் தீர்க்காயுளையுடையவனும் தனவானும், குணவானும், மிக உயர்ந்தவனும் ஸம்பத்துடையவனும், அழகுடையவனும், குடும்பத்துடன் வாழ்பவனுமிருப்பான்.

லக்னாதிபதி சுப ஸம்பந்தமுடையவனால் நல்ல க்ராமத்தில் வஸிப்பவனாகவோ நல்லோருடன் சேர்ந்து வஸிப்பவனாகவோ ஆவான் லக்னாதிபதி பலவானுடன் கூடியிருந்தால், ப்ரஸித்தி பெற்ற அரசனை அண்டிவாழ்வான். லக்னாதிபன் உச்சஸ்தானத்திலிருந்தால் அரசனாவான். ஸ்வக்ஷேத்ரத்திலானால் தான் பிறந்த விடத்திலேயே வஸிப்பன். சரராசியிலானால் எப்போதும் அலைந்து திரிவான். ஸ்திராசியிலிருந்தால் ஒரே இடத்தில் வாஸம் செய்வான். உபயராசியிலானால் சிறிது காலம் ஒரிடத்தில் வாஸம், பிறகு அலைதல் மறுபடி ஒரிடத்தில் சிறிது காலம் வாஸம் என்ற முறையில் காலத்தைக் கழிப்பான்.

லக்னாதிபன் அஸ்தமனமாகாமல் பிரகாசித்துக்கொண்டு நல்ல ஸ்தானத்தில் (6—8—12 இல்லாதது) இருந்தால் சுகத்துடனும், மென்மேல் விருத்தியுடனுமிருப்பான். துஸ்ஸ்தானத்தில் (6—8—12) வஸித்தால் துக்கத்தையடைபவனாவான். சத்ரு

க்ரஹம் நீசஸ்தானத்தை அடைந்திருந்தால் லௌகரியக் குறைவான இடத்தில் வஸிப்பான். லக்னம் பலம் பெற்றதானால் சுக ஜீவியாகவும், மென்மேலும் விருத்தியடைபவனுகவும், பலசாலியாகவுமிருப்பான். லக்னம் பலமில்லாததானால் அடிக்கடி ஏற்படும் ஆபத்துக்களால் துக்கமடைபவனுகவும், வியாதியால் பிடிக்கப்படுபவனுவுமிருப்பான்.

இரண்டாம் பாவம்

2-க்குடையவன் உயர்ந்த பாவத்திலும். 2-மிடத்தில் சுபரிருக்கவும் சொத்துள்ளவனுகவும், உயர்ந்த குணமுள்ளவனுகவும், பணமுள்ளவனுகவும், நல்லமுகமுள்ளவனுகவும், முன்னதாகவேபின்வரப் போவதை அறிபவனுகவுமிருப்பான். இரண்டுக்குடையவன் சூரியன் ஸம்பந்தம் பெற்றால் லோகோபகாரம் செய்வதற்குகந்த படிப்பு பொருளுடையவனுவான். சனி ஸம்பந்தம் பெறின் தாழ்ந்த படிப்பையும் கொஞ்சம் படித்தவனுவான். குரு ஸம்பந்தம் பெற்றால் வேதம், தர்மசாஸ்த்ரங்கள் முதலியவைகளில் தேர்ச்சியுள்ளவனுவான். புதஸம்பந்தம் பெற்றால் அர்த்தசாஸ்த்ரம் (பொருளாதாரம்) அறிந்தவனுவான். சுக்ரஸம்பந்தம் பெற்றால் சிருங்காரரஸத்துடன் உரையாடுவதில் ஸமர்த்தன. சந்த்ரன் ஸம்பந்தம் பெற்றால் வித்யைகளில் சிறிதளவு ஞானம் பெற்றவனுவான். செவ்வாய் ஸம்பந்தம் பெற்றால் க்ரூர வித்யையில் தேர்ச்சி பெற்றவனுகவும், கோள்சொல்பவனுகவும் இருப்பான். ராகு 2-ல் இருந்தால் உளறுபவனுவான். கேதுவிருந்தால் கொன்னலுடன் பேசுபவனுகவும் பொய் பேசுபவனுகவுமாவான். 2-ல் பாபியிருந்தால் மூடனும் தனமில்லாதவனுகவுமாவான்.

மூன்றும் பாவம்

லக்னாதிபதி 3-க்குடையவன் பலம் பெற்றுச் சேர்ந்திருந்தாலும் பரிவர்த்தனம் பெற்றவர்களானாலும் தைர்யம், பராக்ரமம், உடன்பிறந்தவர்களின் ஆநுகூல்யம், பிடிவாதமாய் காரியம் செய்வது இவைகளையடைவான். 3-க்குடையவன் ஸஹோதர காரகன், பலம் பெற்று சுபரோடு கூடி நல்ல பாவத்திலிருந்தால் ஸஹோதரம் பெருகும். மேலே கண்டவர்கள் பலமில்லாதிருந்தால் 6—8—12 களிலிருப்பின் ஸஹோதர நாசம், 3-க்குடையவனும் ஸஹோதரகாரகனும் சூரியனும் ஒற்றைப்பட்ட ராசிகளிலிருந்து செவ்வாய், குரு, சூரியன் இவர்களால் பார்க்கப்பட்டு

மூன்றுமிடம் ஒற்றைப்பட்டதாகவுமிருக்குமானால் நவாம்சத்தின் எண்ணிக்கைக் கொப்பான புருஷ ஸஹோதரர்களிருப்பார்கள்.

நாலாவது பாவம்

4-க்குடையவன் சந்த்ரன் துஸ் ஸ்தானங்களையடைந்து பாபிகள் மத்தியிலிருந்து பாபிகளின் சேர்க்கை பார்வை பெற்று சுபர்கள் பார்வை சேர்க்கையில்லாமலுமிருந்தால் தாய்க்கு மரணமுண்டாகும். ஸுகஸ்தானத்தில் சுபக்ரஹங்களிருந்து ஸுகஸ்தானாதிபனும் காரகனும் பலத்துடன் சுபக்ரஹங்களுடன் சேர்ந்தும் பார்வைபெற்றுமிருந்தால் தாய்க்கு நலம்.

லக்னாதிபதி நான்கிலும். சுகாதிபதி லக்னத்திலுமிருந்து ஒருவர்க் கொருவர் பார்க்கில், அல்லது இருவரும் கூடினில் தாய்க்கு சமக்ரியையைச் செய்வான். மேற்சொன்ன இருவரும் சத்ரு ஸ்தானங்களில் அல்லது ஷஷ்டாஷ்டகத்திலிருந்து இருவரும் ஸம்பந்தம் பெற்றிராவிடில் தாயின் மரண ஸமயத்தில் சமக் கடனைச் செய்யமாட்டான்.

மாத்ருபாவத்தை விவரித்தமாதிரியே தகப்பன், உடன்பிறந்தோன், புத்ரன் முதலியவர்களுக்கும் பாவம், காரகன், பாவாதிபதி, லக்னம், லக்னாதிபதி முதலியவர்களைக்கொண்டு பலத்தைச் சொல்லவேண்டும்.

நாலுக்குடையவனும், சுக்ரனும் சுபஸ்தானங்களிலிருப்பினும் அல்லது காலிலிருப்பினும் பல்லக்கு, தங்கம், பூஷணங்கள், மஞ்சம் முதலிய விசித்ர வஸ்துக்களோடு கூடுவதுடன் பசு, யானை குதிரை முதலிய பரிவாரங்களுடன் ராஜபோகத்தையும் அடைவான். ஸுகாதிபதி துஸ் ஸ்தானங்களிலிருக்க அவனையும், ஸுகஸ்தானத்தையும் செவ்வாய் அல்லது சூரியன் இருந்தால் அல்லது பார்த்தால் பிறந்த வீடு எரிந்துவிடும். சனி ராகுவோடு கூடினால் பழையவீடாகும். சத்ருக்ரஹங்களோடு கூடினால் சுபம், வாஹனம், பூமி முதலியன எதிரிகளால் க்ரஹிக்கப்படும்.

ஐந்தாம் பாவம்

பஞ்சமஸ்தானம், பஞ்சமாதிபதி, சுபராசி, அம்சம், ஸம்பந்தம், த்ருஷ்டி பெற்றாலும் வைசேஷிகாம்சம், சுபபாவம் பெற்றிருந்தாலும் மிகவும் புத்திமானுகவும், கபடமில்லாதவனுமாவான்.

ஆரும் பாவம்

6-வது ஸ்தானத்தில் பாபிகளிருந்தாலும் லக்னாதிபதி வலுத்து 6-க்குடையவனுடன் கூடி அல்லது பார்த்து ஆறிலிருந்தாலும், பாபிகளுடன் கூடுதல் அல்லது பார்வை பெற்றிருந்தாலும் விலகாத சத்ரு பிடையை யடைவான்.

லக்னாதிபதி 6-க்குடையவனைக் காட்டிலும் பலிஷ்டனாய், சுப க்ஷேத்ர சுபர்ம்சம் பெற்றவனாலும், சுபரின் பார்வை, சேர்க்கை பெற்றவனாலும், 4-க்குடையவன் பலவானாகி கேந்த்ர த்ரி கோணங்களிலானாலும் ஆரோக்யம், த்ருட சரீரம் இவைகளைப் பெறுவான்.

6-க்குடையவன் துஸ் ஸ்தானங்களிலிருந்து நீசம், அஸ்த மனம், சத்ருக்ருஹம் இவற்றை யடைந்தாலும் லக்னாதிபதி 6-க்குடையவனைக் காட்டிலும் பலிஷ்டனாகி சூரியன் சுப ஸம்பந்தம் பெற்றால் சத்ரு நாசமேற்படும்.

சத்ரு ஸ்தானாதிபதி எந்த பாவாதிபதியுடன் கூடுகின்றானோ அல்லது எந்த பாவத்திலிருக்கின்றானோ எந்த பாவாதிபதி 6ல் இருக்கிறானோ அந்தந்த பாவங்கள் வீணாகும்.

ஏழாம் பாவம்

ஸப்தமபாவம் சுபஸம்பந்தம் பெற்றும் ஸப்தமாதிபதி பலிஷ்டனாயிருந்தால் பத்னி பதிவ்ரதையாயும், பிள்ளையுள்ளவளாயும், குணவதியாயும், தீர்க்காயுஷ்யுடையவளாயுமிருப்பாள்.

எட்டாம் பாவம்

8-க்குடையன் கேந்த்ரத்திலில்லாதவனாய் லக்னாதிபனைக் காட்டிலும் துர்ப்பலனாயிருந்தால் வியாதி, இடையூறு துக்கங்களை அடையாமல் தீண்ட ஆயுஸ் அடைவான்.

ஒன்பதாம் பாவம்

9-ல் செவ்வாய் அல்லது சூரியனிருந்தாலும், 9-க்குடையவன் 6, 8, 12களிலிருந்தாலும் பாபிகளின் மத்தியிலிருந்தாலும் பிதாவுக்கு நாசமுண்டாகும்.

பகலில் சூரியனும் இரவில் சனியும் 6, 8, 12களில் இல்லாமல் சுபக்ரஹங்களால் பார்க்கப்பெற்று 9-க்குடையவன் பலம் பெற்றிருந்தால் தகப்பன் நெடுங்காலம் வாழ்வான். சனி, செவ்வாய்

சந்த்ர சூரியர்கள் த்ரிகோணத்திலிருந்தால் தாய் தகப்பன் மார்களால் விடுபடுவான். குருவால் 9-வது ஸ்தானம் பார்க்கப் பட்டால் பிள்ளையுண்டு. சுகமுள்ளவனாகவும், தீர்க்காயுளுள்ள வனாகவுமாவான். சனி பாக்யாதிபதியாகி சரராசியை யடைந்து சுப த்ருஷ்டியில்லாமலிருந்து சூரியன் துஸ் ஸ்தானத்திலானால் வேறு பிதாவை அண்டி வாழ்வான.

9ம் இடம் சரமாய் 9-க்குடையவன் சனியுடன் கூடியோ பார்க்கப்பட்டாலோ, அல்லது 9க்குடையவன் சரராசியிலிருந்து சனியுடன் கூடியோ, பார்க்கப்பட்டோ வ்யயாதிபதி பலவானாயிருந்தால் தத்தனாக (வேறொருவருக்கு ஸ்வீகாரமாக) ஆவான்.

பத்தாம் பாவம்

10-ல் சுபனிருந்தாலும், 10க்குடையவன் பலம் பெற்று கேந்திரம் த்ரிகோணம் உச்சம் ஸ்வக்ஷேத்ரம் இவைகளிலிருந்தாலும் லக்னாதிபன் 10-லிருந்தாலும், மிக தீர்த்திமானாகவும் தர்மத்தில் ப்ரவ்ருத்தியை யுடையவனாகவும் அரசனுக்கொப்பான பாக்யமுடையவனாகவும், தீண்ட ஆயுஸையுடையவனாகவுமிருப்பான்.

10-ல் சூரியன் அல்லது செவ்வாய் இருந்து பத்தாமிடத்தாதிபதி நல்ல ஸ்தானத்திலிருந்தால் பலசாலியாகவும், ப்ரிய கரனாகவும், அரிய பெரிய கார்யத்தைச் செய்பவனாகவுமாவான். 10-ல் சுபர்களிருந்தால் நற்கார்யம் புரிபவனாகவும், பெரியோர் களால் புகழ்கூடியவனாகவுமிருப்பான். ராகு, சனி, கேது இவர் களிருந்தால் கெட்ட செயல்களைச் செய்வான்.

பதினொன்றும் பாவம்

லாபாதிபதி எந்த பாவாதிபதியுடன் சேர்கிறானோ, எந்த பாவத்திலிருக்கிறானோ, 11-ல் எந்த பாவாதிபன் இருக்கிறானோ; அந்த பாவங்களுக்குகந்த பொருள்களை லாபமாக அடைவான்.

பன்னிரண்டாம் பாவம்

எந்த பாவேசன் 12-லிருக்கிறானோ அல்லது 12-க்குடையவன் எவ்விடத்திலிருக்கிறானோ அந்த பாவத்துக்குத் தகுதியான வஸ்துக்கள் நாசப்படும்.

பாவ ப்ராப்தி காலம்

பாவாதிபதி வஸிக்கும் ராசி, அம்சம் அவைகளுக்கு த்ரி கோணத்தையோ, பாவத்தையோ கோசார ரீதியாய் அடையும் காலத்திலும், பாவாதிபன், லக்னாதிபன் இருக்கும் ராசி அம்சம் அவைகளுக்குத் த்ரிகோணம், லக்னத்தை அடையும் காலத் திலும், லக்னாதிபதி, பாவாதிபதிகளுடன் சேர்க்கை, பார்வை ஏற்படும் போதும் பாவபலன் நடக்க ஆரம்பிக்கும். மேலும் லக்னாதிபதி பாவகாரகர்கள் இவர்களின் சேர்க்கையாலும் பாவ பலன் உண்டாகும். ஜன்ம லக்னம், சந்த்ர லக்னங்களைக் கொண்டும் பாவ பலனைச் சொல்லவும். பாவ வித்திக்குக் காரண மாக ஜன்ம லக்னம், சந்த்ரன் இவைகளில் அதிக பலமுள்ளதை சேர்த்துக் கவனித்துப் பலன் சொல்லவேண்டும்.

கோசாரத்தில் குரு எந்த பாவாதிபனிருக்கும் ராசி, அம்சம் த்ரிகோணம் இவைகளை எப்போது அடைவானோ; அப்போது அந்தந்த பாவ பலனைச் சொல்லவேண்டும்.

லக்னாதிபதி 6-க்குடையவன் சேர்க்கை காலத்தில் லக்னாதி பதியைக் காட்டில் சத்ருஸ்தானாதிபன் குறைவான பலமுடைய வனானால் சத்ருவசப்படுவான். இது மாறியிருந்தால் பலனும் எதிரிடையாகும்.

எப்போது பாவாதிபதி லக்னாதிபதி தத்கால சத்ருவாகின் றார்களோ; கோசாரத்தில் இவர்கள் ஒருவர்க்கொருவர் 6, 8, 12 லிருக்கிறார்களோ; அப்போது அந்த பாவத்துடன் விரோத முண்டாகும். லக்னாதிபதி, பாவாதிபதி தத்கால மித்ரத்வம், சுபஸ்தானவாஸம் இவைகளைப் பெற்ற காலத்தில் அந்த பாவ ஸௌக்யம் உண்டாகும்.

பாவாதிபதி லக்னாதிபதி இவர்கள் எப்போது கோசாரத்தில் சேர்கிறார்களோ; அப்போது அந்தந்த பாவபலாபரமுண்டாகும். பாவேசன் பலவானானால் அந்த பாவமூலம் நல்லதுண்டாகும். இது மாறினால் பலனும் மாறும். லக்னம், சந்த்ரன்-இரண்டினால் பார்ப்பதில் பலமுள்ளதையே ப்ரதானமாக வைத்துப் பார்க்க வேண்டும்.

ஜனனகாலத்தில் மேஷாதி ராசிகளிலிருக்கும் கிரஹங்களின் பலன்.

சூரியன்.

மேஷம்—(பரமோச்சபாகம் [10-வது பாகம்] தவிர) பிரஸித்தன், ஸமர்த்தன், அலிபவன், சிறிது தனமுள்ளவன், ஆயுதத்தை தரிப்பவன். (உச்சபாகத்தில்) கற்பலன்.

விருஷபம்—வஸ்த்ரம், வாஸனாத்ரவ்யங்கள் வியாபாரம் செய்ப வன், ஸ்த்ரீத்வேஷி, வாத்யம், கீதங்களில் ஸமர்த்தன்.

மிதுனம்—வியாகரணம், ஜ்யோதிஷம் முதலியவை அறிந்த வன், தனவான்.

கடகம்—உக்ரஸ்வபாவன், தரித்ரன், பிறர்வேலையைச் செய்ப வன், சரீர கஷ்டம் வழிநடத்தல் மனத்துக்கம் — இவைகளை படைவான்.

ஸிம்மம்—காடு, மலை, மாட்டு மந்தைகளில் பற்றுள்ளவன் ராக்ரமமுள்ளவன், மூடன்.

கன்னி—எழுத்து, சித்திரம் காவ்யம், கணிதம் இவைகளில் ஞானமுள்ளவன், ஸ்த்ரீபோன்ற சரீரமுள்ளவன்.

துலாம்—மயக்கம்தரக்கூடிய வஸ்துக்களை விற்பவன், வழி நடப்பவன், தங்கவேலை செய்பவன், சனத்தொழில் புரிபவன்.

விருச்சிகம்—கொடுமையானவன், ஆலோசிக்காமல் உடனே காரியம் செய்பவன், விஷத்தால் ஸம்பாதிப்பவன், ஆயுதங்களில் ஸமர்த்தன்.

தனுஸ்—பூஜிக்கத்தக்கவன், தனவான், க்ரூர நடத்தை யுள்ளவன், வைத்யன், கைத்தொழில் செய்பவன்.

மகரம்—அதர்மம் செய்பவன், மூடன், முறை தவறி வியா பாரம் செய்பவன், குறைந்த பணமுள்ளவன், லோபி, பிறர் சொத் தில் ஆசையுடையவன்.

கும்பம்—இழிதொழிலைச் செய்பவன், புத்ரன், பாக்யம் இல்லாதவன், தரித்ரன்.

மீனம்—முத்து முதலிய நீரில் உண்டாகும் த்ரவ்யங்களை வ்யாபாரம் செய்து ஸம்பாதிப்பவன்.

சந்த்ரன்.

மேஷம்— வட்டமாயும் சிவப்பாயுமுள்ள கண்களை யுடையவன், உஷ்ணமாக சாப்பிடுபவன், சீக்ரமாக புஜிப்பவன், சீக்ரத்தில் கோபத்தை அடக்குபவன், அலைபவன், போஜி, வலுவில்லாத முழங்கால்களை யுடையவன், நிலைத்த ஐச்வர்யமில்லாதவன், யுத்த ப்ரியன், நல்ல களத்ரமுடையவன், வேலை செய்யும் முறை அறிந்தவன், நல்ல ஸுகமில்லாதவன், மருவுள்ள தலையுடையவன், கர்வி, தன் முயற்சியால் உன்னிறந்தோருள் சிறந்தவனுவன், கையில் மரு முதலியவை யுள்ளவன், சபலன், ஜலத்தில் பயமுள்ளவன்.

விருஷபம்— அழகன், நல்ல நடையுள்ளவன், பெரிய துடை முகங்களுள்ளவன், முதுகு முகங்களில் மருவுள்ளவன், உதாரன், கஷ்டத்தை ஸஹிப்பவன், ப்ரபு, தோள்வலியுள்ளவன், பெண் குழந்தைகளுள்ளவன், கபடஹ்ருதயன், முன்னோர்கள் தனம் பந்துக்களால் விடுபட்டவன், ஸௌபாக்யமுள்ளவன், பொறுமைசாலி, அதிக பசியுள்ளவன், ஸ்த்ரீ ப்ரியன், நிலைத்த ஸ்நேஹிதர்களை யுடையவன், நடு வயதிலும் கடைசி காலத்திலும் ஸௌக்யமடைபவன்.

மிதுனம்— ஸ்த்ரீலோலன், காமசாஸ்த்ரத்தில் ஸமர்த்தன், சிவப்பான கண்களுள்ளவன், சாஸ்த்ரமறிந்தவன், தூதன், கருண்ட கேசத்தை யுடையவன், நல்ல புத்திமான், ரஹஸ்யம் பிறர் அபிப்பிராயம் சூதாட்டம்-இவைகளில் வல்லவன், அழகன் ப்ரியமாகப் பேசுபவன், நல்ல ஆஹாரத்தில் ஆசையுள்ளவன் பாட்டில் ப்ரியமுள்ளவன், காட்டியமறிபவன், உயர்ந்த மூக்கை யுடையவனுகவும், விரிய மில்லாதவர்களுடைய நட்பை யுடையவனுகவுமாவான்.

கடகம்— வளைந்து வேகமாக நடப்பவன், உயர்ந்த இடுப்பை உடையவன், ஸ்த்ரீகளுக்கு அடங்கியவன், நல்ல மித்ரர்களை யுடையவன், சோதிடம்தெரிந்தவன், அநேகவிடுகளை யுடையவன், குறைவு நிறைவுள்ள தனத்தை யுடையவன், குள்ளன், பெருத்த கழுத்துடையவன், நல்லவார்த்தையால் வசப்படுபவன், ஜனங்களிடம் அன்புள்ளவன், ஜலம், தோட்டங்களில் பற்றுடையவன்.

ஸிம்மம்— க்ரூரன், பெரியமோவாய் உடையவன், அகன்ற முகமுள்ளவன், சிவந்த கண்களை யுடையவன், குறைந்த புருவ ஸந்தியுடையவன், ஸ்த்ரீவேஷி, மாம்ஸம் காடு மலைகளில் ஆசையுள்ளவன், கார்யமில்லாமல் அதிக கோபி, பசி, தாஹம், வயிற்றுவலி, பல்வலி, மனவேதனைகளை யுடையவன், உதாரன், பராக்ரமி, நிலையான புத்திமான், மிகவும் கர்வி, தாய்க்குக் கட்டுப் பட்டவன்.

கன்னி— அழகிய பார்வை நடைகளுள்ளவன், தளர்ந்த தோள் கைகளை யுடையவன், ஸுகி, ம்ருதுவானவன், உண்மை பேசுபவன், கலைகளறிந்தவன், சாஸ்த்ரமறிந்தவன், தர்மிஷ்டன், மேதாவி, போகத்தில் ஆசையுள்ளவன்.

துலாம்— தேவதைகள், ஸாதுக்கள், ப்ராம்மணர்கள் இவர்களை பூஜிப்பதில் ஆசையுள்ளவன், நன்மை தீமை யறிபவன், சுத்தன், ஸ்த்ரீஜிதன், உயரமானவன், உயரமான மூக்குள்ளவன், இளைத்ததும் பலமில்லாததுமான சரீரமுடையவன், அலைபவன், பணமுள்ளவன், குறைந்த அவயவமுள்ளவன், கொடுக்கல் வாங்கலில் ஸமர்த்தன், இரண்டாவது ப்ரஸித்தமான பெயரை யுடையவன், வியாதி யுள்ளவன், பந்துக்களுக்கு உபகாரி, உபகரிக்கப் பட்ட பந்துக்களால் வெறுக்கப்படுபவன்.

விருச்சிகம்— அகன்ற கண்கள் மார்புடையவன். வட்டமான முழந்தாள், துடை, கணுக்கால்களை யுடையவன், இள வயதில் தகப்பன் குரு இவர்களால் விடுபட்டவன், ரோகவான், அரச குடும்பத்தால் பூஜிக்கத்தக்கவன், சிவந்தநிறமுள்ளவன், க்ரூர கார்யத்தைச் செய்பவன், மீன், வஜ்ரம், பறவை – முதலிய ரேகைகளை யுடையவன், மறைவில் நிச்செயல் புரிபவன்.

தனுஸ்— நீண்ட முகம், கழுத்துகளை யுடையவன், தகப்பனால் ஸம்பாதிக்கப்பட்ட தனத்தை யுடையவன், உதாரன், கவி, பலவான், பேசுவதில் ஸமர்த்தன், பெரிய பல், காது, உதடு, மூக்குகளை யுடையவன், முயற்சி யுள்ளவன், சில்பமறிபவன், கனமான தோளை யுடையவன், நல்ல ஸுகமில்லாதவன், பெருத்த தோள்களையுடையவன், ஸமயோசித புத்திமான், மிரட்டலுக்கு அடங்காதவன், நல்ல வார்த்தைக்கு அடங்குபவன்.

மகரம்— தன் மனைவி மக்களை ஸந்தோஷப்படுத்துபவன், தர்மத்தில் எண்ணமில்லாதவன், இடுப்பின்கீழ் இளைத்தவன், ஒரே தடவையில் சொல்வதைப் புரிந்துகொள்பவன், அழகுள்ளவன், சோம்பேறி, குளிர் பொறுக்காதவன், திரிபவன், கீழ்ஜாதியதான ஸ்த்ரீகளிடத்தில் பிரியமுள்ளவன், வெட்கமில்லாதவன், தயையில்லாதவன்.

கும்பம்— ஒட்டகைமாதிரி கழுத்துள்ளவன், அதிக ரம்புள்ளவன், வழவழப்பில்லாமல் மயிரடர்ந்து நீண்ட சரீரமுள்ளவன், பெரிய கால் துடை பின்பாகம் மறைந்தபாகம் முகம் இடுப்பு-இவைகளை யுடையவன், மூர்க்கன், பிறர் பெண்டிர் பொருள் தீச் செயல்களில் பற்றுள்ளவன், குறைவுநிறைவுள்ளவன், பூ, சந்தனம் மித்ரன் இவர்களிடத்தில் ப்ரியமுள்ளவன், வழி நடப்பில் சக்தியுள்ளவன்.

மீனம்— ஜலத்திலுண்டாகும் முத்து, பவழம், பிறர் த்ரவ்யங்களை அனுபவிப்பவன், பத்னி, வஸ்த்ரம் இவைகளில் பற்றுள்ளவன், ரமமான அழகிய சரீரமுடையவன், உயர்ந்த மூக்குள்ளவன், பெரிய தலையை யுடையவன் சத்ருக்களை ஜயிப்பவன், ஸ்த்ரீக்கடங்கியவன், அழகிய கண்களை யுடையவன், காந்தி, புதையல் தனம்-இவைகளை அனுபவிப்பவன், வித்வான்.

சந்த்ரன் நிற்கும் ராசி, அந்த ராசிக்கதிபதி பலமுற்று சந்த்ரனும் பலவானுனால் குறைவின்றி பலனளிப்பான். இதில் வித்யாலாபம் ஏற்படுமானால் பலனிலும் வித்யாலாபமேற்படும். இவ்விதமே எல்லா க்ரஹங்களின் விஷயத்திலும் காணவேண்டும். பலத்துக்குத்தக்கபடி பலனும் கிடைபெறுவதை நன்றாய் ஆலோசிக்கவேண்டும்.

செவ்வாய்.

மேஷம்-விருச்சிகம்— ராஜாக்களால் பூசிக்க உரியவன், அஞ்சாபவன், படைத்தலைவன் அல்லது வியாபாரியாக ஆவான், தனவான், காயம்பட்ட சரீரத்தை யுடையவன், சோரன், அதிக காமி.

விருஷபம்-துலாம்— ஸ்த்ரீஜிதன், மித்ரத்ரோஹி, பிறர் மனைதழுவுபவன், ஜாலவித்தை யறிந்தவன், நல்ல அலங்காரங்களைச் செய்து கொள்பவன், பயந்தவன், சிநேகமற்றவன்.

மிதுனம்-கன்னி— மோஹிக்காதவன், ஸந்தி யுடையவன், உண்மையான மித்ரனில்லாதவன், செய்நன்றி யறிபவன், தானம், யுத்தம் இவைகளில் ஸமர்த்தன், க்ருபணன், பயமில்லாதவன் யாசகம் செய்பவன்.

கடகம்— தனவான், ஜலம், வாஹனம்-முதலியவைகளால் ஸம்பாதிப்பவன், ப்ராஜ்ஞன், அங்கஹீனன், வஞ்சகன்.

ஸிம்மம்— தனமில்லாதவன், கஷ்டங்களை ஸஹிப்பவன், காட்டில் ஸஞ்சரிப்பவன், அல்பமான களத்ர புத்ரர்களை யுடையவன்.

தனுஸ்-மீனம்— அதிக சத்ருக்களை யுடையவன், மந்த்ரி பிரஸித்தன், பயமற்றவன், அதிக ஸந்ததியில்லாதவன்.

மகரம்— அதிகமான தனம் புத்ரன் இவைகளுள்ளவன், ராஜயோக முடையவன்.

கும்பம்— துக்கி, தரித்ரன், அலைபவன், பொய்யன், க்ரூரன்.

புதன்.

மேஷம்-விருச்சிகம்— சூது, கடன், மத்யபானங்களில் ஆசையுடையவன், நாஸ்திகன், திருடன், தரித்ரன், கெட்டஸ்த்ரீகன், ஏமாற்றுபவன், பொய்யன்.

விருஷபம்-துலாம்— உபதேசம் செய்பவன், அதிகமான புத்ரமித்ரகளத்ரங்களை யுடையவன், கொடையாளி, பெரியோர்களிடத்தில் பக்தியுள்ளவன்.

மிதுனம்— தற்புகழ்ச்சி செய்பவன், சாஸ்த்ரம் கீதம் வாத்யம் முதலிய கலைகளில் வல்லுனன், ப்ரீயவாதி, சுகவாஸத்தில் ஆசையுள்ளவன்.

கடகம்— ஜலம் மூலம் சம்பாதிப்பவன், தன் பந்துக்களுக்கு விரோதி.

ஸிம்மம்— ஸ்த்ரீத்வேஷி, தனம், சுகம், புத்ரன் இவைகள் இல்லாதவன், அலைந்து திரிபவன், மூர்க்கன், ஸ்த்ரீலோலன், எங்கும் அவமதிக்கப்படுபவன்.

கன்னி— உதாரன், படித்தவன், கற்குணங்கள் பொருந்தியவன், சுசி, பொறுமையுள்ளவன், முறையறிந்தவன், பயமற்றவன்.

தனுஸ்— அரசனல் கொண்டாடத் தக்கவன், பண்டிதன் உள்ளபடி பேசுபவன்.

மகரம்-கும்பம்— ஏவல்புரிபவன், பணமற்றவன், சில்ப வேலை களில் பற்றுள்ளவன், கடனுளி, பலாத்காரமாக வேலை வாங்குபவன்.

மீனம்— திருப்தி செய்பவன், மட்டமான சில்ப வேலைகளைச் செய்பவன்.

குரு.

மேஷம்-விருச்சிகம்— ஸேனாதிபதி, அதிகமான களத்ரபுத்ர தனங்களை யுடையவன், தாதா, நல்ல சேவகர்களை யுடையவன், பொருமையுள்ளவன், சரீர காந்தியுள்ளவன், தாரசுகமுள்ளவன், பிரசித்தன்.

விருஷபம்-துலாம்— எதையும் செய்ய சக்தியுள்ளவன், சுகம் தனம், புத்ரமித்ரர்களோடு கூடியவன், த்யாகி, எல்லாரிடத்திலும் ப்ரியன்.

மிதுனம்-கன்னி— விடு, தோட்டம், புத்ரன், மித்ரன் இவை களை அதிகமுடையவன், மந்த்ரி, சுகி.

கடகம்-கும்பம்— ரத்னம், புத்ரன், தனம் தாரம், ஐச்வர்யம், அறிவு சுகங்களுடையவன்,

ஸிம்மம்— படைத்தலைவன், மேலே கண்ட பலன்களுமுண்டு.

தனுஸ், மீனம்— அநேக க்ராமங்களுக்கு அதிபதியாவான் மந்த்ரியாகவோ, ஸேனாபதியாகவோ ஆவான்

மகரம்— இழிவான கார்யத்தைச் செய்பவன், ஸ்வல்பதன முள்ளவன், சுகமில்லாதவன்.

சுக்ரன்.

மேஷம்-விருச்சிகம்— பிறர்மனை தழுவுபவன், இதைப்பற்றிய துர்வார்த்தையால் பொருளை யிழப்பவன், குலத்துக்கு இழிவு தேடுபவன்.

விருஷபம்-துலாம்— தன்பலத்தாலும் புத்தியாலும் தேடப் பட்ட பொருளை யுடையவன், அரசனல் பூஜிக்கத் தக்கவன், தன் கற்றத்தாருக்குள் உயர்ந்தவன், பிரஸித்தன், பயமற்றவன்,

மிதுனம்— ராஜ்ய கார்யஞ்செய்பவன், தனிகன், கலைகளை அறிபவன்.

கடகம்— இரு களத்ரமுடையவன், இரப்பவன், பயந்தவன், அதிக கர்வி, மிகவும் துக்கமுடையவன்.

ஸிம்மம்— ஸ்த்ரீமூலம் தனப்ராப்தியுள்ளவன், அழகு, குணம், பாக்யமுள்ள களத்ரமுடையவன், குறைந்த சந்ததியுள்ளவன்.

கன்னி— சனத்தொழில் புரிபவன்.

தனுஸ்— நற்குணங்களால் பூஜிக்க உரியவன், தன முள்ளவன்.

மகரம்-கும்பம்— எல்லோருக்கும் இஷ்டன், ஸ்த்ரீகளுக்கு அடங்கியவன், கெட்ட ஸ்த்ரீயிடத்தில் விருப்பமுள்ளவன்.

மீனம்— படித்தவன், தனவான், அரசனல் கொண்டாடத் தக்கவன், எல்லோருக்கும் மிகவும் வேண்டியவன்.

சனி

மேஷம்— மூர்க்கன், கபடி, நிகமற்றவன்.

விருஷபம்— விலக்கத்தக்க ஸ்த்ரீகளிடத்தில் பற்றுள்ளவன், அதிக தனமில்லாதவன், அநேக களத்ரங்களை யுடையவன்.

மிதுனம்-கன்னி—லஜ்ஜை சுகம், புத்ரன் இவைகளில்லாத வன், எழுதுவதில் தவறுதலுள்ளவன், ஜனங்களை ரஞ்சிப்பவன், தீவிலவர்களில் முக்யமானவன்.

கடகம்—தரித்ரன், விகாரமான பற்களையுடையவன், தாயில் லாதவன், பிள்ளையில்லாதவன், மூடன்.

ஸிம்மம்—யோக்யதையில்லாதவன், சுகம், பிள்ளையற்றவன், பிரயோஜனமில்லாமல் பாரம் சுமப்பவன் சுமக்கும்படி செய்பவன்.

துலாம்—பிரஸித்தன், சாஸ்த்ரத்திலும், க்ராமங்களிலும், நகரங் களிலும், பிடைகளிலும் பூஜிக்க உரியவன், தனவான்.

விருச்சிகம்—திறைவசமடைபவன், கொலையுண்பவன், சப லன், தயையற்றவன்.

தனுஸ்-மீனம்—அனுயாஸமான மரண மடைபவன். அரசர் களுக்கு நம்பிக்கையுடையவன். நற்புத்ரன நற்க்ஷத்ரம. தனம் இவைகளையுடையவன, அல்லது நகரம். படை கிராமங்களுக்குத் தலைவனுவான்.

மகரம்-கும்பம்-பிறர் தாரம் பிறர்தனம இவைகளை யுடையவன். குறைந்தத்ருஷ்டியுடையவன அழுக்குள்ளவன். நிலத்ததனம். அதிகாரம் முதலியவைகளை யுடையவன். அனுபவிப்பவன்.

இப்பலன்களை முன்கூறியபடி பாவம் பாவாதிபதி முதலிய எல்லாவித பலங்களையும் கவனித்துத் தக்படி குறைத்து அல் லது அதிகமான பலன்களைச் சொல்லவேண்டும். அப்படிப் பார்க்காவிடில் இப்பலன்கள அப்படியே உண்டாகுமென்று சொல்ல முடியாது. ஆகையால் பலாபலங்களைப் பார்த்தே பல னைக் கூறவேண்டியது அவசியமாகும.

பகலிரவில் பித்ரு மாத்ருகாரகர்கள்.

பகலில் பிறந்தவனுக்கு சூரியன் பித்ருகாரகன், சனி பித்ரு ஸ்தோதாரகாரகன், சுக்ரன் மாத்ருகாரகன், சந்த்ரன் மாத்ரு ஸ்தோதாரிகாரகன். இரவில் ஜனித்தால் சனி பித்ருகாரகன், சூரியன் பித்ரு ஸ்தோதாரகாரகன் சந்த்ரன் மாத்ருகாரகன். சுக்ரன் மாத்ரு ஸ்தோதாரிகாரகன். இதன் பலன்: பகலில் ஜனித்தவனுக்கு சூரியன் ஒத்தையான மேஷம், மிதுனம், சிம்மம், துலாம், தனுஸ், கும்பம் இவைகளிலிருக்க பிதாவுக்கு சுகத்தையும், சனி மேற்கூறிய ராசிகளிலிருக்க பித்ரு ஸ்தோதாவுக்கு சுபத்தை யும், இவ்விதமே சுக்ரன் இரட்டையான ராசிகளிலிருக்க மாதாவுக் கும், சந்த்ரன் மேற்கூறிய ராசிகளிலிருக்க மாத்ரு ஸ்தோதாரிக்கும் சுபமுண்டாகும். இரவில் ஜனித்த ஜாதகர்க்கு முன்கூறிய விதம் காரகர்களை மாற்றிக்கொள்ள வேண்டியது. இவைகளுக்கு எதிரிடையானால் அசுபபலனும்.

பக பக்ஷி மரம் முதலியன பிறப்பது.

ப்ரச்னகாலத்தில், அல்லது ஜாதக லக்னத்தில் எந்த த்வாதசாம்சத்தில் சந்த்ரனிருக்கிறானோ அந்த அம்சத்தின் பெயருக்கேற்றபடி அப்பிராணியே பிறந்ததாகக் கருதவேண்டும். அதாவது லக்னத்தின் த்வாதசாம்சம் மேஷமானால் ஆடு என்றும்

விருஷபமானால் எருது என்றும் இப்படியே பார்த்துக்கொள்வது. இப்படி பார்ப்பதில் சிங்கத்வாதசாம்சத்தில் சிங்கம், புலி, கரி, பூனை முதலியன. விருச்சிகத்துக்கு பாம்பு, தேள், கண்டுவாய்க் காலி முதலியன. தனுஸ் த்வாதசாம்சத்தில் பிற்பகுதியில் மான் முதலியன. க்ரூர க்ரஹங்களான சூரியன் செவ்வாய், சனி இவர்களுடன் சேர்ந்த புதன், க்ஷீணசந்த்ரன் இவர்கள் பலத்தைக் கொண்டும் குரு, சுக்ரன், பாபிகளுடன் சேராத புதன், சுக்லபக்ஷ சந்த்ரன் இவர்களின் பலஹீனத்தைக் கொண்டும், நபும்ஸகமான சனி, புதன 1, 4, 7, 10 இவைகளிலிருப்பதைக் கண்டும் பலனைக் கவனிக்கவேண்டும்.

நாய், பூனை, எலி இவைகளின் பிறவியில் லக்னத்தில் எந்த த்வாதசாம்சம் உதயமாகிறதோ அந்த த்வாதசாம்ச எண்ணிக்கை யுள்ள குட்டிகள் என்று சொல்லலாம். த்வாதசாம்சத்திற்குரிய ஸ்த்ரீ புருஷ விபாகங்களைக் கவனித்து ஆண் பெண் கணக்குகளை யும் சொல்லலாம். சோரப்ரச்னத்தில்:- லக்னத்திலுள்ள நிரேக் காணம் எவ்வுருவமோ அவ்வுருவமே திருடனும். லக்ன கேந்த்ரத்தி லுள்ள க்ரஹம் எவ்வுருவமோ அவ்வுருவமாகவே அவன் இருப் பான். சந்த்ரனடைந்த நிரேக்காணத்தின் உருவம் போல் த்ரவ்ய முமிருக்கும் என ஊஹிக்கலாம். நிரேக்காணம், தாது, மூலம் இவற்றில் எதைத் தரிக்கின்றதோ; அவற்றின் நஷ்டத்தையோ வஸ்துவைப் பற்றியோ அறியலாம். க்ரூர ஸௌம்ய க்ரஹங்களுக் குச் சொல்லிய தாது, மூலம், ஜீவன் இவைகளுடைய நஷ்டம், முஷ்டி, நகை இவைகளை அறிய வேண்டும்.

சந்த்ரன், செவ்வாய், ராகு, சனி, தாது என்றும், சூரியன் சுக்ரன் மூல மென்றும், குரு, புதன், ஜீவன் என்றும் சொல்லப் படுகிறது. நிரேக்காணத்துக் கோப்பான இருகால், நாற்கால், பக்ஷி முதலியவற்றின் நஷ்டம் முதலியவைகளில் பலன் சொல்வ துடன் க்ரஹங்களின் ரூபம், பலம் முதலியவைகளை யறிந்தும் பலன் சொல்லுவதவசியம்.

பாப க்ரஹங்கள் பலமுள்ளவர்களாய் ஜாதகம் அல்லது ப்ரச்ன லக்னத்தில் தங்கள் நவாம்சங்களிலிருந்து, சுபக்ரஹங்கள் பலமில்லாமல் வேறு நவாம்சத்திலிருந்து லக்னம் எதினுடைய பெயரை உடையதாயிருக்கிறதோ அப்போது அது ஜனித்தது

சந்த்ர-த்வாதசாம்ச ஸமமான உருவமுள்ள பசு மரம் முதலியன வாயிருக்கும் என்று சொல்லலாம்.

நாற்கால் ப்ராணிகளில் மேஷம் முதலிய ராசிகளின் அங்கங்கள்.

மேஷம், தலை, வ்ருஷபம், முகமும் கழுத்தில் தொங்கும் சதையும், மிதுனம் முன்கால், கொண்டை, கடகம் முதுகு, சிம்மம் மார்பு, கன்னி இருபக்கங்கள், துலாம் வயறு, விருச்சிகம்-குதம், தனுஸ்-பின் கால், மகரம்-குறி, கும்பம்-பிருது, மீனம்-வால், பாபக்ரஹங்களிருக்கப்பட்ட ராசிகளின் அங்கங்களில் மச்சம், வடு இருக்கக்கூடும். பக்ஷிகள விஷயத்தில் முன்காலுக்கு பதிலாக இறக்கை என்று வைத்துக்கொள்வது.

லக்னத்தில் எந்த க்ரஹமிருக்கிறதோ அக்ரஹத்தின் வர்ணத்தை அந்த லக்னத்திலுண்டானவைகளுக்கும் சொல்லுக. இருட்டு முதலியவைகளிலும பொருள் நிறத்தையும் இவ்விதமே சொல்லுக. லக்னம் சுத்தமானால் லக்னத்தைப் பார்க்கும் க்ரஹங்களின் வர்ணத்தைக் கொண்டு சொல்லுக. பார்க்கப்படாமலிருந்தாலும் க்ரஹச்சேர்க்கையில்லாமலிருந்தாலும் லக்னத்தில் எந்த ராசி நவாம்சமுதிக்கிறதோ அந்த ராசியின் வர்ணத்தைச் சொல்லுக. லக்னம் பல க்ரஹங்களால் பார்க்கப்பட்டாலும், சேர்ந்திருந்தாலும் பல வர்ணங்களைச் சொல்வது. அப்படிச் சொல்வதிலும் பலமதிகமுள்ள க்ரஹத்தின் நிறத்தை அதிகமாகச் சொல்லலாம். எந்த ராசி தன் அதிபனுதிற க்ரஹத்தால் பார்க்கப்பட்டோ சேர்ந்தோ இருக்கிறதோ அந்த ராசி, நவாம்சம், லக்னத்திலிருக்குமானால் அதிபதியுடன் சேர்ந்த ராசி, அவ்விட்டிலிருக்கும் க்ரஹம் இவைகள் வர்ணத்தைச் சொல்லவும். ஏழிலிருக்கிற க்ரஹங்களினால் முதுகிலிருக்கும் கூனியைச் சொல்லுக.

விருச்சிக ராசியோ விருச்சிக நவாம்சமோ த்விபத ராசியோ லக்னமானால் பொந்துகளில் வசிக்கும் க்ரூரங்களான விஷஜந்து, பாம்பு, மயிரடர்ந்த ஜந்துக்கள் முதலிய ப்ராணிகளின் பிறவியைச் சொல்லலாம்.

தனுஸ்-ராசியாகவோ, த்வாதசாம்சமாகவோ, நவாம்சமாகவோ, லக்னமாகவோ இருந்து குருவால் பார்க்கப்பட்ட மீன், தேன், செங்காய், விஷமில்லாத பாம்பு, இடைவெளியிலும் பொந்துகளிலும் வசிக்கும் ஜந்து; குதிரை, கழுதை, பசு, ஒட்டகை முதலியவைகளின் பிறப்பைச் சொல்லுக. குருவின் பலத்துக்குத் தக்கபடி குரு வர்ணத்தையும் சொல்லலாம்.

மகரம்-ராசி, த்வாதசாம்சம், நவாம்சம், லக்னம் இவைகளாக விருந்தால் காட்டில் வசிக்கும் ப்ராணிகளின் ஜன்மத்தைச் சொல்லுக.

மீனம்-ராசி, நவாம்சம், த்வாதசாம்சம் லக்னம் இவைகளிலொன்றில் குரு பார்த்தால் ஜலத்தில் வசிக்கும் ப்ராணிகளின் பிறவியைச் சொல்லலாம்.

மேஷம்-ராசி, நவாம்சம் த்வாதசாம்சம், லக்னம் இவைகளிலொன்றில், செவ்வாய் பார்க்க ஆட்டின் பிறவியையும், இவ்விதமே விருஷபத்துக்கு-சுக்ரன் பார்க்க பசு எருமைகளின் பிறவியையும் சொல்லலாம்.

ஜன்மராசி, நவாம்சம், த்வாதசாம்சம் இவைகள் அவ்வவற்றின் அதிபதிகளால் பார்க்கப்பட அந்தந்த ராசிக்கொப்பான ஜந்துக்களாகச் சொல்லலாம். க்ராமத்தில் வஸிக்கும்படிய ராசிகளானால் காட்டு மிருகங்களுக்கும் காட்டில் ஆறவியைச் சொல்லலாம்.

மிதுனத்தின் 2-வது த்ரேக்காணமான துலாமும், [illegible]த்தின் 1-வது த்ரேக்காணமான சிம்மமும், துலாத்தின் 2-வது த்ரேக்காணமான குப்பமும், கும்பத்தின் முதல் த்ரேக்காணமான மீனமும் பக்ஷித்ரேக்காணமெனப்படும். துலாம், சிம்மம், கும்பம் த்ரேக்காணங்களில் ஏதாவது உதயமாகி அதில் பலமுள்ளதாகி மிருந்து சனியினுடைய பார்வை, சேர்க்கை பெற்றால் [illegible]போது ஜனிப்பவை பறவைகளாகும். அதுவே சந்த்ரனுடைய சேர்க்கை, பார்வை பெற்றால் ஜல பக்ஷிகள் உண்டாகும். ஏழு

சரநவாம்சங்களில் ஏதேனுமொரு சரநவாம்சம் உதயமாகி பலமுள்ள க்ரஹமிருந்து சனியின் சேர்க்கை பார்வை பெற்றால் அப்போது ஜனிப்பவை பூமியிலுள்ள பறவைகளாகும். இப்படியே சந்த்ரனுடைய சேர்க்கை, பார்வை பெற்றால் தண்ணீரிலுள்ள பறவைகளென்று சொல்லலாம்.

புதநவாம்சம் உதித்து அதில் பலவானான சனியின் பார்வை சேர்க்கை பெற்றால் அப்போது ஜனிப்பவை நிலப்பறவை யென்றும், சந்த்ரன் பார்வை சேர்க்கை பெற்றால் அப்போது ஜனிப்பவை நீர்ப்பறவை யென்றும் ஊகிப்பது.

லக்னம், சந்த்ரன், சூரியன் குரு இவர்கள் பலமற்றிருக்கும் போது மரங்களின் பிறவி யென்னலாம். கடகம், மகரத்தின் பின் பாதி, மீனம் - இவைகளின் நவாம்சமுதயமாக நீர் அதிகமான மரமென்றும், மற்ற ராசிகளின் நவாம்சமுதித்தால் தரையிலுள்ள மரங்களென்றும் ஊகிப்பது.

மேற் சொன்னபடி சூரியன் நவாம்சாதிபதியாடின் சந்தனம் தென்னை முதலிய உள்ளே பலமுள்ள மரங்களையும், சனியாயின் விஷ மரங்களையும் சந்த்ரனின் பால் மரங்களையும், செவ்வாயின் முள் மரங்களையும், குருவாயின் பழமுள்ள மரங்களையும் புதனின் பழமில்லாத மரங்களையும் சுக்ரனின் சம்பகம் முதலிய மரங்களையும், சந்த்ரனின் எண்ணைப் பசையுள்ள மரங்களையும் செவ்வாய் சேர்கொட்டை மரங்களையும் உண்டாக்குவான்.

ஸ்தி[illegible]ம்சாதிபனுக்ஷேத்ரம் சுபனை இருந்து பாவியின் ராசியில் சுபனால் பூமி கெட்டதானாலும், மரம் நல்லதாகவும், அதிப க்ஷேத்ரம் சுபனை இருந்து சுபரின் ராசியிலிருக்க பூமி நல்ல தானாலும், மரம் கெட்டதாகவும், இரண்டும் அசுபமாக விருந்தால் இரண்டும் கெட்டதாகவும், இரண்டும் சுபமாக விருந்தால் இரண்டும் நல்லதாகவுமிருக்கும்.

விவாஹம் நடக்குமா? நடக்காதா?

அபிடர்சும் என்று சொல்லப்படும் 7. 1. 6. 11, 10. 3 இவை களிலிருக்கின்ற சந்த்ரன் சுபத்தைச் செய்வான்.

ப்ரச்னகாலத்தில் 7, 1, 6, 11, 10, 3 - இவைகளில் சந்த்ரன் நிற்க, சுபர்களால் (சூரியன், புதன், குரு - இவர்களால்) பார்க்கப் பட விவாஹமாகும்.

சந்த்ரன் ஜன்மலக்னம், ப்ரச்ன லக்னம் இவைகளிலிருந்து 3, 5, 7, 10, 6 - இடங்களிலிருந்து கேந்த்ரம், த்ரிகோணங்களி லிருக்கும் குரு சூரிய புதர்களால் பார்க்கப்பட விவாஹம் நடக்கும்.

ஸ்த்ரீ புருஷ கால அட்டவணை.

இஷ்டதினத்துக்குரிய இரவு பகல் காழிகைகளை 24 ஸமபாகங் களாகப் பிரிக்க காலம் ஒன்றுக்கு 1½ காழிகை (½ மணி) சுமாராக வரும். ஆரம்பமுதல் ஜனனகால காழிகை வரையிலுள்ள காலத் தைப் பார்க்க ஆண் பெண் காலமறியலாம்.

காலம்	ஞாயி	திங்	செவ்	புத	வியா	வெள்	சனி
1	ஆ	பெ	ஆ	பெ	ஆ	பெ	ஆ
2	பெ	ஆ	பெ	ஆ	பெ	ஆ	பெ
3	ஆ	பெ	ஆ	பெ	ஆ	பெ	ஆ
4	பெ	ஆ	பெ	ஆ	பெ	ஆ	பெ
5	ஆ	பெ	ஆ	பெ	ஆ	பெ	ஆ
6	பெ	ஆ	பெ	ஆ	பெ	ஆ	பெ
7	ஆ	பெ	ஆ	பெ	ஆ	பெ	ஆ
8	பெ	ஆ	பெ	ஆ	பெ	ஆ	பெ
9	ஆ	பெ	ஆ	பெ	ஆ	பெ	ஆ
10	பெ	ஆ	பெ	ஆ	பெ	ஆ	பெ
11	ஆ	பெ	ஆ	பெ	ஆ	பெ	ஆ
12	பெ	ஆ	பெ	ஆ	பெ	ஆ	பெ
13	ஆ	பெ	ஆ	பெ	ஆ	பெ	ஆ
14	பெ	ஆ	பெ	ஆ	பெ	ஆ	பெ
15	ஆ	பெ	ஆ	பெ	ஆ	பெ	ஆ
16	பெ	ஆ	பெ	ஆ	பெ	ஆ	பெ
17	ஆ	பெ	ஆ	பெ	ஆ	பெ	ஆ
18	பெ	ஆ	பெ	ஆ	பெ	ஆ	பெ
19	ஆ	பெ	ஆ	பெ	ஆ	பெ	ஆ
20	பெ	ஆ	பெ	ஆ	பெ	ஆ	பெ
21	ஆ	பெ	ஆ	பெ	ஆ	பெ	ஆ
22	பெ	ஆ	பெ	ஆ	பெ	ஆ	பெ
23	ஆ	பெ	ஆ	பெ	ஆ	பெ	ஆ
24	பெ	ஆ	பெ	ஆ	பெ	ஆ	பெ

ஸ்த்ரீ புருஷர்களின் ரோகம்.

ஆதான காலத்தில் சூர்யனுக்கு ஏழில் செவ்வாய் சனி யிருந்தால் புருஷனுக்கும், சந்த்ரனுக்கு ஏழில் செவ்வாய் சனி யிருந்தால் ஸ்த்ரீக்கும் ரோகமேற்படும். செவ்வாய் சனி இவர் களில் சூரியனுக்கு 12-ல் ஒருவரும், 2-ல் ஒருவருமிருந்தால், பல முள்ள க்ரஹத்தின் மாதத்தில் புருஷனுக்கு மரணமேற்படலாம். இப்படியே சந்த்ரனுக்கு 12-லும், 2-லும் செவ்வாய் சனிகளிருந்தால்

பலமுள்ள க்ரஹத்தின் மாதத்தில் ஸ்த்ரீக்கு மரண மேற்படலாம். செவ்வாய் சனி இவ்விருவர்களிலொருவரோடு சூரியன் சேர்ந்து வேறு க்ரஹத்தால் பார்க்கப்பட புருஷனுக்கு மரணம். சூரியனுக்குப் பதிலாக சந்த்ரனுக்கு கேரில் ஸ்த்ரீக்கு மரணம். சனி செவ்வாய் இவ்விருவர்களில் பலமுள்ள க்ரஹத்தின் மாதத்தில் பலன கிட்டும்

கர்ப்போத்பத்தி.

சூரியன சந்த்ரன் சுக்ரன் செவ்வாய் தம் தம் நவாம்சத்திலிருந்தாலும், குரு ஜன்ம-ஆதான லக்னத்துக்கு 5, 9, 10 11ல் தனது நவாம்சத்திலிருந்தாலும், சந்த்ரன், செவ்வாய், ஸ்த்ரீ ஜாதகரிதியாக 3, 6, 10, 11-ல் தனது நவாம்சத்திலிருந்தாலும் அப்போது கர்ப்போத்பத்தியாகும்.

ஆண? பெண்ணா?

கர்ப்பாதான காலத்தில் புருஷன் சரீரத்தில் வலப்பக்கத்தில் பிங்களா நாடியில் ச்வாஸ ஸஞ்சார மிருந்தால் ஆண், இடப் பக்கத்தில் இடை நாடியில் ச்வாஸ ஸஞ்சார மிருந்தால் ஸ்த்ரீ ப்ரஜை யுண்டாகும்.

கர்ப்பிணீ விஷயம்.

கர்ப்பாதான லக்னத்துக்கு கப க்ரஹ த்ருஷ்டியில்லாமல் 12-ல் பாபர்களிருந்தாலும, லக்னத்தில் சனி யிருந்து க்ஷீண சந்த்ரன், செவ்வாய்களால் பார்க்கப்பட்டாலும் கர்ப்பிணிக்கு மரணம் நேரிடக்கூடும்.

கர்ப்பாதான லக்னத்தில் சந்த்ரன் இருந்து 2, 12-களில் பாப க்ரஹ மிருந்து லக்னத்தை கபர்கள பார்க்காமலிருந்தாலும், நவாம்ச லக்னமும் சந்த்ரனிருக்கும் லக்னமும் விலகி கப க்ரஹ பார்வை யில்லாமலிருந்தாலும், 12 ல் ஒரு பாப க்ரஹமும், 2-ல் ஒரு பாப க்ரஹமும், 3-ல் சந்த்ரனும், 4 ல் ஒரு பாப க்ரஹமும் இருந்து சந்த்ரனும் லக்னமும் கப வீக்ஷண மில்லாமலிருந்தாலும், ஆதான லக்னம் சந்த்ர லக்னம் வெவ்வேறுக இருந்து ஒவ்வொன்றுக்கும் இரு பக்கத்திலும் பாபிகளிருந்து கப க்ரஹ வீக்ஷண மில்லாவிடினும், 10-ல் பாபியும், 11-ல் சந்த்ரனும், 12, 2-இரண்டிலும் பாபிகளிருந்து கபர் பார்வை யில்லாவிடிலும் கர்ப்பத்துடனேயே மரிப்பாள். மேற் கூறியவாறு இருந்து கபவீக்ஷண மிருந்தால் மரணம் ஸம்பவிக்காது; கஷ்டப்படுவாள். மேற் கண்ட யோகத்தில் எந்த க்ரஹம் வலுவுள்ளதோ அக்ரஹத்தின் (அதிபதியாயுள்ள) மாதத்தில் பலனுண்டாகும். ஆதான லக்னத்துக்கோ சந்த்ரனுக்கோ 4ல் பாபியிருந்து, 8-ல் செவ்வாயிருந்தாலும், லக்னத்துக்கு 4 ல் செவ்வாயும், 12-ல் சூரியனுமிருந்து சந்த்ரன் க்ருஷ்ண பக்ஷத்தை அடைந்தாலும் கர்ப்பிணிக்கு மரணம் நேரும். கர்ப்பாதான லக்னத்தில் செவ்வாயும் 7 ல் சூரியனுமிருந்தால் கர்ப்பிணி ஆயுதத்தால் மரண மடையலாம்.

கர்ப்பத்தில் எம்மாதத்துக்கு எந்த க்ரஹம் அதிபதியோ, அந்த க்ரஹம் மற்ற க்ரஹத்தால் யுத்தத்தில் ஜயிக்கப்பட்டதாகவோ, கேது முதலியவைகளால் மறைக்கப்பட்டோ, உல்கை முதலியனவால் பிடிக்கப்பட்டதாகவோ ஆனால் பிடித க்ரஹம் என்று சொல்லப்படும். அந்த பிடித க்ரஹத்தின் ஆதிபத்யம் கர்ப்பத்தின் எம்மாதத்துக்கு வருகின்றதோ அம்மாதத்தில் கர்ப்பச்சிதைவு ஏற்படக்கூடும்.

ஆதான லக்னத்தில் சந்த்ரனிருக்க அதில் கப க்ரஹங்கள் இருந்தாலும், சந்த்ரன் ஆதான லக்னம் இரண்டும் தனித் தனியாக ஆகி அவை இரண்டிலும் கப க்ரஹங்களிருந்தாலும், அல்லது இவைகளுக்கு 2. 4. 5. 7. 9. 10-ஸ்தானங்களில் கப க்ரஹ மிருந்தாலும், அல்லது 3. 11-ல் பாப க்ரஹங்களிருந்தாலும், சூரியனால் பார்க்கப்பட்டாலும் அக்காலங்களெல்லாம் கர்ப்பம் நன்றாக இருக்கும்.

மேஷம், ஸிம்மம், தனுஸ், மிதுனம், துலாம், கும்பம் இந்த ஆறு ராசிகளின் நவாம்சங்கள் லக்னமாகவோ, அவ்விராசிகளில் சூரியன், சந்த்ரன், குரு இவர்களிருக்கவோ பிறக்கும் குழந்தை புருஷனென்றும், விருஷபம், கன்னி, மகரம், கர்க்கடகம், விருச்சிகம், மீனம் - இந்த நவாம்சங்கள் லக்னமாகவோ அவ்விடங்களில் சூர்யன், சந்த்ரன், குரு - இவர்களிருக்கவோ பிறக்கும் குழந்தை ஸ்த்ரீ ப்ரஜை என்றும். பலவானான சூரியன், குரு ஒற்றை ராசிகளில் எந்த நவாம்சத்திலிருந்தாலும் பிறக்கும் குழந்தை ஆணென்றும், பலமுள்ள சந்த்ரன், சுக்ரன், செவ்வாய்

இவர்கள் இரட்டித்த ராசியிலிருக்க பெண் என்றும், சூரியன், சந்த்ரன், செவ்வாய், குரு, சுக்ரன் உபய ராசிகளில் எந்த நவாம்சத்திலிருந்தாலும் புதன் பார்க்க இரட்டைக் குழந்தையென்றும் ஊஹிப்பது. உபய ராசிகளான மிதுனம், கன்னி, தனுஸ், மீனம் இவைகளில், மிதுன தனுஸ்கள் புருஷ நவாம்சங்களாகவும், கன்னி மீனங்கள் ஸ்த்ரீ நவாம்சங்களாகவும் சொல்லப்பட்டிருப்பதால், புருஷ நவாம்சத்தில் சூரியன், குரு இருக்க, புதனால் பார்க்கப்படில் இரட்டை ஆண் குழந்தைகளெனவும், ஸ்த்ரீ நவாம்சத்தில் சந்த்ரன், செவ்வாய், சுக்ரன் - இவர்களில் ஒருவரிருக்க புதன் பார்க்க இரட்டை ஸ்த்ரீ பிரஜை எனவும், ஒருவர் புருஷ ராசியிலும், மற்றவர் ஸ்த்ரீ ராசியிலும் இருக்க புதனால் பார்க்கப்பட ஆண், பெண் இரட்டையெனவும், ஊஹித்துச் சொல்லவும்.

சனி லக்னத்தில் இல்லாமல் லக்னத்துக்கு 3, 5, 7, 9, 11-இவைகளில் ஒன்றில் இருக்கப்பிறக்கும் குழந்தை ஆணாயிருக்கும்.

மேலே சொல்லியவைகளே எல்லாம் க்ரஹங்களின் பலாபலத்தை அனுசரித்து ஆண் பெண் என்பதை ஊஹிக்கவேண்டும்.

சந்த்ரன் இரட்டித்த ராசியிலும், சூரியன் ஒற்றைப்பட்ட ராசியிலுமிருந்து ஒருவர்க்கொருவர் பார்த்தாலும், சனி இரட்டித்த ராசியிலும், புதன் ஒற்றை ராசியிலுமிருந்து ஒருவர்க்கொருவர் பார்த்தாலும், செவ்வாய் ஒற்றை ராசியிலிருந்து சூரியன் இரட்டித்த ராசியிலிருக்க சூரியனைப் பார்த்தாலும், சந்த்ரன் இரட்டித்த ராசியிலும், லக்னம் ஒற்றை ராசியாகவுமிருந்து செவ்வாயால் பார்க்கப்பட்டாலும், சந்த்ரன் இரட்டித்த ராசியிலும் புதன் ஒற்றைப்பட்ட ராசியிலுமிருக்க செவ்வாய் பார்ப்பதாலும், புருஷ அம்சத்தில் லக்னம், சந்த்ரன், சுக்ரனிருந்து செவ்வாயால் பார்க்கப்பட்டாலும் பிறக்கும் சிசு அலியாக (நபும்ஸகமாக) இருக்கக்கூடும் என்று ஊஹிக்கவேண்டும். விசேஷ திருஷ்டி கவனிக்கவேண்டும்.

சந்த்ரன் சுக்ரன் இரட்டித்த ராசியிலும் அல்லது லக்னம் செவ்வாய், புதன், குரு ஒற்றைப்பட்ட ராசியிலானாலும் பெண் ஆண் - ஆக இரட்டைக் குழந்தைகள் ஜனிக்கலாம்.

சந்த்ரனும் லக்னமும் இரட்டித்த ராசியிலிருந்து சூரியன் செவ்வாய் குரு இவர்களிலொருவர் பார்த்தாலும், லக்னம், செவ்வாய் புதன் குரு இவர்கள் வலுத்து இரட்டித்த ராசியில் இருந்தாலும், ஆண் பெண் - இரட்டை உண்டாகும்.

லக்னமோ க்ரஹங்களோ மிதுனம், கன்னி, தனுஸ், மீனம் இவைகளிலிருந்து அவைகளே தன் அம்சத்திலிருக்கும் புதன் பார்க்க மூன்று குழந்தைகளுண்டாகலாம். இம்மூன்றில் இரண்டு புதன் கிற்கும் அம்சம் எந்த இனத்தைச் (பால்) சேர்ந்ததோ அந்த இனத்ததாகும்.

தனுர் லக்னத்தின் கடைசி அம்சமான தனுரம்சம் லக்னமாக இருக்க வீர்யமுள்ள க்ரஹங்களெல்லாம் அதே அம்சத்திலிருந்து பலமுள்ள புதன் சனிகளால் பார்க்க உண்டாகும் கர்ப்பம் மூன்றுக்குமேலுமிருக்கலாம்.

கர்ப்பம் தரித்த முதல் மாதத்தில் (சுக்ரசோணிதங்கள் நுரை போலிருக்கும் காலத்தில்) சுக்ரன் அதிபனென்றும், இரண்டாவது மாதத்தில் (சுக்ரசோணிதங்கள் கெட்டியாகும் ஸமயத்தில்) செவ்வாய் அதிபனென்றும், மூன்றுவது மாதத்தில் (கைகால்கள் உண்டாகும் காலத்தில்) குரு அதிபதியென்றும், நான்காவது மாதத்தில் (எலும்புகள் உண்டாகும் காலத்தில்) சூரியன் அதிபதி என்றும், ஐந்தாவது மாதத்தில் (தோல் உண்டாகும் காலத்தில் சந்த்ரனதிபனென்றும், ஆறுவது மாதத்தில் (உடலில் ரோமம் உண்டாகும் காலத்தில்) சனி அதிபதி என்றும், ஏழாவது மாதத்தில் (ச்வாஸமுண்டாகும் காலத்தில்) புதன் அதிபன் என்றும்) எட்டாவது மாதத்தில் (பசி முதலியவை உண்டாகும் காலத்தில்) ஆதான லக்னாதிபனே அதிபதியென்றும், ஒன்பதாவது மாதத்தில் (ப்ரியா ப்ரியங்கள் தெரியும் காலத்தில்) சந்த்ரன் அதிபதி என்றும், பத்தாவது மாஸத்தில் (ப்ரஸவ மாதத்தில்) சூரியனதிபதி என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

மேற் கூறியபடி அந்தந்த கால அதிபர்களான க்ரஹங்களின் சுபாசுபங்களுக்கொப்பாக கர்ப்பத்துக்கும் அந்தந்த மாதங்களில் சுபாசுபங்களுண்டாகும்.

லக்னத்துக்கு 6 அல்லது 9-வது ஸ்தானத்தில் புதனிருக்க சந்த்ரன் விருச்சிகத்திலிருந்து புத சந்த்ரர்களைத் தவிர மற்ற

வர்கள் பலமில்லாதவர்களாயிருக்க அப்போது பிறப்பவன் முகம், கை, கால் அளவுக்கு அதிகமாக உள்ளவனுவான்.

சந்த்ரன் விருஷபத்திலிருக்க பாப க்ரஹங்கள் கடகம், விருச்சிகம், மீனம் இவைகளின் கடைசி அம்சத்திலிருக்க பிறப்பது ஊமையாகப் பிறக்கும்.

விருஷபத்திலிருக்கும் சந்த்ரன் சுபக்ரஹங்களால் பார்க்கப் படில் பிறப்பவன் காலம் தாமதித்துப் பேசுவான்.

சனி, செவ்வாய், புதன் அம்சத்திலோ வீட்டிலோ இருக்கப் பிறக்கும் குழந்தை பற்களுள்ளதாகும். மிதுனராசி மிதுனம் சத்திலோ, கன்யாராசி கனயாம்சத்திலோ ஜனிக்க கர்ப்பத்திலேயே பல் முளைத்துக் குட்டையாகப் பிறப்பான்.

லக்னம் கடகமாகி சந்த்ரன் மிற்க சனி செவ்வாய்களால் பார்க்கப்பட அப்பொழுது ஜனிப்பவன் குள்ளனுவான்.

மகரத்தின் கடைசி அம்சமான கன்யாம்சம் லக்னமாக விருந்து சனி, க்ஷீணசந்த்ரன் பார்க்க உண்டாகும் சிசு குட்டையாக இருக்கும்.

மீனம் லக்னமாகி சனி சந்த்ரன் செவ்வாய்களால் பார்க்கப் பட்டால் கொண்டியர்கப் பிறக்கும்.

கடகம் விருச்சிகம் மீனம் இவைகளின் கடைசி நவாம்சத்தில் சூரியன் செவ்வாய் சனி இவர்களிலொருவராவது சந்த்ரனுவது இருக்க அப்போது உண்டாவது கேட்கும் சக்தியில்லாத ஜடமாயிருக்கும்.

மேலே கூறப்பட்ட யோகங்களே அளிக்கும் க்ரஹங்கள் சுபக்ரஹங்களுடைய பார்வையில்லாமற் போனால்தான் இவ்விதம் உண்டாகும். பலசாலிகளான சுபக்ரஹ வீக்ஷணம் பெற்றால் ஒன்றும் நடக்காது.

ஜன்ம லக்னத்துக்கு 5-வது வீட்டிலுள்ள த்ரேக்காணம் செவ்வாயுடன் கூடி க்ஷீண சந்த்ரன் சூரியன் இவர்களால் பார்க்கப்பட்டப் பிறப்பது கையற்றதாகும்.

9-மிடத்திலுள்ள த்ரேக்காணம் செவ்வாயுடன் சேர்ந்து சனி க்ஷீண சந்த்ரன் சூர்யன் - இவர்களால் பார்க்கப்பட ஜனிப்பது காலற்றதாகும்.

லக்னத்திலுள்ள த்ரேக்காணம், செவ்வாயுடன் சேர்ந்து சனி க்ஷீணசந்த்ரன், சூரியன் இவர்களால் பார்க்கப்பட ஜனிப்பது தலையற்றதாகும்.

லக்னம் ஸிம்மமாகி சூரியன் சந்த்ரன் இருவருமதிலிருக்க செவ்வாய் சனிகளால் பார்க்கப்பட ஜனிப்பது கண்ணற்றதாகும்.

லக்னம் ஸிம்மமாகி அதில் சூர்யன் மட்டிலிருந்து செவ்வாய் சனிகளால் பார்க்கப்பட வலக்கண் பொட்டையாகும்.

ஸிம்மம் லக்னமாகி சந்த்ரன் மட்டுமிருந்து செவ்வாய் சனிகளால் பார்க்கப்பட ஜனிப்பது இடக்கண் பொட்டையாகும்.

ஸிம்மம் லக்னமாகி சூரியன் சந்த்ரனிவர்களிருக்க சுபர்-பாபிகளால் பார்க்கப்பட கண்ணில் நீர் வடிதல், பூ விழுல் முதலிய வியாதிகளுள்ளதாக ஜனிக்கும்.

ஜன்ம லக்னத்துக்கு 12 ல் சந்த்ரனிருக்க இடக்கண்ணில்லாததாகவும், சூரியனிருக்க வலக்கண்ணில்லாததாகவும் பிறக்கும்.

பன்னிரண்டு ராசிகளில் மகர கும்ப நவாம்சங்கள் லக்னமாகி, ஏழாமிடத்தில் சனியிருக்க ஏற்படும் கர்ப்பம் மூன்று வருஷம் சென்றும், கடக நவாம்சம் லக்னமாகி அதற்கு ஏழில் சந்த்ரனிருக்க அப்போது தரிக்கும் கர்ப்பம் 12 வருஷங்கள் கிரமித்தும் பிரஸவமாகும்.

ஜன்மகால லக்ஷணம்.

லக்னத்தை சந்த்ரன் பார்க்காவிடில் தகப்பன் பக்கத்திலில்லாதிருக்கும் ஸமயம் பிறந்தவனுவான். சூரியன் 11, 12-ல் சராசிகளிலிருந்தால் பிதா அன்ய தேசத்திலிருக்கும்போது பிறந்தவன். சந்த்ரன் லக்னத்தைப் பார்க்காமல் சூரியன் 11, 12 ல் ஸ்திராசிகளிலிருக்க தகப்பன் ஊரிலிருந்தாலும் பக்கத்திலிருக்கமாட்டான். சந்த்ரன் லக்னத்தைப் பார்க்காமல் சூரியன் 11, 12-ல் உபயராசிகளிலிருக்க பிதா பிரயாணத்திலிருக்கலாம்.

சந்த்ரன் லக்னத்தைப் பார்க்காமல் சூரியன் 11, 12-ல் சரஸ்திர உபயராசிகளில் எதிலிருந்தாலும், தகப்பன் சமீபத்திலிருக்க மாட்டான். லக்னத்தில் சனியிருப்பினும். செவ்வாய் ஏழிலிருப் பினும், சந்த்ரனுக்கு 12, 2-ல் புதன் சுக்ரன் இருந்தாலும் பிதா பக்கத்திலிருக்கமாட்டான்.

மேஷத்தின் முதல் திரேக்காணம், கடகத்தில் 2 வது திரேக் காணம், விம்மத்தின் 3-வது திரேக்காணம், விருச்சிகத்தின் முதல் திரேக்காணம், தனுஸ்ஸின் 2-வது திரேக்காணம், மீனத் தின் 3-வது திரேக்காணம் - இவைகளிலொன்றில் சந்த்ரனிருக்க 2, 11-ல் சுபர்களிருக்க ஜனிப்பது ஸர்ப்பமென்றும், மேற்கூறிய திரேக்காணங்களில் ஏதாவதொன்று லக்னத்ரேக்காணமாகி 2-11-ல் சுபர்ரஹங்களிருக்கப் பிறந்தது பாம்பால் சுற்றப்பட்ட துமாகும்.

மேஷம், விருஷபம், தனுஸின் பின்பாகம், மகரத்தின் முன் பாகம் - இவைகளில் ஏதாவதொன்றில் சூரியன் நிற்க மற்ற க்ரஹங்கள் பலத்துடன் உபயராசிகளில் இருக்கப் பிறப்பது பையால் சுற்றப்பட்ட இரட்டையாகவிருக்கும்.

மேஷம் விம்மம் விருஷபங்களில் - ஏதாவது லக்னமாகி சனியோ செவ்வாயோ இருக்க ஜனித்த ராசி அல்லது அம்சம் காலபுருஷனுடைய ஏந்த அங்கமாகிறதோ, அவ்வங்கத்தில் கொடியால் சுற்றப்பட்டதாகப் பிறக்கும்.

குரு சந்த்ரனையோ, லக்னத்தையோ, சூரியனுடன் கூடின சந்த்ரனையோ, பார்க்காமலிருந்தாலும், சந்த்ரன், சனி, செவ்வாய் களுடன் சூர்யனுடன் கூடினாலும் அப்போது பிறக்கும் குழந்தை ஜார புருஷனுக்குப் பிறந்ததாகும் எனக் கூறுகின்றனர். இதில் சந்த்ரன் குருவின் க்ஷேத்ரம் அம்சம் த்ரேக்காணம் எதிலிருந் தாலும், குருவுடன்கூடி எங்கிருந்தாலும் அம்மாதிரி சொல்லத் தகாது.

பாபக்ரஹங்கள் சனி, செவ்வாய் பாபிகளின் ராசிகளை அடைந்து சூரியனுக்கு 7, 5, 9-களிலிருக்க அப்போது பிறந்த வனின் பிதா கட்டுண்டிருப்பான். சூரியன் சரராசியிலிருக்க வேறு தேசத்தில் கட்டுப்படுவான். ஸ்திராசியிலானால் தன் ஊரிலும், உபயராசியானால் வழியிலும் கட்டுண்டவனுவான்.

பூர்ண சந்த்ரன் தன் ராசியிலிருக்க புதன் லக்னத்திலும், 4-ல் குருவுமிருக்க தெப்பம், கப்பல் முதலிய மிதக்கும் வஸ்துக்களில் பிறந்தவனுவான். இப்படியே கடகம் மகரத்தின் பின்பாதி, மீனம் இவைகளில் ஒன்று லக்னமாகி பூர்ண சந்த்ரன் லக்னத்துக்கு ஏழிலிருக்கப் பிறப்பதும் அப்படியே.

ஜலராசிகள் லக்னமாகி, பூர்ணசந்த்ரன் லக்னத்தைப் பார்த் தாலும், வலித்தாலும், அல்லது ஜலராசி லக்னத்திலோ, 10, 4-இடங்களிலோ பூர்ணசந்த்ரனிருக்கப் பிறப்பது ஜலத்திலோ அல்லது ஜலஸமீபத்திலோ ஏற்பட்டதாகும்.

லக்னமும் சந்த்ர லக்னமுமொன்றாகி, 12-ல் சனியிருக்க, பாப க்ரஹங்கள் பார்க்க, காராக்ருஹத்திலும், கடகம் விருச்சிகம் லக்னமாகி சனி வலித்து சந்த்ரன் பார்க்க பள்ளத்திலும் பிரஸவ மாகும்.

ஜலராசிகளிலொன்று லக்னமாகி அதில் சனி நிற்க அவனை புதன் பார்த்தால் விளையாடுமிடத்திலும், சூரியன் பார்க்க தேவால யத்திலும், சந்த்ரன் பார்க்க உவர் பூமியிலும் பிறந்ததாகும்.

லக்னம் புருஷராசியாக விருந்து அதிலிருக்கும் சனியை செவ்வாய் பார்க்க ச்மசானத்திலும், சுக்ரன் அல்லது சந்த்ரன் பார்க்க அழகானவிடத்திலும், குரு பார்க்க அக்னிசாலையிலும், சூரியன் பார்க்க அரண்மனை, தேவாலயம், பசுத்தொழுவம் – இவைகளிலும், புதன் பார்த்தால் தொழில்கள் நடக்குமிடங் களிலும் பிரஸவமாகும்.

ஜன்ம லக்னம் அம்சம் இவைகளின் பலத்தை நன்கறிந்து சராசிகள் ஜன்ம லக்னமாகவோ நவாம்ச லக்னமாகவோ இருந்தால் அந்த ராசிப்பெயருள்ள ஜந்து எங்கு வஞ்சிக்குமோ அங்கே பிறவியாகும். இதே விதம் ஸ்திராசிகளிலும் ஊகிக் கலாம். லக்னத்தின் அம்சமே நவாம்ச லக்னமாக வந்தால் சொந்த வீட்டிலேயே பிறவி எனச் சொல்லலாம்.

செவ்வாய் சனி ஒரே ராசியிலிருந்து இவர்களுக்கு 5, 7, 9-ல் சந்த்ரனிருக்கப் பிறந்தது தாயால் விடப்படும். சந்த்ரனுக்கு குரு த்ருஷ்டி ஏற்படின் தாயால் விடப்பட்டாலும் ஸௌக்யத்துடனும் நீண்ட ஆயுளுள்ளதாகவுமிருக்கும். இதில் 7-க்கு பதிலாக

ராத்ரியில் பிறந்ததுக்கு சந்த்ரனும் சூர்யனுமிருப்பது, பகலில் சுக்ரனும் சூரியனும் இருப்பது என்றும் சிலர் அபிப்பிராயம்.

லக்னத்தில் சந்த்ரனிருந்து சனி சூரியர்களால் பார்க்கப்பட்டு, 7-ல் செவ்வாயிருக்க ஜனனமானவன் தாயால் விடப்படுவதுடன் நாசத்தையுமடைவான். லக்னத்திலிருக்கும் சந்த்ரனை சூரியன் பார்க்க 11-ல் செவ்வாய் சனி இருக்க மேற்சொன்னபலனே. 7-ல் செவ்வாயிருக்க லக்னத்திலிருக்கும் சந்த்ரன் பாபிகளால் பார்க்கப்படுவதுடன் சுபர்கள் பார்வையும் பெற்றால் பார்க்கும் சுப க்ரஹங்களின் ஜாதி ஸ்த்ரீயால் வளர்க்கப்பெறுவான். இப்படியே சந்த்ரனை பாப க்ரஹங்கள் பார்த்தால் பார்க்கும் பாபிகளுள் பலவானான க்ரஹத்தின் ஜாதியிலுள்ள ஸ்த்ரீயை அடைந்து ஜீவிக்காது.

பித்ருகாரக க்ரஹங்களின் பலத்தை அனுசரித்து பிதாவின் அல்லது அவர் பரம்பரையுள்ளவர் க்ருஹத்திலும், மாத்ருகாரக க்ரஹங்களின் பலத்தை அனுசரித்து தாயார் அல்லது சஹோதர சஹோதரி க்ரஹத்திலும் பிரஸவத்தைச் சொல்லலாம். சுப க்ரஹங்களெல்லாம் நீசராசியை யடைந்தால் தோப்பு, இணற்றங் கரை, நதி முதலிய இடங்களிலும், ஒரே ராசியிலிருக்கிற மூன்று க்ரஹங்களால் லக்னம் சந்த்ரன் பார்க்கப்படாவிடில் ஒருவரும் நடையாடாத விடத்திலும் பிறவி ஏற்படும்.

சந்த்ரன், மகரகும்ப நவாம்சங்களிலிருந்தாலும், 4-ல் இருந்தாலும், சனியால் பார்க்கப்பட்டாலும், ஜலராசிகளிலிருந்தாலும், சனியுடன் சேர்ந்திருந்தாலும். இருண்ட விடத்தில் பிரஸவமென்றும், மூன்று க்ரஹங்களுக்கு அதிகமாக நீசராசியை அடைந்தால் பூமியிலென்றும் சொல்லுக. பாபிகள் சந்த்ரனையோ, 7 அல்லது 4-லிலோ இருந்தால் தாய்க்கு சிரமத்தைச் சொல்லலாம்.

மற்ற க்ரஹங்களைக்காட்டிலும் சனி பலிஷ்டனாக விருந்தால் பழைய வீட்டை புதுப்பித்ததாகவும், செவ்வாய் பலவானனால் நெருப்புப் பிடித்ததாகவும். சந்த்ரன் பலவானனால் புதிய வீடாகவும், சூரியன் பலவானாக விருந்தால் மரங்களடர்ந்ததாயும் பல மில்லாததாயுமுள்ள விடாகவும், புதன் பலசாலியானால் அதிகர்களால் கட்டப்பட்டதாகவும், சுக்ரன் பலவானாகவிருந்தால் அழகாகவும், சித்திரங்கள் நிறைந்ததாகவும், குரு பலவானனால்

கெட்டிக் கட்டடமாகவும் பிரஸவக்ரஹமிருக்கும். இவ்விதமாகவே பக்கத்திலிருக்கும் க்ரஹங்களைக்கொண்டு சுற்றுப்புறமுள்ள விடுகளையும் சொல்லலாம்.

மேஷம். கடகம், துலாம், விருச்சிகம், கும்பம் லக்னமானால் அல்லது அம்சலக்னமானால் வீட்டின் கிழக்கு பாகத்திலும், தனுஸ், மீனம், மிதுனம், கன்னி - இவைகளினால் வீட்டுக்கு வடபக்கத்திலிருக்குமென்றும், விருஷபம் ஜன்மலக்னம் அல்லது அம்சலக்னமாகவிருந்தால் மேற்கிலென்றும், மகரம் சிம்மம் இவைகளானால் தெற்குப்பக்கத்திலென்றும் தெரிந்து சொல்லலாம்.

சரீரத்தைத் தலை முதல் கழுத்து வரை ஒரு பிரிவாகவும், கழுத்துக்குக்கீழ் தொப்புள் வரை ஒரு பிரிவாகவும், அதற்குக்கீழ் பாதம் வரை ஒரு பிரிவாகவும் பிரித்துக்கொள்வது. ஜனம லக்னத்தில் முதல் த்ரேக்காணத்தில் பிறந்தவனுக்கு அந்த ராசி தலை, 2-வது ராசி வலக்கண், 12-வது ராசி இடக்கண், 3-வது ராசி வலக்காது. 11-வது ராசி இடது காது, 4-வது வலது மூக்கு. 10-வது ராசி இடது மூக்கு, 5-வது ராசி வலக்கன்னம், 9-வது ராசி இடக்கன்னம், 6-வது ராசி வலது மோவாய், 8 வது ராசி இடமோவாய், 7 வது ராசி வாய். இவ்விதமே இரண்டாவது த்ரேக்காணத்தில் பிறந்தவனுக்கு அந்த ராசி கழுத்து. 2-வது ராசி வலத்தோள், 12-வது ராசி இடதுதோள், 3 வது ராசி வலக்கை. 11-இடக்கை. 4 வது வலது பக்கம், 10-இடது பக்கம், 5-வது ராசி வலது மார்பு. 9 வது ராசி இடது மார்பு. 6-வது ராசி வயிற்றில் வலது பாகம் 8-வது இடது பாகம், 7-வது ராசி நாபி. இவ்விதமே மூன்றாவது த்ரேக்காணத்தில் முதல் ராசி மூத்ராசயம், 2வது ராசி குஹ்யத்தில் வலது பாகம், 12-வது ராசி இடது பாகம், 3-வது வலது வ்ருஷணம், 11-வது இடது வ்ருஷணம், 4-வது வலது துடை. 10-வது இடது துடை. 5-வது வலது முழந்தாள், 9-வது இடது முழந்தாள், 6-வது வலது ஜங்கை, 8-வது இடது ஜங்கை, 7-வது கணுக்கால்களாகவைத்துக்கொள்ளவும். இவைகளில் எந்த அங்கமாக இருக்கும் ராசியில் பாப க்ரஹங்களிருக்கின்றனவோ அங்கங்கு வடுக்களிருக்குமென்றும் சுப க்ரஹமிருந்தாலும் பார்த்தாலும் மரு இருக்குமென்றும் சொல்லலாம். இவ்விதம் சொல்லுதில் ஸ்வக்ஷேத்ரம் ஸ்வாம்சம், ஸ்திரராசி, ஸ்திர அம்சம் இவை

களிலிருக்க பிறக்கும் பொழுதே இருக்குமென்றும், மற்றவைகளில் பிறந்த பின் உண்டாகுமென்றும் சொல்லவும். இப்படிச் சொல்வதிலும் வடு முதலியவைகளே உண்டாக்கும் க்ரஹம் சனியானால் கற்களாலும், செவ்வாயானால் அக்னி சஸ்த்ரம் விஷ ஜந்துக்களாலும் புதனால் அடிபடுதலாலும், ஸூர்யனால் கட்டையால் அடி, நாற்கால் ஜந்துக்களாலும், க்ஷீண சந்த்ரனால் ஜந்துக்களின முட்டுதலாலும் உண்டாகும்.

புதனோடு சுபர்களோ அசுபர்களோ மூன்று க்ரஹங்கள் எந்த பாகத்தில் இருக்கின்றனரோ அந்த அங்கத்தில் வடு உண்டாகும். 6-ல் இருக்கும் பாப க்ரஹம் அந்த 6-வது ராசியின் அவயவத்தில் வடுவை உண்டுபண்ணும். 6-லிருக்கும் க்ரஹம் சுபர்களால் பார்க்கப்பட்டால் கருப்புப்புள்ளி மச்சம் இவைகளேற்படும். சுபர்களுடன் சேர்ந்தால் ரோமங்கள் நிரம்பிய கருப்பு அடையாளமேற்படும். இங்கு காலபுருஷனுக்குக் கூறிய அங்கங்களே வைத்துக்கொள்ளவேண்டும்.

அரிஷ்டம்.

பரணி 4-ம் பாதம், திருவாதிரை 2-ம் பாதம், ஆயில்யம் 3-ம் பாதம், ஹஸ்தம் 1-ம் பாதம், விசாகம் 2-ம் பாதம், மூலம் 4-ம் பாதம், அவிட்டம் 1-ம் பாதம், உத்தரட்டாதி 3-ம் பாதம் தினம்ருத்யுவாகையால் இவைகளில் பிறந்த ஆண், பெண் குழந்தைகளுக்கு பாலாரிஷ்டம்.

அசுவதி 1-ம் பாதம், பரணி 2-ம் பாதம், மிருகசீர்ஷம் 4-ம் பாதம், ஆயில்யம் 1-ம் பாதம், உத்தரம் 3-ம் பாதம் சுவாதி 4-ம் பாதம், மூலம் 2-ம் பாதம், திருவோணம் 3-ம் பாதம், உத்தரட்டாதி 1-ம் பாதம் தினரோகமாகையால் இவைகளில் பிறந்த ஆண் பெண்களுக்கு பாலாரிஷ்டம்.

அசுவதி 50, பரணி 24, கார்த்திகை 30, ரோஹிணி 40, மிருகசீர்ஷம் 14, திருவாதிரை 11, புனர்பூசம் 30, பூசம் 20, ஆயில்யம் 31, மகம் 30, பூரம் 20, உத்தரம் 18, ஹஸ்தம் 22, சித்திரை 20, ஸ்வாதி 14, விசாகம் 14, அனுஷம் 10, கேட்டை 14, மூலம் 20, பூராடம் 24, உத்தராடம் 20, திருவோணம் 10, அவிட்டம் 10, சதயம் 18, பூரட்டாதி 16, உத்தரட்டாதி 24, ரேவதி 30, மேற்கண்ட நக்ஷத்திரங்களில் மேற்கண்ட நாழிகைக்குமேல் 4 நாழிகை

விஷகடிகை காலமாகையால் விஷகடிகை காலத்தில் பிறந்த ஆண், பெண் குழந்தைகளுக்கு பாலாரிஷ்டம்.

குழந்தை, பூசம், சித்திரை, பூராடம் இவைகளில், 1-ம் பாதத்திற் பிறந்தால் தகப்பனுக்கும். 2-ம் பாதத்தில் பிறந்தால் தாய்க்கும், 3-ம் பாதத்தில் பிறந்தால் தனக்கும், 4-ம் பாதத்தில் பிறந்தால் அம்மானுக்கும். மூல நக்ஷத்திரம் 1-ம் பாதத்தில் பிறந்தால் தகப்பனுக்கும். 2-ம் பாதத்தில் பிறந்தால் தாய்க்கும், 3-ம் பாதத்தில் பிறந்தால் வம்சத்திற்கும், 4-ம் பாதத்தில் பிறந்தால் ஸம்பத்துக்கும். ஆயில்யம் 1-ம் பாதத்தில் பிறந்தால் ஸம்பத்துக்கும், 2-ம் பாதத்தில் பிறந்தால் வம்சத்திற்கும், 3-ம் பாதத்தில் பிறந்தால் தாய்க்கும், 4-ம் பாதத்தில் பிறந்தால் தகப்பனுக்கும் அரிஷ்டம்.

மேலே கண்ட அரிஷ்டங்கள் யாவும் ஜன்மலக்நத்துக்கு சுப க்ரஹங்களின் சேர்க்கை பார்வை இருக்குமானில் விலகிவிடும்.

பாபர்கள் கூடியதும் பாபர்கள் பார்ப்பதுமான ராசி சந்தியில் பிறந்த குழந்தைகள் உடனே நாசத்தை அடையும். ராசி சந்தியென்பது ஒவ்வொரு ராசியின் கடைசி பாகங்களேச் சிலரும், கடகம், விருச்சிகம் மீனம் இவைகளின் கடைசிப் பாகங்களேச் சிலரும் சொல்லுகிறார்கள். சிலர் மேஷம், சிங்கம், தனுசு இவைகளின் ஆரம்பத்தில் அரை நாழிகையையும், கடகம், விருச்சிகம், மீனம் இவைகளின் கடைசியில் அரை நாழிகையையும் ராசி சந்தி என்று சொல்லுகிறார்கள்.

கண்டாந்த காலத்தில் பிறந்தால் தாய், தகப்பன், சகோதரர்களுக்கு நாசம் உண்டாம். (கண்டாந்த காலமென்பது, அசுவதி, மகம், மூலம் இவைகளின் ஆரம்பத்தில் 8 நாழிகையும், ஆயில்யம், கேட்டை, ரேவதி இவைகளின் முடிவில் சிலர் அபிப்பிராயப்படி 8-42 நாழிகை உள்ள காலமே.) மரணமடையாமல் தப்பிப் பிழைக்குமானில் அக் குழந்தைக்கு ராஜயோகம் உண்டு.

பாபக்ரஹங்களின் சேர்க்கை அல்லது பார்வை பெற்றவைகளாய் 1, 4, 7, 10 என்கிற இடங்கள் இருக்குமானில் பிறந்த குழந்தைக்கு அரிஷ்டம் உண்டு.

பிறந்த குழந்தைகளின் ஜன்மலக்நம் ம்ருத்யுபாகத்தை அடைந்திருந்தாலும், சந்த்ரன் 1, 4, 7, 8, 10-மிடங்களில்

ம்ருத்யுபாகத்தை அடைந்திருந்தாலும் குழந்தைகளுக்கு அரிஷ்டம் உண்டு.

லக்நத்துக்கு (ம்ருத்யுபாகமென்பது) மேஷம் 8, விருஷபம் 9, மிதுனம் 22, கடகம் 22 சிம்மம் 25, கன்னி 14, துலாம் 4, விருச்சிகம் 23, தனுசு 18, மகரம் 20, கும்பம் 21 மீனம் 10வது பாகங்கள். (சந்திரனுக்கு ம்ருத்யுபாகமென்பது) மேஷம் 25 விருஷபம் 12, மிதுனம் 13, கடகம் 25, சிம்மம் 24 கன்னி 11, துலாம் 25 விருச்சிகம் 14, தனுசு 13, மகரம் 25, கும்பம் 5, மீனம் 12-வது பாகங்கள்.

லக்நத்துக்கு 1, 4, 7, 8, 10 களில் பாபிகளிருந்தாலும், லக்நத்திலும், 8-லும் பாபிகள் வலித்தாலும், லக்னம், 7-மிடங்களில் பாபிகள் வலித்தாலும், லக்னமாவது சந்திரனாவது பாபிகளிடையில் இருந்தாலும், சந்திரன் பலஹீனனாய் 6, 8, 12 மிடங்களிலிருந்தாலும், க்ஷீண சந்திரன் பாபிகளுடன் கூடி 1, 5, 7, 9 மிடங்களிலிருந்தாலும், 7, 8 மிடங்களில் க்ரூர க்ரஹங்களிருந்து 1 4, 7 10 ல் சுப ஹரகங்களின் சேர்க்கை அல்லது பார்வை யில்லாமல் போனாலும் அரிஷ்டம் உண்டு.

லக்னாதிபன் அல்லது சந்த்ர லக்னாதிபன் துர்ப்பலனாகி லக்நத்துக்கு 6, 8 12 மிடங்களிலிருந்தால் அவர்களிருக்குமிடம் மேஷம் முதலாக எண்ணிப்பார்க்க எத்தனையாவது ராசியோ அந்தக் கணக்குள்ள வருஷங்களில் கண்டம் என்றும், லக்ன சந்திரத்ரேக்காணாதிபர்கள் அவ்விதமிருந்தால் அந்த கணக்குள்ள மாதங்களில் கண்டம் என்றும், லக்ன சந்திர நவாம்சாதிபர்கள் அவ்விதமிருந்தால் அந்தக் கணக்குள்ள தினங்களில் கண்டம் என்றும், இவ்விதம் மூன்று யோகங்களையும் ஆலோசித்து அரிஷ்டம் கண்டுகொள்ளவும். இதுவுமன்றி 5, 8 மிடங்களில் பாபிகளிருந்தாலும் சிசுவுக்கு அரிஷ்டம் என்று கண்டுகொள்ளவும்.

ஸந்த்யாகாலத்தில் பாப க்ரஹங்கள் ராசியின் கடைசி அம்சத்திலிருக்க சந்த்ர ஹோரையில் ஜனித்தால் (ஸத்யோரிஷ்டம்) 1 வருஷத்துக்குள் மரணமடைவான். 1, 4, 7, 10 ஆகிய 4 கேந்த்ரங்களிலும் தனியே சந்த்ரன், சூரியன், சனி, செவ்வாய் இவர்களிருக்க ஜனித்தவனும் 1 வருஷத்துக்குள் மரிப்பான்.

கடக விருச்சிக லக்னங்களில் ஜனித்தவனுக்கு பூர்வார்த்தத்தில் க்ரூர க்ரஹங்களும், அபரார்த்தத்தில் சுப க்ரஹங்களுமிருக்க விநாசத்தை அடைவான்.

லக்னத்திலும் ஏழிலும் இரு பாபிகளும் சந்த்ரன் பாபியுடன் கூடியும் சுப க்ரஹ விக்ஷணமில்லாமலிருந்தால் சிக்ரத்தில் மரணம் உண்டாகும்.

க்ஷீண சந்த்ரன் 12-லும், பாபிகள் லக்னத்திலும், 12-லுமிருந்து 1, 4, 7, 10-ல் சுப க்ரஹங்களுமில்லாவிடில் சிக்ர மரணம் ஸம்பவிக்கும்.

சந்த்ரன் பாபியுடன் சேர்ந்து 7, 12, 8 லக்னம் இவைகளிலிருக்க கேந்த்ரத்தைத் தவிர மற்ற இடங்களிலிருந்தும் சுப க்ரஹங்களால் பார்க்கப்படாவிடில் மரணமுண்டாகும்.

சந்த்ரன் 6, 8 லிருந்து பாப க்ரஹங்களின் பார்வை பெற்று சுப க்ரஹம் பார்க்காவிடில் மரணம் உண்டாகும். 6, 8-லிருக்கும் சந்த்ரன் சுப க்ரஹங்களின் பார்வை பெற்று பாபிகளின் பார்வை பெறுவிடில் 8 வருஷம் ஆயுளுண்டு. சுபர் பாபர்களால் பார்க்கப்பட்டால் 4-வருஷம் ஆயுள். ஒரு வருஷம் பார்க்காவிடில் அரிஷ்டமில்லை. 6, 8-ல் குரு, புதன், சுக்ரன் இவர்களில் ஒருவர் இருந்து பலமுள்ள பாப க்ரஹங்களால் பார்க்கப்பட்டால் ஒரு மாதம் ஆயுளுண்டாம். லக்னாதிபதி ஏழிலிருந்து பாப க்ரஹத்தால் ஜயிக்கப்பெறின் 1 மாதம் ஆயுள்.

க்ஷீண சந்த்ரன் லக்னத்திலிருக்க 8, 1, 4, 7, 10-களில் பாபிகளிருந்தால் குழந்தை நாசமடையும். 8, 4, 7-ல் சந்த்ரனிருந்து இருபுறங்களிலும் (2, 12 ஸ்தானங்களில்) பாப க்ரஹமிருக்கப் பிறந்தது நசிக்கும். லக்னத்தில் சந்த்ரனிருந்து 7, 8-ல் பாபிகளிருந்து பலமுள்ள சுப க்ரஹ விக்ஷணமில்லையேல் பிறந்தது தாயுடன் மரணமடையும்.

எந்த ராசியிலும் சந்த்ரன் கடைசி அம்சத்திலிருந்து சுப க்ரஹ விக்ஷணமில்லாமல் 5, 9 ல் பாப க்ரஹமிருந்தாலும் சந்த்ரன் லக்னத்திலிருந்து 7-ல் பாப க்ரஹமிருந்தாலும் உடனே உயிர் துறக்கும்.

சந்த்ரன் சனி ராகுக்களுடன்கூடி 8-ல் செவ்வாயுமிருக்கப் பிறந்தால் அப்போது தாய் குழந்தை இருவருக்கும் நாசம். சூரியன் சனியோடோ புதனோடோ சேர்ந்து ராகு க்ரஸ்தனாகி லக்னத்திலிருக்க, செவ்வாயும் எட்டிலிருந்தால் தாய் சேயிருவர்க்கும் ஆயுதத்தால் மரணமேற்படும்.

சனி 12-லும், சூரியன் 9 லும், லக்னத்தில் சந்த்ரனும், செவ்வாய் 8-லுமிருக்க பலவானான குரு வீக்ஷணமில்லாவிடில் சிக்ரத்தில் மரணமுண்டாகும்.

க்ருஷ்ணபக்ஷ சந்த்ரன் 5, 7, 9, 12, 1, 8 இவ்விடங்களில் பாபியுடன் கூடி பாபிஷ்டர்களான சுக்ரன், புதன், குரு இவர்களுடன் சேராமலோ பார்க்கப்படாமலோ இருந்தால் மரணம் நேரும்.

அரிஷ்ட யோகங்களால் சந்த்ரன் கோசாரத்தில் பலமான (அரிஷ்ட யோகத்தைக் கொடுக்கும்) க்ரஹங்களின் ஸ்தானத்தை அடையும் காலத்திலோ; ஜன்ம காலத்தில் தானிருந்த விடத்தில் வரும் காலத்திலோ, பலமுள்ள சந்த்ரன் பாப க்ரஹங்களால் பார்க்கப்படும்போதோ ஒரு வருஷத்துக்குட்பட்ட காலத்திலோ மரணம் நேரலாம்.

அரிஷ்டபங்கம்.

பூர்ண பலம் பெற்ற குரு லக்னத்திலிருக்க ஸர்வ தோஷங்களும் போம்.

லக்னாதிபன் பூர்ண பலவானாய் கேந்த்ரத்திலிருக்கும் சுப க்ரஹங்களால் பார்க்கப்பட்டும், பாப க்ரஹங்களால் பார்க்கப்படாமலுமிருந்தால் பிறந்த குழந்தை குணசாலியாயும் ப்ரபுவாயும் நீண்ட ஆயுளுடன் கூடியுமிருப்பான்.

சந்த்ரன் 8-லிருந்தாலும் குரு, புதன், சுக்ரர்கள் நிரேக்காணத்திலிருந்தால் மரணத்தை அடையக்கூடியதையும் காப்பாற்றுவான்.

பூர்ண சந்த்ரன் சுப க்ஷேத்ரத்திலிருந்தாலும், சுபரால் பார்க்கப்பட்டாலும், அரிஷ்டம் பங்கமாகும். சுக்ரனால் பார்க்கப்பட்டாலும் அரிஷ்டத்துக்கு பங்கம் ஏற்படும்.

புதன், சுக்ரன், குரு இவர்களில் ஒருவர் பலமுள்ளவராய் கேந்த்ரத்தை அடைந்தால் எந்த பாபிகளுடன் கூடினாலும் அரிஷ்டத்துக்குப் பங்கமுண்டு.

சந்த்ரன் சத்ரு வீட்டிலிருந்தாலும், குரு, சுக்ரன், புதன் இவர்களுடைய நிரேக்காணத்திலிருக்க அரிஷ்டபங்கமேற்படும்.

பூர்ண சந்த்ரன் சுப க்ரஹ மத்தியிலிருந்து ராகு, கேதுவால் மறைக்கப்படாவிடில் அரிஷ்ட பங்க மேற்படும்.

சுக்ல பக்ஷத்தில் இரவில் பிறந்தவனுக்கு பூர்ண சந்த்ரன் 6, 8 இடங்களிலிருந்தால் அரிஷ்டமில்லை.

பலவானான குரு கேந்த்ரத்திலிருக்க ஸர்வாரிஷ்டங்களும் நாசமாகும்.

குரு, சந்த்ரன், சுக்ரன், புதன் எல்லோரும் சுப க்ஷேத்ரத்திலிருந்தாலும் அரிஷ்டங்கள்போம்.

சந்த்ரன் கிற்கும் ராசியதிபனை சுப க்ரஹமோ கேந்த்ரத்திலிருக்க அரிஷ்டம் போம்.

சுப வர்க்கத்திலிருக்கும் பாபிகள் சுபாம்சத்திலோ அல்லது வர்கத்திலோ இருக்கும் சுபர்களால் பார்க்கப்பட்டாலும் அரிஷ்டம் நாசமாகும்.

லக்னத்துக்கு 3, 6, 11-லிருக்கும் ராகு சுபர்களால் பார்க்கப் பட்டால் அரிஷ்டம் போம்.

ஜனன காலத்தில் க்ரஹங்களெல்லாம், சீர்ஷோதய ராசிகளில் வக்ரசாரம், அஸ்தமனம் முதலிய தோஷங்களில்லாமலிருந்தாலும், ஜன்ம காலத்தில் சுப க்ரஹம் சுபர் பார்வை பெற்றும் யுத்தத்தில் ஜயமுள்ளதாகவுமிருந்தாலும், சுக்ல பக்ஷ சந்த்ரன் எல்லா க்ரஹங்களாலும் பார்க்கப்பட்டாலும் அரிஷ்டங்கள் நாசமாகும்.

யோகங்கள்.

செவ்வாய் தன் க்ருஹத்திலோ உச்சக்ஷேத்ரத்திலோ இருந்து அது கேந்த்ரமானால் ருசகம் என்னும் யோகமாகும்.

இந்த யோகத்தில் பிறந்தவன் நீண்ட முக முள்ளவன், பித்வாதத்தால் ஸம்பாதித்த தனமுடையவன், சூரன், சத்ருக்களை நாசம் செய்பவன், கர்வி, பிரஸித்தன், ஸேனாபதியாகவிருப்பான்.

புதன் ஸ்வக்ஷேத்ரத்திலோ உச்சராசியிலோ இருந்து அது கேந்த்ரமானால் பத்ரக யோகமெனச் சொல்லப்படும்.

இந்த யோகத்தில் பிறந்தவன் தீர்க்காயுஸ்ஸுள்ளவன், ஸுகிஷ்மமான புத்தியுடையவன், தோஷமில்லாதவன், படித்தவர்களால்கொண்டாடப்படுபவன், பூமியை ஆள்பவன் ஐச்வர்யசாலி, பேசுந்திறமை யுடையவன்.

குரு ஸ்வக்ஷேத்ரத்திலோ உச்சராசியிலோ இருந்து அது கேந்த்ரமாயின் ஹம்ஸயோகமெனப்படும்.

ஹம்ஸக யோகத்தில் பிறந்தவன் ஸாதுக்களால் துதிக்கப் படுபவன். பூமிபதி, கால் கைகளில் சங்கபத்மாதி விசேஷ ரேகைகளுள்ளவன், அழகான தேஹமுள்ளவன், நல்ல ஆஹாரமுள்ளவன், தார்மிகன்.

சுக்ரன் தன் வீட்டிலோ உச்ச வீட்டிலோ இருந்து அது கேந்த்ரமாயின் மாளவ யோகமெனச் சொல்லப்படும்.

இந்த யோகத்தில் பிறந்தவன் த்ருடமான அங்கங்களுடையவன், தைர்யவான், தனவான், புத்ரன், பத்னி, பாக்யம் இவைகளுடன் கூடியவன், மென்மேலும் விருத்தியை யடைபவன், சுப போஜனமுள்ளவன், நல்லவாஹனம நற்கீர்த்திகளுடையவன், படித்தவன், தெளிவான புலன்களுடையவன்.

சனி தன் ராசியிலோ உச்ச ராசியிலோ இருந்து அது கேந்த்ரமாயின் சஸ யோகமெனப்படும்.

சஸ யோகத்தில் பிறந்தவன் எல்லோராலும் கொண்டாடப் பட்டவன், நல்ல வேலைக்காரர்களுள்ளவன், பலவான், கிராமாதிபதி, துர்நடத்தை யுள்ளவன், பிறர் ஸ்த்ரீ தனங்களுடன் கூடியவன், லௌக்யமுள்ளவன்.

மேற்கூறிய ஐந்து யோகங்களையும் ஜன்ம லக்ன சந்த்ர லக்னங்களிலிருந்தும் பார்க்கவேண்டும். இந்த யோகங்களில் ஒன்றும் அதற்குமேலும் இருக்கப் பிறந்தால் 1-பாக்யவான், 2-ராஜலமன், 3-அரசன், 4-அரசர்களில் உயர்ந்தவன், 5-எல்லோருக்கும் அதிபதி.

சந்த்ரனுக்கு 2-ல் சூரியனைத்தவிர மற்ற க்ரஹங்களிருக்க சுனபா யோகம் எனப்படும். சுனபா யோகத்தில் பிறந்தவன் தன் ப்ரயத்னத்தால் ஸம்பாதித்த தனமுள்ளவன், அரசனுக்கோ

அரசனுக்கு ஒப்பர்களோ இருப்பான். புத்தி கீர்த்திகளையுடையவனுவான்.

சந்த்ரனுக்கு 12-ல் சூரியனைத்தவிர மற்ற க்ரஹங்களிருப்பின் அனபாயோக மெனப் படும். இதில் பிறந்தவன் ப்ரபுவாயும், ஆரோக்யவானுயும், நன்னடத்தை யுள்ளவனுயும், நற்கீர்த்தியுள்ளவனுயும், நல்ல வேஷமுள்ளவனுயுமிருப்பான்.

துர்துராயோகம் :— சந்த்ரனுக்கு 2, 12-ல் சூரியனைத்தவிர மற்ற க்ரஹங்களிருப்பது. பலன்: புதிதான போகத்தை அநுபவிப்பன். தனவானுன பூர்ணன், தாதா.

கேமத்ருமம் :— மேலே சொன்னபடி யில்லாமலிருப்பது. பலன்: அரசர் குடியிற் பிறந்தும் மலினனும், துக்கிதனும், தீசனும் தரித்ரனும், வஞ்சகனும், அடிமையுமாகவிருப்பான்.

சுபவேஸி: சூரியனுக்கு இரண்டில் சந்த்ரனைத்தவிர மீதமுள்ள சுப க்ரஹங்களிருப்பது. பலன்: அழகன், குணவான், சுகி, தைர்யவான், தார்மிகன், ப்ரபு.

பாபவேஸி: சூரியனுக்கு 2-ல் அசுபக்ரஹங்களிருப்பது. பலன்: ந்யாயமில்லாமல் நிந்திப்பவன், சாந்தியற்றவன், தாழ்ந்தோரிடம் ப்ரீதியுள்ளவன், துர்ஜனன்.

சுபவாஸி: சூரியனுக்கு 12-ல் சந்த்ரனைத் தவிர மற்ற சுப க்ரஹங்களிருப்பது. பலன்: பிரஸித்த புருஷன், ஸர்வஜன ப்ரியன், நல்லவன். தாதா, ராஜப்ரியன்.

சுப உபயசரீ :— சூரியனுக்கு 12, 2ல் சந்த்ரனைத் தவிர மற்ற சுப க்ரஹங்களிருப்பது. பலன்: அழகன், ப்ரியவாதி, ரஸிகன். நன்றுகப் பேசுபவன். கீர்த்திமான். தனிகன்.

சுபகர்த்தரீ — லக்னத்துக்கு 12, 2-ல் சுபக்ரஹங்களிருப்பது. நீண்ட ஆயுள். பயம், பிணியில்லாமை, சுகம், தனம் முதலியவைகளோடு கூடியிருப்பான்.

மேற் சொன்னவைகளுக்கு மாறுக விருப்பது அசுப வேசி முதலிய யோகங்களாகும். இந்த யோகங்களுக்கு கெட்டபலன்களை. சில மதம்

அமலயோகம்:—லக்னம் அல்லது சந்த்ரனுக்கு 10-ல் சுப க்ரஹங்களிருப்பது. இது நற்பலனளிக்கும். பூமிக்கதிபதி, தனம், புத்ரன், கீர்த்தி, நீதியுடன் கூடுவான்.

மஹாபாக்யம்:—ஒற்றையான ராசியில் சூரியன், சந்த்ரன் லக்னங்களிருந்து பகலில் பிறந்தபுருஷனுக்கு இந்தயோகமுண்டு. இரவில் பிறந்தஸ்த்ரீக்கு இரட்டித்தராசியில் சூரியன் சந்த்ரன் லக்னங்களிருப்பது. கண்களுக்கு ஆநந்தத்தை யளிப்பவன். கொடையாளி, பிரஸித்தன் பூமிக்கு அதிபதி. தோஷமற்றவன். 80 வயதுள்ளவன். ஸ்த்ரீ மாங்கல்யவதி, புத்ர பௌத்ரர்களை யுடையவள், அநேககாலம் ஸௌக்யமாக வாழ்வள்.

கேஸரீ:—சந்த்ரன் குருவுக்கு கேந்த்ரத்திலிருப்பது. சத்ருக்களை அழிப்பவன். சாமர்த்ய்மாகப் பேசுபவன். ஆடம்பரமுள்ளவன். நீண்டஆயுளுள்ளவன். கீர்த்தியுள்ளவன். புத்திமான், ஜயிப்பவன்.

சகடம்:—சந்த்ரன் குருவுக்கு 12-8-6-களில் இருப்பது. சந்த்ரன் லக்னத்துக்குக் கேந்த்ரத்திலிருந்தால் யோகமில்லை. குருவிருந்தாலும் சகட யோகமில்லை யெனச் சிலர். சிலகாலங்களில் உயர்ந்த நற்பலனையும் சிலகாலம் கெட்டபலனையும் மாறி மாறி அனுபவிப்பான்.

அதமம், சூரியனுக்கு சந்த்ரன் கேந்த்ரத்திலிருப்பது. தர்ய்யம், வாஹனம், யஸஸ். ஸம்பத்து, ஞானம் புத்தி, ஸாமர்த்த்யம் முதலியவைகளில்லாமை நடக்கும்.

ஸமம். சூரியனுடைய கேந்த்ரஸ்தானத்துக்கு 2-ல் சந்த்ரன் இருப்பது. முன் சொன்ன பலன்கள் நடுநிலைமையில் நடக்கும்.

விஷ்டம் சந்த்ரன் சூரியனுடைய கேந்த்ரத்துக்கு 3-ல் இருப்பது, முற்கூறிய பலன்கள் உத்தமமாக நடக்கும்.

வஸுமான்:—சந்த்ரனுக்கு அல்லது லக்னத்துக்கு 3, 6, 10. 11-ல் எல்லா சுபக்ரஹங்களு மிருப்பது. தனக்குரியதான விடத்தில் லாபம், அதிகமான தனங்களையடைவான்.

புஷ்கலம்: சந்த்ரலக்னாதிபதிலக்னாதிபதியுடன் கூடிகேந்த்ரத்திலிருந்தால் இந்தயோகம் உண்டாகிறது. ஸ்ரீமான், ராஜஸம்

மானமுடையவன், பிரஸித்தன். நல்ல ஆடையாபரணங்களால் அலங்காரம்செய்து கொள்பவன். நல்வார்த்தைபேசுபவன், பிரபு.

சுபமாலா:—எல்லாக்ரஹங்களும் க்ரமமாக 5, 6, 7-இவைகளிலிருப்பது. ஜனங்களுக்கு நாயகன், ராஜபூஜிதன், போகத்தையுடையவன், உபகாரி, சுற்றத்தாரிடம் அன்புள்ளவன், நல்லகளத்ரம் புத்ரர்களை யுடையவன், தைர்யவான்.

அசுபமாலா:—எல்லா க்ரஹங்களும் 8-6-12-ல் இருப்பது. துஷ்மார்கன், துஷ்டி, ஹிம்ஸை புரிபவன். நன்றிகெட்டவன். பயந்தவன். நிந்திக்கப்படுபவன். சண்டையிலாசையுடையவன்.

லக்ஷ்மீ:—ஐந்து அல்லது ஒன்பதிலோ இருக்கும் பாக்யாதிபதி சுக்ரன் இருவரும் ஸ்வக்ஷேத்ரத்திலோ உச்சத்திலோ இருந்தால் இந்தயோகம் ஏற்படுகிறது. எப்பொழுதும் கல்லொழுக்கமுள்ள ஸ்த்ரீயுடன் விளையாடிக் கொண்டிருப்பவன், ஆரோக்யமுள்ளவன், தனிகன், தேஜஸ்ஸுள்ளவன், தன் இனத்தவரைக் காப்பாற்றுபவன். லக்ஷ்மீ ப்ரஸாதத்தை அடைபவன். சிறந்த வாஹனங்களுள்ளவன், ஆனந்தத்தையளிப்பவன். ஸுகையுள்ளவன்.

கௌரீ. 5 அல்லது 9-ல் அல்லது கேந்த்ரத்திலோ இருக்கும் சந்த்ரன் தன்வீட்டிலோ உச்சராசியிலோ இருந்துகுருவால் பார்க்கப்படுவது. அழகான சரீரமுடையவன். கீர்த்தியடைந்தவன் சத்திலுதித்தவன். அரசனுடைய தோழமையுள்ளவன், ஸத்புத்ரனுடையவன், கொண்டாடத்தக்கவன்.

ஸரஸ்வதீ:—சுக்ரன், குரு, புதன்-இவர்கள் கேந்த்ர கோணங்களில் அல்லது இரண்டில் இருந்து குரு ஆஷி, உச்சம், நட்புவீடுகளில் பலம்பெற்றிருந்தால் இந்த யோகம் ஏற்படுகிறது. பலன்: புத்திமான், காவ்யம் செய்யவல்லவன். சாஸ்த்ரகர்த்தா, எங்கும் பரம்பிய கீர்த்தியையுடையவன. மிகவும் பணக்காரன், களத்ர புத்ர ஸௌக்யமுள்ளவன், பாக்யவான்.

ஸ்ரீகண்டம்:—லக்னாதிபதி சூரியன் சந்த்ரன் கேந்த்ரகோணங்களில் ஆஷி, உச்சம், நட்பு வீடுகளாக விருப்பது. விபூதிருத்ராக்ஷமணிபவன், சைவவ்ரதநிஷ்டை பெற்றவன், நியமத்துடன் சிவ உபாஸனைபுரிபவன், ஸாதுக்களுக்கு உபகரிப்பவன், இதர மதங்

களில் ஆஸக்தியில்லாதவன். தேஜஸ்வி, சிவபூஜையில் மிகுந்த பக்தியுள்ளவன்.

ஸ்ரீநாதம்:—மூன் யோகப் பிரகாரம் சுக்ரன் 9-க்குடையவன் புதன் இவர்களிருப்பது. தனவான். ஸரஸமாகப் பேசுபவன், பரிஷ்காரத்தில் ஸமர்த்தன், நாராயணனுக்குள்ள அடையாளங்களை உடையவன். நாராயணனைத் துதிப்பவன், வைஷ்ணவாராதகன், ஸத்புத்ரகளத்ரங்களையுடையவன். பிரியமாயிருப்பவன், அழகுள்ளவன்.

வைஞ்சி:—முன்போலவே குரு, லக்னாதிபன், சனி இவர்களிருப்பது. ப்ரம்மக்ஞானி, நல்ல புத்திமான், வேதாத்யயனம் செய்பவன், நல்லகுணமுள்ளவன். ஸந்தோஷமுள்ளவன், வைதிகமுறையினின்றும் வழுவாதவன். ப்ரஸித்த சிஷ்யர்களுள்ளவன். மெதுவாகப்பேசுபவன், அதிகமான ஸம்பத்து, களத்ரம், புத்ரர்களையுடையவன், தேஜஸ்வி, நிர்க்காயுஸுள்ளவன், இந்த்ரிய ஜயத்தையுடையவன். ப்ரபுக்களால் வணங்கப்படுபவன்.

தைந்யயோகம் 30. 12-க்குடையவன் 1, 2, 3, 4, 5, 6, 7, 8. 9. 10, 11-இந்த ஸ்தானங்களில் ஏதோ ஒரு ஸ்தானத்தில் இருந்து அந்த ஸ்தானத்துக்குடையவன் 12-ல் இருப்பதால் ஏற்படும் யோகம் 11-ஆகும். 6-க்குடையவன் 7, 8, 9, 10, 11, 1, 2, 3, 4, 5-இவைகளிலொன்றில் இருந்து, அவ்விட்டுக்குடையவன் 6-ல் இருப்பதால் ஏற்படக்கூடிய யோகங்கள் 10 ஆகும். இப்படியே எட்டுக் குடையவன் 9, 10, 11, 1, 2, 3, 4, 5, 7-இவைகளிலொன்றிலிருந்து அவ்வீட்டுக் குடையவன் எட்டிலிருப்பதால் ஏற்படும் யோகங்கள் 9 ஆகும். ஆக 30 யோகங்களும் தைந்ய யோகங்களெனப்படும்.

பலன்: மூர்க்கன், அபவாதமுடையோன், பாபி, சத்ருவால் எப்போதும் பிடிக்கப்படுபவன். கொடுஞ்சொல்லோன், ஸ்திர புத்தியில்லாதவன். தொடர்ந்து கார்யம் செய்யாதவன்.

கலயோகம்-8. மூன்றுக்குடையவன் 4, 5, 7, 9, 10, 11, 1, 2-இவ்விடங்களில் ஏதேனு மொரு ஸ்தானத்திலிருந்து அந்த ஸ்தானத்துக்குடையவன் மூன்றிலிருப்பதால் ஏற்படும் யோகங்கள் 8.

பலன்:—கர்வமுள்ளவன், ஒருகால் கல்லபாக்யத்தையடைந்து அடுத்த சமயம் இழப்பவன். நல்வார்த்தையை ஒருபோதும் தீய வார்த்தையை ஒருபோதும் பேசுபவன். சில சமயம் ஏழ்மை, துக்கங்களை யனுபவிப்பவன்.

மஹாயோகம்-28. லக்னாதிபதி—2, 4, 5, 7, 9, 10, 11-லிருந்து அவ்விட்டுக்குடையவர் லக்னத்திலிருப்பதில் ஏற்படும் யோகங்கள் 7. இரண்டாமிடத்ததிபன் 4, 5, 7, 9, 10, 11-இவைகளிலொன்றிலிருந்து அந்த ஸ்தானாதிபன் இரண்டாமிடத்திலிருப்பதாலேற்படும் யோகங்கள் 6. நான்காமிடத்துக்குடையவன் 5, 7, 9, 10, 11-இவைகளிலொன்றிலிருந்து அவ்விட்டுக்குடையவன் 4-ல் இருப்பதாலேற்படக்கூடும் யோகங்கள் 5. ஐந்துக்குடையவன் 7, 9, 10, 11-இந்த ஸ்தானங்களிலொன்றிலிருந்து அந்த ஸ்தானத்துக்குடையவன் ஐந்திலிருப்பதாலேற்படும் யோகங்கள் 4. இப்படியே ஏழுக்குடையவன் 9, 10, 11-லிருக்க அவ்விட்டிற்கதிபன் ஏழிலிருப்பதாலேற்படுவது 3. இவ்விதமே 9-க்குடையவன் 10, 11-இவ்விரண்டிலொன்றிலிருந்து அவைகளுக்குடையவன் 9-லிருப்பதால் ஏற்படும் யோகங்கள் 2. 10 க்குடையவன் 11-லும் 11-க்குடையவன் 10 லுமாக இருப்பது 1-ஆக யோகங்கள் 28.

பலன்: மஹாலக்ஷ்மியின் கடாக்ஷத்துக் கிலக்கானவன், தனவான், அநேகவித ஆடை யாபரணங்களையுடையவன், அரசனுல் பருமானமடைபவன், தண்டிக்கும் சக்தியுடையவன், வாஹனம், தனம், புத்ரர்களையுடையவனுமிருப்பான்.

காஹலயோகம்: லக்னாதிபதி இருக்கும் ராசியின் அதிபதி இருக்கும் ராசியதிபதி தன் உச்சகட்டு வீடுகளில் திரிகோணத்திலோ கேந்த்ரத்திலோ இருக்க இந்த யோகமேற்படுகிறது. இந்த யோகத்தில் பிறந்தவன் விருத்தியை யடைபவன், பூசிக்கத்தக்கவன், புத்திமான், கேஷமத்தைச் செய்பவன்.

பர்வதயோகம்: லக்னாதிபதியிருக்கும் வீட்டுக்கதிபதி தன உச்சஸ்வகேந்த்ரங்களில் கேந்த்ரத்திரிகோணங்களிலிருக்க இந்த யோக மேற்படும். இதில் ஜனித்தவன் கிடைத்த ஐச்வர்யம் லோகங்களையுடையவன், கிடைத்திருக்கும் கார்யத்தைச் செய்பவன். பூமிக்கதிபதியாவான்.

ராஜயோகம்: 9-க்குடையவனும் 10-க்குடையவனும் சேர்ந்து சுபபாவத்திலிருப்பது. இதில் பிறந்தவன் பேரீசங்க வாத்யங்கள் முழங்க வெண்கொற்றக்குடை தரிப்பவன், குதிரை, யானை, பல்லக்கு முதலிய வாஹனாதிகளையுடையவன், பாடகர்களால் துதிக்கப்படுபவன், காணிக்கை செலுத்தப்படுபவன், பூமியை ஆள்பவன்.

சங்கயோகம்: 9, 10-க்குடையவர்கள் சேர்ந்து கேந்த்ரத்தி கோணாதிபதிகளுடன் நல்ல பாவத்திலிருப்பது. இவன் அநேகம் உயர்ந்த ஸ்த்ரீகளின் போகம் ஸம்பத்துக்களால் நிறைந்தவனுவான்.

ஸங்க்யாயோகம்: இதுமுற் கூறிய யோகங்கள் நேராவிடத்து ஏழுவகையாகச் சொல்லப்படுகின்றன.

1. **வீணாயோகம்:** (வல்லகி) லக்னம் முதல் 7 ராசிகளிலும் 7 க்ரஹங்கள் வரிசையாயிருப்பது. 2 **தாமயோகம்:** வரிசையாக லக்னம் முதல் 6 ராசிகளில் 7 க்ரஹங்களிருப்பது. 3. **பாசயோகம்:** க்ரமமாக லக்னம் முதல் 5 ராசிகளில் 7 க்ரஹங்களிருப்பது. 4. **கேதாரயோகம்:** லக்னம் முதல் 4 ராசிகளில் 7 க்ரஹங்களும் வரிசையாயிருப்பது. 5. **சூலயோகம்:** லக்னம் முதல் மூன்று ராசிகளில் க்ரமமாய் ஏழு க்ரஹங்களுமிருப்பது. 6. **யூகயோகம்:** லக்னம் முதல் இரண்டு ராசிகளில் ஏழு க்ரஹங்களுமிருப்பது. 7. **கோளயோகம்:** லக்னத்திலேயே எல்லா க்ரஹங்களுமிருப்பது. முறையே பலன்கள் கூறப்படுகின்றன.

வீணா யோகத்தில் பிறந்தவன் ந்ருத்யகீதங்களில் ப்ரியமுள்ளவனுகவும், தனவானுகவுமிருப்பான். தாம யோகத்தில் ஜனித்தவன் தாதாவாகவும் உபகாரியாகவும் பூமிபதியாகவுமிருப்பான். பாச யோகத்திற் பிறந்தவன் போகியும், தனவானும், நன்னடத்தை பந்துக்களுள்ளவனுமாவான். கேதாரயோகம் ஐச்வர்யம், பயிர்த்தொழில் இவைகளுடன் கூடுவான். சூல யோகத்தில் பிறந்தவன் ஹிம்ஸை புரிபவன். கோபி, தரித்ரன், நாஸ்திகன், யுக யோகத்தில் ஜனித்தவன், தரித்ரன், பாபி, நீசஜனஸேவாலம், ஒழுங்கற்றசில்பியாவான். கோள யோகத்திற் பிறந்தவன் சோம்பேறி, குறைந்த ஆயுளுள்ளவன்.

அதியோகம்: லக்னத்துக்கு அல்லது சந்த்ரனுக்கு 7, 6 8-மிடங்களில் சுபக்ரஹங்களிருப்பது. லக்னத்துக்கு 7-ல் சுபக்ரஹங்களிருக்கக் கீர்த்தியுள்ள பணக்காரனுவான். 6-ல் சுபக்ரஹங்களிருக்க நீண்ட ஆயுளுள்ளவனுவன். 8-லிருக்க பரந்தநோக்முள்ளவனுவான். சந்த்ரனுக்கு 7-ல் சுபக்ரஹங்களிருக்க தலைவனுவான். 6-லிருந்தால் மந்த்ரி, 8-லிருக்க பூபதி.

அதியோகத்திற் பிறந்தவன் அரசனுகவும், நிலைத்த ஐச்வர்யத்தையுடையவனுகவும், பந்துக்களுக்கு உபகாரியாகவும், சத்ருக்களை ஜயிப்பவனுகவும், நீண்ட ஆயுள் கீர்த்தி-இவைகளை அடைபவனுகவுமாவான்.

லக்னம் முதலிய பாவங்கள் சுபர்களின் வாஸம் அல்லது த்ருஷ்டி பெற்று பாவாதிபர்கள் பூர்ண காந்தியுடன் 6, 8, 12 தவிர மற்ற நல்ல ஸ்தானங்களிலிருந்து உச்ச ஸ்வக்ஷேத்ரங்களை அடைந்தால் லக்னம் முதல் வரிசையாக பன்னிரண்டு யோகங்கள் சொல்லப்படுகின்றன. அவை வருமாறு:— 1. சாமரம், 2. தேனு, 3. சௌர்யம், 4. தலபி, 5. சத்ரம், 6. அஸ்த்ரம், 7. காமம், 8. ஆஸுரம், 9. பாக்யம், 10. க்யாதி, 11. பரிஜாதம், 12. முஸலம் என்பன. மேற் கூறப்பட்ட 12 பாவங்களாலேற்படும் 12 யோகங்களில் ஜனித்தவர்களுடைய பலன் முறையே சொல்லப்படுகிறது.

சாமர யோகத்தில் பிறந்தவன் அதிகம் விருத்தியை யடைபவனுகவும், தலைவனுகவும், நீண்ட ஆயுளுடையவனுகவும், லக்ஷ்மீகடாக்ஷத்திற்குப் பாத்ரனுகவுமிருப்பான்.

தேனு யோகத்தில் பிறப்புடையவன் அன்னம் முதலிய ஐச்வர்யங்கள் நிறைந்தவனுகவும், அநேக வித்யைகளில் தேர்ச்சியுள்ளவனுகவும், ஸ்வர்ணாதி ஸம்பத்துக்களையுடையவனுகவும், குபேரன் போல் விளங்குவான்.

சௌர்ய யோகத்திற் பிறப்பவன் பிரஸித்தர்களான உடன் பிறந்தோரால் துதிக்கப் படுபவனுகவும், உபசாரம் செய்யப்படுபவனுகவும், பராக்ரம முடையவனுகவும், அதிகயசஸ்வியாகவுமாவான்.

ஜலநி யோகத்தில் ஜனித்தவன் பக, தனம், தான்யம், பந்துக்கள் நிறைந்த வீடு, உயர்ந்த ஸ்த்ரீ, ரத்னம், ஆடை, ஆபரணங்கள், மிக உயர்ந்தஸ்தானம் அழியாகஜம், யானை குதிரை முதலிய வாஹனம், புகழ்ச்சி, தேவ ப்ராஹ்மணபக்தி, மார்கத்தில் இணறு, தண்ணீர்ப்பந்தல் அமைத்தல் இவைகளோடு கூடியிருப்பான.

சக்ர யோகத்தில் ஜனனத்தையடைந்தவன் சிறந்த பார்யை ஸந்தானம் லக்ஷ்மீ இவைகளுக்கிருப்பிடமாகவும், கீர்த்தியையுடையவனாகவும், பூசிக்கத்தக்கவனாகவும், தனவானாகவும், காலத்தில் தோன்றும் கூரிய புத்தியையுடையவனாகவுமாவான்.

அக்ர யோகத்தில் உண்டானவன் பிரபல சத்ருக்களை வலுவிலடக்கி கொடூரமாக நடக்கிறவனாயும், அஹங்காரியாயும், சண்டை செய்பவனாயும், வலுவான சரீரமுடையவனாயுமாவான்.

காம யோகத்தில் பிறந்தவன் பரதாரத்தை யேறிட்டுப் பார்க்காதவனாகவும், உயர்ந்த கலத்ரம், புத்ரன், பந்துக்களுடன் கூடியவனாகவும், தகப்பனைக் காட்டிலும் குணவானாகவும், சிறந்த ஐச்வர்யத்தையுடையவனாவுமாவான.

ஆக்ர யோகத்தில் ஜனித்தவன் பிறர் கார்யத்தைக் கெடுப்பவனும், பிசுனியும், தன்கார்யத்திலேயே நோக்குள்ளவனும், தரித்ரனும், ஆக்ரஹியும், தானே தேடிக்கொண்ட கஷ்டத்தையுடையவனும் துர்மார்க்கத்தில் இறங்கியவனுமாவான்.

பாக்ய யோகத்திற் பிறப்பவன் சாஸ்த்ர, வாத்ய கோஷத்துடன் கூடிய பல்லக்கையும் ஸ்த்ர ஸம்பத்தையும் அடைபவனாகும் எல்லோராலும் வணங்கப்படுபவனாகவும், தர்மம் புரிபவனாகவும், தேவ பித்ரு ப்ராம்மணர்களைப் பூசிப்பவனாகவும் ஸதாசார முடையவனாகவும், தன் குலத்தைப் பரிபாலிப்பவனாகவும், பரந்த மனதுடையவனாகவுமாவான்.

கீர்த்தி யோகத்தில் பிறந்தவன் எல்லோராலும் ஸம்மதிக்கப் பெற்ற நற்செயலைச் செய்பவனாகவும், நல்லவர்களைக் காப்பாற்று

வதிலு ஆ
திலேயே ஆ த்ர மித்ர தன தார பாக்யங்களுள்ளவனாகவும், பிரகாசமாவான்.

ஜாத யோகத்தில் பிறப்புடையவன் நித்ய மங்களத்தையுடையவனாயும், பூபதியாயும், தன்னால் தேடப்பட்ட ஐச்வர்யங்களையுடையவனாயும், குடும்பியாயும், ஸத்கதாச்ரவணத்தில் பற்றுள்ளவனாயும், படிப்பாளியாயும், நற்செயல் புரிபவனாயுமாவான்.

முஸல யோகத்தில் ஜனித்தவன் கஷ்டப்பட்டுத் தேடிய பொருளையுடையவனும், அவமானமடைந்தவனும், நிலையற்ற ஐச்வர்யத்தை யுடையவனும், சிக்கனமான செலவுள்ளவனும், ஸ்வர்கத்தை யடைபவனும், முன் பின் யோஜிக்காமல் காரியம் செய்பவனும், ஸ்திரமல்லாத சித்தனுமாக ஆவான்.

லக்னம் முதலிய பாவநாதர்கள் 6-8-12 ஸ்தானங்களிலிருந்தாலும், லக்னம் முதலிய பாவங்கள் அசுபர்களின் ஸம்பந்தம் அல்லது த்ருஷ்டியை அடைந்தாலும், லக்னம் முதலாக க்ரமமாக பன்னிரண்டு யோகங்கள் அமைகின்றன. அவை வருமாறு: 1. அவயோகம், 2. நிஸ்ஸ்வயோகம், 3. ம்ருதியோகம், 4. குஹூயோகம், 5. பாமரயோகம், 6. ஹர்ஷயோகம், 7. துஷ்க்ருதியோகம், 8. ஸரளயோகம், 9. நிர்ப்பாக்யயோகம், 10. துர்யோகம், 11. தரித்ரயோகம், 12. விமலயோகம் என்பனவாகும்.

மேற் கூறிய யோகங்களில் பிறந்தவனுடைய பலன் முறையே கூறப்படுகிறது.

1. **அவ** யோகத்தில் பிறந்தவன் பிரஸித்தமில்லாதவன், அதிகம் தைர்யமுள்ளவன், அல்பாயுளுள்ளவன், கெட்டவர்களாலுமதிக்கப்படுபவன், துர்நடத்தையுள்ளவன், நல்ல சரீரமில்லாதவன், நிலையற்ற நிலையிலுள்ளவன்.

2. **நிஸ்ஸ்வ** யோகத்தில் ஜனித்தவன் நல்வார்த்தையில்லாதவன், தனமற்ற குடும்பி, துஷ்டஜனஸஹவாஸமுள்ளவன், பார்க்க முடியாத பற்கள் கண்களையுடையவன், புத்தி, புத்ரன், படிப்பு, தனம் இவையற்றவன், சத்ருவால் அபஹரிக்கப்பட்ட தனத்தையுடையவன்,

நம், தான்யம்,

3. **ம்ருத்யு** யோகத்தில் பிறந்தோன் எதிரியால் த்னம், ஆடை, பட்டவன், உடன் பிறப்பில்லாதவன், வெட்கமற்றவன் ஈன குதிரை பண மில்லாதவன், தகுதியல்லாத கார்யத்தால் கஷ்ட ர்கத்தில் வன், துர்குணி. பிருப்

4. **குஹ்ய** யோகத்தில் பிறந்தவன் மாதா, வாஹனம், தோழன், சுகம், நகை, பந்து-இவைகளில்லாதவன். நிலையில்லாத வன், தன் ஸ்தானத்தில் அழிவை யுடையவன், கெட்ட ஸ்த்ரீ யிடத்தில் பற்றுள்ளவன்.

5. **பாம்ய** யோகத்தில் பிறப்புள்ளவன் துக்கத்துடன் ஜீவிப் பவன், பொய் சொல்பவன், அவிவேகி, வஞ்சகன், புத்ரனை யிழந்தவன், நாஸ்திகன், தீனர்களும் கெட்டவர்களுமானவர்களை அண்டியிருப்பவன். எல்லோரையுமழிப்பவன்.

6. **ஹர்ஷ** யோகத்தில் பிறந்தவன் சுகபோக பாக்யங்களை யுடையவன், தர்மடேஹி, சத்ருவை யழிப்பவன், பாபபீரு, பிர ஸித்தன், பிரஸித்தர்களுக்கு வேண்டியவன் தனம், காந்தி, ஸ்நேஹிதன், கீர்த்தி, புத்ரன் இவைகளையுடையவன்.

7. **துஷ்க்ருதி** யோகத்தில் ஜனித்தவன் பத்னி வியோக முள்ளவன், பரஸ்த்ரீரதன், பிறரறியாமல் ரஹஸ்யமாக நடப்பதான தொழிலுடையவன், ப்ரமேஹ வியாதியுடையவன், ராஜ பீடிதன், பந்துக்களால் அவமானப்படுபவன்.

8. **ஸரள** யோகத்தில் பிறந்தவன் தீர்க்காயுளுடையவன், தர்ம புத்தி யுள்ளவன், பயமற்றவன், ஐச்வர்யவான், வித்யை புத்ரன், தனங்களுடையவன் பலனுள்ள கார்யத்தைச் செய்பவன், சத்ருவை ஜயிப்பவன், குற்றமற்றவன், பிரஸித்தமான பெயருடையவன்.

9. **நிர்பாக்ய** யோகத்தில் பிறப்புடையவன் பித்ரார்ஜிதமான சொத்தை நாசம் செய்பவன், ஸ்ரீதுக்களையும் பெரியோரையும் இழித்துரைப்பவன், தர்ம மற்றவன், பழைமையானதும் ஜீர்ண மானதுமான ஆடையை யணிபவன், தரித்ரன், அதிக துக்கங்களை யுடையவன்.

10. **நய** யோகத்தில் ஜனித்தவன் மிக சிரமப்பட்டும் ப்ரயோஜனமில்லாதவன், தாழ்த்தப்பட்டவன், த்ரோஹி, தன்

வயிறு வளர்ப்பதிலேயே நோக்கமுள்ளவன், வெளி தேசத் திலேயே ஸஞ்சரிப்பவன்.

11. **நந்தி** யோகத்தில் பிறந்தவன் கடனாளி, உக்ரன், பரம தரித்திரன், காதில் நோயுடையவன், உடன் பிறந்தானிடத்தில் ஸ்நேஹமில்லாதவன், கெட்ட கார்யத்தில் ப்ரவ்ருத்தி யில்லாத வன், ரஸமில்லாமல் பேசுபவன். அடிமைப்பட்டவன்.

12. **விமல** யோகத்தில் பிறப்புள்ளவன் குறைந்த செலவு டையவன், அதிகம் தனத்தைச் சேர்ப்பவன், எல்லோரிட மிருந்தும் ஸௌகர்யத்தை யடைபவன், சுசி, ஸ்வதந்த்ரன், கொண்டாடத்தக்க பெருமையை யுடையவன், நற்குணங்களால் ப்ரஸித்தி யடைந்தவன்.

8-6-12-க்குடையவர்கள் பலமடைந்து கேந்த்ர த்ரிகோணங் களை யடைந்திருப்பதுடன் 1-10-4-9-க்கு அதிபதிகள் 6-8-12-லிருந்து பலமற்றவர்களாகவோ காந்தியற்றவர்களாகவோ இருந்தாலும் அதுவும் **நபோ**யோகமெனச் சொல்லப்படும். 6-8-12-க்கு அதிபர்கள் பலமில்லாமலும் கேந்த்ரத்ரிகோணங்களை யடையா மலும் 1-4-9-10-க்கு அதிபர்கள் 6-8-12-ல் இல்லாமல் பலத்துடன் காந்தியுடன் கூடியிருந்தால் யோகவானாகவும், தனவானாகவும், அரசனாகவும், சுகமுள்ளவனாகவும், தார்மிகனாகவுமாவான்.

இவை தவிர இன்னும் சில யோகங்களும் மேற் குறிப்பிட்ட யோகங்களை சிறிது மாறுபட்டும் சில தமிழ்ப் புஸ்தகங்களில் காணப்படுகின்றன. அவைகளில் அநேகம் அனுபவத்துக்கும் விரோதமாக விருக்கின்றன. ஆகவே அவைகள் இங்கு விடப் பட்டன.

ஸ்த்ரீ ஜாதகம்.

புருஷஜாதகங்களுக்கு என்னென்ன பாவம் பார்க்கப்படுகி றதோ; அந்த பாவமெல்லாம் பெண் ஜாதகங்களிலும் பார்த்துக் கொள்ளவேணும். ஆனால், லக்நத்தால் தேக ஸௌந்தர்யம், 4 ஆமிடத்தால் பர்த்ரு ஸுகம், பாதிவ்ரத்யம், 7 ஆமிடத்தால் பர்த்தா, ஸௌபாக்யம், 8 ஆமிடத்தால் மாங்கல்யம், 9 ஆமிடத் தால் புத்ரர்கள்—இவைகளின் நன்மை, தீமை கவனிக்கத் தக்கவை.

ஜன்ம லக்னம் சந்திரலக்னம் இவை யிரண்டும் விருஷபம், கடகம், கன்னி, விருச்சிகம், மகரம், மீனம் இவைகளில் ஒன்று யிருந்து அவைகளுக்கு விருத்தியுள்ள சந்திரன், பாபிகளுடன் கூடாத புதன், குரு, சுக்கிரன் இவர்களுடைய சேர்க்கையாவது பார்வையாவது இருந்தால் அந்தப்பெண்ணுக்கு நல்ல பர்த்தா, நல்ல புத்திரர்கள், ஆபரணம், ஸம்பத்து இவைகள் கிடைக்கும். ஜன்மலக்னம், சந்திரலக்னம் இரண்டும் மேஷம், மிதுனம், சிம்மம், துலாம், தனுசு, கும்பம் இவைகளில் ஒன்றுயிருந்து அவை களுக்கு க்ஷீணசந்திரன், செவ்வாய், பாபிகளுடன் கூடிய புதன், சனி இவர்களுடைய சேர்க்கையாவது பார்வையாவது இருந்தால் அந்தப் பெண்ணுக்கு ஆண்ஸ்வபாவம், கோணலான புத்தி, புருஷ னுக்கு அடங்காமை, கெட்ட எண்ணம் ஆகிய இவைகள் உண்டா கும்.

ஜன்மலக்நத்துக்கு 7 ஆமிடம் சுபக்ஷேத்ரமாயும், சுபாம்சமா யும், சுபக்ரகங்களின் சேர்க்கை அல்லது பார்வைகளுடன் கூடிய தாயுமிருந்தால், அந்தப்பெண்ணுக்கு அழகு, வித்யை, கீர்த்தி, ஸம்பத்து இவைகளையுடைய புருஷன் பர்த்தாவாக வாய்ப்பான், ஏழாமிடம் க்ரூர க்ஷேத்ரமாயும், க்ரூராம்சமாயும், க்ரூர க்ரஹங் களின் சேர்க்கை அல்லது பார்வை இவைகளுடன் கூடியதாயு மிருந்தால், அழகில்லாதவனையும், மூடனையும், கபடனையும், பணமில் லாதவனையுமுள்ள புருஷன் வாய்ப்பான், அல்லது ஆண், பெண் களுக்குப் பிரிவும் உண்டாகும். 7 ஆமிடத்தில் பாபிகளிருந்தால் பர்த்ரு நாசமும், சுபக்ரகங்களும் பாபிகளும் கலந்திருந்தால் முன் ஒரு புருஷனுக்கு நிச்சயிக்கப்பட்டுப் பிறகு வேறொரு புருஷனுக்கு பார்யையாக அப்பெண் ஆவாள். 8 ஆமிடத்தில் பாபக்ரகங் களிருந்தால் பர்த்ரு மரணமும், 2 ஆமிடத்தில் பாபக்ரகங்களிருந் தால் அந்தப் பெண்ணுக்கு மரணமும் உண்டாகும்.

ஜன்மலக்நத்துக்கு 9 ஆமிடம் விருஷபம், சிம்மம், கன்னி, விருச்சிகம் இவைகளாகி அதில் சந்திரன் இருந்தால் சுவல்ப புத்தி ரர்களை அடைவாள். 7 ஆமிடத்திலாவது 7-க்குடையவனிருக்கும் ராசியிலாவது, அவனிருக்கும் நவாம்சத்திலாவது செவ்வாய், சனி இருந்தால், அப்பெண் பகரோகமுடையவளாவாள். 4-ஆமிடத் தில் பாபிகளிருக்கில் வியபிசாரி ஆவாள். லக்னம், லக்நவாம்சம்,

சந்திரன், சுக்ரன், இவர்கள், மேஷம், விருச்சிகம், மகரம், கும்பம், என்கிற ராசிகளிலாவது ஷ அம்சத்திலாவது இருந்தாலும் வ்யபிசாரமுள்ளவளாவாள்.

7-ஆமிடம் சுபக்ஷேத்ரமாயும், சுபாம்சமாயும் இருந்தால் பெண் அழகுள்ள அல்குலையுடையவளும், மாங்கல்யமுள்ளவளு மாவாள். ஜன்மலக்னம், சந்திரன், 4-ஆமிடம் இவைகளுக்கு சுப ஸம்பந்தமேற்படில் அப்பெண் பதிவ்ருதையாயும், குணவதியாயும் ஆவாள். 1, 5, 9 ஆமிடங்களில் ஸௌம்யக்ரஹங்களிருந்தால் சுகம், புத்திரர்கள், சம்பத்து, குணம், இவைகளையுடையவளா வாள். ஷ ஸ்தானங்களில் பலமில்லாதக்ரூரக்ரஹங்களிருந்தால் மலடி அல்லது ம்ருதபுத்ரையாக ஆவாள்.

சந்திரன் மேஷம் அல்லது விருச்சிகராசியில் செவ்வாய் த்ரிம் சாம்சம் பெறில் கெட்ட தாசியாயும், சனி த்ரிம்சாம்சம் பெறில் வ்யபிசாரியாயும், குரு த்ரிம்சாம்சம் பெறில் கல்லோழுக்கம், ஸௌபாக்யமுடையவளாயும், புதனுடைய த்ரிம்சாம்சம் பெறில் மாயையுடையவளாயும் சுக்ர த்ரிம்சாம்சம் பெறில் தூஷிப்பவளா யும் ஆவாள்.

சந்திரன் விருஷபம் அல்லது துலா ராசியில் செவ்வாய் த்ரிம் சாம்சம் பெறில் மிக தூஷணை செய்பவளாயும், சனி த்ரிம்சாம்சம் பெறில் பர புருஷனை அடைபவளாயும், குரு த்ரிம்சாம்சம் பெறில் எல்லோராலும் பூஜிக்கப்படுபவளாயும், புத த்ரிம்சாம்சம் பெறில் நற்புத்தியுள்ளவளாயும், சுக்ர த்ரிம்சாம்சம் பெறில் ப்ரஸித்தி பெற்றவளாயும் ஆவாள்.

சந்திரன் மிதுனம் அல்லது கன்யா ராசியில் செவ்வாய் த்ரிம் சாம்சம் பெறில் கபடமுள்ளவளாயும், சனி த்ரிம்சாம்சம் பெறில் பேடியாயும், குரு த்ரிம்சாம்சம் பெறில் பதிவ்ரதையாயும், புத த்ரிம்சாம்சம் பெறில் நற்குணமுள்ளவளாயும், சுக்ர த்ரிம்சாம்சம் பெறில் உத்ஸாகமுடையவளாயும் ஆவாள்.

சந்திரன் கடகராசியில், செவ்வாய் த்ரிம்சாம்சம் பெறில் தன் இச்சைப்படி நிற்பவளாயும், சனி த்ரிம்சாம்சம் பெறில் புருஷனைக் கொல்பவளாயும், குரு த்ரிம்சாம்சம் பெறில் மிகப் புகழப்பட்ட

குணங்களையுடையவளாயும், புதத்ரிம்சாம்சம் பெறில் தொழிலாளியாயும், சுக்ரத்ரிம்சாம்சம் பெறில் நல்நடத்தையுடையவளாயும் ஆவாள்.

சந்திரன் தனுசு அல்லது மீனராசியில் செவ்வாய் த்ரிம்சாம்சம் பெறில் நற் குணமுடையவளாயும், சனி த்ரிம்சாம்சம் பெறில் வைராக்யமுடையவளாயும், குரு த்ரிம்சாம்சம் பெறில் மிக குணமுள்ளவளாயும், புதத்ரிம்சாம்சம் பெறில் சிற்பமறிந்தவளாயும், சுக்ரத்ரிம்சாம்சம்பெறில் மிகப் பதிவ்ரதையாயும் ஆவாள்.

சந்திரன் மகரம் அல்லது கும்பராசியில் செவ்வாய் த்ரிம்சாம்சம் பெறில் தாசியாயும், சனி த்ரிம்சாம்சம் பெறில் வேறு புருஷனிடம் ஆசையுள்ளவளாயும், குரு த்ரிம்சாம்சம் பெறில் பர்த்தாவிடமே ப்ரீதியுள்ளவளாயும், புதத்ரிம்சாம்சம் பெறில் கெட்டவளாயும், சுக்ரத்ரிம்சாம்சம் பெறில் மக்கள் பேறில்லாதவளாயும், ஆவாள்.

சந்திரன் சிம்மராசியில் செவ்வாய் த்ரிம்சாம்சம் பெறில் துர்பாஷணம் செய்பவளாயும், சனித்ரிம்சாம்சம் பெறில் கெட்டநடத்தை யுடையவளாயும், குரு த்ரிம்சாம்சம் பெறில் ராஜபத்னியாயும், புதத்ரிம்சாம்சம் பெறில் புருஷநடத்தையுள்ளவளாயும், சுக்ரத்ரிம்சாம்சம்பெறில், பரபுருஷனிடம் இச்சையுள்ளவளாயும் ஆவாள்.

சந்திரன் இருக்கும் ராசி, த்ரிம்சாம்சங்களைக்கொண்டு மேற்கண்டவிதம் பலம் சொல்லவும். இதேவிதமாக இலக்நம், அதின் த்ரிம்சாம்சங்களைக்கொண்டு மேற்கண்டவிதம் பலம் சொல்லவும்.

ஆக மேற் காட்டியபடி இலக்நம், சந்திரன்—இவையிரண்டின் பலாபலங்களைக்கொண்டு பலனை நிச்சயிக்கவும்.

லக்னம் சந்த்ரலக்னம் இவைகள் இரட்டை ராசியாயின் தன் ஸ்வபாவத்திலிருப்பாள். சுபர்களால் பார்க்கப்பட நன்னடத்தையுடையவளாவாள். ஒற்றை ராசியாயின் புருஷ ஸ்வபாவ முற்றவளாவள். பாபக்ரஹங்களின் சேர்க்கை அல்லது பார்வை பெற்றால் துர்நடத்தையுடையவளாவாள்.

சனி சுக்ரன் ஒருவர் ஸ்வாம்சத்தில் மற்றவராக மாறியிருந்து பார்த்துக்கொண்டாலும் விருஷபம் துலாம் லக்னமாகி, கும்பாம்சமாக விருந்தாலும். இவைகளில் பிறந்தவள் க்ருத்ரிம சுகத்தால் காமத்தைத் தணித்துக் கொள்வாள்.

ஜன்மம் அல்லது சந்த்ர லக்னத்துக்கு ஏழில் ஒருவருமில்லாமல் வலுவில்லாததாயும் சுப க்ரஹ வீக்ஷணமுமில்லாததாயுமானால் கணவன் கெட்டவனுவான். புதன் சனியிருக்க புருஷன் நபும்ஸகனுவான். ஏழாமிடம் சராசியானால் புருஷன் வெளியிலேயே ஸஞ்சரிப்பவனுவான். சூரியன் ஏழிலிருக்க புருஷனால் விலக்கப்பட்டவளாவாள். செவ்வாய் ஏழிலிருக்க விதவையாவாள். பாப வீக்ஷணம் பெற்ற சனி ஏழிலிருக்க கல்யாணம் செய்யுமுன் விதவையாவாள். பாபிகள் ஏழிலிருக்க விதவையாவாள். சுபர்களும் பாபிகளுமிருக்க இரண்டாவது முறையாகக் கல்யாணம் செய்பவளாவாள். வலுவில்லாத பாப க்ரஹம் ஏழிலிருந்து சுப க்ரஹங்களால் பார்க்கப்பட பர்த்தாவால் விலக்கப்படுவாள். சுக்ரன் செவ்வாய் ஒருவர் அம்சத்தில் ஒருவர் மாறியிருக்க பர புருஷனிடம் பற்றுள்ளவளாவாள். சந்த்ரனுடன் சுக்ரன் செவ்வாய் ஏழிலிருக்க புருஷன் அனுமதியுடன் பர புருஷ ஸம்பந்தமுள்ளவளாவாள்.

மகரம் கும்பம் மேஷம் விருச்சிகம் லக்னமாகி சந்த்ரன் சுக்ரன் சேர்ந்து பாபிகளால் பார்க்கப்பட தாயாருடன் வ்யபிசாரியாவாள். உதயமான அம்சம் செவ்வாயினுடையதாக ஆகி, சனி பார்க்க பெண் குறியில் வியாதி உண்டு. உதயாம்சம் சுபாம்சமானால் அழகுள்ள யோனி யுடையவள், புருஷனுக்கு ப்ரியை.

லக்னம் அல்லது ராசிக்கு ஏழாமிடம் சனியினுடையதாக ஆனால் கணவன் மூர்க்கனுகவும் வயது முதிர்ந்தவனுகவுமாவான். செவ்வாயுடையதானால் கணவன் கோபியாகவும் பற்றுதலுள்ளவனுகவுமாவான். சுக்ரனதானால் அழகுள்ளவனுகவும் பாக்யவானுகவுமிருப்பான். புதனுடையதானால் கணவன் படித்தவன். சந்த்ரனுடையதானால் காமவசப்பட்டவன். குருவினுடையதானால் ஜிதேந்த்ரியனுகவும் குணவானுகவுமாவான். சூர்யனுடையதானால் ம்ருதுவான இயல்பை யுடையவன், அதிக வேலை செய்பவனுவான்.

ஜன்ம லக்னத்தில் சந்த்ரன் சுக்ரனிருக்க பௌமை யுள்ளவள், சுஜி, புதன் சந்த்ரனிருக்க தே வாத்யங்களில் சிறந்தவள்.

சுக்ரபுதர்களிருக்க அழகுடையவள், புருஷனுக்கு ப்ரியமாயிருப்பவள். சந்த்ர சுக்ர புதர்களிருக்க அதிக தனம், மிக ஸௌக்யம், நற்குணமுடையவள். சுக்ரன் புதன் குரு இவர்களிருக்க முன் கூறிய பலனே.

கேட்ட க்ரஹம் எட்டிலிருக்க வைதவ்யம். இந்த எட்டுக் கதிபன் எந்த க்ரஹத்தின் அம்சத்திலிருப்பானோ அந்த க்ரஹத்துக்கு ஸமமான வயது. சுபர்கள் இரண்டிலிருக்க அந்த ஸ்த்ரீக்கு மரணம். சந்த்ரன் கனனி, விருச்சிகம் வ்ருஷபம்—இவைகளிலொன்றிலிருக்க அல்ப புத்ரையாவள்.

சனி மத்யமமான பலத்தை யுடையவனுய் சந்த்ரன், சுக்ரன் புதன் பலமற்றவர்களாய் மற்றவர்கள் பலசாலிகளாய் ஒற்றையிராசியில் ஜனித்தால் புருஷ ஸ்வபாவமுள்ளவளாவாள். குரு, செவ்வாய், புதன், சுக்ரன் பலிஷ்டர்களாய் மற்றவைகள் முன்போலிருந்து இரட்டை ராசியிலிருக்க ப்ரஸித்தையாய் அதிகம் படித்தவளாய் வேதாந்தியுமாவாள்.

ஏழில் பாபியிருக்க ஒன்பதிலுள்ள க்ரஹத்துக்குரிய ஸந்யாஸத்தை யடைவாள்.

தாயுள்ளபிள்ளை, ஆயில்யத்தில் பிறந்த பெண்ணையும், தமயனுள்ள பிள்ளை கேட்டையில் பிறந்த பெண்ணையும், தகப்பனுள்ள பிள்ளை மூலத்தில் பிறந்த பெண்ணையும், தம்பியுள்ள பிள்ளை விசாகத்தில் பிறந்த பெண்ணையும் விவாஹம் செய்யக்கூடாது.

கார்த்திகை, திருவாதிரை, பூசம், ஆயில்யம், சித்திரை, கேட்டை, மூலம், சதயம் இந்த எட்டு நக்ஷத்ரங்களில் பிறந்த பெண் மலடியாகவாவது, விதவையாகவாவது, சாகிற குழந்தைகளை யுடையவளாகவாது, புருஷனால் விலக்கப்பட்டவளாகவாவது ஆவாள்.

சந்த்ரன், லக்னாதிபதி ஸப்தமாதிபதி (7-க்குடையவன்) ஆகிய இவர்கள் 6, 8, 12 ஆமிடங்கள் தவிர மற்ற விடங்களில் சுபர்களுடன் கூட பூர்ணர்களாக அதாவது அஸ்தமனத்தை அடையாதவர்களாகவிருந்தால் பந்துக்களால் கொண்டாடத்தக்கவளாயும், புண்ய கர்மங்களில் ப்ரீதியுள்ளவளாயும், அழகுள்ளவளாயும், பாக்யவதியாயும் ஆவாள்.

8 ஆமிடம் சுபர்களின் சேர்க்கை அல்லது சுபர்களின் பார்வை பெற்றிருக்குமானால், பர்த்தாவுக்கு ப்ரியையாயும், நற்புத்ரவதியாயும், நல்லொழுக்கமுள்ளவளாயும். சுமங்கலியாயும் ஆவாள்.

சந்திரன் ஸ்த்ரீ ஜன்ம ராசிக்கு 1, 2, 4, 5, 7, 8, 9, 12-ஆமிடங்களில் இருக்கவும், அவ்விடத்தை அங்காரகன் பார்க்கும் காலம் உண்டாகும் ரஜஸ், கர்ப்பத்தைத் தரக்கூடியதாகும். மற்ற காலங்களில் உண்டாகும் ரஜஸ் நிஷ்பலமாகும்.

சந்திரன் புருஷ ஜன்ம ராசிக்கு 3, 6, 10, 11-மிடங்களில் சுபரிகங்களின் ஸம்பந்தம் பெற்று குரு த்ருஷ்டியுடன் கூடின காலத்தில் நிஷித்த காலத்தைத் தவிர்த்து ஸ்த்ரீயினிடம் புருஷன் கர்ப்பாதானம் செய்யக்கடவன்.

ராஜயோகங்கள்.

மூன்று க்ரஹங்களுக்குக் குறையாமல் உச்சஸ்தானங்களிலிருந்தால் ராஜவம்சத்தில் பிறந்தவர் ராஜயோகத்தை அடைவர் என்பது பொதுவிதி. ஜனனகாலத்தில் பாபக்ரஹங்கள் மட்டும் உச்சவீட்டிலிருந்தால் ராஜயோகமுண்டானாலும், கெட்ட கார்யங்களில் மனமுள்ளவனுவான். சுபக்ரஹங்களிருந்தால் நல்ல விஷயத்தில் பற்றுள்ளவனுகவும் இரண்டுமிருக்க இரண்டிலும் பற்றுள்ளவனுவான்.

செவ்வாய் சனி சூர்யன் குரு-இவைகளோடாவது இவைகளில் மூன்றோ, தனது உச்சஸ்தானத்திலிருந்து ஒரு க்ரஹம் லக்னத்திலிருக்க வரும் ராஜயோகங்கள் 16 விதங்களாகும்.

மேற் கூறிய செவ்வாய் சனி, சூர்யன் குரு-இவர்களில் இரு க்ரஹங்களோ அல்லது ஒரு க்ரஹமோ உச்சத்திலிருக்க சந்த்ரன் ஸ்வஸ்தானத்திலிருக்க உச்ச க்ரஹ மிருக்கும் ஸ்தானம் ஜன்ம லக்னமானால் உண்டாகும் யோகங்கள் 12.

மேற்கூறிய க்ரஹங்களில் ஒரு க்ரஹம் உச்சமாகி அந்த ஸ்தானம் லக்னமாயிருந்து சந்த்ரன் ஸ்வக்ஷேத்ரம் பெற்றால் ஏற்படும் யோகங்கள் 4.

ஜன்ம லக்னம் வர்கோத்தமம் பெற்று சந்த்ரனைத் தவிர நான்கு முதலிய க்ரஹங்களால் பார்க்கப்படில் ஏற்படும் ராஜ யோகங்கள் 22.

அல்லது சந்த்ரன் வர்க்கோத்தமாட்சம் பெற்று நான்கு முத லிய க்ரஹங்களால் பார்க்க ஏற்படும் யோகங்கள் 22.

சனி கும்பத்திலும், ஸூர்யன் மேஷத்திலும், சந்த்ரன் வ்ருஷ பத்திலும், இவைகளில் ஒரு க்ரஹம் லக்னத்திலிருந்து சந்த்ரன் குரு செவ்வாய் மிதுனம், சிம்மம் விருச்சிகத்திலிருக்க ராஜயோக மாகும்.

சூர்யன், புதன் கன்யாராசியிலிருக்க சுக்ரனுடன் செவ்வாய், குரு துலாம் மேஷம் கடகம் இவைகளிலிருக்க ராஜயோக மேற் படுகிறது.

செவ்வாய் மகரத்திலும் சூரியன் சந்திரன் தனுஸிலும், சனி யுடன் கூடிய லக்னமானாலும் (அல்லது மகர-கும்பங்கள் லக்ன மானாலும்), செவ்வாய் மகரத்திலிருந்து அதுவே லக்னமாகி சந் திரனுடன் கூடினாலும், சந்திரனுடன் சனி ஏழிலும் குரு தனுஸி லும், சூர்யன் மேஷத்திலு மிருக்க மேஷம் லக்னமானாலும் ராஜ யோக முண்டாகும்.

லக்னம் வ்ருஷபமாகி அதில் சந்த்ரனிருக்க சூர்யன் குரு சனி 4, 7, 10-ஸ்தானங்களிலிருக்கவும், மகரம் லக்னமாகி சனியுமிருந்து சந்த்ரன் முதலிய க்ரஹங்கள் 3, 6, 9, 12 ஸ்தானங் களிலிருக்கவும் ராஜ யோக மேற்படும்.

சந்த்ரனும் குருவும் தனுஸிலும், செவ்வாய் மகரத்திலும், புதன் சுக்ரன் லக்னத்திலுமிருக்கவும், செவ்வாய் சனி ஐந்திலிரு க்க குரு சந்த்ரன் சுக்ரன் நாலிலும், புதன் கன்னியிலிருந்து, அதுவே லக்னமாகவுமிருக்க ராஜயோக மேற்படுகிறது.

மீனம் லக்னமாகி அதில் சந்திரனிருக்க சனி செவ்வாய் சூர் யன், கும்பம் மகரம் இவைகளிலிருந்தாலும், மேஷம் லக்னமாகி செவ்வாயுமதிலிருக்க, குரு கடகத்திலிருந்தாலும், குரு கடகத்தி லிருந்து அதுவே லக்னமாகி மேஷத்தில் செவ்வாயிருந்தாலும் ராஜ யோகமாகும்.

கடகம் லக்னமாகி குரு லக்னத்திலிருக்க, சந்த்ரன் சுக்ரன் புதன் பதினொன்றிலிருக்க, சூரியன் மேஷத்திலிருக்க ராஜயோகம் ஏற்படுகிறது.

மகரம் லக்னமாகி அதில் சனியுமிருக்க மேஷம் கடகம் சிம்மம் இவைகளில் அந்தந்த ஸ்தானாதிபதியிருக்க, புதன் மிதுனத்தி லும், சுக்ரன் துலாத்திலு மிருந்தால் ராஜயோக மேற்படுகிறது.

புதன் தன் உச்சஸ்தானத்திலும், சுக்ரன் பத்திலும், குரு சந்திரர்கள் ஏழிலும், சனி செவ்வாய் ஐந்திலு மிருக்க ஜனிப்பவன் அரசனுவான்.

மூன்று க்ரஹங்கள் முதலியன பலவான்களாயும், உச்சம் ஸ்வக்ஷேத்ரம், த்ரிகோணமிவைகளிலிருக்க ராஜ குலத்தில் பிறந்த வர்கள் அரசராவார்கள். மேலே கூறியபடி ஐந்து முதலிய க்ர ஹங்களிருக்க எக்குலத்தில் பிறந்தாலும் அரசனுவான். பலவான் களாயில்லாவிடில் ராஜாவாக மாட்டான். பணக்காரனுவான்.

சூரியன் பாதி உதிக்கும் காலத்தில் மேஷமாகிற லக்னத்தில் சந்த்ரனும், செவ்வாய் தன் உச்சத்திலும், சனி கும்பத்திலும் குரு தனுஸிலுமிருக்க ராஜயோகமாகும்.

லக்னத்துக்கு நான்காமிடமாக ஆன விருஷபம் துலாம் என்கிற தன் ஸ்தானத்தில் சுக்ரனிருக்க சந்த்ரன் ஒன்பதிலும், சூரியன் செவ்வாய் புதன் குரு மூன்று லக்னம், பதினொன்றிலு மிருக்க ராஜயோகம்.

பலவானான புதன் லக்னத்திலிருக்க சுபர் பலமடைந்து ஒன்பதிலிருக்க மற்றவர்கள் 9, 2, 3, 6, 10, 11-மிடங்களிலிருக்கப் பிறந்தவன் பூபாலனுவான்

விருஷபம் லக்னமாகி சந்த்ரன், குரு, சனி, சூரியன், செவ்வாய் புதன், சுக்ரன், லக்னம், 2, 6, 11-களிலிருக்கப் பிறப்பவன் அரசனுவான்.

சந்த்ரன் பத்திலும், சனி பதினொன்றிலும், குரு லக்னத்தி லும், புதன் செவ்வாய் இரண்டிலும், சுக்ரன், சூர்யன் நாலிலிருக் கப் பிறப்பவன் அரசனுவான்.

செவ்வாயுடன், சனியும், சந்த்ரன், குரு, சுக்ரன், சூரியன், புதன் இவர்கள் க்ரமமாக 1, 4, 7, 9, 10, 11-மிடங்களிலிருக்க ராஜயோகமேற்படுகிறது.

ஒரு க்ரஹம் பூர்ண ப்ரகாசத்துடனும், 6-8-12 தவிர மற்ற விடங்களிலிருந்து வக்ரமடைந்தாலும் நீசமடைந்தாலும் அரசனுக்கு ஒப்பாவான். மேலே சொல்லியபடி இரண்டு அல்லது மூன்று க்ரஹங்களிலிருக்க, நல்ல ராசி அம்சங்களிலிருந்தால் அரசனுவான். பல க்ரஹங்கள் முன் சொன்னபடி யிருக்க சக்ரவர்த்தியாவான்.

லக்னமோ சந்த்ரனோ வர்க்கோத்தமாம்சம் பெற்று சந்த்ரனைத் தவிர நான்கு க்ரஹங்களால் பார்க்கப்பட இழிகுலத்தில் பிறந்தவனுயினும் அரசனுவான்.

லக்னாதிபதி கேந்த்ரத்திலாவது, ஒன்பதிலாவது வர்க்கோத்தமாம்சம் பெற்று ஒன்பதாமிடத்ததிபதி உச்சஸ்தானம் அல்லது ஸ்வஸ்தானம் அடையப் பெறின் அரசனுவான்.

சந்த்ரன் உச்சம் ஸ்வக்ஷேத்ரம் பெற்று பூர்ணனுல் ஈழ்க் குலத்தில் பிறந்தாலும் அரசனுவான்.

லக்னத்தில் சுக்ரனிருந்து மற்றெல்லா க்ரஹங்களாலும் பார்க்கப்பட்டு அச்வதி நக்ஷத்ரத்தில் பிறந்தவன் எல்லா சத்ருக்களையும் ஜயித்து அரசனுகிறன். நீச சத்ரு ஸ்தானங்களல்லாத இரண்டாமிடத்திலிருக்கும் லக்னாதிபதி சுக்ரனுடன் சேர்ந்து பலவானுயிருந்தால் ராஜயோகமுண்டு.

மேஷம், ஸிம்மம், தனுஸ்-இவைகளிலொன்று லக்னமாகி அதில் செவ்வாயிருந்து மித்ரக்ரஹத்தால் பார்க்கப்பட அரசனுவான். பத்துக்குடையவன் ஒன்பதிலும், ஒன்பதுக்கதிபதி பத்திலுமிருந்தால் அனைவராலும் புகழப்படுவான்.

சூரியன் சந்த்ரன் தனுஸின் முதல் பாதியிலும், செவ்வாய் உச்சத்திலுமிருக்கப் பிறந்தவன் பூபதியாவான். இவனுடைய சத்ருக்கள் அஞ்சி நடுங்குவர்கள்.

பூர்ணசந்த்ரன் சூரியன் நவாம்சத்திலும், சுபர்கள் பாபிகளின் சேர்க்கையில்லாமல் கேந்த்ரத்திலிருக்க அரசனுவான்.

மூன்று க்ரஹங்கள் நீசவர்க்கம் சத்ருவர்க்கம் அடையாமலும், பூர்ணசந்த்ரன் தன் அம்சம் பெற்று சுபவீக்ஷணமும் அடைந்தால் சத்ருவை வெல்லும் அரசனுவான்.

சந்த்ரன் உத்தமாம்சமடைந்து பலவானுன க்ரஹத்தால் பார்வை பெற்று லக்னத்தில் பாபியுமில்லாதிருந்தால் சக்ரவர்த்தியாவான்.

குரு, புதன், சுக்ரன், சந்த்ரன்-இவர்களிலொருவர் தோஷமில்லாமல், மித்ரர்களின் பார்வை அல்லது சேர்க்கையை யடைந்து ஒன்பதிலிருக்க இந்த யோகமுண்டாகிறது.

சுக்ரன் குரு, சனி மீனத்திலும், பூர்ணசந்த்ரன் உச்சத்திலும் செவ்வாயினுல் சூரியன் பார்க்கப்பட்டும், மேஷம் ஜன்ம லக்னமாகவுமானுல் ராஜயோக மேற்படுகிறது.

கடகம் 10 மிடமாகி சந்த்ரனிருக்க, அஸ்தமனமாகாத சுபர்கள் 11-ல் இருந்து நீசசத்ருஸ்தானத்தை அடைந்தாலும். அச்சுபர்களே 6-8 ஸ்தானங்களிலிருந்தாலும் பரமோச்சம் அல்லது கேந்த்ரத்திலிருந்தாலும் இரவில் பிறந்தவன் த்ரிலோகாதிபதியாவான்.

பூர்ண சந்த்ரன் வர்க்கோத்தமாம்சத்திலிருந்தாலும் இந்த யோகமேற்படுகிறது.

குரு சந்த்ரர்கள் கேந்த்ரம் பெற்று சுக்ரன் பார்க்க மற்ற க்ரஹமொன்றும் நீசமடையாமலுமிருந்தால் ராஜ யோகம் ஏற்படுகிறது.

சந்த்ரன் ஜலராசிகளின் நவாம்சத்தை யடைந்து லக்னத்தில் அல்லது தன் ஷட்வர்க்கம் பெற்றால் நன்மை புரியும் அரசனுவான்.

சுக்ரனை குரு பார்க்க அரசவம்சத்திலுதித்தவன் அரசனுவான். குரு மகரம் தவிர மற்ற ராசிகளிலிருந்து அதுவே லக்னமானுல் அரசனுவான். லக்னாதிபன் பலத்துடன் கேந்த்ரத்திலிருந்தாலும் இந்த யோக மேற்படுகிறது. இதே யோகத்தில் புதன் குருவால் பார்க்கப்பட பிற அரசர்கள் ஏவல் செய்வார்கள்.

சந்த்ரன் அதிமித்ராம்சம் பெற்று சுக்ரனால் பார்க்கப்பட ஐச்வர்யவானுவான். சந்த்ரன் இப்படியிருந்து குருவால் பார்க்கப் பட சக்ரவர்த்தியாவான்.

லக்னாதிபதிக்கு 3-6-11-ல் பாபிகளிருப்பது ஒரு ராஜயோக மாகும். 2-ல் செவ்வாய் புதர்களிருப்பதும், லக்னத்துக்கு 4-ல் சூரியன் சுக்ரன் இருப்பதும், 10, 11 லக்னங்களிலிருப்பதும் ராஜ யோகங்களாகும்.

11-9-2 இவ்விடங்களுக்குரியவர்களில் ஒருவர் சந்த்ரனுக்குக் கேந்த்ரத்திலிருக்க, 2-5-11-க்குடையவர் குருவானால் சக்ரவர்த்தியாவான்.

நீசபங்க ராஜயோகம்.

எந்த க்ரஹம் நீச ஸ்தானத்திலுள்ளதோ, அந்த நீச ராசிக்கு அதிபனும், அந்த க்ரஹத்தின் உச்ச ராசிக்கு அதிபதியும், சந்த்ர லக்னத்துக்கு கேந்த்ரத்திலானால் தர்மபுத்தியுள்ள அரசனுவான்.

ஒரு க்ரஹம் நீசமடைந்து, அந்த நீசராசியின் அதிபதி உச்சத்தில் அல்லது கேந்த்ரத்திலிருக்க அரசனுவான்.

ஒரு க்ரஹம் நீசமாக எந்த இராசியிலிருக்கின்றதோ அந்த ராசியதிபதியால் அந்த க்ரஹமோ பார்க்கப்பட்டால் புகழ் மிருந்த அரசனுவான். நீச க்ரஹம் சுப ஸ்தானத்திலிருந்து அந்த ராசி யதிபதியால் பார்க்கப்பட பூபதியாவான.

நீசத்தை அடைந்த க்ரஹமோ, அந்த ஸ்தானாதிபதியோ, நீச க்ரஹத்தின் உச்சஸ்தானத்தின அதிபதியோ, லக்னம் அல்லது சந்த்ரனுக்கு கேந்த்ரத்திலிருந்தால் மிருந்த ஐச்வர்யமுடைய வனுகவு மிருப்பான்.

நீசத்தை யடைந்த க்ரஹத்தின் நீசஸ்தானம் உச்சஸ்தானம் இவைகளுக்கு அதிபதிகளிருவருமோ அல்லது ஒருவரோ கேந்த் ரத்திலிருக்க பூமிபதியாவான்.

பத்து, லக்னம்—இவைகளிலிருக்கும் க்ரஹத்தினுடைய அந்தர்தசையில் ராஜ்ய லாபம் கிடைக்கும். அல்லது 10, லக்னம் இவைகளிலிருக்கும் க்ரஹங்களில் எது அதிக பலம் பெற்றதோ அதனுடைய தசையிலும் ராஜ்ய லாபம் கிடைக்கும். சத்ரு நீச

ராசிகளை யடைந்த க்ரஹத்தின் தசாந்தர்தசைகளில் வேறு அரசனை அண்டி வாழ்வான்.

குரு சுக்ரன் புதன் லக்னத்திலிருக்க சனி ஏழிலும், சூரியன் பத்திலுமிருக்கப் பிறந்தவன் போகியாக இருப்பான். சுபர்கள், பலங்களுடன் கூடிய கேந்த்ரங்களாலும், பாபிகள் பாப ஸ்தானங் களிலிருப்பதாலும். வேடன் திருடன் முதலியவர்களுக்கு அதிபதி யாவான்.

ஸந்யாஸ யோகம்.

பத்தாமிடத்ததிபன் த்ரிகோணம் அல்லது கேந்த்ரத்தி லிருக்கும் நான்கு க்ரஹங்களுடன் சேர்ந்தால் அந்த ஜாதகனுக்கு மோக்ஷமுண்டு. லக்னத்தின் கடைசி நவாம்சம் சுபாம்சமானாலும், குரு கேந்த்ரம் அல்லது த்ரிகோணத்திலிருந்தாலும் மோக்ஷ மடைவான்.

நான்கு க்ரஹங்கள் சேர்ந்து ஒரேராசியில் இருந்தால் அவர் களுள் யார் பலவானை; அந்த க்ரஹத்தைக் கொண்டும், பத்துக்கதிபதி அந்த நான்கு க்ரஹங்களுடன் கூடினால் அதைக் கொண்டும் அந்தந்த க்ரஹங்களுக்குத் தக்கபடி ஸன்யாஸ யோகத்தைக் கூறுகின்றனர்.

சனியின நிரேக்காணத்தில் சந்திரன் நின்று செவ்வாய் சனி களால் பார்க்கப்பட தபஸ்வியாவான். செவ்வாயின் நவாம்சத் தில் சந்திரன் வலித்து சனி பார்க்க, சந்த்ரன் வலிக்கும் நவாம் சாதிபனுக்குத் தக்க ஸன்யாஸ யோகத்தை அளிப்பான்.

ஜனன காலத்தில் லக்னாதிபதியை சனிபார்த்து, மற்றவர்கள் பார்க்காமலிருக்க லக்னாதிபதிக்குகந்த ஸன்யாஸம் பெறுவான்.

க்ரஹங்களுக்குரிய ஸன்யாஸம்.

சூரியன்: யோகிகளுள் தலைவன், நிஷ்டைபெறுபவன்.
சந்த்ரன்: எப்போதும் தீர்த்தாடனம் செய்பவன்.
செவ்வாய்: துர்மந்த்ரங்களை அப்யஸிப்பவன், பௌத்தன்.
புதன்: தன்மதத்தைக் கடந்து அன்யமதத்தை அடைபவன்.
ஒருதண்டமுள்ள ஸன்யாஸம்.
குரு: வேதாந்தி, உத்தம ஸன்யாஸி.
சுக்ரன்: வைதிக தர்மங்களை விட்டவன்.
சனி: பதிதன், பாஷண்டி, நக்னன்.

பலமில்லாத க்ஷீணசந்த்ரனை லக்னாதிபதி பார்த்தால் தவம் புரிபவனாகவும், துக்கியாகவும், பிரிவினால் தபிப்பவனாகவும், செல்வம் இஷ்டஜனங்களால் விடுபடுபவனாகவும், கஷ்டத்தினால் அன்னம் முதலியவைகளை ஸம்பாதிப்பவனாகவுமாவான்.

இந்த ஸந்யாஸ யோகத்தில் ராஜயோக மேற்பட்டால் கெட்ட பலன்களை அழித்து பூபதியாகவும், நிஷ்டனாகவும், நல்லொழுக்க முள்ளவனாகவும், மற்றவர்களால் வணங்கப்படுபவனாகவுமாவான்.

பத்தாமிடத்ததிபதி கேந்த்ரம் அல்லது த்ரிகோணத்தில் வலிக்கும் நான்கு க்ரஹங்களுடன் கூடியிருந்தாலும், சுபஸ்தானத்தில் மூன்று க்ரஹங்கள் பலிஷ்டர்களாயிருந்தாலும், ஸன்யாஸ யோக முண்டாகும். யோகத்தை யளிக்கும் க்ரஹங்களில் சுபர்கள் அதிகமாயிருந்து சுப ஸ்தானத்திலிருந்தால் கிடைக்கும் யோகம் கொண்டாடத் தக்கதாயும், அசுபர்களாயின் இழிவாகவுமிருக்கும்.

சந்த்ரனிருக்கும் ராசியதிபன் மற்ற க்ரஹங்களால் பார்க்கப் படாமல் சனியைப் பார்த்தாலும், பலிஷ்டனான சனி பலமற்ற சந்த்ரனிருக்கும் ராசியதிபனைப் பார்த்தாலும், சந்த்ரன் எந்த ராசியானாலும் சனி த்ரேக்காணத்திலிருந்து, அந்த சனி த்ரேக்காணம் செவ்வாய் சனி நவாம்சமாய் மற்ற க்ரஹங்களால் பார்க்கப்படாமல் சனியால் பார்க்கப்பட்டாலும் ஸன்யாஸத்தை யடைவான்.

குரு, சந்த்ரன், லக்னம் சனியால் பார்க்கப்பட ஒன்பதில் குரு விருந்து ஏதேனு மொரு ராஜயோகமுமேற்பட சாஸ்த்ர கர்த்தாவாவான்.

சனி ஒன்பதிலிருந்து மற்ற க்ரஹங்களால் பார்க்கப்படாமல் ராஜயோக மேற்பட ஸன்யாஸியாகவும் அரசனாகவுமாவான்.

த்வாதச பாவ பலன்கள்.

பாவபலன்களை ஆராயும்போது பாவத்திலிருக்கும் க்ரஹங்களாலும், அதைப்பார்க்கும் க்ரஹங்களாலும், பாவத்துக் கதிபதிகளாலும், பாவ காரகர்களாலும் கவனிக்க வேண்டும் பொதுவாக கவனிக்கவேண்டிய முறைகள் முதலியன கீழ் விவரிக்கப் பட்டிருக்கின்றது.

ஒவ்வொருபாவமும் தனது பாவாதிபதி, சுபக்ரஹம் இவர்களுடன் சேர்ந்தோ, பார்க்கப்பட்டோ இருக்குமானால் அந்த பாவத்துக்கு நல்ல பலனுண்டு. பாபிகளுடன் சேர்ந்தாலும் பார்த்தாலும் பாவம் நாசமாகும். சுபர்களும் பாபிகளும் சேர்ந்தாலும், பார்த்துக்கொண்டாலும் பலனும் சமமாயிருக்கும். நீசம் அல்லது சத்ரு க்ரஹத்தை அடைந்ததான க்ரஹம் பாவ பலனை யளிக்காது. மித்ரக்ஷேத்ரம், உச்ச ஸ்தானத்தை அடைந்தக்ரஹத்தால் பாவ விருத்தி ஏற்படும். பாவத்திற்கு 6, 8, 12-ல் பாபிகளிருந்தாலும் பாவேசன் 6, 8, 12-லும், 6, 8-12-க்கு அதிபதிகள் எந்த பாவத்திலிருந்தாலும் பாவம் ஸித்திக்காது. பாவத்தின் கேந்த்ரம், 2, 5, 9-சுபருடனும் அதிபதியுடனும் கூடினால் அந்த பாவத்துக்கு நன்மையுண்டு. பாபிகளிவ்விதமானால் பாவ நாசம், கலந்திருந்தால் பலமும் கலந்தே நடக்கும். யாதொரு பாவத்தில் சனி சேனுகவாவது மறைந்தாவது, சுப ஸம்பந்தம் வீக்ஷணம் பெறுமலிருந்தாவது ஏற்பட பாவநாசமேற்படும். பாவத்துக்கு அஷ்டமாதிபதி, சூரியன், சனி, குளிகன்-இவர்களில் எவன் அதிக பலம் பெற்றவனோ அவனுடைய தசையில் சரீரம், தனம் இவைகளுக்கு கஷ்டமுண்டாகும்.

முதல் பாவம்

முதல் பாவத்தினால் உருவம், நிறம், அடையாளம் (மருமுதலியன) ஸ்வபாவம், ஜாதி, வயது, சுக துக்கங்கள் முதலியவைகளை அறியவேண்டும்.

க்ரஹச்சேர்க்கையால் சொல்லப்பட்டிருக்கும் பலன் அந்தந்த க்ரஹங்களின் தசாகாலம் 3, 5, 7, 9-வது தசை, புக்தி, அந்தரமாக வரும்போதும், கோசரமும் ஒத்து வரும்போதும் பலன் உள்ளபடி நடக்கும். கோசரம் நன்றாயிருந்து தசாதிகள் கெட்டிருந்தாலும், தசாதிகள் நல்லதாயிருந்து கோசரம் கெடுதலானாலும் பூர்ணமாக நடைபெறாது. பலாபலங்களையும் கவனித்து நன்றாய் ஊஹித்துப் பலன் கண்டறியவேண்டும். இதை அப்படியே பார்த்து பலன் சரிவர நடக்கவில்லையே என்று ஏங்குதல் கூடாது.

லக்னாதிபதி தன் நவாம்சத்தில் இருந்து சுப ஸம்பந்தம் அல்லது வீக்ஷணம் ஏற்பட்டால் சரீர ஸௌக்யம். லக்னாதிபதி லக்னத்திலிருக்க சரீர ஸௌக்யம்.

லக்னாதிபதி பாபியுடன் கூடி 6-8-12 ல் இருக்க சரீரத்துக்கு சிரமம். லக்னத்தில் பாபியும், லக்னாதிபதி பலமில்லாமலுமிருந்தால் சரீர ஸௌக்யமில்லை.

சந்த்ரன் சனி மேஷத்திலிருந்தாலும், 12-க்குடையவன் 11-லும் கேந்த்ரத்திலும் வக்ரமாகவிருந்தாலும், லக்னாதிபதி லபிக்கும் விட்டுக்குடையவன் 6 8, 12-லிருந்தாலும், கன்னி, மிதுனம் விம்மம் ஜன்மலக்னமாகி சூரியன், சனி, செவ்வாயிருந்தாலும், லக்னாதிபதி சூரியன் செவ்வாய் சனியுடன் கூடினாலும், இவர்கள் க்ருஹத்திலிருந்தாலும், லக்னாதிபதி வசிக்கும் அம்சாதிபன் மிதுனம், விம்மம், கன்னியிலிருந்தாலும், இந்த ராசிகள் லக்னமாய் அதில் பாபியிருந்தாலும் சரீரம் இளைத்திருக்கும்.

சந்த்ர லக்னாதிபதி லக்னாதிபனுடன் சேர்ந்தாலும், லக்னாதிபன் ஜல ராசிகளிலிருந்து சுபருடன் சேர்ந்தாலும், ஜல க்ரஹத்தால் (சந்த்ரன்-சுக்ரன்) பார்க்கப்பட்டாலும், லக்னம் சுப ஸ்தானமாகி லக்னாதிபன் அம்சாதிபன ஜல ராசிகளிலிருந்தாலும், லக்னம் சுப க்ஷேத்ரமாய் பாபி த்ருஷ்டியில்லாமலிருந்தாலும், லக்னத்துக்கு குருவின் சேர்க்கை அல்லது த்ருஷ்டி ஏற்பட்டாலும், மிதுனம்ச மானாலும், சுபர் பலத்துடன் லக்னத்திலிருந்தாலும் சரீரம் புஷ்டியுடனிருக்கும்.

ராசிகளே லக்னம் முதல் கால புருஷனுடைய அவயவங்களாக வைத்துக்கொண்டு எந்த அவயவத்தில் நீர்க்கராசிகளும் (கன்னி, விருச்சிகம், துலாம், விம்மம்) அதிபதிகளும் சேர்ந்திருக்கிறார்களோ; அந்த அவயவம் நீண்டிருக்கும். இவ்விதமே எந்த அங்கத்தில் ஹ்ரஸ்வராசிகளும் (கடகம் மிதுனம் தனுஸ் மகரம்) இதன் அதிபதிகளுமிருக்கின்றனரோ அவ்வவயவம் குட்டையாயிருக்கும். ஹ்ரஸ்வராசியதிபதி நீர்க்கராசியிலும், நீர்க்கராசியதிபதி ஹ்ரஸ்வராசியிலுமிருந்தால் அந்தந்த அங்கங்கள் கலந்திருக்கும். ராசி சுத்தமானால் அந்த ராசிக்கு ஸமமாகவே அந்த அவயவமுமிருக்கும். புதனுக்கு ஏழில் செவ்வாயிருந்தாலும் லக்னாதிபன் நீர்க்கராசியிலானாலும் சரீரம் நீர்க்கமாயிருக்கும்.

லக்னாதிபன் 6-8-12 களில் பாபியுடன் சேர்ந்திருந்தால் சரீரகம் கெடும். 3-7-மிடங்களிலும் இவ்விதமே. புத்திமான்கள் பன்னிருபாவங்களுக்கும் அந்தந்த பாவத்துக்குத் தக்கபடி

ஊஹித்தறியவேண்டும். லக்னாதிபதி பாபியாய் லக்னத்திலிருந்தாலும், சந்த்ரன் லக்னத்திலிருந்தாலும், அதிக ரோகத்தைத் தரக்கூடும். கேந்த்ரத்திலோ த்ரிகோணத்திலோ லாப ஸ்தானத்திலோ இருக்க ரோகநிவ்ருத்தியைச் செய்வான். பலம் ஆதிபத்யம், பாபி, உச்சம், நீசம், சத்ருக்ரஹம், மித்ரக்ரஹம், சூர்யக்ரஹம், ஸ்வக்ஷேத்ரம், 6-8-12 ஸ்தானங்கள் இவைகளைக் கவனித்துப் பலன் சொல்லவேண்டும். லக்னாதிபன் குரு சுக்ரர்கள் கேந்த்ரத்திலிருப்பது சுபமாகும். கேந்த்ர த்ரிகோணங்களில் பாபிகளில் லாபமிருந்து லக்னாதிபனும் குருவும் 1-4-7-10-மிடங்களிலிருக்கப்பல சுகங்களை யனுபவித்து த்ருடகாத்ரனாக நிர்க்காயுளுடையவனுவான். லக்னாதிபதி சராசியிலிருந்து சுபக்ரஹ த்ருஷ்டியிருந்தால் தனம் தான்யம் கீர்த்தி புஷ்டி முதலியவைகளுடன் கூடுவான்.

லக்னம் ராகுவுடன் கூடி சந்த்ரத்ருஷ்டி ஏற்பட்டாலும், லக்ன நவாம்சத்தில் சனி சூரியர்களிருந்தாலும் இரட்டையாக ஜனிக்கக் கூடுமென்று சொல்லப் படுகிறது.

லக்னத்தில் சனியுடன் ராகு விருந்தாலும், லக்னம் அல்லது இருபுறத்திலும் பாப விக்ஷணமேற்பட்டாலும், குரு புத சந்த்ரர்களால் பார்க்கப்படாவிடில் கொடி கூத்தி ஜனிக்கக் கூடும்.

சூரிய சந்த்ரர்கள் ஒரு ஸ்தானத்திலோ ஒரு நவாம்சத்திலோ இருந்தால் மூன்று மாதங்களில் மூன்று தாயிகளாலும் சகோதரன், பிதாக்களாலும் போஷிக்கப்படுவான்.

லக்னாதிபதி தன் உச்சராசி, மித்ர க்ரஹம்-இவைகளின் அம்சத்திலோ தன் நவாம்சத்திலோ இருந்து சுப க்ரஹ ஸம்பந்தம் பெற்று அல்லது பார்க்கப்பட்டிருப்பது சுபம்.

பாப க்ரஹங்கள் லக்னத்திலும், 1-5-9 ல் குளிகனிருந்தாலும் லக்னத்தில் ராகுவிருந்து குளிகனுடன் சேர்ந்தாலும், லக்னாதிபதி பாபியுடன் சேர்ந்தாலும் லக்னத்தில் ராகு விருந்தாலும். ஸமாற்றம், திருடர் பய முண்டாகும்.

லக்னத்துக்கு சனி ஸம்பந்தம் த்ருஷ்டி ஏற்பட்டால் ஸமாற்றம், அரசன்-திருடன் முதலியவர்கள் மூலமாக பயமுண்டாகும்.

லக்னத்தில் ராகு செவ்வாயுடன் சேர்ந்திருந்தாலும், சனியுடன் சேர்ந்திருந்தாலும், லக்னாதிபதி அஷ்டமத்திலிருந்தாலும், அஷ்டம ஸ்தானத்தில் ராகு குளிகர்களிருந்தாலும், லக்னத்தில் ராகுவும் ஐந்து ஒன்பதுகளில் குளிகனும், அஷ்டமத்தில் குளிகனுடன் செவ்வாயிருந்தாலும், லக்னாதிபதியிருக்கும் அம்சாதிபதி ராகு குளிகன் செவ்வாய்களுடன் கூடினாலும, அஷ்டமாதிபதியிருக்கும் அம்சாதிபதி ராகு ஸம்பந்தம் பெற்றாலும் அண்டம் பெருக்கு மென்று சொல்லப்படுகிறது.

செவ்வாய் லக்னாதிபதியாகி லக்னத்திலேயே யிருந்து பாப ஸஹவாஸம் த்ருஷ்டி பெற்றால் கல், கத்திகளால் தலையில் காயமுண்டாகலாம்.

லக்னத்தில் சூரியனிருந்து செவ்வாயால் பார்க்கப்பட சுவாஸம், க்ஷயம், வித்ரதி, குல்மரோய்களுண்டாகலாம்.

லக்னத்தில் செவ்வாயிருந்து சனி சூர்யர்களால் பார்க்கப்பட கத்தியால் காய முள்ளவனுவான்.

லக்னத்தில் கேது இருந்து அநேகம்பாபர்களால் பார்க்கப்பட பிசாசாதிபாதை உண்டாகலாம்.

சராசி லக்னமானாலும், லக்னாதிபதி சராசியிலிருந்தாலும் ஸ்வாம்ச லக்னம் சர ராசியானாலும், அலைந்து திரிபவன்.

சராசி லக்னமாகி, லக்னாதிபன் சராசியிலிருந்து சரக்ரஹத்தால் பார்க்கவும் பட்டால் அந்யதேசம் சென்று பாக்யத்தைப் பெறுவான்.

லக்னத்தில் அநேக பாப க்ரஹங்களிருந்தால் ஆயுள் பூராவும் துக்கியாவான்.

லக்னாதிபன் வர்கோத்தமாம்சம், ஸ்வார்சாம்சம், மித்ரக்ஷேத்ராணம், இவைகளிலொன்றிலிருந்து சுபரின் திருஷ்டி ஸம்பந்தம் பெற்றால் ஆயுள் பூராவும் ஸுகியாவான்.

லக்னத்தில் சுபக்ரஹமும், 2-ல் பாபியும், 1-4-7-10-மிடங்களில் பாப க்ரஹம் வலிக்க. லக்னாதிபதி வர்கோத்தமாம்சத்திலு மிருந்தால் முன் வயதில் துக்கத்தையும் பின் வயதில் சுகத்தையு மடைவான்.

லக்னத்தில் பாப க்ரஹமும் 2-9 மிடங்களில் சுப க்ரஹமுமிருந்து லக்னேசன் தேவலோகாம்சத்திலிருக்க பால்யத்தில் சுகமும், பிறகு சிரமமுமுண்டாகும்.

லக்னாதிபன் 10-லும், சூரியன் லக்னத்திலு மிருந்து ஸுக்ரஹங்களின சேர்க்கை அல்லது பார்வை பெற்றாலும், லக்னாதிபன் உச்ச வீட்டிலிருந்தாலும் நல்ல கீர்த்தியை யடைவான்.

லக்ன பாக்யாதிபர்கள் நீசராசியிலிருந்து உச்ச ராசிக்குப் போகக்கூடிய ஸமயமானால் பிரஸித்தனுவான.

சுக்ரன லக்னத்தின் முற்பாதியிலிருந்தால் முற்பகுதியில் ஸௌக்யமும் பிற்பகுதியிலிருந்தால் பிறகு துக்கமு முண்டாகும்.

லக்னாதிபன் அதிகபலம் பெற்று அகபர்களால் பார்க்கப்படாமல் சுபக்ரஹங்களால் பார்க்கம்பட்டு 1-4-7-10-மிடங்களில் இருந்தால் அபமிருத்யுவை விலக்கி நிலபான ஸம்பத்துடன் நீண்ட ஆயுளுள்ளவனுவான்.

1-4-5-7-8-9-10-ஸ்தானங்களில் பாப க்ரஹ மில்லாமலும், லக்னாதிபதியும் குருவும் 1-4-7-10-இவைகளிலிருக்க புண்ய காரியம் செய்பவனாகவும், சுகியாகவும், நீண்ட ஆயுளுடையவனாகவு மாவான்.

லக்னாதிபனைக் காட்டிலும் எட்டுக்குடையவன் பலவானாய் பாபிகள் 1-4-7-8-10-12 களிலிருந்தால் ஆயுள் குறைவாகும். ப்ரயத்னத்தால் நீண்ட ஆயுளை யடையலாம்.

எல்லா க்ரஹங்களும் குருவின் அம்சத்திலோ. 1-4-7-10 அல்லது 9-2-ஸ்தானங்களிலோ இருந்தால் சிறுவயதிலேயே துறவியாவான். அநேக க்ரந்தங்களுக்குக் கர்த்தாவாகி 61-வயதுள்ளவனுவான்.

சூரியன் செவ்வாய் குரு சனியினம்சத்தில் 9-10 மிடங்களில் பலம் பெற்று ராசியின் கடைசி பாகம் லக்னமாய் அதில் சந்த்ரனு மிருக்க அதிக ஸம்பத்துடையவனாகவும் 51 வயதுள்ளவனாகவு மிருப்பான்.

லக்னாதிபதி பலவானானாலும், வ்யயத்தில் சுப சம்பந்தமிருந்து லக்னாதிபன் லக்னத்திலிருந்தாலும், ஒன்பதாமிடத்தில் சுபரிருந்தாலும், லக்னாதிபன் கேந்த்ரத்திலிருந்தாலும் துக்கமில்லாதவன்.

லக்னம்சத்தின் பத்தாம் ஸ்தானம் குரு சனிகளால் பார்க்கப் பட்டால் (மற்றெவரும் பார்க்காவிடில்) ஆடுமாடு மேய்ப்பவனு வான்.

லக்னம்சத்துக்கு ஒன்பதில் குரு சூர்யர்களிருந்தால் விச் வாஸ மில்லாதவன்.

சுக்ரன் உச்சன் அல்லது நீசனுகவாவது சிம்மத்தின் முற் பாதியிலாவதிருக்க அந்த ஸ்தானம் ஆறு, எட்டு. பன்னிரண்டா மிடமானலும், தன் அம்சத்தில் சுக்ரனிருந்தாலும், சுக்ரன் பாபி யால் பார்க்கப்பட்டாலும், மிதுனம் அல்லது ஸ்வக்ஷேத்ரத்திலி ருந்தாலும், தனுநபதி பத்து, லக்னம், ஐந்தா மிடங்களில் வலித் தாலும் காம ஆசையுள்ளவன்.

விருஷபம் லக்னமாய் சனி தனுஸ்ஸிலிருக்க சிறிது காம ஆசையுள்ளவன்.

ஏழாமிடத்தில் சுக்ரனிருந்தாலும், செவ்வாயும் சுக்ரனும் சேர்ந்து வலித்து சத்ருஸ்தானாதிபதி குருவானலும் அதிக காமி யாவான்.

லக்னம் ஒஜராசியாகி அதில் சுக்ரன் வலித்தாலும், ஸ்வ ஸ்தானத்தில் சனி சந்த்ரர்களிருந்தாலும், ஏழாமிடத்தில் சுக்ரன் வலித்து லக்னாதிபனுல் பார்க்கப் பெற்றாலும், சுக்ர க்ஷேத்ரத்தில் சந்த்ரன் வலித்தாலும் அல்ப வீர்யமுள்ளவன்.

சனி சுக்ரர்கள் 10 அல்லது 8 லிருக்க சுப வீக்ஷணமில்லா விடினும், ரோகவ்யயஸ்தானங்கள் ஜலராசிகளாயிருந்து சனி வலித்து சுபர் பார்வை பெறுதிருந்தாலும், சந்த்ர சூர்யர்களோ சனி புதர்களோ, செவ்வாய் சூர்யர்களோ, ஒற்றை அல்லது இரட்டைராசியில் வலித்தாலும், ஒருவர்க்கொருவர்பார்த்தாலும், லக்னம் ஒற்றை இராசியாயிருந்து இரட்டை ராசியிலிருக்கும் செவ் வாயால் பார்க்கப்பட்டாலும், சந்த்ரனும் புதனும் இரட்டைராசி யினும் ஒற்றை ராசியிலுமிருந்து செவ்வாய் பார்த்தாலும், அம்சத் தில் சுக்ரன் சந்த்ரன் லக்னம் புருஷபாகத்திலிருந்தாலும், சனி சுக்ரர்கள் பத்திலிருந்தாலும், சுக்ரனுக்கு ஆறு அல்லது எட்டில் சனியிருந்தாலும், அம்சத்தில் கேது விருக்க சனிபுதர்களால் பார்க்கப்பட்டாலும், சனி சுக்ரர்கள் சுபத்ருஷ்டியில்லாமல் அஸ்

டமத்திலிருப்பார்களானலும், சனி நீசனுகி ஆறு எட்டுகளிலிருந் தாலும் அலியாவான்.

ராகு, சுக்ரன், சனிகளில் ஒருவர் உச்சனுகி, சூரியன் கடகத் திலும், சந்த்ரன் மேஷத்திலு மிருந்தாலும், சந்திரன் லக்னத்தி லும், குரு சனிகள் ஐந்திலிருந்தாலும், கன்னி உதயத்தில் சனி புதர்கள் பார்த்தாலும், சனிக்ஷேத்ரத்தில் சுக்ரன் வலித்தாலும் வீர்யம் நழுவுபவனுவன்.

லக்னத்தில் சுக்ரனும், ஏழில் செவ்வாயு மிருந்தாலும், லக்னத் தில் சனியும், சனிக்கு ஆறு, எட்டு, பன்னிரண்டில் செவ்வாயு மிருந்தாலும், லக்னத்தில் சனியும், சூரியன் பன்னிரண்டிலும், சந்திரன் அல்லது செவ்வாய் த்ரிகோணத்திலு மிருந்தாலும் பைத்தியம் பிடிக்கும்.

மூன்று மிடத்ததிபதி மூடன் அல்லது நீசனுக ஆதிலிருந்து பாப வீக்ஷணமேற்பட்டால் இடுமருந்தால் பைத்தியம் பிடிக்கும்.

லக்னத்தில் குருவும், ஏழில் செவ்வாயு மிருந்தாலும், சனி க்ஷீணசந்த்ரன் வ்யயத்திலிருந்தாலும், பைத்யரோகியாவான்.

சனி தனுதிபதியுடன் பாபியுடன்சேர வாதோன்மாதம் உண் டாகும்.

தனுதிபதியும் சனியும் சூரியனேடு கூட ராஜ கோபத்தால் உன்மாதியாவான்.

தனுதிபதியும் சனியும் செவ்வாயுடன் கூட பித்தத்தால் பைத்யம் உண்டாகும்.

சந்த்ர சூர்யர்கள் லக்னம் த்ரிகோணத்திலிருந்து குரு கேந்த் ரத்திலிருக்க சனி செவ்வாய்களின் கிழமைகளில் அல்லது இவர் களின் முகூர்த்த காலங்களில் சித்தப்ரம ரோகமுண்டாகும்.

சந்த்ரனும் சனியும் லக்னத்திலிருக்கும் புதனுல் பார்க்கப்பட சித்தம் கலங்குபவனுவான்.

கேது இரண்டிலிருக்க சுக்ரத்தில் வயதான அடையாளங்கள் தோன்றும்.

ராகு, சனி, சூரியன், குரு-இவர்கள் லக்னத்திலிருக்க இயற் கையில் வ்ருத்தனுவான்.

சந்த்ர சுக்ரர்கள் லக்னத்திலிருக்க கிழவனுகவும், யுவாவு மாக மாட்டான்.

பதினென்றில் பலம் பெற்ற செவ்வாயிருக்க வயதானலும் யுவாவைப்போல் நடப்பான்.

ஸுகாதிபதி தசமத்திலிருக்க ரஸாயனம் ஸேவிப்பதில் விருப்ப முடையவன். ஸுகாதிபதி பலமற்றவனலு மப்படியே.

தனாதிபதி பாபியுடன் கூடினலும் இரண்டாமிடம் க்ரூரஷஷ்ட் யம்சமாய் பாபியுடன் கூடினலும் அதிகம் புஜிப்பான்.

தனாதிபதி சுபருடன் கூடினலும், தனஸ்தானத்தில் சுபரி ருந்து பாப வீக்ஷணமில்லாவிட்டாலும், தனஸ்தானத்தை சுபர்கள் பார்த்தாலும், அதிபதி பலவானலும், தனாதிபன் வைசேஷிகாம்சமடைந்தாலும், குருவால் பார்க்கப்பட்டாலும், சுகமாக போஜனம் செய்பவன்.

இரண்டுக்குடையவனும் சனியும் லீசனகி, குளிகனுடன் சேர எப்போதும் ச்ராத்த போஜனம் செய்பவன்.

இரண்டா மதிபதி சுபனகவோ அல்லது தன் உச்சவிட்டி லிருந்து சுப வீக்ஷணம் பெற கொஞ்சம் சாப்பிடுபவனுவன்.

இரண்டாமதிபதி பலவானுய் சுபருடன் கூடினலும், சராசி யிலிருந்தாலும், சுபஸ்தானத்திலிருந்து சுப வீக்ஷணம் பெற்றலும் சேத்ரத்தில் சாப்பிடுபவன்.

இரண்டாமிடம் பாபஸ்தானமாகி பாபஸம்பந்தம், வீக்ஷணம் பெற்றலும், இரண்டாமதிபன் ஸ்திராசியிலிருந்தாலும் மிக மெதுவாக புஜிப்பான்.

குளிகன் செவ்வாய் சேர கெட்ட அன்னத்தை புசிப்பன். லக்னத்தில் குரு விருக்க போஜன சூரன்.

மூன்று மதிபதி பலவானுய் கேந்த்ர கோணத்திலிருந்து சுபர் பார்வையுடன் வைசேஷிகாம்சத்திலிருந்தாலும் சுப ராசியிலோ சுபாம்சத்திலோ இருந்து சுபலம்பந்தம் சுபவீக்ஷணம் பெற்றலும், சூரியன் மூன்றிலும், ஸ்தானாதிபதியும் கூடினலும், மூன்றுக்குடையவனும் சந்த்ரனும் கூடினலும் தைர்யமுள்ளவனுவான்.

லக்னாதிபன் ஐந்திலிருந்தாலும், பாபியானலும், லக்னத்துக்கு பாப வீக்ஷணமதிகமானலும், கோள் சொல்பவனுவன்.

குரு பாப வீக்ஷணம் பெற்று ராகுஸம்யோகமேற்படினும், குரு ராசி யம்சங்களிரண்டிலும் நீசனுனலும் சண்டாளத் தன்மை யடைவான்.

ராகுவால் பிடிக்கப்பட்ட சந்த்ரன் லக்னத்திலிருக்க 1, 5, 9-களில் பாப க்ரஹங்களு மிருக்க பிசாசப் பிறப்பு.

சனி 1-4-7-10-களிலிருந்து புதஸம்பந்தம் பெற்றலும், புதன் பலவானுய் கேந்த்ரத்திலிருந்தாலும், குரு புதயோக மிருந்தாலும் சில்பியாவான்.

குரு புதர்கள் 6, 8, 12-விருக்க உபசேதசத்தில் பிரியமுள்ளவன்.

புதன் சுபருடன் கூடினலும், 6-க்குடையவன் குரு அல்லது சுக்ரனுக விருந்தாலும் மதுரரஸ ப்ரியன்.

புதன் பாப ஸம்பந்தம் பெறின் மதுரரஸத்தில் ப்ரியமில்லா தவன்.

சனி த்ரிம்சாம்சம் லக்னமாய் கேந்த்ரத்திலிருந்தும் சந்த்ரனால் பார்க்கப்படினதத் தொழில் புரிபவன்.

சூரியன் ஏழிலும், சனி லக்னத்திலும், செவ்வாய் 3 அல்லது 9-லிருந்தாலும் மேல் ஜாதியில் பிறந்தாலும் கீழ்வழியில் செல் பவனுவான்.

சனி சூர்யர்கள் ஒரே ராசியிலிருந்து த்ரேக்காணம், நவாம்சம் த்ரிம்சாம்சம இவைகளில் சேர்ந்து மிருக்கீழ் ஜாதிஸ்த்ரீயுடன் சேர்ந்து கெட்டவனுவான்.

ஆரூடபதியும் லக்னாதிபனும் லக்னத்தில் சேர்ந்திருந் தாலும், லக்னாதிபதி 6-லிருந்து அவ்வீட்டுக்குடையவனால் பார்க் கப்பட்டாலும் குரு சுக்ரர்கள் லக்னத்திலிருந்து ஆறுக்குடைய வன் ஸம்பந்தம் பெற்று சனி செவ்வாய் ராகுக்களால் பார்க்கப் பட்டாலும தாயாதிகளால் ஹிம்ஸையுண்டாகும்.

லக்னத்துக்கோ லக்னாதிபதிக்கோ 6-8-12-ல் பாபிகளிருந்தாலும், புதசந்த்ர சனிகள் நீசஸவாம்சம் அல்லது சத்ரு ஸவாம்சத்திலோ இருந்தால் தன் ஜாதியை விட்டு விலகுவான்.

சந்த்ரன் சனி மித்ரஸ்தானத்திலிருந்தால் ஜாதியை விருத்தியாக்குவான்.

லாபஸ்தானாதிபதி லக்னத்திலிருந்தாலும். ஒன்பதில் பலவானாயிருந்தாலும், லாபஸ்தானத்தில் ஒன்பதுக்குடையவனிருந்தாலும் ஸந்தோஷமுள்ளவனுவான்.

குரு சனி சேர்ந்திருந்தாலும், லக்னாதிபன் சனியுடன் கூடினாலும், லக்னாதிபன் துர்பலனானாலும், அதிகமான பாபிகளின் பார்வை லக்னத்துக்கு ஏற்பட்டாலும் சோம்பேறியாவான்.

ஸவாம்சத்துக்கு ஒன்பதில் குருவிருந்தாலும், ஆறில் இரு பாபிகளிருந்தாலும், பயிர்த்தொழில் செய்வான்.

தனுஸு அல்லது விருஷபம் லக்னமாய் க்ரூரர்களால் பார்க்கப்பட்டாலும், பாபியுடன் கூடிய பாபஸ்தானம் லக்னமானாலும், சிம்மம், தனுஸு, விருச்சிகம், கன்னி இவைகளிலொன்று லக்னமாய் சந்த்ரன் கடகத்திலிருந்து செவ்வாயால் பார்க்கப்பட்டாலும் தீய வழுக்கையுள்ளவனுவான்.

இரண்டில் சுபரிருக்க இரண்டாமதிபன் சுபர் சேர்க்கை பெற்று லக்னாதிபனோடு கூடினால் அழகான கண்ணை யுடையவனுவான்.

சந்த்ர சூர்யர்கள் லக்னத்திலிருக்க மித்ர க்ரஹ வீக்ஷணமில்லாவிடில் நேத்ரரோகமுண்டாகும்.

இரண்டு அல்லது பன்னிரண்டில் பாபிகளிருக்க கண் மூடியிருக்கும்.

சூரியன் பன்னிரண்டில் அல்லது த்ரிகோணத்தில் பாபியுடன் கூடினால் கண்ணில் குறைவுள்ளவனுவான்.

இரண்டு அல்லது பன்னிரண்டில் பாபியுடன் சேர்ந்து சுக்ரனிருந்தால் ஒருகண்ணில்லாதவனுகவோ, கண்பார்வை குறைந்தவனுகவோ இருப்பான்.

சூரிய சந்திரர்கள் பாபியால் பார்க்கப்பட்டு வக்ரமடைந்த க்ரஹத்தின் வீட்டிலிருந்தாலும், ஆறு எட்டு பன்னிரண்டிலிருந்தாலும் வக்ரமான கண்ணுடையவன்.

சந்த்ரனும் செவ்வாயும் ஒரே ஸவாம்சத்திலிருந்தால் கண்களில் மருவிருக்கும்.

வக்ரியான க்ரஹத்தின் வீட்டில் ரோகாதிபதி வலித்தாலும், புதன் செவ்வாய் க்ஷேத்ரத்தில் லக்னாதிபதி வலித்து புதகுஜர்களால் பார்க்கப்பட்டாலும், இரண்டுக்குடையவன் அசுபர்களின் பார்வை பெற லக்னேசன் பாபருடன் கூடினாலும், தனஸ்தானாதிபன் சனி செவ்வாய் குளிகர்களோடு சேர்ந்தாலும், லக்னத்திலாவது பன்னிரண்டிலாவது குஜனிருந்தாலும், தசமாதிபதியும் சுக்ரனும் சேர்ந்தாலும், தனாதிபதி சுக்ரனுக்கு 6, 8, 12-லிருந்தாலும், நேத்ர ரோகமுள்ளவன்.

லக்னாஷ்டமாதிபதிகள் ரோகஸ்தானத்திலிருக்க இடது கண்ணில் ரோகமுண்டு.

ஆறு அல்லது எட்டில் சுக்ரனிருக்க வலது கண்ணில் ரோகமுண்டு.

இரண்டில் பாபிகளிருந்து சனி பார்த்தாலும், இரண்டுக்குடையவன் வலிக்கும் அம்சாதிபதி பாபக்ஷேத்ரத்திலிருந்தாலும் கண்ணுக்குக் கெடுதல் ஸம்பவிக்கும்.

அஷ்டமத்தில் சுக்ரனிருந்து குரூரக்ரஹ பார்வைபெற கண்களில் நீர்வடியும்.

சூரியன் த்ரிகோணத்திலிருந்து பாப வீக்ஷணம் பெற பார்வை குறையும்.

லக்னாதிபன் சூரியன் சுக்ரன் இவர்கள் சேர்ந்து ஆறு எட்டு, பன்னிரண்டிலிருந்தாலும், ராகுக்ரஸ்தனான சூர்யன் லக்னத்திலிருக்க சனி குஜர்கள் த்ரிகோணத்திலிருந்தாலும், தன லக்னாதிபதிகள் சூர்யசுக்ரர்களுடன் கூடி 6, 8, 12-லிருந்தாலும், பிறவிக் குருடனுவான்.

சந்த்ரனும் செவ்வாயும் ஆறு, எட்டு, பன்னிரண்டில் சேர்ந்திருக்க விழுதலால் குருடனுவான்.

குருவுடன் சேர்ந்த சந்த்ரன் மேற்கண்ட ஸ்தானங்களிலிருக்க க்ஷீணதலால் குருடனுவான்.

சந்த்ர சுக்ரர்கள் மேற்கூறிய ஸ்தானங்களிலிருக்க காமாந்தனுவான்.

புத சந்த்ரர்கள் மேற்கூறிய ஸ்தானங்களிலிருக்க ஆயுதத்தால் குருடனுவான்.

சந்த்ர சூரியர்கள் மூன்றிலிருந்தாலும் கேந்த்ரத்திலிருந்தாலும், பாப க்ஷேத்ரத்தில் குஜனிருந்து அது கேந்த்ரமானாலும், சனி க்ஷேத்ரம் ஸப்தமமாகி அதில் சூரியனிருந்தாலும், சுப க்ரஹங்கள் 6-8-12 ல் வஸித்து க்ரூர க்ரஹங்களால் பார்க்கப்பட்டாலும், கும்பம் லக்னமாய் செவ்வாய் வஸித்தாலும் தன வ்யயாதிபர்கள லக்னாதிபன் சுக்ரர்களுடன் கூடி 6-8-12 லிருந்தாலும், சந்த்ரன், பாப க்ரஹம சுக்ரனுடன் இரண்டிலிருந்தாலும், பாபிகள நான்கு ஜ்தாமிடங்களில் வஸித்தாலும், சந்த்ரன் 6-8-12-லிருந்து பாவியால் பார்க்கப்பெற்றாலும், சந்த்ர சூர்யர்கள சுப விக்ஷணமில்லாமல் வ்யயத்திலிருந்தாலும். லிம்மத்தில் சனியும், லக்னத்தில் சுக்ரனுமிருந்தாலும், சனி வ்யயத்திலும, சந்த்ரன் தன ஸ்தானத்திலும், சூரியன அஷ்டமத்திலுமிருந்தாலும், சந்த்ரன், சூர்யன், செவ்வாய், சனி இவர்கள தனித்தனியாகவோ, சேர்ந்தோ, 6-8-12-2- இவைகளிலிருந்தால் இவர்களில் பலமுள்ள க்ரஹத்தினாலும், லக்னம் அல்லது சுக்ரனுக்கு ஜ்ந்தில் ராகு விருந்து சூரியன் பார்த்தாலும், சனி நான்கிலிருந்து பாப க்ரஹங்கள் பார்த்தாலும், சுக்ரன் சந்த்ரனுடன் 6-8 12 லிருந்தாலும், தனாதிபன் சுக்ர சந்த்ரர்களுடன் கூடினாலும் (உச்சம் சுப ஸம்பந்தமில்லாமல்), லக்னதனாதிபதிகள 6-8-12 லிருந்தாலும் லக்னம் லிம்மமாய் சந்த்ர சூர்யர்களிருந்து சனி செவ்வாய்கள் பார்த்தாலும் நேத்ரஹீனனுவான்.

செவ்வாய் 12-லிருக்க இடது கண்ணுக்கும், சனி இரண்டிலிருக்க வலக் கண்ணுக்கும் தோஷமுண்டு.

2-6-10-க்கு அதிபதிகள் லக்னத்தில் சுக்ரனுடன் கூடினாலும், சுக்ரனும் இரண்டாமதிபனும் நீசாம்சத்தை யடைந்து பாப ஸம்பந்தம் பெற்றாலும், தசமஷ்டாதிபதிகள் வலிக்கும் அம்சாதி

பதிகள் 6-8-12-லிருந்து லக்னாதிபதியுடன் கூடினாலும் ராஜ கோபத்தால் கண் போகும்.

சுக்ரனும் தனாதிபனும் சத்ரு ஸ்தானத்திலிருந்து சுபர் பார்வையில்லாவிடினும் நேத்ரத்துக்கு தோஷம்.

லக்னத்தில் சந்த்ரன் அல்லது செவ்வாயிருந்து குரு சுக்ரர்களால் பார்க்கப்பட ஒரு கண்ணுக்கு தோஷம்.

ஸப்தமம் லிம்மமாகி, அதில் சந்த்ரனிருந்து செவ்வாய் பார்க்கவும், கடகம் ஸப்தமமாய் சூர்யனிருந்து செவ்வாய் பார்க்கவும் ஒரு கண்ணுக்குக் கெடுதலுண்டு.

சனிக்கு நான்கில் புதனும் ஷஷ்டாதிபதி 6-8 12-லிருந்தாலும், பூர்ணசந்த்ரன், சுக்ரன் சத்ருவுடன் கூடினாலும், இரவில் பிறந்தவனுக்கு ஆறில் புதனும், ஜ்ந்தில் சுக்ரனிருந்தாலும், சுக்ரன் வ்யயத்திலிருந்து புதனுடன் கூடினாலும், புதனும் ஷஷ்டாதிபதியும் க்ரூர க்ரஹங்களால் பார்க்கப்பெற்றாலும், பாபிகள் 3-11-5-9-ஸ்தானங்கள சுப விக்ஷணமில்லாவிட்டாலும், சத்ரு ஸ்தானாதிபன் 6-8-12-லிருந்து சனி வீக்ஷணம் பெற்றாலும் செவிடனுவான்.

சூரிய சனி சந்த்ரர்கள் 3-5-7 9 ஸ்தானங்களிலிருந்து சுப ஸம்பந்தம் வீக்ஷணம் பெறுவிடினும், சந்த்ரனுக்கு ஏழில் சனியும், சுக்ர சூர்யர்கள லக்னத்திலிருப்பினும், சுக்ரன் நீசனுய் ராகுவுடன் கூடினும் காது அறுபடும.

செவ்வாய் லக்னத்திலும், சுக்ரன் ஆறிலுமிருக்க மூக்கு கெடும்.

மேஷத்தில் சந்த்ர சுக்ரர்களும், சத்ரு ஸ்தானத்தில் புதனிருந்தாலும், மேஷ கடகங்களில் சுக்ரனிருந்தாலும், லக்னத்தில் சந்த்ரனும் புதன் ஆறுக்குடையவனனாலும் முகத்தில் துர்கந்தம வீசக்கூடும்.

கடகம் விருச்சிகம் மீனம்- இவைகளில் புதனிருந்து சூர்யனுக்கு அடியிலிருக்கும் சந்த்ரனால் பார்க்கப்படினும், சத்ரு ஸ்தானாதிபதியும் புதனும் லக்னத்திலிருந்தாலும் குருவும் சத்ரு ஸ்தானாதிபனும் லக்னத்திலிருந்தாலும், தனாதிபனும் குருவும் 6-8 12 லிருந்தாலும் ஊமையாவான்.

கடக விருச்சிக மீனங்கள் ஸுக ஸ்தானமாய் அதில் புதன் வஸித்து சந்த்ரனுல் பார்க்கப்பட்டு. சூரியன் ஆறிலிருந்து பாபரால் பார்க்கப்பட்டாலும், சுக்ரன் சந்த்ரன் செவ்வாய் லக்னத்திலிருந்தாலும், உயர்ந்த குரலே யுடையவனுவான்.

சந்த்ர சூர்யர்கள் மீனத்திலிருந்தாலும், தனுபன் தன் உச்ச ஸ்தானத்திலிருக்க அது கேந்த்ரமானுலும், சிரிப்புடன் கூடிய முகமுள்ளவன்.

ஒன்பதாமதிபன் புதனுடன் சேர்ந்து கேந்த்ரத்திலிருக்க ஸுமுகனுவன்.

தன ஸ்தானத்தில் பாபிகளிருந்து தனுபன் பாபியுடன் கூடி ரோக, சத்ரு க்ஷேத்ரங்களிலிருக்க துர்முகன.

இரண்டில் பாபர் நிற்க நீண்ட முக முடையவன்.

ஸப்தமத்தில் சனியும் தசமத்தில் சந்த்ரனுமிருந்தாலும் சுக்ர சனிகள் தனத்திலிருந்து சனி வீட்டில் சூரியனிருந்தாலும் பகலில் பிறந்ததில் புதன் லிம்மத்திலிருந்தாலும், இரவில் பிறந்ததில் கடகத்தில் புதனிருந்தாலும், தனுபதி புத ஸம்பந்தம் பெற்று கேந்த்ர த்ரிகோணங்களிலிருந்து சுப க்ரஹ வீக்ஷணத்துடன சூரியன் செவ்வாய் குரு ஸம்பந்தம் பெற்றாலும், தன ஸ்தானுதிபன் கேந்த்ரம் அல்லது பாரவதாம்ச மடைந்தாலும், புதாம்சத்தில் குருவிருந்தாலும், தனுபதி வலிக்கும் அம்சாதிபதி உச்சனுகவோ கோபுராம்சத்திலோ இருந்தாலும், குரு சுப ஸம்பந்தம் வர்கோத்தமாம்சத்திலிருந்தாலும். இரண்டாமதிபதி குரு ஸம்பந்தத்துடன் கூடி பாரவதாம்சத்திலிருந்தாலும் வாசாலகனுவான்.

புதன் சத்ரு ஸ்தானுதிபனுனாலும், அம்ச லக்னத்துக்கு இரண்டில் கேது சனிகளிருந்தாலும், புதன் சனி க்ஷேத்ரத்திலிருந்து சனி வீக்ஷணம் பெற்றாலும், ஒன்பதாமதிபதி சுக்ரனுலும், இரண்டுக்குடையவன் துர்பலனுய் க்ரூராம்சமேறி பாப ஸம்பந்தம் பெற்றாலும், இரண்டில் பாபியிருந்து, பாப வீக்ஷணம் பெற்றாலும் அல்லது பாப ஸம்பந்தம் பெற்று க்ரூராம்சத்திலிருந்தாலும் நாக்கில் தோஷமுண்டு. தெளிவாய் பேசமாட்டான். சனி சந்த்ர யோகமானுல் கடுமையாகப் பேசுவான்.

விருஷபம் இரண்டாமிடமாகி க்ரூரக்ரஹ வீக்ஷணம் ஸம்பந்தம் பெற்றாலும், ஸப்தமத்தில் பாபிகளிருந்து சுப க்ரஹங்களின் வீக்ஷணமில்லாவிட்டாலும், சந்த்ர சனி சூர்யர்களோ மற்ற பாபிகளோ ஸப்தமத்திலிருந்தாலும் பற்களுக்கு விகாரமேற்படும். ஸப்தமாதிபதிக்கு இரண்டில் ராகுவிருக்க பெரிய பல்லாக விருக்கும்.

இரண்டாறுக்கதிபதிகள் ஏகராசியில் பாபஸம்பந்தம் பெற்றாலும், லக்னத்தில் அல்லது பஞ்சமத்தில் ராகுவிருந்தாலும் தந்தரோகியாவான்.

பகலில் ஜனித்தால் சனி செவ்வாய் புதன் குரு சேர்ந்து நான்கில் சுக்ரனிருந்தாலும், சனி குஜர்கள் ராகுவுக்கு ஸப்தமகர்களாகி ஆறிலிருந்தாலும், சனி சுக்ரர்கள் சத்ரு க்ரஹத்தில் சேர்ந்திருந்தாலும், சனி சந்த்ர ஸூர்யர்கள் ஆறு அல்லது எட்டிலிருந்தாலும் கைக்குச் சேதமுண்டாகும்.

லக்னுதிபன் நான்காமிடத்திலிருந்து செவ்வாய் க்ஷேத்ரம் அல்லது விருச்சிகநவாம்சமானுல் குட்டை அல்லது கூனனுவான்.

அஷ்டம ஸ்தானம் ஸ்திரராசியாய் புத குரு சுக்ரர்கள் சேர்ந்திருந்தால் கடினமான மனதுடையவனுவான்.

ஸுக ஸ்தானத்தில் க்ரூரரிருந்து ஸுகாதிபதியும் க்ரூரனுடன் கூட விரோதமான மனதுடையவன்.

8ல் சுக்ர குஜர்களிருந்தாலும், சுக்ரகுஜர்கள் சேர்ந்து செவ்வாய் விட்டிலிருந்தாலும், வாயுவினுல் அண்டரோகம்.

சந்த்ர சுக்ரர்கள் செவ்வாய் விட்டிலிருந்து சனி குருக்களால் பார்க்கப்பட ரோண்ட (Hydrocele) மேற்படும்.

லக்னாம்சத்தில் குளிகன் நிற்க புதனுல் மட்டில் பார்க்கப்பட அண்டம் பெருக்கும்.

பூர்ண சந்த்ரனும் செவ்வாயும் சத்ரு ஸ்தானத்திலிருந்தாலும், சனி சந்த்ர குஜர்கள் வ்யயத்திலிருந்தாலும் முழந்தாளுக்குக் குறைவுண்டாகும்.

பாபருடன் சந்த்ர சனிகள் மீன விருச்சிக மேஷ கடக மகரங்களில் ஏதேனுமொன்றிலிருந்தாலும் அல்லது ஐந்து ஒன்பதி

விருந்தாலும், ரோக ஸ்தானத்தில் சூரிய செவ்வாய் சனிகள் இருந்தாலும், சனியும், ஷஷ்டஸ்தானாதிபனும் வ்யயத்திலிருந்து பாபர்கள் பார்த்தாலும், 8-9-க் குடையவர் பாப ஸம்பந்தம் பெற்று ஸுகத்திலிருந்தாலும், கடகத்தில் சனி சந்த்ரர்களிருந்து சுப க்ரஹத்தால் பார்க்கப் படா விட்டாலும், சனி சுக்ரர்கள் சேர்ந்து சுபவிக்ஷணமில்லாவிட்டாலும், ஸப்தமாதிபன் சனியாய் அவன் பாபஸம்பந்தம் பெற்றாலும் கொண்டியாவான்.

சனிக்கு மான்தில் சந்த்ரனிருந்தாலும், ராசியின் முதல் அம்சத்திலிருந்தாலும், மிக அல்பமான ராசியின் கடைசி அம்சத்திலிருந்தாலும், லக்னாதிபன் மிக அல்பராசியிலிருந்து சுபர் பார்வையில்லாதிருந்தாலும், ப்ருஷ்டோதயராசிகள் நான்காம் ஸ்தானமாய் அதில் சந்த்ரன் நின்று லக்னாதிபதி சனியால் பார்க்கப்பட்டாலும், சிம்மம் பத்தாவது ஸ்தானமாய் சுக்ரன் சூர்யன் அதிலிருந்து மகரத்தில் சந்த்ரனிருந்தாலும், செவ்வாயும் குருவும் சந்த்ரசனிகளால் பார்க்கப்பட்டு சுப விக்ஷண மில்லாவிடிலும், லக்னாதிபன் ஹ்ரஸ்வராசியிலிருந்து லக்னத்தைப் பார்த்தாலும் குள்ளனுவான்.

கேந்த்ரத்தில் க்ரூரக்ரஹங்களிருந்தாலும், சூர்ய சந்த்ரர்களிருந்தாலும் அங்கக்குறைவு. லக்னத்திலிருக்கும் சுக்ரனை சனிபார்த்தால் இடுப்பின் பின்பாகத்தில் குறைவு. சுக்ரன் 4-ல் நிற்க சனி செவ்வாய் புதன் இவர்களிலொருவருடன் குரு சேர கைகால் பின்பாகம், இவைகளிலொன்றில் குறைவுண்டாகும். பத்தில் சந்த்ரன், ஏழில் செவ்வாய், சூரியனுக்கு இரண்டில் சனியிருந்தாலும், ஐந்து ஒன்பதாமிடங்களில் செவ்வாய், நின்று க்ரூரக்ரஹங்கள் பார்த்தாலும், 2-ல் சனி, 10 ல் சந்த்ரன், 7-ல் புதனிருந்தாலும் அங்கக்குறைவு ஏற்படும்.

செவ்வாய் நீசனுமில் ரத்தபித்த ரோகமுண்டாம்.

சனியின் வீட்டில் சுக்ரனிருந்தாலும், புதக்ஷேத்ரத்திலோ மகரத்திலோ ஆறுமிடத்ததிபதியிருந்தாலும், புதன் வீட்டில் சுக்ரனிருந்து புதன் கேந்த்ரத்திலிருந்தாலும் மேஷம் லக்னமாய் புதன் அங்கிருந்தாலும் ஜாதகனுடைய சரீரத்தில் நாற்ற முண்டாகும்.

லக்னாதிபதி வ்யயத்திலிருந்து பாபியின் ஸம்பந்தம் பார்வை பெற்றால் கோலான்றி நடப்பான்.

சந்த்ரன், புதன் செவ்வாயால் பார்க்கப்பெற்றாலும், க்ஷீண சந்த்ரன் செவ்வாயுடன்கூடி 6-8-12-லிருந்தாலும், புதன், சுக்ரன் லக்னத்திலிருக்க, செவ்வாய் ஸப்தமத்திலிருந்தாலும் லக்னத்திலிருக்கும் குருவை செவ்வாய் பார்த்தாலும் லஜ்ஜை யில்லாதவனுவான்.

சந்த்ரன் செவ்வாய் ஏழிலிருந்து குரு பார்க்க லஜ்ஜையுள்ளவனுவான்.

புதன் செவ்வாய் கூடினாலும், புதன் பாப ஸம்பந்தம் பெற்று பலிஷ்டனாய் ஒன்பதிலிருந்தாலும், செவ்வாய் மூன்றுமிடத்திலிருந்து சுப விக்ஷணமில்லாவிடிலும், நான்கு அல்லது ஒன்பதுக்கதிபதி ஆறிலிருந்தாலும், மேஷத்தில் புதனிருந்தாலும், ஸுகஸ்தானத்தில் பாபியிருந்தாலும், அல்லது ஸ்தானத்தை பாபி பார்த்தாலும், 3-5-ல் பாபியிருந்தாலும், அஷ்டமாதிபதி அல்லது தசமாதிபதி நான்கில் இருந்தாலும் கபட குணமுடையவன்.

சனி செவ்வாய் ராகு கூடினாலும், இவர்களில் ஒருவர் நான்கிலிருந்தாலும் நெஞ்சில் வஞ்சகமுள்ளவன்.

ஸுகஸ்தானத்தில் சுபரிருப்பதுடன் ஸ்வக்ஷேத்ரம் அல்லது உச்சக்ஷேத்ரமாக விருந்தாலும், ஸுகஸ்தானாதிபன் பலிஷ்டனாலும், ஸுகஸ்தானம் சுபர் க்ஷேத்ரமானாலும் சுபவிக்ஷணம் பெற்றாலும், நாலுக்குடையவன் கோபுராரம்சம் முதலியவை ஏறினாலும், நாலாமிடம் முருது முதலிய அம்சத்துடன் கூடினாலும், லக்னாதிபன் சுகத்திலிருந்து சுப ஸம்பந்தம் அல்லது பார்வை பெற்றாலும், லக்னாதிபன் பலவானானாலும், பாராவதாம்சம் முதலியதில் லக்னாதிபன் ஏறினாலும், குரு லக்னத்திலிருந்து சுக்ரன் பார்த்தாலும், சூரிய சந்த்ரர்கள் நான்கிலிருந்தாலும் வஞ்சகமில்லாதவனுவான்,

நான்கில் ராகு இருந்து பாபியின் த்ருஷ்டி அல்லது ஸம்பந்தம் பெற்றாலும், நான்காமிடம் அநேகபாபிகளின் சேர்க்கை அல்லது பார்வைபெற்றாலும் வெளியில் நல்லவன்போல்காணப்பட்டாலும் உள்ளே கபடமுள்ளவன்.

இரவில் பிறந்தவனுக்கு செவ்வாய் பலவானாய் லக்னத்தில் அல்லது தசமத்தில் இருந்தாலும், ஏழில் செவ்வாயிருந்து பலிஷ்டனாலும் லக்னாம்சத்துக்கு மூன்றில் பாபரிருந்தாலும், சூரனவான்.

துர்பலனான செவ்வாய் லக்னத்தைப்பார்த்தாலும் இரவில் பிறந்தவனுக்கு சனி பத்திலிருந்தாலும். லக்னாதிபன் ஸ்வக்ஷேத்ரத்திலிருந்து செவ்வாயின் பார்வையேற்பட்டாலும், லக்னாம்சத்திற்கு மூன்றில் சுபர்களிருந்தாலும் பயந்தவனுவான்.

பகலில் பிறந்தவனுக்கு செவ்வாய் பலவானாய் 10 அல்லது லக்னத்திலிருந்தாலும், லக்னம் அல்லது ஏழில் துர்பலனான செவ்வாயிருந்து சனியினால் பார்க்கப்பட்டாலும், லக்னத்தில் செவ்வாயிருந்தாலும், ஏழில் வலுவுள்ள செவ்வாயிருந்தாலும், லக்னாதிபன் பலமில்லாமல் த்ரிகோணத்திலிருந்தாலும் லக்னாதிபன் 8-12-லிருந்தாலும், இரண்டுக்காதிபதி குளிகனுடன் கூடினாலும் கோபமுள்ளவனாகிறான்.

மூன்றில் கேது விருந்தால் சண்டையில் ப்ரியமுடையவன்.

கடகம், விருச்சிகம் மீனம்-இவைகளில் சூரியனிருந்து செவ்வாயால் பார்க்கப்பட்டாலும், ஸுகஸ்தானாதிபதி லக்னத்திலும் அல்லது லக்னாதிபதி நாலிலுமிருந்தாலும், நாலாவது ஸ்தானம் வலுவுள்ளதானாலும், சுபர் நான்கிலிருந்தாலும் பொறுமையுள்ளவனுவான்.

சனியின் க்ருஹத்தில் புதனும் செவ்வாயு மிருந்தாலும் புதன் லக்னத்திலும், குரு ஏழிலுமிருந்தாலும் லக்னத்தில் புதாம்சமுதயமானாலும் பரிஹாஸத்தில் விருப்பமுள்ளவன்.

ஸஹோதரஸ்தானத்தில் செவ்வாய் வலிக்க புத சந்த்ரர்களால் பார்க்கப்பட்டாலும், புதன் லக்னாதிபதியாய் ஆறில் வலித்தாலும், லக்னத்துக்கு அல்லது அம்சத்துக்கு ஒன்பதாம் ஸ்தானத்தில் ராகு சனி வலித்தாலும், லக்னாதிபன் துர்பலனானாலும் த்ரோஹம் செய்பவனுவான்.

லக்னாம்சத்தில் கேது அல்லது குளிகன் வலித்தாலும், பன்னிரண்டாமதிபதி மூன்றுமிடத்தில் வலித்தாலும், ஸுகாதிபதி

ரோகஸ்தானத்தில் வலித்தாலும், தனாதிபதி எட்டிலிருந்தாலும், புதனும் செவ்வாயும் பலத்துடன் ரோகஸ்தானத்திலிருந்தாலும், புதன் செவ்வாய் லக்னத்திலிருந்தாலும் திருடனுவான்.

குரு மகரத்திலும். ராகு லக்னத்திலுமிருந்தாலும், வ்யயாதிபதி நீசனானாலும் லக்னாதிபன் நீசனாகவோ சத்ருவீட்டிலோ இருந்தாலும், பாபி வ்யயத்திலிருந்தாலும். லக்னாதிபன் துர்பலனானாலும், செவ்வாயுடன் சேர்ந்தாலும், லக்னத்தில் பாபிகளின் த்ருஷ்டி அதிகமானாலும் துக்கமுள்ளவனுவான்.

இரண்டாம் பாவம்.

மேஷம்:- இரண்டாமிடமானால், விசேஷபாக்யமுள்ளவனாகவும், குடும்பியாகவும் அதிகமான பசு முதலிய ஸம்பத்துள்ளவனாகவும், பண்டிதர்களால் கொண்டாடப்படுபவனாகவுமாவான்.

விருஷபம்:—2-வது ஸ்தானமாகில் க்ருஷியினால் பொருளையும், நாற்கால் பிராணிகளாலிழுக்கப்படும் வாஹனங்களையும், ஸ்வர்ணம். ரத்னம் முதலிய பொருளையும் அடைபவனுவான்.

மிதுனம்:— இரண்டாமிடமானால், தனத்தையும், ஸ்த்ரீ ப்ரஜைகளையும், சிநேஹிதர்களினுதவியினால் தங்கம் வெள்ளி முதலிய ஸம்பத்தையு முடையவனுவான்.

கடகம்:- இரண்டாவதானால் சூதாட்டத்தினால் பொருளையும், ஸ்த்ரீமூலம் சுகம் உணவு, நல்வழியால் ஸம்பாதிக்கப்பட்ட ஐச்வர்யத்தையும் அடைகிறான்.

ஸிம்ஹம்:— இரண்டாவதாகில் மற்றவர்களால் போற்றப் படுபவனாகவும், உபகாரியாகவும், தன்முயற்சியால் தேடப்பட்ட பொருளையுடையவனாகவும், சுற்றத்தாரால் உபசரிக்கப்படுபவனாகவுமாவான்.

கன்னி:—இரண்டாவதானால், ப்ரபுவினிடமிருந்து தனத்தையும், வாஹனாதி ஸம்பத்தையும், அதிகமான ஐச்வர்யத்தையு மடைவான்.

துலாம்:—இரண்டாவதானால் நற்காரியங்களுக்கு உபயோகப்படக்கூடிய பாறைகள், மண் முதலியவைகளிலிருந்து உண்டாகும் ஐச்வர்யத்தை தன் முயற்சியால் அடைபவனுவான்

விருச்சிகம் :—இரண்டாவதானால் தர்மிஷ்டனாகவும், ஸ்த்ரீ போகாதிகளில் விருப்பமுள்ளவனாகவும், பேசுவதில் ஸமர்த்தனாகவும், தேவப்ராஹ்மணர்களிடத்தில் பக்தியுள்ளவனாகவுமாவான்.

தனுஸு :—இரண்டாமிடமாகில் வீரச்செயல்களாலும் நாற்கால் பிராணிகளாலும் கிடைக்கும் தனத்தையும், யுத்தத்தாலும், தர்மச்செயலாலும் அடைந்த புகழையும் அடைபவனாகிறான்.

மகரம் :—இரண்டாவதாகில், பல விதமான உபாயங்களால் பொருளை ஸம்பாதிப்பவனாகவும், பயிர்த்தொழிலாலும், அன்ய தேச ஸம்பந்தத்தாலும் தன் இஷ்டப்படியே மேலதிகாரிகளை தன்வசமாக்குபவனாகவுமிருப்பான்.

கும்பம் :-இரண்டாவதாகில் புஷ்பபலங்களால் கிடைக்கும் திரவ்யத்தையும், உபகாரம்செய்வதால் பொதுமக்களின் பொருளையுமடைபவனாகிறான்.

மீனம் :—இரண்டாமிடமாகில் அதிகமான நியமோபவாஸங்களாலும், வித்யையின் மஹிமையாலும், புதையல், தாய், அரசன் மூலமாகக் கிடைக்கும் பொருளையுடையவனாகவுமாவான்.

இரண்டாமிடத்ததிபதி அந்தந்த பாவங்களில் இருப்பதால் ஏற்படும் பலன்.

லக்னத்தில் :—வியாபாரியாகவும், தனவானாகவும், லோபியாகவும், விஷய ஸுகாதிகளில் அதிகம் பற்றுள்ளவனாகவும், நற்காரியம் செய்பவனாகவும், அழகான கண்வரிசைகளையுடையவனாகவுமாவான்.

இரண்டில் :—தனிகன், மந்த்ரி, குடும்பி, ரத்னம் பூஷணங்களையுடையவன், ஸுகி ஜிதேந்த்ரியன்.

மூன்றில் :—துஷ்டன், பயமுள்ளவன், ப்ராத்ரு சுகமற்றவன். சனி மூன்றிலானால் விரோதமுள்ளவன், செவ்வாய் மூன்றிலாகில் திருடன்.

நான்கில் :—தனவான், மாதாபிதாக்கள் மூலம் தனவரவுள்ளவன். ஆத்மசக்தியுடையவன், தீர்க்காயுளையுடையவன். பாபக்ரஹமானால் மேற்கூறிய பலனுக்கு எதிரிடையான பலனுண்டாகும்.

ஐந்தில் :— புத்ரஸௌக்யமும் லாபமுமுண்டாகும். சுபனானால் உதாரன், பாபியானால் க்ருபணன். துக்கி. துஷ்டனான புத்ரனையுடையவன்.

ஆறில் :— பலவான்களான சுபக்ரஹங்களுடனிருக்க சத்ருஜய முள்ளவனாகவும், த்ரவ்யார்ஜனத்தில் ஆசையையுடையவனாகவுமாவான். பாபிகளுடன் கூட விருந்தால் தரித்ரன், வஞ்சகன், சத்ருவோடு சேர்ந்தவன்.

ஏழில் :— அழகான உருவமுள்ளவன். எப்போதும் கவலையுள்ளவன். த்ரவ்யத்தைச் சேர்ப்பவன் பார்யாஸுகமுள்ளவன், புத்ரர்களுள்ளவன். பாபியுடன் கூடிடில் புத்ரனில்லாதவனாகவோ அல்பபுத்ரபாக்யமுள்ளவனாகவோ ஆவான்.

எட்டில் :—வாயுபீடை, போகி, நல்லமனதுள்ளவன், அழகன், தனிகன்.

ஒன்பதில் :— உதாரன். பாக்யவான் பலவான், ஸத்கார்யத்தில் லீடுபடுபவன். சுபஸம்பந்தம்பெற புண்யகார்யத்தில் ஆசையுள்ளவன். பாப ஸம்பந்தம்பெற தரித்ரன். க்ருபணன்.

பத்தில் :—ப்ரபுக்களால் ஆராதிக்கப்படுபவன், அழகுள்ளவன், யசஸ்வி, தாய் தகப்பனார்களிடத்தில் அன்புள்ளவன், போகி, பாபரிருக்க விரோதமான பலனுண்டாகும்.

பதினொன்றில் :— அதிக தனமுள்ளவன். ஆலோசனை சொல்பவன், வ்யவஹாரங்களை நிர்ப்பவன், யசஸ்ஸையுடையவன், லாபமுடையவன், ஸுகமுடையவன்.

பன்னிரண்டில் :— பாபியுடன் கூடிடில் அன்யதேசம் செல்பவன், கெட்டமனதுடையவன், வேதவிரோதமதத்தில் ஸங்யாஸி, க்ரூரர்களிடம் ப்ரியமுள்ளவன், திருடுவதில் ஆசையுடையவன், பலவான்.

பார்வையின் பலன்.

சூரியன் பார்க்க :—பித்ருத்வேஷி, சுகபராக்ரமங்களுள்ளவன், மறைவிடத்தில் பீடையுள்ளவன்.

சந்திரன் பார்க்க — குடும்ப ஸௌக்யம், வம்ச வ்ருத்தியுடையவன், தனது எட்டாவது வயதில் ஜலத்திலிருந்தாவது இரும்பிலிருந்தாவது பயமுள்ளவன்.

செவ்வாய் பார்க்க:— குடும்பபிடை, தன மில்லாமை, வயிறு அல்லது மற்ற வியாதிகளால் பீடிக்கப்படுபவன்.

புதன் பார்க்க:—போக போக்யங்களுள்ளவன், வஞ்சகன், நல்ல சுகங்களையனுபவிப்பவன்.

குரு பார்க்க:—அதிக தனமுள்ளவன். பாக்யவான், நற்புத்தியுள்ளவன், தம்மக்களிடமிருந்து பூரணசுகம் பெறுபவன்.

சுக்ரன் பார்க்க:— வளர்ந்துவரும் தனசுகமுள்ளவன், தன் ஜனங்களுக்கு ஸௌக்யத்தைச் செய்பவன்.

சனி பார்க்க:—தனநாசமடைபவன். தம் மக்களையே சத்ருவாகச் செய்பவன்.

ராகு பார்க்க:— குடும்ப அஸௌக்யம். 8-14-வயதுகளில் கண்டமும் ஜலபயமுமேற்படலாம்.

இரண்டாமிடத்தபதி ஆறுவது ஸ்தானத்தில் ராகுவுடன் கூடினாலும் ராகு இருக்கும் ராசியின் அதிபதியுடன் சேர்ந்தாலும் இரண்டாமிடத்தபதியும் ஆறுமிடத்தபனும் சேர்ந்தாலும், இரண்டாமிடத்தபன் வலிக்கும் அம்சத்தினபதியுடன் கூடின ராசியதிபதி ஆறுமதிபதியுடன் கூடினாலும். அவர்களின் புக்திகாலங்களில் தந்த ரோகமோ அல்லது பதனமோ ஏற்படும்.

தனஸ்தானாதிபதியுடன் சேர்ந்த புதன், ராகு, கேதுக்களுடன் ஆறிலிருந்தாலும், ராகு வலிக்கும் ராசியதிபதியுடன் சேர்ந்திருந்தாலும், கன்னத்தில் ரோகமுண்டாகும். லக்னபாவாதிபதிகளைக் கொண்டும் இரு பாவகாரகர்களைக்கொண்டும் தகப்பன் முதலியோருக்கும் பலனைச் சொல்லக்கூடும்.

சனி செவ்வாயுடன் சேர்ந்தாலும், தனாதிபன் லக்னத்தில் வலித்தாலும் காதில் கெடுதல் ஏற்படலாம்.

ஏழையாதல்:— சூரியன், சனி, செவ்வாய் தன ஸ்தானத்திலிருந்தாலும், தன ஸ்தானத்தைப் பார்த்தாலும், இவர்களை

க்ஷீணசந்த்ரன் பார்த்தாலும், குரு புதனால் பார்க்கப்பட்டு இரண்டில் வலித்தாலும், செவ்வாயால் பார்க்கப்பெற்று சந்த்ரன் தன ஸ்தானத்திலிருந்தாலும், க்ஷீணசந்த்ரன் இரண்டிலிருந்து புதனால் பார்க்கப்பட்டாலும் சூரியன் செவ்வாய்கள் இரண்டிலிருந்தாலும் ஏழையாவான். தன நஷ்டமாகும்.

தனவானாதல்:— தன ஸ்தானம் சுத்தமாகவிருந்து புதன் பார்த்தாலும், சுப க்ரஹங்கள் தன ஸ்தானத்திலிருந்தாலும், புதன் இரண்டில் வலித்து சந்த்ரனால் பார்க்கப்பட்டாலும், சந்த்ரன் புதன் வீட்டிலிருந்து சுபரால் பார்க்கப்பட்டாலும், தனாதிபதி குருவாயிருந்து தன ஸ்தானத்திலேயிருந்து செவ்வாய் சேர்க்கை ஏற்பட்டாலும். தனாதிபன லாபஸ்தானத்திலும், லாபாதிபதி தனத்திலிருந்தாலும், தன லாபாதிபதிகள் கேந்த்ர ஸ்தானங்களிலிருந்தாலும், தனாதிபதி கேந்த்ரத்திலிருந்து அதற்கு த்ரிகோணத்தில் லாபாதிபதியிருந்து குரு சுக்ரர்களின் சேர்க்கை அல்லது பார்வை பெற்றாலும் தனலாபம். தனாதிபன் உச்சனை அல்லது நீசமாகாமல் கேந்த்ர த்ரிகோணங்களிலிருந்தாலும் மிகுந்த போக பாக்யங்களுள்ளவனுவான். தனாதிபன் கோணத்திலிருந்தால் பணக்காரனுவான். தனாதிபன் வ்யயத்திலிருந்தாலும் இரண்டு க்ரஹங்களுடன் சேர்ந்திருந்தால் அதிக ஐச்வர்யத்துடன் கூடினவனுவான். அதிக க்ரஹங்களுடன் கூடினாலுமிவ்விதமே பலன்.

ரக்ஷகனாதல்:— தனாதிபன் சுப க்ரஹமாய் உச்சஸ்தானம் கேந்த்ரம், மித்ரக்ஷேத்ரம சுப ஸ்தானம்—இவைகளிலிருந்தால் குடும்ப ரக்ஷணத்தில் ஸமர்த்தன். தனாதிபதி தன ஸ்தானத்திலிருந்தாலும், சுக்ரன் அல்லது புதன் தனாதிபதியானாலும் தனாதிபதி மித்ரஸ்தானத்தை அடைந்தாலும், ஜனங்களை ரக்ஷிப்பவனுவான் அல்லது உபகாரம் செய்பவனுவான்.

தனாதிபதி பரமோச்சபாகத்திலிருக்க குருவால் பார்க்கப்பட்டாலும், பரமோச்சபாகத்திலுள்ள வேறு எந்த க்ரஹமும் தன ஸ்தானத்திலிருந்தாலும், ஆயிரம் ஜனங்களை ரக்ஷிப்பவனுகவும் ப்ரதாபமுள்ளவனுகவுமாவான்.

கணிதமறிதல்:— தன ஸ்தானத்தில் செவ்வாயிருந்து சந்த்ர புதர்களால் பார்க்கப்பட்டாலும், புதன் கேந்த்ரத்திலிருந்தாலும்,

தனாதிபதி புதனாகி தன் உச்ச ஸ்தானத்திலிருந்து லக்னத்தில் குருவிருந்தாலும், குரு 6 அல்லது 8-லிருந்தாலும் கணிதமறிந்த வனுவான்.

தனாதிபதி தனக்கு ஆறுவது பாவத்திலிருந்து லாபாதிபதி அஸ்தமித்திருக்க தன லாப ஸ்தானங்களில் பாபிகளின் ஸம்பந்தம் அல்லது பார்வை பெற்றாலும், தனலாபாதிபதி, 6-8-12 இவை களிலோ பாபி ஸம்பந்தமோ பெற்றால் ஏழ்மையுடன் பிச்சை யெடுப்பவனுவான்.

6-8-12 களில் தனலாபாதிபதிகளிருந்து லாப ஸ்தானத் தில் செவ்வாயும், தன ஸ்தானத்தில் ராகுவிருந்தாலும் ராஜ தண்டனையால் தனமழியும்.

லாப ஸ்தானத்தில் குரு, தன ஸ்தானத்தில் சுக்ரன். அந்தந்த ஸ்தானாதிபதி சுப ஸம்பந்தம் பெற்று வ்யய ஸ்தானத்தில் சுப க்ரஹங்களுமிருந்தால் தர்ம கார்யங்களில் தனம் வ்ரயமாகும்.

தனாதிபதி பாபியுடன் கூடினாலும், வாக் ஸ்தானத்தில் பாபி யிருந்தாலும், பொய் பேசுவான் அல்லது கோட்சொல்ப வனுவான்

லக்னத்தில் பாபியும், தனத்தில் சுபரும், ஒன்பதில் பாபிக்ரு மிருந்து, லக்னாதிபதி பலமில்லாதவனுனால் பால்யத்தில் துக்க முள்ளவனுவான்.

தனாதிபன் பலிஷ்டனுனால் கண்ணழகனுவான். தனாதிபன், 6-8-12-லிருந்தாலும், 6-8-12-லிருப்பவர்களுடன் சேர்ந்தாலும், பார்க்கப்பட்டாலும் பாபருடன் கூடினவனுய் உச்சஸ்வக்ஷேத்ரங் களிலிருந்த போதிலும் பேசுந்திறமையில்லாதவனுவான்.

லாபாதிபதி ஆறிலும், அல்லது ஆறுக்குடையவன் 11-லு மிருந்தால் சத்ருவால் தனத்தை யிழப்பான்

தனாதிபன் 6-8-12-லிருந்தாலும், அல்லது நீசனுகவோ சத்ரு ஸ்தானத்தை அடைந்தவனுகவோ, அஸ்தங்கதனுகவோ வ்ரய ஸ்தானகதனுகவோ ஆனால் பிச்சை யெடுப்பான்.

சந்த்ரன் குடும்ப ஸ்தானத்திலிருக்க அவன் தனம் பத்னி ஜனரு முதலியவைகளில் நாசமாகலாம். செவ்வாய் குடும்ப

ஸ்தானத்திலிருக்க அக்னியினால் நாசமேற்படலாம். புதனிருந் தால் திருடக்கூடும். சுக்ரனிருக்க சிக்ரத்தில் பத்னீப்ராப்தி, சனியிருந்தால் விஷமருந்தக்கூடும். ராகுவிருக்க தூக்குப் போட்டுக்கொள்ளுவான். குரு ஸம்பந்தம் அல்லது பார்வை பெற எல்லா தோஷங்களும் போம். ஏழாவது பாவத்தைக் கொண்டும் இந்த பாவத்தைச் சொல்லலாம்.

தனாதிபதி சனியானாலும், அல்லது சனியுடன் கூடினாலும், நீசனை சனி வீக்ஷணம் பெற்றாலும் ச்ராத்தபோஜியாவான்.

தனாதிபன் நீசனுகவோ சத்ருஸ்தானத்தை யடைந்தோ, நீச க்ரஹத்தால் பார்க்கப்பட்டோ இருந்தால் பிறர் வீட்டில் சாப்பிடு வதுடன் அவர்களை தூஷிப்பவனுவான்.

கடகம் மீனம் மகரம் இவைகளிலொன்று ஏழாமிடமாகி சுக்ரனுடன் கூடினாலும் அல்லது அவனால் பார்க்கப்பட்டாலும், பால் தயிர் நெய் முதலியவைகளை அதிகம் சாப்பிடுபவனுவான். புதன் 1-7-10-லிருந்தாலும் சூரியன் அல்லது செவ்வாய் அங்கிருந் தாலும் ஸப்தமாதிபதி சுபரால் பார்க்கப்பட்டாலும் பலவித ரஸங்களை யுண்பான். பாபி ஏழிலிருந்து பாபியுடன் கூடினாலும், ஐந்திலிருந்தாலும் சில ஸமயம் தயிர் பருப்பு முதலியவைகளை யநுபவிப்பான். சந்த்ரனை குருவோ ஏழாமிடத்துக்கதிபதியாகி கடகம் மீனம் மகரம் இந்த ராசிகளில் அல்லது இந்த ராசியம்சங் களிலிருந்தாலும் சுக்ரனால் பார்க்கப்பட்டாலும் பால் கலந்த அன்னம் சாப்பிடுபவனுவான்.

சனி பாபியால் பார்க்கப்பெற்று இரண்டிலிருந்தாலும், பாபி யுடன் கூடினாலும், இரண்டுக்குடையவன் சனியுடன் கூடினாலும், பார்க்கப்பட்டாலும் நாயினால் பயத்தை யடைவான்.

ராகு இரண்டிலிருந்து குளிகனால் பார்க்கப்பட்டாலும், குளிகனுடன் சேர்ந்தாலும் ஸர்ப்பத்திலிருந்து பயம் உண்டாகு மெனச் சொல்லப் படுகிறது. செவ்வாயுடன் சேர்ந்தால் கெட்ட அன்னத்தை புசிப்பான்.

பாபி இரண்டிலிருந்து பாபியால் பார்க்கப்பட்டாலும், பாபியுடன் சேர்ந்தாலும், க்ரூராம்சத்தை அடைந்தாலும், மூற்கூறிய பலன் அதிகமாக உண்டாகும்.

இரண்டாமிடத்துக்கதிபதி பாபியால் பார்க்கப்பட்டால் வஞ்சனையாக விஷப்ரயோகமேற்படும்.

பித்ருஸ்தானாதிபதி மூலமாகவும் அவர்களுக்கு பலஹீனச் சொல்லலாம். பாவாதிபதி பாவகாரகர்களுடைய பலம் முதலியவைகளை அனுஸரித்து அந்தந்த பலஹீன ஊஹித்துச் சொல்லவும்.

நேத்ரரோகம்: குடும்பாதிபதி லக்னாதிபதியுடன் சேர்ந்து 6-8-12-ல் வலித்தாலும், சந்த்ரசுக்ரர்களுடன் கூடினாலும், நேத்ர நாசமேற்படும். இரண்டாமிடத்ததிபன் லக்னத்தில் வலித்து தன்னுடைய உச்சத்திலாவது சுபக்ரஹத்துடன் சேர்ந்தாவதிருந்தாலும், இரவில் கண் தெரியாதெனச் சொல்லப்படுகிறது. சூரியனும், 2-க்குடையவனும் லக்னாதிபனுடன் கூடினாலும், 6-8-12 களிலிருந்தாலும் பிறவிக் குருடனுவான். 12-ல் குஜனிருக்க இடது கண் தோஷமடையும். 12-ல் சூரியனிருக்க வலது கண் தோஷமடையும். சந்த்ரசனிகளுடன் சூரியன் லக்னத்தில் வலித்தாலும், சனி குஜர்களால் பார்க்கப் பெற்றாலும் நேத்ரநாசமுண்டாகும். சுபர்களும் பாபிகளும் கலந்திருந்தால் கண்களில் நீர் வடியும். சுபர்மட்டில் பார்த்தாலும் சேர்ந்தாலும் தோஷ மேற்படாது. இரண்டில் பாபரிருந்து இரண்டாமதிபதி சுபரால் பார்க்கப்பெற்றால் கண்மூடியிருக்கும். லக்னாதிபதி அதிகமான பாபிகளின் ஸம்பந்தம் பெற்று சனியால் பார்க்கப்பெறின் நேத்ர ரோகமுண்டு. இரண்டில் சுபரிருந்து இரண்டாமிடத்ததிபன் சுபருடன் சேர்ந்து காரகன் லக்னாதிபதியோடு ஸம்பந்தம் அல்லது த்ருஷ்டி பெற்றால் அகன்ற கண்களையுடையவனுவான். 2-க்குடையவன் சனி செவ்வாய் குளிகர்களுடன் கூடினால் கண் வியாதி ஏற்படும். இரண்டாமிடத்தில் பாபிகள் அதிகமிருந்து சனித்ருஷ்டியும் பெற்றால் ஒரு கண் ஊனமுள்ளவன். இரண்டாமிடத்ததிபதி வலிக்கும் அம்சாதிபன் பாபஸம்பந்தம் பெற்றாலும், பாபராசியை யடைந்தாலும் நேத்ரரோக முண்டாகும். இரண்டாமிடத்ததிபதி சூரியனுகவோ, செவ்வாயாகவோ யிருந்து சனி

குளிகர்களால் பார்க்கப்பட்டாலும், இரண்டாமதிபதி 6-8-12-களில் புதனுடன் சேர்ந்தாலும், உஷ்ணம் பித்தாதிகளால் நேத்ர ரோகமேற்படும். 7-2-க்கு உடையவர்கள் 3-5-6-களில் வலித்தாலும், கண் ரோகமுண்டாகும். இரண்டுக்குடையவன் சூரியன் செவ்வாய்களுடன் கூடினாலும் பார்க்கப்பட்டாலும் கடைக் கண் சிவந்திருக்கும்.

சூரியனால் வரக் கூடிய நேத்ரநாசம் 20-வது வயதிலும், சந்த்ரனால் வருவது 4-வது வயதிலும், செவ்வாய் மூலம் வருவது ரக்த கோபத்தால் 9-27-வது வயதுகளிலும், புதன் மூலம் வரக் கூடியது 36 வயதிலும். குரு மூலம் வருவது 27 வயதிலுமுண்டாகிறது. இந்த 27-வது வயதில் ராஜ பூஜையும் லக்ஷ்மீ கடாக்ஷமுமேற்படும். சுக்ரன் மூலம் வரக்கூடியது 60 வது வயதிலும், இரண்டாமிடத்திலிருக்கும் ராகு மூலம் வரக்கூடியது 27 வயதிலும், சனியால் வரக்கூடியது 64 வயதிலும் ஏற்படுகிறது. செவ்வாய் சனிகளால் வரக்கூடியது 64-வது வயதிலு மேற்படுமெனச் சொல்லப்படுகிறது.

இரண்டுக்குடையவன் சுக்ரனுடன் கூடினாலும், சுக்ரனுடைய த்ருஷ்டி, கேந்த்ர த்ரிகோண ஸம்பந்தத்தை யடைந்தாலும், லக்னாதிபனுடன் மேற்கண்ட ஸம்பந்தத்தை யடைந்தாலும் நேத்ரத்தை விபரீதமாக்குவன்.

இரண்டில் சந்த்ர சூர்யர்களிருந்தாலும் இரவில் கண் தெரியாது.

லக்னாதிபதி, குடும்பாதிபதி, சூரியசுக்ரனுடன் சேர்ந்தால் பிறவிக்குருடனுவான். இவர்கள் தர்மாதிபதியுடன் சேர்ந்தால் பிதாவுக்கு நேத்ர பங்க மேற்படும். மாதா முதலியவர்களுக்கும் இவ்விதமே ஊஹிக்க வேண்டும். ஸ்வக்ஷேத்ரம், உச்சஸ்தானம் முதலியவைகளிலிருந்தால் தோஷமாகாது. சுப க்ரஹம் 6-8-12-களிலிருந்தால் மற்ற விடங்களில் தோஷத்தைச் செய்யும்.

தனாதிபதியும் பாவகாரகனும், 6-8-12-லிருக்க ஊமையாவார்கள்.

தனாதிபதி குரு அல்லது புதனுக இருந்து சத்ரு க்ரஹத்தில் அல்லது 6-8-12-இவைகளிலிருந்தால் வித்யாநாசமேற்படும்.

குரு புதர்கள், கேந்த்ரம் த்ரிகோணம் ஸ்வக்ஷேத்ரம் உச்ச க்ஷேத்ரம்-இவைகளிலிருக்க தோஷமற்ற வித்யை ஏற்படும்.

குரு புதர்களுக்கு 6-8-12 ல் நீச க்ரஹம் அல்லது ஆறுமிடத் அதிபதியிருந்து அவ்விடம் லக்னத்துக்கு கேந்த்ரமாகவோ, த்ரிகோணமாகவோ, ஸ்வக்ஷேத்ரமாகவோ உச்ச ஸ்தானமாகவோ இருக்க தனம் அபிவிருத்தியடையும்.

தனாதிபதி குருவாகி தன ஸ்தானத்திலிருந்து செவ்வாயுடன் சேர தனவானுவான்.

தனாதிபன் லாப ஸ்தானத்திலும், லாப ஸ்தானாதிபதி தன ஸ்தானத்திலுமிருந்தாலும், இருவரும் கேந்த்ரத்திலிருந்தாலும், தனாதிபன கேந்த்ர ராசியிலிருந்து லாபாதிபதி த்ரிகோண ராசியிலிருந்து குரு சுக்ரர்களின் ஸம்பந்தமோ த்ருஷ்டியோ பெற்றால் தனவானுகிறான்.

தனாதிபனும் லாபாதிபனும் சத்ரு ஸ்தானத்திலிருந்து தன லாப ஸ்தானங்களில் பாபிகளிருந்தாலும் பார்த்தாலும், நிர்த்தனனுவான்.

தன லாபாதிபதிகள் 6-8-12-லிருந்து பாபிகளுடன் கூடினால் தாரித்ரியம் ஜன்மம் முதல் உண்டாகும்.

6-8-12-ல் தன லாபாதிபதிகளிருந்து லாப ஸ்தானத்தில் குஜனும், தன ஸ்தானத்தில் ராகுவுமிருந்தால் ராஜ கோபத்தால் தன நாசமாகும். லாப ஸ்தானத்தில் குருவும், தன ஸ்தானத்தில் சுக்ரனுமிருந்து தன்லாபாதிபர்கள் சுப ஸம்பந்தம் பெற்றாலும் வ்யய ஸ்தானத்தில் சுப க்ரஹமிருந்தாலும் தர்ம மார்க்கத்தில் தனம் வ்யயமாகும்.

தனாதிபன் புதனுடன் சேர்ந்து கேந்த்ரத்திலிருந்தாலும், புத்ரன் மித்ரக்ஷேத்ரத்திலிருந்தாலும், அல்லது சுப க்ஷேத்ரத்திலிருந்தாலும் குடும்ப ரக்ஷணத்துக்குரிய ஸௌகர்யத்தை யடைவான்.

தன ஸ்தானத்தில் லக்னாதிபனும் லாபாதிபனுமிருந்து தனாதிபனிருக்கும் அம்சாதிபன் சுபனுனால் பெயரளவில் தனவானுவான். சந்த்ரனுக்கு 3-6-10-11 ஸ்தானங்களில் சுபரிருக்க

திடீரெனப் பணக்காரனுவான். கர்மாதிபதியும் தனாதிபனும் கேந்த்ரத்திகோணத்தில் சேர்ந்திருந்தாலும் தசமாதிபன் வலிக்கும் அம்சாதிபனும் லாபாதிபதியும் சேர்ந்திருந்தாலும் திடீரென தனவானுவான்.

தனஸ்தானாதிபன் வலிக்குமிடத்துக்கு தனலக்னாதிபர்கள் கேந்த்ரத்திலிருந்தாலும், நான்கு க்ரஹங்கள் ஸ்வக்ஷேத்ரத்திலிருந்தாலும், தனாதிபன் பலவானுய் 9-10-11 மிடங்களிலிருந்தாலும், சந்த்ரனும் செவ்வாயும் சேர்ந்து வலித்தாலும் தனவானுவான்.

தனாதிபன் கேந்த்ரம் அல்லது த்ரிகோணத்திலிருந்து க்ரூர ஷஷ்ட்யம்சத்திலிருந்தாலும், லாபாதிபன் வலிக்கும் அம்சேசன் க்ரூரஷஷ்ட்யம்சத்திலிருந்து குருசுக்ரர்களில் ஒருவரின் சேர்க்கை அல்லது பார்வை பெற்றாலும் ஸ்வல்ப தனத்தை யடைவான்.

சுபக்ரஹங்கள் 3-6-10-11-களிலிருந்தாலும், லக்னாதிபன் வலிக்கும் அம்சாதிபன் பலவானுய் வைசேஷிகாம்சம் பெற்று சுபர் பார்த்தாலும், தர்மாதிபதி வலிக்கும் அம்சாதிபன் வைசேஷிகாம்சம் பெற்று தனலாபாதிபர்களின் சேர்க்கை அல்லது பார்வை பெற்றாலும், நான்கு கேந்த்ரங்களிலும் சுபக்ரஹங்களிருந்தாலும் லக்னாதிபன், தனாதிபன், லாபாதிபன் வைசேஷிகாம்சம் பெறினும், கடகத்தில் புதனும், லாபஸ்தானத்தில் சனியுமிருந்தாலும், சனி ஸ்வஸ்தானம், புத்ரஸ்தானம், லாபஸ்தானம் இவைகளிலிருந்தாலும், குரு லாபஸ்தானத்திலிருந்து அது ஸ்வக்ஷேத்ரமாகி, சூரியன் ஐந்திலிருந்தாலும் குரு ஸ்வக்ஷேத்ரத்திலும் புத்ரஸ்தானத்தில் சந்த்ரனிருந்தாலும், ஸிம்மத்தில் சூரியனிருந்து லக்னத்தில் குருவும் குஜனும் சேர்ந்திருந்தாலும், கர்கடகம் லக்னமாய் அதில் சந்த்ரனிருந்து குருகுஜர்களுடன் கூடினாலும், செவ்வாய் ஸ்வக்ஷேத்ரத்திலிருந்து அது லக்னமாகி சனி சுக்ர புதர்களுடன் கூடினாலும், குரு ஸ்வக்ஷேத்ரத்திலிருந்து அது லக்னமாகி சந்த்ர குஜர்களுடன் கூடினாலும், புதன் லக்னத்திலிருந்து அது ஸ்வக்ஷேத்ரமாகி சனிசுக்ரர்களின் சேர்க்கை அல்லது பார்வை பெற்றாலும், சுக்ரன் லக்னத்திலிருந்து அது ஸ்வக்ஷேத்ரமாக ஆகி

சந்த்ரசூர்யர்களின் சேர்க்கை அல்லது பார்வை பெற்றாலும், கன்னியாராசியில் சனி செவ்வாய் ராகு கூர்ர்களிலிருந்தாலும், லக்னாதிபதிருக்கும் அம்சாதிபதியும், தனாதிபதிருக்கும் அம்சாதிபதியும் சுபர்களாகி, குருவால் பார்க்கப் பட்டாலும் மஹாதனி களுவான்.

லக்னாதிபதி இரண்டிலும், லாபாதிபதி பத்திலுமிருந்து குரு வால் பார்க்கப்பட்டாலும், லக்னாதிபதிருக்கும் அம்சாதிபதி கோபுராம்சம் பெற்று பத்துக்குடையவனால் பார்க்கப் பெற்றால் ஆபரம் நிஷ்கத்துக்கு அதிபதியாவான்.

பத்தாமிடத்துக்குடையவனிருக்கும் நவாம்ச ஸப்தமாம்சாதி பதிகள் பலம் பெற்றவர்களாய் குரு சுக்ர்களால் பார்க்கப்பட் டாலும், தனலாபாதிபர்கள் பலிஷ்டர்களாய் சுபஷஷ்ட்யம்சம் பெற்றாலும் இரண்டாயிரம் நிஷ்கங்களுக்கதிபதியாவான்.

லக்னாதிபதி வலிக்கும் த்ரிம்சாம்சாதிபதியுடன் கூடிய ஸப்த மாம்சாதிபதி வைசேஷிகாம்சம் பெற்றாலும், குருவும் லக்னாதி பனும் இரண்டிலோ வைசேஷிகாம்சம் பெற்றாலோ கேந்த்ரத்தி கோணத்திலோ இருக்க பதினாயிரநிஷ்கங்களுக்கதிபதியாவான்.

பத்துக்குடையவனிருக்கும் த்ரிம்சாம்ச ஸப்தமாம்சாதிபதிகள் ஜாவதாம்சம் பெறினும், 1-4-7-10 இடங்களில் சுபரிருந்து தனாதிபதி பாரவதாம்சம் அல்லது லிம்ஹாஸனாம்சம் பெற்றாலும். தனலாபாதிபதிகள் வைசேஷிகாம்சம் அல்லது ஸௌம்யஷஷ்ட் யம்சம் பெற்றாலும், 2. 9. 11-க்கு அதிபதிகள் பலிஷ்டர்களாய் கேந்த்ரம் பெற்றாலும் லக்ஷாதிபதியாகிறான்.

லக்னாதிபதியும், ஒன்பதுக்கதிபதியும் பரமோச்சாம்சத்தி லிருந்து லாபாதிபதி வைசேஷிகாம்சம் பெறின் கோடீச்வரனு வான்.

தனாதிபதியும் தர்மாதிபதியும் கேந்த்ரத்திலிருந்து, லக்னாதி பதி லக்ன நவாம்சாதிபதிகளால் பார்க்கப்பட்டாலும், 1-2-11 மிடங்களில் சுபர்கள் பலிஷ்டர்களாயிருந்து தனாதிபதி வலிக்கும் அம்சாதிபதியால் பார்க்கப்பட்டாலும் இளமையில் அதிக தன லாபமுண்டாகும்.

லாபாதிபன் லக்னத்திலும், லக்னாதிபதி தனத்திலும், தனாதிபதி லாபஸ்தானத்திலிருந்தாலும், லக்னாதிபன் சுபனுய் இரண்டிலிருந்தாலும் புதையல் அல்லது லாட்டரி முதலிய எதிர் பாராமல் கிடைக்கக்கூடிய தனம் கிடைக்கக் கூடும். ஒன்பதுக் குடையவன் எட்டாமிடத்திலிருந்தால் புதையல் கிடைக்கும். இப்பலன் ஒன்பதாமிடத்ததிபன் தசை சேரும் ஸமயம் நடக்கக் கூடும்.

எல்லாக்ரஹங்களைக் காட்டிலும் லக்னாதிபதி அதிகம் பலம் பெற்று, கேந்த்ரத்தில் வலித்து குருவுடன் சேர்ந்து தனாதிபனும் வைசேஷிகாம்சம் பெற்றாலும், லக்னாதிபன் வலிக்கும் அம்சாதி பதி பலவானாகி தனாதிபதிக்கு மித்ரனாகி கேந்த்ரம் அல்லது நிரி கோணம் பெற்றாலும், தனாதிபதி தனலாபாதிபனுடன் சேர்ந்து கேந்த்ரத்ரிகோணத்தில் வலித்து சுபர்களால் பார்க்கப் பெற்று லும் தானே ஸம்பாதித்து தனவானாவான்.

லக்னதனாதிபர்கள் பலிஷ்டர்களாய் மூன்றாமிடத்தில் வலித்து புருஷக்ரஹத்தால் பார்க்கப்பெற்றோ சேர்ந்தோ வலித் தாலும், வைசேஷிகாம்சம் பெற்ற த்ருதீயாதிபதியின் ஸம்பந்தம் பார்வைகளாப் பெற்றாலும் உடன்பிறந்தான் தனம் கிடைக்கும்.

தனாதிபன் ஸுகாதிபனுடன் கூடியோ பார்வை பெற்றோ, வைசேஷிகாம்சம் பெறின் பயிர்த் தொழிலிலிருந்தோ பந்துக்கள் மூலமாகவோ தனம் கிடைக்கும்.

தனாதிபன் ஸுகாதிபதியின் சேர்க்கை அல்லது பார்வை பெற்றால் மாதாவின் தனம் கிடைக்கும்.

தனஸ்தானாதிபன் புத்ரஸ்தானாதிபன் அல்லது புத்ரகாரகன் இவர்களின் த்ருஷ்டியாவது ஸம்பந்தமாவது பெற்று, பலவானாலும், லக்னாதிபதி வைசேஷிகாம்சத்திலிருந்து பலவானால் புத்ரனால் தனப்ராப்தியடைவான்.

ஆறுமதிபன் ஆறும் பாவகாரகர்களான சனி குஜர்களுடன் பலிஷ்டனாக தனாதிபனுடன் சேர்ந்தோ அல்லது பார்வை பெற் றால் எதிரிமூலம் தனம் கிடைக்கும்.

தனுதிபன் பலவானுய் ஸப்தமாதிபதி ஸப்தம பாவகாரகனுடன் சுக்ரனின் பார்வை அல்லது சேர்க்கை பெற்றால் களத்ரமூலம் தனப்ராப்தி. இரண்டாமிடத்ததிபனும் பத்தாமிடத்ததிபனும் பத்தாம் பாவகாரகர்களின் (குரு, சூர்யன், புதன், சனி) சேர்க்கை அல்லது பார்வை பெற்றால் தகப்பன் மூலம் தனம் கிடைக்கும். ஒன்பதுக் குடையவன் பலவானுய் எந்த பாவகாரகனுடன் அல்லது பாவாதிபதியுடன் சேர்க்கை அல்லது பார்வை பெறு இருந்தால், அதன் மூலமாக தனப்ராப்தி.

நான்காமிடத்தில் சூரியனிருக்க தகப்பன் தனம் கிடைக்கும். லாபாதிபதியிருக்கும் திக்கிலிருந்து தனம் கிடைக்கும்.

லாபாதிபன் கேந்த்ரத்ரிகோணத்திலிருந்து லாப ஸ்தானத்தில் பாபர்களிருந்தாலும், லாபாதிபன தனஸ்தானத்திலும், தனுதிபதி லாபஸ்தானத்திலிருந்தாலும், தனலாபாதிபர்கள் கேந்த்ரத்திலிருந்தாலும், லாபாதிபன் பாராவதம் முதலிய அம்சங்களிலேறினாலும், லாபாதிபதி கேந்த்ரத்ரிகோணங்களிலிருந்து சுபஸம்பந்தம் பெற்றாலும், லாபாதிபனுக்கு இரண்டு பனிரண்டாமிடங்களில் சுபர்களிருந்தாலும், லாபாதிபதி வலிக்கும் அம்சாதிபன் சுபஸம்பந்தம் பெற்றாலும், புதசுக்ரர்கள் இரண்டிலிருந்தாலும், எட்டாமிடத்தில் சுபர் வலித்தாலும் தனலாப முண்டு. மேஷத்தில் சந்த்ரனும், கும்பத்தில் சனியும், மகரத்தில் சுக்ரனும், தனுஸ்ஸில் சூரியனுமிருந்தால் தகப்பனின் தனத்தை யடையமாட்டான்.

லக்னம்சத்துக்கு ஒன்பதில் ராகு விருந்தால் பரஸ்த்ரீயின் சேர்க்கையால் தனநாசம்.

விரயஸ்தானத்தில் புதன் நின்றால் ஜ்ஞாதி கலஹத்தால் தனநாசம்.

விரயாதிபதி க்ரூரனுடன் சேர்ந்தால் த்ரவ்யம் உண்மையாயில்லாமல் இருப்பதாகக் (O. D. போன்ற) கணக்கு வைத்துக் கொண்டிருக்கும் த்ரவ்யத்துக்கு நாசமேற்படும்.

லக்னாதிபன் அற்ப பலமுள்ளவனுய் சூரியனுடன் சேர்ந்தும், தனுதிபன் வ்ரய ஸ்தானத்திலோ நீசனுகவோ இருந்து பாபரால் பார்க்கப்பட்டாலும், லாபாதிபன் விரயஸ்தானத்திலும், விரயாதிபதி தனஸ்தானத்திலுமிருந்தாலும், தனுதிபன் 6-8-12 ஸ்தானங்களிலிருந்து நீசனுனாலும், தனுதிபன் ஆறுமிடத்திலிருந்தும் பாபியுடன் சேர்ந்து நீசனுகி ராஜகாரகனுடன் கூடினாலும் தனுதிபன் வ்ரயத்திலும், விரயாதிபன் தனஸ்தானத்திலுமிருந்து லக்னாதிபன் பாபியுடன் சேர்ந்து ஆறுமிடத்திலிருந்தாலும், லாபஸ்தானத்தில் பத்தாமிடத்ததிபன் லக்னாதிபதியுடன் சேர்ந்து கெட்ட ஷஷ்ட்யம்சத்திலிருந்தாலும் ராஜதண்டத்தால் தனநாசம். தனலாபாதிபர்கள் செவ்வாயால் பார்க்கப் பெற்று பாபியுடன் கூடி துர்பலர்களாய் பாபாம்சத்திலிருந்தால் திருடர், நெருப்பு, அரசர்களால் தனநாசமுண்டாகும்.

தசமாதிபன் பாபியுடன் கூடி ஆறுமிடத்தில் வலித்து தனலாபாதிபதிகள் கெட்ட ஷஷ்ட்யம்சத்திலிருந்தால் லோகாபவாதத்தின் மூலம் தனநாசம்.

தனுதிபதி வலிக்கும் அம்சாதிபன் பாபியுடன் கூடி 6-8-12 களிலிருந்து லக்னாதிபதியால் பார்க்கப்பட்டால் திருடர், நெருப்பு, அரசன் மூலமாக தனநாசமேற்படும்.

தனுதிபதி வலிக்கும் அம்சாதிபதி 6-8-12 ல் பாபருடன் கூடி கெட்ட ஷஷ்ட்யம்சமேறினாலும், தனஸ்தானமோ, தனுதிபதினு லாபாதிபதியோ பாபியுடன் கூடினாலும், வ்ரயாதிபதியிருக்கும் அம்சாதிபன் தனுதிபன் — இவர்களின் சேர்க்கை அல்லது பார்வை பெற்றாலும், சூரியன் நீசனுய் பாபியுடன் கூடி கேந்த்ரத்திலிருந்தாலும், தனுதிபனிருக்கும் அம்சாதிபதி "காலதண்டம்" என்ற ஷஷ்ட்யம்சத்திலிருந்தாலும், லாபஸ்தானத்துக்கோ, லாபாதிபதிக்கோ பாப ஸம்பந்தமேற்பட்டாலும் தனமில்லாதவனிருன்.

விரயஸ்தானத்துக்கோ விரயஸ்தானாதிபதிக்கோ பாப ஸம்பந்தமிருந்தால் பாப மூலமாக தனநாசம்.

விரயஸ்தானத்துக்கோ விரயஸ்தானாதிபதிக்கோ சுப ஸம்பந்தமேற்பட்டாலும், சுக்ரன், குரு அல்லது சந்த்ரன், புதர்கள் இவர்களாவது விரயஸ்தானத்திலிருந்தால் தர்மமூலமாக தனநாச மேற்படும்.

விரயாதிபன் பலமில்லாதவனுகவோ, குளிகர் முதலியவர் களுடன் கூடவோ வலித்து ஆரும்பதிபதியின் ஸம்பந்தம் பெறின் சத்ருமூலம் தனநாசமேற்படும். விரயாதிபதி கெட்ட ஷஷ்டியம் சத்திலிருந்து பலமில்லாதவனுய் ஸப்தமாதிபதியின் ஸம்பந்தம் பெறில் ஸ்த்ரீமூலமாக தன நாசமேற்படும்.

விரயாதிபதி துர்பலனுப் செவ்வாய் ஸம்பந்தம் பெற்றால் உடன் பிறந்தோர் மூலம் தனநாசமுண்டாகும்.

வியயாதிபதி துர்பலனுய் புத்ரஸ்தானுதிபதியின் ஸம்பந்தம் பெற்றால் புத்ரன் மூலமாக தனநாசமேற்படும்.

விரய ஸ்தானுதிபன் துர்பலனுய் தசமஸ்தானுதிபன் ஸம்பந் தம் பெற்றால் தகப்பன் மூலம் தனநாசமுண்டாகும்.

விரய ஸ்தானுதிபன் நான்காமிடத்ததிபன் ஸம்பந்தம் பெற்றால் தாய் மூலம் தனநாசமாகும்.

தனுதிபன் சத்ரு ஸ்தானத்திலிருந்தால் சத்ரு மூலம் தன நாசம்.

தன ஸ்தானத்தில் புதனிருந்து சந்த்ரனால் பார்க்கப்பட்டால் தனநாசம்.

க்ஷீண சந்த்ரன் தன ஸ்தானத்திலிருந்து புதனால் பார்க்கப் பெற்றால் சேமித்து வைத்த பொருளுக்கு நாசமுண்டாகும்.

ராகு சனிகள் தன ஸ்தானத்திலிருந்து சுக்ர சந்த்ரர்களுடன் சேர்ந்து தனுதிபனுடனும் கூடினால் கெட்ட வழியில் தனநாசம்.

தன ஸ்தானத்தில் செவ்வாயிருக்க திருடர் நெருப்புக்களால் தனநாசம்.

த்ரிகோணத்தில் குருவிருக்க அன்னமளிப்பதால் தனநாசம்.

11-2-12-ஸ்தானங்களில் ராகுவிருக்க சயன விஷயத்தில் பொருளிழந்து அலைந்து திரிவான்.

எந்த க்ரஹம் த்ரிகோணுதிபதியினுடைய ஸம்பந்தம் பெற்று 6-8-12-க்கு அதிபதிகளுடன் சேர்ந்து தன ஸ்தானத்திலிருக் குமோ அந்த க்ரஹம் தனநாசம் செய்யும்.

லக்னுதிபன் எட்டிலும், அஷ்டமாதிபதி லக்னத்திலும் மாரக க்ரஹத்துடன் கூடினாலும், சத்ரு ஸ்தானுதிபன் லக்னத்திலும், லக்னுதிபன் சத்ரு ஸ்தானத்திலும், மாரகாதிபனுடன் சேர்ந்தா லும், சந்த்ர சூர்யர்கள் லக்னத்திலிருந்து மாரகாதிபதியின் பார்வை அல்லது சேர்க்கை பெற்றாலும், தனகாரகனுக்கு 2-4-5-ஸ்தானங்களில் பாபிகளிருந்தாலும், தனகாரகனுக்கு 3-6-ல் சுபர் களிருந்தாலும், பத்தாமிடத்தில் சுபரும், இரண்டில் பாபியுமிருந் தாலும் தரித்ரனுவான்.

தர்மாதிபன் வ்ரயத்திலும், விரயாதிபன் தன ஸ்தானத்திலும், மூன்றுமிடத்தில் பாபிகளிருக்குமானுலும், சந்த்ரன், குரு, சனி-இவர்கள் கேந்த்ரத்திலும், செவ்வாய் சூளிகர்கள் 5-12-8-இவை களிலிருந்தாலும், சந்த்ரன் சூர்யன் இவர்கள் ஒரே ராசியில் ஒருவர் அம்சத்தில் மற்றொருவராக மாறியிருந்தாலும் எப்போதும் தரித்ரனுவான்.

சூர்ய சந்த்ரர்கள் கும்பத்திலும் மற்ற க்ரஹங்கள் நீசராசியி லிருந்தாலும், புதன் சந்த்ரன் செவ்வாய் சனிகள் நீசராசியிலும், மகரத்தில் சுக்ரனுமிருந்தாலும், நீசனுன சூரியன் 1-5-9-களிலும், அஷ்டமத்தில் செவ்வாயுமிருந்தாலும் ராஜபுத்ரனுயினும் தரித்ரனுவான்.

லக்னுதிபன் - குரு, புதன், சுக்ரர்களுடன் கூடி கேந்த்ரத்தி லிருந்தாலும், லக்னுதிபன் சுபர் விட்டிலோ, உச்ச ஸ்தானத் திலோ, மித்ர ஸ்தானத்திலோ வலித்து சுப க்ரஹத்தால் பார்க்கப்பட்டாலும், தனுதிபதியும் குருவும் தன ஸ்தானத்திலோ கேந்த்ரத்திலோ இருந்தாலும், சூரியன் தேவலோகாம்சம் பெற்று லக்னுதிபன் பலம் பெற்றிருந்தாலும் லக்னுதிபதி பலம் பெற்று சுப வர்க்கத்தை யடைந்து கேந்த்ராதிபதியுடன் சேர்ந்தாலும், சூரியன் லக்னத்திலிருந்து சுபரால் பார்க்கப்பட்டு லக்னுதிபன் 10 லிருந்தாலும், கேந்த்ரம், தன ஸ்தானம், 5-9-களில் லக்னுதிபதி குரு - இவர்களின் யோகமிருக்குமானுலும், சுப க்ரஹங்கள் லாப ஸ்தானம், புத்ர ஸ்தானங்களிலிருந்தாலும், தர்மாதிபதி லக்னத்தி லிருந்து 4-9-க்கு அதிபர்கள் தன ஸ்தானத்தைப் பார்த்தாலும் ஸம்பத்துள்ளவனுவான்.

சுப க்ரஹங்களுடன் வலிக்கும் தன ஸ்தானாதிபன் தன ஸ்தானத்திலோ கேந்த்ரத்திலோ இருந்தாலும் தன ஸ்தானம் அல்லது தனாதிபன் சுப ஸம்பந்தம் பெற்றால் குடும்பியாவான்.

தனாதிபன் கோபுராம்சத்திலும் தனாதிபன் வலிக்கும் அம்சாதிபன் சுபனுடன் லிம்ஹாஸனாம்சமேறினால் 50 ஜனங்களுக்கு அதிபனாவான். தனாதிபதி சுப க்ரஹ ஸம்பந்தத்துடன் பாராவதாம்சத்திலிருக்க இருபது ஜனங்களுக்கதிபதியாவான்.

குரு லிம்மாஸனாம்சத்திலும், சுக்ரன் கோபுராம்சத்திலும், இரண்டுக்குடையவன் ஜாராவதாம்சத்திலுமிருக்க அநேக ஜனங்களுக்கு அதிபதியாவான்.

தன ஸ்தானாதிபதி லிம்மாஸனாம்சத்திலோ பாராவதாம்சத்திலோ குரு ஸம்பந்தம் அல்லது பார்வையுடன் இருக்க முப்பது ஜனங்களைக் காப்பாற்றுவான்.

அஷ்டமாதிபனுக்கு பாபஸம்பந்தம், பாபத்ருஷ்டி, பாபராசி, பாப க்ரஹமத்தி இவைகள் நேர்ந்தாலும் அஷ்டமத்திலேயிருந்தாலும் அவமானமடைவான்.

விருஷபத்தில் சூரியனும், மீனத்தில் சந்த்ரனும், மேஷத்தில் சனியும், கடகத்தில் செவ்வாயுமிருக்க தனமற்றவனுவான். பாக்யாதிபன் விரயத்திலும் கேந்த்ரத்தில் பாபருமிருக்க தனம் முதலியவைகளில்லாதவனுவான். க்ரஹங்களனைத்தும் லக்னம், 2 அல்லது 7-ல் இருக்க பரிவார நாசமுண்டாகும்.

இரண்டுக்குடையவன் கேந்த்ரத்திலிருந்து சுப க்ரஹத்தால் பார்க்கப்பெற்றாலும், தன ஸ்தானத்தில் சுப க்ரஹமிருந்தாலும், தனாதிபன் கேந்த்ரத்திலிருந்தாலும், தனாதிபதி தன் உச்ச கேஷத்ரம் மித்ரகேஷத்ரம், தன் வர்க்கம், கோபுராம்சம் - இவைகளிலிருந்தால் அழகான முகமுள்ளவனுகவும், தனிகனுகவும்வான்.

தன ஸ்தானம் பாபருடன் கூடினாலும் தனாதிபன் பாப ஸம்பந்தம் பெற்றாலும் நீசராசியை அடைந்தாலும், பாப த்ருஷ்டி பெற்றாலும் நல்ல முகமில்லாதவனுவான்.

தனாதிபன் குளிகனுடன் கூட, கோபியாவான். பாபிகளின் சேர்க்கையிருந்தால் நீசனுவான். சுப ஸம்பந்தம் பெற்று த்ரிகோணம் அல்லது கேந்த்ரம் அல்லது உச்சராசியில் வலித்து சுப த்ருஷ்டியுடன் புருஷ க்ரஹ ஸம்பந்தம் பெற்றால் வாசாலகனுகவும், தந்த்ரமறிந்தவனுகவுமாவான்.

தனாதிபன் கேந்த்ரத்திலிருந்தாலும், பாராவதாம்சமேறினாலும், பரமோச்சத்திலிருந்தாலும், லிம்ஹாஸனாம்சத்திலிருந்தாலும், குருவோ சுக்ரனோ வர்கோத்தமாம்சம் பெற்று புதனுடன் சேர்ந்தாலும் மிக வாயாடியாவான்.

தனஸ்தானாதிபன் வலிக்கும் அம்சநாதன் சுபனுகவோ, சுப ஸம்பந்தம் பெற்றோ அல்லது கோபுராம்சமடைந்தாலும் அதிக ஸாமர்த்தியமுள்ள வாசாலகனுகிறான்.

தனாதிபன் பலவானுய், சுபஸம்பந்தம் பெற்று வர்கோத்தமாம்சத்திலுமிருந்தால் பேசுவதில் வல்லவனுவான்.

தனாதிபன் குருவுடன் கூடி பாராவதாம்சம் பெற்றால் பேசும் திறமையுள்ளவனுவான். தனாதிபன் சுக்ரபுதர்களுடன் கூடி ஜாராவதாம்சம் பெற்றாலும், உச்சகேஷத்ரம், மித்ரகேஷத்ரத்திலிருந்தாலும் பேசுவதில் ஸாமர்த்தியம் பெற்றவனுவான்.

தனாதிபன் பாபருடன் சேர்ந்து பத்தில், அல்லது நீசஸ்தானத்திலோ, அல்லது அஸ்தங்கதனால் ஸபைக் கூச்சமுள்ளவனுவான். தனஸ்தானத்தில் மாந்தியும் சூரியனுமிருந்து பாபிகளும் பார்க்க ஜடனுவான்.

கேந்த்ரத்தில் புதனும், தனாதிபன் பலம் பெற்று சுக்ரன் சுப ஸம்பந்தம் பெற்று 2, 3-வது ஸ்தானங்களில் வலித்தாலும், சுக்ரன் உச்சஸ்தானமான இரண்டாமிடத்திலிருந்தாலும் சிறந்த சோதிடனுவான்.

தனஸ்தானத்தில் செவ்வாயிருந்து சந்த்ரனுடன் சேர்ந்து புதனால் பார்க்கப் பெற்றாலும், கேந்த்ரத்திலிருந்தாலும், இரண்டாம் பாவாதிபதி புதனுடன் தன் உச்சஸ்தானத்திலிருந்து, குரு

லக்னத்திலும், சனி அஷ்டமத்திலிருந்தாலும், குரு கேந்த்ரத்ரி கோணத்திலும், சுக்ரன் தன் உச்சஸ்தானத்திலும் தனபாவாதிபன் புதனுகவுமிருக்க கணக்கில் அதிக மேதையுள்ளவனுவான்.

தனபாவாதிபன் சூரியனுயிருந்து, செவ்வாய் தனஸ்தானத்தில் வலித்து குரு சுக்ரர்களால் பார்க்கப்பெற்று புதன் பாராவதாம்சத்தையடைந்தால் யுக்திகளறிந்தவனுவான.

குரு அல்லது சுக்ரன் தனஸ்தானுதிபனுகி சூரிய செவ்வாய்களின த்ருஷ்டியை அடைந்தாலும், மூலத்ரிகோணம் அல்லது உச்சவீட்டிலிருந்தாலும் தர்க்கசாஸ்திரத்தில் வல்லவனுவான.

தனபாவாதிபதி குருவாகி பூர்ண பலவானுய் சூர்ய சுக்ரர்களின பார்வை பெற்றால் வியாகரணத்தில் வல்லுநனுவான.

புதன் தனபாவாதிபதியாய் உச்சஸ்தானத்திலிருந்து சனி கோபுராம்சத்திலிருந்தாலும், குரு ஸிம்ஹாஸனாம்சத்திலிருந்தாலும் கேந்த்ரத்ரிகோணங்களில் குருவலித்து புதசுக்ரர்களால் பார்க்கப்பெற்று சனி பாராவதத்திலிருந்தாலும், சுக்ரன் லக்னம் அல்லது கேந்த்ரத்தில் உத்தமாம்சத்திலிருந்து சந்திர தேவலோகாம்சத்திலிருந்தாலும் லக்னுதிபன் தன ஸ்தானத்திலிருந்தாலும், லக்னத்தில் சுபர் வலித்து உச்சத்திலிருந்தாலும், லக்னுதிபன பாராவதத்திலிருந்தாலும் வ்யயத்தில் சுக்ரனிருந்தாலும் லக்னுதிபதி தனத்திலிருந்தாலும் லக்னத்தில் சுபர்கள் வலித்து உச்ச ஸ்தானத்திலிருந்தாலும், சிறந்த வேதாந்த பண்டிதனுவான்.

தனபாவாதிபன் அம்சத்தில் புதனிருந்து குரு கேந்த்ரத்திலும் சுக்ரன் ஸிம்ஹாஸனம் அல்லது கோபுராம்சத்திலிருக்க ஆறு சாஸ்த்ரங்களையும் வாசிப்பவனுவான்.

தனுதிபனிருக்கும் ராசிக்குடையவன் சனியாய் பாபியுடன் கேந்த்ரம் அல்லது த்ரிகோணத்திலிருந்தாலும் இதே மாதிரி செவ்வாயிருந்தாலும் வஞ்சகனுவான்.

சூரியன் வலிக்கும் அம்சாதிபன் தனபாவத்திலிருந்து பலிஷ்டனுனாலும், அல்லது அம்சாதிபன் வைசேஷிகத்திலிருந்தாலும் பரிஹாஸம் செய்பவனுவான்.

குரு தனஸ்தானத்தில் பலவானுக இருந்து தனாதிபதியிருக்கும் அம்சாதிபன் கேந்த்ரம் அல்லது த்ரிகோணத்தில் வலித்து சுபர்பார்க்க வேதத்தில் க்ரமாந்தரமும் சாஸ்திரமும் அதிகரிபரன.

லக்னுதிபன் வலிக்கும் அம்சாதிபன் இருக்கும் ராசியதிபனிற்கும் அம்சாதிபன் பலம் பெற்றவனுய், வைசேஷிகாம்சத்தையடைந்து சுபதிருஷ்டி பெற்றாலும், லாபாதிபன் தனுதிபனுடன சேர்ந்து கர்மாதிபன் வலிக்கும் அம்சாதிபனின பார்வை பெற்று பரமோச்சம் அல்லது வைசேஷிகாம்சமடைந்தாலும், தனுதிபன் தர்மாதிபனுடன் சேர்ந்தும் லக்னுதிபதியிருக்கும் அம்சநாதன் பார்வை பெற்றாலும், கேந்த்ரத்தை அடைந்து சுபதிருஷ்டி பெற்றாலும், 1-2-11 ஸ்தானங்களில் சுபகிரஹங்களிருந்து அந்த ஸ்தானம் உச்சமித்ரக்ஷேத்ரங்களாகி இதில் கேரும் வைசேஷிகாம்சம் உச்சாம்சமாகி தனுதிபன வலிக்கும அம்சாதிபதியால் பார்க்கப்பட்டாலும் விசேஷமான தனலாபமுண்டு.

லக்னுதிபன் தனத்திலும், தனுதிபன் லாபத்திலும் அல்லது லாபாதிபதி லக்னத்திலுமிருக்க அதிகமான நிதிகள கிடைக்கும்.

லக்னுதிபன் விசேஷ பலிஷ்டனுய் குருவுடன் கேந்த்ரத்திலிருந்து தனுதிபன் வைசேஷிகத்திலிருந்தாலும் லக்னுதிபனுடன் சேர்ந்த அம்சநாதன் வலிக்கும் ராசிநாதன் பலவானுய், தனுதிபனுக்கு மித்ரனுய் கேந்த்ரம், நிரிகோணம, ஸுவகேஷ்தரம் இவைகளிலொன்றில் வலித்தாலும், தனுதிபன லாபலக்னுதிபர்களுடன் கூடி த்ரிகோணம் அல்லது கேந்த்ரத்தில் இருந்து கால பலம் பெற்று சுபதிருஷ்டி பெற்றாலும், தனுதிபதியிருக்கும் ராசியில் லக்னுதிபன் சுபருடன் வலித்து அந்த ராசியதிபதி பலவானுய லக்னத்திலிருந்தாலும், தனது முயற்சியால் தனலாபத்தையடைவான். இவ்விதமே லாபாதிபனைக் கொண்டும பலன் சொல்வர் சிலர்.

தனலக்னுதிபர்கள் 3-மிடத்தில் பலம் பெற்றிருந்து புருஷகாரஸம்பந்தம் பார்வை பெற்று வைசேஷிகாம்சத்தை யடைந்தாலும், த்ருதீயாதிபதி ஸஹோதரகாரகனுடன் இரண்டிலிருந்து, லக்னுதிபனின் ஸம்பந்தம் அல்லது பார்வை பெற்று வைசேஷிகாம்சத்திலிருந்தாலும் ப்ராதாவின் தனப்ராப்தி உண்டாகும்.

தனலக்னாதிபர்கள் ஒருவர்க்கொருவர் பார்வையுடன் கேந்த்ரத்தில் சுபாம்சம் பெற்றாலும், லக்னாதிபதிகளால் தனாதிபன் பார்க்கப் பெற்றாலும் அநேக வழிகளில் தனத்தை அடைகிறான்.

தனாதிபன் லக்னாதிபதியால் பார்க்கப் பெற்றாலும், சேர்ந்தாலும், த்ருதீயாதிபதி செவ்வாய்களின் ஸம்பந்தம் அல்லது சேர்க்கையை லக்னாதிபன் அடைந்தாலும் தன் முயற்சியால் தனத்தை அடைகிறான்.

தனாதிபதி பலவானாய் வைசேஷிகாம்சம் பெற்று சுகாதிபதி பார்வை அல்லது சம்பந்தம் பெற்றால், தாய்வழியாக தனத்தை அடைகிறான் அல்லது பயிர்த்தொழில் மூலம் தனத்தைப் பெறுவான்.

தனாதிபதி 3-க்குடையவன் சம்பந்தம் அல்லது பார்வை பெற்று 2-ல் இருந்து குருவுடன் கூடி லக்னாதிபதி சம்பந்தம் திருஷ்டிகளை அடைந்து வைசேஷிகாம்சம் பெற்றால் ப்ராதா மூலம் தனத்தை அடைகிறான்.

தனாதிபதி பலவானாய் பஞ்சமாதிபதி புத்திரகாரகன் இவர்களுடைய சேர்க்கை அல்லது பார்வை பெற்று லக்னாதிபதி பலவானாய் வைசேஷிகாம்சத்தில் இருக்க புத்திரன் மூலம் தனப் ப்ராப்தி.

தனாதிபதி பலவானாய் வைசேஷிகாம்சம் பெற்று சத்ருஸ்தானாதிபன் சத்ருகாரகர்களுடன் கூடி லக்னாதிபன் பலிஷ்டனாய் வைசேஷிகாம்சமும் அடைந்தால் எதிரிகளிடமிருந்து தனத்தை அடைகிறான்.

சப்தமாதிபன், சப்தமபாவகாரகன் இவர்கள் வைசேஷிகாம்சம் பெற்றால் பத்னி மூலம் தன ப்ராப்தி.

தர்மாதிபன், சூரியன், குரு, இவர்களுடன் வைசேஷிகாம்சம் பெற்றால் பிதா, குரு, தர்மம் இவைகள் மூலம் தனத்தை அடைகிறான்.

தசமாதிபதி, குரு, சூரியன், புதன், சனி இவர்களுடன் சேர்ந்தும், ஒருவர்க்கொருவர் த்ருஷ்டியுமிருந்தால் தானம், கீர்த்தி, இவைகளால் தனப்ராப்தி.

லாபாதிபதி, குரு த்ருஷ்டி – சம்பந்தம் இவைகளைக் கொண்டு தனவிஷயத்தில் தரத்தை நிர்ணயிக்கின்றனர். இரண்டிலிருக்கும் பாபிகள் பலமுள்ளவர்களா நீச சத்ரு க்ஷேத்ரங்கள் அஸ்தமனம் இவைகளை அடைந்த பாவக்ரஹங்களின் த்ருஷ்டி சம்பந்தங்களைக் கொண்டு தன பாவத்திலுள்ளவர் பலமடைகிறார்.

லக்னாதிபதி துர்பலனாய் பாப ஸ்ஹவாஸம் பெற்று விரயத்திலிருக்க, தனாதிபதி சூரியனுடன் சேர்ந்து நீசத்தை அடைந்து அசுப த்ருஷ்டியும் பெற்றால் ஜாதகனுடைய த்ரவியத்தை அரசன் எடுத்துக் கொள்கிறான்.

விரயாதிபதி தனத்திலும், லாபாதிபதி விரயத்திலும், தனாதிபதி 6, 8, 12-ல் நீசனுமில் தண்டனையினால் தனநாசம் ஏற்படும்.

தனாதிபதி 8-லிருந்து பாபசகவாஸம் பெற்று நீச ராசியில் ராஜகாரகனுடன் சேர்ந்தால் மேற்கூறிய பலனே.

வ்ரயாதிபன் தனத்திலும், தனாதிபன் வ்ரயத்திலும் இருந்து லக்னாதிபனால் பார்க்கப்பட்டாலும் லக்னாதிபதி பாபியுடன் கூடி அஷ்டமத்திலிருந்தாலும் ராஜகோபத்தால் தனநாசம்.

தசமாதிபதி லக்னாதிபதியுடன் கூடி, லாப ஸ்தானத்தில், யமகண்டகாம்சத்தில் அல்லது தம்ஷ்ட்ராகராளாம்சத்தில் இருந்தால் ராஜகோபத்தால் தனநாசம்.

லாபாதிபதி செவ்வாயின் சம்பந்தம் பார்வை பெற்று துர்பலனாய் பாபியுடன் கூடி க்ரூராம்சம் பெற்று 6-க்குடையவனின் பார்வை அல்லது சம்பந்தம் பெற்றால் அக்னி, அரசன், திருடர் இவர்களால் தனநாசம்.

தசமாதிபதி அஷ்டமத்திலிருந்து, க்ரூரம் முதலிய அம்சத்தில் தனலாபாதிபதிகளுடன் கூட, லோகாபவாதத்தால் தனநாசம்.

தனாதிபதி வ்ருச்சிக அம்சாதிபதி. பாப சகவாசம் பெற்று 6-8-12-லிருந்து லக்னாதிபன் த்ருஷ்டி பெற, அக்னி, திருடர் அரசர்களால் தனநாசம்.

லக்னாதிபன், அம்சாதிபன் இருவரும் குருவின் பார்வை பெற்று, மிருது அம்சங்களை அடைந்தாலும், தனலாபாதிபதி

சேர்க்கை பெற்ற த்ரேக்காண அம்சாதிபதிகள் கேந்திரம், த்ரி கோணங்களில் வைசேஷிகாம்சம் பெற்றாலும் கடன் கொடுப்ப வனுவான்.

தனஸ்தானத்தில் பாபியும், லக்னாதிபன் வ்ரயத்திலுமிருந்து கர்மாதிபதி லாபாதிபதியுடன் சேர்ந்து அல்லது பார்க்கப்பட்டா லும், தனாதிபதி அஸ்தங்கதனாகி நீச ராசியை அடைந்து 2-8 ஸ்தானங்களில் பாபிகளிருந்தாலும், தனலாபாதிபதிகள் நீச ராசி அல்லது க்ரூரஷஷ்டியம்சத்திலிருந்தாலும் லாபாதிபதி வசிக்கும் ராசியின் அம்சாதிபதி, 6, 8, 12-ல் சுபர்களுடன் கூடி னாலும் க்ரூரஷஷ்டி அம்சம் பெற்றாலும் கடனாளியாவான்.

தனாதிபதி ராகுவுடன் சேர்ந்து சத்ருஸ்தானத்திலிருந்தாலும், ராகு வசிக்கும் ராசியதிபனுடன் சேர்ந்தாலும், ரோகஸ்தானாதிபன் தனாதிபனுடன் கூடினாலும், தனாதிபதி வசிக்கும் அம்சாதிபதி யுடன் கூடிய க்ரஹம் சத்ருஸ்தானாதிபனுடன் கூடினாலும் அவர வர்கள் புக்திகாலங்களில் தன்ன ரோகமும் பதனமும் உண்டாகும்.

சனி தனாதிபனுடன் சம்பந்தம் பெற்றாலும் பாபிகளுடன் கூடி னாலும் தன்தங்களுக்கு வாயுவினால் பழுதுண்டாகும்.

தனாதிபதியுடன கூடிய புதன், ராகு கேது இவர்களில் ஒரு வருடன் சேர்ந்து சத்ருஸ்தானத்திலிருந்தாலும், ராகு வசிக்கும் ராசியதிபனுடன் கூடினாலும், அவனுடைய புக்தியில் கன்னத்தில் ரோகமுண்டாகும்.

10, 6க்கு அதிபர்கள் லக்னத்தில் வசித்து சுக்கிரன் தனாதி பதியுடன் கூடினால் அரசன் கோபத்தினால் கண் பறிக்கப் படலாம்.

தனாதிபன், சுக்கிர சந்திரர்களுடன் கூடி கேந்திரத்திலிருக்க வெள்ளிப்பாத்திரத்தில் சாப்பிடுபவனுவான்.

குரு புதனுடன் கேந்த்ரத்திலிருக்க தங்கப் பாத்திரம் கிடைக் கலாம்.

தனாதிபன் பலவானாய், தன் அம்சத்திலிருக்க தங்கத்திற்கு சமமான பாத்திரம் கிடைக்கும்.

தனாதிபன் மூத்வம்சத்திலிருந்தாலும் பலிஷ்டனாய் பார வதத்திலிருந்தாலும் தங்கப் பாத்திரம் கிடைக்கும்.

தனாதிபன் கேந்த்ரத்தில் வசித்து மித்ரனால் அல்லது சுபனால் பார்க்கப்பட அநேக பாத்திரங்களுண்டாகும்.

தனாதிபன் லக்னாதிபனுடன் சேர்ந்து 6-லிருக்க இரும்புப் பாத்திரம் கிடைக்கும்.

தனாதிபன் அஷ்டமாதிபதியுடன் கூடினாலும் அஷ்டமத்தி லிருந்தாலும் வலுவான இரும்புப் பாத்திரம் கிடைக்கும்.

தனாதிபன் பலவானாய், வைசேஷிகாம்சம் அடையாமல் சுப த்ருஷ்டி மட்டும் அடைந்தால் வெண்கலபாத்திரம் கிடைக்கும்.

தனாதிபன் இருக்கும் அம்சாதிபன், எந்த ராசியம்சத்தில் இருக்கிறானோ; அந்த ராசியதிபதி சுபாகளுடன் கூடினாலும் வெண்கலப்பாத்திரம் கிடைக்கும்.

தனஸ்தானத்தில் பாபிகளிருந்தாலும், தனாதிபதி வசிக்கும் அம்சாதிபதி, அதே அம்சத்திலிருந்தாலும், தனாதிபதி துர்பலர் களான சுபர்களின் பார்வையில்லாமலிருந்தாலும் சமமாயும் கெட்டியாயுமுள்ள பாத்திரம் கிடைக்கும்.

தனஸ்தானத்தில் சுபர் இருக்க தனாதிபதி சுபருடன் சேர்ந்து சுபக்ரஹத்தால் பார்க்கப்பட்டாலும், தனாதிபன் பலவானாய் வைசேஷிகாம்சம் பெற்றாலும் குரு சுக்கிரர்களின் பார்வை பெற்றா லும், தனாதிபன் தனஸ்தானத்திலோ உச்ச த்ரிகோணங்களிலோ பலிஷ்டனாய் குரு வைசேஷிகாம்சம் பெற்று சுபரால் பார்க்கப் பட்டாலும் சுகபோஜனம் செய்பவனுவான்.

தனாதிபன் குரு புதர்களுடன் கூடி அல்லது பார்வை பெற்று வைசேஷிகாம்சம் மூத்வம்சம் அடைந்தாலும் 2-ல் குரு சுக்கிரர் களிருந்து தனாதிபதி புதன் பார்வை பெற்று வைசேஷிகாமசம் பெற்றாலும் தனாதிபன் 3-லோ கேந்த்ரத்திலோ 6, 10, 11 இவை களிலோ இருந்து பலிஷ்டர்களான சுபர்களால் பார்க்கப் பட்டாலும் தனஸ்தானம் உச்ச க்ஷேத்ரமாயிருந்து அதில் சுபர் இருக்க மித்ரர்களான சுபர்களால் பார்க்கப்பட்டாலும் தனாதிபதி வைசேஷிகாம்சம் பெற்றாலும் அன்னதாதாவாகிறான்.

தனாதிபதி சுபனுடனிருந்து உச்சத்திலோ சுபக்ஷேத்ரம் பெற் றோ மூத்வம்சங்களிலோ இருந்தால் சிறிது சாப்பிடுபவனாகவும் ருசியில் ஆசையுள்ளவனாகவுமாவான்.

1, 7, 8, 2 ஸ்தானங்களில் சூரியன் வசித்து செவ்வாயால் பார்க்கப்பட்டாலும், செவ்வாய் வசித்து சூரியனால் பார்க்கப் பட்டாலும் கொப்புளம் கொருப்பு போக்கிரிகள் மூலம் பயமுண் டாகும்.

1. 12, 6, 7 ஸ்தானங்களில் குஜன் இருக்க சூரியன் குளிகனு டன் சேர்ந்து பார்த்தாலும், செவ்வாய் அஸ்தமனம் அடைந்தோ. சத்ரு கேஷேத்ரங்களை அடைந்தோ இருந்தாலும் செவ்வாய் சனியுடனும் சேர்ந்து 2, 8–லிருந்து தனாதிபதி சனி சம் பந்தம் அல்லது பார்வை பெற்றிருந்தாலும் அருவருக்கத் தக்க ரத்தம் முதலிய ரோகத்தை அடைவான்.

சனி பாபியால் பார்க்கப்பட்டு அல்லது பாபிகளுடன் சேர்ந்து 2-லிருந்தாலும், சனி தனாதிபதியால் பார்க்கப்பட்டோ சேர்ந்தோ 2-ல் வசித்தாலும், நாயினால் பயமுண்டாகும்.

இரண்டில் ராகு குளிகனுடன் சம்பந்தம் அல்லது பார்வை பெற்றிருந்தால் பாம்பினால் பயமடைவான்.

லக்னாதிபதி சுபனுக இருந்து இரண்டிலிருந்தால் புதையல், லாடரி முதலிய எதிர்பாராத தனம் கிடைக்கும்.

கபக்ரகங்கள் இரண்டிலிருந்து துர்பலர்களாய் பாபியால் பார்க்கப்பட நிலைத்தவார்த்தையில்லாதவனுவான்.

தனாதிபன், சந்திரன் துர்பலர்களாய் க்ரூராம்சத்தை அடைய, வாயு பிடையுண்டாகும்.

இரண்டில் பாபிகளிருந்தாலும் அல்லது பார்த்தாலும் இரண்டுக்குடையவன் பாபியுடன் கூடி க்ரூராம்சம் ஏறினாலும் பாபியால் பார்க்கப்பட்டாலும் இவன் மரணிடப்படலாம்.

மூன்றும் பாவம்.

மேஷம் :— மூன்றுவதானால் த்ரைவர்ணிகர்களுடைய சினேக மும், பரோபகாரத்தில் புத்தியும் சுத்தமும் அதிக வித்தையு முள்ளவனுவான்.

ரிஷபம் :— மூன்றுவதாகில் மிக ப்ரதாபமுள்ளவனுகவும் தாதாவாகவும் சீர்த்தியுடையவனுகவும் சூரனுகவும் கவியாகவு மாவான்.

மிதுனம் :— மூன்றுவதாகில் உயர்ந்த வாகனமுடையவனு கவும் ஸ்த்ரீகளிடத்தில் ப்ரியமுடையவனுகவும் மதிக்கத்தக்க நடத்தையுடையவனுகவும் ப்ரபுக்களால் கொண்டாடத் தக்கவனு கவுமாவான்.

கடகம் :— மூன்றுவதாகில் நற்குணங்களுடையவனுகவும் பயிர் செய்பவனுகவும் நல்லொழுக்கமுள்ளவனுகவும் நல்ல சினேக முடைய வனுகவுமாகிறான்.

சிம்மம் :— மூன்றுவதாகில் சூரனுகவும் பரத்ரவ்யத்தில் ஆசை யுள்ளவனுகவும் ஹிம்ஸை செய்பவனுகவும் கெட்டகாரியத்தில் ஆசையுள்ளவனுகவும் நிந்திக்கத்தக்கவனுகவும் கெட்ட சினேக முள்ளவனுகவும் ஆகிறான்.

கன்னி :— மூன்றுமிடமாகில் சாஸ்த்ரத்தில் பற்றுள்ளவனு கவும், நண்டடத்தை யுள்ளவனுகவும், சிறிது கோபமுள்ளவனு கவும், அதிதி, தேவதை இவர்களிடத்தில் பக்தியுள்ளவனுகவு மாவான்.

துலாம் :— மூன்றுவதாகில் துஷ்டர்கள் சகவாஸமுள்ளவனு கவும் அருவருக்கத் தக்க காரியத்தையுடையவனுகவும் ஏவலாளர் கள், பிள்ளை, பணங்களுடன் கூடியவனுகவும் ஆவான்.

விருச்சிகம் :— மூன்றுவதாகில் துன்மார்க்கத்தில் இழிந்தவர் கள் சினேகமும், கன்றி மறந்தவர்களும் கலகத்தில் ஆசையுள்ளவர் களுமானவர்களுடன் விரோதத்தையுடையவனுமாவான்.

தனுசு :— மூன்றுவதாகில் அரசாங்க ஊழியர்களும் ப்ரபுக் களும் சிப்பாய்களும் நல்வழியில் நடப்பவர்களும் ஒழுக்கமுள்ளவர் களுமானவர்களுடன் சினேகமுள்ளவனுவான்.

மகரம் :— மூன்றுவதாகில் சுகம் கிறைந்தவனுவான். தேவதை, குரு இவர்களிடத்தில் பக்தியுடையவன். தனவான். பாண்டித்ய முள்ளவன்.

கும்பம் :— மூன்றுவதானால் வ்ரதானுஷ்டானமுள்ளவனு கவும், சீர்த்திமான்களும், சத்யவான்களும் ஒழுக்கமுள்ள

வர்களுமான சாதுக்களின் சிநேகிதமும், வஞ்சகர்கள் சிநேகமும் உள்ளவனுவான்.

மீனம்:— மூன்றுவதாகில் அதிக ஐச்வர்யத்துடன் கூடினவனும், புத்திரன் புண்ணியம் முதலியவைகளுடன் கூடினவனும், எல்லா ஜனங்களிடத்திலும் விசுவாசம் நிறைந்தவனுமாவான்.

மூன்றும் பாவாதிபதி அந்தந்த பாவங்களிலிருப்பதன் பலன்.

லக்னத்தில்:— தன் பந்துக்களால் சுகானுபவத்தில் பற்றில்லாதவனுகவும், சிநேகிதர்களுடன் அடிமை வேலையைச் செய்பவனுகவும், கஷ்டமான காரியத்தில் சமர்த்தனுகவும் ஆவான்.

இரண்டில்:— பிச்சை எடுத்து உண்பவனுகவும் பாபர்களான க்ரகங்கள் சேர்ந்தால் பந்து விரோதியாகவும் சுபர்கள் சேர்ந்தால் பந்துக்களுக்குள் இஷ்டனுகவும் ஆவான்.

மூன்றில்:— அரசாங்கத்தில் மந்திரியாகவும், மிக சாமர்த்தியமுள்ளவனுகவும், அரசாங்கத்தில் ஊழியம் செய்வதின் மூலம் அதிக தனத்தை அடைபவனுகவுமாவான்.

நான்கில்:— பித்தத்தால் வயிற்றில் வேதனையும், வயிற்றில் சஸ்த்ர சிகித்ஸை செய்யப்படுபவனுகவும், பாபக்ரஹ சேர்க்கையால் தாயோடு விரோதிப்பவனுகவும், தகப்பன் பொருளை அழிப்பவனுகவும் ஆகிறான்.

ஐந்தில்:— அநேக பந்து புத்திர சகோதரர்களுடன் கூடினவனுகவும் தனவானுகவும் சுகியாகவும் பிறர்காரியத்தைச் செய்பவனுகவும் பொருமையுள்ளவனுகவும் அழகிய சரீரமுள்ளவனுகவும் தீர்க்காயுளுள்ளவனுகவும் ஆவான்.

ஆறில்:— கண்நோய் உள்ளவனுகவும் எதிரிகள் உள்ளவனுகவும், ப்ராதா சாதுக்கள் இவர்களாலும் பிராணிகளாலும் பீடையுள்ளவனுகவும் ஆவான்.

ஏழில்:— ஸ்திரீகளுடன் சண்டை செய்பவனுகவும், ஸ்வல்ப சக்தியுள்ளவனுகவும் பிறர் மனை புகுபவனுகவும் ஆவான்.

எட்டில்:— பாபக்ரகங்களுடனிருந்தால் லோபியாகவும், சகோதரன் இறந்தவனுகவும், சிநேகிதர்களை உடையவனுகவும் ஆவான். சுபர்களிருக்க சாந்தமுள்ளவனுகவும் சகோதர சிநேகிதர்களுடன் கூடினவனுகவும் தனவானுகவும் வியாதியுள்ளவனுகவும் ஆவான்.

ஒன்பதில்:— உடன்பிறந்தார்களிடத்தில் வாத்ஸல்யமுடையவனுயிருந்தாலும் தனித்திருப்பவனுகவும், வீர்யத்தையுடையவனுகவும் நற்புத்தியுடையவனுகவுமாவான். இதுவே பாபவீடாக அமையுமாகில் பலனும் எதிரிடையாக நடக்கும்.

பத்தில்:— அரசர்கள் மூலம் சுபமுண்டாகும். நல்ல பாக்கியவான் ஆவான்.

பதினொன்றில்:— லாபம் சாமர்த்தியம் உள்ளவனுகவும் புத்திர பந்துக்களுடன் சேர்ந்தவனுகவும் அரசனுல் அபிமானிக்கபட்டவனுகவும் ஜயத்தையுடையவனுகவும் ஆவான்.

பனிரெண்டில்:— செலவாளியாகவும், சுத்தனுகவும் சிநேகிதனையே எதிரியாகவுடையவனுகவும் ஆவான்.

பார்வையின் பலன்.

சூரியன் பார்க்க:— ஜாதகனுக்கு முன்னே பிறந்த சகோதரன் நாசமடைவான். 9-12-ல் 3-க்குடையவனிருக்க அரசன் மூலம் பயமுண்டாம்.

சந்திரன் பார்க்க:— சகோதரர்கள் உற்பத்தி, பராக்ரமம் இல்லாதவன். ஆரம்பத்தில் முன்னேர்கள் தனத்தால் சுகமும், பிற்காலத்தில் எல்லா ஐச்வர்யமும் உண்டாகும்.

புதன் பார்க்க:— சகோதர சௌக்யம், வியாபாரத்தில் ஈடுபாடு. அதில் சாமர்த்தியம் உடையவனுய் உயர்ந்த மனிதனுகிறான்.

குரு பார்க்க:— சகோதர சௌக்யம் உடையவனுகவும் தகப்பனர் சொத்தையுடையவனுகவும் கர்வியாகவும் சுற்றத்தாரிடம் பற்றுடையவனுகவும் கீர்த்தியுடையவனுகவும் ஆகிறான்.

சுக்கிரன் பார்க்க:— சகோதரமுள்ளவனுகவும் எல்லாம் நிறைந்தவனுகவும் பெண் பிறத்தலால் வேற்றிடம் போகிறவனுகவும் பிரபுக்களால் பூஜிக்கப்பட்டவனுகவும் ஆகிறான்.

சனி பார்க்க :— மிகவும் பராக்ரமமுள்ளவன், பலவான், உடன் பிறந்தோரின் சௌக்கியத்தைக் கெடுப்பவன் நல்ல தசைகளிலும் நற்பயன் கிட்டாதவன்.

ராகு பார்க்க :— தன் பராக்ரமத்தால் சித்தி, அனேக பொருள்களால் சௌகரியம் அதிக புத்திரர்களால் துக்கம், ராஜ பயம் சர்ப்ப பயம் ஏற்படாது.

குரு லக்னத்தில் த்ருதீயாதிபதியுடன் சேர்ந்தால் நாற்கால் பிராணிகளுக்குக் கெடுதி விளையும். லக்னம் ஜலராசியாகி லக்னத்தில் குரு இருந்து திருதீயாதிபதியுடன் கூடினால் ஜலத்திலிருந்து பயமுண்டாகும். திருதீயாதிபதி ராகு வசிக்கும் ராசி அதிபனுடன அல்லது ராகுவுடன் சேர்ந்து லக்னத்திலிருக்க பாம்பால் பயமுண்டாகும். 3 க்குடையவன் புதனுடன சேர கழுத்து ரோகங்கள் ஏற்படும். 3-க்குடையவன் 6 ல் இருந்தாலும் அஸ்தமனத்தை அடைந்தோ பாபிகளால் பார்க்கப்பட்டோ இருந்தால் பிறர் விஷம் கொடுப்பதாலோ தானே விஷத்தை அருந்துவதாலோ விஷ பயம் ஏற்படும்.

தனுர் ராசி மூன்றுவதானால் கழுத்தில் வியாதியுண்டாகும். தனுர் ராசிக்கு மாந்தியின் யோகமும் இருக்குமானால் நிச்சயமாக ரோகமுண்டாகும்.

மூன்றுமிடத்தில் தண்டாயுதாம்சத்தில் செவ்வாய் இருக்க காதில் வியாதி ஏற்படும்.

மூன்றில் சனி இருந்து மாந்தியுடன் சேர சுபக்ரகவீக்ஷணமும் இல்லாவிடில் வாயு ரோகத்தால் பயம்.

மூன்றுமிடத்தில் வசிக்கும் ராசியதிபதியுடன் கூடின ராசி அம்சாதிபதி கேந்திரத்தில் பாபி சம்பந்தம் – த்ருஷ்டி பெற்றால் காதில் ரோகமுண்டாகும். மூன்றுமதிபதி க்ரூர ஷஷ்டி அம்சத்திலிருந்தாலும் காதில் ரோகமுண்டாகும்.

மூன்றுமிடம் சுப சம்பந்தம் – வீக்ஷணம் பெற்றாலும், மூன்றும் அதிபதி சுபசம்பந்தம் பெற்றாலும் காதுகளில் ஆபரணம் அணிவான்.

சூரியன் செவ்வாய் குரு சம்பந்தமான பலன்களை கழுத்திலும் சந்திரன் புதன் சம்பந்தமான பலன்களை காதிலும், சுக்கிர சம்பந்தமான பலன்களைத் தலையிலும், சனி ராகு கேது பலன்களை கால்களிலும் சொல்லவேண்டும்.

மூன்றுமிடம் பாபக்ரகமாகி, பாபக்ரகங்களுடன் கூடினால் உடன் பிறந்தோனுக்கு நாசம்.

ஜனன காலத்தில் மூன்றுமிடத்தில் எவ்வளவு கிரகம்சங்கள் கழிந்ததோ ; அந்த எண்ணிக்கை உடன் பிறந்தவர்கள். மற்றவர்கள் பார்த்தால் அனேக சகோதரர்கள்.

சனி மூன்றிலிருந்து செவ்வாய் பார்க்க உடன் பிறந்தோர் நாசம். சுக்ரன் மூன்றிலிருந்து குரு பார்க்க உடன் பிறந்தோர் விருத்தி. 3-ல் புதனிருந்து சூரியன் பார்க்க இரண்டு சகோதர்கள் நாசம்.

மூன்றுமதிபதி, சகோதரகாரகன் சுப சம்பந்தம் பெற்றாலும், மூன்றுமதிபன் சுபக்ரகமானாலும் மூன்றும் பாவம் அதிக விருத்தியுள்ளதாக ஆகும். மூன்றும் பாவாதிபதி, காரகன்-கேந்திரம், திரிகோணம், உச்சக்ஷேத்திரம், மித்ரக்ஷேத்திரம், தன் ஷட்வர்க்கம் இவைகளில் இருக்க உடன் பிறந்தவர்கள் விருத்தி. புதன் மூன்றில் இருக்க மூன்றுக்கு அதிபதி, சந்திரனும் சேர்ந்து பாவகாரகன் சனியுடன் சேர மூத்த சகோதரி ஒருவன் உண்டாவள். இளைய சகோதரன் ஒருவன் பிறப்பான். அடுத்த பிள்ளை நாசமாவான்.

மூன்றும் பாவகாரகன் ராகுவுடன் கூடினாலும், மூன்றுமதிபதி பரம நீசத்திலிருந்தாலும் பின் சகோதரன் இல்லை. முன் சகோதரன் மூன்று இருக்கலாம்.

மூன்றுமதிபதி கேந்திரத்திலும், மூன்றும் பாவகாரகன் மூன்றும் பாவத்துக்கு திரிகோணத்திலிருந்து குருவுடன் சேர்ந்து உச்ச விட்டிலிருந்தால் 12 உடன் பிறந்தோர்கள் பிறப்பார்கள் இவன் முதல்வனுவன். 2, 3, 7, 9, 12-வதாக பிறப்பவர்கள் இறப்பார்கள். 6 இரட்டையாக இருக்கலாம்.

மூன்றுக்கு அதிபதியும், செவ்வாயும் அஷ்டமத்திலிருந்து பாபிகள் பார்க்க சகோதர நாசம்.

மூன்றுமிடம் பாப சம்பந்தம் — விஷணம் பெற்றால் ப்ராதாக்கள் பிறந்து நாசமாகலாம்.

குஜன் விரயாதிபனுடன் கூடி மூன்றுமிடம் குருவுடனே சந்திரனுடனே சேர்ந்திருந்தால் ஏழு சகோதரர்கள் பிறக்கலாம். சுபக்ரக சம்பந்தம் பெற்ற க்ரகத்தால், மூன்றுமிடம் பார்க்கப் பெற்றுராகவும் இருக்க, மூன்றுமதிபதி குஜனுடன் சேர்ந்தால் ஏழு சகோதரர்களில் இருவர் நாசமடைவர்.

மூன்றுமிடம் பாபியுடன் கூடினாலும், மூன்றுமதிபதி பாபியுடன் கூடினாலும், லக்னாதிபதி அஸ்தமித்தாலும் மாற்றுந் தாயிடத்தில் பிறக்கும் சகோதரர்கள் உண்டு.

மூன்றுமதிபதி அத்யுச்சத்திலிருந்து அல்லது ஸ்வக்ஷேத்திரத்திலிருந்து மித்ரக்ரகத்தால் பார்க்கப் பெற்று, மூன்றுமிடம் பாப விஷணமோ சம்பந்தமோ இல்லாமலிருந்தால் அனேக சகோதரர்கள் ஏற்படுவர்.

மூன்றுமதிபதி, மூன்றும் பாவகாரகர் ஒற்றை ராசியிலிருக்க, குரு சூர்யன் செவ்வாய் இவர்கள் பார்க்க, மூன்றுமிடம் ஒற்றை ராசியாகவுமிருந்தால் ராசியில் உதிக்கும் அம்சப்படி புருஷ சகோதரர்கள் ஏற்படுவர்கள்.

மூன்றுமதிபதி இரட்டை அம்சத்தில் அல்லது இரட்டை ராசியில் இருந்து மூன்றும் பாவத்தில் சகோதரகாரகனிருக்க சகோதரி லாபம்.

மூன்றுமதிபதி, மூன்றும் பாவகாரகன் நவாம்சக அம்சத்திலிருக்க சகோதரன் அலியாகப் பிறப்பான். இரட்டைப்பட்ட ராசியில் அதிபதியும காரகனும் புருஷ நவாம்சத்தில் இருக்க புருஷ சகோதரன் ஏற்படும். இரட்டைப்பட்ட நவாம்சத்திலிருக்க ஸ்திரீ சகோதரம் உண்டாகும். க்ஷீணசந்திரனிருந்தால் பெண் சகோதரம் நாசமடையும்.

மூன்றும் பாவம் எவ்வளவு க்ரகங்களுடன் கூடுமோ அல்லது பார்க்கப்படுமோ அவ்வளவு சகோதரர்களைச் சொல்லலாம். நீசம் சத்ருக்ரகங்களோ டையடைந்த க்ரகங்களால் சகோதர நாசத்தையும் சொல்லலாம்.

ப்ராத்ரு ஸ்தானங்கள்: — 3. 9. 11. 7 - இந்த ஸ்தானங்கள் ப்ராத்ரு ஸ்தானங்களாகும். அந்த ஸ்தானாதிபர் தசையிலோ புக்தியிலோ ப்ராதாவின் உற்பத்தி ஏற்படும்.

சனி, புதன் அல்லது செவ்வாயால் பார்க்கப்பட்டால் ஸகோதர விருத்தி.

சந்திரஷட்வர்கம் மூன்றுமிடமாகி செவ்வாயால் பார்க்கப்பட ரோகியான சகோதரர்கள் பிறப்பார்கள்.

சூரியன் மூன்றிலிருந்து அதுவே ஸ்வக்ஷேத்திரமாகவுமானால் சகோதரன் பிழைப்பது அரிது. ஒருவாறு பிழைத்தால் ஒருவன் இருப்பான். அவன் அரசனுக்கு சமானனுவான்.

சந்திரன் பாபிகளுடன் கூடி மூன்றிலிருந்து சுபவீக்ஷணமில்லாவிடில் ப்ராதாவின் நாசம்.

மூன்றுமிடம் பாபக்ரகங்கள் சம்பந்தம் பெற்று சுபக்ரகங்களுடன் சேர்க்கையோ பார்வையோ ஏற்பட்டால் சகோதரன் இருக்க மாட்டான். முன் பிறந்த சகோதரத்துக்கும் கெடுதலாகும்.

லாபஸ்தானம், சுபர், ஸ்தானாதிபதி இவர்களின் சேர்க்கை அல்லது பார்வை பெற்றால் மூத்த சகோதரத்துக்கு சௌக்கியம்.

லாபஸ்தானத்தில் பலிஷ்டர்களாக பாபிகளிருந்தாலும், லாபஸ்தானத்துக்கு இரு பக்கத்திலும் பாபிகள் இருந்தாலும், பாப சம்பந்தம் பெற்றக்ரகத்தால் பார்க்கப்பட்டாலும் மூன் சகோதரன் நாசமாவான். பின் சகோதர சௌக்கியமும் கிடையாது.

மூன்றுமிடத்தில் சூரியன் இருக்க முன் பிறந்த குழந்தை நாசமாகும். சனியிருக்க பின் குழந்தை நாசமாகும். செவ்வாய் இருக்க சிறுவயதுள்ள சகோதரர்கள் நாசம். அநேக பாபிகளிருந்தாலும் சகோதர நாசம்.

சூரியன் ராகு மூன்றில் இருந்தாலும், சந்திரன் இருந்தாலும் சகோதரி சுகம். சனி செவ்வாய் ராகு அல்லது குரு 6-ல் இருக்க சகோதர நாசம்.

மூன்றுக்குடையவன் குஜனுடன் சேர்ந்து 6, 8, 12-லிருந்தாலும், சகோதர பாவத்திலிருந்தாலும் ப்ராதாக்கள் நாசம்.

மூன்றுமதிபதி, செவ்வாய் பாப சம்பந்தம் பெற்றோ, பாப க்ஷேத்ரத்திலோ இருந்தால் சகோதரர்கள் ஏற்பட்டு நாசம்.

மூன்றும் பாவாதிபன் ஸ்திரீ க்ரகமானாலும், ஸ்திரீச்ரகம் மூன்றும் பாவத்தில் வசித்தாலும் தங்கை பிறப்பாள். அப்படியே மூன்றும் பாவாதிபன் புருஷக்ரகமானாலும், புருஷக்ரகம் மூன்றும் பாவத்தில் வசித்தாலும் சகோதரன் பிறப்பான். ஸ்திரீ புருஷ க்ரகங்கள் கலந்திருந்தால் சகோதரமும் கலந்தே பிறக்கும்.

மூன்றுமதிபதி, செவ்வாய் எட்டிலிருந்து பாபவீக்ஷணம் பெற்றால் சகோதரர் நாசம். பாபசம்பந்தம் பாபவீக்ஷணம் ஏற்படிடால் 3, 7, 14 வயதுகளில் நாசமாவர்.

மூன்றுமிடத்ததிபன் அல்லது மூன்றும் பாவகாரகன் சுப சம்பந்தம்-பார்வை பெற்றாலும், மூன்றுமிடம் பலம் பெற்றாலும் உடன் பிறந்தவர்கள் விருத்தி. மூன்றும் பாவாதிபன் அல்லது மூன்றும் பாவகாரகன் கேந்திரம் திரிகோணம் உச்ச க்ஷேத்திரம் மித்ர க்ஷேத்திரம் ஷட்வர்க்கம் இவற்றிலிருந்தால் ப்ராத்ரு லாபம்.

புதன் மூன்றில் இருந்து மூன்றுமதிபதி சந்திரனுடன் சேர்ந்து பாவகாரகன் சனியுடன் கூட மூன் ஒரு பெண் சகோதரமிருக்கும்.

பாவகாரகன் ராகுவுடன் சேர்ந்து மூன்றுக்குடையவனும் நீசனுடன் சேர்ந்தால் மூன்றாவது நாசமாகும்.

மூன்றுமதிபதி கேந்திரத்திலிருக்க அதற்கு திரிகோணத்தில் பாபக்ரகள் இருந்தால் முன்னதாக மூன்று சகோதரங்கள் உண்டு.

மூன்றுமதிபதி மூன்றில் இருந்தால் பராக்ரமமுள்ளவனாகவும் புத்திரனுள்ளவனாகவும், தனவானாகவும், சந்தோஷமுள்ளவனாகவும் ஆவான்.

மூன்றுமதிபதி 4-7-5-இவைகளிலிருந்தால் சுகியாகவும் கொடுமையான மனைவி (பர்த்தா)வுடன் கூடினவனாகவும் தனவானாகவும் ஆவான்.

மூன்றுக்குடையவன் 6-ல் இருக்க ப்ராதா எதிரியாவான். தனவானாகவும், அம்மான் மூலம் சுகமில்லாதவனாகவுமாவான்.

மூன்றுமதிபதி 12 அல்லது 9-ல் இருக்க, ஸ்திரீ மூலம் பாக்யம் ஏற்படும். தகப்பன் திருடனாகவும் சுகத்தில் கெடுதலே பார்ப்பவனாகவும் ஆவான்.

மூன்றுமதிபதி 8 அல்லது 7-ல் இருக்க ராஜத்வாசத்தில் மரணமேற்படும். திருடனாகவோ மற்றவர்களிடத்தில் செல்பவனாகவோ, பால்யத்தில் தினந்தோறும் கஷ்டத்தை அடைவான்.

மூன்றுமதிபதி லக்னத்தில் அல்லது லாபஸ்தானத்தில் இருக்க தானே தேடிய தனமுள்ளவன். மூர்க்கனாகவும் இளைத்தவனாகவும் உத்ஸாகியாகவும், பிடிவாதம் உள்ளவனாகவும் ஆவான்.

மூன்றுமதிபதி இரண்டில் இருக்க ப்ருஷ்டத்தில் கெடுதி உள்ளவன். பிறர் தனம், பெண்டிர்களிடத்தில் ருசி உள்ளவன்.

லக்னம், லக்னாதிபன் இவைகளுக்கு 3, 11-ல் சந்திரன் புதன் செவ்வாய் குரு—இவர்களிருக்க அநேகம் ப்ராதாக்கள் உண்டு. கேது இருக்க சகோதரிகள்.

மூன்றுமதிபதி ஸ்வக்ஷேத்ரத்திலிருந்து சுபவீக்ஷணம் பெற்றால் ப்ராதாக்கள் ஏற்படுவர்; மூன்றுமதிபதி சுப சம்பந்தம் பெற்று கேந்திரத்திலிருக்க ப்ராத்ரு சுகம். மூன்றுமிடம் சுப சம்பந்தம் வீக்ஷணம் பெற்று மூன்றுமதிபதி பலிஷ்டனானாலும் ப்ராத்ரு லாபம்.

மூன்றுக்குடையவன் லக்னாதிபதி சினேகிதர்களானால் ப்ராத்ரு சினேகம். அவர்கள் விரோதியானால் ப்ராத்ரு விரோதம்.

மூன்றும் பாவகாரகன் மூன்றுமதிபதி, புருஷ ராசி அம்சத்திலிருந்து புருஷக்ரக பார்வை பெற்றால் ப்ராத்ரு லாபம். மாறியிருந்தால் சகோதரி லாபம். கலந்திருக்க சகோதர சகோதரி லாபம்.

மூன்றுமிடத்திலுள்ள க்ரகத்தின் அம்சத்திலிருந்து ப்ராதாவின் எண்ணிக்கையைக் காணலாம்.

மூன்றுமதிபதி பாவகாரகன் இவர்கள் வசிக்கும் ராசி அம்சங்களால் சகோதரர்களின் எண்ணிக்கையை பார்க்கலாம்.

மூன்றுமதிபதியோடு சேர்ந்த க்ரகம் நிற்கும் ராசியினுடைய அம்சத்தாலும் எண்ணிக்கையைப் பார்க்கலாம்.

ஸ்திரீ க்ரகங்கள் 9-ல் இருந்தால் சகோதரிகளும், புருஷக்ரகங்களிருந்தால் சகோதரர்களும் உண்டு.

புதன் குரு இரண்டில் வசித்து கன்னியில் ராகு இருக்க ப்ராதாக்கள் மூவர் ஆவர்.

மூன்றுமதிபதியும் செவ்வாயும் 6, 8, 12-லிருந்தால் ப்ராதா இல்லை.

மூன்றுமதிபதி செவ்வாயுடன் ஆறிலிருந்தும், அது பாப க்ஷேத்ரமாக விருந்து பாப ஸம்பந்தம் பெற்றாலும், பாவகாரகன் நீச ராசி - அம்சங்களிலிருந்து, பாபத்ருஷ்டியுடன் கூட்ட ஷஷ்ட்யம்சத்திலிருந்தாலும், மூன்றும் ஸ்தானம் பாபஸம்பந்தம் த்ருஷ்டி பெற்றாலும், மூன்றுமதிபன் பாப மத்தியிலிருந்தாலும், அல்லது நீசக்ரஹத்துடன் சேர்ந்து சுபவீக்ஷணமில்லாவிடினும், மூன்றுமதிபதி வலிக்கும் அம்சாதிபன் ஆறுமிடத்தில் நீசன், அஸ்தங்கதன், சத்ருக்ஷேத்ரத்தை அடைந்தவனாகவோ இருந்தாலும், மூன்றுமதிபன் மூன்றில் க்ரூரஷஷ்ட்யம்சம் பெற்று பாபத்ருஷ்டி பெற்றாலும், மூன்றுமதிபன் வசிக்கும் அம்சாதிபனிருக்கும் அம்சாதிபன் ஆறுமிடத்தில் வலித்தாலும், மேற்கூறிய அம்சாதிபன் நீசனாகவோ அல்லது அஸ்தங்கதனாகவோ சத்ருக்ருஹத்திலோ இருந்தாலும், மூன்றுமதிபன் அல்லது காரகன் 6, 8, 12ல் இருந்தாலும், பாபஸம்பந்தம் அல்லது பாபவீக்ஷணம் பெற்று உச்ச க்ஷேத்ரத்திலிருந்தாலும் ப்ராத்ருநாசம்.

மூன்றில் சனியிருந்து செவ்வாய் பார்த்தாலும், லிம்ஹலக்ன மாகி அதில் சூரியனிருந்தாலும், இரண்டில் பாபக்ரஹங்களும் மூன்றில் ராகு விருந்தாலும் ப்ராத்ருஹீனனவன்.

மூன்றுமிடம் சந்த்ரவர்கமாய் செவ்வாய் பார்க்க ப்ராதா ரோகியாவான். குஜனுக்கு மூன்றில் பாபியிருக்க ப்ராத்ருஸுகம் கிடையாது. பலிரண்டில் பாபியிருந்தால் தம்பி உண்டு.

லக்னாம்சம் சூரிய சுக்ரர்களால் பார்க்கப்பட்டாலும், லக்னாம்சத்துக்கு தசமஸ்தானம் புதத்ருஷ்டி - ஸம்பந்தம் பெற்றாலும் அரசாங்கத்தில் வேலை செய்பவனவன்.

சூரியன் செவ்வாய் சனி சுபவீக்ஷணமில்லாமல் 10-லிருந்தாலும், சனி லக்னாம்சத்திலிருக்க சுக்ரன் நீசக்ஷேத்ரத்திலிருந்து வ்யய ஸ்தானத்தில் சந்த்ர சூர்யர்கள் வலித்தாலும், தசமத்திலிருக்கும் க்ரஹங்கள் புதனால் பார்க்கப்பட்டாலும் கூலி வேலை செய்பவனவன்.

ரோகஸ்தானாதிபன் தசமத்திலும், தசமாதிபன் சனியோடு சேர்ந்து கேந்த்ரத்திலிருந்தாலும், கர்மாதிபனிருக்கும் அம்சாதிபன் சனியாய் ஆறுக்கு உடையவனின் சேர்க்கையை அடைந்தாலும், சூரியன் தர்மகர்மாதிபர்களால் பார்க்கப்பெற்று புருஷராசியிலிருந்தாலும், பத்தாமிடம் சுபவீக்ஷணம் பெற்றாலும் வேலைக்காரர்களுடையவனவன்.

மூன்றுவது ஸ்தானம் சுபவீக்ஷணம் பெற்றாலும், பாபஸம்பந்தம் பெற்றாலும், த்ருதீயாதிபதி பலிஷ்டனானாலும், த்ருதீயாதிபன் கேந்த்ரம் அல்லது த்ரிகோணத்திலிருந்தாலும், லக்னாதிபன் த்ருதீயாதிபன சேர்ந்தாலும் பராக்ரமத்தை யுடையவனவன்.

லக்னாம்சத்தில் சனி நின்றால் ப்ரஸித்தமான தொழிலால் ஜீவிப்பான்.

ஆறுமதிபன் மூன்றிலிருக்க விறகு, கல் முதலியவைகளை வியாபாரம் செய்வான.

சந்த்ரன் மேஷத்திலிருந்து செவ்வாய் பார்த்தாலும், சந்த்ரன் சுபவீக்ஷணம் பெறுவிட்டாலும், க்ரஹங்களனைத்தும் நீசாம்சம் அல்லது அஸ்தமனத்தை அடைந்து 10, 11 ஸ்தானங்களிலிருந்தாலும், வ்யய ஸ்தானத்தில் குருவும், சனி கேந்த்ரத்திலும், சந்த்ரன் லக்னத்திலுமிருந்தாலும் யாசகம் செய்பவனவன்.

சந்த்ரனுக்கு இரண்டு அல்லது ஐந்தில் குரு நின்று அஷ்டமத்தில் சுபர் அல்லது பாபியிருந்தாலும், கர்ம ஸ்தானத்தில் லக்னாதிபனும், த்ரிகோணம் அல்லது இரண்டில் சனியும், எட்டில் பாபியுமிருந்தாலும், நீசத்தொழில்-லேவாவ்ருத்தி செய்வான்.

லக்னம் அல்லது சந்த்ரனுக்கு கர்மஸ்தானத்தில் சூரியன் முதலான க்ரஹங்களிருப்பின் க்ரமமாக தகப்பன், தாய், ஸ்திரீ, ஸ்நேஹிதன், உடன் பிறந்தோன், ஸ்த்ரீ, வேலைக்காரன் இவர்களிடமிருந்து நிதியம் கிடைக்கும்.

லக்னம், சந்திரன் சூரியன்-இவர்களுக்கு தசமஸ்தானாதிபனிருக்கும் அம்சாதிபன் மூலம் தொழில் நிர்ணயம் செய்யலாம். விவரம் வருமாறு :-

சூரியனுலல் : ஔஷதம், ஸுகந்தத்ரவ்யம், ஸ்வர்ணம், கம்பளி, முத்து, மணி இவைகளின் வியாபாரம் தூதகார்யம், மந்த்ரம் ரஸவாதம், வேடிக்கை வியாபாரம் (நாட்டியம்– நாடகம்) முதலியன.

சந்த்ரனுலல் : சங்கம் முத்து பவழம் முதலிய வியாபாரம், விவசாயம், சமத்காரமாகப் பேசுதல், ராஜ்யப்பொறுப்பு, ஸ்த்ரீயிடம் ஆசையித்தல் முதலியவை.

செவ்வாயானுல் :- மரனஜீல, அரிதாரம், குங்கிலியம், தங்கம், கத்தி, சக்ரம், கோடரி, தனுஸ், உலக்கை – இவைகள மூலமாகவும், துணிவுடன் செய்யும் காரியம், (ஆபரேஷன் போன்றவை) கெருப்பு, தன் வலுவால் செய்வதும் முதலியன.

புதனுலல் :– எழுத்து (குறுக்கு-அச்சடித்தல்) கணக்கு, மெஷின் சேர்க்கை, புத்தகமெழுதுதல், படமெழுதல், ஆயுதம் தயாரித்தல், புஷ்பம் கட்டுவது, வாஸனாத்ரவ்யங்கள் கூட்டுவது முதலியன.

குருவானுல் :– தேவதை, ப்ராம்மணர், பண்டிதன் மூலம், தங்கம், உப்பு மை யாதீன – உத்பத்தி ஸ்தானங்கள் மூலம், க்ரியாவாதம்-பிறர்க்காகப் பேசுதல், தானம், தீர்த்தம் உபவாஸம், குரு ஸேவகம் மூலமாகவும்-இது முதலியன.

சுக்ரனுலில் :– வயிரம், சிகப்பு, பத்மராகம் பச்சை முதலிய ரத்னங்கள், வெள்ளி, இரும்பு, பசு, எருமை, தங்கம், யாதீன, குதிரை வியாபாரம் முதலியன.

சனியானுல் :- ஊர்சுற்றல், வதம் செய்யுமிடம், சரீராப்யாஸம், பாரம் சுமத்தல், தன் குலத்துக்கொவ்வாத தொழில் முதலியவை.

ஒவ்வொரு நாளிலும் லக்னத்துக்கு தசமாதிபதி கோசரக்ரமத்தில் எந்த சுவாம்சத்திலிருக்கிறானோ அந்சுவாம்சாதிபதிக்குச் சொல்லிய தொழில் (அந்தந்த நாளில்) உண்டாகும்.

மூன்றுமதிபன் பலவானுய் உச்சம் பெற்று கேந்த்ரம் அல்லது த்ரிகோணங்களிலிருந்து சுபவீக்ஷணம் பெற்றாலும், மூலத்ரி

கோணம், ஸ்வக்ஷேத்ரம், மித்ரக்ஷேத்ரம், வைசேஷிகாம்சம்-இவைகளிலிருந்தாலும், மூன்றுக்குடையவன் சுபக்ரஹாம்சத்தில் சுபக்ரஹ ஸம்பந்தம் பெற்றாலும், காரகன் சுபக்ரஹ க்ஷேத்ரத்திலிருந்தாலும் தைர்யம் மிக்குள்ளவனுவான்.

மூன்றுமதிபதி வலிக்கும் ராசியம்சாதிபன் நிற்கும் அம்சாதிபதி ஸ்வக்ஷேத்ரம் முதலிய வர்க்கத்திலிருக்க சண்டை செய்வதில் நிபுணனுகவும், கலஹத்தில் வல்லவனுகவுமாவான்.

மூன்றுமதிபன் உச்சனுகி அஷ்டமத்தில் பாபியுடன் கூட சரராசி சரசம்சங்களிலிருந்தால் யுத்தத்துக்கு மூன்றுடமாயிருப்பான்.

பாபக்ஷேத்ரம் மூன்றுமிடமாகி, பாபியுமங்கிருந்து அதனதிபனும் அவ்விதமேயிருக்க யுத்தத்துக்கு மூன்றுனுயிருப்பான்.

மூன்றுமதிபன் உச்சனுகி எட்டிலிருந்தாலும், காரகன் பலமில்லாதவனுய் க்ரூராம்சத்திலிருந்தாலும் யுத்தத்தில் தோல்வியடைவான்.

மூன்றுக்கதிபதி லிம்மாஸனம், பாராவதம், கோபுரம், மிருது– இந்த அம்சங்களிலிருந்து சுபவீக்ஷணம் பெறில் யுத்தத்தில் ஸமர்த்தனுவான்.

மூன்றுமதிபன் சூரியனுடன் கூட நேரன். சந்த்ரனுடன் சேர மனதில் தைரியவான். செவ்வாயுடன் சேர கருப்பு, ஜடன், கோபி. புதன் கூட ஸாத்விகன். குருவுடன் கூட தைரியவான். எல்லா சாஸ்த்ரங்களிலும் நிறமையுடையவன். சுக்ரனுடன் சேர காமாதுரன். சண்டை செய்பவன். சனியுடன் கூட ஜடன். ராகுவுடன் சேர வெளியில் தைரியவான், மனதில் கோழை, கேதுவுடன் கூடினுலும், குளிகனுடு சேர்ந்தாலுமிப்படியே.

மூன்றுமிடத்தில் சுபர் இருந்தாலும், பார்த்தாலும் அதற்கதிபன் சுபருடன் சேர்ந்தாலும் காதுக்கு ஆபரணம் கிடைக்கும்.

சுக்ரன் மூன்றிலிருந்தால் முத்து நகை.
குரு ,, ஒப்பற்ற ஆபரணம்.
சூரியன் ,, ரத்ன நகை.

சுக்ரன் மூன்றிலிருந்தால் முத்து நகை.
சனி ,, நீலரத்னமுள்ளது.
சந்த்ரன் ,, அகேகவித ஆபரணங்கள்.
புதன் ,, பச்சையுள்ள ,,
செவ்வாய் ,, விசித்ர ரத்னபரணம்.
பாபிகள் பார்க்க இவைகளுக்கு நாசம்.

மூன்றுமிடம் சுபர்களின் க்ஷேத்ரங்களிலிருந்தால் புண்ய கதா ச்ரவணமும், பாபராசியாகி பாபியுமிருந்தால் காது நாசமுமுண் டாகும்.

நான்காம் பாவம்.

மேஷம்:— நான்காவதாகில், நாற்கால் பிராணிகள். ஸ்த்ரீகள், போகங்கள், விசேஷ அன்னபானங்கள், வீர்யத்தால் ஸம்பாதிக் கப்பெற்ற போகங்கள் முதலியவைகளால் ஸுகமடைகிறான்.

விருஷபம்:— நான்காமிடமானால், கொண்டாடத் தக்க பல வகையான த்ரவ்யங்களாலும், பராக்ரமத்தினாலும், அரசாங்க ஊழியத்தாலும், பிராமணர்களை உபசரிப்பது, நியமங்கள், விரதங் கள் முதலியவைகளாலும் சுகவானாகிறான்.

மிதுனம்:— 4-வது பாவமாகில் ஜலஸ்நானம், காட்டிலுழைப்பு, ஸ்த்ரீ, புஷ்பம், வஸ்த்ரம், பணியாட்கள் முதலியவைகளால் சுகம் பெறுகிறான்.

கடகம்:— நான்காவது நல்லரூபம், நல்ல பாக்யம், நல் லொழுக்கம் இவைகளையடைவதுடன் ஸ்த்ரீகளுக்கு அபிமதனாக வும், குணவானாகவும், வித்யாவானாகவும் ஜனங்களுக்கு இஷ்டனா வுமாகிறான்.

ஸிம்மம்:— நான்காவது மிகவும் கோபமுள்ளவன். பெண் குழந்தையையுடையவன், கெட்ட ஸஹவாஸமுள்ளவன். ஒழுக்க மில்லாதவன்.

கன்னி:— நான்காவது பாவமானால் கெட்ட குணமுள்ளவர் களின் சேர்க்கை. த்ரவ்யம் சேர்ப்பவன். துர்ப்புத்தி, கோள், இருடி, சண்டை, ஏமாற்றல் மூலம் சுகமடைவான்.

துலாம்:— நான்காவதாகில் சுகி, நற்காரியத்தில் ஸமர்த்தன். வித்யையால் வணங்கினவன். பூர்ண சுகமுடையவன். தெளிந்த மனதுடையவனாகவும், பணக்காரனாகவுமாவான்.

விருச்சிகம்:— நான்காவது கொடுமையான ஸ்வபாவமுடை யவன், பிறரிடம் பயமுள்ளவன், அதிகம் உழைப்பவன், வீர்யம், சாமர்த்த்யமில்லாதவன், மற்றவரால் காப்பாற்றப்படுபவன். குணங்களில்லாதவன்.

தனுஸ்:— நான்காமிடமாகில் சுகமுடையவன். யுத்தத்தில் ஸேவை புரிபவன், நற்கீர்த்தியுள்ளவன், விஷ்ணுபக்தன், நல்ல ஸ்வபாவமுள்ளவன்.

மகரம்:— நான்காவதாகில் குளிர்ச்சியான இடம் (பார்க்) அமைத்தல், தோட்டம், குளம் இவைகளின் ஸமீபத்தில் வஸிக் தல், காமானுபவங்களை மித்ரர்களுக்கு உபசாரம் செய்வது முதலானவைகளால் சுகமடைகிறான்.

கும்பம்:— நான்காவது ஸ்த்ரீதனத்தால் சுகமடைபவன், அன்னம், பானம், பழம், இலை முதலியவைகளால் துஷ்டனுக்கும் உதவி புரிவான்.

மீனம்:— நான்காவது பாவமானால் சுகத்தை அடைவான். ஜலாச்ரயத்தாலும், சனியிருந்தால் தேவதைகளாலுண்டான வாஹனம், வஸ்த்ரம், த்ரவ்யங்கள் இவைகளாலும் ஸுகத்தை யடைகிறான்.

நான்காமிடத்ததிபன் அந்தந்த பாவங்களில் இருப்பதால் ஏற்படும் பலன்.

ஒன்றில்: சுகமுடையவன், வாஹன ஸௌக்யமுள்ளவன், கீர்த்திமான், தாய்க்கு அதிக சுகம் செய்பவன், உயர்ந்த வஸ்து வின் லாபமுள்ளவன். ஆரோக்யமுடையவன்.

இரண்டில்: (சுபருடன் கூடினால்) பித்ருபக்தியுடையவன், தன வான், சுபகார்யங்களுடையவன், வேத சாஸ்த்ரங்களில் ஸமர்த் தன். (பாபருடன் கூடினால்) பித்ருவிரோதி, க்ருபணன், சுத்தன்.

மூன்றில்: பொருமையுடையவன், பிதாவுக்கு ஹிதம் செய்பவன், மாத்ருவிரோதி, வாஹனாதிகள் மூலம் ஸுகமடைபவன், (சுபர்களுடன் கூட) அநேக ஸ்நேஹிதர்களுள்ளவன்.

நான்கில்: அரசனுக்கு ஸமமாக ஸுகமனுபவிப்பவன், தனமுள்ளவன், அதிகமான வேலைக்காரர்களையுடையவன், பித்ரு ஸுகமுடையவன், கௌரவிக்கத்தக்கவன், வாஹனாதி கல்ல உயர்ந்த வஸ்துக்களால் ஸுகமுள்ளவன்.

ஐந்தில்: நீர்க்காயுளுடையவன், புத்திரபாக்யமுடையவன், சிறந்த புத்தியுள்ளவன், (சுபரிருக்க) சுகபோகதனங்களுடன் வேதம் அத்யயனம் செய்பவனுகவும் சிறந்த கையெழுத்தையுடையவனுகவுமாவான்.

ஆறில்: சத்ருக்கள் விரோதம் செய்தாலும் அதைத் தவிர்த்துக் கொள்பவன், துஷ்டக்ரஹத்துடன் கூட இழுக்குள்ள மாதுலனையுடையவன், சுபக்ரஹத்துடன் கூட பணக்காரன்.

ஏழில்: உயர்ந்த ஆகாரமுள்ளவன், தனவான், மாதர்களால் விரும்பப்படுபவன், சுபக்ரஹம் கூட-காமாதுரன், அழகுடையவன், பாபக்ரஹம் கூடினுல் வஞ்சகன், கல்நெஞ்சுள்ளவன்.

எட்டில்: (சுபர் கூட) வியாதியுள்ளவனுகவும், சுகமில்லாதவனுகவும், மாதாபிதாக்களின் சுகக் குறைவுள்ளவனுகவும், வாஹனத்தை அழிப்பவனுகவுமாவான். (பாபி கூட) லாபத்தை நாசம் செய்வான்.

ஒன்பதில்: மிகவும் பாக்யமுள்ளவன், பித்ரார்ஜிதமான சொத்துள்ளவன், மதிக்கத்தக்க மித்ரனையுடையவன், நாயகனுவான், வாபிகூபக்ருஹங்களை நிர்மாணஞ் செய்பவன், நல்விரத முடையவன், கடுமையுள்ளவன், அழகிய கண்களையுடையவன், அன்ய தேசம் சென்று ஸுகமாய் வஸிப்பவன்.

பத்தில்: தன் பத்னி மூலம் கிடைக்கும் த்ரவ்யாதிகளால் சுகமனுபவிப்பனுகவும், நீர்க்காயுளுள்ள மாதா பிதாக்களையுடையவனுகவும், பணக்காரனுகவும், அழகிய கண்களையுடையவனுகவும், அரசனுக்கு ஆப்தனுகவுமிருப்பான்.

பதினொன்றில்: பிதாவை ரக்ஷிப்பவன், பலவழிகளில் லாபமுள்ளவன், ஸத்காரியத்தையே எப்போதும் செய்பவன், மாத்ருபித்ருபக்தியுடையவன், நீர்க்காயுளுடையவன்.

பன்னிரண்டில்: (சுபர்கள் கூடினுல்) தகப்பனுக்கு நன்மை புரிபவன், (பாபர்கள் சேர்ந்தால்) பிதாவின் நாசம் அல்லது அன்ய தேசத்தில் பிதா வஸிப்பவனுகவுமாவான்.

பார்வையின் பலன்

சூரியன் பார்த்தால் மாத்ருபிடை, பந்து நாசம், ஸுகம், லாபம், கீர்த்திகளையடைவான்.

சந்த்ரன் பார்க்க, பந்து நாசம், அர்த்த லாபங்களை யளிக்கும் கீர்த்தி ஸுகங்களை யடைபவனுகவும், ஆயுளுள்ளவனுகவும், பிதாவிடமிருந்து ஸௌக்யக் குறைவை அடைபவனுகவுகிறான்.

செவ்வாய் பார்த்தால், நான்காவது வயதில் தாய்க்குக் கஷ்டம். ராஜா பூமி மூலம் சுகம். இந்த ஜாதகன் பார்வையிலேயே சத்ரு நாசம்.

புதன் பார்த்தால் மாத்ரு ஸௌக்யம், ராஜ்யம் முதலிய ஸௌக்யம், தனலாபம், காமத்தில் பற்றுடையவன்.

குரு பார்த்தால் பெற்றதாயின் சுகமுடையவன், வாஹனாதி ஸம்பத்துள்ளவன், பண்டிதன், தன் சுற்றத்தார் மூலம் மிக கீர்த்தியையுடையவன்.

சுக்ரன் பார்க்கில் மாத்ரு ஸௌக்யம், அதிக கர்மத்தையுடையவன், ஐச்வர்யமுள்ளவன், வாஹனாதி ஸௌக்யங்களுள்ளவன்.

சனி பார்த்தால் பிதாமஹியின் நாசம், 4-16 வயதுகளில் ரோக பயம்.

ராகு பார்க்கில் தாய்க்கு கஷ்டம், தாழ்ந்த ஜனங்களிடத்தில் ஜயம், வினுகத் தின்று திரியும் மனிதர்களுக்குப் பலவித கஷ்டத்தையுண்டாக்குவான்.

கிரஹங்களிருப்பின் பலன்

சூரியன் இருந்தால் 14 வயதில் கலஹம் செய்வான்.

சந்த்ரன் இருந்தால் 54 வயதில் சண்டையிடுவான்.

செவ்வாய் இருப்பின் 38 வயதில் பிடை.

புதன் இருக்க 55 வயதில் தனநாசம்.

குரு இருக்க 21 வயதில் சுகம்.

சுக்ரன் இருந்தால் 5 வயதில் சுகம்.

சனி இருப்பின் 38 வயதில் பிடை ஏற்படலாம்.

சந்த்ரன் அல்லது சுக்ரன் கேந்த்ரத்திலிருந்து பாபக்ரஹ ஸம்பந்தம் த்ருஷ்டி பெற்றாலும் க்ரூராராம்ச மேறினாலும், அவரோஹத்திலிருந்தாலும், சந்த்ரன் அல்லது சூரியன் கேந்த்ரத்தை அடைந்து க்ரூரக்ரஹ ஸம்பந்தம் த்ருஷ்டி ஏற்பட்டாலும். நான்கில் பாபீகளிலிருந்து பாபிகளால் பார்க்கப் பெற்றாலும், மாத்ரு ஸௌக்யம் குறைபடலாம்.

லக்னம், நான்கு, ஒன்பதாமிடத் அதிபர்கள், கேந்த்ரம் அல்லது த்ரிகோணங்களில் ஒன்றாக இருந்தால் அவர்கள் தசாபுக்தி காலங்களில் மாதா பர்த்தாவுடன் உடன் கட்டையேறுவாள்.

குரு லக்னத்திலும், சனி இரண்டிலும், ராகு மூன்றிலுமிருந்தால் தாய்க்கு அரிஷ்டம்.

லக்னம், ஏழு, பனிரண்டாமிடங்களில் பாபிகளும், இரண்டில் சுபருமிருந்தால் பிரிவாற்றாமை ஏற்படும்.

நான்காமிடம் சுபரால் பார்க்கப்பட்டால் மாதாவுக்கு ஸௌக்யம் உண்டாகும். பாபிகளால் பார்க்கப்படில் கஷ்டம்.

நான்காமிடத்அதிபன் சுபக்ரஹ விகோணமில்லாமல் பாபிகளால் பார்க்கப் பெற்று அல்லது பாபிகளுடன் சேர்ந்து ஸப்தமாதிபதியைக் காட்டிலும் லக்னாதிபன் அற்ப வீர்ய முள்ளவனாதல் தாய்க் கொப்பான ஸ்த்ரீகளுடன் சேருபவனாவான்.

ஸப்தமாதிபதி பாபியுடன் சேர்ந்து நான்காம் பாவத்திலிருக்கும் பாபியால் பார்க்கப்பெற்றோ அல்லது பாபியுடன் சேர்ந்தோ க்ரூராம்சத்திலிருந்தாலும், சனி நான்காமிடத்திலிருக்க பாப ஸம்பந்தம் விகோணம் பெற்றாலும், நான்காமிடம் பாபக்ஷேத்ரமானாலும் க்ரூரம் முதலிய ஷஷ்ட்யம்சத்திலிருந்தாலும் ஸோதரீ ஸுக்கத்தைச் சொல்லுகின்றனர்.

நான்காமிடத்தில் வலிக்கும் சந்த்ரன் சத்ருக்ஷ்தானாதிபன் செவ்வாய் இவர்களுடன் சேர்ந்தோ, அல்லது பாபிகளால் பார்க்கப்பெற்றாலும், சந்த்ரன் நிற்கும் நவாம்சாதிபதி இவ்விதமிருந்தாலும், நான்காமிடத்ததிபன், ராகு பாபிகள் சனி சூரியர்களுடன் சேர்ந்தாலும், மாத்ரு ஸ்தானாதிபன் வலிக்கும் நவாம்சாதிபன் இப்படியிருந்தாலும் மாதாவின் நடத்தையில் தோஷம் கூறப்படுகிறது.

மாத்ருஸ்தானாதிபன் பலவானாய் லக்னத்திலிருந்து குரு சந்த்ரன், புதன், சுக்ரன், சூரியன் இவர்களின் பார்வை பெற்றாலும், வைசேஷிகாம்சம் பெற்று சுபவிக்ஷணம் பெற்றாலும் மாதா பதிவிரதையாயிருப்பாள்.

சந்த்ரன் இவ்விதமிருந்து லக்னம் அல்லது வைசேஷிகாம்சம் பெற்று ராகு கேதுக்களுடன் சேர்ந்திருந்தாலும், இதே யோகத்தில் சந்த்ரசனிகளுடன் கூடினாலும் கீழ்ஜாதி புருஷனிடத்தில் பற்றுள்ளவளாயும், புதனுடன் கூடினால் வைச்யஜாதியிடம் பற்றுள்ளவளாயும், இந்த யோகத்தில் சூரிய சந்த்ரர்களுடன் சேர்ந்தாலும், செவ்வாயுடன் சேர்ந்தாலும், க்ஷத்ரியனிடம் பற்றுள்ளவளாயும், குரு சுக்ரர்களுடன் கூடினால் ப்ராம்மண வகுப்பில் பற்றுள்ளவளாயுமிருப்பாள் ஜாதகனின் தாய்.

ஸௌக்ஸ்தானத்துக்கு சுபக்ரஹயோகமிருந்து ஸௌக்ஸ்தானாதிபன் ஸ்வக்ஷேத்ரம் அல்லது உச்சத்திலிருந்து மாத்ருகாரகனும் பலிஷ்டனானால் தாயார் தீர்க்காயுளுடையவளாயிருப்பாள்.

லக்னாதிபன் ஸௌக்ஸ்தானத்திலோ, ஸௌக்ஸ்தானாதிபன் லக்னத்திலோ இருந்து, சந்த்ரனின் யோகம் அல்லது பார்வை பெற தாயார் அற்பாயுளுடையவளாவாள்.

ஸௌக்யலக்னாதிபதிகள் பரஸ்பரம் நீச-சத்ருக்ஷேத்ரங்களிலோ, 6-8 ஸ்தானங்களிலோ வசித்தாலும், ஒருவர்க்கொருவர் சத்ரு

வாயிருந்தாலும் தாயின் மரணகாலத்தில் பக்கத்திலிருந்து உபகாரம் செய்யமாட்டான்.

இதே விதமாக பிதர, புத்ரன், ஸஹோதரன் முதலியவர்களின் விஷயமாகவும் பாவகாரகன், பாவாதிபன், லக்னம், லக்னாதிபதிகளைக் கொண்டு பலன்களை ஊஹித்தறியலாம்.

ஸுகாதிபன் ரோகாதிபனுடன் கூடி பாக்ய ஸ்தானத்திலிருந்தாலும், ஸுகாதிபதி பாக்யாதிபதியுடன் கூடி சுகஸ்தானத்திலிருந்தாலும், தகப்பன் விடனுவான்.

சந்த்ரன் அல்லது சுக்ரன் பலிஷ்டனாய் சுபகிரஹ விக்ஷணம் பெற்று 6-8-12 ஸ்தானங்களாக மற்றவிடங்களிலிருந்து ஸுகஸ்தானத்துக்கு கேந்த்ரத்தில் சுபர்களிருந்தாலும், ஸுகாதிபன் வலிக்கும் நவாம்சாதிபனிருக்கும் நவாம்சாதிபன் பலவானாய் கேந்த்ரத்திலிருந்தாலும், அல்லது சந்த்ரனுக்கு கேந்த்ர ஸ்தானங்களிலிருந்தாலும் தாய் நீண்ட ஆயுளுடையவளாயிருப்பாள்.

சந்த்ரன் பாபிகளின் மத்தியிலோ, பாபஸஹவாஸம் பெற்றோ அல்லது விக்ஷணம் பெற்றாலும், சுக்ரன் ஸுகஸ்தானாதிபன் இவ்விதமிருந்தாலும், சந்த்ரனுக்கு ஸப்தமமோ, சுக்ரனுக்கு ஸப்தமமோ, பாபக்ரஹ ஸம்பந்தம் பெற்றாலும் 4-ல் சனியிருந்தாலும், பாபிகளால் பார்க்கப்பட்டாலும், பாபிகளின் க்ஷேத்ரங்களில் சனி வலிக்க பாபிகளின் யோகமும் சேர்ந்தாலும் மாதா சீக்கிரம் மரணமடைவாள்.

ஸுகஸ்தானத்தில் சனி வலித்து சுபவிக்ஷணம் பெற்றால் அநேக காலம் கழிந்து மாதா மரணமடைவாள்.

லக்னஸுகாதிபர்கள் பரஸ்பரம் மித்ரர்களாய் சுபக்ரஹ விக்ஷணம் யோக மேற்பட்டாலும், சுகாதிபன் லக்னாதிபனால் பார்க்கப் பெற்று கேந்த்ரத்திலிருந்தாலும், சுபக்ரஹ யோக விக்ஷணம் பெற்றாலும் தாயிடம் மிகுந்த அன்புடனிருப்பான்.

புத்ர-லாபாதிபதிகள் லக்னாதிபனுக்கு சத்ருக்களாகி பாபிகளின் யோகம் அல்லது விக்ஷணமேற்பட்டாலும், லக்னாதிபனிருக்கும் அம்சாதிபனின் ராசியில் புத்ரஸ்தானாதிபனிருந்தாலும் லக்னத்திலிருந்தாலும் தாய்க்கு சத்ருவாவான்.

லக்னத்தில் குரு சுக்ரனுடன் சேர்ந்திருந்தாலும், ஸுகஸ்தானாதிபன் குருவால் பார்க்கப்பெற்றாலும், கல்ல சித்தமுள்ளவனுவான்.

ஸுகஸ்தானமோ, அதிபதியோ, பாபிகளுடன் சேர்ந்திருக்க கெட்ட சித்தமுள்ளவனுவான்,

நான்கில் குரு அல்லது மற்ற சுபக்ரஹமிருந்தாலும், நான்காமிட்டம் சுபர்களின் மத்தியிலானாலும், புதயோகம் ஏற்பட்டாலும் ஸுகமுள்ளவனுகவும் தலிவனுகமாவான்.

சுகஸ்தானத்தில் பாபிகளிருந்து குரு பலஹீனனாய் ஸுகஸ்தானாதிபனும் பலமில்லாதவனாய் பாபிகளுடன் கூடினால் துக்கியாகவும் தனவானுகவுமாவான்.

ஸுகாதிபன் தன் ராசி நவாம்சம் உச்சக்ஷேத்ரங்களிலிருந்தால் சுகியாகவும் வாஹனவாத்யாதிகளை யுடையனுகவுமாவான்.

நான்கில் சனி சூர்யனுடனிருந்து சந்த்ரன் பாக்யத்திலும், குஜன் லாபத்திலுமிருக்க பசு, எருமைகளுள்ளவனுவான்.

புதசுக்ரர்கள் தம் தம் உச்சக்ஷேத்ரத்திலிருந்தால் 20, 26 வயதுகளில் மனிதர்கள் சுமந்து செல்லக் கூடிய பல்லக்கு போன்ற வாஹனமுள்ளவனுவான்.

4-ல் சூரியனும், சுகாதிபன் தன் உச்சத்திலுமிருந்து சுக்ரனின் யோகம் அல்லது விக்ஷணம் பெற்றால் 32 வயதில் வாஹன ஸம்பத்தையடைவான்.

ஸுகாதிபன் கர்மாதிபனுடன் உச்சாம்சத்திலிருக்க 42 வயதில் நரவாஹனமேற்படும்.

லாபாதிபன் ஸுகத்திலும், ஸுகாதிபன் லாபத்திலுமிருக்க 12-வது வயதில் நரவாஹனத்தையடைவான்.

சுகாதிபனும் சுக்ரனும் பலவானுகி லக்ன சுகஸ்தானங்களிலிருக்க பல்லக்கு, ஸ்வர்ணரத்ன பூஷணம், அரசனுயிருத்தல், ஸுகஸாதனங்கள், பசு யானை, குதிரை முதலியவைகளும் உண்டாகும்.

லக்னஸுகபாக்யாதிபர்கள் கர்மாதிபனுடன் கூடி பலாட்யர்களாக விருந்தால் தேசாதிபதியாவன். இதே யோகத்தில் சந்த்ர சுக்ர ஸம்பந்தம் சக்ரவர்த்தி பதவியை யளிக்கும். குருயோக மேற்படின் தர்மம் செய்யும் சக்ரவர்த்தியாவான்.

பாக்யாதிபன் சுகாதிபனுடன் கூடி அல்லது பார்வை பெற்று லக்னத்தில் வஸித்தாலும், அல்லது குரு ஸம்பந்த விஷணம் பெற்றாலும் அரசனுவான்.

சுகபாக்யாதிபர்கள் ஸுகஸ்தானம் அல்லது லாபஸ்தானத்தைப் பார்த்தாலும் பாக்யசுகாதிபர்கள் சுபக்ரஹத்துடன் கூடினாலும் அரசனுவான்.

லக்னாதிபன் சுகத்திலும், சுகாதிபன் லக்னத்திலுமிருந்தாலும் லக்னாதிபன் தசமத்திலும் தசமாதிபன் லக்னத்திலிருந்தாலும், ஸுகஸ்தானம் சுபர்களுடன் கூடினாலும், பாக்யாதிபன் லாபத்தில் அல்லது தசமத்திலிருந்தாலும், லக்னபாக்யாதிபர்கள் லக்னம் அல்லது ஸுகஸ்தானத்திலிருந்தாலும் சக்ரவர்த்தியாவான்.

வாஹனாதிபன் துஸ்ஸ்தானத்திலிருந்தாலும், அஸ்தங்கதனாலும், பாக்யாதிபன் பார்வையில்லாமலிருந்தால் நல்ல வாஹனமில்லாதவனுவான். சுகாதிபன் நீச சத்ரு துஸ்ஸ்தானாதிபர்களுடன் கூடினாலும் மேற்கூறிய பலனே.

ஸுகாதிபன் சந்த்ர சுக்ரர்கள் கேந்த்ரத்திலிருந்து புதன் தன் உச்ச கேந்த்ரத்திலிருந்தால் சிறந்த பண்டிதனுவான்.

நான்காமிடத்தாதிபன் சுபனுய் சுபர் பார்வை பெற்றாலும், நான்காம்பாவகாரகன் பலவானுனாலும் சுற்றத்தாரால் கொண்டாடத்தக்கவனுவான்.

நான்கில் குருவிருந்து நாலுக்குடையவன் சுபருடன் கூடி குரு விஷணம் பெறின் பந்துக்களுள் உயர்ந்தவனுகிறன்.

நாலுக்குடையவன் பாபிகளால் பார்க்கப்படாமல் கேந்த்ரம்-த்ரிகோணம்—வைசேஷிகாம்சம் பெறினும், ஸுகஸ்தானத்தில் குருசுக்ரபுதர்களிருந்தாலும், இவர்களின் விட்டை இவர்களே பார்த்தாலும், மிருத்வம்சாதிகளிலிருந்தாலும் பந்துக்களுக்கு உபகாரம் செய்பவனுவான்.

பந்து ஸ்தானாதிபன் பாபிகளுடன் கூடினாலும், பாபிகளின் கேந்த்ரத்திலிருந்தாலும் நீச-சதரு கேந்த்ரங்களிலிருந்தாலும் பந்துக்களால் த்யஜிக்கப்படுவான்.

ஸுகஸ்தானம், அதன் அதிபன், பாவகாரகன் — இவர்கள் பாபிகளுடன்கூட சுற்றத்தாரால் நிந்திக்கப்படுவான்.

நான்காமிடம் பாபிகளுடன் கூடியோ, நீசத்தை யடைந்த அல்லது அஸ்தங்கத ஸ்ரஹத்துடன் கூடியோ, சுபக்ரஹத்தின் பார்வையில்லாமலுமிருந்தால் பந்துக்களிடத்தில் த்வேஷமுள்ளவனுவான்.

9-11-ல் குருவிருந்தால் ஸௌகர்ய முள்ளதாயும், உயர்ந்த தாயும் விசாலமாயுமுள்ள வீட்டையடைவான்.

9-11-ல் சுக்ரன் அல்லது புதன் பூர்ணசந்த்ரனுடன் கூடினால் தனவானுகவும், சுகியாகவும், படித்தவனுகவுமாவான்.

க்ஷீணசந்த்ரன் பாபியுடன கூடி 9-11-ல் வஸிக்க தரித்ரியமுள்ளவனுகவும், விதுரனுகவுமாவான்.

9-11 ல் செவ்வாயிருக்க ஸ்த்ரீ ஏழையாகவும், நன்னடத்தையில்லாதவளாகவும், துஷ்டையாகவுமிருப்பாள்.

9-11-ல் இருக்கும் க்ரஹம் புருஷர்களாயிருந்து பலம் பெற்றால் அவ்வீட்டுக்கு நாயகன் புருஷனென்றும் ஸ்த்ரீக்ரஹம் பலம் பெற்றிருந்தால் ஸ்த்ரீ நாயகியாக இருப்பாளென்றும் ஊஹிக்கவும்.

புத்ரப்ரதமான க்ரஹமும், ப்ரதிபக்தகமான க்ரஹமுமிருந்தால் இணைவு, விருஷங்களுடன் கூடின வீடாகவிருக்கும். இரண்டு பாபக்ரஹங்களிருந்தால் சூன்யமாகவிருக்கும்.

9-11-உபயராசிகளானால் வீட்டின் பக்கத்தில் வீதியிருக்கும்.

நான்காமிடத்தில் சுபக்ரஹமிருந்து அவ்வீட்டுக் குடையவன் பலவானுய் உச்சவர்கங்களிலிருந்தால் ஜாதகனுக்கு நான்கு புரத்திலும் சுவருள்ளதாயும், அலங்கார முள்ளதாயும், உப்பரிகையுடன் கூடியதாயுமுள்ள அழகான வீடாயிருக்கும்.

நான்காமிடத்தில் குரு அல்லது சுக்ரனிருந்தால் வீட்டுக்கதவு திருடமாயும், வழவழப்புள்ளதாயும், அகலமாயுமிருக்கும்.

புதன் பலவானாக விருந்தால் சித்ர வேலைப் பாடமைந்த கதவு உள்ளதாகவிருக்கும்.

ராசுவிருக்க மத்தியில் த்வாரமுள்ளதாகும்.

செவ்வாயிருக்க கதவு புதிதாகவும் சிறிதாகவுமிருக்கும்.

கேது விருக்க த்ருடமாயிருக்கும்.

சந்த்ர சூர்யர்களிருக்க பூச்சிகளுள்ள கதவாயிருக்கும்.

எழில் சுபரிருந்தால் வீட்டுக்கு வலப்பக்கத்திலும், 11—12-ல் சுபரிருக்க இடப்பக்கத்திலும் ஆல்யமிருக்கும்.

நான்காமிடம் ஜலராசியாகி ஸ்திரியவிருந்து 6-8-12 அதிபர்களுடன் கூடினால் அவன் தசாபுக்தி காலங்களில் வீட்டில் ஆமை, கோட்டான் முதலியவைகள் காணப்படும்.

நான்காமிடம் நாற்காலிராசியாகி ராகு விருந்தாலும், வேறு இரு பாபக்ரஹங்களிருந்தாலும். அவர்களின் தசாதிகாலங்களில் வீட்டில் நரி, பன்றி, முயல்கள் காணப்படும்.

நீசராசி, சத்ருராசி, ஆறு, பனிரண்டாமிடங்களின் அதிபர்களால் நான்காமிடம் பார்க்கப்படில் பிறர் வீட்டில் வஸிப்பவனாவான்.

நான்காமதிபன் தன் உச்சராசி, ஸ்வக்ஷேத்ரம், மித்ரவர்க்கங்களிலிருக்க சொந்தமாக க்ரஹமேற்படும்.

நான்காமிடம் குரு க்ஷேத்ரமாய் குருவும் அதிலிருந்தால் பலா, வாழை, மா முதலிய மரங்களிருக்கும்.

இவ்விதமே சுக்ரனிருக்க மஹிழமரமுண்டாகும்.

இப்படியே புதனிருந்தால் பிரயோஜன மற்ற மரங்களிருக்கும்.

இவ்வண்ணமாகவே க்ருஷ்ணபக்ஷ சந்த்ரனிருக்க தென்னை முதலிய மரங்களுண்டு.

இவ்விதம் செவ்வாயிருக்க இழுங்கு, பழமளிக்க வல்ல செடி மரங்களுண்டு.

செவ்வாயிருக்க வேப்பமரங்களுண்டாகும்.

பலமுள்ள ராகு கேதுக்களிருக்க விஷ மரங்களுண்டாகும்.

காரகன், பாவத்திலிருக்கும் கிரகங்கள் இவர்களை ஆராய்ந்து ஜலம், வீடு, ஸௌக்யம், பசு, வாஹனம் முதலியவைகளை ஊஹித்துக் கொள்ளவும். இதில் பாவாதிபன், பாவகாரகன், உச்ச நீசாதிவர்க்கங்கள், சிர்ஷோதயம் முதலியவைகளிலிருப்பதன் மூலமும் பலம் துர்பலம் முதலியவைகளைக் கொண்டும் பலனை ஊஹித்தறியவேண்டும்.

லக்னாதிபன் லக்னத்திலிருந்தாலும். 4-ல் லக்னாதிபனிருந்தாலும், நான்காமிடத்தாதிபன் மித்ரன் வீட்டிலோ, உச்சஸ்வ க்ஷேத்ரங்களிலோ பலவானாய் சுபக்ரஹவீக்ஷணம் பெற்றாலும், நான்காமதிபன் கேந்த்ரத்திலிருந்து பலிஷ்டனாய் சுபக்ரஹத்தால் பார்க்கப்பட்டாலும், நான்காமிடத்தாதிபன் வைசேஷிகாம்சம், பரமோச்சபாகத்திலிருந்தாலும், நான்காமதிபன் வஸிக்கும் அம்சாதிபன் எந்தராசியிலிருக்கிறானோ அந்தராசியாதிபனிருக்கும் நவாம்சாதிபன் கேந்த்ரத்திலிருந்தாலும் க்ரஹலாபம் ஏற்படுகிறது.

நான்காமதிபன் பாபக்ரஹ வீக்ஷணம் பெற்று அஷ்டமத்திலிருந்தாலும், நான்காமதிபனிருக்கும் அம்சாதிபதி அஷ்டமத்திலிருந்தாலும் க்ரஹநாசமேற்படும்.

நான்காமிடம் சராசியாகி அதனதிபதி சராசியில் வஸித்து காரகனும் சரத்திலிருந்தால் அநேக இடங்களில் வீடு உண்டு.

2-12-4-க்குடையவர்களுள் எவ்வளவு க்ரஹங்கள் பாபிகளுடன் கூடியிருக்கிறார்களோ, அவ்வளவு வீடுகளுக்கு நாசமேற்படும். சுபக்ரஹத்ருஷ்டி ஏற்பட்டால் கெடுதல் ஏற்படாது.

2-12-4-க்கு அதிபதிகளுள் எவ்வளவு க்ரஹங்கள் கேந்த்ரத்திகோணங்களிலிருக்கின்றனரோ, அவ்வளவு வீடுகளுக்கு நன்மை ஏற்படும்.

நான்காமிடம் ஜலராசியாகி அவ்வீட்டுக்குடையவன் நீசனாகவோ, அஸ்தங்கதனாகவோ, சத்ருக்ஷேத்ரத்திலோ, துர்பலனாகவோ இருந்தாலும் நான்காமிடத்துக்கதிபன் லக்னாதிபனுடன்

சேர்ந்து தசமாதிபதியால் பார்க்கப்பட்டாலும், நான்காமதிபன் வசிக்கும் ராசிநாதன் நாலிலிருந்து நான்காமதிபதியால் பார்க்கப் பட்டால் அல்லது சேர்ந்தாலும் கிணறு, குளம், ஸமுத்ரம் முத லிய ஜலாசயங்களில் பதனமேற்படும்.

நான்கில் சூர்ய குஜர்களிருந்து அந்த ஸ்தானதிபனுலோ தசமாதிபதியாலோ பார்க்கப்பட்டால் அல்லது சேர்ந்து இருந் தாலும், நான்காமதிபதி ராகு சனிகளுடன் கூடி குஜவீக்ஷணம் பெற்று சுபக்ரஹ வீக்ஷணமில்லாவிடினும் கல்லான் பீடை யடை வான்.

நான்காமிடத்ததிபன் உச்சமித்ரஸ்வக்ஷேத்ரங்களில் இருந்து சுபக்ரஹயோகம் அல்லது வீக்ஷணம் பெற்றாலும், ஸுகாதிபன் பத்திலும், பத்துக்குடையவன் நான்கிலுமிருந்து குஜன் பலவான யிருந்தாலும், நாலுக்குடையவன், பத்துக்குடையவன் பலிஷ்டர் களாய், அவ்விருவரும் மித்ரர்களாமிருந்தாலும், நான்காமிடத் ததிபன் கோபுரம், ம்ருது முதலிய அம்சங்களிலிருந்தாலும் அதிக மாக பூமி யேற்படும்.

நான்காமிடம், நான்காமதிபன் மூன்றும் பாவகாரகன் அல்லது மூன்றுக்குடையவனுடன் சேர்ந்திருந்தாலும், நான்காமதிபன் வஸிக்கும் அம்சநாதன் கேந்த்ரத்தில் வஸித்து மித்ரனால் பார்க் கப்பட்டாலும் அல்லது செவ்வாயின் யோகம் அல்லது வீக்ஷணம் பெற்றாலும் ஸஹோதரனின் பூமி முதலியன கிடைக்கும்.

லக்னதிபதி பலவானாய் நான்கிலும், நான்குக்குடையவன் பல வானாய் லக்னத்திலிருந்தாலும், சுபர்களால் பார்க்கப்பட்டு அல்லது அவர்களுடன் சேர்ந்திருந்தாலும் தன் ப்ரயத்னத்தால் பூமியை ஸம்பாதிப்பான்.

களத்ரகாரகன் நான்கிலிருந்தாலும், நான்குக்குடையவன் களத்ரஸ்தானத்திலிருந்தாலும், 4-7-க்குடையவர்களுக்கு மித்ர த்வமிருந்தாலும் களத்ரமூலம் பூமி லாபமுண்டாகும்.

சத்ருஸ்தானதிபன் ஸுகஸ்தானத்தில் பலவானாயிருந்தா லும், ஸுகஸ்தானதிபன் சத்ருஸ்தானத்தில் பலவானாயிருந்தா லும், சத்ருஸ்தானதிபனோக்காட்டில் ஸுகஸ்தானதிபன் அதிக பலவானாயிருந்தாலும் சத்ருவிடமிருந்து பூமிலாபமேற்படும்.

ஸுகஸ்தானதிபன் பாராவதாம்சத்தில் அல்லது ஸ்வக்ஷேத் ரத்தில் பலத்துடனிருந்தாலும், உபயஸ்தானங்களிலிருந்தாலும், ஆரோஹத்திலிருந்தாலும், சுபத்ருஷ்டி பெற்றாலும் அதிகம் பூமி யிருக்கும்

நான்காமிடம், நான்காமதிபன், நான்காம் பாவகாரகன் இவர் கள் தனலாபாதிபர்களுடன் சேர்ந்தோ, வைசேஷிகாம்சம் பெற்றோ, சுபவீக்ஷணம் பெற்றால் அதிக மதிப்புள்ள வீடு ஏற்படும்.

ஸுகாதிபன் நீசனுகவோ, அஸ்தங்கதனுகவோ, பாபிகள் மத்தியிலோ, பாபிகளால் பார்க்கப்பட்டாலும் பாபிகள் வீட்டில் அல்லது சத்ரு வீட்டிலிருந்தாலும், குஜன பாபிகளின் நடுவில் அல்லது பாபிகளின் யோகம் வீக்ஷணம், பாபிகளின் க்ஷேத்ர வாஸம், க்ரூராம்சஸ்திதி இவைகளிலிருந்தாலும் பூமி நாசம்.

நான்காமிடம் பாபிகளுடனிருந்தாலும், நான்காமதிபன் க்ரூ ராதி அம்சத்திலிருந்தாலும், நீசக்ஷேத்ரம், 6-8-12, சத்ருக்ஷேத்ரம் இவைகளிலிருந்தாலும் யுத்தத்தில் தோல்வி பெற்றாலும், ஸுக தபன் பாபியுடன் கூடி, 2-மிடம் நீசசத்ருக்ஷேத்ரங்களிலிருந் தாலும் பூமி நாசமேற்படும்.

நான்காமதிபன் உச்சக்ஷேத்ரத்திலிருந்து பாபி ஸம்பந்தம் பெற்றால் பூமி விலையாகும்.

நான்காமிடம் சந்த்ரனுடன் கூடி அவ்வீட்டுக்குடையவன் ஆறிலும், செவ்வாய் வியயத்திலும இருக்க பேசும் திறமை யில்லாதவனுவான்.

நான்காமிடத்ததிபன் நான்கிலிருக்க ஜனங்களுக்கு நாயகனுக வும், ஸாமர்த்யசாலியாகவும், நல்ல கோக்கமுள்ளவனுகவும், யாசிக்கும் ஸ்வபாவமில்லாதவனுகவும், ஸ்த்ரீகளால் விரும்பப்படு பவனுகவுமிருப்பான்.

4-க்குடையவன் ஐந்திலிருந்தாலும் ஒன்பதிலிருந்தாலும் ஸுகியாகவும், தன் ப்ரயத்னத்தால் ஸம்பாதித்து தனவானுகவும் விஷ்ணு பக்தியுள்ளவனுகவுமாவான்.

4-க்குடையவன் 8-12-இடங்களிலிருக்க ஸுகமில்லாதவனு வான். தகப்பன் மூலமாக பிரிவாலு ஸுகமுண்டாகும். இந்த

யோகத்தில் பிறந்தவன் நபும்ஸகனாகவோ அல்லது பரபுருஷனுக்குப் பிறந்தவனாகவோ ஆவான்.

நான்குக்குடையவன் பத்திலிருக்க ரஸாயனஸேவை செய்பவனாவான்.

நான்காமதிபன் 3-11-இவைகளிலிருந்தால் ரோகியாகவும், தாராளஸ்வபாவமுள்ளவனாகவும், நற்குணத்தையுடையவனாகவும், தாதாவாகவுமிருப்பான்.

நான்காமதிபன் இரண்டிலிருக்க எல்லா ஸம்பத்துக்களுடன் கூடியும், பிடிவாதம், நல்ல எண்ணம், கபடம் முதலியவை உள்ளவனாகவுமாவான்.

விருச்சிக நவாம்சத்தில் ஜனித்தால் தாய்க்கு ஸ்தந்யம் குறையும்.

பத்தில் செவ்வாயும், எட்டில் குருவும் பலமுள்ளவர்களானால் மாத்ருஸுகமில்லாது போகும்.

மூன்றுக்கதிபன் 6-8-12-களிலிருந்து சந்த்ரனுடன் கூடினால் மாற்றுத்தாயின் ஸ்தன்யத்தை அருந்துவான்.

சந்த்ரன் பாபிகளின் மத்தியிலிருந்தாலும், பாபிகள் சந்த்ரனுக்கு 4-7-இடங்களிலிருந்தாலும் தாய் ஜீவிக்கமாட்டாள்.

1-4-9-க்கு அதிபர்கள் கேந்த்ர த்ரிகோணங்களிலிருந்தால் தகப்பன் தாயோடு மரணமடைவான்.

சந்த்ரனுக்கு 1-5-9-இடங்களில் சனியிருக்க இரவிற் பிறந்தவனின் தாய் கொல்லப்படுவாள்.

விருஷப நவாம்சத்திற் பிறந்தாலும், நான்காமிடத்தில் சுபக்ரஹங்களின் த்ருஷ்டி அதிகமானாலும் நாற்கால் பிராணிகள் மூலம் சுகமுண்டாகும்.

லக்னாதிபன், வர்கோத்தமாம்சம், உச்சாம்சம், மித்ரத்ரேக்காணங்களிலிருந்து சுபக்ரஹ விஷணம் - யோகமேற்பட ஆயுள் பூராவும் ஸௌக்யத்தையடைவான்.

சுபக்ரஹங்கள் லக்னம் முதல் நான்காமிடத்துக்குள்ளிருக்க ஆரம்ப வயதில் ஸுகமேற்படும்.

குரு கேந்த்ரத்திலும் லக்னாதிபன் பாராவதாம்சத்திலுமிருக்க பால்யத்தில் சுகியாவான்.

ஒன்பதில் சுபனும், லக்னத்தில் பாபியும், 2-ல் சுபனுமிருந்து தேவலோகாம்சம் பெற்றால் பால்ய வயதில் ஸௌக்யமுண்டாகும்.

லக்னத்தில் சுக்ரனிருப்பின் முன்பாதியில் சுகியாவான்.

லக்னாதிபன் சுபர்களின் இராசியிலிருந்து அல்லது சுப வீக்ஷணம் பெற்று கோபுராம்சமேறினால் ஆயுளில் முக்கால் பாகத்துக்குமேல் ஸௌக்யமுண்டாகும்.

லக்னாதிபன் அல்லது லக்னாதிபனிருக்கும் நவாம்சபதி அல்லது லாபாதிபன் தனுர் ராசியிலிருக்க இருபது வயதுக்கு மேல் சுகமேற்படும்.

லக்னாதிபனிருக்கும் நவாம்சாதிபதி அல்லது லாபாதிபனிருக்கும் நவாம்சாதிபன கேந்த்ரத்திலிருக்க முப்பது வயதுக்குமேல் ஸௌக்யமேற்படும்.

சுபக்ரஹங்கள் பனிரண்டிலிருக்க பாதி வயதில் சுகமேற்படும்.

குரு, சந்த்ர லக்னாதிபன், லக்னாதிபன்-இவர்கள் கேந்த்ரத்தில் வலிக்க யௌவனத்தில் ஸௌக்யமுண்டாகும்.

சுபர்கள் லக்னம், லாபம், வியயம்-இந்த ஸ்தானங்களிலிருந்தாலும், குரு கேந்த்ரத்திலிருந்து ஸிம்மாஸனாம்சம் பெற்றாலும் ஆரம்ப மத்ய வயதுகளில் ஸௌக்யமேற்படும்.

பாபிகள் இரண்டிலும், கேந்த்ரத்தில் சுபர்களும் வர்கோத்தமத்தில் லக்னாதிபனுமிருக்க சிறு வயதில் துக்கமுடையவனாகி, பிறகு ஸௌக்யத்தையடைவான்.

சுபர்கள் ஒன்பது முதல் பனிரண்டுக்குள்ளிருக்க பின் வயதில் சுகியாவான்.

சுக்ரன் தேவலோகாம்சத்திலிருந்து லக்னத்தில் கோபுராம்ச முதலாய் சுப க்ரஹ வீக்ஷணம் ஏற்படின் மத்ய வயது, பின் வயதுகளில் சுகமேற்படும்.

ஐந்து க்ரஹங்கள் ஸ்வக்ஷேத்ரம் பெற அதிக சுகியாவான்.

மேஷ நவாம்சத்தில் பிறந்தவனுக்கு எலி, பூனை துக்கத்தை யுண்டாக்கும்.

ஸிம்ஹராம்சத்திற் பிறந்தவனுக்கு நாய் முதலியவைகள் இம்சை புரிகின்றன.

கன்யாம்சத்தில் ஜனித்தவனுக்கு நெருப்புத் துண்டத்தால் துக்கமுண்டாகும்.

நவாம்ச லக்னத்துக்கு நான்கில் சூரியனிருக்க புல், கீத்து முதலியவை வேய்ந்த வீடு இருக்கும்.

நான்காமிடத்ததிபன் பாரவதாம்சத்திலும், சந்த்ரன் கோபுராம்சத்திலுமிருந்து குரு வீக்ஷணமும் பெறின் தேவதா க்ரஹமுள்ள வீடு ஏற்படும்.

லக்ன சுகாதிபர்கள் ஸுகஸ்தானத்திலிருக்க எதிர்பாராமல் வீடு கிடைக்கும்.

ராகு, சூரியன் நவாம்ச லக்னத்திலிருந்து செவ்வாய் பார்க்க வீடு அக்னியால் பொகுங்கும்.

10 4-2-12 மிடத்ததிபதிகளுடன் பாபிகள் எவ்வளவு சேர்ந்து 6-8-12-லிருக்கிறார்களோ; அவ்வளவு எண்ணிக்கையுள்ள வீடுகளுக்கு அக்னிதாஹம் ஏற்படும்.

வியயாதிபன் சுபருடன் கூடி அல்லது சுபவர்க்கம், உச்ச க்ஷேத்ரங்களிலிருந்தால் கட்டிலில் சயனமேற்படும்.

வியயாதிபன் பாபியுடன் கூட சயன சுகமில்லை.

வியயாதிபன் பாபியானாலும் சுபர் வர்க்கத்திலிருந்தால் சயன சுகமேற்படும்.

லக்னாதிபன் நீசனானாலும், 6-8-12-லிருந்தாலும் லக்னாதிபதி சனி ராகு மாந்திகளுடன் கூடினாலும் சயன சுகமில்லை.

4 வீடு பகையிருப்பினும் குரு துர்பலனாயினும் மிகுந்த பொருளுள்ளவனாயிருந்தாலும் துக்கியாவான்.

சூரியன் செவ்வாய் நீசபாகம் சத்ருபாகம் இவைகளில் நான்காமிடத்திலிருந்து பாப வீக்ஷணம் ஏற்பட்டாலும் ஸுகாதிபன் க்ரூராம்சத்திலிருந்தாலும், தன் ப்ரமாதத்தால் ஐச்வர்யம் க்ருஹம் இவை நாசமாகும்.

சுக்ரன் சந்த்ரன் புதன் குரு இவர்கள் வீடு நாலாவதாக ஆகி, சுப ஸம்பந்தம் வீக்ஷணம் பெற்றால் அப்போது ஜனித்தவன் பூமியில் சிறந்த போகியாவான்.

ஸுகஸ்தானத்தில் புதனுடன் சுக்ரனிருந்தாலும், சுப க்ரஹங்களின் இடையிலிருந்தாலும் கோபுரம் முதலிய அம்சத்தில் புத சுக்ரர்களிருந்தாலும் மிகுந்த புண்யவானாவான்.

லக்ன பாக்ய ஸுகாதிபதிகளுடன் ஷஷ்டாதிபன் கூடினாலும், ஷஷ்டாதிபன் லக்ன பாக்ய ஸுகாதிபதிகளிருக்கும் அம்சாதிபனோடு சேர்ந்து பாப வீக்ஷணம் பெற்றாலும், ஸுகஸ்தானம் பாபிகளின் மத்தியிலிருந்து ஸுகாதிபதியோ பாவகாரகனோ பாப வீக்ஷணம் பெற்று, பாக்யாதிபன் லக்னாதிபனைக் காட்டிலும் துர்பலனாயினும், பாபியுடன் கூடி சந்த்ரன் சூரியனுடன் கூடினாலும், பாக்ய ஸுகஸ்தானங்களில் பாபிகளிருந்து பாபியுடன் கூடின லக்னாதிபன் துர்பலனாய் ஸுகஸ்தானத்தில் க்ரூராம்சத்திலிருந்தாலும் அன்யனுக்குப் பிறந்தவனாவான்.

தனாதிபன் ஸ்வக்ஷேத்ரம் உச்சக்ஷேத்ரத்திலிருந்து அது கேந்த்ர ஸ்தானமானாலும், பாக்ய ஸ்தானம் சுபவீக்ஷணம் பெற்று தனாதிபனுடன் சேர்ந்த சுபர்கள் கேந்த்ரத்திலிருந்தாலும், உச்சத்தை அடைந்த க்ரஹம் தனத்திலிருந்தாலும், கேந்த்ரத்தில் சுபர்களும், பாபிகள் 3-6-11-களிலிருந்தாலும் மஹாமாஸனம் ப்ராப்தமாகிறது. (உயர்ந்த பதவி கிடைக்கும்.)

ஸுகாதிபன் வியயத்திலிருந்தால் தகப்பனாரை விட்டு அன்ய தேசம் செல்வான்.

ஸுகாதிபன் அஷ்டமத்திலிருக்க தானே க்ருஹத்தை ஸம்பாதிப்பான்.

ஐந்தாம்பாவம். (காடு)

மேஷம் ஐந்தானுல் ப்ரியமான புத்ரனையுடையவனுகவும், தேவதா ப்ரஸாதத்தை அடைபவனுகவும், ஸந்தோஷத்தை யுடையவனுகவுமிருப்பதுடன் பாபகார்யத்தில் ப்ரியமுள்ளவனு கவும் தனவானுகவுமாகிறன்.

ரிஷபம் ஐந்தாவதானுல் கல்ல அழகும் உருவமுமுள்ள பெண்களைப் பெறுகிறன். அப் பெண்கள குழந்தையற்றவர் களாகவும், பர்த்தாவிடத்தில் மிகவும் பற்றுள்ளவளாகவுமாவாள்.

மிதுனம் ஐந்தாமிடமாகில் குழந்தைகளுண்டாகும். லௌக் யம், தர்மம், தேங்கள்-இவைகளையடைகிறன்.

கடகம் ஐந்தானுல் குளிர்ந்தமனமுள்ளவன். ஜலக்ரீடையில் ஆசையுள்ளவன். புத்ரவான், கீர்த்தியையுடையவன, காமத்தில் மிகவும் ஸக்தனுவான்.

ஸிம்மம் ஐந்தாவதாகில், கொடிய ஸ்வபாவமுள்ளவன், வணக்கம் ஒழுங்கற்றவன். மாம்ஸத்தில் ஆசையுடையவன், ஸ்த்ரீ ப்ரஜையுடையவன், மிகவும் பசியையுடையவன்.

கன்னி ஐந்தாமிடமானுல், பெண் குழந்தை உண்டாகும். பிறந்த பெண் புத்ரனில்லாதவளாவாள். பர்த்தாவிடத்தில் ப்ரியமும், நற்காரியத்தில் விருப்பமும், ஸமர்த்தையாயும். ஆபரணத்தில் ஆசையுள்ளவளுமாவாள்.

துலாம் ஐந்தானுல் பிறக்கும் குழந்தைகள் நல்லொழுக்கம், அழகு, தர்மம் முதலியவைகளுடன் கூடியிருக்கும்.

விருச்சிகம் ஐந்தாவதாகில் அழகு, ஒழுக்கம், ஸ்நேஹம் நிறைந்த புத்ரர்களை கெட்ட யோநியில் உண்டாக்குவன்.

தனுஸ் ஐந்தானுல் பிறக்கும் குழந்தை நீச்செயல், அழ கில்லாமை, துர்புத்தி, காம்பீர்யம், புத்தி-இவைகளுடன் கூடியவர் களாயும் ப்ரஸித்தர்களாயுமாவார்கள்.

மகரம் ஐந்தானுல் குதிரையில் ஆசையுடையவர்களாயும், வில் ப்ரயோகத்தில் பற்றுள்ளவர்களாயும், எதிரிகளை நாசமாக்கு

பவர்களாயும், வேலை செய்வதில் ஆசையுள்ளவர்களாயும், அரசமர்யாதையுடன் கூடியவர்களாயுமுள்ள புத்ரர்கள் உண்டா கிறர்கள.

கும்பம் ஐந்தாவதாகில், சாந்தமான சரீரத்தையுடையவன், தனம், தான்யம், புத்ரன், நற்குணம்-இவைகளுள்ளவனுகவும், பிற் காலத்தில் கெட்ட புத்ரன் மூலம் கஷ்டமுள்ளவனுகவுமாகிறன்.

மீனம் ஐந்தாமிடமானுல், சிரிப்பு முகமுடையவர்களும் ஆரோக்யமுள்ளவர்களும், நல்ல உருவமுள்ளவர்களும், தாஸி களுடன் கூடினவர்களுமான புத்ரர்களுண்டாவர்கள்.

பாவாதிபன் அந்தந்த பாவங்களிலிருப்பதன் பலன்.

லக்னத்தில்: புத்ரசுகம், வித்யையில் ஆசை, மந்த்ர ஸித்தி-இவைகளுள்ளவன். நற்காரியம் செய்பவனுகவும், அரசாங்கத்தில் ஸம்பந்தமுள்ளவனுகவும், விஷ்ணு பக்தியுள்ளவனுகவுமாவான்.

இரண்டில்: மூல புருஷன் மூலம் கிடைத்த தனமுள்ளவனுக வும், குடும்பத்தில் விரோதமுள்ளவனுகவும், போகத்தில் ஆசை யுள்ளவனுகவும், நற்காரியங்கள் மூலம். ஜீவனமுள்ளவனுகவும், புத்ரவானுகவும் நிரவியமுள்ளவனுகவுமாவான்.

மூன்றில்: பராக்ரமமுடையவன், தோழர்களிடம் சாந்தியுள்ள வன். இனிய வார்த்தை பேசுபவன். சுபருமிருக்க நினைத்தகாரி யத்தில் ஸித்தியுடையவன். சுறு, பெரியோர்களிடத்தில் வணக்க முள்ளவன்.

நான்கில்: பித்ருபக்தியுள்ளவன், சமர்த்தன், பெரியோர் ஆசரித்ததை நடத்துபவன், கவிகளுடன் தோழமையுள்ளவன், வஸ்த்ரம், தனம் முதலிய வியாபாரம் செய்பவன்.

ஐந்தில்: புத்திமான், வார்த்தையில் ஸமர்த்தன், மரியாதை யுடையவன், மிக உயர்ந்த ஸ்வபாவமுள்ளவன்.

ஆறில்: எதிரிகளிடத்தில் பற்றுள்ளவன். த்ருட சரீரத்தை உடையவன். தோஷமுடையவன். பாட நடன் கூட, தனம் புத்ரர் களில்லாமலாகிறன்.

ஏழில்: பத்னி நற்புத்ரனையுடையவளாகவும், பந்துக்களிடத்தில் பிரியமுள்ளவளாகவும், இனிமையாகப் பேசுபவளாகவும், நல்லொழுக்கமுள்ளவளாகவும் மெல்லிடையுடையவளாகவுமாவாள்.

எட்டில்: கெட்ட வார்த்தையிலாசை, கெட்ட அவயவங்கள், கோபிகளிடத்தில் பற்று, சபலம், ஏழ்மை, அவயவக்குறைவு, வஞ்சகம், திருட்டு முதலியவைகளுண்டையவன்.

ஒன்பதில்: மத்யஸ்தம் செய்து வ்யவஹாரத்தைத் தீர்த்து வைப்பதில் ஸமர்த்தனுகவும், கலைகள் கற்றவனுகவும், அரசாங்கத்தில் கொடுக்கப் பெற்ற வாஹனத்தை யுடையவனுகவுமாவான்.

பத்தில்: அரசாங்க கார்யத்தைச் செய்பவனுகவும், சுகியாகவும், பலவழிகளில் லாபம் ஸம்பாதிப்பவனுகவும், உயர்ந்தவனுகவும், உயர்ந்த தொழில் செய்பவனுகவும், காமியாகவுமிருப்பான்.

பதினென்றில்: புத்ரமித்ரர்களுடன் சேர்ந்தவனுகவும், ஸங்கீதத்தில் சிறந்த தேர்ச்சியுடையவனுகவும், பிரஸித்தனுகவும், உயர் குலத்திலுதித்தவனுகவுமாவான்.

பன்ரண்டில்: பாபிகளுடன் கூட செலவாளி, புத்ரசுகமில்லாதவன், சுபர்களுடன் சேர, புத்ரசுகமுள்ளவன், அயலூர் போய் வருவதில் விருப்பமுள்ளவன்.

பார்வையின் பலன்.

சூரியன் பார்க்க முதல் ஸந்ததிக்கு நாசம்.

சந்திரன் பார்த்தால் மித்ரன் மூலம் சுகமுண்டாகும், பெரிய மனிதனுகவும், அந்யதேசத்தில் வியாபாரம் செய்பவனுகவுமாவான்.

செவ்வாய் பார்க்க முதல் பிறந்த குழந்தை நாசம், பசி அதிகமாயிருக்கும்.

புதன் பார்வைபெறில் (7-மிடம் பார்வையானால்) புத்ரி பிறக்கும். கேந்த்ரத்தில் ஒரு த்ரிலிருந்து பார்த்தால் புத்ரன், நற்கீர்த்தி, மிகுந்த ஐச்வர்யமுள்ளவனுவான்.

குரு த்ருஷ்டி (பூர்ணமாக) பெறின் அதிகமான ஸந்தானம், சாஸ்த்ரங்களில் நைபுண்யம், லக்ஷ்மீ, வித்யை, ஐச்வர்யம், நீண்ட ஆயுள் – இவைகளேற்படும்.

சுக்ரன் பார்க்க முதலில் பிள்ளையும் பின் பெண்ணும் பிறக்கும். தன தான்ய ஸௌக்யங்களுள்ளவனுகவும், புத்திமானுகவும், சாஸ்த்ரமறிந்தவனுகவுமாவான்.

சனி பார்க்க புத்ரசுகமில்லை. திருடனது சேர்த்தி, வியாதி தன் குலதர்மத்தில் பற்று இவைகளிருக்கும்.

ராகு சேர்ந்தால் புத்ரசுகமில்லை. பாக்யம், ஜயம், வித்யை பயனில்லாமை முதலியன உண்டாகும்.

சூரியன் 9-வது வருஷத்தில் பித்ரு நாசத்தையும், சந்த்ரன் 6-வது வருஷத்திலும், செவ்வாய் ஒரு வருஷத்துக்குள் அக்னி பயத்தையும், புதன் ஐந்தாவது வருஷத்தில் மாத்ரு நாசத்தையும், குரு 7-வது வருஷத்தில் தாய் மாமனுக்கு வியாதியையும், சுக்ரன் ஐந்தாவது வருஷத்தில் லக்ஷ்மியையும் உண்டாக்குவர்கள்.

ஐந்தாமிடம் சுபருடன் கூடினாலும், பார்க்கப்பட்டாலும், சுபக்ஷேத்ரமாக விருந்தாலும் புத்ரபாக்யம் நிச்சயம் உண்டாகும்.

ஜன்மலக்னம் அல்லது சந்த்ர லக்னத்திலிருந்து புத்ரஸ்தானத்தில் குருவின் ஸ்வக்ஷேத்ரம் நிரேக்காணம், நவாம்சம், த்வாதசாம்சம் த்ரிம்சாம்சம் இவைகளிலொன்றிருந்தால் ஒரு ஸ ஸந்தானமுண்டு.

புத்ரஸ்தானம் சுபவீக்ஷணம் பெறின் ஸந்தானமுண்டு.

புத்ராராசியிலிருக்கும் சுபர் நவாம்சத்தின் எவ்வளவு எண்ணிக்கை சென்றிருக்கிறதோ; அவ்வளவு எண்கள் புத்ரர்கள் பிறப்பார்கள்.

புத்ராராசியில் சென்றுள்ள சுபர் நவாம்சம் சுபக்ரஹங்களால் பார்க்கப் பெறின் புத்ரர்களின் எண்ணிக்கை இரட்டிப்பாகும்.

சனியின் க்ஷேத்ரம் புத்ரஸ்தானமாகி, சனிவர்க்கம் புதன் பார்வை பெற, குரு செவ்வாய் சூர்யர்கள் பார்க்காமலிருக்க க்ஷேத்ரஜபுத்ரனுண்டாகும்.

புதக்ஷேத்ரம் புத்ரஸ்தானமாகி புதவர்க்கம் சனியினால் பார்க்கப்பெற்று குரு செவ்வாய் சூரியர்கள் பார்க்காமலிருக்க க்ஷேத்ரஜ புத்ரனுண்டாகும்.

புத்ரஸ்தானத்தில் கடந்திருக்கும் பாபர்களின் நவாம்சம் சுபர் பார்வை பெற ஸ்ரமத்தின் மேல், கடந்த பாபநவாம்ச எண்ணிக்கைக்கொப்பாக புத்ரஸங்க்யை சொல்லாம்.

ஜன்ம லக்நத்துக்கும் சந்திரனுக்கும் புத்ர ஸ்தானம், அதின் அதிபதி, குரு இவர்கள் 1, 2, 3, 4, 5, 7, 9, 11-இந்த இடங்களிலிருந்தாலும். மே இரண்டு இடத்துக்கும் புத்ர ஸ்தானம் 1, 2, 3, 4, 5, 7, 9, 11-ஆமிடத்துக்கு அதிபர்களாலும் சுபர்களாலும் வசிக்கப்பட்டு அல்லது பார்க்கப்பட்டாலும், லக்னாதிபதி சந்திர லக்னாதிபதி இவ்விருவர்கள் ஒன்று சேர்ந்தாலும் ஒருவரை ஒருவர் பார்த்தாலும், லக்நாதிபதி, சந்திரலக்னாதிபதி பரஸ்பரம் இடம் மாறியிருந்தாலும் புத்ர ஸித்தியுண்டு.

லக்நம், குரு, சந்திரன் இவர்களுடைய புத்ர ஸ்தானங்கள் ஸூரியன், செவ்வாய், க்ஷீண சந்திரன், பாபிகளுடன் கூடிய புதன் சனி, ராகு, கேது - இவர்களுடைய சேர்க்கையை அல்லது பார்வையை அடைந்து, விருத்தி சந்திரன், பாபிகளுடன் சேராத புதன், குரு சுக்கிரன் இவர்களுடைய சேர்க்கை அல்லது பார்வை இவைகளை அடையாமலிருந்தாலும், புத்ர ஸ்தானத்திற்கு இரு புறங்களிலும் பாபிகள் இருந்தாலும், புத்ர ஸ்தானாதிபதிகள் 6, 8, 12-களில் இருந்தாலும், புத்ர ஸ்தானாதிபதிகளுக்கு இரு புறங்களிலும் பாபிகள் இருந்தாலும் புத்ர ப்ராப்தியில்லை.

புத்ர ஸ்தானாதிபன் பாபியானாலும் புத்ர ஸ்தானத்திலிருந்தால் புத்ர ஸித்தியுண்டு. புத்ராதிபனாகிய பாபி ஸ்வக்ஷேத்ரத்தில் வேறு பாபியுடன் கூடினால் புத்ர தோஷம் உண்டு.

புத்ர ஸ்தானாதிபதி சுபனாகி புத்ர ஸ்தானத்திலிருந்தாலும், சுபர்களுடன் கூடினாலும் சுபர்களுடைய பார்வை பெற்றாலும் அதிக புத்ரர்கள் கிடைக்கும். விருஷபம், ஸிம்மம், கன்னி, விருச்சிகம் இவைகள் அல்ப புத்ர ராசிகளாகையால் அவைகள் புத்ர ஸ்தானமாய் வரும் பொழுது அல்ப புத்ரர்கள் உண்டு. அல்லது காலாந்தரத்தில் புத்ர ப்ராப்தியுண்டு.

விருஷபம், ஸிம்மம், கன்னி, விருச்சிகம் இவைகள் புத்ர ஸ்தானங்களாகி அவைகளில் சூர்யனிருந்தாலும், 8-ல் சனி இருந்தாலும் லக்நத்தில் செவ்வாய் இருந்தாலும், 1, 8, 12-களில் அடைவே சனி, குரு, செவ்வாய் இவர்கள் இருந்தாலும், சந்திரன் 11-லும், குருவுக்கு புத்ர ஸ்தானத்தில் பாபிகள் இருந்தாலும், லக்நத்தில் அனேக ஸ்ரகங்கள் கூடியிருந்தாலும் பரிஹாரத்தின் பேரில் காலாந்தரத்தில் புத்ர ப்ராப்தி உண்டு.

சந்திரன் இருக்குமிடம் புத்ர ஸ்தானமாய் அதில் சூரியனுடது செவ்வாயாவது, சுக்ரனுடது தனித்திருந்தால் இரண்டாவது பார்வைக்கு புத்ரன் உண்டு. மே ஸ்தானத்தில் சனி தனித்திருந்தால் முதல் களத்ரத்திற்கே அனேக புத்ரர்கள் உண்டு. மே ஸ்தானத்தில் சந்திரன், புதன் தனித்திருந்தால் அல்ப புத்ரர்கள் உண்டு. குரு தனித்திருந்தால் அனேக களத்ரங்கள் உண்டு.

சந்திரன், சுக்ரன் இவர்கள் 4, 7, 10-ஆம் இடங்களில் இருந்தாலும், பாபிகள் 1, 5, 8, 12-ஆம் இடங்களில் இருந்தாலும், புதன் சுக்ரன் இவர்கள் ஏழில் இருந்தாலும், குரு பாபிகளுடன் கூடி 4-ல் இருந்தாலும், புத்ர ஸ்தானத்தில் க்ஷீண சந்திரன் இருந்து 1, 8, 12-களில் பாபிகள் இருந்தாலும் வம்சத்திற்குக் குறைவு உண்டாகும்.

லக்நத்தில் பாபியும் லக்நாதிபதி புத்ர ஸ்தானத்திலும், புத்ர ஸ்தானாதிபதி 3-லும், 4-ல் க்ஷீண சந்திரனும் இருந்தால் புத்ர தோஷம் உண்டு.

புத்ர ஸ்தானம், மிதுனம் கன்னி, மகரம், கும்பம் இந்த ராசிகளில் ஒன்றாகி அந்த ஸ்தானத்தில் சனி, குளிகன் இவர்கள் இருந்தாலும், அல்லது அந்த க்ஷேத்ரத்தை அவர்கள் பார்த்தாலும் புத்ர ஸ்தானம், லக்நம், ஸப்தமம் இவைகளின் அதிபதிகளின் ஸம்பந்தம் மே புத்ரஸ்தானத்துக்கு இல்லாமலும், புத்ர ஸ்தானாதிபனுக்கு பலஹாநி இருந்தாலும் தத்த புத்ர யோகம் சொல்லவும்.

புத்ர ஸ்தானாதிபதி நீச வீட்டிலாவது, சத்ரு வீட்டிலாவது இருந்தாலும், அஸ்தமனத்தை அடைந்திருந்தாலும், புத்ர

ஸ்தானத்துக்கும் புத்திர ஸ்தானாதிபதிக்கும் சுபர்களின் சேர்க்கை அல்லது பார்வையில்லாமலிருந்தாலும் புத்ர தோஷமுண்டு.

சூரியன், செவ்வாய், குரு, புத்திர ஸ்தானாதிபதி இவர்கள் எவ்விடத்திலிருந்தாலும் அவ்விடம் புருஷ ராசி, புருஷ அம்சமாயிருக்கில் அனேக புத்திரர்களுண்டு. புத்திர ஸ்தானாதிபதி பலவானாயிருந்தால் நல்ல புத்திரர்களாம். பலஹீனனானால் அடங்காத புத்திரர்கள் உண்டாகும்.

புத்திர ஸ்தானம் புத்திர ஸ்தானாதிபதி இவர்கள் புருஷராசி புருஷ அம்சங்களிலிருந்து புருஷ கிரகங்களால் பார்க்கப்பட்டாலும், அல்லது புருஷ கிரகங்களுடன் கூடினாலும் புருஷ பிரஜைகளுண்டு.

புத்திர ஸ்தானம், புத்திர ஸ்தானாதிபதி இவர்கள் ஸ்த்ரீ ராசி ஸ்த்ரீ அம்சங்களிலிருந்து ஸ்த்ரீ கிரகங்களால் பார்க்கப்பட்டாலும், அல்லது ஸ்த்ரீ கிரகங்களுடன் கூடினாலும் பெண் பிரஜைகளுண்டு.

சூரியன், சுக்கிரன் இவர்கள் புருஷர்களுக்கு 3, 6, 10, 11-களில் ஸ்வ க்ஷேத்திரம் ஸ்வாம்சம் பெறினும், சந்திரன், செவ்வாய் இவர்கள் பெண்களுக்கு 3, 6, 10, 11-களில் ஸ்வ க்ஷேத்ரம் ஸ்வாம்சம் பெறினும் கர்ப்ப ப்ராப்தியுண்டு.

புத்திர ஸ்தானத்திலுள்ள கிரகங்களில் நீசவிடு சத்ருவிடு சத்ரு நவாம்சம் பெறுத கிரகங்களில் ஸங்க்யையும் புத்திர ஸ்தானாதிபனுடன் கூடிய கிரகங்களின் நீசவிடு, சத்ருவீடு, சத்ரு நவாம்சம் பெறுத கிரகங்களின் ஸங்க்யையும் கொண்டு புத்ர ஸங்க்யையைச் சொல்லவும். லக்நத்துக்கு புத்திர ஸ்தானத்திலும், குருவுக்குப் புத்திர ஸ்தானத்திலுமுள்ள அஷ்ட வர்க்கப் பரலைக் கொண்டும் புத்திர ஸங்க்யையைச் சொல்லவும்.

க்ஷேத்ர பீஜ்புடமும் அதின் பலமும்.

சந்திரன், செவ்வாய் குரு இம்மூவர்களின் ஸ்புடங்களை ஒன்று சேர்த்து வரும் ராசியாதிகள் இரட்டை ராசியாயும் இரட்டை அம்சமாயும் வில் ஸ்த்ரீகளுக்கு க்ஷேத்ர பலம் (புத்ரோத்பத்தி) உண்டென்றும், ஒன்று ஒற்றையாயும் ஒன்று இரட்டையாயுமிருந்தால் பிரயாஸத்தில் புத்ரோத்பத்தி உண்டென்றும்,

சூரியன், குரு, சுக்கிரன் இம்மூவர்களின் ஸ்புடங்களை ஒன்று சேர்த்து வரும் ராசியாதிகள் ஒற்றை ராசியாயும், ஒற்றை அம்சமாயும் வில் புருஷர்களுக்கு பீஜ பலம் (புத்ரோத்பத்தி) உண்டென்றும், ஒன்று ஒற்றையாயும் ஒன்று இரட்டையாயும் வில் பிரயாஸத்தால் புத்ரோத்பத்தியுண்டென்றும் சொல்லவும்.

ஸந்தானாதி ஸ்புடம்.

ஐந்தினால் பெருக்கிய சந்திர ஸ்புட ராசியாதிகளில் ஐந்தினால் பெருக்கிய சூரிய ஸ்புடத்தைக் கழித்து வரும் ராசியாதிகளைத் திதியாகச் செய்யுங்கால் சுக்ல பக்ஷமாகில் எளிதில் புத்ரோத்பத்தியையும், கிருஷ்ண பக்ஷமாகில் பிரயாஸத்தினால் புத்ரோத்பத்தியையும், இரண்டு பக்ஷங்களிலும் திதியின் பலம் பார்த்து புத்ரோத்பத்தி சொல்லவும்.

அமாவாஸ்யை, அஷ்டமி, நவமி, துவாதசி, சதுர்த்தி, ஷஷ்டி, சதுர்தசி, விஷ்டி என்கிற பத்ரை கரணம், ஸ்திரமென்கிற சகுனம், சதுஷ்பாதம், நாகவம் கிம்ஸ்துக்நம் என்கிற கரணங்கள் வில் புத்ரோத்பத்தியில்லையென்றும் சொல்லவும்.

விஷ்டி ஸ்திரம் வரும் ப்ரகாரம்.

சுக்ல பக்ஷத்து அஷ்டமி, பௌர்ணமி இவைகளின் முற்பாதி, ஷ பக்ஷத்து சதுர்த்தி, ஏகாதசிகளின் பிற்பாதி கிருஷ்ண பக்ஷத்து சதுர்த்தி, ஸப்தமிகளின முற்பாதி, ஷ பக்ஷத்து திருதியை, தசமிகளின் பிற்பாதி இவைகளில் முறையே 1, 2, 3, 4, 2, 3, 4, 1-வது யாமங்களில் விஷ்டி தோஷம் அறியவும். யாமம் என்பது 3½ நாழிகை.

அந்த தோஷங்களுக்குப் பரிஹாரங்கள்.

விஷ்டி ஸ்திர கரண தோஷத்திற்கு, புருஷ ஸூக்த மந்திரத்தினால் கிருஷ்ண யர்களும், ஷஷ்டி திதியானால் ஸுப்ரம்மண்யாராதனமும், சதுர்த்தியானால் கணபத்யாராதனமும், நவமியானால் ஸ்ரீ ராமாயண ச்ரவணமும், சதுர்தசியானால் ஏகாதச ருத்ராராதனமும், துவாதசியானால் அன்னதானமும், அமாவாசியை பௌர்ணமியானால் பித்ரு தேவதாதர்ப்பணமும் செய்யவேண்டும். கிருஷ்ண பக்ஷத்தில் தசமிக்கு மேலான திதிகளாய் வருமானால் மிக

பிரயத்னத்தில் பலம் ஸித்திக்கவேணும். பக்ஷ த்ரிபாகங்களில் க்ரமமாக கணபதி, ஸுப்ரமண்யன், மஹா விஷ்ணு இவர்களைப் பூஜிக்க வேணும். பக்ஷ த்ரிபாக மென்பது — கிருஷ்ண பக்ஷத்தை மூன்று கூறுக்கி பிரதமை முதல் பஞ்சமி வரை முதலாவது பாகம். ஷஷ்டி முதல் தசமி வரை 2-வது பாகம். ஏகாதசி முதல் அமாவாசியவரை 3-வது பாகம் என்றறியவும்.

புத்திர ஸ்தானாதிபதி சத்ரு வீடு, நீச வீடு, அஸ்தமனம் இவைகளை அடைந்தும், 6, 8, 12-களிலிருந்தும், புத்திர ஸ்தானத்தில் 6, 8, 12-மிடத்தாதிபர்களிருந்தால் புத்திர தோஷம் உண்டென்றும், மே புத்திர தோஷத்திற்குக் காரணத்தை அந்தக் கிரகங்கள் ஆக்ரமித்த நக்ஷத்ரத்தின் தேவதை, மிருகம், மரம் இவைகளின் அபசாரம், நாசம் செய்தலாகச் சொல்லவேணும். மே தேவதையை ஆராதித்தல். மே மிருகங்களை த்ருப்தி செய்தல் மே மரங்களை உண்டுபண்ணுதல் இதற்குப் பரிஹாரமென்றறியவும்.

புத்திர ஸ்தானத்தில் இருக்கும் கிரகங்களைக் கொண்டும், புத்திர ஸ்தானாதிபனுடன் கூடிய கிரகங்களைக் கொண்டும் அடியில் காட்டும் பிரகாரம் தோஷங்களை அறியவேண்டும்.

ரவியன் ஆனால் சிவன், கருடன், பித்ருக்கள் இவர்களுடைய கோபத்தினாலும், சாபத்தினாலும்,

சந்திரன் ஆனால் மாதா, ஸுமங்கலி, பகவதி இவர்களின் சாபத்தினாலும், மனோ தோஷத்தினாலும்.

செவ்வாய் ஆனால் தனது கிராம தேவதை, சுப்ரமண்யன், சத்ரு, தாயாதி இவர்களின் சாபத்தினாலும்.

புதன் ஆனால் மஹா விஷ்ணு சாபத்தினாலும், சிசு, பூனை, இவைகளின் கொலையாலும்.

குரு ஆனால் வம்ச பரம்பரையில் சொல்லிவரும் குல தெய்வம், சினேகிதன், பிராம்மணன், குரு இவர்களின் துரோகத்தினாலும், பழங்களுள்ள மரங்களை வெட்டுதலாலும்,

சுக்கிரன் ஆனால் புஷ்பச் செடியை வெட்டுதலாலும், பதிவ்ரதை, பக இவர்களின் சாபத்தாலும், யக்ஷர், கந்தர்வர்கள் இவர்களது கோபத்தாலும்,

சனி ஆனால் அரச மரத்தை வெட்டுதலாலும், யமன், ப்ரேதங்கள், பிசாசங்கள் இவர்களது கோபத்தாலும் சாபத்தாலும்,

ராகு ஆனால் ஸர்ப்ப சாபத்தாலும்,

கேது ஆனால் பிராம்மண சாபத்தாலும்,

குளிகன் ஆனால் பிரேத சாபத்தாலும் தோஷங்களை அறியவும்.

புத்திர ஸ்தானத்தில் சந்திரன், சுக்கிரன் இருவர்களும் குளிகனோடு கூடி நிற்கில் ஸ்திரீ ஹத்தி, பக ஹத்திகளையும், குருவாவது கேதுவாவது குளிகனோடு கூடி நிற்கில் ப்ராம்மண ஹத்தியையும் புத்திர தோஷங்களாகச் சொல்லவும்

மேற்கண்ட தோஷங்களுக்குப் பொதுவான பரிஹாரங்கள்.

ஸேது ஸ்நானம், ஸத்கதா காலக்ஷேபம், சிவபூஜை, மஹா விஷ்ணு பூஜை, ஏகாதசி, பிரதோஷம், சிரவணம் முதலிய வ்ரதங்கள், தானம், சிரார்த்தம், நாக ப்ரதிஷ்டை முதலியவைகளைச் செய்து, விசேஷ பரிஹாரங்களையும் செய்து ஸந்ததியை அடையவேணும்.

புத்திரோத்பத்தி காலம்.

புத்திர ஸ்தானத்திலிருப்பவர்கள், புத்திர ஸ்தானத்தைப் பார்ப்பவர்கள், லக்னாதிபதி ஸப்தமாதிபதி புத்திர ஸ்தானாதிபதி, குரு இவர்களின் தசா புக்தி காலங்களிலும், புத்திர ஸ்தானாதிபதி யமகண்டகன் இவர்களிருக்கும் ராசி, அம்சங்களில் குரு கோசர ரீதியாய் வரும் காலங்களிலும்,

லக்னாதிபதியும், புத்திர ஸ்தானாதிபதியும், தங்களது உச்ச ஸ்வக்ஷேத்ரங்களில் கோசர ரீதியாய் சேரும் காலங்களிலும், லக்னாதிபதி, புத்திர ஸ்தானாதிபனிருக்குமிடத்திலாவது, புத்திர ஸ்தானத்திலாவது வரும்காலங்களிலும்,

பரஸ்பரம் ஸம்பந்தம் பெற்ற லக்னாதிபதி, ஸப்தமாதிபதி, புத்திர ஸ்தானாதிபதி இவர்களின் தசைகளில், புத்திர ஸ்தானத்திலிருப்பவர்கள், புத்திர ஸ்தானத்தைப் பார்ப்பவர்கள், புத்திர ஸ்தானாதிபதி இவர்களுடைய புக்திகாலங்களிலும்,

புத்திர ஸ்தானாதிபதி, குரு இவர்கள் தசாபுக்தி காலங்களிலும், இவர்களிருக்கும் ராசிநாதன், அம்சநாதன் இவர்களுடைய தசாபுக்தி காலங்களிலும்,

குரு, தானிருக்கும் வீட்டிற்காவது, புத்திரஸ்தானாதிபதி இருக்கும் வீட்டிற்காவது அல்லது அவர்களிருக்கும் அம்சத்திற் காவது ஏற்பட்ட த்ரிகோண ராசியில் கோசர ரீதியாய் வருங் காலங்களிலும், காலமறிந்து புத்திமான்கள் கர்ப்போத்பத்தி, புத்திரோத்பத்திக்குக் காலத்தைச் சொல்ல வேண்டும்.

ஜன்ம நக்ஷத்ரநாதன், அதற்கு ஐந்தாவது நக்ஷத்ரநாதன் இவர்களுடைய ஸ்புடங்களை ஒன்றுசேர்த்து வரும் ராசியிலாவது அல்லது அதின் த்ரிகோண ராசிகளிலாவது கோசார ரீதியாய் குரு வரும்போதும் புத்திரோத்பத்திக்குக் காலம் என்றும் அறியவும்.

புத்ரஸ்தானம் சனிக்ஷேத்ரமாகி சந்த்ரன் பார்த்தாலும், புத்ர ஸ்தானத்தில் சனி வஸித்தாலும் ஸ்வீக்ருத புத்ரனுண்டு.

புத்ரஸ்தானம் புதவீடாகி சந்த்ரனால் பார்க்கப்பெற்றாலும், புதன் புத்ரஸ்தானத்திலிருந்தாலும் க்ரீத புத்ரனுண்டு.

புத்ரஸ்தானத்தில் செவ்வாயின் ஸப்தமாம்சம் உதயமாகி ஸப்தமாம்சத்தில் சனியிருந்து, சனி தவிர மற்றவர்களின் பார்வையுமில்லாமலிருந்தால் க்ருத்ரிம புத்ரனேற்படும்.

ஐந்திலுள்ள சனியின் வர்க்கம் சூரியனுடன் கூடியோ, செவ்வாயால் பார்க்கப்பெற்றோ இருக்க கீழ் ஜாதிக்குண்டான புத்ரனுண்டாகும்.

சந்த்ரன் செவ்வாயின் நவாம்சமடைந்து ஐந்திலிருந்து சனி பார்வை பெற்று மற்ற க்ரகங்களின் பார்வையில்லாவிடில் மறைவாகப் பிறந்த குழந்தையுண்டு.

செவ்வாய் புத்ரஸ்தானத்தில் சனிவர்க்கத்திலிருந்து சூரியன் பார்க்க அபவித்தன் என்ற புத்ரனுண்டாகுமென சாகர் சொல்கிறார்.

சந்த்ரன் சனியின் வர்க்கத்தில் வஸித்து, ஐந்தில் சனியிருந்து சுக்ர சூர்யர்களால் பார்க்கப்பெறின் பௌனர்ப்பவன் என்னும் புத்ரனுண்டாகும்.

மேஷாதிராசி அல்லது ஷோடசாம்சம் சூரியனுடன் சேர்ந்தோ அல்லது புத்ரஸ்தானம் சூர்ய ஸம்பந்தமோ, பார்வையோ பெற்றால் கானீனன் என்கிற புத்ரனுண்டாகும்.

புத்ரஸ்தானத்தில் வலிக்கும் சூரிய சந்த்ரர்களின் வர்க்கம் சூரிய சந்த்ரர்கள் ஸம்பந்தம் பெற்று சுக்ரன் பார்க்க ஸஹோடன் என்ற (இருவர் மணந்த ஸ்த்ரீயிடத்தில்) புத்ரனுண்டாகும்.

புத்ரஸ்தானம் பாப க்ஷேத்ரமாகி பலிஷ்டர்களான பாபிகளுடன்கூடி சுபவீக்ஷணமுமில்லாமலிருந்தால் புத்ரப்ராப்தியில்லை.

ஐந்தில் சுக்ரநவாம்சமுதயமாகி சுக்ரனால் பார்க்கப் பெறினும், ஐந்தில் சந்த்ர நவாம்சமுதித்து சந்த்ரனால் பார்க்கப்பெறினும் தாலீப்ரபவன் என்னும் புத்ரனுண்டாகிறான்.

சுக்ர சந்த்ரர்களின் வர்க்கம் புத்ரஸ்தானத்திலிருந்து, சுக்ர சந்த்ரர்களின் யோகம்-த்ருஷ்டி பெற்று, அவர்கள் வலிக்கும் வர்க்கம் இரட்டையான வர்க்கமாகவுமிருக்க அநேகமாகப் பெண் குழந்தைகளுண்டாகும். இப்படியே யிருப்பதில் ஒற்றையான வர்க்கமாகவிருக்க, சுக்ர சந்த்ரர்களுமிருந்தால் ஆண் குழந்தைகளேயுண்டாகும்.

பத்தாமிடத்தில் சந்த்ரனும், ஏழாமிடத்தில் சுக்ரனும், நான்காமிடத்தில் பாபியுமிருந்தாலும், பாபிகள் 5-12-8-1 இடங்களிலிருந்தாலும் வம்சச் சேதமேற்படும்.

ஐந்தில் செவ்வாயிருந்தால் பிறந்த குழந்தை நாசமாகிறது. குரு அல்லது சுக்ரன் பார்க்க முதற் குழந்தை நாசமாகும். எல்லா க்ரஹங்களாலும் பார்க்கப்பட்டால் நாசமில்லை.

ஐந்தில் பாபரிருக்க தன-ஜன ஸுகரஹீனனாகிறான். சனியிருந்தால் ரோகியாவான். குரு-புத-சுக்ரர்களிருக்க ஸுக-ஸம்பத்தனங்களுடையவனாகிறான்.

ஐந்திலிருக்கும் பாபி துர்பலனானால் புத்ரதோஷமேற்படுகிறது. அஷ்டமாதிபனைத் தவிர பலவானான சுபன் சுபத்தை அளிப்பான்.

கடகம் - விருச்சிகம் - மீனம்- இவை ஐந்தாமிடமாகி குருவும் அங்கிருக்க, அற்பமாக ஸந்ததி யுண்டாகும். ஐந்தாமிடமாக இருக்கும் கடகத்தில் சனியிருந்தால் அநேக புத்ரர்களுண்டாகும்.

ஐந்தாமிடமான கடகத்தில் செவ்வாயிருந்தால் இரண்டாவது மீனவிக்குப் புத்ரனுண்டாகும்.

ஐந்தாமிடம் கடகமாக, சந்த்ரனும் அதிலிருக்க அற்பமாகக் குழந்தைகளுண்டாகும். குருவிருக்க அதிகமான ஸ்திரீகளை யடைகிறான்.

ஸப்தமாதிபன் பஞ்சமத்திலிருக்க தாரநாசம் அல்லது அற்ப ஸந்ததியுண்டாகும். ஸப்தமாதிபன் பலம் பெறின் சுபம் பல மில்லாதிருந்தால் நாசம். பஞ்சமாதிபன் ஸப்தமத்திலிருந்தாலும் நற்பலனில்லை.

பஞ்சமத்திலோ அஷ்டமத்திலோ குரு பாபியுடன்கூடியிருக்க ஸந்ததி நாசம். சுபக்ஷேத்ரமானால் நாசமில்லை.

பாபி ஸ்வக்ஷேத்ரமான ஐந்திலிருக்க புத்ரனுண்டாகும்.

புத்ரஸ்தானம் இரண்டு பாபிகளுடன்கூட அதிகமான பிரஜாலாபம்.

ஐந்து இரண்டுக்குடையவர்கள் துர்ப்பலர்களாய் பாபிகளால் பார்க்கப் பெற்று புத்ரஸ்தானத்தில் இருக்க அதிகமான களத்ரமிருந்தபோதிலும், புத்ர லாபம் இடையாது. பார்யை புத்ரயோகம் உள்ளவளானால், தசமாதிபதி சுபனையிருந்து புத்ரஸ்தானத்தைப் பார்த்தால் அந்திய புருஷன்மூலம் புத்ரனுடையவளாவாள்.

சனி, செவ்வாய்கள், சந்த்ர சுக்ரர்களுக்கு சப்தமத்திலிருக்க பத்னியோ அல்லது புத்ரனோ இல்லாமலிருப்பான்.

செவ்வாய், சூரியன், சனி கிரமமாக 1, 12, 7 லிருக்க புத்ரஸ்தானத்தில் க்ஷீண சந்த்ரனிருந்தால் பிள்ளையில்லாமல்போகும்.

ஸ்திரீ ஜாதகத்தில் புத்ரஸ்தானம் பலம் பெற்று சுபவீக்ஷணமிருந்து ரோகாதிபன் கூடி அல்லது பார்த்தாலும், சப்தமாதிபன் செவ்வாயுடன் கூடி தனஸ்தானத்திலிருந்தாலும், செவ்

வாய்யோகம் அல்லது பார்வை பெற்ற தனாதிபன சப்தமத்திலிருந்தாலும், பஞ்சமாதிபன் சப்தமத்திலோ த்விதீயத்திலோ இருந்து செவ்வாயின் சம்பந்தம் அல்லது பார்வை பெற்றாலும், சோர புருஷன்மூலம் புத்ரன் உண்டாவதுடன், அந்யவிடத்தில் பற்றுள்ளவளாவாள்.

பஞ்சமாதிபதியோ, பஞ்சமபாவகாரகனோ ஸ்வக்ஷேத்ரம் உச்ச க்ஷேத்ரங்களிலிருந்தால் மந்த்ரஸித்தி யுண்டாகும்.

மீனம் 5-மிடமாக 6, 8, 12-ல் பாபிகளிருக்க மந்த்ரத்தினால் மரணமேற்படும்.

6, 8, 12-ல் சுபாசுபக்ரஹங்களிருக்க சுபாசுபங்கள் கலந்திருக்கும். ஐந்தாமிடத்தில் சுபாசுபக்ரஹங்களிருந்து மந்த்ரநாதன் நீசத்திலிருக்க 6, 8, 12-ல் அசுபர்களிருந்தால் மந்த்ரஹீனனாவான்.

ஐந்தாமிடத்தில் சூரியனிருந்து குருவுடன் கூடினால் சிவனையும், புதனிருந்தால் பைரவ தேவதையையும், செவ்வாயிருக்க, பைரவன், சிவன் இருவர்களையும், சனி சேர்ந்தால் சூலினி தேவதையையும், சுக்ரனுடன்கூட பார்வதியையும், செவ்வாய் சூரியன் சேர்ந்திருக்க சரப தேவதையையும், சனி, செவ்வாய், ராகு இவர்களுடன சுபர் கூடினால் காளி தேவதையையும் பூஜிப்பான்.

ஐந்தில் சுக்ரனிருந்தாலும் சந்த்ரனுடன் சேர்ந்தாலும் அல்லது இவர்களின் பார்வை மந்த்ரஸ்தானம் பெற்றாலும் ஸ்திரீ தேவதையை உபாஸனை செய்வான்.

பஞ்சமத்தில் புருஷக்ரகமிருக்க, புருஷ தேவதையை உபாஸிப்பான்.

ஐந்தாமிடத்தில் சூர்ய சம்பந்தமிருந்தால், சூரியன், சிவன் இவன் வசமாக ஆவர்கள். சந்த்ரன் அப்படியானால் யக்ஷிணிவச்யமேற்படும். சுப சம்பந்தம் வீக்ஷணம் பெற சுப்ரமண்யன் அல்லது பைரவன் வச்யமாவான்.

பஞ்சமத்தில் புதனிருக்க சாரதையோ, விஷ்ணுவோ உபாஸிக்கக்கூடியவராவர். குருவிருக்க ஸாத்விகமான தேவதையை உபாஸிப்பான்.

ஆருமிடத்தில் சுக்கிர சம்பந்தமிருந்தால் சாமுண்டியை உபாஸனம் செய்வான். சனியிருந்தால் கடுகாட்டில் வசிக்கும் தேவதைகளை உபாஸனை செய்வான், ராகு கேதுக்களுடன்கூட பிராணி இம்சை செய்யும் தேவதைகளை உபாஸிப்பான்.

ஐந்து, இரண்டு ஏழுக்கு அதிபர்கள் சேர்ந்த நவாம்ச அதிபர்கள் பரபாம்சத்திலிருந்தாலும் பாபிகளுடன கூடினாலும் விரயாதிபனுடன் சேர்ந்த அஷ்டமாதிபன் அஷ்டமத்திலிருந்தாலும், பஞ்சமாதிபன் க்ரூர ஷஷ்டியம்சத்தில் 8-மிடத்திலிருந்தாலும், குரு க்ரூரஷஷ்டியம்சத்திலிருந்து பஞ்சமத்திலோ அஷ்டமத்தில் புத்திராதிபனை நீசனானாலும் பஞ்சமாதிபதி லக்னத்திலிருந்து காரகன் 6, 8, 12 இவைகளிலிருந்து, அது நீசராசியாகி பஞ்சமஸ்தானம் புத்திரனற்ற வீடாக அமையுமானாலும், பஞ்சமாதிபன் சப்தமத்திலிருந்தாலும் பாபயோகம் விகடிணம் அடைந்தாலும், சந்திரன் பாபிகளுடன்கூடி கேந்திரத்திலிருந்தாலும் புத்திரனில்லாதவனுவான்.

பஞ்சமாதிபன் சப்தமத்திலிருந்தாலும் பாபவீக்ஷணம் அடைந்தாலும், சந்திரன் பாபிகளுடன்கூடி கேந்திரத்திலிருந்தாலும் புத்திரனில்லாதவனுவான்.

பஞ்சமாதிபன் சப்தமத்திலிருந்தாலும் பாபவீக்ஷணம் சம்பந்தமடைந்தாலும், சந்திரன் பாபிகளுடன்கூடி கேந்திரத்திலிருந்தாலும் சந்ததி ஏற்பட்டாலும் நாசமாகும்.

பஞ்சமாதிபன் பஞ்சமத்திலிருந்து 12, 6 களில் பாபியுமிருந்தால் புத்திராபாவம் ஏற்படும் அல்லது பிறந்த குழந்தை நாசமாகும்.

ஐந்தில் செவ்வாயிருந்து லக்னாதிபதி இரண்டிலிருக்க குழந்தை பிறக்கப் பிறக்க நாசமாகும். பூர்ணயுளுள்ள குழந்தை இராது.

6, 8, 12-க்குடையவர்கள் துஸ்தானாதிபர்களானாலும் நீசம் சத்ரு அஸ்தங்கதர்களாவதன் மூலமும் புத்திரனில்லாதவர்களாவர்.

சந்திரன் குருவுடன்கூட லக்னத்திலும், 7-ல் செவ்வாய் அல்லது சனியிருந்து 1, 12, 5, 8-இடங்களில் பாபிகளிருந்தாலும், பாபிகள் 8, 1, 12-களிலும் பஞ்சமத்தில் சந்திரனும்,

சப்தமத்தில் சுக்கிரனுடன் சேர்ந்த புதனும், 4-ல் பாபிகளும் குரு 5-லிருந்தாலும், சந்திரனுக்கு அஷ்டமத்தில் பாபிகளிருந்தாலும், லக்னத்தில் பாபியும் 4-ல் சந்திரனும் லக்னாதிபன் பஞ்சமத்திலிருந்தாலும், பஞ்சமாதிபன் துர்பலனாய் க்ஷீணசந்திரன் லக்னத்திலுமிருந்து சனி அல்லது குரு அஸ்தங்கதனை க்ரஹத்துடன் கூடினாலும் பாபிகள் எல்லாம் திரிகோணத்திலிருந்து புதன் 5-லும், லக்னத்திலோ சுகஸ்தானத்திலோ பாபியிருந்தாலும் வம்ச விச்சேதமாகும்.

பாபிகள் 5-லிருந்து ஜன்மலக்னம் செவ்வாய் விடாகி 8-ல் சனி அல்லது 5-ல் சூரியனிருந்தாலும் புத்திரன் முகத்தைக் காணமாட்டான்.

லக்னாதிபனும் பஞ்சமாதிபனும் மித்திரனுனல் புத்திரன் மித்திரனுகவும், சத்ருவானல் சத்ருவாகவும் சமமானல் சமனுகவுமிருப்பான்.

லக்னாதிபதி பஞ்சமாதிபதி ஒருவர்க்கொருவர் பார்வை பெற்று க்ஷேத்ரம் அம்சங்களில் பரிவர்த்தனீயாக மிருந்தாலும் புத்திரன் தகப்பனுக்கு பணிவிடை செய்வான்.

செவ்வாய் லக்னாதிபனுகி உச்சத்திலிருந்து சனியோடுகூடி மிருக்கும் சூர்யன் அஷ்டமத்திலிருந்து சுபவீக்ஷணம் பெற்றாலும், லக்னத்தில் சனியும் 8-ல் குருவும் 12-ல் செவ்வாயுமிருந்து சுப வீக்ஷணம் பெற்றோ அல்லது உச்ச க்ஷேத்ரத்திலிருந்தாலும், 5-ல் சனி குரு புதர்களும், லக்னத்தில் பஞ்சமாதிபனும் புத்திராதிபதி சுபனுக சுப ராசியிலிருந்தாலும், சுபக்ஷேத்ரம் புத்திரஸ்தானமாகயிருந்து ராகு, சூரியன், சுக்கிரன், குரு இவர்களிருந்து, புத்திராதிபதி சுபவீக்ஷணம் பெற்று சுப ராசியிலிருந்தாலும், லக்னத்தில் சுபக்ரகமும், இரண்டில் ஒரு பாபக்ரகமும், மூன்றில் மற்ற பாபக்ரகங்களும் தர்மாதிபன் தர்மஸ்தானத்திலிருந்தாலும் அதிக காலம் தாமதித்து புத்திரனை அடைகிறான்.

புத்திராதிபதி உச்சமாகி லக்னத்திற்கு கேந்திர திரிகோணத்திலிருந்து குரு சம்பந்தம் அல்லது பார்வை பெற்றால் புத்திரன் மூலம் பாக்யத்தை அடைகிறான்.

குரு பஞ்சமத்தை யடைந்து பஞ்சமாதிபன் சுக்கிரனுடன் சேர்ந்து சுபர் சேர்க்கை அல்லது பார்வை பெற்றால் 32 வயதிற்குப் பின் புத்திர லாபம் ஏற்படும்.

பஞ்சமாதிபன் கேந்திர பாவத்திலிருக்க புத்திரகாரகனுடனும் சேர்ந்தால் 26 அல்லது 30 வயதில் புத்ரபிராப்தி.

9-ல் குருவிருந்து அதற்கு 9-ல் சுக்கிரனிருந்து லக்னாதிபதி பலவானுனல் 40 வயதில் புத்திரனுண்டு.

தனாதிபன் பஞ்சமத்திலும் பஞ்சமாதிபன் பஞ்சமத்திலுமிருக்க ஏழு குழந்தைகள் உண்டாவதில் இரண்டு கர்ப்பம் இரட்டையாகவிருக்கும்.

ராகு பஞ்சமத்திலும் பஞ்சமாதிபதி பாபிகளுடனுமிருந்தால் 6 குழந்தை பிறப்பதில் மூன்று நாசமாகும்.

குரு ரிசஸ்தானம் அல்லது சத்ரு ஸ்தானத்தை அடைந்தாலும் குருவுக்கு பஞ்சமத்தில் பாபியிருந்தாலும் அல்லது லக்னத்துக்கு 5-ல் பாபியிருந்தாலும் 32 வயதில் புத்திர நாசம்.

லக்னத்தில் குளிகன் இருக்க லக்னாதிபன் ரிச ராசியிலிருந்தால் 26, 33, 40 இந்த வயதுகளில் புத்திர நாசமேற்படும்.

நான்கில் க்ரூர க்ரஹம் இருக்க 6-ல் பாபக்ரகமிருந்தால் 55 வயதில் புத்திர துக்கமேற்படும்.

பஞ்சமாதிபன் அஷ்டமத்திலிருந்து லக்னாதிபனை சம்பந்தமில்லாமல் புத்திரகாரகன் சுபயோகம் பெற்றால் ஐந்து குழந்தைகள் நாசமாகும்.

லக்னத்திற்கு 5-ல் பாபியும் குருவுக்கு பஞ்சமத்தில் சனியுமிருக்க அன்னிய களத்திரமூலம் புத்திர லாபமும் மூன்று களத்திரமும் ஏற்படும்.

லக்னத்தில் சனியும் 8-ல் குருவும், 12-ல் செவ்வாயும் வசித்து சுபவீக்ஷணம் அல்லது சம்பந்தமிருந்தால் காலம் கடந்து புத்திர லாபம்.

பஞ்சமாதிபன் 9-ல் சுபவீக்ஷணம் பெற்று புத்திரகாரகன் கேந்திர பாவத்திலிருந்தாலும் லக்னாதிபன் புத்திர ராசியிலும்

புத்திராதிபன் லக்னத்திலும் பஞ்சமத்தில் புதன் சூரியன், ராகு இவர்களும் புத்திரகாரகன் சுபனுடன் சேர்ந்து சுபனுல் பார்க்கப் பட்டாலும், லக்னாதிபன் பஞ்சமத்திலும், பஞ்சமாதிபன் லக்னத்திலுமிருந்து குரு கேந்திர த்ரிகோணத்திலுமிருந்தாலும், புத்திர ஸ்தானத்தில் வசிக்கும் ராகு, சனியின் அம்சம் ஏறுமல் சுபக்ரக விக்ஷணத்தை பெற்றாலும் புத்திராதிபன் உச்சத்திலிருந்து லக்னாதிபன் சுப சம்பந்தம் பெற்று புத்திரகாரகனும் சுபசம்பந்தம் பெற்றாலும் பஞ்சமஸ்தானாதிபதியோ, ஸ்தானாதிபதியோ, காரகனோ சுபயோகம் பார்வை பெற்றாலும் அதிகமான புத்திரர்களை அடைவான்.

குரு பூர்ண பலவானாய், லக்னாதிபன் புத்திரஸ்தானத்திலிருந்து புத்திராதிபதி பலத்துடனிருந்தாலும், குருவர்கோத்தமம் பெற்று லக்னாதிபன் வசிக்கும் அம்சாதிபன் சுபனுடன் புத்திராதிபன் பார்வை, சேர்க்கை அடைந்தாலும், பஞ்சமாதிபன் பூர்ண பலவானாய் தனஸ்தானத்திலிருந்து குரு வைசேஷிகத்திலிருந்தாலும், லக்னாதிபதி பஞ்சமாதிபன் தம்தம் உச்சக்ஷேத்ரத்திலிருந்து பரஸ்பரம் பார்வை பெற்றாலும், பரிவர்த்தனம் பெற்றாலும் பஞ்சம லக்னாதிபர்கள் சேர்ந்திருந்தாலும், ஒருவர்க்கொருவர் பார்வை பெற்றாலும், பரிவர்த்தனம் பெற்றாலும் புத்திராதிபதி வசிக்கும் அம்சத்தின ராசியதிபன சுபயோக - விக்ஷணம் பெற்றாலும், லக்ன புத்திரேசர்கள் கேந்திரத்தில் வசித்து சுபக்ரகயோகம் பெற்று, தனாதிபன் பலம் பெற்றிருந்தாலும், லக்னாதிபன் சப்தமத்திலும், சப்தமாதிபன் லக்னத்திலும், தனாதிபன் சந்திர லக்னத்திலிருந்தாலும், நவாம்ச ராசிபதியும், பஞ்சம லக்ன சந்த்ரலக்னாதிபர்களும் சப்தமாதிபதியுடன் கூடினாலும், குருவுடன் சேர்ந்த புத்ரஸ்தானம் குருவின் உச்சம் ஷட்வர்க்கம் பெற்று பாபஷட்வர்க்கமில்லாதிருந்தாலும், சுபக்ரகத்தின் ஆதிபத்யமுடைய பஞ்சம ஸ்தானத்தில் சுக்கிரனிருந்து பஞ்சம ஸ்தானாதிபன் பலவானாகிருந்தாலும், பஞ்சம ஸ்தானம் சுபக்ரஹாதிபத்யம் பெற்று பஞ்சமாதிபனும் பலவானாகி சுக்கிரனால் பார்க்கப்பட்டாலும் புத்திர லாபமுண்டு.

பஞ்சமாதிபதி சந்திரன் சுக்கிரன் இவர்கள் ஸ்திரீ ராசி ஸ்திரீ நவாம்சத்திலிருக்க அதில் ஸ்திரீ பிரஜைகளுண்டாகும்.

குரு பரம உச்சம் பெற்று தனுதிபன் ராகுவுடன் கூடி நவ மாதிபதி சுபனுடு அல்லது பாக்யஸ்தானத்தோடு கூடினால் 9 புத்திரர்கள்.

குரு லக்னத்திலும் பஞ்சமாதிபன் பலவானாகி சப்தமாதிபன் தசமத்திலிருந்தாலும் 8 புத்திரர்கள்.

9-ல் சனியிருந்து நவமாதிபதி 5-லிருந்தால் 7 புத்திரர்கள். அவற்றில் இரண்டு இரட்டையாகலாம்.

பஞ்சமாதிபன் பரம உச்சத்திலிருந்து பஞ்சமஸ்தானம் சுப னால் பார்க்கப் பெற்று குரு பலவானாய் கேந்திரத்திலுமிருந்தால் அநேக புத்திரர்கள் உண்டாவர்கள்.

சுக்கிரன் - துலாம், மீனம், மேஷம், விருஷபம் இவைகளிலிருந் தால் தனிகனுகவும், மர்யாதையுள்ளவனுகவும், வித்தையில் ஆசையுள்ளவனுகவும் இருப்பதுடன் தீர்க்காயுசுடைய புத்திரர் களுண்டாவார்கள்.

புத்திர காரகன் வசிக்கும் இடத்துக்கு 5-லுள்ள சீச சத்ரு அஸ்தமனமானவர்களின் பிந்துவை விட்டு பாக்கியுள்ள அஷ்ட வர்க்க பிந்துக்களின் எண்ணிக்கையை வைத்து புத்திரர்களைச் சொல்லவும்.

புத்திர ஸ்தானத்தில் எத்தனை க்ரகங்கள் புருஷ நவாம் சத்தை அடைந்திருக்கிறார்களோ, அல்லது எத்தனை க்ரகங்கள் புத்திராதிபதியுடன் சேர்ந்திருக்கிறார்களோ, அல்லது எத்தனை அம்சாதிபர்கள் சுபவீக்ஷணம் பெற்றிருக்கின்றனரோ அவ்வளவு புருஷப்ரஜைகளுண்டாகும். இவ்விதமே ஸ்திரீ நவாம்சம் முதலிய வைகளைக்கொண்டு பெண்களின் எண்ணிக்கையைச் சொல்லவும்

பஞ்சமாதிபன் புருஷக்ரகமாகி, புருஷ ராசி புருஷ நவாம்சம் இவற்றிலிருந்தால் அவர்களின் பலத்தைக்கொண்டு அதிகமான ஆண் பிரஜைகளைச் சொல்லலாம். மாறியிருந்தால் பெண் பிரஜைகளுண்டாகும்.

புத்திராதிபன் தசையில் அல்லது அவனுடன் கூடியிருக்கும் க்ரக தசையில் புத்ர பிராப்தி.

ஐந்தாமிடம் சரமாகவோ பஞ்சமாதிபதி கேந்திரத்திலோ குரு இருந்தாலும், குருவுக்கு பஞ்சமாதிபதி பஞ்சமத்தைப் பார்க்கும் காலத்திலும் புத்திர யோகம்.

பஞ்சமாதிபன் வசிக்கும் அம்சாதிபதி லக்ன-சந்திரலக்னாதி பதி இவர்கள் கோசரத்தில் சொல்லப்பட்ட ஸ்தானங்களில் சஞ்சரிக்கும் காலத்திலும், குரு லக்னாதிபன் சப்தமாதிபன் பஞ்ச மாதிபன் இவர்களுடைய தசா காலத்திலும், லக்னாதிபதி பஞ்ச மாதிபதிகளிருக்கும் ராசியில் கோசரத்தில் குரு சஞ்சரிக்கும் காலத்திலும், அல்லது புத்திராதிபதி சஞ்சரிக்கும் காலத்திலும் புத்திரனுண்டாகும்.

பஞ்சமத்தில் புதன் சனியிருந்து புதக்ஷேத்ரம் லக்னமாய் புதன் பார்வை அல்லது சேர்க்கை அடைந்தாலும், பஞ்சம ஸ்தானம் புதன் அல்லது சனி க்ஷேத்ரமாகி சனி மாந்திகளின் சேர்க்கை அல்லது பார்வையடைந்தாலும் பஞ்சமஸ்தானம் புத க்ஷேத்ரமாகி புதாம்சம் புதன் பார்வை பெற்று லக்னாதிபன் சனியானாலும் பஞ்சமாதிபன் சனியுடன் சேர்ந்து செவ்வாய் புதன் இவர்களால் பார்க்கப் பெற்று லக்னாதிபன் புதாம்சத்தி லிருந்தாலும் சப்தமாதிபன் லக்னத்திலும் புத்திராதிபன் சுப னுடுகூட பஞ்சமத்தில் சனி அல்லது புதன் இருந்தாலும் தத்த புத்ரயோகம் ஏற்படுகிறது.

பஞ்சமாதிபன் நவமத்திலும் நவமாதிபன் தசமத்திலும் இருந்து பஞ்சமாதிபன் சுபர்கள் பார்வை பெற்றாலும், சுக்கிரன் லக்னாதிபனாய் தனது உச்சத்திலிருந்து பஞ்ச மத்தில் சனியிருக்க காரகன் பலவானானாலும், புத்திராதிபன் சந்திரனாய் லக்னத்திலும் பஞ்சமத்தில் சனியுமிருந்து குரு பூர்ண பலம் பெற்றாலும். புத்திராதிபன் சூர்யனாய் லக்னத்திலும் 5-ல் சனியும் புதனும் சேர்ந்து புத்திராதிபன் சேர்க்கை பார்வை பெற்றாலும், லக்னாதிபன் புதனாய் பஞ்சமத்திலிருந்து செவ்வாய் பார்வை பெற்று காரகன் லாபத்திலிருந்தாலும், லக்னாதிபன் குருவாய் பஞ்சமத்திலிருந்து சனி பார்வை பெற்று பஞ்சமாதிபதி குஜன் வீட்டிலிருந்தாலும், குரு லக்னாதிபனாய் பஞ்சமத்திலிருந்து செவ்வாய் பார்வை பெற்று பஞ்சமாதிபன் சனியின் வீட்டிலிருந் தாலும், பஞ்சமத்தில் ஆறு க்ரகங்களிருந்து பஞ்சமாதிபன்

விரயத்திலிருந்து லக்னாதிபன் துர்பலனானாலும் தத்த புத்திரன் மூலம் சந்ததி விருத்தி ஏற்படும்.

சூரிய சந்திரர்கள் ஒரே ராசியில் ஒரே அம்சத்தில் இருந்தால் இரண்டு தாயார் இரண்டு தகப்பனர்களால் போஷிக்கப்படுவான்.

ராகு பஞ்சமத்திலிருந்து செவ்வாயின் பார்வை பெற்றாலும் செவ்வாய் வீட்டிலிருந்தாலும், பஞ்சமாதிபன் ராகுவுடன் சேர்ந்து சனி பஞ்சமத்திலிருந்து சந்திர த்ருஷ்டி ஏற்பட்டாலும், புத்திர காரகன் ராகுவுடன் சேர்ந்து புத்திர ஸ்தானாதிபன் துர்பலனாய் லக்னாதிபன குஜனுடன் சேர்ந்தாலும் புத்திர காரகன் செவ்வாயுடன சேர்ந்து லக்னாதிபனும் ராகுவோடு சேர்ந்து பஞ்சமத்தில் சந்திரனிருந்தாலும், புதன் பஞ்சமாதிபதியாய் செவ்வாயுடன் சேர்ந்து செவ்வாய் அம்சத்தில் வலித்து, லக்னத்தில் ராகு, சனிகள் இருந்தாலும், பஞ்சமஸ்தானம் குஜ க்ஷேத்திரமாகி அதில் ராகு இருந்து புதனால் பார்க்கப்பட்டாலும் பஞ்சமத்தில் சூர்யன் சனி, செவ்வாய், ராகு, புதன, குரு இவர்களிருந்து பஞ்சமாதிபனும் லக்னாதிபனும் பலமற்றவர்களானாலும் லக்னாதிபன் ராகுவோடும் பஞ்சமாதிபன் செவ்வாயோடும் சேர்ந்து காரகன் ராகுவோடு கூடினாலும் ஸர்ப்பசாபத்தால் புத்திர நாசம். இத்தோஷத்திற்குப் பரிகாரமாக ஸர்ப்ப சாந்தி செய்து நாக ப்ரதிஷ்டை செய்ய வேண்டும.

சூரியன் புத்திர ஸ்தானத்தில் வசித்து நீச க்ஷேத்திரமாகி சனி அம்சத்திலுமிருந்து இருபக்கத்திலும் பாப க்ரகங்களிருந்தாலும், சூரியன் பஞ்சமாதிபனாய் திரிகோணத்தில் பாபரிருந்து இரு க்ரகங்கள் மத்தியிலிருந்து பாப விக்ஷணம் பெற்றாலும், சிம்மத்தில் குருவிருந்து பஞ்சமாதிபன் சூரியனுடன் சேர்ந்து பஞ்சமத்தில் பாபர் வசித்தாலும், லக்னாதிபன் துர்பலனாய் பஞ்சமத்திலிருந்து பஞ்சமாதிபன் சூரியனுடன் சேர்ந்து புத்திர லக்னத்தில் பாபர் கூடினாலும். 9-க்குடையவன் 5-லும் 5-க்கு அதிபன் 9-லும் லக்னம் ஐந்தாமிடங்களில் பாபர் இருந்தாலும், புத்திர ஸ்தானத்தில் சூரியன் வசித்து புத்திர ஸ்தானாதிபனுடன் சேர்ந்து 1, 5, 9 களில் பாபியிருந்தாலும், பாக்யாதிபன் 6, 8, 12-களிலும் புத்திர காரகன் பாப ராசியிலும் லக்னாதிபன் பாபியாய் 5-லிருந்தாலும், சூரியன், செவ்வாய், சனி 1, 5 இடங்களிலும் ராகு, குரு

8, 12-களிலிருந்தாலும், விரயாதிபன் லக்னத்திலும், அஷ்டமாதிபன் பஞ்சமத்திலும், பாக்யாதிபன் அஷ்டமத்திலிருந்தாலும், அஷ்டமத்தில் சூரியனும், பஞ்சமத்தில் சனியும், பஞ்சமாதிபன் ராகுவுடன் கூடியும், லக்னத்தில் பாபிகளிருந்தாலும், 6-க்குடையவன் அல்லது 9-க்குடையவன் 5-லிருந்து புத்திர காரகன் ராகுவுடன் கூடினாலும், பித்ரு சாபத்தால் புத்திர நாசம்.

சந்திரன் புத்திரஸ்தானாதிபனாய் நீசனாகிவோ பாபிகளின் மத்தியிலோ யிருந்து சுக புத்திர ஸ்தானங்களில் பாபியிருந்தாலும், லக்னத்தில் சனியும் 4-ல் பாபியும், 5-ல் நீசனான சந்திரன் இருந்தாலும், 5-க்குடையவன் 6, 8, 12-லும் லக்னாதிபன் நீசத்திலும் சந்திரன் பாப யோகம் பெற்றிருந்தாலும் புத்திராதிபன் 6, 8, 12-களிலிருந்து சனி, ராகு, செவ்வாய்களுடன் கூடி 9 அல்லது 5-ல் காரகனிருந்தாலும், 5-ம் அதிபதி 6, 8, 12 லிருந்து லக்னாதிபதி நீசத்திலிருந்து சந்திரன் பாப சம்பந்தம் பெற்றாலும், செவ்வாய் சுகாதிபதியாகி சனி, ராகுகளுடன் சேர்ந்து சூர்ய சந்திரர்கள் 5-லிருந்தாலும், லக்ன பஞ்சமாதிபர்கள் 6 லும், சுகாதிபன் 8-லும், பாக்யாதிபன் லக்னத்திலுமிருந்தாலும், 6, 8-க்குடையவர்கள் லக்னத்திலும், சுகஸ்தானாதிபன் விரயத்திலும், குரு சந்திரர்கள் பாப சம்பந்தம் பெற்றிருந்தாலும், லக்னத்திற்கு இரு பக்கத்தில் பாபிகளும் க்ஷீண சந்திரன் 7 லும், ராகு நான்கிலும், சனி ஐந்திலிருந்தாலும், அஷ்டமாதிபன 5 லும், பஞ்சமாதிபன் அஷ்டமத்திலும், சுகாதிபனும் சந்திரனும் 6, 8, 12-லிருந்தாலும், சந்திர க்ஷேத்ரம் லக்னமாய் செவ்வாய் ராகுக்களுடன் சனி, சந்திரன் பஞ்சமத்திலிருந்தாலும், செவ்வாய் லக்னத்திலும், ராகு 8-லும், சூரியன் 6-லும், சனி 12 லுமிருந்து சுக லக்னாதிபர்கள் 6, 8, 12-லிருந்தாலும், அஷ்டத்தில் குருவிருந்து செவ்வாய், ராகுகளுடன் கூடி பஞ்சமத்தில் சனி, சந்திரனிருந்தாலும் மாத்ரு சாபத்தால் புத்ர நாசம்.

த்ருதீயாதிபன் பஞ்சமத்திலிருந்து செவ்வாய் ராகுக்களுடன் கூடி பஞ்சம லக்னாதிபர்கள் அஷ்டமத்திலிருந்தாலும், லக்னத்தில் குஜன், 5-ல் சனி, 3க்குடையவன் 9-ல் காரகன் 8-லிருந்தாலும, 3-ல் குரு நீசனாய் 5-ல் சனியிருந்து 5-க்குடையவன 8-லிருந்தாலும,

லக்னாதிபன் விரயத்திலும், பஞ்சமத்தில் செவ்வாயும், பஞ்சமாதிபன் 8-லிருந்தாலும், லக்னம் 5-மிடம் இவ்விரண்டுக்கும் இருபக்கத்திலும் பாபிகளிருந்து பஞ்சமாதிபன் பாவ காரகன் 6, 8, 12-லிருந்தாலும், 10-க்கு அதிபதி 3-லும், பாபிகளுடன் சேர்ந்தபன் 5-லும் 5-க்குடையவன் செவ்வாயுடன் சேர்ந்திருந்தாலும், புத்ரஸ்தானம் புதன் வீடாய், சனி, ராகுக்களுடன் கூடி விரயஸ்தானத்தில் புதன் செவ்வாய் இருந்தாலும், லக்னாதிபன் 3-லும், 3-க்குடையவன் 5-லும், 1, 3, 5-ல் பாபிகளிருந்தாலும், அஷ்டமாதிபன் அஷ்டமத்திலும், காரகன் 5-லும் இருக்க, ராகு சனி யோகம் அல்லது பார்வை பெற்றாலும், அஷ்டமாதிபன் சோதராதிபனுடன் சேர்ந்து புத்ரஸ்தானத்திலும், அஷ்டமத்தில் செவ்வாய், சனிகளிருந்தாலும், ப்ராத்ரு சாபத்தால் புத்ர நாசம்.

புத்ரஸ்தானத்தில் புதன் வசித்து அது நீச வீடாகி, செவ்வாய், ராகு அங்கிருந்து லக்னத்தில் சனியிருந்தாலும், லக்னத்தில் பஞ்சமாதிபன் 8-ல் ராகு செவ்வாய்களுடன் கூடிய சனியிருந்தாலும், பஞ்சமாதிபன் அஸ்தங்கதனாகி லக்னத்திலும், 7-ல் சனியும் லக்னாதிபன் புதனுடன் கூடினாலும், லக்னத்தில் பாபி மிருந்து புத்ராதிபன் நீசத்திலிருந்து 7-க்குடையவன் புதன் பாபிகளுடன கூடினாலும், பஞ்சமாதிபன் லக்னத்திலிருந்து விரயாதிபனுடன் சேர்ந்து 5-ல் சனி, செவ்வாய்களிருந்தாலும் மாதுல சாபத்தால் புத்ர நாசம்.

குரு க்ஷேத்ரத்தில் ராகு வசித்து பஞ்சமத்தில் குரு, செவ்வாய், சனிகளிருந்து 9-க்குடையவன் 8-லிருந்தாலும், 9-க்குடையவன் 5-லும், 5-க்குடையவன் 8-லுமிருந்து குரு செவ்வாய், ராகு இவர்கள் 8-லிருந்தாலும், 9-க்குடையவன் நீசத்திலும், சப்தமாதிபன் பஞ்சமத்திலுமிருந்து ராகு சேர்க்கை பார்வை பெற்றாலும், குரு நீசத்திலும், ராகு லக்னம் அல்லது 5-லிருந்து 5-க்குடையவன் 6, 8, 12-லிருந்தாலும், குரு 5-க்குடையவனுடன் பாபி சேர்க்கை பெற்று 8-லும், 5-ல் ராகு, சனி, சந்த்ரன், செவ்வாய் இவர்களிருந்தாலும், குரு செவ்வாயுடன் அல்லது சனியுடன் சேர்ந்து அல்லது சனியின் அம்சத்திலிருந்து 5-க்குடையவன் 12-லிருந்தாலும், ப்ராம்மண சாபத்தால் புத்ர நாசம்.

சப்தமாதிபன் பஞ்சமத்திலிருந்து சப்தமாதிபனுடைய அம்சாதிபனுக சனியிருந்து பஞ்சமாதிபன் அஷ்டமத்திலிருந்தாலும், சப்தமாதிபன் அஷ்டமத்திலும், விரயாதிபன் பஞ்சமத்திலும், காரகன் பாபிகளுடன் சேர்ந்திருந்தாலும், பஞ்சமத்தில் சுக்ரனிருந்து சப்தமாதிபன் அஷ்டமத்திலும், காரகன் பாபஸம்பந்தம் பெற்றாலும், 9-மிடத்தில் சுக்ரனும், சப்தமாதிபன் அஷ்டமத்திலும், லக்னத்தில் பாபியிருந்தாலும், 9-க்குடையவன் சுக்ரனை 5-க்குடையவன் சத்ரு ஸ்தானத்திலிருந்து குரு லக்னாதிபன் சப்தமாதிபன் 6, 8, 12-லிருந்தாலும், தனஸ்தானம் பாபருடன் கூடி சப்தமாதிபன் அஷ்டமத்திலிருந்து பஞ்சமத்தில் பாபக்ரகமிருந்தாலும், சுக்ர க்ஷேத்ரம் புத்ர ஸ்தானமாய், ராகு சந்த்ரர்களுடன் சேர்ந்து 12, 1, 2-களில் பாபரிருந்தாலும், 7-ல் சனி சுக்ரர்களும், 8-ல் குருவும், 5-ல் சூரியனும், லக்னத்தில் ராகு இருந்தாலும், 2-ல் செவ்வாய், 12-ல் குரு, 5-ல் சனியிருந்து ராகு சம்பந்தம் அல்லது பார்வை பெற்றாலும், 5, 7-க்குடையவர்கள் 6-லிருந்து 5-ல் செவ்வாய் லக்னத்தில் சனி, காரகன் பாப சம்பந்தம் பெற்றாலும், லக்னத்தில் ராகு, 5-ல் சனி, 9-ல் செவ்வாய் வசித்து 5-7-க்கு அதிபதிகள் அஷ்டமத்திலிருந்தாலும், பத்னி சாபத்தால் புத்ர நாசம்.

சனி, சூர்யன் பஞ்சமத்திலிருக்க க்ஷீண சந்திரன் சப்தமத்திலும், லக்னத்தில் ராகு, 12-ல் குருவிருந்தாலும், புத்ராதிபதி சனியாய் 8-ல் வசித்து, லக்னத்தில் செவ்வாய், புத்ரகாரகன் 8-லிருந்தாலும், லக்னத்தில் பாபி 12-ல் சூரியன், 5-ல் செவ்வாய் சனி புதர்களும், புத்ராதிபன் அஷ்டமத்திலிருந்தாலும், லக்னத்தில் ராகு, 5-ல் சனி, 8-ல் காரகன் இருந்தாலும், லக்னத்தில் ராகுவும், சுக்ரன் குரு, சந்த்ர சனிகளுடன் சேர்ந்து லக்னாதிபன் 8-லிருந்தாலும், லக்னத்தில் ராகு, 5-ல் சனி வசித்து செவ்வாய் பார்வை பெற்றாலும், காரகன் நீசத்திலும், புத்ராதிபன் ஸ்திரத்திலும் வசித்து நீச சம்பந்தம் விஷாணம் பெற்றாலும், லக்னத்தில் ராகு சனிகள், 8-ல் சூரியன், 12-ல் செவ்வாய் இருந்தாலும், சப்தமாதிபன் 6, 8, 12-ல் வசித்து 5-ல் சந்திரன், லக்னத்தில் மாந்தி சனிகளிருந்தாலும், அஷ்டமாதிபன் பஞ்சமத்திலிருந்து சனி சுக்ரர்களுடன் கூடி காரகன் அஷ்டமத்திலிருந்தாலும், ப்ரேத சாபத்தால் புத்ரநாசம்.

ஐந்தாமதிபன் அஸ்தங்கதனுடன் பாபிகளுடன் சேர்ந்து பல மற்றவனுயிருந்தாலும், பஞ்சமாதிபன் நீசனுடன் 6-ல் இருந்தாலும், பஞ்சமாதிபன் 6-லும், லக்னாதிபன் செவ்வாய் விட்டிலும் பஞ்சமாதிபன் நீசனுய் 6, 8, 12-லிருந்தாலும், 5-ல் கேது புதன் வசித்தாலும், பஞ்சமாதிபன் நீசனுய் பஞ்சமத்தைப் பார்க்காமல் சனி, புதன் 5-லிருந்தாலும் காக வந்த்யாதோஷம் ஏற்படுகிறது.

லக்னத்தில் சூரியனும் ஏழில் சனியும் அல்லது 7-ல் சூரியன் சனி இவர்கள் இருந்து பத்தாமிடம் குரு பார்வை பெற்றாலும், சனி, செவ்வாய் 6-ல் அல்லது 4-ல் இருந்தாலும், சனி ரோகாதிபனுடன் சேர்ந்து ரோகஸ்தானத்திலும், சந்திரன் சப்தமத்தில் இருந்தாலும் கர்ப்பம் ஏற்படாது.

சனிக்கு ஆறுமிடத்தை புத, சந்திர, சூரியர்கள் பார்த்து லக்னம் பாபவீக்ஷணம் பெற்றாலும், சூரியன் சனி விட்டிலிருந்து பாபக்ரஹ வீக்ஷணம் பெற்றாலும், லக்னம் பாப ஷட்வர்க்கத்தையடைந்தாலும், குலதெய்வ தோஷத்தால் புத்ரனில்லாதவனுவான்.

பஞ்சமாதிபன் கேந்த்ரத்தில் சுபனோடு கூடினாலும், பஞ்சமாதிபனை பஞ்சம பாவ காரகனை ம்ருத்வம்சம் முதலியவைகளிலிருந்து சுபவீக்ஷணம் பெற்றாலும் பஞ்சமாதிபன் கோபுராதி அம்சத்திலிருந்தாலும் மரணமற்றவனுவான்.

பஞ்சம பாவ காரகன் கோபுராதி அம்சத்திலிருந்தால் மற்றவர்களுடைய இங்கிதம் தெரிந்தவனுகவும் மேதாவியாகவுமிருப்பான்.

புதன், சந்திரன், செவ்வாய் பலமுள்ள க்ரகங்களால் பார்க்கப் பெற்றால் உடனே பதில் கொடுப்பதில் சமர்த்தனுவான்.

சனி, செவ்வாய், சூரியன் சந்திரனைப் பார்த்தால் மூர்க்கனுவான்.

நவாம்ச லக்னத்தில் கேது இருக்க சுக்ரன் மட்டில் பார்த்தால் யாகம் செய்பவனுவான்.

நவாம்ச லக்னத்திற்கு 5, 9-களில் இரு பாபிகளிருந்தால் மாந்த்ரிகனுவான்.

நவாம்ச லக்னத்திற்கு 5, 9-ல் இரு பாபக்ரகமிருந்து பாபக்ரகத்தின் பார்வை பெற்றால் பூதம் முதலியவைகளை அடக்குபவனுவான்.

அம்ச லக்னத்திற்கு திரிகோணத்தில் பாபியிருந்து சுபவீக்ஷணம் பெற்றால் மற்றவருக்கு அனுக்ரகம் செய்பவனுவான்.

அம்ச லக்னம் புத-சந்திர-சுக்ரர்களால் பார்க்கப் பெற்றாலும் தனுநிபன் சப்தமத்திலிருந்தாலும் வைத்தியனுவான்.

அம்ச லக்னம் சுக்ர சந்திரர்களின் பார்வை பெற்றால் ரஸவாதம் செய்பவனுவான்.

அம்ச லக்னத்திற்கு 5-ல் பாபர்களோடு கூட குரு சந்திரர்களிருந்தால் புத்தகம் எழுதுபவனுவான்.

அம்ச லக்னத்திற்கு தன புத்ரஸ்தானங்களில் குரு இருக்க இலக்கண மெழுதுபவனுவான்.

அம்ச லக்னத்திற்கு 2, 3, 5-இடங்களில் புதன், குரு இருக்க மீமாம்ஸா சாஸ்த்ரங்களறிவான்.

அம்ச லக்னத்திற்கு 5, 2, 3 இடங்களில் புதன், குரு, செவ்வாய்களிருக்க தர்க்கிகனுவான்.

அம்ச லக்னத்திற்கு 2, 3, 5-இடங்களில் குரு சந்திரர்களிருக்க ஸாங்க்யம் அறிவான்.

அம்ச லக்னத்திற்கு 2, 3, 5-இடங்களில் குரு சூர்யர்களிருக்க வேதாந்த ஸங்கீத சாஸ்த்ரங்களில் பயிற்சி அடைவான்.

அம்ச லக்னத்திற்கு 3, 5, 2-இடங்களில் கேது, குரு இருந்தாலும், இரண்டில் செவ்வாய் வசித்து சுபக்ரகம் பார்த்தாலும், சந்திரன் செவ்வாய் சேர்ந்து புதன் பார்த்தாலும், புதன் அல்லது செவ்வாய் கேந்த்ரத்திலிருந்தாலும், பலவானுய் அஷ்டமாதிபதியான புதன் குரு லக்னத்திலும், 8-மிடத்தில் சனியுமிருந்தாலும், குரு பலவானுய் கேந்த்ரத்திலோ, திரிகோணத்திலோ இருந்து சுக்ர புதர்கள் இரண்டில் இருந்தாலும் கணிதமறிந்தவனுவான்.

புதன் சுக்கிரன் 3, 2-லிருந்தாலும் தனுநிபன் பலம் பேற்று கேந்திரம், கோணம், 11-இவ்விடங்களில் புதனுடன் கூடியிருந்தாலும், குரு உச்ச க்ஷேத்திரத்தில் அல்லது 2 லிருந்தாலும் நெந்த சோதிடனுவான்.

புதன் செவ்வாயுடன் சுபராசியிலிருந்தாலும் புதன் செவ்வாய்கள் மகர கும்பங்களிலிருந்து சூர்ய த்ருஷ்டி பெற்றாலும் வித்வான்களை மகிழ்ச்சியடையச் செய்வான்.

பஞ்சமாதிபன பலவானுய் கேந்திர கோணங்களிலிருந்தாலும் லக்னுதிபன் 2, 11-லிருந்தாலும், பஞ்சமாதிபன் 10, 11-லிருந்தாலும் பண்டிதனுவான்.

தசமாதிபன் லக்னத்திலிருந்து லாபாதிபன் லாபத்திலிருந்தாலும் கவியாவான்.

சுகாதிபன் லக்னத்தில் அல்லது சப்தமத்திலிருந்தால் படித்தவனுனாலும் சபையில் பேச சக்தியில்லாதவனுவான்.

சந்திரனுக்கு 5, 9-ல் குருவும், புதனுக்கு 5, 9-ல் செவ்வாயு மிருக்க அநேக வித்யைகள் அறிவான். புதன் இரண்டுக்குடையவனுய் உச்சத்திலும் சனி கோபுராம்சத்திலும், குரு சிம்மாஸனாம்சத்திலும் இருந்தாலும், சனி பராவதத்திலிருந்து, புதன் குருவைப் பார்த்தாலும், குரு கேந்திரம், திரிகோணங்களிலிருந்தாலும், சுக்ரன் வர்கோத்தமம் பெற்று லக்னத்திலிருந்தாலும், சந்திரன் வர்கோத்தமம் அல்லது தேவலோகாம்சம் பெற்று சுக்கிரன் கேந்திரத்திலிருந்தாலும், லக்னுதிபதி இரண்டிலும், தனுநிபன பராவதாம்சத்திலும் இருந்தாலும், புதன் தன் உச்ச க்ஷேத்திரமான லக்னத்திலும், தனுநிபன் பராவதத்திலும், சுக்ரன் 12-ல் இருந்தாலும் வேதாந்தம் அறிந்தவனுவான்.

குரு கேந்திரத்திலும், சுக்கிரன் சிம்மாஸனாம்சத்திலும், புதன் தனுநிபன் இருக்கும் நவாம்சம் அல்லது கோபுராம்சத்திலிருந்தாலும், தனுநிபன இருக்கும் ராசியதிபன் வகிக்கும் நவாம்சாதிபதிகள சனி அல்லது செவ்வாயாகி அவர்கள் பாபிகளுடன் சேர்ந்து கேந்திர கோணங்களில் இருந்தாலும், சூரியன் வகிக்கும் நவாம்சாதிபதி வைசேஷிகாம்சம் பெற்று பலவானுகி இரண்டி

விருந்தாலும், குரு பலவானுய் வாக் ஸ்தானத்திலும், வாக் ஸ்தானுதிபன் வகிக்கும் நவாம்சாதிபதி கேந்திரத்திலிருந்து சுபர் பார்வை பெற்றாலும் ஆறு சாஸ்திரங்களிலும் வல்லவனுவான்.

புத்ர காரகன் கேந்திர திரிகோணங்களிலிருந்து சுபக்ரஹ விக்ஷணம் பெற்றால் பின்னல் வரக்கூடியதை முன்னதாகச் சொல்லுவான்.

குரு தனது நவாம்சத்தில் அல்லது மூலத்வம்சத்தில் இருந்தாலும், கோபுராம்சம் அடைந்து சுபர் பார்வை பெற்றாலும் மூக்காலத்தையும் அறிவான.

பத்துக்குடையவன் தேவலோகாம்சம் அடைந்து சுபரால் பார்க்கப்பட்டாலும் நவமாதிபன் பாராவதாம்சம் அடைந்து சுபர் பார்வை பெற்றாலும் ப்ரம்மநிஷ்டனுவான்.

குரு, கேது, ராகு, சனிகளுடன் சேர்ந்து சுக்ரன் பார்க்க தாழ்ந்தவனும் பண்டிதனுவான்.

சுபரோடு சேர்ந்த ராகு சூரியர்கள் நவாம்ச லக்னத்தையடைந்து பாபருடன் சேர விஷ வைத்யம் செய்பவனுவான்.

பஞ்சமாதிபன் பரமோச்சத்திலிருந்து சுபவிக்ஷணம் பெற்றாலும் சுபக்ரஹ மத்தியிலிருந்தாலும், காரகன் பூர்ண பலவானுகி பஞ்சமாதிபன் சுபவிக்ஷணம் பெற்றாலும், பஞ்சமத்தில் சுபர் இருந்தாலும், பஞ்சமாதிபன் வகிக்கும் அம்சராசியதிபதி சுபவிக்ஷணம் பெற்று வைசேஷிகாம்சம் பெற்றாலும், குரு வகிக்கும் ராசி அம்சாதிபதிகள் கேந்திர திரிகோணத்திலிருந்து பஞ்சமாதிபனுல் பார்க்கப்பட்டாலும், பஞ்சமஸ்தானம் சுபக்ரஹ மத்தியிலிருந்து சுபனுடு சேர்ந்து குரு கேந்திரத் திரிகோணத்திலிருந்தாலும், புதர ஸ்தானுதிபன் புதனுய் பஞ்சமத்தில் குரு விருந்து பஞ்சம பாவம் சுபக்ரஹ மத்தியிலிருந்தாலும் பஞ்சமாதிபன் கேந்திரத்தில் சுபனுடு அல்லது உச்சமடைந்த க்ரஹத்தோடு கூடினாலும், பஞ்சமாதிபனே காரகனே மூலத்வம்சாதிகளிலிருந்து சுபர் பார்வை பெற்றாலும் கூர்மையான புத்தியுள்ளவனுவான்.

பாபிகள் த்ரிகோணத்திலும் க்ஷீணசந்திரன் லக்னத்திலும், சனி ராசியில் குரு அஸ்தங்கதனுக இருந்தாலும், புதன் ர்-லும் லக்ன சுகஸ்தானங்களில் பாபிகள் இருந்தாலும் புத்ரர் உண்டாகி நாசமாகும்.

லக்னாதிபதி தனம் அல்லது லக்னத்திலிருந்தாலும் சந்திரன் செவ்வாய் சுக்கிரர்கள் உபய ராசியிலிருந்தாலும் முதலில் புருஷப் பிரஜை உண்டாகும்.

பாபக்ரஹம் லாபத்திலும், பஞ்சமத்தில் சந்திர சுக்கிரர்களும் இருந்தால் முதலில் ஸ்திரீ பிரஜை பிறக்கும்.

பஞ்சம லக்னாதிபர்கள் ஸமர்களாயிருக்க, புத்திரனோடு உதாசினனுகவிருப்பான்.

லக்ன பஞ்சமாதிபர்கள் ஒருவருக்கொருவர் பார்த்தாலும் பஞ்சம லக்னாதிபர்கள் ஒருவர் ராசியில் மற்றவர் வசித்தாலும், அம்சத்தில் ஒருவருக்கொருவர் பரிவர்த்தனை பெற்றாலும், பஞ்சமாதிபன் லக்னத்திலும், லக்னாதிபன் பஞ்சமத்திலும் இருந்தாலும், லக்னம் பஞ்சமாதிபனாலும், பஞ்சமஸ்தானம் லக்னாதிபனாலும் பார்க்கப்பட்டிருந்தாலும் புத்ரனுக்கு அடங்கி நடப்பான்.

புத்ர காரகன் வசிக்கும் அம்சாதிபதி கோபுராம்சம் ஏறினாலும், திரியம்சபதி சுபனைக் கேந்த்ர த்ரிகோணத்திலிருந்தாலும் காரகனால் பார்க்கப்பட்டாலும், பாவாதிபன் அல்லது காரகனுடன் சேர்ந்தாலும், கேந்த்ர த்ரிகோணங்கள் சுபவீக்ஷணம் பெற்றாலும் பிறர் இங்கிதம் அறிந்தவனுவான்.

பஞ்சமஸ்தானம் அல்லது பஞ்சமாதிபன் பாப சம்பந்தம் பெற்றாலும், க்ரூர ஷஷ்டியம்சத்திலிருந்தாலும், பஞ்சமாதிபன் அல்லது காரகன் நீச-சத்ரு-அஸ்தங்கத ஸ்ரஹ க்ஷேத்ரங்களிலிருந்து பாபரால் பார்க்கப் பெற்றாலும், க்ரூர ஷஷ்டியம்சமேறினாலும் புத்ர நாசம் ஏற்படும்.

பஞ்சமத்தில் சனியிருந்தாலும், லக்னாதிபன் சனி பார்வை பெற்றாலும், பஞ்சமாதிபன் பாப சம்பந்தம் பெற்றாலும் ஜடனுவான்.

பஞ்சமத்தில் சுபர் இல்லாமல் சனி, மாந்தி, ராகு இவர்கள் வசித்து, பஞ்சமாதிபன் பாபவீக்ஷணம் பெற்றாலும், புத்ர காரகன்

சுபரோடு சேர்ந்து பஞ்சமாதிபன் பாபருடன் சேர்ந்து க்ரூர ஷஷ்டியம்சம் ஏறினாலும் பைத்தியமாவான்.

பஞ்சம பாவத்தில் புதன் இருந்து குரு சுக்கிரர்களால் பார்க்கப்பெற்றால் எல்லோருக்கும் புத்தி சொல்பவனுவான்.

பஞ்சமாதிபன் கோபுராம்சம் பெற்றாலும், காரகன் இருக்கும் ராசியாதிபன் லக்னாதிபன் பார்வை பெற்றாலும், குரு பலவானுனாலும் நன்மை, தீமை தெரிந்தவனுகவும், மந்திரியாகவும், தாதாவாகவும் இருப்பான்.

புத்ர காரகன் கேந்த்ர த்ரிகோணமேறி பஞ்சமாதிபன் சேர்ந்து அல்லது கோபுராம்ச மேறினாலும், பின் வருவதை முன்னதாகத் தெரிவிக்கக்கூடிய மந்திரியாவான்.

சுக்ரன் சுபரோடு சேர்ந்து அல்லது சுபர் பார்வை பெற்று சுபாம்சத்திலிருந்தாலும், குரு தன் நவாம்சத்தில் அல்லது மித்ருவம்சத்தில் இருந்தாலும் மூன்று காலமும் அறிபவனுவான்.

நபும்ஸக ராசியில், நபும்ஸக ஸ்ரஹம் இருந்து பஞ்சமாதிபன் சப்தமத்திலிருந்தால் அலிப் பிறவி ஏற்படும்.

மூன்றுக்குடையவன் மூன்றிலும், ஐந்துக்குடையவன் நான்கிலும், சுபனுகவும் உச்சத்தை யடைந்தவனுகவும் இருக்கும் ஸ்ரஹத்துடன் சேர்ந்திருந்தாலும் பஞ்சமாதிபன் சுபஸ்தானத்திலிருந்து சுபரோடு கூடினாலும், தனாதிபன் சுபசம்பந்தம் பெற்றாலும் அன்னதாதாவாகிறன்.

பஞ்சமத்தில் பாபியும், பஞ்சமாதிபன் பாபிகளுடன் கூடினாலும், பாபக்ரஹ மத்தியில் இருந்தாலும், பஞ்சமாதிபன் அஷ்டமத்திலிருந்தாலும், அஷ்டமாதிபதியுடன் கூடினாலும் நீச-சத்ரு க்ஷேத்ரம், அஸ்தமனம் இவைகளை அடைந்தாலும், பஞ்சமாதிபன் வசிக்கும் அம்சராசியதிபன் க்ரூர ஷஷ்டியம்சத்தில் இருந்து க்ரூரக் ஸ்ரஹத்தால் பார்க்கப்பட்டாலும் மற்றைய நோய் உண்டாகும்.

குரு ஸ்திரீ ராசியம்சங்களிலிருந்து புத்ர ஸ்தானாதிபனுடன் சேர்ந்திருந்தாலும், பார்வை பெற்றாலும் ஐந்து பெண்கள் பிறந்த பின்பு புருஷப்ரஜை உண்டாகும்.

சுக்ரன், புதன், சந்த்ரன் இவர்களிலொருவர் களத்ர ஸ்தானாதிபதியாயிருக்க ஸ்த்ரீ ப்ரஜை மாத்திரமுண்டாகும்.

பஞ்சமத்திற்கு ஏழாம் (11) வீட்டில் சுக்ரனும், அதற்கு ஏழாவது வீட்டில் சூரியனும் இருக்க மற்றொரு விவாஹமானபின் புத்ரோத்பத்தி.

விருச்சிகத்துக்கு ஒன்பதாவது ஸ்தானாதிபன் பஞ்சமத்திலும், குரு விரயத்திலும், புத்ரஸ்தானம சுபர் பார்வை பெற்றும் குஜனிருந்தால் அல்லது பார்வை பெற்றாலும், விருச்சிகத்துக்கு ஐந்தாமிடத்தில் சந்திரனும், சந்திரனுக்கு ஐந்தில் புதனுமிருந்து, புத்ரயோக காரகன் பலவானாயிருந்தாலும், புத்ர காரகன் பலவானாய் சுபக்ரஹ விக்ஷணம் பெற்றாலும் புத்ர ஸ்வீகாரத்துக்குப் பிறகு ஔரஸன் உண்டாவான்.

புத்ர ஸ்தானாதிபன் 3-11-8-12-களில் எங்கிருந்தாலும் அந்த்ய காலத்தில் ஸ்வீகார புத்ரனாயினும் மரணமடைவான்.

புத்ர ஸ்தானாதிபன் ஷஷ்டஸ்தானாதிபனுடன் சேர்ந்து குரு விக்ஷணமில்லாமலிருந்தாலும், புத்ரஸ்தானாதிபன் ஸப்தமாதிபனுடன் சேர்ந்து புத்ரயோக காரகன் பலஹீனனானாலும் ஸ்வீக்ருத புத்ரன் மரணமடைவான்.

ஐந்து-ஒன்பதாம் ஸ்தானங்களில் பாப க்ரஹங்களிருந்து புத்ர காரகன் துர்பலனாகவிருந்தால் ஆபத்காலத்தில் ஸ்வீகார புத்ரன் மரணமடைவான். இத்தோஷங்களுக்குப் பரிஹாரம் சிவபூஜை செய்யவும்.

ஐந்தாம் வீட்டில் பல பாபர்களிருந்தால் ஐந்து ஜன்மங்களில் செய்த பிரம்மஹத்தியையால் ஸந்தானமில்லாமற் போகும்.

லக்னாதிபனிருக்கும் ராசியதிபன் ராகுவுடன் சேர்ந்திருந்தாலும், பஞ்சமாதிபன் சத்ரு ஸ்தானத்திலிருந்தாலும், சந்த்ர ஸம்பந்தம் அல்லது பார்வை பெற்றாலும், தசமத்தில் புத்ர காரகனிருந்தாலும், நவமாதிபன் லக்னத்திலும், வ்யயாதிபன் மகரத்திலுமிருந்து சனியால் பார்க்கப் பெற்றாலும், பஞ்சமாதிபன் ஸப்தமத்திலும், ஸப்தமாதிபன் விரயத்திலும், புதன் பாபக்ரஹ விக்ஷணம் பெற்றாலும், ஸப்தமாதிபன் வஸிக்கும் ராசியதிபன்

சூரியனுடன்கூடி அஸ்தங்கதனாய், காரகன் நீச ராசியிலிருந்தாலும், சந்த்ரன் 10-ம்வீட்டிலும், குரு ஸப்தமத்திலும் பஞ்சமாதிபன் துர்பலனாயிருந்தாலும் மேஷம் ஜன்ம லக்னமாய் பஞ்சமாதிபன் விரயத்திலும், பஞ்சமத்தில் சந்த்ர குளிகர்களிருந்தாலும், விருஷபம் லக்னமாய் 5-ல் சுக்ரனும், பஞ்சமாதிபன் சத்ரு ஸ்தானத்திலும், காரகன் தசமத்திலிருந்தாலும், சுக்ரன் பாபருடன் சேர்ந்து அல்லது அஸ்தங்கதனாய் லக்னம் மிதுனமாகி பஞ்சமத்தில் காரகன் சேர்ந்தாலும் அல்லது பார்க்கப்பெற்றாலும், சந்த்ரன் சனியுடன சேர்ந்து அல்லது பார்வை பெற்று லக்னம் கடகமாய் பஞ்சமத்தில் காரகன் மூட க்ரஹத்துடன் சேர்ந்திருந்தாலும், லக்னம் சிம்மமாகி பஞ்சமத்தில் சனியும், சனிக்கு ஆறுமிடத்தில் குருவும், அந்த ஸ்தானாதிபன் விரயத்திலிருந்தாலும், லக்னம் கன்னியாகி, பஞ்சமத்தில் குருவும், அதற்கு ஐந்தில் சந்த்ரனும், சந்த்ரனுக்கு ஐந்தில் செவ்வாயிருந்தாலும், துலா லக்னத்துக்கு ஏழில் செவ்வாய் சுக்ரன் அல்லது சனியுடன் சேர்ந்திருந்தாலும், விருச்சிகம் அல்லது தனுஸ் லக்னத்துக்கு ஐந்தில் சந்த்ரனிருந்து ராகு ஸம்பந்தம் அல்லது பார்வை பெற்றாலும், மகர கும்பங்களுக்கு ஐந்தில் புதன் சத்ரு க்ரஹத்துடன் சேர்ந்திருந்தாலும் அல்லது பார்க்கப்பெற்றாலும் அல்லது காரகன் 8-12-6 இடங்களில் இருந்தாலும், மீன லக்னத்துக்கு பஞ்சமத்தில் சூரியனும், சூரியனுக்கு பஞ்சமத்தில் சந்த்ரனும், ஸப்தமாதிபன் துர்பலனாயிருந்தாலும், பஞ்சமாதிபன் ஸப்தமத்திலும், ஸப்தமாதிபன் அஷ்டமத்திலுமிருந்தாலும், பஞ்சமாதிபன் விரயத்திலும், விரயாதிபன் பஞ்சமத்திலும், காரகன் சத்ருவுடன் சேர்ந்திருந்தாலும், சந்த்ரன் சூரியனோடு சேர்ந்து அல்லது பார்வை பெற்று ஐந்து அல்லது ஒன்பதிலிருந்து காரகன் நீசராசியிலிருந்தாலும், சூரியன் நீசத்திலிருந்து பஞ்சமாதிபனுடனோ காரகனுடனோ சேர்ந்தாலும் பார்க்கப்பெற்றாலும் கர்ப்ப ஸ்ராவமுண்டாகும். கர்ப்ப ஸ்ராவத்துக்குக் காரணம்:- குரு சாபம், பரத்ரவ்யாபஹாரம், கர்ப்ப நாசம், மார்ஜாரஹனனம், குரு நிந்தை, ஜன்மாந்த்ர ருணம் இவைகள். இதற்குப் பரிஹாரம் தாத்ரு மந்த்ர யந்த்ர நுஷ்டானங்களாகும்.

பாபக்ரஹம் ஸப்தமாதிபனாய் பஞ்சமாதிபனோடு சேர்ந்தாலும் அல்லது பார்வை பெற்றாலும், ஸப்தமாதிபன் சத்ரு ஸ்தானத்

திலும், சத்ரு ஸ்தானதிபன் லக்னத்திலிருந்தாலும், ஸப்தமாதிபன் பஞ்சமத்திலும், பஞ்சமாதிபன் சந்த்ரனுடன்கூடி விரயத்திலிருந்தாலும் வயிற்றில் வலியுண்டாகும்.

செவ்வாய் பஞ்சமாதிபனுய் ஸப்தமாதிபதியுடன் சேர்ந்தாலும் பார்க்கப்பட்டாலும் கர்ப்பத்தில் ரேதஸ் புழுக்களால் பக்ஷிக்கப்படும்.

நவமஸ்தானத்திலும், ஸப்தமத்திலும் பாப க்ரஹங்களிருந்து குரு பாபருடன் சேர்ந்திருக்க வயிற்றில் புழு வெட்டு (க்ருமிகூபம்) உண்டாகும்.

இத்தோஷத்துக்கு மைஜமேஷ சாந்தி செய்யவும்.

செவ்வாய் ஸப்தமாதிபனுய் லக்னாதிபதியுடன் சேர்ந்து 6-8-12-களிலொன்றிலிருக்க ப்ரம்ம சாபத்தால் வீர்ய நாசம்.

சூரியன் 7-க்குடையவனுய் அல்லது சுக்ரனுடன் சேர்ந்திருந்தாலும் வீர்ய நிர்மூலனுவான்.

சுபர் த்ரூதியாதிபதியாகி 5-வது வீட்டிலும், 7-க்குடையவன் எட்டுக்குடையவன் லக்னத்திலுமிருக்க ரஹஸ்யமான வியாதியால் புத்ர நாசம்.

லக்னத்தில் சனியிருந்து சந்த்ரன் க்ஷீணனுகி பாபருடன் சேர்ந்து 6 அல்லது 8-லிருந்தாலும், லக்னாதிபன் ராகுவுடன்கூடி அல்லது அஸ்தங்கதனுய் சனி எட்டிலிருந்தாலும் குன்ம ரோக மேற்படும்.

பஞ்சமஸ்தானம் சுபருடன் சேர்ந்து சனி ஸம்பந்தம் அல்லது பார்வை பெற்று சத்ரு வீக்ஷணம் பெற்றாலும், பஞ்சமாதிபன் பஞ்சமஸ்தானத்தில் செவ்வாயுடன் சேர்ந்து அல்லது பார்வை பெற்று காரகன் சுக்ரனுடு சேர்ந்தாலும், சுக்ரன துர்பலனுய் பஞ்சமாதிபன் விரயத்தில் இருந்து சந்த்ர சூரியர்களால் பார்க்கப் பெற்றாலும் புதன் பஞ்சமாதிபனுய் குஜக்ஷேத்ரத்திலும் காரகன் அஸ்தங்கதனுகவும் இருந்தாலும், சூரியன் பஞ்சமாதிபதியாய் சனியுடன் சேர்ந்து அஸ்தங்கதனுய் குரு துர்பலனுய் இருந்தாலும், பஞ்சமாதிபன் நீசர்களுடனும் பஞ்சமத்தில் நீசர் இருந்து

குரு வீக்ஷணமில்லாமலிருந்தாலும். குரு பஞ்சமாதிபதியாகி சனி ராகுகளுடன் சேர்ந்து அல்லது பார்க்கப் பெற்று அல்லது சத்ரு ஸ்தானத்திலிருந்தாலும் தேவ சாபத்தால் புத்ர நாசம். இதற்குப் பரிஹாரம் ஹய பூஜை செய்ய வேண்டும்.

பஞ்சமத்தில் செவ்வாய் அல்லது ஆறுக்குடையவன் இருந்து சுபக்ரஹ வீக்ஷணமில்லாமலிருந்தாலும், குரு ஏழில் அல்லது சத்ருவுடன் கூடி அல்லது சத்ரு வீக்ஷணம் பெற்று பாபக்ரஹங்களால் பார்க்கப் பெற்றாலும், குரு ரோகஸ்தானத்திலும் பஞ்சமாதிபன் ஸப்தமத்திலும் சந்திரன் பாப சம்பந்தம் பெற்றாலும், பஞ்சமாதிபன் அஷ்டமத்திலும் செவ்வாய் சந்திரனுக்கு விரய ஸ்தானத்திலும் காரகன் லக்னத்துக்கு விரயத்தில் இருந்தாலும், பஞ்சமாதிபன் வ்யயத்திலும் புதனே, சுக்ரனே சூரியனுடன் சேர்ந்து பாபக்ரஹ வீக்ஷணம் பெற்றாலும், சப்தமத்தில் சுபரும் விரயத்தில் ராகுவும் சந்திரன் குருவுடனும் பஞ்சமாதிபன் அஷ்டமத்திலும், சப்தமாதிபன் ஆறிலும் ஆறுக்குடையவன் லக்னத்துக்கு 4, 7, 10 இவைகளில் ஒன்றிலும் தசமாதிபன் தன ஸ்தானத்திலும், தனாதிபதி தசமத்திலும் இருந்தாலும், சப்தமம் அல்லது நவமத்தில் சந்திரனும், சந்திரனுக்கு 10-ல் குருவும், பஞ்சமாதிபன் பலஹீனனுய் இருந்தாலும், குரு சூரியனோடு கூடி சந்த்ரன் பாபவீக்ஷணம் பெற்று ரோகாதிபன் நபும்ஸகனுய் இருந்தாலும் சத்ரு சாபத்தால் புத்ர நாசம். இத்தோஷத்திற்கு துர்கா பூஜை செய்யவேண்டும்.

பஞ்சமத்தில் சந்த்ரனும் சந்த்ரனுக்கு 5 அல்லது 9 ல் புதன் இருந்தாலும், புதன் பாபருடன் கூடி பாபரால் பார்க்கப்பெற்று ஒன்பதிலிருந்து காரகன் துர்பலனுனாலும், சனி புதனுடன்கூடி பஞ்சமத்திலும், குரு விரயத்திலும் செவ்வாய் சப்தமாதிபனுய் ரோகஸ்தானத்திலிருந்தாலும் மாத்ரு ஸ்தானத்தில் புதனும் 10-ல் குருவும் 11-ல் செவ்வாயும் இருந்தாலும், பஞ்சமாதிபன் மூன்றிலும், மூன்றுக்குடையவன் எட்டு அல்லது பனிரண்டிலிருந்து காரகன் பாப மத்யத்திலிருந்தாலும், ஐந்துக்குடையவன் ஏழிலும் ஏழுக்குடையவன் ஏழிலும் அல்லது சந்த்ரனுக்கு ஏழிலும் இருந்தாலும், சூரியன் பஞ்சமாதிபனுய் ஏழு, பத்து, பன்னி

ரண்டுகளில் இருந்து காரகன் துர்பலனுனாலும், சந்த்ரன் பஞ்ச மாதிபனுய் வ்யாதிபதியுடன் சேர்ந்து அல்லது பார்வை பெற்று காரகன் 8, 12 களில் இருந்தாலும். செவ்வாய் பஞ்சமாதிபனுய் அஷ்டமாதிபதியுடன் சேர்ந்து அல்லது பார்க்கப் பெற்று காரகன் நீச ஸ்தானத்தை அடைந்திருந்தாலும், புதன் பஞ்ச மாதிபனுய் செவ்வாயோடுகூடி 12, 11, 9-களில் அல்லது 4, 7, 10 கேந்திரம் இவைகளில் ஒன்றில் இருந்தாலும் குரு பஞ்சமாதி பனுய் சுக்ரனுடன்கூடி 6, 5, 9-லாவது, லக்னத்துக்கு 4, 7, 10-லாவது இருந்தாலும் சுக்ரன் பஞ்சமாதிபனுய் குஜன் ராகு களுடன் சேர்ந்து அல்லது பார்வை பெற்று பஞ்சமத்தில் சுபரில் லாமலிருந்தாலும், சனி பஞ்சமாதிபனுய் குஜ கேதுகளோடு சேர்ந்து அல்லது பார்வை பெற்று சத்ரு ஸ்தானத்திலோ, பாப க்ரஹ ராசியிலோ வசித்தாலும், லக்னத்திற்கு அல்லது சந்திர லக்னத்திற்கு பஞ்சமாதிபதி துர்பலனுயும் காரகனும் துர்பலனுய் இருந்தாலும் விஷ்ணு சாபத்தால் சந்ததி நாசம் ஏற்படும்.

இவ்விஷ்ணு சாபம் 5 விதங்களாகச் சொல்லப்படுகின்றன. அதாவது விஷ்ணு கோயிலை இடித்தல், பிராமணத் திரவிய அபஹாரம், யாகத்தைக் கெடுப்பது, விஷ்ணு த்ரவ்யாபஹாரம், நிலதான பரிக்ரஹம். இத்தோஷ நிவிருத்திக்கு புருஷ சூக்த ஹோமம், ஸந்தானகிருஷ்ண யஜனம் செய்ய வேண்டும்.

சனி பஞ்சமாதிபனுய் குளிக யமகண்டகர்களோடு சேர்ந்து வ்யயத்திலும், காரகன் 12-8-9-களில் ஒன்றிலிருந்தாலும், புதன் பஞ்சமாதிபனுய் சந்திர குளிகர்களால் பார்க்கப் பெற்றும், குரு 9-8-12- இடங்களிலொன்றிலிருந்தாலும், பஞ்சமாதிபன் ஸப்த மத்திலும் ஒன்று அல்லது பல க்ரஹங்கள் நீசர்களாய் தசமத்தில் ராகுவிருந்தாலும் பூனையைக் கொன்ற தோஷத்தால் புத்ர தோஷமேற்படுகிறது.

ஒரு மாத வயதுள்ள ஸர்ப்பம்-பூனையைக் கொல்வதால் ஒரு வயதுக் குழந்தை நாசமும், இப்படியே க்ரமமாக 8 மாதம் வயதுள்ளவை வரை வதம் செய்வதால் 8 வயது வரை குழந்தை கள் நாசமடைவதாகச் சொல்லப்படுகிறது.

இவ்வித தோஷங்களுக்குப் பரிஹாரம் அவசியம் பெரியோர் களைக் கலந்து செய்யத் தக்கது.

சந்த்ரன் சனி அல்லது செவ்வாயுடன்கூடி கடக-மேஷ-மீன நவாம்சங்களில் எங்கிருந்தாலும் குஷ்டத்தினுல் புத்ர நாசம்.

ராகு நான்கிலிருந்து பாப வீக்ஷணம் பெற்று லக்னாதிபன் சத்ரு க்ருஹத்தில் நீசத்திலிருக்க ஹ்ருதய ரோகமேற்படும்.

சந்த்ரன் பஞ்சமாதிபனுய் அஷ்டமாதிபன் 12-லிருந்து சூரியன் பார்க்க ஸ்த்ரீ தோஷத்தால் புத்ர நாசம்.

சூரியன் பஞ்சமாதிபனுய், 6-ல் 8-க்குடையவனிருந்து பாபரால் பார்க்கப்பட புத்ரனுக்கு ரோகம் வரும்.

பஞ்சமாதிபன் 6-க்குடையவனுடன் கூடி 8-லும், செவ்வாய் சுபக்ரஹத்தால் பார்க்கப் பெற்றிருக்க வீர்ய நாசம் ஏற்படுவ துடன் அதிக கர்ப்பஸ்ராவத்தால் வயிற்றில் வியாதி உண்டாகும்.

புதன் பஞ்சமாதிபனுகி பாபருடன் சேர்ந்து 6-லிருக்க இரண்டு மாதங்களுக்கு மேல் ஏழு மாதங்களுக்குள் கர்ப்பஸ்ராவம் ஏற்படுகிறது.

குரு பஞ்சமாதிபதியாய் ஆறிலிருந்து, 6-க்குடையவன் ஆறி லிருந்து சனி பார்க்க கர்ப்ப பிண்டம் நழுவி விடும்.

சுக்ரன் பஞ்சமாதிபனுய் ரோகாதிபனுடன் சேர்ந்து அல்லது பார்க்கப் பெற்று செவ்வாய் பார்த்தாலும், சனி பஞ்சமாதிபனுய் ஆறுமிடத்தில் சூரியன் செவ்வாய்களிருந்தாலும், பார்த்தாலும், 11-9-2- இவ்விராசிகள் சர-ஸ்திர-உபய ராசிகளாகி இம் மூன் றுக்கும் கேந்திரங்களில் க்ரஹங்களிருந்தாலும் கர்ப்பத்துக்கு பாதகமேற்படும்.

எட்டாமிடத்தில் சூரியனிருக்க சிவ பூதங்களால் கர்ப்பத்தடை.

,,	சந்த்ரன்	துர்கா-தர்மாதி தேவர்களின் பீடை
,,	செவ்வாய்	சுப்ரமண்யரால் பீடை
,,	புதன்	யக்ஷ கந்தர்வ பூதாதி பீடை
,,	குரு	ப்ராஹ்மண தேவசாப பீடை
,,	சுக்ரன்	யக்ஷப்ரம்மராக்ஷஸ ,,
,,	சனி	பூத-க்ரஹ-சைவ பீடை

எட்டாமிடத்தில் ராகு இருக்க ஸர்ப்ப ஸம்பந்தமான பிடை

,, கேது இருக்க சண்டாளக்ரஹ பிடை

,, குளிகயமகண்டகர்கள் பிரேதாதி பாதை.

இவைகளுக்குப் பரிஹாரங்கள் :—

சூரியனுக்கு சிவபூஜை. சந்த்ரனுக்கு துர்கா பூஜை. சேவ் வாய்க்கு சுப்ரமணிய பூஜை. புதனுக்கு விஷ்ணுப்ரீதி, லலிதாராம தானம். குருவுக்கு ப்ராம்மணபோஜனம் முதலியன. சுக்ரனுக்கு லலிதா ஸஹஸ்ரநாமம், த்ரிசதீ ஜபம், ஷோடசாக்ஷரீ மந்த்ர ஜபம், துர்கா பூஜை முதலியன என்றும் சொல்லுவர்.

ஆருவது பாவம்.

மேஷம் ஆருவதானால் தெளிந்த மனது. நாற்கால் பிராணிகளின் லாபகரம், சத்ரு நாசம், காரிய சித்தி உண்டாகும்.

விருஷபம் ஆருவதானால் நாற்கால் பிராணிகள் விஷயமான கலகம், புத்ரவர்க்கமூலம் அடிபடுதல், ஸ்த்ரீகள் சேர்க்கையில் பிரியம், பந்துவர்க்கத்தில் அபிமானம் உண்டாகும்.

மிதுனம் ஆருவதாகில் ஸதா ஸ்த்ரீகளால் உண்டாக்கப்பட்ட விரோதம், அவ்விதமே மனிதர்களின் சாபம் ஏற்படும். வியாபாரிகளுடன் கூடினவனுகவும், கீழ்ப்பட்ட ஜனங்களோடு சிநேகமுள்ளவனுகவுமாவான்.

கடகம் ஆருவது பாவமாகில் ஸஹோதரர் புத்ரர்களுடன் கூடினவனுவன், பிராமணோத்தமர்கள், அரசர்கள் இவர்களுக்கு ஸமானன். ஜனங்களுக்கு விரோதமாயிருப்பான்.

ஸிம்மம் ஆருகில் புத்திரி பந்துக்களுடன் விரோதம், தனத்தின் வரவும் அறிவும். உயர்ந்த ஸ்த்ரீமூலம் தனப்ராப்தி அல்லது அழிதல்.

கன்னி ஆருனல். ஸாதுக்களிடத்திலும், தர்மத்திலும், தன் பந்து, சத்ருக்கள் மூலம் கெடுதி உண்டாகும்.

துலாம் ஆருவதாகில் அதிகாரியுடன் விரோதம், துர்நடத்தையுள்ள பெண், பத்னி, வேசைகளுடன் வைரம்.

விருச்சிகம் ஆருவது பாவமாகில் பிராமணோத்தமர்கள், பாம்புகள், யானைகள், நிருடர்கள், குதிரை, ஸ்த்ரீகள் முதலியவர்களுடன் வைரம்.

தனுஸ் ஆருவதிடமாகில் பாணம், ஸ்தாவர ஜங்கமப் பொருள்கள், மனிதர்கள், குதிரைகள், யானைகள், மற்ற நற் பொருள்கள், வஞ்சகர்கள் இவர்களுடன் விரோதமுண்டாகும்.

மகரம் ஆருனல் தனம், கிரஹம், மித்ரர்கள், ஸாது ஜனங்கள் இவர்களுடன் நீடித்த வைரம் ஏற்படும்.

கும்பம் ஆருவது பாவமாகில் நூதன அதிகாரி, ஜலஜந்துக்கள், கிணறு, குளங்கள், நல்லொழுக்கமுள்ள ஸஹோதரர்கள் இவர்களால் சக்தியுள்ளவனுகிறன்.

மீனம் ஆருமிடமானல் புத்ரன், ஸ்த்ரீ மற்றவருடன் சேர்ந்த தகப்பன் இவர்களால் வைரமேற்படும்.

பாவாதிபன் லக்னாதித்வாதச பாவங்களிலிருப்பதால் உண்டாகும் பலன்கள்.

லக்னத்தில் :—சத்ருவிடம் பயமற்றவன், பலவான், ஸர்வ ஜனங்களுக்கும் கஷ்டத்தையளிப்பவன், நாற்கால் வாஹனமுள்ளவனுவான்.

இரண்டில்:—ஸாமர்த்தியசாலி, கடின வாக்குடையவன், நிரவியம் சேர்ப்பதில் ஸாமர்த்தியமுடையவன், தன் கிலேயில் உயர்ந்தவன், பிரஸித்தன், சஞ்சலன், ரோகி, இளைத்தவனுவான்.

மூன்றில் :—பொருமையுடையவன், வஞ்சகருடன் சேர்பவன், அநேக கார்யங்களைச் செய்பவன், பித்ரார்ஜித தனத்தை அழிப்பவன், கோபித்து உடனே சாந்தமாவான.

நான்கில் :—பித்ரு பக்ஷத்திலிருப்பவன், கலஹம் புரிபவன், சரீரத்தில் ரோகமுடையவன், புத்ரன்-தகப்பன் சொத்தை அனுபவிப்பவன், தாய்மூலம் ஸௌக்யமடைபவன், சபல சித்தன்.

ஐந்தில் :—தகப்பன் புத்ரர்களிடத்தில் அதிகமாகப் பேசுபவன், அன்புள்ளவன், பாபக்ரஹ யோகத்துக் கெனக்க இரக்கும்

புத்ரனுடையவன், சுபக்ரஹ யோகமானால் ஐச்வர்யத்தின்மூலம் எல்லோராலும் கொண்டாடத் தக்கவன்.

ஆறில் :—எதிரியுடன் சேர்பவன், க்ருபணன். துஷ்டர்களால் துரத்தப்படுபவன், தன் இடத்தில் ஸுகமடைபவன், பசு. ஸ்திரீ களிடம் பிறவி ஸம்பந்தமான கார்யத்தைச் செய்பவன்.

ஏழில் :—காமி, வாதம் புரிபவன், விஷஸேவகன், சுபக்ரஹம் கூடியில் விசேஷ லாபம் அல்லது அழகுள்ள புத்ரனை உள்ளவன்.

எட்டில் :—க்ரஹணி ரோகமுடையவன். விஷபிடையுள்ளவன், சந்த்ரனுல் மரணம், சூரியனுல் அரசன், க்ரூர க்ரஹங்களாகில் கண்மூலம் ஆபத்து உண்டாகும்.

ஒன்பதில் :—க்ரூரர்களுடன் சேர, கால்கள் ஊனமாவதுடன் புண்யம் செய்யாதவன். அதிக வாதம் செய்பவன், பிரியமுள்ள வன், தன சுக-புத்ரர்களில்லாதவன்.

பத்தில் :—தாயுடன் சண்டை செய்பவன், சபலன், துஷ்டன், சுபருடன்கூட புத்ரனுல் ரக்ஷிக்கப்படுபவன், தகப்பனுக்கு துக் கத்தை விளைவிப்பவன், தாயைக் காப்பாற்றுபவன்.

பதினொன்றில் :—துஷ்ட ஸஹவாஸம், சத்ருவால் மரணம். அரசன் திருடர்களால் தன நாசம். சுபருடன்கூட சுபம்.

பன்னிரண்டில் :—பிராணிகளுக்கு நாசம். தன-தான்ய சுகங் களுக்குக் குறைவு. பிரயாணப் பிரியன். த்ரவியம் ஸம்பாதிப் பதில் அதிகம் முயற்சி செய்பவன்.

பார்வையின் பலன்.

சூரியனுல் பார்க்க சத்ரு நாசம் செய்பவன், வலக் கண்ணில் ரோகமுடையவன், சுகமில்லாதவன்.

சந்த்ரன் பார்க்க சத்ரு விருத்தி. கபடபரேர்களால் பிடை, குருவுடன் சேர காமக்குறைவு. ரோகி.

செவ்வாய் பார்க்க சத்ரு நாசம், மாமனுல் சுகக் குறைவு. இரும்பு ஆயுதங்களால் ரத்தமும் நெருப்பால் பிடையுமுண்டாகும்.

புதன் பார்க்க மாமனுல் ஸௌக்யம் பிறர் மேல் குறை சொல் பவன். கஷ்டமான கார்யம் செய்பவன். சத்ருக்களுடன் விரோ தத்தைச் செய்பவன்.

குரு பார்வை பெற சத்ரு விருத்தி. தன் ஸ்திரிக்கு நாசம். அம்மான் மூலம் ஸௌக்யமின்மை.

சுக்ரன் பார்த்தால் மாதுல ஸௌக்யம். எல்லோராலும் கொண்டாடப்படுபவன். சத்ரு நாசம்.

சனி பார்க்க சத்ரு நாசம். மாதுலனோடு சேர்ந்திருத்தல். கால் கண் முகங்களில் புண்ணுடையவன். கடினமான வார்த்தை சொல்பவன். ஜ்வரம், மோஹம் முதலியவையுடையவனுவான்.

ராகு பார்வை பெற்றால் சத்ரு நாசம். துஷ்டனுல் தன நாசம். எல்லா நற்குணமும் பொருந்தியவனுயும், விநயமுள்ளவனுகவு மாவான்.

ரோகஸ்தானத்தில் செவ்வாயிருந்து சனி பார்க்க சத்ரு விருத்தி. சுபஸம்பந்தம்-த்ருஷ்டி ஏற்பட சிறிது குறையும்.

சத்ரு ஸ்தானத்திலிருக்கும் க்ரஹங்களின் எண்ணிக்கைக்குத் தக்கபடி சத்ருக்களின் எண்ணிக்கையைச் சொல்லவும். சத்ரு ஸ்தானாதிபன் பலவானுயில் பலன் சரியாகவே நடக்கும்.

லக்னாதிபன் 6-க்குடையவன் இருவர்களுக்கும் சத்ரு பாவம் ஏற்படின் எதிரிகளிடமிருந்து கஷ்டமும், லக்ன ஷஷ்டாதிபர் களுக்கு மித்ரத்வமிருந்தால் மித்ரன்மூலமாகவும், ஸமத்வமிருப்பின் ஸமன்மூலம் சத்ருவுமுண்டாவான்.

க்ரஹங்களுக்கு ஜாதி வயது நிறம் சொல்லியுள்ளபடி ஆறின் அதிபதியின் ஜாதி நிறம் வயது உருவம் ஸ்தானம் இவைகளுக்கு ஒப்பாக சத்ருவைச் சொல்லலாம்.

ஆறுமதிபன் லக்னத்திலிருந்தால் தன்மூலமும், இரண்டி லிருந்தாலும் தனாதிபனுடன் கூடினாலும் பொருள் மூலமும், மூன்றுமிடம் அல்லது மூன்றுமதிபனோடு சேர ஸஹோதர மித்ரர் கள் மூலமும், நான்காமிடம் அல்லது நான்குக்குடையவனோடு சேர, விடு, பூமி காரணமாகவும், ஐந்து அல்லது ஐந்துக்குடைய

வனுடு சேர ஜ்ஞாதிபுத்ர-அர்த்தங்கள் மூலமாகவும், ஆறிலிருந்தால் அபிசார ப்ரயோகம் (ஏவல், பில்லி, சூன்யம்) மூலமாகவும் (இங்கு ஆறுக்குடைய க்ரஹத்தின் ஆசாரம் ஜாதி வயது முதலிய வைக்கொப்ப சத்ருவின் லக்ஷணத்தைக் கூறலாம்) ஏழு அல்லது ஏழாமிடத்திபனுடன்கூட பார்யா மரண மூலமாகவும், எட்டு அல்லது எட்டுக்குடையவனுடன் சேர்ந்தால் ஆத்ம நாசமாகவும், ஒன்பது அல்லது ஒன்பதுக்கதிபனுடன்கூட பித்ரு வர்க்கமூலமாகவும், பத்து, பத்துக்குடையவன் சேர்க்கை பெற ராஜ்யலக்ஷ்மி பாதி மூலமாகவும், பதினொன்று, பதினொன்றுக்குடையவனுடன் சேர்க்கை இருக்க லாபம் ஆசை காரணமாகவும், பனிரண்டு வ்யயாதிபதி சேர்க்கை பெற பொருள் நஷ்ட மூலமாகவும் சத்ரு விருத்தி, தேச ப்ரம்சம் முதலியவை உண்டாகும். இதன் மூலம் உடம்பில் விகாரமும் ஏற்படலாம்.

சனி பலவானாகி லக்னத்திலிருந்தாலும், மாந்தி பாபியுடன் கூடினாலும், லக்னாதிபதி 5-9-களில் குளிகனுடன் சேர்ந்திருந்தாலும் விஷம் வஞ்சகம், திருடர் மூலம் பயமேற்படும்.

லக்னாதிபதி லக்னத்தில் பாபியுடன் கூட இருந்தாலும், லக்னத்தில் ராகு பாபியுடன் கூடி வஸித்தாலும் வஞ்சகம், திருடர் அரசர் மூலம் பயமேற்படும்.

ராகு செவ்வாயுடன் சேர்ந்து லக்னத்திலிருக்க அண்ட வியாதி (Hydrocele) உள்ளவனாகிறான்,

பாபி ஆறிலிருந்து அவ்வீட்டுக்கதிபன் நீசன் அல்லது அஸ்தங்கதனாய் லக்னாதிபன் பலம் பெற்றவனால் சத்ருவை வஞ்சிப்பான்.

ஆறுக்கதிபன் எந்த பாவாதிபனோடு எந்த பாவத்திலிருந்தாலும், எந்த பாவாதிபதி ஆறில் வஸித்தாலும் அந்த பாவம் நன்மையற்றதாகும்.

லக்ன ஷஷ்டாதிபர்கள் சேர்ந்திருந்து லக்னாதிபனைக்காட்டில் ஷஷ்டாதிபன் துர்பலனாகில் எதிரி இவனுக்கு வசப்பட்டவனாகவும், ஷஷ்டாதிபனைக் காட்டில் லக்னாதிபன் துர்பலனாகில் இவன் எதிரிக்கு வசப்பட்டவனாகவுமாவான்.

பஞ்சமாதிபன் ஆறிலிருந்து, அவ்வீட்டுக்குடையவன் குரு உடன்கூடி வியயாதிபன் லக்னத்திலுமிருக்க புத்ரன் சத்ருவாவான்.

விரயாதிபதி துர்பலனாய் அஷ்டமாதிபனுடன் சேர்ந்து கர்மாதிபன் பலவானாலும் ரோகமில்லாதவன்.

சந்த்ரன் சுபஸம்பந்தம் பெற்று 6-8-12-தவிர மற்ற விடங்களிலிருக்க, லக்னாதிபன் சுபவீக்ஷணமும் பெற்றால் ரோக விநாசத்தைச் சொல்லலாம்.

லக்னத்தில் சுபரிருந்தாலும் சுபரின் மத்தியில் லக்னமிருந்தாலும், சுபஸம்பந்தம் பெற்ற சந்த்ரன் கேந்த்ரத்திலிருந்தாலும் ரோகத்திலிருந்து விடுபடுவான்.

12-4-6-8-ஸ்தானங்கள் பாப ஸம்பந்தமில்லாமல் சுபர் கேந்த்ரத்திலுமிருந்தால் வியாதிக் குறைவு ஏற்படும், வியாதி விஷயமான ஆருடத்திலும் இவ்விதமே பலனைச் சொல்லலாம்.

ஆரூடம் அல்லது ஜன்ம லக்னத்துக்கு 7-9-8-5-களில் சுபர்களிருந்தோ, சுபவீக்ஷணம் பெற்ற மற்றவர்களோ வஸித்து 3-6-10-11-இவைகளிலொன்றில் சந்த்ரனிருந்தால் ரோகம், விபத்து முதலியவைகளிலிருந்து விடுபடுவான்.

3-6-10-11-இவைகளில் சந்த்ரன் வஸித்தாலும், 9-5-கேந்த்ரம் 2-இவைகளிலிருந்தாலும், லக்னம் சுபவீக்ஷணம் பெற்றாலும் ரோகத்திலிருந்து விடுபட்டு ஸௌக்யத்தை அடைவான்.

லக்னத்தில் பூர்ணசந்த்ரனிருந்து புதன் பார்வை பெற்று குரு சுக்ரர்கள் கேந்த்ரத்திலுமிருந்தால் கடுமையான ரோகத்தினின்றும் சுகத்தையடைவான்.

ஆறில் பாபியிருந்து ஆறுக்கதிபனும் பாப ஸம்பந்தம் பெற்று குஜ ராகுகளுடன் சேர்ந்தாலும், லக்னத்திலிருக்கும் புதன் அல்லது சந்த்ரன் பாப வீக்ஷணம் பெற்றாலும், லக்னாதிபன் பாப ஸம்பந்தம் பெற்று, லக்னத்தில் பாபியிருந்து சந்த்ரனும் துர்பலனாயிருந்தாலும் ரோகத்திலிருந்து எழுந்திருக்கமாட்டான்,

லக்னத்தில் இருக்கும் க்ரஹங்கள், அஷ்டமத்திலிருக்கும் க்ரஹங்கள் அல்லது லக்னம், 4-லிருக்கிற பாபிகள் இவர்களைக் கொண்டு வியாதியுத்பத்தி கஷ்டத்தின் பரிபாகம் முதலியவைகளைச் சொல்லலாம்.

குஜன்-ஸ்வக்ஷேத்ரத்திலிருக்க மரணம். 8 அல்லது 7-ல் கலஹம். லக்னம் அல்லது ராசிக்கு 12-ல் செலவு.

லக்னாதிபன் சத்ரு அல்லது நீச ஸ்தானத்திலிருந்தாலும், அஸ்தங்கதனுக அல்லது பாபரால் பார்க்கப்பெற்றாலும், சந்தரன் பாப ஸம்பந்தம் பெற்று 6-8-லிருந்தாலும் ரோகார்த்தன் மரண மடைவான்.

லக்னத்துக்கு இருபக்கங்களிலும் பாபரும், சத்ருக்ருஹத்தில் லக்னாதிபனும், க்ஷீணசந்தரனும் பாப ஸம்பந்தம் பெற்றால் ரோகத்தினின்றும் விடுபடமாட்டான்.

அஷ்டமாதிபன் சத்ரு க்ருஹம் நீசஸ்தானங்களிலிருந்து லக்னத்தில் பாபியும், லக்னம் சுபவீக்ஷணமில்லாமலுமிருந்தால் ரோகி மரணமடைவான்.

லக்னாதிபன் சத்ரு க்ஷேத்ரம் நீச க்ஷேத்ரங்களிலிருந்து பாபருடன் சேர்ந்து அஷ்டமாதிபன் லக்ன கேந்த்ரத்திலிருந்தாலும், சந்தரன் மாந்தியுடன் 6—1—8-லிருந்து பாப க்ரஹம் லக்னத்திலிருந்தாலும், லக்னாதிபன் பாப ஸம்பந்தம் பெற்று மாந்தியுடன் கூடி சந்தரன் பாபருடன் சேர்ந்து 6—8—12-லிருந்தாலும், லக்னாதிபன் இரட்டை அம்சத்திலிருந்து மாந்தி சந்த்ராம்சம் தவிர மற்றைய அம்சங்களிலிருந்து அதற்கு த்ரிகோணத்தில் பாபியிருந்தாலும் ரோகி மரணத்தையடைவான்.

9-ல் சுபனும் அதனாதிபன் பலவானாய் சுபஸ்தானம் பெற்று லக்னாதிபன் சூரியன் அல்லது குருவால் பார்க்கப்பட்டு அல்லது சேர்ந்திருக்க ஸேவை, மந்த்ர ஜபங்களால் தேவதையின் அநுக்ரகம் பெற்று வியாதி நிவ்ருத்தியாகும். லக்னாதிபன் தர்மஸ்தானம் தோஷயுக்தமானால் சாந்தி ஏற்படாது. இவ்விதமே ஆரூடத்தையும் பார்க்கலாம். ஆரூடத்தில் உதிக்கும் லக்னம், பாப ஸம்பந்தம் வீக்ஷணம் பெறில் வியாதி விருத்தி. ஆரூட லக்னம் முதற் பாகத்திலானால் ரோகம் பிறகு ஏற்படும்.

சந்தரன் 6-8-12-லிருந்து லக்னாதிபன் பார்க்க சனி குளிகன் ராகுகளின் சேர்க்கை ஏற்பட்டாலும், சனி நீசாம்சம், சத்ரு நவாம்சங்களிலிருந்து அல்லது அஸ்தங்கதனாய் பாப ஸம்பந்தம்-வீக்ஷணம் பெற்று பாப ஷஷ்ட்யம்சத்திலிருந்தாலும், அஷ்டமாதிபன் த்ரேக்காணம் சனி ராகு மாந்திகளுடன் கூடினாலும், சனி த்ரேக்காணம் மாந்தி ராகுகளுடன் கூடினாலும் துர்மரணம் ஸம்பவிக்கிறது.

ஷஷ்டாஷ்டமாதிபதியோ குஜனோ த்ருதீயாதிபனுடன் சேர்ந்தும் சனி ராகு மாந்திகளுடன் சேர்ந்தும் க்ரூரத்ரிம்சாம்சத்திலுமிருக்க யுத்தத்தில் மரணம் ஏற்படும்.

ஆதில் ராகு, லக்னம் அல்லது கேந்த்ரத்தில் குருவுமிருக்க அஷ்டவித ஐச்வர்யம், சேர்த்தி புத்திகளோடு கூடுகிறான்.

ஆறுமிடம் பாபக்ரஹங்களின் பார்வை சேர்க்கை சத்ரு நாசம் செய்யும். சத்ரு ஸ்தானம் சுபக்ரஹ த்ருஷ்டி ஸம்பந்தம் பெறின் சத்ருக்களுண்டாவர்கள். சத்ரு ஸ்தானத்தில் க்ரூர க்ரஹமிருந்தால் சத்ருக்களை அழிப்பான். சுப க்ரஹமிருக்க ரோகி. சத்ரு ஸ்தானத்தில் சந்த்ரனிருக்க நிமை.

சத்ரு ஸ்தானம் குஜ சனிகளுடன் சேர்ந்து ராகு ஸூர்யர்களால் பார்க்கப் பெற்று லக்னாதிபன் துர்பலனானால் நீர்க்க ரோகியாவான்.

ஷஷ்டாதிபன் பாபருடன் கூடி லக்னம் அல்லது அஷ்டமத்திலிருந்தால் சரீரத்தில் விரணமுண்டாகும். பத்திலிருந்து சுபரால் பார்க்கப்பட்டாலும் விரணமுண்டாகும்.

பித்ரு பாவாதிபன் பித்ரு காரகர்களின் த்ருஷ்டி சேர்க்கை முதலியவைகளைக்கொண்டு தகப்பனாருக்கும் இப்பலனைச் சொல்லலாம். இப்படியே மாதா முதலிய மற்றவர்களுக்கும் பலனை ஊஹித்தறியலாம்.

லக்ன ஷஷ்டாதிபர்கள் சூர்யனுடன் சேர ஜ்வரம். சந்த்ரனுடன்கூட ஜல கண்டம். செவ்வாயுடன் சேர யுத்தம் அல்லது நெருப்பால் பயம், புதனுடன்கூட பித்தரோகம். குருவுடன் சேர வியாதியில்லாமை, சுக்ரனுடன் சேர பத்னீ விபத்து. சனி சேர வாயு பிடை.

அஷ்டமாதிபன் ஆறிலிருந்து அதற்கதிபன் லக்னத்திலிருந்து சந்த்ரன் 6-வது கலாம்சத்திலுமிருக்க எட்டாவது வருஷத்தில் மிருகத்தினிடமிருந்து பயம்.

11-ல் ராகுவிருந்து 4-ல் சனியிருக்க ஒரு வருஷத்தில் அக்னி பயம். பிறகு மூன்று வருஷத்தில் பகுதோஷமேற்படும்.

லக்னத்தில் சூரியனும், விரணத்தில் சந்த்ரனுமிருந்தால் 5—9 வருஷங்களில் ஜல பயம்.

லக்னாதிபன் 6-லும், அதனாதிபன் எட்டிலுமிருக்க 10—19-வயதுகளில் காய் மூலம் பயம்.

புத ஸூர்யர்கள் ஆறிலிருக்க பித்தம், பித்ரு கோபம், அவமரியாதைகளால் பிடை.

சூர்யன், சனி அல்லது புதனுடன் சேர்ந்து 6-லிருக்க பற்கள் விழும்.

ராகு 6-லிருக்க தலை பெரிதாயிருக்கும். கேதுவிருக்க கண்ணில் கருப்பு அடையாளமேற்படும். அதிக க்ரஹங்கள் 6-லிருக்க புத்ரசோகம், விரல் இழத்தலுடையவனுவான். சூரிய சனிகள் 12-லிருக்க கீழ் வீங்கின விரலையுடையவனுவான்.

கர்ன் 10-லிருந்தால் கல்வி ஸ்தானத்தில் ஆசையுடையவனுவான். லக்னத்தில் கர்னிருக்க தலையில் புண். பட்டங்கள் பேறுவான். நான்கிலிருக்க மிருக பயம். தன் விடு சூன்யமாகும்.

சூரியன் சனியுடன் பத்தாமிடத்திலிருந்து சுபவீக்ஷணமில்லாவிடில் ஆசாரமற்றவனுவான்.

சூர்யனுடன் சேர்ந்த சனி ஆறிலிருந்து செவ்வாய் 8-லிருந்தாலும், ஷஷ்டாதிபன் ராகு புதர்களுடன் சேர்ந்து லக்னத்திலிருந்தாலும், சுபக்ரஹ வீக்ஷணமில்லாமல் செவ்வாயுடன் கூடினாலும் ஆண் குறி அறுபடும்.

ஸப்தமாதிபன் கர்னுடன் சத்ரு ஸ்தானத்திலிருந்தால் கனத்ரம் கபம்ஸகமாகும்.

சூர்யன் சனி 6-லும், குஜன் 8-லுமிருந்து ராகு கேதுகளின் ஸம்பந்தம் பெறின் பாம்பு, நிருடன், அக்னிமூலம் பயம் அல்லது வாயு பயம்.

ஷஷ்டாதிபன் கேந்த்ரத்திலிருந்து பாபியால் பார்க்கப் பெற்றாலும், சத்ரு ஸ்தானத்தில் அதிக பாபிகளிருந்தாலும், லக்னாதிபன் 6-லும், அதனாதிபன் லக்னத்திலுமிருந்து சனி ராகு மாந்திகளுடன் சேர்ந்தாலும், ஷஷ்டாதிபன் துர்பலனாய் பாபர்களால் பார்க்கப்பெற்று பாப மத்யத்திலிருந்தாலும் சத்ரு பிடை.

ஷஷ்டாதிபன் 6-8-12-ல் சேன் அல்லது அஸ்தங்கதனாய் அல்லது சத்ருவுடன் சேர்ந்து லக்னாதிபன் பலவானில் சத்ரு காசமேற்படும்.

6-க்குடையவன் சுபக்ரஹ வீக்ஷணம் பெற்று அல்லது சுபஸ்தானாதிபதியின் பார்வை பெற்று சுபனுடன் சேர்ந்து அல்லது சுபஸ்தானத்திலிருந்தாலும். ரோகாதிபன் லக்னாதிபனைக்காட்டில் துர்பலனாய் சுபக்ரஹ ஸம்பந்தம் அல்லது வீக்ஷணம் பெற்றாலும் எதிரிகளுடன் ஸ்நேகமுள்ளவனுவான்.

லக்னாதிபன் ரோகஸ்தானத்திலிருந்து ரோகஸ்தானாதிபனால் பார்க்கப் பெற்றாலும். இருவரும் லக்னத்திலிருந்தாலும். குரு சுக்ரர்கள் லக்னத்திலிருந்து ரோகாதிபனுடன் சேர்ந்து சனி, ராகு, செவ்வாய்களால் பார்க்கப் பெற்றாலும் ஜ்ஞாதி மூலம் பிடையுண்டாகும்.

சத்ரு ஸ்தானத்தில் லக்னேசனிருந்து அங்கேயே சந்த்ரன் அல்லது சுபக்ரஹமிருந்து புதன் கேந்த்ர த்ரிகோணங்களிலிருந்தால் ஜ்ஞாதிகளுடன் ஜீவனம் செய்வான்.

சத்ரு ஸ்தானாதிபதி குருவால் சுப ஸம்பந்தம் — வீக்ஷணம் பெற்று உச்ச க்ஷேத்ரம், ஸ்வக்ஷேத்ரம், மித்ர க்ஷேத்ரங்களிலிருக்க பல ஜ்ஞாதிகளையுடையவனுவான்.

ரோகாதிபன் பாபருடன்கூடி க்ரூராம்சம் - நீசஸ்தானங்களில் அல்லது அஸ்தங்கதனாய் சுபக்ரஹ ஸம்பந்தம் பெற்றால் ஜ்ஞாதி க்ஷயம் உண்டாகும்.

ஆறுமாதிபன் பாபியுடன் லக்னம் அல்லது எட்டிலிருக்க விரணத்தை உண்டாக்குவான்.

ரோகாதிபன் லக்னாதிபன் செவ்வாய் புதர்களுடன்கூடி லக்னத்தைப் பார்க்க, பவித்ர க்ரந்தி முதலிய ஆஸனத்வார ரோகங்களைச் செய்வான்.

ராகு கேதுகள் ரோகஸ்தானத்திலிருக்க கண்டம், நாபி, கண், பாதங்களில் பிடை ஏற்படும்.

குஜன் ரோகாதிபதியாய் லக்னத்திலிருந்து பாப ஸம்பந்தம் அல்லது விக்ஷணம் பெற்றால் கல்லாலடிபட்ட காயம், வைஸூரி முதலியன உண்டாகும்.

நீச-புத-சனிகள் லக்னத்திலிருந்தாலும், லக்னம் 7—12—8 இவைகளில் செவ்வாயிருந்தாலும் ஆண் குறியின் நாசமேற்படும்.

நீசர்கள். புதன்—சனி - இவர்கள் தசமத்திலிருந்து குஜனுடன்கூட ஆண்குறிக்கு ஸங்கோசம் அல்லது க்ரந்தி ரோகம் ஏற்படும்.

சுக்ரன் ஸப்தமாதிபனுடன்கூடி சத்ரு ஸ்தானத்திலிருந்தாலும், சனி-லக்னாதிபன், ரோகாதிபன் இவர்கள் கேந்த்ர-த்ரிகோணங்களிலிருந்தாலும் நபும்ஸகனாவான். (போகத்தில் ஆசை ஏற்படாது.)

சத்ரு ஸ்தானாதிபன் சூர்யனுடன் சத்ரு ஸ்தானம் பாபஸம்பந்தம் விக்ஷணம் பெற்றால் நாபியில் பித்தமூலமாக பற்று உண்டாகும்.

சூரியன் தசமஸ்தானத்தையடைந்து ராகு குஜர்களுடன கூடி சனி விக்ஷணம் பெற்றால் தலையில் கத்தி முதலிய கூரிய ஆயுதத்தால் காயமேற்படும் அல்லது சிரச்சேதமேற்படலாம்.

லக்னம் அல்லது எட்டில் க்ஷீண சந்த்ரன் செவ்வாயுடன் சேர்ந்து வலித்து ராகு ஸம்பந்தம் அல்லது விக்ஷணம் பெற்றாலும், சுக்ரனுக்கு 7—5—9-களில் ராகு வலித்தாலும் அல்லது சந்த்ரனுக்கு ஏழில் வலித்தாலும், ராகு பாபருடன் கூடியோ. பார்வை பெற்றோ குளிகனுடன் வலித்தாலும் பார்க்கப்பெற்றாலும் தலை அறுபடலாம்.

சூரியன் க்ரூரம் முதலிய ஷஷ்ட்யம்சம் பெற்றாலும், லக்னத்தில் சனியும் ஏழில் ராகு அல்லது சுக்ரனும் சன்னியில் க்ஷீண சந்த்ரனுமிருக்க ரெஸ். கை, கால்களில் வெட்டுதல் ஏற்படலாம்.

லக்னம் அல்லது லக்னாம்சத்தில் செவ்வாயிருந்தாலும், க்ஷீண சந்த்ர, சூரியர்களிருந்தாலும், புதனுடன் நீச க்ரஹம் சேர்ந்திருந்தாலும், லக்னத்தில் க்ஷீணசந்த்ரனிருந்து ராகு, குஜ, சனிகளின் ஸம்பந்தம் அல்லது விக்ஷணம் பெற்றாலும் குடல் வியாதியால் இறப்பான்.

தசமாதிபன் க்ரூரனுடன் அஷ்டமத்திலும், தத்ஸ்தானாதிபன் பாப ஸம்பந்தம் பெற்று தசமத்திலிருந்தாலும், சனி லக்னத்திலும், லக்னாதிபன் அஸ்தங்கதனானாலும், சனி லக்னத்திலும், ராகு ஏழிலும், கன்னியில் சுக்ரனும், க்ஷீணசந்த்ரன் 7-லுமிருந்தாலும், சனி தர்ம ஸ்தானத்திலிருந்தாலும், குரு 3—8—12-லிருந்தாலும், 7—8-களில் சந்த்ரனிருந்தாலும், செவ்வாய் அல்லது குருவுடன் சேர்ந்தாலும், தசமத்தில் ராகு சனிகளிருந்தாலும், சுக்ரன் பார்வை பெற்ற சூரியன் செவ்வாயோடு சேர்ந்தாலும், சனி சுக்ர விக்ஷணம் பெற்று ராகுவோடு சேர்ந்தாலும் கைகள் வெட்டப்படும்.

சத்ரு ஸ்தானாதிபன் லக்னாதிபதி சனிகள் கேந்த்ரம் அல்லது த்ரிகோணத்திலிருந்தாலும், ராகு சேர்ந்திருந்தாலும், சனி த்ரேக்காணத்திலோ, கடகத்தின் 2, 3, விருச்சிகத்தின் 1, 2, மீனத்தின் 3-வது த்ரேக்காணத்திலோ ஜனனமான லக்னத்தில் சந்த்ர சனிகளிருந்தாலும், பாப ராசியான 9—7—5—8—4-களிலொன்றில் சனியிருந்து பாப க்ரஹ ஸம்பந்தம் விக்ஷணம் பெற்றாலும் விலங்கால் கட்டுப்படுவான்.

லக்னம், சந்த்ரன் இரண்டும் சனியால் பார்க்கப்பட கலஹம் செய்பவனாவான்.

லக்னம் சந்த்ரன் இரண்டும் பாபருடன்கூட க்ருபணன்.

சந்த்ரன் அசுபர்களின் மத்யத்திலும், சனி ஏழிலுமிருக்க குன்மம், ச்வாஸ ரோகங்களுண்டாகும்.

சூரியனிருக்குமிடம் ஏழாவதானால் ஹரிகாங்கனாவான்.

7-ல் செவ்வாயும், சந்த்ரன் தசம மத்யத்திலுமிருக்க அனேக ராலும் வெறுக்கத் தக்கவனாவான்.

சந்த்ர சூரியர்கள் ராசியிலோ அம்சத்திலோ ஒருவர் ஸ்தானத்தில் மற்றொருவர் மாறி வஸித்தால் க்ஷயரோகியாகலாம்.

சனி சந்த்ரனுடன் 6—8—12-களிலிருக்க வாத ரோகங்களுண்டாகும்.

சூரியன் செவ்வாயுடன் 6—8—12-களிலிருக்க ராஜ யக்ஷ்மா, பித்தரோகங்கள், குஷ்டம், மூர்ச்சை இவைகளேற்படலாம்.

ராகு, க்ஷீணசந்த்ரன் குருவுடன் சேர்ந்து செவ்வாய், சனிகளால் பார்க்கப்பட்டு 6—8—12-களிலிருக்க காஸம், ச்வாஸம், க்ஷயவியாதிகளேற்படும். பரிவேஷமிருக்க அபஸ்மார ரோகம் ஏற்படும்.

பாபக்ரஹ மத்தியில் சந்த்ரனும், சனி ஏழிலுமிருக்க ச்வாஸம், க்ஷயம், ப்லீஹம், குன்ம ரோகங்களால் நலிவடைவான்.

12—6—8—2-இவைகளில் சந்த்ரன், செவ்வாய், சனி, சூரியர்கள் பலம் பெற்றிருந்தால் வாயு ப்ரகோபத்தால் உண்டாகும் ரோகங்கள் ஏற்படும். துர்பலர்களானால் கண்களுக்கு நாசம்.

2—12-ல் சுக்ரன் அல்லது செவ்வாயிருக்க கர்ண ரோகமேற்படுகிறது. 2—12-ல் சந்த்ரனிருக்க நேத்ர ரோகம்.

லக்னம் பாபக்ரஹ ராசியாகி குரு சந்த்ரர்களிருக்க தலையில் அடிபடல், வாதசூலம், அக்கிமாந்த்யங்களேற்படும்.

சூரியன் லக்னத்திலிருந்து செவ்வாய் பார்க்க ச்வாஸம், க்ஷயம், வித்ரதி, குன்மம் இந்த ரோகங்களை அடைவான்.

லக்னத்தில் குஜனிருந்து சனி சூரியர்களால் பார்க்கப்பெற கத்தி முதலியவைகளால் காயப்படுவான்.

ரோகஸ்தானத்தில் சந்த்ரனிருந்து க்ரூர க்ரஹ வீக்ஷணம் பெற்றாலும் க்ரூர க்ரஹாம்சத்தில் சந்த்ரனிருந்தாலும் வாயுவால் பிடிக்கப்படுவான்.

இவ்விதமே செவ்வாயிருக்க ரக்த பித்தரோகமேற்படும்.

,, புதன் ஸ்லேஷ்ம வாத ரோகங்களுண்டாகும்.

,, குரு வித்ரதி ரோகமேற்படும்.

இவ்விதமே சுக்ரனிருக்க அதிஸார ரோகமுண்டாகும்.

,, சனி குன்ம வியாதியுள்ளவனுவான்.

ராகு கேதுகள் சேர பிசாச பாதை ஏற்படும்.

ஆறுமிடத்தில் சந்த்ரன் செவ்வாயுடன் சேர சித்தப்ரமம், பாண்டு ரோகங்களேற்படும். சந்த்ரன் செவ்வாய் சூரியர்களுடன் கூட விஸர்ப்பம், சூல ரோகங்களுடையவனுவான்.

ரோகஸ்தானத்தில் சந்த்ரனும் அஷ்டமத்தில் சனியும், விரயத்தில் பாபியும் லக்னதிபன் பாபாம்சத்திலுமிருந்தால் பினஸ ரோகமுள்ளவனுவான்.

ரோகஸ்தானமான சனி க்ஷேத்ரத்தில் சூர்யனுடன் புதன் இருந்தால், ஸமர்த்தன். அதிகமாக சாப்பிடுபவன். நிஷ்டுரனுலும் பிரியமாகப் பேசுபவன். அதிஸார ரோகமுடையவன்.

சந்த்ர சுக்ரர்கள் அஷ்டமத்திலிருந்தால் அதிசாரம் என்ற ரோகமுண்டாகும். அஷ்டமத்தில் செவ்வாயும் சுக்ரனும் சேர அதிக மலம் போகும்.

கடகம் ஆறும் இடமாகி அதில் செவ்வாயிருக்க ரத்த பித்த ரோகமுள்ளவனுகவும், அங்கக் குறையுள்ளவனுகவும், பல வியாதிகளை உடையவனுகவுமாவான்.

சந்த்ரன் கடகத்திலிருந்து செவ்வாய் பார்க்க சூல வியாதியால் பிடிக்கப்படுவதுடன் தாய்க்குத் தீங்கிழைப்பவனுகவும், எல்லோருக்கும் பிரியமாகவும், ஸமர்த்தியமுள்ளவனுகவுமாவான்.

சனி கர்கலிருக்க ஹ்ருதய ரோகமுள்ளவனுவான். வாஹனம், பந்து, ஐச்வர்யம், புத்தி இவையற்றவனுவதுடன் சிறுவயதில் ரோகம் உடையவனுயும், நகம், மயிர் இவைகளை அதிகமாய் உடையவனுகவுமாவான்.

சூரியன் கும்பத்திலிருக்க ஹ்ருதய ரோகமுடையவனுவதுடன் அதிகமான புத்ரர்களை உடையவனுவான். கபியாகவும், நடமான விரோத கோபங்களை உடையவனுகவும், பரஸ்த்ரீகளுக்குப் பிரியனுகவுமாவான்.

வியயஸ்தானத்தில் சுக்ரனிருக்கச் சோம்பேறி. சுகமுள்ளவன். பதிதன். அதிகம் சாப்பிடுபவன். படுக்கை உபசரத்தில் ஸாமர்த்தியமுடையவன். ஸ்திரீகளுக்கு அடங்கி நடப்பவன்.

ரோகஸ்தானத்தில் சூர்யன் இருக்க, பித்தம், ஜ்வரம், எரிச்சல், மோஹம், சோகம், பயம், குல்மம், சர்ம ரோகம், அக்னி பிடை, நேத்ர ரோகம், ராஜாஜ்ஞையினாலேற்படும் தண்டனை, பித்த ஜ்வரம், காசம், உஷ்ண ஜ்வரம், அபஸ்மாரம், ஹ்ருதய ரோகம், குஷ்டரோகம், க்ஷயம், விஷ பிடை, ஆயுத பிடை, பிராணிகளிடமிருந்து பயம், திருடன், அரசன், தர்மதேவன், ஸர்ப்பம், சிவன் இவர்கள் மூலம் பயம் இவையுண்டாகும்.

ரோகஸ்தானத்தில் சந்த்ரன் இருக்க, நேத்ர வியாதி, அதிஸாரம், க்ஷயம், காசம், வைகூரி, துஷ்ட பிராணிகளிடம் பயம், புண், விக்கல், வலிப்பு, காலரா, ஜலகண்டம், அதிக ஸ்த்ரீ ஸங்கம், தூக்கம், சோம்பல், கபம், சிரங்கு, குளிர் ஜ்வரம், ஜலோதரம், கொம்புள்ள பிராணி ஜல ஜந்துக்கள் இவைகளின் பிடை, அக்னி மாந்தியம், காமாலை, ரத்த தோஷம், மனச் சோர்வு, பாலக்ரஹம், துர்க்கை, இன்னர், தர்ம தேவதை, ஸர்ப்பம், யக்ஷன் முதலியவர்கள் மூலம் பயம் இவைகளுண்டாகும்.

ரோகஸ்தானத்தில் செவ்வாயிருக்க அக்னி வ்ரணம், ஜ்வரம், குஷ்டம், ரத்தப் பெருக்கு, கபம், அக்னிமூலமான ரோகம், மோஹம், பயம், மூலரோகம், யக்ஷ ராக்ஷஸ பைரவ ருத்ர பூத கணங்கள் மூலம் பயம், ரத்ததோஷம், பித்த ஜ்வரம், அக்னி சஸ்த்ர விஷங்களால் கெடுதி, கண்வலி, வலிப்பு, மஜ்ஜாரோகம், சொறி, கை கால் ஒடிதல், ராஜா, திருடன், சத்ருக்களின் பிடை, உடன் பிறந்தவர்கள், ஸ்நேஹிதன், சத்ரு இவர்களுடன் கலகம், ராக்ஷஸ, துஷ்டக்ரஹ கந்தர்வர்கள் மூலம் பயம், கழுத்துக்கு மேலேற்படும் ரோகம் இவைகளுண்டாகும்.

ரோகஸ்தானத்தில் புதன் இருப்பால் வாத பித்த ஜ்வரங்கள் பாண்டு, மஹோதரம், வாக்தில் கெடுதி, பந்து வியோகம், ஸ்தான தோஷம், சுவர் மரம் விழுதல், வாஹனங்களாலும், மறநியாலும் கழுத்தில் ஏற்படும் துக்கம், நேத்ர ரோகம், மாளிகையிலும், காட்டிலும் வசிக்கும் தேவதா பிடை, மனக் கலக்கம், கழுத்து, மூக்கு

இவைகளிலுண்டாகும் ரோகம், சந்நிபாத ஜ்வரம், விஷ பிடை, சர்ம ரோகம், துஸ்ஸ்வப்நம், நிகல பந்தம் முதலியவைகளைக் காணலாம்.

ரோகஸ்தானத்தில் குரு வலித்தால் க்ருத்ரிமமான வாயு, நாக்கின் ரோகங்கள், ப்ரமேகம், ஜ்வரம், கழுத்திற்கு மேற்பட்ட வியாதிகள், அரச கோபம், சோம்பல், மோஹம், கர்ண ரோகம், தந்த ரோகம், பல் உடைவது, யக்ஷி இன்னரர்கள் மூலம் பயபிடைகள், நரம்பு ஸம்பந்தமான ஜ்வரம், இஷ்டர்கள் பிரிவால் உண்டான துக்கம், கபரோகம், தேவஸ்வாபஹாரம், ப்ராஹ்மண சிவ சாபம், யக்ஷ தேவ ஸர்ப்ப இன்னர வித்யாதரர்களால் உண்டாகும் ரோகங்கள் இவைகளை அறியலாம்.

ரோகஸ்தானத்தில் சுக்ரன் இருப்பதால் அஸ்ரிஸ்ராவம், மேழ விழுதல், நேத்ர ரோகம், தூக்கமின்மை, கபம், மஹோதரம், மூல ரோகம், மூத்ர க்ருச்ரம், பிடகை, வாஜீகரண மருந்தில் ஏற்பட்ட விஷபிடை, சேற்றில் விழுவது, வாத பிடை, பாண்டு ரோகம், கபவாத தோஷங்கள், நேத்ர நாசம், ப்ரமேகம், குஹ்ய ரோகம், வீர்யஸ்கலனம், வேசி ஸம்பந்தத்தால் காந்தி நாசம், ச்லேஷ்ம ரோகம், யோகினி, யக்ஷி, காளி, சாமுண்டி தேவதைகளினால் பயம், ஆப்த ஸ்நேஹிதன் மூலம் கெடுதல் இவைகளைக் காணலாம்.

ரோகஸ்தானத்தில் சனி இருப்பதால் வாத ரோகம், அந்ய தேச வாசம், அலைச்சல், நரம்புமூலமான வியாதிகள், விஷரோகம், தேகசிதைவு, பார்ச்வ வாயு, பாத ரோகம், குஷ்டம், குன்மம், அங்கக் குறைகள், மூடத்தன்மை, வாத ச்லேஷ்மங்களால் பாத பிடை, ஆலஸ்யம், ப்ராந்தி, வயிற்றுவலி, ப்ருத்ய வியோகம், பார்யை புத்ரர்களுக்காபத்து, அங்கஹானி, மனக்லேசம், மரம் கல்லால் அடிபடல், மட்டமான பிசாச பிடை இவைகளை அறிந்து கொள்ளலாம்.

ராகு ரோகஸ்தானத்திலிருப்பதால் ஸர்ப்ப பயம், விஷ பிடை, மோஹம், பாத பிடை, புத்தி பேதம், குஷ்டம், ஹ்ருதய ரோகம் மனக் கலக்கம், இடுவிஷம், ஸர்ப்ப பிசாச பாதை, பார்யா, புத்ர கலஹங்களுக்கு ஸ்தானம், அபஸ்மாரம், வைகூரி, பாசபந்தம், சிறு

இருமிகள். பூதப்ரேத பிசாசங்களால் கஷ்டம், பயம் இவைகளைப் பார்க்கலாம்.

கேது ரோகஸ்தானத்திலிருந்தால் ப்ராம்ஹண - க்ஷத்ரிய விரோதம், சத்ரு பயம், விஷாபஸ்மாரங்களால் ஏற்பட்ட புத்தி சலனம், சத்ரு, பில்வி, சூன்யம் இவைகளால் கஷ்டம், ஒழுக்கம் அற்ற தாழ்ந்த ஜாதிகளுடன் ஸஹவாஸம் முதலியவை நேரக் காணலாம்.

குளிகன் ரோகஸ்தானத்திலிருக்க ப்ரேத பயம், விஷ பிடை, திட்டு முதலியவைகளைக் காணலாம்.

செவ்வாய் ஷட்வர்க்கத்தில் ஆறிலிருந்து அவ்விடத்துக் குடையவன் அஷ்டமத்தில் இருக்க 12-வது வருஷத்தில் ஜ்வரம் உள்ளவனுவான்.

குரு ஸஹோதர ஸ்தானத்தில் இருக்க, அவமரியாதை, லோபம், ஸஹோதர சேர்க்கை, அக்னி மாந்த்யம், ஸ்த்ரீயின் பிரிவு இவைகளை அடைவதுடன் பாப காரியம் செய்பவனுகவும் ஆவான்.

ரோகஸ்தானத்தில் குருவிருந்தால் சிறிய வயது, குறைவான அக்கி, குறைவான பும்ஸ்த்வம் இவைகளை உடையவனுவான்.

செவ்வாய் லக்னத்திலும் சூர்யன் எட்டிலும் இருக்க தாஹ ஜ்வரமேற்படும்.

விரயத்தில் சந்த்ரனிருக்க இடக் கண்ணிற்குக் கேடு.

" சூர்யனிருக்க இரு கண்களுக்கும் கேடு.

" சந்த்ர சூர்யனிருக்க இரு கண்கள் நாசம்.

சுபக்ரஹங்கள் பார்க்க அந்த்ய காலத்தில் கண்கள் நாசம்.

ரோக, விரயஸ்தானங்களில் பாபிகள் இருந்து சுபக்ரஹங்கள் பார்வை பெறுமலிருந்தால் வெள்ளைக் குஷ்டம், சூலரோகம், நேத்ர நாசம் இவைகளில் ஒன்றை அடைபவனுவான்,

தனுபதி ஆறு, எட்டு, பனிரண்டுக்குடையவர்களுடன் கூட லக்னத்தில் இருக்க நேத்ர நாசம்.

தனுபன் சந்த்ர சுக்ரர்களுடன்கூடி லக்னத்தில் இருக்க அந்திக் காமாலை ஏற்படும்.

லக்னுபன் தன ஸ்தானத்திலும், தனுபன் ஒன்று, ஆறு, எட்டு-இவ்விடங்களில் இருந்தாலும், சுக்ரனுக்கு 2 அல்லது 12-ல் ராகு அல்லது கேதுவுடன் சூரியன் சேர்ந்திருந்தாலும் பிறவிக் குருடனுவான்.

சுக்ரன் ராகுவுடன் கூட கண்ணை இழப்பான்.

சுபக்ரஹங்கள் அசுப க்ரஹங்களால் கண்களுக்கு நன்மை நிமை உண்டாவதை அறியவேண்டும்.

சூர்ய சந்த்ரர்கள் அஷ்டமத்தில் இருக்க ராஜாஜ்ஞையால் தாபமடைபவனுகவும், வழி நடப்பதில் பிரியமுள்ளவனுகவும், ஸ்த்ரீ துவேஷியாகவும், கண்ணில் ஊனமுள்ளவனுகவும், சுக தனங்கள் இல்லாதவனுகவும், குறைந்த ஆயுளுடையவனுகவுமாவான்.

தனஸ்தானத்தில் சனியும், தனுபன் ஆறிலும், குஜன் விரயத்திலுமிருக்க ஊமையாக ஆவான்.

1, 3, 11-களில் பாபியுடன் சந்த்ரனிருந்தாலும், சந்த்ரன் பாப வீக்ஷணம் பெற்றாலும், இரண்டு பாபிகள் க்ரூர க்ரஹ வீக்ஷணம் பெற்று, 1, 5-ல் இருந்தாலும், 5, 9-இடங்கள் அசுபர் பார்வை பெற்றாலும், சுக்ரன் தனவ்யயத்திலிருந்தாலும் சூரியன், செவ்வாய், சனி இவர்களுடன் கூடினாலும், 1, 3, 5, 9, 11-இவைகளில் பாபிகள் இருந்து சுபவீக்ஷணம் இல்லாமல் இருந்தாலும், காதுகளுக்குக் கெடுதி உண்டாகும். இதில் 5-ம் இடம் ஸ்வக்ஷேத்ரமானுல் இடது காதும், 9-ம் இடம் அசுப க்ஷேத்ரமானுல் வலது காதும் கெடும்.

ராகு இருக்கும் ராசியதிபன் ப்ராத்ரு ஸ்தானாதிபனுடன் சேர்ந்தாலும், ப்ராத்ரு ஸ்தானாதிபன் புதனுடன் சேர்ந்தாலும், கழுத்தில் ரோகமேற்படும். ரோகஸ்தானத்தில் ராகுவும் சனி கேந்த்ரத்திலும் லக்னாதிபன் அஷ்டமத்திலுமிருந்தால் 26 வயதில் க்ஷயரோகியாவான்.

ராகு 6-லும் சந்த்ரன் மாந்தியோடு கூடியும் இருந்தால் 12, 19 வயதுகளில் க்ஷயரோகம் ஏற்படலாம்.

ராகு ரோகஸ்தானத்தில் இருந்து சந்த்ரன் மாந்தியுடன் சேர்ந்து லக்னாதிபதி அஷ்டமத்தில் இருந்தால் 36-வயதில் க்ஷய ரோகமேற்படும்.

செவ்வாய் புதனுடன் 6-ம் இடத்திலிருந்து சந்த்ர சுக்ரர்கள் பார்வை பெற்றாலும் புதனுடன் சேர்ந்த செவ்வாய் க்ரூராம்சத்தி லிருந்தாலும் க்ஷயரோகம் ஏற்படுகிறது.

குளிகனுடன் சேர்ந்த சனி 6-ல் இருந்து சூர்ய-செவ்வாய்-ராகுகளால் பார்க்கப்பட்டு, கப ஸம்பந்தம் அல்லது விக்ஷணம் பெறுமலிருக்க ச்வாஸ காசம், க்ஷயம் முதலிய ரோகங்களை அடை வான்.

ரோகஸ்தானம் சமராசியாகி அங்கு சனியோடு சந்த்ரனிருக்க 50-வது வயதில் குஷ்டரோக மேற்படலாம்.

ரோகஸ்தானத்தில் சந்த்ரன் கேதுவோடுகூடி வசிக்க 55வது வயதில் இரத்த குஷ்டமேற்படலாம்.

லக்னாதிபனைத் தவிர மற்ற க்ரஹங்கள் லக்னத்தில் அல்லது வியயஸ்தானத்தில் இருக்க குஷ்டரோக மேற்படும். இவ்விதமே தாய், தகப்பன், மாமன் முதலியவர்களுக்கும் அவரவர்களின் காரகன், பாவாதிபன் முதலியவர்களைக்கொண்டு அவரவர்களின் ரோக பாவத்தை ஊஹிக்கலாம்.

ரோக காரகன், ரோகஸ்தானாதிபன், செவ்வாயுடன்கூட பித்த குஷ்டமும், சனியுடன்கூட சித குஷ்டமும், சூர்யனுடன் சேர ரத்த குஷ்டமும், அவ்வோ க்ரஹங்களுக்கு உரிய ஸ்தானத்திலேற்படும்.

குரு ரோக ஸ்தானத்தில் இருந்து சந்த்ரனோடு சேர 19 அல்லது 22 வயதுகளில் குன்மம் ஏற்படும்.

விரயாதிபன் ரோக ஸ்தானத்திலும், ரோகாதிபன் விரயத் திலுமிருக்க 3 அல்லது 19 வயதில் குன்ம ரோகம் உண்டாகும்.

சந்த்ரன் பாபக்ரஹ மத்தியிலும், 7-ல் சனியும் இருக்க க்ஷயம், வித்ரதி, குன்மம், ப்லீஹம் இவைகளால் துன்புறுவான்.

சனி, ராகு, புதர்களோடு கூடி அஸ்தங்கதனாலும், க்ஷீண சந்த்ரன் ராகு சூர்யர்களுடன் சேர்ந்து சுபவீக்ஷணம் இல்லாமல் இருந்தாலும் உதர ரோகம் ஏற்படும்.

க்ஷீண சந்த்ரன் செவ்வாய் அல்லது குளிகனுடன் கூடினாலும், சனி ராகுவுடன் சேர்ந்தாலும், வயிறு, தலை இவைகளில் வெட்டுக் காய்மேற்படும்.

சப்தம ஸ்தானம் ஜல ராசியாய், சூர்யன், செவ்வாய், சனி, ராகு இவர்கள் இருக்க அதிமூத்ர ரோகியாவான்.

சப்தம ஸ்தானம் ஜலராசியாய் லக்னத்தில் ஜல க்ரஹம் வசித்து, ஜலக்ரஹ ஸம்பந்தம் வீக்ஷணமிருந்தாலும், ஜலராசியில் சந்த்ரன் வசித்து, அவ்வீட்டுக்குடையவன் 6-ம் இடத்தில் இருந்து ஜல ராசியில் வசிக்கும் புதனால் பார்க்கப்பட்டாலும் மூத்ர க்ருச்ச்ர ரோகியாவான்.

சூர்ய வீக்ஷணம் பெற குரு க்ஷேத்ரத்தில் புதன் இருக்க ப்ரமேகம், மூத்ர க்ருச்ச்ரம் உண்டாகும்.

லக்னத்திற்கு அஷ்டமாம்சத்தில் ராகு இருந்து அஷ்டமாம் சாதிபன் 5, 8, 9 இடங்களில் இருக்க, 18, 22 வயதுகளில் க்ரந்தி, மேகம் இந்த ரோகங்களுண்டாகும்.

மீனத்தில் சூர்யனிருந்து சத்ரு வீக்ஷணம் பெற்று பலசாலி யாகவுமிருந்தால், குஹ்ய ரோகத்தால் சிரமப்படுவான். எல்லோ ரையும் துவேஷிப்பான். இரு பத்னிகள் உண்டு. தரித்ரனாகவும் சத்ரு ரோகத்தால் ஹிம்சைப்படுபவனாகவுமாவான்.

அஷ்டமத்தில் சனி இருக்க அதிக துக்கம் உள்ளவனாகவும், பாண்டு முதலிய ரோகங்களால் பீடிக்கப்படுபவனாகவுமாவான்.

லக்னாதிபன் அஷ்டமத்தில் இருந்து சனி சத்ரு க்ரஹத்தி லிருந்தால் பின் வயதில் வாதரோகம் உண்டாகும்.

சூர்யன் கடகத்தில் இருந்து சனி பார்த்தால் வாத வ்யாதி உள்ளவனும், பிறர் நிரவ்யத்தை அபகரிப்பவனும், கோள் சொல்பவனும் ஆவான்.

கடகத்தில் சனி இருந்து செவ்வாய் பார்க்க வாத வியாதி உண்டாகும். துஷ்டனுகவும், அதிக அலைச்சல் உடையவனுகவும், வெறுக்கத்தக்கவனுகவும் ஆவான்.

செவ்வாய் தசமத்தில் இருந்து சனி பார்க்க அல்லது சேர்ந்தால் வாத பிடிதனுவான்.

அஷ்டமத்தில் சனியும், மூன்றில் செவ்வாயுமிருக்க பிளவை உண்டாகும்.

குஜன் வீட்டில் சூர்யனிருந்து சுக்ரன் பார்க்க குஷ்டரோகியாகவும், துஷ்டையான பத்னியையுடையவனுகவும், சத்ருக்கள் உள்ளவனுகவும் ஆவான்.

சிம்ஹத்தில் சூர்யன் இருந்து சுக்ரன் பார்க்க குஷ்டரோகியாகவும், தயையில்லாதவனுகவும், லஜ்ஜை யில்லாதவனுகவுமிருப்பான்.

அஷ்டமத்தில் சூர்யனிருந்து செவ்வாய் பார்க்க புரையோடக் கூடிய பிளவை உண்டாகும்.

லக்னத்தில் குருவும், சப்தமத்தில் செவ்வாயும் இருந்தால் உன்மாத ரோகம் உண்டாகும்.

கேந்த்ரம் அல்லது த்ரிகோணத்தில் செவ்வாயும், விரயத்தில் சூர்ய சந்த்ரர்கள் ராகுவோடு கூடி இருந்தாலும், சூர்ய சந்த்ரர்கள் லக்ன கோணங்கள் அல்லது கேந்த்ரத்தில் குருவுடன் இருந்தாலும், சந்த்ர புதர்கள் கேதுவோடு கூடி சுபவீக்ஷணம் இல்லாதிருந்தாலும் ப்ரான்தனுவான்.

பாக்யாதிபன் விரயஸ்தானத்தில் விரயஸ்தானுதிபனுடன் கூடி இருந்து தன ஸ்தானத்தில் க்ரூர க்ரஹம் இருக்க பந்துக்களோடு சேருவான்.

அஷ்டமத்தில் சனி ராகுகளும், த்ரிகோணத்தில் சுபர்கள் பலசாலியாகவுமிருந்தால் அபஸ்மார ரோகம் உண்டாகும்.

சூர்யன், செவ்வாய்கள் பலசாலிகளாய் த்ரிகோணத்தில் இருக்க ரோகமுண்டாகும்.

லக்னத்தில் சூரியனும், 7-ல் செவ்வாயும் இருந்தாலும், சனி சப்தமத்திலும், செவ்வாய் த்ரிகோணத்திலுமிருந்தாலும், தனுர் ராசியின் முதல் பாகம் ஜன்ம லக்னமாகி லக்ன த்ரிகோணங்களில் சூர்ய சந்த்ரர்களும், மூன்றுமிடத்தில் கேதுவுடன் குரு இருந்தாலும், புத சந்த்ரர்கள் சுபஸாம்சம் பெறுமல் சுக்ரனுடன் கேந்த்ரத்தில் இருந்தாலும், 5, 8, 12-களில் பாபியோடு கூடிய சந்த்ரன் ராகுவோடு இருந்தாலும் உன்மாத ரோகம் உண்டாகும். கலகம் செய்வதில் ஆசை உள்ளவனுவான்.

லக்னத்தில் குரு சூர்யனுடன் கூடி இருப்பது, செவ்வாய் 7-ல் இருப்பது, சனி லக்னத்தில் இருப்பது, செவ்வாய் 5, 7, 9-களில் இருப்பது, லக்னத்தில், புதன், சனி அஸ்தங்கதர்களாக இருப்பது, க்ஷீண சந்த்ரன், சனி இவர்கள் 12-ல் இருப்பது, பாபியோடு கூடிய க்ஷீண சந்த்ரன் 1, 8, 9, 12-ல் இருப்பது, சப்தமத்தில் பாபி யிருந்து குளிகன் 2, 3, 6, 8, 12-ல் இருப்பது—இவைகள் உன்மாத ரோகத்தை விளைவிப்பனவாகும்.

லக்னத்தில் சனி ராகுவோடு கூடி இருந்தாலும், சந்த்ரன் லக்னத்தில் இருந்து 6-ம் அதிபனுடு சேர்ந்திருந்தாலும், பார்க்கப்பட்டாலும், 6-8-12-க்குடையவனுடன் கூடினுலும், சந்த்ரன் லக்னத்தில் இருந்து ராகுவோடு சேர்ந்தாலும், சனி, செவ்வாய் அல்லது 6-க்குடையவனுல் பார்க்கப்பட்டாலும், ராகு புதனுடன் லக்னத்தில் இருந்து 6-ம் அதிபனின் பார்வை, சேர்க்கை அடைந்து குரு 6, 8, 12-ல் இருந்தாலும், சுக்ர சந்த்ரர்கள் கேந்த்ரம் 5, 8-இவைகளில் பாபரோடு கூடி இருந்தாலும், சப்தமத்தில் ராகுவோடு சுக்ரனிருந்து செவ்வாய், சனி அல்லது 6-ம் அதிபனுல் பார்க்கப்பட்டாலும், குரு 6, 8, 12-க்கு அதிபனுல் பார்க்கப் பெற்று 6, 8, 12-ல் இருந்தாலும், லக்னம், சந்த்ரன், புதன், குளிகன் இவர்களுக்கு 6, 8, 12-க்கதிபதிகள் குரு ஸம்பந்தம் பெற்றாலும், செவ்வாய் 6, 8, 12-க்கு அதிபதியான குருவோடு விரயத்தில் இருந்தாலும், லக்னுதிபன் 6, 8, 12-ல் வலித்து, செவ்வாய், சனி, ராகுவுடன் சேர்ந்தாலும், அஷ்டமாதிபன் சப்தமத்தில் இருந்து ராகு, செவ்வாய், சனிகளுடன்கூடி நீச க்ரஹ ஸம்பந்தம் பெற்றாலும், விரயத்தில் சுக்ரன் மீசன் அல்லது அஸ்

தங்கதனுக இருந்தாலும், சனி த்ரிகோணத்திலிருந்தாலும், அஷ்டமத்தில் சூர்யன், செவ்வாய், சனி இருந்தாலும் உன்மாத ரோகமேற்படும்.

புத க்ஷேத்ரத்தில் சூர்யன் வலித்து குருவின் பார்வை பெற அநேக ஆயுதங்களால் காயப்படுத்தப்பட்ட முகத்தையுடையவனுகவும், நல்ல சரீரத்தை உடையவனுகவும், ராஜ தூதனுகவும், அன்ய தேசத்தில் இருப்பவனுகவும் ஆவதுடன் உன்மாதமும் ஏற்படலாம்.

பாதக ஸ்தானநிபன், ரோக ஸ்தானநிபன் இவர்கள் சத்ரு க்ஷேத்ரத்தில் இருந்தாலும், பாதக க்ஷேத்ரத்தில் இருந்தாலும்; பாதகாநிபதிக்கு சத்ரு ஸ்தானநிபன் சேர்க்கை, பார்வை, பரிவர்த்தனம் இருந்தாலும், பாதக ஸ்தானநிபன், ரோகஸ்தானநிபன் இருவர் சேர்ந்தாலும், ஒருவருக்கொருவர் பார்வை பெற்றாலும், லக்னம் சர ராசியாய் ரோகாநிபதியால் பார்க்கப் பெற்ற குஜன் லாப ஸ்தானத்தில் இருந்தாலும், லக்னம் ஸ்திர ராசியாய், ரோக ஸ்தானநிபன் பார்வை பெற்ற குஜன் பாக்யத்தில் இருந்தாலும், லக்னம் உபய ராசியாய், ரோகாநிபனுடைய பார்வை பெற்ற குஜன் சப்தமத்திலிருந்தாலும், குஜன் ஹோரா காதனுடன் கூடினாலும், லக்ன கேந்த்ரத்திலிருந்தாலும், ரோகாநிபன் லக்னத்திலிருந்தாலும், ரோகாநிபன் லக்ன கர்ம ஸ்தானங்களில் அஸ்தங்கதனுய் இருந்தாலும், குஜ விக்ஷணம், ஸம்பந்தம் லக்னத்திற்கேற்பட்டாலும், கேது 4, 1, 10 இடங்களில் இருந்து மாந்தி கேந்த்ரத்தில் இருந்தாலும், லக்னம் சர ராசியாய் குஜன் ஸம்பந்தம்–த்ருஷ்டி பெற்றாலும், லக்னம் ஸ்திர ராசியாகி கேது வலித்து 7-ல் சனியும், லக்னநிபன் அஷ்டமத்தில் இருந்தாலும், லக்னம் உபயமாய், லக்னநிபன் சப்தமத்திலிருந்து, செவ்வாய் லக்னத்தில் இருந்தாலும், சுகாநிபன் ராகுவுடன்கூடி சப்தமத்தில் இருந்து லக்னநிபன் துர்பலன் ஆனாலும், அபிசார ப்ரயோகம் செய்யப்படுபவனுவான்.

பாதக ஸ்தானங்கள் :—சர ராசிக்கு 11, ஸ்திரத்திற்கு 9, உபயத்திற்கு 7, 22-வது நிரேக்காணங்கள்.

பாதக க்ரஹங்கள் :— மேற்குறிப்பிட்ட ஸ்தானங்களுக்கு அதிபதிகள் குளிகனுடன் சேர்ந்த ராசியதிபன்.

லக்னம் குஜ விக்ஷணம் பெற்று ரோகாநிபன் தசமத்தில் இருந்தாலும், செவ்வாய் லக்னாதிபனோடு சேர்ந்து லக்னத்தில் இருந்தாலும், லக்னாதிபன் கேந்த்ரத்தில் இருந்தாலும் புத்ரனால் அபிசாரம் செய்யப்படுபவனுவான.

பாதக ஸ்தானாதிபன் சப்தமத்தில் இருந்து ராகு லக்னத்திலும், லக்னாதிபதி சத்ரு ஸ்தானாதிபதிகள் பாதக ஸ்தானம் ஏறினால் அவர்களுடைய தசையில் எதிரிகளால் அபிசாரம் செய்யப்படுவான். (அபிசாரம் என்பது பில்லி, சூன்யம், ஏவல் முதலியவைகளைக் குறிக்கும்.)

ஆபோக்லிமம் சென்ற ஜன்மத்தையும், லக்ன கேந்த்ரம் தொடக்கும் ஜன்மத்தையும், பணபரம் வரும் ஜன்மத்தையும் குறிக்கக்கூடுமாதலால் அவைகளில் வலிக்கும் க்ரஹங்கள், அதிபதிகள், ஸம்பந்தம் பெற்றவர்கள், பாதகாநிபதி, ரோகஸ்தானாதிபன் லக்னாதிபன், பாதக க்ரஹங்கள் இவர்களைக் கொண்டு பலன்களை ஊஹிக்க வேண்டும்.

சூரியன் சனி க்ஷேத்ரத்தில் வலித்து செவ்வாய் பார்க்க அங்க ஹீனம், சத்ருபிடை, சண்டையில் அடிபட்ட சரீரம் இவைகளை உடையவனுவான்.

புண்கள் ஏற்படும் ஸ்தானங்களைச் சொல்லும்போது ஸூர்யனால் தலையிலும், சந்த்ரனால் முகத்திலும், செவ்வாயினால் கழுத்திலும், புதனால் நாபியிலும், குருவினால் மூக்கிலும், சுக்ரனால் கண்ணிலும், சனியினால் காலிலும், ராகு கேதுக்களினால் வயிற்றிலும் சொல்ல வேண்டும்.

லக்னாதிபன் குஜ க்ஷேத்ரத்திலோ, புத க்ஷேத்ரத்திலோ இருந்தாலும், புதனால் பார்க்கப் பெற்றாலும் முக ரோகமேற்படும்.

ஜன்ம லக்ன ஜன்ம ராச்யதிபர்கள் குஜ புதர்களாய் சந்த்ரனுடன் சேர்ந்தாலும், ராகு சனி இவர்களோடு கூடினாலும் குஷ்ட ரோகத்தைச் சொல்லலாம்.

லக்னாதிபனை விட்டு ராகுவும், சந்த்ரனும் லக்னத்தில் இருந்தால் வெள்ளைக் குஷ்டத்தையும், சனி இருக்க கருப்புக் குஷ்டத்தையும், செவ்வாய் இருக்க செங்குஷ்டத்தையும் சொல்ல

வேண்டும். இவ்விதமே மற்ற க்ரஹங்களோக்கொண்டும் நிறங்களோ ஊஹிக்கலாம்.

சுகாஷ்டமாதிபதிகள் லக்னத்தில் சூர்யனுடன் கூடி வலித்தால் ஜ்வரம், அரிப்பு, வைசூரி முதலியவைகளும், செவ்வாயுடன் கூடி வலித்தால் சிரங்கு, கட்டி, ஆயுதப் புண் முதலியவைகளும், புதனுடன் கூடினால் பித்த ரோகமுமுண்டாகும். குருவுடன் கூட ரோகமில்லாமை ஏற்படும். சுக்ரன் கூடினால் ஸ்த்ரீகளால் ஹிம்சிக்கப்படுபவனுகவும், சனி கூடினால் வாயுவினால் பீடிக்கப்படுபவனுகவும் அல்லது சண்டாளனால் அபாயமும், ராகு கூடினால் நாபியில் ஹிம்சையும், கேது கூடினால் வீட்டில் பயமும் ஏற்படும், சந்த்ரன்கூட ஜலம், ச்லேஷ்மம் முதலியவற்றால் கஷ்டம் ஏற்படும். இதுமாதிரியே மற்ற பாவங்களுக்கு காரகர்களின் சேர்க்கை முதலியவற்றின் மூலம் கண்டு கொளவது.

சத்ரு ஸ்தானத்தில் பாபி இருந்தாலும், சத்ரு ஸ்தானாதிபன் பாபியுடன் கூடினாலும் சத்ரு நாசம், கஜாத்யைச்வர்யம், க்ருஹம், உத்யானவனம் முதலிய ஐச்வர்யங்களோ அடையலாம். ராகுவோடு கூடினால் சதா ரோகியாவான்.

6-ல் செவ்வாய் வலித்து, 6-க்குடையவன் அஷ்டமத்தில் இருக்க 18-வது வயதில் ஜ்வரமேற்படும்.

ரோகஸ்தானத்தில் குருவிருக்க குருவினுடைய க்ஷேத்ரத்தில் சந்த்ரன் இருந்தால், 19, 22-வயதுகளில் குஷ்டமேற்படும்.

ரோக ஸ்தானத்தில் ராகு இருந்து கேந்த்ரத்தில் குளிகனும், லக்னாதிபன் அஷ்டமத்திலுமிருந்தால் 26 வயதில் க்ஷயரோக மேற்படும்.

விரயாதிபன் ரோக ஸ்தானத்திலும், ரோகாதிபன் விரயத்திலும் இருக்க 29 வயதில் குன்ம ரோகமேற்படும்.

சந்த்ரன் ரோக ஸ்தானத்தில் இருந்து சனியுடன்கூட 55-வயதில் செங்குஷ்டமேற்படும்.

லக்னாதிபன் லக்னத்திலிருந்து சனி ரோக ஸ்தானத்தில் இருந்தால் 59 வயதில் வாத ரோகமேற்படும்.

அஷ்டமாதிபன் ரோக ஸ்தானத்திலிருந்து விரயாதிபன் லக்னத்திலும், சந்த்ரன் ரோக ஸ்தானாதிபனுடன் கூடினால் 8 வருஷத்தில் மிருகத்தினிடமிருந்து பயம் ஏற்படும்.

ரோக ஸ்தானம் அல்லது அஷ்டமத்தில் ராகு வலித்து அதற்கு அஷ்டமத்தில் சனியும் இருக்க ஒரு வருஷத்தில் அக்னி பயமும், மூன்று வருஷத்தில் பக்ஷி தோஷமும் ஏற்படும்.

சூர்யன் 6, 8-ல் இருந்து, அவ்விரண்டிற்குள் ஒன்றில் சந்த்ரனிருக்க, 5 அல்லது 9 வயதில் ஜலத்திலிருந்து பயம் ஏற்படும்.

அஷ்டமத்தில் சனி இருந்து, சப்தமத்தில் செவ்வாய் இருக்க 18 அல்லது 30 வயதில் ஸ்போடகம் முதலியன ஏற்படும்.

லக்னாம்சத்திற்கு அஷ்டமாம்சத்தில் ராகு இருந்து அந்த அம்சம் அஷ்டம ஸ்தானத்திற்கு த்ரிகோணமானால் 18 அல்லது 22 வயதில் மேக ரோகம், க்ஷயம் முதலியவை உண்டாகும்.

லாபாதிபன் சத்ரு ஸ்தானத்திலும், சத்ரு ஸ்தானாதிபன் லாபத்திலும் இருக்க 31, 41 வயதுகளில் சத்ருமூலம் தன நாசம் ஏற்படும்.

பஞ்சமாதிபன் சத்ரு ஸ்தானத்தில் இருந்து சத்ரு ஸ்தானாதிபன் ரூருவோடு கூடி விரயாதிபன் லக்னத்தில் இருக்க புத்ரன் சத்ருவாவான்.

லக்னாதிபன் சத்ரு ஸ்தானத்திலும், சத்ரு ஸ்தானாதிபன் சத்ரு ஸ்தானத்திலும் இருக்க 10, 19 வயதுகளில் தாயிடமிருந்து பயமுண்டாகும்.

ரோகாதிபன் ரோகஸ்தானத்தில் இருக்க ஞாதி சத்ருவாவான்.

லக்னாதிபனுக்கு சுக லாபாதிபதிகள் சத்ருக்களானால் தாயிடம் விரோதமேற்படும்.

சுகாதிபன் பாப ஸம்பந்தம், த்ருஷ்டி பெற்றாலும், சுகாதிபன் லக்னாதிபனுக்கு சத்ரு ஸ்தானத்திலோ, சுகாதிபன் தன் சத்ரு ஸ்தானத்திலோ இருந்தாலும் தாயிடம் வைரம் ஏற்படும்.

லக்ன தசமாதிபர்களுக்கு சத்ருவான க்ரஹம் தசமஸ்தானத்தில் இருந்தாலும், லக்னம், லக்னாதிபதி இவர்களுக்கு 6-ல் இருந்தாலும் தகப்பன் விரோதியாவான்.

பஞ்சமாதிபன் 6, 8, 12-ல் இருந்து, லக்னாதிபதி த்ருஷ்டி ஏற்பட்டால் தகப்பனை துவேஷிப்பவனாக ஆவான். ராகு, செவ்வாய்களின் பார்வை பெற்றாலும் தகப்பனை தூஷிப்பவனாக ஆவான்.

பஞ்சமாதிபன் லக்னாதிபதி இருவரும் சத்ருக்களாகி, பஞ்சமாதிபன் சத்ரு ஸ்தானத்தில் இருந்து லக்னாதிபதி பார்வை பெற புத்ரன் சத்ரு ஆவான்.

லக்னாதிபதி சப்தமாதிபன் இருவரும் சத்ருவாக இருப்பின் ஸ்திரீ சத்ருவாக இருப்பாள்.

செவ்வாய் விருச்சிகத்தில் இருந்து குரு சுக்ரர்கள் பார்வை இல்லாமல் இருந்தாலும் சனி-கேது 7-ல் இருந்தாலும் புரை ஓடுவதால் ஹிம்ஸை உண்டாகும்.

லக்னாதிபன், செவ்வாய் இவர்கள் 6, 8, 12-ல் இருக்க சிங்கு, ஆயுதப் புண் உண்டாகும்.

சத்ரு ஸ்தானம் அல்லது விரய ஸ்தானத்தில் செவ்வாய், சனி சேர்ந்திருந்து சுப விஷயம் இல்லாவிடில் கண்டமாலை உண்டாகும்.

விரயத்தில் குரு அல்லது சந்த்ரன், லாபம் அல்லது சத்ரு ஸ்தானத்தில் புதன் இருந்தால் குதத்தில் புண் உண்டாகும்.

குஜன் லக்னத்திலும், குரு அல்லது சுக்ரன் சப்தமத்திலும் இருக்க தலையில் வடு ஏற்படும்.

லக்னாதிபதியும் சந்த்ரனும் 6, 8, 12-ல் இருந்தாலும், லக்னாதிபதி சத்ரு ஸ்தானாதிபன், சந்த்ரன் இவர்கள் 6, 8, 12-ல் இருந்தாலும், ஜலகண்டம் ஏற்படும்.

லக்னாதிபனும் புதனும் 6, 8, 12-ல் இருக்க பித்தரோகியாவான்.

குருவும், லக்னாதிபனும் 6, 8, 12-ல் இருக்க அஜீர்ண ரோகியாவான்.

சுக்ரனும், லக்னாதிபனும் 6, 8, 12-ல் இருக்க ஷயரோகியாவான்.

லக்னம், சூர்யன், செவ்வாய்களால் பார்க்கப்பட சுவாசம், காசம் முதலியன ஏற்படும்.

லக்னாதிபனோடு சனி-ராகு-கேதுக்களுள் ஒருவர் சேர்ந்து 6, 8, 12-களில் இருந்தால் நிருடன், சண்டாளன் இவர்கள் மூலமாக வியாதி ஏற்படும்.

செவ்வாயும் சனியும் 6 லிருந்து ராகு சூர்யர்களால் பார்க்கப்பட லக்னாதிபன் துர்பலனால் நீர்க்க ரோகியாவான்.

குரு-ராகு லக்னத்தில் இருக்க தந்த ரோகியாவான்.

சனி, செவ்வாய், சூரியன், சந்த்ரன் க்ரமமாக 8, 6, 2, 12-இவைகளில் இருக்க மன்மத ரோகியாவான்.

லக்னாதிபன் புதன் அல்லது செவ்வாயின் க்ஷேத்ரத்திலிருந்து சத்ருவால் பார்க்கப் பெற இடுப்புக்குக் கீழில் அல்லது குதத்திற்கு சமீபத்தில் ரோகம் உண்டாகும்.

6-ம் இடத்தில் ராகு அல்லது கேது இருக்க பல்லில் அல்லது உதட்டில் ரோகமுண்டாகும்.

கடகாம்சம் அல்லது விருச்சிகாம்சத்தில் சந்த்ரனிருந்து பாபியுடன் கூட ரஹஸ்ய ஸ்தானத்தில் ரோகம் உண்டாகும்.

புதன், தனாதிபதி இவர்கள் ராகு, கேதுக்களோடு கூடி, 6-ல் இருந்து ராகு வலிக்கும் விட்டிற்கு அதிபதியுடன் கூட கன்னத்தில் ரோகமுண்டாகும்.

த்ருதீயாதிபன் புதனுடன் கூடினாலும், பாபி 3-லிருந்தாலும், குளிகன் 3-லிருந்தாலும் கழுத்தில் வியாதி உண்டாகும்.

மூன்றாமிடத்தில் ப்ரேதபுரீசாம்சத்தில் செவ்வாய் இருந்தாலும், 3-ல் சனியும், குளிகனுமிருந்து, சுபர் பார்வையில்லாமலிருந்தாலும், த்ருதீயாதிபன் க்ரூர ஷஷ்ட்யம்சத்திலிருந்தாலும், லக்னாம்சத்தில் கேது இருந்து பாபியால் பார்க்கப்பட்டாலும் கர்ண ரோகமேற்படுகிறது.

ரோக ஸ்தானாதிபனும், புதனும் செவ்வாயோடுகூட லிங்கத்தில் ரோகமுண்டாகும்.

சத்ரு ஸ்தானத்தில் சந்த்ரனும், அஷ்டமத்தில் சனியும், விரயத்தில் பாபியும், பாபாம்சத்தில் லக்னாதிபனுமிருந்தால் பினஸ ரோகமுண்டாகும்.

அஷ்டமத்தில் சந்த்ரன் சனியோடுகூடி துர்பலனுகவுமானால் பிசாச பிடை ஏற்படும். ராகுவும், சனியும் லக்னத்திலிருந்தாலும் பிசாச பிடை ஏற்படும்.

அஷ்டமாதிபன் ராகு, கேதுக்களுடன்கூட சதுர்த்திக ஜ்வரமுண்டாகும்.

விரயாதிபன் துர்பலனுய், க்ரூர ராசியம்சம், நீசாம்சம் இவைகளிலிருக்க தேகத்தில் வைகல்யமுண்டாகும். விரயத்தில் பாபியும், விரயாதிபன் பாபியுடன் கூடியிருந்தாலும் தேக வைகல்யமுண்டாகும்.

சூரியன் வலிக்குமிடத்திற்கு 2-ல் சனியும், 10-ல் சந்த்ரனும், 7-ல் செவ்வாயும் இருக்க தேக வைகல்யம் ஏற்படுகிறது.

சந்த்ர சூர்யர்கள் ஒருவருக்கொருவர் பரிவர்த்தனம் பெற்றால் சரீர சோஷம் ஏற்படுகிறது.

சந்த்ரன், கடகம், விருச்சிகம், கும்பம் இந்த அம்சங்களிலிருந்து சனி சேர்ந்தால் குன்ம ரோகியாவான்.

லக்னாம்சத்திற்கு பஞ்சமத்தில் கேது இருந்தாலும், 9-ல் சனி அல்லது ராகு இருந்தாலும் க்ரஹணீ ரோகமுண்டாகிறது.

ராகு, புதன் இவர்கள் லக்னத்திலும், செவ்வாய், சனிகள் சப்தமத்திலுமிருந்தால் அதிஸார ரோகம் ஏற்படுகிறது.

செவ்வாய் 9-ல் இருக்க நெருப்பு, விஷம் இவைகளால் பிடை யேற்படும்.

சந்த்ரன் பாபியுடன்கூடி அல்லது பாப வீக்ஷணம் பெற்று லக்னத்திலிருக்க சீதரோக மேற்படும்.

சூரியன், சுக்ரன், சனி இவர்கள் பஞ்சமத்திலிருந்தாலும், சூரியன் லக்னத்திலும், செவ்வாய் 7-ல் இருந்தாலும், செவ்வாய் 10-ல் இருந்து சனி ஸம்பந்தம் அல்லது திருஷ்டி பெற்றாலும் ப்ரமேஹியாவான்.

சனி, செவ்வாய், சுக்ரன், சந்த்ரன் இவர்கள் க்ரூரரால் பிடிக்கப்பட்டு ஜல ராசியை அடைந்தால் ஜல குஷ்டரோக மேற்படுகிறது.

லக்னாதிபன், சந்த்ரன், செவ்வாய், ராகு கேதுகளுடன் கூட ஒரிடத்தில் வெள்ளைக் குஷ்டமுண்டாகும்.

சந்த்ரன், செவ்வாய், சனிகள் மேஷம் அல்லது வ்ருஷபத்திலிருக்க வெண்குஷ்டமேற்படுகிறது.

சனி விரயத்திலும், செவ்வாய் தன ஸ்தானத்திலுமிருந்து லக்னத்தில் சந்த்ரனும், சூர்யன் சப்தமத்திலுமிருக்க வெண் குஷ்டமுண்டாகும்.

மிதுன, கடக, மீனாம்சங்களில் சந்த்ரன் வலித்து, சனி, குஜ ஸம்பந்தம் அல்லது வீக்ஷணம் ஏற்பட குஷ்ட ரோகமுடையவனுவான்.

கடகம், விருச்சிகம், விருஷபம், மகரம் இவைகளில் இருக்கும் பாபிகளால் லக்னத்ரிகோணம் பார்க்கப்பட்டாலும், சேர்ந்தாலும் குஷ்டரோகியாவான்.

புதன், சந்த்ரன், லக்னாதிபதி ராகு கேதுக்களுடன் கூடினாலும், ரோகஸ்தானாதிபன் சனியோடு சேர்ந்து லக்னத்தில் இருந்தாலும், சூர்யன், ரோகாதிபன் லக்னத்தில் இருந்தாலும், லக்னத்தில் செவ்வாயும், அஷ்டமத்தில் லக்னாதிபனும், 4-ல் சனியும் இருந்தாலும் குஷ்ட ரோகியாவான்.

சனி 6-லும், செவ்வாய் 12-லுமிருந்தாலும், சிம்மத்தில் சந்த்ரன் வலித்து பாபியால் பிடிக்கப்பட்டாலும், சிம்மம் கேந்த்ரம் அல்லது த்ரிகோணமாக ஆகி அங்கு சுக்ரன் வலித்து 3-ல் குரு இருந்தாலும் சூல ரோகியாவான்.

லக்னத்தில் சனியும், 7-ல் செவ்வாயுமிருந்தாலும், அஷ்டமாதிபன் க்ரூரனுய் சப்தமத்திலிருந்து சுபவீக்ஷணம் இல்லாவிடினும், சப்தமத்தில் சனியும், செவ்வாய் விருச்சிகத்திலும், லக்னத்தில் சூரியனுமிருந்தாலும், விரயத்தில் சனி யிருந்து லக்னாதிபனும், செவ்வாயும் ஸப்தமத்திலிருந்தாலும், விரயத்தில்

சனி இருந்து செவ்வாய் அல்லது லக்னாதிபதியால் பார்க்கப்பட்டாலும் அர்சோ ரோகம் உண்டாகிறது.

சப்தமாதிபன் அல்லது லக்னாதிபனை சந்த்ரன் இருந்து க்ரஹணல் மட்டில் பார்க்கப் பெற்றாலும், சந்த்ர லக்னாதிபதியும் ரோகஸ்தானாதிபனும் க்ரூரன் பார்வை மட்டும் பெற்றாலும், சனி செவ்வாய்களுக்கு மத்தியில் சந்த்ரனிருந்து அந்த ஸ்தானம், மகரம் அல்லது கடகமானாலும் ப்லீஹ ரோகியாவான்.

7, 8, 1, 2 ஸ்தானங்கள் செவ்வாய் சூர்யர்களால் பார்க்கப் பெற்றாலும், 1, 12, 6, 7-களில் குளிகன், செவ்வாய்களிருந்து சூர்யன் பார்வை பெற்றாலும், சிரங்கு, அக்னி, துஷ்டன் இவர்களால் பயமேற்படும.

குளிகனும் செவ்வாயும் 2 அல்லது 8-ல் இருந்தாலும், தனாதிபனால் பார்க்கப்பட்டாலும நரி முதலியவைகளிடமிருந்து பயம் ஏற்படும்.

லக்ன ஷஷ்டாதிபர்கள் குருவுடன் சேர யானையால் பயமேற்படும்.

லக்ன ஷஷ்டாதிபர்கள் சந்த்ரனோடு சேர்ந்திருக்க குதிரை மூலம் பயம் ஏற்படும்.

ராகு சந்த்ரன் சூர்யன் இவர்கள் வீட்டில் இருந்து சந்த்ர சூர்யர்களுடன் சேர பசுவிடமிருந்து பயம் ஏற்படும்.

செவ்வாய் தசமத்தில் இருக்க க்ஷேத்ர சிந்தையும், 6, 8, 12 களில் இருக்க ஸௌக்ய சிந்தையும். குரு 6, 8, 12-களில் இருக்க வாஹனபரணாதி சிந்தையும். சந்த்ரன அல்லது சுக்ரன் 6, 8, 12ல் இருக்க சத்ரசாமராதி சிந்தையும், சப்தமத்தில் அல்லது த்ரிகோணத்தில் குரு இருக்க புத்ர சிந்தையும். பஞ்சமத்தில் புதன் இருக்க புத்தி சிந்தையும். சூரியன் த்ரிகோணத்தில் இருக்க தகப்பன், பந்து முதலியவர்கள் சிந்தையும். பஞ்சமம் அல்லது சப்தமத்தில் சுக்ரன் இருக்க யாத்ரா சிந்தையும் ஏற்படும்.

தசமத்தில் அல்லது நவமத்தில் செவ்வாய் இருந்து பாப வீக்ஷணம் பெற மாதுலனில்லை.

புதனுக்கு 6-ல் பாபர் இருந்தால் மாதுல சுகம் இல்லை.

லக்னாதிபன், செவ்வாய், புதன் இவர்கள் சேர்ந்து சுகஸ்தானத்திலோ, விரய ஸ்தானத்திலோ இருந்தாலும் அல்லது அவர்கள் ரோகஸ்தானத்தைப் பார்த்தாலும் அபான ரோகம் அல்லது பவித்ர ரோகம் உண்டாகும் எனச் சொல்லப்படுகிறது.

சந்த்ரன், புதன், லக்னாதிபன் இவர்கள் ராகு அல்லது கேதுவோடு சேர்ந்து சுபனால் பார்க்கப்பட்டால் அவருக்குரிய ஸ்தானத்தில் வேசியின் சேர்க்கை மூலம் ஏற்படும் குஷ்டம் உண்டாகுமெனச் சொல்லப்படுகிறது. லக்னாதிபதியை விட்டு பாக்கி உள்ளவர்கள் லக்னத்தில் இருந்தாலும் குஷ்டமேற்படுகிறது.

காரகன பாவாதிபதிகளோக்கொண்டு பித்ரு முதலியவர்களுக்கும் பலன்களை ஊஹிக்கலாம்.

9-ல் சனியும், 3-ல் குருவும் 8 அல்லது 12-ல் சூர்யன் அல்லது சந்த்ரனிருந்தாலும் செவ்வாயோடு கூடிய குரு அஷ்டமத்தில் இருந்தாலும் கை வெட்டப்படும் என்று சொல்லப்படுகிறது.

சந்த்ரன் 6, 8, 12-ல் இருந்து லக்னாதிபதி வீக்ஷணம் பெற்று சனி மாந்திகளுடன் கூடினாலும், சனி நீசனுகவோ, சத்ரு க்ஷேத்ரத்தை அடைந்தோ, அஸ்தங்கதனுகவோ, அம்சத்திலிருந்து பாப வீக்ஷண ஸம்பந்தம் பெற்றாலும, க்ரூர ஷஷ்ட்யம்சம் பெற்றாலும், அஷ்டமாதிபன் வஸிக்கும் த்ரேக்காணாதிபன், சனி, ராகு குளிகர்களுடன் கூடினாலும் அல்லது அஷ்டமாதிபன் வஸிக்கும் த்ரேக்காணாதிபன் சனியாகி, ராகு, குளிகர்களுடன் கூடினாலும் அஷ்டமாதிபனிருக்கும் த்ரேக்காணம்பாபத்ரேக்காணம் அல்லது சர்ப்ப த்ரேக்காணமாக ஆனாலும் துர்மரணம் ஏற்படும்.

6, 8-க்கதிபன் அல்லது செவ்வாய் மூன்றும் அதிபனுடன் கூடி சனி, ராகு, மாந்திகளும் சேர்ந்து க்ரூராம்சம் பெற்றாலும் சனி வஸிக்கும் த்ரேக்காணாதிபதி குஜ ஸம்பந்தம், குஜ வீக்ஷணம் குஜ க்ஷேத்ரம், குஜ நவாம்சம் பெற்றாலும் யுத்தத்தில் மரணமேற்படும்.

சூரியன், செவ்வாய் ஒருவர்க்கொருவர் பார்வை பெற்று ஒருவர்க்கொருவர் க்ஷேத்ரம் அம்சங்களில் பரிவர்த்தனை பெற்றிருந்தாலும், துவந்த்வ யுத்தத்தில் மரணமேற்படும்.

சத்ரு ஸ்தானாதிபன் சுபக்ரஹ விக்ஷணம் பெற்றாலும் சுப சம்பந்தம் பெற்றாலும் சுப க்ஷேத்ரத்தில் இருந்தாலும், லக்னாதி பணக் காட்டிலும் துர்பலனாய் சுபசம்பந்தம் பெற்றாலும் சத்ருக்கள் நிக்ரஹிதர்களாவார்கள்.

6 ல் புதனிருந்து சுபரால் பார்க்கப் பெற்று அந்த ஸ்தானாதிபன் சுப ஸம்பந்தம் பெற்று பாப க்ரஹ மத்தியில் இருந்தாலும், குரு புதன் இவர்கள் 6-ல் இருந்தாலும் அவ்விருவர்களின் க்ஷேத்ரம் 6-வது விடானாலும், குரு புதர்கள் ம்ருத்யுஸ்தானங்களிலிருந்தாலும் ஊறுகாயில் பிரியமுடையவனாக இருப்பன்.

குரு அல்லது சுக்ரன் 6-க்கதிபனாகி கோபுராதி அம்சத்திலிருந்தாலும், புதனுடன் சேர்ந்த சுக்ரன் சுப த்ருஷ்டியுடன் 6-ல் இருந்தாலும் சுபாம்சத்திலிருந்து பலவானானாலும் எப்போதும் நித்திரையில் இஷ்டப்படுபவனாவான்.

புதன் பாபரால் பார்க்கப்பட்டாலும் புதனுடன் சேர்ந்த சுக்ரன் 6-ல் இருந்தாலும், 6-ல் சுக்ரன் வலித்து செவ்வாய் பார்த்தாலும், செவ்வாய் சுக்ரனுடன் சேர்ந்தாலும், சூர்யனால் பார்க்கப்பட்டாலும் புளிப்பில் பிரீதி உள்ளவன்.

6-க்குடையவன் செவ்வாயோடு சேர்ந்து ராகு அல்லது கேது வால் பார்க்கப்பட்டாலும், குஜ க்ஷேத்ரத்தில் இருந்தாலும், 6-ம் இடம் ராகு அல்லது கேதுவுடன் கூடி பாப வீக்ஷணம் பெற்றாலும், 6-க்குடையவன் க்ரூராம்சத்தில் இருந்தாலும் ஏமாற்றுதல் இருடு முதலியவைகளை உடையவனாகிறான்.

ஏழாவது பாவம்

துவாதச பாவங்களுள் முக்யமானது 7 வது பாவம் என்பது எல்லோரும் அறிந்தது. இந்த பாவத்தைக் கவனிக்கையில், மிகவும் ஆழ்ந்து பார்க்க வேண்டியது அவச்யமாகும். இந்த பாவத்திற்கு இரு பக்கங்களிலும் 6. 8 பாவங்கள் சொல்லப்பட்டிருப்பது இவ் வேழாம் பாவத்தில் தகுதியின்றி நடப்பவரின் கீழ்மையைத் தெரிவிப்பதற்காகவே என்று ஆன்றோர்கள் கூறுவர்கள். இந்த பாவ பலன்களில் சிற்சில இடங்களில் இரண்டித் திருந்தாலும், ஒன்றிற்கொன்று விரோதமாகத் தோன்றினாலும்,

அதை அசட்டை செய்யாமல் கூர்ந்து கவனிப்பது அவசியமாகும்.

மேஷம் :—7-ம் இடமானால் பத்னி கோடியவளாகவும், சபலியாகவும், பாப காரியத்தில் ஆசையுள்ளவளாகவும், துஷ்டர்களால் புகழப்படுபவளாகவும், நிரவ்யத்தில் ஆசை உள்ளவளாகவும், இரப்பவளாகவும் ஆவாள்.

ரிஷபம் :—7-ம் இடமானால் களத்ரம் ஒற்றதாகவும், ம்ருதுவாக பேசுகிறதாகவும், வணக்கமுடையதாகவும், சாந்த குணமுடையதாகவும், பதிவ்ரதையாகவும், நற்குணமுள்ளதாகவும், மிகவும் பயமுடையதாகவும், தேவப்ராம்மணர்களிடத்தில் பக்தி உடையதாகவுமிருக்கும்.

மிதுனம் :—7-வதானால் பார்யை பணத்துடன் கூடியவள், நன்னடத்தையுள்ளவள், அழகுள்ளவள், குணசாலி, அடக்கமாகவுள்ளவள்.

கடகம் :—7-வதானால் பத்னி மனதிற்கு உகந்தவள், ஐச்வர்யத்தோடு கூடியவள், குணமுள்ளவள், தோஷமில்லாதவள், சாதாரணமாக இருப்பவள்.

சிம்மம் :—7-வதாகில் மனைவி க்ரூர ஸ்வபாவம் உடையவள், சபலி, அதிகம் தைர்யமுள்ளவள், தாழ்ந்த வேஷமுடையவள், அயல் விடு செல்வதில் ஆசையுள்ளவள். நல்ல குரல் இல்லாதவள், சொற்ப புத்ரன் உள்ளவள், இளைத்த சரீரம் உள்ளவள்.

கன்னி :—7-வதானால் பத்னி அழகிய சரீரம் உடையவள், புத்ரனில்லாதவள், போகம், ஐச்வர்யம், பாக்யம், பயம் இவைகளுடன் கூடியவள், பிரியமாகப் பேசுபவள், உண்மையையே பேசுபவள், சாமர்த்தியம் உள்ளவள்.

துலாம் :—7-வதானால் களத்ரம் குணமற்ற அவயவங்களை உடையவள், பற்பல தர்மம் செய்வதிலும், புண்ய காரியங்களிலும் பற்றுள்ளவள், அதிக சந்தானமுள்ளவள், பருத்த சரீரமுள்ளவள்.

விருச்சிகம் :—7-வது பாவமானால் பார்யை க்ருபணை, காரியங்களில் ஒரே விதமுயற்சி உடையவள், பிரீதி இல்லாதவள், தெளர்பாக்யத்துடன் கூடினவள்.

தனுசு :—7-வது இடமானல் பத்னி புருஷன் மாதிரி இருப்பவள், நிஷ்டுரம் சொல்பவள். பக்தி நியாயமில்லாதவள், சாந்தி இல்லாதவள். புத்தியற்றவள்.

மகரம் :—7-ம் இடமாகில் மனைவி வெளியில் தர்ம காரியம் செய்பவள் போல் நடிப்பவள், நல்ல பெண்ணைப் பெறுபவள், பதிவ்ரதை, நற்குணத்துடன் கூடியவள், ஸௌபாக்யம் பொருந்தியவள்.

கும்பம் :—7-வதாயின் பார்யை ஸ்திர சித்தமுள்ளவள், புருஷனுக்குப் பணிவிடை செய்வதில் பிரியம் உள்ளவள். அதிகம் தர்மத்தில் ஆசையுள்ளவளைபோல் நடிப்பவள், எல்லா சுகங்களோடும் கூடியவள்.

மீனம் :—7-ஆனல் களத்ரம் விகாரமானதாகவும், கெட்ட புத்ரனை உடையதாகவும் துர்புத்தியுடையதாகவும், தன் தர்மம் ஒழுக்கம், பிரீதி இவைகள் இல்லாததாகவும், சண்டை செய்வதில் பிரியமுடையதாகவும் இருக்கும்.

லக்னாதி பாவங்களில் பாவாதிபன் வசிக்கும் பலன்.

லக்னத்தில் இருந்தால் எல்லா போகத்துடனும் கூடியவன், துக்கமற்றவன், அதிக களத்ரமுள்ளவன், சுகமில்லாதவன், சத்ருவை ஒழிப்பவன், ஸ்திரீகளிடம் ஆசையுள்ளவன்.

2ம் இடத்தில் இருந்தால் ஸ்திரீ துஷ்டை ஆவாள், பித்த தோஷமுடையவள், சுகமில்லாதவள், புருஷன் சொல் கேளாதவள், புத்தியுள்ளவள், தனக்கு புத்ரன் இல்லாதவள்.

மூன்றாமிடத்தில் ஸப்தமாதிபன் இருக்க, தான் பலசாலி, பந்துக்களிடம் பிரியம் உள்ளவன். பாப க்ரஹங்கள் சேர்ந்திருக்க ஸ்திரீ மைத்துனன் பக்ஷத்தில் சேர்ந்தவள், காமம் கொண்டவன்.

நான்காமிடத்தில் இருந்தால் பலமற்றவன், தகப்பனுக்கு விரோதி, துஷ்டன் இவனது பத்னி நன்முகக் காப்பாற்றப்படுபவள், புருஷனுக்கடங்கியவள், அழகுள்ளவன்.

ஐந்தாம் பாவத்தில் இருந்தால் புத்ரனைத் தருபவன், அழகு, ஸௌக்யம், ஸுகம் இவைகளைத் தருபவன், துஷ்டர்களை நாசம் செய்பவன், துஷ்டர்களைக்கொண்டு மனைவியைக் காப்பாற்றுபவன்.

ஆறாமிடத்தில் இருந்தால் அதிகம் வயதில்லாதவன், கஷ்டங்களை அனுபவிப்பவன், அழகிய சரீரத்தை உடையவன், ஸ்திரீயிடத்தில் பிரீதி உடையவன், கடியரோகமுள்ளவன்.

ஏழில் இருந்தால் வியாதி அற்றவன், தீர்க்காயுளை உடையவன், மெதுவாகப் பேசுபவன், சாந்தன், கீர்த்திமான். பிறர் மனை புகுபவன்.

எட்டில் இருக்க மனைவியோடு கலகம் செய்பவன், பார்யா சுகமில்லாதவன். மனைவியுடன் பிரியமாக இருந்தால் பார்யா மரணம் ஏற்படும்.

ஒன்பதில் இருக்க நல்லொழுக்கமுடையவன். (க்ரூர க்ரஹங்களுடன் சேர நபும்ஸகன், தபஸ் சித்திகளில் பிரஸித்தி உடையவன். மனைவியுடன் விரோதத்தைச் செய்பவன்.

பத்தில் இருந்தால் ராஜ விரோதமான காரியத்தைச் செய்பவன், துஷ்ட வார்த்தை பேசுபவன், கபடி, சபலன். மாமனூர் துஷ்டர்களை பிருத்யர்களாக்குபவன், வஞ்சகன், ஸ்வஜனங்களுக்கும், ஸ்திரீகளுக்கும் பிரியத்தைச் செய்யாதவன்.

பதினொன்றில் இருந்தால் மனைவி புருஷனுக்குப் பிரியத்தைச் செய்பவள், பதிவ்ரதை, புருஷனுக்கு அடங்கி நடப்பவள், நல்லொழுக்கமுள்ளவள். தன் தகப்பனிடம் வித்யையை அப்யஸிப்பவள்.

பன்னிரண்டில் இருந்தால் தன் மனைவி, வீடு, சுற்றம் இவைகள் இல்லாதவன் ஆவான். மனைவி சஞ்சலியாயும், கெட்ட வார்த்தை பேசுபவளாகவும், ஊதாரியாயும், க்ருஹத்தில் இருப்பவைகளையே திருடுபவளாயும் ஆவாள்.

பார்வையின் பலன்.

சூரியன் பார்க்க சிற்றின்ப சுகம் இல்லாததுடன் பத்னி விநாசமும் ஏற்படும். சத்ரு பீடையையுடையவன். வெண்மையான சரீரத்தை உடையவனுவான்.

சந்திரன் பார்க்க பத்னி மிக அழகுள்ளவளாயும், குணசாலியாயும், துர்நடத்தை உள்ளவளாயும், பிறரிடத்தில் தோஷம் சொல்வதில் சமர்த்தையாயுமிருப்பாள்.

செவ்வாய் பார்க்க களத்ர நாசம். மூத்ராசயத்தில் வியாதி பிடை. ஸ்திரீமூலம் விவாதம். பிரயாணத்தில் பயம்.

புதன் பார்க்க பார்யா சுகம். அழகான சரீரம். வித்யை, தனம், தான்யம் இவைகளை உடையவனுவான்.

குரு பார்க்க களத்ர சுகம். புத்ர சுகம். தொழிலில் லாபம். கீர்த்திமான். தனவான். தர்மவான்.

சுக்ரன் பார்க்க களத்ர புத்ர சுகங்கள். புத்ர வ்ருத்தி. (சுபர் சேர) வியாபார ஸௌக்யம், தெளிந்த புத்தி.

சனி பார்க்க களத்ர நாசம். பாண்டு ரோகம். ஜ்வரம், அதி சாரம், வயிற்றுக் கடுப்பு இவைகள் உண்டாகிறது.

ராகு பார்க்க காம விருத்தி, தான் சொன்னதையே சொல்லு பவன். அவன் தசையில் பத்னி மரணமும் ஏற்படலாம்.

களத்ரகாரகன், ஸ்தானாதிபன், சந்த்ரன், புதன், சுக்ரன் இவர்களில் பலிஷ்டர்களைக்கொண்டு பலத்தை ஊஹிக்கலாம்.

லக்னத்துக்கும் சந்த்ரனுக்கும் 5. 7-மிடங்களில் சுபஸ்தானாதி பர்களின் சேர்க்கை அல்லது பார்வை பெற்றிருந்தால் களத்ர ஸித்தி. மாறினால் ஸித்தியில்லை.

சுக்ரனுக்கு 4, 8, 12-மிடங்களில் பாபிகள் இருந்தாலும், சுக்ரன் பாபிகளின் நடுவில் இருந்தாலும். சுக்ரனை பாபிகள் பார்த்தாலும், சுக்ரனோடு பாபிகள் சேர்ந்தாலும் களத்ர தோஷம்.

7-மிடத்துக்குடையவன் 5-மிடத்திலிருந்தால் களத்ர தோஷமாவது, புத்ர தோஷமாவது உண்டு. 5மிடத்தாதிபதியாவது, எட்டாமிடத்தாதிபதியாவது 7-மிடத்திலிருக்க களத்ர தோஷம். க்ஷீண சந்த்ரன் 5-மிடத்திலும். 1, 7. 12-இடங்களில் பாபிகளும் இருந்தால் களத்ர புத்ர தோஷம். 7-மிடத்தில் சூரியனுவது ராகு வாவது இருந்தால் ஸ்திரீ ஸங்கத்தினால் தன நாசம் சொல்லவும்.

விருஷபம் லக்னமாய் விருச்சிகத்தில் சுக்ரனிருந்தாலும், விருச்சிகம் லக்னமாய் விருஷபத்தில் புதனிருந்தாலும், கடகம் லக்னமாய் மகரத்தில் குருவிருந்தாலும், கன்னி லக்னமாய் மீனத்தில் சனியாவது செவ்வாயாவது இருந்தாலும் களத்ர தோஷம் சொல்லவும்.

மகரம் லக்னமாய் கடகத்தில் சனியாவது அங்காரகனுவது இருந்தால் நல்ல பதிவ்ரதையான களத்ர ப்ராப்தி சொல்லவும்.

7-மிடத்துக்குடையவன் பாபிகளுடன் சேர்ந்தாலும், பாபி களின் பார்வை பெற்றாலும், பாபிகளின நடுவில் இருந்தாலும், நீசனுனாலும், சத்ரு க்ஷேத்ரத்தை அடைந்தாலும், அஸ்தங்கதனு னாலும் களத்ர தோஷம் சொல்லவும்.

சுக்ரன் பாபிகளுடன் கூடி 5. 7. 9-மிடங்களில் இருந்தால் அழகழிந்த களத்ரம் சொல்லவும்.

சுக்ரன், செவ்வாய், சனி ஆகிய இருவர்களுடைய வர்க்கங் களில் இருந்தால் பரஸ்திரீ ரதனுவான்.

சந்த்ரன், சுக்ரன் இவர்களுக்கு 7-மிடத்தில் செவ்வாய், சனி இவர்கள் இருந்தால், களத்ர தோஷம் அல்லது புத்ர தோஷம் சொல்லவும்.

4-மிடத்திலாவது, 7-மிடத்திலாவது, 11-மிடத்திலாவது 2 க்ரஹங்களிருந்தால் இரண்டு களத்ரம் சொல்லவும்.

7-மிடத்துக்குடையவன், சுக்ரன் இவர்கள் இரட்டை ராசி களிலிருந்தால் இரு களத்ரம் சொல்லவும்

7-மிடத்துக்கு அதிபதி, சுக்ரன் இவர்களோடு கூடிய க்ர ஹங்களைக்கொண்டு களத்ர ஸங்க்யை சொல்லவும்.

7-மிடத்திலிருக்கிற பாபக்ரஹங்களினால் களத்ர நாசத்தையும் சுபக்ரஹங்களினால் களத்ர ஸித்தியையும் சொல்லவும்.

7-மிடத்துக்குடையவன் சுபனாய் பலவானாக இருந்தால் பார்யை பதிவ்ரதையாயும், புத்ரவதியாயும் ஸித்திப்பாள். பாபி யாகிலும் அவனுக்கு ஸப்தமம் ஆகி விடாதில் சுபனுவான். 6. 8, 12-மிடத்தாதிபர்களல்லாத சுபக்ரஹங்கள் 7-மிடத்திலிருந்தால் களத்ர ஸௌக்யம் உண்டு.

2, 7-மிடங்களில் பாபிகளிருந்தாலும், பாபிகள் பார்த்தாலும் களத்ர தோஷம். க்ரூரத்ருஷ்டியிருந்தால் விசேஷித்து களத்ர

தோஷம். ஸ்த்ரீ ஜாதகத்தில் 7, 8-மிடங்களைக் கொண்டு பர்த்ரு தோஷம் பார்க்க வேண்டும். புருஷ ஜாதகத்துக்கு 2, 7-மிடங்களில் சுபர்களும், பெண் ஜாதகத்துக்கு 7, 8-மிடங்களில் சுபர்களும் இருப்பு, பார்வைகளையுடையவர்களாகில் தம்பதிகள் பாக்ய சாலிகளாயிருப்பார்கள்.

சந்த்ரனும் சனியும் 7-மிடத்திலிருந்தால் முதலில் ஒரு புருஷனுக்கு கிச்சிதையானவள் பார்யையாவாள். அல்லது களத்ர தோஷம் அல்லது புத்ர தோஷம் சொல்லவும்.

7-மிடத்தில் பாபிகள் நீச சத்துரு க்ஷேத்ரம் அடைந்திருக்கில் தம்பதிகளுக்கே தோஷமுண்டு. 2, 8-மிடங்களில் பாபிகள் நீச சத்துரு க்ஷேத்ரம் அடைந்தாலும் தம்பதிகளுக்கே தோஷம் சொல்லவும்.

7-மிட்டம், 7-மிடத்துக்கு அதிபன், சுக்கிரன் இவர்கள் பெண் ராசியிலிருந்தாலும் அல்லது 5-மிடத்துக்குடையவன் 7-மிடத்துக்குடையவன் இவர்கள் அஸ்தங்கதர்களாகாமல் பலமுள்ளவர்களாயிருக்க களத்ர புத்ர ஸௌக்கியமுண்டு.

2, 7-மிடங்களும் அவற்றுக்குடையவர்களும் குருவால் பார்க்கப்பட்டு அல்லது குருவோடு சேர்ந்து 1, 4, 5, 7, 9, 10-மிடங்களிலிருந்தாலும், 7-மிடத்துக்குடையவனுக்கு 2, 7, 11-மிடங்களில் சுபக்ரஹங்கள் இருந்தாலும் சுக களத்ரம், ஸுபுத்ர யோகம் உண்டென்றறிக.

7-ஆமிடத்துக்குடையவனிருக்கும் ராசி, 7-ஆமிடத்து ராசி, சுக்கிரனிருக்கும் ராசி இந்த ராசிகளுக்குரிய திசையே களத்ரமிருக்கும் திசை.

ஸப்தமாதிபதி அல்லது சுக்ரன் லக்னாதிபதி இருக்கும் ராசியில் அல்லது அவ்விராசியின் நிரிகோண ராசியில் வரும்போது விவாஹ காலம்.

களத்ர ஸ்தானத்திலிருப்பவர், அல்லது களத்ர ஸ்தர்னாதிபதி, அல்லது களத்ர ஸ்தானத்தைப் பார்ப்பவர் இவர்களுடைய தசா புக்தி காலங்களிலாவது கோசர ரீதியாய் லக்னாதிபதி களத்ர ஸ்தானத்துக்கு வரும் போதாவது விவாஹம் நடக்கும்.

கோசர ரீதியாய் ஜன்ம ராசியை குரு பார்க்கிலும் விவாஹம் நடக்கும்.

களத்ராதிபதி இருக்கிற வீட்டுக்குடையவனும், களத்ராதிபதி இருக்கும் நவாம்சாதிபனும், சுக்கிரனும், சந்திரனுமாகிய நால்வர்களில் பலவான் எவனை அவனுடைய தசையிலாவது 7-ஆமிடத்துக்குடையவனிருக்கும் ராசிக்கு த்ரிகோண ராசியில் கோசர ரீதியாய் குரு வரும் காலத்திலாவது விவாஹம் சித்திக்கும்.

களத்ராதிபன் நீச வீடு, பகை வீடு அடைதல், அஸ்தங்கதனாதல், பாபி ஸம்பந்தம் பெறுதல், களத்ரஸ்தானம் பாபி ஸம்பந்தம் பெறுதல்- இவைகள் களத்ரத்துக்கு ஹானிகரம்.

களத்ராதிபன் உச்ச வீடு, ஆட்சி வீடு, மித்ர வீடு அடைதல், பூர்ண கிரணம் அடைதல், சுப ஸம்பந்தம் பெறுதல், களத்ரஸ்தானம் சுப ஸம்பந்தம் பெறுதல் இவைகள் களத்ரத்துக்கு லக்ஷணகரமாகும்.

பர்த்ரு பாவம்.

புருஷ ஜாதகத்துக்கிருப்பது போல் பெண் ஜாதகத்துக்கும் நிரகங்கள் அமைந்திருப்பின் களத்ர தோஷமென்பதை பர்த்ரு தோஷமென்றும் களத்ர ஸௌக்யமென்பதை பர்த்ரு ஸௌக்கியமென்றும், களத்ரமிருக்கும் திக்கை பர்த்தாவிருக்கும் திக்கென்றும் களத்ர ப்ராப்தி காலத்தை பர்த்ரு ப்ராப்தி காலமென்றும் புத்திமான்கள் அறியவும்.

ஸப்தமாதிபன் சுபருடன் கூடி அல்லது பார்க்கப் பெற்றால் பூர்ணமான பலனை அடைவான், ஸௌபாக்யவான், குணவான், ப்ரபு, மனோவிமூலம் அதிக பாக்யத்தை யடைவான், அதிக தான்யத்தை உடையவன்.

சப்தமாதிபன் உச்சம், வக்ரம் இவைகளை அடைந்தால் அதிக தான்யங்களை அடைகிறான். சத்ரு நீசன், அஸ்தங்கதன் ஆனால் பலனும் விரோதமாக நடக்கும்.

சப்தமாதிபன் சுப ராசியிலிருந்து, சுக்ரன் தன் உச்ச ஸ்வ க்ஷேத்ரத்தில் இருக்க 5 அல்லது 9 வயதில் விவாகம் பெரும்பாலும் நடக்கும்.

புதன் 7-ல் இருந்து 7-க்குடையவன் சுக்ரனுடன் சேர 7 அல்லது 11 வயதில் பெரும்பாலும் கல்யாணம் நடக்கும்.

சுக்ரன் தனத்தில் இருந்து, 7-க்குடையவன் லாபத்தில் இருக்க 10 அல்லது 14 வயதில் பெரும்பாலும் விவாகம் ஆகலாம்.

லக்ன கேந்த்ரத்தில் சுக்ரனும், லக்னாதிபன் 7-லும் இருக்க 11 வயதில் விவாகம் நடக்கலாம்.

சுக்ரன லக்ன கேந்த்ரத்திலும், அவனுக்கு ஸப்தமத்தில் சனியும் இருக்க 11 வயதில் விவாகமாகும்.

சந்த்ரனுக்கு சப்தமத்தில் சுக்ரனும், அவனுக்கு சப்தமத்தில் சனியும் இருக்க 18 வயதில் விவாகம் நடக்கும்.

1, 7-க்கு அதிபர்கள் ஒருவரிடத்தில் மற்றொருவர் மாறி யிருக்க 14 அல்லது 21 வயதில் விவாகம் நடக்கும்.

தன ஸ்தானத்தில் சுக்ரனும், தனாதிபனும் செவ்வாயோடு சேர 22 அல்லது 27 வயதில் விவாகமாகும்.

லக்னாதிபன 7-வது அம்சத்திலும், 7-க்குடையவன் விரயத் திலும் இருக்க 23, 26 வயதுகளில் விவாகம் ஆகும்.

சப்தமாதிபன அஷ்டமாம்சத்திலும், சுக்ரன் லக்னாம்சத்திலு மிருக்க 29 அல்லது 25 வயதுகளில் விவாகமாகும்.

பஞ்சமத்தில் சுக்ரனும் 4-ல் ராகுவும் இருக்க 24, 31 வயது களில் விவாகமாகும்.

சுக்ரன் த்ருதீயத்தில் இருக்க நவமத்தில் சப்தமாதிபன இருந்தால் 27 அல்லது 30 வயதுகளில் விவாகம் நடக்கும்.

குரு 7-ல் இருந்து சுப வீக்ஷணம் பெற்றாலும், குரு 7-ல் உச்சனானாலும் 12 வயதில் விவாகம் நடக்கும்.

குறிப்பு:—தற்கால அனுபவத்திற்கு ஒவ்வாத வயதுகளில் விவாகம் முத லியன கூறப்பதாகச் சொன்ன இடங்களில் அந்தந்த வயதுகளே கல்யாண ப்ராப்தி ஆகக் கூடிய வயதிற்கு மேல் வைத்துக் கொள்வது உசிதம்.

சுக்ரன் சப்தமாதிபனுடன் ஸ்வக்ஷேத்ரம் அல்லது இரண்டில் வஸித்து, லக்னாதிபன் பார்வை பெற பால்யத்தில் விவாகம் நடக்கும்.

குடும்ப லக்னாதிபதிகள் கேந்த்ரத்தில் இருந்து சுபவீக்ஷணம் பெற்று கேந்த்ரம் தசமமாக ஆனால் 36 வயதில் கடனால் ஹிம்சை அடைவான.

3, 6, 10, 11-களில் சுக்ரனிருக்க கல்யாணத்திற்குப் பிறகு ஐச்வர்யமுண்டாகும். நீசனுகவோ, சத்ரு க்ஷேத்ரத்திலோ சுக்ர னிருந்தால், கல்யாணத்திற்குப் பிறகு கஷ்டமுண்டாகும்.

7-மிடம் சுப க்ரஹங்களோடு சேர்ந்தோ, சுப க்ஷேத்ரமாகவோ சுபக்ரஹ வீக்ஷணம் பெற்றோ இருக்க ஸ்த்ரீ ப்ராப்தி ஏற்படுகிறது. விரோதமாக இருந்தால் பலனும் விரோதமாகும். சுபர், பாபர் கலந்திருக்க அகாலத்தில் வியர்த்தமான வார்த்தை பேசுபவன் ஆவான.

ஜன்ம காலத்தில் செவ்வாய், சனிகள் ஷட் வர்க்கத்தில் களத்ர பாவத்தில் இருந்தாலும், பார்க்கப்பட்டாலும் வியபசாரி ஆகிறாள். (ஜாரனுகிறான்.)

களத்ர ஷட்வர்கம் சுக்ர ஸம்பந்தம் பெற்றாலும், வீக்ஷணம் பெற்றாலும் அனேக களத்ரங்களுண்டு. சுப க்ரஹங்கள் சுக்ர வீக்ஷணம் பெற்றாலும் சுப வீக்ஷணம் பெற்றாலும் அதிக களத் ரங்களேற்படும்.

7-ம் இடத்தில் செவ்வாயிருக்க குலத்தைக் கெடுப்பவனுகவும், அனேக ஸ்த்ரீகளிடத்தில் பற்றுள்ளவனுகவும், சூரியன் இருந் தால் ஸம்ஸாரியாகவும், அனேக தாரங்களுள்ளவனுகவுமாவான்.

2, 6, 7-க்கதிபர்கள் சுக்ரனோடு அல்லது பாபர்களுடன் சேர்ந்து லக்னத்தில் இருந்தாலும் அதிக தாரமேற்படும்.

லக்ன ஷஷ்டாதிபர்கள் பாப ஸம்பந்தம் பெற்றால் பரஸ்த்ரீ ரத்னுகவும், துர்மார்க்கத்தில் செல்பவனுகவுமாவான். சுபர் பார்க்க அப்படி ஆகமாட்டான்.

லக்னநிபன் 2, 6-க்கநிபர்கள் பாபர்களோடு கூடினலும், சப்தமத்தில் பாபியோடுகூட சனி இருந்தாலும், சப்தமாநிபன் சுடும்ப ஸ்தானத்தில் இருந்தாலும் பரஸ்திரீ ரதனுவான்.

சப்தமாநிபன் ராகு அல்லது கேதுவுடன் சேர்ந்து பாபர் பார்க்க விபசார யோகம்.

தசமாநிபன், தனநிபன், சப்தமாநிபன் இவர்கள் தசமத்தில் இருந்தால் ஜாரன் ஆவான். இந்த க்ரஹங்களில் ஒரு க்ரஹம் நான்கில் இருக்க பரஸ்திரீ கமனம் செய்வான்.

பஞ்சம சப்தமாநிபர்கள் பலிஷ்டர்களாய் சத்ரு ஸ்தானநிபன் பார்வை, சேர்க்கை அடைந்தால் புத்ரன் இல்லாதவனுவான்.

சத்ரு ஸ்தானநிபனுடன் கூடிய தார– புத்ராநிபர்கள் சுபர் களின் பார்வை பேற்றல் ஜாதகனுடைய களத்ரத்திற்கு அன்ய புருஷன் மூலம் புத்ரனுண்டாகும்.

சப்தமாநிபன் பாபியோடு சேர்ந்து புத்ர ஸ்தானத்தில் இருந்து குஜ விகூணம் பெற்றல் சோரனுக்கே பிள்ளை பிறக்கும்.

க்ஷீண சந்த்ரன் பாபியோடு கூட 7-ல் இருந்தாலும், அன்ய ஸ்திரீகளிடம் செல்பவனுவான்.

சப்தமாநிபன் பாபியோடு சேர்ந்து லக்னத்தில் இருந்தால், அன்ய ஸ்திரீயிடம் ஆசையுடையவனுகவும், அவளிடம் தவருன வழியில் செல்பவனுகவுமாவான்.

லக்னநிபனுக்கு தசமத்தில் புதன் பலவானுக இருந்து சப்த மாநிபனுக்கு 3-ல் சந்த்ரன் இருந்தாலும், தன விரயாநிபதிகள் 3-ல் இருந்து குருவால் அல்லது பாக்யாநிபனுல் பார்க்கப்பட் டாலும், 7-க்குடையவன் கேந்த்ரம், த்ரிகோணம், ஸ்வக்ஷேத்ரம், உச்ச க்ஷேத்ரம், மித்ர க்ஷேத்ரம், தன் ஷட்வர்க்கம் – இவற்றில் இருந்தாலும், கர்மாநிபனுடு சேர்ந்தாலும், தராநிபன், லாபா நிபன் இவர்கள் சேர்ந்திருந்தாலும், ஒருவர்க்கொருவர் பார்த் தாலும், பலசாலிகளாய் த்ரிகோணத்தில் இருந்தாலும் அதிக ஸ்திரீகளோடு கூடியவனுவான்.

தராநிபன் வலிக்கும் நவாம்சாதனுடன் சேர்ந்த நவாம்ச நாதன் சுபரோடு சேர்ந்து பாராவதாநி அம்சத்தில் இருந்து பலிஷ்டர்களானுல் 100 ஸ்திரீகளோடு கூடியவன் ஆவான்.

தனநிபனிருக்கும் ராசியநிபனுடன் சேர்ந்த ஷஷ்ட்யம்ச நாதன் பலம் பெற்று மிருத்வம்சம் அல்லது கோபுராம்சத்தில் இருக்க 200 ஸ்திரீகளுடன் கூடியவன் ஆவான்.

சப்தம பாவ காரகன் வலிக்கும் அம்சநாதனுடன் சேர்ந்த ராசியநிபன் வலிக்கும் அம்சாநிபன் கேந்த்ரத்தில் இருந்து ம்ருத்வம்சம் அல்லது கோபுராம்சத்திலிருந்தால் 300 ஸ்திரீ களோடு கூடுவான்.

7-க்குடையவன் பாபியுடன் கூடினலும், 7-க்குடையவனும், களத்ர காரகனும், 7-க்குடையவன் வலிக்கும் அம்சாநிபனும் பாபி யானுலும், 7-க்குடையவன் க்ரூர ஷஷ்ட்யம்சத்தில் இருந்தாலும், 7-க்குடையவன களத்ர காரகன் இவர்கள் நீசாம்சத்தில் அல்லது நீச ஸ்தானவாசம் பெற்று, சுபவீக்ஷணம் இல்லாமலிருந்தாலும் கெட்ட ஸ்திரீயை உடையவனுவான்.

சப்தமாநிபன் சுபருடன் கூடி அல்லது பார்வை பெற்று சுப க்ரஹ மத்யில் இருந்தாலும், சப்தமாநிபன், காரகன் இவர்கள் சுப ராசி அல்லது சுபாம்சம் பெற்று தசமாநிபனும் பலவானு னலும், சுக்ரன் தன் உச்சம், மித்ர க்ஷேத்ரம், தன் ஷட் வர்க்கம், கோபுராதி அம்சம், ம்ருத்வம்சம் இவைகளிலிருந்தாலும், சந்த்ரன் அல்லது சுக்ரன் சப்தமாநிபனுடி சுபகவாம்சம், சுப க்ரஹ ஸம்பந்தம், மித்ர க்ஷேத்ரம், உச்ச க்ஷேத்ரம், ம்ருத்வம்சம் இவைகளே அடைந்தாலும் ஸத்களத்ர மேற்படும்.

7-க்குடையவன் லக்னநிபனைக் காட்டிலும், பலம் பெற்று, பாபியுடன் சேர்ந்து அல்லது நீசாம்சம் பெற்று அல்லது நீச ருடன் சேர்ந்திருந்தால் தாழ்ந்த ஜாதியில் களத்ரம் கிடைக்கும்.

லக்னநிபன் சப்தமாநிபனைக் காட்டிலும் துர்பலனுய் பாப சம்பந்தம் நீசசுவாம்சம் வைசேஷிகாம்சம் பரமோச்ச பாகம் இவைகளே யடைந்தால் உயர்ந்த ஜாதியில் களத்ரம் கிடைக்கும்.

களத்ராநிபதி, களத்ர காரகன் ஜல ராசி (கடகம், மகரம், மீனம், பூர்ண ஜல ராசிகள், வ்ருஷபம், தனுஸ், கும்பம், பாதி ஜல ராசிகள், துலாம், விருச்சிகம், மேஷம், கால் ஜல ராசிகள்) யிலிருந்தாலும், ஜல ராசி சப்தம பாவமாயி பூர்ண சந்த்ரன் பார்வை பெற்றாலும், ஜலராசியான சப்தமத்தில் சந்த்ரன் வலித்து,

ஜலராசியில் வலிக்கும் சுக்ரன் வீக்ஷணம் பெற்றாலும், ஜலராசியில் வலிக்கும் புதன் பார்வை பெற்றாலும், குஹ்ய ப்ரதேசம் ஈரமுள்ளதாக இருக்கும்.

சுக்ரன் பரமோச்சாம்சம், ஜலராசி இவைகளை அடைந்து சூரியனுடன் சேர்ந்திருந்தால் போகத்திற்குப் பிறகு குஹ்யம் ஈரமுள்ளதாக ஆகும்.

பூர்ண சந்த்ரன் சப்தமத்தில் இருந்தாலும், ஜலராசி அம்சத்தில் இருந்தாலும், ஜலராசியில் வலிக்கும் குரு வீக்ஷணம் பெற்றாலும் குஹ்ய ப்ரதேசம் எப்போதும் ஈரப்புள்ளதாக இருக்கும்.

சப்தமாதிபன் சுஷ்க ராசியிலிருந்தாலும் (மிதுனம், சிம்மம், கன்னி சுஷ்க ராசிகள்) சப்தமஸ்தானம் சுஷ்க ராசியானாலும், சுஷ்க க்ரஹங்களுடன் (சூர்யன், செவ்வாய், சனி சுஷ்க க்ரஹங்கள்) சேர்ந்தாலும், சப்தம ஸ்தானம், பாப க்ஷேத்ரம், பாப மத்யம் இவைகளை அடைந்தாலும், சப்தமாதிபன் அப்படி இருந்தாலும்; பாப ஸ்ஹாவலம், வீக்ஷணம் பெற்றாலும் குஹ்ய ப்ரதேசம் உலர்ந்து இருக்கும்.

7-ம் இடத்தில் சூர்யன் இருக்க மலடியின் சேர்க்கையும், சந்த்ரனிருக்க சந்த்ரன் வலிக்கும் ராசிக்குச் சமமான ஸ்திரீயின் சேர்க்கையும், செவ்வாய் இருக்க ரஜஸ்வலை மலடிகளின் சேர்க்கையும், புதன இருக்க வேசி, தாழ்ந்தவள், வியாபார ஸ்திரீகளின் சேர்க்கையும், குரு இருக்க ப்ராம்மணியின் சேர்க்கையும், சுக்ரன் இருக்க கர்ப்பிணியின் சேர்க்கையும், சனி, ராகுகள் இருக்கத் தாழ்ந்தவள், ரஜஸ்வலைகள் சேர்க்கையும், ராகு தனித்திருக்க கர்ப்பிணி சேர்க்கையும், சனி தனித்திருக்க கறுத்த நிறமுடையவள், கூனிகளின் சேர்க்கையுமேற்படும்.

சப்தமத்தில் சூர்யன் சந்த்ரனுடன் கூடி இருக்க தாமரை வடிவமாகவும், செவ்வாயுடன் கூட பனம்பழம் போன்றதாகவும், புதனுடன் கூட உயர்ந்து பருத்ததாகவும், குரு சந்த்ரர்களுடன் கூட தேங்காய் போன்றதாகவும், சனி ராகுகளுடன் கூட விகாரமாகவும் ஸ்தனங்கள் இருக்கும். சப்தமஸ்தானம் சுபருடன்கூட இரு ஸ்தனங்களும் மிருதுவாக இருக்கும்.

7-ம் இடம் ஜலராசியானால் குஹ்யம் சீதளமாக இருக்கும். ஜலக்ரஹங்கள் வலித்தாலும் (சந்த்ரன், சுக்ரன் ஜலக்ரஹங்கள். குரு புதர்கள் வலிக்கும் இடத்தை அனுசரித்து ஜலக்ரஹங்களாகும்.) ஜலராசியில் ஜலக்ரஹமிருந்தாலும், யோனி சீதளமாக இருக்கும். சுஷ்க ராசியாயின் இவ்விதம் இருக்காது.

சப்தமாதிபன் பாபியுடன் கூட யோகி ரோகமுண்டாகும்.

1, 4, 7, 10 ஸ்தானங்கள் பாப ஸம்பந்தம் பெற்றாலும், 4 கேந்த்ரங்களும் பாப வீக்ஷணம் பெற்றாலும், நாற்கால் பிராணியோடு சேருவான்.

7-க்கு உடையவன் குரு அல்லது சுக்ரனாக இருந்தால், அவனுடைய ஸ்திரீயின் குஹ்யம் சமமாகவும், அழகாகவும் இருக்கும்.

ஸப்தம ஸ்தானம் புத சந்த்ர சனிகள் வீடானாலும், சப்தமாதிபன் சனி, சந்த்ர, புதர்கள் நடுவில் இருந்தாலும், அல்குல் சிறியதாக இருக்கும்.

சப்தமாதிபன் ஜலராசியில் இருந்தாலும் பாவ காரகன் ஜலராசியில் இருந்தாலும், 7-க்குடையவன் பாபியுடன் கூடினாலும் அல்குல் நீண்டதாக இருக்கும்.

சூர்யன் அல்லது செவ்வாய், சனி, குளிகர்களுடன் கூடினாலும், பாபாம்சம் ஏறினாலும் குஹ்யம் நீண்டு இருக்கும்.

குரு அல்லது சுக்ரன், சப்தமாதிபர்களாய் சுபாம்சம் பெற்றால் ஸ்திரீயின் அல்குல் சமமாயிருக்கும். பாப மத்யத்திலிருந்தாலுமப்படியே.

7-க்கு உடையவன் சனி, சந்த்ரன், புதன் இவர்களில் ஒருவராகி தனியாக 7-ல் இருந்தால் குறி குறுகியதாக இருக்கும். ஸ்திரீ விஷயத்திலும் இவ்விதமே கவனிப்பது.

சுக்ரன செவ்வாய் அம்சத்திலிருந்தாலும், செவ்வாய் விட்டிலிருந்தாலும், ஸம்பந்தம் அல்லது பார்வை பெற்றாலும், சப்தமாதிபன், சுக்ர ஸம்பந்தம், வீக்ஷணம் அல்லது சுக்ர க்ஷேத்ரத்தை அடைந்தாலும், தசமாதிபன், சனியோடு சேர்ந்து அல்லது குஜ

க்ஷேத்ரம் சுக்ர ஸம்பந்தம் பெற்றாலும், பக சும்பனம் செய்பவனு வான். இவ்விதமே சுகாதிபன், குடும்பாதிபன் இவைகளைக் கொண்டும் சொல்லவும்.

சுக்ரன், சனி அல்லது செவ்வாய் அம்சத்தில், சனி அல்லது செவ்வாயின் விட்டில் அல்லது சனி அல்லது செவ்வாய் விக்ஷி ணம், சனி அல்லது செவ்வாய் ஸம்பந்தம் பெற்றால் சின சும்பனம் செய்வான்.

7-ல் பாபியும், 7-க்கதிபன் பாபியுடன் கூடியும் லக்னாதிபன் துர்பலனுகவுமானால் களத்ரத்தை தூஷிப்பவனுவான்.

லக்னாதிபனுக்கு சப்தமாதிபன் சத்ருவானால், பத்னியைச் சேர்ந்தவன் சத்ருவாவான். அப்படியே மித்ரனால் மித்ரனுவான்.

சப்தமாதிபனுக்கு லக்னாதிபன் சத்ருவானால், பத்னியைச் சேர்ந்தவர் எதிரியாகவும் மற்றவர் ஸ்நேகிதர்களாகவும் ஆவார் கள். சமீக்ஷனால் சமமாகச் சொல்லலாம். ஸ்திரீ நல்லொ ழுக்கமுள்ளவளாகவும், புருஷனிடத்தில் பக்தி உள்ளவளாகவும் ஆவாள்.

பாப க்ரஹம் 7 அல்லது 12-ல் வலித்து க்ஷீண சந்த்ரன் 5-லுமிருக்க பத்னிக்கு வச்யமாவதுடன் ஸ்வஜாதிக்கு விரோதம் செய்வான்.

சப்தமத்தில் சனி செவ்வாய்களிருந்து சப்தமாதிபன் செவ்வாய் விட்டில் இருக்க அவனுடைய பத்னி வேசியாகவோ, நிருட்டுத்தனமாக பரபுருஷடன் சேருபவளாகவோ ஆவாள்.

சப்தமாதிபன் உச்ச க்ஷேத்ரத்திலும், சப்தமத்தில் சுபனும், லக்னாதிபன் பலவானுகவுமிருந்தால் ஸத்களத்ரமுள்ளவனுக ஆகிறான்.

7-க்கு உடையவன் சத்ரு க்ஷேத்ரம், நீச ராசி இவைகளில் இருந்தாலும், மூடனுக அல்லது பாப வீக்ஷணம் பெற்று 7-மிடம் பாப ஸம்பந்தம் அல்லது வீக்ஷணம் பெற்றால் களத்ர நாசம்.

சப்தமாதிபன் துர்பலனாய் 6, 8, 12 நீச ராசி, நீசாம்சம் இவை களிலிருந்தாலும் தார நாசம்.

7-ல் சந்த்ரனும், 7-க்கு அதிபன் விரயத்திலும், களத்ர காரகன் துர்பலனாயும் இருக்க தார ஸௌக்யம் இல்லை.

சப்தமாதிபன் பாபியாய், நீச க்ஷேத்ரம், பாப க்ஷேத்ரங்களி லிருந்து, பாபிகளுடன் கூடி, சனி புதர்கள் 7-ம் இடம் அல்லது உதய நவாம்சத்திலிருக்க 2 களத்ரமுண்டு.

செவ்வாய் லக்னத் சப்தமத்திலும், சனி சுக்ராத் சப்தமத் திலும் வலித்து, லக்னாதிபன் அஷ்டமத்திலும் இருக்க மூன்று களத்ரமுண்டு.

சுக்ரன் உபய ராசியிலும், சுக்ரன் வலிக்கும் ராசியதிபன் தன் உச்சக்ஷேத்ரத்திலும், சப்தமாதிபன் பலவானுயுமிருந்தால் அநேக தாரங்கள் ஏற்படும்.

சப்தமாதிபன் நீச ராசியிலும், சுக்ரன் 6, அல்லது 8-ல் இருந்தாலும், 18 அல்லது 33 வயதில் தார நாசம்.

7-க்கு உடையவன் 8-லும், விரயாதிபன் 7-லும் இருக்க 19 வயதில் தார நாசம்.

ராகு தனத்தில் இருந்து களத்ர ஸ்தானத்தில் செவ்வாயும் இருக்க விவாஹத்திற்கு மூன்றுவது நாளில் பாம்புக் கடியால் தார நாசம்.

அஷ்டமத்தில் சுக்ரனும், அஷ்டமாதிபன் சனி ராசியிலு மிருக்க 19 வயதில் தார நாசம்.

லக்னாதிபன் நீச ராசியிலும், தனாதிபன் அஷ்டமத்திலும் இருக்க 13-வது வருஷத்தில் களத்ர நாசம்.

சுக்ரனுக்கு சப்தத்தில் சந்த்ரனும், சந்த்ரனுக்கு சப்தமத் தில் புதனும், அஷ்டமாதிபன் பஞ்சமத்திலும் இருக்க 10 வரு ஷத்தில் முதல் களத்ரமும், 22 வருஷத்தில் 2-ம் களத்ரமும், 33-வது வருஷத்தில் 3-ம் களத்ரமும் ஏற்படுகிறது.

ஏழுக்குடையவன் லக்னம் அல்லது ஏழிலிருக்க பரஸ்திரீ களிடம் பற்றுள்ளவன், துஷ்டன், ஸமர்த்தன், நிரன், மார்பில் வாதரோகமுள்ளவன்.

ஏழுக்கதிபன் 8 அல்லது 6-லிருந்தால் ரோகமுள்ள பத்னியை அடைவான். கோபி, சுகமில்லாதவன்.

ஏழுக்கதிபதி ஒன்பது அல்லது இரண்டிலிருக்க பல ஸ்த்ரீகளுடன் கூடுவன். பல கார்யங்களை ஆரம்பித்து, ஆரம்பித்த காரியத்தை சீக்ரத்தில் முடிக்காதவன்.

ஏழாமதிபன் 10 அல்லது 4-லிருக்க பத்னி ஒழுங்கற்றவள், இவன் ஸத்யஸந்தன். பல்லில் வியாதியுடையவன்.

ஏழாமதிபன் 11 அல்லது 3-லிருந்தால் இறக்கிற புத்ரன் பிறப்பான். அதிக காலம் க்ரமித்து ஒரு பெண் பிறப்பாள். சாந்தி விசேஷங்களால் புத்ரனுண்டாகலாம்.

ஏழுக்குடையவன் பனிரண்டிலிருக்க தரித்ரன், க்ருபணன், உயர்ந்தவன், சாரனின் புதல்வி பார்யை யாவாள், துணி வியாபாரி, பணமுடையுடையவன்.

7-க்கதிபன் 5-லிருந்தால் குணவான், மானி, தனவான், சந்தோஷத்தையுடையவன்.

புத-சுக்ரர்கள் 7–8–10 இவைகளிலொன்றில் இருந்தாலும், குஜ-சுக்ரர்கள் 10-7-லிருந்தாலும், சுக்ரன், செவ்வாய் 10–4-க்குடையவர்களானாலும், புத-சுக்ர-சனிகள் 10–7 அல்லது சுக்ர க்ஷேத்ரத்திலிருந்தாலும், சந்த்ரனுக்குப் பத்தில் சுக்ரனும், சுக்ரனுக்கு பத்தில் சனியிருந்தாலும், 6-க்குடையவன் 6, 8, 12-லிருந்தாலும், 7, 2, 10-க்குடையவர்கள் 10-லிருந்தாலும், ஏழுக்குடையவன் ராகு அல்லது கேதுவுடன் கூடி பாபவீக்ஷணம் பெற்றாலும், சுக்ரன், சனி, செவ்வாய்களுடைய ஷட்வர்க்கத்திலிருந்து செவ்வாய், சூரியர்களால் பார்க்கப் பெற்றாலும், ஜன்மகால நவாம்ச லக்னத்துக்கு விரயத்தில் குஜ சுக்ரர்களிருந்தாலும், தன ஸ்தானாதிபன் 3 அல்லது 4-லிருந்தாலும், ஸப்தமாதிபன் 7 அல்லது லக்னத்திலிருந்தாலும், 2 அல்லது 12-லிருந்தாலும், சுக்ரன், சனி செவ்வாய்கள் வர்க்கத்திலிருந்து ஸப்தமஸ்தானம் சனி. குஜர்களால் பார்க்கப்பட்டாலும் வ்யபிசரிக்கிறார்கள்.

சனி குஜர்கள், சந்த்ரனுடன் ஸப்தமத்திலிருக்க இருவரும் வியபிசரிப்பார்கள்.

கேந்த்ரத்தில் சந்த்ரன் அல்லது சுக்ரனிருந்து பாப ஸம்பந்தம் அல்லது வீக்ஷணம் பெற்று க்ரூராம்சத்தில் அவரோஹத்திலிருந்தால் மாத்ரு கமனம் நேரலாம்.

சந்த்ர. சூர்யர்கள் பாப ஸம்பந்தம் த்ருஷ்டி பெற்று கேந்த்ரத்திலிருந்தாலும் மாத்ரு கமனம் நேரலாம்.

நாலாமதிபன் பாப த்ருஷ்டி ஸம்பந்தம் பெற்று சுபவீக்ஷணமில்லாமல் ஸப்தமாதிபனைக் காட்டிலும் லக்னாதிபன் துர்பலனால் தாய்க்கு ஸமானமானவருடன் சேருவான்.

ஸப்தமாதிபன் பாபியுடன் கூடி அல்லது பார்வை பெற்று நான்காமிடம் க்ரூர ஷஷ்ட்யம்சம் பெற்றாலும், சனி பாப வீக்ஷணம் பெற்று நான்கிலிருந்தாலும் ஸோதரீ ஸங்கமேற்படுகிறது.

சந்த்ரன் பாபியுடன் கூடி ஒன்பதிலிருந்தாலும், சுக்ரன் பாபியுடன் 9 லிருந்தாலும், சந்த்ரன்-ஒன்பதுக்குடையவன் அல்லது சுக்ரன் ஒன்பதுக்குடையவன் பாபியுடன் கூடினாலும், 9-க்குடையவன் நீசனாய் நீசாம்சத்தை அடைந்த சுக்ரனுடன் சேர்ந்தாலும் குரு தல்ப கமனம் செய்பவனாவான்.

ஒன்பதில் சந்த்ரனிருக்க தனக்கு முதிய ஸ்த்ரீயை அடைவான்.

ஒன்பதாமதிபன் நீசனை குரு ஸம்பந்தமுள்ள ஸ்த்ரீயைச் சேர்வான்.

சந்த்ர-சனிகள் ஏழாமிடத்தில் கூடியிருக்க தம்பதிகள் ஜாரர்களாவார்கள்.

லக்னாதிபன் அல்லது ஸப்தமாதிபன் அம்சத்தில் நீச க்ஷேத்ரம், சத்ரு க்ஷேத்ரம் அல்லது அஸ்தமனத்தை அடைந்திருக்க வேறு களத்ரத்தை யடைவன்.

குரு சுக்ரர்கள் பாபியுடன் சேர்ந்து 2, 6, 7-லிருக்க வியபிசாரியாவான்.

1, 4, 7, 10-மிடங்கள் பாப ஸம்பந்தம் வீக்ஷணம் பெற்றாலும், சனி பார்ப்-குளிகர்களோடு சேர்ந்தாலும், 7-ல் சூர்யன், 4-ல்

செவ்வாயுமிருந்தாலும், ராகு 7-லும், செவ்வாய் 4-லுமிருந்தாலும் ஸப்தமாதிபன் குஜ க்ஷேத்ரத்திலிருந்து சுக்ரன் பார்வை பெற்றாலும் பகுவைப் புணர்வான்.

மூன்று கேந்த்ரங்களும் பாபருடன் கூட பகுபோல் புணர்வான்.

சுக்ரன் – ஸப்தமாதிபர்களிருவரும் குஜ க்ஷேத்ரத்திலிருந்தாலும், தசமாதிபன் குஜ க்ஷேத்ரத்திலிருந்து சுக்ரனுடன் சேர்ந்து சனி பார்வை பெற்றாலும், லக்னாதிபன அல்லது தனாதிபன் நீச ராசி நவாம்சம் பெற்று துர்பலர்களாயிருந்தால் பகு சம்பனம் செய்யும் ஸ்வபாவமுடையவனுவான்.

லக்னாதிபன் அல்லது ஸப்தமாதிபன், அம்சத்தில் நீச க்ஷேத்ரம், சத்ரு க்ஷேத்ரம் அல்லது அஸ்தமனத்தை அடைந்திருக்க வேறு களத்ரத்தையடைவான்.

குரு சுக்ரர்களுடன் பாபியுடன் சேர்ந்து 2, 6, 7-லிருக்க வியபிசாரியாவான்.

1, 4, 7, 10-மிடங்களில் பாப ஸம்பந்தம் விஷணம் பெற்றாலும், சனி பாபர்களுடன் சேர்ந்தாலும், 7-ல் சூரியன், 4-ல் செவ்வாயுமிருந்தாலும், ராகு 7-லும் செவ்வாய் 4-லுமிருந்தாலும், ஸப்தமாதிபன் குஜ க்ஷேத்ரத்திலிருந்து சுக்ரன் பார்வை பெற்றாலும் பகுவைப் புணர்வான.

மூன்று கேந்த்ரங்களும் பாபருடன் கூட பகுபோல் புணர்வான்.

சுக்ரன் ஸப்தமாதிபர்களிருவரும் குஜ க்ஷேத்ரத்திலிருந்தாலும், தசமாதிபன் குஜ க்ஷேத்ரத்திலிருந்து சுக்ரனுடன் சேர்ந்து சனி பார்வை பெற்றாலும். லக்னாதிபன் அல்லது தனாதிபன் நீச ராசி நீசாம்சம் பெற்று துர்பலர்களாயிருந்தாலும் பக சம்பனம செய்யும் ஸ்வபாவமுடையவனுவான்.

பலசாலிகளான க்ரகங்கள் ஸப்தமத்தில் எவ்வளவு இருக்கின்றனரோ அல்லது ஸப்தமாதிபனுல் பார்க்கப்படுகின்றனரோ அல்லது அஷ்டமத்தில் எவ்வளவு வலிக்கின்றனரோ அல்லது அஷ்டமாதிபனுல் பார்க்கப்படுகின்றனரோ அவ்வளவு விவாஹங்கள் நடக்கலாம்.

7, 3-க்கு அதிபதிகள் நீச ராசியில் வலித்து சுபர்கள் கேந்த்ரத்ரிகோணங்களிலிருந்தாலும், செவ்வாய், சூரியர்களுடைய அம்சத்தில் புதனும் குருவுமிருந்தாலும். 7-வது நவாம்சம் குருவினுடையதாய் புதன் அங்கிருந்தாலும் ஒரே விவாஹம் நடைபெறும்.

அஷ்டமாதிபன் லக்னம் அல்லது ஸப்தமத்திலிருந்தாலும், லக்னாதிபன் ரோக ஸ்தானத்திலிருந்தாலும், தனாதிபன் ஆறிலும், ஏழில் பாபியுமிருந்தாலும். ஸப்தமாதிபன் சுபரோடு சேர்ந்து சத்ரு ஸ்தானம் நீச க்ஷேத்ரத்திலிருந்து ஸப்தமத்தில் பாபியுமிருந்தாலும், களத்ர காரகன் பாபரோடு சேர்ந்து நீச-சத்ரு-அஸ்தங்கத க்ரஹ க்ஷேத்ரங்களில் அல்லது அம்சங்களிலிருந்தாலும், ஸப்தமத்தில் அதிக பாப க்ரஹங்களிருந்தாலும் இரு களத்ரங்களேற்படும்.

பாபிகள் தன ஸ்தானத்திலிருந்து தனாதிபனுல் பார்க்கப் பெறுமலிருந்தாலும், அதிக பாபிகள் ஏழிலிருந்து ஸப்தமாதிபன் பார்வை பெறுமலிருந்தாலும். 1, 2, 7-களில் பாபிகளிருந்து ஸப்தமாதிபன் நீச-சத்ரு க்ஷேத்ரங்களிலோ அஸ்தங்கதனுகவோ இருந்தாலும் களத்ரங்கள் மூன்று ஏற்படலாம்.

லக்னத்தில் உச்சமான க்ரஹமிருந்து லக்னாதிபன் தன் உச்ச க்ஷேத்ரத்திலிருந்தாலும், சந்த்ர சுக்ரர்கள் பலிஷ்டர்களாய் சேர்ந்திருந்தாலும், ஸப்தம ஸ்தானம் பலவானுன சுக்ரன் பார்வை பெற்றாலும், 1. 2. 6-க்கு அதிபர்கள் பாபிகளுடன் சேர்ந்து ஏழிலிருந்தாலும், சனி ஸப்தமாதிபனுய் பாபியுடன் கூடியிருந்தாலும், ஸப்தமாதிபனுக்கு மூன்றில் சந்த்ரன் பலவானுயிருந்தாலும், தனவ்ரயாதிபர்கள் மூன்றிலிருந்து குரு அல்லது தர்மாதிபனுல் பார்க்கப் பெற்றாலும், ஸப்தமாதிபன் கேந்த்ரம் அல்லது த்ரிகோணத்திலிருந்து சுப ஷட்வர்க்கம் பெற்று கர்மாதிபனுல் பார்க்கப் பெற்று பலவானுயிருந்தாலும், ஸப்தமலாபாதிபர்கள் சேர்ந்திருந்தாலும், ஒருவர்க்கொருவர் பார்த்தாலும், ஸப்தமலாபாதிபர்கள் பலிஷ்டர்களாய் த்ரிகோணத்திலிருந்தாலும் அதிக களத்ரங்களேற்படும்.

நவாம்ச லக்னத்துக்கு ஏழில் குரு சந்த்ரர்களிருந்தால் ஸ்ரீ? அழகுள்ளவளாவாள்.

லக்னம்சத்துக்கு ஏழில் செவ்வாயிருக்க ஸ்திரீ விகலாங்கையாவாள்.

லக்னம்சத்துக்கு ஏழில் புதனிருக்க ஸ்திரீ படித்தவளாவாள்.

செவ்வாய், சனிகள் புதன் அல்லது செவ்வாய் விட்டிலிருந்தாலும், லக்னத்திலிருந்தாலும் ஸ்திரீ மூக்கில் ரோகமுள்ளவளாவாள்.

ஸப்தமத்தில் சனி, புதர்களிருந்தாலும், சந்த்ர சனிகளிருந்தாலும் விவாஹமான (ஒருவனுக்கு நிச்சயமான) ஸ்திரீ பத்னியாக வருவாள்.

ஸப்தமத்தில் அல்லது காரகன் குரு வீக்ஷணம் ஸம்பந்தம் பெற்று பலிஷ்டர்களாலாலும், சூரியன் ஸப்தமாதிபனுய் சுப வீக்ஷணம் பெற்றாலும், சுக்ரன் ஸப்தமாதிபனுகி சுப வீக்ஷணம் அடைந்தாலும், ஸப்தமாதிபன் கேந்த்ரம் அல்லது கபாம்சத்திலிருந்து சுப ஸம்பந்தம் அல்லது பார்வை பெற்றாலும் ஸ்திரீ பதிவ்ரதையாவாள.

லக்னம்சத்துக்கு ஸப்தமத்தில் ராகுவிருக்க ஸ்திரீ பதிவர்ஜிதையாவாள.

லக்னத்தில் கடக, விருச்சிக, மீனந்த்யங்களில் சனியிருந்து சுக்ரன் ஏழிலுமிருக்க ஸ்திரீ மலடியாவாள்.

மூன்றுமதிபன் சுக்ரன் ஏழிலிருக்க ஸ்திரீ ஷண்டையாகிறாள்.

ஸப்தமாதிபன் துர்பலனுய் ஏழிலிருந்து பாப ஸம்பந்தம் வீக்ஷணம் பெற்றாலும், தனாதிபன் துர்பலனுய் தன ஸ்தானத்திலிருந்து பாபருடன் சேர்ந்த க்ரஹத்தின் ஸம்பந்தம் வீக்ஷணம் பெற்றாலும், 7, 8-ல் பாபிகளும், 12-ல் செவ்வாயிருந்தாலும், லக்னாதிபன் அல்லது ஸப்தமாதிபன் நீச, சத்ரு, மூடாம்சத்திலிருந்தாலும் வேறு களத்ரத்தை அடைவான்.

லக்னாதிபதி ஸப்தமாதிபனுக்கு ஸமீபத்திலிருந்தாலும், லக்னம், ஏழாமிடங்களுக்கு ஸமீபத்தில் சுபனிருந்தாலும், ஸப்தமாதிபன் பாராவதம் முதலிய வர்கத்தில் பலிஷ்டர்களாயிருந்தாலும், ஸப்தமாதிபன் தன ஸ்தானத்திலிருந்தாலும் பால்யத்தில் விவாஹம் நடக்கும்.

களத்ரகாரகன் அல்லது ஸப்தமாதிபன் க்ரூரனோடு சேர்ந்து த்ரிகோணத்திலிருந்தால் தூரதேசத்தில் விவாஹம் நடக்கும்.

சுக்ரனுக்கு 4, 8-மிடங்கள் பாப க்ரஹ மத்தியிலிருந்தால் கயிறு மூலம் பார்யை நாசமாவாள்.

சுக்ரன் பாப ஸம்பந்தம் பெற்று சுப வீக்ஷணமில்லாதிருக்க நெருப்பினால் பத்னி நாசம்.

9, 7, 5-களில் சுக்ர சூர்யர்களிருக்க பத்னி விதவையாகிறாள்.

8-ல் சனி, 6-ல் செவ்வாய், 7-ல் ராகுவிருக்க மனைவி ஜீவித்திருப்பாள்.

லக்னத்தில் ராகு, சனி வலிக்க லோகாபவாதத்தால் பார்யா நாசம்.

ஏழு அல்லது ஒன்பதுக்குடையவனுடன் சுக்ரன் சேர்ந்து 6, 8, 12-லிருந்து எவ்வளவு க்ரூர க்ரஹங்களால் பார்க்கப்படுகிறானே அவ்வளவு பார்யைகள் நாசம்.

லக்னம் கன்னியாய் அதில் சூர்யன் வலித்து ஏழாமிடமான மீனத்தில் சனியிருந்தாலும் பார்யா நாசம்.

சுக்ரனுக்கு 4, 8-களில் பாபிகளிருக்க நெருப்புப் படுகிறது.

சுக்ரனுக்கு இருபுறத்திலும் பாபரிருக்க பத்னி உயரத்திலிருந்து கீழே விழுவாள்.

பஞ்சமாதிபன் ஸப்தமத்திலும், சுக்ரன் ஸப்தமாதிபனுய் பாபியுடன் கூடி துர்பலனுயுமிருக்க கர்ப்ப காரணமாக தார நாசம்.

சுக்ரன் அல்லது சந்த்ரன் நீசனுகி நான்கிலிருந்தாலும், ஸப்தமாதிபன் க்ரூர ஷஷ்ட்யம்சத்திலிருந்தாலும் தார நாசம் சொல்லப்படுகிறது.

சனி, செவ்வாய், ராகு, கேது இவர்களிலொருவர் ஏழிலிருக்க பிசாச பிடை ஏற்படும்.

லக்னாதிபன் ஸ்வ கேஷத்ரத்திலிருப்பவன், 7-லிருக்கும் சுக்ர னைப் பார்த்தாலும், செவ்வாய்க்கு 10 அல்லது 4-ல் சனி, சந்த் ரர்களிருந்தாலும், ஸ்திரீமூலம் ஸந்தோஷமேற்படும்.

ஸப்தமாதிபன் பாப த்ரேக்காணம், ஸர்ப்ப த்ரேக்காணங் களிலிருக்க பார்யை தூக்குப் போட்டுக் கொள்வதால் மரண மடைவாள்.

ஸப்தமாதிபன் ராகு, மாந்திகளுடன்கூட விஷபக்ஷணத்தால் பத்னீ மரணமேற்படலாம்.

லக்னாதிபன் அஷ்டமத்திலும், பாபர் ஏழிலும், குடும்பாதிபன் அஷ்டமத்திலுமிருக்க இரு களத்ரங்களேற்படும்.

சூர்யன் ஸப்தமாதிபனுய் பாப ராச்யம்சம் பெற்று பாப ஸம்பந்தம் வீக்ஷணம் பெற பார்யை பாபத்தில் பற்றுள்ளவ ளாவாள்.

சூரியன் ஸப்தமாதிபனுடி பலிஷ்டனுய் சுப ஸம்பந்தம், சுப ராசியம்சம் அல்லது சுப வீக்ஷணம் லக்னாதிப மித்ரத்வங்களீ அடைந்தால் பர்த்தாவிடத்தில் பக்தியுள்ளவளாவாள.

ஸப்தமாதிபன் அல்லது சந்த்ரன் பாப ஸம்பந்தம் வீக்ஷணம் பெற்று பாபாம்சம் அல்லது பாபக்ரஹ மத்தியிலிருந்தால் கெட்ட வழியில் நடப்பவளாகவும் கடினமான குற்றத்தைச் செய்பவ ளாகவுமாவாள்.

களத்ர ஸ்தானாதிபனன சுக்ரனும் சந்த்ரனும் ஸௌம்யாம் சத்தில் அல்லது ஸௌம்ய க்ரஹத்துடன் கூடி மித்ரோச்ச கேஷத்ரத்தில் அல்லது மிருது ஷஷ்ட்யம்சம் பெற்றால் பார்யை நல்லொழுக்கமுடையவளாகவும் புண்யையுமாவாள.

ஏழுக்கதிபன் செவ்வாயாடி துர்பலனுய் க்ரூரம் முதலிய ஷஷ்ட்யம்சத்திலிருந்தாலும், நீச ஸ்தானம், ரோகஸ்தானம், சத்ருக்ரஹ கேஷத்ரம்-இவைகளிலிருந்தாலும், அஸ்தங்கதனனு லும், பிறரிடத்தில் ஆசையுடையவளாகவும், புருஷனுக்கு அடங் காதவளாகவுமாவாள்.

ஸப்தமாதிபன் மித்ரவர்கம், உச்ச வர்கம் பெற்று சுப ஸம்பந் தம் வீக்ஷணம் பெற்றாலும், பாராவதாம்சம் முதலியன அடைந்து

பலிஷ்டனுயிருக்க கொடியவளானாலும் புருஷனுக்கு நன்மை செய்பவளாவாள்.

ஸப்தமாதிபன் புதனுய் பாபருடன் நீச சத்ரு கேஷத்ரங்கள், அஷ்டமம், அஸ்தமனம் இவைகளீ அடைந்து பாப க்ரஹ மத்தி, பாப வீக்ஷணம் பெற்றாலும், அப்போது பிறந்த பெண் புருஷ காதிகியாகவும், குலத்தை நாசம் செய்பவளாகவுமாவாள்.

சுக்ரன் சப்தமாதிபனுய் பாபி நீசர்களுடன் கூடினாலும், நீச கேஷத்ரம் அஸ்தமனம், க்ரூரம் முதலிய ஷஷ்ட்யம்சம் இவைகளீ அடைந்தாலும் பத்னி கடின ஹ்ருதயத்தை உடையவளாயும், திருடுபவளாயும், வேசிக்கு சமமானவளாயும் இருப்பாள்.

சனி சப்தமாதிபனுய் பாபியுடன் சேர்ந்து நீசாம்சம், நீச கேஷத்ரம், சத்ரு கேஷத்ரம், பாப வீக்ஷணம், பாப நவாம்சம் இவைகளீ யடைந்தால் பத்னி அன்ய புருஷனுடன் சேருபவ ளாயும், கெட்டவளாயும், வம்சத்திற்கு அபகீர்த்தியை விளைவிப்ப வளாயும் ஆவாள்.

சுக்ரன் சப்தமாதிபனுய் பலத்தை அடைந்து சுப ஸம்பந்தம் சுபாம்சம், ஸ்நேஹிதனுடைய உச்ச வர்க்கம், ஸ்வகேஷத்ரம், மிருது அம்சம் இவைகளீயடைய அதிக வாயாடியாகவும், குணவதி யாகவும், புத்ரனுள்ளவளாகவுமாவாள்.

சனி சப்தமாதிபனுய் பலவானுயிருந்தால் பிறருக்கு உபகாரம் செய்பவளாக இருப்பதுடன் பத்னி, ப்ராம்மணர், தேவதைக ளிடத்தில் பக்தியுடையவளாகவும், குரு வீக்ஷணம் பெற்றால் ப்ரம்மத்தை அறிந்து சொல்லக்கூடியவளாகவும், மற்ற சுபரால் பார்க்கப்பெற்றால் பத்னி தர்மத்தில் விருப்பமுடையவளாகவும், நன்னடத்தை உடையவளாகவும் ஆவாள்.

செவ்வாய் சப்தமாதிபனுடன் த்ரிகோணத்திலிருந்தாலும், களத்ர காரகன் பாபரோடு 2, 10-களில் இருந்தாலும், 10, 2, 9, 7-இவைகளில் பாபி இருந்தாலும், க்ரூராம்சம், க்ரூர த்ருஷ்டி பெற்றாலும், அதிக தூரத்தில் விவாகம் நடக்கும்.

ஸப்தமாதிபன் லக்னாதிபனீக் காட்டிலும் துர்பலனானாலும், சத்ரு பாவம், சத்ரு அம்சம், அஸ்தமனம் இவைகளீ அடைந்

தாலும், நீசாம்சத்தில் நீசனுடன் சேர்ந்திருந்தாலும் தாழ்ந்த ஜாதியில் விவாகம் கூடக்கும்.

ஸப்தமாதிபன் லக்னாதிபனைக் காட்டிலும் அதிக பலவானாய், சுபரம்சம், சுபவீக்ஷணம் பெற்று வைசேஷிகாம்சம் அல்லது பரமோச்ச பாகத்தில் இருந்தால் உயர்ந்த ஜாதியில் பத்னி லாபம்.

லக்னாதிபன், ஸப்தமாதிபனைக் காட்டிலும், குறைந்த பலம் உடையவனாய், பாபருடன் சேர்ந்து நீசபாகம் 8-மிடம், அவரோகம் இவைகளை யடைந்தால் உயர்ந்த ஜாதியில் களத்ர லாபம்.

லக்னாதிபதி ஸப்தமாதிபனைவிட பலவானாகி ஆரோஹத்திலோ, பரமோச்ச பாகத்திலோ, சுபரோடு சேர்ந்து கேந்த்ர த்ரிகோணம் பெற்றால் களத்ரம் தாழ்ந்த ஜாதியிலாகும்.

லக்ன, களத்ர அதிபர்கள் சமமான பலம் உடையவர்களானால் சமான ஜாதியிலுதித்தவளும், நல்லொழுக்கமுடையவளும், பதி பக்தியுள்ளவளுமாக களத்ரம் சித்திக்கும்.

களத்ராதிபதி, களத்ர ராசி, குடும்பாதிபன் இவர்களைக் கொண்டு இப்பலனை மேலும் ஊஹிக்கலாம்.

களத்ராதிபன், சப்தமஸ்தானம், களத்ரகாரகன் இவர்களில் எவன் மிகவும் அதிக பலமுள்ளவனை அவன் கிறம் போல் களத்ர மேற்படும்.

ஸப்தமஸ்தானம் குரு, சுக்ரர்களால் பார்க்கப்பட களத்ரம் நற்குணமுள்ளதாகவும், அழகாகவுமிருக்கும். பாபனால் பார்க்கப் பட அழகற்றவளாகவும், துர்க்குணியாகவுமிருப்பாள்.

குரு 7-க்குடையவனாய் சுபாம்சம் பெற்றாலும், சுபாம்சத்தில் சுபவீக்ஷிதமானாலும், 7-ல் புதனிருந்து குருவால் பார்க்கப்பெற்று பலவானாய் குடும்பாதிபனால் பார்க்கப்பட்டாலும், சுக்ரன் 7-ம் இடத்தில் வலித்து பூர்ண சந்த்ர வீக்ஷணம் பெற்று, பாப ஸம்பந்த-வீக்ஷணமில்லாவிட்டாலும் பருப்பு, தயிர், நெய் இவை களுடன் கூடிய சாப்பாடு கிடைக்கும்.

சூர்யன் அல்லது செவ்வாய் சப்தமாதிபனாய் சுபவீக்ஷணம் பெற்று, குடும்பத்திலிருக்க எப்போதாவது தயிர் பருப்புடன் கூடிய போஜனம் கிடைக்கும்.

7-ம் பாவத்தில் பாபர் இருந்து 7-ம் அதிபன் பாபியுடன்கூடி க்ரூர ஷஷ்ட்யம்சத்திலிருந்தால் நெய், பருப்பு முதலியன கிடைக்காது.

7-ம் இடம் ஜல ராசி அல்லது ஜல நவாம்சமாகி சந்த்ரன் அல்லது குரு அதிபதியாகி ஜல க்ரஹம் பார்க்க பால் முதலிய வைகள் அருந்துபவனாவான்.

ஸப்தமாதிபன் வலிக்கும் அம்சாதிபன் சுப வீக்ஷணம் பெற் றாலும், சுபாம்சத்தை அடைந்தாலும், வெல்லம், பால் முதலிய வைகளை அருந்துபவன் ஆவான்.

7, 6, 8-இவைகளில் அதிக பாபிகள் இருந்தாலும், க்ரூராம் சத்தில் இருந்தாலும், மூத்ரக்ருச்ச்ர ரோகம் உண்டாகும்.

7-ம் பாவத்தில் ஸ்திரீகளின் ஜாதக பலனை விசேஷமாக சொல்லப் பட்டிருக்கிறபடியால், கீழே சுருக்கமாக எழுதியிருப்பினும் இப்போது விவரமாக இங்கு எழுதப்படுகிறது.

ஸ்திரீ ஜாதகங்களில் அஷ்டம ஸ்தானத்தினால் வைதவ்யத் தையும், ஜன்ம லக்னத்தினால் சரீரத்தையும், சப்தமத்தினால் ஸௌக்ய ஸௌபாக்யங்களையும், பஞ்சமத்தால் சந்ததியையும் கவனிக்க வேண்டும். சில க்ரந்தங்களில் சந்ததியை 9-மிடத் தாலும் பார்க்கும்படி கூறப்பட்டிருக்கிறது.

ஜன்ம சந்த்ர லக்னங்கள் இரட்டை ராசியானால் நல்ல ஒழுக் கம், அழகு, குணம், ஆபரணம் இவைகளுடன் கூடியவளாவாள். சுப ஸம்பந்தம் வீக்ஷணங்களைப் பெற்றாலும் இதே பலனாகும்.

ஜன்ம லக்ன சந்த்ர லக்னங்கள் ஒற்றை ராசியாகி க்ரூர க்ரஹ ஸம்பந்த வீக்ஷணத்தைப் பெற்றால் ஸ்திரீ, புருஷ ஸ்வபாவம், ஆகாரம் இவைகளுடன் கூட கெட்ட ஒழுக்கமுள்ளவளாயும், துக்கமுடையவளாயும், பாப காரியங்களில் பற்றுள்ளவளாயும், குணமில்லாதவளாயுமாவாள்.

லக்னம் சந்த்ரன் இவ்விரண்டிற்குள் எது அதிக பலம் உடையதோ, அதனுடைய த்ரிம்சாம்சத்தில் இருக்கும் செவ்வாய், சுக்ரன், புதன், குரு, சனிகளின்மூலம் அடியிற் காணும் பலன்களை அறியவும்.

லக்னம் அல்லது சந்த்ரன் செவ்வாய் வீட்டில் செவ்வாய் த்ரிம்சாம்சத்தில் இருந்தால் சிறியவளாய் இருக்கையிலேயே துஷ்டையாவாள். சுக்ர த்ரிம்சாம்சத்தில் கெட்ட நடத்தையுள்ளவள். புத த்ரிம்சாம்சத்தில் பாசாங்குக்காரி, துர்பலி, குரு த்ரிம்சாம்சத்தில் பணக்காரி, சனி த்ரிம்சாம்சத்தில் தாஸி.

லக்னம் அல்லது சந்த்ரன் சுக்ரன் வீட்டில் செவ்வாய் த்ரிம்சாம்சத்திலிருக்க துஷ்டை. சுக்ர த்ரிம்சாம்சத்தில் பிரஸித்தியுடையவள். புத த்ரிம்சாம்சத்தில் கலைகளில் வல்லவள். குரு த்ரிம்சாம்சத்தில் குணவதி. சனி த்ரிம்சாம்சத்தில் இரண்டாவதாக விவாகம் செய்பவள்.

லக்னம் அல்லது சந்த்ரன் புதன் வீட்டில் செவ்வாய் த்ரிம்சாம்சத்தில் இருக்க சபடமுடையவள். சுக்ர த்ரிம்சாம்சத்தில் காமம் உடையவள். புத த்ரிம்சாம்சத்தில் குணவதி. குரு த்ரிம்சாம்சத்தில் பதிவ்ரதை. சனி த்ரிம்சாம்சத்தில் நபும்ஸகை.

லக்னம் அல்லது சந்த்ரன் சந்த்ரன் வீட்டில் செவ்வாய் த்ரிம்சாம்சத்தில் இருக்க தன்னிஷ்டப்படி நடப்பவள். சுக்ர த்ரிம்சாம்சத்தில் குலத்திற்கு இழுக்கு உண்டாக்குபவள். புத த்ரிம்சாம்சத்தில் செல்பமறிந்தவள். குரு த்ரிம்சாம்சத்தில் அதிக குணவதி. சனி த்ரிம்சாம்சத்தில் புருஷனை இச்சிப்பவள்.

லக்னம் அல்லது சந்த்ரன் நர்ய க்ஷேத்ரத்தில் செவ்வாய் த்ரிம்சாம்சத்தில் இருக்க புருஷ ஸ்வபாவமுள்ளவள். சுக்ர த்ரிம்சாம்சத்தில் பதிவ்ரதை. புத த்ரிம்சாம்சத்தில் ஆண்மை ஸ்வபாவமுள்ளவள். குரு த்ரிம்சாம்சத்தில் ராஜ மஹிஷியாவாள். சனி த்ரிம்சாம்சத்தில் குலப்ரஷ்டை.

லக்னம் அல்லது சந்த்ரன் குருவின் க்ஷேத்ரத்தில் செவ்வாய் த்ரிம்சாம்சத்தில் இருக்க அதிக குணமுள்ளவள். சுக்ர த்ரிம்சாம்சத்தில் பதிவ்ரதை புத த்ரிம்சாம்சத்தில் விஞ்ஞான அறிவுள்

ளவள். குரு த்ரிம்சாம்சத்தில் நற்குணமுள்ளவள், சனி த்ரிம்சாம்சத்தில் பிறரிடம் ஆசையுடையவள்.

லக்னம் அல்லது சந்த்ரன் சனியின் க்ஷேத்ரத்தில் செவ்வாய் த்ரிம்சாம்சத்தில் இருக்க தாசி. சுக்ர த்ரிம்சாம்சத்தில் குழந்தை இல்லாதவள். புத த்ரிம்சாம்சத்தில் துஷ்டை. குரு த்ரிம்சாம்சத்தில் பதிவ்ரதை. சனி த்ரிம்சாம்சத்தில் நீசனை சேவிப்பவள்.

சுக்ரன், சனி ஒருவர் நவாம்சத்தில் மற்றொருவர் மாறியிருந்து சுக்ர த்ரிம்சாம்சத்தில் இருந்தாலும், ஒருவரையொருவர் பார்த்தவர்களாய் லக்னத்தில் கும்பாம்சத்தில் இருந்தாலும் அதிக காமத்தை அடைந்த ஸ்த்ரீ க்ருத்ரிமமாக செய்த ஆண் குறியை உடைய ஸ்த்ரீகளைமூலம் திருப்தியடைவாள்.

7-ம் இடம் சுத்தமாக இருந்தாலும், பலமில்லாதிருந்தாலும், சுபவிக்ஷணமில்லாவிட்டாலும், பர்த்தா கெட்டவனுவான்.

7-ம் இடம் சர ராசியானால் புருஷன் வெளியில் செல்பவனுவான்.

ஸப்தமத்தில் புதன் சனி இருக்க புருஷன் நபும்ஸகனுவான்.

7-ல் சனி இருந்து அசுபர் பார்க்க கன்னிகையாயிருக்கும் போதே விதவைபோல் ஆவாள்.

அசுபர்களின் க்ஷேத்ரம் ஸப்தமஸ்தானமாகி அசுப விக்ஷணம் பெற்றால் குழந்தை இல்லாதவன்.

7-ல் சுபாசுபர்கள் கலந்திருக்க இரண்டாந்தடவை கல்யாணமாகும். (ஒருவருக்கு நிச்சயமாகி பின்னர் விவாஹம் நடக்காமல் மற்றொருவருக்கு கல்யாணமாதல், விதவா விவாஹம் இவைகளை இதுமாதிரி இடங்களில் வைத்துக்கொள்ளவும்.)

குஜாம்சத்தில் சுக்ரனும், சுக்ராம்சத்தில் குஜனுமாக இருந்தால் பரபுருஷனின் சேர்க்கை ஏற்படலாம். (இதுமாதிரி இடங்களில் மானஸமாகவும் ஏற்படலாம் என்று வைத்துக்கொள்ள வேண்டும்).

ஸப்தமத்தில் சூர்ய-சந்த்ரர்கள் இருக்க புருஷனின் அனுமதியின் பேரில் அன்ய புருஷனுடன் சேர்வாள். இங்கு ட்ராமா, சினிமா முதலியவைகளில் நடிப்பதையும் சொல்லலாம்.

சனி-குஜர்களின் க்ஷேத்ரம் ஸப்தமமாகி சுக்ர-சந்த்ரர்கள் லக்னத்திலிருந்து க்ரூர க்ரஹம் பார்க்க தாயுடன் தானும் வியபி சாரியாவாள்.

சுப க்ரஹ நவாம்சம் ஸப்தம ஸ்தானமானால் அழகிய இடையை யுடையவளாகவும், பத்தாமிடமானால் வாத்ஸல்யம் உடையவளாகவுமாவாள்.

ஸப்தமஸ்தானம் சனியின் க்ஷேத்ரமாகவோ, சனியின் நவாம்சமாகவோ இருக்க புருஷன் கிழவனாகவும் மூர்க்கனாகவும் இருப்பான்.

7-ம் இடம் செவ்வாயின் வீடாகவோ, செவ்வாயின் நவாம்சமாகவோ இருக்க புருஷன் ஸ்திரீ லோலனாகவும், கோபியாகவுமிருப்பான்.

7-ம் இடம் சுக்ர க்ஷேத்ரமாகவோ, சுக்ர நவாம்சமாகவோ இருக்க புருஷன் அதிக ஸௌபாக்யம், அழகுள்ளவன் ஆவான்.

7-ம் இடம் புத க்ஷேத்ரமாகவோ, புத நவாம்சமாகவோ இருக்க புருஷன் ஸமர்த்யம், அறிவு முதலியவை நிறைந்தவன் ஆவான்.

7-ம் இடம் சந்த்ர க்ஷேத்ரமாகவோ, சந்த்ர நவாம்சமாகவோ இருக்க புருஷன் காமபீடிதன், ம்ருது ஸ்வபாவன்.

7-ம் இடம் சூர்ய க்ஷேத்ரமாகவோ, சூர்ய நவாம்சமாகவோ இருக்க புருஷன் அதிக வேலை செய்பவன், கடுமையான ஸ்வபாவமுள்ளவன்.

குரு சுக்ரர்களின் நவாம்சம் ஸப்தமஸ்தானமாக இருக்க புருஷன் குணவான். இந்திய ஜயமுடையவன்.

சுக்ர சந்த்ரர்கள் லக்னத்தில் இருக்க ஸ்திரீ பொருமையுள்ளவள். சுகத்தில் நோக்கமுள்ளவள்.

புத சந்த்ரர்கள் லக்னத்தில் இருக்க ஸமர்த்தை சுகமுள்ளவள், குணவதி, புத்ரனுடன் கூடியவள். விதை.

சுக்ர புதர்கள் லக்னத்தில் இருந்து வேறு சுபர்கள் அங்கு இருக்க அழகுள்ளவள். வித்யைகளில் ஸாமர்த்யம் உள்ளவள். த்ரவ்யம், வஸ்த்ரம் முதலியவைகளுடன் கூடியவள். பாபிகள் இருக்க பலன் எதிரிடையாக இருக்கும்.

அஷ்டமத்தில் பாபிகள் இருந்து, அஷ்டமாதிபன் எந்த நவாம்சத்தில் இருக்கிறானோ அவனுடைய தசையில் வைதவ்யம் ஏற்படலாம்.

புத. குரு கர்ர்கள் பலமற்றவர்களாய் சனி இவர்களின் மத்தியில் இருந்து, மற்ற க்ரஹங்கள் பலிஷ்டர்களாய் லக்னம் சரமாகில் அப்போது பிறந்த ஸ்திரீ புருஷன்போல் நடப்பவளாகவும், புருஷ ஸ்வபாவத்துடன் உலகத்தில் பிரஸித்தியடைவாள்.

ஆரூமிடத்தில் க்ரூரன் வலித்து 9-லும் க்ரஹமிருந்தாலும், ஸப்தமத்தில் பாப க்ரஹம் இருந்தாலும் துறவி ஆவாள்.

புத, குரு, சுக்ரர்கள் பலிஷ்டர்களாய் சந்த்ரனோடு சேர்ந்து இரட்டை ராசியான ஜன்ம லக்னத்தில் இருந்தால் சாஸ்த்ரங்களில் ஸமர்த்தையாகவும், ப்ரஹ்மவாதினியாகவுமாவாள்.

ஸப்தம ஸ்தானம் சர ராசியாய் சந்த்ரனோடு சேர்ந்த சுக்ரன் பார்க்க அவள் புருஷன் சஞ்சல ஸ்வபாவத்தையுடையவன். அன்னியனுக்குப் பிறந்தவனாகவும், தன் விவேகமற்றவனாகவும் இருப்பான.

ஸப்தமஸ்தானம் இரட்டை ராசியாகி சுப க்ரஹத்தோடு சேர்ந்து சுபக்ரஹ விக்ஷணம்பெற்றால் புருஷன் ராஜ பூஜ்யனாகவும், சுபனாகவும் சொல்லப்படுகிறான்.

சந்த்ர, சுக்ர, புதர்கள் அல்லது குரு, சுக்ர, புதர்கள் லக்னத்திலிருக்க பலவித ஸௌக்யங்களுடன் வேலைக்காரிகளால் பணிவிடை செய்யப்படுபவளாகவுமாவாள்.

சுபக்ரஹங்களும், க்ரூர க்ரஹங்களும் லக்னத்தில் வலித்து சுபக்ரஹம் குடும்பத்திலுமிருக்க புருஷனுக்கு முன் மரணம் அடைவாள்.

வ்ருஷபம், சிம்மம், கடகம், இவைகள் சந்த்ரனோடு கூட அல்ப புத்ரையாவாள்.

பஞ்சமத்தில் பாபி வலித்து சத்ரு விக்ஷணம் பெற்று தன் நீசவிட்டிலுமிருக்க அக்கன்னிகை தன் குலத்திலிருந்து விடுபட்ட வளாகவும், இறந்த குழந்தைகளை உடையவளாகவுமாவாள்.

க்ரஹங்கள் ஸ்வக்ஷேத்ரம், உச்ச க்ஷேத்ரம், த்ரிகோணம் இவைகளிலிருக்க குணங்களுடன் கூடியவளாகவும், நல்ல புத்ரர்களை உடையவளாகவும், தீர்க்காயுளை உடையவளாகவுமாவாள்.

சனி, சூர்யர்கள் அல்லது புத, சந்த்ரர்கள் அஸ்டமத்தில் இருந்தாலும், ஸ்வக்ஷேத்ரத்திலிருந்தாலும் காகவந்த்யை ஆவாள். (காகவந்த்யை என்றால் ஒரே பெண் அல்லது ஒரே பிள்ளையோடு கூடியவள்).

குரு, சுக்ரர்கள் செவ்வாயுடன் கூடியிருக்க ம்ருதவந்த்யை ஆவாள். (ம்ருதவந்த்யை என்பது குழந்தைகள் பிறந்து பிறந்து இறப்பது, கர்ப்பச் சிதைவு [அபார்ஷன்] ஏற்படுவது.)

சனி, குஜ க்ஷேத்ரத்திலும், சுக்ரனும், சந்த்ரனும் லக்னத்தில் இருந்து பாபிகள் பார்க்க அந்த ஸ்த்ரீ மலடியாவாள்.

ஸப்தமத்தில் செவ்வாய் வலித்து சனி பார்க்க கர்ப்பச் சிதைவு உள்ளவளாவாள்.

புத்ர ஸ்தானத்தில், அதிக பாப க்ரஹங்களிருந்து பாப ஸ்தானாதிபன் நீச க்ஷேத்ரத்திலோ, அரிஷட்வர்க்கத்திலோ இருந்தாலும் புத்ர ஸ்தானம், புத்ர ஸ்தானாதிபன் அல்லது குரு, நீசம், அரிஷட்வர்க்கம் அல்லது பாபிகளின் ஷட்வர்க்கம் பெற்றாலும், குரு ஜன்ம லக்னம், சந்த்ரன் இவர்களுக்கு பஞ்சமத்தில் பாபிகள் இருந்தாலும் புத்ராதிபன் பாப ஸம்பந்தம் பெற்றாலும் மலடியாவாள்.

புத்ர ஸ்தானம், புத்ர ஸ்தானாதிபன் இவர்கள் 6, 8, 12-ஸ்தானங்களில் வலித்தல், அவ்விட்டுக்குடையவரின் சேர்க்கை, குரு நீசம், அஸ்தங்கதம், சத்ருவோடு சேர்தல் இவைகளை வைத்து வந்த்யாதி தோஷத்தைச் சொல்லவேண்டும்.

லக்னத்திற்கு 5-ல் குரு, குருவுக்கு 5-ல் சனி, சனிக்கு 5-ல் ராகு இருக்க ஒரே பிள்ளை உண்டாகும்.

ஜன்ம லக்னம் அல்லது சந்த்ர லக்னத்திற்கு 12-லும், 2-லும் பாபரிருக்க பிறந்த குலம், புகுந்த குலம் இரண்டையும் நாசம் செய்வாள்.

2 சுபர்கள் சத்ரு க்ஷேத்ரமான லக்னத்தில் இருந்தாலும், ஒரு க்ரூர க்ரஹம் அங்கு இருந்தாலும் அதில் பிறந்த பெண் விஷ கன்னிகையாவாள்.

த்விதியையுடன் ஆயில்யம், சதயம், கார்த்திகை இவைகளில் ஒரு நக்ஷத்ரமும், சனி, செவ்வாய், ஞாயிறு இவைகளில் ஒரு வாரமும் சேர்ந்த சமயம் பிறந்த பெண் விஷகன்னிகையாவாள்.

த்வாதசியுடன் சதயம், ஞாயிறும், விசாகம், சப்தமி, செவ்வாயும், த்விதியை, ஆயில்யம், சனியும் விஷ யோகங்கள்.

செவ்வாய் 12-ல் அல்லது 8-ல் வசித்து க்ரூரனோடு சேர்ந்த ராகு லக்னத்தில் இருக்க விதவையாவாள்.

லக்னத்தில் ராகு, சூரியன், செவ்வாய் வலித்தால் விதவையாவதுடன் காமம் உள்ளவள் ஆவாள்.

மேற்கூறிய க்ரஹங்களுடன் சுக்ரனும் சேர, வேறு புருஷனை மணக்க விரும்புவாள். (இக்காலத்தில் நடக்கும் விவாஹ ரத்து முதலியவைகளைச் சொல்லலாம்.)

9-ல் செவ்வாயும், லக்னத்தில் சனியும், சூரியன் 5-லும் இருக்கப் பிறந்தவள் விஷ கன்னிகை ஆவாள். இந்த விஷ யோகம் புத்ரனில்லாமையைத் தெரிவிக்கும். வைதவ்ய தோஷம் நீங்கிவிடுகிறது.

பரணியும் ஞாயிறும், சித்திரையும் திங்களும், மூலமும் செவ்வாயும், அவிட்டமும் புதனும், கேட்டையும் வியாழனும், பூராடமும் வெள்ளியும், ரேவதியும் சனியும் சேருவது விஷயோகம் ஆகும். இவைகளில் புருஷன் பிறந்தால் குல க்ஷயம், ஸர்வ நாசம் ஏற்படுகிறது. குரு விக்ஷணம், சுப ஸ்தானாதிபர் விக்ஷணம் பெற்றால் இத்தோஷம் விலகுகிறது.

மூல நக்ஷத்ரத்தில் பிறந்த பெண் மாமனருக்கு தோஷத்தையும், ஆயில்யத்தில் பிறந்தவள் மாமியாருக்கும், கேட்டையில் பிறந்தவள் புருஷன் தமையனுக்கும், விசாகத்தில் பிறந்தவள் புருஷனின் தம்பிக்கும் தோஷத்தைச் செய்வாள். இதில் மூலம், ஆயில்யம், கேட்டை நக்ஷத்ரங்களின் முதல் பாதமே தோஷமென்றும், விசாகத்தின் 4-வது பாதம் தோஷம் என்றும், மற்ற 3 பாதங்கள் தோஷம் இல்லை என்றும் புருஷனின் ஸகோதரர்களுக்கு கபத்தை யளிப்பதாகவும் சொல்லப்படுகிறது.

மூலம், ஆயில்யம், விசாகம், கேட்டை இவைகளில் பிறந்த புருஷனுக்கு இத்தோஷம் கிடையாது.

27 நக்ஷத்ரங்களில் பிறந்தவளின் பலன்கள்.

அசுவதி :— மனதிற்குகந்தவள். ஐச்வர்யமுள்ளவள். நல்ல பார்வையையுடையவள். ப்ரியமாகப் பேசுபவள். சுகம் உடையவள். சுத்தர்களின் ஸஹவாஸம், தேவதை, குருபக்தி இவைகளை உடையவளாவாள்.

பரணி :—ஸ்திரீகளுடன் கூடியவள். கொடிய ஸ்வபாவமுடையவள். சண்டையில் ஆசை. கெட்ட சித்தம், ஏழ்மை, மலின வஸ்த்ரம் இவைகளை உடையவளாகவும், பெருமையற்றவளாகவுமாவாள்.

கார்த்திகை :—அதிக கோபம், சண்டையிடும் தன்மை, விரக்தி, எல்லாவற்றிலும் த்வேஷம், ச்லேஷ்ம வியாதி, இளைத்த தேகம். இவைகளை உடையவளாவதுடன் பந்து ஜனங்கள் இல்லாதவளாவாள்.

ரோகிணி :—அழகிய சரீரம். சுத்தி. தவறில்லாமை, புருஷனிடம் அடக்கம். பித்ரு-மாத்ரு பக்தி, நல்ல பெண் பிள்ளைகள் ஐச்வர்யம் இவைகளுடன் கூடியவளாவாள்.

மிருகசீர்ஷம் :—கொண்டாடத் தக்கவள், அழகுள்ளவள், தெளிவாகப் பேசுபவள், ஆபரணத்தில் ப்ரீதி, பலவித பொருள்கள், வஸ்த்ரம், அன்னம் இவைகளில் ஆசையுள்ளவள். சத்புத்ரனை உடையவள், தர்மத்தைச் செய்பவள், சுத்தர்களுடன் கூடியவளாவாள்.

நிருஆதிரை :—அதிக கோபம், துஷ்ட ஸ்வபாவம், கபித்தங்கள் தேவபக்தி இவைகளுள்ளவள். பிறரிடம் குறைகூறுபவள். செலவாளி, பண்டிதையாக வேஷம் போடுபவள்.

புனர்பூசம் :—ஆடம்பரம் இல்லாத ஸ்வபாவம், கேள்வி, புண்ணியத்தில் ஆசை, நல்ல சித்தம், தர்மத்ருஷ்டி, அழகு, கொண்டாடும் தன்மை இவைகளை உடையவளாவதுடன் எப்போதும் நாதனுடையவளாவாள்.

பூசம் :—நல்ல ரூபம், ப்ரஸித்த கார்யம், அழகு, ஸத்புத்ரன், தேவ ப்ராம்ஹண ப்ரீதி, உப்பரிகை வாசம், அதிக சுகம், பந்து ப்ரீதி இவைகளை உடையவளாவாள்.

ஆயில்யம் :—கெட்ட உருவம், துக்கம், கார்யமில்லாமை, கொடிய வார்த்தை, தாழ்ந்த கார்யங்கள், ஆடம்பரம், கபடம், க்ருதக்னதை இவைகளை உடையவளாவாள்.

மகம் :—கொண்டாடப்படும் தன்மை, சத்ருபக்ஷம், அதிக சம்பத், பாபமின்மை, குரு பக்தி, ப்ராம்மணரிடத்தில் வினயம் ராஜ ஸௌக்யமிவைகளை உடையவளாவாள்.

பூரம் :—சத்ரு ஜயம், அழகு, நற்புத்ரன், நியாயம், வ்யவஹார ஸாமர்த்யம், சாஸ்த்ரத்தில் ஆசை, ப்ரியமாகப் பேசல், புண்யம், நன்றியறிதல் இவைகளை உடையவளாவாள்.

உத்தரம் :—த்ருட சித்தம், நீதியில் குறிக்கோள், கிரஹ கார்யத்தில் சாமர்த்யம், நற்குணங்களில் பற்றுதல், துக்கமின்மை, த்ருட ஆரோக்யம் இவைகளை உடையவளாவாள்.

ஹஸ்தம் :—கைத் தேர்ச்சி, அழகிய கண் காதுகள், பொறுமை, ஒழுக்கம் எல்லாவற்றையும் நன்கறிதல், காந்தி, சுகத்தால் வளர்க்கப்பட்ட சரீரம் இவைகளை உடையவளாவாள்.

சித்திரை :—விசித்ர ஆபரணம், அழகு உடையவள் ஆவள். சுக்லபக்ஷ சதுர்தசி கூடாமல் இருந்தால்தான் இப்பலன். கிருஷ்ண சதுர்தசி கூடினால் விஷ கன்னிகையாவாள். சுக்ல சதுர்தசி கூடினால் ஏழ்மை உள்ளவள், குட்டை, விபசாரி.

சுவாதி :—பதிவ்ரதை. எப்போதும் புத்ரனுடன் இருப்பவள். ஐச்வர்யம் உடையவள், உண்மை பேசுபவள், குறைந்த வாகனம் உள்ளவள், கீர்த்தி உடையவள். சிநேகிதர்களோடு கூடியவள். சத்ருவை ஜயிப்பவள்.

விசாகம் :—ம்ருதுவாயும், அழகாயும் பேசுபவள். அழகிய சரீரம் உள்ளவள். விபவங்கள் உடையவள். க்ஷேத்ர, தீர்த்த யாத்திரைகளிலும், வ்ரத தர்மானுஷ்டானங்களிலும் ஆசையுள்ளவள், பந்துக்களிடம் பிரியம் உள்ளவள்.

அனுஷம் :—நல்ல சிநேகிதம் உள்ளவள். அகங்காரம் இல்லாதவள். பெருந்தன்மை உடையவள். அடக்கத்துடனிருப்பவள். அழகான இடையுடையவள். குரு பக்தி உடையவள்.

கேட்டை :—அழகியவள். ஸமர்த்தை. அழகாக வார்த்தை பேசுபவள், அதிகமாக ஐச்வர்யம் உள்ளவள். புத்ரனுள்ளவள், பந்துக்களிடம் பிரியம் உள்ளவள். உண்மை பேசுபவள்.

மூலம் :—ஸ்வல்ப ஸௌக்யமுடையவள். விதவை, தரித்ரை, வியாதி உடையவள், பந்து இல்லாதவள். அவமானம் அடைந்தவள். குட்டையாக இருப்பவள்.

பூராடம் :—அனுகூலியாயும், வம்சத்தில் பிரதானியாயும், மதிக்கத்தக்க காரியம் உள்ளவளாயும், உயரிய வீர்யம், உண்மை இவைகள் உள்ளவளாயும், அகன்ற கண்களையுடையவளாயும், ஆச்சர்யமான உருவம் உடையவளாயுமிருப்பாள்.

உத்தராடம் :—மனதிற்குப் பிடித்தவளாகவும், பிரசித்தி பெற்றவளாகவும், பல வஸ்துக்களில் அனுபவமுடையவளாகவும், பிரதானியாகவும் சந்தோஷத்தை அடைந்தவளாகவும், புருஷனுக்கு திருப்தி அளிப்பவளாகவுமாவாள்.

திருவோணம் :—மிக அழகுடையவள். நற்புத்தி உள்ளவள், சாஸ்திரங்களில் ஆசையுடையவள், மிகவும் மஹிமையுடையவள், தானம் செய்வதில் ஆசையுள்ளவள். உண்மை உரைப்பவள், பரோபகாரம் செய்பவள்.

அவிட்டம் :—கதை படிப்பதில் ஆசையுள்ளவள். அதிக அன்னம், வஸ்த்ரம் இவைகளை உடையவள். பல பொருளை

அளிப்பவள், குதிரையை உடையவள், நற்குண சேஷ்டையை உடையவள்.

சதயம் :—அடக்கமான மனதுடையவள். பந்துக்களால் கொண்டாடத் தக்கவள். தேவதா பூஜை பெரியோர்களிடம் பக்தி உடையவள். மிகவும் சந்தோஷத்துடன் ஹிதமாக இருப்பவள்.

பூரட்டாதி :—நற்குலத்தில் பிறந்தவள். அதிக ஐச்வர்யமுள்ளவள், புத்ர வாத்ஸல்யமுள்ளவள், பாத்திரமறிந்து தானம் செய்பவள். படிப்புள்ளவள், ப்ரதானமாக இருப்பவள். சாதுக்களிடம் ப்ரீதி உள்ளவள்.

உத்தரட்டாதி :—பெரியோர்களிடத்தில் ஹிதமாயிருப்பவள். அன்புள்ளவள், பொறுமையுடையவள், குரு ப்ரீதி உள்ளவள்-கர்வமில்லாதவள், விவேகமுடையவள், காரியத்திலே கண்ணுக இருப்பவள். சுப சௌக்யங்களுடையவள்.

ரேவதி :—பூஜிக்கத்தக்கவள், சுத்தை. வ்ரதம் நடத்துபவள், பசு முதலிய பிராணிகளை உடையவள். பிரியமான பார்வை உடையவள்.

சந்திரன் மேஷம் முதலிய ராசிகளில் இருப்பதன் பலன்.

மேஷம் :—சமர்த்தை. காரியங்களில் நோக்குடையவள், அழகிய சரீரம் உடையவள். பர்த்தாவிற்குகந்தவள், குரு ப்ரீதி உடையவள், ப்ரதானியாக இருப்பவள்.

விருஷபம் :—நல்லொழுக்கம், சாஸ்த்ரங்களில் பற்று, க்ஷேத்ர தீர்த்த யாத்ரைகளில் ஆசை, புத்ர பௌத்ராதிகள் இவைகளை உடையவள், நிரவ்யாதிகளை விரயம் செய்யாதவள். புருஷனுக்கு உகந்தவளாவாள்.

மிதுனம் :—நல்லொழுக்கம். அழகிய சரீரம், பிரியமான பார்வை. பலவித ஐச்வர்யம். மரியாதை. ஸாமர்த்யம், உபகாரம் செய்வதில் ப்ரீதி. அழகிய கண்கள் இவைகளை உடையவள்.

கடகம் :—ரோகமுள்ளவள், பந்துக்களால் கொண்டாடப்படுபவள். மானமுடையவள். எதிரிகளை அடக்குபவள். தேவ ப்ராம்மணரிடத்தில் பக்தி உடையவள்,

சிம்மம் :—கொடிய தன்மையுடையவள், ஆமிஷத்தில் பிரியம் உடையவள், ஆடை, ஆபரணம், கம்பிர சேஷ்டை, அழகான குஹ்யம், நல்ல உருவம் உடையவள்.

கன்னி :—ஐச்வர்யம், பசு முதலிய பிராணிகள்—இவைகளை உடையவள், புருஷனுக்கு அடங்கியவள், எதிரிகளை ஜயிப்பவள், பொறுமை, சுத்தம் இவைகளை உடையவள்,

துலாம் :—வ்ரதத்தை ஆசரிப்பவள், பதிவ்ரதை, ஹிதமான பந்துக்களை உடையவள், புத்ரவதி, மனதிற்குகந்தவள், வ்யர்த்தமான ஆடம்பரம், காமம் இவைகளற்றவள்.

விருச்சிகம் :—மறைவில் பாபம் செய்பவள், உறுதியான சுபாவம், கொண்டாடத்தக்க நடத்தை, குருபக்தி, நியமங்கள், அதிக ஐச்வர்யம் இவைகளை உடையவள். அகங்காரமில்லாதவள்.

மிதுனம் :—நல்லொழுக்கம், அழகிய சரீரம், பிரியமான பார்வை, பலவித ஐச்வர்யம், மரியாதை, ஸாமர்த்யம், உபகாரம் செய்வதில் ப்ரீதி, அழகிய கண்கள் இவைகளை உடையவள்.

கடகம் :—ரோகமுள்ளவள், பந்துக்களால் கொண்டாடப்படுபவள், மானமுடையவள், எதிரிகளை அடக்குபவள், தேவப்ராம்மணரிடத்தில் பக்தியுடையவள்.

சிம்மம் :—கொடிய தன்மை உடையவள், ஆமிஷத்தில் பிரியமுடையவள், ஆடை ஆபரணம், கம்பிர சேஷ்டை, அழகான குஹ்யம், நல்ல உருவம் உடையவள்.

கன்னி :—ஐச்வர்யம், பசு முதலிய பிராணிகள் இவைகளை உடையவள், புருஷனுக்கடங்கியவள், எதிரிகளை ஜயிப்பவள், பொறுமை, சுத்தம்—இவைகளை உடையவள்.

துலாம் :—வ்ரதத்தை ஆசரிப்பவள், பதிவ்ரதை, ஹிதமான பந்துக்களை உடையவள், புத்ரவதி, மனதிற்குகந்தவள், வ்யர்த்தமான ஆடம்பரம், காமம் இவைகளற்றவள்.

விருச்சிகம் :—மறைவில் பாபம் செய்பவள், உறுதியான சுபாவம் கொண்டாடத்தக்க நடத்தை, குருபக்தி, நியமங்கள், அதிக ஐச்வர்யம் இவைகளை உடையவள், அகங்காரமில்லாதவள்.

தனுஸ் :—வ்ரதம், தானம் செய்பவள், ஆசையுள்ளவள், சங்கீதத்தில் ப்ரீதி உள்ளவள், ப்ராணிகளிடம் ஹிதமாக இருப்பவள், தாயிடத்தில் விதேயமாக இருப்பவள்.

மகரம் :—விகாரமான பற்களை உடையவள், கொடிய ஸ்வபாவமுடையவள், மனதிற்குகந்தவள், வித்யை உடையவள், உண்மையுடையவள், நல்ல அழகு, அடக்கம், நீதியில் நோக்கம் இவைகளை உடையவள், எதிரியை அடக்குபவள்.

கும்பம் :—நல்ல முகமுடையவள், தானம் செய்வதில் மனமுள்ளவள், அதிக ஐச்வர்யமுள்ளவள், அபிமானமுள்ளவள்.

மீனம் :—புத்ர ஸம்பத்துடையவள், தர்மபரை, நல்லொழுக்கமுடையவள், இந்த்ரிய அடக்கம் உடையவள், வித்யைகளில் நிபுணை, லஜ்ஜை உள்ளவள், மரியாதையில் எண்ணம் உள்ளவள், மனதிற்கு இனியவள்.

மேஷம் முதலிய லக்னங்களில் பிறப்பதின் பலன்.

மேஷம் :—உண்மையில் எண்ணம், கொடியஸ்வபாவம், எப்போதும் கோபம், அதிக ச்லேஷ்மம், நிஷ்டுரமான பேச்சு, தன் பந்துவர்க்கங்களில் அதிகப் பற்றுதல் இவைகளை உடையவள்.

வ்ருஷபம் :—உண்மையில் பற்று, நன்னடத்தை, பர்த்தாவிற்குப் பிரியம், கலைகளில் சாமர்த்தியம், ஸ்வஜனங்களிடத்தில் ஆசை, புருஷன் வார்த்தையில் மதிப்பு இவைகளை உடையவள் ஆவாள்.

மிதுனம் :—கொடிய வார்த்தை, காமப்பற்று, குணமின்மை, எப்போதும் க்ரூரஸ்வபாவம், கபம், வாயுக்களின் அதிகம், அதிகச் செலவு, கொடிய நடத்தை இவைகளை உடையவளாவாள்.

கடகம் :—நல்ல உருவம், ஐச்வர்யம், நீதி, பந்துப்ரியம், நல்லொழுக்கம், காந்தி, சுகங்களை உடையவளாவாள்.

சிம்மம் :—க்ரூரஸ்வபாவம், அதிக கபம், கலகத்தில் ப்ரியம், போக்ய பதார்த்தங்களால் துஷ்டசரீரம், எப்போதும் பரோபகாரத்தில் ஆசை இவைகளை உடையவளாவாள்.

கன்னி :—சௌபாக்யம். சௌக்யம். எல்லோரிடத்திலும் ஹிதம். நற்சுற்றம். தர்மத்தில் ஆசை. இந்திரிய ஜயம். வித்தைகளில் சாமர்த்தியம் இவைகளை உடையவளாவாள்.

துலாம் :— தாமத காரியம். மந்த ஸ்வபாவம். ப்ரீதியின்மை. அதிக கர்வம். பொறுமை. அதிக தாகம். நீதியின்மை இவைகளை உடையவளாவாள்.

விருச்சிகம் :—அழகிய சரீரம், அழகான கண்கள், நல்லொழுக்கம். நற்குணம். சத்யத்தில் எண்ணம் இவைகளை உடையவள். பதிவ்ரதை.

தனுசு :—புத்திசாலி. புருஷன்?பால் நடப்பவள். நல்வார்த்தையில் அடங்கி நடப்பவள் விதியினால் கடினமானவள். ஸ்நேஹமில்லாத மனதுடையவள். ப்ரீதி இல்லாதவள்.

மகரம் :—சபலை. சத்யம். நிர்த்தாடனத்தில் ஆசை. காரியத்தில் நோக்கு. உலகத்தில் ப்ரஸித்தி. நற்குணம் இவைகளுடன் கூடியவள். புத்ரனுடையவள்.

கும்பம் :—ஸ்திரீ ப்ரஜையையுடையவள். ரத்னத்தால் பிடையை யடைபவள். பெரியவர்களுக்காக சுத்தமான வேஷமுடையவள். செலவு செய்பவள். புண்யத்தில் நோக்குடையவள், நன்றி மறப்பவள்.

மீனம் :—புத்ர பௌத்ரர்கள். புருஷனிடத்தில் ப்ரியம். பந்துக்களால் கொண்டாடப்படுவது. அழகான கண்கள். கேசம். தேவப்ராம்மணர்களிடம் பக்தி. நியாயம் குருக்களிடத்தில் ப்ரியம் இவைகள் உள்ளவளாவாள்.

ஸ்த்ரீகளின் ராஜ யோகங்கள்.

லக்னத்தில் குரு. சப்தமம் அல்லது தன் வர்க்கத்தில் சந்த்ரன், தசமத்தில் சுக்ரனும் இருக்க மேற் ஜாதியில் பிறந்தாலும் ராஜமஹிஷியாவாள்.

1, 4, 7, 10-க்களில் சுபர்களும். லக்னத்தில் பாபியும். சப்தமம் மனுஷ்ய ராசியாகவுமிருந்தால் அதிக ஐச்வர்யமுள்ளவளாகவும். சாந்த ஸ்வபாவமாகவும், அதிக சுகத்தால் சந்தோஷத்தை அடைந்தவளாகவும், ராஜமஹிஷியாகவுமாவாள்.

குரு மட்டில் ஷட்வர்க்கத்தில் தோஷமில்லாமல் கேந்த்ரத்திலிருந்து சந்த்ரன் பார்த்தால் ராஜமஹிஷியாகவும், நிறைந்த தனமுள்ளவளாகவும். கஜ தானம் செய்யக்கூடியவளாகவும், ப்ரசித்தையாகவும் ஆவாள்.

லாப ஸ்தானத்தில் சந்த்ரன் வலித்து சுக்ரன் புதனோடு சேர்ந்து 7-ல் இருக்க குரு வீக்ஷணம் பெற்றால் அரச மஹிஷியாகவும். ஸ்துதி பாடகர்களால் ஸ்தோத்ரிக்கப்பட்டவளாகவுமாவாள்.

லக்னத்தில் புதன் வலித்து அந்த ஸ்தானம் புதனுக்கு உச்ச ஸ்தானமாய் லாபத்தில் குரு இருந்தால் ராஜ பத்னியாகவும். ப்ரசித்தையாகவுமாவாள்.

3-ல் புதன், 4-ல் குரு. ஷட்வர்க்க பலன் பெற்றும் லக்னத்தில் சுக்ரனும் இருந்தால் அரசனுக்கு உகந்தவளாகவும். அநேக குதிரைகள் உடையவளாகவுமாவாள்.

சீர்ஷோதய ராசி 7-ம் இடமாய் அதில் சந்த்ரனும். 4-ம் இடம் பாபியில்லாமல் இருக்க ராஜ மஹிஷியாகவும், அதிக குதிரையானைகளுடன் கூடினவளாகவும். புருஷனை முக்யமாய் உடையவளாகவும். எதிரி பக்ஷத்தை ஜயிப்பவளாகவுமாவாள்.

3 கிரஹங்கள் ஷட்வர்க்க சுத்தங்களானால் ராஜ பத்னி. 4 கிரஹங்கள் ஷட்வர்க்க சுத்தங்களானாலும் ராஜ பத்னி.

5 கிரஹங்கள் ஷட்வர்க்க சுத்தங்களானால் விமானத்தை அடைந்தவளாகவும். லோகநாயக பத்னியாகவுமாவாள்.

பூர்ண சந்த்ரன் 4-ல் இருந்து அது உச்ச வீடாகி குரு வீக்ஷணம் பெற்றால் பட்டமஹிஷி. சத்ரு ஜயம் உடையவள். புத்ர பௌத்ரர்களோடு கூடியவள்.

புதன் ஸ்வக்ஷேத்ரத்தில் இருந்து குரு ஷட்வர்க்க சுத்தனாய் 4-ல் இருந்து சுக்ரன் பார்க்க மஹாராணியாவாள்.

செவ்வாய் 3 அல்லது 6-ல் இருந்து சனி ஷட்வர்க்க சுத்தனாய் 11-ல் இருந்து ஜன்ம லக்னம் ஸ்திர ராசியாகி குருவும் அங்கிருக்க புருஷனுக்கு மிகவும் உகந்தவளாவாள்.

சூர்யன் தன் உச்ச க்ஷேத்ரத்தில் இருந்து அது லாப ஸ்தான மாகி பூர்ண சந்த்ரன் லக்னத்தில் இருந்து புதன் 10-ல் இருக்க அரசியாகவும், புருஷனுக்கடங்கியவளாகவும், புத்ர பௌத்ரர்கள் உள்ளவளாகவுமாவாள்.

சூர்யன் ஷட்வர்க்க சுத்தனாய் 3-லும், 6-ல் சனியும் இருக்க ராஜமஹிஷியாகவும், தர்மத்தை முக்யமாக உடையவளாகவும், புருஷனுக்கு உகந்தவளாகவுமாவாள்.

ஸ்திர ராசி ஜன்ம லக்னமாய் அதில் ஷட்வர்க்க சுத்தனான புதன் இருந்து அல்லது பார்க்கப் பெற்று ஏதாவதொரு கிரஹம உச்சமாக அரசியாகவும், யானைகளுடையவளாகவுமாவாள்.

புதன் உச்சனாய் லக்னத்திலும், சுக்ரன் 2-லும், குரு லாபத்திலும், 10-ல் சந்த்ரனும் இருந்தால் அவள் சக்ரவர்த்தினின் பத்னியாவாள்.

லக்னம் முதலிய பாவங்களில் சூர்யன் முதலியவர்கள் இருப்பதன் பலன்.

லக்னத்தில் சூர்யனிருக்க :—கொடிய ஸ்வபாவம் உடையவள், அதிக வியாதி உள்ளவள். இளைத்தவள். நன்றி மறந்தவள். பரான்னத்தில் ஆசையுள்ளவள். சோபையற்றவள்.

லக்னத்தில் சந்த்ரனிருக்க :— (சுக்லபக்ஷ சந்த்ரனானால்) அழகிய சரீரமுடையவள். (கிருஷ்ணபக்ஷ சந்த்ரனானால்) இளைத்த சரீரமுடையவள். ரோகமுடையவள். கலஹப்ரியை. அழுக்கு வஸ்த்ரமணிபவள்.

லக்னத்தில் செவ்வாயிருக்க :— சத்தாதிக்யத்தால் கேடுற்ற அவயவம் உடையவள். மஹிமை இல்லாதவள். பர்த்தாவினால் வெறுக்கப்படுபவள். அதிருஷ்ட ஹீனை. எல்லாரோடும் கலந்து பழகுபவள்.

லக்னத்தில் புதனிருக்க :—அழகு. பதிபக்தி. தர்மம். நியாயம். விசாலமான கண்கள். அதிக போஜனம். அன்பு. உண்மை இவைகளுடன் கூடியவள்.

லக்னத்தில் குரு இருக்க :— உண்மை, நல்ல அனுபவம். அழகிய தேகம். உயர்ந்த தன்மை. அன்புடைய சாதுக்களின் சேர்க்கை இவைகளையுடையவள்.

லக்னத்தில் சுக்ரன் இருக்க : நல்ல அழகு. அதிக ஐச்வர்யம், ஸாமர்த்யம், நல்லொழுக்கம். தோஷமில்லாத அவயவங்கள். சத்ருவை அழிக்கும் தன்மை இவைகளை உடையவள்.

லக்னத்தில் சனி இருக்க : அழகற்ற அவயவங்கள். அதிக சிரமம். பெருத்த பல். எலும்பு, ஊனக் கண்கள் இவைகளை உடையவளாவாள்.

இரண்டாமிடத்தில்

சூர்யன் : தன தான்யம் இல்லாதவள். கடுமையான வார்த்தை சொல்பவள். சக்தி இல்லாதவள். கலஹப் பிரியை. துவேஷத்தில் ஆசை. துஷ்ட ஸ்வபாவம். சிநேகம் இல்லாமை இவைகளை உடையவள்.

சந்த்ரன் : சுகை. வணக்கம். தர்மானுகூலம். பதி வாக்ய போஷணை, பிராம்மண பக்தி. நியாயம் இவைகளையுடையவள்.

செவ்வாய் : ஒழுங்கினம். தாரித்ர்யம். துஷ்ட பர்த்தா. அதிக வஸ்தாது, காமத்தில் ஆசை. அதிக ரோகம். கேசமின்மை இவைகளை உடையவள்.

புதன் : தனம். சுத்தம். நல்ல அழகு. பிராம்மண ஆராதனத்தில் பக்தி. யாகத்தில் பிரியம். சோபை இவைகளுடன் கூடியவள்.

குரு : அதிக ஐச்வர்யம். சௌபாக்யம். மனதிற் குகந்த தன்மை. தர்மம். நீதி. ஆசையின்மை இவைகளை யுடையவளாவாள்.

சுக்ரன் : தனம். சாதுர்யச் செய்கை. கட்டின்மை. தர்மத்தில் பற்று. நல்ல தன்மை. விளம்பரமான காரியச் செய்கை. மிருதுவாகப் பேசுவது இவைகளை யுடையவளாவாள்.

சனி : ஏழ்மை. விலக்கப்படும் தன்மை. அவமானம். நீதியின்மை. கெட்ட எண்ணம் இவைகளை உடையவளாவாள்.

மூன்றாமிடத்தில்

சூர்யன் : ஸௌக்யம். அழகிய முகம். விசாலமான கண். விசாலஸ்தனங்கள். ரோக தேகம் இவைகளை உடையவளாவாள்.

சந்த்ரன் : கபம், வாதம் இவைகள் அதிகமாக இருக்கும் தன்மை, கடுமையான பேச்சு, கெட்ட சேர்க்கை, நீதியில்லாமை, துஷ்ட ஸ்வபாவம், ஏழ்மை, நன்றி மறத்தல் இவைகளை யுடைய வளாவாள். இதில் குரு ஸம்பந்தம், வீக்ஷணம் பெற்றால் இதற்கு எதிரிடையான பலனுண்டாகும்.

செவ்வாய் : சுபகை, சாந்தமான ப்ரக்ருதி, பந்துக்களிடம் பிரியம், ஸாதுக்களிடம் பக்தி, ஆரோக்யம், உயர்ந்த தன்மை இவைகளை உடையவளாவாள்.

புதன் : ஐச்வர்யம், தேவப்ராம்மண பக்தி, புத்ராநுகூல்யம், பெரிய தன்மை, அனுகூலமாக இருக்கும் ஸ்வபாவம் இவை களுள்ளவள்.

குரு : ஒடுக்கப்பட்ட மஹிமை, விபத்தில்லாத அங்கங்கள் உடையவள்.

சுக்ரன் : தாரித்ர்யம், பந்துக்களிடம் இருந்து பிரிதல், துக்க மின்மை, புருஷனால் ஒதுக்கப்படல், கொடுமையாகவும், தளர்ந்த தாகவும் உள்ள பேச்சு உடையவளாவாள்.

சனி : சாமர்த்யம், முக்கியத்தன்மை, பாக்யம், அதிகக் குழந் தைகள், நல்லவர்களால் புகழப்படுவது இவைகளுடன் கூடிய வளாவாள்.

நான்காமிடத்தில்

சூர்யன் : ஸௌக்யமின்மை, ரோகமுள்ள சரீரம், விகார முள்ள பற்கள், வெறுக்கும் தன்மையுடையவள் ஆவாள்.

சந்த்ரன் : அதிக ஸௌக்யம், ஆச்சரியமான ஆபரணங்கள், உறுதி, காரியங்களில் ஆசை, அதிக போகம், தேவதை பெரியவர் களிடங்களில் பக்தி இவைகளுள்ளவளாவாள்.

செவ்வாய் : துராசை, துஷ்க்ருத்யம், ஸௌக்யமின்மை, ஸௌபாக்ய மின்மை, விசால நோக்கம், ஜனங்களிடம் பிரியம், ரோஷம் இவைகளை உடையவளாவாள்.

புதன் : சுகம், நல்ல ஜனங்களின் சேர்க்கை, தேவப்ராம்மண பக்தி, தர்ம காரியத்தில் பற்றுதல் இவைகளை உடையவளாவாள்.

குரு : ஸௌக்யம், அதிக போஜனம், ஆபரணங்கள், புத்ய வர்க்கங்கள், ப்ரஸித்தி, குணத்தால் கொண்டாடப்படுதல் இவை களை உடையவளாவாள்.

சுக்ரன் : அதிக ஸௌக்யம், தனம் விளையாட்டுத் தன்மை, தர்மத்தில் பிரியம், அடக்கம், பெருமை இவைகளை உடைய வளாவாள்.

சனி : கஷ்டம், புத்தியின்மை, சஞ்சலத் தன்மை, கீழோ ரிடம் ஸ்நேகம், பெருமை யில்லாமை இவைகளுள்ளவளாவாள்.

ஐந்தாமிடத்தில்

சூர்யன் : குறைவான சந்ததி, முக்கியத் தன்மை, பெருத்த முகம், பற்கள், மாத்ரு-பித்ரு பக்தி, இனிமையான வார்த்தை, ப்ராம்மணர்களிடம் விசுவாசம் இவைகளை உடையவளாவாள்.

சந்த்ரன் : ஸத்புத்ரன், நற்குணம், கௌரவம், அதிக வேலை கள், ஸௌக்யம், உண்மை, அடக்கம், நல்ல அழகு, புருஷனுக்கு வசமாயிருப்பது இவைகளை அடைந்தவளாவாள்.

செவ்வாய் : துஷ்புத்ரன், லஜ்ஜை யின்மை, துஷ்டர்களுக்கு பிரியமாக இருப்பது, நிச்செயலில் ஆசை, பந்துக்களில்லாமை இவைகளுடையவளாவாள்.

புதன் : அல்ப சந்ததி, அல்ப ஐச்வர்யம், விவாதத்தில் ஆசை, அலைச்சல், கீழ்ந்த காரியம், அபிப்ராயமில்லாமை இவைகளை அடைவாள்.

குரு : ஸத்புத்ரர்கள், நற்காரியம், ஆனுகூல்யம், வ்ரததர்மா சரணம், உண்மையில் எண்ணம், கொண்டாடும் தன்மை யிவை களை அடைகிறாள்.

சுக்ரன் : எல்லாம் நிறைந்தவள், பெண்கள் அதிகமுடை யவள், துஷ்டர்களோடு சேர்க்கை யின்மை, நல்ல ஆகாரம், முக் கியத் தன்மை உடையவளாவாள்.

சனி : புத்ரன் இல்லாமை, தயை யில்லாமை, கொழுப்பு, தாசி போல் நடத்தல், ஸாது சேர்க்கை யின்மை இவைகளை அடைவாள்.

ஆறுமிடத்தில்

சூர்யன் :—ஸாமர்த்தியம், சத்ரு க்ஷயம், சாந்தம், தர்மத்தில் பிரியம், அழகு இவைகளை உடையவளாவாள்.

சந்த்ரன் :—அல்பைச்வர்யம், அதிக விரோதம், வணக்கம் இல்லாமை, சபல சித்தம், சரீரத்தில் புண், ரோக பிடை இவைகளையுடையவளாவாள்.

செவ்வாய் :—நாதனுடைமை, சத்ரு க்ஷயம், அதிக ஐச்வர்யம், நல்லவர்களிடத்தில் பக்தி, வித்யை, ரோகமின்மை இவைகளை அடைகிறாள்.

புதன் :—சத்ரு க்ஷயம், தயை, குறைந்த ஆயுள், கொடிய கை, காமம், உபகார சிந்தை இவைகளுள்ளவள்.

குரு :—அதிக சத்ரு, ஆபத்து, வஞ்சனையான உபகாரம் செய்வது, நடுக்கமுள்ள அவயவம், முக்யமான கார்யத்தைச் செய்வது இவைகளை உடையவள்.

சுக்ரன் :—பொறுமை, அதிக கோபம், கடுமையான ஸ்வபாவம், சத்ரு ஜயம், புருஷ புத்ராதிகளால் தளளப்படுதல் இவைகளை அடைகிறாள்.

சனி :—மந்த ஸ்வபாவம், ப்ராதான்யம், புத்ரர்கள், அதிக ஆடை ஆபரணங்கள், புத்ரவாத்ஸல்யம் இவைகளைப் பெறுகிறாள்.

ஏழாமிடத்தில்

சூர்யன் :—சுகமில்லாதவள், கடுமையான ஸ்வபாவமுடையவள், ப்ரீதி இல்லாதவள், கபப் ப்ரக்ருதி, நிச்சயமில்லாதவள், அழகற்றவள்.

சந்த்ரன் :—ஸமர்த்தை, புருஷனிடம் ப்ரியமுடையவள், தர்மாதர்மம் தெரிந்தவள், அழகான வார்த்தையுடையவள், வைபவங்களை உடையவள், தேஜஸ் உடையவள், ஆசாரத்துடன் இருப்பவள்.

செவ்வாய் :—பால்யத்தில் வைதவ்யம், துஷ்ட ஸ்வபாவம், விபவமின்மை, வெறுக்கத்தக்க அவயவங்கள், நற்குணமில்லாமை இவைகளைப் பெறுவாள்.

புதன் :—மிக உயர்வு, ஸாமர்த்யம், சுபகார்யம், சாஸ்த்ரங்களில் விச்வாஸம், நியமங்கள், நல்ல ப்ரபாவம், ப்ரியம் இவைகளை உடையவள்.

குரு :—நல்லெண்ணம், புண்ணிய கார்யங்கள், மஹான்களிடத்தில் அன்பு, சத்ருக்கள், புருஷனிடம் ப்ரியம், கீர்த்தி இவைகளை அடைவாள்.

சுக்ரன் :—அதிக ஐச்வர்யம், ப்ரபாவம், பர்த்தாவினிடம் ப்ரியம், சாஸ்த்ரங்களில் பற்றுதல், ஸாமர்த்யம், ப்ராம்மணரிடம் அன்பு, ஜனங்களுக்கு உகந்த தன்மை இவைகளை அடைவாள்.

சனி :—வைதவ்யம், ரோகம், பானத்தில் ப்ரியம், துர்ஜன சேர்க்கை, வஞ்சனம் இவைகளை உடையவளாகிறாள்.

எட்டாமிடத்தில்

சூர்யன் :—தாரித்ர்யம், துக்கம் முதலியவைகளை உடைய பந்துவர்க்கமுடையவள், அதர்ம கார்யங்களை உடையவள், ரக்த ரோகத்தால் பீடிக்கப்பட்டவள்.

சந்த்ரன் :—கொடுமையான ஸ்வபாவமுடையவள், கெட்ட நேத்ரம், ஸ்தனம், குஹ்யம் இவைகளை உடையவள், நல்ல வேஷம், நல்ல ஆபரணமில்லாதவள், நன்றாக இருப்பவள்.

செவ்வாய் :—அதிக ரோகம், இளைப்பு, நாதனில்லாமை, தாரித்ர்யம், வ்ரணம், துக்கம், ஹிம்ஸை, காந்தியின்மை இவைகளை அடைவாள்.

புதன் :—நன்றி மறத்தல், அபிமானமின்மை, தர்மமில்லாமை, ஆந்த்ரம், பயம், ஜனங்களால் தடுக்கப்படுவது இவைகளுடையவளாவாள்.

குரு :—சிறிது உண்மை, விசால எண்ணம், பதி விரோதம், கை-கால்களில் சூலம், துக்கம், வியாதி இவைகளை அடைகிறாள்.

சுக்ரன் :—அதிக மதம், துக்கம், விபவமில்லாமை, தயையின்மை, பர வஞ்சனையால் கஷ்டம், கெட்ட ஆடை, தர்மமின்மை இவைகளைப் பெறுகிறாள்.

சனி :—ஸ்வகர்ம தோஷங்களாலுண்டான கெடுதல், துஷ்ட ஸ்வபாவம், தர்ம ஸத்யங்களில்லாமை, சௌர்யத்தில் எண்ணம், ஏமாற்றும் ஸ்வபாவம் இவைகளை அடைகிறுள்.

ஒன்பதாமிடத்தில்

சூர்யன் :—கெட்ட தர்மம், சாகஸப் பிரியம், பாக்யமின்மை, அதிக சத்ருக்கள், அதிகமான ரோஷம், விபவமின்மை இவைகளை அடைகிறுள்.

சந்த்ரன் :—தர்மம், அழகான இடை, அதிக போகம், வ்ரதங்களில் பற்று, அழகு, நல்ல புத்ர ப்ருத்ய வர்க்கங்கள், அதிக சௌக்யம் இவைகளை அடைகிறுள்.

செவ்வாய் :—தர்மமில்லாமை, சுகமின்மை, வியாதி, பாக்யமின்மை, பெரியோர்களால் விலக்கப்படுதல், மாம்ஸத்தில் ஆசை, பானத்தில் ப்ரியம் இவைகளை அடைவாள்.

புதன் :— தர்மம் செய்வதில் திருப்தி, வணக்கம், பாக்யம், கீர்த்தி, ஸாமர்த்யம், பொறுமை, உண்மை இவைகளை அடைவாள்.

குரு :— தனிகர்களான புத்ரர்கள், தேவதை, குரு, உண்மை இவைகளில் பற்றுதல், குளம் வெட்டுவதில் ஆவல், அழகு, ப்ரஸித்தி, ப்ராம்மணர்களிடம் பக்தி, நன்றி யறிதல் இவைகளை உடையவளாவாள்.

சுக்ரன் :— தர்மத்தில் எண்ணம், ப்ராதான்யம், நானாவித பொருள்கள், ஆடை அன்னம், க்ருஹம் முதலியவைகள், துஷ்ட ஸ்வபாவம், புருஷ ஸ்வபாவம் இவைகளை அடைகிறுள்.

சனி :— கெட்ட காரியத்தில் ஆசை, அதிகச் செலவு, கருமிகளுடன் சிநேகம், படிப்பின்மை, வினயமில்லாமை இவைகளை அடைகிறுள்.

பத்தாமிடத்தில்

சூர்யன் :— கெட்ட கார்யத்தில் ஆசை, ப்ரபாவமில்லாமை, தளர்ச்சி, கருப்பு நிறம் இவைகளைப் பெறுகிறுள்.

சந்த்ரன் :— அதிக தனம், தங்கம், ப்ரஸித்தி, சேஷ்டை இல்லாமை, முக்யத்தன்மை, கொடுக்கும் ஸ்வபாவம், புண்ய கார்யத்தில் ஆசை, உண்மை இவைகளோடு கூடுகிறுள்.

செவ்வாய் :— கெட்ட காரியங்களில் ஸாமர்த்யம், துர் எண்ணம், ஒழுக்கமின்மை, அதர்மத்தில் ஆசை, லஜ்ஜையின்மை, புத்தியில்லாமை இவைகளை அடைகிறுள்.

புதன் :—நல்ல தர்மம், பதிபக்தி, அதிக ஐச்வர்யம், வினயம் இவைகளை அடைகிறுள்.

குரு :—குணமுள்ளவள், ப்ரசித்தமான காரியத்தில் இறங்குபவள், வேலைக்காரிகளை உடையவள், சாமர்த்யமும், நல்ல காரியமும், நன்னடத்தையுமுள்ளவளாவாள்.

சுக்ரன் :—கீர்த்தி, ஐச்வர்யம், ப்ரசித்தகாரியங்களில் கொண்டாடப்படுவது, அதிக அறிவு, வ்ரதானுஷ்டானங்களில் பற்றுதல், ஸத்யம் இவைகளைப் பெறுகிறுள்.

சனி :—கெட்ட காரியத்தில் ஆசை, ஸ்திரீகளை அனுஸரித்து நடப்பது, வ்யஸனம், பிடை, தாரித்ரியம் இவைகளை அடைகிறுள்.

பதினோராமிடத்தில்

சூர்யன் :—லாபம், அதிக புத்ர-பௌத்ரர்கள், இந்த்ரிய ஜயம், கலைகளில் சாமர்த்யம், பெருமை, பந்துக்களால் கொண்டாடப்படுவது இவைகளை அடைகிறுள்.

சந்த்ரன் :—நல்ல லாபம், சுபம், விதி அறிவு, அடக்கமான மனது, தெளிவான ஸ்வபாவம், ப்ரீதி, வியாதி இல்லாமை, தானம செய்தல் இவைகளை அடைகிறுள்.

செவ்வாய் :—அதிக லாபம், சேஷ்டையில்லாமை, சுபஸ்வபாவம், பற்பல உபசாரம், புருஷனிடம் ப்ரீதி, தர்மத்தில் பற்று இவைகளை அடைகிறுள்.

புதன் :—ப்ரியமும், தாராளமுமான மனது, லாபம், நல்லொழுக்கம், பாதிவ்ரத்யம், ஜனங்களுக்கு உகப்பு இவைகளை அடைகிறுள்.

குரு :—மன அடக்கம், அதிக கீர்த்தி, ஸ்திரீ சகவாசம், சிற்பத்தில் நோக்கு, குண கீர்த்தனத்தில் பிரியம், உண்மை இவைகளை அடைவாள்.

சுக்ரன் :—அதிக லாபம், தோஷமில்லாமை, அனேக சாஸ்திரங்களில் பற்றுதல், அதிக ப்ரபாவம், பலவித அடைக்கலம் உள்ளவள் ஆவாள்.

சனி :—ஸத்புத்ரன், நல்ல ஐச்வர்யம், அழகான தேகம், பலவித அன்ன பானங்கள், அதிக லாபம், பயமின்மை இவைகளைப் பெறுவாள்.

பன்னிரண்டாமிடத்தில்

சூர்யன் —கெட்ட காரியங்களில் செலவு, வினயமின்மை, அதிகச் செலவு, பாபத்தில் பற்றுதல், கொடிய ஸ்வபாவம், சஞ்சல புத்தி, சுத்தி இல்லாமை இவைகளை அடைகிறாள்.

சந்த்ரன் :—அதிகம் செலவு, வாத ப்ரகோபம், அதிக கொடுமையான ஸ்வபாவம், ஏழ்மையான முகம், நீதியின்மை, பொறுமையில்லாமை, தரித்ரியம் இவைகளை அடைவாள்.

செவ்வாய் :—கெட்ட அன்னம், குணமின்மை, கெட்ட காரியத்தில் செலவு, பானத்தில் நோக்கம், கொடுமை, அதிக ஆசை, பலமில்லாமைகளை அடைகிறாள்.

புதன் :—லஜ்ஜை யில்லாதவள், ப்ரதாபமில்லாதவள், சண்டையில் ஆசையுடையவள், அங்கஹீனை, குணமில்லாதவள், சாதுக்களால் விலக்கப்பட்டவள், இளைத்த சரீரமுடையவள்.

குரு :—செலவாளி, ரோகமுள்ளவள், லாபத்தில் கெடுதலை அடைபவள், குல தர்மம் இல்லாதவள், இயற்கையில் துஷ்டை, பிறருடைய தர்மத்தை ரக்ஷிப்பவள்.

சுக்ரன் :—கற்காரியத்தில் செலவால் துக்கமடைபவள், சமான அவயவமுள்ளவள், அதிக வேஷம் போடுபவள், பொய் வார்த்தையில் ஆசை, வியாதியினால் தளர்ந்தவள், புத்தியற்றவள்.

சனி :—அதிக ரக்தமுடையவள், வாதகப ப்ரக்ருதி, விவேகமற்றவள், வக்ர ஸ்வபாவை, சதா விலக்கப்பட்டவள், துக்கத்தால் கலங்கியவள்.

சப்தமஸ்தானம், சுக்ரன், சந்த்ரன், குரு, புதன் இவர்களில் தனித்தோ எல்லோருடனே எப்படி சேர்ந்தாலும், சுக்ர, சந்த்ர, குரு, புதர்களின் க்ஷேத்ரம், ஷட்வர்க்கம், சப்தமஸ்தானம் ஆனாலும்; சப்தமஸ்தானம் இக்ரகங்களால் பார்வை பெற்றாலும் அங்கிருக்கும் க்ரகங்களின் ஸ்வபாவங்களையடைவர்.

ஸப்தமாதிபன் வஸிக்கும் க்ஷேத்ரம், ஸப்தமாதிபனின் உச்ச க்ஷேத்ரம், நீச க்ஷேத்ரம், நவாம்ச ராசி இவைகளே களத்ர ஜன்ம லக்ணமாகச் சொல்லலாம்.

லக்னாதிபன், ஸப்தமாதிபன் யாருடைய க்ஷேத்ரம் அம்சங்களையடைகிறானே, அந்த க்ஷேத்ரத்தில் களத்ர ஜன்மத்தைச் சொல்லவும்.

ஜன்ம லக்னம், சந்த்ர லக்னம் இவைகளில் இருந்து சப்தமத்தில் வஸிப்பவன் அல்லது பார்ப்பவன் வீட்டில் களத்ரம் பிறந்திருப்பதாகச் சொல்லவும்

சுக்ரனுக்கு சப்தமத்தில் அல்லது பலம் பெற்று அவன் இருக்கும் க்ஷேத்ரம் சந்த்ரன் வஸிக்கும் துவாதசாம்ச ராசிக்கு த்ரிகோணம் இவைகள் களத்ரத்திற்கு ஜன்ம லக்னம் ஆகும். (இம்மாதிரியே ஸ்திரீக்கு புருஷனையும் காண்பது.)

பெண்ணின் ஜனன காலத்தில் சந்த்ராஷ்டக வர்க்கத்தில் அதிக பிந்துக்கள் உள்ள ராசியில் புருஷன் ஜனனமானால் நன்மை தருவதாகும். இவ்விதமே மாற்றிப் பார்க்கவும்.

சந்த்ரன் தம்பதிகளில் ஒருவர்க்கொருவர் 6. 8. 12, 3. 11 களில் இருந்தால் புத்ர தோஷமுடையவர்களாகவும், கலகம் செய்பவர்களாகவும் இருப்பர்.

கடகம் ஜன்ம லக்னமாய் அதில் சந்த்ரனும், பலவானான சுக்ரன், புதன், குரு இவர்களுமிருக்க பல சாஸ்திரங்களில் ஸமர்த்தையாயும், ப்ரஸித்தையாயுமாவாள்,

இது மாதிரி விஷயங்களை ஸ்திரீகளின் விவாகம், வரன் நிச்சயம், கன்னிகாதானம், மாதஸ்மரண ப்ரச்ன காலத்திலுமுள்ள லக்னத்தினாலும் ஆராயலாம்.

எட்டாம் பாவம்

மேஷம் 8-வதாகில் :—அன்ய தேசத்தில் மரணம், பதார்த்தங்களை ஆராயும் தன்மை, அதிக தனம், அதிக துக்கம் இவைகளுண்டாகிறது.

ரிஷபம் 8-வதாகில் :— சிலேஷ்மத்தால் கிருஹத்தில் மரணம், நாற்கால் பிராணிகளிடமிருந்தோ, இரவில் துஷ்டர்கள் மூலமாகவோ பயமுண்டாகும்.

மிதுனம் 8-வதானால் :— பெரியவர்களின் சேர்க்கை, ப்லீஹ ரோகம், ரஸோத்பத்தி, குதரோகம், கவனக் குறைவு இவைகளால் மரணம்.

கடகம் 8-வதானால் :—ஜலம், புழு, பயங்கரம், சத்ரு இவர்கள் மூலமாக அன்ய தேசத்தில் மரணம்.

சிம்மம் 8-வதாகில் :—பாம்பு, குழந்தை, வனம், நிருடன், பிராணி இவைகள் மூலமாக மரணமேற்படுகிறது.

கன்னி 8-வதானால் :- விளையாட்டு, பித்தம் இவைகளால் மரணம். விஷமமான ஆசனத்தில் இருந்து ஸ்திரீகளைக் கொல்பவனாகவோ, ஸ்திரீகளால் கொல்லப்படுபவனாகவோ ஆவான்.

துலாம் 8-வதாகில் :—விஷமமான மருந்து, இரவில் பிராணிகள், உபவாஸம், வஞ்சனை இவைகளால் மரணம் சம்பவிக்கும்.

விருச்சிகம் 8-வதாகில் :— முக ரோகம், கிருமி ரோகம், தன் குலத்தில் உதித்தவன இவர்கள் மூலம் மரணம் சம்பவிக்கிறது.

தனுசு 8-வதானால் :—தான் இருக்குமிடத்தில் வசிப்பவனால் மரணம், குஹ்ய ரோகத்தினாலும், புழு, பிராணிகளாலும் மரணம் உண்டாகலாம்.

மகரம் 8-வதாகில் :—வித்யை, மானம், குணம், காமம், சௌகரியம், விசாலமான மார்பு, சாஸ்திர ஞானம், கலைகளில் சாமர்த்தியம், இவைகளை உடையவனாவான்.

கும்பம் 8-வதாகில் அக்னி சம்பந்தமான ரோகம், புண்கள், ஜல விகாரங்கள், சத்ருவை ஆச்ரயித்தல் இவைகளால் மரண மேற்படுகிறது.

மீனம் 8-ம் இடமாகில் அதிஸாரம், வாத பித்த ஜ்வரங்கள், பித்தகோபம், ஆயுதம் இவைகளால் மரணம் சம்பவிக்கிறது.

அஷ்டமாதிபன் லக்னம் முதலிய பாவங்களில் இருப்பதன் பலன்.

லக்னத்தில் :— துக்கத்தைச் செய்பவன், துஷ்டர்களோடு விவாதிப்பவன், அரசனிடமிருந்து திரவ்யத்தை அடைபவன், ரோகி.

இரண்டில் :— ஸ்திரமல்லாத ஜீவனம், சாஸ்த்ர ஞானம், திருட்டு இவைகளை உடையவனாவன். க்ரூரர்களுடன் கூட, சுபம் இல்லாதவன், வியாதி உடையவன், அரசன் மூலம் மரணம் அடைபவன்.

மூன்றில் :— சகோதரன், மித்ரர்கள் இவர்களுடன் விரோதம், கொடிய வார்த்தை பேசுபவன், சஞ்சலன், துஷ்டன், பந்துக்களால் விலக்கப்பட்டவன்.

நான்கில் :— பிதுரார்ஜிதமான தனங்களை நாசம் செய்பவன், வியாதி உடையவன், தகப்பன் பிள்ளைகளிடம் சண்டையிடுபவன்.

ஐந்தில் :—புத்ர நாசம், க்ரூரர்களுடன் கூட, அசுபம், துஷ்டர்களுக்குத் தலைவன், சுபர்களுடன் சேர சுபம், புத்ர வ்ருத்தி இவைகளை உடையவன்.

ஆறில் :— சூரியன் செவ்வாய் புதன் கூடினாலும், புத சந்த்ரர்களுடன் கூடினாலும் விரோதம் செய்பவன், சுக்ர சனிகளிருக்க அதிக ரோகத்தை அடைவான்.

ஏழில் :—குஹ்ய ரோகி, க்ருபணன், துஷ்டன், கெட்ட நடத்தை உள்ளவர்களுக்குப் பிரியமாக இருப்பவன், பாபர்களுடன் கூட, ஸ்த்ரீயோடு சண்டையிடுபவன், செவ்வாயுடன் கூட சாந்தியை அடைவான்.

எட்டில் :— விவசாயம் செய்பவன், அநேக வியாதிகள் உள்ளவன், சுபமான வார்த்தை உடையவன், சுத்தன், தூர்த்தர்கள் காரியத்தை செய்பவன், கபடி.

ஒன்பதில் :- பாபத்தில் பற்றுடையவன், ஹிம்சை செய்பவன், தோழர்களால் கொண்டாடத்தக்கவன், மித்ர வர்க்கத்தில் சிலரால் விலக்கப்படுபவனுவான்.

பத்தில் :— ராஜ காரியம் செய்பவன், துஷ்டர்களுக்குச சமானன், எப்போதும் வேலை செய்பவன், புதிய ஜனங்களற்றவன், துக்கத்தை அடைந்தவன்.

பதினொன்றில் :— சிறிது புஷ்டி உள்ளவன், பிறர் மூலம் சுபம் உடையவன், சுபர்கள் சேர அதிகம் ஜீவிப்பவன், பாபர் கூட நீச சகவாசம் செய்பவன்.

பனிரண்டில் :— கடுமையான வார்த்தை உள்ளவன், திருடன், வஞ்சகன், காரியங்களைப் பூர்ணமாகச் செய்யாதவன், சமர்த்தன், துஷ்டன், மிருகங்களின் அங்கத்தைச் சாப்பிடுவதன் மூலம் மரணம்.

பார்வையின் பலன்.

ஸூரியன் பார்க்க :—குதரோகி, பித்ரு தனமற்றவன், அரசன் மூலம் இம்சை யடைபவன்.

சந்திரன் பார்க்க :—கஷ்டமான வியாதி பயம், ஜலம் முதலிய வை மூலம் கஷ்டம், தனதான்ய நாசம்.

செவ்வாய் பார்க்க :—சந்தாபம், மூத்ராசய வியாதி. இரும்பு மூலம் பயம், தனதான்ய நாசம், மார்க்கத்தில் பிதி, சோரர்கள் மூலம் தனநாசம்.

புதன் பார்க்க :—நீண்ட ஆயுள், அரசாங்கத்தில் வேலை, க்ருஷி கர்ம முதலியவைகளால் ஜீவனம், அன்ய தேசம் செல்தல்.

குரு பார்க்க :—கடுமையான ரோகம், அரசன் மூலம் அல்லது வேறு மனிதன் மூலம் பயம், திரவ்யக் குறைவு, புத்திக் குறைவு ஏற்படும்.

சுக்ரன் பார்க்க :—குஹ்ய ரோகம், கஷ்டத்துடன் திரவ்யார் ஜனம், துர்புத்தியால் அனர்த்தம் உடையவனுவான்.

சனி பார்க்க :—ஜலம் அல்லது இரும்பினால் பயம், 20 வயதில் மரணத்திற்கு சமானமாக ரோக பயம்.

ராகு பார்க்க—வம்சஹானி அல்லது வியாதி இவைகளால் துக்கத்தை யடைகிறான். பிழைப்பிற்காக ஸ்தானந்தோறும் புரிவான்.

நிர்யாண விஷயம்

அஷ்டமத்தில் இருப்பவர், அஷ்டமத்தை பார்ப்பவர்களுள் பலமுடைய கிரஹத்திற்குரிய ரோகத்தால் மரணமேற்படும். அல்லது அஷ்டம ஸ்தானம் அஷ்டம ஸ்தானதிபன் வசிக்கும் ராசி இவைகளுக்குரிய தோஷத்தால் மரணம் ஏற்படலாம். அஷ்டமாதிபனாலும், 22-வது திரேக்காணாதிபதியாலும், அஷ்டம ஸ்தானத்தில் வசிக்கும் கிரஹம்-அஷ்டமாதிபன் இவர்களுக்குரிய ரோகத்தாலும் மரணத்தை நிச்சயம் செய்யவும்.

கிரகங்களுக்குரிய வியாதி.

சூர்யன் :—பித்தம், அக்னி, ஆயுதம் இவைகளால் உண்டாவன.

சந்திரன் :—விஷூசி, ஜல ரோகம் முதலியன.

செவ்வாய் :—யக்ஷ்மா, அக்னி, சூத்ரம், அபிசாரம் முதலியன.

புதன் :—பாண்டு, ப்ரமம் முதலியன.

குரு :—கபதோஷம்.

சுக்ரன் :—ஸ்திரீ சம்பந்த ரோகம், அகாலமரணம்.

சனி :—வாயு பிடை, சன்னிபாதம் முதலியன.

ராகு :—விஷபக்ஷணம்.

கேது :-குஷ்டம், வைசூரி, துர்மரணம், சத்ரு பீடை முதலியன.

இங்கு அதிக கிரகங்கள் சேருவதில் பலமுள்ள கிரகத்தை எடுத்துக்கொள்ளலாம். அல்லது அஷ்டம ராசி, நவாம்சத்தில் அஷ்டமாதிபன் வசிக்கும் ராசி இவைகளுக்குரிய தோஷ நிமித்தத்தையும் சொல்லலாம்.

ராசிகளுக்குரிய ரோகங்கள்

மேஷம் :—அக்னி, உஷ்ண ஜ்வரம், பித்தம்.

வ்ருஷபம் :—ஆயுதாதிகள்.

மிதுனம் :—அக்னி, த்ரிதோஷங்கள்.

கடகம் :—காசம், உஷ்ணம், சூலம், அருசி, வாதம், ப்ரமம்.

சிம்மம் :—மிருக பயம், ஜ்வரம், வ்ரணம், தன் இனத்தைச் சேர்ந்த எதிரிமூலம் பயம்.

கன்னி :—ஸ்திரீமூலம் மேலேயிருந்து (உயரத்திலிருந்து) வீழுதல்.

துலாம் :—சந்நிபாதம்.

விருச்சிகம் :—க்ரஹணி, ப்லீஹம், பாண்டு.

தனுசு :—மரம், ஆயுதம், ஜலம்.

மகரம் :—அருசி, சூலம்.

கும்பம் :—மயக்கம்.

மீனம் :—காசம், ஜ்வரம், யக்ஷ்மா, ஜலம்.

க்ரஹங்களுக்குரிய உலகம்

சூர்ய சந்த்ரர்கள் :—கைலாசம் குரு :—தேவலோகம்
செவ்வாய் :—பூமி சுக்ரன் :—ஸ்வர்க்கம்
புதன் :—வைகுண்டம் சனி :—யமலோகம்.

12-ல் வஸிக்கும் ராசி 12-க்குடையவன் இவர்கள் பலசாலி களானால் சம்பந்தத்தின் காரணமாக அவரவர்களுக்குரிய ஸ்தா னத்தை அளிப்பர்.

அஷ்டமஸ்தானம் பாப க்ஷேத்ரமாகி பாப சம்பந்தம் பெற்றால் ஆயுதம், அக்னி, புலி, ஸர்ப்பங்களால் பிடை யேற்படும்.

பாபக்ரஹங்களிருவர் ஒருவர்க்கொருவர் பார்வை பெற்று கேந்த்ரத்திலிருக்க எஜமான கோபம், ஆயுதம், விஷம், அக்னி களால் கெடுதல் ஏற்படும்.

அஷ்டம லக்னாதிபதிகள் பலமின்றி செவ்வாய், ராகாதிபதி களுடன் சேர்ந்தால் யுத்தத்தால் அல்லது ஆயுதத்தால் மரண மேற்படும்.

அஷ்டம லக்னாதிபதிகள் ரோகஸ்தானத்தில் இருந்து ராகு, கேது அல்லது சனி இவர்களுடன் சேர்ந்திருக்க அவரவர்கள்

தசாபுக்தி காலங்களில் திருடன், ஆயுதம் இவைகளால் மரணமடைவான்.

அஷ்டம லக்னாதிபர்கள் வாஹனாதிபதியுடன் கூடியிருந்தால் வாஹனத்தினால் மரணம் சம்பவிக்கும்.

அஷ்டம லக்னாதிபர்கள் குருவுடன் கூடினாலும், லக்னாதிபன் குரு ரோக ஸ்தானத்தில் இருந்தாலும், லக்னாதிபன் சுகாதிபன் குரு இவர்களுடன் கூடினாலும், லக்னாதிபன் சுக தனாதிபர்களுடன் கூடினாலும் அஜீர்ணத்தினால் மரணம் சம்பவிக்கும்.

அஷ்டமாதிப சம்பந்தத்தால் ஏற்படும் மரணம் அவன் தசை அல்லது புக்திகளில் சம்பவிக்கும். பித்ரு-மாத்ரு-ப்ராத்ரு பாவா திபர்களின் விக்ஷணம் சம்பந்தம் முதலியவைகளால் அவரவர் களுடைய மரணத்தை ஊஹிக்கலாம்.

தன லக்னாதிபர்கள் சனியுடன் சேர்ந்து துஸ்ஸ்தானங்களில் இருந்தால் விஷத்தால் மரணம். இவ்விதமே ராகு கேதுக்கள் சம்பந்தம் பெற்றால் தூக்குப் போட்டுக்கொள்ளுவதின்மூலம் மரணமேற்படும்.

சனி ரோகாதிபனுடன் ராகு அல்லது கேதுவுடன் சேர்ந்தால் மிருக பயமும், குரு சேர்ந்தால் யானையினிடம் இருந்து பயமும், சந்த்ரனுடன் சேர நாயிடமிருந்து பயமும், சூரியனுடன் கூட கொம்புடைய மிருகத்தால் பயமும், செவ்வாயுடன் சேர நாய்மூலம் பயமுமேற்படும்.

சனி, ஸ்வக்ஷேத்ரம், உச்ச க்ஷேத்ரங்கள் அல்லாத ரோக ஸ்தானத்தில் மற்ற ராசத்துடன் கூடி இருக்க நாய்மூலமே பயம் ஏற்படும்.

சூரியன் நீச க்ஷேத்ரத்திலிருந்து அந்த க்ஷேத்ரம் 6 அல்லது 8-ம் இடமாகி பாப விக்ஷணம் பெற்றால் அரசனுடைய கோபத் தால் மரணம் ஏற்படுவதுடன் தகப்பனுக்கும் ராஜ கோபத்தால் பொருள் நாசமேற்படும்.

அஷ்டமத்தில் பாபிகள் இருக்க குறைய ரோகமேற்படும். சுபக்ரஹ விக்ஷணமிருந்தால் தோஷமில்லை.

அஷ்டம ஸ்தானம் சுபசம்பந்தம், வீக்ஷணம் பெற்றால் சுக மேற்படும்.

அஷ்டமாதிபன் பாப சம்பந்தம், பாப வீக்ஷணம், பாப மத்யம், பாப க்ஷேத்ரம் அல்லது அஷ்டம ஸ்தானம் இவைகளில் இருக்க அவமானமடைவான். சுபக்ரஹ சம்பந்த மேற்பட தோஷமில்லை.

அஷ்டம ஸ்தானம் சராசியாய் அஷ்டமாதிபன் சராசியில் இருந்தாலும், சனி சராசி சராம்சத்தில் இருந்தாலும், தூர தேசத்தில் மரணம் கிடைக்கும். இவ்விதமே ஸ்திரத்திலிருந்தால் ஸ்வகிருஹத்திலும், உபயத்திலிருக்க மார்கத்திலும் மரணம் ஏற்படலாம்.

சூர்ய-சந்த்ரர்கள் வியயத்தில் இருந்து சுப வீக்ஷணமில்லா விடில் குருடனுவான் இருவர்களில் ஒருவன் இருக்க ஒரு கண் பொட்டையாகும்.

சந்த்ர-சூர்யர்கள் விரயத்திலும், விரயாதிபன் லக்னத்திலு மிருந்தாலும், குரு 8, 12-ல் இருந்து பாப சம்பந்தம், வீக்ஷணம் பெற்றாலும் தேஹ நாசம் ஏற்படும்.

சூர்யன், செவ்வாய், ராகு, சனி இவர்கள் அஷ்டமத்தில் இருந்தாலும், அஷ்டமஸ்தானம், சத்ரு, நீசர், அகபர் இவர் களால் பார்க்கப்பட்டாலும் குஹ்ய ரோகத்தால் மரணமேற்படும்.

அஷ்டமத்தில் சூர்யனிருக்க மூலரோகத்தாலும், சந்த்ரன் இருக்க அதிஸாரத்தாலும், செவ்வாய் இருக்க பவித்ரத்தாலும், கர்ண சூலத்தாலும், புதன் இருக்க மூத்ரக்ருச்ச்ரத்தாலும், குரு விருக்க ப்ரமேகத்தாலும், சுக்ரனிருக்க வாதம், ரக்த பித்த ரோகங் களாலும் மரணம் ஸம்பவிக்கும்.

அஷ்டமத்தில் சூரியன், ராகு அல்லது கேது சேர்ந்திருக்க ஆயுதம், நெருப்பு இவைகளால் பயமும், அஷ்டமத்தில் நீச க்ரஹம் முதலியவைகளிருக்க நீடித்த ரோகமும் ஏற்படும்.

அஷ்டமத்தில் சூரியன் இருக்க ஜ்வர கண்டம், சந்த்ரனிருக்க ஜலகண்டம், க்ஷீண சந்த்ரனிருக்க வாத ரோக பிடை, செவ்வாய்

இருக்க தாப ஜ்வரம், புதன் இருக்க சன்னிபாத ஜ்வரம், பித்த பாண்டு, சுக்ரனிருக்க ப்ரமேகம் முதலிய ரோகம், சனி இருக்க வாதத்தினால் அண்ட ரோகம், ராகு கேது இவர்கள் இருக்க குஷ்டம் முதலிய சர்ம ரோகமும் உண்டாகும்.

சோபையில்லாத சந்த்ர, குஜர்கள் அஷ்டமத்தில் இருந்து புதன் துர்பலனாய் அஷ்டமாதிபனுக ஆனால் சுவாச காசம் முதலியவை உண்டாகும்.

சூர்ய சனி ராகுகள் அஷ்டமத்தில் சேர்ந்து இருக்க ப்லீஹம், குல்மம் முதலியவை உண்டாகும்.

அஷ்டம ஸ்தானம் பாப க்ஷேத்ரமாய் சனி அங்கிருந்தால் குல்ம ரோகியாகவும், சந்த்ர ஸூர்யர்களிருக்க க்ஷயரோகியாகவும் ஆவான்.

சூரியனால் அரசனாலும், சந்த்ரனால் ராஜ யக்ஷ்மாவாலும், செவ்வாயால் புண், நெருப்பு, சஸ்த்ரம் முதலியவைகளாலும், சனியால் அண்ட ரோகத்தாலும், ராகு கேது மாந்திகளால் விஷம், தூக்குப் போட்டுக்கொள்ளுதல் இவைகளாலும் மரணம் சம்பவிக்கும்.

சூர்ய சந்த்ரர்கள் 8-ல் இருந்து பாப சம்பந்தம் வீக்ஷணம் பெற்றால் ஜல மத்தியில் மரணம் சம்பவிக்கலாம்.

4-ல் செவ்வாய், 10-ல் சூரியனிருக்க கல் முதலியவைகள் மூலமாக மரணமேற்படும்.

சனி 4 லும், சந்த்ரன் 7-லும், செவ்வாய் 10-லும் இருக்க கிணற்றில் மரணம்.

சந்த்ரன் மகரத்திலும், சனி விருச்சிகத்திலுமிருக்க மிஹர தாரத்தால் மரணம்.

மீனம் லக்னமாய் சூரியன் அங்கிருந்து பாபியுடன் சேர்ந்த சந்த்ரன் 7-லும், 2-ல் சுக்ரனுமிருந்தால் ஸ்த்ரீமூலம் மரணம்.

சனி அல்லது சூர்யன் தசமத்திலும், செவ்வாய் 4-லும் இருக்க சூலம் போன்ற கூர்மையான ஆயுதங்களால் மரணம் ஏற்படும்.

9, 5, 1-இவைகளில் க்ஷீண சந்த்ரன், சனி, செவ்வாய், சூரியன் இவர்கள் சேர்ந்து இருந்தாலும். 5-ல் சூரியனும். 10-ல் குஜனும் வலித்து க்ஷீண சந்த்ரன் பார்த்தாலும் சூலாயுதத் தாலும், கட்டையினலும் மரணமேற்படும்.

அஷ்டமத்தில் க்ஷீண சந்த்ரனும். 4-ல் சூரியனும். 10-ல் செவ்வாயும், லக்னத்தில் சனியும் இருக்க தடியடியால் மரணம்.

க்ஷீண சந்த்ரன் குஜனுக்கு 10-ல் இருக்க அக்னியால் மரணம்.

9-ல் செவ்வாயும். சனி லக்னத்திலுமிருந்தாலும், பஞ்ச மத்தில் சூர்யனிருந்தாலும் பந்தனத்தால் மரணம்.

சனி 2-லும், சந்த்ரன் 4-லும், செவ்வாய் 10-லும் இருந்தா லும். 4-ல் செவ்வாய். 10-ல் சூரியன் இருந்தாலும் வாஹனத்தி லிருந்து விழுதலால் மரணம்.

செவ்வாய் 7-ல் இருந்து க்ஷீண சந்த்ரன் பார்வை பெற யந்த் ரத்தினல் நாசம். செவ்வாய் துலாத்திலும். சந்த்ரன் மகர கும்பங் களிலிருந்தாலும் யந்த்ர பிடையே.

மேஷத்தில் சனி இருந்தாலும். க்ஷீண சந்த்ரன் 10 அல்லது 7-ல் இருந்தாலும், சிற்றின்பத்தினல் நாசம்.

4-ல் செவ்வாய் இருந்தாலும். பலிஷ்டனன செவ்வாய் க்ஷீண சந்த்ர வீக்ஷணம் பெற்று சனி அஷ்டமத்தில் இருந்தாலும். புரீஷ மத்தியில் மரணம் ஏற்படும்.

செவ்வாயோடு சேர்ந்த சூரியன் சப்தமத்திலும். சந்த்ரன் 4-லும். சனி மிதுனத்திலும் இருக்க பக்ஷியால் மரணம்.

சூரியன் லக்னத்திலும், செவ்வாய் 5-லும், சந்த்ரன் 9-லும். சனி 8-லுமிருக்க கவர், இடி இவை விழுதலாலோ. மலையிலிருந்து அல்லது உயர்ந்த பிரதேசத்திலிருந்து விழுவதாலோ மரண மேற்படும்.

அஷ்டமாதிபன் சுபக்ரஹமாய், சுபாம்சம், சுபசம்பந்தம் பெற்று அஷ்டமத்தில் இருக்க சிரமமில்லாமல் மரணமேற்படும். மாறுபட்டு இருந்தால் கஷ்டமான மரணமேற்படும்.

விரயாதிபன் சுபரோடு சேர்ந்து உச்ச க்ஷேத்ரம், ஸ்வவர்க்கம், சுப வர்க்கம் இவைகளில் இருக்க உயர்கதியை அடைகிறான். மாறி யிருக்க தாழ்ந்த கதியை அடைகிறான்.

ஊர்த்வ முகம். சீர்ஷோதயம் இந்த ராசிகளைக் கொண்டும் ஊஹிக்கலாம்.

குரு புதர்கள் தேவலோகத்தையும், சுர்ய குஜர்கள் பக்ஷி ஜன்மத்தையும். புத சனிகள் நரகத்தையும் அளிப்பர்.

சத்ரு க்ஷேத்ரம் அஷ்டமஸ்தானம் இவைகளில் வரக்கூடிய த்ரிம்சாம்சாதிபர்கள் 7, 6, 8-ல் இருந்தாலும், மேற்கூறிய பலனை அளிக்கின்றனர்.

6, 8 கேந்த்ரம் உச்சம் மீன லக்னம் இவைகளில் குரு இருந்து மற்ற க்ரஹங்கள் துர்பலர்களுமானல் மோக்ஷமேற்படும்.

மரண காலத்தில் கடகத்தின் முதல் த்ரேக்காணமும். விருச் சிகத்தின் 2-வது த்ரேக்காணமும், மீனத்தின் 3-வது த்ரேக்காண மும் உதயமாக அவனுடைய அவயவங்களை காக்கை முதலியவை பக்ஷிக்கின்றன.

அஷ்டமத்தில் பாப க்ரஹ த்ரேக்காணம் உதயமாக அக்னி யால் பொசுக்கப் படுவான். சுபக்ரஹ த்ரேக்காண முதயமாக ஜலத்தில் எறியப்படுவான்.

சுப த்ரேக்காணம் பாபியுடனும், பாப த்ரேக்காணம் சுபரு டனும் சேர்ந்து அஷ்டம ஸ்தானத்தை அடைந்தால் அவனு டைய சரீரம் உலர்ந்து போம்.

12-வயது வரை ஆயுளை நிர்ணயிப்பது முடியாது. ஆகவே அதுவரை ஜபம், ஹோமம், வைத்யம், ரக்ஷை முதலியவைகளால் காப்பாற்றவேண்டும்.

தாய் தந்தையரின் தோஷங்களால் 8-வயது வரையிலும், தன்னுடைய பாபத்தால் மேல் 4-வயது வரையிலும் மரணம் சம்பவிக்கின்றது. இதுவே பாலாரிஷ்டம் எனப்படும்.

மனிதர்களாய் ஜனித்த ஆண், பெண்களுக்கு ஜனனம் முதல் 8 வயது வரை பாலாரிஷ்டம். 9 வயது முதல் 20 வயது வரை

யோகாரிஷ்டம். 21 வயது முதல் 32 வயது வரை அல்பாயுசு. 33 வயது முதல் 70 வயது வரை மத்தியமாயுசு. 71 வயது முதல் 100 வயது வரை தீர்க்காயுசு என்றறியவும்.

அல்லது மனிதர்களுக் கேற்பட்ட நூறு வயதை மூன்று பங் காக்கி ஜனனம் முதல் வயது 33. மீ 4 வரை அல்பாயுசு. 33 வயது மீ 5 முதல் வயது 66 மீ 8 வரை மத்தியமாயுசு. வயது 66. மீ 9 முதல் வயது 100 வரை தீர்க்காயுசு என்றறியவும்.

லக்னம் சராராசியிலும். சந்த்ரன் சராராசியிலும் இருந்தால் தீர்க்காயுசு.

லக்னம் சராராசியிலும். சந்த்ரன் ஸ்திர ராசியிலும் இருந்தால் மத்தியமாயுசு.

லக்னம் சராராசியிலும். சந்த்ரன் உபய ராசியிலும் இருந்தால் அற்பாயுசு.

லக்னம் ஸ்திர ராசியிலும், சந்த்ரன் உபய ராசியிலும் இருந் தால் தீர்க்காயுசு.

லக்னம் ஸ்திர ராசியிலும். சந்த்ரன் சராராசியிலும் இருந்தால் மத்தியமாயுசு.

லக்னம் ஸ்திர ராசியிலும். சந்த்ரன் ஸ்திர ராசியிலும் இருந் தால் அற்பாயுசு.

லக்னம் உபய ராசியிலும், சந்த்ரன் ஸ்திர ராசியிலும் இருந் தால் தீர்க்காயுசு.

லக்னம் உபய ராசியிலும், சந்த்ரன் உபய ராசியிலும் இருந் தால் மத்தியமாயுசு.

லக்னம் உபய ராசியிலும். சந்த்ரன் சராராசியிலும் இருந்தால் அற்பாயுசு.

லக்னாதிபதி சராராசியிலும். சந்த்ர லக்னாதிபன் சராராசியிலும் இருந்தால் தீர்க்காயுசு.

லக்னாதிபதி சராராசியிலும். சந்த்ர லக்னாதிபன் ஸ்திர ராசியிலும் இருந்தால் மத்தியமாயுசு.

லக்னாதிபதி சராராசியிலும். சந்த்ர லக்னாதிபன் உபய ராசி யிலும் இருந்தால் அற்பாயுசு.

லக்னாதிபதி ஸ்திர ராசியிலும், சந்த்ர லக்னாதிபன் உபய ராசி யிலும் இருந்தால் தீர்க்காயுசு.

லக்னாதிபதி ஸ்திர ராசியிலும். சந்த்ர லக்னாதிபன் சர ராசி யிலும் இருந்தால் மத்தியமாயுசு.

லக்னாதிபதி ஸ்திர ராசியிலும். சந்த்ர லக்னாதிபன் ஸ்திர ராசி யிலும் இருந்தால் அற்பாயுசு.

லக்னாதிபதி உபய ராசியிலும். சந்த்ர லக்னாதிபன் ஸ்திர ராசி யிலும் இருந்தால் தீர்க்காயுசு

லக்னாதிபதி உபய ராசியிலும். சந்த்ர லக்னாதிபன் உபய ராசி யிலும் இருந்தால் மத்தியமாயுசு.

லக்னாதிபதி உபய ராசியிலும். சந்த்ர லக்னாதிபன் சர ராசி யிலும் இருந்தால் அற்பாயுசு.

லக்னாதிபதி சராராசியிலும். அஷ்டமாதிபதி சர ராசியிலும் இருந்தால் தீர்க்காயுசு.

லக்னாதிபதி சர ராசியிலும். அஷ்டமாதிபதி ஸ்திர ராசியிலும் இருந்தால் மத்தியமாயுசு.

லக்னாதிபதி சர ராசியிலும். அஷ்டமாதிபதி உபய ராசியிலு மிருந்தால் அற்பாயுசு.

லக்னாதிபதி ஸ்திர ராசியிலும், அஷ்டமாதிபதி உபய ராசி யிலுமிருந்தால் தீர்க்காயுசு.

லக்னாதிபதி ஸ்திர ராசியிலும். அஷ்டமாதிபதி சர ராசியிலு மிருந்தால் மத்தியமாயுசு.

லக்னாதிபதி ஸ்திர ராசியிலும். அஷ்டமாதிபதி ஸ்திர ராசி யிலுமிருந்தால் அற்பாயுசு.

லக்னாதிபதி உபய ராசியிலும், அஷ்டமாதிபதி ஸ்திர ராசி யிலும் இருந்தால் தீர்க்காயுசு.

லக்னாதிபதி உபய ராசியிலும். அஷ்டமாதிபதி உபய ராசி யிலும் இருந்தால் மத்தியமாயுசு.

லக்னாதிபதி உபய ராசியிலும். அஷ்டமாதிபதி சர ராசியிலும் இருந்தால் அற்பாயுசு.

லக்னம் சர ராசியிலும், திரேக்காணம் சர ராசியிலும் இருந்தால் நிர்க்காயுசு.

லக்னம் சர ராசியிலும், திரேக்காணம் ஸ்திர ராசியிலும் இருந்தால் மத்தியமாயுசு.

லக்னம் சர ராசியிலும், திரேக்காணம் உபய ராசியிலும் இருந்தால் அற்பாயுசு.

லக்னம் ஸ்திர ராசியிலும், திரேக்காணம் உபய ராசியிலும் இருந்தால் நிர்க்காயுசு.

லக்னம் ஸ்திர ராசியிலும், திரேக்காணம் சர ராசியிலும் இருந்தால் மத்தியமாயுசு.

லக்னம் ஸ்திர ராசியிலும், திரேக்காணம் ஸ்திர ராசியிலும் இருந்தால் அற்பாயுசு.

லக்னம் உபய ராசியிலும், திரேக்காணம் ஸ்திர ராசியிலும் இருந்தால் நிர்க்காயுசு.

லக்னம் உபய ராசியிலும், திரேக்காணம் உபய ராசியிலும் இருந்தால் மத்தியமாயுசு.

லக்னம் உபய ராசியிலும், திரேக்காணம் சர ராசியிலும் இருந்தால் அற்பாயுசு.

லக்னம் சர ராசியிலும், நவாம்சம் சர ராசியிலும் இருந்தால் நிர்க்காயுசு.

லக்னம் சர ராசியிலும், நவாம்சம் ஸ்திர ராசியிலும் இருந்தால் மத்தியமாயுசு.

லக்னம், சர ராசியிலும், நவாம்சம் உபய ராசியிலும் இருந்தால் அற்பாயுசு.

லக்னம் ஸ்திர ராசியிலும், நவாம்சம் உபய ராசியிலும் இருந்தால் நிர்க்காயுசு.

லக்னம் ஸ்திர ராசியிலும், நவாம்சம் சர ராசியிலும் இருந்தால் மத்தியமாயுசு.

லக்னம் ஸ்திர ராசியிலும், நவாம்சம் ஸ்திர ராசியிலும் இருந்தால் அற்பாயுசு.

லக்னம் உபய ராசியிலும், நவாம்சம் ஸ்திர ராசியிலும் இருந்தால் நிர்க்காயுசு.

லக்னம் உபய ராசியிலும், நவாம்சம் உபய ராசியிலும் இருந்தால் மத்தியமாயுசு.

லக்னம் உபய ராசியிலும், நவாம்சம் சர ராசியிலும் இருந்தால் அற்பாயுசு.

லக்னம் சர ராசியிலும், துவாதசாம்சம் சர ராசியிலும் இருந்தால் நிர்க்காயுசு.

லக்னம் சர ராசியிலும், துவாதசாம்சம் ஸ்திர ராசியிலும் இருந்தால் மத்தியமாயுசு.

லக்னம் சர ராசியிலும், துவாதசாம்சம் உபய ராசியிலும் இருந்தால் அற்பாயுசு.

லக்னம் ஸ்திர ராசியிலும், துவாதசாம்சம் உபய ராசியிலும் இருந்தால் நிர்க்காயுசு.

லக்னம் ஸ்திர ராசியிலும், துவாதசாம்சம் சர ராசியிலும் இருந்தால் மத்தியமாயுசு.

லக்னம் ஸ்திர ராசியிலும், துவாதசாம்சம் ஸ்திர ராசியிலும் இருந்தால் அற்பாயுசு.

லக்னம் உபய ராசியிலும், துவாதசாம்சம் ஸ்திர ராசியிலும் இருந்தால் நிர்க்காயுசு.

லக்னம் உபய ராசியிலும், துவாதசாம்சம் உபய ராசியிலும் இருந்தால் மத்தியமாயுசு.

லக்னம் உபய ராசியிலும், துவாதசாம்சம் சர ராசியிலும் இருந்தால் அற்பாயுசு.

லக்னாதிபதியும் சுபர்களும், 1, 4, 7, 10 ஆமிடங்களில் இருந்தால் நிர்க்காயுசு.

லக்னாதிபதியும் சுபர்களும் 2, 5, 8, 11 ஆமிடங்களில் இருந்தால் மத்தியமாயுசு.

லக்னாதிபதியும் சுபர்களும் 3, 6, 9, 12 ஆமிடங்களில் இருந்தால் அற்பாயுசு.

அஷ்டமாதிபதியும் பாபிகளும் 1. 4. 7. 10 ஆமிடங்களில் இருந்தால் அற்பாயுசு.

அஷ்டமாதிபதியும் பாபிகளும் 2. 5. 8. 11 ஆமிடங்களில் இருந்தால் மத்தியமாயுசு.

அஷ்டமாதிபதியும் பாபிகளும் 3. 6. 9. 12 ஆமிடங்களில் இருந்தால் நீர்க்காயுசு.

சந்த்ர லக்னாதிபனும் சந்த்ராஷ்டமாதிபனும் பரஸ்பரம் மித்ரர் களானால் நீர்க்காயுசு.

சந்த்ர லக்னாதிபனும் சந்த்ராஷ்டமாதிபனும் பரஸ்பரம் சம ரானால் மத்தியமாயுசு.

சந்த்ர லக்னாதிபனும் சந்த்ராஷ்டமாதிபனும் பரஸ்பரம் சத் ருக்களானால் அற்பாயுசு.

லக்னாதிபனும் லக்னாஷ்டமாதிபனும் பரஸ்பரம் மித்ரர்க ளானால் நீர்க்காயுசு.

லக்னாதிபனும் லக்னாஷ்டமாதிபனும் பரஸ்பரம் சமர்களானால் மத்தியமாயுசு.

லக்னாதிபனும் லக்னாஷ்டமாதிபனும் பரஸ்பரம் சத்ருக்க ளானால் அற்பாயுசு.

லக்னாதிபனும் சூரியனும் பரஸ்பரம் மித்ரர்களானால் நீர்க் கார்யுசு.

லக்னாதிபனும் சூரியனும் பரஸ்பரம் சமர்களானால் மத்திய மாயுசு.

லக்னாதிபனும் சூரியனும் பரஸ்பரம் சத்ருக்களானால் அற் பாயுசு.

லக்னாதிபதி. லக்னாஷ்டமாதிபதியைக் காட்டிலும் பலவான் யிருந்தால் நீர்க்காயுசு.

லக்னாதிபதி. லக்னாஷ்டமாதிபதி சமர்களாக இருந்தால் மத்தியமாயுசு.

லக்னாதிபதி. லக்னாஷ்டமாதிபதியைக் காட்டிலும் பலஹீனன் யிருந்தால் அற்பாயுசு.

லக்ன நவாம்சாதிபன், லக்ன நவாம்சத்துக்கு அஷ்டமாதி பனைக் காட்டிலும் பலவானாய் இருந்தால் நீர்க்காயுசு.

லக்ன நவாம்சாதிபன் லக்ன நவாம்சத்துக்கு அஷ்டமாதிபன் சமபலர்களாக இருந்தால் மத்தியமாயுசு

லக்ன நவாம்சாதிபன், லக்ன நவாம்சத்துக்கு அஷ்டமாதி பனைக் காட்டிலும் பலஹீனனாயிருந்தால் அற்பாயுசு.

சந்த்ர லக்னாதிபன் சந்த்ரனுக்கு அஷ்டமாதிபனைக் காட்டி லும் பலவானாயிருந்தால் நீர்க்காயுசு.

சந்த்ர லக்னாதிபன் சந்த்ரனுக்கு அஷ்டமாதிபன் ஸம பலர் களானால் மத்தியமாயுசு.

சந்த்ர லக்னாதிபன் சந்த்ரனுக்கு அஷ்டமாதிபனைக் காட்டி லும் ஹீன பலனாயிருந்தால் அற்பாயுசு.

சந்த்ர நவாம்சாதிபன் சந்த்ர நவாம்சத்துக்கு அஷ்டமாதி பனைக் காட்டிலும் பலவானாயிருந்தால் நீர்க்காயுசு.

சந்த்ர நவாம்சாதிபன் சந்த்ர நவாம்சத்துக்கு அஷ்டமா திபன் சமபலர்களானால் மத்தியமாயுசு.

சந்த்ர நவாம்சாதிபன் சந்த்ர நவாம்சத்துக்கு அஷ்டமாதி பனைக் காட்டிலும் ஹீன பலனாயிருந்தால் அற்பாயுசு.

லக்னத்துக்குடையவனைக் காட்டிலும் எட்டுக்குடையவன் மிக பலவானாய் 1, 4. 7, 10-ஆமிடங்களில் இருந்து, லக்னத்துக்கு 8, 12-ஆமிடங்களில் பாபிகளிருக்கப் பிறந்தவர்கள் அற்பாயுசு உள்ளவர்களாவார்கள், அல்லது மத்தியமாயுசுள்ளவர்களா வார்கள். டி எட்டுக்குடையவன் கிரணம், வக்ரம் முதலிய உத்ஸாஹத்தையாவது, கிரணஹாநி, ஆர்ஜவம் முதலிய ஸங்கடத்தையாவது அடைந்தால் பரம ஆயுஸையும் அடைவான்.

அற்பாயுள் யோகத்தில் பிறந்தவன் சனியின் முதல் பகணத் திலும், மத்தியமாயுள் யோகத்தில் பிறந்தவன் சனியின இரண் டாவது பகணத்திலும், நீர்க்காயுள் யோகத்தில் பிறந்தவன் சனியின் மூன்றாவது பகணத்திலும் இறப்பான். ஆனால் நிர்யாண சனி, நிர்யாண குரு, நிர்யாண சூரியன், நிர்யாண சந்த்ரன் இவர்

கனி ஸ்புடத்தினால் அறிந்தும், கஷ்ட தசையை அறிந்தும் நிர்யாணத்தை நிச்சயிக்க வேண்டும்.

ஜனன காலத்தில் ஜன்ம லக்னதிபன் பாபிகளுடன் கூடி, அஸ்தமனம், நீச ராசி ஸ்திதி, சத்ரு ராசி ஸ்திதி இவைகளை அடைந்தவனுக, கோசரத்தில் ஜன்ம லக்னத்திற்காவது சந்த்ர லக்னத்திற்காவது, நவாம்ச லக்னத்திற்காவது, த்ரேக்காண லக்னத்திற்காவது, 6, 8, 12-ஆமிடங்களில் வருங்காலம் ஜாதகனுக்கு மரணம் சொல்லவும்.

சந்த்ரனும், சந்த்ரனிருக்கும் ராசிநாதனும், லக்னதிபனும் கோசரத்தில் சுப கிரகங்களின் சேர்க்கை, பார்வை முதலிய நற்குணங்களைப் பெறுங்காலம் ஜாதகனுக்கு நல்ல காலமென்று அறியவும்.

ஜாதகனுக்கு லக்னதிபன் மிகுந்த பலவானாய் அசுபர்களின் பார்வை பெறாமல் 1, 4, 7, 10 ஆமிடங்களிலிருந்து சுப கிரகங்களின் பார்வை பெற்றிருப்பானேயானில் அரிஷ்ட காலங்களில் உண்டாகும் ம்ருத்யுவைப் போக்கி நீர்க்கமான ஆயுஸ்ஸையும், மிக ஸம்பத்தையும் கொடுப்பான்.

குரு எல்லா கிரகங்களைக் காட்டிலும் மிகுந்த பலவானாய் கிரணங்களோடு கூடினவனாய் ஜனன காலத்தில் லக்னத்தில் இருப்பாரேயானால், ஜாதகனுக்கு எற்படும் எல்லா அரிஷ்டங்களையும் நிவ்ருத்தி செய்துவிடுவான். எதுபோல வெனில்; பக்தியுடன் ஆழிப்பிராளிடம் செய்யும் நமஸ்காரம் ஒன்றே ஸகல பாவங்களையும் நிவிருத்திக்குமாப் போலே.

ஜாதகனுடைய ஜாதகத்தில், சூரியன், லக்னத்துக்கு 1, 4, 5, 7, 9, 10, 11-ஆமிடங்களில் தனது நவாம்சமாவது, அல்லது சந்த்ரன், குரு இவர்களது நவாம்சமாவது பெறில் ஸகல அரிஷ்டங்களையும் நிவிருத்தி செய்து நல்ல கர்மத்தைச் செய்யும்படி செய்வான்.

எவனுக்கு 1, 4, 5, 7, 9, 10-ஆமிடங்களில் பாபிகளில்லாமலும், லக்னதிபன், குரு இவ்விருவர்களும், 1, 4, 7, 10-ஆமிடங்களில் இருந்தும், இருக்கிற காலம் ஜனன காலமாகுமோ அவனுக்கு அநேக சுகங்களும் ஆரோக்யமும், புண்யச் செயல்களும் உண்டாகும்

அஷ்டக வர்க்கம் காலசக்ர தசை, ஸ்புடத்தால் அறிய வேண்டிய நிர்யாண சனி முதலியவைகள் இவைகளைக்கொண்டு ஆயுளை நன்றாய் அறிந்து நிர்மானித்து புத்திமான்கள் சொல்ல வேண்டும்.

லக்னதிபன் சூர்யனுக்கு சத்ருவானால் அல்பாயுஸாகவும், சமனானால் மத்யமாயுஸாகவும், மித்ரனானால் தீர்க்காயுஸ்ஸாகவும் சொல்லப்படுகிறது.

அல்பாயுஸ் உடையவன் ஜன்ம நக்ஷத்ரத்திற்கு 3-வது நக்ஷத்ர தசையிலும், மத்யமாயுஸ் உள்ளவன் 5-வது நக்ஷத்ர தசையிலும், தீர்க்காயுஸ் உள்ளவன் 7-வது நக்ஷத்ர தசையிலும் மரணத்தை யடைகிறான்.

அஷ்டமாதிபன், பாபியுடன் சேர்ந்து விரயத்தில் இருந்தாலும், 6-ல் இருந்து லக்னதிபதி சம்பந்தம் பெற்றாலும், 6, 8, 12-களில் பாபர் இருந்து லக்னதிபன் துர்பலனாய் சுபவீக்ஷணம் சம்பந்தம் பெற்றாலும், அஷ்டமாதிபன் அல்லது சனி க்ரூர ஷஷ்ட்யம்சத்தில் அல்லது பாப வீக்ஷணம் சம்பந்தம் பெற்றாலும், பாபிகள் கேந்த்ரத்தில் இருந்து சுபவீக்ஷணமில்லாமல் லக்னதிபன் துர்ப்பலனாயும் இருந்தாலும், தன விரயாதிபர்கள் பாபியுடன் சேர்ந்து சுபவீக்ஷணம் இல்லாமல் க்ரூர ஷஷ்ட்யம்சத்தில் இருந்தாலும், அல்பாயுள் யோகம் எனச் சொல்லப்படுகிறது.

லக்னதிபன் துர்பலனாய் குரு கேந்த்ர த்ரிகோணத்தில் இருந்து தஸ்ஸ்தானத்தில் பாபிகளிருந்தாலும், சுபர்கள் கேந்த்ர த்ரிகோணங்களிலிருந்து சனி பலவானாய் 6 அல்லது 8-ல் பாபி யிருந்தாலும் மத்யமாயுஸ் எனச் சொல்லப்படுகிறது.

அஷ்டமாதிபன் ஸ்வக்ஷேத்ரத்தில் இருந்தாலும், சனி ஸ்வக்ஷேத்ரம், மித்ர க்ஷேத்ரம், உச்ச க்ஷேத்ரம் இவைகளில் இருந்தாலும், லக்னதிபன் அஷ்டமாதிபனுடன் சேர்ந்து 6 அல்லது 12-ல் இருந்தாலும், 6 அல்லது 12-க்கு அதிபன் சுபவீக்ஷணம் பெற்று லக்னத்தில் இருந்தாலும், கேந்த்ரத்தில் லக்னதிபன் இருந்து குரு சுக்ரர்களின் சம்பந்தம், வீக்ஷணம் பெற்றாலும்,

3 கிரஹங்கள் சனியோடு சேர்ந்து கேந்த்ரத்தில் வசித்தாலும், ஸ்வக்ஷேத்ரம் த்ரிகோணங்களில் இருந்தாலும், சுக அஷ்டம ஸ்தானங்கள் லக்னாதிபன் சுபரோடு சேர்ந்தும், குரு விக்ஷணம் சம்பந்தம் பெற்றாலும், பாபி 3, 6, 11-களில் இருந்து சுபர்கள் கேந்த்ர த்ரிகோணங்களில் இருந்தும், லக்னாதிபன பலவானு யிருந்தாலும், 6, 7, 8 பாவங்கள் சுபருடன் சேர்ந்து 3, 6, 11-ல் பாபிகள் இருந்தாலும், அஷ்டமாதிபன் லக்னத்தில் குரு சுக்ர சம்பந்தம் அல்லது வீக்ஷணம் பெற்று லக்னாதிபன் கேந்த்ரத்தில் இருந்தாலும், 3 கிரஹங்கள் உச்சத்திலும், அஷ்டமாதிபன் லக்னத்திலும், அஷ்டம ஸ்தானத்தில் பாபி இல்லாமல் இருந்தாலும், உச்ச க்ஷேத்ரம், மித்ரக்ஷேத்ரம், ஸ்வக்ஷேத்ரமாக இருக்கும் அஷ்டம ஸ்தானத்தில் 3 கிரஹங்கள் வசித்து லக்னாதிபன பலம் பெற்றாலும், பாப க்ரஹங்கள் பாராவதாம்சம் பெற்று மற்ற சுப க்ரஹங்கள் கேந்த்ர த்ரிகோணங்களில் இருந்தாலும், 10, 8, 1-க்குடையவர்கள் பலிஷ்டர்களாய் சனி சம்பந்தமில்லாமல் இருந்தாலும் தீர்க்காயுள் உடையவனாகிறான்.

ஆயுளைக் காண்பதில் மித்ர சம்பந்தம், உச்ச க்ஷேத்ரம், மித்ர க்ஷேத்ரங்களில் வசிப்பவனோடு சேர்ந்த தசமாதிபதியைக் கொண்டும் கேந்த்ரத்தில் வசிக்கும் 10, 1, 8-க்குடையவர்களைக் கொண்டும் கவனிக்கின்றனர்.

லக்னாதிபனும், நவாம்சாதிபனும் சந்த்ர லக்னாதிபனும், சந்த்ர நவாம்சாதிபனும் தம் தாம் அஷ்டமாதிபனைக் காட்டிலும் பலம் பெற்றவர்களானால் தீர்க்காயுள் உடையவர்களாவார்கள்.

சந்த்ர லக்னத்திற்கு சுக சப்தம தசம ஸ்தானங்கள் பாபி களுடன் கூட ஒரு வருஷத்தில் மரணமடைவான்.

க்ரூரனுடன் சேர்ந்த லக்னாதிபன் லக்னத்தில் இருந்தாலும், சனி பார்த்தாலும், அஷ்டமத்தில் குரு இருந்தாலும் ஒரு வருஷத்தில் மரணமடைவான்.

லக்னம் கன்னியாகி குரு அஷ்டமத்திலிருந்து ஸூர்யன் சந்த்ரன், செவ்வாய், சனிகளால் பார்க்கப்பெற்று சுக்ரன் பார்வை பெறாமலிருந்தாலும், வக்ரத்தை யடைந்த சனி குஜ க்ஷேத்ரத்திலிருந்து அந்த க்ஷேத்ரம் 8 அல்லது 6-மிடம், கேந்த்ரமாகவிருந்து

பலிஷ்டனை செவ்வாயால் பார்க்கப் பெற்றாலும், க்ஷீண சந்த்ரன் லக்னாதிபனுக்கு அஷ்டமத்திலிருந்து க்ரூர க்ரஹங்களெல்லா வற்றாலும் பார்க்கப் பெற்று சுபவீக்ஷணமில்லாதிருந்தாலும், ஸூர்ய சந்த்ரர்கள் மூன்றிலிருந்து அவ்விடம் க்ரூர க்ஷேத்ரமாகி க்ரூர வீக்ஷணம் பெற்றாலும் மூன்று வருஷம் ஆயுள்.

ஸூர்யனிடத்தில் அஸ்தமனமான செவ்வாய் சனியுடன் சேர்ந்தோ, பார்வை பெற்றோ கேந்த்ரத்திலிருக்க நான்கு வருஷமே ஆயுட்காலமாகும்.

சுப க்ரஹங்கள் த்ருச்ய பாகத்திலும், பாபிகள் அத்ருச்ய பாகத்திலும், பாப ஸம்பந்தம் வீக்ஷணம் பெற்ற ராகு லக்னத்திலுமிருக்க ஐந்து வருஷம் ஆயுள் எனச் சொல்லப்படுகிறது.

[மேஷம் முதல் கன்னி வரை திருச்யங்கள். துலாம் முதல் மீனம் வரை அதிருச்யங்கள்.]

ராசி ஸந்திகளில் ஜனனமானாலும், க்ஷீண சந்த்ரன் பாப வீக்ஷணம் ஸம்பந்தம் பெற்று 6, 8, 12-லிருந்தாலும் அந்த ஜாதகன் 6, 8, 12-வயதுகள் ஜீவிப்பான்.

ஒரே ராசியில் ஸூர்ய சந்த்ர குஜ குரு இவர்கள் அல்லது செவ்வாய் குரு சனி சந்த்ரர்கள் சேர்ந்திருந்து இவர்களால் க்ரூர க்ரஹங்கள் பார்க்கப்பட ஏழு வருஷ ஆயுள்.

ஏழில் ஸூரியன், லக்னத்தில் சனி அல்லது செவ்வாய் எட்டிலிருந்தாலும், இவ்வண்ணமே சந்த்ரனும் ராகுவுமிருந்து அசுப வீக்ஷணமுமில்லாமலிருந்தால் 8-வது வயதில் மரணம் நேரக்கூடும்

லக்னாதிபன் பாபியாகி சந்த்ரனுக்கு விரயத்திலிருந்து பாப வீக்ஷணம் பெற்றாலும், விரய ஸ்தானாதிபன் சந்த்ரன் வலிக்கும் அம்சத்திலிருந்தாலும் 9 வயது ஜீவிக்கலாம்.

ஸூர்ய சந்த்ர குஜர்கள் ஐந்திலிருந்து சுபயோகமில்லா விட்டால் 10 வருஷம் ஆயுள்.

ஸூர்ய சந்த்ர குஜர்கள் லக்னத்தில் வலித்தாலும், க்ஷீண சந்த்ரன் சுக்ரனுடன் ஸப்தமத்திலிருந்தாலும் 11 வயதில் மரணமடைவான்.

சந்த்ர ஸூரியர்கள் பார்வை பெற்ற ராகு ஏழில் வலித்து சுபவீக்ஷணமில்லாமலிருந்தாலும், ஜன்ம லக்னம் சந்த்ர லக்னங்களுடைய அதிபதிகள் ஸூர்யனுடன் சேர்ந்து 6. 8, 12-களில் வலித்து சுப ஸம்பந்தம் வீக்ஷணம் பெறுமலிருந்தாலும், சந்த்ர லக்னாதிபன் சந்த்ரனுடி சனியோடு சேர்ந்து அஷ்டம ஸ்தானத்திலிருந்தாலும் பனிரண்டு வயதில் மரணமேற்படும்.

ஷஷ்டாஷ்டமங்களில் சுபவீக்ஷணமில்லாத பாபிகள் வலித்து லக்னாதிபன் 3. 6. 9. 12-களிலிருந்தால் பதினாறு வயது ஆயுள்.

கும்ப விருச்சிக சிம்மங்களுள் ஒன்று லக்னமாய் ராகு அங்கிருந்து பாப வீக்ஷணம் பெற்று குரு ஸம்பந்தம் பார்வையில்லாமலுமிருக்க 17 வயது ஆயுள்.

லக்னாஷ்டமாதிபர்கள் பாபிகளாகி ஒருவர் இடத்தில் மற்றவரைக இருந்து 6. 12-ல் குருவிருக்க 18 வயதில் மரணமேற்படும்.

சந்த்ர லக்னத்துக்கு 4. 7. 10-களில் பாபிகளிருந்து சுப க்ரஹ வீக்ஷணமில்லாமலிருக்க 20 வருஷங்கள் ஆயுட்காலமாகும்.

லக்னம் விருச்சிகமாய் குருவும் ஸூரியனும் வலித்து அஷ்டமாதிபன் கேந்த்ரத்திலிருந்தாலும். சந்த்ரன் ராகுவுடன் கூடி 7 அல்லது 8-லிருந்து லக்னத்தில் குருவிருந்தாலும். லக்னாஷ்டமாதிபர்கள் கேந்த்ரத்திலிருந்து அஷ்டமத்தில் ஒரு க்ரஹமிருந்தாலும். கேந்த்ரத்தில் ஒரு சுபருமில்லாமல் பாபிகள்மட்டுமிருந்தாலும் 22 வருஷங்கள் ஆயுட் காலமாகும்.

அஷ்டமாதிபன் 9. 2, 5-களில் வலிக்க பாபியான லக்னாதிபன் அஷ்டமத்திலிருந்து சுபர் பார்வையும் பெற்றால் 24 வயது வரை ஜீவிப்பான்.

லக்னாதிபன் பாபிகளிருவர் மத்தியிலிருந்து சுபர்களின் க்ஷேத்ரத்தையடையாமலும் தகப்பன் ஜன்ம லக்னத்திலேயே பிறந்தவனை 25 வயது ஜீவிப்பான்.

சனி லக்னத்தில் வலித்து அந்த ஸ்தானம் சனிக்கு சத்ரு க்ஷேத்ரமாகி சுபர்கள் 3. 6. 9. 12-களிலிருக்க 26 அல்லது 27 வயதுகளில் மரணமடைகிறான்.

பாபிகள் 1. 8, 12-லிருந்து சுபர் கேந்த்ரத்துக்கு வெளியில் வலித்தாலும், அஷ்டமாதிபன் பாபியாய், குரு, மற்றொரு பாபி இவர்களால் பார்க்கப் பெற்று லக்னாதிபன் எட்டிலுமிருக்க 28 வயதில் முடிவு ஏற்படுகிறது.

லக்னாஷ்டமாதிபர்களுக்கு மத்யத்தில் சந்த்ரன் வலித்து விரயத்தில் குருவிருக்க 27 அல்லது 30 வயதுகளில் மரணம் ஸம்பவிக்கலாம்.

சனி. சூரியர்கள் சந்த்ரனுக்கு அஷ்டமத்திலிருக்க 29 வயது வரை ஆயுட் காலம்

அஷ்டமாதிபன் கேந்த்ரம் பெற்று லக்னாதிபதியும் பலவானாலும். ஒரு க்ரஹம் எட்டிலிருந்து மற்றொரு க்ரஹம் பலவானாய் ஸ்வக்ஷேத்ரத்திலிருந்தாலும், சனி எட்டாவது ராசி, எட்டாவது அம்சத்திலிருந்து பாபி பலவானாய் லக்னத்தில் வலித்து கேந்த்ரத்துக்கு வெளியில் சுப க்ரஹமிருந்தாலும். க்ரூர க்ரஹங்கள் ஒருவருக்கொருவர் சேர்ந்து பாப வீக்ஷணம் பெற்று விரய ஸ்தானத்தில் சந்த்ரனிருந்தாலும், ஒன்பதில் சந்த்ரன் வலித்து அஷ்டமாதிபன் கேந்த்ரத்திலிருந்து சுப ஸம்பந்தம் வீக்ஷணம் பெற்று துர்பலர்களானாலும், அஷ்டமாதிபன் லக்னத்தில் வலித்து லக்னாதிபன் துர்பலன் ஆனாலும். சந்த்ரனும், லக்னாதிபனும். 3. 6. 9. 12-களிலிருந்து பாபிகள் பார்வை பெற்று துர்பலர்களானாலும் 30 வருஷங்கள் ஆயுட் காலம்.

க்ஷீண சந்த்ரன் எட்டுக்குடையவனாய் சூரியனோடு சேர்ந்து கேந்த்ரம் அல்லது எட்டிலிருந்து, ராகு பாபியுடன் சேர்ந்து லக்னத்திலிருந்தாலும். சந்த்ரன் குஜ க்ஷேத்ரத்திலிருந்து அவ்விடம் லக்னமாய் க்ரூர க்ரஹங்களால் பார்க்கப் பெற்று சுபர்கள் கேந்த்ரத்துக்கு வெளியிலிருந்தாலும், பாப க்ரஹம், அஷ்டமாதிபனுடி சந்த்ரனுடன் சேர்ந்து கேந்த்ரம் அல்லது த்ரிகோணத்திலிருந்து. தசமஸ்தானத்திலிருக்கும் பாபிகளால் பார்க்கப் பெற்றாலும், சந்த்ரனுடன் சேர்ந்த சனி லக்னத்திலும், செவ்வாய் இரண்டிலும். சனி பாப மத்யம் பெற்று குரு இரட்டை ராசியில் ஆறுமிடத்தில் வலித்தாலும் 35 வயது ஆயுட் காலமாகும்.

குரு சுக்ரர்கள் கேந்த்ரத்தில் வலித்து லக்னாதிபன் பாபியோடு சேர்ந்து 3 6 9, 12-களில் இருந்து லக்ன ஸந்தியில் ஜனனமானாலும். லக்னத்தில் குரு வலித்து, பாபர்கள் இரு

க்கத்திலுமிருந்து, ராகு ஆறிலிருந்து சுபவீக்ஷணமில்லாதிருந்தாலும், செவ்வாய் சந்த்ரர்கள் லக்னத்தில் வலித்து, சுபர் 8, 11, கேந்த்ரத்திலிருந்து உதயத்தில் மாந்தியுமிருந்தாலும் 36 வயதுகள் ஜீவிப்பான்.

அஷ்டமாதிபனுடன் செவ்வாய் லக்னத்திலிருந்தாலும், செவ்வாய் ஸ்திர ராசியிலிருந்தாலும் 37 வருஷங்கள் ஆயுள்.

லக்னாதிபன் 8-ல் பாபருடன் கூடி கேந்த்ரத்துக்கு வெளியில் சுபர்களிருந்தால் 40 வயது ஜீவிப்பான்.

லக்னாதிபன் 12 அல்லது 8-ல் இருக்க 42 வயது ஆயுள்.

கேந்த்ரத்தில் குருவும், 10-ல் சனியும், லக்னம் சரமாகவுமிருக்க 44 வயது ஆயுட் காலம்.

மகரம் லக்னமாய் செவ்வாய் அங்கிருக்க குரு சப்தமத்திலும், சனி 10-லும் இருந்தால் அப்போது ஜனனமானவன் தனவானாகவும், சாஸ்த்ரங்கள் அறிந்தவனாகவுமிருப்பதுடன் 44 வருஷ ஆயுட் காலத்தை அடைவான்.

சந்த்ர லக்னாதிபதி பாபியுடன் கூடி அஷ்டமத்திலும் லக்னாதிபதி பாபியோடு சேர்ந்து 6-ம் இடத்திலும், பலிஷ்டரான சுபரின் வீக்ஷணம் இல்லாமல் இருந்தால் 45 வயதில் மரணமடைவன்.

லக்னம் மேஷமாகி பூர்ண சந்த்ரன் அங்கு இருந்து சுபக்ரஹ வீக்ஷணம் பெற்று அசுபர் பார்க்காமல் இருக்க ஜனித்தவன் அரசனாக ஆவதுடன் 48 வயது ஆயுளை அடைவான்.

லக்னத்தில் சனியும், வேறு க்ரஹங்களுடன் சேர்ந்த சந்த்ரன் 12 அல்லது 8-ல் இருக்க ஜனித்தவன் வேதாந்த சாஸ்த்ர ஞானம், நன்னடத்தை, நல்ல சுவபாவம் இவைகளை அடைவதுடன் 52 வயது ஆயுளை அடைகிறான்.

லக்னம் தனுஸாகி குரு அங்கிருந்து ராகுவும் செவ்வாயும் அஷ்டமத்தில் இருக்க 57 வயதில் மரணமடைவான்.

அஷ்டமாதிபன் சப்தமத்திலும், சந்த்ரன் பாபியுடனும்கூட 56 அல்லது 58 வயது வரை ஜீவிப்பான்.

லக்னம் கும்பமாகி, அஷ்டமத்தில் குருவும், பாபிகள் கேந்த்ரத்திலுமிருக்க, வேதாந்த ஞானம், நன்னடத்தை, நல்ல ஸ்வபாவம் இவைகளுடன் கூடினவனாகவும், 60 வயது ஆயுளையும் அடைவான்.

லக்னத்தில் சனி, 4-ல் சந்த்ரன், 7-ல் செவ்வாய், 10-ல் சூரியன், சுக்ரன், குரு, புதன் இவர்கள் சேர்ந்து இருந்தாலும், லக்னாதிபன் சுக்ரனாகி, புதன், குரு, சந்த்ரன் இவர்களால் பார்க்கப்பெற்று, 5-ல் குருவிருந்தாலும், சுக்ரன் லக்னத்திலும், சனி, புதர்கள் கேந்த்ரத்திலும், பரமோச்ச பாகத்தை அடைந்த க்ரஹங்கள் 3, 11-இடங்களில் இருக்க ப்ரபுவாகவும், 60 வயது ஆயுளுள்ளவனாகவுமாவான்.

ஹோராதிபன், லக்னாதிபன் இவர்கள் அஷ்டமத்திலும், அஷ்டமாதிபன் கேந்த்ரத்திலுமிருக்க ஐச்வர்யம், கீர்த்திகளுடன் கூடியவனாகவும், 66 வயது ஆயுள் உடையவனாகவுமாவான். நக்ஷத்ர ஸ்தானாதிபதி எல்லா க்ரஹங்களும் அஷ்டமத்திலிருக்க அரசனாவான்; ஆயுட் காலம் 60 ஆகும்.

குரு லக்னத்தில் இருந்து புதன் சூர்யர்கள் சேர்ந்து லக்னத்தில் இருக்க, சனி மீனத்திலும், சந்த்ரன் 12-லுமிருந்தால் 66 வருடமாயுட்காலமாகும்.

லக்னம் கடகமாய், சந்த்ரன் லக்னத்திலும், சனி மேஷத்திலும், சப்தமத்தில் சூர்யனுமிருக்க ஜாதகன் தரித்ரனாகவும், 65 வயது ஜீவிப்பவனாகவுமாவான்.

சூர்ய சந்த்ரர்கள் தசமத்திலும், குரு 4-லும், லக்னத்தில் சனியுமிருக்க 68 வயதுகளாகும்.

சனி நீசம், கேந்த்ரம், த்ரிகோணம் இவைகளிலிருந்து, புதன் கேந்த்ரத்தில் அல்லது சூரியன் புதனோடு சேர்ந்து இருக்க படித்தவனாகவும், தர்மத்தில் ஆசையுள்ளவனாகவும், ஞானவானாகவும் ஆவதுடன் 70 வயது ஜீவிப்பவனாகவுமாவான்.

சுபக்ரஹம் பலமடைந்து கேந்த்ரத்திலும், அஷ்டமஸ்தானத்தில் சுபர் இல்லாமலும், பாபி லக்னாதிபதியானாலும், செவ்வாய்

பஞ்சமத்திலும், சனி நீசத்திலும், சூர்யன் சப்தமத்திலுமிருந்தாலும் 70 வயது வரை ஜீவிப்பவன் ஆவான்.

புதன் லக்னத்திலும், சந்த்ரன் த்ரிகோணத்திலும், சனி 9-லுமிருக்க 74 வயது வரை கஷ்டப்படுவான். மேல் சுகமுண்டு.

சுபக்ரஹங்கள் எல்லோரும் லக்னம் முதல் 6 ராசிகளுக்குள் பலம் உடையவர்களாய் இருந்து பாபர்கள் அனைவரும் அடுத்த 6 ராசிகளுள் பலிஷ்டர்களாக இருந்தால் நல்ல சுபாவம், நல்ல குணம், ஐச்வர்யம் உடையவனாக ஆகி 80 வயது வரை ஜீவிப்பான்.

சுபர்கள் கேந்த்ரத்தில் இருந்து பாபர்கள் அஷ்டமத்தில் இல்லாமல் இருந்து, சந்த்ரன் 6-ல் இருந்தால் 86 வயதில் மரணத்தை அடைவான்.

குரு சந்த்ரனோடு சேர்ந்து, கேந்த்ரத்தில் வசித்து சுபக்ரஹ வீக்ஷணம் பெற்று மற்ற க்ரஹங்கள் 10-க்கு மேலுள்ள ஸ்தானங்களிலிருக்க 80 வயது ஆயுட்காலமெனச் சொல்லப்படுகிறது.

சுபாசுபர்கள் லக்னம் முதல் 6 ராசிகளுக்குள் இருக்க நீர்க்காயுள் என்றும், 6 ராசிக்குப் பிறகு இருந்தால் அற்பாயுள் என்றும் சொல்லப்படுகிறது.

லக்னம் ஒற்றைப்பட்ட ராசியாய் எல்லா க்ரஹங்களும் ஒற்றைப்பட்ட ராசியில் பூர்ண சந்த்ரனுடன் கூடி இருந்தால் அதிக பாக்யத்தையும், நீண்ட ஆயுளையும் அடைகிறான்.

லக்னம் இரட்டை ராசியாகி இரட்டையான ராசியில் எல்லா க்ரஹங்களும், கிருஷ்ண சந்த்ரனுடன் கூடி இருக்க அக்காலத்தில் ஸ்திரீ ஜனனமானால் அதிக பாக்யத்தை அடைவாள்.

பாபிகள் 3, 11, 6-இடங்களிலும், சந்த்ரன் 6, 8-லும், குரு கேந்த்ரத்திலும் இருக்க நீர்க்காயுளை உடையவராகவும், அனேக கிராமங்களுக்கு அதிபதியாகவுமிருப்பர்.

5, 9 அல்லது 8, 11 கேந்த்ரம் இவைகளில் 3 க்ரஹமிருந்தாலும், கேந்த்ரத்தில் 5 க்ரஹமிருந்தாலும், ஜிதேந்த்ரியனாய், நீர்க்காயுளை அடைவான். ஸ்வ ப்ரயத்னத்தால் அரசனாகவுமாவான்.

குரு லக்னாதிபனுக்கு கேந்த்ரத்திலும், பாபிகள் கேந்த்ரம், த்ரிகோணம் இவைகளில் இல்லாமலும் இருந்தாலும், குரு கேந்த்ரத்திலும், செவ்வாயோடு சேர்ந்த சூர்யன் லக்னம் அல்லது அஷ்டமத்திலும் இருந்தாலும், ஸம்பத் ஸம்ருத்தியை உடையவனாய் 100 வருஷங்கள் வாழ்ந்து இருப்பான்.

மீன ராசியில் கடைசி நவாம்சம் லக்னமாகி, 4 க்ரஹங்கள் கேந்த்ரத்தில் இருந்தாலும், சந்த்ரன் லக்னத்திலும், அம்சத்தில் மீனம் அல்லது கடகத்தில் இருந்தாலும், கேந்த்ரத்தில் க்ரஹமே இல்லாமல் அல்லது 4 க்ரஹங்களிருந்தாலும், சிம்மம் லக்னமாய் 5, 9-களில் 4 க்ரஹங்கள் இருந்தாலும், வ்ருஷபம் அல்லது கடகம் லக்னமாய் அதில் குரு இருந்து உச்சத்தில் 3 க்ரஹங்களிருந்தாலும், செவ்வாய் மகரத்திலும், குரு கடகத்திலும் மற்ற க்ரஹங்கள் கேந்த்ரத்தில் இருந்தாலும் 108 வருஷங்கள் வரை ஜீவிப்பான்.

சுக்ரன் 4-லும், குரு லக்னத்திலும், சந்த்ரனும் சனியும் தசமத்தில் இருந்தாலும், மகரத்தின் பின் பாகம் லக்னமாயும், முன் பாகத்தில் செவ்வாயும், சந்த்ரன் லக்னத்திலும், குரு கேந்த்ரத்திலுமிருந்தாலும், மிதுனத்தின் பின்பாகம் லக்னமாகி முன் பாகத்தில் செவ்வாயும் அல்லது தனுஸ் முன் பாகத்தில் குருவும் பின்பாகம் லக்னமாக இருந்தாலும், சனி கேந்த்ரத்திலும், சுக்ர சந்த்ரர்கள் சேர்ந்து இருந்தாலும், பாபிகள் 3, 6, 11-களிலும், சுபர் லக்னத்தின் கடைசி நவாம்சத்திலுமிருந்தாலும், சனி லக்னத்திலும், குரு சுக்ரர்களிலொருவர் கேந்த்ரத்தில் இருந்தாலும், மிதுனத்தின் முன்பாதியில் செவ்வாயும், பின் பாதி ஜன்ம லக்னமாகி குருவிருந்து சுக்ர புதர்கள் கேந்த்ரத்தில் இருந்தாலும், 100 வயதுக்கு மேல் ஜீவிப்பான்.

மீன லக்னத்தில் மீன நவாம்சத்தில் ஜனித்து, புதன் வ்ருஷபத்தில் 26-வது கலை இருக்க மேஷத்தில் சூரியன், வ்ருஷபத்தில் சந்த்ரன், மகரத்தில் செவ்வாய், கடகத்தில் குரு, மீனத்தில் சுக்ரன், துலாத்தில் சனி அவரவர்கள் உச்ச பாகத்தில் இருக்க பரமாயுள் ஏற்படும்.

லக்னம் கடகமாகி குருவும் சந்த்ரனும் அங்கிருந்து புத-சுக்ரர்கள் சேர்ந்து அல்லது தனியாக 4, 7, 10-களில் இருக்க சூரியன்,

சனி, செவ்வாய்கள் சேர்ந்து அல்லது தனியாக 11, 6, 8-களில் இருந்தாலும் ஆயுட்காலம் கணக்கிட முடியாததாகும்.

லக்னம் கும்பமாகி அதில் சூரியனும், சுக்ரன் மீனத்திலும், குரு அல்லது சனி 11-லும் இருக்க ரஸாயனிகளால் ஆயுளை வளர்த்து பரப்ரம்ஹத்தை அடைவான்.

வ்ருஷபம் லக்னமாய், அங்கு சந்த்ர குரு சுக்ரர்கள் சேர்ந்து வசித்து மற்ற கிரஹங்கள் 2-ம் இடத்தில் இருந்தாலும், தனுஸ் அல்லது மீனம் லக்னமாய் அங்கு குருவிருக்கமிதுனம், சுத்தமாக இருந்து கேந்திரத்தில் சுக்ரனிருந்தாலும், த்ரிகோணத்தில் பார்வைகள் இல்லாமல் சுப க்ரஹங்கள் கேந்த்ரத்திலுமில்லாமல், பாபிகளும் 8-ல் இல்லாமல் இருந்தாலும், வ்ருஷபம் லக்னமாகி, சுக்ரன் அங்கிருந்து குரு கேந்த்ரம் அல்லது 3, 6, 10, 11-களில் இருந்தாலும் தேவேந்திர ஸ்தானத்தை அடைவான்.

எல்லா கிரஹங்களும் 5 அல்லது 9-ல் இருந்தாலும், கேந்த்ரத்தில் இருந்தாலும் குழந்தையில் மரணமடையாமல் இருந்தால் மந்த்ர சித்தியால் அநேக வருஷங்கள் வாழ்வான்.

லக்னம் கடகமாகி சனி துலாம் அல்லது மகரத்திலும், குரு லக்னத்திலும், சந்த்ரன் வ்ருஷபத்திலும் இருந்தால் ரஸாயன மந்த்ர ஸித்திகளால் பிரம்ம பதத்தை அடைவான்.

கடக லக்னத்தில் தனுரம்சம் உதித்து குரு வசித்து 3, 4 க்ரஹங்கள் கேந்த்ரத்தில் இருந்தாலும், 3, 11 அல்லது கோபுராம்சத்தில் சுக்ரன் வசித்து வ்ருஷப லக்னத்தில் வ்ருஷபாம்சம் உதித்தாலும், தனுர் லக்னத்தில் தனுரம்சம் உதயமாய் சுக்ரன் அங்கிருந்து 7-ல் குருவும், கன்னியில் சந்த்ரனுமிருந்தாலும், லக்னம் கும்பமாகி அங்கு குருவும், 5-ல் கோபுராதி அம்சத்தில் புதனும் இருந்தாலும் பிரம்மபதத்தை அடைகிறான்.

கடக லக்னத்தில் கடகாம்சம் உதித்து கேந்த்ரத்தில் குருவும் 7-ல் செவ்வாயும், ஸிம்மாஸனாம்சத்தில் சுக்ரனும் இருந்தாலும், கன்னியின் கடைசி பாகம் லக்னமாய் புதன் அங்கிருந்து கோபுராம்சத்தில் 7-ல் குருவும், ம்ருத்வம்சத்தில் சனியுமிருந்தாலும் தேவலோகாம்சத்தில் சுக்ரனும், கேந்த்ரத்தில் செவ்வாயும், குரு ஸிம்மாசனாம்சம் பெற்று கேந்த்ரத்தில் இருந்தாலும், சுக்ரன்

உச்சாம்சம் பெற்று கேந்த்ரத்திலும், பாராவதாம்சத்தில் தன் வர்க்கத்தில் சனியும், கேந்த்ரத்தில் குருவுமிருந்தாலும் அளவு கடந்த ஆயுளை அடைகிறான்.

சிம்மம் லக்னமாய் குரு சுக்ரர்கள் கடகத்திலும், புதன் 2-லும், பாபிகள் 6, 3, 10, 11-களில் இருக்க 1000 வருட காலம் ஜீவிப்பதாகவும், சூரியன், செவ்வாய் 4-லும், லக்னத்தில் சனியும், 12-ல் ராகுவும் மற்ற கிரகங்கள் அஷ்டமத்திலுமிருந்தாலும், மேஷம் லக்னமாய் சூர்யன அங்கிருந்து 4 அல்லது 10-ல் சனியும், சப்தமத்தில் செவ்வாயும், விரயத்தில் பலிஷ்டனான சந்த்ரன் இருந்தாலும், வ்ருஷபம் லக்னமாய், குரு புதன் த்ரிகோணத்திலும், லக்னத்தில் செவ்வாயும், கோபுராம்சத்தில் சந்த்ரனுமிருந்தாலும் 2000 வருஷங்கள் ஜீவிப்பதாகவும், சுக்லபக்ஷத்தில் பகலில் கடக லக்னத்தில் ஜனித்து குரு கேந்த்ரத்திலும், செவ்வாய் சப்தமத்திலும், 4-ல் சனியுமிருந்தாலும், குரு, சனி, செவ்வாய்கள் ஒருவர்க்கொருவர் கேந்த்ர வாஸம் அல்லது த்ரிகோண வாஸம் இவைகளை அடைந்தாலும் 10000 வருஷங்கள் ஜீவிப்பதாகவும், லக்னம் சிம்மமாய், கேந்த்ரங்கள் நான்கிலும் சுபர்கள் வஸித்து, 6, 3, 11-களில் பாபிகள் இருக்க 60000 வருஷங்கள் ஜீவிப்பதாயும், சுக்ரன் கோபுராம்சம் பெற்று கேந்த்ரத்திலும், குரு பாராவதாம்சம் பெற்று த்ரிகோணத்திலும், கடகம் லக்னமானாலும், குரு கேந்த்ரத்திலும், லாப ஸ்தானத்தில் சனியும், தன ஸ்தானத்தில் சூர்யனும், களத்ர ஸ்தானத்தில் மாந்தியும், பாக்ய ஸ்தானத்தில் செவ்வாயும் இருந்தாலும் யுகாந்தம் ஜீவிப்பதாயும் சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன.

அஷ்டமாதிபன், அஷ்டமஸ்தானம், பாபர்களுடன் கூடி, விரய ஸ்தானத்தில் க்ரூர க்ரஹங்கள் இருக்கப் பிறந்தாலும், கேந்த்ர த்ரிகோணங்களில் பாப க்ரஹங்களிருக்க 6, 8-ல் சுபர்களும், லக்னம் அஷ்டமாதிபதியின் நீச ராசியாகி இருக்கப் பிறந்தாலும் உடனே மரணத்தை அடையும்.

அஷ்டமாதிபன் அஷ்டமத்தில் இருக்க சூதாட்டம், பொய் பேசல், குரு நிந்தை இவைகளில் ஆசையுடையவனாகவும், அஷ்டமாதிபன் 9-ல் இருக்க அதிக பாபம் செய்பவனாகவும், நாஸ்திக

னுகவும். ஸ்தூதியற்றவனுகவும். பிறர் மனை முதலியவைகளில் ஆசையுடையவனுகவுமாவான்.

அஷ்டமாதிபன் 4, 3, 10-இடங்களிலிருக்க கோள் சொல்லல், பந்துக்களின்மை, மாதா, பிதா இவர்களின் வியோகம், பயம் இவைகளை உடையவனுகவும். 5 அல்லது 11-ல் இருந்தால் அபிவிருத்தியின்மை, பொருள் ஸ்திரமாக இல்லாமை, நிலையற்ற புத்தி இவைகளை உடையவனுகவும் 12 அல்லது 6-ல் இருந்தால் ரோகியாகவும், சிறு பிராயத்தில் ஜலம், சர்ப்பம் முதலியவைகளின் பீடையை உடையவனுகவும் லக்னம் அல்லது சப்தமத்தில் இருக்க இரு பத்னிகள் உடையவனுகவும், விஷ்ணு த்ரோகத்தை யுடையவனுகவும் புண்கள உடையவனுகவும், 2-ம இடத்தில் இருக்க சிறிது பொருள் உள்ளவனுகவும், பிறரிடத்தில் கொடுத்த திரவ்யம் திரும்பி வராததாகவும், பாஹு பலம் இல்லாதவனுகவுமாவான்.

துவாதசாம்சத்தில் 10 அல்லது 4-ல் சூர்யன் இருக்க அரசன் வீட்டில் மரணமும், செவ்வாய் 12-லும், சனி 8-லுமிருக்க துர்மரணமும், ராகு, சூரியன் சேர்ந்து இருக்க புண்ய தீர்த்தம் அல்லது மலையில் மரணமும், 6-ம் இடத்தில் செவ்வாய் இருக்க துர்மரணமும், செவ்வாய் 6-ல் இருந்து சூர்யன் பார்வை பெற கபம் அல்லது அதிஸாரத்தால் மரணமும், சனி 8-ல் இருக்க வண்டியால் மரணமும், புதன், சனி 8-ல் இருக்க கிறைச்சாலையிலோ, சூலத்தாலோ மரணமும், சுக்ர புதர்கள் 8-ல் இருக்க படுக்கையிலோ, இடைவெளியிலோ மரணமும், சனி, சூர்யன் சேர்ந்திருக்க பாண்டுவால் மரணமும், சனி, குஜர்கள் 8-ல் இருக்க தூக்குப் போட்டுக்கொள்வதால் மரணமும், மகர கும்பங்களில் சூர்யன் லக்னுதிபதியுடன் சேர்ந்திருக்க இடியினால் மரணமும், குரு பாக்ய ஸ்தானத்தில் இருக்க தீர்த்தத்தில் மரணமும், புத சுக்ர்கள் பாக்யத்தில் இருக்க வாசற்படியில் மரணமும், புத சூர்யர்கள் பாக்யத்தில் இருக்க வெளியிலோ, சிவாலயத்திலோ மரணமும் உண்டாகும்.

பாக்யாதிபன் லக்னத்தில் இருக்க தீர்த்தத்திலும், சந்திரனும், தர்மாதிபதியும் சேர்ந்து அஷ்டமத்தில் இருக்க அரசாலை மாகவும், லக்னம் சரராசியானால் சொந்த ஊரிலும், உபய ராசியானால் வெளியூரிலும் ஸ்திரமானால் வழியிலும், சுகாதிபன் ரோக ஸ்தானத்தில் சனியோடு சேர்ந்திருக்க வண்டியாலும், ராகுவும், சுகாதிபனும் சத்ரு ஸ்தானத்தில் இருக்க திருடனுலும், கேது, சுகாதிபன் இருவரும் சத்ரு ஸ்தானத்தில் இருக்க ஆயுதத்தாலும், சூர்ய குஜர்கள் 4 அல்லது 10-ல் இருக்க கல்விழுதலாலும், சனி 4-லும், சந்திரன் 7-லும், செவ்வாய் 10-லுமிருக்க இணற்றில் விழுவதாலும், கன்யா ராசியில் இருக்கும் சந்திர சூர்யர்கள் பாபக்ரஹத்தால் பார்க்கப்பட தன் இனத்தராலும். லக்னம் உபயராசியாகி சந்திர சூர்யர்கள் அங்கிருக்க ஜலத்தில் மூழ்குவதாலும், சந்திரன் மகரத்திலும், சனி கடகத்திலுமிருக்க ஜலோதரத்தினுலும், சந்திரன் பாபிகளிருவர் மத்தியில் கன்யா ராசியில் இருந்தாலும், சந்திரன் மகர கும்பங்களில் இரு பாபிகளின் மத்தியிலிருந்தாலும் ஜுரம், நெருப்பில் விழுதலாலும் சந்திரன் பாபியுடன் சேர்ந்து 7-லும், மேஷத்தில் சுக்ரனும், லக்னத்தில் சூர்யனும் இருக்க ஸ்திரீமூலமாகவும், சூர்ய, குஜர்கள் 4-லும், 10-ல் சனியுமிருக்க, சூலத்தாலும், க்ஷீண சந்திரன் பாபிகளோடு சேர்ந்து 5, 9, 8-களில் இருக்க சூலத்தாலும், ஸூர்யன் 4-லும், செவ்வாய் 10-லும் இருந்து க்ஷீண சந்திரன் பார்வை பெற சூலத்தாலும், செவ்வாய் 10-லும், சூர்யன் 4-லும், சனி பார்வையும் பெற மரத்தின் அடியினுலும், க்ஷீண சந்திரன் 8-லும், செவ்வாய் 10-லும், சனி 4-லும், ஸூர்யன் லக்னத்திலுமிருக்க தடியடியாலும், க்ஷீண சந்திரன், செவ்வாய், சனி, ஸூர்யன இவர்கள் 9, 10, 11-ல் இருக்க புகை, அக்னி, பந்தனம், மரத்தால் அடிபடுதல் இவைகளாலும் மரணமுண்டாகும்.

சனி, ஸூர்ய குஜர்கள் 10, 7, 4-ல் இருக்க ஆயுதம், நெருப்பு ராஜ கோபம் இவைகளாலும், 4-ல் செவ்வாயும், 10-ல் ஸூர்யனுமிருக்க வாஹனத்தில் இருந்து விழுதலாலும், சனி, சந்திர குஜர்கள் 2, 4, 10-களில் இருக்க துவாரங்களில் புழு உண்டாவதாலும், செவ்வாய் சப்தமத்திலும், சந்திர ஸூர்யர்கள் லக்னத்திலும் இருக்க யந்திரத்தினுல் அறைபடுவதாலும், செவ்வாய், சனி, சந்திரர்கள் துலாம் மேஷம் மகரம் கும்பம் இவைகளில் இருந்தாலும், சூர்யன் செவ்வாய் க்ஷீண சந்திரன் இவர்கள் 7, 4, 10 களில் இருந்தாலும் புருஷமத்யத்திலும், சந்திரன் சூர்யன் செவ்வாய் சனிகள் 1, 5, 8 இவைகளிலிருந்தால் மலையுச்சி, இடி, சுவர் விழுவ

தாலும், அஷ்டம லக்னாதிபதிகள் துர்ப்பலர்களாய், செவ்வாய் ரோகாதிபதியுடன் சேர்ந்திருக்க மலியில் இருந்து விழுவதாலும், அஷ்டம லக்னாதிபர்கள் சுகாதிபதியுடன் சேர வாஹனத்திலிருந்து கீழே விழுவதாலும், அஷ்டம லக்னாதிபர்கள் ராகு கேதுக்களோடு சேர்ந்து சத்ரு ஸ்தானத்திலிருக்க திருடன் ஆயுதங்களால் அடி படுதல் இவைகளாலும் மரணம் சம்பவிக்கும்.

தன லக்னாதிபதிகள் 6, 8, 12-இவைகளில் ராகு கேதுக்களோடு சேர்ந்திருந்தால் தூக்குப்போட்டுக்கொள்வதாலும், சனி குஜர்கள் ராகுவோடு சேர்ந்து அஷ்டமத்தில் இருக்க ஆயுதத்தாலும் அஷ்டம ஸ்தானத்தில் சுபன் வசித்து பாபி சத்ரு வீக்ஷணம் பெற்றால் யுத்தத்தாலும், பாபி அஷ்டமத்தில் இருக்க தூங்கும் போதோ, படுத்து இருக்கும்போதோ சத்ரு கோபத்தாலும் மரணம் சம்பவிக்கிறது.

லக்னம் குஜ சூர்ய வீக்ஷணம் பெற்று சுக்ரன் குரு இவர்கள் பார்வை இல்லாமல் இருக்க காமினாலும், சனி சூர்யர்கள் லக்னத்தில் இருந்து ராகுவால் பார்க்கப்பட மரம் விழுதலாலும், சப்தமத்தில் சனி சூர்யன் ராகு இவர்கள் இருக்க சர்ப்பம் தீண்டுவதாலும், தனுஸ் மீனம் இவைகளில் புதனும், மகரம் கும்பம் இவைகளில் செவ்வாயுமிருக்க புலியினாலும், வ்ருஷப துலாங்களில் சந்த்ர சனிகள் இருக்க ஆயுதத்தாலும் தர்ம ஸ்தானத்தில் பாபி இருந்து சுபவீக்ஷணமில்லாவிடில் பாணத்தினாலும் சந்த்ர புதர்கள் 6 அல்லது 8-ல் இருக்க விஷத்தினாலும் சந்த்ர சூர்யர்கள் 6 அல்லது 8 ல் இருக்க யானையினாலும் மரணம் சம்பவிக்கிறது.

மேஷத்தின் முதல் திரேக்காணம் அஷ்டம ஸ்தானமானால் ப்லீஹம், விஷம், பித்தம் இவைகளாலும், இரண்டாவது திரேக்காணமானால் ஜலத்தினாலும், 3-வது திரேக்காணமானால் வ்ரணமுதலியவைகளில் விழுதலாலும், **வ்ருஷபத்தின்** முதல் திரேக்காணமானால் கழுதை குதிரைகளாலும், இரண்டாவது திரேக்காணமானால் பித்தம், நெருப்பு திருடன் இவைகளாலும், 3-வது திரேக்காணமானால் உயரத்திலிருந்து விழுதல் குதிரை முதலியவைகளாலும், **மிதுனத்தின்** முதல் திரேக்காணமானால் வாதச்வாஸங்களாலும், இரண்டாவதானால் கபவாத பித்தங்களாலும், மூன்றாவதானால் வாகனம் மலை முதலியவைகளிலிருந்து

விழுதலாலும், காட்டினாலும், **கடகத்தின்** முதல் திரேக்காணமானால் அபேய பானத்தாலும், முள்ளினாலும், 2-வது திரேக்காணமானால் விஷம், அக்னிஸாரங்களாலும், 3-வது திரேக்காணமானால் அதிக மதிமயக்கம், ப்லீஹம், குல்மம் இவைகளாலும், **சிம்மத்தின்** முதல் திரேக்காணமானால் விஷம், ஜல ரோகத்தாலும், 2-வது திரேக்காணமானால் சுவாசம், ஜல சம்பந்த ரோகங்களாலும், 3-வது திரேக்காணமானால் வாஹனம், விஷம், சஸ்த்ரமிவைகளாலும், **கன்னியின்** முதல் திரேக்காணமானால் வாயு, தலைவலி இவைகளாலும், 2-வது திரேக்காணமானால் அரண்யத்திலும், மலையினின்றும் விழுதல், ராஜ கோபம் இவைகளாலும், 3-வது திரேக்காணமானால் கழுதை, ஒட்டகை, கத்தி, ஜலத்தில் விழுதல் இவைகளாலும், **துலாத்தின்** முதல் திரேக்காணமானால் கீழே விழுதலாலும், ஸ்திரீயாலும், பசுவாலும், 2-வது திரேக்காணமானால் வயிற்றுவலியாலும், 3-வது திரேக்காணமானால் யானையினாலும், ஜலத்திலும், **விருச்சிகத்தின்** முதல் திரேக்காணமானால் விஷம், கத்தி இவைகளாலும், 2-வது திரேக்காணமானால் அதிகச் சுமை, இடுப்பு, மூத்ராசயம் இவைகளில் காணும் ரோகங்களாலும், 3-வது திரேக்காணமானால் கல் கட்டைகளாலும், **தனுஸ்ஸின்** முதல் திரேக்காணமானால் வாதம், குதரோகங்களாலும், 2-வது திரேக்காணமானால் விஷம், பாணம் முதலியவைகளாலும், 3-வது திரேக்காணமானால் ஜலம், ஜலத்தில் வசிக்கும் பிராணி, வயிற்றுவலி இவைகளாலும், **மகரத்தின்** முதல் திரேக்காணமானால் சிங்கம், பன்றி, தேள் இவைகளாலும், 2-வது திரேக்காணமானால் சர்ப்பத்தினாலும், 3-வது திரேக்காணமானால் திருடன், நெருப்பு, ஆயுதம், ஜ்வரம் இவைகளாலும், **கும்பத்தின்** முதல் திரேக்காணமானால் ஸ்திரீயிடம் உண்டான வயிற்றுவியாதியாலும், 2-வது திரேக்காணமானால் குஹ்ய ரோகத்தாலும், 3-வது திரேக்காணமானால் விஷத்தினாலும். **மீனத்தின்** முதல் திரேக்காணமானால் க்ரஹணி, மேகம், குல்மம், இவைகளாலும், 2-வது திரேக்காணமானால் ஜலசரம், யான, முதலை, கப்பல்களாலும், 3-வது திரேக்காணமானால் கெட்ட வியாதியாலும் மரணம் ஸம்பவிக்கிறது.

8-ல் புதன் வசித்து, சுபனால் பார்க்கப்பட்டாலும், தர்மாதிபனாகி புதன் ஆனால் தீர்த்தத்தில் மரணம்.

தர்மாதிபன் செவ்வாய் சூர்யன் 9-ல் வசித்து லக்னாதிபதி சப்தமாதிபதி இருவர்களும் சிநேகிதர்களானால் பத்னி ஸஹ கமனம் செய்வாள்.

நவாம்ச லக்னம் அல்லது ஜன்ம லக்னத்திற்கு அஷ்டமஸ்தானத்தில் சுப க்ரஹமிருக்க சுபலோக ப்ராப்தி.

சந்த்ரன் சிம்மாசனாம்சத்திலும், குரு பாரிஜாதாம்சத்திலும் சுக்ரன் ஐராவதாம்சத்திலுமிருந்தாலும், நவாம்ச லக்னத்திற்கு விரய ஸ்தானத்தில் கேது இருந்தாலும். நவாம்ச லக்னத்திற்கு விரய ஸ்தானம் மேஷம் அல்லது தனுஸ்ராசி அங்கு சுபன் இருந்தாலும், 4 க்ரஹங்கள் ஒரே ராசியில் இருந்து அவ்விரயாதிபன் கேந்த்ரம் அல்லது த்ரிகோணத்தில் இருந்தாலும், தசமஸ்தானம் மீனமாய் அங்கு புதன் அல்லது செவ்வாய் இருந்தாலும், அஷ்டமாதிபன் சுக ஸ்தானத்தில் தூங்கினாலும். சுபனோடு சேர்ந்து பார்க்கப்பட்டாலும், லக்னாதிபன் லக்னத்தையும், தர்மாதிபன் தர்ம ஸ்தானத்தையும், அஷ்டமாதிபன் அஷ்டம ஸ்தானத்தையும் பார்த்தாலும், கர்ம ஸ்தானத்தில் இரு சுப க்ரஹங்கள் மட்டும் இருந்தாலும் பிரம்மஸாயுஜ்யம் கிடைக்கும்.

6 அல்லது 8-ல் சந்த்ர புதர்கள் இருக்க விஷ பிடையேற்படும்.

அஷ்டமத்தில் புத சூர்யர்களிருக்க விஷம், அக்னி இவைகளால் பிடை உண்டாகும்.

8-ம் இடத்தில் ராகு, குஜர்களிருக்க கொம்புள்ளவை, நகமுள்ளவை, கோரைப் பற்கள் உள்ளவை இந்த ஜந்துக்களால் பிடை.

மேஷம், சிம்மம், விருச்சிகங்களில் பாபியுடன் கூட சனி இருந்தாலும், சனி சத்ரு க்ரஹத்தில் சுக்ரனோடுகூட அல்லது பார்க்கப்பட்டு இருந்தால் கை துண்டிக்கப்படும்.

சந்த்ரன், சூர்யன், ராகு, செவ்வாய் இவர்கள் அஷ்டமத்திலிருக்க கை கால்கள் துண்டிக்கப்படும்.

ராகு, மகரம் அல்லது கும்பத்திலும், லிம்மம் அஷ்டம ஸ்தானமாகி அங்கு சந்த்ரனிருந்தாலும், அஷ்டம ஸ்தானத்தில் குஜ சூர்யர்கள் இருந்தாலும் சிரச்சேதம் ஏற்படும்.

சனி, செவ்வாய், தனுதிபன் இவர்கள் லக்னத்தில் இருந்தாலும், சனி, குஜர்கள் ரோக ஸ்தானத்தில் இருந்தாலும் காது அறுபடும்.

லாப ஸ்தானத்தில் செவ்வாய், சூரியன் இவர்களிருக்க விஷம் அக்னி, ஆயுதம் இவைகளால் பிடை உண்டாகும்.

பாப க்ரஹத்தின் ராசி, செவ்வாய், சூரியன் இவர்களால் பார்க்கப்பட்டாலும், சனி, சூர்யன், செவ்வாய் இவர்கள் சேர்ந்திருந்தாலும் ப்ரம்ஹஹத்தியை தோஷம் ஏற்படும்.

பாபருடைய வீட்டில் சந்த்ரன் வசித்து சனி, சூர்யன், செவ்வாய்களால் பார்க்கப்பட கோஹத்தை தோஷம் ஏற்படும்.

லக்னாதிபன் குஜன் இவர்கள் ஒரே அம்சத்தில் இருக்க க்ரூரஹத்தி தோஷம் உண்டாகும்.

குரு பாபியோடு சேர்ந்தாலும், சூரியன் சேர்ந்தாலும் பாலஹத்தி தோஷம் ஏற்படும்.

கேந்த்ரத்தில் பாபியும்: அஷ்டமத்தில் சுக்ரனும் வசித்து பாபர்களால் பார்க்கப்பட பசு, ம்ருகம் இவைகளைக் கொல்வான்.

சந்த்ர புதர்கள் தசம ஸ்தானத்தில் இருந்து பாபிகள் பார்த்தாலும், நீசாம்சத்தில் இருந்து சுப க்ரஹ விக்ஷணம் இல்லாவிடினும், எப்போதும் பக்ஷிகளைக் கொல்வான்.

சுகாதிபன், பாக்யாதிபன், லக்னாதிபன் இவர்கள் த்ரிகோணம் அல்லது கேந்த்ரத்தில் இருந்தால் அவருடைய புத்தி அல்லது தசையில் தகப்பனோடு தாயும் மரிப்பாள்.

அஷ்டமத்தில் சந்த்ரன் வசித்து ராகு, சனிகளுடன் கூடி பலமற்றிருக்க அபஸ்மார ரோகம் ஏற்படுகிறது.

அஷ்டம ஸ்தானத்தில் துர்பலனான சந்த்ரன் மட்டும் இருக்க பிசாச பாதையும், ஜலத்தால் பிடையு மேற்படுகிறது.

க்ஷீண சந்த்ரன், செவ்வாய், ராகு, சனி இவர்களில் ஒருவரோடு சேர்ந்து 8, 6, 12 இலைகளில் இருந்தால் அபஸ்மாரத்தால் மரணம் அல்லது பிசாச பாதை அல்லது மரணம் உண்டாகும்.

அஷ்டம ஸ்தானம், ராகு அல்லது கேதுவுடன் சேர்ந்தாலும், அஷ்டம ஸ்தானத்தில் அஷ்டமாதிபன் சேர்ந்தாலும், அஷ்டமாதிபன் க்ரூர ஷட்யம்சத்தில் இருந்தாலும் நான்கு நாள் முறை ஜ்வரம் உண்டாகும்.

லக்னத்திற்கு 9 அல்லது 10.ல் செவ்வாய் வலித்து பாபர் பார்க்க அம்மானின் மரணம் ஸம்பவிக்கும். சனியுடன் கூட குழந்தை மரணமடையும்.

சந்த்ரன் பாபியோடு கூடி வசிக்க மாதாவிற்கு மரணம்.

சூர்யன் பாபியுடைய பார்வை அடைந்து 9 அல்லது 10-ல் இருக்க பிதாவிற்கு மரணம் நேருகிறது.

லக்னமும் சந்த்ரனும் 2 பாபிகளுடனும்கூட குழந்தை மரணத்தையடையும்.

சந்த்ரன், ராகு அல்லது கேது க்ரஸ்தனக அல்லது பரிவேஷத்துடன்கூட, அல்லது பாபிகள் பார்க்க குழந்தை உடனே மரிக்கிறது.

சந்த்ரன் சித்ரை முதல் பாதத்தில் இருக்க தாயாரையும், 2-வது பாதத்தில் இருக்க புத்ரனையும், பூராடம் 3-வது பாதத்தில் இருக்க அம்மானையும் நாசமாக்கும். சுப சம்பந்தம் விஷணம் பெற மேற்கண்ட தோஷமில்லை.

11 அல்லது 9-ல் சனி செவ்வாய்கள் ராகுவோடு கூடியிருக்க தகப்பனுக்கு நாசம்.

குஜன் பாப விஷணம் பெற்று சப்தமத்தில் இருக்க குழியில் விழுவான்.

சகோதர ஸ்தானத்தில் செவ்வாய் வசித்து மற்ற பாபியுடன் கூடி பாப விஷணமும் பெற ஸகோதர நாசம்.

சந்த்ரன் பாபியுடன் சேர்ந்து அல்லது பார்வை பெற்று ஸப்தம ஸ்தானத்தில் இருக்க மாதாவிற்கு மரணம். இவ்விதம் சூர்யனிருக்க பிதாவிற்கு மரணம்.

சனி, செவ்வாய், சுக்ரன் இவர்கள் சப்தமத்தில் இருக்க இதில் ஜனித்தவனுக்கு மரணம் ஏற்படும்.

லக்னத்தில் சூர்ய சந்த்ரர்களும், விரயத்தில் பாபிகளுமிருந்து சுபவிக்ஷண மில்லாமல் இருந்தாலும், சப்தமத்தில் சூர்ய சந்த்ரர்கள் வசித்து லக்னத்தில் பாபியிருந்தாலும் புத்ர மரணம்.

லக்னாதிபன் பூர்ண பலவானாய் சுக பாக்யாதிபர்கள் துர்பலர்களாய் அஷ்டமத்திலிருக்க ஜனித்த காலத்தில் மாதா பிதாக்களுடைய மரணம் ஏற்படுகிறது.

த்ருதீயாதிபதி சந்த்ரனோடு சேர்ந்து 6, 8, 12-ல் இருக்க குழந்தை அன்னிய ஸ்திரீயின் ஸ்தன்யத்தைப் பானம் செய்யும்.

நவமாதிபனும் நவம பாவ காரகனும் கேந்த்ரம் அல்லது த்ரிகோணத்தில் இருந்தாலும், துஸ்தானத்திலிருந்தாலும், ஜாதகனின் தாய் தந்தையர்களுக்கு புத்ர சுகமில்லை.

பாக்யாதிபன் சூரியன் சனி இவர்கள் சத்ரு ஸ்தானத்திலிருந்தாலும், சத்ரு ஸ்தானாதிபனுடன் சேர்ந்தாலும், இரவில் தகப்பனுக்கு மரணம் சம்பவிக்கும். சந்திரன் சோமலிருக்க பகலில் மரணம் உண்டாகும்.

நான்காமிடத்தில் வசிக்கும் க்ரஹத்துக்கு 4-ல் க்ரஹமில்லாமலிருந்தால் 4-மிடத்ததிபன் வசிக்கும் ராசிக்கு உகந்த அயனத்தில் மாதாவிற்கு மரணம் ஏற்படும். 2, 3 க்ரஹங்கள் சேர்ந்தால் பலன் மாறுதலாகும்.

பித்ரு பாவாதிபதி சரராசியான 8-லிருக்க மரண காலத்தில் அவனது தகப்பன் அதிக தூரத்தில் இருப்பவனாகவும், ஸ்திர ராசி அல்லது உபய ராசியாக இருப்பின் சமீபத்திலிருப்பவனாகவுமாவான்.

கேந்த்ர ஸ்தானம் சரமாகி இங்கு சூரியன் அல்லது சந்த்ரனிருக்க புத்ரன் தகனத்தைச் செய்யமாட்டான்.

கேந்த்ரம் உபய ராசியாகி அங்கு சந்த்ர சூர்யர்களிருக்க மாதா பிதாக்கள் அகாலத்தில் நெருப்பால் மரணத்தை அடைவார்கள்.

நவமாதிபன் பலவானாகி சந்த்ரன் லக்னாதிபன் சுகாதிபன் இவர்கள் துர்பலர்களானால் தாய்க்கு ஆபத்துக்கள் அதிகமாகும்.

செவ்வாய் தசை 5-வதாக வந்தாலும், குரு தசை 6-வதாக வந்தாலும், சனி தசை 4-வதாக வந்தாலும், ராகு தசை 7-வதாக வந்தாலும் மரணமேறபடும்.

நீச க்ஷேத்ரம் சத்ரு க்ஷேத்ரம் இவைகளிலோ, அஸ்தமன மானதாகவோ இருக்கும் 3, 5 7 இந்த நக்ஷத்திரங்களின் அதிபர்களின் தசைகளும் மரணத்தைத் தருபவனவாகும்.

கடக விருச்சிக மீனங்களின் கடைசி சந்திகளில் பிறப்பவர்கள் ஜீவிக்கமாட்டார்கள். பாபிகளின் சம்பந்தம் த்ருஷ்டி இவை கள் ஏற்படின் நிச்சயமாக மரணம் ஏற்படுகிறது.

கண்டாந்தத்தில் பிறந்தவன் தாய் தகப்பன் ஜாதக பலத் தால் பிழைத்திருப்பானேயில் யானை குதிரைகள் உள்ளவனுகவும், ஸ்வர்க்க பாலனுகவும் ஆவான்.

சூர்ய சந்த்ரர்கள் 3-ல் இருந்தாலும், க்ரூர க்ஷேத்ரத்தில் இருந்தாலும், க்ரூர வீக்ஷணம் ஏற்பட்டாலும் வியாதி ஏற்படும். 3 வருஷங்கள் ஜீவிப்பது அரிது

சந்த்ரனுக்கு சப்தமத்தில் சூர்ய குஜர்களிருந்தாலும், குஜன் உதயத்தில் இருந்தாலும் 10 தினங்களுக்குள் மரணமேற்படும்.

உதிக்கும் திரேக்காணத்திற்கு சப்தமத்தில் க்ரூரர்களிருந் தாலும், க்ஷீண சந்த்ரன் லக்னத்திலிருந்தாலும் உடனே ஜீவ நாசமேற்படுகிறது.

லக்னத்தில் கேது முன்பும், உல்கை பின்பும், இந்த்ர தனுஸ் பவனன் நிர்காதம் இவர்கள் வசித்து ரௌத்ர முஹூர்த்தத்தில் ஜனிக்க உடனே மரணமேற்படும்.

க்ரஹண மல்லது பரிவேஷ காலத்தில் பிறந்து லக்னத்தில் பாபியும் லக்னாதிபதி துர்பலனுகவுமிருக்க 3 தினம் அல்லது 3 மாதம் ஜீவிப்பான்,

அம்சாதிபன் சந்த்ர லக்னாதிபன், லக்னாதிபன் இவர்கள் அஸ்தமனத்தை அடைந்தால் சிறிது காலம் ஜீவிப்பான்.

லக்னம் அல்லது 8-ம் இடத்தில் க்ஷீண சந்த்ரனும், அஷ்டம ஸ்தானம் கேந்த்ரம் இவைகளில் பாபியிருந்து சந்த்ரன் பாப மத்யத்தில் 8, 4, 7 இவைகளிலிருந்தாலும் 8 வருட காலம் உயி

ரோடிருப்பான். இல்லாதபோதில் 7, 8-லிருக்கும் பாபிகளால் லக்னம் பார்வை பெற்று பலம் அடைந்த சுபர்களால் பார்க்கப் படாமல் இருக்க தாயும் சேயும் மரணமடையும்.

சனி சப்தமம் ஜன்ம லக்னம் அல்லது சந்த்ர லக்னமான விருச்சிகம் இவைகளில் ஒன்றில் இருந்து சுபர்கள் கேந்த்ரத்தில் இருக்க உடனே மரணம் என யவனர் கூறுகிறார்.

ராசி சந்தி, நித சந்தி, சந்த்ர லக்ன சந்தி இவைகளிலொன றில் அல்பாயுஸ்ஸையுடையவன் பிறப்பான். ஆனால் இந்த சந்திகளுக்குள ஒன்றில் சுக்ரன் வசித்து பகலில் ஜனனமானுல் ஜீவிப்பான என கர்கரால் சொல்லப்படுகிறது.

சூரியனுடன் சேர்ந்த லக்னத்தில் செவ்வாய் வசித்து கண் டாந்தம் அல்லது ம்ருத்யு யோகத்தில் ஷஷ்டி திதியில் பிறந்தவன் குரு பார்வை இல்லாமலிருக்க நாசமாவான்.

செவ்வாயின் வாரத்தில் செவ்வாயின் க்ஷேத்ரம் லக்னமாகி அஸ்து க்ஷீண சந்த்ரன் வசித்து லக்னாதிபன் லக்ன கேந்த்ரத் திற்கு வெளியே வசிக்க அப்போது ஜனித்தவன் சீக்ரத்தில் நாசமாவான். சனியும் இப்படியே செய்வான்.

சந்த்ரன் பாபிகளுடன் சேர்ந்து 5, 7, 9, 12, 8 இவைகளில் இருக்க பலத்தை அடைந்த சுக்ரன், புதன், குரு இவர்கள் பார்வை அல்லது சேர்க்கை இல்லாவிடில் மரணத்தை யடை வான்.

பாபிகள் 1, 7, 8 களிலிருந்து க்ஷீண சந்த்ரன் ஸௌம்ய கேந்த்ரத்தில் இல்லாத குருவால் பார்க்கப்படாமல் இருக்க சீக்ர மரணத்தை அடைகிறது.

1, 12, 8, 9 இவைகளில் சந்த்ர சூர்ய செவ்வாய் சனிகள் இருந்து குரு வீக்ஷணமில்லாவிடில் சீக்ர நாசமாகும்.

லக்னத்தில் பலிஷ்டனான சந்த்ரன் அல்லது சூரியன் இருந்து பாபிகள் கேந்த்ரம், அஷ்டமம் அல்லது த்ரிகோணத்தில் இருந்து சுக்ர சூர்ய சந்த்ரர்கள் ஒரே இடத்தில் சேர்ந்திருந்தால் இதில் பிறந்தவன் நாசமாவான்.

மேஷம் 20-வது பாகம், சிம்மம் 21-வது பாகம், வ்ருஷபம் 25-வது பாகம் இவைகளில் சந்த்ரன் இருக்க மரணத்தை அடைவான்.

அஷ்டம ஸ்தானமான மேஷத்தில் 23-வது பாகம், கடகத்தில் 22-வது பாகம், துலாத்தில் 4-வது பாகம், மகரத்தில் 20-வது பாகம், கன்னியில் 1-வது பாகம், தனுஸ்ஸில் 18-வது பாகம், மீனத்தில் 10-வது பாகம், மிதுனத்தில் 22-வது பாகம் இவைகளில் வசிக்கும் சந்த்ரன் மரணத்தை அளிப்பான். மிருத்யு பாகங்களுக்குகந்த வருஷங்களில் மரணம் நேரும்.

லக்னத்தில் எந்த த்ரேக்காணத்தில் ஜனனமோ அதிலிருந்து 22-வது த்ரேக்காணம் மரணத்தைத் தருவதாகும்.

ஒரு ஜாதகத்தில் மேலே சொல்லப்பட்ட மரணத்திற்கான யோகங்களில்லாமலும் அஷ்டமத்தில் ஒருவருமில்லாமலும், ஒரு க்ரஹமும் பார்க்காமலுமிருந்தால அப்போது பிறந்தவனுக்கு 22-வது த்ரேக்காணாதிபன் மூலமாகவோ அல்லது அந்த த்ரேக்காணாதிபன் வசிக்கும் ராசியதிபன் மூலமாகவோ மரணம் ஏற்படும்.

ஒன்பதாவது பாவம்.

மேஷம் :—பிராணிகளிடம் உள்ள தயையினால் அவற்றைப் போஷிப்பதும், தானம் செய்வதும், காப்பாற்றுவதும் ஆகிய தர்மங்களைச் செய்வான்.

வ்ருஷபம் :—தனவான், அதிகம் பேசுபவன், தானம் செய்பவன், பலருக்கு உபகாரம் செய்பவன், வஸ்த்ரம், நல்ல போஜனம் அலங்காரம் இவைகளை உடையவனுவான்.

மிதுனம் :—தர்மத்தில் புத்தியுடையவன். அதிதிகளை உபசரிப்பவன். துக்கப்படுபவர்களிடம் தயை உடையவன்.

கடகம் :—புண்ய தீர்த்தம், வனவாசம், அனேக வ்ருதங்கள், உபவாஸம் இவைகளால் தர்மத்தை சம்பாதிப்பவன்.

சிம்மம் :—பிறர் தர்மத்தைச் செய்பவனுகவும், தன்னுடைய தர்மம் இல்லாதவனுகவும், துஷ்க்ருத்யங்களால் புத்ரன், பொருள் இவைகளை இழப்பவன்.

கன்னி :—ஸ்த்ரீகளின் தர்மத்தை அனுஷ்டிப்பவன், பாஷண்ட மதத்தை அவலம்பித்து, தாழ்ந்த பக்தியையும், தன் பக்ஷத்தில் மேன்மையாக விருப்பதையும் அடைவான்.

துலாம் :—ப்ரஸித்தனுய் தர்மத்தைச் செய்வான். தேவதைகள், ப்ராமணர்கள் இவர்களைச் சந்தோஷப்படுத்துவான், ஜனங்களின் ஹிதத்தை சம்பாதிப்பான்.

விருச்சிகம் :—புறமதத்தோர்களின் தர்மத்தை அனுஷ்டிப்பவன், ஜனங்கள் சந்தோஷமடையச் செய்வதற்கு வழியறியாமல் பிடையைச் செய்வான்.

தனுஸ் :—ப்ராமணர்களை போஷிப்பவன், ஸ்வதந்த்ரன். புதிதான கார்யங்களைச் செய்பவன். சந்தோஷமுடையவன். ப்ரசித்தி அடைந்தவன்.

மகரம் :— தர்மத்தினால் ப்ரதாபம், அபர வயதில் தன் வம்சத்தில் பிறந்தவர்களை அடைந்து ஸ்த்ரீகளிடம் வெறுப்புடையவன்.

கும்பம் :—தேவதைகள் மூலமான தர்மம், காடு உண்டாக்குவது, நந்தவனம் அமைப்பது, குளம் வெட்டுவது இவைகளில் எண்ணமுள்ளவன்.

மீனம் :—ஆலயம், தோட்டம், குளம், யாகங்கள், தீர்த்த யாத்ரைகள் இவைகள் சம்பந்தமான தர்மகாரியங்களை அனுஷ்டிப்பவன்.

9 ம் பாவாதிபன் அந்தந்த பாவங்களில் இருப்பதால் ஏற்படும் பலன்.

லக்னத்தில் :—குரு நவமாதிபனுகி லக்னத்தில் இருக்க விஞ்ஞகரை பூஜிப்பதில் ஆசையுள்ளவன், புண்யசாலி, லோபி, அரசாங்க காரியங்களைச் செய்பவன், ஞாபக சக்தி உள்ளவன், மிதமாக புஜிப்பவன், சுத்தன்.

இரண்டில் :—உறுதியான ஸங்கல்பம் உடையவன், நன்னடத்தையுள்ள புத்ரன் உள்ளவன், சுத்தன், நல்லகதி உடையவன், செலவாளி, மிருகத்தால் பிடிக்கப்படுபவன், ஜிதேந்த்ரியனுவதில் ஆசையுடையவன்.

மூன்றில் :— நல்ல உருவம் உடையவன், ஜனங்களுக்கு அபிமதன், தன இனத்தவர்களை ரக்ஷிப்பவன். ப்ரஸித்த கார்யத்தைச் செய்பவன், சுகஜீவி.

நான்கில் :— படித்தவர்கள், மித்ரர்கள், தகப்பன் இவர்களை பூஜிப்பவன், தீர்த்தாடனங்களில் ஆசையுள்ளவன், பக்திமான், ஐச்வர்யமுடையவன், மித்ர்களுக்குள் உயர்ந்தவன்.

ஐந்தில் :— தேவ ப்ராம்மணர்களிடத்தில் பக்தி உடையவன், அழகுள்ளவன், புத்திமான், இனிமையாகப் பேசுபவன், புத்ரர்களை உடையவன்.

ஆறில் :— சத்ருக்களோடு சேர்ந்தவன், ஸ்நேஹம் செய்பவன், அங்கவிகாரமுள்ளவன், சுத்தன், விகாரப் பார்வை உடையவன், துஷ்டன், இகழப்படுபவன்.

ஏழில் :— ஸ்திரீ சுகமுடையவன், சொல்படி நடக்கும் பார்யையை உடையவன், தனம், ஆசை, உருவம், நற்காரியங்களில் எண்ணம், நல்ல ஸ்வபாவம் இவைகளை உடைய பத்னியை அடைவான்.

எட்டில் :— கெட்ட தேஹமுடையவன், ஏமாற்றுபவன், துஷ்டன், நற்செய்கை இல்லாதவன், பிறரறியாமல் கேடு செய்பவன், ஸ்த்ரீ சோரர்களை ஸ்நேஹிப்பவன், நபும்ஸகன்.

ஒன்பதில் :— சுத்தன், பந்துக்களோடு கூடியவன், ஜனங்களோடு ஸ்நேஹமில்லாமல் சண்டையிடுபவன், குரு, மித்ரன், பந்து-இவர்களிடம் பற்றுதலை உடையவன்.

பத்தில் :— ராஜ கார்யகாரி, ராஜ த்ரவ்யத்தை யடைபவன், புண்ய காரியங்களைப் புரிபவன், தாயிடம் பக்தி உடையவன், புகழ் பெற்ற காரியத்தைச் செய்பவன்.

பதினொன்றில் :— வேலைக்காரனையினும் அனேகருக்கு எஜமானனுவான், புண்ணியம் செய்பவன், தானம் செய்வதில் ஆசை உள்ளவன், தனிகன், அரசாங்க த்ரவ்யத்தை அதிகமனுபவிப்பவன்.

பன்னிரண்டில் :— மானி, அன்ய தேசம் செல்பவன், புத்திமான், அழகுள்ளவன், பாபி இருந்தால் வஞ்சகன்.

பார்வையின் பலன்.

சூரியன் பார்க்க :— ஸ்த்ரீ சுகமில்லாத போதிலும் அவர்களிடம் பற்றுள்ளவன். பின் வயதில் எல்லாவித சுகங்களையும் அனுபவிப்பான்.

சந்த்ரன் பார்க்க :— அன்ய தேசத்தில் அரசனால் (ப்ரபுவால்) கொண்டாடத்தக்கவனுவான், பந்து சௌக்யமுடையவன், திரவ்யமில்லாதவன், சில சமயம் கீர்த்தி இல்லாதவனுவான்.

செவ்வாய் பார்க்க :— பாக்யமுடையவன், மைத்துனனோடு சேர்வதால் உண்மைக்கு பங்கமும், தர்மத்தின் அதிகமும் உடையவன், சுகி, கடுமையான ஸ்வபாவமுள்ளவன்.

புதன் பார்க்க :—புத்ர ஸௌக்யம், குறையாத பாக்யம் இவைகளை உடையவன், அன்ய தேசத்தில் கொண்டாடத்தக்கவனுகவும், சுகியாகவும் இருப்பான்.

குரு பார்க்க :—தர்மாபிவிருத்தி, சுகம், ராஜ்யம், இஷ்டப்பட்ட பொருள் இவைகளை அடைவதுடன் சாஸ்த்ரங்களில் ஞானம், குணமின்மை, அரசர்களின் தனம் இவைகளை உடையவனுவான்.

சுக்ரன் பார்க்க :—அதிக பாக்ய வ்ருத்தி, அன்ய தேசத்தில் ஜீவனம், அன்ய தேச அரசனின் வச்யம் இவைகள் ஏற்படும்,

சனி பார்க்க :—பாக்யத்தினால் கீர்த்தி ஏற்படும், பந்து இல்லாதவன், வேறு தேசத்தை யடைபவன், சுகி, பராக்ரமமுடையவன், கர்வமற்றவன்.

ராஹு பார்க்க :—நூதன ஸ்திரீ போகத்தில் ஆசையுள்ளவன், உடன்பிறந்தோனால் அதிகம் இம்சிக்கப்பட்டவன், புத்ரன் புத்ரிகளுடையவன், சுகி.

சூரியனால் கிடைக்கும் பலன் 22 வயதிலும், சந்த்ரனால் கிடைக்கும் பலன் 24-லும், செவ்வாயினால் வரும் பலன் 28-லும், புதனால் வரும் பலன் 32-லும், குருவினால் கிடைக்கும் பலன் 16-லும், சுக்ரனால் வருவது 25-லும், சனியால் வரும் பலன் 36-லும் உடக்கும் என பெரியோர்கள் கூறுகின்றனர்.

சந்த்ரன் நவமாதிபதியாகி லக்னம் அல்லது 9-ம் இடத்தில் நிற்க கீர்த்திமான் ஆவான். 9-ம் இடம் தன் ஸ்தானாதிபதியால் பார்க்கப்பட தன் தேசத்திலேயே பாக்யத்தை அடைகிறான்.

சந்த்ரனைத் தவிர மற்றவர்கள் 9-ம் இடத்திற்கு அதிபர்களாய் லக்னம் அல்லது 9-ல் இருக்க வேறு தேசத்தில் ஸௌக்யத்தை அடைவான். ஸ்தானாதிபன் உச்ச க்ஷேத்ரம் முதலியவைகளில் இருக்க குறைவில்லாத பாக்யத்தை அடைவதுடன் துக்கத்தையும் நாசம் செய்வான்.

நவமாதிபதி நவமஸ்தானத்தில் இருந்தாலும், அதிக பலமுள்ள க்ரஹம் பாக்ய ஸ்தானத்தைப் பார்த்தாலும் பாக்யசாலியாயும், சந்தோஷமுடையவனுகவும், அதிக தனமுடையவனுகவுமாவான்.

ஸ்வ க்ஷேத்ரமாகிய நவம ஸ்தானத்தில் க்ரஹமிருந்து சுப வீக்ஷண மேற்பட அதிக பாக்யவானுகவும், கலைகளை அறிந்தவனுகவும், ப்ரஸித்தனுகவும் விளங்குவான்.

சூர்ய குஜர்கள் பலம் பெற்று பூர்ண சந்த்ரனோடு சேர்ந்து நவம ஸ்தானத்தில் இருக்க பூஜிக்கத்தக்கவனுகவும், மந்திரியாகவுமாவான். சுபர்கள் பார்வை பெற பலனும் விசேஷமாக இருக்கும்.

உச்ச க்ஷேத்ரமான நவம ஸ்தானத்தில் வசிக்கும் க்ரஹம் ஐச்வர்யத்தை உண்டாக்குகிறது. சுபன் பார்க்க கஜாதிகள் உள்ள உயர்ந்த அரண்மனையை உடைய அரசனுகவும் செய்கிறது.

நவமாதிபனுடன் சேர்ந்த நவாம்சாதிபதி, குரு சுக்ரர்களால் பார்க்கப்பட்டாலும், நவம ஸ்தானம் புதனுடன் சேர்ந்தோ, குருவின் சம்பந்தம் வீக்ஷணம் முதலியவைகளைப் பெற்றோ, நவமாதிபன் கேந்த்ரத்தில் இருந்தாலும் குருபக்தி உடையவனுவான்.

பாக்யாதிபன் தன் ஸ்தானத்திலும் தனாதிபன் பாக்யத்திலுமிருக்க 22 வயதிற்கு மேல் பாக்யம், வாஹனம், கீர்த்தி முதலியவைகள் ஏற்படும்.

9-ம் இடத்தில் சூரியன் வசிக்க பிதுரார்ஜிதமான ஐச்வர்யமுள்ளவனுகவும், சந்த்ரனிருக்க தாய் வழி வந்த ஐச்வர்யமுள்ளவனுகவும், செவ்வாய் இருக்க தாயாதி, சத்ரு, உடன்பிறந்தோன் இவர்கள் மூலமான ஐச்வர்யமும், புதன் இருக்க மாதுலன், பந்து சிநேஹிதர் மூலம் கிடைத்த ஐச்வர்யமுள்ளவனுகவும், குரு விருக்க புத்ரன் மூலமாக பாக்யத்தையும், சுக்ரனிருக்க ஸ்திரீ, யானை மூல

மாக ஐச்வர்யத்தையும், சனி இருக்க வேலைக்காரன் மூலம் கிடைக்கும் ஐச்வர்யமுள்ளவனுகவும் ராகுவிருக்க வேடர்கள் மூலமாக கிடைக்கும் ஐச்வர்யமுள்ளவனுகவும் சொல்லப்படுகிறது.

குரு 9-ல் இருந்து சூர்யன் பார்க்க மந்திரி அல்லது அரசனுக்கு சமானமாகவும், சந்த்ரன பார்க்க அழகனுகவும், செவ்வாய் பார்க்க சுவர்ணமுள்ளவனுகவும், புதன பார்க்க தனவானுகவும், சுக்ரன் பார்க்க பசு வாஹனம் தனம் இவைகளை உடையவனுகவும், சனி பார்க்க ஸ்தாவர சொத்துள்ளவனுகவும், கழுதை, எருமை முதலியவைகளை உடையவனுகவுமாகிறான.

குரு 9-ல் இருந்து சூரியன் செவ்வாய் பார்க்க ஐச்வர்யம், ரத்னம், தங்கம் இவற்றில் ஸாஹஸம், வீர்யம, வாஹனம், ப்ருத்ய வர்க்கங்களுடன் கூடியவனுகவும், சந்த்ர, சூர்யர்களால் பார்க்கப்பட ஐச்வர்யம், தாய் தந்தைகளின அபிமானம், லோக ப்ரஸித்தி, அனேக சாஸ்திரங்கள இவைகளை உடையவனுகவும், புத சூரியர்கள் பார்க்க அழகு, மனதிற்குகப்பு, லாலித்யம், சிறந்த ஸ்திரீ, நகை, ஐச்வர்யம், பாண்டித்யம், புத்தி இவைகளை உடையவனுகவும், சூர்ய சுக்ரர்கள் பார்க்க ஸந்தோஷ சுவபாவம், கழுதை பசு, எருமை, ஆடு, கஜம், வினயம் இவைகளுடையவனுகவும், சூர்ய சனிகள் பார்க்க கிராமம், பட்டணம், நகரம் முதலியவைகளின் ஆதிபத்யம், கீர்த்தி, புத்தி, தனம் இவைகளுடன் கூடியவனுகவும், நிதிகளுக்கு அதிபனுகவும், சொத்து சேர்ப்பதில் ஆசையுடையவனுகவும், சந்த்ர செவ்வாய்கள் பார்க்க சேனாதிபன் அல்லது விசால எண்ணமுள்ள மந்திரியாகவும், பலவித சௌக்யங்களுடையவனுகவும், அழகுள்ளவனுகவும், சந்த்ர புதர்கள் பார்க்க உயர்ந்த மாளிகையில் சயனம், போகானுபவம், சக்தி, பூமி போன்ற அதிக பொறுமை, புத்தி இவைகளுள்ளவனுகவும், சந்த்ர சுக்ரர்கள் பார்க்க ஐச்வர்யம், காரியம் செய்வதில் முயற்சி, சௌர்யம், பிறர் மனைவிகளிடத்தில் பற்று, சந்ததியின்மை, இவைகளை உடையவனுகவும், சந்த்ர சனிகள் பார்க்க அதிக மதம், உறுதியான ஜீவனம், அன்ய தேசத்தில் பற்று, விவாதிப்பதில் ஆசை, பொய் பேசுதல், நற்குணம் இவைகளை உடையவனுகவும், செவ்வாய் புதர்கள் பார்க்க மிகவும் ப்ராஜ்ஞனுகவும்,

நல்லொழுக்கமுடையவனுகவும், படித்தவனுகவும், வித்வானுகவும், நம்பத்தக்க வார்த்தை, அழகிய வேஷம் இவைகளை உடையவனுகவும், செவ்வாய் சுக்ரன் பார்க்க தனம், வித்யை, அன்ய தேசாச்ரயம், சாத்விகதை, நைபுண்யம், க்ரூர ஸ்வபாவம், செவ்வாய் சனிகள் பார்க்க கீழ்பட்ட ஸ்வபாவம், கோள் சொல்லுதல், வெறுக்கப்படும் தன்மை, அன்ய தேச கமனம், துஷ்ட ஜன சகவாஸம் இவைகளை உடையவனுகவும், புத சுக்ரர்கள் பார்க்க சில்ப நைபுண்யம், நல்லொழுக்கம், வைதுஷ்யம், அழகு, நம்பத்தக்க வார்த்தை இவைகளை உடையவனுகவும், புத சனிகள் பார்க்க வைதுஷ்யம், பேசுவதில் சாமர்த்யம், நல்ல ஸ்வபாவம், சௌர்யம், சௌக்யம், வணக்கம் இவைகளை உடையவனுகவும், சுக்ர சனிகள் பார்க்க தூதனுயிருக்க, அதிக ஐச்வர்யம் இவைகளுடையவனுகவுமாகிறுன்.

குரு 9-ல் வசித்து மற்ற எல்லா கிரஹங்களும் பார்க்க மிகுந்த அழகு, நல்ல குணம், அதிகமான தேஜஸ், அரசனுய் இருப்பது, சிறந்த ஐச்வர்யம் இவைகளை உடையவனுவான்.

நவம ஸ்தானத்தில் குரு வசித்து தசம ஸ்தானுதிபனுல் பார்க்கப் பெற்றலும், கீழ்ச் சொல்லப்பட்ட கிரஹங்களால் பார்க்கப் பெற்று மற்ற கிரஹங்களால் பார்க்கப் பெறுமலிருந்தால் தான் மேற்கூறியபடி பலன் நடக்கும்.

பாக்ய ஸ்தானத்தில் சுபர்கள் பலம் பெற்று வசித்தால் ராஜ்யம், பூமி, தனம், தான்யம், தர்மம், ஆயுஸ் இவைகள் விருத்தியாகும்.

சூர்யன் பாக்ய ஸ்தானத்தில் சந்திரனுடன் கூடி இருக்க குறைந்த ஆயுள், கண் வியாதி, ஐச்வர்யம், அழகு, கலகத்தில் ஆசை இவைகள் உள்ளவனுகிறுன்.

சூர்யன் பாக்ய ஸ்தானத்தில் செவ்வாயுடன் கூடியிருக்க பலவித துக்கம், கலகத்தில் ஆசை, அதிக கோபம், சௌகர்யம், அரசனின் பிரீதி, நிபுணதை இவைகளுடையவனுகிறுன்.

சூர்யன் பாக்ய ஸ்தானத்தில் புதனுடன் கூடியிருக்க சாமர்த்யம், துக்கம், அதிக சத்ருக்கள், பலவித வியாதிகள் இவைகளை உடையவனுவான்.

சூர்யன் பாக்ய ஸ்தானத்தில் குருவுடன் கூடியிருக்க தனம், நிர்க்காயுஸ், பூஜிக்கத்தக்க தன்மை, சௌர்யம் இவைகளை அடைவான்.

சூர்யன் பாக்ய ஸ்தானத்தில் சுக்ரனுடன் கூடியிருக்க ரோக முள்ள சரீரம், இஷ்டமான வாசனத் திரவ்யம், மாலை, ஆடை, ஆபரணம் இவைகளுள்ளவனுவான்.

சூர்யன் பாக்ய ஸ்தானத்தில் சனியுடன் கூடியிருக்க தனிகன், நேத்ர ரோகமுள்ளவன், சண்டையில் ஆசையுடையவன், தகப்பன் வியாதி பிடிதன், அற்பாயுளுடையவன்.

சந்த்ரன் பாக்ய ஸ்தானத்தில் செவ்வாயுடன் கூடியிருக்க மாதாவுக்கு நாசம், அங்கத்தில் ஹானி, வ்ரணமுடைய சரீரம், அதிக தனம் இவைகளை உடையவனுவான்.

சந்த்ரன் பாக்ய ஸ்தானத்தில் புதனுடன் கூடி இருக்க சாஸ்த்ரஜ்ஞன், குறைவான அங்கமுள்ளவன், உயர்ந்த புருஷன், அதிக வார்த்தை பேசுபவன், லோக ப்ரஸித்தன்.

சந்த்ரன் பாக்ய ஸ்தானத்தில் குருவுடன் கூடியிருக்க சௌபாக்யம், ஐச்வர்யம், சுகம், தைர்யம் இவைகளுள்ளவனுகிறுன்.

சந்த்ரன் பாக்ய ஸ்தானத்தில் சுக்ரனுடன் கூடி இருக்க வியாதி, விபசாரம் செய்யும் மனைவி, ஐச்வர்யம், மாற்றுந் தாய் இவைகளை உடையவனுகவும், மந்த்ரி வச்யனுகவுமாவான்.

சந்த்ரன் பாக்ய ஸ்தானத்தில் சனியுடன் கூடியிருக்க ஈனமான வழியில் தர்மம் செய்தல், பாபம், தாயை குலத்திலிருந்து நீக்குதல் இவைகளுடையவனுவான்.

செவ்வாய் பாக்ய ஸ்தானத்தில் புதனுடன் கூடியிருக்க முக்யத் தன்மை, எப்போதும் பயம், அழகு, போகம், சாஸ்த்ரத்தில் சாமர்த்யம் இவைகளுடையவனுவான்.

குரு கூடி இருக்க தனம், தான்யம், பூஜிக்கும் தன்மை, ரோகமுள்ள தேகம், க்லேசம், வ்ரண நிலை உள்ளவனுவான்.

சுக்ரன் கூடியிருக்க அன்ய தேசத்தில் ஆசை, சண்டையில் பிரியம், கொடுமை, ஸ்திரீ த்வேஷம், நன்றி மறத்தல், பொய்ப் பிரசாரம் இவைகளை உடையவனுகிறுன்.

சனியுடன் கூடி இருக்க பாபி, ஈனச் செயல், பிறர் மனைவி களிடம் பிரியம், சௌக்யம், தனம், ஆபரணம் இவைகளின்மை, இவைகளை அடைகிறான்.

புதன் பாக்ய ஸ்தானத்தில் குருவுடன் கூடி இருக்க சாஸ்திர மறிபவன், படித்தவன், ஐச்வர்யமுள்ளவன், இனிமையாகப் பேசுபவன், கலைகள் கற்றவன், முதன்மையாக பிரஸித்தி பெறுபவன்.

சுக்ரனுடன் கூடியிருக்க கீர்த்தி, பாண்டித்யம், தைர்யம், அழகு, பேசுவதில் ஸாமர்த்யம், கானத்தில் பிரியம் இவைகளை அடைகிறான்.

சனியுடன் கூடியிருக்க வியாதிஸ்தன், பணக்காரன், ப்ரியை யோடு சேர்ந்தவன், சமர்த்தன், நல்லோர்களால் வெறுக்கத் தக்கவன், அதிகமாகப் பேசுபவன்.

குரு பாக்ய ஸ்தானத்தில் சுக்ரனோடு சேர்ந்திருக்க அரசன், நீண்ட ஆயுளுடையவன், நல்வார்த்தை உடையவன், பலவித சௌக்யத்தோடு கூடியவன்.

சனியுடன் கூடியிருக்க தனவான், ரத்னங்களுடையவன், கௌரவிக்கத் தக்கவன், வியாதியுடையவன், ஸ்வஜனங்களில்லா தவன்.

சுக்ரன் பாக்ய ஸ்தானத்தில் சனியுடன் கூடி இருக்க வியாதி உள்ளவன், அதிக புத்ரனுடையவன், அரசனுக்குப் பிரியன், கீர்த்தி உடையவன், நன்னடத்தை யுடையவன்.

சூர்ய சந்த்ர குஜர்கள் பாக்யத்திலிருந்தால் வ்ரணமுள்ள சரீரமுடையவன், கொடியவன், தகப்பனில்லாதவன், சிறுவயதில் அல்பனாகவும், வெறுக்கத் தக்கவனாகவும், இம்சிப்பவனாகவும் ஆவான்.

சூர்ய சந்த்ர புதர்கள் பாக்யத்தில் இருக்க நபும்ஸகன் போல் இருப்பவன், துக்கமடைந்தவன், நல்ல புத்திமான், அழகுடை யவன்.

சூர்ய சந்த்ர குரு பாக்யத்தில் இருக்க வெறுக்கத் தக்கவன், சூரன், உண்மை உள்ளவன்.

சூர்ய சந்த்ர சுக்ரர்களிருக்க உயர்ந்தவன், தனம், ஐச்வர்யம், வாஹன – ஸௌக்யங்களுடையவன், ஸ்த்ரீகளின் சண்டையால் தன நஷ்டத்தை உடையவன்.

சூர்ய சந்த்ர சனிகள் பாக்யத்திலிருக்க அரசனுக்கு வேண் டியவன், நியாயமறிந்தவன், பிரியமாகப் பேசுபவன்.

சூர்யன் செவ்வாய் புதன் பாக்யத்தில் இருக்க சிறந்தவன், பயத்தை உண்டுபண்ணும் நடவடிக்கை உடையவன், வேலைக் காரன், வெறுக்கப்படுபவன், கோபமுள்ளவன்.

சூர்யன் செவ்வாய் குரு பாக்யத்தில் இருக்க மிகவும் பயத்தை உண்டு பண்ணுபவன், சண்டையில் ஆசையுடையவன், கடுமை யாகப் பேசுபவன், தாகத்தால் வருந்துபவன், முயற்சி உள்ளவன், தேவதைகள், பித்ருக்கள் இவர்களை பூஜிப்பவன், தனமுள்ள பத்னி உள்ளவன், குணவான், நீச்செயலுடையவன், கன்னிகளை தூஷிப்பவன், நிலையற்ற இயல்புடையவன்.

சூர்ய செவ்வாய் சுக்ரர்கள் பாக்யத்தில் இருக்க எல்லோ ராலும் வெறுக்கத்தக்கவன், பிடிவாதமுடையவன், அல்ப ஸ்வ பாவம் உடையவன், பொய்யில் ஆசையுள்ளவன், க்ரூரன்.

சூர்ய செவ்வாய் சனிகள் பாக்யத்திலிருக்க சிறு வயதில் தகப்பனை யிழப்பவன்.

சூர்யன் புதன் குரு இவர்கள் பாக்யத்தில் இருக்க பாக்ய வான், தனவான், சுபன், அரசனுக்குப் பிரியன், நல்ல வேஷ முள்ளவன், தைர்யமுள்ளவன்.

சூர்யன் புதன் சுக்ரன் இவர்கள் பாக்யத்திலிருக்க பிரதா பத்தை உடையவன், கீர்த்தி யுடையவன், சத்ருக்களை அழிப் பவன், ராஜ சமானன், பலவான்.

சூரியன் புதன் சனி இவர்கள் பாக்யத்திலிருக்க பரதாரத்தில் பற்று, பாபம், வெளியில் சுற்றும் ஸ்வபாவம், ஸாமர்த்யம், பொய் யால் பிழைத்தல், நாஸ்திக்யம் இவைகளுள்ளவனாவான்.

சூரியன் குரு சுக்ரன் இவர்கள் பாக்யத்திலிருக்க அதிகம் படித்தவன், அழகுடையவன், அனேக தேசங்களுக்கு நாயகன், வீரன், மேதாவி, பிராஜ்ஞன்.

சூர்யன் குரு சனிகள் பாக்யத்திலிருக்க உயர்ந்த புருஷன், அரசன், தனவான், குணவான்.

சூர்யன் சுக்ரன் சனிகள் பாக்யத்திலிருக்க காந்தியில்லாமை, அபகீர்த்தி, அரச தண்டனை, பணமின்மை, மூர்க்கதை இவை களுள்ளவனுவான்.

சந்த்ரன் புதன் செவ்வாய்கள் பாக்யத்தில் இருக்க தனம், ஸ்வர்ணம், ரத்னம் இவைகளை உடையவனுகவும், இளம் வயதில் தாபமுள்ளவனுகவுமாவான்.

சந்த்ரன் செவ்வாய் குரு இவர்கள் பாக்யத்தில் இருக்க ஜிதேந்திரியன், ப்ராஜ்ஞன், குரு தேவதா பக்திகளுடையவன், வித்யாவான், தனவான், சுபகன்.

சந்த்ரன் செவ்வாய் சுக்ரன் இவர்கள் பாக்யத்திலிருக்க சரீ ரத்தில் விரணம், அழகின்மை, மித்ர பேதம் செய்தல், ஸ்திரீ ப்ரியன், யுவதிகளிடம் வசமாகி அவர்களால் அபஹரிக்கப்படுதல் இவைகளை உடையவனுவான்.

சந்த்ரன் செவ்வாய் சனிகள் பாக்யத்தில் இருக்க க்ஷீண மான தாய் வம்சத்தை உடையவனுயும், அல்பனுயும், இளவயதில் தாயால் தள்ளப்பட்டவனுயும் நராதிபனுயுமாவான்.

குரு புதன் சந்த்ரன் இவர்கள் பாக்யத்திலிருக்க குலவ்ருத்தி உடையவன், ஆசார்யத்வ மடைபவன், அனேக தோழர்களுடை யவன், ஜனங்களுக்கு நாயகன், அனேக சாதனங்களை உடையவன்.

சுக்ரன் புதன் சந்த்ரன் இவர்கள் பாக்யத்திலிருக்க மாற்றுத் தாய் உள்ளவன், வளர்ச்சி பெற்ற பஹுமானத்தை யுடையவன், அனேக தோழர்களுடையவன், சமாதான ப்ரியன்.

சந்த்ரன் புதன் சனி இவர்கள் பாக்யத்திலிருக்க நபும்ஸகன் போலிருப்பவன், பராக்ரமசாலி, அபகீர்த்தி உடையவன், துர் புத்தி, கலகத்தில் ஆசை யில்லாதவன், தீனன்.

சந்த்ர குரு சுக்ரன் இவர்கள் பாக்யத்திலிருக்க ராஜசமன், அரச வம்சத்தில் பிறந்தால் அரசனுவான்.

சந்த்ரன் குரு சனிகள் பாக்யத்திலிருக்க ப்ரிய வார்த்தை, ஸத்ய வ்ரதம், ஸதாசாரம், ப்ரஸித்தி, சாஸ்த்ர கௌசலம் இவை களை அடைவான்.

சந்த்ரன் சுக்ரன் சனிகள் பாக்யத்திலிருக்க பயிர்த் தொழில், பரிபாலிப்பதில் ஆசை, பாபம், ராஜ காரியம், லோக ப்ரஸித்தி இவைகளை அடைகிறான்.

செவ்வாய் புதன் குரு இவர்கள் பாக்யத்திலிருக்க மண்ட லாதிபன், தேஜஸ்வி, துக்கமற்றவன், வித்வான், எல்லாவற்றிலு முயர்ந்தவன்.

செவ்வாய் புதன் சுக்ரன் இவர்கள் பாக்யத்திலிருக்க அனேக தேசங்களுக் கதிபன், கீர்த்திமான், நரேந்த்ர ஸத்காரத்தால் கௌரவிக்கப்பட்டவன், (பட்டம் பெறுதல்) மிகக் கோபி, நல்லோர்கள் விஷயத்தில் உண்மையாக நடப்பவன்.

செவ்வாய் புதன் சனிகள் பாக்யத்தில் இருக்க அடிமை, வழி தவறுபவன், மௌனி, ஏமாற்றுவதில் சமர்த்தன், தமோ குணமுள்ளவன், எல்லா சாஸ்த்ரங்களும் கலந்து பேசுபவன்.

புதன் குரு சுக்ரன் இவர்கள் பாக்யத்திலிருக்க தேவ சமன், தெளிந்த புத்தியுடையவன், கீர்த்திமான், பலருக்கு அதிபன், வித்வான், தர்மத்தில் ஆசை உடையவன்.

புதன் சுக்ரன் சனிகள் பாக்யத்தில் இருக்க மேதாவி, ப்ரதி த்தன், அழகாகப் பேசுபவன், சுகி.

சூரியன் சந்த்ரன் செவ்வாய் புதன் இவர்கள் பாக்யத்தில் இருக்க தனவான், வித்தையில் சமர்த்தன், பாக்யமுடையவன், ராஜ சம்மதன்.

சுக்ரன் சந்த்ரன் செவ்வாய் ஸூரியன் இவர்கள் பாக்யத்தி லிருக்க மாயாவி, தன் பத்னியிடத்தில் எப்போதும் ரஸிப்பவன், அல்பமான காரியத்தைச் செய்பவன்.

சந்த்ரன் குரு புதன் ஸூர்யன் இவர்கள் பாக்யத்திலிருக்க முக்யஸ்தன், தீரன், அரசனுல் கொண்டாடத் தக்கவன், ஸ்தி ரமாக இருப்பவன்.

சந்த்ரன் புதன் சுக்ரன் ஸூர்யன இவர்கள் பாக்யத்தில் இருக்க தனவான், தார்மிகன். எல்லாவற்றிலும் நிறைந்தவன், ப்ரியமாகப் பேசுபவன சாந்தன்.

ஸூரியன் புதன் குரு செவ்வாய் இவர்கள் பாக்யத்திலிருக்க தேவ பித்ருக்களை பூஜிப்பவன், தனமுள்ள பத்னியை அடை பவன். குணங்களோடு கூடியவன்,

சுக்ரன் புதன் செவ்வாய் ஸூர்யன் இவர்கள் பாக்யத்தில் இருக்க கொடுமையாகப் பேசுபவன், சுபகன், ஸாஹஸத்தையுடை யவன், தனமில்லாதவன். சத்ருவால் அழிக்கப்பட்ட விபவத்தை யுடையவன்.

ஸூர்யன் சனி புதன் செவ்வாய் இவர்கள் பாக்யத்திலிருக்க பிறர் மனைவியிடம் ஆசையுள்ளவன், ஐச்வர்யம் வாய்ந்தவன், தாழ்ந்தவன்.

சுக்ரன் குரு செவ்வாய் ஸூர்யன் இவர்கள் பாக்யத்திலிருக்க வெறுக்கப்படுபவன், தாகத்தால் சிரமப்படுபவன், கன்னிகளை தூஷிப்பவன், சஞ்சல சித்தன்,

குரு செவ்வாய் சனி ஸூர்யன் இவர்கள் பாக்யத்திலிருக்க சுகமில்லாதவன். ஸதா முயற்சிப்பவன். அதிக கோபி. பராக்ரம முடையவன். பலசாலி.

ஸூர்யன் புதன் குரு சுக்ரர்கள் பாக்யத்திலிருக்க உத்தம புருஷன். தனம், சுவர்ணம், ஐச்வர்யம் இவைகளோடு கூடியவன்.

சனி ஸூர்யன் புதன் குரு இவர்கள் பாக்யத்திலிருக்க தன மில்லாதவன். பாபி. பிறர் மனைவியிடத்தில் பற்றுள்ளவன், அனேகரால் நிந்திக்கப்படுபவன், இழிதொழிலைச் செய்பவன்.

புதன் சனி ஸூர்யன் சுக்ரன் இவர்கள் பாக்யத்திலிருக்க சுபகன். தனவான், சத்யவான், பிரசித்தி உடையவன்.

ஸூர்யன் குரு சுக்ரன் சனி இவர்கள் பாக்யத்திலிருக்க ஸத்ய வ்ரதன், நல்வார்த்தை பேசுபவன், குரு-ப்ராம்மண-அதிதிகளிடம் பக்தி உடையவன்.

சந்த்ரன் புதன் குரு செவ்வாய் இவர்கள் பாக்யத்திலிருக்க போக வஸ்துக்களோடு கூடியவன், சிறு வயதில் தாயை இழப் பவன், தனவான்.

செவ்வாய் சுக்ரன் புதன் சந்த்ரன் இவர்கள் பாக்யத்தில் இருக்க தபஸ்வி, புகழடைபவன், நன்றாகப் பேசுபவன், தாதா, உயர் லோகத்தில் ஆசை உடையவன். மிகவும் ப்ராஜ்ஞன்.

சனி புதன் சந்த்ரன் செவ்வாய்கள் பாக்யத்தில் இருக்க எல்லாவற்றிலும் வெறுப்புடையவன். நிந்த, அற்பன், மாயாவி, பிறர்மனை புகுபவன்.

செவ்வாய் சந்த்ரன் சுக்ரன் குரு இவர்கள் பாக்யத்திலிருக்க ராஜகுலத்தை விருத்தி செய்பவன், சூரன், முதன்மையானவன், வித்யை, தனம் இவைகள் நிறைந்தவன். க்யாதி உடையவன், கீர்த்தி உள்ளவன், எல்லோருக்கும் அபிமதன்.

செவ்வாய் சந்த்ரன், சனி குரு இவர்கள் பாக்யத்திலிருக்க தாரத்தால் வருந்துபவன், கலகத்தில் ஆசையை யுடையவன். ஸௌபாக்யம், ஆடை இவை இல்லாதவன்.

செவ்வாய் சந்த்ரன் சனி சுக்ரன் இவர்கள் பாக்யத்திலிருக்க கொடுமையாகப் பேசுபவன். பாபி. மாயாவி, சௌசம், ஆசாரம் இவைகளில்லாதவன்.

சுக்ரன் குரு புதன் சந்த்ரன் இவர்கள் பாக்யத்திலிருக்க தனிகன், தர்மத்தில் ஆசையுள்ளவன், கலைகளில் ப்ரஸித்தன்.

புதன் சந்த்ரன் சுக்ரன் குரு இவர்கள் பாக்யத்திலிருக்க ப்ர ஸித்தன். ப்ராஜ்ஞன், ஜனங்களுக்கு நாயகன், நல்ல வம்சத்தில் பிறந்தவன், முக்யமானவன், பணமுள்ளவன், அழகுடையவன்.

குரு புதன் சுக்ரன் சந்த்ரன் இவர்கள் பாக்யத்திலிருக்க பாக் யவான், உயர்ந்தவன்.

சனி புதன் குரு சந்த்ரன் இவர்கள் பாக்யத்திலிருக்க கலை களை நன்கறிந்தவன், பரிபூர்ணன், நீதி தெரிந்தவன், அழகான வேஷமுடையவன்.

சனி சுக்ரன் புதன் சந்த்ரன் இவர்கள் பாக்யத்திலிருக்க மேதாவி, அதிக கோபத்தையுடையவன், நீதியில் ஸமர்த்தன்.

சந்த்ரன் சனி சுக்ரன் குரு இவர்கள் பாக்யத்திலிருக்க மாயாவி, கோபி, ஜயிக்க முடியாதவன், தைர்யமுள்ளவன்.

செவ்வாய் புதன் குரு சனிகள் பாக்யத்திலிருக்க சத்ருவால் அழிவுள்ளவன், சண்டையில் சூரன், மிகவும் தைர்யவான்.

செவ்வாய் புதன் சுக்ரன் சனிகள் பாக்யத்திலிருக்க அன்ய தேசத்தை அடைபவன், நன்னடத்தையுள்ளவன், தனவான், தெய்வபக்தி உடையவன்.

செவ்வாய் சுக்ரன், குரு சனி இவர்கள் பாக்யத்திலிருக்க ஐச்வர்யமில்லாதவன், அல்பன், பலமில்லாதவன்.

3, 4, 5, 6 அல்லது இந்த கிரஹங்கள் புதனுடன் சேர்ந்து பாக்ய ஸ்தானத்திலிருக்க எல்லோராலும், நம்பத்தக்கவன், தனவான், ஜனங்களுக்கு நாயகனுவான்.

குரு புதன் இவர்கள் தவிர மற்ற கிரஹங்கள் பாக்யத்திலிருக்க அதிகம் ரோகமுள்ளவன், அழகில்லாதவன், மனிதர்கள் இல்லாதவன், சிறைச்சாலை வாஸத்தினால் சிரமப்படுபவன், தைரியத்தை உடையவன்.

மேலே கூறப்பட்ட விஷயங்கள் பாதராயணர் முதலியவர்களால் விரிவாக உபதேசிக்கப்பட்டது. மணித்தர், மஹேந்த்ரர், முதலியோர் ரச்மிகளைக் கொண்டு இந்த பாக்ய பாவத்தை விரிவாகச் சொல்வதை கீழே சுருக்கமாகத் தருகிறோம்.

மணித்தர் உச்சமான ஏழு கிரஹங்களில் ஒவ்வொருவருக்கும் 7 கிரணங்கள் எனக் கூறுகிறார்.

மஹேந்த்ர சாஸ்திரத்திலோ உச்சர்களான ஸூரியனுக்கு 10 கிரணங்கள் என்றும், சந்த்ரனுக்கு 9 என்றும், செவ்வாய்க்கு 5 என்றும், புதனுக்கு 5 என்றும், குருவுக்கு 7 என்றும், சுக்ரனுக்கு 8 என்றும், சனிக்கு 5 என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

இவ்விதம் சொல்லியிருப்பதில் பலர் ஒவ்வொரு கிரஹத்திற்கும் 7 கிரணங்கள் என்று சொல்லியிருப்பதால், 7 என்று வைத்துக்கொண்டு மேல் பலனைக் கவனிப்போம்.

இவ்விதம் பார்ப்பதில் நீச கிரஹங்களுக்கு கிரணங்கள் கிடையாது. நீசத்தை விட்டு உச்சத்திற்குப் போகுங்கால் அபிமுக ரச்மி என்றும், உச்சத்தை விட்டு நீசத்தை அடையும்போது பராங்முக ரச்மி என்றும் சொல்லப்படுகிறது. உச்சத்திற்கும் நீசத்திற்கும் மத்தியில் கிரணம் எவ்வளவு என்பதை 12-க்குக் குறைந்தால் 12 கூட்டியும், 6-க்கு அதிகமானால் குறிப்பிட்ட கிரஹத்தினுடைய கிரணத்தால் பெருக்கி 6-ஆல் வகுக்க வரக்கூடிய மீதம் எவ்வளவோ, அவ்வளவை உச்ச நீசங்களுக்கு மத்தியில் இருக்கும் அந்தந்த கிரஹத்தின் கிரணம் என்று காணவும்.

மித்ரத்வாதசாம்சத்தில் வசிக்கும் கிரஹத்திற்கு இரண்டு மடங்கும், ஸ்வக்ஷேத்ரத்தில் இருப்பவைகளுக்கு 3 மடங்கும், வக்ரம் அல்லது உச்சத்தில் இருக்க 3 மடங்கு என்றும் சொல்லப்படுகிறது.

சில இடங்களில் வக்ரத்திற்கு 2 பங்கு கிரணங்கள் என்றும் சொல்லப்படுகிறது.

துவாதசாம்சத்தில் சத்ரு அல்லது நீச க்ஷேத்ரத்தில் இருக்க கிரணம் 16-ல் ஒரு பங்கு குறைவுபடுகிறது என்றும் சொல்லப்படுகிறது.

அஸ்தங்கதர்களான சனி சுக்ரர்கள் தவிர மற்றவர்களுக்கு கிரணங்கள் இல்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது.

வக்ரம் நீங்குங்கால் இரு பங்கு அதிகமான கிரணங்களைப் படுகிறது.

வக்ரம் நிர்ந்து ருஜுவாக ஆனால் $\frac{1}{8}$ பாகம் குறைவாகும்.

எல்லா கிரஹங்களுக்கும் ஒன்று முதல் ஐந்து ரச்மிகள் வரை இருந்தால் மிக துக்கத்தை அடைந்தவனுகவும், வம்சத்திலிருந்து விடுபட்டவனுகவும், அடிமையாகவும், ஏழையாகவும், தாழ்ந்தோரிடத்தில் பற்றுடையவனுகவுமாவான்.

கிரஹங்கள் எல்லாவற்றிற்கும் சேர்ந்து ஐந்திற்கு மேல் பத்து கிரணங்கள் இருந்தால் கூலியினால் ஜீவிப்பவனுகவும், தைன்யத்தை அடைந்தவனுகவும், பிற ஊர் செல்பவனுகவும், ஸௌபாக்யமில்லாதவனுகவும் ஆவான்.

10-க்கு மேல் 15 வரை கிரணமிருந்தால் கல்வி கேள்விகளில் சிறந்தவனுகவும், கல்லவனுகவும், தர்மரதனுகவும், தன் குலத்திற்கு ஏற்றவனுகவும், சுமுகனுகவுமிருப்பான்.

15 முதல் 20 வரை கிரணமிருந்தால் குலத்தில் உயர்ந்தவனுகவும், தனவானுகவும், க்யாதி உடையவனுகவும், சுற்றத்தாரால் கொண்டாடத் தக்கவனுகவும் ஆவான்.

20-க்கு மேல் 25-க்குள் கிரணமிருந்தால் பூஜிக்கத்தக்கவனுகவும், சுபனுகவும், தைர்யமுள்ளவனுகவும், சமர்த்தனுகவுமாவான்.

25-க்கு மேல் 30-க்குள் கிரணமிருந்தால் கோபியாகவும், ராஜாச்ரயமுடையவனுகவும், அரசனிடமிருந்த தனதி ஸௌக்யங்களைப் பெறுபவனுகவும், மந்திரியாகவும், அரசனல் மதிக்கத்தக்கவனுகவுமாவான்.

31 கிரணங்களிருக்க உயர்ந்தவனுகவும், ப்ரஸித்தனுகவும், அரசர்களுக்கு அபிமதனுகவுமாவான்.

32 கிரணங்களிருக்க 50 கிராமங்களுக்கு அதிபனுவான்.

33 கிரணங்களிருக்க 1000 கிராமங்களுக்கு அதிபனுவான்.

34 கிரணங்களிருக்க 3000 கிராமங்களுக்கு அதிபனுவான்.

35 கிரணங்களிருக்க அதிக ஐச்வர்யமுள்ளவனுகவும், பலவானுகவும், மிகப் பிரஸித்தி பெற்ற காந்தி, யசஸ் இவைகளுடையவனுகவுமாவான்.

36 கிரணங்களிருக்க 1½ லக்ஷம் கிராமங்களை அனுபவிப்பான்.

38 கிரணங்களிருக்க 3 லக்ஷம் கிராமங்களுக்கு அதிபதியாவன்.

39 கிரணங்களிருக்க எல்லோரையும் ஸந்தோஷப்படுத்துபவனுகவும், பூபதியாகவுமாவான்.

40 கிரணங்களிருக்க விசாலமான பூமிக்கு நாயகனுவான்.

41 கிரணங்களிருக்க ஸமுத்ரம் சூழ்ந்த பூமிக்கு அரசனுவான்.

42 கிரணங்களிருக்க 2 ஸமுத்ரங்கள் சூழ்ந்த பூமிக்கு அதிபதி.

43 கிரணங்களிருக்க 3 ஸமுத்ரங்கள் சூழ்ந்த பூமிக்கு அதிபதி.

44 கிரணங்களிருக்க அதிகமான வெவ்வேறு தேஹங்களை ஆள்பவனுகவும், உபத்ரவமில்லாதவனுகவும், எல்லோராலும் வணங்கத்தக்கவனுகவும், இந்திரன் போன்ற பிரதாபமுள்ளவனுகவுமாவான்.

45 கிரணங்களிருக்க அரிஷ்டம் இல்லாமலிருந்தால் சக்ரவர்த்தியாவான்.

49 கிரணங்களிருக்க பூமி பாரத்தைத் தாங்குபவனுகவும், சத்ரு இல்லாதவனுகவும், இந்த்ரனுக்கு சமமான மஹிமையுடையவனுகவும், எல்லோராலும் துதிக்கப்படுபவனுகவும், சக்ரவர்த்தியாகவுமாவான்.

உச்சத்தை அடையும் கிரஹங்கள் கல்ல பலனை சீக்ரத்தில் அளிக்கின்றன. நீசமடையும் கிரஹங்கள் கெட்ட பலனை அளிக்கின்றன. ஜனன காலத்தில் கிரஹங்களுடைய கிரணங்கள் குறைவாக விருப்பின் கெடுதல் ஏற்படுகிறது. கிரணங்கள் அதிகமானல் பலனும் விசேஷமாக நடக்கும். விருத்தியடைவது அல்லது தாழ்வடைவது என்கிற எந்தப் பருவத்தில் கிரஹங்கள் இருக்கின்றனவோ அதற்குகந்தபடி பலனிலும் உயர்வு தாழ்வு ஏற்படும்.

இந்த பாக்யபாவம் பார்க்கும் விஷயத்தில் சந்த்ரன் சேர்க்கை கிழ்க்குறிப்பிட்ட கிரணங்கள், மற்றும் இந்த யோக பாவம் இவைகளுடைய பலன் எல்லாவற்றையும் சேர்த்து கவனித்துப் பார்க்க வேண்டும். இவ்விதம் பார்ப்பதிலும் சிலர் கையாளும் விஷயத்தையும் இங்கு தெரிவிக்க வேண்டியது அவச்யமாகிறது.

எல்லா கிரகங்களுக்கும் உச்ச க்ஷேத்ரத்தில் இருந்து நீச க்ஷேத்ரம் வரைக்கும் 6 ராசிகள் இருப்பதை வைத்து உச்சத்திலிருந்து நீசத்திற்குச் செல்லும் கிரஹத்திற்குக் கடந்த ஒவ்வொரு ராசிக்கு ஒவ்வொரு பங்கு தாழ்வாகவும், நீசத்திலிருந்து உச்சத்திற்குச் செல்லும்போது கடந்த ராசிகளைக்கொண்டு ஒவ்வொரு பங்கு உயர்வாகவும், உச்சத்தில் முழுப்பலனுகவும், நீசத்தில் கிஞ்சிற்பலனுகவும் கண்டுகொள்வது. இவ்விதம் பார்ப்பதால் பலனின் அளவை கூடுமான வரை சரியாக மதிப்பிட முடிகிறது.

நவமாதிபதியோடு சேர்ந்த நவாம்சாதிபதி குரு சுக்ரர்களால் பார்க்கப்பட்டாலும், நவம ஸ்தானம் புதனுடன் சேர்ந்து அல்லது குரு ஸம்பந்தம் பெற்று நவமாதிபன் கேந்த்ரத்தில் இருந்தாலும் குருபக்தி உடையவனுவான்.

லாபாதிபன் பாக்யத்திலும், பாக்யாதிபன் லாபத்திலும் இருந்தாலும், ஜனனம் முதல் பாக்யமுடையவனுகவும், மேன் மேலும் விருத்தி அடைபவனுகவுமாவான்.

சுக்ரன் பரமோச்ச பாகத்தில் வசித்து பாக்யாதிபனுடன் சேர்ந்தாலும், பாக்ய ஸ்தானத்தில் குரு இருந்தாலும், அதிக பாக்யத்திற்கு அதிபனுவான்.

பாக்யஸ்தானம் குரு சம்பந்தம் அடைந்து பாக்யாதிபன் கேந்த்ரத்தில் இருக்க 20 வயதிற்குமேல் அதிக பாக்யத்தை அடைவான்.

புதன் பரமோச்ச பாகத்திலும், பாக்யாதிபன் பாக்யத்திலு மிருக்க 36 வயதிற்குப் பிறகு அதிக பாக்யமேற்படும்.

லக்னாதிபதி பாக்யத்திலும், பாக்யாதிபன் லக்னத்திலும் வசித்து குரு வீக்ஷணம்-சம்பந்தம் பெற பல்லக்கு போன்ற மனிதர் தாங்கும் வாஹனத்தைப் பெறுவான்.

பாக்யாதிபன் பலவானுனலும், கேந்த்ரத்தில் வசித்தாலும், சுபனுடு சேர்ந்தாலும், மித்ரனின் பார்வை பெற்றாலும், பாக்யத்தில் சுபனும், பாக்யாதிபன் மித்ரனுடு சேர்ந்து உச்சத்திலிருக்கும் க்ரஹத்தின் பார்வை பெற்றாலும், பாக்யாதிபன் தான் வசிக்கும் ராசியதிபனுல் பார்க்கப் பெற்றாலும், கர்மாதிபன், லக்னாதிபன் இவர்களுடைய வீக்ஷணம் பெற்றாலும், பாக்யாதிபன் கர்ம ஸ்தானம், லாப ஸ்தானம் இவைகளின் அதிபர்களோடு சேர்ந்து சுபக்ரஹ மத்தியில் கர்ம ஸ்தானம், சுபசம்பந்தம் பெற்றாலும், அதிக பாக்யத்தை உடையவனுகிறான்.

பாக்யாதிபன் வசிக்கும் ராசியதிபன் உச்ச க்ஷேத்ரம் அல்லது கேந்த்ரத்தில் இருந்து சுபவீக்ஷணம் பெற்றாலும், பாக்யாதிபன் கர்மாதிபதியோடு சேர்ந்து கேந்த்ரத்தில் வசித்தாலும், பாக்யாதிபன் சுபக்ஷேத்ரத்தில் இருந்தாலும் அரசனுக்கு ஸமானனுவான்.

பாக்யஸ்தானம் சுபனுல் அல்லது பாக்யாதிபனுல் பார்க்கப் பெற எல்லாவித நன்மையுமுண்டாகும்.

பாக்யஸ்தானம் சூர்ய வீக்ஷணம் பெற அரசன், பூமி இலைகள் வழியாக ஜீவனமேற்படும்.

பாக்யஸ்தானம் புதன் பார்வை பெற தனவானுகவும், சுக்ரன் பார்க்க ஐச்வர்யம், வாஹனம் இவைகளுடையவனுகவும், சந்த்ரன் பார்க்க ஒட்டகம் முதலிய வாஹனங்களை உடையவனுகவுமாவான்.

சந்த்ரன் அல்லது சுக்ரன் பாபரோடு சேர்ந்து பாக்ய ஸ்தானத்தில் இருந்தாலும், பாக்யாதிபன் சந்த்ர சுக்ரர்களோடும், பாபியோடும் சேர்ந்தாலும், சுக்ரன் பாபியோடு கூடியோ, க்ஷீணமாகவோ, நீசனுகவோ இருந்து 9-வது அம்சத்திலிருந்தாலும், பாக்ய ஸ்தானம் பாபியோடோ அல்லது சுக்ர சந்த்ரர்களோடோ சேர்ந்திருந்தாலும் குரு தாரகமனம் செய்வான்.

சந்த்ரன் பாபியோடு சேர்ந்து க்ஷீணன் அல்லது நீசனுகி பாக்யஸ்தானத்திலிருக்க அதிக வயதான ஸ்திரீயின் போகத்தைப் பெறுவான்.

க்ரூராம்சத்தில் வசிக்கும் குளிகனுல் பாக்ய ஸ்தானம் பார்க்கப்பெற்று சுக்ரன், சனி, ராகுவுடன் கூட பிரம்மஹத்யா தோஷத்தை அடைகிறான்.

பாக்யாதிபன் க்ரூர ராசியம்சத்தில் இருக்க நீச்செயல் புரிவான்.

ராஹு பஞ்சமத்திலும், புதன் பாக்யத்திலும், பாக்யாதிபன் அஷ்டமத்திலுமிருக்க பாக்யமற்றவனுவான்.

சனி சந்த்ரனுடு சேர்ந்து பாக்யத்தில் வசித்து லக்னாதிபன் நீசத்திலுமிருக்க பிச்சை எடுத்துண்பவனுகவும், இகழப்படுபவனுகவுமாவான்.

3-க்குடையவன் தசமாதிபனுடன் சேர்ந்து துர்பலனுகவும், நீசராசியில் வசிப்பவனுகவும், அஸ்தமனத்தை அடைந்தவனுகவுமிருப்பின் பிச்சை யெடுத்து உண்பவர்களுக்கு பிரபுவாவான்.

9, 11, 2, 1 இவைகளில் பாபிகள் இருக்க பாக்ய யோகமிருந்தாலும் பாக்யக் குறைவு ஏற்படும்.

பாக்ய ஸ்தானத்தில் அனேக பாபிகள் இருந்தாலும், பாக்யாதிபன் துர்பலனுய் இருந்தாலும் பிச்சை யெடுத்துண்பவனுகவோ, பரான்னத்தால் ஜீவிப்பவனுகவோ ஆவான்.

பாக்யாதிபன் அஷ்டமத்தில் இருந்தாலும், சத்ரு அல்லது நீச க்ரஹத்தால் பார்க்கப் பெற்றாலும், க்ரூராம்சத்திலிருந்தாலும் நீச ராசியிலிருந்தாலும் பாக்ய ஹீனனுவான்.

லக்னம் குரு சுக்ரர்களால் பார்க்கப் பெற்றாலும், லக்னாதிபன் பாக்யத்தில் வசித்தாலும், லக்ன தசாநாதிபதிகள் 3 ல் இருந்தாலும், இழந்த பாக்யத்தை மறுபடியும் அடைவான்.

லக்னாதிபன் பாக்ய ஸ்தானத்திலும், பாக்யாதிபன் லக்னத்திலுமிருந்து லாபாதிப பாக்யாதிபர்களின் சம்பந்த மேற்பட மறுபடியும் பாக்யமேற்படும்.

பாக்யாதிபன் குரு சுக்ரர்களால் பார்க்கப் பெற்று க்ரூர ராசியம்சங்களிலிருந்து பாக்ய ஸ்தானம் லக்னாதிபனால் பார்க்கப் பெற்றால் பாக்ய நாசமேற்படும்

லக்ன பாக்ய கர்மாதிபர்கள் லக்னத்தில் வசித்தாலும், த்ரிகோணத்தில் இருந்தாலும் சுபராசி அம்சத்திலிருந்தாலும் தேவதாஸ்தாபகனுவான்.

பாக்யத்தில் சுபன் வசித்தாலும் அல்லது பார்த்தாலும், பாக்யாதிபன் சுபனோடு சேர்ந்தாலும், கேந்த்ர த்ரிகோணங்களிலிருந்தாலும் தயையோடு கூடியவனுவான்.

பாக்யாதிபன் உச்சத்தில் இருந்தாலும் சுபரால் பார்க்கப் பெற்றாலும், பாக்ய ஸ்தானம் சுபனோடு சேர்ந்தாலும் தானம் செய்பவனுவான்.

லக்னம் அல்லது லக்னாதிபதி பாக்யாதிபனால் பார்க்கப்பெற்றாலும், பாக்யாதிபன் கேந்த்ர த்ரிகோணங்களில் இருந்தாலும், 4, 7, 10-க்கு அதிபர்கள் கேந்த்ரத்தில் வசித்து விரயாதிபன் குருவால் பார்க்கப்பெற்றாலும், புதன் பாக்யாதிபதியால் பார்க்கப்பெற்று தன் உச்சத்தில் இருந்தாலும், லாபாதிபன் கேந்த்ரத்தில் வசித்தாலும் மஹாதானம் செய்பவனுவான்.

லக்னாதிபன் லாபத்திலும், கர்மாதிபன் பலிஷ்டனாய் பாக்யாதிபனால் பார்க்கப் பெற்றாலும் புத்ர ஸ்தானாதிபன் பாக்யத்தில் இருந்து கர்ம பாக்யாதிபர்களோடு சேர்ந்து லக்னேசனால் பார்க்கப்பட்டாலும், பாக்யாதிபன் கர்மாதிபனால் பார்க்கப்பட்டு கேந்த்ரம், த்ரிகோணம் அல்லது பரமோச்சாம்சத்திலிருந்தாலும் தான லாபத்தை அடைவான்.

குருவோ, சுக்ரனோ, உச்சம் அல்லது மித்ராம்சமான 9-ம் இடத்தில் வசித்து அவ்விட்டிற்குடையவனை பலவானாலும், பாக்யாதிபன் குரு சுக்ர புதர்களின் அம்சம் பெற்று சுபவீக்ஷணம் அடைந்தாலும் அல்லது சுபர்களின் மத்தியில் இருந்தாலும் தர்மாதிகாரியாவான்.

பாக்யத்தில் பாபி இருந்தாலும், அவ்விட்டிற்கு அதிபன் பாபியுடன் கூடினாலும் க்ரூர ஷஷ்ட்யம்சத்தில் இருந்தாலும் பாபிகளின மத்தியிலிருந்தாலும் பாபியாவான்.

வாஹனாதிபன் பாக்யத்திலிருந்து சுக்ரன குரு சுப ராசியில் இருந்தாலும், பாக்யாதிபன் கோண கேந்த்ரங்களிலிருந்தாலும், பாக்யாதிபன் கேந்த்ரத்திலும் லக்னாதிபன் பலம் பெற்றிருந்தாலும் அதிகமான பூமி, பூஷணம், அன்னம், வாஹனங்களைப் பெறுவான.

பாக்யாதிபன் பலவானாகவும், பாக்யத்தில் சுக்ரனும், லக்னத்திற்கு கேந்த்ரத்தில் குருவுமிருக்க பித்ரார்ஜிதமான பாக்யத்தை உடையவனுவான்.

லக்னத்திற்கு கேந்த்ரத்தில் சுக்ரனும், 9-வது ராசியம்சத்தில் குருவும், பாக்யாதிபன் பரமோச்சத்திலிருந்து குரு வீக்ஷணமும் பெற்றால் அவனுடைய தகப்பன வாஹனாதிகளோடு கூடி அரசனுகவோ, அரசனுக்கு சமமாகவோ இருப்பான்.

பாக்யாதிபன் கர்ம ஸ்தானத்திலும் கர்மாதிபன் பாக்ய ஸ்தானத்திலுமிருக்க எப்போதும் வேலை செய்பவனுகவும், தனவானுகவும், தகப்பனைவிட அதிக கீர்த்தி உடையவனுகவுமாவான்.

சூர்யன் பரமோச்சத்திலும், பாக்யாதிபன் லாபத்திலுமிருக்க தர்மவானுகவும், அரசனின் சிநேகத்தை உடையவனுகவும், சுத்தனான தகப்பனை உடையவனுகவுமாவான்.

லக்னத்திற்கு 5, 9 களில் சூரியனும், 7-ல் பாக்யாதிபனுமிருந்து குருவோடு சேர்ந்தோ அல்லது பார்க்கப்பட்டோ இருந்தால் பித்ரு பக்தி உடையவனுவான்.

பாக்யாதிபன், பாக்ய காரகன், பாக்ய ஸ்தானம் இவைகளைக் கொண்டு தகப்பன்மூலம் உண்டாகும் பாக்யத்தை அறிய வேண்டும்.

பாக்ய ஸ்தானம் பலமடைந்து பாக்ய காரகன் பலிஷ்டனாய், பாக்ய ஸ்தானம் சுபனோடு சேர்ந்திருந்தாலும், பாக்ய காரகன் உச்சம், கேந்த்ரம், த்ரிகோணம் இவைகளில் இருந்து சுபவீக்ஷணம் பெற்று பாக்யாதிபனும் பலம் பெற்றிருந்தாலும் பாக்யாதிபன், பாக்ய காரகன், பாக்ய ஸ்தானம் இவைகள் ஒவ்வொன்றிற்கும் சிநேகமிருந்து சுபவீக்ஷணம் அல்லது சேர்ந்து இருந்தாலும், பாக்ய காரகன் வசிக்கும் அம்சாதிபன் இருக்கும் ராசியதிபன் கேந்த்ரம் அல்லது த்ரிகோணத்தில் வசித்து சுபவீக்ஷணம பெற்றாலும், பாக்ய கர்மாதிபர்கள் லாபத்திலும், பித்ருகாரகர்கள் பலவானாக இருந்தாலும், பாக்ய ஸ்தானம் சுபக்ஷேத்ரமானாலும், பாக்யாதிபன் சுபவீக்ஷணம் பெற்றாலும், பாக்யத்தில் சுபனும், பாக்ய காரகன் பலவானாகி லக்னாதிபதியாக இருந்தாலும் தகப்பன் நீண்ட ஆயுளுள்ளவனாகிறான்.

லக்னாதிபன் கர்மாதிபன் இவர்கள் பரஸ்பரம் சிநேகமானாலும் கேந்த்ரத்தில் வசித்தாலும் தகப்பனால் தேடப்பட்ட ஐச்வர்யத்தை அனுபவிப்பான்.

பித்ரு ஸ்தானாதிபன், பித்ரு காரகன் இவர்கள் 6, 8, 12 களில் இருக்க மாதா பிதாக்கள் புத்ரனுக்கு ஏற்படும் பாக்யத்தை பார்க்கமாட்டார்கள். இந்த ஸ்தானங்கள் கேந்த்ரம் அல்லது த்ரிகோணத்தில் இருக்க தாய் தகப்பன்கள் பாக்யத்தைக் காண்பார்கள்.

பித்ரு ஸ்தானாதிபன், சூர்யன், சந்த்ரன், சனி இவர்கள் ரோக ஸ்தானத்தில் இருந்தாலும், ரோகாதிபனுடன் சேர்ந்தாலும் தகப்பன் இரவில் மரணமடைவான். சந்த்ரன் சேராமலிருக்க பகலில் மரணமுண்டாகும்.

பித்ரு ஸ்தானத்திற்கு தன ஸ்தானம் அல்லது சுகஸ்தானம் செவ்வாயோடு சேர்ந்து பாக்யாதிபன் நீச ராசியிலும் இருக்க தகப்பன் தரித்ரனாயிருப்பான்.

பாக்யாதிபன் சத்ரு ஸ்தானத்திலும், சத்ரு ஸ்தானாதிபன் பாக்யத்திலுமிருக்க தகப்பன் பிள்ளை இருவரும் விரோதத்துடன் இருப்பார்கள். தகப்பன் நிந்திக்கப்படுபவனாவான்.

சூரியன 6, 8, 12-லும், 8-க்குடையவன் 9-லும், 12-க்குடையவன் லக்னத்திலும், 6-க்குடையவன் 5-லும் இருந்து பிறந்தவனுக்கு அவன் பிறக்கு முன்னரே தகப்பன் மரிப்பான்.

சூரியன் 8-லும், 8-க்குடையவன் 9-லுமிருக்க 1 அல்லது 6 வயதில் தகப்பனுக்கு மரணம் நேரும்.

விரயாதிபன் 4-லும், 9-க்குடையவன் நீசாம்சத்திலும் இருக்க 3 அல்லது 16 வயதில் தகப்பனுக்கு மரணம் நேரும்.

லக்னாதிபன் 8-லும், அஷ்டமாதிபன் சூரியனோடு சேர்ந்திருக்க 2 அல்லது 12 வயதில் பிதாவின் மரணம் நேரும்.

1, 2, 3, 6 களில் ராகுவும், 5-ல் சூரியனுமிருக்க 14 அல்லது 18 வயதில் பிதாவின் மரணம் நேரும்.

சூரியன் ராகுவோடு சேர்ந்து சந்த்ரன் சனி வசிக்கும் ஸ்தானத்திற்கு 9-ல் இருந்தால் 7 அல்லது 19 வயதில் தகப்பன் மரணம் நேரும்.

நவமாதிபன் அஷ்டமத்திலும், அஷ்டமாதிபன் நவமத்திலுமிருக்க 44 வயதில் தகப்பன் மரணம் சம்பவிக்கும். சூர்யாம்சத்தில் சந்த்ரனும், லக்னாதிபன் அஷ்டமத்திலுமிருக்க 35 அல்லது 41 வயதில் தகப்பன் மரணம் சம்பவிக்கும்.

சூர்யன் பாக்யாதிபனாகி சனி செவ்வாய்களுடன் கூட 50 வயதில் பிதாவின் மரணம் நேரும்.

மூன்றில் சூரியனும், சூரியனுக்கு 7-ல் செவ்வாயுமிருக்க 6 அல்லது 25வது வயதில் பிதாவின் மரணம் நேரும்.

பித்ரு ஸ்தானம் நீசர், பாபி, தூமாதி உபக்ரஹங்கள் இவர்களுடன் கூடினால் சிறு வயதிலேயே தாய் தகப்பன்களின் மரணத்தைச் சொல்லலாம்.

பித்ரு ஸ்தானத்தில் பாபரிருந்தாலும், பரபர்களால் பார்க்கப்பட்டாலும், தூமாதி க்ரஹம் குளிகன் இவர்களோடு சேர்ந்தாலும் மிகச் சிறு வயதிலேயே தகப்பன் மரணம் நேருகிறது.

பித்ரு ஸ்தானத்தில் பாப க்ரஹம் வசித்து பித்ரு காரகன் பலவானுமாகி குரு பார்க்க 12 வயதிற்குமேல் பிதாவின் மரணம் நேரும்.

பித்ரு ஸ்தானத்தில் பித்ரு காரகன் இருக்க 22 வயதில் பிதாவின் மரணத்தைச் சொல்வது.

பித்ரு ஸ்தானாதிபன், பித்ரு காரகன், பித்ரு ஸ்தானம் இவை சுப சம்பந்தம் விக்ஷணம் பெற்றாலும், பித்ரு ஸ்தானாதிபன், பித்ரு காரகன இவர்கள் கேந்த்ரம் அல்லது த்ரிகோணத்தில் இருந்தாலும் 32 வயதிற்கு மேல் தகப்பன் மரணம் நேரும்.

பித்ரு ஸ்தானம், பித்ரு காரகன், பித்ரு ஸ்தானாதிபன் சுப க்ரஹ வீக்ஷணம் பெற்றாலும், பித்ரு காரகன் உச்ச க்ஷேத்ரத்தில் இருந்தாலும் 37 வயதிற்கு மேல் தகப்பன் மரணத்தைச் சொல்லவும்.

கேந்த்ரம் சரமாகி அதில் சூர்யன் அல்லது சந்த்ரனிருக்க மாதா பிதாக்களின் தகனத்தை புத்ரன் செய்வான்.

கேந்த்ரம் உபயராசியாகி அங்கு சந்த்ரன் அல்லது சூரிய னிருக்க மாதா பிதாக்கள் நேருப்பினால் அகாலத்தில் மரணத்தை அடைவார்கள்.

பித்ரு ஸ்தானாதிபன் பலவானாகி சந்த்ரன், லக்னாதிபன், சுகாதிபன் இவர்கள் துர்பலர்களானால் தாயார் அதிக ஆபத்தை யடைவாள்.

சுகாதிபன் வசிக்கும் அம்சாதிபனுடைய தசையில் தகப்பன் மரணம் நேரும். சுகாதிபனின் தசையில் பிதாவிற்கு சமமான வின் மரணம் நேரும் சந்த்ரனுக்கு 4, 8 இடங்களுடைய அதி பதியின் அம்சத்திலோ, த்ரிகோணத்திலோ, சூர்யன் கோசா ரத்தில் வரும்போது அம்மாதத்தில் தாயின் மரணம் நேரும்.

4, 8-க்கு அதிபர்களின் அம்சத்தில் அல்லது த்ரிகோ ணத்தில் சூரியன் கோசரத்தில் வரும்போது அம்மாதத்தில் பிதாவின் மரணம் நேரும்.

தகப்பனுடைய ஜன்ம லக்னத்திற்கு 8-வது அல்லது 3-வது ஸ்தானம் சனி ராசியாய் இருக்க புத்ர பௌத்ராதிகளுடன் பித்ரு தர்ஷனையைச் செய்வான்.

மாதா பிதாக்களின் லக்னத்திற்கு 6 அல்லது 8-ம் இடமான ராசியில் பிறப்பவன் மாதா பிதாக்களுக்கு சத்ருவாவான்.

மாதா பிதாக்களின் லக்னத்திற்கு 9, 11, 2-ம் இடங்களான ராசியில் பிறந்தவன் மாதா பிதாக்களுக்கு அடங்கியவனுவான்.

மாதா பிதாக்களின் லக்னத்திற்கு அஷ்டமத்தில் பிறந்த வனும், அஷ்டமாதிபன் லக்னத்தில் இருக்க ஜனித்தவனும் மாதா பிதாவின கர்ம சேஷங்களைச் செய்வான்.

பெற்றோர்களுடைய லக்னத்திற்கு 10-வது ராசியில் பிறந்த வன் தகப்பனுக்கு சமானமான குணத்தை உடையவனுவான்.

பெற்றோர்களின் ஜன்ம லக்னத்தில் அல்லது 2-ம் இடத்தில் ஜனித்தவன் தகப்பனின் தனத்தை அடைகிறான்.

தகப்பனின் ஜன்ம லக்னத்திற்கு விரயாதிபன் வசிக்கும் ஸ்தானத்திற்கு 6, 8, 12—களில் பிறப்பவன் தகப்பனுக்கு துக்கத்தை யளிப்பான், தூர தேசத்தையுமடைவான்.

பாக்ய ஸ்தானத்தில் பாபிகள் இருந்து அந்த ஸ்தானம் நீச க்ஷேத்ரம் அல்லது சத்ரு க்ஷேத்ரமாக ஆகி சுப வீக்ஷணமில்லா திருந்தால் துக்கியாகவும், தனமில்லாதவனுகவும், க்யாதியற்றவ னுகவும் ஆவான்.

க்ரூர க்ரஹங்கள் ஸ்வக்ஷேத்ரமான பாக்ய ஸ்தானத்தில் இருந்தால் அந்த க்ரஹங்கள் உத்தம சுபங்கள் என்று சொல்லப் படுகிறது. மேலும் சுபர் பார்க்க அதிக குணம் உள்ளவராவர்.

பாக்ய ஸ்தானத்தில் பூர்ண சந்த்ரனுடு சேர்ந்த செவ்வாய், சனி, புதன் இவர்கள் பலம் பெற்றவர்களாய் சேர்ந்து அல்லது தனித்தனியாக இருக்க அப்போது பிறப்பவன் ராஜாவாக ஆவன்.

கிரஹங்கள் அனைத்தும் தமது உச்ச க்ஷேத்ரமான பாக்ய ஸ்தானத்தில் இருக்க தனம், ஸ்வர்ணம் இவைகள் நிறைந்த முதன்மையாக இருப்பவன் பிறப்பான்.

பாப க்ரஹமாக இருந்த போதிலும் ஸ்வக்ஷேத்ரம் அல்லது உச்ச க்ஷேத்ரமாக ஆன பாக்ய ஸ்தானத்தில் இருந்தால் பாக் யத்தை அளிப்பார்கள்.

பாக்யாதிபன் இருக்கும் வீட்டிற்கு அதிபன் பாக்யத்திற்கு கர்த்தாவாகவும், லக்னாதிபதி போதகனாகவும், பாக்யாதிபன் பாசகனாகவும் ஆவார்கள். இவர்கள் உச்ச ஸ்வக்ஷேத்ரங்களில் இருக்க அதிக பாக்யத்தை அளிப்பார்கள்.

பாக்ய ஸ்தானத்தில் 5 க்ரஹங்கள் இருந்தாலும், உச்ச ஸ்வ க்ஷேத்ரங்களில் இருந்து பாக்யாதிபன் பார்வை பெற்றாலும், மஹாபாக்யமுண்டாகும்.

நான்கு கிரஹங்கள் பலிஷ்டர்களாய், பாக்ய ஸ்தானத்தில் இருக்க பாக்யமுண்டாகும். உச்சம் அல்லது தன்னுடைய நவாம்சத்தில் இருக்க தன் தேசத்தில் பாக்யமுண்டாகும். வேறு அம்சத்தில் இருக்க வேறு தேசத்தில் பாக்யமுண்டாகும்.

குரு பாக்ய ஸ்தானத்திலிருந்து சூர்ய சந்த்ரர்களின் பார்வை பெற வித்வானாகவும், யானை, குதிரைகளுடன் கூடினவனாகவும், தர்மத்தில் ஆசையுள்ளவனாகவுமாவான்.

குரு பாக்ய ஸ்தானத்தில் இருந்து சூர்ய செவ்வாய்கள் பார்க்க ரத்ன வாஹன ஸைன்யங்களைப் பெறுகிறான்

குரு பாக்ய ஸ்தானத்தில் இருந்து சூரிய புதர்கள் பார்க்க வித்யை, அதிக தனம், சாது கோஷ்டி இவைகளை அடைவான்.

குரு பாக்யத்திலிருந்து சுக்ர சூர்யர்கள் பார்க்க வினயத்தை அடைவான்.

குரு பாக்ய ஸ்தானத்தில் இருந்து சூர்ய சனிகள் பார்க்க ஞானி, குணவான், அதிக கிராமங்களுக்கு நாயகன்.

குரு பாக்ய ஸ்தானத்திலிருந்து சந்த்ர செவ்வாய்கள் பார்க்க ஐச்வர்யம், கீர்த்தி, சுகம் இவைகள் உண்டாகும்.

குரு பாக்ய ஸ்தானத்தில் இருந்து சந்த்ர புதர்கள் பார்க்க கிரஹ ஸௌக்யம், தனம் இவைகளை அடைகிறான்.

குரு பாக்ய ஸ்தானத்தில் இருந்து சுக்ர சந்த்ரர்கள் பார்க்க புத்ரனில்லாதவன். வேலை செய்து ஜீவிப்பவன்.

குரு பாக்ய ஸ்தானத்தில் இருந்து சந்த்ர சனிகள் பார்க்க குணவான், அன்ய தேசத்தை அடைவான்.

குரு பாக்ய ஸ்தானத்தில் இருந்து சுக்ர புதர்கள் பார்க்க வித்யாதிகன் ஆவான்.

எல்லா கிரஹங்களும் பார்க்க தனம், ராஜ்யம் இவைகளை அடைகிறான்.

பாக்ய ஸ்தானம் பாக்யாதிபன், பாக்யகாரகன் இவர்கள் சுபக்ரஹ சம்பந்தம் அல்லது வீக்ஷணம் பெற்று சுப ஷட்வர்க்க மடைந்தாலும், சுபர்கள் மத்தியிலிருந்தாலும் புத்ர பாக்யத்தையும், பித்ரு ஸௌக்யத்தையுமடைவான்.

சூர்யன் முதலிய 7 கிரஹங்களும் பாக்ய ஸ்தானத்தில் இருக்க ஸௌபாக்யம், ராஜ்யம், அதிக தனம் இவைகளை அடைவான்.

பாக்யத்தில் இருக்கும் சந்த்ரன், செவ்வாய், புதன், சனி இவர்களின் பார்வை பெற்றாலும், பாக்யத்தில் இருக்கும் மற்ற கிரஹம் உச்சமாகி சுபர்களால் பார்க்கப்பெற்றாலும் அரசனாவான்.,

சூர்யன் சந்த்ரனுடன் 9-ல் இருக்க கண் வியாதி, துக்கம் ஐச்வர்யம் இவைகளை அடைவான்.

சூர்யன் செவ்வாயோடு 9-ல் இருக்க ராஜ ப்ரியனாவான்.

புதனோடுகூட சூர்யன் 9-ல் இருக்க சத்ரு பீடை, ரோகம், துக்கம் இவைகள் உண்டாகும்.

குருவுடன்கூட சூர்யன் 9-ல் இருக்க பித்ரு ப்ரீதியைச் செய்வான்.

சுக்ரனோடு கூட சூர்யன் 9-ல் இருக்க ரோகியாயும் தனிகனுமாவான்.

சனியோடுகூட சூர்யன் 9-ல் இருக்க ரோகியாயும், இவனுடைய தகப்பன் வயிற்றில் ரோகமுடையவனாகவுமாவான்.

பாக்யாதிபன் லக்ன கர்மாதிபர்களால் பார்க்கப் பெற்று நிம்மாசனம்சம் பெற்றால் தனவானாகவும், தர்மிஷ்டனாகவும், பித்ரு ஸௌக்யத்தை அடைபவனாகவுமாவான்.

பாக்ய ராசி அல்லது பாக்யாம்சத்தில் குரு வசித்து சுப சம்பந்தம் அல்லது வீக்ஷணம் பெற்றால் குருபக்தியுடையவனாகவும், சத்வ குணம் நிறைந்தவனாகவுமாவான்.

பாக்ய ஸ்தானம் குரு முதலியவர்களின் ஷட்வர்க்கத்தில் இருந்து அந்த ஸ்தானாதிபன் சுபரோடு சேர்ந்தால் குருவிடத்தில் பக்தி உடையவனுகவும், சுகியாகவுமாவான்.

பாக்யாதிபன் பாக்யத்திலும், சுக்ரன் 4-லும் இருந்தால் பாக்யத்தை அனுபவிப்பவனுவான்.

சுபரோடு சேர்ந்த சுக்ரன் நவமத்திலிருந்தால் நவமாதிப னுடைய தசையில் தன்புத்தியில் அதிக பாக்யம் உண்டாகும்.

லக்ன பாக்யாதிபர்கள் 4-லும், 4-ம் அதிபன் லாபத்திலும், பாக்ய ஸ்தானம் சுபவீக்ஷணம் அல்லது சேர்க்கை பெற்று இருந் தால் பாக்யத்துடன் கூடியும் புண்ய காரியங்களில் ஆசையுடைய வனுகவுமாவான்.

நவமாதிபன் 6-ல் இருக்க சத்ருக்கள் மூலம் பாக்யமுண்டாகும்.

சத்ரு ஸ்தானாதிபன் பாக்யத்தில் இருக்க சத்ரு பாக்யத்தை அபகரிப்பான்.

தனாதிபன் லாபத்திலும், லாபாதிபன் பாக்யத்திலும் வசித்து தசமாதிபன் பார்வை அல்லது சம்பந்தம் பெற அதிக பாக்யம் உண்டாகும்.

லக்னத்தில் இருக்கும் சுகாதிபன் பாக்யாதிபனுடன் சேர்ந்து குரு பார்வை பெற அரசனுக்கு வேண்டியவனுகவும், பாக்யத்தை அடைபவனுகவுமாவான்.

தன பாக்யாதிபர்கள் லாபத்தில் இருந்து புத்ர ஸ்தானத் தைப் பார்க்க மிகவும் அதிக பாக்யமடைபவனுவான்.

பாக்யாதிபன் ப்ராத்ரு ஸ்தானாதிபனுடன் சேர்ந்து சுபசம் பந்தம் அல்லது வீக்ஷணம் பெற்று சுபாம்சம் பெற ப்ராதா மூலம் பாக்யத்தைப் பெறுவான்.

பஞ்சமாதிபன் பாக்யத்தில் இருந்தாலும், பாக்யாதிபன் சேர்க்கை அல்லது பார்வை பெற்றாலும், பஞ்சம ஸ்தானத்தில் குரு வசிக்க புத்ரன்மூலம் பாக்யத்தைப் பெறுகிறான்.

தனம் அல்லது பாக்யத்தில் சந்த்ரன் அல்லது செவ்வாய் இருந்து பாக்யாதிபன் நீசனுகவுமானல் தகப்பன் தாரித்ரியத்தை அடைவான்.

பாக்ய ஸ்தானாதிபன் ஸ்வக்ஷேத்ரம், உச்ச க்ஷேத்ரம் இவை களில் இருந்து இவ்விதமே குரு பாக்யத்திலும் 4-ல் சுக்ரனு மிருக்க நீண்ட ஆயுளையும் பாக்யத்தையுமடைகிறான்.

நவமாதிபன் ஸ்வக்ஷேத்ரம், உச்ச க்ஷேத்ர மிவைகளிலிருந் லாபாதிபன் பாக்யத்திலுமிருக்க மேனமேலும் பாக்ய விருத்தியை அடைகிறான்.

தனாதிபன் லாபத்திலும், லாபாதிபன் பாக்யத்திலும், பாக் யாதிபன லக்னத்திலுமிருக்க பாக்யவானுவான்.

லக்னாதிபன் லாபத்திலும், லாபாதிபன் பாக்யத்திலும், பாக் யாதிபன் தனத்திலுமிருந்து தசமாதிபனின சேர்க்கை அல்லது பார்வை பெற்றால் பித்ரார்ஜித தனத்தையும், ஸ்வார்ஜித தனத் தையும் அடைகிறான்.

பாக்யாதிபன் அல்லது தனாதிபன பலவானைய தசமத்தில் இருந்தாலும், உச்ச க்ஷேத்ரம் சுபாம்சம் இவற்றிலிருக்க அதிக பாக்யவானுவான்.

லக்ன பாக்யாதிபர்கள் 4-லும், 4-ம அதிபன் சுபனைய் லாபத் தில் இருந்து சுபசம்பந்தம் வீக்ஷணம் பெற்றால் அதிக பாக்யத் துடன் கூடியவனுவான்.

பாக்யாதிபன் நான்கிற்குடையவன் லக்னாதிபன் இவர்களுடன் சேர்ந்து பலவானுகி தசமாதிபனின் யோகம் அல்லது வீக்ஷணம் பெற்றால் அதிக சுகம், சுவர்ணம், ஸௌக்யத்தை அளிக்கும் ஸ்ரஹம்-இவைகளை அடைவான்.

சுபக்ஷேத்ராம்சாதிபதி பாக்யத்தில் வசித்தாலும், பாக்ய ஸ்தா னம் பாக்யாதிபனால் பார்க்கப் பெற்றாலும், பாக்ய ஸ்தானத்திற்கு இரு பக்கத்திலும் சுபர்களிருந்தாலும் தர்மத்தில் ப்ரியமுள்ள வனுவான்.

தர்ம ஸ்தானத்தில் பாபி யிருந்து தர்மாதிபன் பாபியோடு சேர்ந்து கெட்ட ஷஷ்ட்யம்சத்திலும் இருக்க தர்மஹீனனுவான்.

நவமாதிபன் பலவானுகி கேந்த்ரம் அல்லது த்ரிகோணத்தில் இருந்து லக்னாதிபனால் லக்னம் பார்க்கப்பட கோரிய பலனை அடைவான்.

தசமாதிபன் குரு வசிக்கும் நவாம்சத்திலோ, த்ரிம்சாம்சத்திலோ அல்லது த்ரேக்காணத்திலோ இருக்க ஆசையற்றவனுவான்.

புதன் சராசி முதலம்சத்தில் இருந்து தர்மாதிபன் பலவானுகி குரு சுக்ரர்களின் சேர்க்கை அல்லது பார்வை பெற ஜபம் செய்வதில் பற்றுள்ளவனுவான்.

தர்மாதிபன் வைசேஷிகாம்சத்தில் அல்லது தசமாதிபன் தர்ம ஸ்தானத்தில் இருந்து புதன் பாராவதாம்சத்திலிருக்க பிரம்ம நிஷ்டாபரனுவான்.

குரு அல்லது சுக்ரன் தர்ம ஸ்தானத்தில் இருந்தாலும், ஸ்வக்ஷேத்ரம், உச்ச க்ஷேத்ரம் அல்லது அம்சத்திலிருந்தாலும், தர்மாதிபன் பலம் பெற்றிருந்தால் தர்மாத்யக்ஷனுவான்.

தர்மாதிபன் சுபனுல் பார்க்கப்பட்டு புத குரு சுக்ரர்களின் அம்சத்திலிருந்தாலும், 2 சுபக்ரஹங்களின் மத்யத்திலிருந்தாலும் தர்மத்தில் பற்றுடையவனுவான்.

நவமாதிபன் சுபனுடு சேர்ந்து பாப ஷட்வர்க்கம் பெற்று அல்லது பாப மத்யத்தில் இருந்து பாப விக்ஷணம் அல்லது சம்பந்தம் பெற தார்மிகன் போல் தோற்றமளிப்பான்.

தர்ம ஸ்தானம், தர்மாதிபன், தர்ம காரகன் இவர்கள் வசிக்கும் அம்சங்கள் சுபரோடு சேர்ந்து அல்லது பார்க்கப் பெற்றிருக்க நல்ல சித்தத்துடன் தர்ம காரியத்தைச் செய்வான்.

பலவானுன பாக்யாதிபன் த்ரிகோணுதிபன் வசிக்கும் நவாம்சத்தில் வசித்து குரு சுக்ரர்களின் சம்பந்தம் அல்லது பார்வை பெற ஜபம் செய்வதில் ஆசையுடையவனுவான்.

பாக்யாதிபனும், லக்னுதிபனும், பாராவதம் முதலிய அம்சம் பெற்று குரு பார்வை பெற தான தர்மங்களில் பற்றுதல் உடையவனுவான்.

லக்னம் அல்லது லக்னுதிபன், பாக்யாதிபனின் சம்பந்தம் அல்லது பார்வை பெற்றாலும், பாக்யாதிபன் கேந்த்ரம் அல்லது த்ரிகோணத்தில் இருந்தாலும், பாக்யாதிபன் நான்கிலும், கர்மாதிபன் கேந்த்ரத்திலும், விரயாதிபன் குருவோடு சேர்ந்தாலும்,

பஞ்சமாதிபன் பாக்யத்திலிருந்து தர்ம கர்மாதிபர்கள் கூடி லக்னுதிபனுல் பார்க்கப்பட்டாலும் தான தர்மம் செய்வதில் நிறைந்தவனுகிறுன்.

பாக்யாதிபனுடன் சேர்ந்த நவாம்சாதிபன் குரு, சுக்ரர்களின் சம்பந்தம் அல்லது பார்வை பெற்றாலும், பாக்யத்திற்கு இரு பக்கங்களிலும் சுபர் இருந்தாலும், பாக்யாதிபன் சுப ஷட்வர்க்கத்திலிருந்தாலும், குரு பக்தி உடையவனுவான்.

பாக்ய ஸ்தானம், பாக்யாதிபன், சூரியன் இவர்கள் சுபரின் சம்பந்தம் விக்ஷணம் பெற்றாலும், சுபர்களின் மத்தியில் இருந்தாலும் பித்ரு ஸௌக்யமுண்டு.

பாக்யாதிபன் அல்லது சூரியன் பாப சம்பந்தம் அல்லது விக்ஷணம் பெற்றாலும், பாப மத்தியில் இருந்தாலும் பித்ரு துக்கமேற்படுகிறது.

பாக்யாதிபன் பலவானுகி சுப வர்க்கத்திலிருந்து சூரியன் புதன் அல்லது சுபர்களின் சேர்க்கை அல்லது பார்வையை அடைந்தாலும், சூர்யன் கேந்த்ரம் அல்லது கோணத்திலும், சூரியனுக்கு 9-ல் சுபன் இருந்து லக்னத்தில் குரு இருந்தாலும் தகப்பனுக்கு அடங்கியவன் ஆவான்.

சத்ரு ஸ்தானுதிபன் பாக்யத்திலும், பாக்யாதிபன் சத்ரு ஸ்தானத்திலுமிருந்தால் பித்ரு பாக்யத்தை அழிப்பவனுகவும், துவேஷியாயுமாவான்.

பாக்யாதிபனும், சூர்யனும் சேர்ந்து வசித்தாலும் ஒருவர்க்கொருவர் பார்த்தாலும் தகப்பன் நீர்க்காயுள் உள்ளவனுகவும், பாக்யசாலியாகவுமாவான்.

பாக்யாதிபன் சுபனுய் ஸூர்யன் சுபரோடு சேர்ந்து இருந்தாலும், பாக்ய ஸ்தானத்தில் சுபனிருந்தாலும், தகப்பன்மூலம் சுகமுண்டு.

4, 6-க்கு அதிபர்கள் 9-ல் இருக்க தகப்பன் அன்ய ஸ்திரீகளிடத்தில் ஆசையுள்ளவனுவான்.

ஸூர்யன் செவ்வாய் சனி இவர்கள் 1, 5, 9, 12-ல் இருக்க பித்ரு நாசம்.

சனி செவ்வாய்கள் ஸூர்யனுக்கு 8-ல் இருந்து சுப விக்ஷண மும் இல்லாவிடில் பிதாவுக்கு மரணம் சம்பவிக்கும்.

விரயத்தில் சூர்ய சனிகளும், சப்தமத்தில் க்ஷீண சந்த்ரனு மிருக்க பிதாவுக்கு உடனே நாசமும் சுபர் பார்க்க 3 வருஷங்களில் பித்ரு நாசமு மேற்படுகிறது.

கர்ம ஸ்தானத்தில் சனியும், ரோக ஸ்தானத்தில் சந்த்ரனும், சப்தமத்தில் புதனுமிருக்க பிதாவுக்கு மரணம் உண்டாகிறது

ஸூரியன் சர ராசியில் இருந்து செவ்வாயால் பார்க்கப்பட பகலில் ஜனனமானால் தகப்பன் அன்ய தேசம் சென்றுவிடுவான்.

சந்த்ர லக்னத்திற்கு அஷ்டமத்தில் பாபி இருந்து அது சத்ரு ஸ்தானமாகி சத்ருவாலும் பார்க்கப்பட தகப்பனு அன்ய தேசத்தில் இருக்கையில், சிறு வயதில் தாய் இறப்பள்.

தகப்பன் ஜாதகத்தில் 5, 7, 10 இவைகளில் பிறந்தவன் தகப்பனுக் கடங்கியவனாவான்.

பிதாவின் லக்னத்திற்கு 2 அல்லது 4-வது ராசியை லக்ன மாகக் கொண்டு பிறந்தவன் பித்ரு துவேஷியாகவும், நிந்திக்கப் படுபவனாகவுமாவான்.

ஜன்ம லக்னம் அல்லது சந்த்ர லக்னம் பாபர்களின் மத்தியில் இருந்து, 7, 8-களில் பாபிகள் இருந்து பலிஷ்டர்களாய் சுப விக்ஷணம் பெறுவிட்டாலும், பாப க்ரஹம் பலிஷ்டமாகி நான்கி லும், 1, 7, 10 ஸ்தானங்கள் பாபருடன் சேர்ந்து சுபர் பார்வையு மில்லாமலிருக்க தாயும் சேயும் நாசமடைவர்.

4 அல்லது 9-ல் புத சுக்ரர்களிருந்தாலும், இரு பக்கத்திலும் சுபர்களிருந்தாலும், சுக்ரன் கோபுராம்சத்திலிருந்தாலும், குரு மூர்த்வம்சத்தில் இருந்தாலும், 2, 9-ல் ஸூரியனிருந்தாலும், பாக்யத்தில் சனியும், ராஹு நித்ரையை அடைந்துமிருந்தாலும், பாக்யத்திற்கு சுப க்ரஹ த்ருஷ்டி அதிகமிருந்தாலும் புண்யசாலி யாவான்.

சந்த்ர குஜர்கள் லக்னத்திலும், சனி 7-லும் இருந்தாலும், லக்னாதிபன் குஜனோடு சேர்ந்து பாபியோடு கூடின சந்த்ரன் 6-ல் இருந்தாலும், ஸூர்ய சந்த்ரர்கள் ஒரே அம்சத்தை அடைந்து

பாபர்களுடன் கூடி இருந்தாலும், அஷ்டமாதிபன் பாக்யத்தி லிருந்தாலும், செவ்வாயும் ஸூரியனும் ஒரே ராசியிலிருந்தாலும், சுகாதிபன் அல்லது சுக ஸ்தானம் பாபரோடு சேர்ந்து அல்லது பாபரால் பார்க்கப்பட்டாலும், பாபர்களின் மத்தியில் இரு தாலும், பாபிகள் சுக ஸ்தானத்திலும், சுகாதிபன துர்பலனுய் குளிகனோடு சேர்ந்திருந்தாலும், பாக்யத்தில் பாபி இருந்தாலும், பாக்யாதிபன் பாபியோடு சேர்ந்து க்ரூர ஷஷ்ட்யம்சத்தில் அல்லது பாபிகளின் மத்தியில் இருந்தாலும், சனி, ராஹு பாக் யததில் இருந்து குளிகன பார்வை பெற்றாலும், ராஹுவோடு சேர்ந்த சுகாதிபன் பாபியோடு சேர்ந்த குருவினால் பார்க்கப்பட் டாலும், விரயத்தில் சனி இருந்தாலும், சப்தமத்தில் சந்த்ர ஸூர்யர்களிருந்து சனி விக்ஷணம பெற்றாலும், க்ஷீண சந்த்ரன் செவ்வாய் சேர்ந்திருந்தாலும், குளிகன், தனுதிபன் இவர்கள் பாபியோடு கூடினாலும், குரு லக்னத்திலும், சனி 7-லும் இருந் தாலும், 6-ல் சந்த்ரன் செவ்வாய் பாபியோடு கூடி இருந்தாலும் பாபியாவான்.

கேது, ஸூர்யர்கள் லக்ன நவாம்சத்தில் இருந்தாலும், அம்ச லக்னதில் கேது குரு இருந்தாலும் சிவபக்தனுவான்.

பஞ்சம ஸ்தானம், ஸூர்யனோடு சேர்ந்தோ அல்லது பார்க் கப்பட்டோ இருக்க ஸூர்யன் சிவனை இவர்களிடம் பக்தி உள்ளவ னுவான்.

நவாம்ச லக்னத்தில் கேது சந்த்ரர்கள் இருக்க பார்வதியிடம் பக்தனுவான்.

நவாம்ச லக்னத்தில் ராஹு சுக்ரர்களிருக்க லக்ஷ்மிபக்தனு வான்.

நவாம்ச லக்னத்தில் புதன் சனிகளிருந்தாலும், சுகாதிபன் பஞ்சமத்தில் இருந்தாலும் விஷ்ணு பக்தனாகிறான.

விரயாதிபன் 2 அல்லது 8-ல் இருந்து பஞ்சமாதிபனின் சம்பந்தம் பெற ஸத்வ குணம் நிறைந்துள்ள தேவதையிடம் பக்தி யுள்ளவனுவான்.

நவாம்ச லக்னத்தில் கேது செவ்வாய்களிருக்க சுப்ரமண்ய பக்தனுவான்.

குரு வசிக்கும் அம்சாதிபன் குரு சுக்ரர்களால் பார்க்கப் பெற்றாலும், பஞ்சம ஸ்தானம் சுப ஸ்தானமாய் குருவின் சம்பந்தம் அல்லது வீக்ஷணம் பெற்றாலும், பாக்யாதிபன் ம்ருத்வம்சம் முதலியவைகளில் இருந்தாலும் குருவிடம் பக்தியுடையவனுகிறன்.

பஞ்சமத்தில் சந்த்ர சம்பந்தமிருக்க யக்ஷிணி பக்தனுவாள்.

பஞ்சமத்தில் குஜன் சம்பந்தமிருக்க சுப்ரமண்யர், பைரவர் இவர்களிடம் பக்திமானுவான்.

பஞ்சமத்தில் புதன் இருக்க எல்லா தேவதைகளிடத்தும் பக்தி உடையவனுவான்.

பஞ்சமத்தில் குரு இருக்க சாரதாதேவி பக்தனுகிறன்.

பஞ்சமத்தில் சுக்ரனிருக்க சாமுண்டாதேவி பக்தனுவான்.

பஞ்சமத்தில் சனி இருக்க ப்ரேதாசனி முதலிய தேவதைகளிடம் பக்தி உள்ளவனுவான்.

பஞ்சமத்தில் ராஹு இருக்க இம்சை புரியும் தேவதைகளிடம் பக்தி உடையவனுவான்.

பஞ்சமத்தில் சுக்ர சந்த்ரர்களிருக்க ஸ்த்ரீ தேவதைபிடம் பக்தி உடையவன் ஆவான்.

பஞ்சம ஸ்தானம் புருஷ க்ரஹ சம்பந்தம் பெற புருஷ தேவதையிடம் பக்தி உள்ளவனுவான்.

பாக்யாதிபன் கும்பாம்சத்தில் இருக்க குளம் வெட்டுபவனுவான்.

தசமாதிபன் கோபுராம்சத்தில் இருந்தாலும் தர்மாதிபன் ம்ருத்வம்சத்தில் இருந்து சுபவீக்ஷணம் பெற்றாலும் ஏரி வெட்டுபவனுவான்.

சுகாதிபன் 10-ல் இருக்க ஜீர்ணோத்தாரணம் செய்பவனுவான்.

புதன் குருவுடன் சேர்ந்து கோபுராம்சத்தில் இருந்தாலும், செவ்வாயுடன் சேர்ந்தாலும் நல்ல இடத்தைக் கட்டுவான்.

புதன் குரு கர்மாதிபன் இவர்கள் பலசாலிகளாயிருந்தாலும் பத்தில் புதனும், அவ்விட்டுக்குடையவன் 9 அல்லது சுபாம்சத்திலிருந்து சுபவீக்ஷணம் பெற்றாலும், 9-ம் இடம் உச்ச க்ஷேத்ரமாய் அங்கு புதன் இருந்து பாப வீக்ஷணம் பெறுமலிருந்தாலும், புதன் குரு கர்மாதிபன் இவர்கள் பலசாலிகளாய் சுபவீக்ஷணம் பெற்றாலும், யாகம் செய்பவனுவான்.

தசமாதிபன் தன் உச்ச க்ஷேத்ரத்தில் பாபரோடு சேர்ந்து அல்லது நீசாம்சம் பெற்று அல்லது 6. 8. 12-ல் இருக்க யாகமாரம்பித்த பிறகு இடையூறு செய்பவனுவான்.

10-ல் ராகு அல்லது சூரியன் இருந்தாலும், பூர்ண சந்த்ரன் அல்லது குருவிருந்தாலும், சுக்ரன் குரு இவர்கள் கேந்த்ரத்தில் சேர்ந்திருந்தாலும், தசமாதிபன் சுக்ரன் குரு இவர்கள் உச்ச க்ஷேத்ரத்தில் இருந்தாலும், புதன் அல்லது தர்மாதிபதி 12-ல் இருந்தாலும், சந்த்ரன் ஜலராசியாக ஆன 3-ல் இருந்து சுபவீக்ஷணம் பெற்றாலும், தர்மாதிபதி ஜலராசியான கேந்த்ரத்தில் வசித்து சுபவீக்ஷணம் பெற்றாலும், தர்ம ஸ்தானத்தை குரு பார்த்தாலும், அஷ்டமத்தில் புதன் இருந்து சுபவீக்ஷணம் பெற்றாலும், கங்கா ஸ்நான ப்ராப்தி ஏற்படும்.

தர்ம கர்மாதிபர்கள் சேர்ந்திருக்க புண்ய தீர்த்த யாத்திரை கிடைக்கும்.

9-ல் சுப க்ரஹ வீக்ஷணம் அதிகமாகி அவ்விட்டுக்குடையவன் கேந்த்ர லாப கோணங்களில் இருந்தாலும், சந்த்ர லக்னத்திற்கு 9க்குடையவன் கேந்த்ரத்திலிருந்தாலும், 9ம் இடத்திற்கு அதிகமான சுபவீக்ஷணம் அல்லது சம்பந்தமிருந்தாலும் மஹா யாத்திரை கிடைக்கும்.

4 க்ரஹங்கள் ஒரே ராசியில் இருக்க ஸம்யாஸ யோகம் ஏற்படுகிறது.

எந்தெந்த க்ரஹங்கள் பலசாலிகளாய் இருக்கின்றனரோ அந்தந்த க்ரஹங்களுக்குரிய ஸம்யாஸம் ஏற்படும்.

ஸூர்யனுல் தாபஸன், சந்த்ரனுல் காபாலிகன், செவ்வாயால் ரக்தபடன், புதனுல் ஆஜீவி, குருவினுல் த்ரிதண்டி. சுக்ரனுல் சக்ரதரன், சனியால் நக்னன் என்கிற ஸம்யாஸிகளாவார்கள்.

க்ரஹங்கள் அஸ்தமனமானால் அந்தந்த ஸங்யாஸத்தில் பக்தி மாத்ரம் ஏற்படும். ஸங்யாஸத்தை அளித்தக்ரஹம் யுத்தத்தில் தோல்வியை யடைந்தாலும், சந்த்ரன், ராஹுவுடன் கூடினாலும், குளிகன் க்ரூராம்சத்திலிருந்தாலும், லக்னாதிபன் சனியினால் மாத்ரம் பார்க்கப் பெற்றாலும் ஸங்யாஸத்தினின்றும் நழுவினவனுவன்.

சனி த்ரிம்சாம்சத்திலோ, சனி செவ்வாய்களின நவாம்சத்திலோ சந்த்ரன் வசித்து சனியால் பார்க்கப்பட்டாலும், லக்னாதிபன் சனி துர்பலர்களானாலும், ஸங்யாஸி ஆவான்.

நவாம்ச லக்னத்தில் கேது இருந்து சனி மாத்திரம் பார்க்க ஸங்யாஸயோகனுவான்.

குரு 6-லும் சூர்யன் 4-லுமிருக்க தபஸ்ஸில்லாத ஸங்யாஸி யாவான்.

சந்த்ரன், குரு, லக்னம் இவைகள் சனி வீக்ஷணம் பெற்று தர்மஸ்தானத்தில் குருவிருந்து ராஜ யோகத்தில் பிறந்தவன் பிரம்மகுப்தன் கணதன் இவர்களுக்கு சமமாக ப்ரசித்தனுவான்.

தர்மாதிபன் சுபனுடு சேர்ந்து வர்க்கோத்தமாம்சம் அல்லது வைசேஷிகாம்சத்தில் இருந்து க்ரூராதி ஷஷ்ட்யம்சத்தில் இல்லாமலுமிருக்க த்ருடமான பக்தி உடையவனுவான்.

தர்மஸ்தானத்தில் வசிக்கும் சுபர்கள் பாபாம்சத்தில் அல்லது க்ரூர ஷஷ்ட்யம்சத்தில் இருக்க டம்பத்தினால் தர்மம் செய்பவனுவான்.

தர்மஸ்தானத்தில் ராஹு சனிகள் இருந்து க்ரூராம்சத்தை குளிகன் பார்க்க தர்மாதிபன் க்ரூரராசி அல்லது க்ரூராம்சத்தில் இருக்க மிகக் கொடிய கார்யத்தைச் செய்பவனுவான்.

பந்தாவது பாவம்.

மேலும் பத்தாவதானால் காரியம் செய்வதில் சிறந்தவன், ஸத்தோஷம் உடையவன், கோள் சொல்பவன், அரசனிடத்தில் அன்புள்ளவன், சாதுக்களால் நிந்திக்கத் தக்கவன்.

வ்ருஷபம் பத்தாவதாகில் செலவுள்ள காரியத்தைச் செய்பவன், சாதுக்களிடத்தில் தயவுள்ளவன், பிராம்மணன், தேவதை விருந்தினர் இவர்களைப் பூஜிப்பவன், நல்ல ஞானமுடையவன், நல்லவர்களுக்கு ப்ரீதி செய்பவன்.

மிதுனம் பத்தாவதாகில் காரியத்தில் கருத்துள்ளவன், ஆசார்யர்களால் உபதேசிக்கப் பெற்றவன், கீர்த்தியோடு கூடினவன், ஜனங்களுக்கு ப்ரீதியான காரியத்தைச் செய்பவன், காந்தி உள்ளவன், விவசாயி.

கடகம் பத்தாவதாகில் தண்ணீர் பந்தல், பூந்தோட்டம், குளம் வெட்டுதல், வாபி கூப நிர்மாணம் இவைகளைச் செய்பவன்.

சிம்மம் பத்தாவதானால் பயங்கரமாயும், பாபமுள்ளதாயும், விகாரமுள்ளதாயுமுள்ள கார்யத்தைச் செய்பவன். எப்போதும் பராக்ரமத்தால் செய்யக்கூடிய போக்குவரத்துக் காரியங்களைச் செய்பவன். இகழத்தக்க கொலை முதலியவைகளைச் செய்பவன்.

கன்னி பத்தாவதாகில் புத்தியில்லாதவனுய் காரியத்தைச் செய்பவன், ஸ்திரீகளுடைய ஐச்வர்யத்தை மேற்பார்ப்பவன், தனவான், ரூபவதியான ஸ்திரீயை உடையவன்.

துலாம் பத்தாவதாகில் வியாபாரம் செய்பவன், நீதி உடையவன், சாதுக்களுக்குப் பிரியமானவன், தர்மாத்மா, உயர்ந்த பதவியை அடைபவன்.

வ்ருச்சிகம் பத்தாவதானால் கெட்டவர்களுக்கு சமமாக தேஜஸ்ஸு ப்ராம்மணர்களுக்கு பிடையையும், நீதியற்றதும், நன்கு ஜயிக்கப்பட்டதுமான காரியத்தைச் செய்பவன்.

தனுஸ் பத்தாவதானால் அடிமைத் தொழில், திருடல், பிறருக்குத் தீங்கை விளைவித்தல் இவைகளைச் செய்வான், சக்தி உடையவன், கீர்த்தியை உண்டாக்கக்கூடிய காரியத்தைச் செய்வான்.

மகரம் பத்தாவதாகில் பந்துக்கள், வித்வான்கள் இவர்களுடன் கூடியவன், பராக்ரமமுள்ளவன், தயை, தர்மம் இவைகளில்லாத துஷ்டர்களுக்குகந்த பராக்ரமத்துடன் செய்யக்கூடிய காரியத்தைச் செய்பவன்.

கும்பம் பத்தாவதாகில் யாத்ரையில் ஆசையுள்ளவன், ஸமாற்றுவதையே முக்யமான கார்யமாக உடையவன், வேத விருத்தமான தர்மத்தை உடையவன், இஷ்டமானவற்றில் ஆசை

மின் மிருதியால் விச்வாசமில்லாததும், ஜனங்களுக்கு விரோத மானதுமான காரியத்தைச் செய்கிறான்.

மீனம் பத்தாவதாகில் ஆசார்யனால் உபதேசிக்கப்பட்டவன், குலக் கிரமமாக வந்ததும், கீர்த்தி உள்ளதும், ஸ்திரமானதும், பல பல பிராம்மணர்களை ஆராதிப்பதில் அமைந்ததுமான கார் யத்தை சிரத்தையோடு செய்பவன்.

10-ம் பாவாதிபன் அந்தந்த பாவங்களில் இருப்பதால் ஏற்படும் பலன்.

லக்னத்தில் (சுபருடன் கூட) தாயிடத்தில் பிரியம், தகப்ப னிடத்தில் பக்தி இவைகளுடையவன், சுகி. (பாபர்களுடன் கூட) துக்கமுடையவன், துஷ்டன். தகப்பனுக்கு ஏமாற்றத்தை யளிப் பவன். ஆனாலும் சுகத்தை அடைகிறான்.

இரண்டில் (சுபருடன் கூட) பெற்றோர்களுக்கு சுகத்தைச் செய்பவன், கடினமும், தோஷம் உள்ளதுமான வார்த்தையைச் சொல்லுபவன். ஸ்தன்யபானம் செய்பவன். நல்ல சரீரம் உடைய வன், நல்ல காரியத்தை உடையவன், தனவான்.

மூன்றில் ஸ்வஜனம், தாயார் இவர்களுக்கு விரோதத்தைச் செய்பவன், எப்போதும் அடிமைத் தொழில் புரிபவன், மாமன் புத்ரன் இவர்கள் மூலம் உண்டாகக்கூடிய கொஞ்சம் சுகமுடை யவன், பெரிய காரியத்தில் சமர்த்தமான சரீரம் இல்லாதவன்.

நான்கில் சுகமுள்ளவன், பெற்றோர்களைக் காப்பாற்றுவதில் ஆசையுடையவன், ஜனங்கள் விஷயத்தில் தாபத்தை உண்டாக் குபவன், ப்ரபுவினிடமிருந்து கிடைத்த லாபத்தால் அலங்காரம் செய்துகொள்பவன்.

ஐந்தில் அழகான காரியத்தைச் செய்பவனாகவும், அரசனிடம் இருந்து லாபமடைபவனாகவும், போகியாகவும் நல்ல கான வித்தை யில் சாமர்த்தியமுடையவனாகவும், சிறிது சுகமுள்ளவனாகவு மாகிறான்.

ஆறில் ராஜ விரோதம் செய்பவனும், கலகம் புரிபவனும், அதிக காமம் உடையவனும் ஆவான். இவன் சத்ரு கணங்களி லிருந்து பிழைத்து இருந்தால் பாக்யங்களுடன் வசிப்பான்.

ஏழில் புத்ரனுடையவனும், அதிக ரூபவானும், தகப்ப னின் ஆசைநாயகியிடம் பக்தியுடையவனும், ஸ்திரீகளுக்கு எப்போதும் பிரியமுள்ளவனுமாகிறான்.

எட்டில் ஏமாற்றக்கூடிய பொய் சொல்பவன், கபடி, திருட்டில் ஸமர்த்தன், தகப்பனுக்கு உபத்ரவத்தையும், கஷ்டத்தையும் எப்போதும் செய்பவன். அற்பமான ஜீவிதத்தையுடையவன்.

ஒன்பதில் விருத்தி உடையவன், அழகுள்ளவன், நல்ல சகோ தரன், சிநேகிதன், பராக்ரமம் இவைகளுடையவன், உண்மை யான வார்த்தையுடையவன், யசஸ்வி.

பத்தில் தகப்பனுக்கு சௌக்யத்தைக் கொடுப்பவன், சுபத் தைச் செய்பவன், தாய் வம்சத்தில் சுகியாகவும், ஸமர்த்தனாகவும், ப்ரசித்தனாகவும், அரசனின் கௌரவம், ஐச்வர்யம் இவை களோடு கூடியவனாகவுமாகிறான்.

பதினொன்றில் விஜயம், லாபம், ஸ்திரீகள், புத்ரன், புத்ரி, ப்ருத்யர்கள் இவர்களுள்ளவனாவான்.

பன்னிரண்டில் ராஜ காரியத்தைச் செய்பவன், ஸ்வய வீர்யம் உடையவன், பித்ரு ஸௌக்யமில்லாதவன், குடிலமான புத்தி, அன்ய தேச வாசம், அதிகச் செலவு செய்தல், இயற்கை யழகு இவைகளை உடையவன்.

பார்வையின் பலன்.

சூரியன் பார்க்க கார்ய சித்தி உடையவன், இளவயதிலேயே மாத்ரு வியோகமேற்படும். ஸ்வக்ஷேத்ர, உச்ச க்ஷேத்ரங்களில் இருந்து பார்க்க தாய்க்கு சுகம் ஏற்படும்.

சந்த்ரன் பார்க்க பசு முதலிய நாற்கால் பிராணிகள் மிகுந்த வம்சத்தில் ஜீவிகை உடையவன், புத்ர, தார ஐச்வர்யங்களால் சௌக்யத்தை அடைபவன், தகப்பன், பந்து, சுகம், தர்மம் இவைகளில்லாதவன்.

செவ்வாய் பார்க்க கலபமாக எல்லாவித கார்யங்களையும் முடிப்பவன், செவ்வாய் தசை மூன்றாவதாக வந்தால் சுகவுருத்தி, பாக்யப் பெருக்கு இவை உண்டாகும்.

புதன் பார்க்க வேலை செய்து பிழைப்பவன், கவி, அரசனுல் கொண்டாடப்படுபவன், ஸௌக்யமுள்ளவன், தகப்பன் வழி வந்த தனத்தை உடையவன், முயற்சி உடையவன்.

குரு பார்க்க ராஜபவனத்தில் கார்ய ஸித்தி உடையவன், புத்ர, தார, தனங்களுடையவன், சுகமுள்ளவன, உப்பரிகையுள்ள கிருஹத்தை யுடையவன், முன் பிறந்தவர்களைக் காட்டிலும் உயர்ந்தவனுவான்.

சுக்ரன் பார்க்க தன் ஊரில் அரசாங்க வேலை கிடைக்கும், புத்ர, பந்துக்கள் மூலம் சுகத்தை அடைபவன், தலைவலி உடையவன்.

சனி பார்க்க தகப்பனின் நாசத்தை உடையவன், தாய்மூலம் சிறிது சுகத்தை அடைபவன், அல்பாயுள் உடையவன், பிழைத்தால் பாக்யத்தோடு இருப்பவன்.

ராகு பார்க்க எல்லாக் காரியங்களும் கலபமாய் ஸித்திக்கும், இளவயதில் தகப்பன் மரணமடைவான், தாய்மூலம அல்ப ஸௌக்யம்.

சந்த்ர லக்னத்தில் இருந்து நசம ஸ்தானத்தில் சூர்யாதி க்ரஹங்கள் இருப்பதின் பலன்.

சூர்யன் வசிக்க: யுத்தம் செய்பவன், ஐச்வர்யங்கள் நிறைந்தவன், மேலான சுபாவமுடையவன், பரந்த நோக்குடையவன், எல்லோராலும் ஆச்ரயிக்கப்படுபவன், விரும்பிய பொருள்களை பூரணமாக உடையவன்.

செவ்வாய் இருக்க: பிடிவாதம் உடையவன், போக சாமக்ரி களில் ஆசையுள்ளவன், கொடியவன், வேடர்கள் போன்ற நடத்தை உடையவன்.

புதன் வசிக்க: வித்வான், தனவான், சாஸ்த்ரஜ்ஞன், அரசனுக்கு அபிமதன், ப்ரஸித்தி உடையவன், அநேக சில்பங்கள் அறிந்தவன், புதிது புதிதாகத் தோன்றும் புத்தியை உடையவன்.

குரு இருக்க: எல்லாக் காரியத்திலும் நல்ல பலனை அடைபவன், தர்மத்தில் நோக்குள்ளவன், தனவான், உயர்ந்த நடத்தை உடையவன், மந்திரி, ப்ரஸித்தி உள்ளவன்.

சுக்ரன் வசிக்க: ஸௌபாக்யம், அழகு, தனம், கார்ய ஸித்தி, ராஜ வெகுமானம் இவைகளை உடையவனுவான்.

சனி வசிக்க: வியாதி, ஏழ்மை, துக்கம், சந்ததியின்மை, காரியங்களில் பயம் இவைகளை அடைவான்.

சூரியனும் செவ்வாயும் சேர்ந்து வசிக்க வேலைக்காரன். காமம், துக்கம், மதம் இவைகள் நிறைந்தவன், சோதிடம், லக்ஷணம், தந்த்ரம் இவைகளை அறிபவன்.

சூரியனும் புதனும் சேர்ந்து வசிக்க வஸ்த்ராலங்காரங்களை உடையவன், வியாபாரம் செய்பவன், தண்ணீர்மூலம் ஜீவிப்பவன்.

சூரியனும் குருவும் சேர்ந்து வசிக்க கார்ய ஸித்தி, ராஜவெகுமானம், சௌர்யம், பூஜ்யதை, ப்ரஸித்தி, தன்வசமான புத்தி இவைகளை உடையவன்.

சூர்யனும் சுக்ரனும் சேர்ந்து இருக்க தன் பந்துஜனங்களால் ஆச்ரயிக்கப்படுபவன், ஸ்திரீகளை ஆச்ரயிப்பதன்மூலம் தனப் பெருக்கையுடையவன், அழகுள்ளவன், ராஜாவிற்கு வேண்டியவன்.

சூர்யனும் சனியும் சேர்ந்து வசிக்க மதம், பந்தனம், இவைகளை உடையவன், கூலி வேலை செய்பவன், தரித்ரன், துஷ்டன், நிருடப்படுபவன், அலறுபவன்.

செவ்வாய் புதன் சேர்ந்திருக்க கருணையற்றவன், அஸ்த்ர கலை அறிந்தவன், அதனுலேயே ஜீவிப்பவன், சூரன்.

செவ்வாய் குரு சேர்ந்திருக்க சேனாபதி, மித்ரர் மூலம் தன லாபமடைபவன், சிநேஹிதர்மூலம் ஜீவனமுள்ளவன், பாக்யசாலி.

செவ்வாய் சுக்ரன் சேர்ந்திருக்க அன்ய தேசங்களில் சஞ்சரிப் பதில் ஆசையுள்ளவன், ஸ்வர்ணம், முத்து இவைகளாலும் அல்லது ஸ்திரீயை ஆச்ரயிப்பதாலும் ஜீவிப்பான்.

செவ்வாய் சனி சேர்ந்திருக்க பிடிவாதமுடையவன், தாழ்ந்தவன், காரியங்களில் முயற்சி உடையவன், வியாதி உள்ளவன்.

புதன் குரு சேர்ந்திருக்க தனவான், ராஜபூஜ்யன், தர்மவான், தலைவன், ப்ரஸித்தன்.

புதன், சுக்ரன் சேர்ந்திருக்க சிநேஹிதர்களுடையவன், படிப்பு ஸ்நேஹி, தனம் இவைகளின் ஸௌக்யமுள்ளவன், மந்திரி அல்லது, ஒரு தேசத்திற்கு நாயகனுவான்.

புதன் சனி சேர்ந்திருக்க மண் சாமான்கள் செய்பவன், ப்ரஸித்தி பெற்றவன், படிப்பு சொல்லிக் கொடுப்பவன், புத்தகம் எழுத்து, சித்திரம் இவைகளை எழுதுபவனுவான்.

குரு சுக்ரன் சேர்ந்திருக்க அரசனிடத்தில் முக்யமான வேலைக்காரன், ப்ராம்மணர்களின் தலைவன், துக்கமில்லாதவன் வித்தைகளை சொல்லித் தருபவன், ஸமர்த்தன்.

குரு சனி சேர்ந்து வசிக்க தாழ்ந்த ஸ்வபாவம் உடையவன், துக்கத்தை உண்டுபண்ணுபவன், ப்ரஸித்த கடத்தை உடையவன், ஸ்திரமான இடமுள்ளவன், நிலைத்த காரியமுள்ளவன்.

சுக்ரன் சனி சேர்ந்திருக்க சித்திரம் எழுதுதல், வாசனத்ரவ்ய வியாபாரம், வைத்யம், நீலச் சாயமேற்றுதல், மாவாக அரைத்தல்—இத்தொழில்களைச் செய்பவன்.

சூரியன் செவ்வாய் புதன் இவர்கள் சேர்ந்து வசிக்க பாக்யவான், முக்யமானவன், எல்லோராலும் கொண்டாடத் தக்கவன், பித்ரு ஸமன்.

சூரியன் செவ்வாய் குரு இவர்கள் சேர்ந்திருக்க பாக்யவான், சத்ருக்களை ஜயிப்பவன், ஐச்வர்யமுடையவன்.

சூரியன் செவ்வாய் சுக்ரன் இவர்கள் சேர்ந்திருக்க கொடியவன், பிடிவாதமுடையவன், பிறர் சொத்தைத் திருடுவதில் ஸமர்த்தியமுடையவன்.

சூரியன் செவ்வாய் சனி இவர்கள் சேர்ந்திருக்க கொடிய காரியத்தில் ஆசையுடையவன், மூடன், துஷ்டன், பாபச் செயலை உடையவன், துர்வ்ருத்தன்.

சூர்யன் புதன் குரு இவர்கள் சேர்ந்திருக்க வித்வான், அழகுள்ளவன், தார்மிகன், சுற்றத்தாரிடம் பிரியம் உள்ளவன்.

சூர்யன் புதன் சுக்ரன் இவர்கள் சேர்ந்திருக்க சுறுசுறுப்பு உடையவன், தர்மம் பற்றுள்ளவன், கோபமில்லாதவன், அவமதிக்கப்படாதவன், ஸௌபாக்யமுள்ளவன், வஸ்த்ரங்களால் நிறைந்தவன்.

சூர்யன் புதன் சனி இவர்கள் சேர்ந்திருக்க கொடியதும், நிலையற்றதுமான சித்தமுடையவன், கெட்ட ஸ்வபாவமுடையவன், அக்னி, ஆயுதங்களின் காயமுள்ளவன்.

சூர்யன் குரு சுக்ரன் இவர்கள் சேர்ந்திருக்க ஸௌபாக்யவான், வித்யையினால் சம்பாதிக்கப்பட்ட தனம் உடையவன், தர்மத்தில் ஆசையுள்ளவன், சுகானுபவத்தை உடையவன்.

சூர்யன் குரு சனி இவர்கள் சேர்ந்திருக்க எல்லோராலும் கொண்டாடத் தக்கவனுகவும், நன்னடத்தையில்லாதவனுகவும், தைர்யவானுகவுமாவான்.

சூர்ய சுக்ர சனிகளிருக்க உலோபி, ஆசையுடையவன், ஜனங்களால் தள்ளப்பட்டவன்.

செவ்வாய் புதன் குரு இவர்கள் சேர்ந்திருக்க தர்மத்தில் நோக்குடையவன், சுற்றத்தார், வேலைக்காரர்களுடையவன், படிப்பு, பொருள் இவைகளை உடையவன்.

செவ்வாய் புதன் சுக்ரன் சேர்ந்திருக்க நல்ல சில்பத்தில் ஆசை, மாலை தயாரித்தல், பொன் வேலை செய்தல்—இவைகளைச் செய்பவனுகவும், ஜனங்களுக்கு அபிமதனுகவுமாவான்.

செவ்வாய் புதன் சனி சேர்ந்திருக்க அதர்ம ஸ்வபாவம், தூக்கத்தில் விருப்பம், பலம், ப்ரஸித்தி இல்லாமை, இவைகளை அடைகிறான்.

செவ்வாய் குரு சுக்ரன் சேர்ந்திருக்க பொருள், சௌர்யம், தேவ ப்ராம்மண பூஜையில் விருப்பம் இவைகளை உடையவனுவான்.

செவ்வாய் குரு சனி சேர்ந்திருக்க படிப்பு, பொருள், சுற்றத்தார் இவைகளற்றவனுகவும், இகழத்தக்கவனுகவும், சுகமற்றவனுகவும், அங்கஹீனனுகவும் ஆவான்.

செவ்வாய் சுக்ரன் சனி சேர்ந்திருக்க மந்தி, உயர்ந்ததன்மை, இதரர்களுடைய தர்மத்தில் பற்றுள்ளவன், தனிகன், பல காரியங்களைச் செய்வதில் ஆசையுள்ளவன்.

புத குரு சுக்ரர்கள் சேர்ந்திருக்க (சுக்ர ராசிகளான வ்ருஷப துலாங்கள் பத்தாமிடமாவதில்) சகல நன்மைகளும் உண்டாகும். (மற்றைய ராசிகளில்) வியாதி யேற்படும்.

புதன் குரு சனி சேர்ந்திருக்க எழுத்து வேலைகள், சித்திரம், காவ்யங்களில் ஆசை, ஐச்வர்யம், அடங்கின பல வேலைக்காரர்கள், அலைவதில் பிரியம், நல்ல ரூபம் இவைகளை உடையவனுவான்.

புதன் சுக்ரன் சனி சேர்ந்திருக்க சில்பத்திலும், சாஸ்திரத்திலும் நல்ல அறிவு, தோஷமில்லாமை, அன்னிய நாடுகளுக்குப் போவதில் ஆசை, ஏதாவது காரியம் செய்துகொண்டே இருத்தல், எல்லோருக்கும் அபிமதமாதல் இவைகளை அடைவான்.

குரு சுக்ரன் சனி சேர்ந்திருக்க வித்வான், தர்மிஷ்டன், தயையுடையவன், உண்மையுடையவன்.

சூர்யன் செவ்வாய் புதன் குரு சேர்ந்திருக்க சூரன், வ்ரணமான அங்கங்களை உடையவன், தயையோடு கூடியவன், கற்காரியங்களில் ஆசையுடையவன், பாக்யவான்.

சூர்யன் செவ்வாய் புதன் சுக்ரன் சேர்ந்திருக்க மாலை தயாரித்தல், எழுத்து வேலை, கட்டடம் கட்டுவது இவைகளில் ஆசையுடையவன்.

சூர்யன் செவ்வாய் புதன் சனி சேர்ந்திருக்க தனம், வாஹனங்களோடு கூடியவன்.

சூர்யன் புதன் குரு சுக்ரன் சேர்ந்திருக்க ம்ருதுவான ஸ்வபாவத்தையுடையவன், இகழத்தக்க காரியத்தை உடைய பிதாவை உடையவன், வ்யவசாயி.

சூர்யன் புதன் குரு சனி சேர்ந்திருக்க கபடி, கொடியவன், ஏமாற்றுவதில் எண்ணமுள்ளவன்.

சூர்யன் புதன் சுக்ரன் சனி சேர்ந்திருக்க கடினமான ஸ்வபாவத்தை உடையவன், நல்ல பாக்யசாலி, நன்றாகப் பேசுபவன், பயிர்த் தொழிலில் ஆசையுடையவன்.

சூர்ய குரு சுக்ர சனிகள் சேர்ந்திருக்க வெளியிடங்களில் சுற்றும் இயல்புடையவன், பல செய்கைகளை உடையவன்,

செவ்வாய் புதன் குரு சுக்ரன் சேர்ந்திருக்க ஸாமர்த்தியம் உடையவன், சௌர்யம் உள்ளவன், ஜயிக்க முடியாதவன்.

செவ்வாய் புதன் குரு சனி சேர்ந்திருக்க மலினன், முயற்சி உள்ளவன், யுத்தத்தில் எதிரியை நாசம் செய்பவன்.

செவ்வாய் புதன் சுக்ரன் சனி சேர்ந்திருக்க வித்யாவான், சூரன், விசால அங்கங்களை உடையவன்.

செவ்வாய் குரு சுக்ரன் சனி சேர்ந்திருக்க சௌர்யமுடையவன், குடும்பி, தனவான்.

புத குரு சுக்ர சனிகள் சேர்ந்திருக்க சாந்தமான மனது உடையவன், மிக மேதாவி, உலகத்திற்கு அபிமதன்.

பாப கிரஹங்கள் இருந்து சுப க்ரஹ வீக்ஷணம் பெற்றால் வைத்யன், புரோஹிதன், கணக்கன், ஏமாற்றுவதில் ஆசையுடையவன், பாப க்ரஹத்தின் பார்வை பெற்றால் அநேகமாக நன்மை உண்டாகாது.

பாப கிரஹங்கள் லக்னம் சந்த்ரன் இவர்களுக்கு 3, 6-ல் இருக்க நன்மையைச் செய்வார்கள். 8, 12-ல் இருக்க நன்மை செய்ய மாட்டார்கள். லக்னத்திலிருந்தால் அதிகமாக நிந்கை இழைப்பர்.

லக்னம் சந்த்ரன் இவற்றுள் அதிக பலமுள்ளதின் தசமஸ்தானத்தினுலாவது அல்லது எந்த வர்க்கம் மிகப் பலமுள்ளதோ அதன் அதிபதியைக் கொண்டாவது தொழில் நிர்ணயிக்க வேண்டியது.

ராசி நவாம்சங்களில் தசம ஸ்தானமாக ஏற்படும் மேஷம் முதலிய ராசிகளின் பலன்.

மேஷம் :— தோட்டம் அமைத்தல், குழந்தை வளர்ப்பு, பயிர்த்தொழில், ரஸவாதம், வியாபாரம், சூர்யனை உபாசித்தல், தூது போதல் இவை முதலியவைகளால் ஜீவிப்பான்.

வ்ருஷபம் :—வண்டி, பிராணி, பக்ஷி, மிருகங்களின்மூலம் ஜீவிப்பான். ஜலமில்லாத இடத்தில் தான்யங்களைச் சேர்த்து அதன்மூலம் லாபத்தை அடைவான்.

மிதுனம் :—கப்பல் வியாபாரி, முத்து சங்கு, பவழம் இவைகளை பூர்ணமாக உடையவன், எழுத்து, கணக்கு வேலைகள் மூலம் ஜீவனம் செய்வான்.

கடகம் :—ஆயுத வேலைகளில் ஸமர்த்தன், முத்து, முள் இவைமூலம் ஜீவிப்பான், வேட்டையாடுவது, ரஸவாதம் செய்தல், அந்ய தேசத்தில் ஸஞ்சாரம் இவைகளை யுடையவன்.

சிம்மம் :—தங்கம் வெள்ளி போன்ற ரத்னங்களைச் சேர்ப்பவன், பயிர் செய்வதில் ஆசையுள்ளவன், பசு விஷயல் ஜீவிப்பவன், நெல் வியாபாரி.

கன்னி :—வண்டிகள்மூலம் ஜீவிப்பவன், ரத்னம், தங்கம் இவைகளின் வேலைகளைச் செய்பவன், வாஸனை திரவியம், வஸ்த்ரம் இவைகள் ஸம்பந்தமான தொழில், ஸங்கீதம், சில்பம், படம் வரைதல் இவைகள் மூலம் ஐச்வர்யம் உள்ளவன்.

துலாம் :—அனுஷ்டிக்கத் தக்கது, உபதேசிப்பது, தங்கம் மாற்றுவது, சிநேஹிதர்கள்–மூலம் பலவித வியவஹாரங்களை உடையவனுவான்.

வியாபாரம், பசு, எருமை மூலம் ஜீவனம், பலவித சாமான்கள் விற்பனை, ஜலத்திலிருந்து உண்டாகும் வஸ்துக்களின் வியாபாரம் இவைகளை யுடையவனுவான்.

தனம் தான்யம், கிழங்கு முதலிய வியாபாரம், பழம், கிழங்கு முதலியவைகளைப் பயிரிடல் இவைகளை உடையவனுகவும், வித்வானுகவும் ஆவான்.

விருச்சிகம் :—ஸ்திரீமூலம் ஐச்வர்யம், பயிரிடுவதில் ஆசை எப்போதும் முயற்சி செய்தல், அரசனை ஸேவித்தல் இவைகளை உடையவனுகவும், பாபியாகவுமாவான்.

சீர வைத்யத்தில் பற்றுதல், லோஹங்களால் செய்யப்பட்ட பொருள்கள் மூலம் வியாபாரம், தான்யங்களின் கொள்முதல் விற்பனை இவைகள்மூலம் ஜீவிப்பான்

தனுஸ் :—மந்திரி, அரசன், கோட்டை முதலியவைகளைக் காப்பாற்றுபவன், பசு, குதிரை முதலியவைகளை ரக்ஷிப்பவன், மரவியாபாரம் செய்பவன், சகுன பலன்களை உபதேசிப்பவன், யந்திரங்களை சிர்படுத்துவது, கணக்கெழுதுதல், வைத்யம் இவைகளால் ஜீவிப்பவன்.

மகரம் :—முத்து, பவழம் முதலிய ஜலத்தில் உண்டாகும் வஸ்துக்களின் வியாபார மூலம் தனவானுவான், கட்டில் செய்தல், தோட்டமமைத்தல், ரஸாயனம் தயாரித்தல் இவைகள் மூலம் ஜீவிப்பான்,

கும்பம் :—ஆயுதங்கள், வெடிகள், குண்டுகள், (Bombs) இவைகளைத் தயாரித்தலாலும், திருடுவதாலும், ஸ்திரீகளுக்கு ஏவல் செய்பவர்களாகவும், சுமை தூக்கல், தோள், கை பலங்களால் செய்யக்கூடிய காரியங்கள் இவைகளாலும் ஜீவனம் செய்வான்.

மீனம் :—ஆயுதங்கள், ஜலம், தோட்ட வேலை, குதிரை வியாபாரம் இவைகள் மூலம் ஜீவனம் நடக்கும்.

1, 4, 7, 10 இடங்களில் இரண்டிரண்டு கிரஹங்கள் சேர்ந்து வரிப்பதன்மூலம் ஏற்படும் பலன்கள்.

சூர்ய சந்த்ரர்கள் லக்னத்தில் இருக்க மாத்ரு பித்ருக்கள் மூலம் ஏற்படும் துக்கத்தால் பிடிக்கப்பட்டவன், மானம், புத்ரன், தனம் இவைகளில்லாதவன், அவமதிக்கப்படுபவன், துக்க முடையவன்.

சுக்ரன் இருக்க பந்து, புத்ர சுகங்கள் இல்லாதவன், ஏழ்மையானவன், மந்த சுபாவமாய் இருப்பவன்.

7-ல் இருக்க மித்ரன், புத்ரன் இவர்களற்றவன், ஸ்திரீகளால் இகழப்பட்டவன், துக்கம் உடையவன்.

10-ல் இருக்க அழகிய சரீரமுடையவன், ஸ்நேஹத் தலைவன், ஆடம்பரத்தில் ஆசையுள்ளவன், தயையற்றவன், வக்ர ஸ்வபாவ முடையவன், சத்ருக் கூட்டத்தை நாசம் செய்பவன்.

சூர்ய செவ்வாய்கள் லக்னத்தில் இருக்க பித்த ப்ரகிருதி, சண்டையில் சமர்த்தன், கோபி, காயமான சரீரம் உள்ளவன், கொடிய சுபாவமுடையவன், மறைவில் இருந்து நிந்திழைப்பவன், பலசாலி.

சுக்ரன் இருக்க அனைவராலும் ஒதுக்கப்படுபவன், பந்து, தனங்கள், சுகம் இல்லாதவன், கலக்கமடைபவன்.

ஏழில் இருக்க பத்னி விரஹத்தால் துக்கத்தை அடைபவன். ஸ்த்ரீ நிமித்தம் அவமானம் அடைபவன். வெளியூர் செல்வதில் ஆசையுடையவன்.

பத்தில் இருக்க பயனில்லாத காரியத்தை ஆரம்பிப்பவன், கூலி வேலை செய்பவன், நடுக்கமுடையவன், அரசனை ஸேவிப்பவர்களுள் முக்யமானவன், அங்கஹீனன்.

சூர்ய புதர்கள் லக்னத்தில் இருக்க மேதாவி, அதிகம் பேசுபவன், கெட்டியான அவயவங்களை யுடையவன். சூர்களுக்கு அபிமதமானவன், புத்திமான், நீண்ட ஆயுளுள்ளவன்.

நான்கிலிருக்க ராஜாவுக்கு சமமானவன், ப்ரசித்தன், காவியங்களை அறிபவன், நிறைந்த ஐச்வர்யம் உள்ளவன். பெருத்த சரீரமுடையவன், வளைந்த மூக்கை உடையவன்.

ஏழில் இருக்க இம்சை பந்தனம் இவைகளை செய்பவன், பிறர் வார்த்தையைக் கேட்பவன், அதிகமாகப் பணத்தில் ஆசையில்லாதவன், ஸ்த்ரீ சுகமில்லாதவன், திருடன்.

பத்தில் இருக்க ப்ரசித்தி அடைந்தவன், யானை குதிரை இவைகளுக்கதிபன், அரசனுகவுமாவான், (சூர்ய புதர்கள் நீச ராசியில் இல்லாமலிருக்க வேண்டும்).

குரு சூர்யர்கள் லக்னத்தில் இருக்க நல்ல குணம் உள்ளவன், மந்த்ரி அல்லது ஸைன்யாதிபதியாவான், ஸாது, வித்யை, பொருள், சுகம் இவைகளுள்ளவனுவான். ப்ரஸித்தன்.

நான்கில் இருக்க வேத நீதி காவ்யங்களில் ஆழ்ந்தவன், எல்லோருக்கும் அபிமதன். பந்து ஜனங்கள் நிறைந்தவன், ப்ரியமாகப் பேசுபவன், நல்ல ஆசாரமுள்ளவன்.

ஏழில் இருக்க அதிக காமத்தால் ஸ்த்ரீகளால் ஜயிக்கப் படுபவன், தகப்பனிடத்தில் த்வேஷமுள்ளவன், சுவர்ணம், ரத்னம், வெள்ளி, முத்து இவைகளை யுடையவன், நல்ல சரீரமுள்ளவன்.

பத்தில் இருக்க இழிகுலத்தில் பிறந்தவனுயினும் நல்ல கீர்த்தி, ஸௌக்யம், கொண்டாடப்படுதல், விபவம் இவைகளை யுடையவனுகவும், அரசனுகவுமாவான்.

சூர்ய சுக்ரர்கள் லக்னத்தில் இருக்க கலகத்தில் ஆசையுடையவன், வணக்கமில்லாதவன், துர்நடத்தையுடையவன், அதிக துக்கம் உடையவன், கீழான சுபாவமுடையவன், காமம், களத்ரம், பொருள் இவைகள் இல்லாதவன்.

நான்கில் இருக்க அடிமை வேலை செய்பவன், துக்கி, எல்லோராலும் வெறுக்கப்படுபவன், தரித்ரன்.

ஏழில் இருக்க ஸ்த்ரீகளால் அவமதிக்கப்படுபவன், தனமில்லாதவன். ஸ்தூல சரீரமுடையவன், வெறுக்கப்படுபவன், மலை, காடுகளில் ஸஞ்சரிப்பவன்.

பத்தில் இருக்க வியவஹாரங்களில் ஆசையுடையவன், மந்த்ரி, சாஸ்த்ரம், கலைகள் இவைகளில் தேர்ச்சியடைந்த புத்தியுள்ளவன், தன வாஹன ஸௌக்யமுடையவன்.

சூர்ய சனிகள் லக்னத்தில் இருக்க இகழப்பட்டவனின் புத்ரனுவான், கெட்ட தொழிலுடையவன், துர்புத்தி, கெட்ட நடத்தையுடையவன்.

நான்கில் இருக்க தாழ்ந்த சுபாவம் உடையவன், ஏழ்மையானவன், சுற்றத்தாரால் இகழப்பட்டவன்.

ஏழில் இருக்க மந்த புத்தி, சோம்பேறி, பாக்யமில்லாதவன், ஸ்த்ரீ, தனங்களில்லாதவன், வேட்டையில் ஆசையுடையவன், மூர்க்கன்.

பத்தில் இருக்க வேலைக்காரன், அன்ய தேசம் செல்பவன், அரசனிடமிருந்து கிடைக்கும் பொருளுடையவனுவான், திருடர்களால் அபகரிக்கப்படும் பொருளையுடையவன், உயர்ந்த குதிரைகளை யுடையவன்.

சந்த்ரன் செவ்வாய்கள் லக்னத்திலிருக்க ரத்தம், உஷ்ணம், பித்தம் இவைகளால் பிடிக்கப்படுபவன், அரசன், கொடிய சுபாவமுடையவன்.

நான்கிலிருக்க துக்கமுடையவன், தனமற்றவன், ஸௌக்யம், புத்ரன், பொருள், சுற்றம் இவைகளில்லாதவன், குறைந்த அவயவமுடையவன்.

ஏழில் இருக்க அல்பன், பரத்ரவ்யத்தில் ஆசை, அதிகம் பேசுதல், பொய் வார்த்தை, அருவை இவைகளை உடையவனு வான்.

பத்தில் இருக்க குதிரை, யானை, காலாட்படை இவைகள் அதிகமுள்ளவனுகவும், பராக்ரமசாலியாகவுமாவான்.

சந்த்ர புதர்கள் லக்னத்தில் இருக்க சுகம், புத்தி, பலம், ஸௌபாக்யம், அழகு, நன்ருய் பேசுதல், வல்லமை இவைகள் பொருந்தியவனுவான்.

நான்கிலிருக்க பந்து, தோழன், புத்ரன், சுகம், கீர்த்தி, தங்கம் குதிரை, ரத்னம் இவைகள் நிரம்பப் பெற்றவன், பாக்யசாலி.

ஏழில் இருக்க ப்ரதாபமுடையவன், அரசனுக்கபிமதன், ராஜ சம்மதன், ப்ரஸித்தன், நல்ல கவி, அழகுடையவன்.

பத்தில் இருக்க மான தனங்களுடையவன், கீர்த்தி உள்ள வன், மந்த்ரியாயிருப்பவன், பின் வயதுகளில் துக்கமுள்ளவன்.

குரு சந்த்ரர்கள் லக்னத்திலிருக்க அரசன், அகன்று பெருத்த மார்பை யுடையவன், புத்ரர்கள் மித்ரர்கள் பார்யைகளுள்ளவன், நல்ல சரீரம் உடையவன், பந்து ஸேவிதன்.

நான்கிலிருக்க மந்த்ரி, ராஜசமன், சுகம், பந்து இவைகளுடை யவன், நிறைந்த ஐச்வர்யமுடையவன், அனேக சாஸ்த்ரங்களில் தடையில்லாத ப்ரவேசமுடையவன்.

ஏழில் இருக்க மேதாவி, அரசன், கலைகளில் வல்லவன், வியா பாரி, தனவான்.

பத்திலிருக்க வித்யை, சுகை, பொருள், மானம், கீர்த்திகளு டையவன், கோபமில்லாதவன், நீண்ட கைகளை உடையவன், வணங்கத்தக்கவன்.

சுக்ர சந்த்ரர்கள் லக்னத்தில் இருக்க தாலீ ஸௌக்யம் உள்ளவன், அழகான சரீரமுடையவன், பெரியோர்களால் அபி மானிக்கப்பட்டவன், மாலை, வஸ்த்ரம், வாஸனைத் திரவ்யம் இவை களுடையவனுவான்.

நான்கில் இருக்க ஸ்திரீ சுகம், கப்பல் யாத்ரை மூலம் தனம், ஜனங்களின் அபிமானம், போகம் இவைகளுடையவனுவான்.

ஏழில் இருக்க பரஸ்திரீகளிடம் பற்றுள்ளவன், அதிக தனம், புத்ரன் இவைகளற்றவன், ஸ்திரீ ப்ரஜையை யுடையவன், தாரண சக்தியை உடையவன், ஆடம்பர ப்ரியன்.

பத்தில் இருக்க மானம், ஆஜ்ஞா சக்தி, விபவம் இவை களோடு கூடியவன், மந்த்ரி, ப்ரஸித்தன், பொறுமையுடையவன், பந்து ஜனங்களோடு கூடியிருப்பவன்.

சந்த்ர சனிகள் லக்னத்தில் இருக்க வேலை செய்பவன், துஷ்டன், கொடிய சுபாவம் உடையவன், லோபி, தாழ்மையுடை யவன், தூக்கம், சோம்பல், நிச்செய்கை இவைகளுடையவன் ஆவான்.

நான்கில் இருக்க ஜலம், முத்து, ரத்னம், கப்பல் இவைகள் மூலம் ஜீவிப்பவன், பூமியை வெட்டுபவன், சிறந்தவன், ஜனங் களுக்கு அபிமதன்,

ஏழில் இருக்க நகரம், க்ராமம் அல்லது சின்ன ஊர் இவை களுக்கதிபதியாவான், ராஜ பூஜிதன், பார்யை யில்லாதவன்.

பத்தில் இருக்க குதிரைகளால் சத்ருவை ஜயிப்பவன், ப்ரஸித்தன், துர்நடத்தையுடைய ஸ்திரீ புத்ரன் இவர்களை உடை யவன், தலைவன்.

சந்த்ரன் சுபரோடு கூட அனேகமாக நன்மையைச் செய்கிறான். சந்த்ரன் 10-ல் இருந்து செவ்வாய் சனிகளோடு சேர்ந்தோ அல்லது பார்க்கப்பட்டிருந்தால் ஸைனிகளுக்குத் தலைவனுவான்.

செவ்வாய் புதர்கள் லக்னத்தில் இருக்க இம்சை புரிபவன், கெருப்பு சம்பந்தப்பட்ட காரியங்களில் ஸமர்த்தன், தாது வாதம் செய்பவன், தூதன், முக்ய மான இடங்களைக் காப்பாற்றும் காரியத்தில் இருப்பவன்.

நான்கில் இருக்க பந்துக்களில்லாதவன், மித்ரர்கள், தனம், அன்னம், போகம் இவைகள் உள்ளவன், தன் ஜனங்களால் ஒதுக்கப்பட்டவன்.

ஏழில் இருக்க தேசம் தேசமாக அலைபவன், வேலைக்காரன், நீசனால் அவமதிக்கப்பட்டவன், வாதாடுபவன், முதல்தர மிழந் தவன்.

பத்தில் இருக்க ஸேனாநாயகன், ஸௌகர்யம் நிறைந்தவன், மறைவாக கெடுதல் செய்யும் இயற்கையுடையவன், க்ரூரன், ராஜாவிற்கு அபிமதன், தைர்யசாலி.

குரு செவ்வாய்கள் லக்னத்திலிருக்க மந்த்ரி, குணத்தையே க்ரஹிப்பவன், தர்ம விஷயத்தில் கீர்த்தியை அடைந்தவன், உத்ஸாஹி.

நான்கில் இருக்க பந்து மித்ரர்களுடையவன், ஸ்திரசித்தன், சுகி, ராஜ ஸேவி, தேவதா குரு பக்தியையுடையவன்.

ஏழில் இருக்க மஹி, புதர், ஜலம், வனம் இவைகளில் ஸஞ்சரிக்கும் இயற்கை உடையவன், நல்ல பந்துக்களுள்ளவன், சூரன், மனைவியை விட்டுப் பிரிந்தவன்.

பத்தில் இருக்க அரசன், பரந்த கீர்த்தி உடையவன், தனம் பந்துக்கள், ப்ருத்யர்களுடையவன், ஸமர்த்தன்.

செவ்வாய் சுக்ரர்கள் லக்னத்திலிருக்க தாசி லோலன், இகழத்தக்க ஒழுக்கம், கார்யம் இவைகளையுடையவன், ஸ்திரீமூலம் சொத்தை யிழப்பவன், அல்பாயுஸ் உடையவன்.

நான்கில் இருக்க பந்து, புத்ர மித்ரர்களற்றவன், மனைதுக்கத்தால் பிடிக்கப்பட்டவன், பல துக்கங்களால் கஷ்டப்படுபவன்.

ஏழில் இருக்க ஸ்திரீகளிடம் மிக ஆசையுள்ளவன், துர்நடத்தையுடையவன், ஸ்திரீமூலம் அதிக துக்கத்தை அடைபவன், கேடு நடத்தை உள்ளவன்.

பத்தில் இருக்க அஸ்த்ரங்களைச் சொல்லிக் கொடுப்பவன், புத்திமான், வித்யை, தனம், வஸ்த்ரம், மாலை இவைகளுள்ளவன், ப்ரஸித்தன், மந்த்ரி.

செவ்வாய் சனிகள் லக்னத்தில் இருக்க சண்டையில் ஜயம் பெறுபவன், தாயினால் த்வேஷிக்கப்பட்டவன், அல்பாயுஸுடையவன், குறைவான பாக்யமுள்ளவன்.

நான்கில் இருக்க அன்ன பான ஸௌக்யமற்றவன், பந்து மித்ரர்களால் விடப்பட்டவன், பாபி.

ஏழில் இருக்க அவமானமடைவான், லோபி, பத்னி புத்ரன் சுகம் இவைகளற்றவன், பார்ப்பவர்கள் துக்கப்படும்படியாக இருப்பவன், ரோகி, துக்கி.

பத்தில் இருக்க ராஜ த்ரவ்ய லாபம், பெரிய அபராதத்தால் ராஜ தண்டனைக்குட்படுபவன், உண்மையற்றவன்.

புதன் குரு இவர்கள் லக்னத்தில் இருக்க அழகிய சரீரமுடையவன், நல்ல ஸ்வபாவமுள்ளவன், வித்வான், ராஜாவால் கௌரவிக்கப்பட்டவன், தேசத் தலைவன், வாஹன சுகபோகங்களுள்ளவன்.

நான்கில் இருக்க பந்து மித்ர சுக ஸ்த்ரீ தன பாக்யங்களுள்ளவன், ஸமர்த்தன், ராஜ ஸம்மதன்.

ஏழில் இருக்க நற்குணத்ரமுடையவன், சத்ருவை ஜயிப்பவன், பந்து மித்ர தன பலங்களுள்ளவன், பிதாவைவிட பெருமை பொருந்தியவன்.

பத்தில் இருக்க மந்த்ரி அல்லது அரசனுவான், மானம், ஆஜ்ஞாசக்தி, கீர்த்தி இவைகளுடையவன், வேத கர்மங்களில் பற்றுதல், வணக்கம் உடையவன்.

புத சுக்ரர்கள் லக்னத்திலிருக்க நல்ல சரீரமுடையவன், பண்டிதன், ஸாது ஸம்மதன், ராஜபூஜிதன், பாக்யவான், தேவ ப்ராம்மணரிடத்தில் பக்தி உடையவன், ப்ரஸித்தன்.

நான்கிலிருக்க புத்ர, மித்ர, பந்துக்களோடு கூடியவன், பாக்யவான், மந்த்ரி அல்லது அரசன், மங்களம் உள்ளவன்.

ஏழில் இருக்க நல்ல ஸ்திரீகளுடையவன், போகி, தனவான், பலருக்குத் தலைவன், சுகி, ராஜ ஸம்மதன்.

பத்தில் இருக்க நியாயமறிபவன், ஸாது, தாழ்மையான ஜனங்களுக்கு உதவி செய்பவன், அதிக ஐச்வர்யமற்றவன், பலன் உள்ள காரியத்தை ஆரம்பிப்பவன், காரியங்களில் ஸமர்த்தன்.

புத சனிகள் லக்னத்திலிருக்க விகாரமான சரீரமுடையவன், கெட்ட காரியங்கள் புரிபவன், வித்யை, பொருள், வாஹனம் இவைகளற்றவன், அல்பாயுளுள்ளவன்.

நான்கில் இருக்க அன்ன பானங்களில்லாதவன், பந்துக்க ளற்றவன், ஸ்வஜனங்களால் இகழப்படுபவன், மூடன், தோழர் களால் விடுபட்டவன், பாபத்தைச் செய்பவன்.

ஏழில் இருக்க பிரபுவினிடம் வேலை செய்பவன், மூர்க்கன், உபகாரி, துஷ்டன், உண்மை பேசாதவன், மலினன்.

பத்தில் இருக்க சத்ருக்களை அடக்குபவன், பந்து, வாஹன தனங்களுடன் கூடியவன், பிராம்மணர்கள், தாய் - தகப்பன், தேவதைகள் இவர்களை ஆராதிப்பவன்.

குரு சுக்ரர்கள் லக்னத்தில் இருக்க பெரியோர்களிடம் உப தேசம் அடைபவன், ப்ராம்மண வம்சத்தில் பிறந்தாலும் அரச னுவான். எல்லோருக்கும் அனுகூலன்.

நான்கிலிருக்க சத்ருக்களை ஜயித்தவன், தன்னுடைய பந்து, மித்ர, வாஹன, தனங்கள் உள்ளவன், பிராம்மணர்கள், பெரி யோர்கள், தேவதைகள் இவர்களைப் பூஜிப்பவன்.

ஏழிலிருக்க அழகிய பெண்கள், ரத்னம், ஐச்வர்யம் இவை களுள்ளவன். புத்ரிகளை உடையவன், சுகம், கீர்த்தி, வாஹனம், போகம் இவைகளை அடைவான்.

பத்திலிருக்க மானம், கட்டளையிடும் சக்தி, அதிக ஐச்வர்யம், இவைகளோடு கூடியவனுகவும், அரசனுகவும், வேலைக்காரர்கள், தன்களுடன் கூடியவனுகவும், நல்ல ஸ்வபாவம் உடையவனுகவு மாவான்.

குரு சனிகள் லக்னத்திலிருக்க மதமுள்ளவன், கொடியவன், படித்தவன், தனவான், அல்பசுகி, துஷ்டன்.

நான்கிலிருக்க மந்திரி, ஆரோக்கியம் உடையவன், போகமற் றவன், பந்து மித்ரர்களுடையவன், ஜயம், விருத்தி, ஸ்நேஹம், ஸௌக்யம் இவைகளையுடையவன்.

ஏழிலிருக்க ஸ்திரீ கோபத்தால் தனத்தை இழப்பவன், சூரன், துக்கி, மறைவில் கெடுதல் செய்பவன், அழகிய சரீரமில் லாதவன், பிதுரார்ஜிதமான தனத்தில் ஆசை கொண்டவன், மூர்க்கன்.

பத்தில் இருக்க ராஜ ஸம்மதன், குறைந்த சந்ததியுடையவன், உறுதியான சித்தமுடையவன், பசு, தன, வாஹனாதிகளுடை யவன்.

சுக்ர சனிகள் லக்னத்திலிருக்க பல ஸ்திரீகளோடு சேரு பவன், அழகான சரீரமுடையவன், சுக தனபாக்யங்களுள்ளவன், அநேக ப்ருத்யர்களை உடையவன், துக்கத்தால் பிடிக்கப்படுபவன்.

நான்கிலிருக்க மித்ரர்கள் மூலம் தனத்தையும், பந்துக்களிடம் மரியாதையும், அரசனிடம் மித்ரத்வத்தையுமடைவான்.

ஏழிலிருக்க சிறந்த ஸ்திரீகள், தனம், கீர்த்தி, ஐச்வர்யம் முதலியவைகளை அடைகிறான்.

பத்தில் இருக்க சுக துக்கங்கள் இல்லாதவனும், ப்ரஸித்த னும், புகழத்தக்க காரியத்தை உடையவனும், மந்த்ரியாயும், எல்லோருக்கும் உயர்ந்தவனுமாவான். இவ்விதமே அதிக க்ரஹங்களின் சேர்க்கையால் உண்டாகும் பலன்களையும் ஊஹித் துக்கொள்வது.

பத்தாமிடத்திற்கு பத்தாவது ஸ்தானமான ராசி, அங்கு வசிக்கும் க்ரஹம் இவைகளின் சுபாவத்தாலும், பத்தாமிடத் தைப் பார்க்கும் க்ரஹங்களாலும் பலனை நிச்சயிக்க வேண்டும். ஜன்ம லக்னம், சந்த்ரன் இவைகளில் எது பலமுள்ளதோ அதி லிருந்து 10-வது ஸ்தானத்தின் இயற்கையை யனுசரித்து தொழில் உண்டாகும். பலசாலியாகில் மேன்மேல் வ்ருத்தி ஏற்படும். துர்பலனுனால் தொழில் நாசம். பத்தாமிடம் சுஷ்க ராசி, ஜல ராசி அல்லது இவ்விரண்டும் கலந்தது, சுபராசி, அசுப ராசி சஞ்சரிக்கக்கூடிய ஸ்தானம் இவை முதலியனவும் கவனிக்க வேண்டும். இரு கால்களுடைய பிராணி, நாற்கால் பிராணி, ஊர்வன முதலிய ரூபங்களையும், ஸ்வபாவங்களையும், தேசம், இயற்கை இவைகளையும் அனுசரித்து வேலை செய்யுமிடம், வேலை யின் தன்மை இவைகளை நிர்ணயிப்பது. 10-ம் இடத்தில் சந்த்ர னிருக்க சகல கார்ய ஸித்தி.

ப்ருஹத் ஸம்ஹிதையில் கூறியபடி நக்ஷத்ரங்களை ஆச்ரயித்தவை.

அசுவதி :—குதிரை நிருடுபவர், ஸேனுபதி, வைத்யன், ஏவ லாள், குதிரைகள், குதிரை ஏறுபவர், வியாபாரம் செய்பவர், வேடன், அழகுள்ளவர், அச்வபாலர்.

பரணி :—ரக்த மாம்ஸாசனிகள். கொடியவர், கொலை, கட்டுதல். அடித்தல் இவைகளில் ஆசையுடையோர். உமியுள்ள தான்யம், தாழ்குலத்தில் பிறந்தவர், ஸத்வமில்லாதவர்.

கார்த்திகை :—வெள்ளீப் புஷ்பங்கள். யாகம் புரிபவர். மந்த்ர-ஸூத்ர-பாஷ்யங்களறிந்தவர்கள், பொற்கனிகளில் வேலை செய்வோர், நாவிதர், ப்ராம்மணர், குயவர், புரோஹிதர். ஜ்யோதிஷ மறிந்தவர்.

ரோஹிணி :—நல் விரதமுடையவர். வியாபாரி அரசர், தனமுடையவர், யோகமுடையவர். வண்டியுடையவர்கள். பசு, எருது, நீர்வாழ் ஜந்துக்கள். உழவர், மலை, ஐச்வர்யம்—இவைகளுடன் கூடியவர்.

மிருகசீர்ஷம் :—வாஸனை சாமான்கள், வஸ்த்ரம், நீரிலுண்டானவை, புஷ்பங்கள், பழங்கள், ரத்னங்கள், வேடர், பறவை, மிருகங்கள், ஸோமபானிகள், ஸங்கீத மறிந்தவர், விடர்கள், கடிதம் கொண்டுபோகிறவர்கள்.

திருவாதிரை :—கொலை புரிதல், மிருகங்களைக் கட்டுதல். பொய் பேசுதல், பிறர் மனை புகல். திருட்டு, பற்றில்லாமை, பேதஞ் செய்தல் இவைகளில் பிரியமுள்ளவர்கள், தான்யம், க்ரூர மந்த்ராபிசாரங்கள், பிசாசு ஒட்டல் முதலியவைகளை யறிந்தவர்கள்.

புனர்பூசம் :—உண்மை, ஔதார்யம், சுத்தம், நற்குலப் பிறப்பு, அழகு, புத்தி, கீர்த்தி, தனம் இவைகளையுடையவர்கள், உயர்ந்த தான்யம், வியாபாரிகள், வேலையாட்கள், சில்பி, ஜனங்களுடன் கூடியவர்கள்.

பூசம் :—யவம், கோதுமை, நெல், கரும்பு, காட்டுப் பயிர்கள், மந்த்ரிகள், அரசர்கள், நீரில் பிழைப்பவர், ஸாதுக்கள், யாகங்களில் பற்றுள்ளவர்.

ஆயில்யம் :—செயற்கைப் பொருள்கள், கிழங்குகள், வேர்கள், பழங்கள், புழுக்கள், பாம்புகள் விஷம், பரத்ரவ்யத்தை அபஹரிப்பதில் ஆசையுடையவர், தான்யங்கள், எல்லாவித வைத்யர்கள்.

மகம் :—தனதான்யங்கள் நிறைந்தவர், கிராமங்கள், மலையில் வஸிப்பவர், பித்ரு பக்தியுள்ளவர், வியாபாரி, சூரர், மாம்சத்தைப் புசிப்பவர், ஸ்த்ரீ த்வேஷிகள்.

பூரம் :—நர்த்தனம் செய்பவர், ஸ்த்ரீகள் மனதுக்குப் பிடித்தவர், கந்தர்வ வித்யையில் நிபுணர், சில்பி, கடைச் சரக்குகள், பருத்தி, உப்பு, தேன், எண்ணெய், சிறுவர்கள்.

உத்தரம் :—மிருதுத்தன்மை, சுத்தம், விநயம் இவைகளையுடையவர், பாஷண்டி, தானம் சாஸ்த்ரம் இவைகளில் பற்றுடையவர், உயர்ந்த தான்யங்கள், தனம், ஏவலாட்கள் இவைகளையுடையவர், அரசனோடு கூடியவர்.

ஹஸ்தம் :—திருடன், யானை, ரதத்தில் செல்பவர், யானை முதலியவைகளைப் பழக்குபவர், சித்ரம் எழுதுவதில் வல்லவர், பண்ய த்ரவ்யங்கள், தான்யம், சாஸ்த்ரஜ்ஞர், வியாபாரி, தேஜஸ்விகள்.

சித்திரை :—அலங்காரம் முதலியவைகளில் வல்லுனர், மணி, ராகம், வாஸனைச் சேர்க்கை இவைகளையறிந்தவர், கணக்கறிஞர், ஆடை நெய்வதில் ஸமர்த்தர், சாலாக்ய மறிந்தவர், உயர்ந்த தான்யங்கள்.

ஸ்வாதி :—பக்ஷி, ம்ருகம், குதிரைகள், வியாபாரிகள், வாத விருத்திகரங்களான தான்யங்கள், ஸ்திரமில்லாத நட்பினர், கொஞ்ச பலமுடையவர்கள், தபஸ்விகள், வியாபாரத்தில் ஸமர்த்தர்.

விசாகம் :—சிகப்பு நிறமுடைய பழங்கள், புஷ்பங்கள் நிறைந்த மரங்கள், எள், பயறு, பருத்தி, உளுந்து, கடலை இவைகள். இந்த்ராக்னிகளிடத்தில் பக்தியுடையவர்கள்.

அனுஷம் :—பலவான்கள், தலைவர்கள், ஸாதுக்களிடத்தில் அன்புடையவர், வெளியூர் செல்வதில் ஆசையுடையவர். ஸாது ஜனங்கள், சரத்ருதுவிலுண்டாகும் எல்லாவிதமான பொருள்கள்.

கேட்டை :—சூரர்கள், குலம், தனம், கீர்த்திகளுடன் கூடியவர்கள், பரத்ரவ்யாபஹாரிகள், எதிரிகளை ஜயிக்கக்கூடிய அரசர்கள், ஸேநாநாயகர்கள்.

மூலம் :—மூலிகை, வைத்யர், தலைவர், புஷ்பம், பழம், வேர்களை வியாபாரம் செய்பவர், விதைகள், அதிகம் தனமுடையவர், பல மூலங்களால் பிழைப்பவர்.

பூராடம் :—ம்ருதுவானவர், நீரில் செல்பவர், உண்மை, ஆசையில்லாமை, தனம் இவைகளுடன் கூடியவர், அணை கட்டுதல், நீர் த்ரவ்ய மூலம் பிழைப்புள்ளவர்.

உத்தராடம் :—யானையை அடக்குபவர், மல்யுத்தம் புரிபவர், யானை, குதிரை, தேவதை இவர்களிடம் பக்தியுள்ளவர், மரத்தால் சண்டையிடுபவர், போகத்தோடு கூடியவர், தேஜஸுடையவர்.

திருவோணம் :—வஞ்சகர், எப்போதும் முயற்சியுள்ளவர், வேலையில் ஸமர்த்தர், உத்ஸாஹி, தர்மவான், பகவத் பக்தர், உண்மை பேசுபவர்.

அவிட்டம் :—மானமில்லாதவர், நபும்ஸகர், நிலையில்லா ஸ்நேகமுடையவர், ஸ்திரீகளுக்கு வெறுக்கத் தக்கவர், சகையுடையவர், அதிக தனமுடையவர், ஜிதேந்த்ரியர்.

சதயம் :—கயறு வலைகளால் நீர் வாழும் ஜந்துக்களைப் பிடிப்பவர், நீரிலுண்டாகும் முத்துக்கள் முதலியன, மீன், பன்றி இவைகளால் ஜீவிப்பவர், சாயம் ஏற்றுபவர், கள் முதலான லாகிரி வஸ்துக்களால் ஜீவிப்பவர், பறவைகளை வேட்டையாடுபவர்.

பூரட்டாதி :—திருடர்கள், இடையர், நீச்செயல் புரிபவர், சிறிய தன்மையுடையவர், இழிதொழில் புரிபவர், மற்றவர்கள் காரியத்தில் பற்றில்லாதவர், தர்மமில்லாதவர், விரதம் அனுஷ்டியாதவர், மல்யுத்தத்தில் வல்லுனர்.

உத்தரட்டாதி :—வேதியர், யாகம், தானம், தபஸ் இவைகளை ஆசரிப்பவர், தனமுள்ளவர், ஸந்யாஸி, பாஷண்டர், அரசர்கள், சிறந்த தான்யம்.

ரேவதி :—நீரிலுண்டானவை, பழம், புஷ்பம், உப்பு, மணி, சங்கு, முத்து, தாமரைப்பூ, வாஸனை புஷ்பம், வாஸனையுள்ள ஸாமான்கள், வியாபாரி, கப்பலோட்டிகள்.

நக்ஷத்ரங்களை ஆச்ரயித்த ஜாதிகள்

பூரம், பூராடம், பூரட்டாதி, கார்த்திகை—ப்ராஹ்மண ஜாதி.
பூசம், உத்தரம், உத்தராடம், உத்தரட்டாதி—க்ஷத்ரிய ஜாதி.
அனுஷம், ரேவதி, மகம், ரோஹிணி—வைச்ய ஜாதி.
புனர்பூசம், ஹஸ்தம், அபிஜித், அசுவதி—வியாபார ஜாதி.
மூலம், திருவாதிரை, ஸ்வாதி, சதயம்—க்ரூர ஜாதி.
மிருகசிர்ஷம், சித்திரை, அனுஷம், அவிட்டம்—சூத்ர ஜாதி.
பரணி, ஆயில்யம், விசாகம், திருவோணம்—சண்டாள ஜாதி.

உபஹத நக்ஷத்ரம்.

சூர்ய சனிகள் ஸஞ்சரிப்பது, செவ்வாயின் மத்யகமனம், ஆச்சாதனம், வக்ரம் – இவைகளால் கெடுக்கப்படுவது, ராகுவால் மறைக்கப்படும் சூரிய சந்த்ரர்கள் வஸிக்கும் நக்ஷத்ரங்கள், இவை தவிர தன் இயற்கைக்கு முரண்பட்ட நக்ஷத்ரங்களும், இவைகள் முன் கூறப்பட்ட பொருள்களுக்கு நாசத்தை உண்டாக்கும். மாறுன நக்ஷத்ரங்கள் நன்மையைத் தருவன.

ஒருவனுக்கு ஜாதகம் அல்லது ப்ரச்ன மூலமாக தொழில், அதற்குரிய பொருள், உதவியான பொருள் அல்லது மற்றவைகளை நிச்சயிக்க வேண்டும்போது, மேலே கூறப்பட்ட நக்ஷத்ரங்களை ஆச்ரயித்த பொருள்களின் விவரத்தைச் செவ்வனே அறிந்து கொண்டு, ஜன்மகால ப்ரச்ன காலங்களில் சூர்யாதி க்ரஹங்களிருக்கும் நக்ஷத்ரம், அவைகளின் நிலைமைகளையுமறிந்துகொள்வதுடன் மேல் கூறப் போகும் க்ரஹ பக்தி யோகத்தையும் ஆராய்ந்து ஜாதி, தேசம், குலம், வித்யைகளுக்கு அநுகுணமாகத் தொழில நிர்ணயம் செய்வதால் கூடிய வரை பலன் அனுபவத்தில் ஸரியாகவே நடக்கும்.

ப்ருஹத் ஸம்ஹிதையிலுள்ளபடி
சூர்யாதி க்ரஹங்களின் ஆதிபத்ய விஷயங்கள்.

நர்மதா நதியின் பூர்வ பாகம், சோண நதி, உட்ர வங்க சிம்மள களிங்க பாஹ்லீக சக யவன மகத சபர ப்ராக்ஜ்யோதிஷ, சின காம்போஜர்கள், மேகல திராத விடகர்கள், மலையினிரு பக்கங்களிலும் வஸிப்பவர்கள், புலிந்தர், த்ராவிட தேசத்தின் முன்பாதி

யிலிருப்பவர், யமுனையின் தென்கரை, சம்பா, உதும்பர கௌசாம்பி நகரங்கள். சேதிதேச ஜனங்கள், விந்திய வனத்தின் மத்ய பாகம், புண்ட்ரர்கள், கோலாங்கூலங்கள், ஸ்ரீபர்வத வர்த்தமான தேசங்கள், இக்ஷுமதீ நதி, தஸ்கர பாரதர்கள், காடு, இடையர், விதைகள், உமியுள்ள தானியங்கள், மிளகு, மரங்கள், தங்கம், அக்னி, விஷம், யுத்தம் செய்வதில் சூரர்கள், ஔஷதம், வைத்யர், நாய்கள், பிராணி, பயிரிடுபவர், அரசர், பாபச் செயல் புரிபவர், சண்டைக்கு முன் கோக்கிச் செல்பவர், பாம்புகள், ஜனமில்லாத தேசம், கீர்த்தியுள்ள கொடியவர்கள் — இவைகளுக்கு ஸூரியன் அதிபதி.

நிலையில்லாதவன், பிரியமாகப் பேசுபவன், எல்லோருக்கும் இஷ்டமானவன், சுபதிருஷ்டியுடையவன், மிருதுவானவன், சுபன், வெண்மை நிறமுடையவன், வாத கபங்கள் கலந்த இயற்கையுள்ளவன், புத்திமான், தாது க்ரஹம், ஸமக்ரஹம், சரக்ரஹம், ரக்தத்தில் வலுவுள்ளது, வைச்ய ஜாதி, உருண்டை வடிவம், ஸத்வ குணமுடையவை, ஸம த்ருஷ்டி, வாயவ்யதிக்கின் அதிபன், லர்பம், ஜல ஸ்வபாவம், சுக்லபக்ஷத்தில் அதிக பலம், ஸ்திரீ ரூபம் இரவில் பலமுள்ளவன், ஒரு யோஜனை தூரம், 70 வயதுடையவன், ஒரு முகூர்த்தத்துக் கதிபன், திருடமான வீட்டையுடையவன், சாந்த புத்தி, 21 கிரணங்களுள்ளவன், சங்கம், சிப்பி, உப்பு, சந்த்ர காந்தக்கல், பித்தளை, வெண்கலம், முத்து, சங்கிலி, கயிறு, வெண்பட்டு, குழந்தைகளின் ஆபரணங்கள், ஜலத்தில் உண்டானவைகள், வெண்மையான பொருள்கள், பாலுள்ள விருக்ஷங்கள், வாழை, அரிசி, கோதுமை, யவை முதலியன, வெள்ளரிக்காய் முதலிய சாகவர்க்கங்கள், ஜல ஜந்துக்கள், ஜலபர்வத துர்க்கங்கள், கோலல, பருகச்ச ஸமுத்ர ரோமகர்கள், பனியில் வஸிப்பவர்கள், காட்டிலிருப்பவர்கள், டங்கணர்கள், கலப்பை, ஸ்திரீ, ராஜ்யம், ஸமுத்ர மத்தியிலுள்ள தீவுகள், மதுர ரஸம், புஷ்பம், பழம், ஜலம், உப்பு, மணி, சங்கு, யாகம் புரிபவன், உதவும் அரசன், பிராம்மணன், வெண்மையான பொருள்கள், குதிரை, ரதக்ரீடை செய்யும் இளவயதுள்ள ஸ்திரீகள், வேஸ்யா பதிகள், உணவுப் பொருள், துணிகள், கொம்புள்ள பிராணிகள், இரவில் ஸஞ்சரிப்பவர், க்ருஷிகர்கள், யாஜ்ஞிக விதிகளறிந்தவர், இவர்களுக்கு சந்த்ரன் அதிபதி.

சபலன், க்ரூர க்ரஹம், குழந்தை உருவத்தையுடையவன், பித்தப் பிரகிருதி, ஊர்த்வ திருஷ்டி, சதுரமான இடம், தலைப் பிரதேசம், சிறிய இடை, கோபி, வதம் செய்பவன், கருப்பு சேர்ந்த சிகப்பு நிறம், ராஜஸ குணமுடையவன், காட்டில் ஸஞ்சரிப்பவன், தாது க்ரஹம், கொடியவன், தெற்குக்கு அதிபன், நாற்கால் பிராணி, சிறந்தவன், சோம்பேறி, இளைத்த சரீரமுடையவன், கிருஷ்ணபக்ஷ இரவில் பலமுடையவன், மஜ்ஜையில் சக்தியுடையவன், எரிந்த சரீரமுடையவன், மரப்பட்டைகளை அணிபவன், நான்கு வயதுடையவன், கொடிய பார்வையுடையவன், ஏழு யோஜனை தூரமுடையவன், தாமிரம், செங்கல், ஒடு புழுதி, தாது வர்கம், தங்கம், அரைஞாண், பவழத்தாலான ஆபரணம், அடியில் சிகப்பு நிறம், நெல், முள்மரம், உயிர் வர்க்கத்தில் கொக, மூட்டைப் பூச்சி, எறும்பு, ஆடு, கொடிய பிராணி இவைகள் செவ்வாயினுடையதாகச் சொல்லப்படுகின்றன.

சோணம், கர்மதை, பிரஹி இவைகளுக்கு மேற்கிலிருக்கும் தேசங்கள், கிர்விந்த்யை, வேத்ரவதி, ஸிப்ரா, கோதாவரீ, வேணு, கங்கா, பயோஷ்ணீ, ஸிந்து, மாலதி, பாரா—என்கிற நதிகள், வடபாண்டியம், மஹேந்த்ராத்ரி, விந்த்யம், மலயம் முதலிய மலையில் வஸிக்கும் ஜனங்கள், சோள தேசத்தவர், த்ரமிடர், விதேஹ தேசத்தினர், ஆந்த்ரர், அச்மகர், பாஸ்பரர், கொங்கணர், மந்த்ரிகள், குந்தளர், கேரளியர், தண்டகாரண்யம், காந்திபுரம், ம்லேச்சர், ஸங்கர ஜாதி, பட்டண ஜனங்கள், க்ருஷிகர், பாரதர், அக்னி மூலம் ஜீவிப்பவர், ஆயுதங்களால் ஜீவிப்பவர், காட்டில் வஸிப்பவர், அகழ், கர்வடர், கொலை புரிபவர், நீச்செயல் புரிபவர், காரியத்தில் நிலையில்லாதவர், கர்விகள், அரசர்கள், குழந்தைகள் யானை, தர்மிகனுக வேஷம் போடுபவர், குழந்தைகளை அடிப்பவர், ஆனிறை மேய்ப்பவர், சிவப்பு நிறமான பழம், புஷ்பம், பவழங்கள், ஸேனாபதி, வெல்லம் முதலியன, கள், வேம்பு, பொக்கிஷம், அக்னி ஹோத்ரிகள், தங்கம் முதலியவைகளின் கனிகள், பௌத்தர், ஸந்யாஸி, திருடர், மற்றவர் காரியங்களில் கருத்தில்லாதவர், அதிகம் த்வேஷமுள்ளவர், அதிகம் பூஜிப்பவர்—இவர்களுக்கு செவ்வாய் அதிபதியாவான்.

அலி. சுபன். ஸந்தோஷமுடையவன். தோலில் சக்தியுடையவன் பச்சை நிறம். வைச்ய ஜாதி. வெளியில் நரம்பு தெரியக் கூடிய சரீரமுடையவன். பாபியுடன் கூட பாபி. கிராமத்திலிருப்பவன். உயிருள்ளது. பக்ஷீ. ராஜஸ குணமுடையவன். அழுக்கான வஸ்த்ரமுள்ளவன். கம்பளியை அணிபவன். துவர்ப்புள்ளதை புஜிப்பவன். இரண்டு கால்களையுடையவன் எப்போதும் பலசாலி. குறுக்கே பார்ப்பவன். வடக்கு திக்குக் கதிபன். அநேக சில்பிகள் செய்த வித்தையுடையவன். ஆறு கிரணங்களுடையவன். எட்டு யோசனை தூரமுள்ளவன். இந்த்ர நீலக்கல். மண். காசமணி. மரத்தால் செய்த ஸகை. கழுத்திலணியும் மாலை. நீலோத்பலம் முதலியன. வெற்றிக்கொடி. உள்ளே விதையுள்ள பழங்கள். துவர்ப்புள்ள பழங்கள். ஜமத்தங்காய். பயறு. கருப்பு கெல். சங்கு. சிப்பி முதலியவை. இரண்டும் அதிகமுமான கால்களையுடைய பிராணிகள். லோஹித்யம். விந்து. ஸரயூ. காம்பிரிகை. ரதா. கங்கை. கௌசிகி முதலிய நதிகள். விதேஹ. காம்போஜ தேச ஜனங்கள். மதுரையின் முதற்பாதி. ஹிமாலயம். கோமந்தம். சித்ரகூடம்—முதலிய மலைகளில் வஸிக்கும் ஜனங்கள். ஸௌராஷ்ட்ரத்தில் வஸிப்பவர். ஆணைக்கட்டு. ஜலம் வழியாகச் செல்பவர். வியாபாரம் செய்பவர். பொந்து மலைகளில் வாஸம் செய்பவர். குளம். கிணறு. ஏரி முதலியன. யந்த்ர மறிந்தவர். ஸங்கீதம். எழுத்து. மணியின் இலக்கணம். சாயம் போடுதல். வாஸனை சேர்த்தல். சித்திரம் எழுதுதல். இலக்கண சாஸ்த்ரங்களில் ஜ்ஞானமுள்ளவர். ரஸாயன வாஜீகரணங்களின் முறையறிந்தவர். சில்ப வேலை அறிந்தவர். துப்பறிதல். ஜால வித்யை யறிந்தவர். குழந்தைகள். கவி. சாட்ய குணமுடையவர். ஒருவர் விஷயத்தை மற்றவருக்குச் சொல்வது. அபிசார வித்யை யறிந்தவர். தூதர். ஹாஸ்யத்தை அறிந்தவர். தேச ஸேவகர். கட்டுவம் தெரிந்தவர். நெய். எள். எண்ணெய் முதலியன. விதைகள். வேம்பு முதலியவை. விரதமாசரிப்பவர். வேஸரமென்னும் ஒருவித குதிரை—முதலியவைகளுக்கு புதன் அதிபதியாவார்.

உயரமும் பருமனுமுள்ள தேஹமுடையவன். ஜீவக்ரஹம். பொன் வர்ணம். கப ப்ரகிருதி. பெருத்த துடை வயிறுகளுடையவன். ப்ராம்மண ஜாதி. தேன் நிறமான கண்களுடையவன். பேசுவதில் ஸமர்த்தன். ஸாத்விகன். சிறிது நீண்ட வட்டமுமானவர். சுபன். இரு கால்களையுடையவன். புருஷ க்ரஹம். புலாலுண்பவன். ஐசான்ய திக்குக்கு அதிபன். சுக்லபக்ஷத்தின் பகலில் பலமுடையவன். முப்பது வயதுக்குக் கீழ்ப்பட்டவன். ஸமமான பார்வையுடையவன். நன்மை தீமைகளுள்ளவன். த்ருடமான வஸ்த்ரம். பெருத்த காதுகளையுடையவன். ஆச்சர்யமான மரங்களால் செய்யப்பட்ட வீடுடையவன். ஒன்பது யோஜனை தூரத்துக்கு அதிபதி. பொன் நிறமுள்ளவன். பலவித மணிகள். மண்ணுலானவைகள். ஜாதி. முல்லை. சம்பகம். கரும்பு. தென்னை. பாக்கு. தடித்த தோலுடைய பழங்களுள்ள மரங்கள். தித்திப்புள்ள பழ வர்க்கங்கள். விந்து நதிக்கு முன்பாகம். மதுரையின் பின்பக்கம். பரதர்கள். ஸௌவீரம். ஸ்ருக்னம் எனும் தேசம். வடதேசத்தவர். விபாசா. சதத்ரு—எனும் நதிகள். ரமடர்கள். சால்வர். த்ரைகர்த்தர்கள். பௌரவர். நாவிதர்கள். வாடதானர். யௌதேயர். ஸாரஸ்வதர். மத்ஸ்யர்—இவர்கள் வஸிக்கும் ஊர்களில் பாதி. யானை. குதிரை. புரோஹிதர். அரசன். மந்த்ரி. விவாஹம். உபநயனம் முதலிய பௌஷ்டிகங்களில் பற்றுடையவர். தயையுடையவர்கள். ஸ்திரம். சௌசம். விரதம். வித்யை. தானம். தர்மம் இவைகளில் பற்றுள்ளவர். நகர வாஸி. தனவான். பொருளாதார பாண்டித்யம். வேதம் அபிசாரம். நீதி சாஸ்த்ரங்களறிந்தவர். ஆயுதஸன்னஹம். குடை. கொடி. சாமரம். விசிறி முதலியன. நறுமணத்ரவ்யம். குஷ்டம். மாம்ஸி. தகரம். ரஸம். உப்பு. பயறு. நித்திப்பு. மெழுகு. சோரகம் முதலியவைகளுக்கு குரு அதிபதியாவான்.

வெண்ணிறமுள்ளவர். இனிய வார்த்தை பேசுபவர். கபவாத ப்ரகிருதி. வக்ரகதியில் விரியமுடையவர். பலிஷ்டன். க்ஷத்ரிய ஸ்வபாவத்தையுடைய ப்ராமணன். ரஜோகுணமுடையவன். சுபர். ஆக்னேயத்துக்கதிபதி. உயரத்தில் விரியமுடையவன். உயரத்தூக்கின புருவமிருள்ளவன். இரு கால்களையுடையவன். ஸ்திரீ உருவமுள்ளவன். ஜலசாரி. 16 வயதுடையவர். கடைக்கண் நோக்குடையவர். சுக்லபக்ஷத்தில் இரவில் பலமுடையவர். மெலிதான வஸ்த்ரமுடையவர். பிரஸித்தன். பக்ஷத்துக்கு அதிபதி. அலங்காரமான வீடுடையவன். முத்து வெள்ளிகளுக்கு அதிபன். 16 யோஜனை தூரமுள்ளவன். ஸௌந்தர்யத்துக்கு அதிபதி. தாழை. மல்லிகை. ஜாதி. வஞ்சுளம். ஜலத்திலுள்ள மரங்கள். அதிக விதை

யுள்ள கொய்யா, மாதுளை போன்ற பழங்கள், புளியமரம், புளிப்பு, மரத்திலிருந்து பெருகும் பிசின், பால் முதலியன, பக்குவமான பயிர், துவரை, செந்நெல், வண்டுகள், தக்ஷசிலையென்ற பட்டணம் மார்த்திகாவதம், அநேக மலைகள், காந்தாரர், புஷ்கலாவதகம், ப்ரஸ்தலம், மாளவம், கேகயம், தசார்ணம், உசிநரம், சிபி முதலிய தேசத்தவர், விதஸ்தா, இராவதி, சந்த்ரபாகா இவைகளில் ஜல பானம் செய்பவர், தேர், வெள்ளி, பொன் முதலியவை உண்டாகும் கனிகள், குதிரை, யானை, யானைப் பாகன், தனவான், வாஸனை சாமான்கள், பத்மராகம், வஜ்ரம், நகைகள், தாமரைப் பூ முதலியன, படுக்கை, ப்ராதான்யம், இள வயதுள்ள ஸ்திரீகள், காமோத்தீபகமான வஸ்துக்கள், ம்ருஷ்டான்னம் புஜிப்பவர்கள், மதுர ரஸப்ரியர், தோட்டம், ஜலம், காமுகர், கீர்த்தியுடையவர் சுகிகள், உதாரர்கள், மந்த்ரிகள், வியாபாரிகள், குயவர்கள், பல, பக்ஷிகள், த்ரிபலை, (கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய்) வெண்பட்டு, கம்பளம், நறுமண வஸ்துக்கள், தேங்காய், சாதிக்காய், அகில், வசம்பு, திப்பிலி, சந்தனம் இவைகளுக்கு சுக்ரன் அதிபனாவான்.

கருப்பு வர்ணம், நீண்ட சரீரம், மாம்ஸமில்லாதவன், கரம்பில் பலமுள்ளவன், பருத்த பல் நகங்களுடையவன், பரட்டை மயிர், தாது க்ரஹம், பூனைக்கண், தூர்த்தன், தமோகுணமுடையவன், தோல் மாத்திரமுள்ளவன், கீழ்நோக்கும் பார்வையுடையவன், அதிக வயதுடையவன், ஜீர்ண வீடு, பாபபுத்தியுடையவன், க்ரூர க்ரஹம், எட்டு யோஜனை தூரமுடையவன், கருப்பு நிறமான மணி அணிபவன், மரவுரி தரித்தவன், காட்டில் ஸஞ்சரிப்பவன், காட்டி லுண்டாகும் பாலுடன் கூடிய புஷ்பம், கசப்புள்ள பழம் முதலி யவை, இழுங்குகள், நிறைந்த பர்வதங்கள், உயரமான மரங்கள், பாலுள்ளனவும், பழங்களுள்ளனவுமான மரங்கள், மூங்கில், பனை மரம், வேம்பு, எள்ளு, உளுந்து, வரகு, நீல நிறம், கொடிய பிராணி கள், ஆகர்த்தர், அர்புதர், புஷ்கர ஸௌராஷ்ட்ர ஜனங்கள், இடையர், சூத்ரர், ரைவதர், ஸரஸ்வதி நதி மறையும் தேசத்துக்கு மேற்கு ப்ரதேசம், குருக்ஷேத்ர வாஸிகள், ப்ரபாஸம், விதிசை, வேத ஸ்ம்ருதி, மஹீ—இவைகளில் பிறந்தவர்கள், துஷ்டர், மலினர், துஷ்க்ருத்யங்கள் செய்பவர், வாணிபர், துர்பலர், கபம் ஸகமானவர், சிறைச்சாலையிலுள்ளவர், பக்ஷிகளைப் பிடிப்பவர்,

அசுத்தர், வலையர், கப்பலோட்டுபவர், செம்படவர், கெட்ட ஆசா ரத்தையுடையவர், வ்ருத்தர், பன்றி மேய்ப்பவர், ஸங்கத்தால் பூஜிக்கப்படுபவர், நியமமில்லாதவர், வேடர், புளிந்தர், தரித்திரர், மிளகு, மிளகாய், வேம்பு, ரஸாயனம், கைம்பெண்கள், பாம்பு, திருடர், எருமை, கழுதை, ஒட்டகை, கடலை, மொச்சை, அவரை இவைகளுக்கு அதிபன் சனி,

ராகுவை சனிக்கு ஒப்பாகவும், கேதுவை செவ்வாய்க் கொப் பாகவும் வைத்துக்கொண்டு பலன் முதலியவைகளை ஊஹிக்க வேண்டும்.

மலையின் அடிவாரங்கள், சிகரங்கள், குஹைகள் — இவை களில் வசிக்கும் ம்லேச்சர்கள், சூத்திரர், நரியைத் தின்பவர்கள், சூலிகர், பொக்கணர், குதிரை போன்ற முகமுள்ளவர், குறைவான அங்கமுள்ளவர், குலத்துக்கு இழுக்கையுண்டாக்குபவர், கொடியர், நன்றியில்லாதவர், திருடர், உண்மையில்லாதவர், சுத்தியில்லாதவர், லோபிகள், கழுதை, சாரர்கள், மல்யுத்தம் புரிபவர், அதிக கோபமுள்ளவர், பள்ளத்தில் வஸிப்பவர், இழி தொழில் செய்பவர், கெட்ட ஸ்வபாவமுடையவர், தார்மிகன் போல் வேஷம் போடுபவர், ராக்ஷஸ ஜாதிகள், ஸ்வபாவத்தில் அதிக துக்கமுடைய பிராணிகள், தர்மமில்லாதவர், உளுந்து, எள்ளு—இவைகளுக்கு ராகு அதிபதி,

மலைதுர்கம், பஹ்லவர் என்பவர்கள், வெள்ளைக்காரர்கள், சோழ தேச ஜனங்கள், ஆவகாணன், பாலவனம், சின தேச ஜனங்கள், குன்றில் வஸிப்பவர், தனிகர், அதிக ஆசையுடை வர், முயற்சி செய்யும் ஸ்வபாவமுடையவர், பராக்ரமமுள்ளவர், பரஸ்திரீரதர், விவாதத்தில் ஆசையுடையவர், பிறர் படும் துய ரத்தில் பற்றுடையவர், மதமுள்ளவர், பிடிவாதமுள்ளவர், தர்ம மில்லாதவர், மற்றவரை ஜயிப்பதில் நோக்குடையவர்—இவை களுக்கு கேது அதிபதியாவார்.

எந்த க்ரஹம் உதய காலத்தில் காந்தி உள்ளதாகவும், விஸ் தீர்ணமுள்ளதாகவும், இயற்கையிலிருப்பதாகவும், நிர்க்காதம், உல்கை முதலியவைகளாலும், தூளியினாலும் க்ரஹ யுத்தத் தாலும் கெடாமலும், ஸ்வக்ஷேத்ரத்திலிருப்பதும், உச்சத்தை

யடைந்ததும், சுப க்ரஹ வீக்ஷணமுள்ளதாகவுமிருக்கிறதோ; அந்த க்ரஹம் எவ்வெவைகளுக்கு அதிபதியாகச் சொல்லப்பட்டிருக்கிறதோ அவ்வவைகளுக்கு நன்மை தரும். மாறுனதாக க்ரஹமிருப்பின் பலனும் மாறி விடும். அக்காலத்தில் உலகில் கலஹம், ஆயுதம், பயம், ரோகம்—இவைகளால் ஜனங்கள் பிடிக்கப்படுவதுடன் அரசர்களும் கஷ்டப்படுவர். இக்கஷ்ட காலத்தில், அரசர்களுக்கு சத்ருவால் பயம் ஏற்படாமற் போனாலும், புத்ரன், மந்த்ரி, சிகிச்சதன் மூலமாகவாவது கஷ்டமுண்டாவது நிச்சயம். உலகத்தில் மழை இல்லாமல் ஜனங்கள் சாப்பாட்டுக்குக் கஷ்டப்படுவதுடன், ஆஹாராதிகளைத் தேடிக்கொண்டு பல பட்டணங்கள், மலை, நதிகள் முதலியவைகளை அடைவார்கள். நக்ஷத்ர தசை புக்தி கோசாரம் மூலம் பலனைப் பார்க்கும்போதும், தசாநாதர் புக்திநாதர் முதலியவர்களின் கால நிலையையும், அவர்களின் ஆதிபத்யத்தையும் கவனித்துப் பலனை ஊஹித்து ஆராய வேண்டும்.

வியாபாரம், அடையாளம், ராஜஸன்மானம், ராஜ்யம், பிதாவைப்பற்றியவை, உயர் ஸ்தானம், ப்ரவிருத்தி, ஆஜ்ஞை, கீர்த்தி, மழை, வெளியூர் செல்கை, கிணறுகள், குளம், ஆலய நிர்மாணம், தோட்டம் அமைத்தல் முதலியனவைகளையும் கவனித்து அறியவும்.

10-மிடத்தில் ராகு, சனி அல்லது கேது இருந்தால் 27-வயதில் சத்ருவிடமிருந்து பயமும், துஷ்கார்யமூலம் பொருட்செலவும் ஆயுதங்களால் பயமும் ஏற்படும்.

பத்தில் குரு சுக்ரனுடன் சேர்ந்தும், லக்னாதிபன் துர்பலனாயும், சனி உச்சத்திலிருந்தால் சூதாடியாகவும் தனவானாகவுமாவான்.

லக்னாதிபன் பத்திலும், தசமாதிபன் லக்னத்திலுமிருந்தாலும், லக்ன தசமாதிபர்கள் கேந்த்ரத்திலிருந்தாலும் ஸுக ஜீவியாவான்.

கர்மாதிபன் துர்பலனாகவோ, பாபியோடு கூடியோ இருந்தால் நற்கருமங்கள் அழியும்.

கர்மாதிபன் குரு புத்ரர்கள் பலிஷ்டர்களானால் யாகம் செய்பவர்களாவார்.

தசமாதிபன் குரு, புதன் இவர்கள் பலிஷ்டர்களாய் சுப க்ரஹ ஸம்பந்தம் அல்லது பார்வை பெற்றால் பிரபல யாகம் செய்பவனாவான்.

புத குரு சுக்ரர்கள் 6, 8, 12-களிலிருந்து பாபர்களால் பார்க்கப்பட்டாலும், இந்த ஸ்தானங்களின் அம்சநாதன் அஷ்டமத்திலிருந்தாலும், அம்சநாதர்கள் இருக்கும் ராசியதிபன் அஷ்டமத்திலிருந்தாலும் காரிய நாசம்.

ஜல ராசி கர்ம ஸ்தானமாகி பூர்ண சந்த்ரன் குரு அவ்விடத்திலிருந்தாலும், கர்மாதிபன் கர்ணனுடன் சேர்ந்து கேந்த்ரம் அல்லது உச்ச வீட்டிலிருந்தாலும், கங்கா ஸ்நானம் கிடைக்கும்.

குரு செவ்வாய் அல்லது புதனுடன் சேர்ந்து தசம ஸ்தானத்திலிருந்து தசமாதிபனும் கூடினால் மதில், கோபுரம், மண்டபம் முதலியவைகளைக் கட்டுபவனாகவும், ஜீர்ணோத்தாரம் செய்பவனாகவுமாவான்.

தசமாதிபன் கோபுராம்சத்திலிருக்க தண்ணீர்ப் பந்தல், கிணறு, குளம் முதலியவைகளை ஏற்படுத்துவான்.

கர்மாதிபன் உச்சத்திலிருந்து புதனுடன் சேர்ந்து சுப வீக்ஷணம் பெற்றாலும், புதன் உச்சமாகி, தசமாதிபனுடன் சேர்ந்தாலும், தசமாதிபதி லாபத்திலிருந்து லக்னாதிபனுடன் சேர்ந்தாலும், சுக்ரன் பத்தாமிடத்திலிருந்தாலும், தசமாதிபன் கேந்த்ரம், த்ரிகோணம் அல்லது ஸ்வக்ஷேத்ரத்திலிருந்து குரு வீக்ஷணம் அல்லது ஸம்பந்தம் பெற்றாலும், கர்மாதிபன் லக்னத்தில் லக்னாதிபனுடன் சேர்ந்து, சந்த்ரன் கேந்த்ர கோணங்களிலிருந்தாலும் நற்காரியம் செய்பவனாவான்.

சனி தசமத்தில் நீச க்ரஹத்துடன் சேர்ந்தும், தசமாதிபன் பாபியுடன் கூடியுமிருக்க நற்காரியம் செய்யாதவனாவான்.

லக்னாதிபன் 8-லும், 8-க்கதிபன் 10-லுமிருந்து க்ரூர க்ரஹத்துடன் சேர்ந்தால் கெட்ட கார்யத்தில் ஆசையுடையவனாவான்.

தசமாதிபன் நீச ராசியிலும், பாப க்ரஹம் தசமத்திலும், ஏழில் பாபருமிருக்க கர்ம நாசமாகும்.

தசமத்தில் சுபரிருந்தாலும், சுபனால் பார்க்கப்பட்டாலும் நன்னடத்தையுள்ளவனாவான்.

தசமத்தில் பாபியிருந்தாலும். தசம ஸ்தானம் பாபரால் பார்க்கப்பட்டாலும் ஆசாரமில்லாதவனுவான்.

உச்ச க்ஷேத்ரம் அல்லது ஸ்வக்ஷேத்ரமான தசம ஸ்தானத்தில் குரு அல்லது சுபரிருக்க மந்த்ரியாகவும், உறுதியான எண்ணமுள்ளவனுகவும் இங்கிதமறிந்தவனுகவும் மானிபாகவுமாவான்.

தசமாதிபன் சர ராசியின் அம்சத்திலிருக்க எப்போதும் ஸஞ்சாரம் செய்பவனுகவும், ஸ்திர ராசியின் அம்சத்திலிருக்க ஒரே யிடத்தில் நிலைத்திருப்பவனுகவும், உபய ராசியின் அம்சத்திலிருக்க நடுநிலைமையிலிருப்பவனுகவுமாவான்.

சந்த்ரன் தசமத்திலும், சனி 2, 6-களிலும், லக்னாதிபன் 10-லுமிருந்தாலும், லாபாதிபன் தசமத்திலும், தசமாதிபன் பலிஷ்டனுய் குரு வீக்ஷணம் பெற்றிருந்தாலும், தசமாதிபன் 9 அல்லது 10-ல் வலித்து சந்த்ரனும் தசமத்திலிருந்தாலும் நற்கீர்த்தியையுடையவனுவான்.

தசமாதிபன் சர ராசியான கேந்த்ரத்தில் சுபனேடு சேர்ந்து அல்லது பார்வை பெற்றிருக்க எப்போதும் முயற்சியுள்ளவனுவான்.

தசமாதிபன் பாபியாகி பாப ஸம்பந்தம் அல்லது வீக்ஷணம் பெற்றாலும், நீசனுனாலும் முயற்சியில்லாதவனுவான்,

தசமத்தில் சுபர்களிருக்க எப்போதும் நேர் வழியில் செல்பவனுகவும், பாபிகளிருக்க கெட்ட வழியில் செல்பவனுகவுமாவான்.

தசமாதிபன் சுபனுய் சுபன் பார்வை பெற்றாலும், சுபாம்சத்திலிருந்தாலும், தசமாதிபன் கேந்த்ரத்திலிருந்து தசமத்தில் சூரியன் அல்லது செவ்வாயிருந்தாலும், தசமத்தில் சனி அஷ்டமாதிபனுடன் கூடினாலும், சனி க்ரூராம்சம் கேந்த்ரம் இவைகளிலிருந்தாலும் கடுமையாக உத்தரவு செய்பவனுவான்.

தசமாதிபன் கேந்த்ரத்திலிருந்தாலும் சுப ஸம்பந்தம் வீக்ஷணம் பெற்றாலும், சுப ஷஷ்ட்யம்சத்திலிருந்தாலும், ஸாதாரணமாக ஏவுவான்.

ரோகாதிபன் கர்ம ஸ்தானத்திலும், தர்மாதிபன் 6, 8, 12-களிலுமிருந்தால் அபிவ்ருத்தியைப் பெறுவான்.

தசமாதிபன் ஸப்தமத்தில் சந்த்ரன், செவ்வாய்களுடன் கூடினாலும், தசமாதிபன் பாபிகளுடன் கூடினாலும், பாப க்ரஹம் ஸ்வக்ஷேத்ரத்தில் சுக்ரனுடன் கூடியும், லக்னாதிபன் பாபியுடன் கூடியுமிருந்தாலும் சிற்றின்ப சுகம், வயிறு வளர்த்தல்—இவைகளில் மட்டும் ஈடுபட்டவனுவான்.

உச்ச க்ஷேத்ரமான தசமத்தில் தசமாதிபன் குருவுடன் சேர்ந்து தர்மாதிபன் கர்ம ஸ்தானத்திலிருந்தால், காமம், ஐச்வர்யம், பொருள்களுள்ளவனுவான்.

ரோகாதிபன் கர்ம ஸ்தானத்திலும், கர்மாதிபன் சனி, ரோகாதிபர்களுடன் கூடினால் தாஸீ தாஸர்களுடன் கூடியவனுவான்.

தசமத்தில் சுபன் அல்லது சுப வீக்ஷணம் இல்லாதிருக்க தரித்ரனுவான்.

சத்ரு ஸ்தானாதிபன் தசமத்திலும், தசம ஸ்தானாதிபன் சனியுடன் சேர்ந்தாலும் அல்லது கேந்த்ர த்ரிகோணங்களிலிருந்தாலும், தசமாதிபதி வலிக்கும் அம்சாதிபன் சனி ஸம்பந்தம் பெற்றாலும், ரோகாதிப ஸம்பந்தமடைந்தாலும், தசம ஸ்தானம் அல்லது தசமாதிபன் சுப வீக்ஷணம் பெற்றாலும், சனியோடு சேர்ந்தாலும் அநேக வேலையாட்களிருப்பார்கள்.

தசம ஸ்தானத்துக்கு சுப க்ரஹ வீக்ஷணமதிகமிருந்தாலும், தசமத்தில் புதனிருந்தாலும், தசமாதிப லக்னாதிபர்களுக்கு ஸம்பந்தமிருந்தாலும், லக்னாதிபன் 10-லிருந்தாலும், தசமாதிபன் 1, 4, 7, 10, 11, 5, 9-இடங்களிலிருந்து சுபரால் பார்க்கப்பட்டாலும் வியாபாரியாவான்.

தர்மாதிபன் லக்னத்திலிருந்து குருவால் பார்க்கப்பட்டாலும், குரு புதர்களின் சேர்க்கையிலிருந்தாலும் அரசனால் கொண்டாடப்படுபவனுவான்.

தசமாதிபன் தன் க்ஷேத்ரத்தில் சுபருடன் கூடினாலும், தசம ஸ்தானத்தில் தசமாதிபன் சுப ஸம்பந்தம் பெற்றிருந்தாலும், மானியாவான்.

தசமாதிபன் சுபவர்க்கத்திலோ தன் உச்ச க்ஷேத்ரத்திலோ இருக்க அதிகம் மானியாவான்.

தசம ஸ்தானம் சுபக்ரஹ மத்தியிலிருந்தாலும், தசமாதிபன் வைசேஷிகாம்சத்திலிருந்தாலும் மானியாயிருப்பான்.

தசமாதிபன் பாப ஸம்பந்தம் பெற்றாலும், தசமாதிபன் பாப வர்க்கத்தில் அல்லது க்ரூர ஷஷ்ட்யம்சத்திலிருந்தாலும் மான மில்லாதவனுவான்.

தர்மாதிபன் லாப ஸ்தானத்திலிருந்தாலும், பாராவதம் முதலிய அம்சங்கள் பெற்றிருந்தாலும், லக்னாதிபன் சுபவர்க்கம் அல்லது கோபுராத்யம்சத்திலிருந்தாலும் அரசனால் வணங்கப் படுபவனுவான்.

தசமாதிபன் துர்பலனாய் பாப ஸம்பந்தம் பெற்றிருந்தாலும், புத, குரு, சுக்ரர்கள் 6, 8, 12-களிலிருந்து பாப வீக்ஷணம் பெற்றாலும், பத்தாமிடத்தில் பாபிகளின் பார்வை அதிகமிருந்தாலும் தசமாதிபன் 6, 8, 12-களிலிருந்தாலும் கர்மம் கெட்டுவிடும்.

நவாம்சத்தில் தசம ஸ்தானத்தில் சூரியனிருந்தாலும், கேந்த்ரத்திலிருந்தாலும், சந்த்ரன் கேந்த்ர கோணங்களிலிருந்தாலும், தசமாதிபன் லாபத்திலோ, கேந்த்ரத்திலோ இருந்தாலும், குரு, லக்னம், 4-மிடங்களிலிருந்தாலும் ராஜ கார்யம் செய்வான்.

நவாம்சத்தில் பத்தாமிடத்தில் இரு க்ரஹங்களிருந்தாலும், இரு க்ரஹங்கள் ஸ்வ க்ஷேத்ரத்திலிருந்தாலும், 3-ல் குருவும், 11-ல் சந்த்ரனுமிருந்தாலும், லக்னத்தில் குஜனும், சிம்மம் ஐந்தாமிட மாகி அங்கு சந்த்ரனும், 12-ல் ராகுவிருந்தாலும் குலத்துக்கு ப்ரகாசகனுவான்.

6, 8-க்கு அதிபதிகள் ஒருவருக்கொருவர் பரிவர்த்தனை பெற்றோ, கேந்த்ரத்திலோ இருந்தாலும், 6-ல் குருவும், 11-ல் சந்த்ரனுமிருந்தாலும், லாபாதிபன் சுபாம்சத்திலிருந்தாலும், பிரதாபமுடையவனுவான்.

லாப ஸ்தானத்தில் பலமுடைய சுபரிருந்தாலும், லாப ஸ்தானம் பலம் பெற்று அங்கு சுபரிருந்தாலும், சுபர் பார்வை பெற்றாலும், சந்த்ர, குரு, சுக்ரர்கள் தனத்திலிருந்தாலும் ஐச்வர்யவானுவான்.

தசமாதிபன் சுபனுய் சுப ஸம்பந்தம் வீக்ஷணம் பெற்றாலும், தசமாதிபன் பாராவதாதி அம்சம் அடைந்தாலும், தசமாதிபன் சுபர்களின் மத்யத்திலிருந்தாலும், குரு, சுக்ரர்களுடன் கூடியிருந்தாலும், பித்ரு காரகர்கள் கோபுராத்யம்சத்திலிருந்தாலும் தகப்பன் மூலம் சுகமுண்டாகும்.

10, 6-க்கு அதிபதிகள் 10-லிருந்தாலும், லக்னாதிபன் பாப ருடன் கூடி இரண்டிலிருந்தாலும், 2, 6, 7-க்குடையவர்கள் பாப ரோடு சேர்ந்து 9-லிருந்தாலும், 4, 6-க்குடையவர்கள் 9-லிருந்தாலும், 9, 4-க்கு அதிபர்கள் நான்கிலிருந்தாலும் தகப்பன் பரஸ்திரீ ரதனுவான்.

சூரிய குஜர்கள் 10 அல்லது 9-லிருக்க தகப்பன் சிக்ரத்தில் மரணமடைவான். பாபருடன் கூடிய சூரியனிருந்தாலுமிப்படியே.

சர ஸ்தானமான கேந்த்ரத்தில் சூரியன் அல்லது சந்த்ர னிருக்க தாய் தகப்பன்களை தஹனம் செய்யமாட்டான்.

சந்த்ர சூர்யர்கள் 9-லிருக்க தகப்பன் ஜலத்தில் மரணமடை வான்.

7-ல் சூரியனும், 10-ல் குஜனும், 12-ல் ராகுவிருந்தாலும், சத்ரு க்ஷேத்ரமான தசமத்தில் செவ்வாய் வஸித்தாலும் தகப்பன் ஜீவிக்கமாட்டான்.

லக்னத்தில் குருவும், இரண்டில் புத, குஜ, சனிகளிருக்க கல்யாண காலத்தில் தகப்பனுக்கு மரணமேற்படும்.

சுக்ர சூர்யர்கள் சர ராசியில் செவ்வாயால் பார்க்கப்பட்டிருந் தாலும், சேர்ந்திருந்தாலும், தகப்பன் தேசாந்த்ரத்தில் மரண மடைவான்.

குஜ சூரியர்கள் தசம ஸ்தானமான மேஷத்திலிருந்தாலும், சனி குஜர்கள் தசமத்திலிருந்தாலும், ஜாதகி பிறப்பதற்கு முன்பே பிதாவின் மரணம் ஸம்பவிக்கும்.

4, 2, 1-க்கு அதிபர்கள் ஸ்வக்ஷேத்ரத்திலும், 9-க்குடையவன் லக்னத்திலிருந்தாலும், 9, 1, 4-க்குடையவர்கள் 10-லிருந்து பலத்தையடைந்து தசமாதிபனோடு சேர்ந்தாலும், 4-க்குடைய வன் 9-லும், 4-ல் குரு சுக்ரர்களும், 9-க்குடையவன் கேந்த்ர

கோணங்களிலிருந்தாலும், தனுதிபன் கேந்த்ரம் அல்லது உச்ச க்ஷேத்ரத்திலிருந்து சுப வீக்ஷணம் பெற்றாலும், சுபர்கள் கேந்த்ரத்திலும், பாபர்கள் 3, 6-க்குடையவர்களுடன் கூடினாலும் ஸிம்ஹாஸன ப்ராப்தி ஏற்படும்.

ஆறு கிரஹங்கள் ஸ்வக்ஷேத்ரம் பெற்றாலும், சூரியன் சுப ஷஷ்ட்யம்சத்திலிருந்தாலும், குரு சந்த்ரர்கள் ஐந்தில் அல்லது வர்கோத்தமாம்சத்திலிருந்தாலும், சந்த்ரன் லக்னத்திலும், குரு நாலிலும், சுக்ரன் பத்திலும், சனி ஸ்வக்ஷேத்ரம் அல்லது உச்ச க்ஷேத்ரத்திலிருந்தாலும், சுப க்ரஹங்களனைத்தும் 10 முதல் 3-மிடத்துக்குள் இருந்தாலும், சுபர்கள் கேந்த்ர கோணங்களிலும், பர்பிகள் 3, 6, 11-களிலும், லக்னாதிபதி பலம் பெற்றிருந்தாலும், நீசத்தை அடைந்த கிரஹத்தின் உச்ச க்ஷேத்ராதிபன் அல்லது நீசனுள்ள சந்த்ரனுடைய உச்ச ஸ்தானத்துக்கு அதிபதி கேந்த்ரத்திலிருந்தாலும், பலத்தை அடைந்த சந்த்ரன் லக்னமில்லாத மற்ற கேந்த்ரம் அல்லது த்ரிகோணத்திலிருந்து சுக்ரன் அல்லது குருவால் பார்க்கப் பெற்றாலும், நீசமடைந்தவர்கள் நவாம்சத்தில் தன் உச்சாம்சம் பெற்றாலும், லக்னத்தில் குருவும், கேந்த்ரத்தில் புதனும் வலித்து தர்மாதிபனால் பார்க்கப் பெற்றாலும், தசமாதிபதி தன் உச்ச க்ஷேத்ராம்சத்திலோ, மித்ராம்சத்திலோ, பராவதாம்சத்திலோ இருந்தாலும், குரு நீசனுகவும், தர்மாதிபன் லக்னத்திலும், 8-மிடம் சுபாம்சத்திலுமிருந்தாலும், குரு 12-லும், 11-ல் சனியும், சூரியன் த்ருதியாதிபனுமிருந்தாலும் அரசனுக்கு ஸமமாயிருப்பான்.

ஆறு கிரஹங்கள் தனது உச்ச க்ஷேத்ரங்களிலிருந்தாலும், தசமாதிபன் பஞ்சமத்திலும், 4-க்கதிபன் தசமத்திலுமிருந்து 5, 9-க்கு அதிபதியால் பார்க்கப் பெற்றாலும், 5, 9-க்குடையவன் 7 தவிர மற்ற கேந்த்ர ஸ்தானங்களில் லக்னாதிபனோடு சேர்ந்திருந்தாலும், சந்த்ரனுக்கு மூன்றில் சனி சூர்யர்களும், 4-ல் புத சுக்ரர்களும், 11-ல் குருவிருந்தாலும், குரு லக்னத்திலும், 4, 7-களில் சூரியனும், 5-ல் வக்ரனான சுக்ரனிருந்தாலும், குரு, சூரியர்கள் மேஷத்திலும், செவ்வாய் 10-லும், புத சுக்ர சந்த்ரர்கள் 9-லுமிருந்தாலும், கன்னி லக்னமாகி அங்கு புதனும், மீனத்தில் குருவும், 11-ல் சனியும், தனுஸ்ஸில் சுக்ரனும், விருச்சிகத்தில் குஜ

சூர்யர்களிருந்தாலும், 9-ல் சனியும், மகரத்தில் செவ்வாயும், புத குரு சுக்ரர்கள் பஞ்சமத்திலிருந்தாலும், க்ரஹங்களனைத்தும் சர ராசியிலிருந்தாலும், 3-ல் சனியும், 6-ல் செவ்வாயும், 10-ல் சுக்ரனும், உச்ச க்ஷேத்ரமான 9-ல் சூரியனுமிருந்தாலும், பஞ்சமாதிபன் பலமடைந்து தர்ம கர்மாதிபர்கள் சேர்ந்து கேந்த்ரத்திலிருந்தாலும், தசமாதிபன் தேவலோகாம்சத்திலும், லக்ன நவமாதிபர்கள் பாராவதாம்சத்திலும், லாபாதிபன் கோபுராம்சத்திலுமிருந்தாலும், விருஷபம், மீனம், விருச்சிகம், கன்னி— இவ்விராசிகளுள் கிரஹங்களனைத்து மிருந்தாலும், கும்பம், ஸிம்மம், மிதுனம், தனுஸ் — இவ்விராசிகளுள் எல்லா கிரஹங்களுமிருந்தாலும், துலாம், கன்னி, தனுஸ், மகரம், ஸிம்மம்—இவைகளில் க்ரஹங்களனைத்துமிருந்தாலும், கன்னி, மிதுனம், மேஷம், விருச்சிகம், ஸிம்மம், தனுஸ், மீனம், கும்பம்—இவ்விராசிகளுள் எல்லா க்ரஹங்களும் இருந்தாலும், மிதுனம், கன்னி, கடகம், தனுஸ், மீனம்—இவைகளுள் எல்லா க்ரஹங்களிருக்குமானாலும் ஜாதகன் சக்ரவர்த்தியாவான்.

லக்னத்திலிருந்து அல்லது சந்த்ரனிடமிருந்து 9, 10-க்கு அதிபர்கள் ஒருவருக்கொருவர் மாறியிருந்தாலும், 7 கிரஹங்கள் ஸ்வக்ஷேத்ரம் பெற்றாலும், 7 கிரஹங்கள் மித்ர க்ஷேத்ரங்களில் வலித்தாலும், 3 முதல் அதிக கிரஹங்கள் உச்ச க்ஷேத்ரங்களிலிருந்தாலும், க்ரூர கிரஹங்கள் உச்ச க்ஷேத்ரங்களிலிருந்தாலும் (க்ரூர க்ரஹங்களானால் க்ரூர ஸ்வபாவம், சுப க்ரஹங்களானால் நல்ல ஸ்வபாவம், கலந்திருந்தால் மிச்ர ஸ்வபாவம் என்று கண்டுகொள்வது.) ஐந்து முதலிய க்ரஹங்கள் உச்சத்திலிருந்தாலும், (ராஜ வம்சமில்லாமற் போனாலும் அரசனுவான்.) லக்னத்தில் சந்த்ரன், சனி, சூரியன், செவ்வாய், குரு— இவர்கள் தங்கள் உச்சத்திலிருந்தாலும், மேஷ கடக துலாங்கள் லக்னமாகவும், சனி, சூரியன், குரு தம் உச்ச க்ஷேத்ரத்திலிருந்தாலும், மேஷம், கடகம், மகரம்—இவைகள் லக்னமாய் செவ்வாய் குரு, சூரியர்கள் உச்சத்திலிருந்தாலும், மேஷம், துலாம், மகரங்கள் லக்னமாகி சனி, செவ்வாய், சூரியர்கள் உச்சத்திலிருந்தாலும், கடகம், துலாம், மகரம் லக்னமாகி, சனி, செவ்வாய், குரு உச்ச க்ஷேத்ரங்களிலிருந்தாலும், கடகத்தில் சந்த்ரனும், குரு உச்ச க்ஷேத்ரத்திலிருந்து சூரியன்—இவர்களுள் ஒருவன் லக்னத்

நிலிருந்தாலும், சந்த்ரன் ஸ்வக்ஷேத்ரத்திலும், உச்சமான சனி சூர்யர்களில் ஒருவர் லக்னத்திலிருந்தாலும், சந்த்ரன் கடகத்தை யடைந்து உச்சமான சூரியன் செவ்வாய்களுள் ஒருவர் லக்னத்தி லிருந்தாலும், கடகத்தில் சந்த்ரனும் உச்சத்தை அடைந்த சனி குரு இவர்களில் ஒருவர் லக்னத்திலிருந்தாலும், கடகத்தில் சந்த்ரன் வலித்து உச்சத்தை அடைந்த குரு செவ்வாய்களுள் ஒருவர் லக்னத்திலிருந்தாலும், சந்த்ரன் கடகத்திலும் உச்சத்தை அடைந்த சனி செவ்வாய்களுள் ஒருவர் லக்னத்திலிருந்தாலும். மேஷம் லக்னமாய் அங்கு சூரியனும், சந்த்ரன் கடகத்திலிருந் தாலும், கடகம் லக்னமாகி அங்கு குரு சந்த்ரர்களிருந்தாலும், துலாம் லக்னமாகி அங்கு சனியும், சந்த்ரன் கடகத்திலுமிருந்தா லும், லக்னம் வர்கோத்தமாம்சம் பெற்று சந்த்ரனைத் தவிரநான்கு மேலும் அதிக க்ரஹங்கள் பார்த்தாலும், சந்த்ரன் வர்கோத்த மாம்சம் அடைந்து நான்கு முதலிய க்ரஹங்களால் பார்க்கப்பட் டாலும், கும்பத்தில் சனியும், மேஷத்தில் சூரியனும், விருஷ பத்தில் சந்த்ரனும், கும்ப மேஷ விருஷபங்களில் ஒன்று லக்ன மாய், மிதுன லிம்ம விருச்சிகங்களுள் புத குரு செவ்வாய்கள் வலித்தாலும், புத ஸ்திரியர்கள் 6-லும் சனி சந்த்ரர்களுள் ஒருவர் உச்சத்திலும், மேஷம் லக்னமாய் அங்கு செவ்வாயும், சுக்ரன் துலாத்திலும், கடகத்தில் குருவுமிருந்தாலும், லக்னத்தில் சனி, மகரத்தில் செவ்வாய், தனுஸில் சந்த்ர சூரியர்களிருந் தாலும், லக்னம் மகரமாய் அங்கு சந்த்ரன் செவ்வாய்களும், தனு ஸில் சூர்யனுமிருந்தாலும், சந்த்ர சனிகள் 7-லும், லக்னத்தில் ஸ்திரியனும், தனுஸில் குருவுமிருந்தாலும், விருஷபம் லக்னமாகி அங்கு சந்த்ரனும், ஸ்திரியன் லிம்மத்திலும், சனி 10-லும், குரு ஏழிலுமிருந்தாலும், மகரம் லக்னமாய் லக்னத்தில் சனியும், 3-ல் சந்த்ரனும், செவ்வாய் மிதுனத்திலும், 9-ல் புதனும், 12-ல் குருவு மிருந்தாலும், தனுஸில் குரு சந்த்ரர்களும், செவ்வாய் மகரத் திலும், உச்சத்தை யடைந்த புத சுக்ரர்களில் ஒருவர் லக்னத்தி லிருந்தாலும், கன்னி லக்னமாகி அங்கு புதனும், சனி செவ்வாய் கள் 5-லும், சந்த்ர குரு சுக்ரர்கள், 4-லிருந்தாலும், கும்பத்தில் சனியும், உச்சத்தில் செவ்வாயும் லிம்மத்தில் ஸ்திரியனும், லக்னம் மீனமாய் அங்கு சந்த்ரனுமிருந்தாலும், குரு கடகத்திலும், மேஷத்தில் செவ்வாயும், குரு செவ்வாய்களில் ஒருவர் லக்னத்தி

லுமிருந்தாலும், மேஷத்தில் ஸ்திரியனும், சந்த்ர சுக்ர புதர்கள் 11-லும், கடகம் லக்னமாய் அங்கு குரு வலித்தாலும், மகரம் லக்னமாகி சனி அங்கிருந்து ஸ்திர சந்த்ரர்கள் ஸ்வக்ஷேத்ர த்திலும் செவ்வாய் மேஷத்திலும், மிதுனத்தில் புதனும், துலாத் தில் சுக்ரனுமிருந்தாலும், கன்னி லக்னமாய் அங்கு புதனும், சுக்ரன் 10-லும், குரு சந்த்ரர்கள் 7-லும், சனி குஜர்கள் 5-லிருந் தாலும், தேஹ காரகனுக்கு 2, 4, 5 களில் சுபர்களிருந்தாலும், தேஹகாரகனுக்கு 3, 6-ல் பாபியிருந்தாலும், லக்னம் கடகமாய் 4 ல் சனி செவ்வாய்களும், புத குரு சுக்ரர்கள் 10-லுமிருந்தாலும், கும்பம் லக்னமாகி அதில் சுக்ரனும், 4 க்ரஹங்கள் உச்ச க்ஷேத்ர த்திலிருந்தாலும், பலிஷ்டர்களான க்ரஹங்கள் தம்உச்ச ஸ்தானத் தில் முதல் 6 இராசிகளுள் முன் பாகத்தில் (மேஷம், விருஷபம், மிதுனம்) இருந்தாலும், சனி குஜர்கள் பூர்ண சந்த்ரனோடு சேர்ந்து 9-லிருந்தாலும் ஜாதகன் அரசனுவான்.

தனுஸ், மீனம், துலாம்—இவைகளில் ஒன்று லக்னமாய், அங்கு சனியிருந்தாலும், பத்தாமிடத்தில் புத சூரியர்களும், 6-ல் ராகு குஜர்களிருந்தாலும், 3-ல் குருவும், 8-ல் சுக்ரனுமிருந்தாலும், செவ்வாய் லிம்மத்திலும், ராகு மிதுனத்திலிருந்தாலும், சந்த்ர குஜர்கள் லக்னம் அல்லது தசமத்திலிருந்தாலும், லக்னாதிப சுபர்கள் 3, 6, 10, 11-களிலிருந்தாலும், ராகு சந்த்ர செவ்வாய்கள் 5-லிருந்தாலும், லக்னம் சர ராசியாய், நவ மாதிபன் லிம்மாம்ஸாம்சத்தில் அல்லது கேந்த்ரத்திலிருந்தாலும், ஸ்திர ராசி லக்னமாகி லக்னாதிபன் குரு கேந்த்ரத்திலிருந்தாலும், நவமாதிபதி நவாம்சத்தில் எந்த ராசியிலிருக்கிறாரோ அவ்விட்டுக்குடையவன் 4, 5-களிலிருந்தாலும் அரச வம்சத்தில் பிறந்தவன் அரசனுவான்.

சூர்யன் சுப ஷஷ்ட்யம்சம், கேந்த்ரம், 11, 5, 9-களிலிருந் தாலும், பஞ்சமாதிபன் பாக்யத்திலும், பஞ்சமத்தில் பாக்யா தி பனுமிருந்தாலும், 5, 9, 4, 10, 1-க்கு அதிபர்கள் ஒருவருடனொ ருவர் சேர்ந்திருந்தாலும், சந்த்ரன் வலிக்கும் ராசிக்கு தசமாதி பன் பலவானுகி, கேந்த்ரம், 9 அல்லது 2-லிருந்தாலும், ஒரு க்ரஹமாவது உச்சத்தை யடைந்து மித்ர விக்ஷணம் பெற்றாலும், நவமாதிபன் தனுஸு அல்லது மீனத்திலும், சுக்ரன் தசமத் திலிருந்து பஞ்சமாதிபனால் பார்க்கப்பட்டாலும், குரு சுக்ரர்கள்

நான்கிலிருந்தாலும், குரு சந்த்ரர்கள் கடகத்திலிருந்தாலும், சந்த்ர புதர்கள் கன்னியிலிருந்தாலும், ஸூரியன உச்சராசியில் பலவானன சனியுடன் சேர்ந்திருந்தாலும், குரு சுக்ரர்கள் உச்சம் அல்லது கேந்த்ர கோணங்களிலிருந்தாலும், 7, 2, 1, 12-களில் எல்லா க்ரஹங்களுமிருந்தாலும், 7-மிடம் தவிர மீதமுள்ள கேந்த்ரத்திலோ சுகாதிபனிருந்தாலும், குரு உச்சத்திலும், சுக்ரன் கேந்த்ரம் அல்லது 10-லுமிருந்தாலும், தசமாதிபன் கேந்த்ரம் 5, 9, 2-மிடங்களிலிருந்து சுபன் பார்த்தாலும், தசமாதிபன் சுபனோடு சேர்ந்து, ஐந்திலும், ஐந்துக்குடையவன் தனுஸிலுமிருந்தாலும், தனாதிபன் பாராவதாம்சம் பெற்று சுப வீக்ஷண மடைந்து சந்த்ரனுக்கு நவமஸ்தானாதிபன் தேவலோகாம்சத்திலுமிருந்தாலும், லக்னாதிபன் 9-லும், தசமாதிபன் லக்னத்திலுமிருந்தாலும், ஸூர்ய சந்த்ரர்கள் லக்னத்திலும், 10-ல் செவ்வாயும், 11-ல் சனியும், 9-மிடமான தனுஸில் குருவிருந்தாலும் ஸ்வ க்ஷேத்ரமான 4-ல் சுக்ரனும், சந்த்ரன் 9-லிருந்தாலும், லக்னத்தில் சனியும், 4-ல் குருவும், 10-ல் சந்த்ர ஸூரியர்களும், 11-ல் புதன், செவ்வாய், சுக்ரர்களுமிருந்தாலும், சந்த்ரன், சனி, குரு இவர்கள் 10, 11, 1-லும், புதன் செவ்வாய் இரண்டிலும், சுக்ர ஸூர்யர்கள் நான்கிலுமிருந்தாலும், குரு கோபுராத்யம்சத்தில் பலம் பெற்று பஞ்சமாதிபனுடன் சேர்ந்திருந்தாலும் ராஜ வம்சத்தில் ஜனன மானவன் அரசனாகவும், பிற வம்சத்தில் பிறந்தவன் மந்த்ரியாகவுமாகிறான்.

9, 11, 10-க்கு அதிபர்கள் நீசம் பெற்றிருந்தாலும், த்விதீயை ஸப்தமீ, துவாதசி, வியதீபாதம்—இவைகளில் மாதம் பிறக்கும் ஸமயத்தில் ஜனனமானாலும், சந்த்ரன் பரம நீசாம்சம் பெற்றிருந்தாலும், உச்சமடைந்த க்ரஹங்கள் நீசாம்சம் பெற்றாலும், ஸூரியன் பரம நீசம் பெற்றிருந்தாலும், நீசமடைந்த சுக்ரன் ஸிம்ஹாம்சத்திலோ, தன் அம்சத்திலோ இருந்தாலும், ராஜ யோகத்தைத் தரும் க்ரஹங்கள் நீச க்ஷேத்ரம், சத்ரு க்ஷேத்ரம் அஸ்தமனம் இவைகளை அடைந்திருந்தாலும், இடி விழுதல், பூகம்பம் முதலியன ஏற்படும் காலத்தில் பிறந்தாலும், பத்தாமிடத்தில் நீசம் பெற்ற க்ரஹமிருந்தாலும், நான்கு க்ரஹங்கள், சத்ரு க்ஷேத்ரம் அல்லது நீசாம்சத்திலிருந்தாலும், சந்த்ரன் அல்லது லக்னம் எந்த க்ரஹத்தினாலும் பார்க்கப்படாமலிருந்

தாலும், சூரியன் ஸிம்ஹாம்சத்திலும், க்ஷீண சந்த்ரன் பாபருடன் கூடி சுப வீக்ஷணமில்லாமலிருந்தாலும், குரு அல்லது சுக்ரன் பரம நீசாம்சம் பெற்றிருந்தாலும், எல்லா பாப க்ரஹங்களும் நீச மடைந்தும் அல்லது கேந்த்ரம் பெற்றும் சுபர்கள் 6, 8, 12-களிலிருந்தாலும், சுபர்கள் அஸ்தமனமாகி கேந்த்ரம் பெறாதவர்களுமாகி லக்னத்திலிருக்கிற ராகு சந்த்ரனால் பார்க்கப் பெற்றும் பாபிகள் 3, 6, 11-களிலிருந்தாலும் ராஜ யோகங்கள் பழுதுபடும்.

போஜனத்தைப் பற்றிய ப்ரச்னத்தில் கர்மாதிபனைக்கொண்டு சொல்ல வேண்டியது. பத்தாமிடத்தில் பாபியிருக்க முழுந்தாளுக்குப் பலக்குறைவைச் சொல்ல வேண்டும்.

தசமாதிபன் நான்கு க்ரஹங்களுடன் சேர்ந்து கேந்த்ர கோணங்களிலிருக்க முக்தனாவான்.

நான்கு க்ரஹங்கள் கேந்த்ரத்திலிருந்தாலும், லக்னாதிபன் ஒரு க்ரஹத்தாலும் பார்க்கப்படாமலிருக்கும் சனியைப் பார்த்தாலும், துர்பலனான லக்னாதிபனை சனி பார்த்தாலும், சனியின் த்ரேக்காணத்தில் சந்த்ரனிருந்து சனியால் பார்க்கப் பெற்றாலும், புதன் சனியின் அம்சத்திலோ செவ்வாய் அம்சத்திலோ யிருந்து சனியால் பார்க்கப் பெற்றாலும் ஸந்யாஸ யோகம் ஏற்படும்.

ஸந்யாஸ யோகத்தை அளிக்கும் க்ரஹம் ராகுவுடன் கூடினாலும், க்ரூராம்சத்திலிருந்தாலும், குளிகனுடன் கூடினாலும், ஸந்யாஸயோகத்துக்கு ஹானி ஏற்படும். சுபர்களின் ஸம்பந்தமில்லாமலிருக்க ஸந்யாஸத்தை அடைந்தாலும் அதை விட்டு விடுவான்.

பதினேராவது பாவம்.

மேஷம் : 11-வது ஸ்தானமாகில் நாற்கால் பிராணிகள் மூலம் ஏற்படும் லாபமும், அரசர்களிடம் ஊழியம் செய்வதாலும், அன்ய தேசத்தில் வஸிக்கும் தனவான்களை ஸேவிப்பதாலும், ஏற்படும் லாபமுமுண்டாகிறது.

விருஷபம் : 11-ஆகில், உயர் குலத்தோர், ஸ்த்ரீகள், ஸாதுக்கள், லேவாதேவி செய்தல், பூமி — இவைகள் மூலமாக த்ரவ்ய லாபம் ஏற்படும்.

மிதுனம்: 11-ஆனல், ஸ்திரீகளுக்கு அபிமதனவதுடன், வஸ்த்ரம், பொருள், உயர்ந்த ஆபரணம், வாஹனங்கள் இவை மூலம் லாபமும், பல வழியிலும் பிரசித்தியுமுண்டாகும்.

கடகம்: 11–வது ஸ்தானமானல், உயர்ந்த ஸ்த்ரீகள், அடிமை, பயிர்த் தொழில், தான் செய்த சாஸ்த்ரம், நல்லோர்க்கு உபகாரம் செய்தல்—இவைகள் மூலம் லாப மேற்படும்.

சிம்மம்: லாபஸ்தானமானல் நிந்தைகள், யாஜகனைக் கொல்வது, கட்டுவது, வேறு தேசத்தை அடைவது இவைகளால் துக்கமேற்படும்.

கன்னி: லாப ஸ்தானமாகில், ஏமாற்றல், நீச்செயல், அழகாகப் பேசுதல், பில்லி, சூன்யம் வைத்தல்—இவைகளால் லாபத்தைப் பெறுவான்.

துலாம்: லாப ஸ்தானமாவதில் மித்ரனை மற்ற வியாபாரி, ஸாதுக்களை ஸேவித்தல், விநயம்—இதன் மூலம் கொண்டாடப்படும் பிரபுத்வத்தை யடைவான்.

விருச்சிகம்: லாப ஸ்தானமாக ஆகில், சாஸ்த்ரங்களாலும், வேதங்களாலும், வணக்கத்தாலும், விவேகத்தாலும் லாபத்தைப் பெறுவான்.

தனுஸ்: 11-வதாகில் அரசனிடமிருந்து லாபத்தையாவது, தாழ்மையான கார்யம் செய்தல், ஸ்வப்ரயத்னம், நிஹீனனுக்கு ஏவல் புரிவது, குதிரை—இவைகளாலாவது லாபத்தை அடைகிறான்.

மகரம்: 11-வது ஸ்தானமானல் ஜலத்தில் போகும் கப்பல் முதலியவை, தான தர்மங்கள், பராக்ரமம்—இவைகளால் லாபத்தை அடைவான், படிப்பால் பலருடன் தோழமை கொள்வான்.

கும்பம்: லாப ஸ்தானமாவதில், கப்பல் முதலிய ஜலயானத்தால் லாபமும், ராஜ கார்யத்துக்காக அன்ய தேச வாஸமும், அதிகச் செலவும் ஏற்படும்.

மீனம்: 11-வதானல் பல துறைகளில் லாபத்தை அடைவான், அன்பர்களால் அன்புடன் செய்யும் உபகாரங்களைப் பெறுவான்.

லாபாதிபன் லக்னாதிபாவங்களில் இருப்பதின் பலன்.

லாபாதிபன் லக்னத்திலிருக்க நல்ல பாக்யமுள்ளவனாகவும், ஸ்வஜனங்களிடம் அன்புடையவனாகவும், தெளிவான சித்தமுடையவனாகவும், தர்மம் செய்வதில் பற்றுள்ள புத்ரனை உடையவனாகவும், நல்லொழுக்கமுடையவனாகவும், அரசனிடமிருந்து லாபம் பெறுபவனாகவுமாவான்.

இரண்டாவது ஸ்தானத்திலிருக்க ஸ்திரமில்லாத தொழிலும், சிறிது சுகமுமுண்டாகும், லாபாதிபதி பாபியாய் 2-லிருக்கிறதுவதில் நோக்கமுடையவனாகவும், சுபக்ரஹமிருந்தால் தனவானாகவுமாவான்.

மூன்றிலிருக்க உடன்பிறந்தோர், தனம், சுற்றத்தாரின் சேர்க்கை—இவைகளுடன் கூடினவனாகவும், ஸஹோதரன், பந்து, மித்ரர்களுக்கு லாபத்தையும் செய்வான்.

நான்கிலிருக்க தீர்க்காயுளுடையவனாகவும், தகப்பனிடத்தில் பக்தியையுடையவனாகவும், புத்ரன் விஷயத்தில் அக்கரையுள்ளவனாகவும், அழகனாகவும், நல்லவனாகவும், நற்செய்கை மூலம் லாபத்தை அடைபவனாகவுமாவான்.

பஞ்சமத்திலிருக்க: மாற்றார் தாயிடத்தில் பிரியமுள்ளவனாவான், லாபாதிபன் சுபனாயிருந்தால் மிதமாக சாப்பிடுபவனாகவும், சுகமில்லாதவனாகவுமாவான், பாபியானல் எதிரிடையான பலன்.

ஆறிலிருக்க: சத்ருவோடு கூடியவனாகவும், நாட்பட்ட வியாதியுள்ளவனாகவும், சரீரமினீத்தவனாகவும், ஸாமர்த்யத்தால் பிரஸித்தர்களோடு சேர்ந்தவனாகவும், அன்ய தேசத்தை அடைந்தவனாகவும், திருடனாலேற்படக் கூடிய பயம் மரணங்களை அடைபவனாகவுமாவான்.

ஏழிலிருக்க: ஸ்வபாவத்திலேயே கொடிய சரீரமுடையவனாகவும், ஸம்பத்துள்ளவனாகவும், தீர்க்காயுளுடையவனாகவும், நல்ல ஸ்வபாவமுள்ளவனாகவும், சுபரிருக்க அதிகம் ஸௌக்யமுள்ளவனாகவுமாவான.

லாபாதிபன் பாபியாய் எட்டிலிருக்க : அதிக வியாதியுடையவனுகவும், சத்ருக்கள் வழியாய் அதிக விரோதத்தை உண்டு பண்ணுபவனுகவுமாவான்.

ஒன்பதிலிருக்க : வேத-சாஸ்த்ரங்களில் ஸமர்த்தன், தர்மத்தால் பிரஸித்தி அடைந்தவன், ஆசார்யர்கள், தேவர்களிடம் பக்தியுள்ளவனுவான், பாபியாகி 9-லிருக்க பந்துக்களற்றவனுவான்.

பத்திலிருக்க: பிதாவிடத்தில் த்வேஷமுடையவனுகவும், தாய்க்கு ப்ரியனுகவும், நல்ல தனம், நற்கீர்த்தி, தாயை ரக்ஷிப்பதில் ஆர்வம் இவைகளையுடையவனுகவுமாவான்.

லாபாதிபன் லாபத்திலிருக்க தீர்க்காயுள், அழகான ஜனங்கள், நல்ல சரீரம், புஷ்டி, அழகான வாஹனம், வஸ்த்ரம் இவைகளை யுடையவனுவான்.

லாபாதிபன் விரய ஸ்தானத்திலிருக்க துஷ்டன், நிலையற்ற தொழிலையுடையவன், தனவான், மானி, பிறருக்குக் கஷ்டத்தை அளிப்பவன், துர்புத்தியுடையவன், ஸ்திரமில்லாத ஸம்பத்தை உடையவன்.

பார்வையின் பலன்

லாபஸ்தானம் சூரியனல் பார்க்கப்பட ஸகல வஸ்து ப்ராப்தி ரோகி, புத்ரகாசமுடையவன், வேலை செய்து பிழைப்பவன் புத்திமான்.

சந்த்ரன் பார்வைபெற த்ரவியமூலம் தன லாபம், வியாதி நாசம், நாற்கால் பிராணி, ஸ்வர்ண விருத்தி, பல வழிகளிலும் லாபப்ராப்தி.

செவ்வாய் பார்க்க, ஆயுள் விருத்தி, மனைவியின் கர்ப்ப நாசம், மூன்றுவது ராசி இரட்டைப்பட்டதாயில் பெருத்த சரீரமுடையவனுவான், தன் புத்ரனுக்கு ஸௌக்யமும், வாஹனமூலம் ஸௌக்யமும் ஏற்படும்.

புதன் பார்க்க பாக்யமுடையவன், ஸகல வஸ்துக்கள் மூலமும் ஸௌக்யமடைந்தவன், புத்தி சாஸ்த்ர நிபுணர், கீர்த்திமான், அதிக பெண் குழந்தைகளையுடையவனுவான்.

குரு பார்வை பெற தீர்க்காயுளுடையவன், புத்ரதார தன லாபங்களால் சுகம் பெற்றவன், வியாதி நாசம், கார்யஜயம், சரீர சோபையையுடையவன்.

சுக்ரன் பார்க்க லாபத்தின் விருத்தி, சுகம், தனம், இவைகளையுடையவன், க்ராமாதிபன், தன் பந்துக்களைக் காப்பாற்றுபவன், மூன்னேர் தொழிலைக் காப்பாற்றுவதில் ஆர்வமுடையவன்.

சனி பார்வை பெற துஷ்டர் மூலம் தனலாபமும், புத்ரனிடமிருந்து சுகமும், கருப்புநிற தான்யங்களின் லாபமும் உண்டாகும்.

ராகு பார்க்க ஆயுள்விருத்தி, அரசர்கள் மூலம் த்ரவ்ய லாபம், தன் ஸௌக்யத்தையே கருதுபவன்,

லாபாதிபன் அல்லது தர்மஸ்தானம் சுபனுடன் சேர்ந்தோ அல்லது பார்வை பெறின் தகப்பனைக் காட்டிலும் தனவானுகிறன்.

லாபாதிபன் பஞ்சமத்திலிருந்தாலும், லாபாதிபன் உச்ச க்ஷேத்ரம், மித்ரக்ஷேத்ரத்திலிருந்தாலும் களத்ர புத்ர ஸௌக்யம்.

லாபாதிபன் தனத்திலும், தனாதிபன் கேந்த்ரத்திலும், லாபஸ்தானத்தில் குருவுமிருந்தாலும் அதிகமான லாபத்தை அடைகிறன்.

லாபாதிபன் கேந்த்ரத்ரிகோணங்களிலிருந்து லாபஸ்தானம் பாபஸம்பந்தமில்லாமலிருந்தாலும், தனாதிபன் லாபத்திலும், லாபாதிபன் தனத்திலுமிருந்தாலும், அல்லது அவ்விருவரும் கேந்த்ரத்திலிருந்தாலும், தசம ஸ்தானம், அல்லது தசமாதிபன் சுபர்களின் மத்தியிலிருந்தாலும், லாபாதிபன் பாராவதாம்சத்திலிருந்தாலும், லாபாதிபன் வலிக்கும் ராசியதிபன் சுபர்களால் பார்க்கப்பட்டோ, சுபமத்தியிலோ இருந்தாலும், லாபாதிபன் வலிக்கும் நவாம்சாதிபன் சுபனுய் தனாதிபனல் பார்க்கப் பெற்றாலும், லாபாதிபன் வலிக்கும் த்ரேக்காணாதிபன் சுபனுகி கர்மாதிபனல் பார்க்கப் பெற்றாலும் தனலாபமேற்படும்.

லாபாதிபன் பாபஸம்பந்தம் பெறின் தனநாசம்,

லாபாதிபனுக்குரிய திக்கிலிருந்தாவது லாபஸ்தானத்துக் குரிய திக்கிலிருந்தாவது. கிரஹங்களில் அதிக பலமுடைய கிரஹத்துக்குரிய திக்கிலிருந்தாவது பலாபலத்தை அநுஸரித்து அத்திக்கிலிருந்து தனலாபத்தை ஊஹிக்கவேண்டும்.

லாபஸ்தானம், லாபாதிபன் பாபஸம்பந்தம் பெற்றாலும், லாபஸ்தானம் பாபராசியானாலும் தனநாசம்.

த்ருதீய லாபாதிபன் சுபராசி சுபவீக்ஷணம் பெற்றிருப்ப துடன் பலமடைந்திருந்தால் கர்ணபரணம் அணியப் பெறுவான்.

3-11 ஸ்தானங்களுக்கு பாப ஸம்பந்தம் ஏற்பட கர்ணநாசம்.

11 அல்லது 3க்குடையவனைக் கொண்டு காதுக்கு ஸௌக் யத்தைச் சொல்லவேண்டும்.

லாபாதிபன் கேந்த்ரத்திலிருந்து சுபவீக்ஷணம் பெற்றாலும், சுபாம்சத்திலிருந்தாலும் ஜாதகனுக்கு மூத்த ஸஹோதரனுண்டு.

லாபாதிபன் சராராசியம்சத்தில் புருஷக்ரஹத்துடன் சேர்ந் திருக்க மூத்தவன புருஷனுவான். மாறியிருக்க மூத்த ஸஹோ தரம் பெண்ணாகும்.

லாபாதிபன் இரட்டைப்பட்ட ராசியின் அம்சத்திலும், லக் னத்தில் சுபனுமிருந்து சுபனாலும் பார்க்கப்பட இரண்டு மூத்த ஸஹோதரர்களிருப்பார்கள்.

லாபஸ்தானம் ஸ்திர வீக்ஷணம் அல்லது ஸம்பந்தம் பெற்றோ ஸ்திரவர்கமாகவோ ஆனால், அரசன், திருடர்களின் கூட்டம் அல்லது நாற்கால் பிராணிகளின மூலமாக பலவித தனலாபம்.

லாபஸ்தானம் சந்த்ரனால் பார்க்கப் பெற்றோ சந்த்ரனிருந்தோ அல்லது சந்த்ரவர்கமாகவோ ஆகப்பெறின் ஜலஸம்பந்த முள்ள வஸ்துக்கள், ஸ்த்ரீ, யானை, குதிரை இவற்றின் அபிவிருத்தி ஏற்படும். பூர்ண சந்த்ரனால் இப்பலன். க்ஷீணசந்த்ரனால் நாசம்.

லாபஸ்தானம் செவ்வாய் ஸம்பந்தம், செவ்வாய் பார்வை அல்லது செவ்வாயின் வர்கமானால். பலவிதமான யாத்ரைகள் பலஸாஹஸ காரியங்கள். பலவித்யைகளில் தேர்ச்சி, புத்திசக்தி,

இவைகளால் ஆபரணங்கள், ரத்னங்கள், ஸ்வர்ணம் இவை களுக்கு அபிவிருத்தி ஏற்படும்.

லாபஸ்தானம் குருவின் சேர்க்கை அல்லது பார்வை பெற்றோ. லாபஸ்தானம் குரு வர்கமானாலும், யாகம் செய்தல் நல் லோரை அனுஸரித்தல், பிரபுவின் ஆதரவு, உயர்குலப் பிறப்பு, ஹோமத்ரவ்யங்களின் விருத்தி இவைகளுண்டாகும்.

லாபஸ்தானம் சுக்ரவீக்ஷணம், சுக்ரஸம்பந்தம், அல்லது சுக்ர வர்கம் பெற்றால் தாஸிகள் மூலம், ஸஞ்சாரமூலம், சிறந்த வெள்ளி, முத்து, அதிக தனம் இவைகளுண்டாகும்.

லாபஸ்தானம் சனி வீக்ஷணம், சனி ஸம்பந்தம், அல்லது சனி வர்கம் அடைந்தால் நீலநிறமான பசு, எருமை, யானை, குதிரை இவைகளுடையவனாகவும், கிராமம், ஜனஸமூஹம், நகரம்– இவைகளில் கௌரவம் பெற்றவனாகவுமாவான்.

ராகு ஸம்பந்தம், வீக்ஷணம் அல்லது வர்கம் பெறினும் சுப ருடன் கூடினால் பலவித லாபம் அடைவான், எல்லா கிரஹங் களும் 11-மிடத்தைப் பார்த்தாலும் பலவித லாபம்.

லாபாதிபன் லாபஸ்தானத்திலோ கேந்த்ரகோணங்களிலோ உச்சக்ஷேத்ரம் அல்லது உச்சாம்சம் பெற்றாலும் ஸ்வர்யாம்சம் பெற்றாலும் விசேஷ தனப்ராப்தி.

லாபாதிபன் சுபரோடு சேர்ந்து கேந்த்ர கோணங்களிலிருக்க 36 வயதில் 2000 நிஷ்கலாபமுண்டாகும்.

11-ல் குருவும், 2-ல் சந்த்ரனும், 3-ல் சுக்ரனுமிருந்தால் 6000 நிஷ்கத்துக்கு அதிபனுவான்.

குரு 9-லிருந்தாலும், 11-ல் குரு சந்த்ரர்களிருந்தாலும், தன தான்யங்களுடையவனாகவும், காந்திமானாகவும், ரத்னபரணமுள்ள வனாகவுமாவான்.

லாபாதிபன் லக்னத்திலும், லக்னாதிபன் லாபத்திலுமிருக்க 33-வயதில், 1000 நிஷ்கங்களுக்கு அதிபதியாவான்.

தனாதிபன் லாபத்திலும், லாபாதிபன் தனத்திலுமிருக்க விவாஹத்துக்குப் பிறகு அதிக பாக்யலாபம். 3-க்குடையவன்

11-லும், 11-க்குடையவன் 3-லுமிருக்க ஸஹோதரன் மூலம் தன லாபமும், சிறந்த ஆபரணலாபமும் ஏற்படும்.

லாபஸ்தானத்தில் சுபரிருக்க நியாயமான வழியிலும், அசுபரிருக்க நியாயமில்லாதவழியிலும் சுபாசுபர்களிருக்க இருவழிகளிலும் லாபமேற்படும்.

லாபஸ்தானத்துக்கு சுபதிருஷ்டி அதிகமிருந்தாலும் லாபாதிபன் கேந்த்ர கோணங்களிலிருந்தாலும், சுப ஸம்பந்தம் பெற்றாலும் அதிகலாபமேற்படும்.

சந்த்ரனுக்கு 7-3-11 களில் சுக்ரனிருந்தாலும், நான்காமதிபன் 11-லிருந்து குருவீக்ஷணம் பெற்றாலும், குருவீக்ஷணம் பெற்ற நான்காமதிபனுல் 4-மிடம் பார்க்கப் பெற்றாலும், குரு சுக்ரர்கள் ஸுகாதிபனுடன் சேர்ந்து கேந்த்ரம் 5-9-11-களிலிருந்தாலும், குரு சுக்ரர்கள் தர்மாதிபனுடன் கூடி தர்மஸ்தானம் அல்லது சுகஸ்தானத்திலிருந்தாலும், விரயாதிபன் தனாதிபனுடன் சேர்ந்து உச்சத்தை அடைந்து தர்மாதிபனின் வீக்ஷணம் பெற்றாலும், 9-11-10க்கதிபர்கள் சுகஸ்தானத்திலிருந்தாலும், உச்சம் பெற்ற க்ரஹம் 10-லிருந்து தர்மலக்னாதிபர்களால் பார்க்கப் பெற்றாலும் சுககர்மாதிபர்கள் ஸிம்மாஸனாரூடம் பெற்று லக்னாதிபனுல் பார்க்கப்பெற்றாலும், சுகாதிபன் பலவானாகி சுபரின் வீக்ஷணம் அல்லது ஸம்பந்தம் பெற்றிருந்தாலும், வாஹனாதிபன் லக்னத்தில் சுக்ரனுடன் கூடியிருந்தாலும், குருவுடன் சேர்ந்து லக்னத்திலிருந்தாலும், சந்த்ர குரு சுக்ரர்கள் வாஹனாதிபனுடன் சேர்ந்து லக்னத்திலிருந்தாலும், சுகாதிபன் பலவானுய் தர்மாதிபனோடு சேர்ந்து குருவீக்ஷணம் ஸம்பந்தம் பெற்றாலும், தர்மாதிபனுக்கு லாபஸ்தானாதிபன் நவாம்சத்தில் 4-க்கதிபன் 9-லிருந்தாலும், சுகாதிபன் கேந்த்ரத்திலும், சுகாதிபன் வலிக்கும் ஸ்தானாதிபன் லக்னத்திலிருந்தாலும், லக்னாதிபன் தசமத்திலும், தசமாதிபன் லக்னத்திலுமிருந்தாலும், தனாதிபன் லக்னத்திலும், தசமாதிபன் தனத்திலும், ஒரு க்ரஹம் உச்சமும் பெற்றிருந்தாலும், வாஹன ஸௌக்யத்தை அடைவான்.

சுகாதிபன் ஜராவதாம்சம் பெற்றாலும், நான்காமதிபன் கேந்த்ரம் அல்லது வைசேஷிகாம்சத்திலிருந்தாலும் லாபாதிபன் கோபுராம்சத்திலிருந்தாலும் யானை முதலிய வாஹன ஸௌக்யமுள்ளவனுவான்.

பன்ரண்டாவது பாவம்.

மேஷம் 12-ஆனால் அதிகச்செலவு, தேஹபீடை, அதிகத் தூக்கமுள்ளவனுவான். மேஷத்தில் சுபர் வலிக்க லாபம் அடைபவனுவான்.

விருஷபம் 12-வதாகில், உயர்ந்த விருஷபங்களின் லாபமும், சிறந்த ஸ்திரீகளுடைய ப்ராப்தியும், தனமும், சாஸ்த்ர விஷயங்களை ஆராய்வதில் வித்வான்களின் சேர்க்கையுமேற்படும்.

மிதுனம் வ்யயஸ்தானமானால் ஸ்த்ரீகளிடத்தில் பற்றுதலால் செலவும், பேய், பிசாசு, கெட்ட ஸ்வபாவம் மூலமான செலவும் ஏற்படும்.

கடகம் 12-வதானால் தேவர்கள், ப்ராம்மணர்கள், யாகங்கள், பலதர்மகார்யங்கள்-இவைகளால் செலவேற்படும். நல்லோர்களால் புகழப்படுவான்.

ஸிம்மம் 12-ஆனால், அதிக விரோதங்கள், வியாதி பிடை, கெட்ட கார்யங்களில் ஆசை, படிப்புமூலம் செலவு, அரசனிடம் திருடனுதல்- இவைகள் ஸம்பவிக்கும்.

கன்னி வியயஸ்தானமானால் ஸ்த்ரீகளோடு விரோதனுவான், விவாஹம், கயிறு, காக்கியை அளிக்கின்ற பொருள்கள், ஸாது ஸங்கம்-இவைகள் மூலம் செலவுடையவனுகிறான்.

துலாம் வியயஸ்தானமாகில், தேவப்ராம்ஹணர்களிடத்தில் பக்தியுள்ளவனுகவும், வேதம், தர்மசாஸ்த்ரம், இவைகளில் செலவுள்ளவனுகவும், வ்ரதம், உபவாஸம், இந்த்ரியஜயம், புண்ய தீர்த்தயாத்ரை-இவைகளால் ப்ரஸித்தனுகவுமாவான்.

விருச்சிகம் 12-ஆனால் ப்ரமாதத்தாலும், ஆடம்பரத்தாலும் செலவு, துஷ்மித்ர ஸஹவாஸத்தால் நிந்தை, திருடர் ஸம்பந்தமான செலவு-இவைகளுண்டாகும்.

தனுஸு 12-வதாகில், பலவித வஞ்சனைகள், துஷ்ட ஸஹவாஸம், பிறரை ஸேவித்தல், வியாதி, நன்றிகெட்டவரின் சேர்க்கை, பிறரை ஏமாற்றுதல் இவைகளால் செலவு ஏற்படும்.

மகரம் 12-வதாக ஆனல், குடி, ஆஹாரவகைகளில் செல வுள்ளவனுவான். பந்துவர்கங்களே பூஜிப்பதில் பற்றுதல். மித போஜனம், பயிர்த்தொழிலில்லாமை, நிந்திக்கப்படுதல்-இவை களுடையவனுகிறன்.

கும்பம் 12-ஆனல், தேவர்கள், ஸித்தர்கள், பிராம்மணர் கள், தபஸ்விகள், துஷ்பவர்கள்-இவர்கள் மூலம் செலவு. நல் லோர்களே அநுஸரிப்பது, புண்யாதிக்ரியாநுஷ்டானங்கள் மூல மாகவும் அதிகச்செலவு உண்டாகும்.

மீனம் 12-ஆவதாகில் கப்பல் பிரயாணம், துஷ்ட ஸஹ வாஸம், துர்ஜனஸ்நேஹிதர்கள், உட்காரும் ஸ்தானம், வியய ஹாரம்-இவைகளால் அதிகச்செலவு உண்டாகும்.

விரயாதிபன் லக்னாதிபாவங்களிலிருப்பதன் பலன்.

விரயாதிபன் லக்னத்திலிருக்க, தன் கோரிக்கையினல் வேறு தேசத்தை அடைபவன், துஷ்டர்களிடம் அன்புள்ளவன், சண்டையிடுபவன், ஸ்த்ரீகளிருந்தாலும் போகசக்தியில்லாதவனு வான்.

இரண்டிலிருக்க கருமித்தனத்தால் கடுமையாகப் பேசுபவன், அங்கஹீனன், புத்திஹுன்யன், செவ்வாய் கூடிட, அரசன், திரு டன், நாற்கால்பிராணிகள் மூலம் பாபம் செய்பவனுவான்.

மூன்றிலிருக்க பந்துஜனங்களில்லாதவன், துஷ்டர்களால் கொண்டாடப்படுபவன், தனவானலும் கருமியாகவும், பந்துக் களிடம் பற்றுள்ளவனுகவுமாவான்.

நான்கிலிருக்க கடின கார்யத்தைச் செய்பவன், நற்கார்யங் களேயும் செய்பவன். ஸுகி, புத்ரன் காரணமாய்மரணமடைபவன், பிடிவாதமுடையவன். லக்னாதிபனிருந்தால் பரோபகாரியாவான்.

ஐந்திலிருக்க புத்ரன் துஷ்டனுவான், பஞ்சமஸ்தானம் சுப க்ஷேத்ரமாய், சுபனேடும் சேர்ந்தால் அதிகம் சுபமுண்டாகும். பித்ரார்ஜிதமான பொருளும் ஸாமர்த்தியமும் இருக்கும்.

ஆறிலிருக்க துஷ்டனுகவும், லோபியாகவுமாவான். விரயாதி பன் பாபியானல், நேத்ரரோகமுண்டாவது நிச்சயம். சுக்ரனுக்கு

6-ல் விரயாதிபனிருந்தால் புத்திரர்கள் மரிப்பார்கள். கற்புத்தி யுள்ளவனுவான்.

ஏழிலிருக்க பாபியினல் துர்புத்தி, துஷ்டர்களுக்குத் தலைவன், கபடமானதும் கெட்டதுமான நடத்தையுடையவனுவான். 12-ல் பாபியும் கூடியிருந்தால் வேசிகளின் தனமுடையவனுகவும், துர் புத்தியாயுமிருப்பான்.

எட்டிலிருந்தால் தாழ்ந்தவர்களேப் பாதுகாப்பவனுகவும், விவேகமில்லாதவனுகவும், நிந்திக்கப்பட்டவனுகவுமாவான். பாபி யானல் பொருள் சேர்ப்பதில் ஆர்வமுடையவனுவான்.

ஒன்பதிலிருக்க புண்யம் செய்பவன், காளே, பசு, எருமை இவைகள் அதிகமுடையவன், நற்புத்தியுள்ளவன், தீர்த்தாடனத் தில் ஸமர்த்தன், புண்யசாலி, பாபியானல் ஜாதகனும் பாபி யாவான்.

பத்திலிருக்க புத்ரனுடன் கூடியவன். ஆள் சேர்ப்பதில் ஆர்வமுடையவன், பிறரிடம் பற்றுள்ளவன், அவர்கள் காரியத் தைச் செய்பவன், தாய்க்கு அநுகூலமில்லாதவன், கெட்டவார்த் தைகளில் ப்ரீதியுடையவன்.

லாபத்திலிருக்க தனவான், நீர்க்காயுளுடையவன், வியாதி யில்லாதவன், மதமுடையவன், தாராளமான மனதுடையவன், உண்மை பேசுபவன், எல்லா கார்யங்களிலும் சேர்ந்து கொள் பவன், அழகாகப் பேசுபவன்.

விரயத்திலிருக்க புத்திசாலி, லோபி, துஷ்டன், மற்றவர் க்ரு ஹத்தில் வாஸம் செய்வதில் ஆசையுடையவன், ஸ்திரமான கார் யத்தைச் செய்பவன், புத்தியில்லாத ஜனங்களிடம் ஸ்நேஹ முள்ளவன், அதிகமாக சாப்பிடுபவன்.

பார்வையின் பலன்

சூர்யன் பார்க்க ஸ்தானசலனம், வாஹனலாபம், வாஹ னம் கொம்புள்ள ஜந்துக்கள் மூலம் பயம், 12 வருஷம் கஷ்ட ஜீவ னம் இவைகளுண்டாகும்.

சந்த்ரன் பார்க்க பித்ரு ஸௌக்யமில்லாதவன், கண்களில் எப்போதும் அசைவு, கார்யங்களில் ஸாமர்த்தியம், செலவு செய் தல், பொய் பேசுதல் இவைகளுள்ளவனுவான்.

செவ்வாய் பார்க்க பித்ரு ஸௌக்யமில்லாமை, சத்ருநாசம் செய்பவன், மற்றவர்கள் மூலம் சுகக்குறைவுள்ளவன்.

புதன் பார்க்க சுபகார்யங்கள் செய்வதால் செலவுடையவன், மித்ரபந்து விரோதமுடையவன், ஹ்ருதயரோகமுள்ளவன், புண், வாயு-இவைகளாலுண்டான ரோகமுடையவன்.

குரு பார்க்க, தேவர்கள், ப்ராஹ்மணர்கள் இவர்கள் விஷயமான செலவு செய்பவன், எல்லோருடைய கஷ்டத்தையும் தீர்ப்பவன், சத்ருவினால் ஹிம்ஸிக்கப்பட்டவன், உலகத்திலுள்ள போக்ய வஸ்துக்களிடம் ப்ரீதியுடையவன், புத்திமான்.

சுக்ரன் பார்க்கப்பெறின், நற்காரியங்களில் செலவழிப்பவன், அதிகம் விஷய போகங்களில் ஆசையுடையவன், நல்ல புத்தியுடையவன், ஸ்திரீசுகம், தனவரவு, சரீரகாந்தி இவைகளுடையவனுவான்.

சனி பார்வை பெற நிருட்டு, அக்னி, கொடுத்த பணம் திரும்பிவராமை முதலியவைகளால் தனநாசம், தானே செலவு செய்பவன், புத்ர களத்ரங்கள் மூலம் சிறிது சுகமுடையவன், யுத்தத்தில் ஜயம் அடைபவன்.

ராகு பார்க்க செலவில்லாதவன், ஈகையில்லாதவன், சத்ரு நாசம் செய்பவன், சுகமில்லாதவன்.

விரயத்தில் சந்த்ரன் அல்லது சூரியனிருந்தாலும், இருவருமிருந்தாலும், புதன் செவ்வாயுடன் சேர்ந்தோ அல்லது பார்வை பெற்று 12-லிருந்தாலும் அந்த பாவத்துக்கு நாசமுண்டாகும். பூர்ண சந்த்ரன், புதன், குரு, சுக்ரன்-இவர்கள் 12-லிருந்தால் தனநாசம். செவ்வாய் பார்க்க தனம், விருத்திகளை அழிக்கும்.

பனிரண்டாமிடம் பாபனுடன் சேர்ந்தும், விரயாதிபன் பாபியாகவும், விரயஸ்தானம் பாபவீக்ஷணம் பெற்றுமிருக்க பாபச் செய்கை மூலம் தனநாசம்.

விரயாதிபன் 5, 9, அல்லது கேந்த்ரத்திலிருந்து பாபத்ருஷ்டி பெற்றாலும், க்ரூர ஷஷ்ட்யம்சத்திலிருந்தாலும், விரயாதிபன் பாபியான தசமாதிபனுடன் கூடினாலும், பார்க்கப் பெற்றாலும், சத்ருக்ஷேத்ரம், நீசக்ஷேத்ரம், சத்ரு நவாம்சம் இவைகளிலிருந்தாலும், பாபச்செயல் மூலம் தனநாசம்.

விரயாதிபன் வலிக்கும் அம்சாதிபன் சுபனுடன், சுபாம்சத்திலோ, சுபர் மத்தியிலோ இருந்தாலும், குரு சுக்ரர்கள் விரயத்திலிருந்தாலும், புதசந்த்ரர்கள் சுபரால் பார்க்கப்பெற்று பாரா வதம் முதலிய அம்சத்திலிருந்தாலும். விரயாதிபன் சுபனுடன் தசமாதிபனுடன் சேர்ந்தோ பார்க்கப் பெற்றோ உச்சக்ஷேத்ரம், மித்ர க்ஷேத்ரம், தன் வர்க்கம் இவைகளிலிருந்தாலும், தர்மகார்யங்களால் தனநாசம்.

விரயாதிபன் குறைவான பலமுள்ளவனுயிருந்தாலும், சத்ரு ஸ்தானாதிபனுடன் சேர்ந்தோ பார்க்கப் பெற்றோ இருந்து குளிகன் முதலியவர்களுடன் கூடினாலும் சத்ருமூலம் தனநாசம்.

விரயாதிபன் பலமில்லாத ஸப்தமாதிபனுடன் சேர்ந்தோ அல்லது பார்க்கப்பெற்றோ க்ரூராம்சத்திலிருக்க ஸ்திரீமூலம் தனநாசம்.

க்ரூராம்சம் பெற்ற விரயாதிபன் துர்பலனான செவ்வாயுடன் சேர்ந்தோ பார்வை பெற்றோ இருக்க ஸஹோதரன் மூலம் பொருள் நாசம்.

விரயாதிபன் க்ரூராம்சம் பெற்று துர்பலனான பஞ்சமாதிபனுடன் சேர்ந்து அல்லது பார்வை பெற்றிருக்க புத்ரன் மூலம் பொருள் நாசம்.

விரயாதிபன் சுகாதிபனுடன் சேர்ந்தோ அல்லது பார்வை பெற்று பாபனோடு கூடி பாபாம்சத்திலிருக்க தாய் மூலம் தனநாசமேற்படும்.

விரயாதிபன் தர்மாதிபனுடனோ பித்ருகாரகனுடனோ சேர்ந்தாலும் பார்வை பெற்றாலும் தகப்பன் மூலம் பொருள் நாசம் உண்டாகும்.

விரயாதிபன் துர்பலனானாலும் பாபராசியம்சத்திலிருந்தாலும், நீசாம்சம், நீசராசிகளிலிருந்தாலும், 12-மிடத்தில் அநேக பாபிகளும் விரயாதிபன் சனி மாந்தி ராகு-இவர்களுடன் கூடியிருந்தாலும் அங்கஹீனனுவான்.

விரயாதிபன் பாபராசியம்சத்திலோ, பாபரால் பார்க்கப் பெற்றோ, பாபரோடு சேர்ந்தோ இருந்தாலும், விரயஸ்தானம்

பரபனல் பார்க்கப் பெற்றாலும், விரயத்தில் ராகு மாந்திகளின் சேர்க்கையிருந்து, ஆருமதிபனல் பார்க்கப் பெற்றாலும், அஷ்ட மாதிபனுடன கூடினாலும் விரயாதிபன் வலிக்கும் ஷஷ்ட்யம்சம் க்ரூராத்யம்சமாக இருந்தாலும், விரயஸ்தானம் அல்லது விரயா திபன் க்ரூர க்ரஹத்தால் பரர்க்கப் பெற்றாலும் ஜாதகன் நரகத் தில் விழ்கிறன்.

சந்த்ர சூர்யர்களுள் எவன் பலமுள்ளவனை அவனிருக்கும் திரேக்காணாதிபன் குருவானல் தேவலோகமும், சந்த்ர சுக்ரர்க ளானல் பித்ரு லோகமும், சூரியன் செவ்வாய்களானல் பசு பக்ஷி யாதிகளின் ஜன்மமும், புதன் சனிகளானல் நரக பதனமும் ஏற்படுகிறது.

மேலே சொன்ன குரு முதலியவர்கள் உச்சத்திலிருக்க அந் தந்த லோகத்தில் உயர்ந்த ஸ்தானமும், நீசத்திலிருக்க தாழ்ந்த ஸ்தானமும், இரண்டுமில்லாமலிருக்க நடுத்தரமான ஸ்தானமும் கிடைக்கும்.

சுபன் தன் உச்சமான 12-மிடத்தில் சுபவீக்ஷணம் பெற்று தேவலோகாத்யம்சத்திலிருந்தாலும், குரு 10 அல்லது 12-ல் இருந்து சுபனல் பார்க்கப் பெற்றாலும் ஸ்வர்கம் கிடைக்கும்.

12-மிடத்தில் சுப க்ரஹங்களும், அவ்விட்டுக்குடையவனு மிருக்க தொட்டில், ஊஞ்சல் இவைகளின் ப்ராப்தியும் சயன சுகமும் ஏற்படும்.

விரயாதிபன் தன் உச்சத்திலிருந்தாலும், சுப வர்கத்திலிருந் தாலும், சுபவீக்ஷணம் பெற்றாலும், பர்யங்க சயனம் கிடைக்கும்.

விரயாதிபன் பரமோச்சத்திலிருந்து தர்மாதிபனல் பார்க்கப் பெறின் மணி ரத்னங்களால் அலங்கரிக்கப்பட்ட அழகான மஞ்சத்தில் சயனிக்கப் பெறுவான்.

விரயஸ்தானத்துக்கு பாபயோகமிருந்தாலும், விரயாதிபன் க்ரூராம்சத்திலோ, க்ரூரனல் பார்க்கப்பட்டோ இருக்க சயன சுக மில்லை.

விரயாதிபன் பாபியாயினும், உச்ச க்ஷேத்ரம், மித்ர க்ஷேத்ரம், ஸ்வவர்கங்களிலிருந்தாலும், விரயாதிபன் விரயத்திலேயிருந் தாலும் சயன சுகமுண்டு.

லக்னாதிபன் நீச ராசியிலோ, விரயத்திலோ இருந்து ஆருமதி பனல் பார்க்கப் பெற்று சனி, மாந்தி, ராகுகளுடன் கூட படுக்கை சுகமில்லை.

விரயாதிபன் சுபனுடன் கூடினாலும், சுபாம்சத்திலிருந்தாலும் 12-மிடத்தில் சுப க்ரஹ ப்ரபந்தமிருந்தாலும், நேத்ரத்துக்கு நன்மையுண்டாகும். இதற்கு மாறுக விருக்க கண்களுக்கு நாச மேற்படும். இவ்விதமே கால்களுடைய நன்மை தீமைகளைக் கவனிக்க வேண்டும்.

விரயாதிபனை சந்த்ரன் 9, 11, 5-இவைகளிலிருந்தாலும், உச்ச க்ஷேத்ரம், ஸ்வக்ஷேத்ரம், ஸ்வாம்சங்களிலிருந்தாலும், 11, 9, 5-இவைகளின் அம்சத்திலிருந்தாலும், சிறப்பான க்ரஹம், கட்டில், வாஸனை த்ரவ்யங்கள், சிறந்த போகம், உயர்ந்த வஸ்த்ரம், மாலை, அலங்காரம், தனம், யாஜமான்யம் – இவைகளையுடையவ னாகக் காலத்தைக் கழிப்பான்.

சந்த்ரன் கேந்த்ரம் திரிகோணம் இவற்றிலிருக்க பத்னியினல் அலங்கரிக்கப்படுபவனுவான்.

விரயாதிபன் 6, 12, 4—ஸ்தானங்களிலிருந்தால் மாதாவின் மரணத்தைச் சிந்திப்பவனுவதுடன் கோபியாகவும், ஸ்தான மூலம் துக்கத்தை யடைந்தவனுகவும், பிறபெண்டிரிடம் பற்றுடை யவனுகவும், தனம், வித்யைகளில்லாதவனுகவுமாவான்.

விரயாதிபன் 7-லோ, லக்னத்திலோ இருந்தால் ஸ்திரீ சுக மில்லை, இத்துடன் துர்பலனுகவும், கபரோகமுடையவனுகவும், தனம், வித்யைகளில்லாதவனுகவுமாகிறன்.

12-க்கு அதிபன் 2 அல்லது 8-ல் இருக்க விஷ்ணு பக்தியுடை யவனுகவும், தர்மிஷ்டனுகவும், ப்ரியவாதியாகவும், குணசாலியா கவுமாவான்.

விரயாதிபன் 3, 9-களிலிருக்க பத்னியினிடத்தில் த்வேஷி யாகவும், மித்ரர்களையும், ஆசார்யர்களையும் விரோதிப்பவனுகவும், தன் சரீரத்தை வளர்ப்பவனுகவுமாவான்.

விரயாதிபன் 10 அல்லது 11-லோ, 5-லோ இருக்க ஸௌக் யத்தை அடையமாட்டான். மணி, மாணிக்கங்களாலான ஆப ரணங்களை தரிக்கக் கூடியவனுவான்.

சந்த்ரன் 6 அல்லது 8-லிருந்து 7-ல் சனியுமிருக்க ஸர்வ வஸ்து நாசம். விரயத்தில் பாபிகளின் திருஷ்டி அதிகமிருக்க அடிக்கடி தன நாசம்.

லக்னத்தில் சுபனும், நவமாதிபன் பாபாம்சம், பாப ஷஷ்ட்யம்சங்களிலுமிருந்தால் சுபடமாக தர்மம் செய்வான்.

மீனாம்சத்தில் பிறந்தவனும், தர்மாதிபன் உச்சத்திலிருந்து சுபவீக்ஷணம் பெற்றாலும், 9-மிடம், சுப ஸம்பந்தம் வீக்ஷணம் பெற்றாலும், 9-க்குடையவன் பாராவதம் முதலிய அம்சத்திலும், குருவின் பார்வையை லக்னாதிபன் பெற்றாலும் தாதாவாக விருப்பான்.

லக்னம் தர்மாதிப வீக்ஷணம் பெற்று, லக்னாதிபன் கேந்த்ரத்திலுமிருந்தாலும், நவமாதிபன் ஸிம்ஹாம்சத்திலிருந்து 1, 10-க்குடையவர்களால் பார்க்கப் பெற்றாலும், நவமாதிபன் 4-லும், தசமாதிபன் கேந்த்ரத்திலும், விரயாதிபன் குரு வீக்ஷணம் பெற்றாலும், புதன் தன் உச்ச க்ஷேத்ரத்திலிருப்பதுடன் நவமாதிபன் பார்வை பெற்று, 11, 9-களிலிருந்தாலும் மஹாதானம் செய்பவனுவான்.

லக்னாதிபன் பலவானாய், லாப ஸ்தானத்தை அடைந்து தர்ம கர்மாதிபர்களால் பார்க்கப் பெற்றாலும், பஞ்சமாதிபன் 9-லும், அவ்வீட்டுக்குடையவன் 10-லுமிருந்து லக்னாதிபனால் பார்க்கப் பெற்றாலும், தர்மாதிபன் கர்மாதிபனால் பார்க்கப் பெற்று கேந்த்ரகோணத்திலிருந்தாலும் தான லாபம் உண்டாகிறது.

தர்மாதிபன் சுபனுடன் சேர்ந்து சுபாம்சத்திலிருந்தாலும், வைசேஷிகாம்சம் பெற்றாலும், சுப ஷஷ்ட்யம்சத்திலிருந்தாலும் தர்மத்தில் த்ருட புத்தியை அடைவான்.

குரு சுக்ரர்கள் 2-லும், இரண்டாமதிபன் வைசேஷிகாம்சத்திலுமிருந்தாலும், பலவானான தனாதிபன் கேந்த்ரம் அல்லது 3, 6, 10, 11-இவைகளிலிருந்து சுப வீக்ஷணம் பெற்றாலும் அன்னதாதாவாகிறான்.

விரய ஸ்தானத்தில் சுபரிருக்க நல் விஷயத்தில் செலவும், பாபரிருக்க கெட்ட விஷயத்தில் செலவும், சுபாசுபர்களிருக்க இரு வழிகளிலும் செலவுண்டாகும்.

12-ல் சூரியன், ராகு, சுக்ரர்களிருக்க அரசன் மூலம் செலவும், 12-ல் குருவிருக்க கப்பம் மூலமான செலவும், க்ஷீணசந்த்ரன் ஸூரியன் 12-லிருக்க அரசனால் பறிமுதல் செய்தல் மூலமாக செலவும் ஏற்படும்.

12-ல் சுபரிருக்க ஸர்வ வஸ்து நாசம்.

12-ல் சனி செவ்வாய்களிருக்க ஸஹோதரன்மூலம் பொருள் செலவு ஏற்படும்.

2-ல் பாபியும், லக்னாதிபன் 12-லும், கர்மாதிபன் லாபாதிபனுடன் சேர்ந்தோ அல்லது பார்வை பெற்றாலும். தனாதிபன் பாபியுடன் சேர்ந்தோ அஸ்தமனமாகியோ 2, 8-களிலிருந்தாலும், தனாதிபன் சேத்திலும் லாபாதிபன் க்ரூர ஷஷ்ட்யம்சத்திலிருந்தாலும், பாபியுடன் கூடின லக்னாதிபன் 6, 8, 12-க்கதிபர்களுடன் சேர்ந்து அல்லது பார்க்கப்பட்டிருந்தாலும், பஞ்சமாதிபன் லக்னத்தை அடைந்து சுபவீக்ஷணமில்லாமலிருந்தாலும், லாபாதிபன் வலிக்கும் அம்சநாதன் சுபனுடன் சேர்ந்து 6, 8, 12-களில் க்ரூர ஷஷ்ட்யம்சத்திலிருந்தாலும் கடனாளியாவான்.

லக்னாதிபன் அஸ்தமனமடைந்து அல்லது சத்ரு ஸ்தானம், ரோகம்-இவைகளை யடைந்து 6, 8, 12-களிலிருந்து நவமாதிபன் மாரகாதிபனுடன் சேர்ந்து சுபவீக்ஷணமில்லாமலிருக்க அரசனுமிருந்தாலும் கடனாளியாவான்.

2, 11-க்குடையவர்களின் த்ரேக்காணங்களின் அதிபதியின் அம்சாதிபன், வைசேஷிகாம்சம், கேந்த்ரம், 5, 9-ஸ்தானங்களிலிருந்தாலும், லக்னாதிபன் வலிக்கும் அம்சாதிபன் ம்ருத்வம்சம் முதலியவைகளை அடைந்து குரு வீக்ஷணம் பெற்றாலும் கடன் கொடுப்பவனுவான்.

பாபிகள் 12, 5, 9, 2-இவைகளிலிருந்தாலும், 2-12, 5-9, 6-12, 3-11, 4-10-இந்த ஸ்தானங்களில் ஸமமாக க்ரஹங்களிருந்தாலும் சிறைச்சாலை யடைக்கும்.

விருஷபம், மேஷம், தனுஸ் ஜன்ம லக்னமாய் 2, 12, 9, 5—இடங்களில் பாபிகளிருக்க கயிற்றினால் கட்டப்படுவான்.

விருச்சிகம் ஜனம லக்னமாய 2, 12, 9, 5-களில் பாபிகளிருக்க பூமிக்குளளிருக்கும் அறையில் காவலில் வைக்கப்படுவான்.

மிதுனம், துலாம், மேஷம், கன்னி—இவை லக்னமாகி, 2, 12, 9, 5—இடங்களில் பாபிகளிருக்க விலங்கு அணிந்து கட்டப்படுவான்.

மீனம், கடகம், மகரம்—லக்னமாகி 2, 12, 9, 5-களில் பாபிகளிருக்க விலங்கில்லாமல் துர்கத்தில் வலிப்பான்.

லக்னம், 6-மிடம் இவைகளின் அதிபன சனியுடன் சேர்ந்து கேந்த்ர கோணங்களில் இருக்க பந்தனமேற்படும்.

பொது விஷயங்கள்.

யோகத்தைச் செய்கின்ற கிரஹங்களுள் அதிக பலம் பெற்றவனுடைய தசையில் புக்தியில் அந்த யோகத்திற்குரிய பலன் உண்டாகும்.

மூன்றுமிடத்தில் சூரியனிருக்க மூத்த ஸஹோதரனும், சனியிருக்க பின் ஸஹோதரனும், செவ்வாயிருக்க இரண்டு ஸஹோதரர்களும் நாசமடைவார்கள்.

ராகு 7-மிடத்திலிருந்து இரண்டு பாபிகளால் பார்க்கப் பெற்றால் பத்னி நீண்ட ஆயுளுள்ளவளாயினும் சீக்ரத்தில் நாசமடைவாள்.

செவ்வாய் 6-லும், ராகு 7-லும், சனி 8-லுமிருக்க பத்னி ஜீவிக்கமாட்டாள்.

கிரஹங்கள் மேஷம் முதல் கன்னி வரை முற்பாதியில் இருந்தால் நேராகவும், பிற்பாதியிலிருந்தால் மறைவாகவும் பலனளிப்பார்கள்.

செவ்வாய் வக்கிரமாகி ஜனம காலத்தில் தான் இருக்குமிடத்துக்கு நான்கிலும், இவ்விதமே புதன் நான்கிலும், குரு ஐந்திலும் சனி ஏழிலும், சூரியன் 5, 9 களிலும், கோசர ரீதியில் வந்தால் விசேஷ பலனை அளிப்பார்கள்.

சூரியன் 2-மிடத்தையோ, விஷ்ணுபுண்யகாலத்தையோ அடையும்போது சந்திரன் தன் பலனையளிப்பான்.

பலனளிக்கும் கிரஹம் பூர்ண பலமுள்ளதானால் பூர்ண பலத்தையும், பாதி பலம் பொருந்தியதானால் பாதி பலனையும், கால் பலமுள்ளதானால் கால் பங்கு பலனையும் அளிக்க வல்லதாகும்.

ஜந்தாமிடம் சுக்ர, சந்த்ரர்களுடன் கூடியோ பார்க்கப்பட்டோ இருக்க ஸ்திரீ தேவதையை உபாஸனம் செய்வான்.

ஜந்தாமிடத்தில் புருஷ க்ரஹமிருக்க புருஷ தேவதையை உபாஸனம் செய்வான்.

கிரஹங்கள் உச்ச க்ஷேத்ரம், மித்ர க்ஷேத்ரம், ஸ்வகவர்கம் இவைகளிலிருக்க தனக்காகவும், நீச க்ஷேத்ரம் முதலியவைகளிலிருக்க பிறருக்காகவும் தேவதோபாஸனம் செய்வான்.

கிரஹம் சுப வீக்ஷணம் பெற்றோ, மித்ரவர்கசாரியோ அடைந்தோ இருக்க உபாஸனமும் சாந்த முறையில் நடக்கும், க்ரூர வீக்ஷணம், க்ரூரவர்கம் இவைகளைப் பெற உபாஸனமும் க்ரூரமாக நடக்கும், ஜந்தில், இரண்டு மூன்று கிரஹங்களிருக்க அவ்வவற்றின் தேவதைகளை உபாஸிப்பான்.

பஞ்சமாதிபன் லக்னாதிபனுக்கு மித்ரனானால் தேவதையும் மித்ரமாகவும், சத்ருவானால் சத்ருவாகவும், சமனானால் சமமாகவுமிருக்கும்.

ஸ்வாம்சலக்னத்தில் செவ்வாயிருக்க ஜனித்தவன் இரும்பைப் பொன்னாக்கும் தாது(ரஸ)வாதம் செய்பவனாகவும், சுட்டிகொண்டு ஜீவிப்பவனாகவும், நெருப்பின் ஸம்பந்தத்தால் ஜீவிப்பவனாகவும் ஆவான்.

பஞ்சமாதிபன் 6, 8, 12-களிலிருக்க பேச்சுத் திறமையில்லாதவனாகவும் வித்யையில்லாதவனாகவுமாவான்.

பஞ்சமாதிபன் குரு புதர்களுடன் சேர்ந்து 6, 8, 12-களிலிருக்க பேச்சு, வித்யைகளின் வாஸனைகூட இருக்காது.

7-ல் லக்னாதிபனிருக்க விஷயப் பற்றற்றவன்.

லக்னாதிபன் 9-லிருக்க பாக்யவானாகவும், ஸமர்த்தனாகவும், விஷ்ணு பக்தனாகவுமாவான்.

லக்னாதிபன் 6-லும், 6-க்குடையவன் லக்னத்திலுமிருக்க வியாதி இல்லாதவனாகவும், சூரனாகவும், பலவானாகவுமாவான்.

ஏழுக்குடையவன் லக்னத்திலும், லக்னதிபன் ஏழிலுமிருக்க தகப்பனையும், மைத்துனனையும் ஸேவிப்பவனாக ஆவான்.

ஐந்தாமதிபன் லக்னத்திலும், லக்னதிபன் ஐந்திலுமிருக்க உதார ஸ்வபாவத்தையுடையவனாகவும், வித்வானாகவும், மான மூள்ளவனாகவுமாவான்.

8-மிடத்தில் லக்னதிபனும், எட்டாமிடத்ததிபன் லக்னத்தி லுமிருக்க சூதாடியாகவும், சூரனாகவும், திருடுவதில் ஆர்வமுள்ள வனாகவுமாவான்.

நவமாதிபன் லக்னத்திலும், லக்னதிபன் நவமத்திலுமிருக்க அன்ய தேசம் செல்பவனாகவும், தர்மத்தில் ருசியுள்ளவனாகவும், அரசனால் கொண்டாடப்பட்டவனாகவுமாவான்.

லாபாதிபன் லக்னத்திலும், லக்னதிபன் லாபத்திலுமிருக்க கற்காரியங்களைச் செய்பவனாகவும், நீண்டகாலம் ஜீவிப்பவனாகவும், அரசனாகவும், ஸமர்த்தனாகவுமாவான்.

லக்னதிபன் விரயத்திலும், விரயாதிபன் லக்னத்திலுமிருக்க எல்லோருக்கும் சத்ருவாகவும், புத்தியில்லாதவனாகவும், உலோபி யாகவுமாவான்.

தனாதிபன் லக்னத்திலும், லக்னதிபன் தனத்திலுமிருக்க தனவானாகவும், குணசாலியாகவும், மானமுள்ளவனாகவும், தாதா வாகவுமாவான்.

லக்னதிபன் 3, 6-களிலிருக்க பராக்ரமமுடையவனாகவும், தயா வானாகவுமாவான்.

லக்னதிபன் 10, 4-இடங்களிலிருக்க விஷய போகத்தில் ஆழ்ந்தவனாகவும், சுகியாகவுமிருப்பான்.

புதன் சனியுடன் கூடினால் பிறரை ஏமாற்றுபவன், பெரியோர் சொற் கேளாதவன்.

சுக்ரன் குரு சேர வித்தை, தனம், பாரியை, குணம் இவை களுடன் கூடுவான்.

புதன் சுக்ரன் சேர கன்னியப் பேசுபவன், வித்வான், ஒரு ஸமூஹத்துக்கு நாயகனாவான்.

புதன் குருவுடன் சேர ஸங்கீதம், கர்த்தனம் இவையறிந்தவ னாகவும் மல்போர் புபவனாகவுமாவான்.

சனி செவ்வாய் சேர துக்கமுடையவன், பொய் பேசுபவன், எல்லோராலும் தூஷிக்கப்படுபவன்.

சனி சுக்ரன் சேர பார்வைக் குறைவு, எழுத்து வேலை, சித்தி ரம் வரைதல்-இவைகளை அறிபவனாவான்.

சுக்ரன் செவ்வாய் சேர பசுக்களை ரக்ஷிப்பவன், மல்லன், ஸமர்த்தன், பிறர்மனைவியிடம் சேருபவன்.

செவ்வாய் குரு சேர நகரத்தலைவனாவான், படித்தவனாவான்

மேஷத்திலிருக்கும் சந்த்ரன் சனியினால் பார்க்கப்பெற்றால் ஏழையாகவும் கருமியாகவுமாவான்.

நவாம்சலக்னத்தில் ராகு விருக்க வில்லாளியாகவோ, திருட னாகவோ ஆவான்.

புத சந்த்ரர்கள் சுபாம்சம் பெறாமல் கேந்த்ரத்திலிருக்க எல்லா வற்றிலும் ஆச்சர்யப் படுபவனாகவும், மதிமயக்கமுள்ளவனாகவு மாவான்.

சந்த்ர சூர்யர்கள் சேர யந்த்ரம் செய்தல், பழுது பார்த்தல், கல்வேலை செய்பவனாவான்.

புத சூர்யர்கள் சேர பசுக்களை ரக்ஷிப்பவன், புத்தி, கீர்த்தி, ஸௌக்யங்களை அடைவான்.

குரு சூர்யர்கள் சேர, க்ரூரனாகவும், பிறர் கார்யத்தில் பற்று டையவனாகவுமாவான்.

சுக்ர சூர்யர்கள் சேர மல்யுத்தம், கத்தி, துப்பாக்கி முதலிய ஆயுதம் பழக்கிவைப்பதால் தனவானாவான்.

சனி சூர்யர்கள் சேர கனி, கைரிகங்களைக் கண்டுபிடித்தல், ரஸவாதம் செய்தல்-இவைகளில் ஸமர்த்தனாவான்.

சனி செவ்வாய் சேர பிராணிஹிம்ஸை செய்பவன், ஸ்திர மில்லாத சித்தத்தையுடையவன்.

சந்த்ரன் புதன் சேர ப்ரியவாதி. தனம் ஸம்பாதிப்பதில் ஸமர்த்தன். அழகு. சித்திரங்களுடன் கூடியவன்

குரு சந்த்ரன் சேர சத்ருக்களை ஜயிப்பவன். குலத்தில் சிறந்தவன், கிலேயில்லாத மனதுடையவன். தனவான்.

சந்த்ரன் சுக்ரன் சேர துணி நெய்வதில் ஸமர்த்தன்

சந்த்ரன் சனி சேர கடினமாகப் பேசுபவன். கபடி.

தசமாதிபன் பலவானாகி. கேந்த்ரகோணங்களிலிருக்க யாகம், தீர்த்த வெட்டுதல், கோயில், தர்மசாலை முதலியவைகளை நிர்மாணம் செய்தல், தேவதை-அதிதிகளை பூஜிப்பவனுவான்.

சுபர்கள் வக்ரத்தை அடைந்தால் ராஜ்யம் பொருள் இவைகளை அளிப்பார்கள். பாபர்கள் வக்ரியானால், துக்கம் பொருள் நாசம் இவைகளை உண்டு பண்ணுவார்கள்.

சுபக்ரஹங்கள் 3-6-11-களிலிருக்க பால்யத்தில் சுகியாகவும், பாபரிருக்க கடைவயதில் சுகியாகவுமாவான்.

ராசியை 60 பங்காகப் பிரிப்பது ஷஷ்டியம்சமெனப்படும். ஒற்றைராசிகளின் பெயர்கள் முறையே குறிக்கப்படுகின்றன.

1 கோராம்சம்	16 அஹி அம்சம்	31 மிருத்யு அம்சம்
2 ராக்ஷஸாம்சம்	17 அம்ருதாம்சு அம்ச	32 காலாம்சம்
3 தேவபாகாம்சம்	18 சந்த்ராம்சம்	33 தாவாக்னியம்சம்
4 குபேராம்சம்	19 ம்ருத்வம்சம்	34 கோராம்சம்
5 ரக்ஷோகணாம்சம்	20 கோமளாம்சம்	35 மயாம்சம்
6 இன்னராம்சம்	21 பத்மநாபாம்சம்	36 கண்டகாம்சம்
7 ப்ரஷ்டாம்சம்	22 லக்ஷ்மீசாம்சம்	37 சுதாம்சம்
8 குலக்னாம்சம்	23 வாசிசாம்சம்	38 அம்ருதாம்சம்
9 கரளாம்சம்	24 திகம்பராம்சம்	39 பரிபூர்ணசந்த்ராம்
10 அக்னி அம்சம்	25 தேவாம்சம்	40 விஷமப்ரதக்தாம்சம்
11 மாயாம்சம்	26 ஆர்த்ராம்சம்	41 சுலிநாசாம்சம்
12 ப்ரேதபுரீசாம்சம்	27 கலிநாசாம்சம்	42 முக்யாம்சம்
13 அபாம்பதி அம்சம்	28 க்ஷிதீச்வராம்சம்	43 வம்சக்ஷயாம்சம்
14 தேவசேனாம்சம்	29 கமலாகராம்சம்	44 உத்பாதாம்சம்
15 காலாம்சம்	30 மந்தாத்மஜாம்சம்	45 காலரூபாம்சம்

46 லௌம்யாம்சம்	51 ப்ரவீணாம்சம்	56 அகுபாம்சம்
47 மிருத்வம்சம்	52 காலாக்னி அம்சம்	57 அதிதிளாம்சம்
48 சுசிதளாம்சம்	53 தண்டாயுதாம்சம்	58 சுதாபயோதியம்
49 தம்ஷ்ட்ராகராளா	54 நிர்மலாம்சம்	59 ப்ரமணாம்சம்
50 இந்துமுகாம்சம்	55 சுபாம்சம்	60 இந்துரேகாம்சம்

பெயரிலுள்ள தேவர்களே அந்தந்த அம்சங்களின் அதிபர்கள். இரட்டை ராசிகளில் இவற்றைத் தலைகீழாய் மாற்றிக்கொள்வது.

சுபஷஷ்ட்யம்சமானால் சுப பலம், உச்ச க்ஷேத்ரம், மூலத்ரிகோண க்ஷேத்ரம், ஸ்வக்ஷேத்ரம், கேந்த்ரம், உத்தமாம்சம், மித்ர க்ஷேத்ரம், த்ரிகோணம், ஏழுவர்க்கத்திலுமுள்ள ஸ்வவாம்சம், அதிமித்ராம்சம் இவற்றிலுள்ள க்ரஹம் பூர்ண பலம் பெற்றவை.

முற்கூறிய 10 வர்கங்களுள் 2 சேர பாரிஜாதாம்சம், 3 சேர உத்தமாம்சம், 4 சேர கோபுராம்சம், 5 சேர ஸிம்ஹாஸனாம்சம், 6 சேர பாராவதாம்சம், 7 சேர தேவலோகாம்சம், 8 சேர நரலோகாம்சம், 9 சேர ஐராவதாம்சம், 10 சேர வைசேஷிகாம்சம்.

ஐராவதாம்சத்தில் ஜனித்தவன் ஸார்வபௌமன்.
தேவலோகாம்சத்தில் ,, பூமிபதி
பாராவதாம்சத்தில் ,, அம்மானை அண்டிப் பிழைப்பவன். சாஸ்த்ர நிபுணன்
ஸிம்ஹாஸனாம்சத்தில் ,, மஹாபூமிபதி.
கோபுராம்சத்தில் ,, தனமுள்ளவன். நிறமை சாலி.
உத்தமாம்சத்தில் ,, ஸகல ஸம்பத்துண்டு.
பாரிஜாதாம்சத்தில் ,, தனவான்.
ஸ்வவாம்சத்தில் ,, புத்திமான். யசஸ்வி. சுகி.

ஒற்றைப்பட்ட ராசிகளில் சூர்யாதி நவக்ரஹங்களுக்கு முறையே 5 அவஸ்தைகள் ஏற்படுகின்றன. இரட்டைப்பட்டவைகளுக்கு தலைகீழாக அவஸ்தைகள் ஏற்படுகின்றன. 1. பாலன் 2. குமாரன் 3. யுவா 4. வ்ருத்தன் 5. ம்ருதன். க்ரஹங்கள் தங்கள் தங்கள் தசாபுக்தி காலங்களில் தன் பாவாதி அவஸ்தைக் கிணங்க பலனை யளிப்பர்.

ஹோரா சக்ரம்.

காள் ஒன்றுக்கு 24 ஹோரைகளாகும். அத்தத்த கிழமைகளில் அவரவர்களின் ஹோரை அறியும் க்ரமம். இதில் ஒவ்வொரு கிழமையும் அவரவர்களின் ஹோரையில் ஆரம்பமாவதைக் காணலாம். ஹோரை-1மணி.

காலம்	ஞாயி	திங்	செவ்	புதன்	வியா	வெள்	சனி
1	ரவி	சந்	செவ்	புத	குரு	சுக்	சனி
2	சுக்	சனி	ரவி	சந்	செவ்	புத	குரு
3	புத	குரு	சுக்	சனி	ரவி	சந்	செவ்
4	சந்	செவ்	புத	குரு	சுக்	சனி	ரவி
5	சனி	ரவி	சந்	செவ்	புத	குரு	சுக்
6	குரு	சுக்	சனி	ரவி	சந்	செவ்	புத
7	செவ்	புத	குரு	சுக்	சனி	ரவி	சந்
8	ரவி	சந்	செவ்	புத	குரு	சுக்	சனி
9	சுக்	சனி	ரவி	சந்	செவ்	புத	குரு
10	புத	குரு	சுக்	சனி	ரவி	சந்	செவ்
11	சந்	செவ்	புத	குரு	சுக்	சனி	ரவி
12	சனி	ரவி	சந்	செவ்	புத	குரு	சுக்
13	குரு	சுக்	சனி	ரவி	சந்	செவ்	புத
14	செவ்	புத	குரு	சுக்	சனி	ரவி	சந்
15	ரவி	சந்	செவ்	புத	குரு	சுக்	சனி
16	சுக்	சனி	ரவி	சந்	செவ்	புத	குரு
17	புத	குரு	சுக்	சனி	ரவி	சந்	செவ்
18	சந்	செவ்	புத	குரு	சுக்	சனி	ரவி
19	சனி	ரவி	சந்	செவ்	புத	குரு	சுக்
20	குரு	சுக்	சனி	ரவி	சந்	செவ்	புத
21	செவ்	புத	குரு	சுக்	சனி	ரவி	சந்
22	ரவி	சந்	செவ்	புத	குரு	சுக்	சனி
23	சுக்	சனி	ரவி	சந்	செவ்	புத	குரு
24	புத	குரு	சுக்	சனி	ரவி	சந்	செவ்

ஆயுர்தாயம்.

சூரியன் முதல் சனி வரையிலுள்ள ஏழு கிரஹங்களுக்கும் அவரவர்கள் உச்ச வீடுகளிலிருந்தால் கீழ்க்கண்டபடி பரமாயுளென மயன் முதலிய பெரியோர்கள் கூறுகின்றனர்.

சூரியன் 19 வரு சந்த்ரன் 25 வரு செவ்வாய் 15 வரு புதன் 12 வரு குரு 15 வரு சுக்ரன் 20 வரு சனி 20 வரு.

பரம நீசத்திலிருக்கும் சூர்யாதி கிரஹங்களுக்கு மேற்கண்ட வருஷங்களில் அரைப் பங்காகும்.

பரமோச்சத்துக்கும் பரம நீசத்துக்கும் நடுவிலிருந்தால் த்ரைராசிகம் செய்துகொள்ள வேண்டும்.

பாபிகள், 12 11, 10, 9, 8, 7-இவ்விடங்களில் 12-லிருக்க தனக்குள்ள பூர்ண ஆயுளையும், 11-லிருக்க பாதி பாகத்தையும், 10-லிருக்க மூன்றிலொரு பங்கையும், 9-லிருக்க கால்பாகத்தையும், 8-லிருக்க ஐந்திலொரு பாகத்தையும், 7-லிருக்க ஆறிலொரு பாகத்தையும் குறைக்கின்றன, இவ்வண்ணமே, மேற்கண்ட ஆறு இடங்களில் சுப க்ரஹங்களிருக்க முற்கூறிய விதத்தில் பாதிபாகம் குறையும், மேற்கண்ட ஸ்தானங்களில் சுபர்களோ அசுபர்களோ இரண்டு முதல் அநேக க்ரஹங்கள் சேர்ந்திருக்க, பலமுள்ள க்ரஹம் மட்டில் தனக்கேற்பட்ட ஆயுளைக் குறைக்குமே தவிர மற்ற க்ரஹங்களின் ஆயுளில் குறைவு ஏற்படாதென சில பெரியோர்களின் அபிப்பிராயம்.

லக்னத்தில் சூரியன், செவ்வாய், சனிகளுள் ஒரு பாப க்ரஹமிருப்பின் மொத்த ஆயுளில் கீழ்க்காணும் முறையில் குறைவு ஏற்படும். லக்னத்தில் சென்ற பாகங்களைக் கலைகளாக்கி நவாம்சத்துக்குள்ள 200 கலைகளால் வகுக்க வந்த ஈவை மேஷம் முதல் ஜன்ம லக்னம் வரை சென்ற அம்சங்களைச் சேர்த்து ஏழு கிரஹங்களுக்கும் சேர்ந்த மொத்தமான பிண்டாயுளையும் பெருக்கி வந்த தொகையை 108-ஆல் பெருக்கி வந்தவை வருஷங்கள். மீதத்தை 12-ஆல் பெருக்கி 108-ஆல் வகுக்க மாதங்கள். மீதத்தை 30-ஆல் பெருக்கி 108-ஆல் வகுக்க வரும் ஈவு தினங்கள். இவ்விதமே

60-ஆல் பெருக்கி 108-ஆல் வகுக்க வருவது நாழிகை. இவை களை மொத்தத்தில் கழித்து மீதமுள்ளது ஆயுளெனக் காண்பது. லக்னத்தில் வலிக்கும் பாப க்ரஹம் சுப க்ரஹ வீக்ஷணம் பெறின் பாதி ஆயுள் குறையும்.

மனிதனுக்கும் யானைக்கும் 120 வருஷங்களும், ஐந்து தினங் களும், குதிரைகளுக்கு 32 வருஷங்களென்றும், கழுதை ஒட்டகை களுக்கு 25 வருஷங்களும், எருது எருமைகளுக்கு 24 வருஷங் களும், நாய்கட்கு 12 வருஷங்களும், ஆடு மான் முதலியவை களுக்கு 16 வருஷங்களும் பரமாயுட் காலமெனச் சொல்லப்படு கிறது.

மீன லக்னம் மீன நவாம்சத்தில் பிறந்தவனுக்கு புதன் விரு ஷப ராசியில் 25 கலைகள் சென்று 26-வது கலையிலிருக்க மற்ற க்ரஹங்கள் தந்தம் உச்ச க்ஷேத்ரத்திலிருக்க பரமாயுள் ஏற்படு கிறது.

உச்ச க்ஷேத்ரத்திலோ, வக்ர சாரத்திலோ இருக்கும் கிரஹத் தினால் ஏற்படும் ஆயுளை மூன்றால் பெருக்கி வரும் தொகை ஆயு ளென்றும், இவ்விதமே வர்கோத்தமம், ஸ்வக்ஷேத்ரம், தன் நவாம்சம் அல்லது ஸ்வத்ரேக்காணத்தில் வலிக்கும் கிரஹங் களின் ஆயுள் இரண்டு பங்கு ஏற்படுமென்றும் ஸத்யாசார்யரின் அபிப்பிராயமாகும்.

குரு சந்த்ரர்கள் கடக லக்னத்திலிருக்க, புத சுக்ரர்கள் தனி யாகவோ, சேர்ந்தோ 1, 4, 7, 10-களிலிருந்து, சூரிய, சனி, செவ்வாய்கள் தனித்தோ, சேர்ந்தோ 3, 6, 11-களிலிருக்கப் பிறந்தவனுக்கு ஆயுர்தாய நிர்ணயம் செய்யக் கூடாது. அவர் களுடைய ஆயுளைக் கணக்கிட முடியாது.

தசாந்தர்தசா.

சரீரமான லக்னம், ஆத்மாவான சூரியன், மனதான சந்த்ரன்- இவைகளில் எது பலமுள்ளதோ; அதன் தசையே முதலிலுண் டாகும். அந்த க்ரஹமும் கேந்த்ரம் (1, 4, 7, 10) பணபரம் (2, 5, 8, 11) ஆபோக்லிமம் (3, 6, 9, 12) இவைகளிலுள்ள க்ரஹத்தின் பலாதிக்ய க்ரமப்படி தம் தம் தசையை அளிப்பர். கேந்த்ரம் முதலாகவே ஆரம்ப வயதில் தசை ஏற்படும். கேந்த்ரத்தில்

க்ரஹங்களே இல்லாமலிருப்பின் பணபரமே ஆரம்பிக்கும். மற்ற வைக்குமிவ்விதமே காண்பது.

மூல தசாநாதனுக்கு கேற்பட்ட மொத்த வருஷங்களைக் கணக் கிட்டு, பிறகு அந்தர் தசா காலத்தை நிர்ணயிப்பது. பிறகு மூல தசாநாதனுடன் கூட வலிக்கும் க்ரஹங்களுக்கு அந்தர் தசா காலங்களை நிர்ணயிக்க வேண்டும். ஒரே ராசியிலிருக்கும் கிரஹம் மூல தசாநாதனுக்குரிய அந்தர் தசாகாலத்தின் பாதி பாகத்தில் தன் தசா பலனை அளிக்கும். அந்த பாகத்தை அந்த க்ரஹத் தின் புக்தி காலமாகக் கொள்ளவும். மூல தசாதிபதிக்கு 6, 9-ல் வலிக்கும் க்ரஹம் தசாநாதன் அந்தர் தசா காலத்தின் மூன்றில் ஒரு பங்கான காலத்தில் தனது தசையின் பலனை அளிக்கிறது. ஏழில் வலிக்கும் கிரஹம் ஏழில் ஒரு பங்கான காலத்தில் தசா பலனை யளிக்கும். இப்படி மூலதசாநாதனுக்கு 4, 8-களில் வலிக்கும் கிரஹம் தங்கள் தசா பலனை நான்கில் ஒரு பங்கு காலத் தில் தரும். லக்னத்துக்கும் இவ்விதமே. ஒரு ஸ்தானத்தில் அதிக க்ரஹங்கள் இருந்தால் பலமுள்ள க்ரஹந்தான் பலனை யளிக்கும். மற்றவைகள் ஒன்றும் செய்யா.

பாதி பாகம், மூன்றிலொரு பாகம், ஏழில் ஒரு பாகம், கால் பாகம் இவைகளை சம எண்ணிக்கைகளாக்குவது. $\frac{1}{1}, \frac{1}{2}, \frac{1}{3}, \frac{1}{7}, \frac{1}{4}$, இவைகளைப் பெருக்க $1 \times 2 \times 3 \times 7 \times 4 = 168$ ஆகும். 1, 2, 3, 7, 4 ஆல் வகுக்க ஈவு 168, 84, 56, 24, 42-களால் தனித்தனியே அந்தந்த தசா வருஷத்தைப் பெருக்கி, இவ்வெண்ணிக்கைகளைக் கூட்டி வந்த மொத்தத் துகை 374-ஆல் தனித் தனியே பெருக்க வந்த தசா வருஷத்தை வகுத்து வந்த ஈவுத் தொகை கிரஹங் களின் அந்தர் தசா காலமாகும்.

ஆறு வித பலங்களையுடைய க்ரஹ தசையும், பரமோச்ச பாகத்தில் இருக்கும் க்ரஹ தசையும் (பூர்ணை) பூர்ண பலனை உடையனவாகும். பலமில்லாத க்ரஹ தசை ரிக்தை என்ற பெய ருடையதாகிறது. நீசாம்சத்திலும், சத்ரு பாகத்திலும் இருக்கும் கிரஹ தசையும் அநிஷ்ட பலனையுடையது என்றறியவும்.

பரமோச்ச பாகத்தை விட்டு விலகிய நீசாம்சம் வரும் கிரஹ தசை அவரோஹியெனப் பெயர் பெறுகிறது. இதுவே உச்சாம் சத்திலோ, மித்ராம்சத்திலோ இருக்க மத்யை எனப்படுகிறது.

இவ்விதமே, நீசாம்சத்திலிருந்து உச்சாம்சம் வரும் தசை 'ஆரோஹிணி' எனப்படுகிறது. நீசத்திலிருந்து உச்சம் போகுங் கால் நீச நவாம்சத்திலும், சத்ரு அம்சத்திலுமிருக்க 'அதமா' என்று பெயர் பெறுகிறது. இக்காலங்களில் உண்டாகும் பலன் களும் பெயர்க்குரியதாகவே இருக்கும்.

உபய ராசி லக்னமானால் மூன்று விரேக்காணங்களும், அதமம் மத்யமம், பூஜிதமெனவும் சர ராசி லக்னமானால் பூஜிதம், மத்யமம், அதமம் எனவும், ஸ்திர ராசி லக்னமானால், அதமம், பூஜிதம், மத்யமம் என வும் பெயர்படுகிறது. பெயருக்குரிய பலனையே சொல்லவும்.

சந்த்ரன் 1, செவ்வாய் 2, புதன் 9, சுக்ரன் 20, குரு 18, சூர்யன் 20, சனி 50-இவை நிஸர்க தசா வருஷங்கள். இந்நிஸர்க தசா காலத்தோடு மேலே சொல்லப்பட்ட பிண்ட தசா காலமோ, அந்தர் தசா காலமோ, எப்போது எந்த க்ரஹத்துக்குச் சேருமோ அப்போது அந்த க்ரஹத்தின் தசையோ, அந்தர் தசையோ அதற்குகந்த பலனை பூர்ணமாகவே அளிக்கும்.

அந்தர்தசாநாதனை அவனுக்கு மித்ர க்ரஹமோ அந்தர் தசாதிபன் ஷட்வர்கமோ, சுப க்ரஹமோ, லக்னத்திலிருக்கும் போதோ, தசாரம்ப லக்னத்துக்கு 3, 10, 6, 11-களிலிருக்கும் போதோ ஆரம்பமாகும் தசை நல்ல பலனை யளிக்க வல்லதாகும். அந்தர்தசாநாதனுக்கு மித்ர க்ஷேத்ரம், உச்சக்ஷேத்ரம், உபசயம், (3, 6, 10, 11) 5, 7, 9-களில் இருக்கும் சந்த்ரன் நல்ல பலனையே அளிக்கிறான். இதற்கு மாறுக விருந்தால் கெட்ட பலனையே அளிப்பான். அதிசத்ருவான க்ரஹம் சத்ரு தசையின் புக்தி காலத்தில் அதிக பலனை அளிக்கும்.

சந்த்ரன் தன் வீடான கடகத்திலிருக்கும்போது ஆரம்பிக்கப் பட்ட அந்தர் தசையானது கொண்டாடப்படும் தன்மை, பொருள், ஸௌக்யம் இவற்றைத் தருவனவாகும். சந்த்ரன் மேஷ விருச்சிகங்களுள் ஒன்றில் வலிக்க ஸ்த்ரீயை தோஷமுடைய வளாக்கும். மிதுன கன்னிகளில் ஒன்றில் இருக்க வித்யை, ஸ்நேஹ தன், ரவியம் இவைகளை அளிப்பதாக ஆகும். சந்த்ரன் லிங்கத்திலிருக்க துர்கம், காடு, மார்கம், வீட்டுக்கு ஸமீபம்— இவைகளில் க்ருஷி செய்தல் அபிவிருத்தியாகும். விருஷப

துலாங்களிலிருக்க ஆஹாரத்தை அளிப்பதாக ஆகும். மகர கும்பங்களில் வலிக்க கெட்ட ஸ்த்ரீயின் ஸம்பந்தத்தை அளிப்ப தாகும். தனுஸ் மீனங்களிலிருக்க, கொண்டாடுதல், த்ரவ்யம், ஸௌக்யம் இவைகளுண்டாகும்.

சூரியனுடைய சுபமான தசாந்தர்தசைகளில் புலி நகம், யானையின் தந்தம், புலி அல்லது மான் தோல், தங்கம், கொடிய செய்கை, வழி நடத்தல், அரசன், யுத்தம்—இவைகளால் திரவி யத்தை யடைகிறான். கொடுமையான ஸ்வபாவம், தைர்யம், எப்போதும் முயற்சியில் பற்று, கீர்த்தி, பராக்ரம விருத்தி— இவைகளுண்டாகும்.

சூர்யனுடைய அசுப தசையில், பார்யை, புத்ரன், த்ரவ்யம், சத்ரு, ஆயுதம், அக்னி, அரசன்—இவர்களிடமிருந்துண்டான அதிக ஆபத்துகளும், சுப தசையானால் நல்விஷயத்திலும், அசுப தசையானால் கெட்ட விஷயத்திலும் பொருட் செலவும், பாபத் தில் பற்றுதலும், தன் வேலையாட்களுடன் சண்டையும், ஹ்ருதயம், வயிறு—இவைகளில் பிடையும், வியாதியுமுண்டாகும்.

சந்த்ரனுடைய தசாதிகளில் மந்த்ரம், பிராம்மணர்களால் உண்டுபண்ணப்பட்ட பலன்களையும், கரும்பு, தயிர், நெய், வஸ்த்ரம், விளையாட்டு, எள்ளு, அன்னம், பயிற்சி இவைகளா லுண்டாகும் பலன்களையும், தூக்கம், சோம்பல், பொறுமை, பிராம் மணர்-தேவதையிடத்தில் பக்தி, பெண் பிரஜையின் உத்பத்தி, புத்தி விருத்தி, கீர்த்தி, தனவிருத்தி—குறைவு இவைகளும், பல வான்களுடனும், பந்துவர்கங்களுடனும் விரோதமும் உண்டாகும்.

செவ்வாயின் சுப தசாந்தர் தசையில் சத்ரு ஜயம், அரசன், ஸஹோதரன், பூமி, கம்பளம், ரத்ன கம்பளம் — இவைகளால் பொருள் லாபமும் உண்டாகும். செவ்வாயின் அசுப தசையில் புத்ரன், மித்ரன், களத்ரம், ஸஹோதரன் இவர்களோடு வைரமும், வித்வான், குரு முதலியவர்களிடம் த்வேஷிக்கும் இயல்பும், தாஹம், ரக்தம், ஜ்வரம், பித்தம், அவயவங்களின் பங்கம்— இவைகளாலும், பர களத்ரத்தால் உண்டானவைகளுமான வியாதிகளும், துஷ்க்ருத்யர்களுடன் ஸ்நேஹமும், அதர்மத்தில் பற்றுதலும், கடுமையாகப் பேசுதல், உக்ரமான ஸ்வபாவ முடைமை இவைகளுண்டாகும்.

புதனுடைய சுபதசாதிகளில் தாது செல்கை, தோழன், குரு, பிராம்மணர்கள் — இவைகள் மூலம் திரவிய வரவும், பெரியோர்களால் புகழப்படுதலும், நற்கீர்த்தியும், வெண்கலம், ஸ்வர்ணம், குதிரை, பூமி, ஸௌபாக்யம், ஸௌக்யம் — இவைகளின் லாபங்களும், பரிஷ்கரித்தல், ஸ்நேஹம் செய்தல் இவைகளில் ஸாமர்த்தியம், புத்திவிருத்தி, தர்ம க்ரியாநுஷ்டானம் இவைகளுண்டாகும், அசுப தசையில் கடுமையாக இருத்தல், வீண் முயற்சி, பந்தனம், மனக்கிலேசம், த்ரிதோஷ பிடை இவைகளேற்படக் கூடும்.

குருவின் சுபதசாதிகளில் தைரவம், வீர்யம் இவைகளின் உத்பத்தி, புத்தி விருத்தி, காந்தி, ப்ரதாபங்களின் விருத்தி, உபகார சிந்தை, எல்லாவற்றிலும் முயற்சி, மந்த்ரம், நீதி சாஸ்த்ரம், அரசன், வேதாத்யயனம் முதலியவைகளால் தனத்தையடைகிறான், ஸ்வர்ணம், குதிரை, புத்ரன், யாகம், வஸ்த்ரம், இவைகளுடைய விருத்தியும், நல்ல அரசர்களுடன் சினேகமும் ஏற்படும், அசுப தசையில் மிகவும் ஸூக்ஷ்மமானவற்றை புத்தியாலாராய்தல், பிரவேசிக்க முடியாத விடத்தில் பிரவேசிப்பது முதலியவற்றால் சிரமமும், தர்ம கார்யத்திலிருந்து விலகியவர்களிடம் விரோதமும், காதுகளில் ரோகமுமேற்படும்.

சுபமான சுக்ரனுடைய தசாதிகளில் ஸங்கீதத்தில் விருப்பம், மகிழ்ச்சி, சுகந்த த்ரவ்யங்கள், உணவுப் பொருள், பானவகைகள், வஸ்த்ரம், ஸ்த்ரீ, ரத்னம், காந்தி, சிற்றின்ப உபகரணங்கள் அறிவு, பந்துமித்ர லாபம், க்ரய விக்ரயங்களில் ஸாமர்த்தியம், பயிரிடுதல், புதையல் லாபம், பொருள் வரவு இவைகள் உண்டாகும், அசுபமான தசையில் ஜனக்கூட்டம், அரசன், வேடன் இவர்களுடன் வைரமும், தோழமையுமூலம் துக்கமும் உண்டாகும்.

சனியின் சுபதசாதிகளில், கழுதை, ஒட்டகம், பசு, எருமை, வயதான ஸ்த்ரீ இவைகளின் ப்ராப்தியும், சேரி, க்ராமம், பட்டணம் இவைகளில் அதிகாரத்தால் உண்டான கௌரவமும், அல்பதான்யங்களின் வரவும் உண்டாகும், கபம், பெருமை, வாயு, கோபம், மோஹம், ஆபத்து, சோம்பல், சிரமம் இவைகளும் ப்ருத்யர்கள், புத்ரர்கள், களத்ரம் இவர்களிடமிருந்து விரட்டுதலும், அவயவ நாசமும் உண்டாகும்.

லக்ன தசாபலம் லக்நாதிபனுக்கு ஸமானமாகும்.

ஸப்ஜ்ஞாத்யாயத்தில் எந்த க்ரஹத்துக்கு எந்த திரவியம் சொல்லப்பட்டிருக்கிறதோ, அந்த க்ரஹத்தின் த்ரவ்யம் தசை சுபமானால் அதிக லாபமும், அசுப தசையானால் அந்த த்ரவ்யம் நாசமாகும் என்றும் கண்டுகொள்ள வேண்டும்.

ஜாதகம் இல்லாதவனுக்கு அவன் சரீர சோபையைக் கண்டு நடக்கிற தசையைத் தெரிந்து கொள்ளலாம். செவ்வாய், புதன், குரு, சுக்ரன், சனி இவர்கள் க்ரமமாக அக்னி, பூமி, ஆகாசம், ஜலம், காற்றுகளுக்கு அதிபதியாவார்கள். பூமி முதலிய பூதங்களுக்கு அதிபதியின் தசை நடக்கும்போது அந்தந்த பூதங்களுடைய காந்தி ஜாதகனுக்கு ஏற்படுவதுடன் க்ராணேந்த்ரியம், ரஸனேந்த்ரியம், சக்ஷுரிந்த்ரியம் இவைகளால் ஊஹிக்கக்கூடிய குணங்களுமுண்டாகும்.

சுபமான பலனை அளிக்கக்கூடிய தசையில் மனதும் சுபமாகவே இருக்கும், சுகத்தையும் தனவாப்தியையும் அதிகமாக உண்டுபண்ணுகிறது. இதுவரை சொல்லப்பட்ட பலன்களைக் கொண்டு நடக்கும் தசையை ஊஹித்தல் வேண்டும், பலமில்லாத க்ரஹங்கள் மூலம் சொல்லப்படும் பலன்கள் ஸ்வப்னம், ஸங்கல்பம் இவைகளில் மட்டில் பலித்ததாகிறது, சரீரச் சாயை, மனோகிலே, பலானுபவம் — இவைகளைக் கொண்டு அக்காலத்தில் நடைபெறும் தசையை ஊஹித்துணரலாம்.

ஒரு க்ரஹமூலம் இரண்டு பலன்கள் ஒன்றுக்கொன்று விரோதமாக ஏற்படும்போது ஒரு பலனும் அனுபவத்தில் ஏற்படாது, இரண்டு பலன்களில் எது அதிகமோ அது அனுபவத்தில் ஏற்படுகிறது.

இதுவரை ஆயுர்தாயம், தசாந்தர்தசை இவைகளின் விஷயங்கள் சுருக்கமாக எழுதப்பட்டது, இவைகளை அனுபவத்தில் எல்லோரும் பார்ப்பதில்லையாயினும் பெரிய கிரந்தங்களில் இவ்விஷயங்கள் விரிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. இவ்விஷயங்கள் நேரில் நன்கு உபபாதனம் செய்தாலொழிய அவ்வளவு சுலபமாக போதமாகாது. குருமுகமாகக் கற்கவேண்டியதாகவும் அனுபவமூலமாகவும் தேர்ச்சி பெறவேண்டிய விஷயங்களை எழுத்தில் எழுதுவது முடியாத காரியமாதல் பற்றி இவ்விதம் சுருக்கமாக எழுதப்பட்டது.

அஷ்டகவர்கம்.

கோசரத்தில் ஸஞ்சரிக்கின்ற கிரஹங்களால் மனிதர்களுடைய சுபாசுபங்களை அறிய அநுகூலமான அஷ்டகவர்கம் எழுதப்படுகிறது.

சூரியன்-48.

லக்னம்	3 4 6 10 11 12	(6)
சூரியன்	1 2 4 7 8 9 10 11	(8)
சந்திரன்	3 6 10 11	(4)
செவ்வாய்	1 2 4 7 8 9 10 11	(8)
புதன்	3 5 6 9 10 11 12	(7)
குரு	5 6 9 11	(4)
சுக்கிரன்	6 7 12	(3)
சனி	1 2 4 7 8 9 10 11	(8)

சந்திரன்-49.

லக்னம்	3 6 10 11	(4)
சூரியன்	3 6 7 8 10 11	(6)
சந்திரன்	1 3 6 7 10 11	(6)
செவ்வாய்	2 3 5 6 9 10 11	(7)
புதன்	1 3 4 5 7 8 10 11	(8)
குரு	1 2 4 7 8 10 11	(7)
சுக்கிரன்	3 4 5 7 9 10 11	(7)
சனி	3 5 6 11	(4)

செவ்வாய்-89

லக்னம்	1 3 6 10 11	(5)
சூரியன்	3 5 6 10 11	(5)
சந்திரன்	3 6 11	(3)
செவ்வாய்	1 2 4 7 8 10 11	(7)
புதன்	3 5 6 11	(4)
குரு	6 10 11 12	(4)
சுக்கிரன்	6 8 11 12	(4)
சனி	1 4 7 8 9 10 11	(7)

புதன்-54

லக்னம்	1 2 4 6 8 10 11	(7)
சூரியன்	5 6 9 11 12	(5)
சந்திரன்	2 4 6 8 10 11	(6)
செவ்வாய்	1 2 4 7 8 9 10 11	(8)
புதன்	1 3 5 6 9 10 11 12	(8)
குரு	6 8 11 12	(4)
சுக்கிரன்	1 2 3 4 5 8 9 11	(8)
சனி	1 2 4 7 8 9 10 11	(8)

குரு-56.

லக்னம்	1 2 4 5 6 7 9 10 11	(9)
சூரியன்	1 2 3 4 7 8 9 10 11	(9)
சந்திரன்	2 5 7 9 11	(5)
செவ்வாய்	1 2 4 7 8 10 11	(7)
புதன்	1 2 4 5 6 9 10 11	(8)
குரு	1 2 3 4 7 8 10 11	(8)
சுக்கிரன்	2 5 6 9 10 11	(6)
சனி	3 5 6 12	(4)

சுக்கிரன்-52.

லக்னம்	1 2 3 4 5 8 9 11	(8)
சூரியன்	8 11 12	(3)
சந்திரன்	1 2 3 4 5 8 9 11 12	(9)
செவ்வாய்	3 4 6 9 11 12	(6)
புதன்	3 5 6 9 11	(5)
குரு	5 8 9 10 11	(5)
சுக்கிரன்	1 2 3 4 5 8 9 10 11	(9)
சனி	3 4 5 8 9 10 11	(7)

சனி-39.

லக்னம்	1 3 4 6 10 11	(6)
சூரியன்	1 2 4 7 8 10 11	(7)
சந்திரன்	3 6 11	(3)
செவ்வாய்	3 5 6 10 11 12	(6)
புதன்	6 8 9 10 11 12	(6)
குரு	5 6 11 12	(4)
சுக்கிரன்	6 11 12	(3)
சனி	3 5 6 11	(4)

இதை சுலபமாகக் காண்பதற்கு சக்கரமுறையில் ஒரு யந்த்ரம் இப்புத்தகத்துக்கு அநுபந்தமாகத் தனியே சேர்க்கப்பட்டிருக்கிறது. அவற்றைக்கொண்டு சுலபமாக ஸகல ஜாதகங்களுக்கும் விரைவில் அஷ்டகவர்க்கத்தை அமைத்துவிடலாம்.

ஸூர்யாதி கிரஹங்களின் அஷ்டகவர்கத்தில் மேஷாதிராசிகளில் பிந்துவே இல்லாவிடில் அவ்விடத்தில் கோசரத்தில் அந்த கிரஹம் ஸஞ்சரித்தால் அசுபமுண்டு. ஒரு பிந்து இருக்க தனநாசம் இரு பிந்துகளிருக்க செலவு. 3, 4 பிந்துகளிருக்க பயம் 5 பிந்துகளிருக்க காரிய லாபம். 6 இருக்க ஸ்த்ரீ லாபம். 7-பிந்துகளிருக்க தனலாபம். 8 இருக்க ராஜ்யலாபம்.

அந்தந்த க்ரஹங்களாலடையப்பட்ட ராசிகளே அந்த கிரஹங்களின் பெயரைக் கொண்டே சொல்ல வேண்டும். இவ்விதம் சொல்வதில் லக்னத்தையும் சேர்த்து 8 விதங்களாகின்றன.

ஜன்ம காலத்தில் எந்த கிரஹம், யாதொரு ராசி, அம்சங்களிலிருக்கின்றனவோ, அவ்விராசியம்சங்களே அந்த க்ரஹம் கோசரத்தில் அடையுங்கால் தாம் வஸிக்கும் பாவங்களின் சுபாசுப பலன்களை அளிக்கின்றனர். அஷ்டகவர்கம் அமைத்தபின் அதிக பிந்துக்களுள்ள எந்த பாவத்தை யாதொரு க்ரஹம் கோசரத்தில் அடைகின்றதோ. அந்த க்ரஹம் சுபனானாலும் அசுபனானாலும் அந்த பாவத்துக்கு புஷ்டியைச் செய்யும். பிந்துக்களில்லாத வீட்டில் வந்தால் அசுபமே உண்டாகும்.

ஒரு பாவத்தில் பல கிரஹங்கள் வஸித்தால், கோசரத்தில் அந்தந்த ராசியில் அக்கிரஹம் வரும் சமயம் காரகன் முதல் 12 பாவம் வரை பாவபுஷ்டி ஏற்படும்.

கீழ்மேலாக 9 கோடுகளும், தென்வடலில் 13 கோடுகளும் அமைக்க 96 கட்டங்கள் ஏற்படும். இவை 8 வரிசையாக அமையும். இவைகளுக்கு கிரமமாய் இலக்னம் சந்த்ரன் புதன் சுக்ரன் சூரியன் செவ்வாய் குரு சனி இவர்கள் ராசி நாதர்களாவார். அதிக பிந்துக்களோடு கூடியிருக்க இவர்கள் அதிகம் பலனை அளிப்பார்கள்.

இராசியை 8 பாகங்களாக்கினால் முதல் பாகத்தில் சனியும், இரண்டாவது பாகத்தில் குருவும் பலன்களை அளிப்பார்கள். கிரகங்கள் வரிசைப்படி பார்க்க கடைசி பாகத்தில் லக்னம் விசேஷ பலனை அளிக்கும்.

ஸர்வாஷ்டகவர்கத்தில் 28 பிந்துக்களுக்குக் குறைந்தால் அசுபபலன். 28க்கு மேல் பிந்துக்களிருக்க சுபபலன்.

சந்த்ரன் அடையும் சுபாசுபவர்க்கங்களால் பார்த்து சுப வர்க்கம் அதிகமாயின் சுபமென்றும், அசுபவர்க்கம் அதிகமாயின் அசுபமென்றும் சிலர் சொல்லுவர்.

பாவக்ரஹமானாலும் ஸ்வக்ஷேத்ரத்திலிருந்தால் பாவபலன் விருத்தியாகும். நீசம் சத்ருக்ஷேத்ரங்களிலிருந்தால் அசுபபலன். சுபன் உச்சனானாலும், துஸ்ஸ்தானாதிபனானால் பாவபலனைக் குறைப்பான். பாபி தன் உச்சத்திலிருந்து சுபஸ்தானாதிபனானால் பாவத்துக்கு அநுகூலத்தைச் செய்வான்.

சூரியன் வலிக்கும் ராசிக்கு 9-வது இராசி பித்ருஸ்தானம். அவ்விடத்திலுள்ள பிந்துக்களால் சோத்யபிண்டத்தைப் பெருக்கவும். பெருக்கி வந்த தொகையை 27-ஆல் வகுக்க வரும் சேஷ எண்ணுள்ள நக்ஷத்ரத்தில் சனி கோசாரத்தில் வரும்போது தகப்பனுக்கு க்லேசமுண்டாகும். மேற்குறிப்பிட்ட நக்ஷத்ரத்துக்குத்ரிகோண நக்ஷத்ரத்தில் சனி வரும்போது தகப்பன் அல்லது அவனுக்கு ஸமானமானவனுக்கு நாசமேற்படும்.

ஜன்ம லக்னத்துக்கு சுகாதிபன் வலிக்கும் அம்சாதிபன் தசையிலும் பித்ருநாசம் ஏற்படலாம். ஸுகாதிபன் தசையிலாவது தகப்பனுக்கு சமானமானவரின் மரணமுண்டாகும்.

சூரியனுடைய மொத்த பிந்துக்களை சோதித்து மீதத்தை 8-னால் பெருக்கி 12-ஆல் வகுத்து மீதமான ராசியில், சூரியன் கோசரத்தில் வரும் சமயத்திலாவது, த்ரிகோண ராசியில் வரும் காலத்திலாவது பித்ரு மரணமேற்படலாம். இவ்விதமே ஒவ்வொரு க்ரஹங்களுக்கும் அதனதன் காரகத்துக்குத் தக்கபடி பலனை ஊஹித்துக் கொள்ளவேண்டும்.

சந்த்ரனுக்கு நான்காமிடத்திலுள்ள பிந்துக்களால் சோத்ய பிண்டத்தைப் பெருக்கி 27-ஆல் வகுத்து மீதத் தொகைக்கு

சமானமான நக்ஷத்ரம் அல்லது அதற்கு த்ரிகோண நக்ஷத்ரத்தில் சனிவரும் ஸமயம் மாதாவுக்கு நாசமேற்படும்.

சந்த்ரன் வலிக்குமிடத்திலிருந்து 4 8-ஆமிடங்களுக்கு அதிபனிருக்கும் அம்சத்துக்கு த்ரிகோணத்தில் ஸூரியன் வருங்கால் அம்மாதத்தில் மாதாவின் மரணமேற்படும். லக்னத்துக்கு 4-8-மிடங்களுக்கதிபனிருக்கும் அம்சத்துக்கு த்ரிகோணத்தில் சூரியன் ஸஞ்சரிக்கும் ஸமயம் அம்மாதத்தில் பித்ருமரணமேற்படும்.

செவ்வாய்க்கு மூன்றுமிடத்திலுள்ள பிந்துக்களால் ஸஹோதரஸங்க்யையைச் சொல்லவும்.

புதனுக்கு நான்காமிடத்திலுள்ள பிந்துக்களைக் கொண்டு பந்துக்கள் அம்மான் முதலிய விவரங்களைச் சொல்வது.

குருவுக்கு ஐந்தாமிடத்தில் கிரஹங்களின் பிந்துக்களில் சத்ரு, நீசக்ரஹங்களுடைய பிந்துக்களைக் கழித்து மீத பிந்துக்கள் எவ்வளவோ அவ்வளவு புத்ரர்கள் உண்டு.

குரு அஷ்டகவர்கத்தில் ஏகாதிபத்திய த்ரிகோண சோதனைகள் செய்த பிறகு மீதமான பரல்களில் க்ரூரராசிகளின் பரலைக் கழித்து மீதமுள்ள பரல்கள் எவ்வளவோ அவ்வளவு புத்ரர்கள் உண்டு.

சுக்ரனுக்கு எந்த ராசியில் அதிக பிந்துக்கள் இருக்கின்றனவோ, அந்த ராசியில் பத்னியின் ஜனனமிருக்குமானால் அவளிடம் வம்சவிருத்தி உண்டாகும். குறைவான பிந்துக்களுள்ள ராசியில் ஜனனமானால் பொருள், ஸந்ததி குறைவாகும்.

சனியின் சோத்ய பிண்டத்தை லக்னத்துக்கு அஷ்டமத்திலுள்ள பிந்துக்களால் பெருக்கி 27-ஆல் வகுத்து மீதமான எண்ணுக்கொப்பான நக்ஷத்ரத்தில் சனி அல்லது குரு தன் க்ஷேத்ரத்தில் வரும்போது ஜாதகனுக்கு மரணம் நேரிடும்.

லக்னத்திலிருந்து சனி வலிக்கும் ராசி வரையிலுள்ள பிந்துக்களைக் கூட்டி வரும் எண்ணிக்கையான வருஷத்தில் விபத்து ஏற்படும். இவ்விதமே சனி யிருக்கும் வீட்டிலிருந்து லக்னம் வரையுள்ள பிந்துக்களைக் கூட்டி வரும் எண்ணுக்கு ஸமானமான வருஷத்தில் ஜாதகனுக்கு நாசமேற்படும்.

லக்னத்துக்கு எட்டிலுள்ள பிந்துக்களிலுல் சனியின் சோத்ய பிண்டத்தைப் பெருக்கி 27-ஆல் வகுத்து வரும் ஈவு ஆயுளாகும்.

த்ரிகோண சோதனை.

1, 5, 9 த்ரிகோணங்களாகையால் இம்மூன்றிலும் எதில் குறைந்த பிந்துக்களுள்ளதோ அதற்கு சமானமாக மூன்று இடங்களிலும் செய்துகொள்ளவும். ஒரு இடத்தில் பிந்துக்களில்லாவிடில் திரிகோண சோதனை செய்ய வேண்டியதில்லை. இரு இடங்கள் சூன்யமாக விருப்பின் மற்றதையும் சூன்யமாக்க வேண்டும். மூன்று இடங்களிலும் பிந்துக்கள் ஸமானமாகவிருந்தால் எல்லா இடங்களிலுமுள்ளவைகளை எடுத்து விடவும்.

ஏகாதிபத்திய சோதனை.

திரிகோண சோதனைக்குப்பின் ஏகாதிபத்திய சோதனை செய்ய வேண்டும். இரண்டு இடத்திலும் பிந்துக்களிருப்பின் சோதனை செய்ய வேண்டும். கிரஹமிருக்கும் ராசியின் பிந்துக்கள் குறைந்து கிரஹமில்லாத ராசியில் பிந்துக்கள் அதிகமாயிருந்தால் இரண்டையும் சரி செய்து கொள்ளவும். கிரஹமிருக்கும் ராசியின் பரல்கள் அதிகமாக இருந்தால் மற்ற ராசியின் பரல்களை நீக்கிவிடவேண்டும். இரண்டு ராசிகளும் சமமாயிருப்பின் க்ரஹமில்லாத ராசியின் பரல்களைப் போக்கிவிட வேண்டும். இரண்டு ராசிகளிலும் கிரஹமில்லாமல் இரண்டிலுமுள்ள பிந்துக்கள் ஸமமாக இருப்பின் இரண்டிடத்திலுமுள்ள பிந்துக்களையும் எடுத்து விடவும். இரண்டிடங்களிலும் கிரஹங்களிருந்து இரண்டிலும் பரல் ஸமமாக இருக்க சோதனை அவசியமில்லை. ஒன்றிலிருந்து மற்றதில் பிந்துக்களில்லாவிடினும் சோதனை இல்லை. இரண்டிலும் கிரஹமில்லாமற் போனால் எதில் பரல் குறைந்திருக்கிறதோ அதற்கு சமமாக மற்றவற்றின் பிந்துக்களைச் செய்துகொள்ளவும். இவ்விதம் சோதித்து எஞ்சிய பிந்துக்களை ராசிக்குச் சொல்லப்படும் எண்ணால் பெருக்க வேண்டும். கிரகமிருந்தால் கிரகத்துக்குரிய எண்ணாலும் சோத்ய பாக்கியைப் பெருக்க வேண்டும்.

ராசி-கிரஹங்களின் எண்கள்.

விருஷப, லிம்ம சோத்யத்தை 10-ஆலும், மிதுன, விருச்சிக சோத்யத்தை 8-ஆலும், துலா, மேஷ சோத்ய பிண்டத்தை 7-லும், கன்னி, மகர சோத்ய பிண்டத்தை 5-லும், கடக சோத்யத்தை 4-ஆலும், தனுஸ் சோத்ய பிண்டத்தை 9-ஆலும், கும்ப சோத்யத்தை 16-ஆலும், மீன சோத்ய பிண்டத்தை 12-ஆலும் பெருக்க வேண்டும். இவைகளை ராசிகளைப் பெருக்கும் எண்கள்.

குரு, செவ்வாய், சுக்ரன், புதன் இவர்களின் சோத்ய பிண்டத்தைக் கிரமமாக 10, 8, 7, 5 இவைகளால் பெருக்க வேண்டும். சூர்ய, சந்த்ர, சனிகளின் சோத்ய பிண்டத்தை ஐந்தால் பெருக்க வேண்டும். ராசியின் எண்ணாலும் கிரகத்துக்குக் கூறியவற்றாலும் தனியே சோத்ய சேஷத்தைப் பெருக்கவும். இவ்விதம் பெருக்கிப் பெற்ற தொகையை ஒன்றாய்க் கூட்டி ஏழால் பெருக்கி 22-ஆல் வகுக்க வரும் ஈவே வருஷமாகும். சேஷத்தை 12-ஆல் பெருக்கி 27-ஆல் வகுக்க மாதமும், 30-ஆல் பெருக்கி 27-ஆல் வகுக்க நாளும், 60-ஆல் பெருக்கி 27-ஆல் வகுக்க நாழிகையுமாகும். ஈவு 27-க்கு அதிகமானால் 27-ஐக் கழிப்பது. கிரகங்கள் சேர்ந்திருந்தாலும், நீச அஸ்தங்கதர்களானாலும் பாதியைக் கழித்துவிடுவது. சத்ரு க்ஷேத்ரமானால் மூன்றில் ஒரு பாகத்தைத் தள்ளவும். த்ருச்ய பாகத்திலிருப்பின் மூன்றில் ஒரு பாகத்தையும், யுத்தத்தில் அபஜ்யமடைந்தக்ரகத்துக்கும், சூர்ய சந்த்ரர்களின் பாதத்திலிருக்கும் கிரகத்துக்கும் 3-ல் ஒன்றைத் தள்ளுக. ஒரு கிரகத்துக்கு அநேக ஹரணங்கள் ஏற்படின் பலமான ஹரணம் ஒன்றை மட்டில் செய்யவும். பிறகு அவற்றை ஒன்றாகக் கூட்டி 324-ஆல் பெருக்கி 365-ஆல் வகுக்க வரும் ஈவு வருஷமாகும். இது சுத்தமான ஆயுளாகும். மீதத்தை க்ரமமாக 12, 30, 60 ஆல் பெருக்கி 365-ஆல் வகுக்க மாதம், நாள், நாழிகைகளாகும். இவ்விதமே எல்லா கிரகங்களுக்கும் தசையை உண்டாக்கவும். இந்த அஷ்டவர்க தசாமார்கம் மிக உயர்ந்ததாகும்.

எல்லா கர்மங்களும் செய்து வந்த பிந்துக்களுடன் கூடியதே அஷ்டவர்க மெனப்படும். இதில்லாவிடில் குணதோஷங்களாலுண்டாகும் பலத்தை அறிய முடியாததாகும்.

30 பிந்துக்களுக்கு அதிகமாயிருக்கும் ராசியே கபத்தை அளிக்கும். 25 பிந்துக்களுக்கு மேலான ராசி மத்யம பலனையளிக்கும். மேற்பட்ட பிந்துக்களுள்ளவை அகப பலனையளிக்கும்.

மத்யத்தைக் காட்டிலும் 10, 11-மிடங்களில் பிந்துக்கள் அதிகமாயும், 12-ல் பிந்துக்கள் குறைந்தும், லக்னத்தில் இதைவிட அதிகரித்து மிருந்தால் போகத்தையும் அதிக தனத்தையும் உடையவனாகிறான்.

லக்னம் முதல் பன்னிரண்டு பாவங்கள் வரை அந்தந்த பாவங்களைப் பார்த்து பிந்துக்களின் அதிகம் குறைவைக் கவனித்து, அதிகமாயின் நன்மையையும், குறைவாயின் தீமையையும் சொல்ல வேண்டும்.

6, 8, 12-மிடங்களைத் தவிர மற்ற ராசிகளுக்கே மேற்கண்ட வாறு சொல்ல வேண்டும். அதிக பிந்துக்களுள்ள ராசிகளில் சுப கார்யங்களைச் செய்ய வேண்டும்.

லக்னம் முதல் சனி யிருக்கும் ராசி வரையுள்ள பிந்துக்களை ஒன்று சேர்த்து 7-ஆல் பெருக்கி 27-ஆல் வகுக்க வரும் ஈவின் வருஷத்தில் துக்கம் அல்லது ரோகம் உண்டாகும். இவ்விதமே சனி யிருக்கும் ராசி முதல் செவ்வாய் அல்லது ராகு இவர்கள் வலிக்கும் ராசி வரையிலுள்ள பிந்துக்களைக் கூட்டி ஏழால் பெருக்கி 27-ல் வகுக்க வரும் ஈவு வருஷத்திலும் துக்கம் அல்லது ரோகம் உண்டாகும். சுப க்ரஹங்களுக்கும் இவ்விதமே பார்த்து அக்காலத்தில் சுப பலனைச் சொல்லவும்.

மேஷம் முதல் எந்த ராசிகளில் 8 பிந்துக்களிருக்கின்றனவோ; அந்த ராசிகளின் பாவங்கள் புஷ்டி, தேஜஸ், பலம் இவைகளுண்டாகும்.

6, 5 7 பிந்துக்களுள்ள ராசி பாவங்கள் சுபத்தையளிக்கும். 3, 2, 1 பிந்துக்களுள்ளவை அசுபத்தை அளிக்கும். 4 பிந்துக்களுள்ளவை மிச்ர பலனையளிக்கும். பிந்து இல்லாமலிருப்பவை ரோகம் அபவாதங்களைப் பயக்கும். 8 பிந்துக்கள் எல்லாவித ஸித்தியையுமுண்டாக்கும்.

ஐந்தும் ஐந்துக்கு மேற்பட்ட பிந்துக்களிருக்கிற ராசிகள் ஸ்வக்ஷேத்ரம், உச்சம், மித்ர க்ஷேத்ரமாக விருந்து அவைகளில் கோசரத்தில் க்ரஹங்கள் வரும்போது சுபத்தையளிக்கும். குறைந்த பிந்துக்கள் இருக்கும் ராசியில் க்ரஹங்கள் வரும்போது

பலனில்லை. சூர்யாதி அஷ்ட வர்கத்தில் பிந்துக்களில்லாத ராசியில் சனி வரும்காலத்தில் தந்தைக்கு அரிஷ்டம். இவ்விதமே சந்த்ர அஷ்ட வர்கத்தில் பிந்துவில்லாத ராசியில் சனி வரும் போது தாய்க்கு அரிஷ்டம். இவ்விதமே மற்றைய பாவங்களுக்கும் பார்த்துக் கொள்ளவும்.

சூர்யாஷ்ட வர்க்க பலன்.

சூரியன் லக்னத்தில் சத்ரு, நீசமாகி 3, 4 பிந்துக்களிருக்க ரோகி, ஸ்வக்ஷேத்ரம், உச்சமாகி 5-க்கு மேல் பரல்களிருப்பின் அரசனுகவும், தீர்க்காயுளை உடையவனுகவுமாவான். கேந்த்ர கோணங்களில் 6, 5, 7, 8 பிந்துக்களோடிருக்க ஜாதகன் அல்லது பிதா, நெருப்பு, பர்வதம் முதலியவைகளில் விழுந்து மரண மடையக் காரணமாகும். சூர்யாஷ்டக வர்கத்தில் திரிகோண ஏகாதிபத்ய சோதனையான பிறகு இரு பிந்துக்களுள்ள ராசிகள் கேந்த்ரமாகி அங்கு சந்த்ர புத சனிகள் கூடினால் தகப்பனின் எல்லா ஐச்வர்யத்தையும் அடைகிறான்.

சூரியன் கேந்த்ரத்திலிருந்து அது மித்ர க்ஷேத்ரமாகி 3, 4, 5 பிந்துக்களிருக்க 17 வயதில் பிதாவுக்கு அரிஷ்டம். சூரியனுக்கு 5, 9-ல் எத்தனை பிந்துக்களிருக்கின்றனவோ, அத்தனை வருஷங்கள் பிதாவுக்கு அரிஷ்டம். 5-ல் 3 பிந்துக்களுடன் சூரியனும், 9-ல் ராகுவுமிருக்க 5-வது வயதில் தகப்பன் நாசமாவான். ஜனன காலத்தில் சூரியன், சந்த்ரன், செவ்வாய், சனிகள் ஐந்திலிருக்க கிரமமாக ஜாதகன், தகப்பன், உடன்பிறந்தவன், தாய் இவர்களுக்கு நாசம். ஐந்தில் 1, 2 பிந்துக்களோடிருந்து மூலம் 1-ம் பாதம், ஆயில்யம் 4-வது பாதத்தில் பிறக்க இள வயதில் தகப்பன் மரிப்பான். மகம், மூலம் 1-ம் பாதம், ரேவதி, அசுவதி 2, 3-ம் பாதங்கள், ஆயில்யம், கேட்டை 4-ம் பாதம் இவைகளில் ஜனிக்க தந்தைக்கு நாசம். 3, 4 பிந்துக்களுடன் மூன்றிலிருந்து 9-ல் பாபியிருக்க 20 வயதுக்குள் பிதா நாசம். 4 பிந்துக்களுடன் 6-ல் குருவுடன் கூடினாலும், பார்வை பெற்றாலும் 25 வருடங்களுக்குப் பிறகு தகப்பன் மரணமாவான். 5-ம் மேலும் பிந்துக்களுடன் கேந்த்ர கோணங்களிலிருக்க 30, 36 வயதுகளில் தகப்பனுக்கு அரிஷ்டம்.

சூரியனுக்கு கேந்த்ரத்தில் குரு ஸ்வக்ஷேத்ரம், உச்சம் இவைகளில் 3, 4, 5, 6, 7 பிந்துக்களுடன் இருந்தால் பூமிக்கு அதிப

னுவான். பிராம்மணனுனல் தீக்ஷிதனுவான் அல்லது கிராமாதிப னுவான். 8-ல் 3. 4. 5. 6. 7 பிந்துக்களிருக்க அற்ப பலன் ஏகாதி பத்ய சோதனைக்குப் பிறகு 3. 6. 11-ல் மூன்று பிந்துக்களிருந்தால் பாவ விருத்தி. 1, 2 பிந்துக்களுடன் எங்கிருந்தாலும் பாவ நாசம். சூரியன் வலிக்கும் ராசிக்கு 9-மிடம் பித்ரு ஸ்தானமாகும். சோத னையான பிறகு மேஷம் முதல் மீனமீருகவுள்ள பிந்துக்களைக் கூட்டி வருவது சோத்ய பிண்டம். இதை 9-ம் இடத்திலிருக்கும் பிந்துவால் பெருக்கி 27-ஆல் வகுக்க மீத நக்ஷத்ரத்தில் வரும் சமயமும், திரிகோண நக்ஷத்ரத்தில் வரும்போதும். மீத நக்ஷத்ரா திபன் தசையிலும் தகப்பனுக்கோ அல்லது தகப்பனுக்கு சமான மானவனுக்கோ நாசமாகும். சூரியாஷ்டக வர்க்கத்தில் ஏகாதி பத்திய சோதனையான பின் ஸ்திரியன் வலிக்கும் ராசியிலிருக்கும் பிந்துக்களை 8-ஆல் பெருக்கி 12-ஆல் வகுக்க சேஷமான ராசி மாதத்திலாவது, திரிகோண ராசி மாதத்திலாவது பிதாவின் மரணம் ஸம்பவிக்கும்.

சந்த்ராஷ்டக வர்க பலன்.

சூர்ய சந்த்ரர்களின் அஷ்டக வர்க்கத்தில் பிந்துவில்லாத ராசியின் மாதத்தில் சுப கர்மம் ஒன்றும் செய்யக்கூடாது.

அபரபக்ஷ சந்த்ரன் 1, 2, 3 பிந்துக்களுடன் லக்னத்திலிருக்க காச ரோக மேற்படும். சந்த்ரன் இரண்டு அல்லது மூன்று கிரஹங்களும் சேர்ந்து 1, 2, 3 பிந்துக்களில் ஏதாவதொன்றைப் பெற்று எங்கிருந்தாலும் 37 வயதில் மரணமேற்படும். அபரபக்ஷ சந்த்ரன் கேந்த்ரம், த்ரிகோணம், லாபஸ்தானம் இவைகளில் எதிலாவது சத்ரு-நீசம் பெற்று 2 அல்லது 3 பிந்துக்களுடன் எந்த பாவத்திலிருந்தாலும் அந்தந்த பாவம் பிரயோஜனமில்லை. சுக்ல சந்த்ரன் மேற்கண்ட இடங்களில் முன் சொன்னபடி இருக்க அந்த பாவத்துக்கு விருத்தி ஏற்படும்.

சந்த்ரன் கேந்த்ரத்தில் 8 பிந்துக்களோடிருந்தால் வித்யை, சேர்த்தி, பொருள், ப்ரபுத்வம் முதலியன உண்டாகும்.

சந்த்ர லக்னத்துக்கு நான்கில் எத்தனை ஸமுதாய பிந்துக் களிருக்கின்றனவோ, அத்தனை வருஷங்களுக்கு மேல் மாத்ரு துக்கமேற்படும். 7-8-12-களில் குறைவான பரல்களுடன் சந்த்ரனிருக்க தாய் ரோகியாவாள். இவ்விதம் கேந்த்ரம்

அல்லது 12-ல் இருக்க மாத்ருஸ்தானத்தில் பாபிகளுமிருக்க 6-வது வயதில் தாயார் மரிப்பாள். சந்த்ரன் துர்பலனாய் லக்னத்தில் 0, 1, 2 பரல்களுடனிருக்க தனக்கும் தாய்க்கும் கெடுதி. இவ்விதமேயிருந்து மாத்ருஸ்தானத்தில் பாபிகளிருக்க தாய் 36-வயதில் நாசமடைவாள். சந்த்ராஷ்டகவர்க்கத்தைச் சோதித்தபின் லக்னத்தில் சந்த்ரன் குறைவான பிந்துக்களோடி ருக்க சஸ்த்ரபயம் விஷபயம் ஏற்படும். தாய்க்கும் பயமுண்டு. சோதித்த பிறகு கேந்த்ர திரிகோணங்களில் 5-ம் அதிகமும் பிந் துக்களுடன் எந்த பாவத்திலிருந்தாலும், அந்த பாவாதிபனு டைய தசையில் அந்த பாவத்துக்கு விருத்தி ஏற்படும். சந்த்ர னுக்கு நான்கில் இருக்கும் பிந்துக்களால் சோத்ய பிண்டத்தைப் பெருக்கி 27-ஆல் வகுத்து வந்த மீத நக்ஷத்ரத்தில் சனி வரும் போது மாதா நிச்சயமாக இறப்பாள். சந்த்ராஷ்டகவர்க்கத்தில் ஏகாதிபத்ய சோதனைக்குப் பிறகு சந்த்ரனிருக்கும் இராசியி லுள்ள பரல்களை 8-ஆல் பெருக்கி 12-ஆல் வகுத்து மீதமான ராசி மாதத்தில் அல்லது அதன் திரிகோணராசி மாதத்தில் மாதா வின் மரணமேற்படலாம்.

செவ்வாய் அஷ்டகவர்க பலன்.

செவ்வாய் 9-4-1-10-இவ்விடங்களில் 8 பரல்களுடன் உச்ச ஸ்வக்ஷேத்ரம் பெற கோடிக்கு அதிபதியாவான். தனுஸ், மேஷம், ஸிம்மம், மகரம், கடகம்-இவைகள் லக்னமாகி இவைகளில் நான்கு பிந்துக்களுடனிருக்க அரசனாகவோ, அரசனுக்கு ஸமான னாகவோ ஆவான். 8 பரல்களோடு எங்கிருந்தாலும் அரசனு வான். இவ்விதமே லக்னம், 10-2 களிலிருக்க அரசனுவது நிச்ச யம். இப்படியே உச்சம் ஸ்வக்ஷேத்ரம் பெறின் தேசாதிபதியா கவோ, சக்ரவர்த்தியாகவோ ஆவான். லக்னம் 4, 10-களில் இருக்க பூமிபதியாவான். அரச வம்சத்திற் பிறந்தால் சக்ரவர்த்தி யாவான்.

உச்ச ஸ்வக்ஷேத்ரங்களில் ஐந்து முதலிய பிந்துக்களோடு சந்த்ரலக்னம் 10, 9-களிலிருக்க லக்ஷாதிபதியாவான். செவ்வாய் தனாதிபதியாய் 6-மிடத்தில் 6 பிந்துக்களுடனிருக்க சத்ரு விருத்தி, போகியாவான். செவ்வாய் லக்னாஷ்டமாதிபதியாய்,

ஜன்ம லக்ன சந்த்ர லக்னங்களுக்கு 10, 9-ல் நீசர்களுடன் கூடினால் ஸ்விக்ருத புத்ரனுவான். நீச-அஸ்தங்கதனுக 6, 8, 12-களில் 6 பரல்களோடு சுக்லபக்ஷ சந்த்ரனுடன் சேர்ந்திருந்தாலும், கேந்த்ரத்திலிருந்தாலும் ப்ராத்ரு ஹீநனுவான். பலவானுக இருக்க ஸாமத்துக்கு அதிபதியாவான். லக்னம் 4, 5, கேந்த்ரங்களில் 4 பிந்துக்களுடனிருக்க ப்ராத்ரு ஹீநனுவான். செவ்வாய் அல்லது சனி ப்ராத்ரு ஸ்தானத்திலிருந்து 1, 2, 3 பிந்துக்களிருந்தாலும் ஸகோதர நாசம். ஸப்தமாதிப சுகாதிபர்கள் ஒருவர்க் கொருவர் பார்வை பெற ப்ராத்ரு நாசம். லக்னம் சர ராசியாய் உபய ராசியில் சனி வலித்து 1 2 3 பரல்களுடனிருக்க ப்ராத்ரு நாசம். லக்னம் உபய ராசியாய் சனி சர ராசியிலிருந்து 1, 2, 3 பிந்துக்களுடனிருந்தாலும் ஸகோதர நாசம். லக்னம் ஸ்திரமாய் செவ்வாய் அல்லது சனி 1, 2, 3 பிந்துக்களுடன் எங்கிருந்தாலும் பித்ரு ப்ராத்ரு நாசமேற்படும். லக்னம் சரமாய் சனி சரம் ஸ்திரங்களில் ஐந்து முதலிய பிந்துக்களோடு கூட, தன ஸகோதர வ்ருத்தி யுண்டாகும். லக்னம் ஸ்திரமாகி சனி ஐந்தில் வலித்து அந்த ஸ்தானம் உபய ராசியானால் ஆயுள், ஸௌக்யம், போகம், ஸகோதரம்—இவைகளின் விருத்தி ஏற்படும். மூன்றாமிடத்தில் குஜனிருந்து சுபர் பார்வை பெற்று ஐந்து முதலிய பிந்துக்களிருக்க ப்ராத்ரு வ்ருத்தி, ஏழுக்குடையவன் இருக்கும் ராசியில் செவ்வாய் நீசம், மூடம், பாப ஸம்பந்தம் பெறின் ஸகோதர லாபமில்லை. சனி செவ்வாய்கள் சேர்ந்து சர ஸ்திர உபய ராசிகளில் முறையே 1, 2, 3 பிந்துக்களுடனிருந்தாலும் ஸகோதர நாசம், சனிக்கு 8-ல் செவ்வாயும், செவ்வாய்க்கு 8-ல் சனியும், 1, 2, 3 பிந்துக்கள் பெற்றிருந்தாலும், சனிக்கு 8-ல் செவ்வாய் 1, 2, 3 பிந்துக்கள் அடைந்து லக்னத்துக்கு 3-மிடத்தில் பாபிகளிருந்தாலும் ஸகோதர நாசம்.

செவ்வாய் மூன்றாமிடத்தில் 3 பிந்துக்களுடன் எத்தனை நவாம்சத்தில் வலிக்கிறாரோ அத்தனை ஸகோதரர்கள் ஏற்படும். அவர் வலிக்கும் ராசியில் மொத்தத்தில் எத்தனை பிந்துக்களிருக்கிறதோ அத்தனை ஸகோதரம் ஏற்படும். திரிகோண சோதனை செய்ததின் செவ்வாய் வலிக்கும் ராசியில் பிந்துக்கள் எவ்வளவிருக்கின்றனவோ அவ்வளவு ஸகோதரர்கள் தீர்க்காயுளைப் பெறுவர்கள்.

தனுஸு, மேஷம், மகரம்-இவைகளில் நீசம், சத்ரு, மூடம் தவிர லக்ன கேந்த்ர த்ரிகோணங்களிலாவது நான்கு பிந்துகளிருக்க ராஜ்யத்துக்கு அதிபனுவான். சனியுடன் சேர்ந்தாலும் பார்வை பெற்றாலும் ஐந்து முதலிய பிந்துகளிருந்தாலும், பல தேசங்களுக்கு அதிபதியாவான். புதனோடு சேர்ந்தாலும், அந்யோந்யம் பார்வை பெற்றாலும், 1, 2, 3 பிந்துகளுடன் எங்கிருந்தாலும், தரித்ரனுகவும் துக்கியாகவுமாவான். செவ்வாயும் சந்த்ரனும் கூடினாலும் பார்வை பெற்றாலும், ஐந்து முதலிய பிந்துகளுடன் எங்கிருந்தாலும் 2 அல்லது 3 கிராமங்களுக்கு அதிபதியாவான். பத்தாமிடத்தில் சனியுடன் இவ்விதமிருக்க பூமிக்கதிபதியாகவோ, கியாயாதிபதியாகவோ ஆவான். நான்காமிடத்தாதிபனுகி ஸ்வக்ஷேத்ரத்தில் 4 பிந்துகளிருக்க அரச வம்சத்தினனுனால் கோட்டைகளடங்கிய ராஜ்யத்துக்கு அதிபனுவான். பிராம்மணனுனால் அதிக யாகங்களைப் புரிவான். வைசியனுனால் பெருந்தொழிலால் லாபம் பெறுவான். சூத்ரனுனில் ஸேனைக்கு அதிபனுகவாவது, சுகஜீவிபாகவாவது வாழ்வான். குஜாஷ்டக வர்க்கத்தில் அவர் வலிக்கும் 3-வது ராசியிலுள்ள ஸமுதாய பிந்துக்களால் சோத்யத்தைப் பெருக்கி 27-ஆல் வகுக்க வந்த மீத நக்ஷத்ரத்தில் சனி வரும் காலங்களிலும், திரிகோண நக்ஷத்ரத்தில் வரும்போதும் ஸகோதர பீடை. சூரிய சந்த்ரர்களுக்குச் சொல்லியபடி ஸகோதர நாசத்தின் மாதத்தை அறிந்து கொள்வது.

புதன் அஷ்டக வர்க பலன்.

புதன் 8 பிந்துகளுடன் கேந்த்ர கோணங்களிலிருக்கப் பிறந்தவர்கள் அவரவர்களுக்குரிய வித்யைகளில் பண்டிதனுகவும், போகியாகவுமாவான். புதன் 1, 2, 3 பிந்துகளோடு ஸ்வக்ஷேத்ரம் உச்சம் பெற்று எந்த பாவத்திலிருந்தாலும், அந்த பாவம் நன்றுக நடக்கும். இந்த அஷ்டக வர்கத்தின் பிந்துகள் அதிகமுள்ள ராசி மாதத்தில் வித்யையை ஆரம்பித்தால் மிக வல்லமையடைவான். பிந்துகளில்லாத ராசியில் சனி வரும்போது பந்து, ஜ்ஞாதி, தனங்கள் நாசம். 8 பிந்துகளுடன் கேந்த்ர கோணங்களிலிருக்க கல்விமானுவான். 1, 2, 3 பிந்துகளுடன் 6, 8, 12-களில் சுப திருஷ்டியில்லாதிருக்க மந்தனுவான். புதன் சுக்ரனுடன் கூடி 6, 8, 12-களில் 1, 2, 3 பிந்துகளுடனிருக்க படிக்காதவனுவான். புதன் திரிகோணத்தில் 5 முதலிய பிந்துகளைப் பெற்று குரு,

சனிகளின் ஸம்பந்தம் அல்லது பார்வை பெற்றால் வேதம். அத்யயனம் செய்தவனுவான். சனிக்கு ஆருமிடத்தில் புதன் 5 முதலிய பிந்துகளை யடைந்து குரு 2-லிருக்க ஜ்யோதிஷம் அறிந்தவனுவான். புதனும் குருவும் சேர்ந்து 5 முதலிய பிந்துகளுடன் செவ்வாயுடன் சேர்க்கை அல்லது பார்வை பெற்றாலும், தர்க்கத்தில் வல்லுனனுவான். கேது இருக்குமிடத்தில் 1, 2, 3 பிந்துகளிருந்து அவ்விடம் பஞ்சம ஸ்தானமானாலும், பஞ்சமாதிபனுடன் கேது சேர்ந்து எங்கு வலித்தாலும் சோதிடம், கணிதம் முதலிய வைகளில் சிறந்த பண்டிதனுவான். நவாம்சத்தில் புதன் ஸ்வ க்ஷேத்ரத்திலிருக்க காவியம், சாஸ்த்ரம், சில்பம், ஜ்யோதிஷம்—இவைகளில் ஸமர்த்தனுவான். சனி சுக்ர சந்த்ரர்களுடன் கூடிடன்ருத்தம், வாத்யம், கீதம். நீச பாஷை—இவைகளில் தேர்ச்சி பெறுவான். 4 பிந்துகளுடன் செவ்வாய் விட்டிலும் சுக்ர நவாம்சத்திலுமிருந்து குரு வீக்ஷணமும் பெற சிறந்த கவியாவான். புதன் நவாம்சத்தில் நீசமாய் ராசியில் பாப ஸம்பந்தம் பெற்று நான்கு முதலிய பிந்துகளிருக்க ந்ருத்த கீத வாத்யாதிகளில் தேர்ச்சியடைவான். புதன் நவாம்சத்தில் ஸ்திரீ ராசியிலிருந்து 1, 2, 3 பிந்துகளுடன் இராசியில் எந்த பாவத்திலிருந்தாலும், அந்த பாவம் நாசமாகும். புதன் வலிக்கும் ராசியதிபன் கேந்த்ர கோணங்களில் அதிக பிந்துகளுடன் சுபர் பார்வை பெற வித்யை, கீர்த்தி முதலியன அடைவான். 6, 8, 12-களிலிருக்க வித்யா நாசம் உச்சம், ஸ்வக்ஷேத்ரங்களில் 1, 2, 3 பிந்துகளுடனிருக்க அந்தந்த பாவத்துக்கு விருத்தி ஏற்படும். நீச சத்ரு க்ஷேத்ரங்களில் இப்படியிருக்க பாவ நாசம். எந்த ராசியில் பிந்துகள் அதிகமாய் சுப வீக்ஷணம் பெறுகிறதோ அந்த இராசி மாதத்தில் வித்யாரம்பம் செய்தால் எல்லா சாஸ்த்ரங்களிலும் சிறந்த பண்டிதனுவான். இந்த அஷ்டக வர்கத்தின் சூன்ய ராசியில் சனி வரும் சமயம் புத்ர மித்ர களத்ர ஹானி. புதனுக்கு 10-மிடத்திலிருக்கும் பிந்துகளால் சோத்ய பிண்டத்தைப் பெருக்கி 27-ல் வகுக்க மீத நக்ஷத்ரத்தில் சனி வரும்போது வியாபாரத்துக்கு ஹானி ஏற்படுவது நிச்சயம்.

குரு அஷ்டக வர்க பலன்.

குரு 1, 2, 3 பிந்துகளுடன் சுப வர்கமில்லாமலிருக்க அதம பலன். 5 முதலிய பிந்துகளோடு 6, 8, 12-களில் இருந்தால்

நீண்ட ஆயுள், அதிக ஐச்வர்யங்களுடன் வாழ்வான், சத்ரு ஜயமேற்படும். அதிகம் பிந்துகளுடைய ராசி மாதத்திலாவது ராசி லக்னத்திலாவது நிஷேகம் செய்விக்க சுப புத்ர லாபம். அதிக பிந்துகளுள்ள ராசி திசையில் விடு கட்ட தனதான்ய பசு விருத்திகளேற்படும். நீச சத்ரு மூடங்களை விட்டு கேந்த்ர கோணங்களில் ஸ்வக்ஷேத்ரம் உச்சமடைந்து 8 பிந்துகளுடனிருக்க தன் முயற்சியினாலேயே அரசனுவான்; அல்லது அரசனுக்கு ஒப்பாவான். பிராம்மணனுல் பலயாகங்களைச் செய்யக் கூடிய தீக்ஷிதனுவான். வைச்யனுயிருந்தால் பெரிய ப்ரபுவாவான். சூத்ரனுயில் ஸேனைத் தலைவனுவான். 7 பிந்துகளுடன் இவ்வண்ணமிருக்க ஸ்திரீ புத்ர தனங்களை அடைவான். 6 பிந்துகளுடன் கூட புத்ர வாஹன ப்ராப்தி. 5 பிந்துகளிருக்க ஜயசீலனுவான்.

குரு சத்ரு நீசம், மூடமில்லாமல் 7 பிந்துகளுடன் கேந்த்ர கோணங்களிலிருக்க ஸ்திரீ, தன ஸௌக்யம், அபிஷ்டஸித்தி. 5 முதலிய பிந்துகளுடன் 6, 8, 12-ல் இருக்க தனப்ராப்தி, சத்ரு க்ஷயம். ஆயுரபிவ்ருத்தி. குருவுக்கு 6, 8-ல் சந்த்ரன் 1, 2, 3 பிந்துகளுடன் கூட, எவ்வளவு நல்ல யோகமிருந்தாலும் கடனில் பிடிக்கப்படுவான். லக்னத்துக்கு த்ரிகோணத்தில் ஸ்வக்ஷேத்ரமடைந்து, பாப ஸம்பந்தம் பெற்று 1, 2, 3 பிந்துகளுடன் கூட புத்ர சோகமேற்படும். குரு இருக்கும் ராசியதிபன் உச்சம் பெற்று, 5 முதலிய பிந்துகளிருக்க சக்ரவர்த்தியாவான். கேஸரி யோகமுடையவனுக்கு, குரு சந்த்ர நவாம்சம் பெற்று 5 முதலிய பிந்துகளுடன் கூட தனதான்ய போகங்களை உடையவனுவான். குரு வலிக்கும் ராசிநாதன் குருவுக்கு 6 அல்லது 8-ல் 1, 2, 3 பிந்துகளுடனிருக்க தரித்ரத்துடன் அற்பபாக்யமுள்ளவனுவான். ராசிநாதன் கேந்த்ர கோணங்களில் 4 முதலிய பிந்துகளுடனிருக்க க்ருஹஸ்தனுய் தனபாக்யாதிகளை அடைவான். குரு நவாம்சத்தில் நீசமடைந்து 1, 2, 3 பிந்துகளுடனிருந்து சனி 2 அல்லது 11-ல் வலிக்க மந்த புத்தியாவான். குருவுக்குக் கேந்த்ரத்தில் சுக்ரனும், லக்னத்துக்குக் கேந்த்ரத்தில் குருவுமிருந்து அன்யோன்யம் பார்த்தாலும், சேர்ந்தாலும், அரசனுகவோ, அரசனுக்கு ஸமானனுகவோ இருப்பான். குருவுக்கு 6 அல்லது

8-மிடம் லக்னமாகி அங்கு 1, 2, 3 பிந்துக்கள் பெற்று லக்னாதிபன் பலஹீனனாலும் பாக்ய ஹீனனாகவும், அற்ப புத்தியாகவுமாவான். 8-க்குடையவன் 5-லும், 5-க்குடையவன் 8-லும், குரு வீக்ஷணமில்லாதிருக்க புத்ர பௌத்ராதிகளால் ஹிம்ஸை அடைவான். குரு 6-8-12-ல் வஸித்து அதற்கு 3, 5-களில் எத்தனை பிந்துக்களுண்டோ; அத்தனை புத்ரர்கள் மரிப்பர்கள். தனுஸ் மீனங்களில் அஸ்தங்கதமாகாமல் அதிக பிந்துக்களுடன் புருஷக்ரஹ வர்கத்தில் சுபக்ரஹ வீக்ஷணம் அல்லது ஸம்பந்தம் பெற்ற இராசி லக்னத்தில் நிரீக்ஷகம் செய்ய ஸத்புத்ரனுண்டாவான்.

பஞ்சமாதிபனிருக்கும் ராசியதிபன் குரு ஸம்பந்தம் அல்லது பார்வை பெற்று 5 முதலிய பிந்துக்களுடன்கூட குலத்துக்கு முக்யமான புத்ரனுண்டாவான். மேற்கண்ட ராசிநாதன் நீச க்ஷேத்ரத்தில் 1, 2, 3 பிந்துக்களுடன்கூட தகப்பனை நிந்திப்பான். ஐந்துக்குடையவன் பாப ஸம்பந்தம் பெற்று புத்ரகாரகன் பாப மத்தியில் 1, 2, 3 பிந்துக்களுடன்கூட கர்ம ப்ரஷ்டனாகவும், குலத்தைக் குலைப்பவனாகவுமாவான். இந்த அஷ்டக வர்கத்தில் குறைவான பிந்துவுள்ள ராசியிலாவது அதன் த்ரிகோண ராசியிலாவது சனி வரும் ஸமயம் மரணமேற்படும். பிந்து குறைந்த ராசி மாதத்தில் சுப கர்மங்கள் செய்வது கூடாது. 9-10-க்குடையவர்கள் குரு இவர்களை 8 பிந்துக்களுடனிருந்து இவர்கள் வஸிக்கும் ராசிநாதர்கள் பலிஷ்டர்களாகில் பாக்யவானுவான். லக்னாதிபன் தன பாக்ய ஸ்தானங்களிலும், குரு கேந்த்ரத்திலும், 5 முதலிய பிந்துக்களை அடைய புத்ரனைப் பார்க்கிலும் தகப்பன் சிரேஷ்டனுவான். பாக்யாதிபன் குரு கேந்த்ரத்தில் உச்சம்-ஸ்வ க்ஷேத்ரங்களில் அதிக பிந்துக்களுடன்கூட பூமிக்கதிபதியாகவும் தண்டிப்பவனாகவுமாவான்.

இந்த அஷ்டக வர்கத்தைச் சோதித்து சேஷ பிந்துக்களில் க்ரூர க்ரஹ ராசிகளின் பிந்துக்களைக் கழித்து பாக்கி உள்ள ஸங்க்யைகள் புத்ரர்களுண்டு. 12-8-5-களில் பாபர்களிலிருக்க தனநாசமும், சந்ததிக் குறைவுமுண்டாகும். இந்த அஷ்டகவர்கத்தின் லக்னம் அல்லது குருவுக்கு ஐந்தாம் ராசியில் 3 பிந்துக்களிருக்க ஸ்வல்ப புத்ரர்களுண்டாகும். லக்னம் அல்லது குருவிற்கு 5ம் ராசியதிபன் ஐந்தாமிடத்திலிருந்தாலும், பார்த்தாலும் அநேக புத்திரர்களுண்டு.

சுக்ராஷ்டக வர்க பலன்.

சுக்ரன் கேந்த்ர கோணங்களில் 8 பிந்துக்களுடனிருக்க ஆயுள் வரை அநேக வாஹன ஸம்பத்தை யுடையவனுவான். 7 பிந்துக்களிருந்தால் தனம், ரத்னம், யாஜமான்யம் ஏற்படும், நீசம் அல்லது மூடமாகலும், 12-லிருந்தாலும் முன் பலனுக்கு அழிவேற்படும். 6, 5 பிந்துக்களை அடைந்தால் பிந்து எண்ணிக்கையின்படி பத்னிகளை அடைவான். செவ்வாய் பார்க்க உத்தம ஸ்த்ரீகளாயிருப்பார்கள். சுக்ரன் கேந்த்ர கோணங்கள் அல்லது சுப க்ஷேத்ரத்தில் 8 பிந்துக்களுடன் இருந்தால் தனுட்யனுவான். மேற்கண்ட ஸ்தானங்களில் 5 முதலிய பிந்துக்களிருக்க ஸ்வர்ணம் ரத்னம், ஸத்புத்ரர்கள், அழிவில்லாத போகம்-இவைகளை அடைவான். 12 8-களில் அல்லது நீசம் மூடமாய் 8 பிந்துக்களுடனிருக்க ராஜயோகம் அழியும். சுக்ரனுக்கு அதிக பிந்துக்களிருக்கும் ராசியின் திசையில் படுக்கையறை அமைக்க ஸ்த்ரீ வசியத்தோடு அநேக நன்மையுண்டாகும். லக்னம் 4-10களில் சுப ஸம்பந்தம் பெற்று 5 முதலிய பிந்துக்களுடன்கூட மூன்று வாஹனங்களுண்டு. செவ்வாய் வீட்டில் 5 பிந்துக்களுடன் சுக்ரன் சுபக்ரஹ ஸம்பந்தம் அல்லது பார்வை பெறின் தன வாஹன பாக்யங்களுண்டாகும். சுக்ரன் கேந்த்ர கோணங்களில் அதிக பிந்துகளை அடைந்து செவ்வாய் பார்வை இல்லாமலிருக்க பால்ய காலத்தில் விவாஹம் நடக்கும். நீச நவாம்சம், நீசராசி, செவ்வாய் ஸம்பந்தம் அல்லது வீக்ஷணம் பெற்று 5 பிந்துக்கள் பெற்றிருந்தால் மிக ரெமத்தின் பேரில் கல்யாணம் நடக்கும். லக்னத்துக்கு த்ரிகோணத்தில் சுக்ரனும், 2-ல் பாபிகளுமிருந்து சுபக்ரஹ ஸம்பந்தம் வீக்ஷணம் பெற கல்யாணத்தில் இடையூறு ஏற்படும். சுக்ரன் வஸிக்கும் ராசியதிபன் கேந்த்ர கோணங்களில் 5 பிந்துக்கள் பெற, தன வாஹன பாக்யங்களுண்டாகும். சுக்ரன் வஸிக்கும் ராசியதிபன் சுக்ரனுக்கு 6-8-களிலிருந்து அந்த ஸ்தானம் லக்னத்துக்கு த்ரிகோணமாகில் பாரியையோடு கலஹம் செய்வான், தரித்ரனுகவுமாவான். 7-க்குடையவனும், 5-க்குடையவனும் அன்யோன்யம் த்ரிகோணங்களிலிருந்து ஏழாமிடத்தை செவ்வாய் பார்க்க புருஷனை விட்டு பத்னி வெளியேறுவாள். 7-ல் செவ்வாய் சனிகளிருக்க அவ்வீட்டுக்குடையவன் இவர்களின் அம்சத்திலாவது சம்பந்தமாவது பெற்றால் பார்யை துர்மார்க்கத்திலிறங்கு

வாள். சுக்ரன் நீச ராசி யம்சங்களிலிருந்து குஜ வீக்ஷணமும் பெற்று 4 பிந்துக்களிருக்க களத்ரத்துக்கு அபவாதமுண்டு. சுக்ரனுக்கு 1, 2, 3 பிந்துக்கள் சனி க்ஷேத்ரத்திலாவது அம்சத்திலாவது இருந்து செவ்வாய் பார்க்க வியபிசாரியான ஸ்திரீக்குப் புருஷனுவான். சுக்ரன் குஜக்ஷேத்ரத்திலோ குஜாம்சத்திலோ இருந்து குஜ வீக்ஷணம் பெற்று 5 பிந்துகளையுடையவனுின் பிறர் மனை புகுவான். 6-ல் அங்காரகனும், 7-ல் சந்த்ரனும், 12-ல் சுக்ரனுமிருந்து சனி, ராகு ஸம்பந்தம் பார்வைகளைப் பெறின் விதவா போகமேற்படும். 7-ல் சந்த்ரனும், 7க்குடையவன் ராகுவோடு சேர்ந்து சுக்ரன் உச்சத்திலிருக்க தன் வயதில் மூத்த ஸ்திரீயின் புணர்ச்சி ஏற்படும். சுக்ரன் 4 முதலிய பிந்துகளோடு உச்சாம்சத்திலிருந்து குஜ த்ருஷ்டி பெறின் காமியாவான். 6, 7, 8, 12-ல் 2, 3 பிந்துகளுடனிருந்து ஸப்தமாதிபன் நீசனுதில் நீச ஸ்திரீ ஸங்கமேற்படும். லக்னம் 6-8-12-ல் 2, 3 பிந்துகளுடன் சனி ஸம்பந்தம் அல்லது பார்வை பெற கணிகருடானை ஸ்திரீ ஸங்கமுண்டாகும். பாக்யாதிபன் 7-லும், ஸப்தமாதிபன் குரு வீட்டிலும் ஸப்தமத்தில் பாபிகளுமிருக்க குறைவான அங்கத்தையுடைய ஸ்திரீ சேர்க்கை ஏற்படும். பாக்ய ஸ்தானத்தில் பாபிகளும், பாக்யாதிபன் ஏழிலும் குடும்பத்தில் பாபிகளுமிருக்க அங்க ஹீனையான ஸ்திரீயுடன் சேர்வான்.

களத்ராதிபன் வலிக்கும் ராசியின் திசையே களத்ர ஸ்தானமாகும். காரகனிருக்கும் ராசியைக் கொண்டும், கவாம்சத்தைக் கொண்டும் களத்ரத்தின் குணங்களைக் கவனிக்கவும். 2 அல்லது 7-ல் குஜ சனிகளிருந்து சுக்ரன் 12-லிருக்க ஒரு களத்ரமிருக்கும் போதே இரண்டாவது களத்ரமேற்படும். களத்ராதிபனிருக்கும் ராசியதிபன் கடகத்தில் இருந்து பாப ஸம்பந்தம் அல்லது வீக்ஷணம் பெறினும் இரண்டாவது களத்ரமேற்படும். களத்ர காரகனை சுக்ரன் நீச மூடங்களாய் சுப வீக்ஷணமுமில்லாதிருந்து களத்ராதிபனுக்கு இருமருங்கிலும் பாபிகளிருந்தால் 3 களத்ரமுண்டு. களத்ராதிபன் 9-லும், இரண்டில் பாபியும், உபயராசியில் சுக்ரனுமிருந்தாலும், லக்னத்துக்கு அல்லது சுக்ரனுக்கு 7-ல் சனி வலித்து சுபக்ரஹ வீக்ஷணமில்லாதிருந்தாலும், இரு களத்ரமேற்படும். ஏழாமிடம் அல்லது இரண்டாமிடத்தில் சேர்ந்திருக்கும் பாப க்ரஹங்களின் எண்ணிக்கைப்படி களத்ரமுண்டு.

ஸப்தம ஸ்தானம் சனி குஜ க்ஷேத்ரங்களாய் காரகன் செவ்வாயால் பார்க்கப்பட்டு பாபிகள் வலித்தாலும், சந்த்ர நவாம்சாதிபன் லக்ன ஸப்தமாதிபர்களுக்கு நடுவிலிருந்து தன் வீட்டைப் பார்த்தாலும், பலாத்காரமான விவாஹத்தை அடைவான். ஏழாமிடத்தோன் இராசியதிபன் களத்ர ஸ்தானத்துக்கு 6, 8 நீசம், சத்ரு, மூடம்-இவைகளிலானுல் ஸந்ததி உண்டாகாது. களத்ராதிபன் உச்சம், வக்ரங்களை அடைந்தால் அதிக களத்ரங்களுடையவனுய் நல்ல யோகமுடையவனுக ஆவான்.

கோசரத்தில் ஸப்தமாதிபன் காரகன்-இவர்களுக்கு திரிகோணத்தில் குரு வரும்போது அவ்வருஷத்தில் விவாஹம் நடக்கும். ஸப்தமத்தில் சுக்ரன் வலித்து ஸப்தமாதிபன் செவ்வாயால் பார்க்கப்பட்டால் மிகவும் கஷ்டத்தின் பேரில் விவாஹம் நடக்கும். உத்தராயணத்தில் பிறந்தவர்களுக்கு குரு நவாம்ச ராசியில் சூரியன் ஸஞ்சரிக்கும் மாஸத்தில் அல்லது த்ரிகோண ராசி மாதத்தில் குரு திருஷ்டி ஏற்பட்ட போதும், தக்ஷிணயனத்தில் ஜனித்தவனுக்கு சுக்ர நவாம்ச ராசியில் சூரியன் வரும் மாதத்திலாவது, திரிகோணமாதத்திலாவது அல்லது லக்னாதிபன் வலிக்கும் நவாம்சத்தில் சூரியன் குரு திருஷ்டி பெறும் மாதத்திலாவது விவாஹம் நடக்கும்.

சுக்ராஷ்டக வர்கத்தின் பிந்துவில்லாத ராசியினுடைய நிக்ஷிலிருந்து களத்ரம் ஏற்பட்டால் ரோக, சோக பயங்களையடைவான். அதிக பிந்துகளையுடைய ராசியின் திசையிலிருந்து களத்ரம் வர, ஸௌக்யம், கீர்த்தி, ஆயுள், புத்ரன்-இவைகளுண்டு.

சனி அஷ்டக வர்க பலன்.

சனியினுடைய அஷ்டக வர்கத்தில் பிந்துவே இல்லாமல் லக்னத்திலிருந்தால் மரணம் அல்லது பொருள் நாசத்தை அடைவான். சனி கேந்த்ரம் அல்லது உச்சத்தில் 1, 2, 3, 4 பரல்களுடையவனுில் அற்பாயுளுள்ளவனுவான். 5, 6 பரல்களோடு லக்னத்தில் பலமுடையவராயிருக்க ஆயுட்காலம் முழுவதும் துக்கப்படுபவனுவான். 5 முதலிய பரல்களுடன் நீசம் சத்ரு ஸ்தானங்களிலிருந்து சுபர்களின் கேந்த்ர ஸ்தானமானுல் நீண்ட ஆயுளை அடைவான். நீசம், சத்ரு, மூடம் இவைகளை

அடைந்து 4. 5 பிந்துகளுடன் கூட குதிரை, யானை ஒட்டகம், ஐச்வர்யம்-இவைகளை யடைகிறான். 8 பரல்களோடு லக்னம் பஞ்ச மங்களிலிருக்க வியவஹாரம், தந்திரம் அறிந்தவனுவான். 7 பரல் களுடன் கூட தனவான். 8 பிந்துகளுடனிருக்க மந்த்ரியாகவோ அல்லது கிராமாதிபதிகவோ ஆவான். 7 பரல்களுடன கூடி யிருக்க வியாபாரத்தில் பெருத்த லாபமுண்டு என்று சிலரின் கொள்கை. லக்னத்தில் 5. 6 பரல்களுடன பலவானுகில் துக்க ஜீவியாவான். சனி நவாம்சத்தில் நீசமடைந்து 5 பரல்களுடன லக்னம் அல்லது ஐந்தில் இருக்க தரித்ரனுகவும், ரோகியாகவு மாவான். சனி ஆகி உச்சமில்லாமல் லக்னம், 4-களில் 1. 2 3. 4 பரல்களிருக்க அற்பாயுளையுடையவனுவான். அ தங்கதமில் லாமல் நீசத்தில் 5 முதலிய பிந்துக்களுடன் உச்சம் ஆகியி லிருக்க தீர்க்காயுளையுடையவனுகவும், நிறைந்த ஐச்வர்யமுள்ள வனுகவுமாவான். லக்ன கேந்த்ர கோணங்களில் 1, 2, 3 பிந்துக் களுடன் இராசி நவாம்சங்களில் ஸ்வக்ஷேத்ரமாயிருக்க பலவித ஐச்வர்யத்தை அடைவான். 9-10-க்குடையவனுய் 1. 2. 3 பிந் துக்களுடன் 3, 6, 11-களிலிருக்க அரசனுகவோ அரசனுக்கு ஒப்பா கவோ ஆவான். 2, 12-க்கு அதிபதியாய் ஸ்வக்ஷேத்ரத்தில் 4 பரல்களுடனிருக்க திரிகோணத்தில் பாபிகளிருந்தால் யாசகம் செய்து பிழைப்பவனுவான். லக்னம் அல்லது சனிக்கு 8-க்குடை யவன் சுபதிருஷ்டியில்லாமல் சத்ரு மூடங்களிலிருக்க பிச்சை யெடுப்பதையே தொழிலாகக் கொள்வான். லக்னம் அல்லது சனிக்கு அஷ்டமத்தில் சுபர்களிருந்து ராசியதிபனும் பலவா னுகில் ஸௌக்யமாக வாழ்வான். சந்த்ர சனிகள் லக்னத்தில் 5 முதலிய பிந்துகளுடன் வஸிக்க மிக மிக தரித்ரனுவான். கேந்த்ரங்களில் சந்த்ர சனிகள் 4 பரல்களுடன் கூடினுல் அரசனு கவோ அரசனுக்கு ஸமானனுகவோ ஆவான். சனி மேஷத் திலும், செவ்வாய் மகரத்திலும் 4 பிந்துக்களுடனிருந்து 8-க் குடையவன் பலவானுகில் தரித்ரனுகவும், வாத ரோகியாகவு மாவான். செவ்வாய் ஒரு பிந்துவை மட்டிலடைந்து, நீசமாய் சனி ஸம்பந்தம் விக்ஷணம் பெற வறுமையும் செல்வமும் கலந்து வாழ் வான். செவ்வாய் லக்ன-அஷ்டமாதிபதியாய், 9-ல் சனியுட னிருந்து சூரிய ஸம்பந்தம் அல்லது விக்ஷணம் பெற அற்பாயு ளையுடையவனுவான். 4-8-12-க்கு அதிபதிகள் சனி ஸம்பந்தம் விக்ஷணம் பெற 6-8-12-ல் சந்த்ரன் வலிக்க சிறிது காலம் வாழ்

வான். கர்ம ஸ்தானத்தில் பாபிகளும், பாக்ய ஸ்தானத்தில் சனி, ராகுகளும் வஸித்து, ஸப்தமத்துக்குடையவன் சுக்ரனுகில் புண்ய தீர்த்த ஸ்நான பலனைப் பெறுகிறான். தன ஸ்தானத்தில் சனி 2. 3 பிந்துக்களுடன் தனுதிபன் ஸம்பந்தம், பார்வை பெற்று லும் புண்ய தீர்த்த ஸ்நானங்களை யடைவான். கர்மாதிபனுடன் சனி சேர்ந்து கர்ம ஸ்தானத்தில் 1. 2. 3 பிந்துகளுடனிருக்க அன்ய தேசத்தில் சுற்றுவான். 2-ல் சனி வலித்து அவ்வீட்டுக் குடையவன் துர்பலனுனுல் நிச்செயல் புரிவான். இராஜயோக மிருந்தாலும் வீணுகும். தசமாதிபன் கேந்த்ர திரிகோணங்களில் பலவானுகில் உயர்ந்த பூபதியாவான். சூரிய-சந்த்ர-குஜ-புத-குரு சுக்ர-சனிகளுக்கு க்ரமமாக 9, 4, 3, 4, 5, 7, 8-களிலிருக்கும் ஸமு தாய பிந்துகளால் அவரவர்களுக்குரிய சோத்ய பிண்டத்தைப் பெருக்கி 27-ஆல் வகுத்து மீத நக்ஷத்ரத்திலாவது திரிகோண நக்ஷத்ரத்திலாவது சனி வரும் ஸமயம் தகப்பன், தாய், உடன் பிறந்தோன், சுற்றத்தார், புத்ரன், களத்ரம், ஜாதகன் இவர் களுக்காவது ஸமானமானவர்களுக்காவது ம்ருத்யு பயமேற்படும்.

ஸர்வாஷ்டக வர்கம்.

சூரியன் :	3, 3, 3, 3,	2, 3, 4, 5,	3, 5, 7, 2	— 43
சந்த்ரன் :	2, 3, 5, 2,	2, 6, 2, 2,	2, 3, 1, 7	— 39
செவ்வா :	4, 5, 3, 5,	2, 3, 4, 4,	4, 6, 7, 2	— 49
புதன் :	3, 1, 5, 2,	6, 6, 1, 2,	5, 5, 7, 3	— 46
குரு :	2, 2, 1, 2,	3, 2, 4, 1,	2, 4, 7, 3	— 33
சுக்ரன் :	2, 3, 3, 3,	4, 4, 2, 3,	4, 3, 6, 3	— 40
சனி:	3, 2, 4, 4,	4, 3, 3, 4,	4, 4, 6, 1	— 42
லக்னம் :	5, 3, 5, 5,	2, 6, 1, 2,	2, 6, 7, 1	— 45

ஆக மொத்தம் ... 337

மேஷம் முதலிய ராசிகளுள் எந்த ராசியில் 30 பிந்துகளுக்கு மேலிருக்கின்றனவோ, அந்த ராசியின் பாவம் முதலியன மிக நன்முக நடக்கும். 30-க்குக் குறைந்த பிந்துகளுள்ள ராசிகளின் பாவங்கள் மத்யம பலனை அளிக்கும். 25 பிந்துகளுக்குக் குறைவான பிந்துகளையுடைய இராசி அதம பலனைத் தரும். லக்னத்தில் பிந்துகள் எத்தனையுள்ளதோ அத்தனை வருஷங்களுக்குப் பின்

ராஜயம், புத்ரன், வித்யை, ஸம்பத், ஸௌக்யங்களை அடைவார்கள். கிரஹங்கள் உச்சம், ஸ்வக்ஷேத்ரம், மித்ர க்ஷேத்ரம், கேந்த்ரம் த்ரிகோணம், சுபக்ரஹ வர்கம் முதலியதில் எல்லா பலத்துடன் இருந்தாலும், குறைந்த பிந்துகளிருப்பின் அந்தந்த பாவங்களும் விணாகும். 12, 6, 8, பாபாம்சம், நீசம், சத்ரு க்ஷேத்ரம், பாவ வர்கம், குளிகன் இராசியதிப ஸம்பந்தம் இவைகளிலிருந்தும் அதிக பிந்துகளோடிருக்க அந்தந்த பாவங்கள் அவ்வவைகட்குரிய சுப பலனை யளிக்கும். லக்னம் 9, 10, 11-இவைகளில் 30 பரல்களுக்கு மேலிருக்க ஆரம்பம் முதல் கடைசி வரை பிரபுவாவான். 1, 9, 11-களில் பிந்துகள் குறைவாயிருக்க தரித்ரனுகவும், ரோகியாகவுமாவான். 1. 9. 11. 10-இவ்விடங்களில் 19, 22 பரல்களிருந்து திரிகோணத்தில் பாப க்ரஹங்களிருக்க யாசனை செய்வான். லக்னத்தில் 30-க்குக் குறைந்தும், மூன்றில் 30-க்கு மேல் பரல்களுமிருக்க அரசாங்கத்தில் முக்கிய அதிகாரியாவான்.

ஜன்ம லக்னம், சந்த்ர லக்னம், கர்மஸ்தானம், லாபஸ்தானங்களில் 30 பிந்துகளுக்கு மேலிருந்து குரு லக்னத்தைப் பார்க்க அரசனுவான். 2. 9. 10, 11-இவைகளில் 30-க்கு அதிகமான பரல்களிருக்க மண்டலத்துக்கு அதிபனுவான். லக்னத்தில் 30-க்கு மேலிருந்து அவ்விடத்தில் தர்மகர்மாதிபர்களில் ஒருவர் இருக்க சுகத்துடன் இருப்பான். அதிக பிந்துக்களோடிருக்க நற் புத்ரனுவான்.

4-மிடத்தில் 30 பிந்துக்களுடனும் சுப ஸம்பந்தமும், சுப வீக்ஷணமும் பெற மனிதர்கள் சுமக்கும் வாஹனமுடையவனுவான். சனி மத்யம பிந்துகளுடன் 4-ஆமிடத்தைப் பார்க்க அவ்வீட்டுக்குடையவன் கேந்த்ரத்திலிருக்க குதிரையுடையவனுவான். லக்னத்துக்கு மூன்றில் சந்த்ரன் வலிக்க, சூர்யனுல் பார்க்கப்பட்டு 8-மிடத்தை செவ்வாய் பார்க்க மேக வியாதியால் பீடையை அடைவான். மூன்றுமிடத்தில் பாபி மத்யம பிந்துகளுடன் இருக்க ஜல ரோகத்தால் பிடிக்கப்படுவான். சந்த்ரன் மூடமாகி, சந்த்ர லக்னாதிபதி குறைவான பிந்துகளை யடைந்து சனி பார்வை பெற பூத பிசாசாதிகளால் சிரமப்படுவான்.

பத்தாமிடத்தைவிட லாபத்தில் அதிக பிந்துகளும் இதை விட வியய ஸ்தானத்தில் குறைவாகவும், இதைக் காட்டிலும்

லக்னத்தில் அதிகமாகவும் இருக்க சுகியாகவும், கீர்த்திமானுகவும் வாழ்வான்.

சிலர் மேஷம் முதல் கடகம் வரை முதல் கண்டமென்றும், சிம்மம் முதல் விருச்சிகம் வரை மத்யம கண்டமென்றும், தனுஸ் முதல் மீனம் வரை கடைசி கண்டமென்றும் சொல்லுகிறார்கள். இன்னும் சிலர் மீனம் முதல் மிதுனம் வரை ப்ரதம கண்டமென்றும், கடகம் முதல் துலாம் வரை மத்யம கண்டமென்றும், விருச்சிகம் முதல் கும்பம் வரை கடைசி கண்டமென்றும் சொல்லுவர். லக்னம் முதல் நான்கு ராசிகளாய்ப் பிரித்து மூன்று பகுதிகளாக்குபவருமுண்டு. 12-மிடம் முதல் மூன்று பகுதிகளாகப் பிரிப்பதுமுண்டு. மீனம் முதல் பிரிப்பதையே அநேகர் ஆதரிக்கின்றனர். எக்கண்டத்தில் பிந்துக்கள் அதிகமிருக்கின்றனவோ; அந்த வயதில் ஸௌக்யத்தைச் சொல்ல வேண்டும்.

மீனம் முதல் மூன்று கண்டங்களைக் காண்கையில் 8, 12-லிருக்கும் பரல்களை நீக்கி உத்தமம், மத்யமம், அதமம்-இவைகளைக் கண்டு உத்தம, மத்யம, அதம பலன்களைச் சொல்ல வேண்டும்.

கண்டத்தில் பரல்கள் அதிகமிருந்து சுபர் வலிக்க சுப பலன், பரல்கள் குறைந்து பாபிகளிருக்க அசுப பலன். கலந்து இருக்க மத்யம பலன், எந்த கண்டத்தில் க்ரூர க்ரஹங்கள், நீசம், பகை, மூடம்-இவைகளை யடைந்து பரல்களையும் குறைவாகப் பெறுமோ அந்த வயதில் சிரமமுண்டு. எந்த கண்டத்தில் ஸ்வக்ஷேத்ரம், உச்சம், மித்ர ஸ்தானம் முதலியவைகளை அடைகிறதோ, அவ்வயதில் அதிக ஸௌக்யம், அதிக ஸம்பத்து முதலிய சுப பலன்களுண்டாகும். சுப க்ரஹம் நீசம் அஸ்தங்கதர்களாயினும், பாபிகள் சுபாம்சத்தை அடைந்தாலும் ஸுதாய பலம் அற்ப பலமாகும். கிரஹங்கள் பாவத்தில் வர்கோத்தமத்தை யடைந்து 30 பிந்துகளுக்கு அதிகம் பெற்றிருந்தால் எல்லாவித ஐச்வர்யங்களும் உண்டாகின்றன. விரயாதிபன் சனி க்ஷேத்ரத்திலோ லக்னத்திலோ இருக்க லக்னாதிபன் அல்லது அஷ்டமாதிபன் துர்பலனுய், எத்தனை பிந்துகளுடன் லக்னத்திலிருக்கிறாரோ அந்த வருஷத்தில் விபத்துண்டாகும்.

4-ம் வீட்டதிபன் லக்னத்திலும், லக்னதிபன் 4-லும், 30 பிந்துகளுக்கு அதிகம் பெற பிரபுவாகவும், பூபதியாகவுமாவான்.

1. 4. 7-இவைகளில் 30 பரல்களுக்கு மேலிருக்க 40 வயதுக்கு மேல் அகண்டைச்வர்யத்தை அடைவான்

4. 9-இடங்களில் 25-30 பிந்துகளிருக்க அந்தந்த பரவங்கள் விருத்தியாகும். 28 வயதில் வாஹன ப்ராப்தி ஏற்படும். 4-மிடத்தில் குரு உச்சமாகி 40 பிந்துகள் பெற சூரிய குஜர்கள் மேஷத்திலிருக்க அநேக குதிரைகளுக்கு அதிபனாகவும், அரசனாகவுமாவான். லக்னத்தில் 40 பிந்துகளிருந்து குரு தனுவிலும், சுக்ரன் மீனத்திலும், செவ்வாய் மகரத்திலுமிருக்க ஸர்வைச்வர்ய ஸம்பந்நனாவான்.

மேஷம் முதல் மும்மூன்று ராசிகள் கிழக்கு முதலிய திக்குகளாகும். எந்த திக்கு இராசிகளில் பிந்துகள் அதிகமாயிருக்கின்றனவோ, அவ்விராசியில் பிறந்தவனுக்கு அந்த திசையில் க்ஷேத்ரம், க்ருஹம், ஐச்வர்யம் முதலியன விருத்தியாகும். கிழக்கு முதலிய இராசிகளிலிருக்கும் பிந்துகளை ஒன்று சேர்க்க அதிக பிந்துகள் சேர்ந்து சுபர்களும் சேர சுபமுண்டு. அதிக பிந்துகளிருக்கும் திசையில் க்ஷேத்ராதிகளிருப்பின் சுபமுண்டு. குறைந்த பிந்துக்களுடையதாலல் அந்த திக்கை விட்டுவிடலாம். லக்னதிபன் ராசியின் திக்கில் ஜீவனமும், தனுதிபனிருக்கும் திக்கில் தனமும், இவ்விதமே மற்றவைகளிலும் ஏற்படும், அஷ்டமாதிபனது திசையில் பாக்கியமேற்படும்.

லக்னம் முதல் சனி வலிக்கும் ராசி வரையிலுள்ள பரல்களைச் சேர்த்து 7-ஆல் பெருக்கி 27-ஆல் வகுத்து வந்த மீத நக்ஷத்ரத்திலாவது, திரிகோண நக்ஷத்ரத்திலாவது, சூரியன் முதலிய பாவநாதர்கள் ஸஞ்சரிக்கும்போது பீடையும் ரோகமுமுண்டாகும். சனி வலிக்கும் ராசி முதல் லக்னம் வரையிலும், லக்னம் முதல் செவ்வாய் வலிக்கும் ராசி வரையிலும், செவ்வாய் வலிக்கும் ராசி முதல் லக்னம் வரையிலுமுள்ள பரல்களை தனித் தனியே 7-ஆல் பெருக்கி 27-ஆல் வகுக்க வந்த மீத நக்ஷத்ரத்திலாவது, த்ரிகோண நக்ஷத்ரத்திலாவது பாபிகள் ஸஞ்சரிக்க, துக்கம், ஆயாஸம், பீடை முதலியனவும், சுபர்கள் ஸஞ்சரிக்க உத்தம

பலனுமுண்டாகும். செவ்வாய் வலிக்கும் ராசி முதல் லக்னம் வரையிலுமுள்ள பரல்களை கணக்கு செய்த நக்ஷத்ரங்களில் சுபர்கள் வரவில்லையானல் ஆயுத பீடையுண்டாகும். ராகு, செவ்வாய், சனி-இவர்களுடைய கணக்கில் சுபர்கள் வரவில்லையேல் விஷம், ஆயுதம், அக்னி-இவைகளிடமிருந்து முறையே அந்த வருஷத்தில் பயம் உண்டாகும். 8-க்குடையவனிருக்கும் ராசியிலுள்ள பரல்களை 8-லிருக்கும் பிந்துகளால் பெருக்கி 12-ஆல் வகுக்கின்ற ராசி மாதத்திலோ, திரிகோண ராசி மாதத்திலோ, மரணமேற்படலாம்.

திரிகோண ஏகாதிபத்திய சோதனைகளை முடித்து 16-ஆல் பெருக்கி 12-ல் வகுக்க ஸர்வாஷ்டக வர்க சோதனையாகும். சிலர் 16-ஆல் பெருக்குவதற்குப் பதிலாக 503-ஆலும் பெருக்குவதுண்டு. சோதனை செய்த ராசி பிந்துகளை ராசி குணகரத்தில் குறைத்து த்ருவ எண்ணிக்கைகளாலும், கிருஹ த்ருவங்களாலும் பெருக்கிச் சேர்த்து 7-ஆல் பெருக்கி 27-ஆல் வகுக்க வந்த சேஷமே வருஷம். இவ்விதமே மாதம், நாள், நாழிகை முதலியவைகளையும் கண்டுகொள்வது. (12, 30, 60-ஆல் முறையே பெருக்கி 27-ஆல் வகுப்பது.) சேஷம் 27-க்கு அதிகமாயில் 27-ஐக் கழித்து மீதத்தை எடுத்துக்கொள்வது. ஸமுதாயத்தை 324-ஆல் பெருக்கி 365-ஆல் வகுக்க வரும் தினங்கள் ஸமுதாய ஆயுளாகும். அல்ப, மத்ய, பூர்ண ஆயுள்களை சனி ஸம்பந்த விக்ஷணங்களால் கண்டு கொள்வது. லக்னம் 10, 9, 11-களில் 30 பிந்துகளுக்கு மேலிருக்க பூர்ண ஸௌக்யத்தையும், நல்வாழ்வையுமடைகிறான்.

கால சக்ர தசை.

அச்வதி நக்ஷத்ரம் ஆரம்பித்து கார்த்திகை முடிய ஒவ்வொரு பாதமாக மேஷாம்சம் முதல் மீனாம்சம் முடிய ஸவ்யமாகவும், ரோஹிணீ முதல் திருவாதிரை முடிய பாதக் கணக்கில் அபஸவ்யமாகவும், இவ்விதமே மும்மூன்று நக்ஷத்ரங்களை மாறி மாறிக் கணக்கு செய்துகொள்ள வேண்டும்.

கிரஹங்களுக்குரிய தசா வருஷங்கள்.

சூரியன் 5, சந்த்ரன் 21, செவ்வாய் 7, புதன் 9, குரு 10, சுக்ரன் 16, சனி 4—வருஷங்களாகும்.

கால சக்ர கதி க்ரமம்

வடவோட்டு நக்ஷத்ரங்கள் (ஸவ்யம்)

அகவதி பரணி கார்த்திகை
புனர்பூச ஆயில்யம்
மகம் பூரம் ஹஸ்தம்
மூலம் பூராட உத்திராடம்
பூரட்டாதி உத்ரட் ரேவதி

இடவோட்டு நக்ஷத்ரங்கள் (அபஸவ்யம்)

ரோகிணி மிருகசீரி திருவாதி
மகம் விசாகம் பூரம் உத்தரம்
விசாகம் அனுஷம் கேட்டை
திருவோ அவிட்டம் சதயம்

இந்த 15 நக்ஷத்ரங்களும் மேஷம் முதல் மீனம் வரை ஸவ்ய மாய் நடக்கும்.

நக்ஷத்ர விபரம்		1-ம் பாதம் (ஸ்)	2-ம் பாதம் (ஸ்)	3-ம் பாதம் (ஸ்)	4-ம் பாதம் (ஸ்)
ஸாதுரேகை	அக, புச, ஹஸ், மூல, பூ-ட் ...	மேஷ-குஜ 7	சிஷ -சுக் 16	மிதி -புத 9	கட -சந் 21
	பர, பூச, ஹித், பூர, உட் ...	விம் -ரவி 5	கன் -புத 9	துலா-சுக் 16	விரு-குஜ 7
	கி, ஆயி, ஸ்வா, உ-ர, சே ...	சாப -குரு 10	மக -சனி 4	கும் -சனி 4	மீன-குரு 10
ஸாதுரேகை	சோ, மக, விசா, ச்ரவ ...	விரு-குஜ 7	துலா-சுக் 16	கன்-புத 9	கட -சந் 21
	மிரு, பூர, அதி, அயி ...	விம்-ரவி 5	மிதி -புத 9	சிஷ் -சுக் 16	மேஷ-குஜ 7
	திரு, உத், சேட், சத ...	மீன-குரு 10	கும் -சனி 4	மக -சனி 4	சாப -குரு 10
மேஷ செவ்வாய் வருஷம்		7	சிம்ம சூர்யன் வருஷம்	5	தனுஸ் வியாழன் வருஷம்	10
ரிஷப சுக்ரன்	..	16	கன்னி புதன் ..	9	மகர சனி ..	4
மிதுன புதன்	..	9	துலா சுக்ரன் ..	16	கும்ப சனி ..	4
கடக சந்திரன்	..	21	விருச்சிக செவ்வாய் ..	7	மீன வியாழன் ..	10

கதிகள் பலன்.

மீனத்திலிருந்து விருச்சிகம் போவதும், மேஷத்திலிருந்து தனுஸு செல்வதும் ம்ருகேந்த்ராவலோகனகதி. ஸம்பவ காலத்தில் ஜ்வரம்.

தனுஸிலிருந்து மேஷம், விருச்சிகத்திலிருந்து மீனம்—துரககதி. பித்ரு வர்க நாசம்.

கன்னியிலிருந்து கடகம், கடகத்திலிருந்து கன்னி, மிதுனத்திலிருந்து லிம்மம, லிம்மத்திலிருந்து மிதுனம் மண்டுக கதி, மாத்ரு வர்க நாசம். களத்ர பிடை.

கடகத்திலிருந்து சிம்மம், சிம்மத்திலிருந்து கடகம் ஸர்ப்ப கதி, விரணபிடை. சுபரிருக்க சுபம். அசுபரிருக்க அசுபம்.

மற்றொரு பக்ஷம்.

இடம் அல்லது வலமாகப் பாய்வது ஜலகதி. சுரம்.

மீனத்திலிருந்து ரிஷபம், தனுஸிலிருந்து மேஷம்—லிம்மாவலோகனகதி. சுரம், களத்ர பிடை.

விருச்சிகத்திலிருந்து மிதுனம், மேஷத்திலிருந்து தனுஸு, துரககதி, சுரபிடை.

கடகத்திலிருந்து சிம்மம்-ஸர்ப கதி, சுரம்.

சிம்மத்திலிருந்து கடகம்-மயூர கதி, வியாதி.

மிதுனத்திலிருந்து சிம்மம், சிம்மத்திலிருந்து மிதுனம், குக்குடகதி. விரணம்.

கன்னியிலிருந்து கடகம், மண்டுக கதி. மாதா, பந்து நாசம்.

ஜனனமான நக்ஷத்ரத்தின் பாத பேதத்தை வைத்து ஜனனகாலத்தில் எந்த நக்ஷத்ரத்தின் எந்த பாதமோ அந்த நக்ஷத்ர பாத ராசியினுடைய கால க்ரஹ தசை ஆரம்பமாகும்.

புக்திநாதன் வருஷத்தையும் தசாநாதன் வருஷத்தையும் பெருக்கி நக்ஷத்ர பாதத்துக்குச் சொன்ன மொத்த வருஷத்தால் வகுக்க வரும் சுவ வருஷமாகவும் முறையே பெருக்கி, வகுத்து மாதங்களாகவும், நாட்களாகவும் கண்டுகொள்வது.

பலன்கள் இதர தசைகளில் போலவே பார்ப்பது.

நக்ஷத்ர மஹாதசை.

நக்ஷத்ர மஹாதசை கண்டுபிடிக்கும் விதம் இப்புத்தகத்தில் 131-ம் பக்கத்தில் கூறப்பட்டிருப்பதைக் காண்க.

தசா புக்திகளின் விவரம்.

1 ஸூர்ய மஹாதசையின் வருஷங்கள் 6				2 சந்திர மஹாதசையின் வருஷங்கள் 10				3 அங்காரக மஹாதசையின் வருஷங்கள் 7			
புக்திகள்	ஞ	மீ	உ	புக்திகள்	ஞ	மீ	உ	புக்திகள்	ஞ	மீ	உ
சூரியன்	0	3	18	சந்திரன்	0	10	0	செவ்வா	0	4	27
சந்திரன்	0	6	0	செவ்வா	0	7	0	ராகு	1	0	18
செவ்வா	0	4	6	ராகு	1	6	0	குரு	0	11	6
ராகு	0	10	24	குரு	1	4	0	சனி	1	1	9
குரு	0	9	18	சனி	1	7	0	புதன்	0	10	27
சனி	0	11	12	புதன்	1	5	0	கேது	0	4	27
புதன்	0	10	6	கேது	0	7	0	சுக்ரன்	1	2	0
கேது	0	4	6	சுக்ரன்	1	8	0	சூரியன்	0	4	6
சுக்ரன்	1	0	0	சூரியன்	0	6	0	சந்த்ரன்	0	7	0

4 ராகு மஹாதசையின் வருஷங்கள் 18.				5 குரு மஹாதசையின் வருஷங்கள் 16.				6 சனி மஹாதசையின் வருஷங்கள் 19.			
புக்திகள்	ஞ	மீ	உ	புக்திகள்	ஞ	மீ	உ	புக்திகள்	ஞ	மீ	உ
ராகு	2	8	12	குரு	2	1	18	சனி	3	0	3
குரு	2	4	24	சனி	2	6	12	புதன்	2	8	9
சனி	2	10	6	புதன்	2	3	6	கேது	1	1	9
புதன்	2	6	18	கேது	0	11	6	சுக்ரன்	3	2	0
கேது	1	0	18	சுக்ரன்	2	8	0	சூரியன்	0	11	12
சுக்ரன்	3	0	0	சூரியன்	0	9	18	சந்திரன்	1	7	0
சூரியன்	0	10	24	சந்திரன்	1	4	0	செவ்வா	1	1	9
சந்த்ரன்	1	6	0	செவ்வா	0	11	6	ராகு	2	10	6
செவ்வா	1	0	18	ராகு	2	4	24	குரு	2	6	12

7 புதன் மஹாதசையின் வருஷங்கள் 17				8 கேது மஹாதசையின் வருஷங்கள் 7				9 சுக்ரன் மஹாதசையின் வருஷங்கள் 20			
புக்திகள்	ஞ	மீ	உ	புக்திகள்	ஞ	மீ	உ	புக்திகள்	ஞ	மீ	உ
புதன்	2	4	27	கேது	0	4	27	சுக்ரன்	3	4	0
கேது	0	11	27	சுக்ரன்	1	2	0	சூரியன்	1	0	0
சுக்ரன்	2	10	0	சூரியன்	0	4	6	சந்திரன்	1	8	0
சூரியன்	0	10	6	சந்திரன்	0	7	0	செவ்வா	1	2	0
சந்திரன்	1	5	0	செவ்வா	0	4	27	ராகு	3	0	0
செவ்வா	0	11	27	ராகு	1	0	18	குரு	2	8	0
ராகு	2	6	18	குரு	0	11	6	சனி	3	2	0
குரு	2	3	6	சனி	1	1	9	புதன்	2	10	0
சனி	2	8	9	புதன்	0	11	27	கேது	1	2	0

நக்ஷத்ர தசைகள்.

கார்த்திகை	உத்தரம்	உத்தராடம்	சூரியன்	6	வரு
ரோஹிணி	ஹஸ்தம்	திருவோணம்	சந்த்ரன்	10	வரு
மிருகசிரிஷம்	சித்திரை	அவிட்டம்	செவ்வாய்	7	வரு
திருவாதிரை	ஸ்வாதி	சதயம்	ராகு	18	வரு
புனர்பூசம்	விசாகம்	பூரட்டாதி	குரு	16	வரு
பூசம்	அனுஷம்	உத்ரட்டாதி	சனி	19	வரு
ஆயில்யம்	கேட்டை	ரேவதி	புதன்	17	வரு
அசுவதி	மகம்	மூலம்	கேது	7	வரு
பரணி	பூரம்	பூராடம்	சுக்ரன்	20	வரு

தசாபுக்திகளின் விவரங்கள் பக்கத்திலுள்ள கண்ணடியில் காண்க.

அந்தர ஸூக்ஷ்ம பிராணன்கள் வரை கவனிக்க அவ்வளவு ஸூக்ஷ்மமாக ஜாதகம் கணிக்கப்படுவதில்லையாதலாலும், பலன்களும் சரியாக வருவதில்லையாதலாலும் தசாபுக்திகளினுடைய விவரங்கள் மட்டில் இங்கு காட்டப்படுகிறது. உடுதசைகள ஸௌரமானத்தைக் கொண்டே கணக்கிடப்படுகிறது.

ஜன்மானுஜன்மத்ரிஜன்ம நக்ஷத்ரங்களுக்கு 3, 5, 7 நக்ஷத்ர தசை நடக்கும் காலத்தில் அத்தசாநிபன் ஜன்ம லக்ன ராசிகளுக்கு 3, 6, 8, 11, 12-க்கு அதிபர்களாகி சத்ரு க்ஷேத்ரத்திலோ, நீச க்ஷேத்ரத்திலோ அல்லது அஸ்தங்கதர்களானாலும், 6, 8, 12-களிலிருந்தாலும், கோசரத்தில் துஸ் ஸ்தானத்தில் ஸஞ்சரித்தாலும், நல்ல பலன் சொல்லப்பட்டிருந்தாலும் அது நடக்காதென்றும், நீய பலன் விசேஷமாக நடக்குமென்றும் காணவேண்டும்.

பாவாதிபர்களின் பொதுப் பலன்.

லக்னாதிபனின் தசை பலத்தையும் ஐச்வர்யத்தையும் அளிக்க வல்லது.

தனாதிபனுடைய தசை மரணத்தையோ மரணத்துக்கொப்பான கஷ்டத்தையோ விளைவிக்கும்.

ஸஹோதராதிபன் தசை நீய பலனை அளிக்கும்.

சுகாதிபன் தசை வீட்டை அளிக்கும்.

புத்ராதிபன் தசை வித்யை, சுகங்களைப் பயக்கும்.
ரோகாதிபன் தசை சத்ரு பயத்தை அளிக்கும்.
களத்ராதிப தசை துக்கத்தைத் தரும்.
மாரகாதிப தசை மரணத்தையே கொடுக்கும்.
தர்மாதிப தசை ஸத்காரியத்தில் புத்தியைக் கொடுக்கும்.
கர்மாதிப தசை ராஜாச்ரயத்தை அளிக்கும்.
பாபாதிப தசை லாபத்தை உண்டாக்கும்.
விரயாதிப தசை ரோகம், த்ரவ்ய நாசங்களை ஏற்படுத்தும்.

பாவாதிபன் அறுவித பலத்துடன் ஸ்வக்ஷேத்ரம், உச்ச க்ஷேத்ரம், த்ரிகோணம், சுப வர்கம் — இவைகளை அடைந்திருக்க பூர்ண சுப பலனையளிக்கிறான். எதிர்த் தட்டாக இருந்தால் அசுப பலனையே யளிப்பான்.

பஞ்சமாதிபனுடைய தசையில் தர்மாதிபனுடைய புக்தி அதிக சுபத்தை அளிக்க வல்லது. பஞ்சமாதிபனுடன் சேர்ந்த நவமாதிபன் தசையும், தசமாதிபனுடன் சேர்ந்த சுகாதிபன் தசையும் சுபமாகவும், ஐச்வர்யம் ஸந்தானம் முதலியவைகளை அளிக்க வல்லதாயுமிருக்கும்.

பஞ்சமாதிபனுடன் சேர்ந்த க்ரஹத்தின் தசை சுபத்தையே தரும். நவமாதிபனுடன் கூடின க்ரஹ தசையும் அதிக சுபத்தை அளிக்கிறது.

ஸ்வபாவத்தில் பாபியான க்ரஹத்தால் பார்க்கப் பெற்ற தசை நல்ல பலனையும் சில சமயத்தில் அளிப்பதுண்டு. சுப னோடு சேர்ந்த க்ரஹ தசை சுபத்தையே கொடுக்கும். பஞ்சமாதி பனுடன் சேர்ந்த லக்னாதிப தசையும் ஐச்வர்யத்தை அளிக்க வல்லது.

ஸுகாதிபனோடு கூடின தர்மாதிபனின் தசை, பஞ்சமத்தி லிருக்கும் கர்மாதிபன் தசை, சுபாசுப ஸ்தானங்களிலுள்ள கர்மா திபனின் தசை, 10, 4, 2-களை யடைந்த 10-க்குடையவன் தசை, சுகாதிபனோடு சேர்ந்த கர்மாதிபன் தசை, 6, 7-இடங்களுக்கு ஒரே க்ரஹம் அதிபனாகி அந்த க்ரஹம் 10-லிருந்தாலும், 10-க் குடையவனுடன் சேர்ந்திருந்தாலுமுள்ள 6, 7-க்குடையவன் தசை— இவைகள் சுபத்தைக் கொடுக்கக் கூடியது. ஒரே கிரஹம்

2, 7-க்கு அதிபர்களாகி 4-லிருந்தாலும், 4-க்குடையவனுடன் சேர்ந்தாலும் சுபமே. இவைகள் 3, 5, 7-வது தசையாக இருக் கக்கூடாது. 6, 8, 12-க்கு அதிபர்கள் பஞ்சமாதிபனுடன் கூடினால் அவர்களுடைய தசையும் நலமே.

சுகாதிபன் தசமத்திலும், தசமாதிபன் சுகத்திலுமிருந்தாலும் அவ்விரு தசைகளும் சுபதாயகமே. 5, 10, 4, 9-க்கு அதிபர்கள் கூடி எங்கிருந்தாலும், இவர்களுடன் சேர்ந்த க்ரஹம் எந்த ராசி யிலிருந்தாலும், இவர்களுடைய தசை விசேஷமான பலத்தை அளிக்கும். சுகாதிபனுடன் சேர்ந்த பஞ்சமாதிபன் தசையும், சுகாதிபனிருக்கும் தசமாதிபன் தசையும் நன்மையை அளிக்க வல்லதாகும்.

சுபராசியதிபன் அல்லது நவமாதிபன் ஸம்பந்தம் பெற்ற உச்சத்திலிருக்கும் க்ரஹமானது எங்கு வலிக்கிறதோ; அந்த பாவாதிபனின் தசையில் குறைவில்லாத ஐச்வர்யமுண்டாகும். எந்த பாவாதிபன் தன் பாவத்துக்கு 2-லிருக்கிறானே, அல்லது பாவத்தைப் பார்க்கிறானே அந்த பாவாதிப தசா காலத்தில் தன லாபம் மிக விசேஷமாக ஏற்படும். எந்த பாவாதிபனும் தன் பாவத்துக்கு 12-லிருக்க அந்த பாவாதிப தசையில் தன நாச மேற்படும். எந்த பாவத்துக்கு 5, 9-களில் பாபிகளிருக்கின்ற னரோ; அந்த பாவாதிப தசையில் தனக்கு ஸமானனின் வியோக மேற்படும். எந்த பாவத்துக்கு 5, 9-களில் 8, 12-க் கதிபர்கள் அல்லது சூரிய-சந்த்ர-சனிகள் இருக்கின்றனரோ அந்த பாவாதிபனின் தசையில் புத்ரஹானி, பித்ரு பிடை, மனஸ் தாபம் இவைகளேற்படும். எந்த பாவத்துக்கு 5, 9-களில் கேது, ராகு இருக்கிறார்களோ அப்போது புத்ர பிடை, தன நாசம், அன்ய தேச ஸஞ்சாரம்-முதலியன நடக்கும்.

எந்த பாவத்துக்கு 7, 8 களில், க்ரூர க்ரஹம், நீச க்ரஹங்கள் இருக்கின்றனவோ; அந்த பாவாதிப தசையில் ரோகம், சத்ரு, அரசர்கள் மூலம் அதிகமான கஷ்டமுண்டாகும். க்ரூர க்ரஹம் எந்த பாவத்திலிருந்து ஸுக ஸ்தானத்திலிருக்கிறதோ அந்த பாவாதிப தசையில் க்ருஹ க்ஷேத்ரங்களுக்கு நாசமேற்படும். 4-ல் செவ்வாயிருக்க பசுக்களின் நஷ்டம், அக்னி பயமேற்படும். சனி

வலிக்க மனக் கிலேசம். சூரியனிருக்க ராஜ கோபம். ராகுவிருக்க தன நாசம், விஷ பயம்.

எந்த பாவத்துக்கு 10-ல் ராகு இருப்பானே; அந்த பாவேச தசையில் புண்ய தீர்த்த யாத்ரை உண்டாகும். எந்த பாவத்துக்கு 10. 11. 9-களில் சுப க்ரஹங்களிருக்கின்றனரோ அந்த பாவாதிபனுடைய தசையில் தர்மம். வித்யை. அர்த்தம், கீர்த்தி இவைகள் ஸித்திக்கும். உச்சத்திலிருக்கும் கிரஹங்கள் அல்லது சுப க்ரஹங்கள் எந்த பாவத்திலிருந்து 5. 7, 6-இடங்களிலிருக்கின்றனரோ; அந்த பாவேச தசையில் புத்ர-களத்ர லாபமும், ராஜ பூஜையுமுண்டாகும். எந்தெந்த பாவங்களில் 1. 10. 11. 4. 9-களின் அதிபதிகள் வசிக்கின்றனரோ; அந்தந்த பாவாதிபர்களின் தசைகளில் அந்தந்த பாவத்துக்குரிய காரிய லித்தி ஏற்படும். குரு. சுக்ரன். சுப பாவாதிபன் அல்லது 9-க்குடையவன் எந்த பாவத்திலிருக்கிறார்களோ அந்த பாவாதிப தசையில் சுப கார்யங்கள் ஏற்படும். எந்த பாவத்துக்கு நான்கில் உச்ச க்ரஹங்கள் சுப பாவாதிபர்கள் அல்லது பாக்யாதிபன் இருக்கிறார்களோ அந்த பாவாதிப தசையில் வாஹனாதி லாபமும், பசு விருத்தியு மேற்படும். அந்த பாவாதிபன் சந்த்ரனுக்கில் தான்யாதி லாபமாகவிருக்கும். பூர்ண சந்த்ரனுல் எதிர்பாராத தன லாபம், (லாடரி பரிசு, பந்தயம்) ரத்ன லாபம் கிடைக்கும். அங்கு சுக்ரன் வலிக்க வாத்ய கோஷங்களுடன் பல்லக்கேறுவன். குரு வலிக்க தங்கப் பல்லக்காகும். லக்ன கர்மாதிபர்கள் உச்சத்தை அடைந்த சுப க்ரஹங்களோடு சேர உயர்ந்த ஐச்வர்ய லாபமேற்படும்.

ஒரு தசைக்கு 18 வித பேதங்களேற்படுகின்றன. 1. தசாதிபன் பரமோச்சத்திலிருத்தல், 2. உச்ச க்ஷேத்ரத்தில் பரமோச்ச பாகத்துக்கு மேலோ கீழோ இருத்தல். 3. மூல த்ரிகோணத்திலிருத்தல். 4. ஸ்வக்ஷேத்ரத்திலிருத்தல். 5. அதிமித்ர க்ஷேத்ரத்திலிருத்தல். 6. தத்கால மித்ர க்ஷேத்ர வாஸம். 7. ஸமக்ரஹ க்ஷேத்ர வாஸம். 8. அதிசத்ரு க்ஷேத்ர வாஸம். 9. ஸ்வபாவ சத்ரு க்ஷேத்ர வாஸம். 10. பரம நீச பாகத்திலிருத்தல். 11. பரம நீச பாகத்துக்கு மேலாகவோ கீழாகவோ இருத்தல். 12. வர்கோத்தமாம்ச வாஸம். 13. சத்ருவர்க ஸ்திதி. 14. 22 வது த்ரேக்காணத்திலிருத்தல். 15. ஸ்வவர்

கத்திலிருப்பது. 16. கேந்த்ர த்ரிகோண வாஸம். 17. யுத்தத்தில் பிடையை அடைதல். 18. அஸ்தமனத்தை அடைதல்.

பரமோச்சத்தை அடைந்து அதிக பலம் பெற்ற தசை ஸம்பூர்ண என்ற பெயரை அடைகிறது. இது விசேஷ நற்பலனளிக்க வல்லது. உச்ச ராசியிலும் பலம்பெற்றதாயுமிருக்கும் தசை பூர்ண என்ற பெயரை அடைகிறது. இதுவும் நற்பலனளிக்க வல்லதே. அதிநீச பாகத்தை அடைந்த துர்பலமான கிரஹ தசை ரிக்தை எனப் பெயர் பெறுகிறது. இது நீய பலனளிக்க வல்லது. அத்யுச்ச பாகத்திலிருந்து அதிநீசத்துக்குச் செல்லும் க்ரஹ தசை அவரோஹிணீ எனச் சொல்லப்படுகிறது. மித்ர க்ஷேத்ரம். உச்ச க்ஷேத்ரங்களிலிருக்கும் கிரஹத்தின் தசை மந்த்யா எனப்படுகிறது. சுப பலனளிக்கும். நீசத்திலிருந்து உச்சத்துக்குப் போகும கிரஹ தசை ஆரோஹிணீ எனப்படுகிறது. நீச ராசியில் அல்லது சத்ரு ராசியிலிருக்கும் க்ரஹ தசை அதமா எனப்படுகிறது. துக்கத்தை அளிக்கும்.

பாக்யாதிபன் குரு ஸம்பந்தம். விக்ஷணம். அன்யோன்யம் கேந்த்ர கோணங்களிலிருப்பது-இவைகள் தன் பெயருக்கதுரூபமாக பல காலத்தில் பலனளிக்கின்றது. ஒவ்வொரு ஜாதகத்திலும். எந்த க்ரஹம் பாக்யம் யோகங்களை அளிக்கவல்லதோ அந்த க்ரஹம் சத்ரு தசையிலும் தன் புக்தியில் நற்பலனையே அளிக்கிறது.

கேந்த்ரத்திலிருக்கும் க்ரஹம் பூர்ண பலனையும், பணபரத்திலிருக்கும் க்ரஹம் பாதி பலனையும், ஆபோக்லிமத்திலிருப்பது கால் பங்கு பலனையும். சீர்ஷோதயத்திலிருப்பது ஆரம்பத்திலும். உபயதோதயத்திலிருப்பது மத்தியிலும். பிருஷ்டோதயத்திலிருப்பது கடைசியிலும் பலனைக் கொடுக்கும்.

பாவாதிபர்களின் தசைகளின் பலன்.

லக்னம் பலம் பெற்றிருக்க லக்னாதிபன் தசையில் சுக்ல சந்த்ரன் போல் மேல்மேல் சுகத்தை அடைகிறான்.

தனாதிபன் தசையில் குடும்ப லித்தி, சுகபோஜனம், புத்திர காலாபம், வாக்கை உபயோகப்படுத்தும் தொழிலால் தனலாபம் இவைகளுண்டாகும்.

மூன்றாவது பாவம் பலத்துடனிருக்க பாவாதிப தசையில் உடன்பிறந்தோர்களின் உதவி, ஸந்தோஷச் செய்தி கேட்டல், தலைவராகுதல், பலருக்கு உதவி புரிதல், நற்குணங்களை அடைதல், சௌர்யத்தைப் பெறல்—இவைகளைப்படும்.

நான்காவது பாவநாத தசையில் பந்துக்களின் உதவி, க்ருஷி லாபம், ஸ்திரீகளின் சேர்க்கை, வாஹன லாபம், புதிதாக க்ருஹ க்ஷேத்ர தன லாபங்கள், தான் வஸிக்கும் ஸ்தானத்தின் பெருமைகளையும் அடைகிறான்.

ஐந்தாவது பாவாதிபன் தசையில் புத்ர ப்ராப்தி, பந்துக்களுடன் ஸவலவராவுதல், மந்த்ரித்தன்மை, பகுமானம், போஜ்ய வர்க்கங்களுடன் போஜனம், பிறருக்கு மிவ்விதமே அளிப்பது, ஸாதுக்களால் கொண்டாடப்படுதல்—இவைகளைப் பெறுகிறான்.

ஆறாமிடத்தாதிபன் தசையில் ஸாஹஸச் செய்கைகளால் சத்ரு ஜயம், ரோகமில்லாமை, பெரிய தன்மை, யாருக்குமடங்காமை, அதிக ஸம்பத்து—இவைகளை அடைகிறான்.

ஏழுக்குடையவன் தசையில் வஸ்த்ர ஆபரண சயன லாபம், ஸந்தோஷம், அழகான ஸ்திரீகளின் போகம், கல்யாணம், உத்ஸவம், ஸந்தோஷம், யாத்ரை இவைகளைப் பெறுவான்.

பலவானான எட்டாமதிபன் தசையில் கடன் தீர்த்தல், தன்மேன்மை, கலக கார்யத்திலிருந்து மீளுதல், எருமை, பசு, ஆடு, வேலையாட்களின் லாபம்-இவைகளை அடைகிறான்.

ஒன்பதாமதிபன் தசையில் ஸ்திரீ-புத்ர-பௌத்ர-பந்து-பாக்யங்கள், எப்போதும் அனுபவிக்கக்கூடிய ஐச்வர்யம், பூஜை முதலியவைகளை அடைவான்.

பத்தாமதிபனுடைய தசையில் ஆரம்பித்த கார்யத்தில் ஸித்தி, ஸுக ஜீவனம், நற்கீர்த்தி, நிலை பெறுதல்—இவைகளைப் பெறுவான்.

பதினொன்றுக்குடையவன் தசையில் குறைவில்லாத ஐச்வர்யம், இஷ்ட பந்துக்களுடைய சேர்க்கை, ப்ருத்ய தாஸர்களின் லாபம், ஸௌபாக்யங்களை அடைவான்.

பனிரண்டுக்குடையவன் தசையில் ஸாதுக்கள் விஷயத்தில் அதிகச் செலவு, பாபத்தைப் போக்கும் நற்காரியம், பூபதிகளிடமிருந்து கௌரவம் இவைகளை அடைகிறான்.

இதுவரை சொல்லி வந்த பலன் வக்ரம், ஸ்வக்ஷேத்ரம், உச்ச க்ஷேத்ரம், மித்ர க்ஷேத்ரம்-இவைகளிலிருக்கின்ற க்ரஹங்களுக்கு நடக்கும்.

சத்ரு க்ஷேத்ரம், நீச க்ஷேத்ரம், அஸ்தங்கதம், 6, 12-களிலிருக்கும் க்ரஹங்களின் தசா பலன்களைக் கீழே காணலாம்.

லக்னாதிபன் 6-8-12-களிலிருந்தால், அவன் தசையில் பந்தனம், ஒளிந்திருத்தல், பயம், சரீர மநோவியாதிகள், பிரேதகாரியம், இடம் மாறுதல்-இவைகளை அடைகிறான்.

தனாதிபன் 6, 8, 12-களிலிருக்க சபையில் மூடனுதல், வார்த்தை, குடும்பங்களில் நிலையில்லாமை, கெட்ட செய்தி, கண்களில் ரோகம், வார்த்தையில் தோஷம், திரவியச் செலவு, பயம்-இவைகளை அடைவான்.

மூன்றாமதிபன் 6, 8, 12-களிலிருக்க ஸஹோதர நாசம், கார்யங்களில் துராலோசனை, மறைந்திருக்கும் சத்ருக்களால் பிடை, அவமானம், பிரஸித்தர்களிடமிருந்து கர்வ நாசம்-இவைகள் நடக்கும்.

நான்காமதிபன் தசையில் மாதாவின் கஷ்டம், ஸுஹ்ருத்துக்களின் நாசம், க்ருஹ க்ஷேத்ரங்களின் நஷ்டம், பசு, குதிரைகளின் அழிவு, ஜல பயம்-இவைகளைப்படும்.

துர்பலனான பஞ்சமாதிபன் தசையில் புத்ர மரணம், புத்தி ப்ரம்சம், வஞ்சனை, வழி நடத்தல், வயிற்றில் வியாதி, ராஜகோபம், சக்திக் குறைவு-இவைகளை அளிப்பான்.

ஆறுக்குடையவன் தசையில் சோர பயம், அனர்த்தம், பந்தனம், அநேக தோஷங்கள், துஷ்க்ருத்யம், அடிமையாவது, அவமானம், அபகீர்த்தி, சரீரத்தில் வ்ரணங்கள்—இவைகளைப் பெறுவான்.

துர்பலனன ஏழுக்குடையவன் தசை நடக்கையில் மாப்பிள்ளை மூலமான துக்கம். களத்ர விரணம், ஸ்திரீமூலமான கஷ்டம், கெட்ட வஸ்துக்களில் ஆசை, மறைவிடத்தில் வியாதி, வெளியில் அலைதல்—இவைகள் நடக்கும்.

எட்டாமதிபன் தசையில் சோக, மோஹ, மத, மாத்ஸர்ய மூர்ச்சைகள், தாரித்ரியம், அலைதல், அபகீர்த்தி, வியாதி, அவமானம், மரணம்—முதலியன நடைபெறும்.

ஒன்பதாமதிபன் தசையில் முன்னோர்களால் பூஜிக்கப்பட்ட தேவதைகளின் கோபம், அசுபம், களத்ர, புத்ர, புத்ரிகளுக்கு ஆபத்து, கெட்ட காரியங்களைச் செய்யும் தன்மை, குரு, தகப்பன் இவர்களின் மரணம், தைன்யம்—முதலியவைகள் நடக்கும்.

பத்தாமதிபன் துர்பலனில் அவன் தசையில் எடுத்த காரியங்கள் ஸித்தி பெறுமை, மானபங்கம், கெட்ட குண முடைமை, அன்ய தேசம் போதல், அசுபம், கெட்ட தொழில் செய்தல், ஆபத்து—இவைகள் நடக்கும்.

பதினொன்றுக்குடையவன் தசையில் அசுபச் செய்தி, உடன் பிறந்தோர்களால் கஷ்டம், தைன்யம், காதுகளில் ரோகம்—இவைகளை அடைகிறான்.

விரயாதிபன் தசையில் க்ஷீண சந்த்ரன் போன்று ஸகல ஸம்பத்துக்களின் குறைவும், ரோகம், அவமானம், பந்தனம்—இவைகள் நடக்கும்.

வர்கோத்தமாம்சத்திலிருக்கும் க்ரஹத்தின் தசை சுபத்தை அளிக்கும். அந்த க்ரஹம், அஸ்தங்கதமாகவோ, நீசமாகவோ ஆனால் அத்தசையில் சுபாசுப பலன்கள் கலந்து நடக்கும். 8, 12, 6-களின் அதிபர்களின் தசாபுக்திகளிலும், அவற்றில் வலிக்கும் க்ரஹங்களின் தசாபுக்தி காலங்களிலும் அசுப பலனே நடைபெறும்.

பாபிகளின் தசை நடக்கும்போது 3, 5, 7-வது நக்ஷத்ராதி பதிகளின் புக்திகளிலும், லக்னாதிபன் 8-க்குடையவன் புக்திகளிலும் சோர சத்ரு பயமும், துக்கத்தையுமடைகிறான்.

நான்காவதாக வரும் சனி தசையும், ஆறுவதாக வரும் குரு தசையும் ஐந்தாவது தசையாக வரும் செவ்வாய் ராகுகளின் தசைகளும், கஷ்டத்தையே அளிப்பதாகும்.

ஊர்த்வமுகனுகவோ, 10 அல்லது 11-மிடமாக ஆன உச்சமான மகர ராசியிலிருப்பவனுகவோ இருக்கும் செவ்வாய் தசை நடக்கும்போது ராஜ்ய லாபம், சத்ரு ஜயம், வாஹனம் ஸைன்யங்களுடன் கூடின ராஜ்யம், அன்னதானம்—இவைகளை யுண்டாக்குகிறது.

சுக்ரனின் உச்ச க்ஷேத்ரமான மீனத்திலிருந்து 10, 12, 11-மிடமாக இருந்து அங்கிருக்கும் சுக்ரன் அஸ்தங்கதனுகாமலும், பாப ஸம்பந்தமில்லாமலுமிருந்தால் அந்த சுக்ர தசையில் ரத்னங்களால் நிறைந்தவனுகவும், நற்புத்தியுடையவனுகவும், அநேக ஐச்வர்யங்கள் நிறைந்தவனுகவும், பலரால் புகழக்கூடியவனுகவுமிருப்பான்.

நீசத்திலும் 6, 8, 12-களிலுமுள்ள சுபர்களும் அசுபத்தையே கொடுப்பார்கள். இவை பரிஹாரத்தால் விலகக்கூடியதாகும். முற்கூறிய இடங்களில் பாபர்களிருக்க நீராத் துயரத்தை விளைவிப்பர். இவை அனுபவித்தாலன்றித் நீராது. த்ரிகோணாதிபன் கேந்த்ரத்திலும், கேந்த்ராதிபன் த்ரிகோணத்திலுமிருக்க இருவரும் யோகத்தைத் தருவர். க்ரஹங்களனைத்தும் தம் தசையில் தம்தம் புக்திகளில் தம் பாவத்துக்குத் தக்க சுபாசுப பலனை அளிப்பதில்லை. க்ரஹங்கள் 3, 6, 8, 11-க்குடையவர்களானால் பாபிகளானாலும் யோக காரகர்களின் ஸம்பந்தம் பெறுவதால் தம் புக்திக்குத் தக்கபடி ராஜயோக மூலம் உண்டாகும் பலத்தை அளிப்பர். 8-லிருப்பவன், 8-ஐப் பார்ப்பவன், அதிபன் 8-மிடத்தின் 3-வது திரேக்காணாதிபன் குளிகலிருக்கும் ராசியதிபன் இவர்கள் துக்கத்தையே அளிப்பர். அவர்களில் துர்பலனன க்ரஹத்தின் தசாபுக்தியில் நாசமேற்படுகிறது.

கோசரத்தில் தசாநாதனுக்கு மித்ர க்ஷேத்ரத்திலிருப்பவனும், தசாநாதனுக்கு உச்ச க்ஷேத்ரத்திலிருப்பவனும், தசாநாதனுக்கு 7, 5, 9, 3, 6, 10, 11-களிலிருப்பவனுமான சந்த்ரன் நற்பலனை அளிப்பான். கோசரத்தில் சந்த்ரன் எந்த ராசியில் ஸஞ்சரிக்கிறானை, அவ்விராசி ஜனன காலத்தில் லக்னம், தனஸ்தானம் முதலியதானால் அந்த பாவங்களுக்கு விருத்தி ஏற்படும்.

லக்னாதிபன் தன் த்வாதசாம்சத்தில் அல்லது தன் திரேக்காணத்திலிருந்தால் அவன் புக்தி சுபத்தை யளிக்கும். எந்த புக்திநாதனும் தன் த்ரிம்சாம்சம், மித்ர த்ரிம்சாம்சம், மித்ர

க்ஷேத்ர நவாம்சம், மித்ர த்வாதசாம்சம், 5-வது ராசி, 5-வது நவாம்சம், 5-வது த்வாதசாம்சம், மித்ர த்ரேக்காணம், மித்ர ராசி, மித்ர நவாம்சம், 9-வது ராசியின் த்வாதசாம்சம், குரு த்ரேக்காணம், 4-வது ராசி, 4-வது நவாம்சம், 4-வது த்வாதசாம்சம், 4-வது த்ரேக்காணம் இவைகளிலிருந்தால் சுபமே உண்டாகும். லக்னாதிபன் எந்த ராசி, எந்த நவாம்சம் இவற்றிலிருக்கிறானோ அந்த ராசியம்சங்களின் அதிபன் லக்னாதிபனுக்கு மித்ர நவாம்சத்திலிருந்து மித்ர க்ரஹத்தால் பார்க்கப்பெற்றாலும், மித்ர க்ரஹ த்ரேக்காணம் மித்ர க்ரஹ நவாம்சத்திலிருந்தாலும் அந்த க்ரஹ புக்தி சுபத்தையே அளிக்கும்.

6, 8, 12-க்குடையவன் தசை கஷ்டத்தைத் தரும். மாரக க்ரஹ தசையில் 6, 8, 12-க்குடையவர்களின் புக்தி கஷ்டத்தை அளிக்கும். மாரகாதிபனுடனோ, ரோகாதிபனுடனோ, லக்னாதிபன் சேர்ந்து அவன் புக்தி நடந்தால், அப்போது ஜ்வரம் ஏற்படுமென காலமுணர்ந்தோர் கூறுவர். ரோகாதிபனுடன் சேர்ந்த லக்னாதிபன் சந்த்ர ஷட்வர்க்கத்திலிருந்தால் அப்போது ஜல தோஷம், ஜல ஸம்பந்தமான கஷ்டம், அஜீர்ண ரோகமிவையுண்டாகும். லக்னாதிபன் ரோகாதிபனுடன் கூடி புதன் ஷட்வர்க்கத்தை அடைந்தால், அவனுடைய புக்தியில் வாயுவோ, பித்தஜாட்யமோ ஏற்படும். லக்னாதிபன் ரோகாதிபனுடன் சேர்ந்து குரு ஷட்வர்கத்திலிருக்க ரோகம் அல்லது ப்ராம்மண பிடை ஏற்படும். இவ்விதமே சுக்ர ஷட்வர்கத்திலிருக்க ஸ்த்ரீயின் சேர்க்கையால் பிடை அல்லது ரோகமுண்டாகும். இப்படியே சனி ஷட்வர்கத்திலிருக்க வாயு, ஸந்நிபாத ரோகங்களுண்டாகலாம். லக்னாதிபசத்ரு ஸ்தானாதிபர்களுடைய தசையில் மாரக க்ரக புக்திகளிலும் இதே பலன் நடக்கும். எட்டில் ராகு, சனி, கேது இவர்களிருந்து அவர்களுடைய புக்தி நடக்க மனோவேதனை, விக்கல், சுவாசகாஸம் விஷூசிகா ரோகங்கள் உண்டாகும். மாரகக்ரஹ ஸம்யோகமும் இதே பலனையளிக்கும். மேல் தெரிவித்தபடியே 2-க்குடையவனுக்கும், 6-க்குடையவனுக்கும் ஸம்பந்தமேற்பட்டு மேலே கண்ட விடங்களிலிருப்பதாலும், இவ்வண்ணமே 3-க்குடையவனுக்கும் 6-க்குடையவனுக்கும் யோகமிருந்து முன்னுள்ள விடங்களிலிருப்பதாலும் தனம், ஸோதரதரன் முதலிய மற்ற பாவங்களின் பலனையும் ஊஹிக்கவும்.

தன் நவாம்சத்திலிருக்கும் க்ரஹபுக்தியில் தேஜஸ் உடையவனாகவும் சுகியாகவும், ஸ்திரமான ஸம்பத்துடையவனாகவும், அரசன்மூலம் தனத்தை அடைபவனாகவும், பலவானாகவும், ப்ரஸித்தியை அடைந்தவனாகவும் செய்கிறது. சுபக்ரஹ விஷயம் பெற விசேஷ பலனளிக்கிறது.

தசாநாத புக்திநாதர்கள் ஒருவருக்கொருவர் 6-8-ல் இருக்கிறவர்களாய் அவர்களின் புக்தி நடக்க ராஜபயம், ப்ருத்யவிரோதம், ஸ்த்ரீ விரோதம், புத்ரகளத்ர நாசம், சோராக்னி பிடை, பந்து பிடைகளால் மனோவேதனை உண்டாகும். தசாநாதனுக்கு 12-லிருக்கும் புக்தியில் ஸ்தானத்தினின்றும் நழுவுதல், பந்து ஜன விரோதம், அன்யதேசம் செல்லுதல், ஸ்வஜனவிரோதம், கால், கண், மார்பு இவைகளில் வியாதியையும் அடைகிறான். தசாநாதனுடன் சேர்ந்த க்ரஹத்தின் புக்தியில் ஸ்திரீ புத்ர ப்ருத்ய த்ரவ்ய க்ருஷிகளுக்கு நாசமும், முயற்சியில் பங்கமும், ஸ்வஜனங்களால் கஷ்டமும், எதிர்பார்க்காத வசைச் சொற்களும் ஏற்படும்.

தசாநாதனுக்கு இரண்டிலிருக்கும் க்ரஹபுக்தி காலத்தில் ம்ருதுவான அன்னம், பானம், வஸ்த்ரம், கந்தம், மாலை, பரோபகாரம், ஸௌக்யம், ஸ்த்ரீ புத்ர பந்துக்கள் மூலம் ஸந்தோஷமுமேற்படும்.

தசாநாதனுக்கு மூன்றிலிருக்கும் க்ரஹபுக்தியில் அரசன் மூலம் த்ரவியம், ஸ்நேகம், போக்யபதார்த்தங்கள், ஆபரணமும் மித்ரன் மூலம் போஜன ஸௌக்யம் முதலியனவும் உண்டாகும்.

தசாநாதனுக்கு நான்கிலிருக்கும் சுப புக்தியில் களத்ர புத்ரதன க்ரஹாவாப்திகளேற்படும். வாஹனம் அன்னபானாதிகளையுமடைகிறான். பாப புக்தியானால் பலன் மாறி நடக்கும். பாப க்ரஹமானாலும், ஸ்வக்ஷேத்ரம் உச்ச க்ஷேத்ரங்களிலிருக்க சுபத்தையே அளிக்கும்.

தசாநாதனுக்கு ஐந்திலிருக்கும் க்ரஹத்தின் புக்தியில் புத்ரனுண்டாகும். பாபியானால் புத்ரநாசம்.

தசாநாதனுக்கு ஆறிலிருக்கும் பாப க்ரஹ புக்தியில் சோர பயம், ருணபாதை, சரீரபீடை, ஸ்தானசலனம் முதலியவற்றை அடைகிறான். சுபக்ரஹபுக்தியில் சுகவிருத்தி, புத்ர மித்ரலாபங்களை அடைகிறான்.

தசாநிபதிக்கு ஏழிலிருக்கும் பாபக்ரஹத்தின் புக்திகாலத்தில் களத்ர புத்ர பந்து தனஹிகளின் நாசம், சுபக்ரஹபுக்தியில் ஸௌக்யம், உயர்ந்த ரத்ன வஸ்த்ராபரணாதி லாபம்.

தசாநாதனுக்கு எட்டாமிடத்திலிருக்கும், புக்திகாலத்தில் சுகம். ஆதியில் நற்பலனும், அந்தத்தில் கெட்டபலனு முண்டாகும்.

தசாநிபனுக்கு ஒன்பதிலிருக்கும் புக்தி நாதன் புக்திகாலத்தில் (பாபியானால்) ஸ்தானப்ரம்சம், மனோவியாதிகளையும் (சுபரானால்) சுபசோபனாதிகள், யாகதீக்ஷை, தானத்தால் கஷ்டம் முதலியவைகளையும் அடைகிறான்.

தசாநிபதிக்கு பத்தாமிடத்தில் வலிக்கும் க்ரஹபுக்தியில் (சுபரானால்) ஸௌக்யம், வாபி நிர்மாணம் முதலிய தர்மகார்யங்களும் (அசுபரானால்) கர்மநாசம், அபகீர்த்தி, பல ஆபத்துக்கள் முதலியவைகளையும் அடைகிறான்.

தசாநிபனுக்கு 11-லிருக்கும் க்ரஹபுக்தியில் (சுபராகில்) சுகம் பாக்யவிருத்தி, ராஜப்ரீதி, களத்ர புத்ர விருத்தி. (அசுபனாகில்) புத்ர மித்ர தனங்களையும், நிஷ்டத்த ஸ்தானத்தையுமடைகிறான்.

தசாநாதனுக்கு பனிரண்டிலிருக்கும் பாபபுக்தியில் பொருள் நஷ்டம், ராஜகோபம், ஸ்தானநாசம், புத்திப்ரம்சம் முதலியன ஏற்படும். சுபக்ரஹ புக்தியில் வாஹனாதி ப்ராப்தி, போக போக்யோபகரணங்களையுமடைகிறான.

தசாநாதனுக்கு 1, 2, 3-ல் வலிக்கும் பாபக்ரஹபுக்திகாலம் அசுபம், சுபக்ரஹபுக்திகாலம் சுபம். பாபக்ரஹ தசாகாலத்தில் பாபக்ரஹபுக்தியில் பயம், ஸ்தானநாசம், கண்கள், பந்து, புத்ரன், தனம், களத்ரம் இவைகளுக்கு நாசம், ராஜபயம் முதலியன உண்டாகும். சுபக்ரஹ தசையில் சுபக்ரஹபுக்தியில் எல்லாம் நற்பலனே. பாபதசையில் சுபபுக்தியில் முதலில் ஸௌக்யம், பிறகு அஸௌக்யம். சுபதசையில் பாபபுக்தியில் முதலில் கஷ்டம்,

பிறகு சுகம். சீர்ஷோதயராசியிலிருக்கும் க்ரஹம் முன்பாதியிலும், ப்ருஷ்டோதய உபயதோதயராசியிலிருக்கும் க்ரஹங்கள் அந்தத்திலும் பலனை அளிப்பர்.

சூரியதசை மொத்த பலன்.

பரமோச்சத்திலிருக்கும் சூரியதசையில் பூமி, பொருள், களத்ரம், புத்ரன், யசஸ், விஜ்ஞேதமாக கோஷ்டி ஸஞ்சாரம், அரச ஸன்மானம் முதலியதை அடைகிறான். உச்சத்திலிருக்கும் சூரியதசையில் பசு, தான்யங்களின் வ்ருத்தி, அலைச்சல், வெளியூரிலிருக்கும் பந்து ஜனவிரோதம், வெளியூர் பிரயாணம், அதிக கோபத்தையுடைய வேசியோகம், அரசாங்கவேலை, மருதங்காதி வாத்யங்களுடன் பிரயாணம், பரஸ்பர விரோதம், ரதிகேளிகள் இவைகளுண்டாகும். நீசத்திலிருந்து உச்சத்துக்குப் போகும் ஆரோஹ தசையில் மஹத்வம், ஸௌக்யம், பரோபகாரம், புத்ர தார க்ருஹ க்ஷேத்ரங்களின் வ்ருத்தி, பசு, குதிரை, யானைகள்-இவை முதலியன உண்டாகும். உச்சத்திலிருந்து நீசத்துக்குப் போகும் அவரோஹ தசையில் க்ருஷி, தனம், க்ருஹம், மித்ரன்-இவர்களின் நாசம், திருடர், அக்னி மூலம் பயம், கலஹம், விரோதம், அன்யதேச வாஸம், ராஜகோபம் முதலியன ஏற்படும். நீசந்நிலிருக்கும் தசையில் ராஜகோபத்தால் கௌரவம், பொருள்-இவைகளின் நாசம், புத்ர மித்ர களத்ர பந்துக்களின் நாசம், தகப்பனுக்கு அபகீர்த்தி முதலியன உண்டாகும். பரமநீசந்நில்-ஆபத்து, விட்டை விட்டு வெளியேறுதல், அன்யதேசம் செல்கை, குருவின் வியோகம், புத்ர மித்ர களத்ர க்ருஹ பூமி பசுக்களுக்கு நாசம் உண்டாகும். மூலத்ரிகோணத்திலிருக்கும் சூரியதசையில் பூமி, பொருள், களத்ரம், புத்ரன் பந்துக்கள் மூலம் ஸௌக்யம், அரசாங்க உதவிகளுண்டாகும். ஸ்வக்ஷேத்ரத்திலிருக்கும் சூரியதசை பந்துஸௌக்யம், க்ருஷி, தனம், வித்யைமூலமான கீர்த்தி, அநேக காலம் எதிர் பார்த்த ராஜ ஸன்மானம் முதலியன உண்டாகும். மித்ரன் வீட்டிலிருக்கும் சூரிய தசை பிதா, ப்ருத்யன், புத்ரன், அரசன்-இவர்களிடமிருந்து பூஜையையும், தன் வீட்டில் வாஸத்தையும், தன் பந்துக்களுடைய சேர்க்கையையும், வாஹனம், ஆபரணம், வஸ்த்ரம் முதலியவைகளின் லாபத்தையும் அளிக்கிறது. அமித்ர ராசியிலிருக்கும் சூரிய தசை அதிக ஸௌக்யம், ஸ்த்ரீ, புத்ரன், தான்யம், அர்த்தம், மனதுக்கு சந்தோஷம் முதலியவைகளை அளிக்கும்.

சத்ரு வீட்டிலிருக்கும் சூரியதசையில் துக்கி. புத்ர தார தனங்களால் விடுபடுவான். ராஜாக்னிசோரபயம். மாத்ருபித்ரு விரோதம். அதிசத்ருவின் ராசியிலிருக்கும் ரவிதசையில் அர்த்த புத்ர களத்ர நாசம். சத்ருவிருத்தி, தகப்பன், மித்ரன், பசுக்களின் சரீர பிடை இவைகளேற்படும். ஸமக்ஷேத்ரத்திலிருக்கும் சூரிய தசையில் க்ருஷிக்குகந்த பூமி, தான்யம், பசு, வாஹனங்கள், வஸ்த்ரம், ஸௌக்யம், ஸ்த்ரீ புத்ரர்களுக்கு தோஷம், சண்டையில் பிடை இவைகளேற்படும். இவ்விதமே சுபக்ரஹ வீக்ஷணம் பாபக்ரஹ வீக்ஷணம், உச்சாம்சம், நீசாம்சம் ஸ்தான பலம் முதலிய இவைகளைக் கவனித்து சுபாசுபங்களுக்குத் தக்கபடி பலனை ஊஹித்துக் கொள்ள வேண்டும்.

சூரிய தசையில் சூரிய புக்தி மாதம் 3 நாட்கள் 18

சூரியன் உச்சக்ஷேத்ரம், 1, 4, 7, 10, 11, 5, 9 இவைகளிலிருக்க தனதான்யலாபம், ரோகம், ராஜப்ரீதி, எல்லாவற்றிலும் காரியஸித்தி, விவாஹம், ராஜதரிசனம் உண்டாகும். 2, 7-க்குடையவனால் அபமிருத்யு ஏற்படும். இந்த தோஷம் விலகுவதற்கு ம்ருத்யுஞ்ஜயஜபமும் ஸூர்யசாந்தியும் செய்ய வேண்டும்.

சூரிய தசை–சந்த்ர புக்தி மாதம் 6.

புக்திநாதனான சந்த்ரன் லக்னத்துக்கு 4-7-10-5-9 இவ்விடங்களிலிருக்க விவாஹம்முதலிய சுபகாரியம், தனதான்ய விருத்தி, க்ருஹக்ஷேத்ரலாபம், பசுவாஹனாதி ப்ராப்தி, சந்த்ரன் உச்சம் அல்லது ஸ்வக்ஷேத்ரத்திலிருக்க களத்ரசுகம், தனலாபம், புத்ர லாபம், சரீர சுகம், ப்ரபுவின் தயவினால் இஷ்டஸித்தி மூலம் சுகம், க்ஷீணசந்த்ரனுகவோ அல்லது பாபியுடன் சேர்ந்தால், களத்ரபுத்ராதி பிடை, எல்லாவற்றிலும் மாறி நடத்தல், வாதம் புரிதல், பிருத்ய நாசம், விரோதம், ராஜகலஹம், தனதான்ய பசு நாசம், லக்னத்துக்கு 6-8-12-லிருக்க ஜலபயம், மனோவேதனை, பந்தனம், சோகம், ரோகம், ஸ்தானசலனம், தாயாதிகளின் மனஸ்தாபம், சோராதி பிடை, ப்ரமேஹரோகம், க்ஷயரோகம், தேஹபிடை முதலியன நேரும்.

தசாநாதனுக்கு 11-9 4-7-10-களில் சுபனுடன் சேர்ந்திருக்க போக பாக்ய ப்ராப்தி, களத்ர-புத்ர சுகம், ராஜ்ய ப்ராப்தி, ஸௌக்யம், ஸ்திரமான ஸ்தான ப்ராப்தி, விவாஹம்

யாகதேஷ்டை; அழகான தாயும், பிறருடையதாயுமுள்ள வஸ்த்ர பூஷண வாஹனங்களையும், புத்ர-பௌத்ராதி சுகவ்ருத்தியையும் அடைகிறான். தசாநாதனுக்கு 6-8-12-லிருந்தாலும், துர்பலனானாலும், அகால போஜனம், தேசம் விட்டு தேசம் செல்தல் ஏற்படும். 2-7-க்குடையவனால் அபம்ருத்யு பயம் உண்டாகும். இத்தோஷ நிவிருத்திக்கு வெள்ளைப் பசு, எருமை-தானமும், சந்த்ர சாந்தியையும் செய்ய வேண்டும்.

சூரிய தசையில் செவ்வாய் புக்தி மாதம் 4 நாள் 6.

செவ்வாய் உச்சம், ஸ்வக்ஷேத்ரம், லக்னத்துக்கு 11, 4, 7, 10, 5, 9-இட்டங்களிலிருக்க சுபகாரியம், க்ருஹ பூமி லாபம், தனதான்ய விருத்தி, ரக்த வஸ்த்ர லாபம், லக்னாதிபனோடு சேர்ந்தால் ஸௌக்யம், ராஜ ப்ரீதி. 9-11-க்குடையவனுடன் சேர லாபம், தலைவனாதல், சத்ரு நாசம், மனோதைர்யம், பந்து சுகம், ப்ராத்ரு விருத்தி உண்டாகும்.

தசாநாதனுக்கு 6-8-12-லிருந்தாலும், பாபக்ரஹ ஸம்பந்தம் வீக்ஷணம் பெற்றாலும், துர்பலனானாலும், க்ரூர புத்தி, மனோவேதனை, சிறைப்ரவேசம், பந்து நாசம், பந்தனம், ப்ராத்ரு வர்க விரோதம் இவைகளுண்டாகும். நீசன் அல்லது துர்பலனால் அரசன் மூலம் தன நாசம். 2-7-க்குடையவனால் தேக ஜாட்யம், மனோவியாகுலமுண்டாகும். இத்தோஷம் போக வேத மந்த்ர ஜபம், ஸுப்ரமண்ய மந்த்ர ஜபம், காளீ மாட்டு தானம், செவ்வாய் சாந்தி இவைகளைச் செய்ய வேண்டும். ஆயுள், ஆரோக்யம், கார்ய ஸித்திகளுண்டாகும்.

சூர்ய தசை ராகு புக்தி மாதம் 10 நாள் 24.

ராகு லக்னத்துக்குக் கேந்த்ரத்திலோ கோணத்திலோ வலிக்க, முதலிரண்டு மாதங்கள் வரை தன நாசம், அதிக பயம், சோர, விஷ பயம், களத்ர-புத்ராதி பிடை, மேல் மீதமுள்ள காலங்களில் சுகவிருத்தி. ராகு சுபனுடன் சேர்ந்தோ, சுப நவாம்சம் பெற்றோ இருக்க சுகம் ஏற்படும். லக்னத்துக்கு 3-6-10-11-இடங்களிலோ யோக காரகர்களுடன் சேர்ந்திருக்கவோ ஆரோக்யம், மனச் சந்தோஷம், ராஜ ப்ரீதி, சுகம் இவைகளேற்படும்.

தசாநிபனுக்கு 9-லிருக்க அரச பகுமானம், யசஸ், பாக்ய விருத்தி, தார-புத்ராதி பிடை, புத்ரோத்ஸவம் முதலான ஸந்தோஷம், க்ருஹத்தில் கல்யாணம் முதலிய சோபனம் நடைபெறும். தசாநிபனுக்கு 6-8-12-லிருந்தாலும், பலமில்லாதவனுலும், பந்தனம், ஸ்தான நாசம், சிறை வாஸம், சோர ஸர்பாதி பயம், தார-புத்ராபிவிருத்தி ப்ராணி நாசம், க்ருஹ க்ஷேத்ர நாசம், குன்மம், க்ஷயம், அதிஸாரம் இவைகளால் பிடை ஏற்படும். தசாநாதனுக்கு 2-7 லிருந்தாலும், அவ்வீட்டுக்குடையவனுடன் சேர்ந்தாலும், அபம்ருத்யு பயம், ஸர்ப்ப பயம் ஏற்படும். இத்தோஷ நிவிருத்திக்கு துர்கா ஸப்தசத ஜபம், மேரு தானம், கருப்புநிற பசு அல்லது எருமை தானம் செய்க.

சூரிய தசை குரு புக்தி மாதம் 9 நாள் 18.

குரு லக்னத்துக்கு கேந்த்ரத்திலோ, கோணத்திலோ தன் உச்ச க்ஷேத்ரத்திலோ, மித்ர வர்கத்திலோ இருக்க விவாஹம், ராஜ தரிசனம், தன-தான்ய லாபம், புத்ர ப்ராப்தி, ஸுகம், மஹாராஜானுக்ரஹத்தால் தன் கார்ய ஸித்தி, பெரியோரின் ஸன்மானம், விரும்பிய வஸ்த்ராதி லாபம் ஏற்படுவதுடன் பாக்ய கர்மாதிபர்களின் யோகத்தை அநுஸரித்து ராஜ்ய லாபம், உத்ஸவம், நவாஹ்ன லாபம், தன் இருப்பில் அதிக மேன்மை, அதிக ஸௌக்யம் முதலியன நடக்கும்.

தசாநாதனுக்கு 9-லிருக்க பாக்ய விருத்தி, தான தர்மங்கள், தேவதாராதனம், குரு பக்தி, இஷ்ட ஸித்தி, புண்ய கார்யாதி ஸங்க்ரஹம் இவைகளேற்படும். தசாநிபனுக்கு 6-8-12, நீசராசிகளிலிருந்தாலும், பாபரோடு சேர்ந்தாலும், தார-புத்ராதி பிடை, தேஹ பிடை, அதிக பயம், அரச கோபம், பிரிய வஸ்து நாசம், பாபத்தால் நிரவிய நாசம், அன்ய தேசம் செல்தல், மனோவேதனை இவைகளுண்டாகும். இந்த தோஷம் போவதற்காக ஸ்வர்ண தானம், குரு சாந்தி, கருமையான பசுவின் தானம் செய்ய ஸௌக்யமுண்டு.

சூரிய தசை சனி புக்தி மாதம் 11 நாள் 12.

சனி லக்னத்துக்கு கேந்த்ர கோணங்களிலிருந்தால், சத்ரு நாசம், அதிக ஸௌக்யம், நிறைய தான்யம், பொருள்களின் லாபம், சுப கார்யங்கள் முதலியன நடக்கும். சனி உச்சம்

அல்லது ஸ்வக்ஷேத்ரத்திலிருந்தாலும், மித்ரனுடன் சேர்ந்திருந்தாலும், க்ருஹத்தில் கல்யாணம் விவாஹம் முதலியவைகளில் கௌரவம், அரச பகுமானம், கற்சேர்த்தி, பலவித வஸ்த்ர-தனங்களின் லாபங்களேற்படும்.

தசாநிபனுக்கு 6-8-12-களிலிருந்தாலும், பாபர்களுடன் சேர்ந்திருந்தாலும், வாத சூலம், ஜ்வரம், அதிஸாரம், பந்தனம், கார்ய ஹானி, அர்த்த நாசம், அதிக பயம், கலகம், தாயாதிகளுடன் விரோதம் இவைகளேற்படும். சனி புக்தியின் முதலில் மித்ர ஹானி, மத்தியில் சிறிது சுகம், முடிவில் துக்கமேற்படும். நீசனில் எப்போதும் கஷ்ட பலனை நடக்கும். பித்ரு-மாத்ரு வியோகமும், வெளியில் ஸஞ்சாரமும் ஏற்படும். சனி 2-7-க்குடையவனில் அபமிருத்யு பயமுண்டாகும். இந்த தோஷம் விலக கருத்த பசு, எருமைகளின் தானம், ம்ருத்யுஞ்ஜய மந்த்ர ஜபம், சாகதானம் முதலியன செய்யின் ஸர்வ ஸம்பத்தையும் அளிக்க வல்லதாகும்.

சூரிய தசை புத புக்தி மாதம் 10, நாள் 6.

புதன் தன் உச்ச க்ஷேத்ரம், ஸ்வக்ஷேத்ரம், கேந்த்ரம், த்ரிகோணம், லாப ஸ்தானம் இவைகளிலாவது ஷட்வர்க பலம் பெற்றிருக்க, ராஜ்ய லாபம், உத்ஸாஹம், களத்ர-புத்ர ஸௌக்யம், வாஹன வஸ்த்ர பூஷணாதி லாபம், புண்ய தீர்த்த பலன், க்ருஹத்தில் பசு, தன விருத்தி உண்டாகும். 9-ல் 11-க்குடையவன் சேர அதிக லாபம் உண்டாகும். 9-5-10-களிலிருக்க அதிக பகுமானம், தன் கார்யத்திலும தர்மத்திலும் நோக்கம், ஆசார்யர், பெரியோர்களைப் பூஜித்தல், தன தான்யங்களுடன் விவாஹம், புத்ர லாபம் இவைகளுண்டாகும்.

தசாநாதனுக்கு சுபஸ்தானத்திலிருந்தால் அதிக ஸௌக்யம், சுப பரம்பரைகளும், ஜபம், தன் விஷயமான கவிகள், (அட்ரஸ்) பட்டங்கள், போஜன வஸ்த்ராபரண ப்ராப்தி முதலியன ஏற்படும். தசாநாதனுக்கு சத்ரு க்ஷேத்ரத்தில் அல்லது தசாநாதன் வசிக்கு மிடத்துக்கு 6, 8-மிடங்களில் கோசரத்தில் ஸஞ்சரிக்கும்போதும் தசாநாதனுக்கு 12-லும், நீச ஸ்தானத்திலுமிருக்க தேக பிடை, மனஸ்தாபம், புத்ர-தார பிடை இவைகளுண்டாகும். புக்தி ஆரம்பத்தில் துக்கமும், மத்தியில் சிறிது சுகமும், கடைசியில்

ராஜ பயமும், பிரயாண சிரமமும் ஏற்படும். 2-7-க்குடையவனுனல் தேக ஜாட்யம், ஜ்வரம், வியவஹார ச்ரமம் முதலியன உண்டாகும். இந்த ச்ரம பரிஹாரமாக விஷ்ணு ஸஹஸ்ரநாம ஜபம், ப்ராம்மண போஜனம், ரஜதப்ரதிமா தானம் செய்யவும்.

சூரிய தசை கேது புக்தி மாதம் 4, நாள் 6.

கேது புக்தியில் தேக பீடை, மனக் கஷ்டம், பொருள் நாசம், ராஜ கோபம், ஸ்வஜன விரோதங்களுண்டாகும், லக்னாதிபனுடன் சேர முதலில் ஸௌக்யமும், த்ரவ்ய லாபமும், மத்யத்தில் துக்கமும் கஷ்டமும் ஏற்படும்.

தசாநாதனுக்கு 6-8-12-களிலிருந்தாலும், பாபர்களுடன் சேர்ந்திருந்தாலும் கன்னம், பற்கள் - இவைகளில் வியாதியும், மூத்ர க்ருச்ச்ரம் (நீர்க்கருக்கு), இடம் பொருள் நாசம், மித்ர ஹானி, பித்ரு மரணம், அன்ய தேச கமனம், சத்ரு பீடை, அதிக பயம் இவைகளுண்டாகும்.

ஜன்ம லக்னத்துக்கு 2, 4, 5, 7, 8, 9, 12-களிலிருந்தாலும் யோக காரகருடன் சேர்ந்திருந்தாலும், சுபநவாம்சம் சுப ஷட்வர்கத்திலிருந்தாலும், புத்ர-களத்ர ஸௌக்யம், ஸந்தோஷம், விசித்ர வஸ்த்ர லாபம், கீர்த்தி முதலிய சுப பலனைத் தருவான். 2-7-மிடங்களிலிருந்தாலும், அதிபனுடனிலும் அபம்ருத்யு தோஷ மேற்படுகிறது. தோஷ நிவிருத்திக்காக துர்கா ஸப்தசதி ஜபம், மேஷ தானம், மஹா ம்ருத்யுஞ்ஜய ஜபம். கேது சாந்திகளைச் செய்தால் தோஷம் விலகி ஸுகத்தை அடைவான்.

சூர்ய தசை சுக்ர புக்தி மாதங்கள் 12.

சுக்ரன் கேந்த்ரம் அல்லது கோணத்திலாவது சந்த்ர லக்னத்திலாவதிருந்தாலும், உச்சம், மித்ர க்ஷேத்ரம், ஷட்வர்கத்திலிருந்தாலும், இஷ்ட ஸ்திரீ போகம். பொருள், வேறு க்ராமம் செல்லுதல், ப்ராம்மண ப்ரபு தரிசனம், ராஜ்ய ப்ராப்தி, உத்ஸாஹம், சத்ர சாமர லாபம், க்ருஹத்தில் கல்யாணம், பூர்ண போஜனம், தனம், முத்து, பவழங்களின் லாபம், வஸ்த்ர லாபம், பசு முதலிய பிராணி வரவு, தனதான்ய லாபம், கீர்த்தி, நரவாஹன லாபம் முதலியன உண்டாகும். லக்னத்துக்கு 6, 8, 12-களிலாவது தசாநாதனுக்கு 6, 8, 12-களிலாவது துர்பலனுய் கோசரத்தில் ஸஞ்சரித்தாலும், ராஜ கோபம், ஸ்திரீ, புத்ரன், தனம்

இவைகளின் நாசமுமுண்டாகும். புக்தியின் முதலில் வாஹன லாபம், மத்யத்தில் சுபம், லாபம், கடைசியில் கீர்த்தி நாசம், ஸ்தான ப்ரம்சம், பந்து த்வேஷம், போக்ய நாசம் இவை ஏற்படும். ஏழுக்கதிபனுனல் தேக ஜாட்யம், சிரோ ரோகம், வயிற்று வலி, மனோ வியாதி இவையும் லக்னத்துக்கு 8-12-ல் இருந்தால் அபம்ருத்யுவும் ஏற்படலாகும். இந்த தோஷம் விலக ம்ருத்யுஞ்ஜய ஜபம், வெள்ளீப் பசு, எருமை தானம், ருத்ர ஜபம், சுக்ர சாந்தி முதலியன செய்யவும்.

சந்த்ர தசையின் பொதுப் பலன்.

அத்யுச்ச பாகத்திலிருக்கும் சந்த்ரனுடைய தசையில் புஷ்பம், வஸ்த்ரம், பெரிய தன்மை, களத்ர லாபம், தனலாபம், மனத் திருப்தி இவைகளீயடைகிறான், உச்ச க்ஷேத்ரத்தில் வசிக்கும் சந்த்ர தசையில் புத்ர-களத்ர-தன லாபங்கள், அன்னபானாதி ப்ராப்தி, வஸ்த்ராபரண லாபம், அன்ய தேசம் செல்தல், ஸ்வஜன விரோதம் இவை ஏற்படும். ஆரோஹ தசையில் ஸ்திரீ, புத்ர, தன, வஸ்த்ர ஸௌக்யம், கீர்த்தி, லாபம், சுகபோஜனம், தேவ ப்ராம்மண பூஜை இவை ஏற்படும். அவரோஹ தசையில் ஸ்திரீ, புத்ர, மித்ர, வஸ்த்ர ஸௌக்யங்களுக்கு ஹானி, மனோ விகாரம், தன் ஜனங்களுடன் விரோதம், சோர, அக்னி, ராஜபீடை, குளம் முதலிய நீர் நிலையில் விழுதல் நடக்கும். நீச நவாம்சத்திலிருக்கும் சந்த்ர தசையில் பொருள் நஷ்டம், கெட்ட ஆகாரம், நீக்குணமுடையவரிடம் சேவை, தூக்கங்களுண்டாகும். மூல த்ரிகோணத்திலிருக்கும் தசையில் ராஜாக்கள் மூலம் தனம், பூமி, புத்ர, அர்த்த, களத்ர, ஆபரண, வஸ்த்ராதி லாபம், மாத்ரு ஸௌக்யம், ரதி விலாஸம் முதலியன உண்டாகும். தன் வீட்டிலிருக்கும் ப்ரபுவிடமிருந்து த்ரவ்ய லாபம், ஸௌக்யம், கெட்டஸ்வபாவமுள்ள தாசி ஸம்போகம், அரச பகுமானம், ஸ்திரீ, புத்ர, பந்து ஸௌக்யம் ஏற்படும். அதி சத்ரு ராசியை அடைந்த தசையில் கலஹம், அர்த்தநாசம், விகார வஸ்த்ர ப்ராப்தி, கெட்ட போஜனம், க்ஷேத்ர களத்ர புத்ர தனங்களுக்குக் குறைவு, வேறு ஊர் செல்லல் ஏற்படும். அதிசத்ரு வீட்டிலிருக்கும் தசாகாலத்தில், வாஹன வஸ்த்ர ஆபரண நாசம், அலைச்சல், கீழ்வேலை செய்தல், பந்துக்களின் ஹானி, துக்கம் முதலியன உண்டாகும்.

மித்ரக்ஷேத்ரத்திலிருக்கும் சந்த்ர தசையில் அர்த்தலாபம், பிரபு ஸ்நேகம், உத்யோக ப்ராப்தி, ஜலத்ரவ்யலாபம் விசித்ர வஸ்த்ர பூஷண வாக்விலாஸங்களுண்டாகும். அதிமித்ர ராசியிலிருக்க, ஸௌக்யம், வித்யை மூலமுண்டாகும் பகுமானம், க்ஷேத்ரார்த்த புத்ராதி லாபம், ஸ்மராசியை அடைந்திருக்க, ஸ்வர்ணம் பூமி லாபம், சிறிது சுகம், பந்துக்களுக்கு ரோகபீடை. அந்யதேச ஸஞ்சாரம்–இவைகளேற்படும். நீசத்திலிருக்கும் சந்த்ரன் தசையில் ஆபத்துகள், துக்கம், காடுகளில் செல்லுதல் பந்தனம், சிறை, இழப்பு, ஆஹாரக்குறைவு, சோராக்நிபயம், புத்ர களத்ர துக்கம் இவைகளேற்படும். க்ஷீணசந்த்ரனுல் தொழில், தனம் பூமி, மித்ர களத்ர புத்ரர்கள் நாசம், ஸ்வஜன விரோதம், நியகாரியங்களால் கடன், பைத்தியம் முதலியன ஏற்படும். பூர்ண சந்த்ர தசையில் எல்லாவற்றினுடைய பூர்த்தியையும், ராஜ பூஜை, மனத்திருப்தி, சுபகாரியங்கள் முதலியவற்றையும் அடைவிருன். உச்சத்திலிருக்கும் ஸ்ரஹத்துடன் சேர்ந்தால் உத்தம பலன். பாப க்ரஹத்துடன் சேர்ந்திருக்க அதம பலன். சுபக்ரஹத்துடன் சேர்ந்திருக்க சுபபலன். இப்படியே பார்வையிலும் காண்க. மூல த்ரிகோணத்திலிருக்கும் சந்த்ரன் தசையில் பொருள், புத்ரன், பந்துவிரோதம், தலைவனுகுதல் முதலியன ஏற்படும். 4-ல் இருக்கும் சந்த்ர தசையில் மாத்ரு வியோகம், சுகம், வாஹன, பூமி, தனலாபங்கள், பட்டம் பெறுதல், வரவேற்புப் பத்ரம் பெறுதல் க்ருஹ லாபம் முதலியன நடக்கும். 7-லிருக்கும் சந்த்ரன் தசையில், களத்ரலாபம், புத்ர ஸௌக்யம், சயனசுகம், பிரமேஹம், மனோவியாதி முதலியன உண்டாகும். 10-மிடத்தில் சந்த்ரனிருந்தால், கீர்த்தி, ஸத்வித்யை, யாகாதிகள், பந்துபூஜை, பூமி, புத்ர, வாஹன த்ரவ்யலாபம் உண்டாகும். நீசாம்சத்தில் இருக்க அசுபபலன். உச்சாம்சத்திலிருக்க சுபபலன். 6-லிருக்கும் சந்த்ரதசையில் கலஹம், துக்கம் சோராக்னி பயம், ஜலபயம், மூத்ரக்ருச்ச்ரம், தனநாசம் முதலியன உண்டாகும். 8-மிடத்திலிருந்தால் இழப்பு, ஜலபயம், துக்கம், அன்யதேசம் செல்லுதல், எல்லோருடனும் விரோதம், முதலியன ஏற்படும். 12-லிருக்க, அரசன் மூலம் தனநாசம், பொய்யால் பொருளழிவு, பாக்யஹானி, ஸ்தானசலனம், பெரிய துக்கம் உண்டாகும். 2-லிருக்க, தனம், புத்ரன், ஸ்திரீ போகம்,

பாக்யம், நல்ல போஜனம், ரதிசுகம், தனவரவு, புண்ய ஜலஸ்நானம் முதலியன உண்டாகும். சந்த்ரன் 3-லிருந்தால், அதிக ஸௌக்யம், பலவித பொருள்களின் லாபம், மனைத்ருடம், ப்ராத்ரு ஸௌக்யம், க்ருஷி, அன்னம், வஸ்த்ரம், பூஷணங்களின் லாபம், 11-லிருக்க பலவித அர்த்தலாபம், விளையாட்டில் ஆசை, ஸ்த்ரீ லாபம் இவை உண்டாகும். சூரியனுடன் சேர, துக்கம், அரசன், அக்னி, திருடர்களின் பிடை, மாத்ருதுக்கம், க்ருஷி தான்யநாசம். ஸ்தானுபலம் பெற்றிருக்க சுபம், சுபஷஷ்ட்யம்சம் பெற சுபம்.

சந்த்ர தசையில் சந்த்ர புக்தி மாதம் 10.

சந்த்ரன், உச்சம், ஸ்வக்ஷேத்ரம், த்ரிகோணம், லாபஸ்தானம், 9-10-க்கு அதிபர்களுடன் சேர்க்கை இவைகளிற் பெற யாகீன, குதிரை, வஸ்த்ரங்களின் லாபம், தேவதாகுருபக்தி, புண்யகதாச்ரவணம், ஜீவனலாபம், ஸௌக்யம், கீர்த்தி முதலியன உண்டாகும். பூர்ண சந்த்ரனுல் பூர்ணபலன். சந்த்ரன் பாபி ஸம்பந்தம், நீசம், 12-8-களிலிருக்க தன நாசம், ஸ்தான சலனம், ஆலஸ்யம், மனத்தாங்கல், அரசாங்க விரோதம், மாத்ரு துக்கம், மனோபிடை, பந்தனம், பந்து நாசம். 2-7-க்கு அதிபனுகவோ, 6-8-களில் வாஸமோ நேர தேக ஜாட்யம், பங்கம், அபம்ருத்யு பயம் முதலியன நேரும். தோஷ நிவிருத்திக்கு, வெண்மையான பசு, எருமை தானம், சந்த்ர ப்ரீதி செய்ய ஆரோக்யமேற்படும்.

சந்த்ர தசை செவ்வாய் புக்தி மாதம் 7.

செவ்வாய் 4, 7, 10, 5, 9-களிலிருக்க ஸௌபாக்யம், ராஜ ஸம்மானம், வஸ்த்ராபரண பூஷணலாபங்கள், இஷ்ட கார்யஸித்தி ஏற்படும், வியவஹாரத்தில் ஜயமும், நிலம், விடு வாங்கல் முதலியனவும் நடக்கும். உச்ச ஸ்வக்ஷேத்ரங்களிலிருக்க கார்ய ஸித்தி, ஸௌக்யம். 6, 8, 12-லோ அல்லது பாபரோடு சேர்ந்திருந்தாலும், தசாநாதனுக்கு 6, 8, 12-லிருந்தாலும், பாப விக்ஷணம் பெற்றாலும் 2, 7-க்குடையவனுகவோ, அஷ்டமத்தில் வாஸமோ பெற்றாலும் தேக பிடை, க்ருஹ க்ஷேத்ர நாசம், வியவஹாரம், ப்ருத்ய கலகம், ராஜ விரோதம், இஷ்டவியோகம், கொடுமையாகப் பேசல் முதலியன ஏற்படும். இக்கஷ்டம் நீர்ந்து சுகம் பெற ஸுப்ரஹ்மண்ய பூசை செய்ய வேண்டும்.

சந்த்ர தசை ராகு புக்தி வருஷம் 1, மாதம் 6.

ராகு கேந்த்ர கோணங்களிலிருக்க ஆரம்ப காலத்தில் சத்ரு பிடை, பயம், திருடர், அரசர், ஸர்பம் இவைகளிடமிருந்து பயம், பிராணி பிடை, பந்து நாசம், மித்ர நாசம், கௌரவக் குறைவு, மனஸுக்கங்களேற்படும். விஷ உபத்ரவம், தன் ஸ்திரீ விரோதம், தன நாசம், எதிர்பாராத கலகம், மாத்ரு பித்ரு கிலேசம் இவைகளேற்படும். சுப ஸம்பந்தம், வீக்ஷணம், லக்னத்துக்கு 3, 6, 10, 11-ல் வாஸம், யோக காரக ஸம்பந்தம், பஞ்சம ஸ்தான வாஸம், சுப ஸம்பந்தம் இவைகளைப் பெற்றிருந்தால் யத்ன கார்ய ஸித்தி, தனலாபம், மேற்கு அல்லது நிர்ருதி திசையில் பிரயாணம், மித்ர தர்சனம், வாகனலாபம், அதிகார மேன்மை, கீழ்ப்பட்டவர்களின் உறவு, அவர்களால் கார்யம் முடிவு பெறுதல் இவைகளேற்படும். ஜன்ம லக்னம் அல்லது தசாநாதனுக்கு 6, 8, 12-லிருந்தாலும், நீசனுடனும் ஸ்தான சலனம், மனஸு பிடை, புத்ர துக்கம், பெரும் பயம், விஷ ஜந்துக்களின் பிடை, சோராக்னி பிடை, அர்த்த நாசம், கடன் சிரமம் முதலியன நடக்கும். தசாநாதனுக்கு 4, 7, 10, 5, 9, 3, 11-களிலிருக்க புண்ய தீர்த்த ஸ்நான பலன், தேவதா தரிசனம், பரோபகாரம் செய்தல், புண்ய தர்மங்களைத் தேடுதல், ஸ்திரீ தேவதையின் பூஜை, ஷட்ர க்ரஹணம், ஔஷத க்ரஹணம் ஏற்படும். 2, 7-களிலிருக்க தேக பிடை உண்டாகும். பரிகாரமாக துர்காஸப்தசதி ஜபம், ஆடு தானம் செய்ய தோஷம் நீங்கும், சம்பத்துண்டாகும்.

சந்த்ர தசை குரு புக்தி வருஷம் 1, மாதம் 4.

குரு லக்னத் கேந்த்ர கோணங்களில் அல்லது ஸ்வக்ஷேத்ரம், உச்ச க்ஷேத்ரம், லாப ஸ்தானங்களிலிருக்க ஜீவன லாபம், ஸந்தோஷம், வஸ்த்ராலங்காராபரணாதி லாபம், ராஜப்ரீதி, பொருள் வரவு, இஷ்ட தேவதானுக்ரஹத்தால் கர்ப்பாதானாதி பலன், சுபகார்யாதி காரியங்கள், லக்ஷ்மீ கடாக்ஷம், ராஜாச்ரயத்தால் தனம், பூமி, யானை, குதிரைகளின் லாபம், மகாராஜ ப்ரஸாதத்தால் இஷ்ட சித்தி, குரு, 6, 8, 12-ல் அல்லது நீசனுகவோ, அஸ்தங்கதமாகவோ, பாபரோடு சேர்ந்தோ இருக்க அசுபங்கள், குரு புத்ர நாசம், நிலை தவறுதல், மனக்லேசம், எதிர்பாராமல் ஏற்படும் சண்டை, இரக க்ஷேத்ர வாகன வஸ்த்ராதி நாசம் இவைகளுண்டாகும். தசாநாதனுக்கு கேந்த்ர கோணங்களில் அல்லது

3, 11-லிருக்க நல்ல போஜனம், வஸ்த்ரம், பக லாபம், உத்ஸாகம், ப்ராத்ரு ஸுகம், ஸம்பத்து, தைர்ய வீர்ய பராக்ரமங்கள், யஜ்ஞ கார்யம், கல்யாணம், உயர்ந்த அந்தஸ்து இவைகளேற்படும். சுபமான குரு புக்தியில் வஸ்த்ர, தன லாபம், தன ரூபு உண்டாக்குதல், ப்ரம்மண ப்ரபு மூலம் ஸௌக்யம், ஆலய ப்ரதிஷ்டை, நகர ப்ரவேசம் ஏற்படும். தசாநாதனுக்கு 6, 8, 12-ல் அல்லது துர்பலனாகவிருக்க அன்ய தேச கமனம், கெட்ட போஜனம் கிடைக்கும், புக்தியின் ஆரம்பத்தில் நன்மையையும், அந்தத்தில் துக்கத்தையும் விளைவிக்கிறான். 2, 7-க்கு அதிபனுகில் அபமிருத்யு தோஷம், தோஷம் விலகுவதற்கு சிவ ஸஹஸ்ரநாம பாராயணம், ஸ்வர்ண தானம், குரு சாந்தி முதலியன செய்ய தோஷம் நீங்கி சுகம் பெருகும்.

சந்த்ர தசை சனி புக்தி வருஷம் 1, மாதம் 7.

சனி கேந்த்ரம், கோணம், ஸ்வக்ஷேத்ரம், ஸ்வநவாம்சம், மித்ர க்ஷேத்ரம், லாப ஸ்தானம், சுபக்ஷேத்ரம் இவைகளிலிருந்தாலும், நவாம்சத்தில் பலம் பெற்றிருந்தாலும், புத்ரமித்ரார்த்த ஸம்பத்தி, சூத்ர ப்ரபுவின் சிநேகம், தன முயற்சியில் அதிக பலன், புத்ர லாபம், கல்யாண வைபவம், மேற்கு அல்லது தென்மேற்கில் சூத்ரன் மூலமாக த்ரவ்ய லாபம், புதிதான கார்யத்தில் சிந்தையும் முடிவாகுதலும் நடக்கும். 6, 8, 12-ல் அல்லது நீசம் சத்ரு க்ஷேத்ரத்தை அடைய முதலில் புண்யதீர்த்த ஸ்நானம், தேவதா தர்சனம், ஜனங்களிடம் பயம், ஆயுத பிடை, பந்து த்வேஷம், ரோகம், பித்ரு நாசம், தன நாசம், கடனால் பிடை, அன்ய தேசம் செல்தல், மான நஷ்டம், ராஜ பிதி, வ்ரணம், சோராக்னி பயமேற்படும். தசாநாதனுக்கு கேந்த்ர த்ரிகோண லாப ஸ்தானங்களில் இருக்க சில சமயத்தில் நற்பலனும், சில காலங்களில் அசுப பலனும் நடைபெறும். 2, 7, 8-களிலிருக்க சரீரத்தில் பிடை ஏற்படும். ம்ருத்யுஞ்ஜய ஜபம், கருத்த பசு, எருமை தானங்கள் செய்ய தோஷம் விலகும்.

சந்த்ர தசை புத புக்தி வருஷம் 1, மாதம் 5.

புதன் கேந்த்ர த்ரிகோண லாப ஸ்வக்ஷேத்ர, உச்ச ஸ்வநவாம்சங்களிலிருந்து பலம் பெற்றிருந்தாலும், சுபாம்சம், சுபராசி சுபக்ரக ஸம்பந்தங்களைப் பெற்றாலும். கல்யாணாதி சுபகார்யங்கள்,

பந்துக்களால் கொண்டாடப்படுதல். ப்ரிய வஸ்த்ர லாபம். அச்வ லாபம். வித்யா விநோதம் ஜ்ஞான வ்ருத்தி. ஸாது கோஷ்டியில் சேரல். சுகம். புத்ராவாப்தி. கீர்த்தி விருத்தி. வியாபாரத்தில் தன லாபம். ரத்னாபரணம். முத்து முதலிய வியாபாரத்தால் லாபம். சத்ரு நாசம். இஷ்டஸித்தி. கதை கேட்டல். ராஜ ப்ரீதி. தேவதாத்யாதி கோஷம். தேவதைகளின் உத்ஸவ தரிசனம், யாத்ரை. மித்ர ஸம்மானம். அழகான வீட்டில் வாஸம். அபூர்வ வஸ்து லாபம். மாத்ரு வம்ச வருத்தி இவைகள் நடைபெறும். 6. 8. 12 ல் கேது க்ஷேத்ரம் இவைகளிலிருக்க தேஹ பீடை. பந்தனம். தார புத்ரரதி பீடை. பந்து மித்ர மனஸ்தாபம். கஷ்டம். பயம் முதலியன நடக்கும். 2. 7-க்கு அதிபனால் ஜ்வரத்தால் மிக சிரமமுண்டாகும். ஆடு தானம். விஷ்ணு ஸஹஸ்ரநாம ஜபம். புத சாந்தி முதலியன செய்ய ஆரோக்யமும் ஜயமும் ஏற்படும்.

சந்த்ரதசை–கேதுபுக்தி 7 மாதம்.

கேது 3-6-11-ல் அல்லது சுபர் சேர்க்கை, பார்வைகளைப் பெற. க்ருஷி விருத்தியினால் அர்த்தலாபம். தன் அதிகாரத்தினாலும் அர்த்தலாபம், விதவாளங்கம், சோரன்மூலம் தனப்ராப்தி. புண்யகர்ம வ்ருத்தி, அரசப்ரீதி. மனத்திருப்தி ஏற்படும். கேந்த்ரம், த்ரிகோணங்களிலிருக்க ஆரம்பத்தில் சண்டையும், மத்தியில் சத்ரு பயமும் கடைசியில் சுகமும் ஏற்படும். தசாநாதனுக்கு 6-8-12-களிலோ, நீசராசியிலோ இருக்க, கார்யஹானி, பூதபீடை. கடன் தொல்லை, தனவிரயம், விதவாகலஹம், சிரோரோகம். பசு முதலியவைகளின் நாசம், ராஜத்துவேஷம், மனக்கஷ்டம். பிறர் வீட்டில் வாஸம், ப்ரயாணம், அகாலபோஜனம், விஷபயம். பித்ரு நாசம், மாத்ருபீடை, மேலிருந்துவிழல், பந்துக்களின் மனத்தாங்கல். அண்டவ்யாதி இவைகள் நடக்கும். 2-7-லிருக்க அநேக வ்யாதிகள். அதிக பயம் உண்டாகும். ருத்ரஜபம். கேது சாந்தி முதலியன செய்து சுகமடையலாம்.

சந்த்ரதசை–சுக்ரபுக்தி-ஸ்ரீ 1, மாதம் 8.

சுக்ரன் கேந்த்ரத்ரிகோண லாப உச்சக்ஷேத்ர ஸ்வக்ஷேத்ரங்களிலாவது சுபக்ரஹ ஸம்பந்தமாவது பெற்றால். ஸ்நேஹிதனால ப்ரபுமூலமாக வாஹனவஸ்த்ராதிலாபம், நாற்கால் பிராணிலாபம், பூமி லாபம். கீர்த்தி, புதிய வீடு கட்டல், கல்யாணம். பந்து

தர்சனம். ஸுகந்த த்ரவ்ய ப்ராப்தி, தன் ஸ்திரீமூலம் ஸௌக்யம். தனது அதிகாராபிவிருத்தி. எதிர்பாராத ராஜ தரிசனம். கீத வாத்ய விநோதம். யானை வரை ஐச்வர்ய லாபம். பந்துக்கள் வீட்டில் சுபகார்யங்கள். ம்ருஷ்டான்ன போஜனம். வியாபாரத்தில் தன லாபம். மித்ரன்மூலம் ஸௌக்யம் இவைகளேற்படும். தசாநாதன் ஸம்பந்தம் பெற தேக ஸௌக்யம். அர்த்த லாபம். வீட்டில் கல்யாணாதி சுபகார்யங்கள் நடைபெறல். ராஜ பூஜை. அதிக கீர்த்தி. அதிகார விருத்தி. ஸ்திரீமூலம் தன வரவு இவைகளேற்படும். 6-8-12 ல் வாஸம். நீசத்திலோ. பாப க்ரஹ ஸம்பந்தமோ ஏற்பட ராஜ மந்த்ரி விரோதம். ப்ராணி நாசம். தார பீடை. கீர்த்தி ஹானி. பந்து நாசம். தனஹானி. பாக்ய ஹானி. மனக்லேசம். ஸ்திரீ கலகம். கர்ம ப்ராப்தி. ஸ்தான சலனம். கார்யத்தில் இடையூறு. கடன் தொல்லை இவைகளுண்டாகும். 9. 11-க்குடையவனுடன் சேர. பாக்ய வ்ருத்தி. தேவ ப்ராம்மண பக்தி. முத்து ரகையின் வரவு ஏற்படும். தசாநாதனுக்கு 4, 7, 10. 11. 5. 9 இடங்களிலோ. ஸ்வகவாம்சம். உச்ச க்ஷேத்ரம், இவைகளிலோ இருக்க நூதன க்ருஹ நிர்மாணம், வித்யா லாபம். புத்ர லாபம், ஜீவன லாபம், சத்ரு நாசம். தன விருத்தி. ஸங்கீத வாத்யாதி அனுபவம். புண்ய கதா ச்ரவணம். அன்ய ஸ்திரீபோகம். பந்து கல்யாணங்கள் நடக்கும். தசாநாதனுக்கு 6-8 12-ல். பாப ஸம்பந்தம் பெற அன்ய தேச வாஸம். துக்கம், சோராக்னி க்ருப பீடை. அதிகார ஹானி. மித்ர த்வேஷம் மனோவ்யாதி முதலியன ஏற்படும். 2-7-க்கு அதிபனியானால் அபமிருத்யு பயமேற்படும். இந்த தோஷம்விலக துர்காஸப்தசதி ஜபம். துர்கா ப்ரதிமா தானம் சுக்ர சாந்தி இவைகள் செய்ய தோஷ நிவ்ருத்தி ஏற்படும்.

சந்த்ர தசை ஸூர்ய புக்தி மாதம் 6.

சூரியன் தன உச்ச க்ஷேத்ரம், ஸ்வக்ஷேத்ரம், கேந்த்ரம், த்ரிகோணம். 2-3-களில் பலத்துடனிருக்க ஜீவன லாபம், தனப்ராப்தி, சோபனாதிகள் நடைபெறல். மித்ர ப்ரபுமூலம் க்ராம பூமி லாபம். புத்ர ப்ராப்தி. ஸௌக்யம். அதிகாரமூலம் தன வரவு. பந்து ப்ரீதி. புண்ய கதா ச்ரவணம். குரு தெய்வ தரிசனம் உண்டாகும். 6-8-12, நீச ராசி. பாப க்ரஹ ஸம்பந்தம் பெற கார்யஹானி. சத்ரு பயம். புத்தி நாசம். அகஸ்மாத்தான சண்டை. அதிக லாபம். செலவு. கடன் தொல்லை. தேக ச்ரமம். மனக்கவலை. வேறு க்ராமம்

செல்தல். கார்ய நாசம், பயம் இவைகளேற்படும். 2-7-க்குடைய வனுகில் சரீரத்தில் சிரமமுண்டாகும். ஸௌக்யம் பெறுவதற்கு சிவ பூஜை, சூரிய சாந்தி முதலியன செய்யவும்.

செவ்வாய் தசையின் பொதுப் பலன்.

அத்யுச்சத்திலிருக்கும் செவ்வாய் தசையில் பூமி, பொருள் களின் லாபம், ஜயம், உயர்வு பெறல், அரசாங்க மர்யாதை, ஸ்திரீ தரன், ஸ்திரீ, புத்ரன், வார்த்தையில் நிபுணதை முதலியன உண்டாகும். உச்சத்திலிருக்கும் குஜ தசையில் ராஜ்ய லாபம் அல்லது அரசன்மூலம் தனலாபம், பூமியின் மத்யம், களத்ர-புத்ர பந்துக்களின் வரவு, உயர்ந்த வாஹனத்தில் அன்ய தேசம் செல் தல் நடைபெறும். உச்சத்திலிருக்கிற கிரகத்துடன் சேர சிறிது சுகம், குறைவான போஜன வஸ்த்ர பான லாபம், சிரமத்துடன் ஜீவனம், ராஜ பூஜை, புத்ர-தார பிடை ஏற்படும். நீசத்திலிருக்கும் செவ்வாய் தசையில் இழிதொழிலால் தன் சுற்றத்தாரைக் காப் பாற்றல், துர்போஜனம், பசு, யானை, குதிரைகளின் நாசம், இருடன், கெருப்பு, அரசர்களால் தன் பந்து நாசம் ஏற்படும். நீசத்தை அடைந்த கிரகத்துடன் சேர மனமாறுதல், அடிமைத் தொழில் ஜீவனம், பரான்ன போஜனம், அக்னி, அரசர்களால் ஸ்திரீ புத்ர நாசம் இவைகளுண்டாகும். செவ்வாய் அதிமித்ர ராசியை அடைய அரசர்களால் பொருள் பூமி லாபம், வஸ்த்ரம், யாக விவாக நிஷ்டைகள், அன்ய தேசத்திலிருந்து பாக்ய லாபம் இவைகள் நடக்கும். மித்ர க்ஷேத்ரத்திலிருக்கும் செவ்வாய் தசையில் சத்ருக்கள் ஸ்நேகமாதல், அஜீர்ணம், கண்ணுக்குக் கெடுதி, பூமி நாசம், க்ருஷியில் நஷ்டம், கலகம், கோபம், துக்கம்-இவைகளை அடைகிறான். ஸமக்ஷேத்ரத்திலிருக்க தன் நிலைக்கு மீறி வீடு கட்டுதல், ஸ்திரீ-புத்ர-மித்ர-ப்ருத்ய-ஸ்நேகரர்களுக்கு சத்ருவாதல், அக்னி, அரசர்களால் கஷ்டமிவைகளை அடை கிறான். சத்ரு க்ஷேத்ரத்திலிருக்கும் குஜ தசையில் யுத்தத்தில் பிடை, துக்கம், அக்னி, அரசர், விஷம் இவைகள் மூலம் கஷ்டம், குதம், கண்கள்-இவைகளில் வியாதி ஏற்படும். அதிசத்ரு ராசி யில் இருக்கும் செவ்வாய் தசையில் கலகம், துக்கம், ராஜகோபம், ஸ்வஜன விரோதம், பூமி, பொருள்களுக்கு நாசம், களத்ர-புத்ர-மித்ரர்களுக்கு வியாதி-இவைகள் நடக்கும். ஆரோஹத்தில் அரச

னின் பூஜை, முக்யத் தன்மை பெறுதல், தைரியம், மனோ விலாஸம், உயர்ந்த பாக்யம், பசு முதலியவைகளின் விருத்தி உண்டாகும். அவரோஹ தசையில், பொருள், பதவி நாசம், கலகம், துக்கம், அன்ய தேச வாசம், ஸ்வஜன விரோதம், ந்ருப சோராக்னி பிடை முதலியன ஏற்படும். மூல த்ரிகோணத்தி லிருக்க, அன்ன பான, வஸ்த்ர பூஷணாதி ப்ராப்தி, ஸத்கதா ச்ரவணம், ப்ராத்ரு ஸௌக்யம், க்ருஷி லாபங்களுண்டாகும். சுப க்ஷேத்ரத்திலிருக்க பூமி, பொருள், லாபம், அதிபனுதல், சுகவாகன லாபம், பதவி, பட்டம் பெறுதல், ப்ராத்ரு சுகம், ஆத்ம சுகம் முதலியவற்றை அடைகிறான். சூரியனுக்கு முன் 6 ராசிகளி லுள்ள கிரஹங்கள் ஆதேர முகங்கள், சூரியனுக்கு பின் 6 ராசி களிலுள்ளவை ஊர்த்வ முகங்கள்; இவை சுகத்தை யளிக்கும். வக்ரியானால் அவரோஹி யெனவும், ருஜுவானால் ஆரோஹி எனவும் சொல்லப்படும். உச்சத்திலிருப்பவை வக்ரமானால் உச்ச பலன் ஏற்படாது. வர்கோத்தமத்தை அடைந்த செவ்வாயின் தசையில் உலக ப்ரஸித்தனுகவும், பலவானுகவும், யுத்தத்தில் பிரஸித்தனுகவும் ஆவதுடன் சொல்லப்பட்டிருக்கும் பலன்களைக் காட்டிலும் இரண்டு பங்கு அதிகமாகவே பலன் உண்டாகும். மற்றும் இதர விஷயங்களை ஊஹித்துக் கொள்ளவும்.

செவ்வாய் தசை செவ்வாய் புக்தி மாதம் 4 நாள் 27.

செவ்வாய் கேந்த்ர த்ரிகோணங்களிலோ 11-2-3-களிலோ பலத் துடன் அல்லது லக்னாதிபனுடனிருக்க, ராஜானுக்ரகம், லக்ஷ்மீ கடாக்ஷம், நஷ்ட ராஜ்ய (தன) லாபமுண்டாகும், உச்சம், ஸ்வக்ஷேத் ரம், ஸ்வாம்சங்களிலிருந்து பலவானுகவுமானால், புத்ரோத்ஸவம், பசு விருத்தி, க்ரஹ க்ஷேத்ராபிவிருத்தி, மஹாராஜ ப்ரஸாதம், இஷ்ட லாபத்தி ஏற்படும். 6-8-12-ல் அல்லது பாப ஸம்பந்தம் அல்லது வீக்ஷணம் பெற மூத்ர க்ருச்ச்ரம், குஷ்டம், வ்ரண பிடை, ஸர்ப்பம், நிருடன், அரசன் இவர்களால் பிடை, தன, தான்ய, பசு நாசங்களுண்டாகும். 2-7-க்கு அதிபனில் தேக ஜாட்யம், மனக் கவலை ஏற்படும். இத்தோஷம் விலக வேண்டி ருத்ர ஜபம், வ்ருஷப தானம், குஜ சாந்தி செய்ய வேண்டும்.

செவ்வாய் தசை ராகு புக்தி வருஷம் 1, நாள் 18.

ராகு, விருஷபம் அல்லது கடகத்திலிருந்து சுப ஸம்பந்தம் அல்லது பார்வை பெற, அல்லது கேந்த்ர த்ரிகோண லாப ஸ்தானங்களிலிருக்க, ராஜ ஸன்மானம், க்ரஹ பூமிகளின் லாபம், களத்ர புத்ர லாபம், முயற்சி செய்ய அதிக பலன், புண்ய தீர்த்த ஸ்நான பலன், அன்ய தேசம் செல்தல் ஏற்படும். 6, 8, 12-களில் இருந்தாலும், பாப க்ரஹ ஸம்பந்த விக்ஷணங்கள் பெற்றாலும், திருடர், பாம்பு, வ்ரணம் இவைகளால் பிடை, காற்றால் ஜீவநாசம் வாத பித்தம், க்ஷயம், காராக்ருஹ ப்ரவேசம் உண்டாகும், ராகு 2-லிருக்க தனநாசமும் அதிக பயமுமேற்படும், 2, 7-களிலிருக்க அபமிருத்யு பயம் சம்பவிக்கும், தோஷ சாந்திக்காக நாக தானம், தேவ ப்ராஹ்மண பூஜைகள், மிருத்யுஞ்ஜய ஜபம் செய்யவும், குஜ ராகு சாந்திகளும் செய்யலாம்.

செவ்வாய் தசை குரு புக்தி மாதம் 11, நாள் 6.

குரு கேந்த்ர கோண லாப தன ஸ்தானங்களிலோ-உச்சம் நவாம்சம் அல்லது ஸ்வநவாம்சத்திலோ இருக்க நற்சேர்த்தி, ராஜ சன்மானம், தனதான்ய விருத்தி, க்ருஹத்தில் கல்யாணாதி சுபங்கள், புத்ராதி லாபம் முதலியன நடக்கும், தசாநாதனுக்கு கேந்த்ர கோண லாபங்களிலிருந்தாலும், 4, 9, 10-க்குடையவர்களுடன் சேர்ந்திருந்தாலும், லக்னாதிபனுடன் இருந்தாலும், சுபநவாம்சம் சுபஷட்வர்கங்களிலிருந்தாலும், க்ருஹ க்ஷேத்ராதி விருத்தி, க்ருஹத்தில் சுப சோபனங்கள், ஆரோக்யம், அதிக யசஸ், பசு வாலுதல், புதிய உத்யோக கார்யம், புதிய ப்ரபு தர்சனம், ஸ்திரத்தன் மூலம் கார்ய ஸித்தி, மனதுக்கு ஸந்தோஷம், ஆலய க்ருஹ நிர்மாணம், மேற்கில் பந்து தரிசனம், தேகாரோக்யம், புத்ர லாபம், ஸத்கதாபடன ச்ரவணம், நாற்கால் ஜீவ லாபம், முயற்சிக்கதிக பலன்கள் உண்டாகும். 6, 8, 12-களில் வாஸம் அல்லது நீசன், அஸ்தங்கதன், பாப க்ரஹ ஸம்பந்தம், விக்ஷணம் அல்லது துர்பலனுனல் சோராக்னி ந்ருப பிடை, பித்தரோகம், ப்ருத்யர்களுக்குள் கலகம், ராஜ ஸ்தான விரோதம், பார்யை அல்லது புத்ர நாசம், தன நாசம், கார்ய விக்னம், பித்ரு நாசம், மனோ பிடை, வேறு க்ரஹத்தில் வாஸம், பாப காரிய ஸம்பவம், ப்ரேத பிடை, ப்ருத்ய ஸோதர நாசம் ஏற்படும். 2, 7-க்கு அதிபதியாகிலோ, மாரகர்

களுடன் சேர்ந்தோ இருக்க அடிமையாதல், ப்ருத்ய நாசம், தேக ஜாட்யம், மனோதுக்கம், அதிகச் செலவு, அபம்ருத்யு—இவை களுண்டாகும். இத்தோஷ நிவிருத்திக்கு சிவ ஸஹஸ்ரநாம ஜபம் மஹாகூச்மாண்ட தானம், குரு சாந்திகள் செய்ய சுபமுண்டாகும்.

செவ்வாய் தசை சனி புக்தி ஒ 1, மாதம் 1, நாள் 9.

சனி உச்ச, ஸ்வக்ஷேத்ர, கேந்த்ர, த்ரிகோண, த்ருதீய, லாப ஸ்தானங்கள் அல்லது தர்ம கர்மாதிபர்கள், லக்னாதிபன் ஸம்பந்தம் பெற்றோ, மித்ர வர்கம், சுபாம்சம் சுபக்ரஹ ஸம்பந்த விக்ஷணம் பெற்றோ இருந்தால், ராஜ்ய ஸௌக்யம், கீர்த்தி விருத்தி, ஸ்வக்ராமத்தில் தான்ய விருத்தி, புத்ர-பௌத்ர, பசு, தான்யங்களின் அபிவிருத்தி, புத்ரனுக்கு கல்யாண ப்ராப்தி, லக்ஷ்மி கடாக்ஷம், உத்யோக ப்ராப்தி, ப்ரபு ஸம்மானம், தேகாரோக்யம், சத்ரு நாசம், வடமேற்கில் தனலாபம், மஹாராஜ ப்ரஸாதத்தால் வியவஹாரத்தில் தன லாபம், சனிக் கிழமையில் ராஜ ஸன்மானம், சனியின் மாதத்தில் (புரட்டாசியில்) புத்ர விருத்தியுமேற்படும், சனி, நீச, சத்ரு க்ஷேத்ரங்களில் அல்லது 6, 8, 12-களிலிருக்க மிகுந்த ப்ரபு மூலம் பயம், தனதான்யாதி நாசம், பந்தனம், ரோகம், க்ஷேத்ர நாசம் முதலியன நடக்கும். 2, 7-க்குடையவனுடனோ, பாபருடன் சேர்ந்தோ இருக்க அதிக பயம், தனநாசம், வெளியில் சுற்றல், ராஜத்வேஷம், மனோ வேதனை, சோராக்னி ந்ருப பிடை, உடன்பிறந்தோர் நாசம், பந்து த்வேஷம், எதிர்பாராத மரண பயம், புத்ராதி பிடை, ராஜ தண்டனையில் பயம் முதலியன உண்டாகும். தசாநாதனுக்கு 4, 7, 10, 11, 5, 9-களிலிருக்க அன்ய தேசம் செல்தல், பற்பல அபகீர்த்தி, பாப காரியங்களில் பற்று, ஜீவஹிம்சை புரிதல், எல்லா வற்றையும் விற்பது, க்ஷேத்ர ஹானி, ஸ்தான ப்ரம்சம், மனோதுக்கம், மூத்ர க்ருச்ச்ரத்தால் அதிக பயம் ஏற்படும். தசாநாதனுக்கு 6, 8, 12-களிலிருந்தாலும் பாபருடன் சேர்ந்தாலும் மரணம், அரசர், திருடன், அக்னிகளால் பிடை, க்ஷயம், அபஸ்மாரம்- கொப்பளங்களால் பிடை, பித்ரு-மாத்ரு வியோகம், கடன் வாங்கிய பொருள்களால் கஷ்டம், வாத-சூல ரோகங்கள், ஜ்ஞாதி-சத்ரு பயம் இவைகளுண்டாகின்றன. 2, 7-க்கு அதிபனுமில் அபம்ருத்யு பயமேற்படும். இந்த தோஷ நிவ்ருத்திக்கு ம்ருத்யுஞ்ஜய ஜபம், சனி சாந்தி முதலியன செய்யவும்.

செவ்வாய் தசை புத புக்தி மாதம் 11 நாள் 27

புதன் 4, 7, 10, 5, 9-களிலிருக்க ஸத்கதா ச்ரவணம், ப்ரபா (தண்ணீர் பந்தல்) ஸ்தாபனம், தர்மத்தில் சிந்தை, அதிக கீர்த்தி, நீதியில் செல்தல், பிரதிதினம் ம்ருஷ்டான்ன போஜனம், வாஹன வஸ்த்ர பசு முதலியன விருத்தியாதல், ராஜ கார்ய மூலம் சுகம், க்ருஷியில் லாபம், ஆபரணம், கஜம் முதலியன லாப மேற்படும். நீசன், அஸ்தங்கதன் அல்லது 6, 8, 12-களிலிருக்க மனோவியாதி, மானக் குறைவு, பந்தனம், பந்துநாசம், தார-புத்ர அர்த்த நாசம், நாற்கால் ஜீவ நாசமுமுண்டாகும். தசாநாதனு டன் சேர்ந்திருக்க சத்ரு விருத்தி, அதிக பயம், அன்யதேசம் செல் தல், பலவித வியாதிகள், ராஜத்வாரத்தில் விரோதம், ஆகார விஷயங்களில் கலவரமேற்படும். தசாநாதனுக்கு 4, 7, 10, 5, 9 உச்ச க்ஷேத்ரம் இவைகளிலிருக்க தனக்குக் கிடைக்க வேண்டிய பொருளின் லாபம், தனோபனதல், அரச ஸன்மானம், ராஜயோகம் தன வஸ்த்ராபரணாதி லாபம், வாத்ய மிருதங்காதி அனுபவம், படைத் தலைவனதல், பழைய க்ருஹத்தைப் புதிதாக நிர்மாணித் தல், பந்து மித்ரச் சேர்க்கை, புத்ரோத்ஸவ ஸந்தோஷம், பொ ருளீயலிக்கும் வாஹன லாபம், யாகாதி பல ஸித்தி, கல்விழைத்த பூஷண லாபம், தாய் வழியில் நன்மை, ஸத்கதா படனம், வேடிக் கையாக காலம் கடத்தும் பிராம்மணர்களின் யோகம், தார-புத் ராதி விபவம், லக்ஷ்மிகடாக்ஷம்-இவை யேற்படும். தசாநாதனுக்கு 6, 8, 12-ல் வாஸம், பாப ஸம்பந்தமிருந்தால் மானஹானி, க்ரூர புத்தி, கொடிய வார்த்தை, சோர பயம், எதிர்பாராத கலகம் நிச்ச யமாக ஏற்படும். 2, 7-க்குடையவனுக இருந்தால் பயத்தை உண்டு பண்ணக்கூடிய பெரிய வியாதி ஸம்பவிக்கும், விஷ்ணு ஸஹஸ்ர நாம பாராயணம், அச்வ தானம் முதலியனவும், புத சாந்தியும் செய்ய ஸௌக்யமுண்டாகும்.

செவ்வாய் தசை கேது புக்தி மாதம் 4 நாள் 27.

கேது 3, 4, 5, 7, 9, 10, 11 களிலிருந்தாலும், சுப ஸம்பந்தம் விசேஷணம் பெற்றாலும், ராஜ ப்ரஸாதத்தால் மனத் திருப்தி, அதிக ஸௌக்யம், தனலாபம், புக்தி முதலில் ஸ்வல்ப பலனும் பூமி, புத்ர லாபமுமேற்படும். ராஜா அல்லது பிரபுக்களுடன் பேசுவதில் கார்ய ஸித்தி, நாற்கால் ஜீவ லாபம். யோகத்தைத்

தரும் க்ரஹத்துடன் சேர்க்கை, பலம், வீர்யம்-இவைகளை அடைந் தாலும், புத்ர லாபம், கீர்த்தி, க்ருஹத்தில் லக்ஷ்மீ கடாக்ஷம், பந்துக்கள் மூலம் தன வரவு, படைத் தலைமை, அதிக சுகம், பூமியை ஆள்பவரின் ஸ்நேகம், வாஹன, வஸ்த்ர, ஆபரண லாபம் முதலியன நடக்கும். தசாநாதனுக்கு 6, 8, 12-லோ, பாபருடன் சேர்ந்தோ இருக்க சண்டையும், பல்வியாதியும், திருடன், புலி களால் பீடையும், ஜ்வரம், அதிஸாரம், வெண்குஷ்டம், தார-புத் ராதி பீடையுமுண்டாகும். 2-7-லிருக்க சரீரத்தில் வியாதியும், ஜனங்கள் மூலம் தாபமும், தன தான்யங்களின் குறைவுமேற்படும். ம்ருத்யுஞ்ஜய ஜபம், ம்ருத்யு ப்ரதிமா தானம், கேது சாந்தி முதலி யன செய்ய தோஷம் நீங்கி எல்லா ஸம்பத்துகளுமுண்டாகும்.

செவ்வாய் தசை சுக்ர புக்தி வருஷம் 1 மாதம் 2.

சுக்ரன் 4, 5, 7, 9, 10, 11, உச்ச க்ஷேத்ரம், ஸ்வக்ஷேத்ரம் இவைகளிலிருந்தாலும், சுப ஸ்தானாதிபனுகவிருந்தாலும், ராஜ்ய லாபம், அதிக ஸௌக்யம், கஜ, அச்வ, வஸ்த்ர அலங்காரங்க ளுமுண்டாகும். லக்னாதிப ஸம்பந்தத்தை அடைய தார-புத்ராதி அபிவிருத்தி, ஆயுள், ஐச்வர்யம், பாக்யம், சுகம் இவைகளின் விருத்தி யேற்படும். தசாநாதனுக்கு 2, 4, 5, 7, 9, 10, 11-களி லிருக்க, அன்ய க்ராம வாஸம், தான்ய லாபம், வியாபார உத்தி யோகாபிவிருத்தி, தன் அதிகாரத்தில் அர்த்த ஸித்தி, ஐச்வர்ய புத்ர லாபம், அதிக சுகம், தன் பிரபுவினிடமிருந்து அதிக ஸௌக்யம், வெண்மையான வஸ்த்ரம் முதலிய வஸ்துக்களின் லாபம், மஹாராஜ ப்ரஸாதத்தால் க்ருஹ, பூம்யாதி லாபம், புக்தியின் முடிவில் பலப்ராப்தி, தீதகர்த்தனுபவம், புண்ய தீர்த்த ஸ்நான பலன் இவைகளை யடைவான். கர்மாதிபனுடன் சேர்ந்திருந்தால் தான தர்மம் செய்பவனுகவும், தடாக நிர்மாணம் செய்பவனுகவுமாவான். தசாநாதனுக்கு 6, 8, 12-லிருந்தாலும், பாப ஸம்பந்தம் பெற்றாலும், அதிக துக்கமும், தேஹ பீடையும், தனஹானியும், ராஜா, திருடன் முதலியோர் மூலமான பயமும், க்ருஹத்தில் கலகமும், தார-புத்ராதி பீடையும், நாற்கால் பிராணி களின் நாசமுமேற்படும். 2, 7-க்கு அதிபனுனால் தேஹ பாதை உண்டாகிறது. வெள்ளீப் பசு தானம், எருமை தானம், சுக்ர சாந்தி செய்ய பீடைகள் விலகி சுகமடைவான்.

செவ்வாய் தசை சூரிய புக்தி மாதம் 4 நாள் 6.

சூரியன் உச்ச ஸ்வ க்ஷேத்ர. கேந்த்ர. மூல த்ரிகோண. லாப ஸ்தானங்களிலிருந்தாலும். தர்மகர்மாதிபர்களுடன் சேர்ந்திருந்தாலும். வாஹனம். கீர்த்தி. புத்ரன். தனதான்யங்கள். வீட்டில் கபங்கள்-இவைகளின் அபிவிருத்தி. ஆரோக்யம். தைரியம். ராஜ பூஜை. சுகம். முயற்சிக்குரிய பலஸித்தி. அன்ய தேச ராஜ தரிசனம் ஏற்படும். தசாநாதனுக்கு 6. 8. 12-லோ பாபருடன் சேர்ந்தோ இருக்க தேஹ பிடை. மனஸ்தாபம். கார்யக்குறைவு. பயம். தலைவலி. ஜ்வரம். அதிஸாரம் இவைகள் உண்டாகும். 2. 7-க்குடையவனுடில் ஸர்பம். ஜ்வரம். விஷம் இவைகளால் பயம். புத்ர பிடை முதலியன ஏற்படும். தோஷம் நீங்க சூரிய சாந்தி செய்து ஆரோக்யத்தை அடையலாம்.

செவ்வாய் தசை சந்த்ர புக்தி மாதம் 7.

சந்த்ரன் உச்ச ஸ்வக்ஷேத்ர கேந்த்ரங்களிலோ, லக்ன ஸ்தான தர்ம கர்ம ஸ்தானாதிபருடன் சேர்ந்திருந்தாலோ. ராஜ்யம். கந்த. புஷ்ப. வஸ்த்ர லாபம். தடாக, கோபுர நிர்மாணம். விவாஹகார்யம். தார-புத்ர ஸௌக்யம். பித்ரு-மாத்ரு சுக விருத்தி. லக்ஷ்மி கடாக்ஷம். மஹாராஜ ப்ரஸாதத்தால் இஷ்டஸித்தி சுகங்களுண்டாகும். பூர்ண சந்த்ரனுடில் பூர்ண பலனும். க்ஷீண சந்த்ரனுடில் குறைவான பலனுமேற்படும். சந்த்ரன் நீசனுகிலோ, 6. 8. 12-லோ தசாநாதனுக்கு 6. 8-களிலோ இருக்க தார புத்ராதி நாசம். கஷ்டம். தான்யக்குறைவு. கலஹம். பயம் முதலியன உண்டாகும். 2. 7-க்கு அதிபனுடில் தேஹ ஜாட்யமும். மனைதுக்கமும். அபம்ருத்யுவும் ஏற்படும். இத்தோஷம் விலக துர்கா லக்ஷ்மி ஜபம். வெள்ளிப் பசு தானம். ஏருமை தானம் செய்ய ஆயுராரோக்ய அபிவிருத்தி உண்டாகும். சந்த்ர சாந்தியும் செய்யலாம்.

ராகு தசையின் பொதுப் பலன்.

உச்சத்திலிருக்கும் ராகு தன் தசையில் சுகத்தைத் தருவான். ராஜ்ய லாபம். மித்ர ப்ராப்தி. தனதான்ய விருத்தி இவைகள் நடக்கும். உச்ச க்ரஹத்துடன் சேர ராஜ்ய லாபம். ஸ்திரீ. புத்ர. ரத்ன லாபம். வஸ்த்ர. ஆபரண. கந்த ப்ராப்திகள் ஏற்படும். நீசத்திலிருக்கும் ராகு அரசர். அக்னி. சோரர்களிடமிருந்து பயம். தூக்குப் போட்டுக் கொள்ளல். விஷபயம் முதலியவைகளைச் செய்வான். நீச க்ரஹத்துடன் சேர்ந்த ராகு, தன் தசையில் நீசத் தொழிலால் ஜீவனம். துர்போஜனம். துஷ்கள த்ரம். துஷ்ட புத்ரன் இவைகளை அளிக்கிறான். பாபிகளின் ராசியை அடைந்த ராகு தசையில். சரீரத்தில் கார்ச்யம். தன் குலத்தின் நாசம். அரச னிடமிருந்து பயம், ஏமாற்றத்தால் சத்ருக்களிடம் பயம். ப்ரமேஹம், காசம். க்ஷயம். கீரிழிவு இந்த ரோகங்களையும் அடைகிறான். பாப க்ரஹங்களால் பார்க்கப்பட்ட ராகு காரிய நாசம். உத்யோக பங்கம். தேக பிடை. அக்னி சோராதி பிடை இவைகளைச் செய்வான். சுபக்ரஹங்களால் பார்க்கப்பட காரிய ஸித்தி. ராஜ மரியாதை. தன லாபம். பந்து மரணம்-இவைகளைச் செய்வான். ராகு தசையில் ஆதியில் துக்கமும். மத்யத்தில் சுகமும், அந்த்யத் தில் கஷ்டத்தையுமளிப்பான்.

ராகு தசை ராகு புக்தி வருஷம் 2, மாதம் 8, நாள் 12.

ராகு கடகம். விருச்சிகம். கன்னி. தனுஸ்ஸுகளிலிருக்க ராஜ ஸம்மானம், வஸ்த்ர வாஹன பூஷண லாபம், முயற்சிக்கு அதிக லாபம். நாற்கால் ஜீவ லாபம். மேற்கு. தென்மேற்கில் பிரயாணமும். காரிய ஸித்தியுமேற்படும். உபசய ஸ்தானங்களிலிருந்தாலும். சுப க்ரஹ ஸம்பந்தம் விசேஷணம் பெற்றாலும். மித்ர நவாம்சத்திலிருந்தாலும், தன் உச்ச நவாம்சம். தான் வஹிக்கு மிடத்துக்கு 11-வது விட்டின் நவாம்சம் அல்லது யோக காரகர் களோடு சேர்ந்தாலும். ராஜ்ய லாபம். மஹாத்ஸாஹம். ராஜ ப்ரீதி. விட்டில் கல்யாண ஸம்பத்தி. அதிகாரத்தின் மேன்மை, மித்ர ப்ரீதி. ராஜ ஸம்மானம், வியாபாரத்தில் தனலாபம், விஜயம் தைரியம், அதிக ஸாஹஸம், ராஜ த்வாரத்தில் ஸௌகர்யம் இவைகளை அடைவான். 6, 8, 12, பாப ஸம்பந்தம், விசேஷணம் பெற்று நீச நவாம்சம், நீச ராசிகளிலிருந்தாலும், பாபிகளின் ராசிகளிலிருந்தாலும் கடன் தொல்லையும், சோரனால் பிடையும், ஸ்தான சலனமும், மனக்கவலை, மற்றவர்களுடன் த்வேஷமும். பந்தனம், மானஹாவி. களத்ர கஷ்டம் முதலியனவும் நடக்கும். மித்ர பந்து விரோதம், வாதச்லேஷ்மாதி ரோகம். வியாபாரத்தில் பொருள் நஷ்டம். அன்யதேசம் புகுதல். புத்ர பிடை, ப்ராத்ரு விரோதம், மனக் கிலேசம் முதலியன உண்டாகும். ராகு 2. 7-மிடத்திலிருக்க அபம்ருத்யு தோஷமேற்படும். கேந்த்ர கோணங் களிலிருந்தால் மாத்ரு நாசம். புத்ர நாசம். பித்ரு வர்க ஜனங்

களுக்கு அரிஷ்டம், தாழ்ந்த வஸ்துக்களின் வியாபாரம், அகஸ்மாத் கலஹம், ஆலஸ்யம் உண்டாகும். அபம்ருத்யு தோஷ நிவிருத்திக்கு துர்காஸஹித ஜபம், நாகதானம், எருமை தானம் செய்ய தோஷம் நீங்கி ஆரோக்யமேற்படும்.

ராகு தசை குரு புக்தி வருஷம் 2, மாதம் 4, நாள் 24.

குரு கேந்த்ர கோணங்கள், உச்ச ஸ்வக்ஷேத்ர, உச்ச நவாம்சம் ஸ்வநவாம்சம் இவைகளிலிருக்க ஸ்தான ப்ராப்தி, மனைதரியம், சத்ரு நாசம், பொருள் வரவு, வாஹன, புத்ர லாபம், வீட்டில் கல்யாணம், பசு விருத்தி, மேற்கு, தென்மேற்கு திசைகளில் பிரயாணம், அரசன் – பந்து தரிசனம், கார்ய லித்தி, புண்ய க்ஷேத்ர வாஸம், களத்ர-புத்ர ஸௌக்யம், ப்ராம்மணர்களுக்கு அன்னமளித்தல், தீர்த்த யாத்ரை, பூமி லாபம், தேவ ப்ராம்மண பூஜைகள் நடைபெறும். நீசனுகவோ, அஸ்தங்கதனுகவோ, 6, 8, 12-லோ, சத்ரு க்ஷேத்ரம் அல்லது பாப ஸஹவாஸம் இருந்தால், தனஹானி, கார்யத்தில் இடையூறு, மானஹானி ஏற்படும். ஸ்திரீ ஜாதகத்துக்கு பர்த்தாவையும் இழக்க நேரிடலாம். களத்ர புத்ர பிடை, ஹ்ருதய ரோகம், பெரிய ஸஹோதரரின் வியோகம், பித்ரு-மாத்ரு பிடைகள் ஸம்பவிக்கும். தசாநாதனுக்கு கேந்த்ரம், த்ரிகோணம், 12, 2, 3-இவைகளில் பலவானுயிருக்க, க்ருஹக்ஷேத்ராபிவிருத்தி, போஜன வஸ்த்ர லாபம், பசுவிருத்தி, தான தர்ம ஜபாதிகள் ஏற்படும். புக்தியின் கடையில், ராஜ கோபத்தால் 2 மாதம் சீர பிடையுமுண்டாகும். மூத்த ஸஹோதர வியோகம், ப்ராதா பிதாக்களின் பிடை ஸம்பவிக்கும். தசாநாதனுக்கு 6, 8, 12-களில் அல்லது பாப ஸஹவாஸம் பெற்றிருந்தால் தனஹானி, தேஹ பிடை ஏற்படும். 2, 7-க்குடையவனுக இருக்க அபம்ருத்யு உண்டாகும். ஸ்வர்ண ப்ரதிமாதானம், தக்ஷிண மூர்த்தி பூஜை, குருசாந்தி முதலியன செய்ய தோஷம் நீங்கி சுகமுண்டாகும்.

ராகு தசை சனி புக்தி வருஷம் 2, மாதம் 10, நாள் 6.

சனி கேந்த்ரம், த்ரிகோணம், உச்ச க்ஷேத்ரம், மூல த்ரிகோணம், 3, 11, சுபாம்சம், சுபவர்கம், தசாநாதனுக்கு கேந்த்ரம் இவைகளிலிருக்க வாஹனம், வேலை செய்தல்; ராஜ ப்ரீதி, சுபம், விவாஹோத்ஸவம், வியாபாரத்தில் தன லாபம், உத்யானம், வாபி நிர்மாணம், நீசப்ரபு மூலம் இஷ்ட லாபம், பசு வாங்குதல், மேற்கில் பிரயாணஞ் செய்தல், கடன் வாங்குதல், தேஹாயாஸம், தன் ஊர் திரும்பி வருதல் இவைகள் நடக்கும். சனி நீச க்ஷேத்ரம் சத்ரு க்ஷேத்ரம், 8, 12-ஸ்தானங்கள், பாப ஸஹவாஸமுண்டாதல் இவ்விதமிருக்க ராஜ பீதி, தார-புத்ராதி பிடை, ஆப்த பந்து மனஸ்தாபம், ஜ்ஞாதி கலகம், வியவஹாரத்தில் கலகம், துக்கச் செய்தி கேட்டல், ஸஸ்ய நாசம், மானஹானி, மாத்ரு-பித்ரு வியோகம், த்ரவ்யச் செலவு, ராஜ கோபம், ஸ்தான நாசம், அக்னி பிடை, வாத ச்லேஷ்ம ரோகம், எதிர்பாராத கலகம் முதலியன ஏற்படும். தசாநாதனுக்கு 6, 8, 12-ல் பாபருடன் சேர்தலால், ஹ்ருதய வியாதி, விவாஹத்தில் சத்ரு பிடை, அன்ய தேசங்களில் வாஸம், குன்மம், கெட்ட ஆஹாரம், கேழ்வரகு லாபம், பயம் உண்டாகும். 2, 7-க்குடையவனுனல் அபம்ருத்யு தோஷம். இத் தோஷம் விலக துர்காஸூக்த ஜபம், கருத்த பசு, எருமைகளின் தானம், சனி சாந்தி இவைகளைச் செய்ய பிடை விலகி ஆரோக்யமேற்படும்.

ராகு தசை புத புக்தி வருஷம் 2, மாதம் 6, நாள் 18.

புதன் கேந்த்ரம், த்ரிகோணம், உச்ச க்ஷேத்ரம், ஸ்வக்ஷேத்ரம், சுபக்ரஹ ஸம்பந்தம், லக்னாதிப ஸம்பந்தம், சுபாம்சம், சுபஷட்வர்கம் இவைகளிலிருக்க ராஜயோகம் உண்டாகும். க்ருஹத்தில் கல்யாண விருத்தி, வியாபாரத்தில் தன வரவு, வித்யை, உயர்ந்த வாஹனம், (மோட்டார் முதலியன) விவாஹ காரியங்கள், நாற்கால் பிராணி லாபம், புதன்திசையில் அதிக ஸௌக்யம், தனக்கு மேற்பட்ட பெரியவர்களின் தரிசனம், ஸுகந்த புஷ்பம், படுக்கையுடைய ஸ்திரீ ஸௌக்யம், அதிக கீர்த்தி உண்டாகும். தசாநாதனுக்கு கேந்த்ரம், 11, 3, 9, 10-களிலிருக்க தேஹாரோக்யம், உத்ஸாகம், இஷ்ட கார்ய லித்தி, கற்கீர்த்தி, ஸத்கதா ச்ரவணம், விவாஹம், யாக தீக்ஷை, தான தர்மங்கள், அழகாக க்ருஹ நிர்மாணம், பந்துக்களுக்கு உபகரித்தல் இவைகள் நடக்கும். 6, 8, 12 நீச க்ஷேத்ரம், பாப ஸகவாஸம், க்ரூராம்சம், க்ரூர வீக்ஷணம் பெற்றாலும், தசாநாதனுக்கு 6-8-12-விருந்தாலும், ஸ்தான ப்ரம்சம், மனஸ்தாபம், சரீரம் உலர்ந்து போதல்,

நிந்தனை, க்ருஹ க்ஷேத்ர நாசம், பந்து த்வேஷம், களத்ர-புத்ர பிடை, க்ஷயம், குன்மம், போக பாக்யக் குறைவு, உண்மையில் லாமை, கெடு புத்தி, சோராக்னி ந்ருப பிடை, விஷ பயம், எதிர் பாராத கலகம், குரு புத்ர நாசம், பணச் செலவு, ராஜ கோபம், தார-புத்ராதி பிடை உண்டாகும். 2, 7-க்கு அதிபனுஇல் அப மிருத்யு ஏற்படும். விஷ்ணு ஸகஸ்ரநாம ஜபம் அவரவர்கள் க்ருஹ்ய ஸூத்ர ப்ரகாரம் புத சாந்தி முதலியன செய்ய வேண்டும்.

ராகு தசை கேது புக்தி வருஷம் 1, நாள் 18.

கேது புக்தியில் அலைச்சல், தொழில் நாசம், வாத ஜ்வரம், நாற்கால் பிராணி நாசமுண்டாகும். கேது கேந்த்ரம், த்ரிகோணங்களிலிருந்தாலும், பாவாதிபனுடன் சேர்ந்திருந்தாலும், மகாப்ரபுக்களின் ஆசிரயம், க்ருகத்தில் கல்யாண சம்பவம், வியாபாரத்தில் தன லாபம், தோழன்மூலம் அர்த்த லித்தி ஏற்படும். 8-க்கு அதிபனும் சேர தேக ஜாட்யமும் மனக் கவலையுமுண்டாகும். சுபர் சேர்க்கை பார்வை பெற ஸௌக்யம், தன வரவு உண்டாகும். லக்னாதிபனுடன் சேர்ந்திருக்க சுகத்தை அளிக்கும். இஷ்டலித்தி லாபம், க்ரூரர் விடு, க்ரூர பாவாதிபருடன் சேர்க்கை ஏற்பட சத்ரு பிடை, மனை துக்கம், ஸ்திரீமூலம் சண்டை, சோராக்னி ஆயுதங்களால் ஹிம்ஸை, உடன்பிறந்தோர்களின் த்வேஷம், தன ஹானி, பித்ரு-மாத்ரு வியோகம், கௌரவக் குறைவு, அதிக பயம் புத்ர-தாரங்களின் பிரிவு, நாற்கால் பிராணி நாசம் முதலியன நடக்கும். அஷ்டமாதிபனுடன் சேர கார்ய நாசம், மனக்கவலை, சிறை பயம், விஷபயம் இவைகளுண்டாகும். 2, 7-பாவங்களிலிருக்க தேக பிடை உண்டாகும். இந்த தோஷம் விலகுவதற்கு ஆடு தானம் கேது ப்ரதிமா தானம், கேது சாந்தி முதலியன செய்ய தோஷங்கள் விலகி எல்லா ஸம்பத்துக்களுமேற்படும்.

ராகு தசை சுக்ர புக்தி வருஷம் 3.

சுக்ரன் கேந்த்ரம், த்ரிகோணம், லாப ஸ்தானம் இவைகளில் பலம் பெற்றிருக்க விசேஷமான போகத்தை அளிப்பான். ப்ராஹ்மணன் மூலம் தன வரவு, கோமஹிஷ்யாதி லாபம், புத்ரோத்ஸவம், வீட்டில் கல்யாணம், ராஜ ஸம்மானம், அதிக சுகமுண்டாகும். தன் விடு, உச்ச கேந்த்ரம், உச்ச நவாம்சம், ஸ்வ நவாம்சம், சுபரின் சேர்க்கை, பார்வை பெற்றிருக்க, வாஹன

லாபம், ராஜ ஸம்மானம், தன வரவு, நூதன க்ருக நிர்மாணம், நிதயமாக நல்ல அறுசுவை போஜனம், களத்ர-புத்ர விபவம், மித்ரனுடன் போஜனம், அன்னதானஞ் செய்தல், தானதர்மாதிகள், வஸ்த்ர பூஷண லாபம், க்ருஷியினால் அதிக லாபம், விவாகம், உபநயனம், அன்ய ஸ்திரீ போகம், ஸத்கதா சிரவணம் இவையுண்டாகும். 6, 8, 12 வாஸம், சேஷுதல், சத்ரு க்ஷேத்ர வாஸம், சனி, செவ்வாய் ராகுவுடன் சேர்ந்திருக்க அந்த புக்தியில் பிரபல ரோகத்தைச் செய்யக் கூடும். எதிர்பாராத கலகம், பித்ரு மாத்ரு வியோகம், பந்து ஜன நாசம், ஜனங்களின் பிடை, ஜ்ஞாதி கலகம், தனக்கும் யஜமானனுக்கும் அபாயம், களத்ர-புத்ர பிடை, சூலரோகம், கடன் வாங்கும் பொருள்களால் கஷ்டம், தன நாசம், பந்தனம், ஸ்தான நாசம், மனை வியாதி முதலியன நடக்கும். தசாநாதனுக்கு கேந்த்ரம், த்ரிகோணம், லாப ஸ்தானம், தன ஸ்தானங்களிலிருக்க க்ஷேத்ர லாபம், அதிக சுகம், வஸ்த்ரம், படுக்கை லாபம், கான வித்யானுபவம், குடை, சாமரம், வாத்யம், முதலியவைகளின் லாபம், அதிகார மேன்மை மித்ர லாபம், தன லாபம் முதலியன உண்டாகும். தசாநாதனுக்கு 6, 8, 12-களில் அல்லது பாபருடன் சேர்ந்திருக்க விஷம், அக்னி, அரசர், திருடர்களால் பயம், மூத்ர க்ருச்ச்ர ரோகம், விரணபாதை, சஸ்த்ர பிடை, மனத்துக்கம், தன ஹானி, ப்ரமேகம், ரக்த ரோகம், கெட்ட ஆகாரம், தலைவலி, சிறைப் பிரவேசம் முதலியன நடக்கும். 2-7-க்கு அதிபதியாஇல் தார புத்ராதி பிடை, சரீர பிடை, அப மிருத்யுவும் ஏற்படும். துர்கா லக்ஷ்மி ஜபம், சுக்ர சாந்தி முதலியன செய்யின் அபம்ருத்யு விலகி விடும்.

ராகு தசை சூரிய புக்தி மாதம் 10, நாள் 24.

சூரியன் உச்ச விடு, தன் விடு, கேந்த்ரம், த்ரிகோணம், லாப ஸ்தானம், உச்சாம்சம், ஸ்வாம்சம், சுபாம்சம், சுபஷட்வர்கம்-இவைகளிலிருந்தாலும், சுபஸம்பந்தம், சுபவீக்ஷணம் பெற்றாலும், ராஜ ப்ரீதி, சுபம், தனதான்ய விருத்தி, சிறிது ஸௌக்யம், சிறிய க்ராமத்துக்கு அதிபதியாதல், சிறிது லாபம் ஏற்படும். லக்ன நவமாதிபர்களுடன் சேர்ந்திருந்தாலும், தசமாதிபனுல் பார்க்கப் பட்டாலும், ராஜாசிரயம், கீர்த்தி, அன்ய தேசத்துக்கு அடிக்கடி செல்லுதல், உத்யோக லாபம், புத்ர விவாஹ ப்ராப்தி, வன வஸ்துக்களால் தன லாபம், சத்ரு நாசம், ஆதிபத்யம், கஜாச்வ

வஸ்த்ராபரண லாபங்களுமுண்டாகும். தசாநாதனுக்கு 6, 8, 12 ஈச க்ஷேத்ரங்களிலிருந்தாலும், பாப ஸம்பந்தம் வீக்ஷணம் பெற்றாலும், ஜ்வரம், அதிஸாரம், கலகம், ராஜ பயம், பிரயாணத்தில் சத்ரு வ்ருத்தி, சோராக்நி ரூப பீடை, அன்ய தேச கமனம், பந்து நாசம், மனோரோகம், யத்ன கார்ய விக்னம், ராஜ த்வார விரோதம் முதலியன உண்டாகும். தசாநாதனுக்கு 3, 4, 5, 7, 9, 10, 11-மிடங்களிலிருக்க அன்ய தேசத்தில் அரச பகுமானம், கல்யாணம், சுபப்ராப்தி ஏற்படும். 2, 7-க்கு அதிபனுதல் மகாரோக மேற்படும். சூரிய சாந்தி செய்ய தோஷம் விலகும்.

ராகு தசை சந்த்ர புக்தி வருஷம் 1, மாதம் 6.

சந்த்ரன் ஸ்வக்ஷேத்ரம், உச்ச க்ஷேத்ரம், 1, 4, 7, 10, 5, 9, 11-மித்ர க்ஷேத்ரம், சுபஸம்பந்தம், குரு யோகம் அல்லது வீக்ஷணம், சுபநவாம்சம், சுபவர்கம் இவைகளை யடைந்து பூர்ண சந்த்ரனுகவு மிருந்தால் அரசனுதல், ராஜ பூஜை, ஆரோக்யம், ஆபரணம், ஸ்திரீ, புத்ராதி ஸம்பத் ப்ராப்தி, அச்வ லாபம், க்ருக க்ஷேத்ராபிவிருத்தியுண்டாகும். தசாநாதனுக்கு 4, 9, 7, 10, 11-இவைகளிலிருக்க லக்ஷ்மீ கடாக்ஷம், க்ருகத்தில் கல்யாணம், யத்ன கார்ய ஸித்தி, தன-தான்ய சுகங்கள் சுற்றார்த்தி, ராஜ சன்மானம், தேவ்யாராதனம், உத்யோக லாபம், ரத்ன-பூஷணம் வாங்குதல், முயற்சியால் அதிக பலன், க்ருகத்தில் பசு விருத்தி, ராஜ த்வாரத்தில் கார்ய ஸித்தி, மனதுக்கு ஆனந்தம் முதலியன ஏற்படும். 6, 8, 12, பாப க்ஷேத்ரம், நீச க்ஷேத்ரம், பாப க்ரக ஸம்பந்தம் பெற்றாலும் தசாநாதனுக்கு 6, 12-ல் தன-பாக்யாதிபர்களுடன் சேர்ந்திருந்தாலும் யத்ன கார்ய நாசம், புலி பிசாசு முதலியவைகளின் பீடை, க்ருக க்ஷேத்ராதி நாசம், மார்க்கத்தில் திருடர் பயம், அதிகமாக வ்ரணமுண்டாதல், மஹோதரம், அகஸ்மாத் கலகம், மான ஹானி, அதிகமான பயம், ஸ்தானத்தினின்றும் நழுவுதல், மனோ துக்கம், பிரயாணத்தில் காரிய நாசம், விரணம், பிரேத பாதை, பந்து நாசம் முதலியன உண்டாகும். 2, 7-க்கு அதிபனுதல் அபம்ருத்யு பயம், வெண்மை நிறமான பசு, எருமை தானஞ் செய்ய சுகமேற்படும்.

ராகு தசை செவ்வாய் புக்தி வருஷம் 1, நாள் 18.

செவ்வாய் கேந்த்ரம், த்ரிகோணம், லாப ஸ்தானம், உச்ச க்ஷேத்ரம், ஸ்வக்ஷேத்ரம், சுபஸம்பந்தம் இவைகளைப் பெற நஷ்ட

த்ரவ்யாதி லாபம், க்ருஹ க்ஷேத்ர வ்ருத்தி, இஷ்ட தேவதா ப்ரஸாதம், ஸந்தானம், சுகபோஜனம், சிக்ர போஜ்ய வஸ்துவால் அதிக ஸௌக்யம், ஆபரணம், அச்வ லாபம், வஸ்த்ர லாபம் உண்டாகும். தசாநாதனுக்கு கேந்த்ரம், த்ரிகோணம், 3, 11-இவைகளிலிருக்க சிவப்பு வஸ்த்ரம் முதலியன கிடைத்தல், பிரயாணத்தில் ராஜ தரிசனம், பூமி லாபம், சத்ரு ஹானி, தலைவனுதல், சுகம், ப்ராத்ரு மூலமான தன வரவு, க்ருஹ நிர்மாணம், புத்ர லாபம், அதிக உத்ஸாகம், பலவழியிலும் தன வரவு, புத்ர வர்கங்களில் கல்யாணம், தன் பிரபுவுக்கு அதிக சுகம் அல்லது ப்ரபு மூலமாக தனக்கு ஸுகம், காடு, கிணறுகளின் நிர்மாணம், தேவதாராதனம் இவைகள் ஸம்பவிக்கும். தசாநாதனுக்கு 6, 8, 12, பாப ஸம்பந்தம் பெற சிறை ப்ரவேசம், விரணம், அக்னி, ஜ்வராதி பீடை, களத்ர-புத்ர ஹானி, ப்ராத்ரு பீடை, ஸ்தான சலனம், பந்து நாசம், வியவஹாரத்தில் பொருளழிதல், திருடன், நெருப்பு, புண்களால் பயம், பந்து விரோதம், ப்ராத்ரு வர்க ஜனங்களுக்கு அரிஷ்டம், மேலிருந்து விழுதல் இவைகள் நடக்கும். ஆரம்பத்தில் துக்கம், நடுவிலும், முடிவிலும் ஸௌக்யம். 2, 7-க்குடையவனுதல் தேஹ ஜாட்யம், அதிக பயம் ஏற்படும். இதற்குப் பரிகாரமாக விருஷபம், பசு இவைகளைத் தானம் செய்ய தோஷம் நீங்கி சுகமுண்டாகும்.

குரு தசையின் பொதுப் பலன்.

பரமோச்ச பாகத்திலிருக்கும் குரு தசையில் ராஜ்ய லாபம், அதிக ஸௌக்யம், கீர்த்தி, மனோ விலாசம், கஜாச்வ ஸம்பத் லாபம், அதிபதியாதல் இவைகள் நடக்கும். உச்ச க்ஷேத்ரத்திலிருக்க பாக்ய விருத்தி, அரச மர்யாதை, அன்ய தேசம் செல்தல் ஆதிபத்யம், துக்கத்தால் வாட்டம் இவைகளையுமடைகிறான். உச்சத்திலிருக்கும் க்ரஹத்துடன் ஸம்பந்தம் பெற அதிக சுகம், கோபுராதி நிர்மாணம், ராஜ பூஜை ஏற்படும். அதிநீச பாகத்திலிருக்கும் (மகரம் 5-வது பாகம்) குரு, க்ருஹ புத்ராதி நாசம், அன்யோன்ய வைரம், க்ருஷி நாசம் அடிமையாதல் இவைகளை அளிப்பார். நீசத்திலிருக்கும் க்ரஹத்துடன் சேர, மனோரோகம், அடிமையால் அபவாதம், புத்ர விரோதம் முதலியன உண்டாகும். அதிமித்ர ராசியை அடைந்த குரு தன் தசையில் ராஜ பூஜை,

மிருதங்க பேரீ வாத்ய, வாஹன கோஷம், வேறு திக்கிலிருந்து உண்டான எல்லா பாக்யத்தையுமளிக்கிறார். மித்ர க்ஷேத்ரத்தை அடைய அரசஸ்நேகம், கீர்த்தி, வித்யையில் ஜயம், ஆஹார வசதி, சுகந்தமான மண், வஸ்த்ரம், பரோபகாரம் முதலியன உண்டாகும். ஸமக்ஷேத்ரத்தை அடைய அரசர்களால் அளிக்கப்படும் பாக்யம், க்ருஷி, தனம், பசு, பூமி, மனோவிலாசம், மித்ர, வஸ்த்ர, அலங்கார, ஆபரணாதி லாபம் முதலியவைகளை அடைவான். சத்ரு க்ஷேத்ரத்தில் வசிக்க க்ஷேத்ர மூலம் தன லாபம், சயனம், வஸ்த்ரம், அரச பருமானம், ஸ்த்ரீ-புத்ர-ப்ருத்ய-ப்ராதாக்கள் வழியாக பீடையும் உண்டாகும். அதிசத்ரு ராசியிலிருக்க துக்கம், விஷ பயம், பூமி, தனம், களத்ரங்களின் நாசம், சோராக்னி க்ருப பிடைகளுண்டாகும். ஆரோஹத்திலிருக்க மிக நல்ல பலன்கள் உண்டாகின்றன. அவரோஹத்திலிருக்க நற்பலன், நீயபலன் களிரண்டும் ஒவ்வொரு தடவை மட்டில் அனுபவிப்பான். மூல த்ரிகோணம், ஸ்வக்ஷேத்ரங்களிலிருக்க நற்பலனேற்படும். 1, 4, 5, 7, 9, 10 இடங்களிலிருக்கும் குரு தசையில், க்ருஹ க்ஷேத்ர தனாதி லாபங்கள், அச்வாதி வாஹன ப்ராப்தி, வித்யாபிவிருத்தி, வஸ்த்ர பூஷணாதி லாபம், பலவித ஸௌக்யங்களையுமடைகிறான், பாபருடன் சேர்ந்த குரு தசையில் மனதில் பாபபுத்தியுடன் வெளியில் நற்காரியத்தைச் செய்பவனாகவும், பூமி, க்ருஹம், அர்த்தம், புத்ரர்கள் மூலம் ஸௌக்யத்தையும் அடைகிறான். பாப வீக்ஷணம் பெற சிறிது சுகம், தைரியம், சில விடத்தில் கீர்த்தி, சில விடத்தில் தனம் இவைகளைப் பெறுகிறான், தசையின் முடிவில் நாசமேற்படும், சுபருடன் கூடிய தசையில் அரசர்களுடன் வாஹன மேறுதல், மிருதுவான வஸ்த்ரம், தானம் அல்லது மரியாதையால் தன ப்ராப்தி, யக்ஞாதி காரணம் முதலியவைகளை அடைகிறான். சுபவீக்ஷணம் பெற அன்ய தேசத்தில் அரசர் மூலம் தனாகமம், தேவப்ராஹ்மணாராதனம், கீர்த்தாபிஷேகங்களை அடைகிறான். உச்சாம்சத்திலிருக்க பாக்ய விருத்தி, பவழம், முத்து, ரத்னங்களின் லாபம், எல்லோரிடத்திலும் ஸ்நேக பாவம், ஸௌக்யங்களை யடைவான். நீசாம்சத்திலிருக்க ராஜ பயம், குன்மம், காலில் கொப்புளம், இவைகளும் ஸ்தான சலனம், பந்து விரோதம், தன் வம்சத்தவர், சோரன், அக்னி, அரசன் இவர்களால் பிடைகளையும் அடைகிறான். நிகள

த்ரேக்காணத்திலிருக்கும் குரு தசையில் பந்தனம், சிறைவாஸம், தங்கத்தை விற்பது முதலான அசுப பலன்கள் நடைபெறும், குரு தசையில் ஆதிமத்யங்களில் நற்பலனும், அந்தத்தில் கஷ்ட முமேற்படும். குரு, ராசியில் உச்சனுடனும் நவாம்சத்தில் நீசனுடன் கூடைக்கும் பாக்யங்கள் கிடைக்காது. ராசியில் நீசனுடன் அம்சத்தில் உச்சனுயிருக்க பாக்ய ஹானி ஏற்பட்டாலும் சுகத்தையே அடைவான். வக்ரியான குரு தசையில் அர்த்த விருத்தி, புத்ரகளத்ர சுகம், யுத்தத்தில் ஜயம், ப்ரபு ஸ்நேகம், வாக் விலாஸம் முதலியன ஏற்படும். ஸூரியனுடன் சேர்ந்த குரு தசையில் ஜ்வரத்தால் சிரமப்படுபவனாகவும், க்ருசனாகவும், கழுத்துக்கு மேல் ஏற்படும் ரோகங்களால் சிரமப்படுபவனாகவும், நீயவொழுக்கத்தால் விலக்கப்பட்ட பார்யையை யுடையவனாகவுமாவான்.

குரு தசை குரு புக்தி வ 2, மீ 1, நாள் 18.

குரு உச்ச க்ஷேத்ரம், ஸ்வக்ஷேத்ரம், கேந்த்ர த்ரிகோணங்கள், சுபக்ரஹ ஸம்பந்தமிருக்க ப்ராம்மண ப்ரபு தர்சனம், அநேக ராஜாக்களுக்கு அதிபனாதல், ஸம்பத்துள்ளவன், ராஜ பூஜிதன், பசு முதலிய பிராணிகளின் விருத்தி, வஸ்த்ர வாஹனாபரணாதி லாபம், நூதன க்ருஹ நிர்மாணம், உத்யோக லாபம், கல்யாணாதி வைபவம், விசேஷபாக்ய லாபம், ஸத்கதா சிரவணம், ப்ராம்மண ப்ரபு ஸம்மானம், ஸமான ப்ரபு ஸமாகமம், வியவஹாரத்தில் ஜயம், தார-புத்ராபிவிருத்தி, மேற்கு திக்கில் பிரயாணம், பந்து தர்சனம், உத்ஸவாதி தர்சனம் முதலியன நடைபெறும். நீசாம்சம், நீச ராசி, 6, 8, 12-இவைகளிலிருந்தாலும், பாப க்ரஹ ஸம்பந்தம் பெற்றாலும், ஜ்ஞாதி பிடை, எதிர்பாராத கலகம், பந்து நாசம், மனக் கவலை, நீச ஸ்த்ரீவாஸம், துக்கம், தகப்பன் வர்கத்திய பந்துக்களுக்கு அரிஷ்டம், காரிய விக்னம், தன வியயம், புத்ர சோகம், ஸ்தான நாசம், வாத ச்லேஷ்மம் முதலிய ரோகங்கள், களத்ர தோக பிடை, அன்ய க்ராம வாஸம், அன்ய தேச யாத்ரை, ராஜ பயம், தன தான்யாதி நாசம், தன் பிரபுவுக்கு அபம்ருத்யு தோஷமும் நடைபெறும். குரு 7-க்கு அதிபனாயில் தோக பாதை ஏற்படும். இத்தோஷம் விலக சிவ ஸஹஸ்ரநாம ஜபம், ருத்ர ஜபம், கோதானம் இவைகள் செய்து இஷ்ட ஸித்தி பெறலாம்.

குரு தசை சனி புக்தி ஒ 2 மீ 6 நாள் 12.

சனி உச்ச க்ஷேத்ரம். ஸ்வக்ஷேத்ரம். மித்ர க்ஷேத்ரம். 4, 5, 7, 9, 10, 11-இவ்விடங்களில் பலம் பெற்றிருக்க ராஜ்ய லாபம், அதிக ஸௌக்யம், வஸ்த்ராபரண ப்ராப்தி, தன தான்யங்களின் ஸம்ருத்தி, ஸ்த்ரீ லாபம், க்ருஹ பூம்யாதி லாபம், மேற்பட்ட வியாபாரம் அமைவது, ராஜ கார்ய ஸித்தி, புத்ரோத்பத்தி, வாஹன லாபம், சத்ரு நாசம், நீச ஸ்திரீ போகம், க்ருஹத்தில் கல்யாணம் முதலிய வைபவங்கள், ராஜ ஸம்மானம், புத்ர மித்ரர்கள் ஸௌக்யம், நரவாஹன லாபம், நீலவர்ணமான வஸ்த்ரம், குதிரை முதலிய வைகளின் லாபம், மேற்கில் யாத்திரை, ராஜ தரிசனம், வியாபாரத்தில் தன லாபம், வாஹன லாபம், ராஜ ப்ரீதி முதலியன ஏற்படும். 6, 8, 12-களில் வாஸம், நீசனுதல், அஸ்தங்கதனுதல், சத்ரு விட்டிலிருத்தல் இவைகளால் தன தான்ய நாசம், ஜ்வரம், மனோ விசாரம், ஸ்த்ரீ புத்ராதி பீடை, விரணம், உஷ்ணம் அதிகமாதல், வீட்டில் அசுபம் நடத்தல், ப்ருத்யாதி பீடை, கோமஹிஷ்யாதி ஹானி, பந்துக்களின் விரோதம், மானக் குறைவு, அன்ய தேசம் செல்தல், கடன் தொல்லை முதலியன உண்டாகும். தசாநாதனுக்கு கேந்த்ர கோண லாப தன ஸ்தானங்களிலிருக்க பூமி, பொருள், புத்ரன், சுகம், பசு, எருமை-இவைகளின் லாபமும், சூத்ரன் மூலம் பண வரவுமேற்படும். தசாநாதனுக்கு 6, 8, 12-ல் அல்லது பாப ஸஹவாசமிருந்தால் தன தான்யங்களின் குறைவு, பந்து மித்ரர்களுடன் வைரம், உத்யோக ஹானி, சரீர பீடை, தன ஜனங்களுக்கு பயம் உண்டாகும். 2, 7-க்குடையவனுகில் அபம்ருத்யு தோஷமேற்படும். பரிஹாரமாக விஷ்ணு ஸஹஸ்ரநாம ஜபம், கருப்பு நிறப்பசு, எருமை தானங்கள் செய்யவும், ஆரோக்ய மேற்படும்.

குரு தசை புத புக்தி ஒ 2 மாதம் 3 நாள் 6.

புதன் கேந்த்ர திரிகோண லாப ஸ்தானங்களிலோ, உச்ச ஸ்வக்ஷேத்ரங்களிலோ, தசாநாதனுடன் சேர்ந்தோ இருக்க, பொருள் வரவு, சரீர ஸௌக்யம், தன அதிகாராபிவிருத்தி, இஷ்டம் நிறைவேறல், வாஹனம், வஸ்த்ரம், பசு முதலியன வற்றின் பெருக்கு, கல்யாண வைபவம், இரண்டு தாயுள்ளவனுதல் முதலியன உண்டாகும். புதன் பார்க்க சத்ரு விருத்தி, சுகக் குறைவு, முயற்சிக்குகந்த பலனில்லாமை, ஜ்வரம், அதிசாரம்

இவையேற்படும். தசாநாதனுக்கு கேந்த்ரம் அல்லது த்ரிகோணம் லாப ஸ்தானம், உச்ச ஸ்தானம்-இவைகளிலிருக்க தன் ஊரில் தன லாபம், புண்ய கதை கேட்பது ஸம்பவிக்கும். தசாநாதனுக்கு 6, 8, 12-ல் அல்லது பாப சகவாசமிருந்து சுபவீக்ஷணமில்லாமலிருக்க தன தான்ய ஹானி, வேறு ஊர் செல்தல், போகும் வழியில் திருடர் பயம், வ்ரணம், அக்னி, கண் வியாதி, பல தேசங்களினின்றும் விடுபடுதல், மாதாவுக்குப் பீடை, மனோ வியாதி, வாத-சிலேஷ்ம ஸம்பந்தமான வியாதிகள் ஏற்படுகின்றன. 6, 8, 12-ல் அல்லது பாப ஸம்பந்தமிருக்க எதிர்பாராத கலகம், கொடுமை பேசுதல், பிராணி நாசம் வியவஹாரம், அபம்ருத்யு பயம், பந்தனம், கார்ய நாசம், களத்ர புத்ர பீடை, மரண பயமும் ஏற்படும். சுப வீக்ஷணம், ஸம்பந்தம் பெற களத்ர ஸௌக்யம், த்ரவ்ய லாபம் உண்டாகும். புக்தியின் ஆரம்பத்தில் சுபம், அந்தத்தில் அஸௌக்ய மேற்படும். 2, 7-க்குடையவனுனல் அபம்ருத்யு தோஷம், விஷ்ணு ஸஹஸ்ரநாம ஜபம், புதப்ரீதியான தானம், புத சாந்திகளைச் செய்ய வேண்டும். உத்தமமான எல்லா ஸௌபாக்யங்களுமுண்டாகும்.

குரு தசை கேது புக்தி மாதம் 11, நாள் 6.

கேது கேந்த்ரத்தில் சுப க்ரஹத்துடன் வலிக்க மற்றவர் ஸௌக்யத்தைத் தான் அனுபவிப்பது. பொருள் வரவு, கெட்ட அன்னத்தைப் புசித்தல், அன்யர் வீட்டில் சாப்பிடுதல், சரீர தான்ன போஜனம், நீச்செயலால் தன வரவு, அபூர்வ வஸ்து ப்ராப்தி, ஆச்சர்யமான ஆபரண லாபம் உண்டாகும். 3, 6, 10, 11-இடங்களிலிருக்க அதிகாரத்தின் மேன்மையுண்டாகும். ராஜ ப்ரீதி, சத்ரு க்ஷயம், பொருள் வரவு, நற்கதை கேட்டல், இஷ்ட கார்ய ஸித்தி ஏற்படும். 4, 9-ஸ்தானங்களிலிருந்தாலும், இந்த ஸ்தானாதிபதிகளுடன் சேர்ந்தாலும், பித்ரு வர்க வழியாக பொருள் லாபம், வாஹன வஸ்த்ராதி லாபங்களுமேற்படும். தசாநாதனுக்கு 4, 5, 9, 10-இடங்களிலிருக்க நர வாஹன லாபம், கஜாச்வ வஸ்த்ராபிவிருத்தி, இஷ்ட கார்ய ஸித்தி, முயற்சிக்கு அதிகமான பலன், பசு, எருமை, தனம்-இவைகளின் லாபம், துருஷ்கன் மூலமாக தகப்பனுக்கு வஸ்த்ராதி லாபம்-இவையுண்

டாகும். 6, 8, 12-ல் அல்லது பாபியோடு சேர்ந்திருக்க ராஜ கோபம், இதனால் தன நாசம், பந்தனம், ரோகம், பலஹானி, பித்ரு-ப்ராத்ரு த்வேஷம், மனக்கவலை, விதவா கலகம், பித்ரு வியோகம், ஸ்தானத்திலிருந்து நழுவுதல், சிரோரோகம், நேத்ர ரோகம், விஷ ஜந்து பயம், க்ருஹ க்ஷேத்ராதி நாசம், மானக் குறைவு முதலியன ஏற்படும். 2, 7-ஸ்தானங்களிலிருக்க தேக பிடை யுண்டாகும். சாக தானம், ம்ருத்யுஞ்ஜய ஜபம், கேது சாந்திகளே பரிகாரமாகச் செய்யவும்.

குரு தசை சுக்ர புக்தி வருஷம் 2, மாதம் 8.

சுக்ரன் கேந்த்ர த்ரிகோண ஸ்வக்ஷேத்ரத்திலிருந்தாலும், தர்ம கர்மாதிபர்கள் அல்லது சுபரோடு சேர்ந்திருந்தாலும், மகா ராஜ ப்ரஸாதம், வாஹன வஸ்த்ராபரணாதி லாபமுண்டாகும், சுகாதிபனுடன் சேர்ந்து தன உச்ச மூல த்ரிகோண க்ஷேத்ரங் களிலிருக்க ரத்ன பூஷண லாபம், தாஸீ ஸங்கமம், ஸங்கீத வித்யா நுபவம், சய்யா லாபம், சுகம், வடக்கில் பிரயாணம், மித்ர தர்சனம், இழக்கில் பிரயாணம் செய்து வர தன லாபம், கல்யாணம், பித்ரு மாத்ரு சுகம், தேவதா குரு பக்தி, அன்ன தானம், வனகூபங்களின் நிர்மாணம், ஸ்திரீ மூலம் தன லாபம், அதிகாராபிவிருத்தி, வித்வான்களின் ஆகமனம், அழகுள்ள வீடு, பூமிகளின் லாபம், க்ஷீரான்ன போஜனம் முதலியன கடை பெறும். சுக்ரன் லக்னம் அல்லது தசாநாதனுக்கு 6, 8 12-ல் வாஸம் அல்லது நீசனுடன் கூடி-பந்து வைஷம்யம் ஸ்த்ரீமூல கலகம், ஸஹோதரனுடன் விவாதம், அன்ய தேசம் போதல், பசு நாசம், ராஜ பயம், மனோ துக்கம், பொருட் செலவு ஏற்படும். சனி ராகு குஜர்களுடன் சேர கலகம், ராஜ பிடை, ஸ்திரீ மூலம் கலகம், மாமனுர் வழியாக சண்டை, ப்ராத்ரு விரோதம், தன தான்ய ஹானி உண்டாகும். தசாநாதனுக்கு 4, 7, 10, 2, 9-களிலிருக்க தன தான்ய லாபம், நூதன ஸ்திரீ லாபம், ராஜ தர்சனம், வாகன-புத்ர-பசு லாபம், அதிக சுகம், தேக வாத்யானுபவம், வித்வான்களின் ஸமாகமம், திவ்யான்ன போஜனம், பந்துஜன போஷணம்-இவைகள் நடக்கும். சுக்ரன் 2, 7-க்குடையவனுகவோ அல்லது இவைகளின் அதிபர்களின் சேர்க்கை பார்வை யிருக்க க்ரய விக்ரயங்களில் வைஷம்யம், கடன் தொல்லை, ஸ்திரீமூலம் பிராண கஷ்டம், ராஜ தண்டத்தால் திரவிய நாசம், மருந்நீடு

ப்ரயோகத்தால் ப்ராண பயம் இவைகள் ஸம்பவிக்கும். இதற்கு சுக்ர சாந்தி, வெண்மையான பசு தானம், துர்காஸூக்த ஜபம் முதலியனவைகளைப் பரிகாரமாகச் செய்தல் வேண்டும்.

குரு தசை சூரிய புக்தி மாதம் 9, நாள் 18.

சூரியன் ஸ்வக்ஷேத்ர, உச்ச க்ஷேத்ரங்களில் அல்லது ஜன்ம லக்னத்துக்கும் தசாநாதனுக்கும் கேந்த்ர கோண லாப ஸஹோதர பாக்ய ஸ்தானங்களில் பலத்துடனிருக்க தன லாபம், ராஜ ஸம் மானம், வித்யா விவாகாதிகள், க்ராம, பூமியாதி லாபம், யுத்தத் தில் ஜயம், மித்ர ப்ரபுமூலம் சுகம், காடு க்ராமங்களில் சுற்றுதல், தத்வ சாஸ்த்ர ப்ரவசனம், வியாபாரத்தில் தன லாபம், ராஜ ப்ரீதி இவை நடைபெறும். 6, 8, 12 வாசம், நீசனுதல், சனியோடு சேர்க்கை ஏற்பட, சிரோ ரோகம், ஜ்வர பிடை, கார்ய நாசம், பந்து வைரம், எதிர்பாராத கலகம், களத்ர-புத்ர பிடை, கடன் தொல்லை, தனஹானி, பித்ரு வர்கங்களுக்கு அரிஷ்டம், ஜ்ஞாதி நாசம், மனோ ரோகம் ஏற்படும். 2, 7-க்கு அதிபனுகில் சரீர பிடை, தோஷ நிவ்ருத்திக்கு ஆதித்ய ஹ்ருதய பாராயணம், ஸ்வர்ண சூர்யப்ரதிமா தானம் இவைகளைச் செய்ய ஆரோக்ய மேற்படும்.

குரு தசை சந்த்ர புக்தி வருஷம் 1, மாதம் 4.

சந்த்ரன் கேந்த்ரம் லாபம் த்ரிகோணம். உச்ச க்ஷேத்ரம், ஸ்வ க்ஷேத்ரம், குரு ஸம்பந்தம், வீக்ஷணம், தசாநாதனுக்கு சுபராசியில் வாசம் இவைகளேற்பட்டாலும், பூர்ண சந்த்ரனுய் பலம் பெற்று லும், ராஜ ஸம்மானம், தார-புத்ராதிவ்ருத்தி, ஸத்கார்யம், கீர்த்தி, க்ஷீரான்ன போஜனம், மகாராஜ ப்ரஸாதத்தால் ஸர்வ ஸௌக்யம், தன வரவு, வாஹன வஸ்த்ர லாபம், க்ருகத்தில் கோ தனாதி விருத்தி உண்டாகும். 6, 8, 12-லோ, துர்பலனுகவோ, நீச னுகவோ, பாப ஸம்பந்தம் பெற்றோ இருக்க, பால் மூலம் சத்ரு பயம், சோராக்னி ந்ருப பிடை ஏற்படும். தசாநாதனுக்கு 6, 8, 12-லோ, துர்பலனுகவோ இருக்க, மாத்ரு நாசம், அநாசாரம், தாய் வழி பந்து விநாசம், மான-அர்த்த-பந்துநாசம், அன்ய தேசத்திலிருந்து புறப்படுதல், ந்ருப சோர பிடை, ஜ்ஞாதி பிடை, அம்மாவின் வியோகம், மாத்ரு பிடைகள் நடக்கும். 2, 6 அல்லது 7-க்கு உடையவனுகில் தேக பிடை உண்டாகும். துர்காசூக்த ஜபம் செய்யவும்.

குரு தசை செவ்வாய் புக்தி மாதம் 11. நாள் 6.

செவ்வாய் கேந்த்ர த்ரிகோண, உச்ச-ஸ்வக்ஷேத்ர. ஸ்வ நவாம்ச உச்ச நவாம்சங்களிலிருக்க வித்யா விவாஹ காரியங்கள், க்ராம பூமியாதி லாபம். ஸர்வ கார்யார்த்த ஸித்தி. ஸாமர்த்ய மேற்படும். தசாநாதனுக்கு கேந்த்ரகோண தன லாப ஸ்தானங்களிலோ, சுப ஸம்பந்தம். வீக்ஷணம் பெற்றோ இருக்க தனதான்யாதி விருத்தி, அன்னதான விபவம். ராஜ ப்ரீதி, சுபமுண்டாதல், ஸ்திரீ ஸௌக்யம், புத்ர ப்ராப்தி. புண்யதீர்த்த பலன் உண்டாகும். சுபக்ரக ஸம்பந்தம், சுபாம்சம். சுபஷட்வர்கம் பெற ஜயம். ஸர்வ கார்யார்த்த ஸித்தி. வாஹன வஸ்த்ராபரணாதி லாபம். ராஜாச்ரயம், புத்ரோத்ஸவம், பந்து கல்யாண தர்சனம். அதிகார மேன்மை. பிரயாணம். மித்ர தர்சனம் ஸம்பவிக்கும். 6. 8. 12-ல் வாசம். நீசனுதல், பாப ஸம்பந்தமிருக்க; நானாரோக பயம். துக்கம். ஸ்தான நாசம், தனக்ஷயம், ராஜ த்வேஷம், பந்து நாசம், உயர்ந்த இடத்திலிருந்து கீழே விழுதல், விரணம். அக்னி, ஜ்வரம் முதலியதால் பிடை. கடன் இம்சை, மனக்கவலை முதலியன நடக்கும். புக்தியின் முன்பாதியில் துக்கமும் பின்பாதியில் சுகமுமுண்டாகும். 2. 7-க்கு அதிபனுதில் தேக நாட்யம், மனோரோகங்களேற்படும். விருஷப தானம் செய்தால் கஷ்டங்கள் நீங்கி சுகம் பெருகும்.

குரு தசை ராகு புக்தி வருஷம் 2. மாதம் 4. நாள் 24.

ராகு உச்ச கேந்த்ர மூலத்ரிகோண பாக்ய ஸ்தானங்களிலோ, சுபாம்ச சுபஷட்வர்க உச்சாம்ச லாப ஸ்தானங்களிலோ, கேந்த்ராதிபனுடன் சேர்ந்தோ இருக்க முதல் ஐந்து மாதங்களில் தனதான்யாகமம். பிறகு நகரம் கிராமங்களின் அதிகாரம், யவன ப்ரபு தர்சனம். க்ருஹத்தில் கல்யாண வைபவம். படைத் தலைமை வஹித்தல். தூர யாத்ரை செய்தல், புண்ய தர்ம ஸங்க்ரஹம், ஸேது ஸ்நான பல லாபம். சுகத்தை அளிக்கும் இஷ்ட ஸித்தி, ராஜ த்வாரத்தில் சுபம், ரத்ன பூஷண லாபம். தென்மேற்கு, மேற்கு திக்குகளில் பிரயாணம். பந்து தர்சனம் இடைக்கும். 6. 8. 12-லோ, நீசனுகவோ, தசாநாதனுக்கு 6. 12. (8) லோ இருந்தாலும். பாப ஸம்பந்தம் பெற்றாலும், புண்ய கர்மங்களின் நாசம். திருடன், ஸர்பம், விரணம் இவைகளால் பயம், ராஜ வைஷம்யம், க்ருஹத்தில் கர்ம கலாபங்களால் கலக்கம், களத்ர மரணம், பாண்டு ரோகம், மனக் கஷ்டம். ஸ்வஜன மரணம், ப்ரார்த்ரு விரோதம். ஜ்ஞாதி கலகம். க்ருஹத்தில் அசுப கார்யங்கள், துஸ்ஸ்வப்னத்தால் பயம். திடீரென ஏற்படும் பயம், ஏவல், பில்லி, சூனியம் முதலியவைகளால் ரோகமும் ஏற்படும். 2. 7-விருக்க அபம்ருத்யு ஏற்படும். இத்தோஷ நிவிருத்திக்கு ம்ருத்யுஞ்ஜய ஜபம், சாக தானம் செய்ய நிச்சயமாக ஸௌபாக்யமுண்டாகும்.

சனி தசையின் பொதுப் பலன்.

அத்யுச்ச (துலாத்தில் 20 வது பாகம்) பாகத்திலிருக்கும் சனி தசையில் க்ராம ஸபா மண்டலாதிபத்யம். விநோத ஸ்வபாவம், பித்ரு நாசம், பந்து கலகங்களுண்டாகும். உச்சத்திலிருக்க தேச ப்ரம்சம், மனோ வியாதி, துக்கம், வியாபாரக் குறைவு, க்ருஷிஹானி, ராஜ விரோதம் முதலியன உண்டாகும். உச்சத்திலிருக்கும் க்ரஹத்தோடு சேர்ந்த சனி தசையில் அதிக சுகம், ஸ்வல்ப காலம் ஆதிபத்யம், க்ருஷி லாபம். புத்ர-தனங்களின் நாசம் ஏற்படும். நீசத்திலிருக்கும் சனி தசையில் களத்ர-புத்ர-ஸஹோதர நாசம், இருஷியினால் கஷ்டம், நீசாச்ரயத்தால் ஜீவனம் இவையுண்டாகும். நீசத்திலிருக்கும் க்ரஹத்துடன் சேர்ந்திருக்கும் சனி தசையில் அதிக பயம், ஏமாற்றம், அபவாதம், ஹீனத் தொழிலால் ஜீவனம் முதலியன நடக்கும். அதிமித்ரனான சனி தசையில் ஸௌக்யம். அரச பகுமானம், புத்ர தார தனங்களின் விசேஷங்கள், பசு, இருஷி, எருமை முதலிய வியாபாரம் உண்டாகும். மித்ர க்ஷேத்ரத்திலிருக்கும் சனி தசையில் செல்வங்களின் குணத்தை அறிந்தவனுவான். ஜ்ஞானம், பலம், ப்ரதாபம், துக்கம், பெரியவனுதல் இவைகளை அடைகிறான். ஸமக்ஷேத்ரத்திலிருக்க புத்ர-தார-மித்ர்களிடம் ஸமமான புத்தி. ப்ருத்யர்களுக்கு ஆபத்து. பந்துஜன வைரம். க்ஷயம்-வாதம்-பித்தங்களால் சரீர பிடை இவைகளைப் பெறுகிறான். சத்ரு நிரகத்தை அடைய, வைச்யனிடமிருந்து தனுவாப்தி, பூமி நாசம், இருஷி விகாசம், தன் நிலையிலிருந்து நழுவுதல், விரோதம், சரீர ரெமம், முதலியவை நடக்கும். அதிசத்ரு வீட்டிலிருக்க ஸ்தான ப்ரம்சம், பந்து விரோதம், நிருடர்களாலும், அரசர்களாலும் பயம், இடையூறுகள், ப்ருத்யர்களுக்காக களத்ர-புத்ர கோபம் ஏற்படும்.

ஆரோஹ தசையில் அரசனிடமிருந்து கிடைத்த பாக்யம், வியாபார லாபம், நிருஷி பூமி லாபம், பசு, குதிரை, வாஹனம், புத்ரன் களத்ரம் இவைகளின் லாபத்தை யுடைகிறான். அவ ரோஹ தசையில் தொழில் நாசம், களத்ர-புத்ர அர்த்த நாசம், ராஜ கோபத்தால் பாக்ய ஹானி அடிமையாதல் குதரோகம் (மூலம் பவுத்ரம் முதலியன) நேத்ர ரோகம் இவைகளை அடை கிறான். மூல த்ரிகோணத்திலிருக்க தேசாந்தர கமனம், வன வாஸம், பட்டம் பெறுதல், அதிபனாகுதல், புத்ர-களத்ர-ஜனதி களுடன் த்வேஷம் ஏற்படும். தன் விட்டிலிருக்க த்வேஷம், பலம், பௌருஷம், கீர்த்தி, ராஜாசிரயம், ஸ்வர்ண பூஷண, பூமி லாபம், தைரியம், ஸௌக்யம் இவைகளுண்டாகின்றன. கேந்திரத்தி லிருக்கும் தசையில் கலஹமூலம் ஆயாஸம், புத்ர-மித்ர-அர்த்த-தார-பந்துகளின் நாசம் ஏற்படும்.

சனி தசையில் சனி புக்தி வருஷம் 3, நாள் 3.

சனி மூல த்ரிகோணமான கும்பம், ஸ்வக்ஷேத்ரமான மகரம், உச்ச க்ஷேத்ரமான துலாம், 4, 5, 7, 9, 10, 11-இவைகளில் வாசம், ராஜ போகத்தை அளிக்கும் க்ரஹ யோகம், ஸ்வஜனவாம்சம், சுப ருடன் சம்பந்தம் இவைகளேற்பட உத்தியோக ப்ராப்தி, அதிக ஸௌக்யம், மஹா ப்ரபுவின் தயவால் காரிய ஸித்தி, ரத்ன பூஷ ணாதி லாபம், க்ருஹத்தில் சுப காரியங்கள், வாஹனம், வஸ்த்ரம், பசு முதலியவைகளின் லாபம், சத்ரு ஜயம், சுகம், பந்து மித்ரர்கள் மூலம் லாபம், தன் அதிகார விருத்தி, மேற்கு திசையில் பிரயா ணம், நீச வியாபார ஸித்தி, தைரியம், பந்துக்கள் க்ருஹத்தில் சுகம், கடன் வாங்குதல், ஸத் கதா ச்ரவணம், நாற்கால் பிராணி லாபம், க்ராம பூமியாதி லாபங்கள் உண்டாகும். 6, 8, 12-ல் வாஸம், நீசனுவது, பாப ஸஹவாஸம் ஏற்பட விஷ சஸ்த்ராக்னி களால் பிடை, ராஜ தண்டத்தால் தன ஹானி, ரக்தப் போக்கு, குன்ம ரோகம், அதிஸாரம், கடன் ஹிம்சை, சத்ரு பிடை, ஸ்தான நாசம், மனை வியாதி, களத்ர-புத்ர நாசம், க்ராம பூமிகள் நாசம், இவைகளுண்டாகின்றன. புக்தி மத்தியில் நிருடர்களின் உபத் ரவம், தேச த்யாகம், மனக் கவலையும், புக்தியின் முடிவில் க்ராம பூம்யாதி லாபமும் ஏற்படும். 2, 7-க்கு அதிபனுனல் அபம்ருத்யு உண்டாகுமாதலால் ம்ருத்யுஞ்ஜய ஜபம் செய்யவும்.

சனி தசை புத புக்தி வருஷம் 2, மாதம் 8, நாள் 9.

புதன் த்ரிகோணம், லாப ஸ்தானம், கேந்த்ரம் தனஸ்தானம், உச்ச க்ஷேத்ரங்களில் வாசம் அல்லது இந்த ஸ்தானாதிபர் களுடன் வாஸம், சுப க்ரஹ வீக்ஷணம் பெற, கொண்டாடப் படுதல், கீர்த்தி லாபம் வித்யாதனாகமங்கள், தன் இடத்தில் சுகமடைதல், வாஹனாதி லாபம், யாகம் முதலிய நற்காரியங்களின் ஸித்தி, ராஜ யோகாதிகள், உத்ஸாஹம், க்ருஹத்தில் கல்யாணம் நடத்தல், ஸேது ஸ்நான பலனடைதல், தீர்த்த யாத்ராதிகளை நடத்தல், வியாபாரத்தில் தன வரவு, புராண ச்ரவணம், அன்ன தானம் செய்தல், மிஷ்டான்ன போஜனம் இவைகள் கடைபெறும். லக்னத்துக்கு 6, 8, 12-ல் வஸித்தல், நீசனுதல், அஸ்தங்கத னுதல், சூரிய குஜர்களுடன் சேர்ந்திருத்தல், தசாநாதனுக்கு 6, 8, 12-ல் இருப்பு இவைகளால் ந்ருப சோராக்னி பிடை, தார-புத்ராதி பிடை, பந்தனம், அர்த்த ஹானி மன வியாதி, க்ராம-பூமி, க்ருஹங்களின் நாசம், மித்ரனும் சத்ருவாகும் குழ்நிலைகள் உண்டாகும். சிலர் புக்தியின ஆரம்பத்தில் நற்பலனும், பிறகு கஷ்ட பலனையும் சொல்கின்றனர். புதன் 2, 7-க்குடையவனுனல் சீர பிடையுண்டாகும். இவை நிவிருத்தியாக விஷ்ணு ஸஹஸ்ர நாம ஜபம், அன்னதானம் இவைகளைச் செய்யலாம். இது எல்லா ஸம்பத்தையும் அளிக்க வல்லது.

சனி தசை கேது புக்தி வருஷம் 1, மாதம் 1, நாள் 9.

கேது சுப ஸம்பந்தம், சுப வீக்ஷணம், சுபாம்ச சுப ஷட்வர்க வாஸம், யோக காரகருடன் சேர்க்கை, கேந்த்ரம், 3, 6, 10, 11-இடங்களில் வாஸம் அல்லது இந்த ஸ்தானாதிபர்களுடன் சேர்க்கை ஏற்பட, கல்யாணம் முதலிய சுப ப்ராப்தி, பூமி லாபம், சத்ரு நாசம், யத்ன கார்ய ஸித்தி, மித்ரன் மூலம் தன வரவு, தன் அதிகாராபிவிருத்தி, ரத்ன பூஷணாதி லாபங்களும் கடை பெறும். தசாநாதனுக்கு கேந்த்ரம், த்ரிகோணம், 6, 8, 12-லிருக்க எல்லாவற்றிலும் ஸமர்த்தன், தர்மத்தில் புத்தி, ஸௌக்யம், ப்ரபுக் கள் ஸமாகமம், ஏழ்மை, பந்தனம், பயம், ஸ்தான ப்ரம்சம், தன் ப்ரபுவுக்கு அதிக துக்கம், புத்ர-தாராதி நாசம் இவைகளுமுண் டாகும். லக்னாதிபன் சேர்க்கை பெற, முதலில் ஸௌக்யம், தன வரவு, கங்காதி தீர்த்த ஸ்நானம், தேவதா தரிசனம் முதலியன

நடைபெறும். லக்ன-தசாநாதனுக்கு 6 8. 12-லிருக்க அபம்ருத்யு பயம். கெட்ட போஜனம். குளிர் ஜ்வரம். அதிஸாரம். விரணம், சோர பிடை, களத்ர-புத்ர வியோகம். விதவா கலகம். சத்ருமூலம் த்ரவியச் செலவும் நடைபெறும். 2, 7-லிருக்க சரீர பிடை ஏற்படுகிறது. ம்ருத்யுஞ்ஜய ஜபம். மேஷ தானம் செய்ய அபம்ருத்யு பயம் நீங்கி சுகமுண்டாகும்.

சனி தசை சுக்ர புக்தி வருஷம் 3, மாதம் 2.

சுக்ரன் உச்ச க்ஷேத்ரம், ஸ்வக்ஷேத்ரம், கேந்த்ரம், திரிகோணம் லாப ஸ்தானம். இவைகளில் வாஸம், சுபர் சேர்க்கை பெற தார-புத்ர-தனப்ராப்தி, ஆரோக்யம். அதிக சந்தோஷம், க்ருஹத்தில் கல்யாண ஸம்பத்து, ராஜ்ய லாபம், அதிக சுகம், இஷ்ட சித்தி, சாதுக்கள் பிரபுக்களின் மரியாதை. ப்ரிய வஸ்து லாபம். வேறு தேசிலிருந்து வஸ்த்ர லாபம். வெள்ளைக் குதிரை, எருமை லாபம். குரு கோசரத்தில் ஸஞ்சரிப்பதை அனுசரித்து பாக்யம். ஸௌக்யம், தன ஸம்பத்து உண்டாகிறது. சனி கோசரத்தை அனுசரித்து யோக ப்ராப்தி. 6. 8. 12. சத்ரு, நீச க்ஷேத்ரங்களில் வாசம். சூர்யனிடத்தில் அஸ்தங்கதத்வம் இவைகளால் தார நாசம். மனக்லேசம். ஸ்தான நாசம். மன வியாதி, களத்ரத்தின் பந்து ஜனங்களுக்கு க்லேசம். ஸந்தாபம் முதலியன நடைபெறும். தசாநாதனுக்கு பாக்ய ஸ்தானம் கேந்த்ரம் லாப ஸ்தானங்களிலிருக்க, மனதால் விரும்பியதை அளிக்கும் ராஜ ப்ரீதி. தர்மம் செய்தல். தயையுடனிருத்தல். தீர்த்த யாத்ராதி பலன். புத்தகமெழுதுதல். காவியம் இயற்றல். வேதாந்த ச்ரவணம். தார-புத்ராதி ஸௌக்யம், வாஹனம், குடை முதலியவைகளின் லாபம் இவைகள் ஏற்படும். சுக்ரன் சத்ரு க்ஷேத்ரம், நீச க்ஷேத்ரம், அஸ்தங்கதத்வம், 6. 8, 12. இவைகளில் வாசம். பாப க்ரஹச் சேர்க்கை ஏற்பட, தார நாசம், பொருட் செலவு, ஸ்தான ப்ரம்சம். கார்ய நாசம். ஸ்தான நாசம், நேத்ர பிடை, ஜ்வர பயம். குலாசாரத்தை விடல், கன்னம், பற்களில் வலி. மனோரோகம். வாயு பிடை. மேலிருந்து விழுதல், ராஜ பயம், ஜலத்திலிருந்து பயம், ராஜாங்க ஜன விரோதம். ப்ராத்ருவர்க்க விரோதம். ஸ்வஜன மரணம் இவைகள் நடைபெறும். 2. 7-க்கு அதிபனுதில் கடன் சிரமம், தனநாசம், அபம்ருத்யு பிடை. மனக்லேசங்களுண்டாகும். இந்த தோஷங்கள் விலக துர்காஸூக்த ஜபம், வெண்மை நிறப்பசு தானம் முதலியவைகளைச் செய்யவும்.

சனி தசை சூரிய புக்தி மாதம் 11, நாள் 12.

சூரியன் ஸ்வக்ஷேத்ரம், உச்சக்ஷேத்ரம், கேந்த்ர-லாப த்ரிகோணங்கள், சுபஸ்வாம்சம், சுபர் ராசிகளில் வாஸம், பாக்யாதிபதி ஸம்பந்தம், சுபவீக்ஷணம் இவைகளைப்பெற க்ருஹத்தில் கல்யாண ஸம்பவம் பூஷணவஸ்த்ரலாபம், தன் அதிகாரத்தில் அர்த்த லாபம். துஷ்டசத்ருவிநாசம், குதிரை யானை பசுக்களின் லாபம், வியாபார மூலம் தனலாபம், புத்ரோத்ஸவம் சுகப்ராப்தி, வனங்கள் கிராமங்களில் ஸஞ்சாரம், மரவியாபாரம், பந்து கல்யாண விபவம், தேவதோத்ஸவ தரிசனம், கடன் த்ரவியலாபம், ஸத்கதாச்ரவணம்-இவைகள் நடக்கும். தசாநாதனுக்காவது லக்னத்துக்காவது 6-8-12-ல் வாஸம். நீசக்ஷேத்ராவாஸம். பாப க்ரஹஸம்பந்தம் வீக்ஷணம் பெற, மனோவியாதி, மானஹானி, ஸ்தான சலனம், இஷ்ட பந்து வியோகம். உத்யோகநாசம். பித்ரு வர்கநாசம். கடனுல் பயம். ஜ்வரம். அதிஸாரம் பந்தனம் ராஜபிடை வியாபாரத்தில் கலஹம். மனக்குழப்பம். வீண்பயம் முதலியன உண்டாகும். ஸூர்யன் 2-7-க்குடையவனுக ஆனுல் சரீரபிடை ஏற்படும். ஸூர்ய நமஸ்காரம். அச்வதானம் இவைகளைப் பரிஹாரமாகச் செய்யவும்.

சனி தசை சந்த்ர புக்தி வருஷம் 1, மாதம் 7.

சந்த்ரன் குருவீக்ஷணம் பெற்று. உச்சக்ஷேத்ரம், ஸ்வக்ஷேத்ரம், கேந்த்ரம், த்ரிகோணம். லாபஸ்தானம்-இவைகளில் இருந்தோ. பூர்ணசந்த்ரனுக அல்லது சுபருடன் சேர்ந்திருந்தால் ராஜப்ரீதி, ராஜஸம்மானத்தால் விஜயம், கல்யாணம், பந்து தரிசனம். ஸௌக்யம். சுகவ்ருத்தி, ம்ருத்யுவிலிருந்து காப்பாற்றல். பித்ரு மாத்ரு குல ஸௌக்யம், க்ராமபூமி க்ருஷி லாபம், களத்ரம் கர்ப்பமடையக் காரணம். அதிக சுகமேற்படுதல், ஸௌபாக்யம், வாஹனப்ராப்தி, ரத்னபூஷண லாபங்கள் உண்டாகும். சந்த்ரன் க்ஷீணனுகவோ பாபஸம்பந்தம். பாபவீக்ஷணம், நீசனுதல். க்ரூரஸ்வாம்சம், க்ரூரக்ஷேத்ரம்-இவைகளை அடைய அதிக கஷ்டம், ராஜகோபம். தனநாசம். பித்ருமாத்ருவியோகம், களத்ரஹானி, அகாலபோஜனம், ஔஷதஸேவனம் முதலியன நடக்கும். புக்தியின் ஆரம்பத்தில் அதிகபலன், ஸௌக்யம், தனவரவு ஏற்படும்.

தசாநாதனுக்கு கேந்த்ர கோண லாபங்களிலிருக்க வாஹன-வஸ்த்ர-பக-ப்ராத்ருவிருத்தி, சுகம், பித்ருமாத்ரு ஸௌக்யம், ஸ்த்ரீ சுகம், தனவரவு, மித்ரப்ரபுவால் இஷ்டஸித்தி, சுபலாபம் நடைபெறும். தசாநாதனுக்கு 6-8-12-ல் பலஹீனமிருக்க, படுக்கை, வியாதி, ஆலஸ்யம், சுகத்தை அளிக்கும், ஸ்தானநாசம், சத்ரு-விரோத-வ்ருத்தி, இஷ்டபந்து விரோதம், ஸதா கடன் தொல்லை, பந்தனம், ராஜபிடை இவைகள் நடக்கும். 2-7-8-க்கு உடையவனுடில் அபம்ருத்யு பயமும் வியாதியுமேற்படும். துர்க்கா தேவி ஜபம், வெள்ளிப்பசு, எருமைகள் தானம் செய்யவேண்டும். ஆயுராரோக்யவிருத்தி ஏற்படும்.

சனி தசை செவ்வாய் புக்தி வருஷம் 1, மாதம் 1, நாள் 9.

செவ்வாய் தன் உச்ச ஸ்வக்ஷேத்ர மூலத்ரிகோண த்ருதிய லாப ஸ்தான கேந்த்ர த்ரிகோண மித்ர க்ஷேத்ரங்களிலிருக்க, ராஜ ஸம்மானம், ராஜ்யலாபம், சத்ருநாசம், தனவரவு, குதிரை பசு லாபம், ப்ராத்ரு கலியாண வைபவம், ஸைந்யாதிபத்யம், க்ருஷி லாபம், புதிதான ஸ்தான நிர்மாணம், ப்ராத்ருவர்க இஷ்டஸௌக்யம், வனகூபநிர்மாணம், பூமி லாபம், புத்ரஸித்தி, புதிய உத்யோகப்ராப்தி, வைத்ய சாஸ்த்ர ப்ரஸங்கம் புரிதல் - இவைகள் நடக்கும். நீசன் அல்லது அஸ்தங்கதன் 6-8-12-ல் வாஸம், பாபஸம்பந்தம், வீக்ஷணம் பெற தனஹானி, திருடர், பாம்பு, விரணம், ஆயுதம் கட்டி, ரோகம், யத்னபங்கம், மனஸ்தாபம் ராஜத்வேஷம், அதிகபயம், ப்ராத்ருவர்கபிடை, ஜ்ஞாதிகலஹம், ஜ்வரம், அதிஸாரம், கடன் ரிமம், நாற்கால்பிராணி நாசம், கெட்ட ஆகாரம், அன்யதேசம் செல்லுதல், பலவழிகளில் பணவிரயம் உண்டாகும். 8-7 க்கு அதிபனுகவோ 2-ல் வஸித்தாலோ அபம்ருத்யு தோஷம், பலவிதகஷ்டம், அவமானமும் ஏற்படும். இந்த தோஷ நிவிருத்திக்கு செவ்வாய் சாந்திஹோமம் விருஷபதானம் இவைகளைச் செய்ய எல்லா அரிஷ்டங்களும் போகும்.

சனி தசை ராகு புக்தி வருஷம் 2, மாதம் 10, நாள் 6.

ராகு புக்தியில் கலகத்தால் மனதுக்கு கஷ்டம், சரீரபிடை, மனஸ்தாபம், புத்ரத்வேஷம், அன்யதேசம் செல்லுதல், க்ருஹ க்ஷேத்ராதி நாசம், ஆசன், திருடன், ஆயுதம்-இவைகளால் பிடை தாய்க்கு அரிஷ்டம், சத்ரு பயம், தெற்கு, தென்மேற்கில் பிரயாணம் செய்வதால் கார்யஹானி, யந்த்ரம், ஸர்பம், அக்னி

இவைகளால் மரணம், பிராணி நாசம் ஏற்படும். ராகு பாபக்ரஹங்களுடன் சேர, ராஜ தண்டத்தால் தனஹானி ஐந்தாமதினுடு சேர்ந்திருக்க புத்ரத்வேஷம் மனோரோகம் ஏற்படும். குருவுடன் இருக்கை அல்லது பார்வை ஏற்பட நீர்த்தயாத்ரை முதலியன நேரும் லக்னாதிபன் அல்லது யோகாரகனுடன் சேர்ந்தாலும், தன் உச்சக்ஷேத்ரம் (வ்ருஷபம்) ஸ்வக்ஷேத்ரம (கன்னி) கேந்த்ரம், தசாநாதனுக்கு லாபஸ்தானம் இவைகளிலிருக்க, ஆரம்பத்தில் ஸௌக்யம், தனலாபம், க்ருஹக்ஷேத்ராபிவிருத்தி, தேவப்ராஹ்மணர்களிடத்தில் பற்று, நிர்த்த யாத்ராதி லாபம், நாற்கால் பிராணி லாபம், க்ருஹத்தில் கல்யாணவ்ருத்தி, மத்யத்தில் ராஜபிடி, புத்ர மித்ர விரோதம் முதலியன நடைபெறும். ராகு மேஷம், விருஷபம், கடகம், சிம்மம், கன்னி, தனுஸ், மீனங்களிலிருக்க விசேஷ (கஜாந்த) ஐச்வர்யலாபமுண்டு. 2-7-களிலிருக்க தேஹ ஹாட்யமேற்படுகிறது. ம்ருத்யுஞ்ஜய மந்த்ர ஜபமும் சாகதானமும் செய்ய ஆயுராரோக்யைச்வர்யங்களை அடைகிறான்.

சனி தசை குரு புக்தி ஒ 2, மீ 6, நாள் 12.

குரு, கேந்த்ர லாப த்ரிகோணங்கள், உச்ச ஸ்வக்ஷேத்ரங்கள் இவைகளிலிருந்தாலும், லக்னாதிபனுடன் சேர்ந்திருந்தாலும், எல்லாவித கார்யங்களிலும் ஸித்தி, சோபனம், மித்ரப்ரபு மூலமாக தனவரவு, வாஹன பூஷன லாபம், சாதுக்களால் கொண்டாடப்படுதல், வித்வஜ்ஜன ஸஹவாஸம், தேவதா குரு பக்தி, இஷ்ட வஸ்த்ரார்த்த லாபம், தார புத்ராதி ஸௌக்யம், புத்ர கல்யாண விபவம் நடைபெறும். குரு 6-8-12-ல் இருந்தாலும், நீசனுகவோ, பாப ஸஹவாஸமோ பெற ரக்த ஸம்பந்தமுள்ள பந்து மரணம், தனதான்ய நாசம், ஜனத்வேஷம், காரியநாசம், அன்யதேசம் செல்லல், குஷ்டம் முதலிய வியாதி உண்டாதல் ஏற்படும். தசாநாதனுக்கு கேந்த்ர கோண தன லாபஸ்தானங்களிலிருக்க, கல்யாணம், உத்யோகப்ராப்தி, ஸ்ரீயாபிவிருத்தி, வேத ப்ரதிஷ்டை, யாககர்ம பலப்ராப்தி, தேவதா குருபக்தி, வேதாந்த ச்ரவணம், களத்ர ஸௌக்யம், தான தர்மாசரணம், மேற்கில் பந்து நாசம் பொருள்களின் லாபம் இவையுண்டாகும். தசாநாதனுக்கு 6-8-12-லோ பலமில்லாதவனுகவோ இருக்க பந்து வைரம், மனஸ்துக்கம், ப்ரதம்மணனுல் இருப்புக்கு நாசம், துர்போஜனம், கார்யக்

குறைவு, ராஜ தண்டத்தால் தனஹானி, சிறைப்ரவேசம், தார புத்ராதி பிடை, அன்யதேசம் செல்தல், குல்மரோகம் முதலியன ஏற்படும். 2-7-கு அதிபனில் தேஹ ஜாட்யம், மனோரோகம், தன் ஸம்பந்தமான மரணம், கடனுபத்ரவம், கார்யஹானிகளுண்டாகும். இத்தோஷ நிவ்ருத்திக்கு சிவஸஹஸ்ரநாம ஜபம், ஸ்வர்ணதானம் செய்ய அவசியம் ஆரோக்யமுண்டாகும்.

புத தசையின் பொதுப்பலன்.

புதனுக்கு அத்யுச்சபாகமாவது கன்னியின் 15-வது பாகம். இவ்விடத்தில் வலிக்கும் புத தசையில் தனவான், கியாதி வாய்ந்தவன், ஸௌக்யம், ஜ்ஞானம், கீர்த்தி, ஜனநாயகன், ஸ்த்ரீ புத்ரன் பூமி பணம் இவைகளால் ஸந்தோஷம் அடைபவனாக ஆவான். உச்சக்ஷேத்ரத்திலிருக்கும் புத தசையில் பெரிய தன்மையையும், அர்த்த ஸௌக்யத்தையும், சரீர புஷ்டி, தனம், தான்யம், புத்ரன், பசு, குதிரை, மதம் மிக்க யானை, மருதங்கநாதம் முதலியன உண்டாகிறது. உச்சத்திலிருக்கும் வேறு க்ரஹத்துடன் சேர அதிக ஸௌக்யம், மேலான பாக்யம், நல்ல வித்யை, வியாபாரம், பசு க்ருஷி லாபத்தை அளிக்கிறது. நீசத்திலிருக்கும் புத தசையில் ஜ்ஞானக்குறைவு, ஸ்வ ஜனவிரோதம், ஸ்தான ச்யுதி, பந்துவிரோதம், அன்ய தேச கமனம், வனவாஸ துக்கம் இவையுண்டாகின்றன. நீசத்திலிருக்கும் வேறு க்ரஹத்துடன் சேர அதிககஷ்டம், ஸ்தான ப்ரம்சம், பந்துநாசம், கர்மநாசம், மனோரோகங்களை அடைகிறான். அதிமித்ரராசியிலிருக்க பெரிய தன்மையை அடைவதுடன், அரசாள்பவரின் சிநேஹம், அதனால் ஸௌக்யம், தனம், புத்ரன், களத்ரம், பந்து ஸம்மானம் இவைகளையடைவான். மித்ர க்ஷேத்ரத்திலிருந்தால் தனலாபம், ஸௌக்யம், பட்டம் பதவி பெறுதல் ஏற்படும். சமன் க்ருஹத்திலிருக்க சுகம், தான்யம், புத்ரன், வஸ்த்ரம், ராஜ்யச்யுதி, விக்னம், ஜ்ஞானக் குறைவு, பிளவை ஏற்படுகின்றன. சத்ரு வீட்டிலிருக்க அரசாள்பவரின் கோபம், வித்யைக் குறைவு, குலத்துக் கொவ்வாத தொழில், துர்போஜனம், தார-புத்ர-அர்த்த நாசம் இவைகள் ஸம்பவிக்கின்றன. அதிசத்ரு ராசியிலிருக்க விபத்து, துக்கம், உத்யோக ஹானி, ஸ்வஜன விரோதம், நற்காரியங்களுக்கு இடையூறு, சுப கர்ம நாசமேற்படுகின்றன. ஆரோஹத்தில் யாகோத்ஸவம், பசு, விருஷபம், அச்வங்களின் சேர்க்கை, மிருது

வான அன்னம், ஆபரண-வஸ்த்ர-வாஹன லாபம், வியாபாரம், பூமி, அர்த்தம், பரோபகாரம் முதலியன உண்டாகின்றன. அவரோஹ தசையில் அதிக கஷ்டம், துக்கம், ஞானக் குறைவு, பரதார கமனம், அரசர், அக்னி, திருடர்களிடமிருந்து பயம், கஷ்டம் இவைகளுண்டாகின்றன. மூல த்ரிகோணத்திலிருக்கும் புத தசையில் அதிகமான ஸௌக்யம், ராஜ்யம், கீர்த்தி, வித்யா விலாசம், நியமம், புராண தர்ம சாஸ்த்ர ச்ரவணம், அதனால் பரிசுத்தி உண்டாகும். ஸ்வக்ஷேத்ரத்திலிருக்க தன-தான்ய விருத்தி, வியாபாரம், பசு, பூமி, புத்ரன், தனம், தாரம், மிருதுவான அன்னம், பானம், வஸ்த்ரம் ஆபரணமிவைகளின் லாபம் சம்பவிக்கும். கேந்த்ரத்திலிருக்க ராஜ சிநேகம், தன, தான்ய களத்ர-புத்ர லாபம், யாகாதி நற்காரியங்கள், அரச மரியாதை, கீர்த்தி, ஆபரணாதி லாபங்களேற்படுகின்றன.

புத தசை புத புக்தி வருஷம் 2, மாதம் 4, நாள் 27.

புதன் கேந்த்ர, த்ரிகோண, உச்ச க்ஷேத்ர, ஸ்வக்ஷேத்ர, மித்ர க்ஷேத்ர, சுப க்ஷேத்ர, சுபநவாம்சங்களில் வாஸம், சுபர் சேர்க்கை ஏற்பட; ஆரோக்யம், புத்ர சம்பத்து, தன லாபம், வித்யா லாபம், அதிக யசஸ், ஸங்கீதானுபவம், ஸத்கதா ச்ரவணம், முத்து, பவழங்களின் லாபம், ஞானானுஷ்டானங்களால் அதிக சுகம், கல்யாணம், பந்து ஸம்மானம், மாதா பிதாக்களுக்கு சுகம், வியாபாரத் துறையில் உத்யோக லாபம், வியவஹாரத்தில் தன வரவு, வித்யையின் அதிகத் தன்மை, அதனால் கீர்த்தி, நூதன ப்ரபுதர்சனம் இவைகளேற்படும். நீசனுகவோ, க்ரூர க்ரஹ சம்பந்தம், பாப க்ரஹ வீக்ஷணம், 6, 8, 12-ல் வாசம் இவைகளைப் பெற தன தான்ய, பசு ஹானி, ஆத்ம பந்து விரோதம், சூலம் முதலிய ரோகங்கள், அரசாங்கத்திலுள்ளவர்களோடு விரோதம், சிறை ப்ரவேசம், ராஜ காரியங்களினால் கலங்கியிருத்தல், உண்டாகும். 2, 7-க்குடையவனாக இருக்க களத்ர க்லேசம், ஆத்ம ஸம்பந்த மூடையவரின் மரணம், யத்ன காரிய மூலம் பொருள் நஷ்டம், பரிஹாரமாக விஷ்ணு ஸஹஸ்ர நாம பாராயணம் செய்யவேண்டும்.

புத தசை கேது புக்தி மாதம் 11, நாள் 27.

கேது லக்னத்துக்கு கேந்த்ர த்ரிகோணங்களிலோ, சுபக்ரஹ ஸம்பந்தம் அல்லது வீக்ஷணம், லக்னாதிபன் சேர்க்கை, யோக

காரக ஸம்பந்தம் பெற்றோ தசாநாதனுக்கு கேந்த்ர லாபத்திலோ. லக்னத்துக்கு 3, 6, 10, 11, சுப நவாம்சம், சுப ஷட்வர்கம் இவைகளில் வசிக்கவோ. தேஹ ஸௌக்யம், ஸ்வல்ப தனம், பந்து ஸ்நேஹம், பிராணி லாபம், உத்யோக லாபம், வித்யை, கீர்த்தி, ஸமான ப்ரபு தர்சனம முதலில் போஜன வஸ்த்ர ஸௌக்யம், மத்தியில் சுகம், கல்யாணாதி சுபப்ராப்தி, ரத்ன பூஷண லாபமேற் படும். தசாநாதனுக்கு 6, 8 12-லோ பாபருடன் சேர்ந்தோ இருக்க வாஹனத்திலிருந்து கீழே விழுதல், புத்ர துக்கத்தால் கலக்கம், திருடர், கெருப்பு, அரசர்களிடமிருந்து பயம், பாப கர்மத்தில் பற்றுதல், விதவா கலஹம், சோகம், ரோகம், தேள் முதலிய விஷ ஜந்துக்களிடமிருந்து பயம் ஈன ஜாதிகளுடன் கலகம், களத்ர-புத்ராதி பிடை, கடன் தொல்லை உண்டாகும். 2, 7-களிலிருக்க தேஹ ஜாட்யம், தனக்குறைவு ஏற்படும். இத் தோஷ நிவ்ருத்திக்கு சாக தானம்செய்ய வேண்டும்.

புத தசை சுக்ர புக்தி வருஷம் 2, மாதம் 10.

சுக்ரன் 1, 4, 7, 10, 11, 5, 9 உச்ச க்ஷேத்ரம், ஸ்வக்ஷேத்ரம், உச்ச நவாம்சம், ஸ்வகநவாம்சம இவைகளிலிருக்க கற்கதை கேட் டல், புண்யம், தான தர்மாதி ஸங்கல்பம், மித்ர ப்ரபுவால் இஷ்ட லாபம், தான்ய ஸங்க்ரஹணமும் தர்ம கர்மாதிபர்களுடன் சே மகாராஜாசிரயம், வாபி கூப தடாக நூதன க்ருஹ நிர்மாணம், வியாபாரத்தில் தன வரவு, அதிகார உயர்வு, முயற்சியால் அதிக லாபம், ரத்ன பூஷண லாபம், வாஹன வஸ்த்ர பசு முதலியவை களின் வரவு, கல்யாண வைபவம் முதலியன நடக்கும். தசாநாத னுக்கு கேந்த்ர த்ரிகோண லாபங்களிலிருக்க ஐச்வர்யம் விசேஷ மாகக் கிடைக்கும். லக்னத்துக்கு 4, 8, 12, நீச ராசி, பாப க்ஷேத்ரம், தசாநாதனுக்கு 6, 8, 12, நீச ராசி-இவைகளிலிருக்க மன வியாதி, மானக் குறைவு, ஜ்வரம், அதிஸாரம் இவைகளால் கஷ்டம், ஆத்ம பந்து வியோகம், ஸ்தான ப்ரம்சம், களத்ர நாசி, ராஜ பயம், கடன் ரிணம், வாஹனம்பர நாசம், சரீரத்தில் ஆலஸ்யம், மனஸ்தாபம், வரவுக்கு மேல் அதிகச் செலவு முதலியன ஏற்படும். 2, 7-க்குடையவனுதில் அபம்ருத்யு பய முண்டாகும். பரிஹாரமாக துர்காதேவி ஜபம் செய்யவும்.

புத தசை சூரிய புக்தி மாதம் 10, நாள் 6.

சூரியன் உச்ச க்ஷேத்ரம், ஸ்வக்ஷேத்ரம், கேந்த்ரம், த்ரிகோணம், லாபஸ்தானம், உச்சாம்சம், ஸ்வகநவாம்சம்-இவைகளிலிருக்க ராஜ

ப்ரஸாதத்தால் ஸௌக்யம், மித்ர ப்ரபு மூலம் சுகம் உண்டாகும். லக்னாதிபனோடு சேர்ந்திருக்க பூலாபம், கிராமத்தை ஆளும் அதி காரமும், செவ்வாய் பார்க்க ஆதியில் பூமி லாபமும், லக்னாதிபனால் பார்க்கப்பட அதிக ஸௌக்யம், தன வரவு, பித்ரு ஸௌக்யம், சுப லாபம், போஜன வஸ்த்ர ப்ராப்தியும் ஏற்படும். லக்னத்துக்கு 6, 8, 12-ல் வாஸம், சனி செவ்வாய் ராகுகளின் சேர்க்கை, தசா நாதனுக்கு 6, 8, 12-ல் வாஸம் ஏற்பட்டு பலமற்றவனை ஆனால் திருடன், அக்னி, ஆயுதங்களால் பிடை, பித்தாதிக்யம், மன வியாதி, சிரோரோகம், மனதில் கஷ்டம், இஷ்ட பந்து வியோகம், ராஜ பிடை, சத்ரு பிடை, அன்ய தேச கமனம் உண்டாகும். 2, 7-க்குடையவனுதில் அபம்ருத்யு பயம் ஏற்படும். பரிஹாரமாக சூர்ய சாந்தி, பசு, ஸ்வர்ணங்களின் தானம் செய்ய வேண்டும்.

புத தசை சந்த்ர புக்தி வருஷம் 1, மாதம் 5.

சந்த்ர லக்னத்துக்கு கேந்த்ர த்ரிகோண உச்ச க்ஷேத்ர ஸ்வ க்ஷேத்ர வாஸம் அல்லது குரு வீக்ஷணம் பெற்று யோக ஸ்தானாதி பத்யம் பெற்றால் யோகத்தின் ப்ராபல்யத்தைத் தருவான். இத் துடன் ஸ்திரீ புத்ர லாபம், வஸ்த்ர-வாஹன-பூஷண லாபம், நூதன க்ருஹ நிர்மாணம், நித்யம் ம்ருஷ்டான்ன போஜனம், கீத-வாத்ய-சாஸ்த்ர-வித்யையில் பரிசயம், தெற்கு திக்கில் ப்ரயா ணம், அங்கு பந்து தரிசனம், த்விபாந்தரத்திலுள்ள துணிகள் மூலம் லாபம், முத்து, பவழம், ரத்னம், வெள்ளை நிற வஸ்த்ர லாபம் இவைகளேற்படும். தசாநாதனுக்கு கேந்த்ரம், த்ரி கோணம், த்ருதீய லாப ஸ்தானங்களில் இருக்க ஆதியில் புண்ய தீர்த்த ஸ்நானம், தேவதா தரிசனம், மனோதைர்யம், உத்சாகம், அன்ய தேசத்தில் தன லாபம் ஏற்படும். தசாநாதனுக்கு 6, 8, 12-ல் வாஸம், பாப ஸகவாசம் பெற் ஸ்தான ப்ரம்சம், பந்து த்வேஷம், களத்ர-புத்ர நாசம், பூமி தான்ய க்ருஹ நாசம், ராஜ த்வேஷம், தன விரயம், அரசர், அக்னி, திருடர்களால் பயம், ஸம்போகத்தில் ருசி, துஷ்கார்யம் செய்தல், க்ருஷி, பசு முதலிய வைகளுக்கு நாசம் ஏற்படும். சந்த்ரன் நீச க்ஷேத்ரத்திலோ, சத்ரு க்ஷேத்ரத்திலோ இருக்க சரீர பிடை உண்டாகும், வாத-ச்லேஷ் மாதி ரோகங்களும். கடன் தொல்லையு முண்டாகும். 2, 7-க்கு அதிபதியாக ஆனால் தேக ஜாட்யம், மனோ வியாதி, சோராக்னி ருபர்களிடமிருந்து பயம், துஷ்ட ஸ்திரீ போகம் ஏற்படும். இத்

தோஷம் விலகுவதற்கு துர்கா தேவீ ஜபம். வஸ்த்ர தானம் செய்ய ஆயுள் விருத்தி சுகம் உண்டாகும்.

புத நசை செவ்வாய் புக்தி மாதம் 11. நாள் 27.

செவ்வாய் லக்னத்துக்கு கேந்த்ரம். த்ரிகோணம், ஸ்வ க்ஷேத்ரம். உச்ச க்ஷேத்ரம், சுபாம்சம், சுபவர்கம் இவைகளில் வசித்தாலும், லக்னாதிபன் அல்லது சுபர்களுடன் சம்பந்தமேற் பட்டாலும், ராஜாநுக்ரஹமூலம் அமைதி, க்ருஹத்தில் கல்யாண ஸம்பவம், லக்ஷ்மீ கடாக்ஷம், நஷ்ட த்ரவ்ய லாபம், பழைய வேலை திரும்பக் கிடைத்தல், புத்ரோத்ஸவம், க்ருஹத்தில் கோதன ஸம்ருத்தி, க்ருஹ பூமி லாபம், கஜாச்வ ஸமாகமம் வாஹன லாபம், பந்து பூஜை, ஸ்திரீ சௌக்யம், தன் அதிகார விருத்தி, ரத்ன பூஷண ஸங்க்ரஹமேற்படும். செவ்வாய் 6, 8, 12-ல் வாசம், நீச க்ஷேத்ரத்திலிருப்பு, பாப க்ரஹ வீக்ஷணம் அல்லது ஸம்பந்த மேற்பட; சரீரபிடை, மனோ வியாதி, உத்யோக நாசம், தன் ஜாதில் தான்ய நாசம், க்ரந்தி, ஆயுத வ்ரணம், எல்லாவற்றிலும் பயம், தாப ஜ்வரமும் உண்டாகும். தசாநாதனுக்கு 4, 7, 10, 5, 9, 11-களில் வாசம், சுபவீக்ஷணம் பெற சரீர சௌக்யம், தனப்ராப்தி, புத்ர லாபம், கீர்த்தி விருத்தி, பிரிய ஸ்தோத்ர லாபமுமுண்டாகும். தசாநாதனுக்கு 6, 8, 12-லோ அல்லது பாப ஸஹவாசமோ இருக்க அதிக க்லேசம், ப்ராத்ரு வர்கத்தில் அதிக பயம், சோராக்னி ரோக பயம், புத்ர-மித்ராதி விரோதம், ஸ்தான ப்ரம்சம், அதிக தைர்யம், மத்தியில் சௌக்யம், த்ரவிய லாபம், யத்ன கார்ய நாசம், எதிர்பாராத கலகம், ஹ்ருதய ரோகம், மான ஹானி, ப்ராத்ரு நாசம், மன வியாதி, காராக்ருஹ ப்ரவேசம், சத்ரு பயம் முதலியன ஏற்படும், புக்தியின் முடிவில் ராஜ பயமும், ஸ்தான ப்ரம்சமுமுண்டாகும். 2, 7 க்குடையவனுக விருப்பின் அபமிருத்யு பயமேற்படும். சுப்ரஹ்மண்ய ஜபம், விருஷப தானம், மிருத்யுஞ் ஜய ஜபம் முதலியவைகளை பரிஹாரமாக அனுஷ்டிக்கவேண்டும்.

புத நசை ராகு புக்தி வருஷம் 2. மாதம் 6. நாள் 18.

ராகு கேந்த்ர லாப த்ரிகோணங்களிலோ, கடகம், சிம்மம், கன்னி, விருஷபங்களிலோ, சுபாம்ச சுப ராசிகளிலோ, சுபக்ரஹத் துடன் சேர்ந்திருந்தால், ராஜாநுக்ரஹத்தால் சாந்தி, க்ருஹத்தில் கல்யாண வைபவம், புத்ரோத்ஸவ ஸந்தோஷம், ராஜ ப்ரீதி உத்யோகம், பந்து ஸம்மானம், வியாபாரத்தில் தன லாபம், புண்ய

தீர்த்த லாபம், குரு தைவத தரிசனம், பிரயாணம், மித்ர லாபம், கார்ய ஸித்தி ஏற்படும், புக்தியின் ஆரம்பத்தில் சரீர பிடை, கடைசியில் ஸௌக்ய மேற்படும். 6, 8, 12-ஸ்தானங்களிலிருக்க தன நாசம், ஆரம்பத்தில் சரீர பிடை, வாதம், ஜ்வரம் அஜீர்ண ரோகம் இவைகள் ஏற்படும். லக்னத்துக்கு 3, 6, 10, 11-களில் இருந்தாலும் சுபக்ரஹ சம்பந்தம் பெற்றாலும், ராஜ ஸம்பாஷணம், சந்தோஷம், நூதன ப்ரபு தரிசனம் உண்டாகும். தசாநாதனுக்கு 6, 8, 12-ல் வாசம் அல்லது பாப சகவாசம் பெற்றால் அரசாங்க கார்யத்தில் குற்றம் சுமத்தப்படுதல், ஸ்தான நாசம், பயம், பந்தனம், ரோக பிடை, பந்துவிற்கு மரண வியாதி, மான குறைவு, தன நாசம், கட்டிகள், தாப ஜ்வரம், பந்து வைரம், அதிகாரத்திலிருந்து விடுபடுதல் ஏற்படுகின்றன. 2, 7-ல் ராகு இருக்க அபம்ருத்யு தோஷம் ஸம்பவிக்கும். துர்கா லக்ஷ்மீ ஜபம், சிவ ஸஹஸ்ர நாம ஜபம், வெண்மை நிற கோதானம் செய்ய வேண்டும்.

புத நசை குரு புக்தி வருஷம் 2, மாதம் 3, நாள் 6.

குரு லக்னத்துக்கு கேந்த்ர த்ரிகோண உச்ச ஸ்வக்ஷேத்ர மித்ர க்ஷேத்ர ஸ்வநவாம்ச பாக்ய ஸ்தானங்களில் இருக்க, தேக ஸௌக்யம், தன லாபம், ராஜ ப்ரீதி, விவாஹோத்ஸவம், தினம் விசேஷ போஜனம், கோமஹிஷ்யாதி லாபம், ஸத்கதா ச்ரவணம், யாக கர்மாதி ஸித்தி, இஷ்ட தேவதாராதனம், மஹாராஜனை ஆச்ரயிப்பதால் ஸந்தோஷம், பந்து மித்ர ஸமாகமம், தென் மேற்கு, மேற்கு திசைகளில் பிரயாணம், கார்ய ஸித்தி, பரோபகாரம், கடன் கொடுத்த த்ரவிய லாபம் ஏற்படும், நீசனுகவோ, அஸ்தங்கதனுகவோ, 6, 8, 12-லோ, சனி செவ்வாய் ராகுகளுடன் கூடியோ இருக்க கலகம், ராஜ பிடை, திருடனால் சரீர பிடை, மாதாபித்ரு விநாசம், மான குறைவு, ராஜ தண்டம், தன நாசம், களத்ர பந்து வைஷம்யம், பந்தனம், ராஜ பிடை, விஷம், ஜ்வரம், ஸர்ப்பங்களால் பிரமம் பசு, பூமி, க்ருஹ விக்ரயம் ஏற்படும். தசாநாதனுக்கு கேந்த்ர த்ரிகோண லாப ஸ்தானங்களில் பலவானுயிருக்க, பந்து புத்ர லாபம், மனதுக்கு உத்ஸாஹம், சுபசோபனங்கள், கோ-விருத்தி, கீர்த்தி விருத்தி, அன்னதானம் இவைகளுண்டாகும். தசாநாதனுக்கு 6, 8, 12-ல் துர்பலனுக இருக்க சரீரத்தில் தாபம்,

அங்க ஹானி, சரீர பாதை, களத்ர பந்து வைஷம்யம், ராஜ கோபம், தனக் குறைவு, எதிர்பாராமல் கலஹ பயம், பிரமேஹம், ராஜ பிடைகள் ஸூக்கும். 2, 7-க்கு அதிபனுகில் சரீர பிடை யுண்டாகும். தோஷ பரிஹாரமாக பசு, பூமி, ஸ்வர்ண தானம், மிருத்யுஞ்ஜய ஜபம், குரு சாந்தி முதலியன செய்யவும்.

புத தசை சனி புக்தி வருஷம் 2, மாதம் 8, நாள் 9.

சனி தன் உச்ச ஸ்வ ஷேத்ர கேந்த்ர த்ரிகோண லாபஸ்தானங்களிலோ, சுபக்ரஹ ஸம்பந்தமோ பெற்றால், சேது ஸ்தான பலன், நிச்சயமாக புத்ர லாபம், உத்யோக லாபம், அதிக உத்ஸாஹம், க்ருஹத்தில் கல்யாண வ்ருத்தி, வியாபார மூலம் தன லாபம், தாழ்ந்த வியாபார சித்தி, வேலியாட்கள் மூலமான கார்ய லாபம், பந்து மித்ர ஸமாகமம், பரோபகாரம், தைரியம், கோதன விருத்தி, பிரயாணத்தில் பந்து ஸம்மானம், ராஜாங்கத்தில் சுபம் ஏற்படும். லக்னம் அல்லது தசாநாதனுக்கு 6, 8, 12-லிருக்க கலஹம், அதிக துக்கம், களத்ர-புத்ராதி பிடை, புத்திக் கலக்கம், உத்யோக ஹானி, அன்ய தேசம் செல்தல், ஸ்தான ப்ரம்சம், சரீர ஜாட்யம், கடன் ஹிம்சை, தன ஹானி, சிறை வாஸம், சுற்றத்தாரில் மரண ஸம்பவம் உண்டாகும். 2, 7-க்குடையவனுக இருக்க அபம்ருத்யு தோஷம். இத்தோஷ பரிகாரமாக மிருத்யுஞ்ஜய ஜபம், கருத்த பசு, ஸுமை தானம் இவைகள் செய்ய தோஷம் நீங்கி ஆரோக்யத்தை அடையலாம்.

கேது தசையின் பொதுப் பலன்.

கேது கேந்த்ரத்திலிருக்க பயனில்லாத கார்யம் செய்தல், தொழில், தனம், புத்ரன், களத்ரங்களின் நாசம், ஆபத்துக்களைச் செய்கிறான். லக்னத்திலிருக்கும் கேது அதிக பயம், ஜ்வரம், அதிஸாரம், ப்ரமேஹம், ஸ்தான நாசம், வாந்தி பேதிகளையும், 2-லிருக்க தன க்ஷயம், வார்த்தையில் கொடிய தன்மை, மனஸுக்கம், கெட்ட அன்னம், மனவியாதியையும். 3-லிருக்க அதிக சுகம், மனக் கலக்கம், ப்ராத்ரு த்வேஷத்தையும், 4-லிருக்க சுகக் குறைவு, தார-புத்ராதி நாசம், க்ருஹத்தில் தான்ய விருத்தியால் சந்தோஷத்தையும், 5-லிருக்க புத்ர நாசம், புத்தி ப்ரமம், ராஜ கோபம், தன க்ஷயங்களையும், 6-லிருக்க அதிக பயம், சோரக்னி விஷ பயம், கஷ்ட நிலையையும், 7-லிருக்க பயம், களத்ர-புத்ர-தன நாசம், மூத்ர க்ருச்ச்ரம், மனோ வியாதியையும், 8-லிருக்க பயம், பித்ரு மரணம், சுவாஸம், காஸம், வயிற்றுப் போக்கு, க்ஷயரோகங்களையும், 9-லிருக்க பிதா அல்லது குருவுக்கு ஆபத்து, துக்கம், சுபகர்ம விநாசத்தையும், 10-லிருக்க சுகம், மான ஹானி, மனக் கலக்கம், அபகீர்த்தியையும், 11-லிருக்க தன ஸௌக்யம், ப்ராத்ரு வர்க ஸௌக்யம், யாகதானாதி வ்ருத்தியையும் 12-லிருக்க அதிக கஷ்டம், ஸ்தான ப்ரம்சம், அசௌச்சல், ராஜ பிடை, நேத்ர நாசம், முதலியனவும் ஏற்படும். கேது தசையில் பொதுவாகவே, பார்யா, புத்ர விநாசம், ராஜ கோபம், அதிக கஷ்டம், வித்யா, பந்து, தன மித்ர வியோகம், வியாதி, அக்னி, நிநெஹிதர்களிடமிருந்து பயம், வாஹனத்திலிருந்து கீழே விழுதல், விஷம், ஜலம், சஸ்த்ரங்களால் பயம், தேசம் விட்டுத் தேசம் அலைதல், கலகத்தில் பற்றுதல், பல்லி விசேஷத்தால் பயம், க்ருஷி நாசம், ஆதியில் துக்கம், மத்யத்தில் பயம், முடிவில் ராஜ பயம், தேஹ ஜாட்யம், இவைகளை அடைகிறான். சுபக்ரஹ விக்ஷணம் பெற்றால், ஸௌக்யத்தையும், சுப பலத்தையும் செய்வான். பாப விக்ஷணம், ஸஹ வாஸம் பெற்ற கேது, துக்கத்தையும் கெடுதலையுமே செய்வான். மேலும், சர்ம வியாதிகள் கூட உண்டாகும்.

கேது தசை கேது புக்தி மாதம் 4, நாள் 27.

கேது கேந்த்ர லாப த்ரிகோண சுபவர்க சுபாம்சம் பெற்றாலும், லக்ன சுகாதிபர்கள் தர்மகர்மாதிபர்களின் சேர்க்கையை அடைந்தாலும், புத்ர தாரங்களால் ஸௌக்யம், விதவாயோகம், க்ராம, பூமி, தன லாபம், வியாபார விருத்தி, அகால போஜனம், வியவஹாரத்தில் அநுகூலம், சித்ர, வஸ்த்ர ப்ராப்தி, மனோதைரியம், முதலியன உண்டாகும். 6, 8, 12-ல் வாசம், நீசனுதல், பாபரின் சேர்க்கை ஏற்பட தாழ்ந்தவன், சத்ரு இவர்களால் கலகம், மனோரோகம், காரிய நாசம், ராஜ த்வேஷம், ரத்னப்ரண விக்ரயம், தார-புத்ராதி பிடை, மனக்கலக்கம், மானக் குறைவு, புத்திப்ரம்சம், ஸ்தான நாசம், ஸர்பம்-இதர விஷம் முதலியவைகளால் பிடை, மந்த்ர தந்த்ர ஔஷதங்களால் கெடுதலும் ஏற்படும். 2, 7-க்குடையவனின் ஸம்பந்தம் அல்லது 2, 7-லிருந்தாலும், ஆரோக்யக்குறைவு, அதிக கஷ்டம், ஆத்ம பந்து வியோகங்களேற்படும். பரிஹாரமாக துர்கா தேவீ ஜபம், மஹாம்ருத்யுஞ்ஜய ஜபம் முதலியவற்றைச் செய்ய வேண்டும்.

கேது தசை சுக்ர புக்தி வருஷம் 1. மாதம் 2.

சுக்ரன் கேந்த்ரம், லாபம், திரிகோணம், உச்ச க்ஷேத்ரம், ஸ்வ க்ஷேத்ரம் இவைகளில் வாசம், யோக காரகன், தர்ம கர்மாதிபர் களுடன் சேர்க்கை ஏற்பட; பசு லாபம், மனதுக்கு சுகம். இழந்த தொழில் தனங்களின் லாபம். தேவதாராதனம். மஹாராஜாநுக்ர ஹத்தால் கிராம பூம்யாதி லாபம் உண்டாகும். தசாநாதனுக்கு கேந்த்ர த்ரிகோண த்ருதிய லாபஸ்தானங்களில் இருக்க ஆரோக் யம், க்ருஹத்தில் கல்யாணம் நடத்தல், போஜன, வஸ்த்ர, ஆபரண ப்ராப்தி, குதிரை, பல்லக்குகளின் லாபம். தன்னுடைய ஸ்திரீயின் போகம், நடநாயகனுடன் சேர்க்கை, வாஹனம், ராஜ ஸம்மானம், ஸௌபாக்யம், புத்ர ப்ராப்தி, வியாபாரத்தில் தன லாபம், பெரிய க்ராமத்தில் வாசம், பந்து மித்ரர்களால் லாபம், நற்கதை கேட்டல் முதலியன நடக்கும். சுக்ரன் தசாநாதனுக்கு 6, 8, 12-ல் அல்லது பாபருடன் சேர்ந்திருக்க எதிர்பாராத கலகம், பசு, தான்யம் முதலியவற்றின் நாசம் உண்டாகும். சுக்ரன் நீசத்தில் இருக்கும் க்ரஹத்தோடு சேர்ந்திருப்பது, லக்னத்துக்கு 6, 8, (12) களில் வாசம் இவைகளால் பந்து ஜன வைஷம்யம், தலை, கண் இவைகளில் புண் ஏற்பட்டு பிடை. ஸ்தான அழிவு, மனோ துக்கம், சுற்றத்தாருடன் விரோதம், கடன் சிரமம், களத்ர-புத்ராதி பிடை. ராஜாங்கத்தில் மனத் தாங்கல், மானக் குறைவு முண்டாகும். 2, 7-ல் இருக்க தேஹ ஜாட்யம், தன ஹானி, உயரத்திலிருந்து விழுதல், அபம்ருத்யு பயமுமேற்படும். இத் தோஷம் விலக துர்கா தேவீ ஜபம், வெள்ளைப் பசு, ஏருமை தானத்தையும் செய்யலாம்.

கேது தசை சந்த்ர புக்தி மாதம் 7.

சந்த்ரன் லக்னம், கேந்த்ர த்ரிகோணங்கள், தன லாப ஸ்தா னங்கள், உச்ச ஸ்வக்ஷேத்ரங்கள், சுபாம்சம், சுபஷட்வர்கம் இவைகளில் வாசம், குரு ஸம்பந்தம், குரு வீக்ஷணம் பெற, கல்யாணம், ஆபரண லாபம், வாஹன வஸ்த்ர ப்ராப்தி, ராஜ ப்ரீதி, அதிக கீர்த்தி, அர்த்த லாபம், சுகம், தடாகம், ஆலயம் முதலிய கர்காரியங்கள் செய்தல், வியாபாரத்தில் தன லாபம், காரிய ஸித்தி, ஸ்வ ஸ்திரீ போகம், விதவா யோகம், க்ருஷியால் அதிக பலன், அச்வ-கிராம பூம்யாதி லாபம் உண்டாகும். 6, 8 12-ல் வாசம், நீசனுதல், பாப ஸஹவாஸம், க்ஷீண சந்த்ரனுக

இருக்க, அஸௌக்யம், கார்ய ஹானி மனஸ்தாபம், அதிக பயம், பித்ரு-மாத்ரு வியோகம், தேஹ ஜாட்யம் மரணியதை வியவ ஸாயத்தால் பல நாசம், கோமஹிஷ்யாதி நாசம் முதலியன நடைபெறும். தசாநாதனுக்கு கேந்த்ர கோண லாபத்திலோ, பலவானுகவோ இருக்க க்ருஷி, பசு, பூமிகளால் லாபம், இஷ்ட பந்து ஸமாகமம், தாமதமாக கார்யங்களின முடிவு, ஸ்திர வ்ருத்தி, பூமி ஸம்பந்தமான காரியம், சுபம், ஆரோக்யம், நடுவில் ராஜ ப்ரீதி, முடிவில் ராஜ பயம், அன்ய தேசம் செல்தல், தூர தேச கமனம், ஸம்பந்திகளின் மரியாதை நடக்கும். தசாநாதனுக்கு 6, 8, 12-லோ துர்பலனுகவோ இருக்க, தன தானயாதி ஹானி, மனக் கலக்கம், பந்துஜன நாசம், பிராத்ரு பிடை ஏற்படும். 8-க்கு அதிபனுகவோ, 2, 7-க்குடையவனுடன் சேர்ந்தோ இருக்க கடன் தொந்தரவால் மான ஹானி, வாஹன வஸ்த்ராதிகளை விற்றல், ராஜாங்க ஜன விரோதம், பந்தனம், சத்ரு பிடை, அபமிருத்யு பயமேற்படும், சந்த்ர சாந்தி, துர்காஸப்தசதீ பாராயணம் முதலிய வைகளைப் பரிகாரமாகச் செய்ய வேண்டும்.

கேது தசை செவ்வாய் புக்தி மாதம் 4, நாள் 27.

செவ்வாய் கேந்த்ர- த்ரிகோண, ஸ்வக்ஷேத்ர, உச்ச க்ஷேத்ர, மித்ர க்ஷேத்ர, சுபாம்ச, சுபவர்க்கத்தை அடைய ஆதியில் சுப பலனும், க்ராம, பூமி, தன, தான்ய, பிராணி, க்ருஹ, க்ஷேத்ர, உத்யான லாபமும், ராஜாநுக்ரஹமும் உண்டாகும். தர்மகர்மாதி பர்களுடன் சேர ப்ராத்ரு மூலம் தன லாபம், தசாநாதனுக்குக் கேந்த்ரம், த்ரிகோணம், த்ருதிய லாப ஸ்தானங்களிலிருக்க ப்ரபு ப்ரீதி, யசோ லாபம், புத்ர மித்ர ஸௌக்யம், ரத்னபரண லாபம், அதிகார மேன்மை, அதிக உத்ஸாகம், புத்ர லாபம், கல்யாணம், பந்து தரிசனமுண்டாகும். செவ்வாய் 6, 8, 12-லிருந்தாலும், தசாநாதனுக்கு இரண்டிலிருந்தாலும், சீக்ரம் மரணம் அல்லது அன்ய தேச வாஸம், ஆபத்து, பிரமமுண்டாகும். பாப க்ரஹத் துடன் சேர்ந்திருக்க ராஜ சோராக்னி பிடை, பிரமேஹம், மூத்ர க்ருச்ச்ரம், கடன் தொல்லை ஏற்படும். பந்து கலஹம், ப்ராத்ரு வர்கத்தில் தன ஹானி, ஸ்தான நாசம், மனத் துக்கம், யத்ன கார்ய நாசம் நடக்கும். 2, 7-இடங்களிலிருந்தாலும், மாரகருடன் சேர்ந்திருந்தாலும், சரீரத்தில் புண் தாப ஜ்வரங்களால் பயம்,

களத்ர நாசம் உண்டாகும். விருஷப தானம் செய்ய தோஷம் விலகும்.

கேது தசை ராகு புக்தி வருஷம் 1, நாள் 18.

ராகு உச்ச மித்ர க்ஷேத்ர, ஸ்வக்ஷேத்ர, கேந்த்ர, த்ரிகோண லாப த்ருதிய தன ஸ்தானங்களிலிருந்தாலும், சுபர்களுடன் சேர்ந்திருந்தாலும், நீச ஜாதி ப்ரபுக்கள் மூலமாக ஸௌக்யமும், வியவஹாரத்தால் அர்த்த லாபம், நீச ஸ்த்ரீ ஸங்கமம், அபூர்வ வஸ்து லாபம், க்ராம, பூமி லாபம், க்ருஹத்தில் கல்யாண விருத்தி, ரத்ன பூஷணம் வாங்குதல், அரசர்கள் மூலம் கார்ய ஸித்தி வியாபாரத்தில் தன லாபம், பிரயாணத்தில் மித்ர ப்ராப்தி, தேவ தோத்ஸவ தரிசனம் உண்டாகும். புக்தியின் ஆரம்பத்தில் க்லேசம், மத்தியிலும் கடைசியிலும் ஸௌக்யம் ஏற்படும். ராகு 8, 12-ல் வாஸம், பாப க்ரஹத்துடன் சேர்க்கை ஏற்பட, நான்கு நாள் முறைக் காய்ச்சல், ராஜ தண்டத்தால் தன நாசம், தார துக்கம், புத்ர நாசம், ஸ்தான சலனம், அகல்மாத்ருகம், மனோ துக்கம், பிரமேஹம, சூல ரோகங்களுண்டாகும். பாப விக்ஷணம் பெற க்ஷுத்ரோபத்ரவங்களின் பாதை யேற்படும், ராகு 2, 7-களிலிருந்தால் அபமிருத்யு பிடை யுண்டாகும். துர்கா ஸப்தசதி ஜபம் ஆயுஷ்ய ஹோமம் முதலியன செய்யவும்.

கேது தசை குரு புக்தி மாதம் 11, நாள் 6.

குரு கேந்த்ர லாப த்ரிகோண உச்ச ஸ்வக்ஷேத்ரங்களிலிருந்தாலும், லக்னேச கர்ம பாக்யாதிபனுடன் சேர்ந்தாலும், தன தான்ய ஸம்பத்துகள், ராஜ ப்ரீதி, உத்ஸாஹம், குதிரை, பல்லக்கு லாபம், புண்ய தீர்த்த ஸ்நான பலன், ஸத் கர்மாசரணம், க்ருஹத்தில் கல்யாண ஸம்பத்து, புத்ர லாபம், உத்ஸவம், இஷ்ட தேவதானுக்ரஹத்தால் கார்ய லாபம், ராஜ ஸல்லாபம், நூதன ப்ரபு தரிசனம் இவைகளேற்படும். லக்னத்துக்கும் தசாநாதனுக்கும் 6, 8, 12 நீச ராசிகளிலிருக்க சோராக்னி ரிண விஷங்களால் பயம், தன தான்யாதி நாசம், புத்ர தார வியோகம், அதிக க்லேசம் இவைகளுண்டாகும். ஆரம்பத்தில் சுப பலனும், அந்தத்தில் க்லேசமுமுண்டாகும். தசாநாதனுக்கு கேந்த்ர கோண த்ருதிய லாப ஸ்தானங்களிலிருந்தாலும், சுபரோடு சேர்ந்தாலும், ராஜ ப்ரீதி, விசித்ர வஸ்த்ர பூஷண லாபம், தூர தேச ப்ரயாணம், ஸ்வ பந்து ஜன போஷணம், வஸ்த்ரம், பசு லாபத்துடன்

ஆரம்பத்தில் சரீர பிடை, அந்தத்தில் ஸ்தானசலனம், எதிர் பாராத சண்டைகள் நடக்கும். 2-7-களில் வாஸம், மாரக க்ரஹத்துடன் சேர்க்கை ஏற்பட; ஸ்தான நாசம், ராஜ பயம் வியாபாரத்தால் தன நாசம், மானக் குறைவு, புத்தி தடுமாறுதல், காராக்ருஹ ப்ரவேசம், மாதாவுக்கு அரிஷ்டம், கார்யஹானி, விடு முதலியவைகளை விக்ரயம் செய்தல், வாதஸிலேஷ்மரோக உபத்ரவம் புத்ர நாசம், அபம்ருத்யுபயம், குன்ம ரோகம் இவைகள் உண்டாகும். இத்தோஷம் விலக சிவ ஸஹஸ்ரநாம ஜபம், சிவ ஸங்கல்ப படனம் செய்விக்கவேண்டும்.

கேது தசை சனி புக்தி வருஷம் 1, மாதம் 1, நாள் 9.

சனி, கேந்த்ர லாப த்ரிகோண ஸ்வாம்ச உச்ச ஸ்வக்ஷேத்ர சுவாம்சத்திலிருந்தாலும், சுபருடன் சேர்ந்திருந்தாலும், வஸ்த்ராபரண லாபம், ஸர்வ கார்ய ஸித்தி, கல்யாணம், பந்து ஸம்மானம், விபரீத ராஜயோகத்தால் தன லாபம், அதிகார மேன்மை, நீச ஜாதி ப்ரபுக்கள் மூலம் ஸௌக்யம், புண்ய தீர்த்த பல லாபம், நிச்சயமாக புத்ரோத்பத்தி ஏற்படும். சுப வீக்ஷணம் பெற ஸர்வ கார்யங்களுக்கும் ஸாதகம், தன யஜமானனுக்கு சுகம், அலைச்சல், அழகிய வீடு, தன ஊரில் சுகம், சனிக்கிழமையில் ராஜ தரிசனம் கிடைக்கும். 6-8-12, நீச வீடுகளிலிருப்பு, பாப க்ரஹத்துடன் சேர்க்கை ஏற்பட ஸ்தான நாசம், பந்து நாசம், அரசன் மூலம் தனக் குறைவு, மாதா பிதாக்களின் மரண மூலம் பயம், புத்திக் கலக்கம், புத்ர நாசம், பிறர் க்ருஹத்தில் வாஸம், சோராக்னிரிபு பிடை, பந்தனம், கார்யஹானி, மானக் குறைவு, மனோ வியாதி, நீச ஸ்த்ரீ ஸங்கம், இழிதொழிலில் பற்றுதல் ஏற்படும். 2-7-க்குடையவனுடைய அபம்ருத்யு பயம் உண்டாகிறது. இப் பயம் விலக நில ஹோமம், மிருத்யுஞ்ஜய ஜபம், கருப்புப் பசு, எருமை தானம்— இவைகள் செய்ய ஸர்வ ஸம்பத்துகளுடன் ஆரோக்யத்தை அடைவான்.

கேது தசை புத புக்தி மாதம் 11, நாள் 27.

புதன், கேந்த்ரம், லாப ஸ்தானம் த்ரிகோணம், உச்ச ராசி, தன் வீடு, மித்ர க்ருஹம் இவைகளிலிருக்க; ராஜ்ய லாபம், அதிக சுகம், நற்கதை கேட்டல், தானம், விவாஹம், தர்மம் செய்தல், பூமி லாபம், புத்ர லாபம், சுபஸமாகமம், கார்ய ஸித்தி ஏற்படும். தர்ம கர்மாதிபர்களுடன் சேர, பாக்ய வ்ருத்தி, வித்வத்கோஷ்டி

ஸமாகமம், ஆபரணாதி லாபம், முயற்சிக்கு அதிக பலன், ஸந்தோஷம், க்ரந்தங்களின் சோதனம் நடைபெறும். புதன் 6-8-12-லோ சனி செவ்வாய் ராகுகளின் ஸம்பந்தம அல்லது பார்வை பெற்றாலோ, ராஜ கார்ய விரோதம், அன்ய க்ருஹ வாஸம், வாஹன வஸ்த்ர பசு தன தான்யங்களின் நாசமும் உண்டாகும். புக்தியின் ஆரம்பத்தில் சோபனமும், மத்யத்தில் ஸௌக்யமும், தன லாபமும், அந்தத்தில் துக்கமும் களத்ர புத்ராதி பீடையுமேற்படும். தசாநாதனுக்கு கேந்த்ர லாப த்ரி கோணங்களிலிருக்க தேஹாரோக்யம், அதிக லாபம், புத்ர கல்யாண வைபவம், போஜன வஸ்த்ர பசு லாபம், முயற்சியால் அதிக பலன் உண்டாகும். தசாநாதனுக்கு 6-8-12 லோ, துர்பலனாகவோ இருக்க ராஜ பீதி, இடையில் புண்ய நீர்த்த ஸ்னானமும், ஆதியில் அதிக கிலேசமும், தார புத்ராதி பீடையுமேற்படும், 27-க்கு அதிபனுடைய அபம்ருத்யுவேற்படும். விஷ்ணு ஸஹஸ்ர நாம ஜபம், ஸுதர்சன மந்த்ர ஜபம் செய்யவேண்டும்.

சுக்ர தசை பொதுப் பலன்.

சுக்ரன் அத்யுச்சத்திலிருக்க, அவன் தசையில் மதத்துடன் விளையாட்டு, விரும்பிய பொருளை அனுபவித்தல், மாலை வஸ்த்ரம் நல்ல போஜனம், சய்யை, புத்ரன், தனம் ஸ்த்ரீகளுடன் கூடின வனுக ஆகிறான். உச்சத்திலிருக்கும் சுக்ர தசையில், ஸ்த்ரீ சேர்க்கையினால் பொருள் நஷ்டம், விர்த்த தர்மம், மாதா பித்ருக்களின விநாசம், தலைவலி, துக்கம், ராஜ ஸம்மானம் ஏற்படும். உச்சத்திலிருக்கும் க்ரஹத்துடன் சேர, உத்யோக மஹத்வம், உயர்ந்தவர்களுக்கும் அதிபதியாதல், ஸ்வர்ண வஸ்த்ர ரத்ன பூஷண வாஹனாதி லாபம், பேரீ ம்ருதங்க பணவாதி வாத்ய நுபவம் ஏற்படும். அதி நீசராசியிலிருக்க பய ரோகங்களால் கஷ்டப்படுபவனுகவும், பயனில்லாத கார்யங்களில் பற்றுடைய வனுகவும், அர்த்த-தார-புத்ரர்களின் பிடையை அடைந்தவனுகவு மாவான். நீசத்தை அடைந்த க்ரஹத்துடன் சேர; அதிக பயம், அபவாத தோஷங்களை அடைகிறான். அதிமித்ர ராசியிலிருக்கும் சுக்ர தசையில், பசு, தனம், அச்வம், யானை ரதங்களுடன் எல்லா வித வாத்யத்துடன் ஸம்மான ஸௌக்யத்தை அடைகிறான், மித்ர க்ஷேத்ரத்திலிருக்க பரோபகாரி, சாஸ்த்ர விதிகளறிந்தவன், பாக்கு பயிரிடுபவன், பலருடன் ஸஞ்சரிப்பவன், தனவானுகிறான்.

ஸமக்ஷேத்ரத்திலிருக்க ப்ரமேஹமும், குன்மம், நேத்ரம் குதம்-இவை களில் வியாதி, சோராக்னி ந்ருப பயம், கடுவில் சிறிது சுகம், தன விஷயமான கவிகள் முதலியவற்றை அடைகிறான். சத்ரு க்ஷேத் ரத்தில் வலிக்கும் சுக்ர தசையில் புத்ரார்த்த களத்ர ஹானி, தளர்வுள்ள தேஹம், குன்மம், கண் வியாதி, விஷூசி முதலிய வைகளை அடைகிறான். ஆரோஹத்தில் தான்ய, வஸ்த்ர, அலங் கார காந்திகளால் பூஜிக்கத் தக்கவனுகவும், ஆரம்பித்த காரியத் தில் ஸித்தியையும், ஸ்வஜன விரோதமுள்ளவனுகவும், மாத்ரு வர்க விநாசத்தையும், பரதார கமனத்தையும் அடைகிறான். அவரோஹத்தில் கொடிய ஸ்வபாவமுள்ள வேசியின் ஸம்பந்தம், தன லாபம், ஸ்த்ரீ, புத்ர, பந்துக்களின் பிடையால் மனவிகாரம், ஹ்ருதய சூலம், மன்மத பிடைகளை அடைகிறான். துலாராசியில் இருக்கும் சுக்ர தசையில் உயர்ந்த ஆதிபத்யம், க்ரய விக்ரயங் களில் ஸமர்த்யம், தனம், கீர்த்திகளையுடையவனுகவும், முறை அறிந்தவனுகவுமாவான். ஸ்வக்ஷேத்ரத்திலிருக்கும் சுக்ர தசையில் ஸ்த்ரீ, புத்ர, மித்ரர்களால் தன லாபம், சௌரியம், கித்யோத் ஸாஹம், த்வேஷம், பரோபகாரம், பெரிய தன்மைகளையுமடை கிறான். கேந்த்ரத்திலிருக்க, வாஹனம், வஸ்த்ரம், ஆபரணங் களால் அலங்கரிக்கப்பட்ட தேஹ காந்தி, தொழில் மூலம் தனம், பூமி, கிருஷி, வாஹன, வஸ்த்ர, ஆயுத லாபம், துர்க கமனம், வன வாஸம், ஜலாபிஷேகம்-இவைகளை அடைகிறான்.

சுக்ர தசை சுக்ர புக்தி வருஷம் 3, மாஸம் 4.

சுக்ரன் லக்னத்துக்கு கேந்த்ர, த்ரிகோண, லாப ஸ்தானங் களிலோ, பலவானுகவோ இருக்க; சிறந்த யோகவானுவான். ப்ராம்மணன் மூலம் தனுகமம். கோமஹிஷ்யாதி லாபம், புத்ரோத் ஸவ ஸந்தோஷம், விட்டில் கல்யாண சம்பவம், ஸாதுக்கள் மரியாதை, ராஜ ஸம்மானம் முதலியன நடைபெறும். சுக்ரன் உச்ச, ஸ்வ க்ஷேத்ரத்தில், உச்ச நவாம்சம், தன் நவாம்சங்களி லிருக்க நூதன க்ருஹ நிர்மாணம், மிருஷ்டான்ன போஜனம், களத்ர-புத்ர விபவம், இஷ்டர்களுடன் போஜனம், அன்னதானம், தான தர்மாதிகள் செய்தல், மஹாராஜ ப்ரஸாதத்தால் வாஹன, வஸ்த்ர, பூஷண லாபம், முயற்சிக்குத் தக்க பலாவாப்தி, ப்ராஜ்ய லாபம், மேற்கில் பிரயாணமும், அங்கு வாஹன வஸ்த்ராபரணாதி

லாபமுமேற்படும். லக்னத்துக்கு 3, 6, 10, 11, மித்ராம்சம், உச்சாம்சம், லாபாம்சம் இவைகளிலிருந்தாலும், சுபதிருஷ்டி பெற்றாலும், யோககாரகனுடன் சேர்ந்திருந்தாலும், உத்தியோகலாபம், உத்ஸாஹம். சுபத்தை அளிக்கும் ராஜ ப்ரீதி. கல்யாண விபவம், தார-புத்ர விருத்தி, உத்யோக லாபம், கீர்த்தி விருத்தி, தன லாபம் கற்காரியம் கூடத்தல், பூமி லாபம், க்ருஹ நிர்மாணம், காரிய ஜயம் உண்டாகும், தர்ம கர்மாதிபர்களின் யோகமிருக்க ராஜயோகமேற்படும். 6, 8, 12-ல் வாஸம், பாப யோகம், பாப வீக்ஷணம் பெற, திருடன், ஸர்பம், விரணங்களால் பயம், ஜன பிடை, ராஜத்வாரத்தில் ஜனத்வேஷம், இஷ்ட பந்து விநாசம், தார-புத்ராதி பிடை, ஸர்வகார்யார்த்த நாசம், பந்து ஜனக்லேசம், மாத்ரு நாசம், மனோ வியாதி, கலகம், தன ஹானி, கடன் ஹிம்ஸை, களத்ர கர்ப்ப நாசம், பந்தனம், மானக் குறைவு, ஆரம்பித்த காரியத்துக்கு இடையூறு, ஜ்ஞாதி மரணம்-இவைகளேற்படும். 2, 7-க்கு அதிபனாகிவர், அங்கு வசிப்பவனாகிவர் ஆனால், மரண பயமேற்படும், துர்கா ஸஹஸ்ரநாமார்ச்சனை, கோதானம், ப்ராம்மண போஜனம் முதலியவைகளைச் செய்ய வேண்டும்.

சுக்ர தசை சூரிய புக்தி வருஷம் 1.

சூரியன் லக்னத் கேந்த்ர த்ரிகோண வாஸம், சுபக்ரஹ யோகம், தனசுகாதிபர்களுடன் சேர்க்கை தசாநாதனுக்கு கேந்த்ர கோணாதி வாஸம், உச்சாம்சம் தன அம்சத்திலிருக்க; ப்ராத்ரு புத்ர லாபம், பூமி, தான்ய, தன ஸங்க்ரஹம், சத்ரு நாசம், ரோக ஹானி, யசஸ், சுகம், ஸத்கர்த்த படனம், கல்யாணம், பந்துபூஜை, வாஹன வஸ்த்ராதி லாபம். யோகிஜன சேர்க்கை, அரண்ய க்ராம வாசம், நிர்த்த யாத்திரை முதலியன நடக்கும். மேலும், தன பிரபுவுக்கு ஸௌக்யம், இஷ்ட பந்து ஸமாகமம், மாதா பித்ருக்களின் சுகப்ராப்தி, சிறந்த சுகங்களுண்டாகும். 6, 8, 12-ல் வாசம், சேஷ்டதல், பாப க்ரஹ யோகமிருக்க; பந்தனம், ஸ்தான நாசம், ஸந்தாபம், ராஜ விட்வரம், பித்ரு-மாத்ரு வியோகம், கடனால் அதிக ஹிம்ஸை, சுற்றத்தாரில் எல்லா வழியிலும் கஷ்டம், எப்போதும் கொடுமையே பேசல், விரணத்தால் பிடை, ஜ்வரத்தால் ரிஷம், ராஜ த்வாரத்தில் விரோதம், பலவித வியாதி பயம். க்ரஹ க்ஷேத்ராதி நாசம் ஏற்படும். சூரியன் 7-க்குடையவனானால் க்ஷேத்

ரங்களால் பிடையுண்டாகும். பரிஹாரமாக சூரிய ப்ரீதியைச் செய்விக்க வேண்டும்.

சுக்ர தசை சந்த்ர புக்தி வருஷம் 1, மாதம் 8.

சந்த்ரன் கேந்த்ரம், லாபம் த்ரிகோணம், உச்ச வீடு, சொந்த வீடு-இவைகளில் வாசம் தர்ம கர்மாதிப யோகம், சுபஸம்பந்தம் பெற்றாலும், பூர்ண சந்த்ரனாக விருந்தாலும், கங்காதி புண்ய நதீஸ்நான பலன், தேவ ப்ராஹ்மணர்களின் தரிசனம், மஹாராஜ ப்ரஸாதத்தால் கணக்கற்ற ஐச்வர்ய லாபம், தேவதார்ய ப்ரஸங்கம், வித்வத் கோஷ்டி ஸமாகமம் கோமஹிஷ்யாதி லாபம், வியவஸாயத்தில் அதிக பலன், போஜன, வஸ்த்ர ஸௌக்யம், பந்துக்களுடன் விருந்துணல், வஸ்த்ர பூஷண லாபம், ஸ்திரீ ஸௌக்யம், தன வரவு, தான்யம், பூமி, பசு ப்ராப்தி, அழகான வீடு கட்டல், வியாபாரத்தால் காரிய ஸித்தி, அதிக சுகமேற்படும். சந்த்ரன் ஸ்த்ரீத்வம், அல்பத்வத்வம் அடைந்தாலும், 6, 8, 12-லிருந்தாலும், தன நாசம், அஸ்திரதலால் பயம், ஆயாஸம், மனஸ்தாபம், ராஜ த்வார விரோதம் அன்ய தேசம் செல்தல், தீர்த்த யாத்ரா பலன், தார-புத்ர பிடை, பந்து வியோகம், ஆப்த பந்து விரோதம், சுற்றத்தாரில் மரண ஸம்பவம், தேக ஜாட்யம், ப்ருத்ய விரோதம், ருணபாதை ஏற்படுகின்றன. சந்த்ரன் தசாநாதனுக்கு கேந்த்ர லாப த்ரிகோண வியயங்களிலிருந்தால் ராஜ ப்ரீதி, தேச க்ராமாதிபத்யம், தைர்யம் யசஸ், சுகம், கீர்த்தி, வாஹனம், வஸ்த்ரம், ஆபரண லாபம், வாபீ கூப தடாக உத்யானாதி நிர்மாணம், தன ஸங்க்ரஹ மேற்படும், புக்தியின் ஆதியில் சுகம், முடிவில் துக்கம் உண்டாகும், துர்கா தேவி ஜபம் செய்ய உத்தமம்.

சுக்ர தசை செவ்வாய் புக்தி வருஷம் 1, மாதம் 2.

செவ்வாய் கேந்த்ர த்ரிகோண ஸ்வோச்ச ஸ்வக்ஷேத்ர லாப ஸ்தானங்களில் வாஸமோ, பலவானாகிவர், லக்னாதிப ஸம்பந்தம், தர்ம கர்மாதிப யோகம் ஏற்பட; ராஜ யோகாதி ஸம்பத்து, சுப சோபனங்கள், வஸ்த்ர, ஆபரண, பூமி முதலிய இஷ்ட ஸித்தி, சுகப்ராப்தி, புத்ரோத்ஸவம், க்ருஹத்தில் கல்யாண ஸம்பவம், கல் இழைத்த ஆபரண ப்ராப்தி, தன லாபம், சத்ரு நாசம் முதலியன ஸம்பவிக்கும், செவ்வாய் லக்ன-தசாநாதனுக்கு 6, 8, 12-ல் வாசமோ, ஸேதவமோ அடைய; குளிர் ஜ்வரம், தாய் தகப்பன்

களுக்குப் பயம், ஸ்தான ப்ரம்சம், மனோ ரோகம், பந்து ஜனக் குறைவு, கலகம், ராஜ பிடை, தன தான்ய வியயம், இஷ்ட பல னேற்பட்டாமை, க்ராம பூமியாதி ஹானிகளேற்படும். 2, 7-க்கு அதிபனுதில் தேஹ பிடை ஏற்படும். ஸௌக்யமாவதற்கு ஸுப்ர மண்ய ஜபம் விருஷப தானம் செய்ய உத்தமம்.

சுக்ர தசை ராகு புக்தி வருஷம் 3.

ராகு கேந்த்ர லாப த்ரிகோணத்தில் விருஷப ராசியில் வாஸம், சுபவீக்ஷணம், யோக காரக ஸம்பந்தமேற்பட; அதிக ஸௌக்யம், தன தான்யாதி லாபம், இஷ்ட பந்து ஸமாகமம், போஜன வஸ்த்ராதி ப்ராப்தி, யாத்ரையில் கார்ய ஸித்தி, பகவத்க்ஷேத்ராதி ஸம்பவம் ஏற்படும். 3, 6, 10, 11-களிலிருக்க சுகமுண்டாகும். சத்ரு நாசம், உத்ஸாஹம், ப்ரபு ப்ரீதி முதலியன ஆரம்ப காலத்தில் ஐந்து மாத காலம் நடைபெறும். முடிவில் அஜீர்ணம், கார்ய விக்னம், ஸஞ் சாரத்தில் மனதுக்கு க்லேசம் ஏற்படும். இதன் பிறகு அதிக சுகம், ஸௌபாக்யங்களின் அனுபவம், தென்மேற்தில் யாத்ரை, அங்கு ப்ரபு தரிசனம், கார்ய ஸித்தி, புத்ர லாபம், சுபப்ராப்தி, உத்யோக ஸித்தி, அன்ய ஸ்த்ரீ யோகம், ராஜ த்வாரத்தில் கார்ய நன்மை, யசோதன வ்ருத்தி, கல்யாணம், பந்து ஸம்மானம், களத்ர ஸௌக்யம், ஸ்த்ரீ மூலம் தனுகமம், ப்ரபுவுக்கு அதிக சுகம், ரத்ன பூஷண ப்ராப்தி, திருடன் மூலம் தன லாபம், பசு, வாஹன ப்ராப்தி, உன்னத ஸ்தான மடைதல், தேவாத்ய ச்ரவணம், குரு தெய்வ தரிசனம், கஷ்டமான தன-தான்ய லாபம், அன்ய தேச வாஸம் நடைபெறும். தசாநாதன் லக்னங்களுக்கு 6, 8, 12-லோ, நீசத்திலோ இருக்க; பித்ரு-மாத்ரு க்ரியை, ராஜ த்வேஷம், பந்து நாசம், ஸ்தான நாசம், த்ரவ்ய நாசம், பந்தனம், அன்ய தேச வாஸம், சரீர ஜாட்யம், கார்யத்துக்கு இடையூறு, அபம்ருத்யு பயம் முதலியன ஏற்படும். ராகு 2, 7-ஸ்தானங்களிலிருந்தால் ஆலஸ்ய மேற்படும். துர்கா தேவி ஜபம், ஸ்வர்ண தானம் செய்ய சாந்தியுண்டாகும்.

சுக்ர தசை குரு புக்தி வருஷம் 2, மாதம் 8.

குரு உச்ச ஸ்வக்ஷேத்ர கேந்த்ர த்ரிகோண ஸ்வ நவாம்ச சுப நவாம்ச மித்ர க்ஷேத்ரங்களிலிருந்தாலும், பாக்ய கர்மாதிபர் களுடன் சேர்ந்தாலும், தசாநாதனுக்கு கேந்த்ர த்ரிகோணங்களி

லிருந்தாலும், இழந்த உத்யோகம், தனம் முதலியவைகளின் லாபம், விரும்பிய அர்த்த வஸ்த்ராதி லாபம், மித்ர பரபு ஸ்தல ஸம்மானம், தன தான்யங்களின உயர்திலை, கீர்த்தி, அச்வ-வாஹன லாபம், வித்வஜ் ஜன ஸஹவாஸம், சாஸ்த்ரார்த்த பரிசயம், புத்ரோத்ஸவம, இஷ்ட பந்து ஸமாகமம், பித்ரு-மாத்ரு சுகபராப்தி, ப்ராத்ரு புத்ராதி ஸௌக்யம், வியாபார, உத்யோக லாபம், பிராணி ரக்ஷணம் தென்மேற்தில் பிரயாணம் பந்து தரிசனம, அச்வ ப்ராப்தி, ரத்னபரண லாபங்களும உண்டாகும். 6, 8, 12-ல் அல்லது பாப க்ரஹத்துடன் சேர்ந்து இருந்தால் ராஜ சோராக்னி பிடை தேஹ ஜாட்யம், மனோரோகம், ஆத்ம, பந்து கஷ்டம் ஸ்தான ப்ரம்சம், அலேச்சல், பல ரோகங்களு முண்டாகும். 2, 7-களிலிருந்தாலும், மாரக க்ரஹ ஸம்யோக மிருந்தாலும் தேஹ ஜாட்யம், கார்ய ஹானி, அபம்ருத்யு-இவை களுண்டாகின்றன. இவைகள் விலக ம்ருத்யுஞ்ஜய ஜபம் செய்யவும்.

சுக்ர தசை சனி புக்தி வருஷம் 3, மாதம் 2.

சனி உச்ச க்ஷேத்ரத்திலோ, பரமோச்ச பாகத்திலோ, ஸ்வ க்ஷேத்ரம், கேந்த்ரம், த்ரிகோணம், உச்ச நவாம்சம், ஸ்வநவாம்சங் களிலோ இருக்க, அதிக ஸௌக்யம், இஷ்ட பந்து ஸமாகமம், ஸாது பூஜை, பலவித மரியாதை, பெண் வருகை, புண்ய தீர்த்த தான-தர்மாதி ஸங்க்ரஹம் ஏற்படும். தசாநாதனுக்கு கேந்த்ர கோணங்களில் அல்லது 3, 11-களிலிருக்க புத்ர பௌத்ர ஸுக ப்ராப்தி, தன யஜமானனுக்கு விசேஷ வஸ்தி, கல்யாணம், பந்து ஸம்மானம், வியாபாரத்தில் தன லாபம், புராண தர்மச்ரவணம், புத்ர லாபம், தனுகமம், மேற்கு திசையில் பிரயாணம் செய்வதால் காரிய ஸித்தி, ராஜ மூலம் தனப்ராப்தி, அன்யஸ்த்ரீபோகம், இழி தொழில் செய்தல், இஷ்டமித்ரர்கள் மூலம் சுகம்—இவைகள் நடக்கும். லக்னம் அல்லது தசாநாதனுக்கு 6, 8, 12-லிருக்க கீழ் ஜாதியினர் வீட்டில் வாஸம், பந்தனம், ராஜ தண்டனம், ஸ்தானப்ரம்சம், மனோ துக்கம், கடன் நிர்மூலம், தன விரயம், விரும்பிய பலன் இடையூறாமை, வாஹன வஸ்த்ர நாசம், ஜ்வரணக்னி ஜ்வர பிடை, திருடர் பயம், மன வியாதியும் நடக்கும். 2, 7-க்கு அதி பதியாகவோ, மாரகருடன் சேர்ந்தோ இருக்க; தேஹ ஜாட்யம்

கார்ய ஹானி, அபம்ருத்யு ஏற்படும். இத்தோஷம் விலக மிருத்யுஞ்ஜய ஜபம், சனி சாந்திகளைச் செய்யவும்.

சுக்ர தசை புத புக்தி வருஷம் 2, மாதம் 10.

புதன் கேந்த்ர லாப த்ரிகோண ஸ்வோச்ச ஸ்வக்ஷேத்ரங்களிலிருந்தால் ராஜ ப்ரீதி, சுபம், ஸௌபாக்யம், புத்ர லாபம், நல்வழியில் தன லாபம், புராண தர்ம ச்ரவணம், சிருங்காரமுடைய ஜனங்களின் சேர்க்கை, இஷ்ட பந்து ஸமாகமம், ப்ராம்மண ப்ரபுயோகம், தன் யஜமானனுக்கு அதிக ஸௌக்யம், நித்யம் அறுசுவை போஜனம், யாக கர்ம ப்ரவ்ருத்தி, அழகான க்ருஹத்தில் இருப்பு, வியாபாரம், வைசியன் மூலமாக நிரவிய லாபம், பிரயாணத்தில் காரிய ஸித்தி, தான தர்மாதி சிந்தை, புதிய உத்யோகத்தால் ஸந்தோஷம், மனோல்லாஸம், தீர்த்தயாத்ரா ப்ரயோஜன லாபம், யோகிதர்சனம் இவைகள் கடைபெறும். புதன் 6-8-12-ல் வாஸம் நீசவீட்டிலிருப்பு, பாப ஸஹவாஸம், தசநாதனுக்கு 6, 8, 12, நீச ராசி, சத்ரு ராசி-இவைகளில் இருந்தாலும் பித்ருமாத்ருவியோகம், வியாபாரத்தில் தனநாசம், எதிர்பாராத கலஹம், ராஜ தண்டத்தால் ஹானி, சிறை வாஸம், களத்ர நாசம், மனோவியதை, கடன் வாங்கியதால் கஷ்டம், அன்ய தேசம் செல்தல், களத்ர புத்ர ஹானி, மித்ர பந்து விரோதம் ஏற்படும். 2, 7-க்கு அதிபனுடைவோ மாரகக்ரஹஸம்பந்தமோ இருக்க; சீர ஜாட்யம், மனத் துக்கம், அபமிருத்யு ஏற்படும். விஷ்ணு ஸஹஸ்ரநாம ஜபம், சாஸ்த்ர முறைப்படி புத சாந்திகளைச் செய்யவேண்டும்.

சுக்ர தசை கேது புக்தி வருஷம் 1, மாதம் 2.

கேது விருச்சிகம், மீனங்களிலோ, யோக காரக சேர்க்கை பெற்றோ, ஸ்தான பலமடைந்தோ, கேந்த்ரகோணங்களிலிருந்தோ சுபக்ரகங்களுடன் கூடியோ இருக்க; பூமி ஸ்யாபிவ்ருத்தி, ரத்ன பரணப்ராப்தி, புக்தி ஆரம்பத்தில் அதிக சுகம், அறுசுவை போஜனம், வியவஸாயத்தால் அதிக பலன், கோமஹிஷ்யாதி விருத்தி, ஆச்சரிய வஸ்துப்ராப்தி, அன்ய ஸ்த்ரீ யோகம், ஸத்கதா ச்ரவணம், வியாபாரத்தால் தன ஸித்தி, மற்றவர் வீட்டிலிருப்பு, விதவாஸங்கம், பிரயாணத்தில் காரியத் தாழ்வு, புத்ர ப்ராப்தி, ராஜ பூஜை, யசோ லாபம், விதானன்ன போஜனம் இவைகளுண்டாகும். கேது 6, 8, 12-ல் வாஸம், நீசத்வம், தசாநாதனுக்கு 6, 8, 12-ல் வாஸம், பாப யோகம், பாப வீக்ஷணம்பெற; விஷசோராக்னி பாதை, வியாபாரத்தில் தன நாசம், சிரோரோகம், மனஸ்தாபம், பந்து த்வேஷம், பார்யா புத்ர வியோகாதி, மனக்கவலை, ராஜ தண்டனம், சரீரஜாட்யம், கார்ய ஹானி, பித்ருகர்மாதி ஸித்தி, சோரஸர்பவ்ரணங்களால் கஷ்டம், அதிக பயம் முதலியவை ஏற்படும். 2, 7-களிலிருக்க அபம்ருத்யு பயமுண்டாகும். துர்கா தேவி ஜபம், மேஷ தானம் செய்ய தோஷம் விலகி ஆரோக்யத்தை அடைவான்.

இதுவரை தசா புக்திகளின் பலன்கள் விவரிக்கப்பெற்றது. இதில் கூறிய பலனே ஏற்படுமென்று கருதக்கூடாது. பலன்களின் சுபாசுபங்களான வார்த்தைகளைக் கண்டு சுபாசுப பலன்களை ஊஹிக்கவேண்டும். அப்படி ஊஹிப்பதிலும் தேசம், காலம், மனிதனின் இயல்பு, அவன் வித்யை, குலம், தொழில் மற்றும் பல வகையான விஷயங்களை அநுசரித்துச் சொல்ல வேண்டும். உதாஹரணமாக ராஜ்ய லாபம் என்கிற விடத்தில் ஆனைவருக்கும் ராஜ்யம் கிடைக்கக்கூடுமா? ராஜ குலத்தில் பிறந்தவர்களுக்கு மட்டில் பொருந்தக் கூடியதல்லவா? அதுவும் இக்காலத்தில் பயன் படுவதற்கில்லை. ராஜ்யம் இல்லாத ராஜாக்கள் தானே அதிகம். ஆகவே, இவ்விடத்தில் உத்யோகம், தொழில் முதலியவைகளைச் சொல்லலாம். ராஜா மஹாராஜா என்கிற இடங்களில் அதிகாரி, மேலதிகாரி என்கிற முறையில் ஊஹிப்பது. க்ரஹங்களின் பலத்தை அநுஸரித்து சில வார்த்தை அளவிலும் சில ஸ்வப்னத்தில் காண்பதிலும்கூட பலன் அனுபவித்ததாய் விடுகிறது. ஜ்யோதிச் சாஸ்த்ரம் 12 ராசிகள், 27 நக்ஷத்ரங்கள், 9 க்ரஹங்களை வைத்துக்கொண்டு பலன் சொல்கிறதில்; 40 கோடி மக்களில் ஒருவர் மாதிரி மற்றொருவரில்லாமையாலும், ஒரு தேசத்தில் இருப்பது மற்ற தேசத்தில் இல்லாமையாலும், எல்லோருக்கும் பொதுவாகவே கூறுகிறபடியால் அதிகாராநுகுணமாகப் பொருத்தும்படி பலனைப் பார்த்துக்கொள்வது அவசியம். பலன்கள் அனைத்தும் பொருந்தியே ஆகவேண்டுமென்பதுமில்லை சில பலன்கள் மட்டில் சிலருக்கு உண்டாகலாம். இவ்விதம் ஆராய்ந்து அதிகாராநுகுணமாகவும் கால தேசங்களுக்கு அநுகுணமாகவும் பலனைக் கண்டறியாமல் சாஸ்த்ரத்தைப் பழிப்பது எவ்விதத்திலும் நியாயமாகாது. பொது முறையில் கூறியிருப்

பதை அவரவர்களுக்குத் தக்கபடி ஏற்றுக்கொள்வதுதான் முறை. பெரிய ஆற்றில் பூர்ணமாக நீரின் ப்ரவாஹம் சென்றாலும் அவ் வளவையும் ஒருவரே எடுத்துக்கொள்வது என்பதை எங்கேனும் காண்கிறோமா? அது உலக மக்கள் அனைவருக்குமாக ப்ரவஹிக்கிற படியால் அவரவர்கள் தங்கள் தங்கள் தேவைகளே தங்கள் சக்திக் கநுஸாரம்தானே உபயோகப்படுத்திக்கொள்கிறார்கள். ஆகவே, சாஸ்த்ரத்தை விணுகப் பழிக்காமல், தேச காலாதிகளே அநு சரித்து அதிகாராநுகுணமாகப் பொருந்த வைத்துப் பலன் கண்டால் சோதிடனுக்கும் ச்ரேயஸ் பெருகும். சாஸ்த்ரமும் பொய்க்காது. இதைப்பற்றி இன்னும் விவரமாக எழுதுவது விணுகையால் இத்துடன் நிறுத்திக்கொள்ளப்பட்டது.

கோசர பலன்.

கோசர பலனைப் பார்ப்பதில் சந்த்ரனிருக்கும் ராசியையே லக்னமாகக் கொண்டு பார்க்க வேண்டும்.

சந்த்ர லக்னத்திலிருந்து 3, 6, 10-களில் சூரியன் ஸஞ்சரிக் கும்போதும், 1, 3, 6, 7, 10-களில் சந்த்ரன் வரும்போதும், 6, 3-களில் குஜ, சனிகள் வருங்காலத்திலும், 2, 4, 6, 8, 10-களில் புதன் ஸஞ்சரிக்கும் போதும், 2, 5, 7, 9-இடங்களில் குரு வரும் போதும், 1, 2, 3, 4, 5, 8, 9, 12-களில் சுக்ரன் ஸஞ்சரிக்கும் காலத்திலும், எல்லா க்ரகங்களும் 11-ல் வரும்போதும், சுப பலனை அளிப்பார்கள். ராகு கேதுகள், சந்த்ர லக்னத்துக்கு 3, 6, 10-களில் வரும்போது நற்பலனை அளிப்பார்கள்.

சூரியனுக்கு: 4, 5, 9, 12-களிலிருப்பவர்களான சனி தவிர மற்ற க்ரஹங்களின் வேதம் கூடாது. சந்த்ரனுக்கு: 2, 4, 5, 8, 9, 12-களிலிருப்பவர்களான புதனைத் தவிர மற்ற க்ரஹங்களின் வேதம் கூடாது. செவ்வாய்க்கு: 5, 9, 12-களில் வலிக்கும் க்ரஹங் களாலும், சனி, சூரியர்களாலும் வேதம் கூடாது. புதனுக்கு: 1, 2, 3, 5, 8, 9, 11-களில் வலிப்பவர்களான சந்த்ரனைத் தவிர மற்ற க்ரஹங்களின் வேதம் கூடாது. குருவுக்கு: 3, 4, 8, 10, 12-களில் வலிப்பவர்களின் வேதம் கூடாது.

சூரியன்.

சந்த்ர லக்னத்தில், ரெமம், தன ஹானி, கோபம், ரோகம், அலைச்சல் உண்டாகும். 2-ல் செலவு, சுகக் குறைவு, ஏமாற்றம்,

பக்திகள்.

தசா புக்திகளின் தோஷங்களுக்குப் பரிஹாரமாக வாசிக்கக்கூடிய ஸ்ரீராமாயண ஸ்லோகங்கள்.

தசை	சூரியன்	சந்த்ரன்	செவ்வாய்	ராகு	குரு	சனி	புதன்	கேது	சுக்ரன்	நிவேதனம்
சூரியன்	பால-45	ஆர 18, 3 காலம்	அயோ-1, 2	பால-36	அயோ-17	யுத்த-91	பால-75	ஆர-68	அயோ-118	கரும்பு
சந்த்ரன்	ஹஷ்-3	உத்தர-53, 54	பால-19-22	பால-49	பால-1	ஆர-30	அயோ-26-30	ஆர-6	யுத்த-121	பால்
செவ்வாய்	பால-23	பால-17	உத்தர-76	யுத்த 59	சுந்தர 51	ஆர 70	பால-16	யுத்த-116	சுந்தர-53	பாயஸம்
ராகு	பால-70	உத்தர-31	உத்தர-16	யுத்த 50	ஹஷ்தி 26	சுந்தர-47	யுத்த-120	பால-76	சுந்தர-65	தேன
குரு	ஹஷ்-40	ஹஷ்தி-60-63	பால-5	ஆர-74	ஆர 5	அயோ-16	பால 15, 16	சுந்தர 61, 62	பால 77	வாழைப் பழம்
சனி	ஹஷ் 66	பால-26	ஹஷ்தி-50, 51	ஆர-44	யுத்த-1	சுந்தர-43	சுந்தர-54	ஹஷ்தி 6	சுந்தர 38	நாவற் பழம்
புதன்	யுத்த 94	அயோ-117	சுந்தர-27 6 தடவை	யுத்த 28	அயோ-74	யுத்த-111	பால-29 4 தடவை	சுந்தர 14	ஆரண்ய-9-10	திரா க்ஷை
கேது	அயோ-110	பால 22	அயோ-100	யுத்த 67	யுத்த-116	யுத்த-58	யுத்த-129	அயோ-22	சுந்தர 65	தேங் காய்
சுக்ரன்	பால 67	உத்தர-87, 90	அயோ-115	ஆர-4	பால-14	யுத்த-102	உத்தர-6, 7, 8	யுத்த 19-22	சுந்தர 36 ஸ்லோகங்கள்	கற் கண்டு. சுந்தர-33

பிடிவாதம் இவைகள் நேரும். 3-ல் நூதன ஸ்தான லாபம், தன விருத்தி, ஸந்தோஷம், ஆரோக்யம், சத்ரு நாசம் ஏற்படும். 4-ல் ரோகம், ஸ்திரீ போகம் தடைபடும். 5-ல் மனக் கலக்கம், ரோகம், மோஹங்களுண்டாகும். 6-ல் ரோக நாசம், சத்ரு நாசம், துக்கம், மோஹங்கள் போகும். 7-ல் பிரயாணம், வயிறு, குதங்களில் வியாதி, அடிமைப் படல், ஏழ்மையுமுண்டாகும். 8-ல் ரோகம், பயம், கலஹம், ராஜ பயம், உஷ்ணம் ஏற்படும். 9-ல் பிடை, அடிமையாதல், இஷ்ட மித்ர பந்து வியோகம், விருப்பத்துக்குக் குறைவு. 10-ல் க்ரூர கர்ம லித்தி. 11-ல் நூதன ஸ்தானம், பட்டம், ஐச்வர்யம், ரோக நாசம், 12-ல் துக்கம், தன ஹானி, நண்பர்கள் விரோதம், ஜ்வரம் முதலியன உண்டாகும்.

சந்த்ரன்.

லக்னத்தில் பாக்ய வ்ருத்தி. 2-ல் தன நாசம், 3-ல் ஜயம், 4-ல் பயம், 5-ல் சோகம், 6-ல் ஆரோக்யம். 7-ல் ஸுகம், 8-ல் அனிஷ்டம். 9 ல் வியாதி, 10-ல் இஷ்ட லித்தி. 11-ல் ஸந்தோஷம். 12-ல் செலவு.

செவ்வாய்.

1-ல் துக்கம், தன ஜனங்களின் பிரிவு, ரக்த-பித்த ஸம்பந்த ரோகங்களுண்டாகும். 2-ல் பயம், வார்த்தைக் கெடுதி, பணச் செலவு ஏற்படும். 3-ல் சத்ரு ஜயம், ஆபரண மூலமான ஸந்தோஷம். 4-ல் ஸ்தான ப்ரம்சம், வயிற்றில் வியாதி, பந்துக்கள் மூலம் துக்கம், 5-ல் ஜ்வரம், விண் கவலை, புத்ரன் மூலம் துக்கம், சுற்றத்தாருடன் மனத்தாங்கல். 6-ல் சத்ரு கலக நிவ்ருத்தி, ரோக சாந்தி, ஜயம், தன லாபம், கார்யங்களில் ஆநுகூல்யம், 7-ல் பார்யையுடன் சண்டை, கண் வியாதி, வயிற்று வலி, அஜீர்ண ரோகம், 8-ல் ஜ்வரம், ரக்த விகாரம், தன ஹானி, மான ஹானி, 9-ல் தன நாசம், அவமானம், பல ஹானி, தோல் முதலிய தாதுக்களின் அழிவு, மெதுவான நடை, 10-ல் துர்நடத்தை, கார்ய ஹானி, சிரமம், 11-ல் தன லாபம், ஆரோக்யம், பூமி விருத்தி, 12-ல் தன நாசம், உஷ்ண ரோகம், தாபம் இவைகளுண்டாகும்.

புதன்.

1-ல் தன நாசம், 2-ல் சம்பத்து, 3-ல் சத்ரு பயம், 4-ல் தன லாபம், 5-ல் களத்ர புத்ரர்களுடன் கலஹம், 6-ல் ஜயம், 7-ல் விரோதம், 8-ல் புத்ர தன லாபம், 9-ல் கார்யஹானி, 10-ல் ஸௌக்யம், 11 ல் புஷ்டி, 12-ல் அவமானம், பயம்.

குரு.

1-ல் வெளியூர் செல்லல், பணச் செலவு, விரோதம், 2-ல் தன லாபம், குடும்ப சுகம், வாக் ஜயம், 3-ல் ஸ்தான நாசம், இஷ்டர் கூடப் பிரிதல், கார்ய ஹானி, 4-ல் சுற்றத்தார் மூலமான துக்கம், அடிமைப்படல், பிராணி பயம், 5-ல் புத்ர லாபம், ஸஜ்ஜன ஸங்கமம், மேலோர்களின் அநுகூலம், 6-ல் ஜ்ஞாதி, சத்ரு, வியாதிகளால் பிடை, 7-ல் நல்காரிய லித்தி யாதரை, ஸ்திரீ ஸௌக்யம், புத்ர லாபம், 8-ல் வழி நடத்தல், துக்கம், தன நாசம், கஷ்டம், 9-ல் ஸகல நன்மைகளும் லாபமுமேற்படும், 10-ல் தனம்-ஸ்தானம்-புத்ரர்களுக்குப் பிடை, 11-ல் புத்ர லாபம், நூதன ஸ்தான லாபம், மரியாதை ஏற்படும். 12-ல் த்ரவிய மூலம் துக்கம், பயம்.

சுக்ரன்.

1-ல் விஷய போகம், 2-ல் தன லாபம், 3-ல் ஐச்வர்யம், 4-ல் சுகம், ஸ்நேக விருத்தி, 5-ல் புத்ர லாபம், 6-ல் ஆபத்து, 7-ல் களத்ர பிடை, 8-ல் ஸம்பத்து, 9-ல் சுகம், 10-ல் கலஹம், 11-ல் பய நிவ்ருத்தி, 12-ல் அர்த்த லாபம்.

சனி.

1-ல் அநாரோக்யம், ப்ரேத க்ரியை, 2-ல் த்ரவியம், புத்ரன் இவைகளின் நாசம், 3-ல் ஸ்தான லாபம், ப்ருத்ய லாபம், 4-ல் ஸ்திரீ, பந்து, பொருள் நாசம், 5-ல் தன-புத்தி-புத்ர நாசம், 6-ல் பல வழிகளிலும் ஸௌக்யம், 7-ல் ஸ்திரீகளுக்கு ரோகம், வழி நடத்தல், அவமானம், விண் பயம், 8-ல் புத்ரன், பசு, மித்ரன், த்ரவ்யங்களின் நாசம், வியாதி, 9-ல் ஏழ்மை, கார்யங்களுக்குக் கெடுதி, தகப்பன் முறையில் ஒருவர் மரணம், எப்போதும் துக்கம், 10-ல் நீய காரியத்தில் பிரவிருத்தி, மான ஹானி, ரோகம், 11-ல் ஸௌக்யம், ஐச்வர்ய லாபம், மேலான யசஸ், 12-ல் விஷ்ண காரியத்தால் அதிக சிரமம், சத்ருக்களால் தன நாசம், களத்ர-புத்ரர்களுக்கு வியாதி.

ராகு.

1-ல் சரீரத்தில் இளைப்பு, 2-ல் தன நாசம், 3-ல் ஸௌக்யம் 4-ல் துக்கம், 5-ல் பொருள் நாசம், 6-ல் சுகம், 7-ல் நாசம், 8-ல் மரணம், 9-ல் ஹானி, 10-ல் லாபம், 11-ல் நன்மை, 12-ல் செலவு.

கோசர பல லிந்நி காலம்.

ஒவ்வொருவருடைய காலத்தையும் ஒன்பது பங்காக்குவதில் முதல் மூன்று பாகத்தில் சூரிய குஜர்களும், மத்ய மூன்று பாகத்தில் குரு சுக்ரர்களும், பின் மூன்று பாகத்தில் சந்த்ர சனிகளும், புதன் ராகு இவர்கள் எப்போதும் பலனை அளிப்பார்கள்.

கெட்ட பலனை அளிக்கும் க்ரஹம சுபவீக்ஷணம் பெற்றாலும், நற்பலனை அளிக்கும் க்ரஹம் அசுபர்களின பார்வை பெற்றாலும், இவ்விதமே சத்ரு வீக்ஷணம் பெற்றாலும், அவரவர்களுக்குரிய பலனை அளிக்க மாட்டார்கள்.

கோசரத்தில் துர்பாவத்தை அடைந்த க்ரஹம், தன் உச்ச ஸ்வ க்ஷேத்ரத்தை அடைய கெடுதலை அளிக்காது. நல்ல பாவத்தை அடைந்த க்ரஹமானால் பூர்ண பலனை அளிக்க வல்லதாகும். கோசர ரீதியில் சுப ஸ்தானத்தை அடைந்தவர்கள் நீச ஸ்தானம், சத்ரு ஸ்தானம், அஸ்தமனத்தை அடைய அவர்கள் எந்த பலனையும் கொடுக்க மாட்டார்கள். சுபஸ்தானம் பெற்றவர்கள் நீசாதிகளை அடைய கெடுதலைச் செய்வர்கள்.

சந்த்ர லக்னத்துக்கு 8-ல் சந்த்ரன், 7-ல் செவ்வாய், 9-ல் ராகு, 6-ல் சுக்ரன், 3-ல் குரு, 5-ல் சூரியன், லக்னத்தில் சனி, 4-ல் புதன்-ஸஞ்சரிக்கும் காலத்தில் மான ஹானி, பொருள் நாசம், சரீர பிடை முதலியன விசேஷமாக ஏற்படும்.

குருவைத் தவிர மற்ற க்ரஹங்கள் அதிசாரம் அல்லது வக்ரமாக ஸஞ்சரிக்கும் காலத்தில் முன் வலித்த ராசியின் பலனையே அளிப்பார்கள். குரு தாம் வலிக்கும் வீட்டிற்குரிய பலனையே அளிப்பர். ஒவ்வொரு க்ரஹங்களும், தாங்கள் வலிக்கும் ராசிகளிலிருந்து அடுத்த ராசிக்குப் போகும்போது அடியிற் கண்டபடி முன்னதாகவே பலனை அளிப்பார்கள்.

சூரியன் நாள் 5, சந்த்ரன் நாழிகை 3, செவ்வாய் நாள் 8, புத சுக்ரர்கள் நாள் 7, குரு ராகு கேது 2 மாதம், சனி மாதம் 4.

அங்க க்ரஹங்கள்.

ஸூரியன் முதலிய க்ரஹங்கள் ஜன்மகால நக்ஷத்ரம் முதல் க்ரமமாக ஜாதகனுடைய ஒவ்வொரு அவயவங்களிலும் வலிக்கிற விவரமும் பலனும் வருமாறு:—

ஸூரியன்: ஜன்ம நக்ஷத்ரத்தில் முகத்திலும், பின் நான்கு நக்ஷத்ரங்கள் முடிய தலையிலும், பின்பு 4 நக்ஷத்ரங்களில் மார்பிலும் அடுத்த 4 நக்ஷத்ரங்களில் வலது கையிலும், பின்புள்ள 6 நக்ஷத்ரங்கள் முடிய பாதங்களிலும், அடுத்த 4 நக்ஷத்ரங்களில் இடது கையிலும், பின்புள்ள 2 நக்ஷத்ரங்களில் கண்களிலும், அடுத்த 2 நக்ஷத்ரங்களில் குஹ்யத்திலும், க்ரமமாக சார ரீதியில் வலிப்பான். இதற்குப் பலன்:— முகத்தில் ஸஞ்சரிக்கும் போது நாசமும், சிரஸில் ஐச்வர்யமும், மார்பில் ஜயமும், வலது கையில் தனமும், பாதங்களில் தன நாசமும், இடது கையில் தேஹ பிடையும், கண்களில் லாபமும், குஹ்யத்தில் தேஹ நாசமுமுண்டாகும்.

சந்த்ரன்: ஜன்மம் முதல் 2 நக்ஷத்ரங்கள் முகத்தில்: அதிக பயம், அடுத்த 4 நக்ஷத்ரங்கள் தலையில்: க்ஷேமம், அடுத்த 2 நக்ஷத்ரங்கள் முதுகில்; சத்ரு ஜயம், அடுத்த 2 நக்ஷத்ரங்கள் கண்களில்: தன லாபம், அடுத்த 5 நக்ஷத்ரங்கள் மார்பில்: சரீர சுகம், அடுத்த 3 நக்ஷத்ரங்கள் இடது கையில்: விரோதம், அடுத்த 6 நக்ஷத்ரங்கள் பாதங்களில் பரதேச வாஸம், அடுத்த 3 நக்ஷத்ரங்கள் வலது கை: தன லாபம்.

செவ்வாய்: ஜன்ம முதல் 2 நக்ஷத்ரங்கள் முகத்தில்: மரணம், அடுத்த 6 நக்ஷத்ரங்கள் கால்களில்: சண்டை, அடுத்த 3 நக்ஷத்ரங்களில் வயிற்றில்: ஜயம், அடுத்த 4 நக்ஷத்ரங்களில் இடது கையில்: தாரித்ரியம், அடுத்த 2 நக்ஷத்ரங்களில் சிரஸில்: லாபம், அடுத்த 4 நக்ஷத்ரம் முகத்தில்: அதிக பயம், அடுத்த 4 நக்ஷத்ரம் வலது கை: க்ஷேமம், அடுத்த 2 நக்ஷத்ரம் கண்கள்: பரதேச கமனம்.

புத குரு சுக்ரர்கள்: ஜன்ம முதல் 3 நக்ஷத்ரம் சிரஸில் சோகம், அடுத்த 3 நக்ஷத்ரம் முகத்தில்: லாபம், அடுத்த 6 நக்ஷத்ரம் கைகளில்: கெடுதி, அடுத்த 5 நக்ஷத்ரம் வயிற்றில்: தன லாபம், அடுத்த 2 நக்ஷத்ரம் குஹ்யத்தில் நாசம், அடுத்த 8 நக்ஷத்ரம் கால்களில்: சிக்கி.

சனி, ராகு, கேதுக்கள்: ஜன்ம நக்ஷத்ரத்தில் முகத்தில்: துக்கம், அடுத்த 4 நக்ஷத்ரங்கள் வரை வலது கையில்: ஸௌக்யம், அடுத்த 3 நக்ஷத்ரங்கள் வரை வலது காலில்: பிரயாணம், அடுத்த 3 நக்ஷத்ரங்கள் வரை இடது காலில்: நாசம், அடுத்த 4 நக்ஷத்ரங்கள்

வரை இடது கையில்: லாபம் அடுத்த 5 நக்ஷத்ரங்கள் வரை வயிற்றில்: போகம். அடுத்த மூன்று நக்ஷத்ரங்கள் வரை சிரஸ்ஸில்: சுகம். அடுத்த 2 நக்ஷத்ரங்கள் வரை கண்களில்: ஸௌக்யம். அடுத்த 2 நக்ஷத்ரங்கள் வரை முதுகில்: மரணம்.

லத்தா பலம்.

ஸூரியன் வஸிக்கும் நக்ஷத்ரம் முதல் 12-வது நக்ஷத்ரமும். குஜனுக்கு 3-வது நக்ஷத்ரமும். குருவுக்கு 6-வது நக்ஷத்ரமும். சனிக்கு 8-வது நக்ஷத்ரமும் புரோலத்தைகளாம். சுக்ரனுக்கு 5-வதும், புதனுக்கு 7-வதும். ராகுவுக்கு 9-வதும். சந்த்ரனுக்கு 22-வதும் ப்ருஷ்டலத்தைகள் எனப்படும். அந்தந்த க்ரஹங்களிருக்கும் நக்ஷத்ர முதல் கணக்கிடுவது. அந்த லத்தை ஜன்ம நக்ஷத்ரமானால் பிடை. ஸூரிய லத்தையில் கார்ய நாசம், ராகு கேதுகளின் லத்தைகளில் துக்கம். குரு லத்தையில் கெடுதி, பயத்தை அளிக்கும். பந்து நாசம். சுக்ர லத்தையில் கலஹம். புத லத்தையில் ஸ்தான ப்ரம்சம். கெடுதல். சந்த்ர லத்தையில் நஷ்டம் இவைகளேற்படும். மேற்கூறியவை தனித் தனியாக லத்தைகளின் பலனும். லத்தைகள் கலந்தால் அந்தந்த பலன் அந்தந்த பங்கு விதம் அதிகமாகும்.

ஸர்வதோபத்ர சக்ரத்தில் காண்பிக்கப்பட்ட சுபதேவதைகள் சுபத்தைத் தருபவை. பாப தேவதைகள் துக்கத்தைத் தருபவை என கோசர பலன் பார்க்கையில் சொல்ல வேண்டும்.

தசாபுக்திகள், அஷ்டக வர்கம், கோசரம்-இவைகளில் கெட்ட ஸ்தானங்களில் கிரஹங்களிருந்தால். அந்தந்த க்ரஹங்களுக்குரிய மந்த்ரம், க்ரஹ ப்ரீதிகரமான விரதம், தானம், வந்தனம் முதலான கர்காரியங்களைச் செய்ய வேண்டும். க்ரஹங்களின் ப்ரீதியை அனுஸரித்து சுகமுண்டாகும்.

த்ரேக்காண ஸ்வரூபம்.

மேஷத்தின் முதல் த்ரேக்காணம். கருத்த நிறமும், வெளுத்த ஆடை யணிந்திருப்பவனுகவும். சக்தியுள்ளவன் போல் பயங்கர உருவமுடையவனுகவும். சிவப்பான கண்களை யுடையவனுகவும். கோடரியை உயரத் தூக்கிக்கொண்டு நிற்பான். இது புருஷ த்ரேக்காணமென்றும். ஆயுத த்ரேக்காண மென்றும் அங்காரக த்ரேக்காணமென்றும் சொல்லப்படும்.

மேஷத்தின் 2-வது த்ரேக்காணம் சிவந்த ஆடையுடையவனும். ஆபரண. பக்ஷயங்களில் மனதுடையவனும். குடம் போன்ற வயிறுடையவனும் குதிரை மாதிரி நீண்ட முகமுடையவனும். தாக முடையவனும், ஒரு காலுடையவனுமான ஸ்திரீயாகச் சொல்லப் படுகிறது. இதுவே நாற்கால் த்ரேக்காணம். ஸ்திரீ த்ரேக்காணம் பகிமுக த்ரேக்காணமென்றும் சூரியன் நாயகனென்றும் சிலர் அபிப்பிராயம்.

மேஷத்தின் 3-வது த்ரேக்காணம். கொடியவனும், வித்யை களறிந்தவனும். சிவந்த வஸ்த்ரத்தை அணிந்திருப்பவனும், வெண்மை கலந்த சிவப்பு நிறமுள்ளவனும், கார்யத்தில் பற்றுடை யவனும், விரதங்களிலிருந்து பக்னனானவனும், உயரத் தூக்கப் பட்ட தண்டத்தைக் கையிலுடையவனும், கோபமுடையவனுமான புருஷனாக இருக்கிறது. இது நர த்ரேக்காண மென்றும். ஆயுத த்ரேக்காணமென்றும், குருவினுடையது என்றும் சொல்லப் படுகிறது.

விருஷபத்தின் 1-வது த்ரேக்காணம். கருட்டையாகவும் துணியில் அறுக்கப்பட்டதாகவுமுள்ள தலை மயிரை உடையவனும். குடம் போன்ற வடிவை உடையவனும், பொகங்கின வஸ்த்ரத்தை அணிந்திருப்பவனும். தாஹமுடையவனும், உண்பதில் விருப்ப முடையவனும். ஆபரணங்களில் ஆசையுடையவனுமான ஒரு ஸ்திரீயாகச் சொல்லப்படுகிறது. இதை ஸ்திரீ த்ரேக்காணம். அக்னியுடன் கூடியது, சுக்ரனுடையது என்று சொல்கிறார்கள்.

விருஷபத்தின் 2-வது த்ரேக்காணம். வயல். தான்யம், வீடு, பசு, கலிகள் இவைகளை அறிந்தவனும். வண்டியுடன் சேர்ந்த கலப்பை விஷயங்களை நிந்தவனும். பசியுடையவனும். ஆடு முகம் போன்ற முகத்தையுடையவனும். அழுக்கான வஸ்த்ரமுள்ளவனு மான அப்புருஷன் தோள்களைத் தூக்கிய வண்ணமிருப்பான். இது நர த்ரேக்காணம், நாற்கால் த்ரேக்காணம். புதனை நாயகனுக உடையது எனப்படும்.

விருஷபத்தின் 3-வது த்ரேக்காணம். யானைக் கொப்பான சரீரம். வெண்மையான கோரப் பற்கள், சரப மிருகம் போன்ற கால்கள், பொன்னிறமான சரீரம். ஆடு. மான் விஷயத்தில் பற்று தலுடன் அங்குமிங்கும் அலையும் மனம். இவ்விதமுள்ள புருஷ

ஸ்வரூபமாக இருக்கிறது. இது நர த்ரேக்காணம், நாற்கால் த்ரேக்காணம், சனியை நாயகனாக உடையது.

மிதுனத்தின் 1-வது த்ரேக்காணம், நல்ல உருவம், ஆபரணங்கள் செய்வதில் ஆசை, ஸ்திதியில்லாமை, உயரத் தூக்கப்பட்ட கைகள், ருதுவை உடைமை, ஊசியால் செய்யும் காரியத்தில் (எம்ப்ராய்டரி) விருப்பம் இவைகளையுடைய ஸ்த்ரீயாகச் சொல்லப்படுகிறது. இது ஸ்த்ரீ த்ரேக்காணம், புதனை நாயகனாக உடையது.

மிதுனத்தில் 2-வது த்ரேக்காணம், உத்யான வனத்தில் வாஸம், கலசம், வில் இவைகளை உடைமை, சூரத் தன்மை, அம்புகளைத் தரித்தல், கருட பக்ஷிக்கொப்பான முகம், விளையாட்டு, புத்ரன், அலங்காரம், திரவியம் இவைகளில் சிந்தை இவைகளையுடைய புருஷனாக இருக்கிறது. இது நர த்ரேக்காண மெனவும், ஆயுதத்துடன் கூடியதாகவும், பக்ஷி த்ரேக்காணமாகவும், சுக்ரன் அதிபதியாகவும் சொல்லப்படுகிறது.

மிதுனத்தின் மூன்றாவது த்ரேக்காணம், நன்றாய் அலங்கரிக்கப்பட்டவனும், வருணன் போல் அதிக ரத்னமுடையவனும், அம்பராத் தூணீரம், கவசங்களைத் தரித்தவனும், வில்லுடன் கூடியவனும், நாட்யம், வாத்யம் போன்ற கலைகளில் பாண்டித்யமுள்ளவனும், கவியுமான புருஷ உருவாக இருக்கிறது. நர த்ரேக்காணமாகவும், ஆயுதத்துடன் கூடியதாகவும், சனியை நாயகனாக உடையதாகவும் கூறப்படுகிறது.

கடகத்தின் 1-வது த்ரேக்காணம், இலை, கிழங்கு, பழம் இவைகளைத் தரித்தவனும், யானை போன்ற உருவமுள்ளவனும், காட்டில் சந்தன மரத்திலிருப்பவனும், சரபம் போன்ற பெருத்த கால்களையுடையவனும், பன்றி போன்ற முகமுடையவனுமான புருஷனைச் சொல்லப்படுகிறது. இது நாற்கால் த்ரேக்காணமென்றும், சந்த்ரனை அதிபனாக உடையதென்றும் கூறப்படுகிறது.

கடகத்தின் 2-வது த்ரேக்காணம், சிரஸில் தாமரைப் பூக்களால் பூஜிக்கப்பட்டவளும், ஸர்ப்பங்களுடன் கூடியவளும், கடுமையானவளும், காட்டிலிருப்பவளும், புரச மரக் கனியை அடைந்தவளுமான ஒரு ஸ்த்ரீ உருவமாக இருந்துகொண்டு கதறிக்கொண்டிருக்கும். இதை ஸ்த்ரீ த்ரேக்காணமாகவும், ஸர்ப த்ரேக்காணமாகவும், செவ்வாயை நாயகனாகவுடையதாகவும் கூறுகிறார்கள்.

கடகத்தின் 3-வது த்ரேக்காணம், ஸ்வர்ணாபரணங்களுடன் கூடியவனும், ஸர்ப்பங்களால் சுற்றப்பட்டவனுமுள்ள ஒரு புருஷன் மனிவிக்கு நகை செய்வதற்காக ஒடத்திலேறி ஸமுத்ரத்தில் பிரயாணம் செய்கிறவனாக இருப்பதாகக் கூறப்படுகிறது. இதை நர த்ரேக்காணமாகவும், ஸர்ப்ப த்ரேக்காணமாகவும், குரு அதிபதியாக இருப்பதாகவும் சொல்லுகிறார்கள்.

ஸிம்மத்தின் 1-வது த்ரேக்காணம், முள்முருங்கை மரத்தின் மேலே யிருக்கும் கழுகு, நரி போன்றதாகவும், நாய் போன்றதாகவும், அழுக்கடைந்த வஸ்த்ரத்துடன் கூடியதாகவுமுள்ள மனிதன் தாய் தந்தையர்களைப் பிரிந்து கதறுவதாக இருக்குமெனச் சொல்லப்படுகிறது. இது நர த்ரேக்காணமெனவும், பக்ஷி த்ரேக்காண மெனவும், நாற்கால் த்ரேக்காண மெனவும், சூரியனை அதிபதியாக உடையதெனவும் கூறப்படுகிறது.

ஸிம்மத்தில் 2-வது த்ரேக்காணம், குதிரை போன்ற வடிவம், வெள்ளை மாலையைத் தலையில் தரித்தல், ஸிம்மத்தைப் போல் தெருங்க முடியாமை, கையில் வில், வளைவான நுனி மூக்கு, மான் தோல், கம்பளி தரித்தல் இவ்விதமிருக்கும் மனிதனாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது. நர த்ரேக்காணம், ஆயுதத்துடன் கூடியது. குருவை அதிபதியாக உடையது.

ஸிம்மத்தின் 3-வது த்ரேக்காணம், கரடி போன்ற முகமுடையவனும், குரங்கு போன்ற சேஷ்டையை உடையவனும், நீண்ட மீசை, கருட்டையான தலை மயிர் இவைகளை உடையவனுமான ஒரு புருஷனைய் தடி, பழம், மாம்சங்களைத் தரித்திருப்பவனாகக் கூறப்படுகிறது. இது நர த்ரேக்காணம், நாற்கால் த்ரேக்காணம், ஆயுதத்துடன் கூடியது. அங்காரகனை அதிபதியாக உடையது.

கன்னியின் 1-வது த்ரேக்காணம், பூக்கள் நிறைந்த குடத் தோடு அழுக்கடைந்த வஸ்த்ரத்தை உடையவளும், வஸ்த்ரம் பொருள்களைச் சேர்ப்பதில் விருப்பமுடைய கன்னிகையாய்

தகப்பன் வீட்டை விரும்புவதாகச் சொல்லப்படுகிறது. ஸ்திரீ நிரேக்காணமாகவும், புதனை அதிபதியாகவும் கூறுகிறார்கள்.

கன்னியின் 2-வது நிரேக்காணம். எழுதுகோலை வைத்திருப்பவனும், கருப்பாயும். தலையில் சுற்றப்பட்ட வஸ்த்ரத்தையுடையவனும், வரவு செலவுகளிரண்டையும் செய்கிறவனும், உடலெல்லாம் ரோமங்களுடையவனுமிருக்கிற புருஷனைப் பெரிய வில்லைத் தரித்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. நர நிரேக்காணமென்றும், ஆயுதத்துடனிருப்பதாகவும், சனி அதிபத்யமுள்ளதாகவும் சொல்கிறார்கள்.

கன்னியின் மூன்றாவது நிரேக்காணம். வெள்ளையாகவும், நல்ல வெண்மையான தலைப்புகளை உடைய வெண்பட்டை அணிந்தவனும், அதிக உயரமுடையவனும், குடம், கரண்டிகளை உடையவனும், ஆலயத்துக்குப் புறப்படுபவனுமான ஒரு ஸ்திரீயின் உருவமெனக் கூறப்படுகிறது. இது ஸ்திரீ நிரேக்காணமென்றும், சுக்ரனை அதிபனாக உடையதென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

துலாத்தின் 1-வது நிரேக்காணம். தெருவின் மத்தியிலுள்ள கடையிலிருப்பவனும், தராசுடையவனும், நிறுத்தலளவை முகத்தலளவைகளில் சமர்த்தனும் படிக்கல்லைக் கையிலுடையவனும், சாமானையும், அதன் விலையையும் எண்ணிக்கொண்டிருப்பவனுமான ஒரு புருஷனாகச் சொல்லப்படுகிறது. இது நர நிரேக்காணம். சுக்ரனை அதிபனாக உடையது.

துலாத்தின் 2-வது நிரேக்காணம். கழுகு போன்ற முகமுடையவனும், பசியுள்ளவனும் தாமஸமுள்ளவனுமுள்ள புருஷனாகிருந்து, குடத்தை எடுத்து லக்ஷ்யமில்லாமல் எறிய பிரியப்படுபவனும், களத்ர புத்ரர்களை மனதில் சிந்திப்பவனும் இருக்கிறதாகக் கூறப்படுகிறது. இது நர நிரேக்காணம், பக்ஷி நிரேக்காணம், சனியை அதிபனாக வுடையது.

துலாத்தில் 3-வது நிரேக்காணம். தங்கத்தாலான அம்பராத்தூணீரம், கவசம், ரத்னங்களால் அலங்காரம் இவைகளை உடையவனும், குரங்கின் வடிவமுடையவனும், பழம், மாம்ஸம் இவைகளையுடையவனுமான மனிதனைக் காட்டில் பிராணிகளை பயமுறுத்திக் கொண்டிருக்கும் உருவமாகக் கூறப்படுகிறது. இது நாற்கால் நிரேக்காணம். புதனை அதிபதியாக உடையது.

விருச்சிகத்தின் 1-வது பாகம், வஸ்த்ராபரணங்களில்லாமல் இருப்பிடத்தை விட்டு விலகி பரம்புகளால் கட்டப்பட்ட பாதத்தை உடையவளாய் அழகுள்ள பெண் உருவத்துடன் பெரிய ஸமுத்ரத்திலிருந்து கரைக்கு வந்து கொண்டிருக்கிறதாகச் சொல்லப்படுகிறது. இது ஸ்திரீ நிரேக்காணம், சர்ப்ப நிரேக்காணம், செவ்வாயை அதிபனாக உடையது.

விருச்சிகத்தின் 2-வது நிரேக்காணம். ஆமை, குடம் போன்ற வடிவுடன் ஸர்ப்பத்தினால் சுற்றப்பட்ட சரீரமுடைய ஒரு பெண், புருஷனுக்காக இடம், சுகங்களை விரும்புபவளாக விருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இது ஸ்திரீ நிரேக்காணம், ஸர்ப நிரேக்காணம், குரு அதிபதி.

விருச்சிகத்தின் 3-வது நிரேக்காணம். பெருத்த கன்னங்களுடன் ஆமை போன்ற முகமுடையதாய், நாய், மான், பன்றி, நரி இவைகளுக்கு பயத்தை அளிக்கக் கூடிய சிங்கமாக இருந்து சந்தனக்காட்டைக் காப்பாற்றி வருவதாகக் கூறப்பட்டிருக்கிறது. இது நாற்கால் நிரேக்காணம், சந்திரன் அதிபன்.

தனுஸு 1-வது நிரேக்காணம். மனிதனின் முகமும், குதிரை போன்ற சரீரமுமாய் நீண்ட வில்லை ஏந்தி, ஆச்ரமத்திலிருந்து யாகத்திற்குரியவைகளையும், தபஸ்விகளையும் ரக்ஷிக்கின்றதான உருவமாகச் சொல்லப்படுகிறது. மனித - நாற்கால், ஆயுத நிரேக்காணங்களாகவும், புதன் அதிபதியாகவும் கூறியிருக்கிறது.

தனுஸின் 2-வது நிரேக்காணம். மனதைக் கவருபவளாய், சம்பகப்பூ, தங்கம்–இவை போன்ற நிறமுள்ளவளாய், மத்யம உருவமுள்ளவளாய், ஸமுத்ரத்திலுள்ள ரத்னங்களை அணிந்தவளாய், பத்ராஸனத்தில் இருப்பவளாயுமிருக்கும் ஸ்திரீயின் ரூபமாகக் கூறப்படுகிறது. இது ஸ்திரீ நிரேக்காணம், செவ்வாய் அதிபன்.

தனுஸின் 3-வது நிரேக்காணம். நீண்ட தாடியுடன், தங்கம், சம்பகப்பூ போன்ற நிறமுடையவனாய், தண்டத்தைத் தாங்கிக் கொண்டு உயர்ந்த ஆஸனத்தில் உட்கார்ந்து, வெண் பட்டுகள், மான் தோல்களை அணிந்து கொண்டிருக்கும் மனித உருவமாக இருக்கிறது. இது நர நிரேக்காணம். ஆயுதத்துடன் கூடியது. சூரியன் அதிபதியாவான்.

மகரம் 1-வது திரேக்காணம். மயிர்களடர்ந்தவனும், மகரம் போன்ற பற்களையுடையவனும், பன்றியின் சரீரம் போன்ற சரீரத்தையுடையவனும், தும்பு, வலை, விலங்குகளைத் தரித்திருப்பவனும், பயத்தை அளிக்கும் முகத்தையுடையவனுமான மனித உருவமாகச் சொல்லப்படுகிறது. இது புருஷ த்ரேக்காணம், நிகட த்ரேக்காணம்; சனி அதிபன்.

மகரத்தின் 2-வது திரேக்காணம். கீத வாத்யங்களுக்தாதிகளில் ஸமர்த்தையாயும், தாமரை போல் நீண்ட கண்ணுடையவளாயும், கருப்பாயும், ஆச்சரியமான பொருள்களைத் தேடுபவளாயும், ஆபரணங்களணியப்பட்ட இரும்பு போன்ற த்ருடமான கரங்களையுடையவளாயுமிருக்கிற ஸ்திரீயின் உருவமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இது ஸ்திரீ த்ரேக்காணம். சுக்ரன் அதிபதியாவான்.

மகரத்தின் 3-வது திரேக்காணம். கின்னரர் போன்ற சரீரத்துடனும், கம்பளியுடனும், தூணீரம், வில், கவசங்களுடனும், ரத்னங்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கும் கும்பத்தைத் தோளில் வைத்துக் கொண்டிருப்பவனுமான ஒரு புருஷனின் உருவமாகச் சொல்லப்படுகிறது. இது புருஷ த்ரேக்காணம். ஆயுதத்துடன் கூடியது. புதன் அதிபதியாவான்.

கும்பம் 1-வது திரேக்காணம். எண்ணெய், கள், ஜலம், ஆஹாரம்—இவைகளின் வரவில் கவலையடைந்த மனதுடையதாகவும், கம்பளியுடன் கூடியதாகவும், பட்டு, வஸ்த்ரம், மான் தோல்களுடையதாகவும், கழுகு போன்ற முகமுடையதாகவுமிருக்கிறது. இது மனித த்ரேக்காணம். சனி அதிபதியாவான்.

கும்பத்தின் 2-வது திரேக்காணம். அழுக்குத் துணியினால் சுற்றப்பட்டு தலையில் மண் பாண்டங்களுடன் முள்ளிலவை மரக்காட்டில் பொசுங்கின வண்டியில் லோஹங்களை எடுத்துக்கொண்டிருக்கும் ஸ்திரீயின் உருவமாகக் கூறப்பட்டிருக்கிறது. இது ஸ்த்ரீ த்ரேக்காணம். அக்னி த்ரேக்காணம். புதன் அதிபதி.

கும்பத்தின் 3-வது திரேக்காணம். கருப்புநிறமாகவும், மயிர்களடர்ந்த காதுகளையுடையதாகவும், கிரீடத்தை உடையதாகவும், மரப்பட்டை, இலைகள், பால் (கொம்பு) பறவைகள் நிறைந்த அநேக லோஹங்களாலான குடங்களைத் தரித்து அங்குமிங்கும் ஸஞ்சரிக்கும்படி செய்கிற உருவமுடையதாகக் காணுகிறது. இது மனித த்ரேக்காணம். சுக்ரன் நாயகனாவான்.

மீனம் 1-வது திரேக்காணம். ஸ்ருக், ஸ்ருவம், முத்து, மணி, சங்கு-இவைகளைக் கைகளில் வைத்துக்கொண்டு, அலங்கரித்தவனும், மீனவியின் ஆபரணங்களுக்காக சமுத்திரத்தைக் கப்பலால் தாண்டிச் செல்கிற புருஷன் உருவமாகக் காண்கிறது. இது நர த்ரேக்காணம். குரு அதிபன்.

மீனத்தின் 2-வது திரேக்காணம். சம்பகப்பூ போன்ற முகமுடையவளாய், பரிவாரங்களுடன் கூடியவளாய் மிக உயர்ந்த துவஜம், கொடிகளையுடைய தெப்பத்தை அடைந்து சமுத்ரத்தின் அக்கரைக்குச் செல்லும் ஸ்திரீயின் உருவமாகத் திகழ்கிறது. இது ஸ்திரீ த்ரேக்காணம், சந்த்ரன் அதிபனுவான்,

மீனத்தின் 3-வது திரேக்காணம். ஸர்பங்களால் மூடப்பட்ட சரீரத்தையுடையவனும், வஸ்த்ரமில்லாதவனும், திருடர்கள், அக்னி இவற்றால் கலக்கப்பட்ட மனதுடையவனும், காட்டில் குழிக்குள்ளே கதறுகின்ற புருஷ உருவமாகக் காண்கிறது. இது ஸர்ப த்ரேக்காணம். செவ்வாயின் ஆதிபத்யமுடையது.

மேலே திரேக்காணத்தை எழுதியிருந்தாலும், அதன் ஸ்வரூபம் முதலியவைகளை எழுதாததால் இங்கு எழுதப்பட்டது. ஒவ்வொரு திரேக்காணத்தில் பிறந்தவனுக்கும் ஸ்வரூபம், ஸ்வபாவம், வஸ்து லாபம், பிடை முதலியவைகளைக் கண்டுபிடிப்பதற்கும், திருட்டுப் போன விஷயமான ப்ரச்னத்திலும் உதயமாகும் திரேக்காணத்தை அனுஸரித்து திருடன் இவ்விதமிருக்கக்கூடும் என்று ஊஹிப்பதற்கும் இது மிகவும் பிரயோஜனமானது.

ஸம்வத்ஸர தசை.

ஜன்ம நக்ஷத்ர முதல் வருஷ ப்ரவேச நக்ஷத்ரம் வரை எண்ணிய தொகையில் 9-ஐக் கழித்து மீதத் தொகை 1 சூரியன், 2 செவ்வாய், 3 குரு, 4 கேது, 5 புதன், 6 சுக்ரன், 7 சனி, 8 சந்த்ரன், 9 ராகு.

சூரிய தசை	நாள் 18	கேது தசை	நாள் 21	சனி தசை	நாள் 57
செவ்வாய்	.. 21	புதன்	 51	சந்த்ரன்	.. 30
குரு	 48	சுக்ரன்	 60	ராகு	 54

சூரிய தசை பலன் :- ஸஞ்சாரம், ஜலரோதஷம், முக ரோகம், விரோதம், ஆபத்து, ஸ்வல்ப லாபம், கலகம், பித்த ரோகம்.

செவ்வாய் தசை :- விக்னம், துக்கம், கஷ்டம், பந்து கலஹம், அபவாதம்

குரு தசை :- ஆரோக்யம், போஜன ஸௌக்யம், திரவியலாபம், வாஹன லாபம், பூமி லாபம்.

கேது தசை : சத்ரு விரோதம், ராஜாக்னி பயம், சோரோபத்ரவம், ஜந்து பயம், ஜ்வரம், துக்கம்.

புத தசை :- பந்து தர்சனம், வித்யா ப்ரஸங்கம், நூதன வஸ்த்ர லாபம், யாத்ரை.

சுக்ர தசை :- ஸ்திரீ ஸங்கமம், வாஹன லாபம், தேசாந்தர கமனம், தன லாபம்.

சனி தசை :- ஆலஸ்யம், மரண துக்கம், அபவாதம், உயர்ந்த ஸ்தலாதிரோஹணம்.

சந்த்ர தசை :- வஸ்த்ரம், பால், தயிர், தனம்,

ராகு தசை :- விரோதம், பிடை, ஸ்திரீ கலஹம், ஜ்வரம், ராஜாக்னி பயம், ஸ்வப்னத்தில் ஸ்திரீ ஸங்கம்.

மாத மகாதசை.

ஜனன நக்ஷத்ர முதல் மாதம் பிறந்த நக்ஷத்ரம் வரை எண்ணிய தொகையை 7-ஆல் பெருக்கி 9-ஆல் வகுக்க மீதம் 1-க்குச் சூரிய தசை, 2-க்கு புத தசை, 3-க்கு ராகு தசை, 4-க்கு குரு தசை, 5-க்கு கேது தசை, 6-க்கு சந்த்ர தசை, 7-க்கு சனி தசை, 8-க்கு சுக்ர தசை, 9-க்கு செவ்வாய் தசையாகக்கொள்வது. ரிகங்களின் மகாதிசை ஹ 1-க்கு நாள் ½ ஆகக்கொள்வது.

பலன் :- சூரிய தசை நாள் 1½-க்கு அலைச்சல், கபால நோய், புத தசை நாள் 4½-க்கு இலாபம், பந்து தரிசனம், ராகு தசை நாள் 4½-க்கு நீச ரிகம், குரு தசை நாள் 4-க்கு போஜன சௌக்யம், தன லாபம், கேது தசை நாள் 1½ க்கு தேஹ பிடை, சந்த்ர தசை நாள் 2½ க்குச் சுக்ல பக்ஷமாயின் தன லாபம், கிருஷ்ண பக்ஷமாயின் தன நஷ்டம், சனி தசை நாள் 4½-க்கு விரோதம், குடும்ப கலஹம், ஆயுத விரணம், சுக்ர தசை நாள் 5-க்கு ரத்னாபரண லாபம், செவ்வாய் தசை நாள் 1½-க்குப் போஜன அசௌக்யம், கலஹம்,

மாத பலன்.

ஜன்ம நக்ஷத்ரம் முதல் மாத ப்ரவேச நக்ஷத்ரம் வரை எண்ணி 7-ல் பெருக்கி, 8-ஆல் வகுக்க பாக்கி 1. வியாதி 2. லாபம், 3. செலவு 4. அலைதல், 5. தனம், 6. ஐச்வர்யம், 7. அர்த்த ஹானி, 8. அபமிருத்யு.

ஜன்ம நக்ஷத்ர பலன்.

ஜன்ம நக்ஷத்ர முதல் ஸங்க்ராந்தி நக்ஷத்ரம் வரை எண்ணி வந்த எண்ணிக்கையை 7-ஆல் பெருக்கி 8-ஆல் வகுக்க மீதமான எண்ணிக்கையின் பலன், 1. ரோகம், 2. லாபம் 3. பிரயாணம், 4. பந்தனம், 5. தனம், 6. ஐச்வர்யம், 7. தன ஹானி, 8. அபமிருத்யு.

நித்ய க்ரஹ பலன்.

ஜன்ம நக்ஷத்ர முதல் இஷ்டமான தினத்தின் நக்ஷத்ரம் வரை எண்ணி வந்ததை 4-ஆல் பெருக்கி இஷ்ட தின திதி வார எண்ணிக்கைகளைக் கூட்டி 9-ஆல் வகுக்க வரும் மீதமான எண்ணிக்கையின் பலன். 1. தாபம், 2. காந்தி. 3. அதிக கஷ்டம், 4. சுபம், 5. தான்யம், 6. ஸௌக்யம், 7. கலஹம், 8. ரோகம், 9. நல்லுபதேசம்.

ப்ரச்னம்-ஆரூடம்.

ப்ரச்னமானது பலவாறாய் அதிகமாகவிருப்பினும் முக்யமான சிலவற்றை மட்டில் இங்குக் காட்டுகிறோம்.

ஆரூடம் கேட்க வந்தவரை 108-க்குள் ஒரு இலக்கத்தையும், சொன்ன இலக்கத்துக்குள் மற்றொரு இலக்கத்தையும் சொல்லச் செய்யவும். இவ்விரு இலக்கத்தையும் தனித் தனியே வைத்துக் கொண்டு ஒவ்வொரு இலக்கத்தையும் 3-ஆல் வகுத்து மீதத்தை எடுத்து பலத்தைக் கவனிக்கவும்.

1—1. சூரியன் கார்யஸித்தி.	3—3 குரு உத்தமம்.
2—1 சந்த்ரன் சுகம்.	3—2 சுக்ரன் உத்தமம்.
2—2 செவ்வாய் நாசம்.	1—2 சனி ஹானி.
3—1 புதன் சுகம்.	1—3 ராகு பந்தனம்.
2—3 கேது மரணம்.	

காரிய ஸித்தி கேள்வி :- கேள்வி காலத்தில் பிரதமை முதல் கொண்டு திதிகளையும், ஞாயிறு முதல் கிழமைகளையும், அசுவினி முதல் நக்ஷத்ரங்களையும், சூரியோதய முதல் பகல் எட்டு ஜாமம்

களில் கடந்த ஜாமங்களையும், கிழக்கு முதலிய திக்குகளில் கேள்வி கேட்கிறவனிருக்கிற திக்கு வரையும் கூட்டி 8-ஆல் வகுத்து மீதி எண் 1, 3, 7 ஆனால் 25 தினத்திற்கு முன்னமேயே காரிய ஸித்தியாகும். 2, 8 ஆனால் காரியமாகாது. 4, 6 ஆனால் மூன்று நாட்களுக்குப் பின் காரிய சித்தியாகும். 5 ஆனால் கூடிய சீக்கிரத்திலேயே காரிய ஸித்தியாகும்.

ப்ரச்னம் செய்ய வந்தவன் கிழக்கு அல்லது மேற்கில் நின்றால் சீக்கிரப்ராப்தி. ஈசானம் அல்லது அக்னி மூலை கிடைக்காது. திக், வாரம், நக்ஷத்ரம், திதி, யாமம் — இவைகளை ஒன்று கூட்டி 8-ஆல் வகுக்க மீதி 2, 8 கிடைக்காது. 6, 4 காணும், 3, 7 விஷயம் தெரியும், 5, 1 காரிய ஸித்தி.

களவு விஷய ஆரூடம்.

பறி கொடுத்தவர்கள் ப்ரச்னம் செய்யுங் காலத்தில் உதிக்கும் லக்னம்:- மேஷமானால் ப்ராம்மணன், விருஷபமாகில் க்ஷத்ரியன், மிதுனமாயின் வைசியன், கடகமாகில் சூத்ரன், சிம்மமானால் பந்து, கன்னியானால் ஸ்த்ரீ, துலாமானால் மீனவி, விருச்சிகமானால் அயலூரிலிருந்து வந்தவன், தனுஸாகில் கை மறதி, மகரமானால் உள்ளூரிலுள்ளவன், கும்பமானால் தாய் வம்சத்தவன், மீனமாகில் புத்ரன்.

களவு போன வஸ்து இருக்கும் திசை.

ஆரூட லக்னம்: மேஷம் பர்வதம், விருஷபம் உள்ளூர், மிதுனம் அக்னி மூலை, கடகம் வடக்கு, சிங்கம், தெற்கு, கன்னி, கிருஹ, துலாம் வீட்டிற்குப் பின், விருச்சிகம் மேற்கு, தனுஸ் கிழக்கு, மகரம் வாயு மூலை, கும்பம் ஈசான்யம், மீனம் ஜலம்.

ஸர்வாரூடம்.

ஆரூடம் கேட்கும் ஸமயம் மேஷ லக்னமாகில் விபாக சிந்தை, விருஷபம் வியாச்சிய சிந்தை, மிதுனம் மனுஷ்ய சிந்தை, கடகம் வியாபார சிந்தை, சிம்மம் தான்ய சிந்தை, கன்னி துக்க சிந்தை, துலாம் க்ரய விக்ரய சிந்தை, விருச்சிகம் பலவித சிந்தை, தனுஸ் த்ரவிய சிந்தை, மகரம் க்ருஷி சிந்தை, கும்பம் வஸ்த்ர சிந்தை, மீனமாகில் சுபசிந்தை.

நினைத்த கார்யம் பலிதமாகுமா?

108 நம்பருக்குள் ஒரு தொகையைச் சொல்லச் செய்வது, பலன் கிழக்கண்டவாறு அறியவும்.

அனுகூலம்: 1, 3, 5, 6, 7, 9, 12, 14, 15, 17, 19, 20, 22, 25, 27, 28, 31, 33, 34, 37, 39, 41, 42, 44, 51, 55, 57, 58, 59, 64, 68, 69, 70, 75, 80, 83, 84, 86, 87, 90, 91, 93, 95, 96, 98, 100, 102, 103, 108.

மத்யமம்:— 2, 11, 26, 35, 38, 45, 47, 48, 49, 50, 54, 60, 61, 62, 65, 67, 71, 72, 76, 77, 79, 81, 92, 106.

அதமம்:— 4, 8, 10, 13, 16, 18, 21, 23, 24, 29, 30, 32, 36, 40, 43, 46, 52, 53, 56, 63, 66, 73, 74, 78, 82, 85, 88, 89, 94, 97, 99, 101, 104, 105, 107.

இந்த 108 நம்பர்களைக் கட்டத்தில் அடைத்துத் தொடச் சொல்லியும் பலன் காணலாம்.

இச்சக்ரங்களில் இருக்கும் தொகைகளுக்குள் ஒன்றை சிறு பிள்ளை கையால் தொடச் செய்து அதற்குரிய தொகைக்கு கீழெழுதிய பலனை அறிந்து கொள்க.

ஸ்ரீராம சக்ரம்

9	16	5	4
7	2	11	14
12	13	8	1
6	3	8	15

1. வனவாசம், 2. துக்கம், 3. காரிய ஸித்தி, 4. ஸர்வ லாபம், 5. மரணம், 6. குல நாசம், 7. ராஜ்ய ப்ராப்தி, 8. பந்து தரிசனம், 9. கல்யாணம், 10. காரிய நாசம், 11. கலகம், 12. சிநேக தரிசனம், 13. பகு லாபம், 14. தீர்க்காயுஸ், 15. கலகம், 16. ஸர்வ காரிய ஸித்தி.

ஸீதா சக்ரம்.

2	9	4
7	5	3
6	1	8

1. பதநாசம், 2. பொருள், 3. மித்ர லாபம், 4. இருப்புக்கு நாசம், 5. ஸௌக்யம், 6. விலங்கு, 7. தங்கம் கிடைக்கும், 8. மரணம், 9. காரிய ஸித்தி.

இன்னும் சில ப்ரச்ன விஷயங்கள் கீழே ஆங்காங்கு காட்டப் பட்டுள்ளன. ராசிகளின் இருப்பிடம், நிறம் முதலியவைகளைக் கொண்டும், நக்ஷத்ரங்களின் இருப்பிடம் முதலிய விஷயங்களைக் கொண்டும் பல விஷயங்களை ஊஹித்துச் சொல்லவும்.

கர்ப்பத்திலிருக்கிற குழந்தை ஆணா? பெண்ணா?

1. கேள்வி கேட்கிறவனுடைய லக்னத்திலும் அதற்கு 3. 5, 7, 9 இடங்களிலும் குரு, குஜன், சூரியன் முதலானவர்களிருந்தால் கர்ப்பத்திலிருக்கிற குழந்தை ஆண் என்றும், இதர கிரஹங்களிருந்தால் பெண் என்றும் தெரிந்து கொள்ள வேண்டியது.

2. கர்ப்பவதியான ஸ்திரீயின் பெயரெழுத்தைச் சரியாக எண்ணி 3-ஆல் பெருக்கி, சுக்லபக்ஷ பிரதமை முதல் கேட்க வந்த திதி வரையும் எண்ணி வந்த தொகையை முன் பெருக்கி வந்த எண்ணிக்கையோடு கூட்டி 7-ஆல் வகுக்க மீதம் ஒற்றையாயின் ஆண், இரட்டையாயின் பெண்ணென்றறிவது.

ஜன்ம லக்னத்தைத் தெரிந்துகொள்ள.

லக்னத்திற்கு சந்த்ரனிருக்கும் ராச்யதிபதி எங்கே இருக்கிறானோ, அது முதல் 1, 5, 9, ஜன்மலக்னம்; அதில்லாமற் போனால் 3, 7, 11 ஜன்ம லக்னமாயிருக்க வேண்டும்.

லக்ன நிச்சயம்.

ஜனன நாழிகையை 6-ஆல் பெருக்கி, ஜனனமான திதி வரையிலும் கூட்டி, 30-ஆல் வகுக்க வரும் ஈவு எத்தனையோ அதை சூரியனிருக்கும் ராசி முதலாக எண்ண, அந்த ராசியே லக்னமாகும்.

வார நிச்சயம்.

ஜனன நாழிகையை 3-ஆல் பெருக்கி 7-ஆல் வகுக்க வந்த மீதம் வாரமாகும். இது ஞாயிறு அல்லது வெள்ளி முதலாக இருக்கும்.

நக்ஷத்ர நிச்சயம்.

ஜனன நாழிகையோடு மேஷம் முதல் ஜனன ராசி வரை எண்ணிச் சேர்த்து, அத்தொகையை 4-ஆல் பெருக்கி 27-ஆல் வகுக்க மீதம் நக்ஷத்ரமாகும். சுக்ல பக்ஷத்தில் அசுவதி முதலாகவும், கிருஷ்ண பக்ஷத்தில் அவிட்டம் முதலாகவும் வரும். திரிகோண நக்ஷத்ரமாகவும் வரக்கூடும்.

ஜன்ம நக்ஷத்ரம் தெரிந்துகொள்ள:—கேள்வி கால லக்ன எண்ணை 4-ஆல் பெருக்கி, அத்துடன் 30-ஐக் கூட்டி, அத்துடன் சர லக்னமானால் 5-ம் ஸ்திர லக்னமானால் 10-ம், உபய

லக்னமானால் 7-ம் கூட்டி, வந்த தொகையை 27-ஆல் வகுத்தால் மீதியே ஜன்ம நக்ஷத்ர எண்ணென்று தெரிந்து கொள்ளவும்.

ஜனன கால நக்ஷத்ர பரிகாரம்:— உத்திரம் முதல் பாதம், பூசம் 2, 3 பாதங்கள் பூராடம் 3-வது பாதம், சித்திரை 1, 2 பாதங்கள், ஆயில்யம் 4-வது பாதம், மகம் முதல் பாதம், கேட்டை 4-வது பாதம், மூலம் முதல் பாதம், ரேவதி 2, 3 பாதங்கள், அசுவினி 2, 3 பாதங்கள், இந்த நக்ஷத்ரங்களில் குழந்தை பிறந்தால் சாந்தி செய்து கொள்ள வேண்டும். வேறொரு கிரந்தத்தில் விசாகம், ரோஹிணி நக்ஷத்ரங்களுக்குங்கூட சாந்தி பரிஹாரம் சொல்லப்பட்டிருக்கிறது. தந்தை தாயார் கூடப் பிறந்தவரின் நக்ஷத்ரங்களில் பிறந்தாலும், தொப்புள் கொடியினால் சுற்றப்பட்டு பிறந்தாலும்கூட முக்யமாக சாந்தி செய்யத் தகுந்தது.

பஞ்ச பக்ஷி.

பூர்வபக்ஷம் பகற்பொழில்.

ஞாயிறு செவ்வா	திங்க புதன்	வியா	வெள்	சனி	1-ம் ஜாமம்	2-ம் ஜாமம்	3-ம் ஜாமம்	4-ம் ஜாமம்	5-ம் ஜாமம்
வல்லூறு	ஆந்	காகம்	கோழி	மயில்	ஊண்	நடை	அரசு	துயில்	சாவு
ஆந்தை	காக	கோழி	மயில்	வல்	நடை	அரசு	துயில்	சாவு	ஊண்
காகம்	கோழி	மயில்	வல்	ஆந்	அரசு	துயில்	சாவு	ஊண்	நடை
கோழி	மயில்	வல்	ஆந்	காகம்	துயில்	சாவு	ஊண்	நடை	அரசு
மயில்	வல்லூ	ஆந்	காகம்	கோழி	சாவு	ஊண்	நடை	அரசு	துயில்

பூர்வபக்ஷம் இராத் தொழில்.

ஞாயிறு செவ்வா	திங்க புதன்	வியா	வெள்	சனி	1-ம் ஜாமம்	2-ம் ஜாமம்	3-ம் ஜாமம்	4-ம் ஜாமம்	5-ம் ஜாமம்
காகம்	கோழி	மயில்	வல்	ஆந்	ஊண்	அரசு	சாவு	நடை	துயில்
ஆந்தை	காகம்	கோழி	மயில்	வல்	அரசு	சாவு	நடை	துயில்	ஊண்
வல்லூறு	ஆந்	காகம்	கோழி	மயில்	சாவு	நடை	துயில்	ஊண்	அரசு
மயில்	வல்	ஆந்	காகம்	கோழி	நடை	துயில்	ஊண்	அரசு	சாவு
கோழி	மயில்	வல்	ஆந்	காகம்	துயில்	ஊண்	அரசு	சாவு	நடை

அபரபக்ஷம் பகற்பொழில்.

திங்கள் சனி	ஞாயி செவ்	புதன்	வியா	வெள்	1-ம் ஜாமம்	2-ம் ஜாமம்	3-ம் ஜாமம்	4-ம் ஜாமம்	5-ம் ஜாமம்
மயில்	கோழி	காகம்	ஆந்	வல்	ஊண்	சாவு	துயில்	அரசு	நடை
ஆந்தை	வல்	மயில்	கோழி	காகம்	சாவு	துயில்	அரசு	நடை	ஊண்
கோழி	காகம்	ஆந்	வல்	மயில்	துயில்	அரசு	நடை	ஊண்	சாவு
வல்லூறு	மயில்	கோழி	காகம்	ஆந்	அரசு	நடை	ஊண்	சாவு	துயில்
காகம்	ஆந்	வல்	மயில்	கோழி	நடை	ஊண்	சாவு	துயில்	அரசு

அபரபக்ஷம் இராத் தொழில்.

நிங்கள் சனி	வெள்	புதன்	வியா	ஞாயி செவ்	1-ம் ஜாமம்	2-ம் ஜாமம்	3-ம் ஜாமம்	4-ம் ஜாமம்	5-ம் ஜாமம்
கோழி	மயில்	ஆந்	காகம்	வல்	ஊண்	துயில்	நடை	சாவு	அரசு
ஆந்தை	காகம்	மயில்	வல்	கோழி	துயில்	நடை	சாவு	அரசு	ஊண்
மயில்	வல்	காகம்	கோழி	ஆந்	நடை	சாவு	அரசு	ஊண்	துயில்
காகம்	கோழி	வல்	ஆந்	மயில்	சாவு	அரசு	ஊண்	துயில்	நடை
வல்லூறு	ஆந்	கோழி	மயில்	காகம்	அரசு	ஊண்	துயில்	நடை	சாவு

விவரம் : மேலே இடது பகுதியிலுள்ள மெமை, பக்ஷிகளுக்கேற்ப, வலது பக்கத்திலிருந்து ஜாமத்திற்குரிய தொழிலைக் கண்டுகொள்ளலாம்.

ஜாமமென்பது அஹஸ். ராத்திரி இவைகளின் 5-ல் ஒரு பகுதியாம்.

நக்ஷத்திரப் பக்ஷிகளறிய.

நக்ஷத்ரங்கள்	நக்ஷத்ரபக்ஷி	பூர்வபக்ஷ சத்ரு பக்ஷி	அபரபக்ஷ சத்ரு பக்ஷி
அசுவதி முதல்	5-ம் வல்லூறு	காகம், கோழி	கோழி, ஆந்தை
திருவாதி ,,	6-ம் ஆந்தை	கோழி, மயில்	வல்லூறு, மயில்
உத்திரம் ,,	5-ம் காகம்	மயில், வல்லூ	மயில், கோழி
அனுஷம் ,,	5-ம் கோழி	வல்லூ, ஆந்	காகம், வல்லூ
சிரவணம் ,,	6-ம் மயில்	ஆந், காகம்	ஆந், காகம்.

பூர்வ பக்ஷம்

பகல் இரவுக்கும்

அ, ஆ—வல்லூறு
இ, ஈ, ஐ—ஆந்தை
உ, ஊ, ஒள—காகம்
எ, ஏ—கோழி
ஒ, ஓ—மயில்

படு பக்ஷி

அ. வல்லூறு—வியா, சனி
இ. ஆந்தை-ஞாயி, வெள்ளி
உ. காகம்—திங்கள்
எ. கோழி—செவ்வாய்
ஒ. மயில்

அபர பக்ஷம்

பகல் இரவுக்கும்

அ, ஆ—கோழி
இ, ஈ, ஐ—வல்லூறு
உ, ஊ, ஒள—ஆந்தை
எ, ஏ—மயில்
ஒ, ஓ—காகம்

படு பக்ஷி

அ. கோழி—செவ்வாய்
இ, வல்லூறு—திங்கள்
உ. ஆந்தை—ஞாயிறு
எ. மயில்—வியாழன், சனி
ஒ. காகம்—புதன், வெள்ளி

தன்னுடைய பக்ஷியின் சத்துருப் பக்ஷிகள் வலீய தொழிலைச் செய்யும் காரியம் அபஜயம். வலிதாவது :—மரணம், துயில், நடை, ஊண், அரசு இவைகள் முறையே ஒன்றுக்கொன்று வலிதாம்.

சூக்ஷ்மத் தொழில் :— பூர்வபக்ஷம், அபரபக்ஷம் இவைகளின் பகல் இரவுகளில் தொழில் மாறுவது போன்று சூக்ஷ்மத் தொழிலிலும் மாறும். ஒவ்வோர் ஜாம (6) நாழிகையிலும், ஊணுக்கு நாழிகை 1½, நடைக்கு நாழிகை 1½, அரசுக்கு நாழிகை 2, துயிலுக்கு நாழிகை ¾, சாவுக்கு நாழிகை ¼.

சுபகாரியங்கள் செய்ய :—அரசு, ஊண்—உத்தமம் ; நடை—மத்யமம் ; துயில், சாவு—அதமம்.

கிரஹங்களின் ஜன்ம பூமி முதலியன.

பெயர்	பிறப்பிடம்	கோத்ரம்	அக்னி	ஸ்தானம்	முகம்
சூரியன்	கலிங்கம்	காச்யப	கபிலா	சக்ரமத்யம்	கிழக்கு
சந்த்ரன்	யமுனை	ஆத்ரேய	பிங்களா	தெ-கிழக்	மேற்கு
செவ்வாய்	அவந்தி	பரத்வாஜ	தூம்ரகே	தெற்கு	தெற்கு
புதன்	மகதம்	ஆத்ரேய	ஜாடா	வடகிழக்கு	வடக்கு
குரு	ஸைந்தவம்	ஆங்கிரஸ	சுகி	வடக்கு	வடக்கு
சுக்ரன்	போஜகடம்	பார்கவ	ஹாடக	கிழக்கு	கிழக்கு
சனி	ஸௌராஷ்ட்ரம்	காச்யப	மஹாதேஜ	மேற்கு	மேற்கு
ராகு	விராடம்	பைடினஸ	ஹரிதாச	தெ-மேற்	தெற்கு
கேது	உள்திண்ணை	ஜைமினீய	..	வடமேற்கு	தெற்கு

தும்மலின் பலன்

ஞாயிறு முதல் அன்றைய வாரம் வரையில் எண்ணின தொகையுடன் உதயாதி சென்ற யாமங்களையும் கூட்டி 8-ல் வகுத்த மிச்சத்திற்குரிய பலனைத் தெரிந்துகொள்க. 1 மிருத்யு பயம் 2 வியதை. 3 பசி பயம். 4 நல்லவார்த்தை. 5 விஜயம். 6 சுபம். 7 அசுபம். 8 கலகம். மேற்கண்ட பலன்கள் ஒற்றைத் தும்மலுக்காகும். இரட்டைத் தும்மலுக்கு எதிரான பலன். பல தும்மல்களுக்கு அசுப பலனேயாகும்.

பல்லி விழுதலின் பலன்.

தலையில் கலகம், முகம் பந்து தரிசனம், புருவம் ராஜானுக்ரகம், மேலுதடு தனவிரயம், கீழுதடு தனலாபம், மூக்கு வியாதி சம்பவம்,

வலது செவி தீர்க்காயுசு, இடது செவி வியாபார லாபம். நேத்திரங்கள் விலங்கு. முகவாய்க்கட்டை ராஜ தண்டனை. வாயில் பயம். கண்டம் சத்ரு நாசம். வலது புஜம் ஆரோக்கியம், இடது புஜம் ஸ்திரீ சம்போகம். வலது மணிக்கட்டு பிடை. இடது மணிக்கட்டு கீர்த்தி. ஸ்தனங்கள் பாப சம்பவம், வயிறு தனலாபம். மார்பு நவரத்தின லாபம். உபயபாரிசம் வெகு லாபம், துடைகள் மிதா அரிஷ்டம், முழங்கால்கள் சுகம். கணைக்கால்கள் சுபம். பாதம் பிரயாணம். பிருஷ்டம் சுபம். நகங்கள் தனநாசம். ஆண் குறி தரித்திரம். மயிர் மிருத்யு பயம். முதுகில் பொருள் நாசம். இவைகளில் ஏறினால் ஜயம். இறங்கினால் அபஜயம்.

பல்லி சொல்லுக்குப் பலன்.

திசை	ஞாயிறு	திங்கள்	செவ்வாய்	புதன்	வியாழன்	வெள்ளி	சனி
கிழக்கு	பயம்	தனலாபம்	சம்பத்து	சந்தோஷம்	அபயம்	சுபம்	வார்த்தை
அக்னி	நீமை	கலகம்	பத்துலாப	நிரணயம்	பத்துநாச	அலங்	நிரணயா
தெற்கு	சுபம்	பகை	வியசனம்	ஜாட்யம்	தனலாபம்	பத்துநாச	ராஜநாச
நிருருதி	பத்துநாச	விரோதம்	சத்ரு	பத்துநாசம்	கார்யசித்தி	நற்செய்தி	ரோகம்
மேற்கு	சண்டை	ராஜநாச	அநுகூலம்	பயம்	நஷ்டம்	சந்தோ	வஸ்த்ரா
வாயு	வஸ்த்ர லாபம்	அமங் கலம்	தூரவார்த்தை	தனநாசம்	நற்செய்தி	கலகம்	ஸ்த்ரீலாப
வடக்கு	தனலாப	வஸ்த்ரா	சத்ருபய	சுகம்	கார்யஹா	கலகவா	பிரியவார்த்தை
ஈசான்ய	லாபம்	கல்யாண	வாஹன	ஆகாது	போஜனம்	சத்ருபய	நிருபய
ஆகாயம்	ஜயம்	கெடுதி	பிரயாண	நற்செய்தி	கலகம்	வஸ்த்ர லாபம்	கார்ய ஹாநி
பூமி	ஆகாது	ஐச்வர்யம்	தனலாப	ஐச்வர்யம்	கலகம்	சுககல்யா	சகலசித்தி

சிதல் காணும் பலன்.

வீட்டை சதுர வடிவில் 9 பாகமாகப் பிரித்து பிரம்ம ஸ்தானமான நடுவில் நின்று பரர்ப்பது.

வீட்டின் நடுவில் சிதல் கண்டால் தன லாபம்; அதற்கு மேல் பாகத்தில் காண குழந்தைகளுக்கு ரோகம். கிழக்கில் ஜ்வர பயம், அக்னி மூலை பந்து நாசம், தெற்கில் ஸ்திரீ நாசம், நிர்ருதியில் மரணம், மேற்கில் கர்ப்ப லாபம், வாயு திக்கில் கன்யா லாபம். ஈசான்யத்தில் சத்ரு நாசம், வாசலில் ஸ்த்ரீ நாசம். சயனத்தில் மரணம். சமையல் புரையில் ஸ்திரீ நாசம், மாட்டுத் தொழுவில் பசு நாசம், தேவாலயம், கிராமத்தில் கிராமாதிபனுக்கு நாசம். இந்த தோஷத்துக்கு சாந்தி செய்ய வேண்டும்.

சுவரிடுவதன் பலன்.

கிழக்கு முதலான எட்டு திக்குகளிலும் முறையே சுவரிடுவதன் பலனை க்ரமமாக பரர்த்துக் கொள்வது, 1. ஸ்திரீகள். 2. வாஹனம். 3. லோஹம். 4. ஸம்பத்து. 5. மரணம், 6. புத்ரன், 7. ஸௌக்யம், 8. துக்கம்.

புற்று காண்பதின் பலன்.

கிழக்கில் தனம், அக்னியில் பந்து நாசம், தெற்கில் மரணம், நிருருதியில் சுகம், மேற்கில் தன லாபம், வாயுவில் ஸௌக்யம், வடக்கில் யஜமான நாசம். ஈசான்யத்தில் வியாதி பீடை, ப்ரம மத்தியில் யஜமானனுக்குக் கெடுதி.

புற்று, தேன்கூடு, சுவர்க்கோழியின் சப்தம் - ஈசான்யம், தெற்கு, அக்னி, நிர்ருருதி — இவைகளில் கண்டால் கெடுதி. மற்ற திக்குகளில் காண சுபம்.

எறும்பு காண்பது.

க்ருஹத்தில் கிழக்கில் எறும்புக் கூட்டத்தைக் காண சிக்ரம் தன நாசம், அக்னி பந்து ஸமாகமம், தெற்கில் ஸ்த்ரீ வரவு, நிருருதியில் பழ லாபம், மேற்கில் ஐச்வர்யம், வாயுவில் வியபிசாரம், வடக்கில் அதிக ஐச்வர்யம், ஈசான்யத்தில் பூமி, மத்தியில் தன நாசம்.

பசு கன்று போடுதல்.

ஞாயிறு அல்லது செவ்வாயில் பகலில் பசு கன்று ஈன்றால் பந்துக்களுக்குக் கெடுதி. வெள்ளியன்று எருமை கன்று போட எஜமானனுக்குக் கெடுதி.

வாழை முதலியவைகளில் புஷ்பம் காணுதல்.

வாழை, தென்னை, பாக்கு முதலியவைகளில் கிழக்கு முதலிய எட்டு திக்குகளுக்கு நேராக புஷ்பம் கண்டால் க்ரமமாக பலன் காண்க: 1. ஆயுள் வ்ருத்தி. 2. பிரஜா நாசம். 3. நீதி. 4. ஆபத்து 5. மாத்ரு நாசம், 6. தனலாபம், 7. ஸந்தோஷம், 8. ஸௌக்யம்

நீ முதலியவற்றால் வஸ்த்ர நாசம்.

நெருப்பு, எலி, விறகு முதலியவைகளால் வஸ்த்ரத்தில் ஏதாவது ஒரு பாகத்துக்குக் கெடுதல் நேரிடில், அவ்வஸ்த்ரத்தை 25 பாகமாக்கிக் கொண்டு, முறையே ஒவ்வொரு பாகத்தின் பலனை அறிந்து கொள்வது. 1. மத்தியில் நீங்கு, 2. மத்யத்

துக்கும் கிழக்குக்கும் நடுவில் புத்ர லாபம், 3. கிழக்கில் ஸம்பத்து, 4. கிழக்குக்கும் அக்னி மூலைக்கும் நடுவில் ஸ்திரீ நாசம், 5. அக்னி மூலை அக்னி பயம், 6. அக்னிக்கும் மத்யத்துக்கும் நடுவில் லாபம், 7. தெற்குக்கும் அக்னி மூலைக்கும் நடுவில் பசு நாசம், 8. தெற்கில் பந்து நாசம், 9. மத்ய பாகத்துக்கும் தெற்குக்கும் மத்யத்தில் பெரிய வியாதி, 10. தெற்குக்கும் நிருருதிக்கும் நடுவில் ஆபத்து, 11. நிர்ருருதியில் புத்ர லாபம், 12. மத்யத்துக்கும் நிருருதிக்கும் நடுவில் ஸம்பத்து, 13. மேற்குக்கும் நிருருதிக்கும் நடுவில் புத்ர லாபம், 14, மேற்கில் உத்தம லாபம், 15. மத்யமத்துக்கும் மேற்குக்கும் நடுவில் நீங்கு, 16. மேற்குக்கும் வாயு மூலைக்கும் நடுவில் புண்ணியம், 17. வாயு மூலை வஸ்த்ர லாபம், 18. மத்யத்துக்கும் வாயு மூலைக்கும் நடுவில் பயனழிதல், 19. வடக்குக்கும் வாயு மூலைக்கும் நடுவில் நாசம், 20. வடக்கு பாகத்தில் புத்ர லாபம், 21. மத்யத்துக்கும் வடக்குக்கும் நடுவில் பெரிய வியாதி, 22. ஈசான்யத்துக்கும் வடக்குக்கும் நடுவில் அதிக பயம், 23. ஈசான்யம் ஸந்தோஷம், 24. மத்யத்துக்கும் ஈசான்யத்துக்கும் நடுவில் புத்ர ஸம்பவம், 25. கிழக்குக்கும் ஈசான்யத்துக்கும் நடுவில் ஸம்பத்து.

காலற்ற, உடலற்ற, தலையற்ற நாட்கள்.

(காலற்ற நாள்)	(உடலற்ற நாள்)	(தலையற்ற நாள்)
கார்த்திகை	மிருகசிரிடம்	புனர்பூசம்
உத்தரம்	சித்திரை	விசாகம்
உத்தராடம்	அவிட்டம்	பூரட்டாதி

இந்த நாட்கள் புணர்ச்சிக்கும் மீன முகூர்த்தத்திற்கும் யாத்திரைக்கும் ஆகாது என்று சிலர் கொள்கை.

பக்ஷி சகுனங்கள்.

பரத்துவாசம், கருடன், மான் தோகை, கோட்டான், கிரிப்பிள்ளை, அணிப்பிள்ளை, நாய் பூனை, மூஞ்சூறு இவைகள் வலது பக்கமிருந்து இடது பக்கம் போனல் சுபம். காகம், நாராயண பட்சி, கள்ளிக் காக்கை, நரி, இளி, குரங்கு, கொக்கு, குயில், மயில், மாடு, எருமை, ஜவ்வாது பூனை இவைகள் இடது பக்கமிருந்து வலது பக்கம் போனல் சுபம்.

காக்கை கத்தும் பலன்.

சூரிய உதய காலத்தில் 1-16 நாழிகைக்குள் காக்கை கிழக்கில் கத்துமாகில் லாபம், ஆக்னேயத்தில் சத்ரு ஜயம், தெற்கில் பந்து லாபம், நிர்ருருதியில் அர்த்த லாபம், மேற்கில் மழை, வாயுதிக்கில் யுத்தம், வடக்கில் பிராண ஹானி, ஈசான்யத்தில் கொஞ்சம் பயம், ஒவ்வொருவரும் தாம் நித்திரை விட்டெழும் போது இந்தக் குறிப்பைக் கவனிக்க வேணும். காக்கை சேர்ந்திருக்கப் பார்த்தால் ரோகத்தால் துக்கம் உண்டாகும்.

ஆந்தை கூவுதல் சகுனம்.

1-குரல் கூவுமாகில்-உற்றதோர் சாவு நேரும், 2-குரல் கூவுமாகில்-எண்ணிய கருமம் நன்று, 3-குரல் கூவுமாகில்-மோகங்கை சேர்வாள், 4-குரல் கூவுமாகில்-நாழிகையிற்கலகம் நேரும், 5-குரல் கூவுமாகில்-அங்கொரு பயணமாகும், 6-குரல் கூவுமாகில்-அடுத்தவர் வரவு நேரும், 7-குரல் கூவுமாகில்—இருந்தோர் பொருளும் போகும், 8-குரல் கூவுமாகில் திட்டெனச் சாவு நேரும், 9-ம் 10-மாகில் உத்தமம் மிகவும் நன்றே.

சுபஸ்வப்னங்கள்.

நல்ல காந்தியையுடைய சூரியன் அல்லது சந்த்ரனைக் காணவியாதி நீர்ந்து சோபையை அடைவான், சூரியன் அல்லது சந்த்ரனைக் கையால் பிடிக்க ஐச்வர்யத்தை அடைவான், பழுத்த மரம், பழுத்த காடு, காடோடு கூடிய மலையைக் காண ஸ்ரீயை அடைகிறான், இவைகளில் ஏறினதாகக் கண்டால் அதிகமான ஸ்ரீயை அடைவான், மா, புளி, பாக்கு, நெல்லி, தென்னை, பழங்களுடன் கூடிய பெரும் காட்டு மரம் இவைகளில் ஏறி, பழங்களைப் பறிக்கக் கண்டால் தன லாபம், யூபம், புற்று, வெளுத்த கெட்ட விருக்ஷங்கள் இவைகள் நீங்கலான உயர்ந்த மரத்தில் ஏறினதாகக் காண விருத்தியை அடைவான், தாஹத்தால் பெரும் கடலையும், பிரவஹிக்கின்ற நதியையும் குடித்துக்கொண்டே உணருபவன் ராஜ்யத்தை அடைவான், ஸமுத்ரம் அல்லது நதியைத் தாண்டியதாகக் கனவு காண பயம் நீரும், பொங்குகிற ஸமுத்திரத்தையோ நதிகளையோ காண ஐச்வர்யத்தை அடைகிறான், தாய், தகப்பன், புத்ரன், ப்ராம்மணன், பந்து, ப்ரியமானவன்—இவர்களைக் காணப் பெரும் பாக்யத்தை அடைவான், மத்ய பானம் செய்வதாகவோ, சேரக் கூடாத ஸ்திரீயுடன் சேர்ந்ததாகவோ

காண மங்களமுண்டாகும். வெள்ளை வஸ்த்ரம் தரித்த அழகான ஸ்திரீயையோ, புருஷனையோ காண தன லாபம். மனிதன், காக்கை, மீன் இவைகளின் வபை, மாம்ஸம், ரத்தம் முதலிய வற்றைத் தொடுவதாகக் கண்டால் தனத்தை அடைவான். வெளுத்த வஸ்த்ரம், மாலை, நல்ல வாஸனைத் திரவ்யங்களுடன் கூடிய ஒரு ஸ்திரீ படுக்கையில் இருப்பதாய்க் காண அதிக ஐச்வர்யத்தை அடைகிறான். கையில் தாமரையுடன் கன்னி லகையைக் கண்டால் லக்ஷ்மியை அடைவான். ராஜா, யானை, குதிரை, தங்கம், காளை, பசு இவைகளைக் காண குடும்பம் விருத்தி யாகும். கொக்கு, கோழி, மிருகம், காட்டு மரம், தங்க நிறமான பக்ஷி இவைகளைக் காண ஸ்ரீயை அடைவான். பெரிய மேடை அல்லது அரசனைக் கண்டாலும், தேவதைகளின் பேச்சைக் கேட்டாலும் ஐச்வர்ய லாபம். வீடு, திண்ணை முதலியவற்றைக் கட்டுவதாகவும், குலத்துக்கு மேன்மையைச் செய்வதாகவும், மரம், தோட்டங்களை உண்டுபண்ணுவதாகவும் கண்டால் ஸ்திரமான நிலை ஏற்படும். நெய்தல், தாமரை, வெள்ளை மாலை, ஆபரணம், அகில் இவை கிடைத்ததாகக் காண சுகத்தை அடைவான். சாணம், ஆமேத்யம், மாம்பழம், சிவப்பு மாலை, சவம்-இவைகளைக் காண ஸ்ரீயை அடைகிறான். ஸோமபானம், மத்யபானம், பிராம் மண தர்சனம், காளை அல்லது குதிரை பூட்டிய ரதத்தில் ஏறுவது ஆஸனம், சயனம், ரதம், சரீரம், வாஹனம் இவைகளிலிருப்பது-இவைகளைக் காண ஐச்வர்யத்தை அடைகிறான். ஸ்வப்னத்தின் கடைசியில் மனிதனைத் தவிர மற்ற பிராணிகளின் காலைக் கடிக்க சிறிது லாபமும், கையைக் கடித்தவனுக்கு அதிக லாபமும், தலையைக் கடித்தவனுக்கு ராஜ்ய லாபமும் ஏற்படும். வெள்ளை ஸர்பம் வலது கையில் கடிப்பதாகக் காண தன லாப முண்டு. பால் குடித்துக் கொண்டே இருப்பதாகக் காண அதிக லாப மடைவான். நாய் அல்லது ஸர்ப்பம் கடித்து ரத்தம் உண்டான தாகக் காண ஐச்வர்யத்தை அடைகிறான். தலை அறுபட்டு ரக்தத்தில் நனைந்ததாகக் கண்டால் தன லாபம், ஆரோக்யம் ஏற்படும். தருணன் தன்னை விருத்தனாகக் கண்டால் மேன்மை அடைவான். ஆயுள் வளரும். தன் பூமியில் உயர்ந்த கொடியைக் காண ஜயமும் தன லாபமுமேற்படும். வெள்ளை யானையினால் அலங்காரம் செய்யப்பட்ட தங்கக் குடை ஆகாசத்திலிருந்து தன்னிடம் வருவதாகக் கண்டால் ராஜ்ய லாபம். கோயிலில்

வெள்ளை மாலை தரித்த பிம்பங்களைக் காண தன லாபம். பிராம் மணர், வெள்ளைத் துணிகள், வெள்ளைப் பசுக்களைக் காண காரிய ஸித்தி. தங்கம், வெள்ளி, வெள்ளைத் தாமரை, அஸ்த்ரம், ஆபரணம் இவைகளைக் காண ஐச்வர்யத்தை அடைகிறான். பெரிய தான்யக் குவியல், வெண்கலம் அக்னிமயமான விடு-இவைகளைக் காண ஐச்வர்ய லாபம். தங்கநிறமான புழுக்களால் தேஹமரிக்கப்படுவதாகக் காண தன தான்யங்களையும் ஆரோக் யத்தையும் அடைவான். தன்னை தங்கமயமாக இருப்பதாகக் காண மேன்மையையும் ஆயுளையுமடைவான். முளைகள், சங்கு, சக்கரம், கொடி, விசிறி, சாமரம், ரக்தம், பூர்ண கும்பம்-இவை களைப் பார்த்தாலும், நெய், பாயஸம், மா, பால், சர்க்கரை, தயிர், சமுத்திரம், நதி, பழம், சாதம், மாமிஸம் இவைகளைச் சாப்பிட்டா லும், வேத கோஷத்தைக் கேட்டாலும் தன லாப மேற்படும். தெய்வம், ப்ராம்மணன், குரு, படித்தவன், ஸாது-இவர்களோடு சேருவதாகவும், ரக்தம், மாம்ஸம், சாணி, அமேத்யம்-இவைகளில் அமுங்குவதாகவும் இவைகளை தேஹத்தில் பூசிக்கொள்வதாகவும், ஸர்ப்பம், தேள்கள் கடிப்பதாகவும், தெய்வம் பிராமணன் குரு ஸ்திரீகளுடன் பேசுவதாகவும் கண்டால் சுபம், தன தான்யங்கள் வெற்றிலை பாக்கு, சாதம் இவைகள் கிடைப்பதாயும், உண்ப தாயும், பாலால் தன்னை அபிஷேகம் செய்துகொள்வதாகவும் கண்டால் தனலாபம். வண்டி, யானை, உப்பரிகை, பல்லக்கு, தேர் திண்ணை, நல்ல மரம்-இவைகளிலேறுவதாகக் காண அதிக தான்ய லாபம். தான் கட்டுப்பட்டதாகக் கண்டால் ஆரோக்யம் ஏற்படும்.

துஸ்ஸ்வப்ன பலன்.

நாய், நரி, கழுகு, பிசாசு, கரும்புழு, காக்கை, பருந்து, ராக்ஷஸன் இவைகளைப் பார்த்தாலும், தொட்டாலும், ஆலமரத்தில் விழு கிறதாகக் கண்டாலும் துக்கமும் பயமும் ஏற்படும். குதிரை, ஒட்டகம், ரதம், எருமை, நாய், கருத்த ஸ்திரீ-இவைகளைப் பார்க்க வியஸனமுண்டாகிறது. எந்த இடத்தில் தேவதைகள் கூத்தாடு வதாகவும், சிரிப்பதாகவும், அழுவதாகவும், தோள் தட்டுவ தாகவும், ஓடுவதாகவும் காண்கிறானோ; அந்த இடம் நாசமாகும். கம்பளி, வெள்ளிச் சொக்கட்டான், இரும்புச் சட்டி, யானை, எள்ளு, பன்றி, பூஜைகளைக் காண மரணம் நேரிடும். சிவந்த வஸ்த்ரம், வாஸனை த்ரவ்யங்களையுடைய ஸ்திரீயை ஆலிங்கனம்

செய்வதாகக் காண சீக்ரத்தில் தீங்கு விளையும். சிவந்த வஸ்த்ரம், மாலைகளை அணிந்த கருப்பான ஸ்த்ரீயைக் கைப்பிடித்துத் தென் திசை செல்ல மரணம் நேரும். மேல் நோக்காக உள்ள மயிர்களை உடைய கழுதை நிறமுடைய ஸ்த்ரீயை ஸ்வப்னத்தின் முடிவில் காண, தானே, எஜமானனே இறக்கக் கூடும். சண்டாளன், பதிதன், மிலேச்சன், தாழ்ந்த ஜாதியில் பிறப்புடையவன், காகம், துஷ்ட ப்ராணி, கிருஷ்ண ஸர்ப்பம்-இவைகளைக் காண மரணம். தேன், நெய், எண்ணெய் இவைகளைத் தேய்த்துக்கொள்வதாகக் காண வியாதி உண்டாகும். பல் அல்லது கொம்பை ஆயுதமாகவுடைய பிராணிகள், குரங்கு, பன்றி-இவைகள் தன்னை துரத்துவதாகக் கண்டால் பெரிய ஆபத்து ஏற்படும். பூர்ண கும்பம் முதலியன நிகழ்வதாகக் காண துக்கமுண்டாகும். சூரியன் அல்லது சந்த்ரனைக் காந்தி யில்லாமலும், நக்ஷத்ரங்கள் கீழே விழுவதையும் காண துக்கமுண்டாகும். நதி, ஸமுத்ரம், குளம்-இவைகளை உலர்ந்ததாகக் காண தன நாசம். நல்லெண்ணெய் அல்லது மஞ்சளைத் தேய்த்துக் கொண்டதாகக் கண்டால் பெரிய வியாதியை அடைவதுடன், நாய், தாழ்ந்த ஜாதியினர், பசு இவைகளால் வருத்தமடைவான், பற்கள் விழுவதாகக் கண்டால் மன வருத்தம், பந்து நாசம் ஏற்படும்.

ஸ்வப்னங்கள்— காண்பது, கேட்பது, அனுபவித்தது, கோரியது, மனதாலேற்படுத்தப்பட்டது, நடக்கப் போவது, உஷ்ணம் முதலியவற்றால் உண்டாவது—என ஏழு வகைகளாகும்.

இரவில் முதல் யாமத்தில் காணும் கனவு ஒரு வருஷத்திலும், இரண்டாவது யாமத்தில் காண்பது ஆறு மாதத்திலும், மூன்றாவது யாமத்தில் காண்பது ஒரு மாதத்திலும், அருணோதயத்தில் காண்பது 12 தினங்களிலும், காலையில் காண்பது உடனேயும் பலத்தை அளிக்கும்.


முதலில் அசுப ஸ்வப்னம் கண்டு, பின்னர் சுபஸ்வப்னம் கண்டாலும், முதலில் சுப ஸ்வப்னம் கண்டு பின்பு அசுப ஸ்வப்னம் கண்டாலும் பிந்தியது பலனை அளிக்கும்.

துஸ் ஸ்வப்னம் கண்டால் அதின் தோஷம் நீங்க நிரும்ப நித்திரை செய்யவும். துஸ் ஸ்வப்னத்தை பிறரிடம் அவசியம் சொல்லவும். சுபஸ்வப்னத்தைச் சொல்லக் கூடாது. பகல் ஸ்வப்னம் பலனளிக்காது.

அஷ்டகவர்க யந்த்ரத்தால் அஷ்டகவர்கம் அமைக்கும் விதம்,

இப்புத்தகத்துடன் ஒவ்வொருவருக்கும் ஒரு அஷ்டகவர்க யந்த்ரம் இலவசமாக அளிக்கப்படுகிறது. அதைக்கொண்டு எல்லா ஜாதகங்களுக்கும் அதிசுலபமாக அஷ்டகவர்கம் அமைத்துவிடமுடியும். ஸாதாரணமாக சோழிகளைக்கொண்டு அமைப்பதானால் 1 மணி அவகாசமும், பிந்துகளாகக் குறித்து அமைப்பதானால் முக்கால்மணி அவகாசமும் வேண்டியிருக்கலாம். இந்த யந்த்ரத்தைக் கொண்டு அமைப்பதானால் ஒரு ஜாதகத்துக்கு அதிகமாக வைத்துக்கொண்டாலும் பத்து நிமிஷங்களுக்குமேல் ஆகாது என்பதை அவரவர்கள் அனுபவத்தில் தெரிந்துகொள்ளலாம். பழைய வழிகளில் தவறுதல்களும் ஏற்படலாம். அதைச்சோதிக்க மறுமுறையும் அதே அவகாசத்தை வீணாக்கினால்தான் திருத்த முடியும். இந்த யந்த்ரத்தில் தவறுதல் ஏற்படுவதே சிரமம். ஒரு வரு தவறு நேர்ந்து விட்டதாகக் கருதினாலும் அமைப்பு அப்படியே இருப்பதால் உடனே எந்த குறிப்பிட்ட இடத்திலும் சோதித்துப் பார்க்க முடியும். இந்த யந்த்ரம் மிகுந்த புத்திச்ரமத்தால் தயாரிக்கப் பெற்றதாகையால் அனைவரும் இதைப் பயன் படுத்திக் கொள்ளத் தவற மாட்டார்களென நம்புகிறோம். நிற்க.

இப்போது மாதிரிக்காக ஒரு ஜாதகம் அமைத்து அதற்கு



அஷ்டகவர்கமும் அமைத்துக் காட்டுகிறோம். இதை நன்றாக ஒருமுறைக்கிருமுறையாகக் கவனித்து வேண்டிய ஜாதகங்களுக்கு அமைத்துக்கொள்ளுங்கள்.

இந்த யந்த்ர முறையில் அஷ்டகவர்கம் அமைக்க ஸர்வாஷ்டகவர்கமுட்பட ராசிசக்கரகட்டங்கள் ஒன்றுகூடத் தேவையில்லை. கீழே கண்டவாறு கோடுகள் அமைத்துக்கொளளலாம். ராசி சக்கரங்களாகவே அமைத்துக்கொண்டாலும் தோஷமில்லை.

இப்போது ஜாதகத்தைக் கவனியுங்கள். மகாலக்ன ஜாதகம் இது. லக்னத்தில் சூரியன் புதன் சுக்ரர்களிருப்பதையும், மீனத்தில் சனியையும், ஸிம்மத்தில் சந்த்ரனும் குருவுமிருப்பதையும் விருச்சிகத்தில் செவ்வாயிருப்பதையும் பார்க்கிறீர்கள். இதற்கு அஷ்டகவர்கயந்த்ரத்தை உபயோகிக்கும் முறையைத் தெரிந்து கொள்ளுங்கள்.

இப்போது யந்த்ரத்தைக் கவனியுங்கள். யந்த்ரத்தில் 1 முதல் 7 நம்பர்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவை க்ரஹங்களைக் குறிப்பனவாகும். அதாவது: சூரியன் 1, சந்த்ரன் 2, செவ்வாய் 3, புதன் 4, குரு 5, சுக்ரன் 6, சனி, 7— இவ்விதம் நெம்பர்கள் க்ரஹங்களைக் குறிக்கின்றன. யந்த்ரத்தில் மொத்தம் 9 வட்டங்களிருக்கின்றன. அவைகளில் வெளியிலிருந்து முதல் வட்டம் ராசி. இரண்டாவதுவட்டம் சூரியன். 3-வது வட்டம் சந்த்ரன், 4-வது வட்டம் செவ்வாய், 5-வது வட்டம் புதன் 6-வது வட்டம் குரு, 7-வது வட்டம் சுக்ரன். 8-வது வட்டம் சனி, 9-வது வட்டம் லக்னம். ஒவ்வொரு வட்டத்திலும் 12 கட்டங்களுள்ளன. சூரியன் (48), சந்த்ரன் (49) இவைபோல் ஒவ்வொரு வட்டத்திலும் க்ரஹங்களும் அவற்றின் பரல்களும் குறிக்கப்பட்டிருக்கின்றன. கடைசியான உள்வட்டத்தில் (ல) என்று குறிக்கப்பட்டிருக்கிறது. இவைகளே ஆரம்ப இடமாகும். இப்போது முதல் வட்டமான ராசியில் மகரத்துக்கு நேராக சூரியனையும் (ஆரம்பஇடத்தை) ஸிம்மத்துக்கு நேராக சந்த்ரனையும், விருச்சிகத்துக்கு நேராக செவ்வாயையும், மகரத்துக்கு நேராக புதனையும், ஸிம்மத்துக்கு நேராக குருவையும், மகரத்துக்கு நேராக சுக்ரனையும், மீனத்துக்கு நேராக சனியையும், மகரத்துக்கு நேராக லக்ன சக்ரத்தையும் இருப்பிக்கொள்ளுங்கள். வைத்த பிறகு

மாறுதபடி வைத்துக் கொண்டு கட்டத்துக்கு நேராக (கோடுகள் சரியாக வரும்படி) வைத்துக் கொள்ளுங்கள். இப்படி அமைக்கப் பட்ட யந்த்ரத்தின் நிலையைப் பாருங்கள்.




இப்போது ஒவ்வொரு ராசியின் அறையில் (8 சக்ரங்களிலும்) எவ்வளவு '1' எண் இருக்கிறது என எண்ணவும். இவ்விதமே, '2', '3', '4', '5', '6' '7', எண்கள் எவ்வளவு எவ்வளவு இருக்கின்றன என்பதைத் தனித்தனியே எண்ணினால் அவைகள் அந்தந்த ராசியில் அந்தந்த க்ரஹங்களின் பிந்துக்களாகும்.

இவைகளைக் குறித்துக் கொள்ள இம்மாதிரி கட்டம் அமைத்துக் கொண்டால் சுலபமாக விருக்கும்.

கிரஹங்கள்	மேஷம்	ரிஷ	மிதுனம்	கடகம்	சிம்மம்	கன்னி	துலாம்	விருச்சி	தனுசு	மகரம்	கும்பம்	மீனம்	மொத்தம்
சூரிய	4	3	7	3	2	4	5	5	6	4	2	3	48
சந்த்ர	3	5	4	5	6	3	6	5	1	4	2	5	49
செவ்	-	4	8	1	2	2	4	6	3	4	1	4	39
புத	3	5	7	2	3	6	3	7	4	6	3	5	54
குரு	4	6	6	3	4	7	5	6	2	3	8	2	56
சுக்	5	5	4	3	4	5	4	6	4	4	3	5	52
சனி	3	1	5	3	4	2	5	4	3	6	1	2	39
ஸர்வாஷ்டக வர்க்கம்	22	29	41	20	25	29	32	39	23	31	20	26	337

இக்கட்டத்தில் மேலிருப்பவை ராசிகள், பக்கத்திலிருப்பவை க்ரஹங்கள். இப்போது மாதிரி யந்த்ரத்தில் மேஷத்தில் எவ்வளவு '1' இருக்கின்றன? 8 வட்டங்களிலும் நான்கு '1' இருக்கின்றன. இந்த 4 சூரியனுக்குரிய மேஷத்திலுள்ள பிந்துகளாகும். ஆகவே மேஷத்துக்கு நேராக 4 குறிக்கப்பட்டிருக்கிறது. இவ்விதமே மேஷ அறையில் எவ்வளவு '2' இருக்கின்றன பாருங்கள். மூன்று '2' இருக்கின்றன அல்லவா? மேஷத்துக்கும் சந்த்ரனுக்கும் நேராக 3 குறிக்கப்பட்டிருக்கிறது. அடுத்தபடியாக '3' என்னும் நம்பரே கிடையாது. ஆகவே செவ்வாய்க்கு மேஷத்தில் பிந்து சூன்யம். '4' (புதன்) எவ்வளவு இருக்கின்றன? மூன்று இருக்கின்றன. புதனுக்கும் மேஷத்துக்கும் நேராக 3 குறிப்பிடப்பட்டிருக்கிறது. இவ்விதமே எல்லா வட்டங்களிலும் தவறாமல் எண்ணி அந்தந்தக் கட்டங்களில் குறிப்பிடவும். இவ்வண்ணமாக எல்லா அறைகளிலும் எண்ணி வந்த எண்ணிக்கைகளைக் குறிப்பிடவும். எல்லாவற்றையும் குறிப்பிட்டு மேலிருந்து கீழ்வரை கூட்டி எழுதவும். இதுவே ஸர்வாஷ்டகவர்கமாகும். அதாவது ஒவ்வொரு ராசியிலும் எல்லா க்ரஹங்களினுடையவும் மொத்த பிந்துக்கள். குறுக்கே பக்கவரிசையில் கூட்டி வருவது அந்தந்த க்ரஹத்துக்குரிய பிந்துக்கள். நிதானமாக வாசித்து மனதில் பதிய வைத்துக் கொள்ளுங்கள். நன்றாய் கவனித்து மாதிரியையும் பார்த்து முதலில் ஒரிரு ஜாதகங்களுக்கு அமைத்துப் பாருங்கள். இப்போது எவ்வளவு ஸுலபமாக இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். தெரிந்து கொண்டீர்களா; ஸந்தோஷப்படுகிறீர்களல்லவா! இனிமேல் அஷ்டகவர்கத்துக்குரிய பலத்தைப் பார்த்து ஆனந்தமடையுங்கள்!



அநுபந்தம்.

மேலே விடுபட்ட சில விஷயங்கள் இங்கே சேர்க்கப்படுகின்றன.

ஹோரையின் பலன்.

(578-ம் பக்கம் ஹோராசக்ரம் காண்க.)

குரு ஹோரையில் பிறரை எதிர் பார்த்தல், சாமான்கள் வாங்கல், உத்யோகம், தன விஷயங்கள், வஸ்த்ராபரண ஸங்க்ரஹம், காரியங்களை ஆரம்பித்தல் மற்றும் எல்லா விஷயங்களையும் செய்யலாம்.

செவ்வாய் ஹோரையில் பொதுவாக ஒரு காரியமும் செய்யாதிருத்தல் நலம்.

சூரிய ஹோரையில் உத்யோகம், வியாபாரம், பெரியோரைக் காண்பது, தஸ்தாவேஜ் எழுதுவது- இவைகள் நடத்தலாம்.

சுக்ரன் ஹோரையில் சுப கார்யங்கள், பெண்கள் விஷயங்கள், ஔஷத சேவை, வாஹன ஸங்க்ரஹம் முதலியவை செய்ய நலமாகும்.

புதன் ஹோரையில் வியவஹார விஷயங்கள், எழுத்து வேலைகள், பரீக்ஷை முதலான விஷயங்கள் நடத்த நலம்.

சந்த்ர ஹோரையில் வியாபாரம், ஸ்திரீகள் விஷயம், பிரச்னம், பிரயாணங்கள் நடத்தலாம்.

சனி ஹோரை சுப காரியங்களுக்கு அவ்வளவு உகந்ததல்ல; எனினும் ஸ்திரமான சொத்துக்கள் பற்றிய காரியங்கள் செய்ய நலமாகும்.

(674-ம் பக்கம்.)

நேதுதசை சூர்ய புக்தி மாதம் 4 நாள் 6.

சூரியன் உச்ச மித்ர ஸ்வக்ஷேத்ரங்களிலோ, கேந்த்ர த்ரிகோண லாபஸ்தானங்களிலோ இருந்தாலும், சுப க்ரஹ விக்ஷணம் பெற்றாலும், தனதான்யங்களின் லாபம், ராஜானுக்ரஹ வைபவம், சுப காரியங்கள், இஷ்டஸித்தி, கல்யாணம், புத்ர லாபம், யத்னகார்யார்த்த லாபம், ஸத்கதா சிரவணம், ஸஞ்சாரம் முதலியன கடைபெறும். 6, 8, 12-ல் வாஸம், பாப க்ரஹ ஸம்பந்தம் பெற ராஜபயம், பித்ரு மாத்ரு வியோகம், அன்ய தேச யாத்ரை, இருடன்,

ஸர்ப்பம் விஷம்— இவைகளால் பீடை, அரச ஸ்நேஹ விரோதம். ராஜதண்டத்தால் தன நாசம். சோகம். ரோக பயம். உஷ்ணஜ்வரம் ஏற்படும். தசாநாதனுக்கு கேந்த்ர த்ரிகோண லாபஸ்தானங்களிலிருக்க தேஹஸௌக்யம். தன லாபம். புத்ரலாபம். மனோதிடம், பிரயாணத்தில் காரிய ஸித்தி, ஸ்வல்ப க்ரஹாதிபத்யம் முதலியன ஏற்படும். தசாநாதனுக்கு 6. 8, 12-களிலோ பாபருடன் சேர்ந்தோ இருக்க அன்னத்துக்கு இடையூறு. நெஞ்சில் பயம். தனதான்ய பசு நாசம். ஆரம்பத்திலும் மத்தியிலும் அதிக துக்கம், முடிவில் ஸுகம் ஏற்படும். 2, 7-க்குடைய வனஞ்சல் அபமிருத்யு தோஷம் ஸம்பவிக்கும். சூர்ய சாந்தி. ஸ்வர்ண கோதானங்களைப் பரிஹாரமாகச் செய்ய வேண்டும்.

கேது விஷயம்.

பலனெழுதியிருக்குமிடங்களில் குறிப்பாக கேதுவுக்கு எழுதாமலிருந்தால் அவ்விடங்களிலெல்லாம் ராகுவைப்போன்ற பலனையே கேதுவுக்கும் ஊஹித்துக் கொள்வது.

ஒன்பதும் பலன்.

சிரஸில் விழ மூன்று மாதங்களில் மரணமுண்டாகும். சாந்தி அவசியம் செய்யவும். நெற்றி, மூக்கு, காது, கை, கன்னங்களில் விழ நான்கு மாதங்களில் கெடுதி ஸம்பவிக்கும். ப்ருஷ்டம், காது, மார்புகளில் விழ ஒரு மாதத்தில் மரணம். புஜம், தோள், கைகளில் விழ இரண்டு மாதங்களில் மரணம். முழங்கால், கணுக்கால் பாதம் இவைகளில் விழ ஒரு மாதத்தில் மரணம். காது, அக்குள், வயிறு இவைகளில் விழ. தன தான்ய நாசங்களேற்படும். நாபியின் கீழ்ப் பக்கம், பிரதானம், அபானம், துடைகளில் விழ மனோவிக்கும் பிரஜைகளுக்கும் நாசம். இத்தோஷங்கள் நீங்க கூவரம் செய்து கொண்டு சாந்தி பண்ணுதல் நலம்

சதுர்யுக விவரம்.

ஒரு மண்டலதினமாகிய 360-ஐ மனித ஆயுளாகிய 100-ஆல் பெருக்க 36,000 வருடங்களாகும். இதை விதற்பரை முதல் மண்டலம் வரையுமுள்ள 6-ஆல் பெருக்க 216,000 ஆகும். இதனை 8-ஆல் பெருக்க கிருதயுகம். 6-ஆல் பெருக்க த்ரேதாயுகம். 4-ஆல் பெருக்க துவாபரயுகம். 2-ஆல் பெருக்க கலியுக காலமாம்.

கணக்கு விபரம்.

கிருதயுகம்	ஹ	17,28000	துவாபரயுகம்	ஹ	86,4000
த்ரேதாயுகம்	,,	12,96000	கலியுகம்	,,	43,2000

2000 சதுர்யுகம் கொண்டது பிரம்மாவுக்கு ஒரு நாள். இந்த நாள் 30 கொண்டது ஒரு மாதம். இந்த மாதம் 12 கொண்டது ஒரு வருஷம். இந்த வருஷம் 100 கொண்டது பிரம்மாவுக்கு ஆயுள். இப்பொழுது பிரம்மாவுக்கு 50 வயதாகிய முதற் பரார்த்தம் கழிந்து இரண்டாவது பரார்த்தத்தில் முதலாவது கல்பம் நடக்கிறது. மற்றவையும் முறையே சென்ற விய வருஷத்துடன் 4998 வருஷங்கள் கழிந்தன.

குறிந்த தேதிக்கு திதி, நக்ஷத்ரம், யோகம் அறிய.

வருடம் 60 கொண்டது பரிவிருத்தியாகையால் சாலிவாகனன் 1609-வது சகாப்தம், பிரபவ வாண்டிலிருந்து 21-வது பரிவிருத்தியாரம்பம். இதையாவது அல்லது 22வது பரிவிருத்தியில் கூபானு ஹ்தத்தையாவது முதலாகக் கொண்டு எந்த ஹ, மீ, டக்கு திதி, நக்ஷத்ரம், யோகம் இவை அறியவேண்டுமோ; அவ்வருடம் வரையிலெண்ணி வந்த தொகையை 19 ஆல் வகுக்க. வந்த மிச்ச எண் எவ்வளவோ அதற்கு மேர் அடியிற்கண்ட சக்கரத்தின் மூன்று கலங்களிலும் காட்டிய எண்ணுடன் ஜனன மாதம் எதுவோ அதற்கு கேரிலும் காட்டிய மூன்று எண்களையும் சேர்க்க அம்மாதம் முதற் தேதிக்குரிய திதி, யோகம், நக்ஷத்ரம் இவைகளைக் காட்டும். (ஆதலால் மாதம் முதல் தேதியே ஜனனமாயினும் அம்மட்டோடு நிறுத்திக் காண்க). இப்படியாக ஜனித்த தேதிவரையிலுள்ள நாட்களிலொன்று கழிய மீதி நாட்களை மேற்கூறிய எண்களுக்குக் கிழிட்டுக் கூட்ட வந்த மொத்த தொகைகள் மூன்று. முதலாவதை 15 ஆல் வகுக்க மீதிவந்த எண் எத்தனையாவதோ அத்தனையாவது (ஜனித்த) திதியாம். இரண்டாவதை 27-ஆல் வகுக்க மீதி வந்த எண் எத்தனையாவதோ அத்தனையாவது நக்ஷத்ரமாம். மூன்றாவதையும் அவ்வாறே 27-ஆல் வகுக்க வந்த மீதி எண் எத்தனையாவதோ அத்தனையாவது யோகமாம்— என அறிக.

எண்	திதி	நக்ஷத்ரம்	யோகம்	எண்	திதி	நக்ஷத்ரம்	யோகம்
1	28	25	25	11	19	17	17
2	10	9	9	12	30	27	27
3	20	18	18	13	11	10	10
4	1	1	1	14	22	20	20
5	12	11	11	15	3	3	3
6	24	22	22	16	14	12	12
7	5	4	4	17	25	23	23
8	15	14	14	18	7	6	6
9	27	24	24	19	17	16	16
10	8	7	7				

வைகாசி	2	4	6	கார்த்தி	16	26	14
ஆனி	4	8	12	மார்கழி	11	1	18
ஆடி	6	12	19	தை	10	3	22
ஆவணி	8	16	25	மாசி	10	5	27
புரட்டா	10	20	4	பங்குனி	11	7	5
ஐப்பசி	11	23	9	சித்திரை	11	10	10

ரேகாம்சம் முதலியன.

உத்தர அக்ஷாம்ச மென்பது பூமத்ய ரேகையிலிருந்து வடக்கு அல்லது தெற்கேயுள்ள தூரம்.

பலச்சாயை என்பது இரவு, பகல்களின் பிரமாணம் சமமாயிருக்கிற தினத்தில் (மேஷாயன துலாயன காலங்களில்) மத்தியானம் 15 நாழிகைக்கு 12 அங்குலமுள்ள குச்சியின் நிழல். எத்தனை அங்குலம், வியங்குலமுள்ளதாக இருக்கிறது என்பதே. இதை அக்ஷாம்சத்திலிருந்து கணக்கிடலாம்.

ரேகாம்சம் என்பது இதில் செய்யப்பட்டிருக்கிறபடி லண்டனுக்குக் நிழக்கில் 9-வது மைல் தூரத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற நக்ஷத்ரசாலையுடைய Greenwich என்னும் பட்டணத்தின் பிரதம ரேகையிலிருந்து நிழக்கு அல்லது மேற்கிலுள்ள தூரம்.

தேசாந்தர விநாடி என்பது பிரதம ரேகையிருக்கிற இடத்திற்கும், குறிப்பிட்ட இடத்திற்குமுள்ள நேரத்தின் வித்தியாசம். இதை ரேகாம்சத்தின் ஒவ்வொரு பாகைக்கும் 10 விநாடி விதம் கணக்கிட்டுக் கொள்ள வேண்டியது. இதில் கொள்ளப்பட்டிருக்கிற ரேகாம்சங்களுக்கு மேற்கண்டபடி பெருக்கிய தேசாந்தர விநாடி கொடுக்கப்பட்டிருக்கிறது.

பிரதான பட்டணங்களின் ரேகாம்சம் முதலியன.

பிரதான பட்டணங்கள்	உத்தர அக்ஷாம்சம்		பலச்சாயை		ரேகாம்சம்		பூர்வம் தேசாந்தர விநாடி
	பாகை	கலை	அங்.	வியங்.	பாகை	கலை	கூட்ட
அயோத்தி (லக்னோ)	26	51	6	4	80	56	809
அலஹாபாத் (பிரயாகை)	25	25	5	42	81	51	818
ஆக்ரா	27	10	6	10	77	59	780
ஆற்காடு	12	52	2	44	79	21	794
உதகமண்டலம் (நீலகிரி)	11	23	2	25	76	45	767
உஜ்ஜயினி	23	9	5	6	75	43	757
கடப்பை	14	26	3	7	78	51	788
கரூர்	10	55	2	19	78	4	781
கர்நூல்	15	47	3	24	78	5	781
கல்கத்தா	22	36	4	57	88	33	886
கள்ளிக்கோட்	11	12	2	23	75	48	758
கண்ணனூர்	11	53	2	31	75	24	754
கன்யாகுமரி	8	4	1	42	77	33	775
காஷ்மீர்	34	57	3	40	82	20	823
காசி (பெனரஸ்)	25	20	5	40	83	0	830
காஞ்சிபுரம்	12	50	2	44	79	51	798
காலி	6	3	1	16	80	2	800
காச்மீரம்	34	0	8	7	74	55	749
குண்டூர்	16	15	3	30	80	27	805
குத்தி	15	5	3	13	77	40	777
கும்பகோணம்	10	52	2	19	79	32	795
கடலூர்	11	43	2	30	79	46	798
கஞ்சம்	19	24	4	14	85	7	851
கொச்சி	9	56	2	6	76	15	763
கோயம்புத்தூர்	10	58	2	20	76	57	769
சென்னப்பூர்	1	18	0	17	103	51	1038
சென்னீர்	13	10	2	51	79	6	791
ஸ்ரீகாகுளம்	18	17	3	59	83	55	839

பிரதான பட்டணங்கள்	உத்தர அக்ஷாம்சம்		பலச்சாயை		ரேகாம்சம்		பூர்வம் தேசாந்தர விநாடி
	பாகை	கலை	அல்.	வியல்.	பாகை	கலை	கூட்ட
சூரத்து	21	10	4	38	72	32	725
சென்னை	13	5	2	47	80	17	803
சேலம்	11	37	2	28	78	10	782
டில்லி	28	37	6	33	77	12	772
தஞ்சாவூர்	10	45	2	17	79	7	791
திருச்சிராப்பள்ளி	10	47	2	18	78	43	787
திருநெல்வேலி	8	52	1	50	77	42	777
திருவனந்தபுரம்	8	30	1	48	76	56	769
நாகப்பட்டணம்	10	48	2	17	79	52	799
நாகப்பூர்	21	8	4	38	79	5	791
நெல்லூர்	14	25	3	7	79	58	800
பங்களூர்	12	57	2	45	77	35	776
பரோடா	22	16	4	53	73	14	732
பல்லாரி	15	7	3	15	76	57	770
பம்பாய்	18	57	4	7	72	51	728
புதுச்சேரி	11	56	2	32	79	48	789
புனா	18	29	4	1	73	53	739
மங்களூர்	12	52	2	44	74	50	748
மசூலிப்பட்டணம்	16	10	3	28	81	10	812
மதுரை	9	56	2	6	78	7	781
மைசூர்	12	18	2	37	76	40	767
யாழ்ப்பாணம்	9	40	2	23	80	2	800
ரங்கூன்	16	53	3	37	96	4	961
ராஜமஹேந்திரம்	17	8	3	43	81	49	818
ராமேச்வரம்	9	15	1	58	79	20	793
லங்கை(கொழும்பு)	6	55	1	28	79	53	799
லண்டன்	51	32	15	5	0	3	கழிக்க பச்சிமம்
லாகூர்	31	33	7	20	74	16	743
விஜயாகரம்	18	7	3	56	83	28	835
விசாகப்பட்டணம்	17	41	3	46	83	19	833
ஹைதராபாத்	17	18	3	45	78	30	785

ஸ்டாண்டர்ட் மணிகள்.

நிசீன்விச் மணியுடன் 2 மணி கூட்டிய காலம் தென்னுப் பிரிகா மணி எனவும், 4 மணி கூட்டிய காலம் மோரிஸ்மணி எனவும், 5 மணி 30 மினிட் கூட்டிய காலம் இன்னியா மணி அல்லது இலங்கை மணி எனவும், 6 மணி 30 மினிட் கூட்டிய காலம் பர்மா மணி எனவும், 7 மணி கூட்டிய காலம் தொடுவாய்ப் பகுதி மணி எனவும் வழங்கப்படும்.

இரவு நாழிகை பார்க்கும் விதம்.

சித்திரை முதல் ஆடி மீ வரை பூசம் முதலும், ஆவணி முதல் கார்த்திகை மீ வரை அனுஷம் முதலும், மார்கழி முதல் பங்குனி மீ வரை உத்தராட்டாதி முதலுமாக அன்று உச்சமான நக்ஷத்திரம் வரை எண்ணின தொகையை 2½ல் பெருக்கிச் சென்ற மாதங்களுக்கு மீ-1க்கு 5 வீதமாகவும் சென்ற தேதிக்கு அந்த வீதப் படிக்கும் கழித்து வருவது இரவு நாழிகையாம்.

லக்ன பாவ மத்ய ஸ்புடம்.

(பகல் இரவு ஜாதகங்களுக்குப் பொது)

சாயன ரவியை வைத்து ராசியை நீக்கி மீதம் பாகை, கலை, விகலைகளை ஒரினமாக கலையாக்கி சுதேச ராசிப் பிரமாண விநாடியாற் பெருக்கி 1800-ஆல் வகுக்க வருவது (உதயாத்பர) செல்லு விநாடி. நின்ற விநாடியை ஜனன விநாடியிற் கழித்து மீதம் ஏற்படும் விநாடிக்கு எத்தனை முழு ராசிப் பிரமாணம் போதுமோ; அத்தனையும் கழித்து முழு ராசியாகக் கழிக்கப் போகாத சமயத்தில் 30-ல் பெருக்கி சுதேச ராசிப் பிரமாண விநாடியால் வகுக்க வருவது பாகை. சேஷத்தை 60-ஆல் பெருக்கி டை ஹாரகத்தால் வகுக்க வருவது கலை. சேஷத்தை 60-ஆல் பெருக்கி டை ஹாரகத்தால் வகுக்க வருவது விகலை. இந்த பாகை, கலை, விகலைகளுடன் ஏற்கெனவே தள்ளி வைத்துள்ள முழு ராசிகளையும் சேர்த்து அயனும்சம் கழைய வருவது சூக்ஷ்ம சுத்த நிரயன லக்ன பாவ மத்ய ஸ்புடமாம்.

தசம, சப்தம, சதுர்த்த பாவமத்ய ஸ்புடம்.

தசம பாவ ஸ்புடம்:— ஸாயன ரவியை வைத்து ராசிகளைத் தள்ளி, மீதம் பாகை, கலைகளை (அபரராத்ரமானால் 1 ராசியில்

கழித்து) கலியாக்தி இலங்கா தேச விகாடியால் பெருக்தி 1800-ல் வருக்க வருவது விகாடி. இந்த விகாடியை இஷ்ட விகாடியிற் கழித்து மீதம் ஏற்படும் விகாடிக்கு எத்தனை முழு ராசிப் பிரமாணம் போகுமோ அத்தனையும் பூர்வகதமானால் அப்பிரதக்ஷிணமாகவும், அபரகதமானால் பிரதக்ஷிணமாகவும் கழித்து முழு ராசியாகக் கழிக்கப் போகாத சமயத்தில் 30-ல் பெருக்தி கழிக்கமுடியாத லங்கா ராசி விகாடியால் பிரிக்க வருவது பாகை, சேஷத்தை 60-ஆல் பெருக்தி ஷை விகாடியால் வருக்க வருவது கலை. சேஷத்தை 60-ல் பெருக்தி ஷை விகாடியால் வருக்க வருவது விகலை. இந்தப் பாகை, கலை விகலைகளுடன் முழு ராசியாகக் கழிவு பட்ட ராசிகளையும் சேர்த்து ஸாயனரவி ராசியில் வேறே தள்ளி வைத்துள்ள ராசியில் அபரகதமானால் கூட்டியும் பூர்வகதமானால் கழித்தும் அயனாம்சம் கழைய தசமபாவ மத்ய ஸ்புடமாம்.

குறிப்பு :—

1. பின் இரவு முதல் முற்பகல் வரை பூர்வகதம் என்றும், பிற்பகல் முதல் முன் இரவு வரை அபரகதம் என்றும் அறிக.

2. ஜனனகாலமோ, உதய லக்னமோ, குறித்த நேரமோ பூர்வ பரகமானால் ஜனனத்திற்குப் பிற்பாடு அதிலிருப்பு ராழிகையை விகாடியாக துருவமாக வைத்துக் கொள்க.

3. மத்தியான்னத்திலும் அர்த்த ராத்திரியிலும் ஜனன காலமான போது சூரிய ஸ்புடத்தில் 6 ராசி கூட்ட அல்லது கழிக்க, லக்ன ஸ்புடத்தில் 9 ராசி கூட்ட அல்லது 3 ராசி கழிக்க தசம பாவமத்ய ஸ்புடமாம்.

சதுர்த்த பாவ மத்ய ஸ்புடம் :— தசம பாவ ஸ்புடத்தில் 6 ராசி கூட்ட வரும்.

சப்தம பாவ மத்ய ஸ்புடம் :— லக்ன பாவ ஸ்புடத்தில் 6 ராசி கூட்ட வரும்.

இதர பாவ ஸ்புடமறிய

(2) துவிதீய பாவ மத்ய ஸ்புடம் :— சதுர்த்த பாவஸ்புடத்தில் லக்ன ஸ்புடத்தைக் கழித்து வருவதை 3 ஆல் வருத்து வருவதுடன் லக்ன ஸ்புடம் கூட்ட துவிதிய பாவ மத்ய ஸ்புடமாகும்.

(3) த்ருதீய பாவ மத்ய ஸ்புடம் :— த்விதிய பாவ ஸ்புடத்துடன் அந்த ஸ்புடத்தில் 3 ஆல் வருத்து வைத்துள்ள ஒரு பங்கைச் சேர்க்க த்ருதிய பாவ ஸ்புடமாம்.

(5) பஞ்சம பாவ ஸ்புடம் :- சப்தம பாவஸ்புடத்தில் சதுர்த்த பாவஸ்புடத்தைக் கழித்து 3 ஆல் வருத்து வந்ததை மறுபடி சதுர்த்த பாவ ஸ்புடத்தில் கூட்ட பஞ்சம பாவ ஸ்புடம்.

(6) ஷஷ்ட பாவ ஸ்புடம் :— பஞ்சம பாவ ஸ்புடத்துடன் அந்த ஸ்புடத்தில் 3-ல் ஒரு கூறு வைத்திருப்பதைக் கூட்ட ஷஷ்ட பாவ ஸ்புடம்.

(8) அஷ்டம பாவ ஸ்புடம் :— தசம பாவ ஸ்புடத்தில் சப்தம பாவ ஸ்புடத்தைக் கழித்து 3 ஆல் வருக்க வந்ததை மறுபடி சப்தம பாவத்திற் கூட்ட வருவது அஷ்டமபாவஸ்புடமாம். இது துவிதிய ஸ்புடத்தில் 6 ராசி கூட்டவும் வரும்.

(9) நவம பாவ ஸ்புடம் :— அஷ்டம பாவஸ்புடத்துடன் அந்த ஸ்புடத்தில் 3-ல் ஒரு பங்கு கூட்ட நவமபாவஸ்புடம். இது த்ருதிய பாவ ஸ்புடத்தில் 6 கூட்டவும் வரும்.

